SL
Q,6m 211, NUBMA
NO3·15
162046

The Good Pastor

நல்ல ஆயன்

17 JAN 1917 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத் வேறுகேளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 15. | ஜனவரி 1917. | இலக்கம் 1.

NEW YEAR GREETINGS.

புது வருட சோபனம்.

இன்று வருஷப்பிறப்பு நாள். புது வருஷமாகிய 1917-ம் வருஷம் பிறந்திருக்கிறது. வேதாசாரப்படியும் உலகாசாரப்படியும் இன்றையத்தினம் எல்லோரும் ஒருவரொருவரைச் சந்தித்து, ஒருவருக்கொருவர் புது வருட சோபனங் கூறிக்கொள்வார்கள். அப்படியே நாமும் நம்முடைய "நல்ல ஆயன்" வாயிலாய் நம்முடைய சந்தாதாரர்களைச் சந்தித்துத் தொடங்கியுள்ள புது வருடம் அவர்களெல்லோருக்கும் மங்களகரமாயிருக்கக் கோருகிறோம்.

"சகல மனிதருக்கும் மகத்தான வேலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது; ஆதாமுடைய மக்கள்மேல் அவர்கள் தாயினுதரத்தினின்று வெளிப்பட்ட நாள் முதல் சகலருக்கு மாதாவாகிய பூமியில் அடக்கமாகும் நாள் வரையிலும், பாரச் சுமை வைக்கப்பட்டிருக்கிறது." (சர்வப்பிரசங்கி. XL, 1.) என்னும் வேத வாக்கியப்படி நம் எல்லோருக்கும் இவ்வுலக சீவியத்தில் பல தொல்லைகளும் கவலைகளுமுண்டு. எண்ணிறந்த இடுக்கண்களையும் துன்பங்களையும் பட்டனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். தன்னுடைய தாயின் உதரத்தினின்று வெளிப்படும் ஒரு பச்சைக் குழந்தை முதலாய்த் தனக்கு இப் பிரபஞ்சத்தில் பல துன்பங்களுண்டென்று, தன்னுடைய முதற் குரல் ஒலியான அழுகையினால் காட்டுகின்றது. ஆம், அரசன் முதல் அடிமை வரையிலும் எல்லோரும் துன்பத்துக்குள்ளாயிருக்கிறோம். நம்முள் சிலர் வறுமை சிறுமையினாலும், சிலர் வியாதியினாலும், சிலர் தங்கள் பிள்ளை குட்டிகள், உற்றார் உறவினர் அல்லது, விரோதிகளினாலும், சிலர் தங்களுக்குண்டாகும் சோதனை தந்திரங்களினாலும், சிலர் தங்கள் துர்க்குணங்கள், துர்ப்பழக்கங்களினாலும் அலைக்கழிக்கப்பட்டு வருந்துகிறார்கள். இப்படி ஏவையின் மக்களான நாம் எல்லோரும் கல்லறைந் குழிக்குப் போகும் வரையில் யாதோர் துன்பத்தைப் பட்டனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கக்கொள்ள, புது வருடம் எப்படி நமக்கு பாக்கியகரமாயிருக்கக் கோரலாம்? வருடப் பிறப்பு நாளன்று நாம் ஒருவரொருவ

162046

ருக்குச் சோபனஞ் சொல்லிக்கொள்வது ஒப்புக்கும் உபசாரத்துக்கும் அடுத்த ஓர் வழக்கமோ? இல்லை, இல்லை. இவ்வழக்கம் உலகத்தாரிடத்தில் ஒருக்கால் ஒப்புக்காக அநுசரிக்கப்பட்டு வருமென்றாலும், கிறிஸ்துவர்களிடத்தில் இது பக்திக் கடுத்ததாயும் பிற சிநேகத்துக்குரியதாயு மிருக்கின்றது. அதெப்படியெனில், ஒருவர் இன்னொருவருக்குப் புது வருட மங்களங் கூறுகையில், புது வருடமானது அவருக்கு தேவாசீர் நிறைந்த வருடமாயிருக்கவேண்டுமென்றும், அத் தேவாசீரைக்கொண்டு அவர் தமக்கு அவ்வருஷத்தில் வந்து நேரவிருக்கும் துன்பங்களை யெல்லாம் சந்தோஷமாயனுபவித்து வருஷத்தைத் தமக்கு மங்களகரமானதா யாக்கிக்கொள்ளவேண்டுமென்றுமே அவர் கோருகிறார் இப்படிப் புது வருட சோபனத்தினால் நம்முடைய க்ஷேம லாபங்களே கோரப்படுகின்றனவாகையால் இது எவ்வளவோ கிறிஸ்துவ நேசத்துக்குரிய வழக்கம்!

ஆனால் நமக்கு வரவிருக்குந் துன்பங்களை நாம் இன்பங்களாக வாக்கிக்கொள்வதெப்படி?

நமக்குச் சர்வேசுரனிடத்தில் நல்ல நம்பிக்கை யிருக்குமானால், உண்மையில் நமக்கு வரும் துன்பங்கள் இன்பமாகக் காணப்படும். சர்வேசுரன் அளவறுக்கப்படாத ஞானமும் மட்டில்லாத வல்லபமும் கரைகாணாத நன்மையும் இரக்கமுமுள்ளவர். மேலும் அவருடைய நேசத்தை நாம் வரையறுத்துச் சொல்லவுமுடியாது. அவரே நம்மை யுண்டாக்கினார், அவரே நம்மைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். இச் சத்தியத்தை நமக்கு வற்புறுத்திக் காட்ட அர்ச். இராயப்பரும் "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் சுமத்திப்போடுங்கள்" என்கிறார் (1. இரா. V.7). ஆகையால், துன்ப காலத்தில் நாம் அவர்மேல் நமது நம்பிக்கையெல்லாம் வைப்போமாக.

பிறகு நல்ல மனிதர்கள்மட்டிலும் நாம் நம்பிக்கை வைக்கவேண்டியது. இவர்கள் நம்முடைய கஷ்ட காலத்தில் நம்மேல் ஈவு இரக்கங்கொண்டு நமக்கு உதவியாகவும் ஆறுதலாகவு மிருப்பார்கள். நாமும் நம்மாலான உதவியை அவர்களுக்குச் செய்ய தவறக்கூடாது. ஏனெனில், கிறிஸ்துவர்களெல்லோரும் சகோதரர்கள், ஒருவரொருவரை நேசிக்கவேண்டும். "கிறிஸ்துநாதர் நம்மைச் சிநேகித்து சர்வேசுரனுக்குத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தது போல நீங்களும் சிநேகத்தில் நடந்துகொண்டு வருவீர்களாக" (எபேசி. V. 2). என்றும் அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார்.

அன்றியும் நாம் நம்முடைய ஞான மேய்ப்பர்களிடத்திலும் நம்பிக்கையுள்ளவர்களா யிருக்கவேண்டும். ஏனென்றால், "அவர்கள் உங்கள் ஆத்துமங்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களைப்போல் விழித்திருக்கிறார்கள்". (எபி. XIII. 17) நம்முடைய ஞான மேய்ப்பர்கள் நமது க்ஷேம லாபங்கள்மட்டில் அக்கரையுங் கவலையுமுள்ளவர்களென மறந்துபோகவொண்ணாது. அவர்கள் நம்மைக் கண்டிக்கும்போதும் தண்டிக்கும்போதும் நம்முடைய நன்மையைக் கோரி அப்படி செய்கிறார்களே யொழிய மற்றப்படியல்ல. ஆகையால், அவர்கள்மேல் நம்பிக்கைவைத்து அவர்களுடைய புத்திமதிக்குக் காதுகொடுத்துக் கீழ்ப்படிந்து நடப்போமாக. சர்வேசுரன் அவர்கள் மூலமாய் நம்மேல் பொழிய விருக்கும் உபகார சகாயங்களை வீணாக்கிக்கொள்ளா திருப்போமாக.

கடைசியாக நம்மோடு புழங்குகிறவர்களோடும் நாம் பொறுமையா யிருக்கவேண்டும். நாம் எல்லோரும் குற்றங் குறைகளுக்குள்ளானவர்கள். ஆகையால், பொறுமையை அநுசரித்து அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதுபோல "ஒருவரொருவருடைய குற்றங்களைத் தாங்கிக்கொண்டு வருவோமாக." (கலா. VI. 2) விசேஷமாய் புருஷன் பெண்சாதியும், சகோதரர் சகோதரிகளும், உற்றார் உறவினரும், அண்டை வீட்டார் அடுத்த வீட்டாரும் ஒருவரொருவருடைய குற்றங் குறைகளைச் சகித்துக்கொண்டு சமாதானமாய்ச் சீவிக்கப் பிரயாசைப்படவேண்டியது.

மேற் கூறியபடி நாம் இப்புது வருஷத்திற் சீவித்து வருவோமானால் நமது சீவியமானது பரிசுத்த சீவியமாகும்; இன்

றையத்தினம் நாம் ஒவ்வொருவரும் ஒருவரொருவருக்குக் கோரிக்கொள்ளுகிறபடி, இவ்வருஷமும் பாக்கியகரமான வருஷமாயிருக்கும். ஆனபடியால், நம்முடைய ஆண்டவரான நல்ல ஆயன் நம்முடைய பத்திரிகையின் கையொப்ப நேயர்களின் பேரிலும், அதன் அபிவிருத்தியைக் கோரி அதற்கு நன்கொடை அளிப்போர்பேரிலும், அதற்கு புது கையொப்ப நேயரைச் சேர்த்துத்தரும் சகாய புருஷர் பூவையர் பேரிலும், அதற்கு விஷயதானஞ் செய்யும் தர்மோத்தமர்கள் பேரிலும், இன்னும் பல விதமாய் அதன் க்ஷேமத்தைக் கோருபவர்கள்பேரிலும் நிரம்ப தம் ஆசீரைப்பொழிந்தவர்க ளெல்லோருக்கும் புதிய வருஷம் பாக்கியகரமான வருஷமாயிருக்க கிருபை செய்யும்படி இன்று திவ்விய பூசைசெய்து ஒப்புக்கொடுப்போம்.

THE SAMARITANS.

சமாரித்தர்.

யூதேயநாட்டில் அக்காலத்தில் ஒருவகை கீழ்ச்சாதியார் வசித்துவந்தனர். அவர்கள் யூதருக்கும் ஆயக்காரருக்கும் பிறந்த இரு சாதி சனங்கள். இரண்டொரு வேதகாரியங்களில் அவர்கள் யூதர்களைப் பின்பற்றினார்களே யொழிய மற்றப்படி யவர்களை யூதர்களென் றழைக்க இடமில்லை. தம்மிஷ்டப்படி யூதருக்குப் போட்டியாய் ஒரு யூத மதத்தைக் கடைப்பிடித்தவராய், ஜெருசலேம் நகரின் தேவாலயத்திற்குள் எப்பவும் அடியெடுத்து வைக்காமலும், தம்மைச்சுற்றி வசித்துவந்த விசுவாசிகளுடன் சேராமலும், அவர்கள் தம் சுதந்தரங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டாப்போல் அவர்களைச் சத்துருக்களாக மதித்தும் வந்தார்கள் அந்த முரட்டுச்சாதி சனங்கள். இவர்களே சமாரித்த ரென்பப்படுவோர். முரட்டுத்தனமும் பிடிவாத குணமுமுடைய மூர்க்கர்; தங்கீழான நிலைமை தம் விதிப்பயனென நம்பினவர். யூதர்கள் அச்சாதியாரை யிகழ்ந்தொதுக்கித் தம்முடன் சேர்த்துக்கொள்ளாமல் கடையோரெனப் பழித்தவமானப்படுத்தி வந்ததற்கும் நல்ல காரணங்களிருந்திருக்கவேண்டும் போலும். யூதர் யாரை யாவது அவமானப்படுத்த வேண்டுமானால், அவனைச் சமாரித்தனென் றழைப்பது வழக்கமாம். அப்படியே ஒரு தடவை யூதர்கள் நமதாண்டவரைச் சனங்களுக்கு முன்னால் அவமானப்படுத்தக் கருதி அவரைச் சாமாரித்தனென் றழைத்ததாகக் கேள்விப்படுகிறோம். "நீர் ஒரு சாமாரித்தனென்றும் பசாசினால் பீடிக்கப்பட்டவனென்றும் நாங்கள் சொல்லவில்லையா?"

ஆனால் "நெரிந்த நாணலை முறிக்காதவரும் புகைந்த சணலை யவிக்காதவரும்," நீதிமானை விட பாவியையே இரட்சிக்கவந்தவருமாகிய நமதாண்டவர் அச்சாதியாரை நடத்தினவிதம் வேறேயாம். தம்முடைய இதயத்தில் அவர்களுக்கென்றே பிரத்தியேகமா யோரந்தரங்க இடத்தை வைத்திருக்கிறார். என்ன நேர்ந்தபோதிலும் அவர்களைக் காப்பதிற் பின்வாங்குகிறதில்லை; அவர்களுக்குப் பிரத்தியேகமாய்ப் பிரசங்கிக்கிறார்; பலவிடங்களில் அவர்களையே மற்றவர்கள் பின்செல்லும் நன்மாதிரிகையாய் எடுத்துக்காட்டுகிறார். சமாரித்தனென்றும் பேய்ப்பிடித்தவனென்றும் அவரை யூதர் பழித்தபோது, பின்னையப் பழிச்சொல்லையே யவர் கோபத்துடன் மறுத்துப்பேசுகிறாரொழிய, முன்னைய மொழியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை யென்பதை யிங் கறியற்பாலது.

சமாரியாவென்னு மூர் ஜெருசலேமுக்கும் கலிலேயாவுக்குமுள்ள குறுக்கு வழியிலிருக்கிறது. இதைமுன்னிட்டு அவ்வழியாக யூதர் போவதே கிடையாதாம். ஒருநாள் நமதாண்டவர் தம் சீஷருடன் அவ்வழியாய்ப் போயினராம். வழிநடந்த களைப்பால் அவர் ஒரு பழைய கிணற்றண்டைதங்கினார். சீஷர்கள் ஆகாரந்தேடச் சென்றனர். அப்போது அங்கே ஒரு சமாரியப் பெண்பிள்ளை தண்ணீர் எடுத்துப்போக வந்தாள். அவளோ பரம ஏழை; பாவி; சமாரிய சனங்களுக்குள்ளேயே கேவலசாதியென மதிக்கப்படும் குலத்திலுதித்தவள். நமதாண்டவர் அவளைப் பார்த்து, குடிக்கத் தண்ணீர் கேட்டார். அவளும் யாதொரு தடையுமின்றிக் கொடுத்தாள். பிரதியுபகாரமாக நமதாண்டவர் அவளுக் கருளியதென்ன? இவ்வுலகத்தார் சாதாரணமாய்க் கொடுப்பதெல்லாவற்றையும்விட மேலானதை யவளுக்கும் அவளுடைய சாதியாருக்கும் கொடுத்தருளினார். தம்

முடைய சீஷர்களுக்கும் பிடிக்காத காரியத்தைச் செய்தார். அந்த சமாரித்தர்களின் மத்தியில் அவர் கொஞ்சகாலந் தங்கியிருந்தார்.

மற்றொரு தடவை யவர் சமாரியாவுக்கு வந்தபோது, துர்க்குணமுள்ள அச்சனங்கள் அவரை ஒரு யூதனை நடத்துவதுபோல நிந்தையவமானப்படுத்தினார்களாம். அதைக் கண்ட சீஷர்கள் அடங்காக் கோபங்கொண்டனர். அவரை இதுகாறும் எவரும் இவ்வாறு நடத்துவதை யவர்கள் கண்டதில்லை. இதேவிதமாகவும் இன்னும் இதைவிட அதிகக் கேவலமாகவும் "பிரமாணிக்கமுள்ள யூதர்கள் இனி யவரை நடத்துவார்களென அச்சீஷர்கள் கனவிலும் நினைக்கவில்லை; "வானினின்றும் அக்கினியை வரவழைத்து" அவர்களை யழிக்கும்படியாய்த் தங் கரத்தை நீட்டும்படி யாண்டவரைக் கேட்டனர். ஆனால் அவருக் கது பிடிக்கவில்லை. அவர்களுக்காகப் பரிந்துபேசி, சீஷருடைய வாயை யடக்குகிறார். "பேதையர்! அவர்களுக்குத் தெரிந்ததவ்வளவுதான். ஆதலால் அவர்களைத் தண்டித்தலாகாது" என்று அவர் சொல்லுவதுபோலிருந்தது.

இவற்றைவிட மிக விசேஷமானது சமாரித்தனொருவனை மற்றவர்களுக்கு நன்மாதிரியாயெடுத்துக் காட்டியதாம். ஒருநாள் பிறசிநேகமென்னும் மேலான புண்ணியமடங்கியுள்ள பிரதான கற்பனையாகிய, "உன்னை நேசிப்பதுபோல் உன் அயலானையும் நேசி" என்பதைப்பற்றிப் பிரசங்கித்தார். அக்கற்பனையை விபரமாய் உதாரணத்துடன் எடுத்துரைக்கும்படி ஜனங்கள் கேட்டார்கள். உடனே அவர் பின்வரும் கதையைச்சொன்னார். ஒருவன் திருடர்கையி லகப்பட்டு, படுகாயத்துடன் பாதையோரம் கிடந்தான். அவ்வழி போன ஒரு யூதகுருவும், லேவிக்கோத்திரத்தானும் அவனைப்பார்த்துக்கொண்டே போய்விட்டனர்; ஆனால் கடைசியில் வந்த சமாரித்தனொருவன் அவனைக்காப்பாற்றினான். இது ஒரு உவமையானதால் என் நமதாண்டவர் சமாரித்தனை மற்றவர்களைவிட அதிகப் பிறசிநேக முடையவனென இவ்வாறு வற்புறுத்தவேண்டும்.?

மீண்டும் ஒருதடவை பாதையோரம் பத்துக் குஷ்டரோகிகளை நமதாண்டவர் காண்கிறார். அவர்கள் அவரைப் பார்த்து மன்றாடுகிறது அவர் செவியில் விழுகிறது; அவர்களைக் குருக்களிட மனுப்பி, சொஸ்தமடைந்ததாக நிச்சய பத்திரம் வாங்கிவரும்படிச் சொல்லுகிறார். போகும் வழியில் தாம் சொஸ்தமடைந்ததாகக் கண்டார்கள்; ஒரே ஒருவனே உடனே திரும்பியோடித் தன்னுபகாரிக்கு நன்றிசெலுத்துகிறான். "இந்த மனிதன் ஒரு சமாரித்தனே" என்று அர்ச். லூக்காஸ் ஊன்றிச் சொல்வதேன்? அவர் இப்படி எழுதியது தற்செயலாய் நேர்ந்திருக்கக்கூடுமோ?

"பிரமாணிக்கமுள்ள" யூதரால் புறக்கணிக்கப்பட்ட கீழ்ச்சாதி ஜனங்களை நமதாண்டவர் நடத்தும் விதம் இதுவே. அன்னவர் பாவச்சேற்றிற் புரண்டவர்களென்றறிந்திருந்தும், அவர்களை யன்புடன் அழைக்கிறார்; தம்மை நிந்தித்தபோதிலும் அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறார்; நன்றியன்பென்னும் இரண்டுமேலான புண்ணியங்களுக் குதாரணமாக அச்சாதியாரையே எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறு அவர் ஜாதி வேற்றுமை குலவித்தியாசம் முதலியன தம்மை நாடுவோர்க் குரியனவல்லவென்றுகாட்டுகிறார். அன்பும் அறமும் பிறப்பினாலல்ல குணத்தினாலுண்டாகும் என்பதவர் கொள்கை. எங்கே நன்மை கிடைப்ப தருமையென்று நினைக்கின்றோமோ, அங்கேயே அவர் நன்மையைக் காண்கிறார்; கேவலமான தரித்திரரிடமும் நாம் எதிர்பாராத நன்மையிருக்கக்கூடுமென அவர் நமக்குக் காட்டுகிறார். வெட்கத்தோடும் துன்பத்தோடும் தம் பாதத்தைப் பற்றிக் கவிழ்ந்து விழுந்துகிடந்த பாவியான ஒரு மாதைப் பார்த்து நாமுனைத் தண்டிக்கவு மாட்டோம் என்கிறார். தீமையிருப்பதாகத் தோன்றுமிடத்தில் நன்மையைக் காணும்படி மனிதனைத் தூண்ட சமாரித்தனிடம் அநுதாபங் காட்டும்போது இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய வார்த்தைகளை மொழிவதுபோ லிருக்கிறதன்றோ!

இதைவிட மேலான வரம் மனிதனுக்கு வேறென்னவேண்டும்! மனிதருடைய சீவியம் இருதயம் இவை யிரண்டின் வெளிப்பாகத்தை விட்டு உட்பாகத்தைப் பார்த்து, தீமையென்னும் மேற்போர்வையை விலக்கி உள்ளே யிருக்கும் நன்மையைக் கண்டு யாவராலும் புறக்கணிக்கப்பட்ட அந்த சமாரித்தன் நம்மைப்போலவே மனிதனென்றும் அவனுக்கு நம்மைப்போலவே உணர்ச்சி, ஆசை, உண்மை யறியுமாவல், நன்றி மறவாமை, அன்பு முதலிய குணங்கள் உண்டென்றும் கண்டுகொள்ளும் ஆற்றலே நமக்குக் கிடைக்கக்கூடிய மேலானவரம். எல்லா வரங்களிலும் இவ்வரத்தையே நாம் அதிகமாய்ப் பயிற்

சிச் செய்தல் வேண்டும்; ஏனெனில் இவ்வரமே இம்மை மறுமை இரண்டிற்கு முதவியாய் நின்று நன்மை விளைப்பது.

இப்போது நடக்கும் மகாயுத்தத்தில் பிராஞ்சுதேசத்தில் ஒரு வாலிபப் போர்வீரன் யுத்தவொழுங்கை மீறி நடந்ததற்காக கொலைத் தீர்ப்பிடப்பட்டான். அவன் செய்த குற்றம் சாதாரண காலத்தில் குற்றமாகப் பாவிக்கப்படுவதல்ல. அவனொரு கத்தோலிக் கிளைஞன். தீர்ப்பைக் கேட்டதும் முதலில் அவன் கலங்கினான். தன் தேசத்துக்காகப் போர் செய்து, வேண்டுமானால் தன்னுயிரையுங் கொடுக்கத் துணிந்து போர்முனைக்கு வந்த இடத்தில், இவ்வாறு எல்லாராலு மிகழப்பட்டு அவமானத்துடன் இராஜத் துரோகமென்னும் குற்றம் சாட்டப்பட்டுச் சாவதாயிருந்தால், அவன் மனம் எப்படியிருந்திருக்குமென்று இதை வாசிப்போரே தெரிந்துகொள்ளலாம்.

அவனைப் பார்க்க ஒரு குருவானவர் வந்தார்; அவர் வந்தது அவனுக் காறுதலாயிருந்தது. அன்று மாலையெல்லாம் அவர்களிருவரும சம்பாஷித்திருந்தனர்; இருவரும் ஜெபித்தனர்; இருவரும் பதிக்கடுத்த ஞானபுஸ்தகங்களை வாசித்தனர். மறுநாள் காலை திவ்வியநற்கருணை வாங்க ஆயத்தமாயிருந்தான். அன்றிரவு அந்நிற்பாக்கியன் அயர்ந்து நித்திரை செய்தான். விடிவதற்கு முன் அவன் எழுந்து ஜெபமாலையுங்கையுமாய் வேண்டிக்கொண டிருப்பதைக் கண்ட காவற்காரர் ஆச்சரியப்பட்டார்கள். குருசுவாமியார் திவ்வியநற்கருணை கொண்டுவந்து கொடுத்தார்; நன்றியறிந்த தோத்திரத்தில் அரை மணி நேரம் செலவழித்தனர்; வெளியில் அவனைச்சுட ஆயத்தஞ் செய்தனர். மீதிநடந்த வரலாற்றை அந்தச சுவாமியார் எழுதியவாறே பின்னால் மொழிபெயர்த்தெழுதுகிறேன்.

"துக்கத் தேவரகசியம் ஜெபித்துக் கொண்டிருந்தோம். கர்த்தர் சிலுவையிற் பாடுபட்டதைத் தியானிக்கையில், அவனைச் சுடுவதற்காகப், போர்வீரர் வரும் சந்தடி யென்செவியில் விழவே என்னிதயம் படபடவென்றடித்தது. 'கிருபைதயாபதத்துக்கு மாதாவே' என்னும் ஜெபத்தைசசொல்லும்போது, தளக்கர்த்தனும் காவற்காரனும் கதவண்டை நிற்பதை வெளியினின்றும்வந்த சத்தத்தால் அறிந்தேன். பின்னர் திரிகாலச் செபம் சொல்லி, "மரித்த விசுவாசிகளாத்துமம்." என்று ஜெபிக்கையில் அரைமணியடித்தது. கதவைத்திறந்துகொண்டு காவற்காரர் நீட்டியகத்தியுடன் உள்ளே நுழைந்தனர். குற்றவாளி தன்னிடத்தைவிட் டெழுந்து நின்றான். நான் அவன் தொப்பியைச் சிரத்தில் அணியவே, அவன் வீரனைப்போல் வெளியே சென்றான். வழியில் தளக்கர்த்தன் முதலியோர் அவன் கையைப் பிடித்துக் குலுக்கி விடைபெற்றுக் கொண்டனர். நானும் அவ்வாறே செய்து அவனையும் அவர்களையும் ஆசீர்வதித்தேன். "அவன் நல்லவன், சுவாமி" என்றொருவனும், "அவன் இங்கேயிருப்பவருள் மிக்கதைரியசாலி," என்று மற்றொருவனும் என் காதில் ஓதினர். நாங்களும் நடந்தோம், குறிக்கப்பட்ட இடம் ஒரு தோட்டம். இரண்டு நிமிஷங்களில் அங்குபோய்ச் சேர்ந்தோம். விடிந்து எங்கும் சூரியவெளிச்சம் பரவியிருந்தது. வசந்தகாலமானதால் தோட்டத்தில் மலர்கள் நிறைந்திருந்தன. சுடத் தயாராயிருந்த போர்வீரர் வரிசையாக நின்றனர். அவர்களுக்குப்பின்னால் வேறொருவரிசை நின்றது. தளக்கர்த்தன் முதலியோரும் வைத்தியரும் ஒருபக்கம் நின்றனர். குற்றவாளி நிற்கவேண்டிய இடம் ஒரு சுவரண்டை யிருந்தது. சவத்தை யடக்கம்பண்ணக் குழியும் வெட்டியாய் விட்டது. குற்றவாளியைக் கண்கட்டி அவ்விடத்திற் கொண்டு வந்து நிறுத்தினர். நான் அவன் செவியில் சில ஆறுதல்மொழிகளையோதினேன். உடனே அவன் மிக்கதைரியத்துடன் உரத்த குரலில் "நல்லது, சுவாமி தயாராயிருக்கிறேன்." என்றான், அதற்குமேல் மௌனமே. அவனை யங்கேயேயடக்கம் செய்தோம்; அவனைக் கொன்றவர்களே அவனுக்காகத் துக்கங் கொண்டாடினர். அவன் கடவுளுக் கேராத கொடும்பாதகமொன்றுங் கட்டிக்கொள்ளவில்லையாயினும், அவன் சாகவேண்டியதவசியமே. கடவுள் முன்னும் எங்கள் முன்னும் அவனொரு வீரனாக வேமரித்தான்."

இச்சம்பவத்தைச் சற்றே தியானித்துப்பாருங்கள். அவனைப்பற்றி நம்முடைய அபிப்பிராயம் மாறுவதைக் கவனியுங்கள். அவன் சாகுமுன் குற்றவாளியெனத் தீர்ப்பிடப்பட்டுக் கைவிலங்குடன் கொலைக்களம் போனபோது, ஒரு பெரும்பாதகனாய்த் தோன்றினான். இன்றைக்கோ, அவன் குற்றம் எதுவாயிருப்பினும், அவனொரு சுத்தவீரனென அவனைக் கொண்டாடுகிறோம். ஓ, நமக்குயாவுந் தெரிந்தால், இவனைப்

பற்றி நாங் கொண்ட அபிப்பிராயத்தைப் போல், எத்தனையோ பேரைப்பற்றி யபிப்பிராயப்படு வோம். நமதாண்டவர் சமாரித்தனைப்பற்றி யவ்வளவு பேசியது, மனிதர்மட்டில் நாங் கொள்ளும் அபிப்பிராயம் பின்னையதாயிருக்க வேண்டுமென்னும் பொருளை வெளிவிடுவதற்கல்லவா?

S. Selva Raju.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம் ; வசனம் (29-31).

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—(29). "இதை அவள் கேட்ட மாத்திரத்தில் அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் எத்தன்மையானதோ என்று யோசனையா யிருக்கையில்,

30. தேவதூதன் அவளை நோக்கி: மரியே! நீர் அஞ்சவேண்டாம், ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர்.

31. "இதோ, உமது உதரத்தில் கர்ப்பந் தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்: அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்."

கபிரியேல் தேவதூதன் கன்னிமரியாயை நோக்கி கூறிய சுப வசனமானது ஓர் நூதனமான மங்களம், நூதனமாய் ஒருவரை வியந்து புகழ்ந்து போற்றும் மங்களம், இதுவரையில் எவருக்கும் கூறப்படாத புகழ், எங்கும் கேட்கப்படாத புகழ், மனுஷரால் இதுவரையில் சொல்லப்படாத புகழ், வேதாகம புஸ்தகங்களில் எங்கும் காணாத புகழ். இக்கன்னிகைக்கு மாத்திரமே தானமைத்துவைக்கப்பட்ட புகழ், இவளுடைய மகிமைக்கு மாத்திரமே வுற்ற, நிச்சய, நிகரற்ற புகழ். இத்தகைய அரிய பெரிய புகழ்ச்சியைக் கேட்ட கன்னிமரியாயி என்ன செய்கிறாள்? இதைக்கேட்ட மாத்திரத்தில், இதின் அர்த்தம், நோக்கம், கருத்து யாதென்றும், எத்தன்மையானதென்றும், தனக்கு ஏன் இப்புகழ் கொடுக்கப்பட்டதென்றும் சிந்திக்கலானாள். தேவ கன்னிகை எப்பொழுதும் தனது தாழ்ச்சி சமுத்திரத்தின் தாழ்வில் மூழ்கி யிருந்தமையால், தன்னை என்றும் நிசாமாய், அற்பமாய் நினைத்து வந்தாள். சொல்லொண்ணா தாழ்ச்சியில் சிறந்த கன்னிகை தேவ தூதனின் சோதிப் பிரதாபக்காட்சியாலும், அவர் உரைத்த உன்னத புகழ்ச்சியாலும் வெகுவாய்க் கலங்கி அஞ்சி நின்றாள். இவ் வச்சமும் கலக்கமும் அவளுடைய தாழ்ச்சியி லிருந்து உதித்தது என்று வேத சாஸ்திரியாகிய சுவாரேஸ் நிச்சயித்துக் கூறுகிறார். மேலும் மகத்தான இம் மங்கள ஸ்துதியால் சர்வேசுரன் தனனிடமிருந்து சாதாரண ஒழுங்குக்கு மேற்பட்ட ஏதோ ஓர் உன்னத பரித்தியாகத்தையும், மகத்தான காரியத்தையும் கேட்கிறார் என்றும் சிந்தை செய்தாள். இச்சிந்தையினால் அவளுள்ளம் கலங்கினது.

தேவதூதன் கொண்டுவந்த தூது விசேஷத்தை கன்னிமரியாயி பதறாமல் தெளிவாய் அறிந்து உணர்ந்துகொள்ள, இக் கலக்கமும் அச்சமும் தடையா யிருந்தமையால், சம்மனசானவர் அவளை நோக்கி "மரியே: நீர் அஞ்சவேண்டாம், ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர்" என்று தேறுதல் சொல்லுகிறார்; அவளுடைய கலக்கத்தையும் அச்சத்தையும் நீக்கி, அவளை அமரிக்கையிலும் சித்த சமாதானத்திலும் ஸ்தாபிக்கிறார். "மரியே" என்று அவளுடைய சொந்த பெயரால் அன்பாய், இனிமையாய் அழைத்துத் தேற்றித் திடப்படுத்துகிறா. அவள் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருப்பதினால் கிஞ்சிதமும் அஞ்சுவதற்கு இடமில்லை என்று நிச்சயிக்கிறார் வேதாகமத்தில் ஒருவர் சர்வேசுரனிடத்தில் கிருபை, அல்லது, அருள்பெற்றிருக்கிறார் என்பதால், சர்வேசுரன் அவர்மட்டில பிரியப்படுகிறா என்றும், தமது நேசத்தையும் இஷ்ட காருண்ணியத்தையும் அவருக்கு விசேஷமாய்க் காண்பிக்கிறார் என்றும் அர்த்தமாகும்.

31. "இதோ உமது உதரத்தில் கர்ப்பந் தரித்து ஓர் குமாரனைப் பெறுவீர், அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்." இவ் வசனத்தில் கன்னிமரியாயின் உன்னத, அகோசர, தேவதாயின் மகிமைப் பட்டம் அடங்கி யிருக்கிறது. இவ்வசனம் "ஆண்டவர்தாமே உங்களுக்கு அற்புத அடையாளம் தருவார், இதோ கன்னியானவள் கர்ப்பமாகி ஓர் குமாரனைப் பெறுவாள், அவருக்கு எம்மானுவேல் என்று பேரிடப்படும்" (7-அதி 14-வசனம்) என்று இசாயாஸ் தீர்க்க தரிசியால் எழுதப்பட்ட அற்புத விசேஷத்தையும் அறிவிக்கின்றது.

ஓர் கன்னிகை தன் கன்னி மகிமை கெடாமலும், குறையாமலும், ஓர் குமாரனைப் பெறுவதானது, சர்வேசுரனுடைய சர்வ வல்லபத்தைக் காட்டும் அற்புத பரம இரகசியம். "சர்வேசுரனைத் தன் உதரத்தில் கர்பந்தரித்து அவரைப் பெற்றெடுப்பது கன்னிகைக்கு மாத்திரம் தகுதியாம். ஓர் கன்னிகையானவள் தன் கன்னி சுத்தம் கெடாமல் ஓர் குமாரனைப் பெற்றெடுத்தால் அக்குமாரன் சர்வேசுரனாகவே யிருக்கவேண்டும். மனுக்குல சிருஷ்டிகராகிய சர்வேசுரன் மனுஷனாவதற்காக, ஓர் மனுஷ தாயைச் சிருஷ்டித்தார். அவளைத் தமது தேவ மகிமைக்கு ஏற்ற தாயாய், தமது நேசத்துக்கும் இஷ்டத்துக்கும் பாத்திரமுள்ளவளாய்ச் செய்தார். அவள் எப்பொழுதும் கன்னிகையா யிருக்கச் சித்தமானார். சகல மனிதருடைய மாசுகளை யெல்லாம் போக்க, மாசற்றவளிடமிருந்து மாசற்றவராய் ஜெநமித்து உதிக்க விரும்பினார். அவர் இருதய தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள ஆண்டவராகையால், அவள் தாழ்ச்சியுள்ளவளா யிருக்கவும் சித்தமானார். அதி பரிசுத்தராகிய கர்த்தரைக் கர்ப்பந்தரிக்கவும், அவரைப் பெற்றெடுக்கவும், தன் சரீரத்தில் பரிசுத்தமா யிருக்க கன்னிமையின் வரத்தையும், தன் மனதில் பரிசுத்தமா யிருக்க தாழ்ச்சியின் வரத்தையும் பெற்றுக்கொண்டாள் இப் புண்ணியங்களின் முத்து இரத்தினங்களால் இத்திவ்ய இராஜ கன்னிகை அலங்கரிக்கப்பட்டு, மனத்தூய்மை சரீரத்தூய்மையின் சோதி சோபன சௌந்திரியத்தால் பரலோக இராசாதி இராசாவின் மனதை முற்றும் கவர்ந்து தன் வசப்படுத்திக்கொண்டாள். ஓ, தேவ கன்னிகையினுடைய கன்னிமையின் சிங்கார மகத்துவ பெருமை எவ்வளவு வியக்கத்தக்கது" என்று அர்ச். பெர்நார்துஸ் தேவ கன்னிகையை வியந்து ஸ்துதித்து வாழ்த்துகிறார்.

ஜெஹோசுவா (Jehosua) அல்லது ஜோசுவா என்னும் எபிரேய நாமங்களிலிருந்து சுருக்கிக் கூறப்பட்ட யேசு என்கிற நாமத்துக்கு அப்பாஷையில் "தேவன் இரட்சண்ணியமா யிருக்கிறார்," இரட்சாதிபரன் என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. இந்நாமதேயம் மற்ற சாமானிய மனிதர்களுக்குச் சூட்டப்படுகிறதைப்போல், நமது திவ்ய ஆண்டவருக்குச் சூட்டப்படவில்லை. மற்ற சாமானிய நாமங்களைப் போல், மனிதர்களுடைய ஆலோசனையாலும் இஷ்டத்தாலும் தெரிந்தெடுக்கப்படவில்லை; ஆனால் இத் திருநாமம் பரலோகத்தினின்று உதித்த நாமம், தேவ தூதனால் உச்சரிக்கப்பட்ட நாமம், தேவ கட்டளையால் இடப்பட்ட நாமம். அர்ச். மத்தேயுஸ் 1-அதிகாரம் 21-வசனத்தின் பிரகாரம் ("அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். நீர் அவருக்கு யேசு என்னுஞ் நாமஞ் சூட்டுவீர், ஏனெனில் அவரே தமது ஜனத்தை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிப்பார் என்றார்.") தேவ தூதன் அர்ச். சூசையப்பருக்கு நமது திவ்ய ஆண்டவரின் நாமதேயத்தை வெளிப்படுத்தி, அதின் அர்த்தத்தையும் அந் நாமம் இடப்பட்ட காரணத்தையும் திருவுளம் பற்றுகிறார்.

பழைய ஏற்பாட்டில் கண்டிருக்கிற பிரகாரம் யேசு என்கிற நாமத்தால் பூர்வீகத்தில் சிலர் அழைக்கப்பட்டுவந்தார்கள். மோயீசனுக்குப் பிறகு இஸ்ராயேல் பிரசைக்கு அதிகாரியாய் வந்த நாவே என்பவரின் குமாரனும், ஜோசெதக் குருவின் குமாரனும் யேசு என்று அழைக்கப்பட்டார்கள்,

ஆனால் அவர்களுக்கும் நமது திவ்ய ஆண்டவருக்கும் இந்நாமம் ஒரே காரணத்தைப்பற்றி சூட்டப்படவில்லை. ஓர் விதத்தில், ஓர் அர்த்தத்தில் அவர்கள் இஸ்றாயேல் ஜனங்களுக்கு இரட்சகராய் விளங்கினார்கள். ஏனெனில் அப் பிரசையை அஞ்ஞானிகளாகிய எஜிப்தியர், பபிலோனியர் அடிமைத்தனத்தினின்று மீட்டு இரட்சித்தார்கள். அவர்களுக்கு வேத நெறிகளைப் போதித்தார்கள். அவர்களுடைய சத்துராதிகளின் உபத்திரவங்களினின்று அவர்களை ஆதரித்துக் காப்பாற்றினார்கள். தங்கள் செபதபங்களினால் தேவ கோபத்தை அமர்த்தி, சர்வேசுரன் முன்பாக அவர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களுக்கு வேண்டிய நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெறுவித்தார்கள். ஆனால் நமது திவ்ய ஆண்டவர் இஸ்றாயேல் ஜனங்களுக்காக மாத்திரம் அல்ல, உலகத்தின் எத்திசையிலுமுள்ள சகல ஜாதி ஜனங்களுக்கும் இரட்சகராய் உதித்தார். சகலரும் இரட்சண்ணியம் அடைய சத்திய திருச்சபையை உண்டாக்கினார். அவர்களைப் பசாசின் அடிமைத்தனத்தினின்றும், அதன் கொடுங்கோல் ஆட்சியினின்றும், விடுதலையாக்கி இரட்சித்தார். தேவ சாபத்துக்குள்ளா யிருந்த அவர்களைப் பாவங்களினின்று சுத்திகரித்து, தேவமக்களாக்கி, மோட்சானந்த பாக்கியங்களுக்குச் சுதந்தரவாளிகளாகச் செய்தார். ஆகையால் பூர்வீகத்தில் யேசு வென்கிற நாமத்தைத் தரித்தவர்கள், நமது தேவ ஆண்டவருக்கு இணையாகமாட்டார்கள் என்றும், அவர்கள் இவருக்கு நிர்தெரிசனமாகவும், முற்குறிகளாகவும், அடையாளமாகவு மாத்திரம் இருந்தார்களென்றும் சொல்வது உசிதமாம்.

நமது திவ்ய கர்த்தர் நமக்காகப் பிறந்து, அடி மிதிபட்டு, தமது இரத்தமெல்லாம் சிந்தி, சிலுவைமரத்தில் தமது உயிரைப் பலியாக்கி மனுக்குலத்தின் பாவங்களைப் பரிகரித்து, மனுக்குலத்தின் இரட்சகரானார், யேசுவானார். ஆனால் அவர் இவ்விதமான கிருபை செயல்களால் மாத்திரம் அல்ல, தமது உத்தம போதங்களால் மாத்திரம் அல்ல, யேசு என்கிற இத்திவ்ய நாமத்தைத் தரித்தபோது, தமது நாமத்தாலுங்கூட நமக்கு இரட்சகராய் இருக்கச் சித்தமானார். அவர் மாட்சிமை பெருமை பொருந்திய நாமங்களையும், சிறப்பும் சிங்கார இலட்சணங்களைக் காட்டும் ராஜ நாமங்களையும், தரித்திருக்கலாம். ஆனால் பெருமையும் மகிமையுமான நாமங்களைத் தமக்காகத் தெரிந்துகொள்ளாமல், அன்பும் அருளும், இன்பமும் இரக்கமும், மதுர உருக்கமும் பொழியும் அருமையான அழகிய, யேசு வென்கிற நாமதேயத்தைத் தெரிந்தெடுத்தார். இந்நாமத்தில் அச்சம் உறுத்தும்படியானது ஒன்றுமில்லை. இதில் எல்லாம் தயை, எல்லாம் உருக்கம், எல்லாம் நேசம். அர்ச், பெர்நார்துஸ் சொல்லுமாப்போல் இந்நாமம் இவர் அன்பர்கள் இருதயத்துக்கு ஆனந்தம், செவிக்கு இன்னிசை, வாய்க்குத் தித்திக்கும் தேன்.

ஆகையால் இத்திவ்ய நாமத்தில், நமது ஆத்துமங்களைப் பாவத்தின் பயங்கரமான நிர்ப்பாக்கியத்திலிருந்து இரட்சித்த நமது ஆண்டவரின் அனந்த கிருபையின் மகிமையும், மனுமக்களின் பாவக் கொடுமையை யுத்தரித்த நீதியின் மகிமையும், மோட்ச வழி காண்பித்த சுகிர்தத்தின் மகிமையும், அதற்காகப் பாடுபட்ட பொறுதியின் மகிமையும், பசாசை ஜெயித்த பராக்கிரம மகிமையும் இவை முதலான தேவ மகிமை யாவும் தொகுதியாய் அடங்கி யிருக்கிறது. ஆனதினால் பரலோக பூலோக பாதாளமென்கிற திரிலோகத்திலும் இருக்கிற சமஸ்தரும் இந்தத் திருநாமத்திற்கு முட்டிட்டு, நமஸ்காரம் பண்ணக் கடவதென்று தேவ திருவுளமாய்க் கற்பித்திருக்கிறது. ஏனெனில் அந்த நாமம் மோக்ஷ வாசிகளுக்குப் பேரானந்த பாக்கிய ஊற்றாயிருக்கிறபடியால் மோக்ஷவாசிகள் நமஸ்காரம் பண்ணவும், பூலோகத்தில் பிரசாத சம்பத்துகளைக் கொடுக்கிறதினால், பூலோக வாசிகள் ஆசிக்கவும், ஆசரிக்கவும், நரக பாதாளவாசிகளுக்கு அனந்த நீதி பயங்கரமானதினால், நரகவாசிகள் பணியவும் பாத்திர முள்ளது. இதுவு மன்றி அத்திருநாமத்தின் வல்லமையால் பேயாவேசம் தள்ளுண்டு போகவும், பற்பல பிணி, வியாதி வருத்தங்கள் தெளியவும் கடற்பிரயாணத்தில் வரும் ஆபத்துவிலகி யீடேறவும், இவை முதலான சகல சரீர அல்லல் துன்பங்கள் தீரவும், அது ஏக ஆதாரமாயிருக்கிறதுந் தவிர, ஆத்துமத்துக்கு நரகவாசலைத் தாளிட்டு, மோட்ச வாசலைத் திறப்பதுமாயிருப்பதினால், தேவ பக்தியுள்ள சமஸ்தரும் அழியாத, தெவிட்டாத தேன்போல், மதுரம் நிறைந்த அந்த யேசு என்கிற திருநாமத்தை எந்நேரமும் மனதிலே பதித்துக்கொண்டு, எவ்வித சோதனை ஆபத்து வேளைகளிலும் உச்சரித்து, விசேஷமாய்ப் பிராணபத்து சமயங்களிலும் ஓய்வின்றி சலிப்பின்றி யேசுவே, யேசுவே என்று உச்சரிக்கவுங்கடவர்.

இந்த நாமத்தின் மாட்சிமைகளையும் சுகிர்தங்களையும் தேம்பாவணியில் வீரமாமுனிவர் இனிமையாய்ப் புகழ்ந்து பாடியிருப்பதை இங்கு எடுத்துக் கூறுவது நலமாய்த் தோன்றுகிறது.

இத்தி றத்திலு மித்தகை யேந்திய நாமங்
கைத்தி றத்திலுங் களிப்புறக் கூப்பிய ருரைப்ப
மைத்தி றத்திலு மல்கிய சிதை வெலாங்கடந்து
மெய்த்தி றத்திலும் விளைந்தநன் றியம்புதல் பாலோ.

இதன் கருத்து: இங்கே சொல்லியபடி இப் பெருமைகொண்ட (யேசு என்னும்) இத்திருநாமத்தை (மனிதருக்குள் யாவரேனும்) மகிழ்ச்சியோடு தமது கைகளை (சிரமேல்) குவித்து வணங்கினவராகிச் சொல்லிய வளவில், (தாம் செய்த) பாவங்களினால் தம்மனதில் நிறையக் கொண்ட கெடுதிகள் எல்லாம் ஒழிந்து, தம் உடம்பினிடத்தும் உண்டாகப்பெற்ற நன்மைகளை நாம் சொல்ல முடியுமோ.

பொய்யும் போவன போவன பொருந்திய புரைக
ளையும் போவன வாகுலம் போவன வலகை
மொய்யும் போவன முதிர்ந்தநோய் போவன மற்றும்
மையும் போவன வகுத்தவித் திருப்பெயர் வயத்
[தால்.

இதன் கருத்து: மேன்மையாக உச்சரிக்கப்பட்ட இத்திரு நாமத்தினது வல்லமையினால் உச்சரித்தவரிடத்துள்ள அசத்தியங்களும், நிலையாயுள்ளபாவங்களும், சந்தேகங்களும், துன்பங்களும், பசாசுக்களுடைய பகைப்போர்களும், தணிக்கப்படாத வியாதிகளும், மற்றுமுள்ள பல மாசுகளும் ஒழிவனவாம்.

நோயு மொக்குமே யுகர்ந்துயிர் தருமருந் தொக்கும்
பேயு மொக்குமேல் வெற்றியைப் பெறும்படை
[யொக்குந்
தீயு மொக்குமேற் றீர்த்தருஞ் செல்கதி யுய்க்குந்
தாயு மொக்குமே தருமனன் புய்க்குமிந் நாமம்.

இதன் கருத்து: தரும சொரூபியாகிய கடவுளினது தயையைப் பெறுதற்குக் காரணமாகிய இந்தத் திருநாமம் வியாதிகள் வருமாயின் உச்சரித்தால் உயிரைக் கொடுக்கு மருந்தாக உதவி செய்யும்; பசாசுக்கள் நம்மைக் கெடுக்க வருமாயின் அவற்றை வென்று ஜெயிப்பதைப் பெறுதற்குக் காரணமாகியதோர் ஆயுதமாக உதவி செய்யும். யாதொரு பொல்லாங்கு வருமாயின் அதை ஒழித்து நாம் செல்லவேண்டிய மோட்ச கதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். இவையே யன்றிப் பாதுகாப்பினால் தாயாகவும் உதவி செய்யும்.

இன்ன வின்புறு மினியவித் திருப்பெயர் தன்னைப்
பன்ன வின்புறும் பன்னிய வாயுமுள் வணங்கி
யுன்ன வின்புறு முன்னிய வுள்ளமு மிதனைத்
துன்ன வின்புறுந் துன்னியதிசையெலா மன்றோ.

இதன் கருத்து: இத்தன்மையான இன்பத்தைத் தரும் இன்பமுள்ள இத்திருநாமத்தை உச்சரிப்பதினால், உச்சரித்தவாயும் இன்பத்தை யடையும். இதை உள்ளத்தில் நமஸ்கரித்து நினைப்பதினால், நினைத்த மனமும் இன்பத்தை யடையும். இதை அடுத்தால் அடுத்த திக்குகளெல்லாம் இன்பத்தை யடையும்.

வான மேலவர் வணங்கிய விப்பெயர் தன்னாற்
றான மேதவந் தகையருள் பொறைபுகழ் வளர்ந்து
ஞான மேபயி னன்றெலா மிகுத்துயிர் பிரித
லான வேலையி லனந்தவீ டமைதலா மன்றோ.

இதன் கருத்து: வான வுலகத்திலிருக்கும் வானவரால் வணங்கப்படும் இந்தத் திருநாமமானது, தனது தேவ வல்லமையினால் ஈகையும் தவமும் பெருமையும் கருணையும் பொறுமையும் கீர்த்தியும் ஆகிய இவை வளரும்படி ஞானத்தைத்தரும் நன்மைகளை யெல்லாம் மிகுதியாகத் தந்து, உயிர் பிரியும் மரண காலத்தில் முடிவற்ற மோட்ச பேரின்பத்தை மனிதர்கள் அனுபவிப்பதற்குக் காரணமுமாகும்.

S. M.

[பாவத்தை விலகிப் புண்ணியத்தைச் செய்து சிநேக பந்தனத்தால் சர்வேசுரனோடொருமித்திருக்கிறதுதான் கிறீஸ்துவ சாங்கோபாங்கமேயன்றி வேறல்லவென்று ஞான சீவியத்திற் பண்பட்ட பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவே சாங்கோபாங்க சீவியம், ஞானசீவியம், உள்ளரங்கசீவியமாம்.]

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

39-ம் அதிகாரம்.

ஆம் ஐயா, தூக்கில்போட தீர்வையிடப்பட் டிருக்கிறேன்.

பண்டிதர் அன்று சாயந்திரம் செங்கர்பட்டி லிருந்து ரெயில் வண்டியேறி மதுராந்தகம் போய்ச் சேர்ந்தார். காகிதத்தில் கண்ட பிரகாரம் குப்பமுத்து என்பவன் ஸ்டேஷன் ஷெட்டில் காத்துக்கொண்டிருந்தான். அவனுதவியால் பண்டிதர் ஓர் பாழடைந்த வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தார். கதவைத் தட்டவே அது திறக்கப்பட்டது. அப்போது சூரியன் அஸ்தமித்து இருட்டா யிருந்தபடியால் வீடும் திருடன் வீடுபோல இருளடர்ந்திருந்தது. சற்றுநேரத்துக்குள் மின்மினிப் பூச்சி பிரகாசத்தைப்போல் மினுக்கு மினுக்கென்று எரியும் ஒரு சிறுவிளக்கைக் கையில் பிடித்துக்கொண்டு வந்த ஸ்திரீ பண்டிதரை நோக்கி, "ஐயா உள்ளே வாருங்கள்" என்றாள். அப்போது பண்டிதர் உள்ளே பிரவேசித்தவுடனே அந்த ஸ்திரீ விளக்கைத் தாழ வைத்துவிட்டு கீழேவிழுந்து பண்டிதரை வணங்கி "ஐயா நான்தான் ராமகிஷ்ணனுடைய தங்கை" என்றாள். உடனே பண்டிதர் "எழுந்திரு அம்மா" என்றார். அந்நேரத்தில் அந்த ஸ்திரீ வாயில் கையை வைத்துக்கொண்டு, "ஐயா, சாமி சத்தமாய்ப் பேசாதேயுங்கள்" என்று அவரை உள் அறைக்குக் கூட்டிக்கொண்டு போனாள்.

அப்படி போகும்போது அவ்வீட்டு மூலையிலும் முடுக்கிலும் தூரிஞ்சில் வந்து ஒண்டியிருப்பதையும், பல இடங்களில் ஓடு சரிந்து கிடப்பதையும் பண்டிதர் கண்டு, அந்த வீடு பாழடைந்த வீடென தெரிந்துகொண்டார். உள் அறைக்குப்போய்ச் சேர்ந்தவுடனே, அந்த ஸ்திரீயானவள் கையிலிருந்த விளக்கைத் தரையில் வைத்து அதை யொரு கூடையால் மூடினாள்.

இதைக் கண்ட பண்டிதருக்கு என்ன, ஏது நடக்குமோவென்று அச்சமுண்டாகி, அந்த ஸ்திரீயை நோக்கி "நீதானோ மீனாட்சி?" என்றார். அதற்கு அவள், "ஆம் எஜமானே! நான்தான்" அங்கு நின்றுகொண்டிருந்த மனிதனைக் காட்டி "இதோ இவர்தான் என் புருஷன்." என்றாள். அப்போது இருட்டில் நின்றுகொண்டிருந்த அந்த மனிதன் அவர் அருகாமையில் வந்து இரு கையையும் எடுத்து அவருக்கு தண்டம்போட்டான். அவனைப் பண்டிதர் பார்த்து "உன்பெயர் என்ன?" வென்க, "சக்கரபாணி. ஸ்வாமி," என்றான் "என்ன விஷயமாக என்னை வரவழைத்தாயம்மா?" என்று பண்டிதர் மீனாட்சியை வினவினபோது அவள் இவ்வாறு மொழிவாள்: "என் பேருபகாரியான பிரபு! தாங்கள் எனக்கும் என் அன்புக்குரிய அண்ணனுக்கும் செய்த நன்மை உபகாரங்களுக்கு நான் என்ன கைம்மாறு புரிவேன்; மூன்று வருஷத்துக்கு முன் தாங்கள் அடியாளுக்குத் தயவுடன் கொடுத்த இரண்டாயிரம் ரூபாயையும் பெற்றுக்கொண்டு கலியாண முடித்துக்கொண்டு மீதி பணத்துக்கு மூன்று எக்கர் நிலம் வாங்கி யிதுவரையில் தங்கள் தர்மத்தால் யாதொரு குறைவுமின்றி பிழைத்துவந்தோம் இருவரும். ஆனால் ஆறு மாதத்துக்குமுன் இவருக்குத் துராதிஷ்டமாய் ஒரு பெரும் ஆபத்து நேரிட்டது. இவர் உங்களுக்கு அதைத் தெரியச் செய்வார்", என்று தன் புருஷன் பக்கம் திரும்பி, "சொல்லுங்கள் இந்த பிரபுவுக்கு நடந்தகாரியத்தை" யென்றாள்.

அப்போது மீனாட்சியின் புருஷன் பண்டிதரை நோக்கி இவ்வாறு சொல்வான்:—"ஐயா, மகாப்பிரபு இப்போது நான் பெரும் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நான் சொல்லப்போவதைத் தாங்கள் யாருக்கும் சொல்வதில்லையென்று சத்தியப் பிரமாணஞ் செய்தால் மாத்திரம் நான் சொல்வேன். நான் சொன்னதை யாருக்காகிலும் சொல்வீராகில் எனக்குத் தப்பாமல் உயிர்ச்சேதம் உண்டாகு" மென்றான். இதைக் கேட்ட பண்டிதருக்குச் சந்தேகமுண்டாகி, ஆம், இல்லையென்றுசொல்ல வாய்வராமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், மீனாட்சி யென்பவள் பண்டிதரைப் பார்த்து: "ஐயா தர்மப்பிரபு! நாங்கள் தங்கள் ஊழியர்; இந்நேரத்தில் தேவரீர் காப்பாற்றாவிட்டால் என் புருஷன் அனியாயமாய்ச் சாகவேண்டி நேரிடும். நானும் பலதுன்ப துரிதங்களுக்குள்ளாகி, அவரைச் சுடுகாட்டுக்கு வெகு சீக்கிரத்தில் பின்செல்லவேண்டி நேரிடும். ஆகையால், தாங்களே எங்கள் இரக்ஷகர்; உங்களையே நாங்கள் நம்பியிருக்கிறோம். சாகக் கிடந்த என் அண்ணனுடைய முகத்தைப் பார்த்து என் புருஷன் இப்போது சொல்லப்போகும் சங்கதியைத் தாங்கள் யாருக்கும் அறிவியாதபடிக்குத் தங்கள் மகா கனத்தைத் தாழ்மையுடன் மன்றாடுறேன்" என்றாள்.

அப்போது பண்டிதர் மீனாட்சியை நோக்கி "உன் புருஷன் கேட்கும் பிரமாண சத்தியஞ் செய்ய எனக்கு மனமில்லை. ஏனெனில் அதனால் பல கஷ்டங்கள் எனக்கு உண்டாகும் போலும். ஆனால் நீ மரணமான உன் சகோதரனுடைய பெயரை யிப்போது உச்சரித்தபடியால் நான் அதற்குச் சம்மதிக்கிறேன்" என்றார்.

பிறகு பண்டிதர் மீனாட்சியின் புருஷன் பக்கமாய்த் திரும்பி, "அப்படியே ஆகட்டும்; என் உயிர் போனபோதிலும் நீ யிப்போது சொல்லப்போவதை யாருக்கும் அறிவியேன்; உன் சங்கதியைச் சொல்" என்றார்.

அப்போது மீனாட்சியின் புருஷன் பண்டிதரை நோக்கி. "நான் மரணதண்டனை யடைந்த கைதி" என்றான். இதைப் பண்டிதர் கேட்கவே பயந்து திடுக்கிட்டு மயிர்சிலிர்த்துப் பேச வாய் வராமல் சற்றுநேரம் மௌனமா யிருந்தபின் "மெய்யாகவே நீ கைதிதானோ?" என்று வினவ, "ஆம். ஐயா ? தூக்கிப்போட தீர்வையிடப்பட்டிருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால் நீ எப்படி தப்பித்துக்கொண்டு இங்கே வந்தாய்?" என்றதற்கு மீனாட்சியின் புருஷன் "ஐயா, மகாப்பிரபு, என் சரித்திரத்தை சொல்லுகிறேன் கேளுங்கள். ஆறுமாதத்துக்குமுன் ஊரில் (ஒரு கொலை நடந்தது நானிருந்த பக்கத்து வீட்டில்). கொலை நடப்பதற்கு பத்து நாளைக்குமுன் நிலவிஷயமாய்க் கொலை செய்யப்பட்டவனுடைய பேரனுக்கும் எனக்கும் சண்டை யுண்டாகி அடித்துக்கொண்டோம். அதுமுதல் எங்கள் இரண்டு வீட்டுக்கும் நாடோறும் சண்டை. அடிபிடி சண்டையான பத்தாம்நாள் இராத்திரி நடுச்சாம வேளையில் பெருங் கூச்சலும் சந்தடியும் கேட்டு, நான் எழுந்து வெளிவாசலில் நின்றுகொண்டிருக்கும் போது இரண்டு மூன்று பேர் பக்கத்து வீட்டினின்று ஓட்டமாய் ஓடிவந்து. 'இவன்தான் கொலைசெய்தான்' என்று என்னைப் பிடித்துக் கொண்டு படுத்தாத பாடெல்லாம் படுத்தினார்கள். என்னை அவர்கள் அன்றைய இராத்திரி அடித்த அடிக்கும் உதைத்த உதைக்கும் கணக்கு வழக்கில்லை.

"கடைசியாய்ப் போலீசார்வந்து என்னைப் பிடித்துக்கொண்டுபோய் என் சத்துராதிகளிடத்தில் இலஞ்சம் பெற்றுக்கொண்டு, எனக்கு அவர்கள் செய்த சித்திரவதை பகவானுக்கு மாத்திரம்தெரியும்! 'நீதான் கொலைசெய்ததாக ஒத்துக்கொண்டால் ஒழிய. உன் உயிர் போலீஸ் ஸ்டேஷனில் போய்விடு' மென்று பயமுறுத்தினதன்மேல், நான்தான் கொலைசெய்தேன் என்று ஒத்துக்கொண்டேன்.

"மேலும், என் வீட்டிலிருந்த பாளை கத்தியையும் நான் மேலே போட்டுக்கொள்ளும் வேஷ்டியையும் அவர்கள் எப்படியோ எடுத்துக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு, நான் அந்த மனிதனைக் கொலைசெய்து ஓடும்போது அந்தக் கத்தியை அங்கே போட்டுவிட்டதாகவும், அந்நேரத்தில் அந்த வீட்டார் என்னைத் துரத்திக்கொண்டு போகும்போது என் மேல்வஸ்திரத்தை அவர்கள் பிடுங்கிக்கொண்டதாகவும் சாக்ஷி சொன்னார்கள்.

"கொலைசெய்யப்பட்டவன் 80 அல்லது 90 பிராயமுள்ள குடுகுடு கிழவன். இவன் வீடுவிட்டு வெளிப்படுகிறதில்லை. இப்பேர்ப்பட்டவனை விரோதிகள் கொலை செய்து அந்தப் பழியை என்மேல் போட்டார்கள்."

பண்.–பிறகு மாஜிஸ்ட்ரேட் அந்தக் கேசை விசாரித்தாரா ?

சக்கரபாணி.—ஆம், விசாரித்தார். நடந்ததெல்லாம் சொன்னேன். பாளை கத்தியும் மேல்வஸ்திரமும் என்னுடையதென்றேன்.

பண்—கேசு முடிந்ததா, இன்னும் முடியவில்லையா ?

சக்.–கேசு முடிந்துபோயிற்று, எஜமானே.——எனக்கு விரோதமாய் முடிந்தது! என் விரோதிகள் சொன்ன பொய்சாக்ஷிகளைக் கொண்டு என்னைத் தூக்கிப்போடத் தீர்மானம் செய்துவிட்டார்கள்.

பண்.—அப்படியென்றால், இங்கே எப்படி வந்தாய் ?

சக்.—நான் சாவுக்குத் தீர்வை யிடப்பட்டு, மதிராசில் செண்டிரல் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தேன். அப்போது ஜெயிலை மராமத்து செய்தார்கள். சுவற்றில் வைத்த ஏணியை யெடுக்காமல் அங்கேயே நிறுத்தி வைத்திருந்தார்கள். அப்

போது அனியாயமாய் நான் கொல்லப்படுவேதிலும்,கடவுள் கருணையால் ஏன் நான் தப்பித்துக்கொள்ளக் கூடாதென்று எண்ணி, ஒரு இராத்திரி என் விலங்கை உடைத்துக்கொண்டு ஏணியேறி ஜெயிலை விட்டுத் தப்பித்துக்கொண்டேன். என் ஊர் திண்டிவனம். அங்கே போனால் போலீசார் பிடிப்பார்களென்று பயந்து இவ்வூருக்கு வந்து, இந்தப் பாழாய்க்கிடந்த வீட்டில் ஒளிந்துகொண்டிருக்கிறேன். நான் மதிராசிலிருந்து தப்பித்து ஓடிவருங் காலத்தில் தேவாதீனமாய் என் பெண்சாதி யெனக்கு எதிர்ப்பட்டாள். அவள் வீடு வீடாய் இரந்து கொண்டுவருவதை நடுச்சாம வேளையில் எனக்குக் கொண்டுவந்து கொடுத்து வருகிறாள். இதில் வெகுநாளிருப்பது அசாத்தியம். ஏனெனில் போலீஸ்காரர் ஊர் ஊராய் என்னைத் தேடிப்பார்ப்பதாகப் பிரஸ்தாபம்.

"அப்படியானால் என்னிடத்தில் நீங்கள் இப்போது கோரும் காரியமென்ன?" என்றார் பண்டிதர். அதற்கு மீனாட்சி, "ஐயா மகாப்பிரபு! தாங்கள் என் அண்ணனுடைய முகத்தைப் பார்த்து, அடியாளுக்குக் கொடுத்த இரண்டாயிரம் ரூபாயில் முன்னூறு ரூபாயில் கலியாணத்தை முடித்துக்கொண்டேன். மீதியான பணத்துக்கு, முன் சொன்னபடி, நிலம் வாங்கி அதன் உற்பத்தியால் அற்ப குறையின்றி பிழைத்துவந்தோம். இந்தக் கொலைக்கேசைப் பற்றி யென் காது கழுத்திலிருந்த நகையையும் விற்றேன். என் வீட்டையும் விற்றேன், என் நில புலத்தையும் விற்று வக்கீலுக்குக் கொடுத்தேன். எங்களுக்குள்ள சகலத்தையும் விற்றபோதிலும் தீர்மானம் எங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்டு, இதோ இவர் எப்படியோ ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்டார். இனி தாங்கள் தான் எங்களைக் காப்பாற்றவேண்டு" மென்று பண்டிதர் காலில் அழுகையுடன் விழுந்தாள்.

"நீங்கள் பெரும் அபாயத்துக்கு உள்ளாயிருக்கிறீர்கள். உங்களை இரக்ஷிக்க என்னால் சாத்தியப்படாது" என்றார் பண்டிதர்.

"தர்மப்பிரபு! வாஸ்தவத்திலே பெரும் அபாயத்திலிருக்கிறோம். இவர் இங்கு ஒளிந்துகொண்டிருப்பதை யாராகிலும் அறிந்து போலீசாருக்குத் தெரியப்படுத்தினால் சகலமும் முடிந்து போம். தாங்கள் எப்படியாவது நல்ல மனது செய்து இறந்து போன என் அண்ணன் ராமகிஷ்ணன் முகத்தைப்பார்த்து எங்களை யிரக்ஷிக்கவேண்டு" மென்று மீனாட்சி மாகாபிரலாபத்துடன் மன்றாடுவதைக் கண்ட பண்டிதருடைய மனம் மெழுகுபோல் உருகி:

"நான் உங்களுக்குச் செய்யக்கூடிய உதவி இன்னதென்று சொல்லுங்கள்? அது என்னால் சாத்தியப்படுமாகில் செய்வேன். எனது பிரிய ராமகிஷ்ணனை நான் ஒருபோதும் மறவேன்" என்றார்.

அதற்கு மீனாட்சி, "என் பேருபகாரியான தர்மப்பிரபு! இனிமேல் நாங்கள் இங்கு வசிப்பது கூடாதகாரியம். எவ்வளவு ஏகாந்தத்திலிருந்த போதிலும் வெளிக்குவராமல் போகாது. மேலும் வெகுகாலம் இந்த இடத்தில் வசிப்பது விமரிசையல்ல" என்றபோது:

"சந்தேகமா? பட்கிலிருந்து கடலில் குதிப்பதற்கு ஒப்பாகும்! ஆகையால் யாதொரு அபாயமற்ற இடத்தைத் தெரிந்து கொள்வது உத்தமம் என்றார் பண்டிதர்.

சக்.—தங்கள் ஆலோசனையைக் கேட்டு இந்தப் பெருங்கண்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டுத்தான் தங்கள் விஜயத்துக்கு ஆசையுடன் காத்திருந்தோம்.

பண்.—நீ அந்தக் கொலையை கட்டிக்கொள்ளவில்லையே?

சக்.—ஐயா, ஸ்வாமி! நான் அதைப்பற்றி கனவில் முதலாய் நினைத்தேன் இல்லை. பகவான் அறியச் சொல்லுகிறேன் அது எனக்குத் தெரியவேதெரியாது.

மீனா.—மகாப்பிரபு! நானும் என் கணவனும் வீட்டுக்குத் தாளிட்டு நித்திரைசெய்யும் போது பக்கத்து வீட்டில் கேட்கப்படும் பெருஞ் சந்தடியைக் கேட்டு நானே இவரை யெழுப்பிவிட்டேன்; இது சத்தியம்.

பண்.—பாவம் புண்யமாகவும் புண்யம் பாவமாகவும் காட்டுவார்கள் துர்மார்க்கர். ஆனால் நீங்கள் இந்தப் பாதகத்தில் சேராதிருப்பீர்களேயாகில், கடவுள் உங்களைக்காத்து இரக்ஷிப்பார். இதற்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு இப்போது ஒரு உபாயமும் தோன்றவில்லையோ?

மீனா.—ஐயா ஸ்வாமி! ஒன்றுந் தோன்றவில்லையே.

பண்.—அப்படியானால் என் அம்மா ஆயிரம் ரூபாய் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டாய் என்னே?

மீனா.—போலீசாருக்குக் கொடுத்து தப்பித்துக் கொள்ளலாம் என்கிற கருத்துடன் தான்.

பண்.—இலக்ஷ ரூபாயிருந்தாலும் இது சரிப்படாதே.

மீனா.—அப்படியானால் தங்களுடைய தாற்பரிய மென்னவோ?

பண்.—ஒருகாரியம் செய்தால் உயிர்தப்பிப் பிழைக்கலாம்

மீனா.—அது என்னபிரபு?

பண்.—நாமிருப்பது இங்கிலீஷ்காரருடைய இராச்சியம். புதுச்சேரி பிராஞ்சுக்காரருடைய இராச்சியம். நீங்கள் ஸ்வாமி தயவால் இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு புதுச்சேரிக்குப் போய்ச்சேர்ந்தால் உயிர் தப்புவீர்கள். இல்லாவிட்டால் மாளாது.

மீனா.—உங்கள் ஆலோசனைப்படி புதுச்சேரிக்குப் போய் சேருகிறோம் மகாபிரபு! எங்களை இரக்ஷித்த தங்களைப் பகவான் சகல ஆபத்திலேயும் நின்று காப்பாற்றுவாராக.

பண்.—எனக்குத் தெரிந்தமட்டும் இது தான் நல்ல ஆலோசனை. ஆனால் சாமர்த்தியத்துடன் இதைவிட்டுத் தப்பித்துக்கொள்ளவேண்டியது.

மீனா.—அப்படியே செய்வோம் துரையே!

பண்.—இதோ ஆயிரம் ரூபாய். இதை பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள். புதுச்சேரி போய்ச் சேர்ந்தபின், இதைக்கொண்டு யாதொரு வியாபாரம் செய்து பிழைக்கலாம். அல்லது நிலபுலம் வாங்கி பயிர்செய்யலாம். உங்களுக்கு எது சௌகரியமாகத் தோன்றுமோ அதைச் செய்து பிழையுங்கள்.

மீனா.—இங்கிருந்து போலீஸ்காரர் அங்கே வந்து எங்களை பிடிப்பார்களோ ஸ்வாமி?

பண்.—பிடிக்கக் கூடாது. இது ஒரு இராஜாவின் தேசம்; அது வேறொரு இராஜாவின் தேசம். மேலும் நீங்கள் அங்கேபோய்ச் சேர்ந்தபின், உங்களுக்கு ஏதேனும் தேவையாயிருந்து எனக்குக் கடித மெழுதினால் உங்கள் குறையைத் தீர்ப்பேன். இப்போது எனது பிரிய ராமகிஷ்ணன் இருந்தால் உங்களுக்கு ஒன்றுங் குறைவு இராது. அப்பேர்ப்பட்ட நற்குணசாலியை நான் ஒருபோதும் பார்த்ததேயில்லை.

மீனா.—ஐயா ஸ்வாமி! என் அண்ணன் உங்கள் வேதத்தைக் கைப்பற்றித்தானே செத்தான்.

பண்.—ஆமாம். அவனுடைய இஷ்டமாகவே சத்தியவேதத்தில் சேர்ந்து மரித்தான். இப்போது பரலோகத்தில் சந்தோஷமாயிருக்கிறான்.

மீனா.—உங்கள் வேதக்காரர் எல்லோரும் சொர்க்கம் சேருவார்களோ ஐயா?

பண்.—வேதகற்பனைப்படி சரிவர நடப்பவர்கள் தவறாமல் அங்கேபோய் சேருவார்கள்.

மீனா.—என் அண்ணன் உங்கள் வேதத்தில் சேர்ந்து மரித்தார். என் நானும் அதில் சேரக் கூடாது? (என்று மீனாட்சி பண்டிதரைப் பார்த்து சொல்லி). மகாப்பிரபு! நான் புதுச்சேரிபோய் சேர்ந்தபின் உங்கள் சத்தியவேதத்தில் சேருவேன். நான் அதில் சேர்ந்தால் என் புருஷனும் என்னோடு வராமல் போவாரோ? (என்று பேசும்போது)

பண்டிதர் "உங்கள் இஷ்டப்படி செய்யலாம்" என்று கைகெடியாரத்தை யெடுத்துப் பார்த்து: "நான் புறப்பட நேரமாய்விட்டது. நீங்கள் கூடியசீக்கிரத்தில் இதைவிட்டு புதுவைக்குப் புறப்படுங்கள். ஆனால் வழிநடக்கும்போது வெகு ஜாக்கிறதையாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சர்க்கார் கையில் அகப்படுவீர்கள்" என்று சொல்லிப் புறப்படும்போது மீனாட்சியும் அவள் புருஷனும் பண்டிதர் காலில் விழுந்து தண்டனிட்டு, "ஸ்வாமி, பிரபு! நீங்களே எங்கள் உபகாரி, இரக்ஷகர், உங்களை ஒருபோதும் மறவோம்" என்றார்கள்.

பண்டிதர் அந்த வீட்டைவிட்டு புறப்பட்டு ஸ்டேஷனுக்குப் போய்க்கொண்டிருக்கும் போதே ரயில் வண்டி ஸ்டேஷனைவிட்டுச் செங்கற்பட்டிற்கு புறப்பட்டுவிட்டது. அவர் அப்போது அருகாமையி லிருந்த சத்திரத்துக்குப் போய்ப் படுத்து இளைப்பாறினார்.

[ஆண்டவரே! நான் அதிக துன்பம் அநுபவிக்கத் திராணியற்றவனென்றும், ஒரு சொற்ப நெருக்கிடை வந்தமாத்திரத்திற் கலங்குகிறவனென்றும் நீர் அறிவீரே. எனக்கு வரவிருக்கிற துன்பங்களெல்லாம் உமது நாமத்துக்குத் தோத்திரமாக எனக்குப் பிரியமும் விருப்பமும் உள்ளதாயாகும்படி செய்தருளும். அதேனெனில் உம்மைப்பற்றித் துன்ப வேதனைப்படுவது என் ஆத்துமத்துக்கு மெத்த நன்மையாம்.]

HOW TO RAISE OUR STATUS?

நாம் முன்னேறுவ தெப்படி?

ஐந்தாம் வியாசம்.

கல்வி.

(முடிவு.)

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டுபவர். (நாயனார்).

இந்தியாவில் ஒரு ஜாதி ஜனங்களுண்டு. அவர்கள் இந்தியா தேசத்தின் பூர்வகுடியன்று. தங்கள் தேசத்தில் தங்களுக்கு நேர்ந்த சங்கடங்களைப் பொறுக்கமாட்டாமல் எங்கேயாவது ஓடிப்போய் தலை மறைவாய்ப் பிழைத்துக்கொள்ளவேண்டி, அபயம் அபயம் என்று இந்தியாவை நாடிவந்த புறதேசத்து ஜனங்கள் அவர்கள்.

சுமார் 50 வருஷத்திற்குமுன் அவர்கள் மெத்த கேவலமான நிலைமையிலிருந்தார்கள். படிப் பென்பது அவர்களுள் பொதுவாய் கிடையாது. தங்கள் மக்கள் இன்னம் பால் மணம் மாருமுன்னமேயே அவர்களுக்கு விவாகம் செய்துவைத்திடுவார்கள். ஆண்பிள்ளைகள் பல பெண்டுகளைக் கட்டிக் கொள்ளுவார்கள். பெண்டுகள் எப்போதும் தங்கள் புருஷர்களைத் தவிர இதர ஆண்பிள்ளைகளைப் பாராமல் கண்டிதமான கோஷா அநுசரித்து வந்தார்கள். ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சம்பாஷணை காலங்களில் அல்லது பந்தி சமயங்களில் கலப்பதே கிடையாது. ஜனங்க விருத்திக்குப் பின்னமான பல விதமான துராசாரங்களை யநுசரித்து வந்தார்கள்.

ஆனால் அவர்களுள் சிலர் உயர்தரக் கல்வி கற்று, ஐரோப்பா கண்டத்திற்குப் போய் பல தேசங்களைச் சுற்றிப்பார்த்து. அநுபவ ஞானமடைந்து இந்தியாவிற்குத் திரும்பிவந்தார்கள். வந்ததுதான் தாமதம். தங்கள் குலம் ஈடேறும்படி. ஐரோப்பிய வழக்க பழக்கங்கள் ஆசார முறைமைகளுள் எதெதை யேற்றுக்கொள்ள வேண்டியதென்றும், தங்கள் வழக்க பழக்கங்கள் ஆசார முறைமைகளுள் எதெதைத் தள்ளிவிட வேண்டியதென்றும்" திட்டம் செய்தார்கள். அக்குலத்தார் முழுவதும் அவர்களைத் தங்கள் தலைவர்களாக ஒப்புக்கொண்டு, அவர்கள் யோசனையைக் கட்டளையாகப் பாவித்து நடப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். மாமூல், வழக்கம் என்பதெங்களுக்கு வேண்டவே வேண்டாமென்று நிராகரித்துத் தள்ளினார்கள்.

உடனே அவர்களுள் பிரதமக் கல்வி அபரிமிதமாய் ஆரம்பித்தது. அவ்வஸ்திவாரத்தின்மேல் மத்திமகல்வி யென்னும் கட்டிடத்தை ஸ்தாபித்து அக்கட்டிடத்தின் மேலடுக்காக உயர்தரக் கல்வியையும் கட்டி முடித்தார்கள். சிசுவிவாகமென்னும் துர்ப்பழக்கத்தை அடியோடு தள்ளினார்கள். பெண்பிள்ளைகளுள் இருந்த கோஷா வழக்கத்தைமாற்றி அவர்களுக்கு வேண்டிய அளவு சுதந்திரம் கொடுத்தார்கள். ஆண்பிள்ளைகள் பல மாதர்களைக் கட்டிக்கொள்ளும் முறையை நீக்கி ஒரே பெண்சாதியுடன் வாழ உடன்பட்டார்கள். அக்கிரம வழக்கங்களை இரக்கமின்றி அடியோடு தள்ளினார்கள். வர்த்தகத்தைக் கையாடினார்கள்.

முடிவில் என்ன ஆச்சுது? நாகரீமுள்ள குடிஜனங்களானார்கள். சிறந்த உத்தியோகத்தை யடைந்தார்கள். செல்வம் பொங்கும் சீமான்களானார்கள். இங்கிலாந்து பார்லிமெண்டில் முதலாய் மெம்பர்களானார்கள். அவர்களுடைய சீரையும் சிறப்பையும் பார்த்துப் பிறர் ஆசைப்பட்டு நாங்களும் உங்கள் குலத்தோடு சேர்ந்து விடுகிறோம்; எங்களையும் சேர்த்துக்கொள்ளுங்களென்று அவர்களை மன்றாடினார்கள். அவர்களோ முடியாது, முடியாது என்று அவர்களை ஒழித்து விட்டார்கள். அந்த ஜாதி ஜனம் யாரெனில் பார்சிகாரர் என்றழைக்கப்படும் பார்சீகர்தான்.

நமது குலத்தார் இந்தப் பார்சீகரைக் கண்டு பாவித்தால் எவ்வளவோ சிறப்புண்டாகும். அப்படி பாவிப்பது நமக்குக் கஷ்டமான காரியமன்று. ஏனெனில், நாம் இந்துக்களைப்போல் ஜாதியென்னும் கட்டுப்பாட்டுக் கமைந்தவர்களன்று. நான் முன் ஒரு வியாசத்தில் ஒப்பித்ததுபோல் நமக்கிஷ்டமானதைச் செய்ய நமக்குப் பூரண சுதந்திரமுண்டு. மாமூல்வழக்கம் என்பது நமக்குக் கிடையாது. நாம் எதைச்செய்தாலும் நம்மை ஜாதி பிரஷ்டை செய்வார்கள் யாருமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் கத்தோலிக்கு கிறிஸ்துவர்களாயிருக்கிறோம். அதன் பயனாக, ஆசார சம்பந்தமாயும், நமக்குள் சிசுவிவாகத்திற்கு ஏதுவில்லை. ஒருத்தர் பலமாதர்களைக் கட்டிக்கொள்ள முடியாது. விதவைகள் மறு கலியாணஞ் செய்துகொள்ள விக்கினமில்லை. உறவிலேயே பெண் தேடிக்கொள்ள வேண்டுமென்னும் உபத்திரவமுமில்லை. இப்படிப்பட்ட ஏற்பாடுகளெல்லாம் ஒரு குலம் விருத்தியடைய தக்க சாதனங்கள். இதுவுமன்றி நமக்குக் கைலாகு கொடுத்து நடத்திவரும்படி நமக்குத் தலைவர்களாக குருக்களுமுண்டு. ஆகவே, நாம் விருத்தியடைவது எவ்வளவு சுலபமான காரியம்.

எல்லாங்கூடி நமக்கு வேண்டியது இரண்டே காரியம்: கிறிஸ்துவப் பயிற்சியும் கல்வியுமே. கிறிஸ்துவப் பயிற்சிதான் நமக்கு நல்லொழுக்கத்தைக் கொடுக்கும். நல்லொழுக்க மில்லாவிட்டால் எதுவும் முடியாது. ஒருவன் ஏழையாயிருந்தாலும் [illegible]டனாயிருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் [illegible]ன்றிருந்தால், அதைப்பற்றி அவனையாரும் மதிப்பார்கள். அவ்வொழுக்கம் ஒன்று தவறி மற்றவை யெல்லாம் பரிபூரணமாயிருந்தபோதிலும், அப்படிப்பட்டவனை யாரும் நேசிக்கமாட்டார்கள் நாம் கிறிஸ்துவர்களாயிருக்கிற கணக்கிலேயே இவ்வொழுக்கத்தை யநுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முன்னேற்றத்திற்கு இரண்டாவது உபகரணம் கல்வி. யாவரும் கல்வியைக் கையாடி, நாகரீகத்தில் விருத்தியடைந்து, சுகசம்பத்தில் வாழ்ந்துவரும் இக்காலத்தில், நாம் அறியாமையிலும் தாரித்திரத்திலும் நாள்கழித்து "நாம் சத்திய வேதக்காரர், நாம் இங்கிருப்பது சில நாளைக்கு, நமதுவீடு மோட்சம், இந்தச் சிலநாட்களில் நாம் எங்ஙனமிருந்தால்தா னென்ன?" என்று தத்துவசாஸ்திரம்பேசி நாட்களைக் கழித்தல் தகுதியோ? பொய்மதஸ்தர்கள் மாத்திரம் சீருஞ் சிறப்புடனும் வாழ நாம் எப்போதும் நீசர்களா யிருக்கவேண்டுமென்பது தேவசித்த மன்று. ஒருவன் எளியவனாயும் தாழ்ந்தவனாயு மிருந்தால் தன்நிலைமையில் தேவசித்தத்திற் கமைந்து கூடியமட்டும் ஒருபடியாவது முன்னுக்குப் போக முயல்வதுதான் புத்தி. அதுவே விவேகம், அதுவே பகுத்தறிவுள்ள மனிதரின் இயற்கை.

நமது சேரிகளுக்குப்போய் அங்கு அஷ்ட தரித்திரத்திலும், ஒழுக்கக் குறைகளிலும் இருக்கும் நமது சகோதரர்களைப் பார்ப்பது நமக்கு எப்படிப்பட்ட பரிதாபத்தை உண்டுபண்ணுகிறது. அதிலும் பரிதாபமேதெனில் அவர்களிடம் கிறிஸ்துவப் பயிற்சி சுத்த சூன்யமாயிருப்பதுவே. அக்கிறிஸ்துவப் பயிற்சியாவது அவர்களிடமிருந்தால் அதன் பயனாக அவர்கள் ஒழுக்கத்தில் தேறி, பிறருடைய நல்மதிப்பையடைந்து, முன்னுக்கு வரக்கூடும். எப்படி அழுக்குபடிந்திருக்கும் கண்ணாடியில் சூரிய கிரணங்கள் ஊடுருவிப்பாயாதோ, அப்படியே அஷ்டதரித்திரத்திலும் அறியாமையிலும் நாள்கழித்து வருபவர்களிடம், பொதுவாய்க் கிறிஸ்துவப் பயற்சியைக்காண்பது கஷ்டமாயிருக்கிறது; இது அனுபவமான காரியம். கொஞ்சமாவது வயிறார சாப்பிடுகிறவர்கள் வீடுகளில்தான் கட்டுத்திட்டம், ஒழுங்கு, கிரமம் காணக்கூடும். கொஞ்சமாவது விவேகமோ, நற்சகவாசமோ, பூர்வீக வழிப்பாடோ, தெய்வபயமோ இருப்பவர்களிடந்தான் நல்லொழுக்கத்தையும், மரியாதையையும் காணக்கூடும்.

அஷ்டதரித்திரத்தைப் போக்கிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய்த் தனவந்தர்களாக ஒரு கைகண்ட முறையுண்டு. அம்முறையை யநேகர் கையாடிவந்து அதன் பலனாக யோக்கியர்களானார்கள். இந்தக் கைகண்ட முறையைநான் அடுத்த வியாசத்தில் விவரமாய்க் காட்டுவேன். ஜாதி யேற்பாட்டின்படி உயர்குலத்தாரென்னப்படுபவர்களின் மிதியடிகளென்று பாவிக்கப்படும் நாம் முன்னேறுவதும், ஏனையோரோடு சமரசம் பாராட்டுவதும் அவர்களுக்கு பொச்செரிப்பையும், காய்மகாரத்தையும் உண்டாக்கக்கூடும். இது உலக சுபாவமே. தன் அதிகாரத்தையும் ஸ்தானபலத்தையும் இழந்துவிடுவது யா

ருக்கும் பிரியமிராது. இதை நினைத்து நாம் மனந்தளரக் காரணமில்லை.

ஏனெனில், உலகம் செய்யாததைக் கிறிஸ்துவ மனசாட்சி செய்யும். உலக மனசாட்சிக்கும் கிறிஸ்துவ மனசாட்சிக்கும் என்றும் போராட்டமுண்டு. நமக்குக் கொஞ்சமாவது ஏனையோர் கைலாகு கொடுத்துதவுவது கிறிஸ்துவ மனசாட்சியின் தூண்டுதலேயன்றி வேறல்ல.

நாம் அம்மனசாட்சியின்பேரில் நம்பிக்கைவைத்து, ஒரு பளுவுள்ள சாமானத்தைத் தூக்கும்போது தூக்குகிற அனைவரும் அபேஷ் என்று சத்தமிட்டு ஒரே பலத்தோடு முக்கித் தூக்கி யெடுப்பதுபோல் நாமும் ஒரே முயற்சியாய் கிறிஸ்துவப் பயிற்சியையும், அவரவர்கள் அந்தஸ்திற்கேற்ற கல்வியையும் அதற்குப் பிறகு கிரமமான வாசிப்பையும் கையாண்டுவந்தால் நமது பின் தலைமுறை—அதாவது இன்னம் சுமார் 30 வருஷத்திற்குப் பிறகு வரும் நமது குலத்தார் நம்மிலும் சிரேஷ்டர்களாய் விளங்குவார்கள். நாம் கனவிலும் நினையாத மதிப்பும் செல்வமும் அந்தஸ்தும் அவர்கள் பங்காயிருக்கும்.

இவ்வியாசத்திற்கு மேற்கோளாக எடுத்திருக்கும் குறல் வாக்கியம் ஏதெனில் "மடியா மடியா வொழுகல் குடியைக் குடியாக வேண்டுபவர்" அதாவது தாம் பிறந்தகுடியை நற்குடியாக வேண்டுவோர் சோம்பலை விடக்கடவர் என்பதாம். ஆதலால் நாம் நமது நெடுந்தூக்கத்தை யொழித்து ஒவ்வொரு காரியத்திலும் நமது முன்னேற்கத்தைக் கவனித்து வருவோமானால், முயற்சி திருவினையாக்கும.

இந்திய கிறிஸ்துவன்.

[அர்ச். கன்னிமரியாயி னுதவியில்லாமல் வரப்பிரசாதம் பெறலாமென்கிறவன் சிறகில்லாமற் பறக்கப் பிரயாசப்படுகிறவனுக்குச் சமானம். (அர்ச். அந்தோனினுஸ்.)

ஆ மரியாயே! நீரோரைக்கண்ணோக்கிப் பார்ப்பீரோ அவன் கரையேறுமற்போகிறதும் நீராருக்கு முகத்தைத் திருப்பிக்கொள்வீரோ அவனிரட்சண்ணியமடைவதுங் கூடாதகாரியமாம்.

(அர்ச். அன்செல்முஸ்.)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

சகுன சாஸ்திரமும் கனவும்.

சகுன சாஸ்திரமும் கனவும் மெய்யோ பொய்யோ? மெய்யோ பொய்யோ வென்பதை மெதுவாய்க் கீழ்நோக்கின் பையப் பைய வறிந்துகொள்ளலாம்.

இத்தென்னிந்தியாவின் கண், நமது கிறீஸ்துவேதம் நாளுக்கு நாளாய்ப் பரவிக்கொண்டும், நம் கத்தோலிக்கர், கல்வியிலும் நாகரீகத்திலும் மென்மேலும் விர்த்தியடைந்துகொண்டும் வரும் விஷயமானது யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதே. ஆயினும் 'சகுனசாஸ்திரங்கள் பேரிலும், கனவின்பேரிலும்" முழு நம்பிக்கை வைத்து, அவைகளை விசுவசிப்பதும் அவைகளைப்பற்றி ஜோசியர், பண்டாரம் முதலானவர்களிடத்தில் போய் யோசனை கேட்டு அவர்கள் சொல்வதுபோல் நடப்பதுமாகிய இத்தன்மைபோன்ற பெரும் பைத்தியம், நாளது வரையில், சில கத்தோலிக்கர்களிடத்தில் காணப்படுகிறது. கிராமாந்தரங்களில் வசிக்கும் பேதைக் கிறிஸ்துவர்களிடத்தில் இது காணப்படுவது அதிசயமல்ல. ஆனால், ஐயோ, குருமார்கள் நிறைந்துள்ள பட்டணங்களில் வசிக்கும் கிறீஸ்துவர்களிடத்திலும் காணப்படுவது பேராச்சரியமே.

சாஸ்திர சகுனங்கள், கனவு முதலியவைகள் சுத்த பைத்தியமானவைகளென்று நான் சென்ற 5 வருடங்களில் நானே கண்டறிந்தவைகளைக் கொண்டு ரூபிக்கிறேன்.

1911-ம் வருஷம் திருச்சினாப்பள்ளி போதனா முறை ஸ்கூலில் என் பரீட்சை முடிந்து வீட்டுக்குச் சென்ற நாள் முதல் இக்காரியத்தில் எனக்குப் பெருங் குழப்பமுண்டானது. 1912-ம் வருஷத்தில் நான் ஓர் கிராமத்தில் உபாத்தியாயர் வேலையிலிருக்க, அவ்வூரார், சகுன சாஸ்திரங்களின் மட்டில் வைத்திருக்கும் பெரும் விசுவாசத்தை அறியலானேன். அவர்களிடமிருந்த "ஆரூடம், பஞ்சாங்கம், பல்லி சாஸ்திரம், இன்னும் இவை முதலிய புஸ்தகங்களையும் வாங்கிப் பார்த்தேன்" "குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட" கதைபோல் எனக்கும் அவைகள்மேல் பித்துக்கொண்டுவிட்டது. கொள்ளவே, நல்ல சகுனங்களால் சந்தோஷமும், கெட்ட சகுனங்களால் துக்கமும், கொள்ள ஆரம்பித்துவிட்டேன். என்றாலும் இவைகளின் பொல்லாப்பிலிருந்து விலகிக்கொள்ள ஒரு அஞ்ஞானியிடமாவது நான் போகவில்லை. தேவதாயின் உதவியைக் கெஞ்சி மன்றாடினேன். அதின் பலனாக, சாஸ்திரங்கள்மேலுள்ள விசுவாசப் பற்றுதலைத் தூரவே அகற்றினேன். ஆனால் ஷை புஸ்தகங்களில் வாசித்தவைகள் என் மனதை விட்டு நீங்கினவைகளல்ல. ஆதலால், ஏதாவது ஒரு காரியம் நடந்துவிட்டால் சாஸ்திரப் பிரகாரம் அதற்கு இன்ன பலனல்லவோ என்று வெகு சீக்கிரம் என் ஞாபகத்தில் வந்துவிடும். வந்தாலும் இடங்கொடுக்கவில்லை. (அப் புஸ்தகங்களைப் பார்ப்பது முதலாய் எவ்வளவு கேடென்று இதனால் தெரியவருகிறது). இது நிற்க, ஓர் நாள்காலையில் வழக்கப்படி எழுந்து கதவைத் திறந்தபோது பல்லி யொன்று, மேலே யிருந்து என் உடம்பின் வலது பக்கத்தில் விழுந்தது. இப்படி விழுந்தால் இதன் பலன் என்னவென்று எனக்கு மனப்பாடமாய்த் தெரியும்; அதாவது "வலது புறமானால் தனலாபம், குடும்ப சந்தோஷம்" என்பதே. இருந்தாலும் புஸ்தகத்தை ஒருமுறை எடுத்துப் பார்த்துக்கொள்ளலாம் என்று அதையும் எடுத்துப் பார்க்கவே நான் எண்ணியபடி சரியாகவே இருந்தது. நல்ல சகுனமாயிருந்தாலும் அதைப்பற்றி பாராட்டாமல், சம்பவிக்கும காரியம் மெய்யோ பொய்யோ என்பதை மாத்திரம் எதிர்நோக்கி கருத்தாயிருந்தேன். கோவிலுக்குப்போய்த் திரும்பி குளிக்கும்படி ½-மைல தூரத்திலிருந்த ஓர் கிணற்றுக்குப் போனதும், என் உடம்பில் போட்டிருந்த சட்டையைக் கழற்றினேன். அச்சமயம் கெளளி சாஸ்திரத்தின் பலன் வெகு சரியாய் நடந்துவிட்டது. என்னவெனில் நான் முந்தின நாள் சாயங்காலம் பிள்ளைகள் கொடுத்திருந்த சம்பளப்பணம் சில்லறையாக 2 ரூ. 12 அணா, ஷை சட்டையின் பாக்கெட்டில் வைத்திருந்தேன். அவைகள் சட்டைப் பாக்கெட்டிலிருநது சல்தியாய், மளமளவென்று உருண்டு "தனலாபம்" என்பதற்குப் பதிலாய், பாதாளத்தில் கொண்டுபோய்ப் பணத்தை பத்திரப்படுத்திவிட்டது. சபாஷ்! சரியான சாஸ்திரந்தான்! குளித்து முடிந்ததும் பள்ளிக்கூடத்துக்குப் போய் வேலை பார்த்தேன். பையன்கள் சம்பளத்துக்கு என் சொந்தப்பணம் போட்டுக் கட்டிவிட்டேன். மணியும் 12 ஆனது. பிள்ளைகள் சாப்பிட அநுப்பப்பட்டார்கள். நானும் சாப்பிடப்போக வெளியே வந்தேன். இச்சமயத்தில் என் சொந்த ஊரிலிருந்து இரண்டு ஆட்கள், வெகு விரைவாய், வியர்வையுடனும், துக்க முகத்துடனும் வருவதைக் கண்டு அவர்களுக்காக நின்றுகொண்டிருந்தேன். வந்தவர்கள் "உன் தாயின் சகோதரி புருஷனாகிய உன் சிறிய தந்தை இன்று காலையில் இறந்துவிட்டார்" என்று இழவு சொல்ல வந்தார்கள். வந்தவர்களிடமாய், "நீங்கள் வேறே எங்கேயாவது போகவேண்டுமோ" வெனக் கேட்டேன். "ஆம், பக்கத்து ஊருக்குப் போகவேண்டும்?" என்றார்கள். இவர்களுககு ஏதாவது கொடுத்து அநுப்பிவிட்டு நமக்கும் கொஞ்சம் செலவுக்குப் பணம் எடுக்கலாம் என்று மேஜையின் அறையைத் திறக்கவே ஆச்சரியம் உண்டானது! என்ன ஆச்சரியம்! அடுக்காய் வைத்திருந்த ஐந்து ரூபாயும் ஆகாசமாய்ப் போய்விட்டது. அவ்வளவுடன் பேசாமலிருந்துவிட்டு, கனம் மானேஜர் அவர்களிடம் போய், இவர்கள் வந்த சங்கதியைச் சொல்லி எனக்கு லீவுவாங்கிக் கொண்டதுடன், செலவுக்கு வேண்டிய பணமும்வாங்கிக் கொண்டேன். வந்தவர்களை வழியநுப்பிவிட்டு வாட்டமுடன் வீட்டுக்குப் புறப்பட்டேன். கேட்டீர்களா! சாஸ்திரத்தின் பலனை?

இப்படியாக இன்னுமநேக காரியங்கள் நடந்திருக்கின்றன. எல்லாங் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்துரைப்பதாயிருந்தால் ஒரு புஸ்தகமாக்கிவிடலாம். ஆதலால் முழுதும் இங்கே செப்பி முடியாது. ஆயினும் ஒரே ஒரு காரியம் மாத்திரம் கொஞ்சம் கவனிக்கத்தக்கது. 1911-ம் ஷை நவம்பர் மாதம் திருச்சி சர்க்கார் போதனா முறை சாலையில் *(Government Training School)* நடந்த அப்பியாசப் பரீட்சைக்கு *(Final Examination)* நான் போகவேண்டியிருந்தது. என்னுடைய நண்பர்கள் தாங்கள் தங்கியிருந்த விடத்திலிருந்து புறப்பட்டுவிட்டார்கள். நான் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் முதல் முதல் நான் கண்டது என்னவெனில் ஓர் பூனை "வலமிருந்து இடம்" போனதை. இதைக் கண்டதும் எனக்குப் பழைய சாத்தான் வந்து இறங்கிவிட்டது.

எனெனில் பூனே வலது புறமிருந்து இடதுபுறமாகக் குறுக்கேபோனால் கெட்ட சகுனம் என்ற மனப்பாடம் வந்துதித்துவிட்டது. துற்சகுனமாச்சுதே. பரீட்சை எப்படி முடியுமோ. என்னும் சிந்தையுடன் கொஞ்சதூரம் சென்றபின். இரண்டாவதாக, வெறுங் குடம் கொண்டுவரும் ஓர் காவற்கார பெண் விதவையையும். மூன்ருவதாக, ஓர் பாம்பையும் நான்காவதாக, மொட்டைப் பார்ப்பினி யொருவளையும் சந்தித்தேன். இவைகள் எல்லாம் என் வீட்டை விட்டுப் புறப்பட்டு 200 கெஜம் போவதற்குள் நடந்தவைகள். இவைகள் எல்லாம் அபசகுனம் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். இது வரையில் இப்பழக்கத்தைக் கைப்பற்றி வரும் நம் சாஸ்திராபிமானிகளு மறிந்தவைகளே. மனதில் சஞ்சலப்பேய் குடிகொண்டிருந்தாலும், தேவ தாயை மனதிலெண்ணி பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தேன். மணியும் ஒன்பதானது. என்னுடன் ஐவருக்குப் பாடங்கள் கொடுக்கப்பட்டன. குறிக்கப்பட்ட நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வகுப்புடன் நானும் பாடம் துவக்க உத்தரவளிக்கப்பட்டோம். மற்றவர்களுடன் நானும் பாடம் துவக்கினேன். 5 நிமிஷத்துக்குள் பரீட்சிக்கும் அதிகாரிக ளிருவரும் வந்தார்கள். என் போதனையைப் பார்த்தார்கள், போதுமென்ருர்கள். நிறுத்திக்கொண்டேன். எல்லாம் சரிதான் என்ன முடிவு (*Result*) வருமோ என்று ஏங்கி நின்றேன். வழியில் சண்டவைகள் மறுபடியும் மனதில் வளைந்துகொண்டன. எல்லாருக்கும் பரீட்சை முடிந்தது. முடிந்ததும் ஷை பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர் பரீட்சையின் முடிவு வாசித்தார். என்னுடைய பெயர் வந்தது. எனக்கு என்ன ரிசல்ட்டா யிருக்குமென்று எண்ணுகிறீர்கள்? கடவுள் செயலால் முதல் தரத்தில் (*I Class*) தேறினேன் !! எனக்குண்டான சந்தோஷத்துக் களவேயில்லை.

இவ்விதமாக, முதல் சங்கதியில் நல்ல சகுனமாகிய "தனலாபம்," என்ற இடத்தில் பணநஷ்டமும், "குடும்பசந்தோஷம்" என்றவிடத்தில் இடும்பான துக்கமும் வந்து சந்தோஷமாயிருக்கவேண்டிய விடத்தில் துக்மாயிருக்க நேரிட்டது. இரண்டாவது காரியத்தில், "பூனே வலமிருந்து இடம்போதல்," வெறும் குடம் கொண்டுபோன கைம்பெண், பாம்பு, மொட்டைப்பார்ப்பினி இவர்களால் அவசகுனம் என்ற இடத்தில் சுபமாகவே முடிந்திருக்கிறது.

இத்தன்மையான காரியங்களைக் காணும் கன[illegible] வான்களே, சாஸ்திரத்தின் பலனுக்கும், சகுனத்தின் பலனுக்கும் சரியானபதில் நீங்களேயறிந்து கொள்ளுங்கள். மேலேநடந்த காரியங்களை அப்போதைக்கப்போது அறிமுகமானவர்களிடத்திலும், சில குருமார்களிடத்திலும் சொல்லி வைசுதுமிருக்கிறேன். சூலம்பார்த்துப் புறப்படுவதும், வேலைகளுக்கு மனுக்கொடுக்க, வீடுகட்ட முகூர்த்தம்வைக்க இவைகளுக்கு நல்ல நேரம் பார்ப்பதானது, நானறிந்த மட்டில் வீணிலும் வீண். ஒன்றுக்கொன்று எதிரிடையாய் முடிந்தது. நல்ல நாள் கெட்ட நாள் பார்ப்பதைப்பற்றி 1911ம் ௵ பெப்ரவரி மாதத்திய நல்லாயனின் 42ம் பக்கத்தில் "திருப்புத்தந்துறை ஓர் பௌரவன்" என்பவரால் எழுதப்பட்டிருக்கும் வியாஸத்தைக் கண்ணேக்கினல் நல்ல நாள் பார்க்கும் நண்பர்கள் நாணிக்கொள்வார்களோ அல்லது கோணிக்கொள்வார்களோ நானறியேன்.

(தொடரும்.)

P. Arokiam.

[தாயின் பெருமையைப் பற்றிய கடிதம் அடுத்த மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்].

ப.—ர்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

வீட்டில் பாம்பு வராதபடி தடுத்தல்.—வீடுகளில் இருக்கும் சந்து பொந்து, கதவு இடுக்கு முதலிய விடங்களிலும், இடிந்த சுவர்களிலும் கார்பாலிக் ஆசிடையாவது தாரையாவது, கொஞ்சம் ஊற்றி வைத்திருந்தாலும் அல்லது நவச்சாரத்தை அவ்விடங்களில் புகைத்தாலும் பாம்பு அவ்வீடுகளில் நுழையாதாம்.

பிரதம மந்திரி நியமனம்.—ஏறக்குறைய 8-வருஷமளவாக இங்கிலாந்தில் பிரதம மந்திரியாக வேலை பார்த்து வந்த கனம் ஆஸ்குவித் என்பவரின் ஸ்தானத்திற்கு லாயிட் ஜார்ஜ் என்கிறவர் நியமனம் பெற்றிருக்கிருர். இவருடைய அமுலில் நிகழும் யுத்தமானது வெகு துரிதமாய் நடத்தப்பட்டு முடிவிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

புது கர்திஞல்மார்கள்.—நமது பரிசுத்த பிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் சென்ற டிசம்பர் மாதம் 4-ம் தேதியன்று 10 புது கர்திஞல்மார்களை ஏற்படுத்தினர். ஏற்கெனவே பிராஞ்சு தேசத்தில் 4 கர்திஞல்மார்கள் இருக்கிருர்கள். ஆகையால் இப்போது பிராஞ்சு தேசத்தில் மாத்திரம் 7 கர்திஞல்மார்க ளாகிருர்கள். மீதியாயுள்ள 7 பேர்களும் இத்தாலியர்கள். இவர்களுள் ஐந்துபேர் வத்திக்கான் அரண்மனையில் பற்பல உத்தியோகங்களை வகித்து வருகிறவர்கள்.

இனும் காலண்டர்.—நேர்ந்த சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டும் நிகழும் யுத்தத்தைப்பற்றி சென்னையில் காகிதங் கிடைப்பது அருமையாய் விட்டபடியாலும், இவ்விடத்தில் பாரிய வியாபாரஞ் செய்யும் ம. ா. ா ஸ்ரீ. தி ம மாணிக்கம் பிள்ளை யவர்களின் காலண்டரை நாம் வழக்கப்படி நம்முடைய ஆபீசில் அச்சிடக்கூடவில்லை, ஆகவே ஷை பிள்ளை யவர்கள் தமது காலண்டரை பம்பாயில் அச்சிட்டு, அவைகளிற் சிலவற்றை, நாம் சென்ற வருடங்களில் நமது சந்தாதாரர்களுக்கு அனுப்பி வைத்ததுபோல இவ்வருஷமும் அனுப்பி வைக்கக் கொடுத்திருக்கிருர். நம்முடைய வழக்கப்படி அவைகளை பத்திரிகையுடன் அனுப்ப சாத்தியப்படவில்லையாதலால், 1917-ம் வருஷத்துக்கு தங்கள் சந்தாவை முன் பணமாக அனுப்பியுள்ளோர் எல்லோருக்கும் அடுத்த வாரத்தில் அவைகளை அனுப்புவோம். இன்னும் சந்தாவை அனுப்பாதோர் இம்மாசம் 20-ம் தேதிக்குள் அதை யனுப்புவார்களேயானல் அவர்களுக்கும் அவை யனுப்பப்படும்.

நன்கொடை.—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பால்டிமோர் பட்டணத்திலிருந்த எலிசா ஜென்கின்ஸ் என்னும் பெருமாட்டி தனது ஆஸ்தியில் 35 லட்சம் ரூபாயும், நியூயார்க் பட்டணத்தில் ஜெஸ்லி ஜேயிண்டர் என்னுமாது தர்ம கைங்கரியங்களுக்காக 35 லட்ச ரூபாயும் பார்பரா கிவனர்டு என்னும் விதவை அர்ச். சூசையப்பர் அநாத பிள்ளைகளுக்காக $7\frac{1}{2}$ லட்சமும், பாட்ரிக் ஹாமில்ட்டன் என்பவர் $3\frac{1}{2}$ லட்சமும், மேரி கிளாரா கூதே என்பவள் சிக்காகோ பட்டணத்து குரு மடத்திற்காக $15\frac{1}{2}$ லட்சம் ரூபாயும், இவ்விதமாக பலர் தங்கள் மரண சாசனத்தில் திருச்சபைக்கு நன்கொடை எழுதி வைத்து இறந்துபோயிருக்கிருர்கள். என்னே அமெரிக்கர்களுடைய தாராளகுணம் !

இந்த மணி எப்போது அடிக்கும் ?—சில நாட்டுப்புறத்து ஜனங்கள் ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ள விநோதங்களைப் பார்த்தானபின், ஒரு பிரமாண்டமான பதித கோவிலுக்குப் போனர்கள். அந்தக் கோவில் சேவகன் அவர்களைக் கோவிலின் மணிக்கூண்டிற்கு அழைத்துச் செல்லவே, அவர்களில் ஒருவன் சேவகனைப் பார்த்து "இந்த மணியை எந்தெந்த சமயங்களில் நீ அடிப்பாய்?" என்று கேட்க, அதற்குச் சேவகன் இந்த ஊரில் காலரா, பிளேக், வெள்ளம், மேற்றிராணியாரின் விஜயம், இவை போன்ற பொல்லாப்புகள் வந்து நேரும்போதுதான் நான் இந்த மணியை அடிப்பேன்" என்ருன். என்னே, மேற்றிராணியாருடைய விஜயமும் ஒரு பொல்லாப்போ !!

ஒரு மாணுக்கன்.—பள்ளிக் கூடத்துப் பையன் ஒருவன் தன் உபாத்தியாயரிடஞ்சென்று "ஐயா, நான் செய்யாத காரியத்துக்காக தண்டிக்கப்படலாமோ?" வென்று அவரைக் கேட்க, அவர் "நீ செய்யாத காரியத்துக்கு ஒருவரும் உன்னைத் தண்டிக்க மாட்டார்கள்" என்ருர். உடனே பையன் "ஐயா, நான் இன்று எனக்குக் கொடுத்திருந்த வீட்டப்பியாசங்களில் ஒன்றையாவது செய்யவில்லை. ஆகையால், நீங்கள் என்னைத் தண்டிக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டானும்.

120 வருடம் ஜீவித்த ஒரு கிளி.—ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி என்னும் பட்டணத்தில் 120-வயதுள்ள ஒரு கிளி சமீபத்தில் இறந்துபோயிற்ரும். அது 1796-ம் வருஷத்தில் பிறந்தது. அதன் கடைசி எஜமான் 120 வருஷங்களுக்கு முன் அதை வாங்கினவரின் ஐந்தாம் தலைமுறை பேரனும். அதன் வயது அதிக

மானதால், அதன் மேல்அலகு அதிகமாக நீண்டு, தோல் மடிப்பு விழுந்து, தலை விகாரமாயிருந்ததாம். ஆயினும் சுறுசுறுப்பு தளராமல் வீட்டுக்கு வந்தவர்களை வெகு உற்சாகத்துடன் உபசரித்தனுப்பி வந்ததாம்.

பாப்பரசரின் புது ஸ்தானாதிபதி.-நமது பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர், மிகவும் சங்கைக்குரிய (Mgr. Fumasoni-Biondi) புமசோனி பியோந்தி என்பவரை தம்முடைய புதுஸ்தானாதிபதியாக நமக்கு நியமித்திருக்கிறார். இவர் ஏற்கெனவே ரோமாபுரியில் நம்முடைய தேசத்தின் ஞானக் காரியா காரியங்களிற் சம்பந்தப்பட்டவராயிருந்து வந்தவரானபடியால் நம்முடைய க்ஷேம லாபங்களிற் மிக்க சிரத்தையும் அக்கரையுங் கொள்வாரென்பதற்குச் சந்தேகமில்லை. இவருக்கு நாம் நல் வரவுகூறி, தீர்க்காயுளும் நல்ல சுகமும் கோருகிறோம்.

நடக்கக்கூடிய மரக் குதிரை.—சிறுவர்கள் விளையாட்டாகவும், பெரியவர்கள் காலப்போக்காகவும் ஏறிச் செல்லுவதற்கு ஏற்ற மரக்குதிரைகள் அமெரிக்காவில் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இம் மரக்குதிரையின் கால்கள் போதுமான வரையில் அசையக்கூடிய விதமாய் உடல் பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன. குதிரையின் உடல் பாகத்திலுள்ள ஸ்குரூவைக்கொண்டு குதிரையின் முன்னங் கால்களும் பின்னங்கால்களும் ஒன்றன்பின் ஒன்றாய் எழும்பி முன் செல்லவும், அல்லது வெருண்டு பின்னுக்குப்போகவும் செய்யலாம். அமெரிக்காவில் அநேகர் மரக் குதிரைகளிலேறி கிராமாந்தரங்களுக்குப் போய் வேடிக்கையாய் காலங்கழித்து வருகிறார்களாம்.

மி. வ. சேலஸ்கி ஆண்டவர்.—சென்ற மீ இறுதியில் ரோமாபுரிக்குப் பயணமான இவரைப் பரிசுத்த பாப்பானவர் அந்தியோக்கியா பட்டணத்தின் பிதாப்பிதாவாக நியமனஞ் செய்திருக்கிறாரெனக் கேள்வியுற்று மிக்க சந்தோஷிக்கிறோம். இவருக் களிக்கப்பட்டிருக்கிற இவ்வுந்நத பட்டம், கர்தினால் பட்டத்துக்கு அடுத்த படியானபடியால்,வெகு சீக்கிரத்தில் இவர் கர்தினாலாவாரென எதிர் பார்க்கப்படுகிறது. இவர் நமது மத்தியில் 25 வருடங்களாக இருந்து நம்முடைய முன்னேற்றத்துக்காக எடுத்துக்கொண்ட பல பிரயாசை கஷ்டங்களுக்கு நன்றியறிதலைக் காட்ட தென் இந்தியா கத்தோலிக்குச் சங்கத்தார், கொழும்பு கத்தோலிக்குச் சங்கத்தார், திருச்சினாப்பள்ளி செயின்ட் மேரிஸ் க்ளப் மெம்பர்கள் முதலியோர் இவருக்கு பிரிவோபசாரப் பத்திரங்கள் வாசித்துச் சமர்ப்பித்தனர்.

இரண வைத்திய சீர்திருத்தங்கள்.—பிராஞ்சுதேசத்தில் பிறந்து வளர்ந்து வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்து பிறகு அமெரிக்காவுக்குப்போன வைத்தியர் அலெக்சிஸ் கார்ரெல் கண்டுபிடித்த ஓர் புதுவகையான இரணவைத்திய சிகிக்சையைப் பிராஞ்சுதேசத்தில் இப்போது வெகுவாய்ச் செய்துகொண்டு வருகிறார்கள். இதனால் சண்டையில் காயம்பட்ட அநேகருக்குக் கால் வெட்டி எடுக்கவேண்டிய அவசியம் முன்னிலும் இப்போது வெகுவாய்க் குறைந்திருக்கிறது. அதேதெனில், காயங்களுக்கு ஓர் வித மருந்துசலம் விட்டுக் கழுவிக் கட்டுகிறார்கள். அதனால் அக்காயங்கள் வெகு சீக்கிரத்தில் ஆறிப்போகின்றனவாம். சதைபோனபோதிலும் சரியே, எலும்பு முரிந்துபோன போதிலும் சரியே, அதற்குப் பதிலாய் வேறு எலும்புவைத்தும், வேறு சதை வைத்தும், செய்யவேண்டிய சிகிச்சை செய்து பலரைப் பழையபடி அங்கப்பழுதில்லாமல் செய்துபோடுகிறார்களாம். ஆ, என்ன ஆச்சரியம்!

ஏழில் மூன்றுபோனால் மீதி என்ன?—ஒரு சிறுமிக்கு உபாத்தியார் ஒருவர் கழித்தல் கணக்கு வெகு பிரயாசப்பட்டு சொல்லிக்கொடுத்தும் அவளுக்கு அது பிடிபடவில்லை. பிறகு உபாத்தியாயர் சில உதாரணங்களைக் கொண்டு அதை அவளுக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்து, சிறுமியை நோக்கி "நீ 7 மாம்பழங்களை வைத்திருக்கிறாய் என்று நினைத்துக்கொள். அவற்றில் 3-ஐ உன் தம்பிக்குக் கொடுத்துவிட்டால், மீதி எத்தனை?" என்றார்.

சிறுமி.—"ஒன்றுமிராது. ஏனெனில் என். தம்பிக்கு 3 பற்றாது; அவன் எல்லா

வற்றையும் என்னிடமிருந்து பிடுங்கிக் கொள்வான்."

உபா.—"மேற்படி பழங்களில் 3-ஐ நீயே தின்றுவிட்டால் மீதி என்ன?"

சிறுமி—"ஏழு"

உபாத்தியாயர் கோபத்துடன் "7 பழங்களில் 3-ஐ நீ தின்றுவிட்டால் மீதி ஏழா?

சிறுமி—"ஆம், வயிற்றில் 3. கையில் 4, ஆக 7-அல்லவா?" என்று பதிலுரைத்தாள்.

பிராஞ்சு தேசம்—நிகழும் யுத்தம் தொடங்கின நாள் முதற்கொண்டு பிராஞ்சு கத்தோலிக்கர்களின் விசுவாசம் நாளா வட்டத்தில் அதிகரித்து வருகிறது. யுத்தம் தொடங்கியபின் சில மாதங்களாகப் பிராஞ்சு கர்தினால்மார், மேற்றிராணிமார் தங்கள் தேசத்தின் பாதுகாப்பை சேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்படைத்து அத்திரு இருதயத்தின் மட்டில் பத்தியை பாவச்செய்து வருகிறார்கள். போர்முனையில் முதலாய் போர்ச் சேவகர்கள் தலை வெள்ளியன்று சமீபத்திலுள்ள கோவில்களுக்குச் சென்று தேவநற்கருணையைச் சந்தித்து, அன்றைய நாள் முழுதும் சிலர் துப்பாக்கிக் கத்திகளுடன் ஒவ்வொரு மணிநேரம் உலக இராஜாக்கள் முன் நிற்பதுபோல் சற்பிரசாத ராயரின் சன்னிதியில் பாரா கொடுக்கிறார்கள். மேலும் யுத்தத்திற்குப் பிறகு பிராஞ்சுக்காரரெல்லோரும் லூர்துகெபிக்கு திருயாத்திரையாய்ப் போகவேண்டுமென்று தூண்டும்படி கர்தினால்மார் மேற்றிராணிமார் ஒன்றுகூடி ஒரு நிருப மெழுதியிருக்கிறார்கள்.

ஓர் நன்மாதிரிகை.—பெல்ஜிய அரசரின் மகளாகிய மரிய ஜோஸ் இங்கிலாந்தில் ஒரு கன்னியர் மடத்தில் படித்து விடுமுறைக்குத் தன் பெற்றோரிடம் சென்றிருக்கையில், தனக்கு மடத்தார் விசேஷ உணவு கொடுத்தும், காலையில் மற்றப் பிள்ளைகள் எழுந்த பிறகு ஒரு மணி நேரம் நித்திரை செய்ய தனக்கு உத்தரவளித்தும், தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடாமல் இராஜ குமாரத்தி என்றழைத்தும். இவ்விதம் தன்னை பட்சத்துடன் நடத்துவதை கபடற்றத் தனமாய் தன் தந்தைக்குச் சொன்னாள். ஆல்பர்ட் அரசர் உடனே "மகளே, நீ மடத்துக்குத் திரும்பப் போனபின் மற்றப்பிள்ளைகளுக்கும் உனக்கும் இனி யாதொரு வித்தியாசமுமிருக்கக்கூடாது. நீ அதிகாலையில் அவர்களுடன் எழுந்து, திவ்விய பூசை கண்டு, அவர்களுடன் அவர்களுடைய உணவை சாப்பிட்டு அவர்களுடன் சேர்ந்து படிக்கவேண்டும்" என்று சொல்லி மடத்து சிரேஷ்ட தாயாருக்கும் ஒரு கடிதம் எழுதினார். இதல்லோ நல்ல குடும்பத்தின் அடையாளம். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிஞ்சின செல்வங் கொடுத்து சீரழிய விடுகிறார்கள்.

ஆங்கிலிக்கன் சபையில் ஸ்திரிகள்.—சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் ஸ்திரிகளும் புருஷர்களைப்போல இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களை வகிக்கவும், பார்லிமெண்டு என்னும் ஆலோசனை சபைக்குத் தாங்களும் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும் வீண் முயற்சி செய்து வந்தது நாமறிந்த விஷயம். தற்போது ஸ்திரிகள் ஆங்கிலிக்கன் சபையில் பாதிரிமார்களைப்போல் ஏன் பிரசங்கம் முதலியவற்றை செய்யக்கூடாதென்று கட்சி பேசுகிறார்கள். மேற்படி சபையாரிற் சிலர் கோவில்களில் பிரசங்கம் செய்ய ஸ்திரிகளுக்கு உத்தரவு கொடுத்தால், அவர்கள் தங்களுக்குக் குருப்பட்டமும், மேற்றிராணியார் பட்டமும் கேட்பார்கள் என்றும், ஸ்திரிகளை குருத்துவத்திற்கு தெரிந்தெடுப்பது வேதாகமத்திற்கும், தங்கள் சபையின் படிப்பினைக்கும் விரோதமாயிருக்கிறதென்றும் சொல்லி ஆக்ஷேபிக்க, சிலரோ ஆங்கிலிக்கன் சபைக்கு எலிசபெத், ஆன், விக்டோரியா முதலிய இராணிகள் தலைமையாயிருந்து குருக்களையும் மேற்றிராணிமார்களையும் ஸ்தாபிக்க அதிகாரம் வகித்திருந்திருக்கையில் இப்போது ஸ்திரிகளும் குருத்துவத்திற்கு தெரிந்தெடுக்கப் படலாமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். மேய்ப்பனில்லாத மந்தை சிதறுண்டு நிற்குமென்று சொல்லவும் வேண்டுமோ?

யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் கத்தோலிக்கு வேதம் பரம்புதல்.—நிகழும் யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் ஜனங்கள்

ஆயிரக்கணக்காய் கத்தோலிக்குத் திருச்சபையில் சேருவார்களென்பது ஆங்கிலிக்கன் பாதிரிமாருடைய அபிப்பிராயம். ரோஜர்ஸ் (Rev. Rogers) என்னும் ஒரு ஆங்கிலிக்கன் குரு தன் விசாரணையிலிருந்து வேறு ஒரு விசாரணைக்கு மாற்றப்பட்டு போகையில், "பாவ சங்கீர்த்தனம், நற்கருணை விஷயங்களில் ரோமன் கத்தோலிக்கர்களைப் பின் பற்றுங்கள்" என்று அவ் விசாரணை ஜனங்களுக்கு சொல்லிவிட்டுப் போனார். போர்முனையில் போர்வீரர்களை விசாரித்துவரும் பேக்கன் (Rev. Bacon) என்றும் மற்றொரு ஆங்கிலிக்கன் குரு ஒரு நாள் செய்த பிரசங்கத்தில் "பிராஞ்சு, பெல்ஜிய தேசங்களில் கத்தோலிக்கர்கள் காட்டும் நன்மாதிரிகையும், போர்முனையிலும் அரண்களிலும் கத்தோலிக்க குருமார்கள் போர்வீரர்களின் ஆத்தும சரீர விஷயமாய் எடுத்துக்கொள்ளும் பிரயாசையும், போர்வீரர்களுடைய மனதைக் கவருகின்றன. போர்வீரர்களில் அநேகர் இனி பூசைப்பலியையும், பாவசங்கிர்த்தனத்தையும் தேடுவார்கள். உத்தரியம் ஜெபமாலை மட்டில் அவர்களுக் குண்டாயிருக்கும் பற்றுதல் கத்தோலிக் வேதத்தில் அவர்களுக்குள்ள நல்ல அபிமானத்தின் அறிகுறியே யன்றி வேறல்ல" என்று சொன்னாராம்.

சவியேர் தினமும், பரத கான்பரன்ஸ் இரண்டாம் வருட பூர்த்தியும்.—நிகழ்மாதம் 26௳ இம்மகோத்ஸவங்கள் நடைபெறுமெனக் கடந்த அக்டோபர்௴ 12௳ வெளிவந்த பிரசுரத்தில் சொல்லியிருக்கிறது. இக்கரை துறைகளிலும், பிரதானமாய் இலங்கையிலு மிருக்கிற நமது சகோதரர்களில் அநேகர், டிசம்பர்மாதம் தமது வர்த்தகத் தொழிலுக்குப் பக்குவமான காலமென்பதை உத்தேசித்து ஷெ விசேஷங்களை ஜனவரி மாதத்தில் கொண்டாட வேண்டுமென நேரிலும் கடித மூலமாயும் கேட்டுக் கொள்ளுகின்றனர். இதற்கு இணங்கி இவ் வுத்ஸவங்களை 1917-ம௵ ஜனவரி௴ நடாத்துவதென நிர்வாக சபையார் கருதுகின்றனர். உத்ஸவ தேதி பின்னால் தெரிவிக்கப்பெறும்.

15-12-16. }
தூத்துக்குடி. } அ. ச. அந்தோனி சவரிமுத்து
உறுதிக், நிர்வாக சபைத்தலைவர்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

ஜனன அறிக்கை.

மகா-ா-ா-ஸ்ரீ லாசர் பருணாந்துவாஸ் அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், எனது பிரிய மனைவியுமாகிய சி. சௌ. மரியசவியேர் இரத்தினம்மாள் பருணாந்துவாஸ் நாளது மாதம் 6ம் திகதி திங்கள்கிழமை உதயம், சேசுவின் திரு இருதய இரக்கத்தாலும் உத்தரிக்கும் ஸ்தலத்தின் ஆத்மாக்களின் வேண்டுதலாலும் யாதொரு பொல்லாப்புமின்றி ஒரு ஆண்சிசுவைப்பெற்றனள். 14ம் திகதி வியாழக்கிழமை ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு லெயோனார்த் அல்போன்ஸ் தோனையா என்று நாமம்சூட்டி எனது பேத்தியார் தொம்மாஸ்வாஸ் அவர்களையும் ஸ்ரீமான் சவியேர் மிராந்தா அவர்களையும் ஞானப் பிதாமாதாவாகத் தெரிந்துக்கொண்டோம். தாயும் சேயும் நோயின்றி சேசுவின் ஆசீர்பெற்று சிரஞ்சீவியாயிருக்க வேண்டிக்கொள்ளும்படி நண்பர்களை கேட்டுக்கொள்ளும்.

யம். ஸ்டிவன் கோரையிரா.

17—11—16.

நன்மரண அறிக்கை.

கோலாலம்பூர்.

எட்டுப் பிராயமுள்ள என்செல்வப் புத்திரி ரெஜீனா அந்தோனி மரி என்பவள் சென்ற நான்குமாதகாலமாய் தேக அசௌகியமாயிருந்து, எத்தகைய பரிகாரத்தாலும் குணம்பெறாமல் சகலருக்கும் நன்மாதிரிகையாக தன் நோயை வெகு பொறுமையுடன் சகித்து, 1916ம்௵ நவம்பர்௴ 23௳ வியாழக்கிழமை காலையில் சுமார் 10½ மணிக்கு எங்கள் பங்கு குருவாகிய சங். லெமேர் சுவாமிகளை வரவழைக்கச் செய்து, அவரிடத்தில் தனக்கு பாவசங்கீர்த்தனமும், புது நன்மையும், அவஸ்தையும் அளிக்கக் கேட்டுப் பெற்றுக்கொண்டனள். அதன்பின் அடிக்கடி அர்ச். அந்தோனியார் ஜெபமும், குழந்தை தெரசம்மாள் ஜெபமும் சொல்லிப் பிற்பகல் இரண்டு மணிக்குத் தன்னை உத்தரீய சபையில் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டதன்மேல் சங். குருவானவரும் அச்சிறுமியின் கருத்துக்கிசைந்து கர்மேல் சபையில் அவளைச் சேர்த்து கொண்டனர். அப்பூவை அன்று இரவு 9-மணிவரையிலும் தன் தாயாருடன் சேசுநாதருடைய திருப்பாடுகளைக் குறித்து சம்பாஷித்தும், அர்ச். தேவமாதாவுக்குச் செலுத்தும் 30 நாள் மன்றாட்டை வெகு பக்தியோடு சொல்லிமுடித்தும், அர்ச். தேவமாதா பிரார்த்தனைக்கு உதவி சொன்னபின், "சேசு மரியே சூசை என் இருதயக்தையும் என் ஆத்துமத்தையும் என்னும் ஜெபத்தைச்சொல்லி சேசுவே என் ஆத்துமத்தை இரட்சியும்." "பிதாவே என் பாவங்களைப் பொறுத்தருளும்." என்ற மனவல்லய ஜெபங்களைத் தானே தன் வாயினால் அறிவு தடுமாறாமல் விமரிசையாய்ச் சொல்லி முடித்தும், அர்ச். சிலுவையின் அடையாளத்தைத் தன் நெற்றியிலும் மார்பிலும் பன்முறையும் வரைந்துகொண்டே 9½-மணிக்கு சர்வேசுரனுடைய திருப்பாதம் சேர்ந்தனள். மறுநாள் சாயுங்காலம் 5-மணிக்கு நல்லடக்கம் செய்தோம். இப்பாலகியின் ஆத்தும இளைப்பாற்றிக்காக இதைக் கண்ணுறும் அன்பர்கள் ஒரு பர-பிரி-திரி-மந்திரம் வேண்டிக் கொள்ளும்படியாய் பிரார்த்திக்கும்.

நிற்பாக்கியன்.

30-11-1916, N. J. Diagoo Pillai,
G. P. O., Kuala Lumpur.

வண்ணாரப்பேட்டை.

எனது தாயாரும், சென்னையைச் சேர்ந்த வண்ணாரப்பேட்டை, பென்ஷன் லையினில் வசிக்கும் பென்ஷன் சிப்பாய் சவரியப்பனின் அண்ணியாருமாகிய ஆரோக்கியமரியம்மாள் (வயது 54) தன் குடும்பங்களை விட்டும், தன் குமாரத்தி அற்புதமரியம்மாளை அந்தகோத்த கிளப்பில் பரதவிக்கவிட்டும், தாயும் குமாரனும் வெளிதேசம் புறப்பட்டுப்போய் 11 வருஷமாய் வெளியூரில் வாசம்செய்து, தற்பொழுது டில்லியில் வேலை செய்திருக்கையில், டிசம்பர்௴ 1௳ வெள்ளிக்கிழமை பகல் 12½-மணிக்கு, தனக்கு தெரியாமல் நெருப்புப் பற்றிக்கொண்டு மெத்த கஷ்டப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு, உடம்பு சவுக்கியப்படாமல் 14௳ வியாழக்கிழமை பகல் 12½-மணிக்கு மரண மடைந்தார்கள். டிசம்பர்௴ 15௳ வெள்ளிக்கிழமை பகல் 12½-மணிக்கு நமது திருச்சபையார் எல்லோரும் கூடி நல்ல அடக்கஞ் செய்தோம். இதைக் கண்ணுறும் நேயர்கள் இவ்வாத்துமதுக்காக 1 பர., 1 பிரி,. 1 திரி. வேண்டிக்கொள்ளவும்.

இப்படிக்கு, தாயாரைப் பறிகொடுத்து
பரதவிக்கும் குமாரன்,
M. Mariyadoss Pillai, *Delhi.*
(சவத்துக்காக மெத்த ஊழியம் செய்தவர், M. A. Sandav Butler, 3, *Curt Road, Delhi.*)

தூத்துக்குடி.

நமது அருமை நல்ல ஆயனில் ஸ்ரீமாந் அந்தோனி பூபாலராயர் அவர்கள் குமாரர் மரிய ஐயா பூபாலராயர் அவர்களால் அறிக்கையிடப்பட்டிருந்தபடி, காலஞ் சென்றுபோன ஸ்ரீமாந் சவியேர் அந்தோனி சின்னத்தம்பி பர்னாந்தீஸ் அவர்களின் மரணத்தை யிட்டு நானும் வெகுவாய்த் துக்கிக்கிறேன். இவர் சில மாதங்களாய் ராஜ பிளவை யென்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு, தேர்ந்த வைத்தியர்கள் சிகிச்சை செய்துங் குணப்படாமல், தமது 58-வது வயதில் (1915௵ டிசம்பர் மாதம் 7 தேதி) தமதரிய மக்கள், சகோதரர், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பந்து மித்திரர்கள், கனந் தங்கிய குருப்பிரசாதிகள் சூழ்ந்து நிற்க, கடைசி தேவத்திரவிய அநுமானங்களைக் குறைவறப்பெற்று பரமபதமே கெதியென வுயிர் நீத்தனர். வணக்கத்துக்குரிய சிரேஷ்ட குரு M. J. பின்றோ சுவாமி அவர்களும், வண. பீற்றர் அலொய்ஸியஸ் சுவாமி அவர்களும், சகல விசுவாசிகளும் இவருடைய க்ஷேமிப்புச் சடங்குகளை வீட்டிலும், கோவிலிலும், கல்லறையிலும் வெகு விமரிசையாய் நடத்தினார்கள். நாளது ௵ டிசம்பர்௴ 6௳ பின்னேரம் அர்ச். பனிமயமாதா திருப்பீடம் சிறந்த கருமையான துவஜங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, இவருடைய ஆத்துமத்துக்காக ஒப்பீஸ் (*Office*) என்னும் தேவ தோத்திரச் சங்கீதங்கள் பாடப்பெற்றன. மறுநாட் காலையில் மிகவும் வணக்கத்துக்குரிய M. J. பின்றோ சுவாமிகளால் ரெக்குயம் (*Requiem*) பாடற்பூசை நடந்தேறியது. அந்தப் பலிபூசையில் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக இவரது மக்களும், பந்துக்களும், மித்திரர்களும் சுமார் 300 பேர் வரை தேவ விருந்தருந்தி ஒப்புக்கொடுத்தனர். இதை வாசிக்கும் நண்பர்களும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள வெகு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். இவர் உத்தம கத்தோலிக்கர். இந்நகரின் பூர்வீகச் சரித்திர சம்பந்தமாயுள்ள தேவாலயத்தின் திருச் சிம்மாசனங் கொண்டிலங்கும் எம் பரதகுலப் பாதுகாவலாகிய பரிசுத்த பனிமய மாதாவின் விசேஷ எவுதலால் தமது அந்திய காலம் வரை அத் தேவதாயின் தாசனென எவரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் அவ் வம்மணியின் ஊழியத்தை உளமகிழ்ந்து புரிந்துவந்தனர்.

20-12-16. Joseph Cagoo,
அர்ச். பனிமய மாதாகோவில்,
உபதேசி.

இரங்கூன்.

நிகழும் 1916௵ டிசம்பர்௴ 7௳ வியாழக்கிழமை இரவு 11-30 மணிக்கு, L. மனுவேல் குமாரனும் எனது அருமை சகோதரனும், இரங்

கூன் பாப்டீஸ்ட் காலேஜ் பீ. ஏ. (B. A). கிளாஸ் மாணுக்கனுமாகிய மர்ரே மனுவேல் பரலோகப் பிராப்தி அடைந்தனன். மறுநாள் 8உ வெள்ளிக்கிழமை காலை 4-30 மணிக்கு கெமண்டைன் கத்தோலிக்கு கல்லறையில் சங்கை. J. B. மூர்லான் குரு தேசிகரால் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதனை கண்ணுறுஞ் சகோதரர்கள் யாவரும் மரித்த என் சகோதரனின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகின்ற.

8th December 1916. R. L. மனுவேல,
Financial Commisioner's Office.

வெலிங்டன்.

கண்ணனூர், அர்ச். அந்தோனியார் கோவில் சேரியில் பிறந்து, நீலகிரி, வெலிங்டன் ரிஜிமென்டல் ஆபிஸர் மேசையில் ஒயின் கூலராக வெகு நாளாய் வேலை பார்த்து வந்த என் பிரியமுள்ள மாமனுர் D. Salomon சென்ற அக்டோபர்மீ 21உ வெள்ளிக்கிழமை பகல் 2½ மணிக்கு தமது சுற்றத்தாரை எல்லாம் பரிதபித்துத் துக்கிக்கவிட்டு கர்த்தன் பாதம் சேர்ந்தார். இதைக் கண்ணுற்று வாசிக்கும் நற்குண நண்பர்கள் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மன்றுடுகிறேன்.

M. A. Santiago Jacob, Butler,
K. G. F.,
Marikuppam.

பவுரிங்பேட்டை.

இதனு லெனதன்புள்ள பந்து மித்திரர்கட்குத் துக்கத்தோடு தெரிவிக்கிறதாவது:— சென்னை சேப்பாக்கத்தில் வசித்து காலஞ்சென்ற Confectioner, கனம். B. மாசிலாமணிபிள்ளை யவர்களின் அருமை மைத்துனியும், Hyderabad, Deccan, Mr. John. A. Joshua அவர்களின் நேச மனைவியும், என தன்பார்ந்த மாமியுமாகிய இமேலியம்மாள் தனது 30-ம் வயதாகிய, கி. பி. 1916௵ நவம்பர்மீ 27-ம் தேதி, செவ்வாய்க்கிழமை யன்று, எழாம் பேருக இரட்டைப் புத்திரர்களைப் பயந்து, ஜன்னிகண்டு, தனது நேச காவலாளரையும் இரண்டு புத்திரர், சகோதரிகளையும் பரதவிக்க இவ்வுலகத்தில் விட்டு விண்ணுலகுக் கேகினள். மறுநாள் மாலை சென்னை, தண்டையார்பேட்டை, கத்தோலிக்கு கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டதால் இதை வாசிக்கும் எனது பந்து மித்திரரும் "நல்லாயன்" சந்தாதாரரும் ஷை ஆத்தும இளைப்பாற்றிக்காக உருக்கமாய் ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படி மிகவும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
S. A. Israel, Engine Driver,
M. & S. M. Ry.,

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்ற தொகை	4,273	9	6
Mr. A. அற்புதம்பிள்ளை (Taiping)	3	13	0
,, பிரான்சிஸ் பொன்னுசாமி (வட்டவளை)	2	0	0
,, A. டேவிட் (Mandalay)	2	3	0
,, P. ஆசீர்வாதம் பிள்ளை (Perak)	5	0	0
,, மரியண்ண முதலியார் (பாலக்காடு)	1	8	0
,, சூசைப் பிள்ளை (Travancore)	1	0	0
,, ஓர் நன்கொடை	15	0	0
,, M. டேவிட் (விளுப்புரம்)	3	0	0
,, V. அந்தோனி பிள்ளை	2	0	0
,, C. S. ஞானப்பிரகாசம்	2	0	0
ஆக மொத்தம்,	4,311	1	6

5 FEB 1917

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 15. } பெப்ரவரி 1917. { இலக்கம் 2.

THE HOLY SEASON OF LENT.
பரிசுத்த தபசுகாலம்.

சிருஷ்டிகளிற் சிறந்தவனுன மனிதனுடைய வல்லமையையும் மேன்மையையும் உலகம் எக்காலத்திலும் புகழ்ந்து வருவது சகஜம். பூமியின்கண் அங்கங்கே காணப்படும் நானுவித சித்திர வேலைப்பாடுகளமைந்துள்ள கூட கோபுரங்களையும், மாட மாளிகைகளையும், கோட்டை கொத்தளங்களையும், சிறந்த ஆலயங்களையும், இன்னு மற்ற விநோத விசித்திரங்களையுங் கண்டு வியப்புற்று, அவைகளுக்குக் கர்த்தாவா யிருக்கும் மனிதனுடைய அறிவையும் சாமர்த்தியத்தையும் புகழ்ந்து கொண்டாடி, அவனுக்கு நிக்ரான சிருஷ்டி இவ்வுலகில் இல்லையென உலகம் பெருமை கொள்ளுகின்றது. ஆனுல் மனிதனுடைய இரட்சண்யத்தின்பேரில் என்றும் ஏக்கமுங் கவலையுமுற்றிருக்கும் சத்திய திருச்சபை அவன் பற்பல நூதனங்களைக் கண்டுபிடித்துத் தேர்ச்சியடைவதிலே கண்ணுங் கருத்துமா யிருக்கையில், அவனுக்குத் தன்னுடைய ஒன்று மில்லாமையையும் தன்னுடைய இரட்சண்ய அலுவலின் அத்தியாவசியத்தையும் நினைப்பூட்டத் தவறுகிறதில்லை. உலகம் மனிதனைப் புகழ்ந்து கொண்டாடுந் தொனி அவன் காதில் ஓர் எதிரொலியைப்போல் ஒலிக்கையில், நித்திரையை விட்டெழுப்ப சப்திக்கும் ஓர் கடியாரத்தைப்போல் திருச்சபை அவனை நோக்கி "மனிதனே, நீ தூசியா யிருக்கிறுய், மறுபடியும் நீ தூசியாய்ப் போவா யென்பதை நினைத்துக்கொள்" என்று வருஷா வருஷமும் விபூதித் திருநாளன்று அவன் காதில் ஒலிக்கின்றது.

மண்ணுலுண்டான சரீரம் மறுபடியும் மண்ணுய்ப் போகுமென்பது சத்தியத்திலும் சத்தியம். வாலிபரும் வயோதிகரும், ஏழைகளும் தனவான்களும், அறிவிற் சிறியோரும் பெரியோருமாகிய சர்வ ஜாதி ஜனங்களும் ஒரு நாள் தூசியுந் தூளியுமாவார்களன்றோ?

ஊருக் கருகிலிருக்கும் கல்லறைத் தோட்டத்துக்கு ஒருவன் ஒருநாள் அந்திவேளையில் ஒண்டியாய்ச் சென்று, அவ்விடத்திலுள்ள கல்லறைகளை நோக்குவானுல், அவன் புத்தியில் தோன்றும் தோற்றங்களும், உண்டாகும் சிந்தனைகளுமென்ன? சகலமும் அவ்விடத்தில் அசை

வற்று அமைதியாயிருக்க, சொற்பக் காலத்துக்கு முந்தி தானறிய அவ்வூரில் சீர் சிறப்புடன் செல்வாக்காய்ச் சீவித்தவர்களும், பாரிய உத்தியோகம் வகித்துப் பிரபல்யமாய் வாழ்ந்தவர்களும், எல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டவர்களும், இன்னும் ஏழை எளியவர்களுமான இவர்கள் எல்லோரும் சரிசமானமாய் அங்கே அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார்களென்றும், தற்போது மக்கி மண்ணாய்ப்போயிருக்கிறார்களென்றும், இதுவே சகல மனிதருக்கும் இவ்வுலகில் கிடைக்கு முடிவென்றும் அறிந்துகொள்ளாமற் போகான்.

மனித சரீரத்தின் கதி யிப்படியா யிருக்கக்கொள்ள, அவனுடைய ஆத்துமத்தின் கதியென்ன? ஆத்துமமோ சர்வேசுரனுடைய சாயலுள்ளதாகவும், அவரைப்போல அரூபியாகவும் அழியாததாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு மகிமையும் மாட்சிமையும் பொருந்திய அவனது ஆத்துமத்தின் கதி அதையுண்டாக்கின சர்வேசுரனே ஆவர். தன் ஆத்துமத்துக்கு உடையாக சர்வேசுரன் கொடுத்த சரீரத்தை அவன் உடுத்திக்கொண்டிருக்கும் வரையிலுமே அவன் இவ்வுலகில் சீவிப்பான். ஆனால் அவன் ஆத்துமம் அவன் சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணமே மனிதன் நிழலைப்போல் நில்லாமலோடி மறைகிறான். ஒவ்வொருவனும் ஒவ்வொரு நாளும் தன் அழிவை நோக்கிச் செல்லுகிறானென்று சொல்லத் தேவையில்லை. இலை உதிர்காலத்தில் எப்படி விருட்சங்களிலிருந்து இலைகள் உதிருமோ அப்படியே நாளுக்கு நாள் நாடுகளும், நகரங்களும், தேசங்களும், குடும்பங்களும் ஜனங்களை யிழந்துபோகின்றன. சமுத்திரத்தின் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி கரையில் அடித்து மோதி விழுந்து மறைந்துபோவதுபோல் மனிதருடைய சந்ததியும் பெருகி மறைந்துபோகின்றது. ஆம், இதோ! தெருவில் விளையாடும் சிறுவன் அவ்வழியே போகும் விருத்தாப்பியனை நோக்கி "ஐயா, பெரியவரே! உமக்கு முடிவு நெருங்கி வருகின்றது; எனக்கும் என்னைப் போன்ற சிறுவர்களுக்கும் ஜீவிக்க இடங்கொடும்" என்கிறான்.

அன்றியும் இப்பிரபஞ்ச சீவியத்தில் மனிதனுக்குண்டாகும் இடுக்கண் துன்பங்களும், கஷ்ட நஷ்டங்களும் அவனுக்குத் தன் கடைசி முடிவை நினைப்பூட்டாமல் போகிறதில்லை. இவ்வாறு மனிதன் பல விதமாய்த் தன் கதியை அறிந்துகொள்ளக் கூடுமா யிருந்தும், அவன் அதை மறந்தவனாய் அவ்விஷயத்தில் அக்கரைகொள்ளாமல் அசட்டையும் அசமந்தமு முள்ளவனா யிருக்கிறபடியால், திருச்சபையானது அவனுக்கு அதைப்பற்றி எச்சரிக்க வருஷா வருஷமும் தபசு காலத்தின் ஆரம்ப நாளாகிய விபூதித் திருநாளன்று "மனிதா, நீ தூசியா யிருக்கிறாய், மறுபடியும் நீ தூசியாய்ப் போவாயென்று நினைத்துக்கொள்" என்கின்றது. ஆம், தன் அந்திய முடிவை நினைக்கிற எவனும் தன்னுடைய இரட்சண்ய அலுவலைக் கவனியாது, காலையில் மலர்ந்து மாலைக்குள் வாடி வதங்கிப் போகும் புஷ்பத்துக் கொப்பான தன் சரீரத்தின்மட்டில் கவலையுள்ளவனா யிருப்பானோ? இருக்கமாட்டான்.

ஆகையால், வருஷா வருஷமும் தபசு காலத்தின் முதல் நாளாகிய விபூதித் திருநாளன்று திருச்சபை நமக்கு ஞாபகப்படுத்தும் மேற்சொன்ன வேத வாக்கியத்துக்குச் செவிகொடுத்து, இம்மாதம் 21உ துவக்கப்போகும் தபசு காலத்தை நம்முடைய ஆத்தும இரட்சண்யத்துக் கனுசரணையாய்ச் செலவழிப்போமாக. அந்தந்த மேற்றிராசனத்துக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தபசுகால ஒழுங்குகளை அந்தந்த மேற்றிராசனக் கிறீஸ்துவர்கள் நன்றாய்க் கேட்டறிந்துகொண்டு, அவைகளைச் சுமுத்திரையாய் அனுசரிக்க முயலுவார்களாக. சுத்த போசன நாட்களிற் சுத்த போசனமும் ஒரு சந்தி நாட்களிற் ஒரு சந்தியும் அனுசரிப்பார்களாக. பாஸ்குக் கடனை கூடிய சீக்கிரத்தில் தீர்த்துப்போடுவதோடு அடிக்கடியும் கூடுமானால் நாடோறும் நன்மை வாங்க பிரயாசப்படுவார்களாக. வழக்கமாய் இவர்கள் செய்துவரும் தர்மத்தையும் ஜெபத்தையும் விட அதிகமாய்ச் செய்வார்களாக. விசேஷமாய் நமதாண்டவர் பட்டபாடுகளை, நாடோறும் சிறிது நேரமாகிலும் சிந்தித்துத் தங்களுடைய நடவடிக்கைகளைத் திருத்திக் கொள்வார்களாக.

இந்த ஞான கிருத்தியங்களை இவர்கள் எவ்வளவுக்கு சுறுசுறுப்பாயும் ஆவலாயும் செய்வார்களோ அவ்வளவுக்குத் தாங்கள் இதுவரையிலும் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களுக்காக உத்தரிக்குங் கடனை தீர்த்துப் போடுவதுடன் பரிசுத்ததனத்திலும் விருத்தி யடைவார்களென்று அறிந்துகொள்வார்களாக.

THE SCHOOL OF LOVE.
அன்பின் பாடசாலை.

"மேலான வரங்களைப் பெற ஆவலா யிருங்கள், யான் இன்னம் விசேஷமான வழியை யுங்களுக்குக் காட்டுகிறேன்." என்று அர்ச். சின்னப்பர் ஓரிடத்தில் சொல்லி யிருக்கிறார். அதன்பின் அவ் வப்போஸ்தலர் திருவாய் மலர்ந்தருளிய தனைத்தும் அன்பைப்பற்றியே. அவர் கொடுக்கும் வர்ணனையை வைத்துக்கொண்டு அநேக சாஸ்திரிகள் அன்பைப்பற்றி வாசாமகோசரமாய்ப் பேசியும் எழுதியு மிருக்கிறார்கள். ஆயினும் அவருடைய வர்ணனையில் எப்பவும் நூதனப் பொருளைக் காணலாம். எத்தனை சாஸ்திரிகள் அவ்வசனங்களை வியாக்கியானஞ் செய்தபோதிலும், அவற்றின் முழுப் பொருளையும் உணர்ந்தோமெனச் சொல்லமுடியாது. "அன்போ பொறுமையும் பட்சமுமுடையது. அன்பு பொறாமைப் படுவதில்லை, துடுக்காய்ச் செய்வதில்லை, அகங்காரப்படாது, பெருமையைத்தேடாது, சுய நலத்தை விரும்பாது, கோபங்கொள்ளாது, தீங்கு நினையாது; அநியாயத்திலல்ல, சத்தியத்தில்மட்டும் சந்தோஷப்படும். சகலத்தையும் சகிக்கும், சக்லத்தையும் விசுவசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையுந் தாங்கிக் கொள்ளும். அன்பு ஒருக்காலும் அழியாது. அதைப் பின்பற்றுங்கள்."

அன்பென்னும் பதத்தை நாம் ஒரு சாமான்ய வார்த்தையாக மதித்துவருகிறோம். அற்ப சொற்ப மனோவிகாரத்திற் கெல்லாம் அப்பதத்தையே உபயோகிக்கிறோம். சில வேளைகளில் அதற்கு நாம் கொடுக்கும் தப்பர்த்தத்தால் அப்பதத்தை நாவினா லுரைக்கவும் அஞ்சுகிறோம். ஆயினும், எப்பாஷையினும் அன்பென்னும் பதத்தைப்போன்ற பொருள் நிறைந்த பதம் கிடையாதென்பது பாஷா ஞானிகளின் கொள்கை. அப்பதத்தி லடங்கியுள்ள ஆழ்ந்த பொருட்களைக் கவனிப்பின், அதன் பொருளை விளக்கக்கூடிய இலக்கண விதியொன்று வரையறுத் துரைத்தல் அசாத்தியமாய் முடியும். உலக முண்டானது முதல் கவிஞர் அதனைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்; தத்துவ சாஸ்திரிகள் அதைப்பற்றித் தர்க்கித்து பாகுபாடு செய்ய முயன்றிருக்கின்றனர்; கோடிகணக்காய் ஆடவரும் பெண்டிரும் அதன் பொருட்டாய்ச் சீவித்தும், அதற்காய் மரித்துமுள்ளார்; மனிதன் தன் சீவியத்திற் கதனையே அஸ்திவாரமாக எடுத்துக்கொள்ளுகிறான். கடவுளும் அதன்பேரிலேயே நித்தியத்தைக் கட்டியிருக்கிறார்; அதுவே இம்மையின் திறவுகோல், மறுமையி னுள்ளடக்கம். இம்மை மறுமை இரண்டையும் பிணிக்கும் சங்கிலி, மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய அழியாத ஆக்கம், மரணத்தாலுண்டாகும் அகண்ட படுகுழியைத் தாண்டக் கூடிய சீவிய நெருப்பு.

அப்படியிருக்க, அன்புக் கோரிலக்கண விதி கூறுவதெங்ஙனம்? கூறினும், அன்பே அதைப் பார்த்து நகைக்குமன்றோ! ஆயினும் ஏதோ முயன்று அதற் கோரிலக்கண விதி வரையறுத் துரைப்பினும், அவ்விதி நமக்கியாதொரு பயனுந் தராது; அதன்பொருள் நமக்கு விளங்காது; அன்பென்பது இவ்வளவுதானா? என்னுங் கேள்விக் கிடமாகும். இலக்கணவிதியில் கூறியுள்ளவாறு நாமே அநுபவித் தறிந்தால் மட்டும் அவ்விலக்கணவிதி நமக்குப்பொருள் பயப்பதாகும். இதனால் நாமறிவது யாதெனில், ஒருவன் மெய்யாகவே எவ்வளவுக்குச் சிநேகித்து அன்பிற் பழகியிருக்கிறானோ, அவ்வளவுக்கே, அவன் அன்பினியல்பை யறிகிறான். அவ்வளவுக்கே அவனிடம் அன்பு குடிகொண்டிருக்கிறது. தத்துவ சாஸ்திரத்தால் அவன் அன்பி னுண்மையை யறிய முடியாது; புலமை யவனுக் குதவிசெய்யாது. ஆனால் அவனதை யுணர்ந்து, அதனால் தூண்டப்பட்டு, ஏதோ ஒன்றை அதை முன்னிட்டுச் செய்யவேண்டுமென ஆசித்து முயற்சி செய்யும்போது மட்டுமே, அவன் அன்பை ஒருவாறு அறிகிறான். ஆனால் அதன்பின்னர் அன்பின் முடிவை யடையவில்லை யென உணர்வதுமன்றி, அன்பி

ஞழத்தை யின்னஞ் சரிவர கண்டறியவில்லை
யென, தானே தெரிந்துகொள்வான். ஒருக்கால்
அவன் அன்பின் முடிவை யடையலாம்; இதற்
கிடையில் தானறிந்தனவே ஒன்றுமில்லாமையி
னும் விசேஷமென ஆறுதலடைவான். இதனுல்
அன்பை யறிய அநுபோக மவசியமென்பது பெ
றப்படும்.

ஆதலால், அன்பையறிய இலக்கண விதியை
விட விளக்கிக்காட்டலே முக்கியமாம். கடிதத்தி
லெழுதுவதினும் அதன் காரியங்களைக் காண்
பதே மேல்; அது வளர்ந்து, துளிர்விட்டுப் பூத்
துக் காய்ப்பதை யுற்றுநோக்குவதால் நாமும்
அதை, வேண்மோனுல், நமக்குள் வளரும்படி
யான மார்க்கத்தைத் தேடிக்கொள்ளலாமன்றோ?
அன்பி ஞழத்தை யநேகமாய்க் கண்டறிந்த ஒரு
கிரந்தகர்த்தா அன்பைப்பற்றி வெகு சுலபமான
வார்த்தைகளில் சுருங்கச் சொல்லியிருக்கும் ஒரு
வாக்கியமே அன்பின் திறவுகோல் என்று சொல்
லலாம். அவர் சொல்லுவது "அன்பைக் காண்
பது வார்த்தைகளாலல்ல, ஆனுல் செய்கை
யால்." அன்பு நம்மை யேவ நா மதனுல் செய்யும்
செய்கைகளே மேற்கூறிய திறவுகோல். அப்படி
யானுல், அன்பைச் செய்கையிற் பார்ப்போம்;
விசேஷமாய் இருதயமாகிய சிறைக்குள்ளிருந்து
அது அடித்துக்கொள்ளும் அடிகளைக் கவனிப்
போம். ஏனெனில் அன்புக் கிருப்பிடம் இருத
யம்; அங்கேதான் நமக்கிருக்கும் வல்லமை யளவு
யாதொரு பயமுமின்றி ஒருவர் கண்ணுக்கும்
தென்படாமல் தவறுமார்க்கமின்றி அன்பினி
யல்பை நாமே அறிந்துகொள்ளலாம். "சர்வே
சுரனுடைய இராச்சியம் உனக்குள்ளிருக்கிறது"
என்றுர் நமதாண்டவர்; சர்வேசுரனுடைய
இராச்சியமென்பது, அன்பி னிராச்சியமல்லாது
வேறென்ன?

அன்பினியல்பு அன்பென்னும் விதை
யூன்றி முளைத்துச் செழிப்பாய் வளர்ந்து பலன்
றரக்கூடிய நல்ல நிலம் என்பவை யாவை? அது
முதல் முதல் தன்னைச் சுலபமாய் மறக்கும்
இயல்பே; தன்னைச்சுற்றியும் பிறரிடத்திலும்
உள்ளவற்றைக் கண்டு ஆச்சர்யத்தால் அகமகிழ்வ
தால் தன்னைத்தானே சுலபமாய் மறக்கு மியல்
பே. அது தனக்கு வெளியில் எப்போதும் விருப்
பத்திற் குரிய நயவிஷயங்களையும் தன் கவனத்
திற்குப் பாத்திரமான காரியங்களையும் கண்டு
ணர எவ்வளவு ஆவல் கொண்டிருக்குமென்றால்,
அது தன்னைப்பற்றி நினைப்பதுமில்லை. நினைப்ப
தற் கவகாசமுங் கிடைப்பதரிது. இத்தகைய
குணதிசயத்தைக் குழந்தைகளிடம் சாதாரண
மாய்க் காணலாம்; இதை முன்னிட்டே அவர்
களை நாம் நேசிக்கிறோம். அவர்கள் புத்தி விபர
மறியுமுன்னர், உலகமனைத்தும் அவர்களுக்குப்
புதிது புதிதாய் வியப்பைத் தரக்கூடியதாயிருக்
கிறது; தம்மை யவர்கள் இன்னமறியவில்லை.
இத்தகைய குணத்தைப் பேர்போன கவிஞரிட
மும், சிற்ப சாஸ்திரிகளிடமும் காணலாம். தம்
மனதில் ஆழ்ந்த கருத்துக்களை யெழுப்பக் கார
ணமாயுள்ளவைகளின் மேல் தமக்குள்ள அன்பே
அவர்களுயிர். இவ்வன்பினுல்தான் அவர்கள்
மற்ற மனிதரைப்போல் தம் சீவியத்தைக் கழிக்
காமல், விபரீதமாய் நடப்பது. சாதாரணமாய் நம்
மிடமுள்ள மானிட சுபாவம் அவர்களுடைய விப
ரீத நடவடிக்கைகளை மன்னிக்கும்படி நம்மைத்
தூண்டுகிறது. ஏனெனில் அவர்கள் அவ்வாறு
நடந்ததின் காரணம் அன்னுர் பூண்டுள்ள அள
வற்ற அன்பென்பதை நாம் அறிகிறோம்.

இரண்டாவது அன்பினியல்பென்றால்
ஆழ்ந்த மனோசலனமுடைய இயல்பென்றறிய
வேண்டியது. அவ்வியல்பு கண்டுகளிப்பதுட
னில்லாமல், கண்டு களிப்பதால் விகாரமடை
ந்து ஏதோ ஒரு வழியில் கஷ்டப்படுகிறது. சில
வியல்புகளில் இத்தகைய விகாரம் தோன்றுவ
தில்லை; அவை ஒரு பொருளினிடமுள்ள அழகை
கண்டாநந்திக்கக் கூடும், அதை நன்கு யாராய்
ந்து விளக்கக்கூடும், அது விஷயத்தில் மிக்க
ஆவல் காட்டவும் கூடும்; ஆனுல் அதனுல் மனோ
சலனமடைந்து அதற் கேற்பவேதென்றால் முடி
யாத காரியம். அத்தகைய இயல்பினை யுடை
யார் இதை ஒரு பலவீனமென்பர். அவர்கள்
அறிவில் முதிர்ந்து மிக்கத் தேர்ச்சி யடையலாம்;
ஆனுல் மனோசலனம் அவர்களைப் பின்பற்றுவி
டின், அவர்கள் அன்பு கால் கை யிழந்த முடவ
னுக்குச் சமானமானதாம். அன்பு ஆநந்தத்தையு
முணரும், துக்கத்தையு முணரும்; இன்ப துன்
பங்கள் அதற்குரியன. அது இன்ப மனுபவிக்
கையில், அவ்வின்பம் அபரிமிதமாய்ப் பெருக,
அதைத் தாங்க முடியாமல் வருந்துகையில்
"போதும்! போதும்!" எனக் கதறும்படி நேரி
வதுமுண்டு. அது துன்பப்படுகையில், அத்துன்
பம் சாவினும் மிகக் கொடிதா யிருப்பினும்,
மிகப் பொறுமையுடன் அதைச் சகிக்கலாம்.
ஆனுல் அன்பிற்கு இன்பதுன்பங்க ளில்லாவிட்
டால், வேறெதுதா னிருந்தபோதிலும் இவ்

வாழ்க்கையானது வெட்ட வெளியான பாலை
வனத்தை நிகர்க்கு மென்னலாம்.

மூன்றுவது, அன்பினியல்பைச் செய்கை
யா லறிய வேண்டியது. மெய்யன்பிற்கு ஒரு
வித தைரியமும், துணிச்சலும் அவசியம்; மதி
யின் சொற்படி ஒரு காரியத்தைச் சாதிப்பது
டன், அன்பின் ஏவுதலாலும் அதைச் செய்ய
வேண்டும். அன்பு தவறி நடக்கக்கூடும் என்பது
மெய்தான்; மிக்க பைத்தியங்கொண்டதென
வும், அளவுக்கு மிஞ்சிய உதாரமுடையதெனவும்
அதன்பேரில் குறைகூறலாமென்பதும் மெய்
தான். அன்பு கணக்குப் பார்ப்பதில்லை, இன்
னது வருமென்பதைக் கவனிப்பதுமில்லை. சில
தத்துவ சாஸ்திரிகள் அதினிட மிருக்க வேண்டு
மென அபிப்பிராயப்படுவதுபோல், முன்
யோசனையுடன் எப்பவும் நடப்பதில்லை, ஜெயத்
தை எதிர்பார்ப்பதில்லை; ஆனுல் ஒரு தடவை
அது தூண்டப்பட்டபோது கண்ணை மூடிக்
கொண்டு, "செலவைக் கவனியாமல் தன்னிட
முள்ளதைக் கொடுக்கிறது; காயம், கஷ்ட முத
லியவற்றைக் கவனியாமலும், களையாற இடந்
தேடாமலும் போர் செய்கிறது; கைம்மாறு கரு
தாமல் உழைக்கிறது," கிஞ்சித்தும் யோசியா
மல் தன்னுயிரையே பரித்தியாகஞ் செய்கிறது.
இத்தகைய இயல்பு அபாயகரமானதென நினைக்
கலாமா? ஆம்; ஆனுல் போர்முனைக்குச் செல்
வது அபாயகரமானதல்லவா? அஞ்ஞானிகளை
மனந்திருப்ப அந்நிய தேசங்களுக்குப் போவது
அபாயகரமானதல்லவா? தொற்றுநோய் கொண்
டவர்களுக்குச் சிகிச்சை செய்தல் அபாயகர
மானதல்லவா? அபாயத்தைத் துணிவுடன்
எதிர்ப்பதே பெருமையின் சாரம், மகத்துவத்தி
னியல்பு. "ஒருவன் தன் னன்பிற்காகத் தன்னு
யிரைக் கொடுப்பதினும் மேலான அன்பு மனித
னிடங் காணமுடியாது." அவ் வன்பு யாராயி
ருப்பினும் எதுவா யிருப்பினும் சரிதான்.

(தொடரும்.)

S. Selva Raju.

"என் பின் வர மனதாயிருக்கிறவன் தன்னை
மறுத்து அடக்கித் தன் சிலுவையைச் சுமந்து
நடப்பானுக" என்று நமது கர்த்தர் வசனித்த
வாக்கியத்தினுல் நாம் இரட்சணியமடைய நம்
மை வெறுத்து நமது சுயமனதையும் இச்சை
களையும் கண்டிப்பாய் அடக்கி நடக்கவேண்டு
மென்று தெளிவாகிறது.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம் (32–38).

வசனம்.—(32). "அவர் பெரியவராய் இருப்பார், உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார். ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காதனத்தை அவருக்குத் தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்.

33. அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றுர்.

34. அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து: இது எப்படி யாகும்? நான் புருஷனை அறியேனே என்று சொல்ல,

35. தேவதூதன் அவளுக்கு மாறுத்தாரமாக: இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளி வருவார்; உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும்; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார்.

36. இதோ உமக்கு பந்துவாகிய எலிசபேத்தும் தன் முதிர் வயதிலே ஓர் புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறுள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதம்.

37. ஏனெனில் சர்வேசுரனுல் கூடாதது ஒன்றுமில்லை என்றுர்.

38. அப்போது மரியம்மாள்: இதோ நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றுள். என்றவுடனே தேவதூதன் அவளை விட்டு அகன்று போனுர்."

32-33 வசனங்கள்.—"அவர் பெரியவராய் இருப்பார்"......இவ் வார்த்தைகளால் தீர்க்கதரிசிகளின் வசனங்களுக்கும்,

அக்காலத்தி லிருந்த யூத ஜனங்களின் அபிப்பிராயங்களுக்கும் இசைந்த வண்ணம் கன்னிமரியாயின் குமாரன்.....மெஸ்ஸியாஸ் இராசனாக (Messia-Rex) இருப்பார் என்று தேவதூதன் வெளிப்படுத்துகிறார்.

அவர் பெரியவராய் இருப்பார்...... அவருடைய பெருமை அவருடைய சுபாவத்தாலும், அரசாட்சியின் மகிமைப் பிரதாபத்தாலும் விளங்குகின்றது. அவர் தேவ சுபாவத்தைப் பெற்றவராகையால் உண்மையில் "உன்னதமானவருடைய சுதன் என்று அழைக்கப்படுவார்."

"அவர் தந்தையாகிய தாவீதின் சிம்மாசனத்தை அவருக்குத் தந்தருளுவார்" என்னும் வசனத்தில் கன்னிமரியாயும் அவளுடைய குமாரனாகிய மெஸ்ஸியாவும் தாவீது இராசாவின் வம்சத்தில் உதித்தவர்கள் என்று தெளிவாய்க் காண்பிக்கப்படுகிறது. சர்வேசுரன் தாவீது இராசாவுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் பின்வருமாறு: "பிறகு உன் சீவிய நாட்கள் நிறைவேறி நீ உன் பிதாக்களுடன் நித்திரைபண்ணும்போது, நாம் உனக்குப் பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய ஓர் குமாரனை எழும்பப்பண்ணி அவன் இராச்சியத்தை நிலைப்படுத்துவோம்........நாமோ அவனுடைய இராஜரீக சிம்மாசனத்தை என்றைக்கும் நிலைத்திருக்கப் பண்ணுவோம்." (2-அரசராகமம். அதிகாரம் 7. வசனம் 12-13...) ஆகையால் ஆண்டவராகிய சர்வேசுரன் தாவீதின் சிங்காதனத்தை மெஸ்ஸியாவுக்குத் தந்தருளுவார் என்றும், அவர் என்றென்றைக்கும் அரசாளுவார் என்றும் சம்மனசானவர் அறிக்கையிடுவதானது, முன் கூறிய வாக்குத்தத்தத்துக்குப் பொருந்தியதாய் இருக்கிறது. அதையே சம்மனசானவர் தேவ கன்னிகைக்கு ஞாபகப்படுத்துகிறார். (ஆதியாகமம். 49-அதிகாரம் 10-வசனத்தில்) யாக்கோபு தன் குமாரனாகிய யூதாவைப்பற்றிக் கூறிய தீர்க்கதரிசனம் பின் வருமாறு: "அனுப்பப்பட இருக்கிறவர் வரும்பரியந்தம் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை, அவனுடைய சந்ததியில் இறைவன் ஒழிவதுமில்லை. சர்வ சாதி சனங்களும் அவருடைய ஆகமனத்திற்குக் காத்திருப்பார்களே." இத்தீர்க்கதரிசன வசனத்துக்கு இசைவாய் மெஸ்ஸியாஸ் யாக்கோபின் கோத்திரத்தில் உதிக்கிறவர் என்றும், அவர் என்றென்றைக்கும் அரசாளுவார் என்றும் சம்மனசானவர் அறிக்கை யிடுகிறார்.

"அனுப்பப்படுகிறவர்" என்ற நாமத்தால் மெஸ்ஸியாவாகிய இரட்சகரே அழைக்கப்படுகிறார். அவரல்லோ பிதாவாகிய சர்வேசுரனால் அனுப்பப்பட்டவர். அவருடைய ஆகமனத்துக்கு அல்லோ, பிதாப்பிதாக்களும் தேவப் பிரசைகளும் இன்னும் உலகத்திலுள்ள சகல ஜனங்களுமே ஆவலோடே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். யாக்கோபு சொன்னபடி யூதாவின் கோத்திரத்திலிருந்து செங்கோலரசு உரோமைச் சக்கரவர்த்தியாகிய சேசாரின் கைக்கு வந்தபோதுதானே மெஸ்ஸியாஸ் பூலோகத்தில் தோன்றினார்.

மெஸ்ஸியாஸ் அரசன் என்றென்றைக்கும் அரசாளுவார் என்று சம்மனசானவர் சொன்னதால், அவருடைய மகத்துவப் பிரதாபத்துக்கு, சொற்ப காலம் மாத்திரம் அரசாட்சி செய்த மற்ற இஸ்ருயேல் அரசர்களின் மகிமை இணையாகாதென்றும், இவ்வரசர்களைப் பார்க்கிலும் அவர் உன்னதமானவர் என்றும் விளங்குகிறது. "நாம் அவனுக்கு பிதாவாக இருப்போம், அவன் நமக்குக் குமாரனாகவும் இருப்பான்."(2 அரசர்.அதிகாரம்7, வசனம்14) என்று சர்வேசுரன் சலமோன் இராசாவுக்குத் திருவுளம்பற்றினபடி, இஸ்ருயேல் அரசர்களும் சர்வேசுரனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால் "உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார்" என்ற இவ்வார்த்தையில் மெஸ்ஸியாஸ் என்பவர் மற்ற இஸ்ருயேல் அரசர்களைப்போல் சுவீகார குமாரன் அல்ல, சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவரும் அவருக்குப் பிரியமானவரும், உகந்தவரும் மாத்திரம் அல்ல, ஆனால் மெஸ்ஸியாவைப்பற்றி இசையாஸ் தீர்க்கதரிசி விளம்பிய வண்ணம் ("ஒரு பாலன் நமக்குப் பிறந்தார், சுதன் நமக்கு அளிக்கப்பட்டார், அவர் தம் தோள்மீது தமது அரசாட்சியின் அடையாளத்தைக்கொண்டிருப்பார். அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், வல்லப தேவர் எனவும், எதிர்காலப் பிதாவெனவும், சமாதானப் பிரபு எனவும் அழைக்கப்படுவார்." (அதிகாரம் 9. வசனம் 6.) அவரிடம் மெய்யான தேவ சுபாவ மிருக்கிறதென்றும், அவர் பிதாவாகிய சர்வேசுரனிட மிருந்து நித்தியமாய் ஜெனித்த மெய்யான சுதனென்றும் சொல்லக்கடவோம்.

ஆகையால் 32-வது 33-வது வசனங்களில் இஸ்ருயேல் கன்னிகைகளில் எவருக்கும் அளிக்கப்படாத நிகரற்ற மகிமைக்கும் உன்னத பாக்கியத்துக்கும் கன்னிமரியாயி தெரிந்துகொள்ளப்பட்டதை, தெளிவாய் அவளுக்கு அறிக்கை யிடுகிறார் தேவதூதன்.

அதற்கு மரியாயி என்ன பதில் சொல்லுகிறாள் ?

34-ம் வசனம்—"அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து: இது எப்படி யாகும்? நான் புருஷனை அறியேனே என்று சொன்னாள்." கன்னிமரியாயின் இக் கேள்வியானது, மெஸ்ஸியாவைத் தன் உதரத்தில் கர்ப்பந்தரித்து அவரைப் பெற்றெடுப்பதாக சம்மனசானவர் எப்பொழுதும் கன்னிகையான தனக்கு வெளிப்படுத்தியதைப் பற்றி அதிசயித்துக் கூறிய கேள்வி யென்று மாத்திரம் சொல்வது போதாது. ஏனென்றால் எப்பொழுதும் கன்னிகையா யிருக்க வார்த்தைப்பாடு கொடுத்த தேவ கன்னிகை சம்மனசானவர் "இதோ உமது உதரத்தில் ஓர் குமாரனைப் பெறுவீர், அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்" என்று தனக்கு அறிக்கையிட்டதைப் பற்றி அதிசயப்பட்டாலும், தேவதூதன் அதைச் சர்வேசுரன் பேரால் தனக்குச் சொன்னபடியால், கிஞ்சித்தும் சந்தேகப்படாமல், அதெல்லாம் நிறைவேறும் என்று உறுதியாய் விசுவசித்தாள். இவ் விசுவாசத்தைப்பற்றித்தான், எலிசபேத்தம்மாள் மரியாயை வாழ்த்தினாள். (45. வசனம்).

ஆனால் சம்மனசு சொல்லும் இக்காரியம் (Quomodo) எவ்விதமாய் ஆகும் என்று, அப்பரம இரகசியம் நிறைவேறும் விதத்தையும் வகையையும் பற்றித்தான் அறிய ஆசித்தாள். ஆகையால் இந்தக்கேள்வியில் சக்கரியாவிடம் காணப்பட்ட விசுவாசக் குறைவு அவளிடம் இல்லை என்றும், இதினால் அவள் விவேகமுள்ள கன்னிகையாய் விளங்குகிறாள் என்றும் வேத சாஸ்திரிகள் கூறுகிறார்கள். கன்னிமரியாயி எப்பொழுதும் கன்னிகையாயிருக்க பாலப் பருவத்திலேயே வார்த்தைப்பாடு கொடுத்தபடியால், அவ்வார்த்தைப்பாட்டைச் சர்வேசுரன் பிரியமாய் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்திருப்பதை அறிந்த பரிசுத்த கன்னிகை, இப்பொழுது சம்மனசு தனக்கு வெளியிட்ட காரியத்தால் மெஸ்ஸியாவின் மனுஷ சரீரம் மனுஷ வித்தில்லாமல் தன் உதரத்தில் உண்டாகும் மேரை எப்படி யென்று, சம்மனசானவரை விசாரிப்பதானது அவளுடைய விவேகத்தையும் ஞானத்தையும் விளக்கிக் காண்பிக்கின்றது. பூலோகத்தில் தாய்தந்தையோர் வித்தாலுண்டாகிற உற்பத்தியே மனுஷர் சமஸ்தருக்கும் பொதுவான ஒழுங்காயிருக்கிறபடியால், தான் கன்னிமையின் வார்த்தைப்பாட்டைக் கொடுத்திருப்பதால், இப்போது மெஸ்ஸியாவைப் பெற்றெடுப்பதினால் தன் கன்னிமைக்குக் கிஞ்சித்தும் பழுதுவராமல், எவ்வாறு சர்வேசுரன் இப்பரம இரகசியத்தை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறார் என்று கன்னிமரியாயி தீர்க்கமாய்ச் சம்மனசானவரிடம் அறிந்து திருப்தியடைவது நியாயந்தானே. விவேகமும் ஞானமும் நிறைந்த இக் கேள்விக்குச் சம்மனசானவர் உத்தாரம் அளிக்கிறார்.

35-வசனம்,—தேவதூதன் அவளுக்கு மாறுத்தரமாக "இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளி வருவார், உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும், ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார்."

கன்னிமரியினிடம் இஸ்பிரீத்து சாந்து ஏற்கனவே இருந்தார். ஆனால் மறுபடியும் விசேஷ ஒரு நவமான விதமாய் இஸ்பிரீத்து சாந்து அவளிடம் இறங்கி வந்து தமது தேவ வல்லபத்தைக்கொண்டு ஓர் அற்புத மாற்றத்தை உண்டுபண்ணப் போகிறபடியால், தேவதூதன் இஸ்பிரீத்து சாந்து உமதுமேல் எழுந்தருளிவருவார் என்று சொல்லுகிறார். "உன்னதருடைய

வல்லபம் அவளுக்கு நிழலிடும்” அதாவது உன்னத சர்வேசுரன் அவளிடம் அற்புதமாய் வாசம்பண்ணுவார், பிரசன்னமாயிருப்பார் என்பதாம். பழைய ஏற்பாட்டின் யாத்திராகமம் 40-ம் அதிகாரம் 32-வது வசனத்தில், மோயீசன் தேவ உடன்படிக்கை கூடாரத்தைச் சகல சோடினையோடு சிங்காரித்து நிறுத்தினபோது, ஓர் ஒளிவான மேகம் வந்து கூடாரத்தை மூடிக்கொண்டு தேவமகிமைப் பிரகாசப் பிரபையாக எங்கும் வியாபித்துப் பிரதாபித்தது என்று எழுதியிருக்கிறது. இம்மேகமானது கூடாரத்தைமூடி நிரப்பி அதற்கு நிழலிட்டதானது சர்வேசுரன் அக்கூடாரத்தின் மீது விசேஷமான அற்புத பிரசன்னத்தால் வீற்றிருந்தார் என்பதற்கு அடையாளமாம். அவ்வாறே கன்னிமரியாயின்மேல் உன்னதருடைய வல்லபம் நிழலிடும் என்பதால், புதிய ஏற்பாட்டின் வாக்குத்தத்தத்தின் பெட்டகமாகிய கன்னிமரியாயினிடம் சர்வேசுரன் தமது அளவற்ற வல்லமையைக்கொண்டு ஒப்பற்றவிதமாய் வாசம்பண்ணுவார் என்று சொல்லத்தகும். ஆகையால் இஸ்பிரீத்து சாந்துவின் இத்தேவ பிரசன்னம் கன்னிமரியாயி தேவசுதனைக் கர்ப்பந்தரிக்க அவளைப் பாத்திர முள்ளவளாக்கினது. தேவசுதன் மனுஷாவதாரமான இப்பரம இரகசியத்தைக் குறிக்க சம்மனசானவர் “உன்னதமானவருடைய,” “வல்லமையால்” என்று உபயோகித்த பதங்கள் மிகவும் பொருத்தமானவை. ஏனெனில், இப்பரம இரகசியத்தை நிறைவேற்றச் சர்வேசுரன் தமது சாதாரண வல்லமையை யல்ல, தமது உன்னதமான சர்வ வல்லபத்தையும் காட்டியிருக்கிறார். சர்வேசுரன் உலகத்தையும் உலகங்கொண்ட எவற்றையும் தமது ஒரே சித்த முயற்சியால் உளவாக்கினார். அதனால் அவர் செல்வ பொக்கிஷங்கள் அற்பமும் குறைவுற்றதுமில்லை. அவர் புஜவலி கிஞ்சித்தும் மெலிவுற்றதுமில்லை. பாவிகளாகிய மனிதர்களை மீட்டிரட்சிப்பதற்கோவெனில், தேவனாயிருந்தவர் மனுஷாவதாரம் செய்தார். எவ்விதமாய்ச் செய்தார் என்றால் தெய்வீகமும், சுபாவ இயற்கையாலும் பாவத்தாலும் அளவற்றதூரம் விலகிப்பிரிந்து நிற்கும் மனுஷீகமும் ஆகிய இவ்விரண்டு வஸ்துக்களும் ஒரு வீட்டி லல்ல, ஒரு போஜன பந்தியிலல்ல, ஒரு இருதயத்திலுமல்ல, ஆனால் ஒரேயாளிடத்தில் ஒன்றித்துப் போகக்கூடிய பரம இரகசியத்தை நிறைவேற்றினார். தெய்வீகத்தையும் பாவத்தால் கெட்ட மனுஷீகத்தையும் பார்க்க ஒன்றற்கொன்று தொலைவிட்ட தேதாகிலும் உண்டோ? ஆயினும் இப்போது தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும்போல் அவ்வளவு நெருங்கினவிதமாய் ஐக்கிய பந்தனமாய் ஒன்றுபட்டது ஒன்று மில்லையே. அர்ச். பெர்நார்த் வசனித்தவண்ணம், சர்வேசுரனைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை; மனிதன் உண்டுபண்ணப்பட்ட மண்ணிலும் இழிவுள்ளதும் ஒன்றுமில்லை. ஆயினும் சர்வேசுரன் எவ்வளவு தாழ்மையோடு இந்த மண்வரைக்கும் இறங்கிவந்தாரெனில், இந்த மண் சர்வேசுரன் வரைக்கும் எத்தனை தகமை கொண்டெழுந்து உயர்ந்ததெனில், தேவ கிருத்தியங்களெல்லாம் மனிதன் கிருத்தியங்களென்றும், மனிதன் பாடுகள் எல்லாம் தேவன் பாடுகள் என்றும் சொல்வதற்கு நியாயம் உண்டு. இப்பேர்ப்பட்ட புத்திக்கெட்டா பரம இரகசியத்தை நிறைவேற்றச் சர்வ சக்தியுள்ள உன்னத சர்வேசுரன் தமது சர்வ வல்லமையையும் காண்பிக்கச் சித்தமானார்.

“ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார்.” தேவகன்னியினிடம் மனுஷீகம்பெற்றுப் பிறக்கப்போகிறவர் பரிசுத்தராய் இருக்கவேண்டும். ஏனெனில் கன்னிமரியாயி ஒருவளே பாவத்தால் கெட்ட மனுக்குலத்தில் தேவ வல்லமையின் அற்புதத்தால், அமலோற்பவியாய், முற்றும் பரிசுத்த முள்ளவளாய்ச் சர்வேசுரனுக்கு முற்றும் உகந்தவளாய், அருட்பூரணியாய் ஜென்மித்துத் தோன்றினாள். இப்பேர்ப்பட்ட உத்தம பரிசுத்த கன்னிகையின் உதிரத்தின் இரத்தத்தில் இஸ்பிரீத்து சாந்துவின் வல்லப செயலால் உருவாக்கப்பட்ட மனுஷீகமானது தேவ வார்த்தையான இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனோடு ஆள்தன்மையாய் ஒன்றுபட்டு பிறந்ததால் அவ்வளவு பூஜிதமாய், அற்புதமாய், திவ்வியமாய்ப் பிறந்தவர் பரிசுத்தராய்த் தான் இருக்கவேண்டும்; அவர் தேவ சுத

னாய் இருக்கவும் அழைக்கவும் படவேண்டும்.

36-வசனம்—இதோ உமக்கு பந்துவாகிய எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதம்.

யூதா கோத்திரத்தைச்சார்ந்த எலிசபேத்தம்மாளின் தாயும், கன்னிமரியாயின் தாயும் ஒரே தாயினிடத்துப் பிறந்த சகோதரிகள். இவர்களில் எலிசபேத்தம்மாளின் தாய் ஆரோன் வம்சமாகிய குரு வம்சத்திலும், கன்னிமரியாயின் தாய், தாவீது இராசாவின் கோத்திரத்திலும் மணம் புரிந்தவர்கள் என்றும், ஆகையால் எலிசபேத்தம்மாளுக்கு கன்னிமரியாயி மெய்யான நெருங்கின பந்து (Cousin) என்றும் வேத சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள்.

மலடியாகிய எலிசபேத்தம்மாள் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கர்ப்பந்தரித்ததானது தேவ செயலாலான ஓர் மகத்தான புதுமை. தேவதூதன் தனக்கு அறிவித்த காரியத்தை விசுவசிப்பதற்கு யாதொரு அடையாளத்தையும் தேவ கன்னிகை கேட்காவிட்டாலும், தன் பந்துவாகிய எலிசபெத்தம்மாளைப் பற்றி சந்தோஷிக்கவும் அவள் விஷயத்தில் சர்வேசுரன் காண்பித்த கிருபாகடாட்சத்தை யறிந்து ஆறுதலடையவும் சம்மனசானவர் தானாகவே அன்பாய் ஓர் அடையாளத்தைக் கொடுக்கிறார்.

37-வசனம்.—“ஏனெனில் சர்வேசுரனால் கூடாதது ஒன்றுமில்லை என்றார்.” எபிரேய பாஷை நடையில் எழுதப்பட்ட இவ்வசனத்துக்கு சர்வேசுரன் எல்லா காரியங்களையும் செய்ய வல்லவர்என்று அர்த்தம் கூறப்படுகிறது.

தேவதூதன் உச்சரித்த இவ்வார்த்தைகளைக் கேட்ட கன்னிமரியாயி என்ன செய்கிறாள்.

38-வசனம்.-அப்போது மரியம்மாள்: இதோ நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடையவார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள். என்றவுடனே தேவதூதன் அவளைவிட்டு அகன்று போனார்.

கன்னிமரியாயி தன் கன்னிமைக்கு யாதொரு அற்பப் பழுதும் வராதென்று தேவதூதனால் மனந் தெளிந்தவுடன், சர்வேசுரனுடைய சித்தம் அனுகூலமாகுக வென்று, தன்னை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடுத்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினாள். அக்ஷணமே மெய்யான சர்வேசுரனாயிருக்கிற தேவ குமாரன் அவளுதரத்தில் மனுஷீகத்தைக்கொண்டு உற்பவித்தார். “ஓ! தேவ கன்னிகையின் தாழ்ச்சியைப்பார், பக்தி கீழ்ப்படிதலைப்பார். சர்வேசுரனுடைய தாயாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவள் அவ்வுன்னத மகிமைப் பட்டத்தால் பெருமைகொள்ளாமல், ஆண்டவருடைய அடிமை யென்று தன்னைத் தாழ்த்துகிறாள்.” (அம்புரோஸ்)—அடிமை யென்று தன்னைத் தாழ்த்தும்போது தேவ தாயின் உன்னத பதவிக்குத் தான் முற்றும் அபாத்திர முள்ளவளென்று அங்கிகரிக்கிறாள். தேவதாயின் கீழ்ப்படிதலைப்பற்றி ஓர் வேதசாஸ்திரி பின் வருமாறு வசனிக்கிறார். “நான் ஆண்டவருடைய அடிமை, சித்திரம் எழுதும் பலகை நான், அதில் சித்திரன் தன்னிஷ்டம்போல் படம் எழுதுவானாக! ஆண்டவர் இந்த அடிமை மட்டில் ஏதேது செய்ய விரும்புகிறாரோ அதை யெல்லாம் செய்வாராக.”

தேவ கன்னிகை உரைத்த “Ecce ancilla Domini.” “இதோ ஆண்டவருடைய அடிமை.” என்ற வார்த்தைகளில் ஆழ்ந்த தாழ்ச்சியும், சிரவணமும் “Fiat mihi” “எனக்கு ஆகக்கடவது” என்றதால் தீவிரமான உத்தம கீழ்ப்படிதலும், உண்மையான விசுவாசமும், முழுபரித்தியாகமும், “Secundum Verbum tuum.” “உமது வார்த்தையின்படியே” (அதாவது-என்னுடைய கன்னிசுத்த மகிமைக்கு யாதொரு பழுதும் வராதென்று நீர் உரைத்தபடியே.) என்றதால், உன்னத விவேகமும் உத்தம கன்னிமைத்தன பக்தியும், இன்னும் இவ்வார்த்தைகளில் இப்புண்ணியங்களோடு கூட ஆச்சரியமான நிகரில்லாத தேவ சிநேகமும், மனுக்குல இரட்சண்ணியத்தின் மட்டில் அபேக்ஷையும் விளங்குகின்றன.

தேவ கன்னிமரியின் சம்மதத்தை அறிந்தவுடன் தேவதூதன் அவளைத் தன் ஆண்டவராகிய சர்வேசுரனுடைய தாய் என்றும், பரலோக பூலோக பாதாளமாகிய திரிலோகத்தின் இராக்கினி யென்றும், கன்னியர்களின் அரசியென்றும், மெஸ்ஸியாஸ் அரசனுடைய மாதாவென்றும், மனுக்குலத்தின் மாதாவென்றும், பாவிகளுக்கு அடைக்கலம் நம்பிக்கையென்றும், அவளிடம் பிரவேசித்து முதல் வாழ்த்தின போது காண்பித்த பூஜித வணக்க மரியாதை பற்றுதலுக்குமேல் இன்னும் ஆயிரம் மடங்கு அதிகமாய், ஆனந்த உல்லாசமாய், அதிசய பிரமிப்பாய் வணங்கி வாழ்த்தி, போற்றிப்புகழ்ந்து அவளை விட்டகன்றார்.

S. M.

GNANAMANI, III PART.
ஞானமணி 3-ம் பாகம்.
40-ம் அதிகாரம்.

எஜமானே, எந்தச் சண்டாளப்பாவி இந்தப் பஞ்சவர்ணக்கிளி கழுத்தை முறித்தானே தெரியாது.

பண்டிதர் பசியால் இளைத்துக் களைத்து இருந்ததினிமித்தம் நன்றாய் நித்திரை போய்விட்டபடியால் அன்று காலை 5 மணி வண்டியும் தவறிப் போனது. பிறகு இவர் பால், பழம் முதலிய சிற்றுணவுகளை வாங்கிப் புசித்துவிட்டு, எட்டு மணி லோக்கல் வண்டிக்குப் புறப்பட்டார். பண்டிதர் ஏறியிருந்த இரண்டாம் கிளாஸ் வண்டியில் நன்றாயுடுத்தியிருந்த வேறொரு பெரிய மனிதனும் வந்து ஏறினான். இருவரும் ஒருவர் ஒருவருடைய ஊர் பேர் முதலியவற்றைக் கேட்டுக்கொண்டு சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

அன்னியன் பண்டிதரை நோக்கி செங்கற்பட்டு நல்ல ஊர்தானா வென்று வினவ, பண்டிதர்: ஆம், மெத்த நல்ல ஊர்; கடந்த ஐந்து வருஷ காலமாய் அதில் யாதொரு வியாதியுங் காணப்படவில்லை; நேர்த்தியான ஜலம், காய்கறி முதலான பதார்த்தங்கள் ஏதேஷ்டமாய் அகப்படும்.

அன்னி.—(செங்கல் பட்டிலுள்ள உத்தியோகஸ்தர் முதலிய கனவான்களை விசாரித்தபின்) அங்கு பாட்டுக் காவியத்தில் தேர்ந்த ஒரு பண்டிதர் இருப்பதாக வதந்தி, அவரை நீர் அறிவீரோ?

பண்.—ஆம் அறிவேன்.

அன்.—அவர் மகா கனவானும் சகலராலும் நன்குமதிக்கப்பட்ட தர்மசாலியும், ஊரில் செல்வாக்குப் பெற்றவருமா யிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

பண்.—இருக்கலாம்.

அன்.—ஆனால் அவருக்குக் கடவுள் சகலமும் குறைவின்றி அளித்திருந்தும் அவருக்கு ஒரு குறைவுமாத்திரம் உண்டென்பது நிஜந்தானோ?

பண்.—அற்பக்காரியமும் குறைவின்றியிருக்கக்கூடிய நரன் இப்பூமியில் இல்லையென்று அறியீரோ?

அன்.—அது வாஸ்தவமே. முடிதரித்த அரசருக்கும் மன்னருக்குங்கூட ஏதாவது ஒன்று குறைவுபடாமலிருப்பதில்லை. ஆனால், நான் குறித்துப் பேசும் பண்டிதருக்கு ஆஸ்திபாஸ்தியும் கீர்த்தி வெகுமானமும், சிறப்பு செல்வாக்கும் இருந்தும், அவருடைய குடும்பத்தில் அவருக்கு மெத்த சங்கடங்கள் நேரிடுவதாக பிரஸ்தாபம்! அது உண்மைதானோ?

பண்.—அப்படியென்ன சங்கடமோ? அவரும் அவருடைய மனைவியும் வேலைக்காரரும் தவிர வேறே ஒருவருமில்லை அவருடைய வீட்டில் அப்படியிருக்க, அந்தக் குடும்பத்தில் என்ன சங்கடம் இருக்கக்கூடும்?

அன்.—பாவம்! புண்யபுருஷோத்மனான அந்த மகானுபவனுக்கு வெளியில் யாதொரு சங்கடம் இல்லாவிட்டாலும், வீட்டில் வெகு துன்பங்களுண்டா யிருப்பது மெய்தானா?

பண்.—யாரால் துன்பமோ?

அன்.—அவருடைய மனைவியால்தான்!

பண்.—காரணம்?

அன்.—எனக்கு என்ன காரணம்தெரியும்? தூத்துக்குடி யெங்கே? செங்கல்பட்டு எங்கே? அப்படிச் சொல்லக் கேள்வி!

பண்.—அதெல்லாம் எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் இருவரும் அன்னியோன்னியமாயிருப்பதாகவே என் எண்ணம்.

அன்.—பண்டிதருடைய மனைவி தன் புருஷன் மட்டில் சந்தேகப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீரோ?

பண்.—என்னத்தைப் பற்றிய சந்தேகம்?

அன்.—அவர் போகக்கூடாத இடத்துக்குப் போகிறாரென்றும், பேசத்தகாதவர்களோடு ஸ்நேகம் செய்கிறாரென்றும் அந்த மகராசி ஆங்காங்கு பிரஸ்தாபித்ததாகவும் சொல்லிக்கொண்டார்கள்.

பண்.—இப்பேர்ப்பட்ட சங்கதியைச் சொன்னவன் பேர்தான் ஜெகப்புளுகன் என்னலாம், (என்று சிரிக்கத்தொடங்கினார்).

இதற்குள்ளாக வண்டி செங்கற்பட்டு ஸ்டேஷனுக்குவந்து நின்றது. பண்டிதரும் டிக்கட்டை ஸ்டேஷன்மாஸ்டர் கையில் கொடுத்து, வண்டி விசாரிக்கும்படி வெளிக் கேட்டண்டை போனபோது, அங்கு இரண்டு போலீஸ் அதிகாரிகள் குதிரைமேல் ஏறியிருக்க ஆறு ஜவான்கள் துப்பாக்கிகளுடன் வரிசையாய் நிற்பதைக் கண்டு ஒரு குதிரைவண்டிக்காரனைக் கூப்பிட்டு அழைத்தார் பண்டிதர்.

அன்னேரத்தில் குதிரைமேல் ஏறியிருந்த போலீஸ் ஆபீசர், பண்டிதருக்கு சயிக்கினை காட்டி, அவர் அருகாமையிலிருந்த வண்டியில் ஏறும்படி கற்பித்தார்.

அதற்குப் பண்டிதர் சம்மதியாமல் "உமது வண்டி யெனக்குத் தேவையில்லை, வாடகை வண்டியில் ஏறிக்கொள்வேன்" என்று வண்டிக்காரனை வண்டியோட்டிக்கொண்டு வரச்சொன்னார்.

அப்போது போலீஸ் ஆபீசர்: "உனக்கு வாரண்டு கொண்டு வந்திருக்கிறேன், உடனே ஒன்றும் பேசாமல் இந்த வண்டியில் ஏறு" என்றார்.

"எனக்கு நீர் வாரண்டு கொண்டுவர நான் என்ன பாதகஞ் செய்தேன்? திருடினேனா? அடித்தேனா? கொலைசெய்தேனா?" என்றார் பண்டிதர்.

"வாயை மூடிக்கொண்டு மரியாதையோடு இந்த வண்டியில் ஏறிக்கொள்; இல்லாவிட்டால், (சட்டை சாக்கிலிருந்து விலங்கை யெடுத்துக் காட்டி) இதை உன் கைக்கு மாட்டி பலாத்காரமாயுன்னை யிழுத்துக்கொண்டுபோகும்படி நேரிடும்" என்றார் ஆபீசர்.

இதைப் பண்டிதர் கேட்கவே, பயப்பிராந்தி கொண்டு பேச வாய்வராமல், கால்கையில் நடுக்கங்கொண்டு, போலீசார் காட்டிய வண்டியில் ஏறிக்கொண்டார்.

அப்போது துப்பாக்கியுடன் மூன்றுஜவான்கள் வண்டிக்கு முன்னும் வேறு மூன்று பேர் வண்டிக்குப் பின்னுமாக நிற்க, குதிரைமேல் ஏறியிருந்தவர்களில் ஒருவர் "மார்ச்" என்று சொல்லவே, வண்டியுடன் ஜவான்கள் நடக்கவும் இரு ஆபீசர் குதிரைமேல் ஏறினபிரகாரம் சவாரி செய்யவும் தொடங்கினார்கள்.

அந்நேரத்தில் பண்டிதர் தம் மனதில் பல காரியங்களை நினைத்துக்கொண்டு போனார். சில விசை, தான் மீனாட்சி வீட்டுக்குப் போனதைப் போலீசார் எப்படியோ அறிந்துகொண்டு, மரணைக்கினை விதிக்கப்பட்ட கைதி தப்பித்துக்கொள்ள தான்கொடுத்த ஆலோசனையும்,குமுக்கும், அவனுக்குத் தான் உதவிசெய்ததும் மீதச சட்டத்துக்கு விரோதமான குற்றமென்று தன்னைப் பிடித்து அரெஸ்டு செய்கிறார்களோ வென்றும், ஆயினும் இது பெருந் தப்பிதமாகாதே; இந்தப் போலீஸ் டெப்டி சூப்பரின்டெண்டு தன்னைப் பழிவாங்கும்படி வெகுநாளாய் எண்ணியிருந்ததை இப்போது நிறைவேற்றுகிறானோ வென்றும், அப்படியானால் தான் ஐகோர்ட்டு வக்கீல்களை வரவழைத்து வழக்காடினால் இதற்குத் தப்பித்துக்கொள்ளலாமென்றும் தனக்குள் சிந்திக்கலானார்.

அன்றியும் அவர் தனக்குள் யோசித்துக் கொண்டதாவது: "நான் செய்தது எப்படி அவ்வளவு பெரிய தப்பிதமாகும்? இது கிறிமினல் ஆக்டைச் சேர்ந்ததா? வருகிறது வரட்டும். நான் மனச்சாக்ஷிக்கு விரோதமான அற்பக்காரியமும் செய்யவில்லை. அப்படி யிருக்க ஸ்வாமி யென்னை கை விடுவாரா? கர்த்தர் தயையுள்ளவர்! என்னைக் கடாக்ஷித்துக் காப்பாற்றி யிரக்ஷிப்பார்" என்று இவை முதலியவற்றைத் தன் மனதில் எண்ணிக்கொண்டு வண்டியில் போகும்போது, வழியின் இருபுறத்திலும் ஜனங்கள் கூட்டமாய் நின்று கொண்டு துக்கத்துடன் தன்னை யெட்டி யெட்டி பார்ப்பதையும், "ஐயோ! அவர் அப்பேர்ப்பட்ட பாதகத்தை செய்யத்தக்கவரா? க்ஷாத்திரியத்தின் மேல் இது நடந்திருக்குமே அன்றி, அவர் அதற்கு

உட்பட்டிருக்கமாட்டார்” என்னும் பேச்சு பண்டிதர் காதில் விழுந்தபோதும் அவருடைய இருதயம் கலக்கத்துக்கும் துக்கத்துக்கும் உள்ளானது.

பண்டிதருடைய ஸ்நேகிதரும் அறிமுகமானவர்களும் அவரைக் கண்டு, சிலர் சலாம்செய்தார்கள்; வேறு சிலர் துக்கத்துடன் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

அவருடைய மாணுக்கரும் ஆங்காங்கு கும்பலில் நின்றுகொண்டு, கண்ணீருடன் அவருக்குத் தண்டம் சமர்ப்பித்தார்கள். மாணுக்கரில் ஒருவன் பண்டிதருடன் பேசும்படி வண்டியை நெருங்கினபோது, கையில் பிடித்த வாளைக் காட்டி “அப்பாலே போ” வென்ருர் குதிரை மேலிருந்த போலீஸ் ஆபீசர்.

இப்படி ஜனக்கூட்டத்தில் சிலர் தமக்குக் காட்டும் அனுதாபக் குறியையும் துக்க அடையாளத்தையும், சிலர் கண்ணீர் சிந்துவதையும், ஆயுதபாணிகளான போலீசாரையுங் கண்ட பண்டிதருக்கு அதிக கலக்கமும் குழப்பமுமுண்டாகி, பயமும் திகிலும் அதிகரித்து, மனஞ்சோர்ந்து, தைரியங்குன்றி, நாலா எண்ணங்கள் மனதில் எண்ணிக்கொண்டு இருக்கையில், வண்டி அவருடைய வீடுவந்து சேர்ந்தவுடனே, “ஹால்ட்” என்று போலீஸ் ஆபீசர் மொழியவே, வண்டி நின்றது. போலீசாருடைய கட்டளைப்படி பண்டிதர் வண்டியைவிட்டு இறங்கினுர். இறங்கினவுடனே, வீட்டுவாசலில் உள்ள பியூனும், வேலைக்காரர், தோட்டக்காரர் முதலியவர்களும் கண்ணுக்குத் தென்படாதபடியால் பண்டிதருடைய துக்கமும் கலக்கமும் ஆயிரமடங்கு அதிகரித்தது.

போலீஸ் ஆபீசருடைய கட்டளைப்படி ஆயுதபாணிகளான ஜவான்களால் அவர் சூழப்பட்டு, அவருடைய மனைவியிருந்த அறைக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார்.

பண்டிதர் அந்த அறைக்குள்போய் சேர்ந்தவுடனே, இருளில் பூதத்தைக்கண்டு பயந்தவனைப்போல திடுக்கிட்டு, கைகால் நடுங்கி, வாய் பேசவராமல் சற்று நேரம் நின்று, “ஆ! ருக்மணி! நீதானே இங்கே கிடப்பது? ஆ! ருக்மணி! என் கண்மணி! உன்னை யிப்படி. குரூரமாய் வதைத்தவனுர்? உன் இரத்தத்தைச் சிந்தி கொலைசெய்த பாதகனுர்? எந்தச் சண்டாளப் பாவி உன்னை அண்டத் துணிந்தான்?” என்று உயிர் அற்று கட்டிலில் கிடக்கும் ருக்மணியின் பிரேதத்தின் மீது விழுந்து மகா துக்கத்துயரத்துடன் கண்ணீர் சொறிந்து அழத்தொடங்கினுர் பண்டிதர். அவர் அடைந்த துக்கப்பிரலாபத்தை நாவாலுரைக்குந் தன்மை யல்லவாகையால், இதை வாசிப்பவர்களே உணர்ந்து கொள்ளலாம் பண்டிதருடைய சோகமும், துக்கமும், வியாகுலமும், விம்மலும், பிரலாபமும் எப்பேர்ப்பட்டதா யிருக்குமென்று.

தேவதாஸ் பண்டிதருடைய மனைவியாகிய ருக்மணி சயனித்திருந்த மஞ்சத்திலேயே அவள் கத்தியால், கழுத்திலும் இருதயத்திலும் முகத்திலும் குத்தப்பட்டு மரித்திருந்தாள்! ஒரு கையால் தன்னைக் கொலைசெய்தவனைத் தள்ளித் தடுத்தது போல் நீட்டப்பட்டு, அதிலுங் காயம் காணப்பட்டது. மற்றொரு கையைத் தன் மார்பில்பட்ட காயத்தின் நோவைப் பொறுக்கமாட்டாதவளாய் நெஞ்சின்மேல் வைத்துக்கொண்டிருந்தாள்.

ருக்மணியின் கண்களும் வாயும் திறந்தபிரகார மிருந்தபடியால் பார்வைக்குப் பயங்கரமாயிருந்தது! அவளுடைய காயங்களிலிருந்து இரத்தம் கொஞ்சங் கொஞ்சமாக சிந்தி உறைந்திருந்தது. எறும்பும் ஈயும் கீழே உறைந்திருக்கும் இரத்தத்தை மொய்த்துக் கொண்டிருந்தன.

அவள் படுத்திருந்த மஞ்சமும் அவள் வஸ்திரமும் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. சுவற்றிலும் இரத்தம் துளித்துளியாய்த் தெறிபட்டிருந்தது. அங்கங்கே ரூபாயும் மொகராவும் விழுந்து கிடந்தன. தங்களுருக்குப் போகும்படி முஸ்திப்பு செய்யப்பட்டிருந்த அநேக பெட்டிகள் கட்டினகட்டு அவிழ்க்கப்படாமல் அங்கேயே இருந்தன. (தொடரும்.)

பேச்சல்ல, கிரியைதான் அவசியம். சாதாரணமாய் அதிக பேச்சுக்காரர்கள், கிரியையில் பூச்சியமாய்த்தான் இருப்பார்கள். ஓர் நற்கிரியை செய்து முடிக்க உறுதியா யிருப்பவர்கள், ஒன்றும் பேசாமல் அதைச் செய்து முடிப்பார்கள். ஆனுல் அக்கிரியை செய்து முடித்த பின்பு; அதிகப் பேச்சுக்கார ஓட்டைப் பானைகள் கிளம்பி, அவ் வேலை செய்த வகையில் குற்றங் குறை கண்டுபிடிக்க வருவார்கள்.

சேசுவின் திரு இருதயத்துக்கு விசேஷ வகையாய்த் தங்களை வசீகரஞ்செய்து பத்தியாயிருப்பவர்களில் ஒருவரும் கெட்டுப்போகமாட்டார்களென்பது எனது உறுதியான நம்பிக்கை.

(முத். மார்கரீத் மரியம்மாள்.)

HOW TO RAISE OUR STATUS?
நாம் முன்னேறுவ தெப்படி?

ஆறும் வியாசம்.

Catholic Philanthropic Society.
கத்தோலிக்கு பரோபகார சங்கம்.

அருமையுடைத் தென்று சாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

இன்னுமை யின்பமெனக் கொளினுகுந்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு. (திருக்குறள்.)

அதிஷ்ட தரித்திரத்தைப் போக்கிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய்த் தனவந்தர்களாக அநேகர் கையாடி காரியசித்தி யடைந்த கைகண்ட முறையை இச்சஞ்சிகையில் காட்டுவதாக கடந்த வியாசத்தில் கண்டிருந்தது. ஆனுல் இதனிடையில் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல சென்னை கத்தோலிக்கு பரோபகார சங்கத்திற் கடுத்த துண்டு பத்திரிகை யொன்று என் கைக்குக்கிட்ட, சென்னையி லிருக்கும், நமது குல சிரேஷ்டர்கள் இதுவரைக்கும் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்த தூக்கத்தை யொழித்து, அல்லது நமது குல பொதுவிருத்தியை நாடி, அவர்கள் என்ன செய்கிருர்கள் பார்க்கலாம், இவர்கள் என்ன செய்கிருர்கள் கேட்கலாம், என்னும் வீண் ஆவலையும் வியர்த்த பேச்சையுந் தள்ளி, “God helps those who help themselves.” எக்காரியத்தையாவது முடிக்க யார் யார் சுய முயற்சி யெடுத்துக்கொள்ளுகிருர்களோ அவர்களுக்குக் கடவுள் கட்டாயம் உதவி செய்கிருர் என்னும் ஆவேசம் விளைவிக்கும் ஆங்கிலேயப் பழமொழி யடங்கிய விருதைக் கையிலேந்தி, இடுப்பை வரிந்து கட்டிக்கொண்டு, குரு சிரேஷ்டர்களின் ஆசீரைப் பெற்று ஷெ சங்க மொன்றை ஸ்தாபித்து அதன் மூலமாய்த் தாங்களே தங்கள் குலத்தாருக்கு நன்மை செய்ய முன் வந்திருப்பதைப் பார்க்கவே, பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல், நான் இனி யில்லாத சந்தோஷங்கொண்டு இச்சங்கத்தின் கிருத்தியங்கள் ஆரம்ப சூரத்துவமாய் முடியாமல் நமது குலத்திற்கு அதி நன்மை விளைவிக்க வேண்டியதென்றும், அதன் பயனாக சத்தியகத்தோலிக்கு திருச்சபைக்குப் பெரிதும் பெருமை யுண்டாக வேண்டுமென்றும் ஆசிக்கின்றேன்.

இச்சங்கத்திற்கு மூன்று உட்பிரிவுகளுண்டு.

1. Social Section.

நமது குல விருத்திக்கு விருத்தமாயுள்ள அளவு கடந்த அந்தஸ்து வித்தியாசம் பாராட்டுதலைத் தள்ளி, உயர்ந்தோர் தாழ்ந்தோர் மட்டில் பரிதாபமும், பிறசிநேகமுங்கொண்டு கூடியமட்டும் அவர்களுக்குச் சகாய புருஷர்களா யிருக்கவும், தாழ்ந்தோர் உயர்ந்தோரைக் கண்டு காய்மகாரங் கொள்ளாமல் அவர்களுடைய முன் மாதிரிகையைக் கண்டு தங்கள் நிலைமையைச் சீர்படுத்திக்கொள்ளவும், அனைவரும் ஒரே கடவுளின் மக்கள், ஒரே அரசரின் பிரஜைகள், ஒரே குலத்தின் அங்கங்கள் என்னும் பொது உரிமை பாராட்ட ஏதுவாகும்படியாகச் சகலரும் ஒரு இடத்தில் இடைக்கிடை கூடி காலட்சேபங்கள் நடத்துவார்கள். விவாக காலங்களில் வெறிபிடித்தவர்களைப்போல் முன் பின் யோசியாமல் கடனேடு கடனுச்சுது, வீட்டின்மேல் ஒரு சீட்டாச்சுது, என்று கடன் பட்டு வீண் பெருமைக்காக வாரி வாரிச் செலவழித்துப் பிறகு இஞ்சி தின்ற குரங்குகளைப்போல் விழிக்காமல், தங்கள் தங்கள் உலக நிலைமைக்கும் சக்திக்கும் ஏற்றபடி காரியத்தை முடிக்க ஜனங்கள் தூண்டப் படுவார்கள்; அக்கியான சிற்றின்ப நாடகங்களுக்குப் போய் நமது பாலியர்கள் கெட்டுப்போவதைத் தடுக்க, சத்தியவேத சரித்திரங்களை நாடகங்களாய் நடிப்பார்கள்.

2. Literary Section.

ஒரு பொது விடத்தில் இங்கிலீஷ் தமிழ் கத்தோலிக்கு மற்றும் நல்ல ஆசிரியர்களால் பிரசுரிக்கப்பட்டுவரும் புஸ்தகங்கள், பத்திரிகைகள் அடங்கப்பெற்ற வாசகக் கூடமொன்று ஸ்தாபிப்பது. சுகாதாரம், சௌக்கியம், செட்டிமை, மதுவிலக்கு, சகோதரத்துவம், பிறசிநேகம், ஐக்கியம் மற்றும் இதைப்போலொத்த விஷயங்களைப்பற்றி உபந்நியாசங்கள் செய்

வது, அல்லது துண்டு பத்திரிகைகள் அச்சிட்டு ஜனங்களுக்குக் கொடுப்பது.

3. Endowment Section.

திக்கற்ற அல்லது எளிய பிள்ளைகளுக்கும், தங்கள் பத்தாக்களை யிழந்த விதவைகளுக்கும் பயன்படும்படியாகக் கைத்தொழில் சாலைகள் ஸ்தாபிப்பது.

இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, ஐந்தே மாதங்கள் ஆயினும், இதற்குள் 2 டிரஸ்டீக்களும், 18-லைப்மெம்பர்களும், 221-மெம்பர்களும் சேர்ந்திருப்பதுடன், 1916-ம் ஹூ நவம்பர்மீ வரைக்கும் ரூ. 525 சேகரமானதாகவும் தெரிய வருகிறது.

"தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார், தமையடைந்தோர்-தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல்" என்று சிவப்பிரகாச சுவாமிகள் சொல்லுகிறபடி, தங்கள் பெருமையையும் டாம்பீகத்தையும் பகிரங்கப்படுத்த வன்று, ஆனால் தங்களினும் எளியவர்களுக்குச் சகாயம் செய்வது தான் ஒரு சங்கம் ஸ்தாபிப்பதின் ஏக கருத்து என்பதை இதன் ஸ்தாபகர்கள் உணர்ந்திருப்பது மெத்த திருப்திகரமான விஷயம்.

நமது ஞாபகத்திற்குஎட்டுகிறவரைக்கும் யோசித்துப்பார்த்தால், நமது குலத்தாருள் எத்தனையோ உத்தியோகஸ்தர்கள், சாமார்த்தியர்கள், ஐஸ்வரியவான்கள் அப்போதைக் கப்போது ஒவ்வொரு நகரிலும் தோன்றிவருகிறார்கள். அவர்களால் நமது குலத்திற்கு வரும் நன்மை யாது? சிம்லா அதிமேற்றிராணியார் ஆங்கிலோ இந்தியர் விஷயமாய்ச் சில மாதங்களுக்கு முன் செய்த உபந்நியாசத்தில் சொன்ன வார்த்தைகள் மேற்படியாருக்குச் சரியாய்ப் பொருந்தும். நம்முள் எவ்விதமாயாவது சற்று முன்னுக்கு வந்தவர்கள், புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டதைப்போல ஜாதிவேஷம் போட்டுக்கொண்டு மாய்மாலம் காட்டி கெட்டு நாசமடைந்தார்கள். வேறுசிலர் பணப்பெருமை உத்தியோகப் பெருமை யென்னும் ஆபாச சாகரத்தில் அமிழ்ந்திப்போய் அளவுகடந்த அந்தஸ்து பெருமையைப் பாராட்டி தங்கள் குலத்தார்களோடு, அநேக சமயங்களில் தங்கள் நெருங்கிய பந்துக்களோடு முதலாய் நாயும் பூனையும் போலுமிருந்து ஒழிந்தார்கள். இன்னுஞ் சிலர் அம்பட்டன் குப்பையைக் கிளறினால் எல்லாம் மயிர் மயிராகவே யிருக்கும் என்னும் அனுபவப் பழமொழியை மறந்து, தங்கள் அப்பன்மார் எப்படி யென்பதை நினையாமல், அவன் அப்பன் அப்படி இவன் அப்பன் இப்படி என்று குலம் பேசி இழிவடைந்தார்கள். ஐயோ! அவர்கள் அப்படி யெல்லாம் செய்யாமல் போலி ஜாதிப் பெருமையின் ஈனத்தை யுணர்ந்து ஒற்றுமையைப் பாராட்டிச் சற்றாவது ஒருத்தருக் கொருத்தர் வாக்குச் சகாயமாவது செய்துவந்திருந்தால் நமது நிலைமை இப்போது எவ்வளவோ மேம்பாடுள்ளதாயிருக்கும். நமது குலத்தில் இடைக்கிடை உத்தம புருஷர்கள் தோன்றினாலும் அவர்கள் ஒதுங்கிப்போய் குலத்தை மறுத்து வருகிறபடியால், நமது குலம் தரித்திரர்குலம், மூடர்குலம், ஒழுக்கமற்றவர் குலம் எனப் பொதுவாய் யாவராலும் கருதப்பட்டு வருகிறது. ஜாதியாரால் வெறுக்கப்பட்டு, சொந்தக் குலஸ்தரால் மறுக்கப்பட்டுவரும்போதே, நமது குலத்தில் அப்போதைக்கப்போது ஒவ்வொருவர் தட்டித் தடுமாறி சொந்த முயற்சியால் முன்னுக்கு வருவதை நாம் காணும்போது, சகலருடைய சகாயமும் இருக்கும் பட்சத்தில் இன்னம் எவ்வளவுபேர் அங்ஙனம் வரக்கூடாது. ஆனால் (Better late then never). ஒரு காரியத்தைச் செய்யாமலேயிருப்பதைவிட கொஞ்சநாள் பொறுத்தாவது செய்வது மேல் என்கிறபடி, நமது சென்னை வாசிகள் இப்போதாவது தங்கள் குலத்தை மறக்காமல் தைரியத்துடன் முன்னுக்குவந்து தங்கள் குலத்திற்கு நன்மை புரியவும், அதன் பயனாகத் தங்களுக்கே பெருமை தேடிக்கொள்ளவும் தொடங்கியது நமதுகுல சரித்திரத்தில் ஒரு விசேஷமென்பதற் கையமில்லை. ஒரு ஜாதி ஜனத்தின் தலைவர் சிலரைக்கொண்டு அச்சனத்தின் தன்மையை யறியலாகுமென சாஸ்திரிகள் சொல்வது உண்மையேயாகில், நமது சென்னை கத்தோலிக்கு இந்திய கிறிஸ்துவர்களின் தன்மை அவர்களுக்குத்

தலைவர்களுள் விளங்கி இச்சபையை ஸ்தாபித்த மேதாவிகளின் சாமர்த்தியத்திலும் அனுபவப் பெருமையிலும் விளங்குகின்றது.

இத்தனை சீக்கிரத்தில் இவ்வளவு சுறுசுறுப்பு காட்டத் துவக்கிய இச்சங்கத்தினால் காலம் போகப்போக, அநேக நன்மைகள் விளையக்கூடுமென்பதற் கையமில்லை. ஆனால் மெம்பர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தாக்களைக் கிரமமாய்ச் செலுத்துதலை அவசியம் தலைவர்களுக்கு எவ்வளவு ஊக்கமும் விடாமுயற்சியுந்தான் இருந்தபோதிலும், போதுமான நிதி யில்லாவிடில் எந்த நல்ல காரியத்தையும் தொடங்கி நடத்த முடியாது காகங்கள் ஒன்றுகூடி கா, கா, என்று சில நேரம் கத்திப் பிறகு கலைந்துபோவதுபோல், சங்கத்தாரும் வருஷாந்தரக் கூட்டத்தில் உபந்நியாசங்கள் செய்வார்கள். கூட்ட விவரத்தைப் பத்திரிகைகளில் விவரமாய்க் காட்டுவார்கள். வாய்ப்பேச்சால் பந்தலாய் விடுமா? சர்க்கரை சர்க்கரையென்று ஆயிரம்விசைதான் காயிதத்தின்மேல் எழுதி திருப்பித் திருப்பி நக்கினால் அது தித்திக்குமா? தித்திக்காது நிதிவேண்டும். அல்லாவிடில் இச்சங்கமும், ஏனைய சங்கங்களைப் போல் பலருடைய பரியாசத்திற்கு இலக்காய் முடியும்.

இதை யெழுதும்போது தென் அமெரிக்காவில் பிரேஜில் என்னும் மாகாணத்தில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒருகத்தோலிக்கு சபையின் பிரதிஷ்டை கூட்டத்தில் அந்நகர் மேற்றிராணியார் செய்த உபந்நியாசம் என் ஞாபகத்தில் வருகிறது. அதேதெனில் "உங்கள் சபை வெறும் (representative) பிரதி நிதி சபையல்ல. இது பலருக்கு நன்மை செய்யவேண்டிய சபை. ஆனதால் நன்மை செய்ய வேண்டுமென்னும் உற்சாகத்தினால் தூண்டப்பட்டுத் தன் சீவியகாலத்தில் ஒரேயொரு மாதத்திய வருமானத்தைப் பிணங்காமல் எவனொருவன் சபையின் நிதிக்குத் தானமளிப்பானோ, அப்படிப்பட்டவனை மாத்திரம் சபையின் அங்கமாக ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட உற்சாகமுள்ள சிலரிருந்தால் அநேக காரியங்கள் செய்யக் கூடும். பேருக்கு நூற்றெட்டுப் பேரிருந்து என்ன லாபம்?" என்பதாம். இதை நமது கத்தோலிக்கு இந்திய பரோபகார சங்கத்தார் கொஞ்சம் யோசித்தல் தகுதி.

நமது குலத்தாருள் மேம்பாடுக்கு வந்தவர்கள், உண்மையாகவே குலத்திற்கு நன்மைசெய்ய வேண்டுமென்னும் ஆவலுள்ளவர்கள் மாத்திரம் ஷை சபையில் சேர்ந்து ஒரேயொரு மாதத்திய வருமானத்தைத் தங்களுக்கு அநுகூலமான பகுதித் தொகைகளாகக் கொடுத்தால், வெகு சீக்கிரத்தில் கோரிய காரியம் மாத்திரமன்று, இன்னம் அநேக காரியங்களும் கைகூடும். யாவும் முதன்மையா யிருப்பவர்களின் முன்மாதிரிகையிலேயே யடங்கி யிருக்கிறது பிறகு வெட்கத்திற்கு ஆற்ற மாட்டாமலாவது அநேகர் முன்வருவார்கள்.

இதோடுகூட சங்கத்திற்குச் சேர்ந்த நமது குலஸ்தர்களும் எப்பட்டண நகர்களிலிருந்தாலும் சரி, அவர்களும் சங்கத்தின் நோக்கத்தை நாடி சகாயம் செய்ய வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை, "நல்ல ஆயன்", "மகா விகடதூதன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரித்துவந்தால், திரவியம் சேரும். இப்படிப்பட்ட வேண்டுகோளையும், பொதுவாய்ச் சங்கார்த்தத்தை நாடிய மற்றும் விஷயங்களையும் பிரசுரிக்க மேற்கண்ட பத்திரிகைகளின் கனந்தங்கிய அதிபர்கள் மறுக்கமாட்டார்களென நம்புகிறேன்.

பணத்தினாலாகுங் காரியங்களன்றி உற்சாகமுள்ள முயற்சியாலாகுங் காரியங்களும் அநந்தமுண்டு. உதாரணமாக: ஒவ்வொரு இடத்திலும் மதுவிலக்கு சங்கங்களும் கோ ஆப்பரேட்டிவ் கிரிடிட் சொஸைட்டி என்னும் ஐக்கிய நாணய சங்கங்களும் ஸ்தாபிப்பதுவே.

ஓ கத்தோலிக்கு பரோபகார சங்கமே! நீ எடுத்த விருதுவாக்கியம் எப்படிப்பட்ட ஆவேசத்தை விளைவிக்கும் வாக்கியம்! தென் இந்தியாவின் அஷ்டபாகங்களிலும் பரவியிருக்கும் நமது குலத்தாரனைவரும் உன்னை யொரு அற்புத தீபஸ்தம்பம்போல் பாவிக்கிறார்கள்! நீ உன் சுடரை விடாமல் வீசி, பள்ளம் படுகுழியில் விழுகிறவர்களுக்குத் தெளிவாகவும், திக்கற்றவர்களுக்குத் துணையாகவும்

விளங்குவாயானால், உன்னை ஆசீர்வதிப்பவர்கள் அநேகர். உன் மாதிரிகையைப் பாவித்து நடக்க இருக்கிறவர்கள் அநேகர். உனக்குப் பக்கத் துணையாயிருந்து பாதுகாக்க விரும்புகிறவர்கள் அநேகர்.

உன்னைச் சந்தேகக் கண்களோடு பார்க்கிறவர்களுமுண்டு. நீ எத்தனை நாள் நீளிக்கப்போகிறாய் என்று ஏளனம் செய்கிறவர்களுமுண்டு. "உன்னாலென்ன ஆகும்! இந்தமாதிரி எத்தனையோ பார்த்தாச்சு" என்று சொல்லுகிறவர்களு முண்டு. இதை நீ யறிந்து உரோஷத்துடன் கொண்ட கருத்தை முடித்துவந்தால், ஒரு காலம் வரும், அக்காலம் தப்பாமல் வரும், அக்காலம் பெரிய காலம். உன் முயற்சிக்கேற்றபடி அக்காலம் சீக்கிரம் வந்தாலும் வரும். அக்காலத்தில் நமது சங்கம் நம்மிலும் மேம்பாடடைந்து இதர இந்திய சங்கங்களோடு சேரவேண்டிவரும். அப்போது பணக்கார பந்துவிடம் எளிய பந்து ஒண்டிப்பிழைக்கச் சேர்வதைப்போல் சேராமல் பூரண பக்குவமடைந்த ஜாதி ஜனமாக சமர்த்துடன் சேர்வோம். யாவராலும் தள்ளப்பட்ட கல்லே கடைசியில் மூலைக் கல்லாச்சுது. ஜனங்க விருத்திக் கடுத்த காரியங்களில் நமது குரலும் அவர்கள் குரலும் ஓரே அதிகாரத்துடன் பின்ன பேதமின்றி ஒத்து ஒலிக்கும். சகலமும் ஐக்கியமாகும். அப்படிப்பட்ட நாள் சீக்கிரம் வரக்கடவதாக. ஏனெனில் "இதிலே அஞ்ஞானியென்றும் யூதனென்றும் இல்லை; விருத்த சேதனமுள்ளவனென்னும் விருத்த சேதனமில்லாதவனென்றும் புறச்சாதியானென்றும், புறதேசத்தானென்றும் இல்லை. அடிமை யென்றும் சுயாதீனன் என்றும் இல்லை. கிறிஸ்து நாதரே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார் (கொலோஸியர் 3–12) யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாச மிராது. ஏனெனில் தம்மை மன்றாடுகிற யாவருக்கும் ஆண்டவர் ஐஸ்வரியச் சம்பன்னமா யிருக்கிறார். (ரோமர். 10–12)

இந்திய கிறீஸ்துவன்.

"நீங்கள் தபஞ் செய்யாதேபோனால் எல்லோரும் ஒருமிக்கக் கெட்டழிந்து போவீர்கள்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[**கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.**]

சங். பு. அ. அந்தோனிநாதர் குருப்பட்டம்.

1916 ஹ டிசம்பர் மீ 26 உ புத்தன் பள்ளி அப்போஸ்தல சபை சந்நியாச மடத்தில், மிக்க சிறப்புடன் நடைபெற்ற குருப்பிரசாதிகளின் பட்டாபிஷேகத்தன்று 11 பேர்கள் திருப்பட்டமாகிய குருப்பட்டம்பெற்று விளங்கினர். அவர்களில் ஒருவர் சென்னை, திருமயிலாப்பூரில் வசித்து காலஞ்சென்ற செந்தமிழ்பாநு புதுவை அடைக்கலநாதம் பிள்ளை அவர்களின் குமாரரும் திருமயிலை சந்தோம் கலாசாலையில் வாசித்து தேறியவரும், திருமயிலை மேற்றிராசனத்தின் அதிகாரத்தால் ஷை புத்தன்பள்ளி மடத்திற்கு அனுப்பிக்கப்பட்டவரு மாகிய சங்கைக்குரிய பு. அ. அந்தோனிநாத சுவாமியார் அவர்கள்.

இவர் சென்ற 7 வருஷ காலமளவும், சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட அந்தஸ்திற்கு உரியவராகும் பொருட்டு இடைவிடாது படித்து அவ்வப்போது நிறைவேறிய பரீட்சைகளில் முதன்மையாக முன்வந்ததினாலேயே குறிக்கப்பட்ட சரியான காலத்திற்குள் குருப்பட்டத்திற்கு அருகராக சர்வேசுரன் திருவுளமாயினா ரென்றெண்ணுகிறேன். அன்றியும், தாம் திருச்சபையாகிய நந்தவனத்தில் நன்கு உழைப்பதற்கு ஆதாரமாயுள்ள அரிய சாதனங்களை ஐயந்திரிபுறக் கற்றுணர்ந்தார் என்பதற்கு அறிகுறியாக அவர் பெற்றுவந்த (Diploma) டிப்லோமா வென்னும் அரிய பத்திரமே சாட்சி பகரா நிற்கின்றது. இவையாவும் நமது மதுரமான சேசுவின் திருவிருதயத்தின் கருணையே யன்றி வேறல்ல. இத்தகைய பாக்கியத்தை சருவேசுரன் அவருக்கு அருள காரணமாயிருந்த நமது சரியாய் வந்திக்கத்தக்க திருமயிலை மேற்றிராணியார் அவர்களுக்கு நமது நவீன குருவும், சுதேச கிறிஸ்துவர்களாகிய நாமனைவரும் அவருக்காக என்றும் வேண்டுதல்புரிய கடமைப் பட்டுள்ளோம். நமது நவீன குருவாகிய அந்தோனி நாதரும் சுவாமியினுடைய தயவால் தமது துறவற வந்தஸ்தில் வழுவாது நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதரின் திருவடியைப் பின்சென்று, நம்மவர்க்காய் மிகுரு வூக்கத்துடன் உழைத்து, சர்வேசுரனுடைய ஞானமந்தைக்கு உரியவர்களாகும் பொருட்டு, அவருக்கு நீடிய ஆயுளையும், போதுமான மனத்திடனையும் கட்டளை யிட்டருளும்படியாக நமது ஜெபத்தில் இடைவிடாது மன்றாடக்கடவோம். நிற்க, சங். அந்தோனி நாத சுவாமியார் அவர்கள் குருப்பட்டம் பெற்ற மறுதினத்திலேயே தமது முதற்பூசைப்பலியை தமது ஞான இருப்பிடத்திலேயே ஒப்புகொடுக்கப் பெற்றார். பின்னர் அங்கு நிறைவேறிய வந்தனை வழிபாடுகளுடன் வெலிங்கடன் என்னும் இடத்திற்குச் சென்று அங்குள்ள அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் பாடல் பூசைசெய்த பின்னர், அவ்விடத்திய சுதேச கிறிஸ்தவர்களால் அன்புடன் அழைக்கப்பெற்று, வந்தனோபசார பத்திரம் வாசிக்க நன்கொடை அளிக்கப்பெற்றார். அங்கிருந்து நீலகிரிக்குச் சென்று அங்குள்ள கிறிஸ்தவ சகோதரர்களால் அன்புடன் உபசரிக்கப்பட்டு கடைசியாய் சென்ற ஜனவரி மீ 4 உ காலையில் தமது உறைவிடமாகிய திருமயிலாப்பூரை யடைந்து, நமது மேற்றிராணியார் அவர்களின் அனுமதியோடு அன்று காலை 8 மணிக்கு அர்ச். தோமையார் மேற்றிராசனக் கோவிலில் திருப்பூசைப்பலியிட்டனர். அந்நேரமாயும் 150 பேர் வரையில் திருப்பூசை கண்டு, 50 பேர் சற்பிரசாதம் உட்கொண்டு, சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தினார்கள். பரிசுத்த பூசை முடிந்தவுடன் அனைவரும் நவீன குருவின் திருக்கர முத்தமிட்டனர். அன்றுமுதல் நமது அந்தோனிநாத சுவாமிகள், மயிலை மேற்றிராசனத்தைச்சேர்ந்த அநாத பிள்ளைகளின் ஆசிரமத்தில் அமர்ந்திருக்கின்றனர். இதனை வாசிக்கும் அன்பர்கள் அனைவரும் அவருடைய துறவற அந்தஸ்தில் வழுவாது நிலைநிற்குமாறு வேண்டுதல் புரியவேண்டுகின்றனன்.

இப்படிக்கு,
ஷை குருவின் ஞானத் தந்தையாகிய
கோ. மாரியான்.
மயிலைவாசி.

தூத்துக்குடி கனம்பொருந்திய பீற்றர் அலோசியூஸ் சுவாமிகள் திருமயிலைக்கு அழைக்கப்படுகிறார்.

இந்த நல்ல குருவானவர் இருவருடங்களுக்கு முன் கண்டிமா நகரத்தில் குருப்பட்டம் பெற்றதும் தூத்துக்குடி திவ்ய பனிமய மாதா கோவில் பங்கு விசாரணைத் துணைக்குருவாக வந்தனர். இவர்களது சுகிர்த நடையுடை பாவனைகள் கண்டிமாநகர் சன்னியாச மடத்தின் பிரக்யாதிகளுக்கு முதுகெலும்புபோல் இருந்தன. அர்ச். அடைக்கலமாதாவின் கன்னியாஸ்திரி மடத்தைப் பூராவும் பொறுப்பெடுத்துப் பார்த்துவரும் கனம் பிந்தோ சுவாமிகள் அடிக்கடி புன்னைக்காயல், வைப்பாறு முதலிய இடங்களுக்குப் போயிருந்த காலங்களிலெல்லாம் கனம் பொருந்திய பீற்றர் சுவாமிகளே பங்கு விசாரணைப் பிரதமகுருவாக இருந்து விசாரணையை வெகு திறமையாக நடாத்தி வந்தனர். கால வித்தியாசத்தால் அநேக வருடங்களாக மயிலாப்பூர் மிஷன் கோவிலில் இல்லாமற்போன திவ்ய சற்பிரசாதத் திருவிழா, கனம் பீற்றர் சுவாமிகள் காலத்தில், முந்தின காலங்களில் ஒருநாளும் நடவாத அதி விசேஷ சிறப்புடன் நடந்தது.

பூர்வம், அதிசங்கைக்குரிய A. J. M. கர்வாலோ சிரேஷ்ட சுவாமிகளுக்கும், அப்புறம் கனம் மசிலான் சுவாமிகளுக்கும் பின்னால் இங்கு மயிலாப்பூர் மிஷனுக்குத் தமிழ்ப் பாஷையில் தேர்ந்த நிபுணராக வந்த குருவானவர் இவர் ஒருவரே. "இரும்போ கல்லோ வல்லுருக்கோ என்ன இருந்த மனங்களையும் கரும்போ தேனோ எனுமொழியால் கரைந்து உருகப்பண்ணிடுவான்" என்னும் பூர்வ செய்யுளுக்கு இவ்வுத்தம தேசிகர் பொருந்திய இலக்கியமாயிருந்தார். தமிழில் தமது விஸ்தீரணத் தேர்ச்சியால் வேத விஷயத்தை மிகவும் விரிவாக விளக்கிக்காட்டுவதில் பூரண பாண்டித்தியமுடைய இவர் வைதீக நூல்களையும் ஐயந்திரிபறக் கற்ற ஆழ்ந்த ஆராய்ச்சியுடையவர் என்பதற்கு ஐயமில்லை.

உலகமுழுதும் கல்வி கல்வியென அபயமிட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்திலுங்கூட, இவ்வூர் ஓர்னெலாஸ் கலாசாலை தன் தலை கிளப்பாமல் தன் தூக்கம் தெளியாமல் இருந்து வந்ததைக் கண்ட, கனம். பீற்றர் சுவாமிகள் தமது வேலை யெல்லாம் மேற்படி பாடசாலையை முக்கியப்படுத்துவதே யெனக் கருதும் மேரையாய்த் தமது அவகாசத்தின் பிரதம பாகத்தை மேற்படி பள்ளிக்கூடத்தின் போதனா முறையில் செலவழித்து வந்தார். தோற்றத்தில் அர்ச். ஞானப்பிரகாசியாரைப்போல விளங்கிவந்த இவ்வந்தண சிரோமணி வாலிபர் முதல் வயோதிபரூகக் கடந்த பல திறத்தினருக்கும் கற்பிலக்கணத்திற்கு ஓர் மேல்வரிச்சட்டமாகவும் முன்

மாதிரிகையாகவும் இருந்தனர். ஓயாத குதர்க்கங்களாலும் ஒழியாத சச்சரவுகளினாலும் அல்லோகல்லோலப்பட்டுக்கொண்டிருந்த அநேக குடும்பங்கள் சுவாமிகள் காலத்தில்தான் சமாதானப் பிரபை தும்மிப் பிரகாசிக்கின்றன.

ஏழைகளைப் பரிபாலிப்பதிலும் நோயாளிகளைத் தரிசித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதிலும் இவருக்கு இணை யொருவருண்டோவென பேசிக்கொள்ளக்கூடிய விதமாய் எப்போது பார்த்தாலும் ஏழைகளும் நோயாளிகளும் இவரைச் சூழ்ந்து நிற்கப் பார்க்கலாம். அவஸ்தை பூசுதல், பாவசங்கீர்த்தனம், நற்கருணை கேட்டனுப்பும் பிணியாளர் வீட்டுக்கு இத்தயாள தேசிகர் ஓடிப்போவதைப் பார்த்தவர் உண்டேயொழிய நடந்துபோகப் பார்த்தவரில்லை. தள்ளாத நிலைமையி லிருக்கும் கனம். பிந்தோ சுவாமிகளுக்குச் சரியான வலது கரமாய் நின்று உழைத்துவந்த கனம் பீற்றர் சுவாமிகள் நிகழ் மாதம் 18௳ காலை திருமயிலைக்குப் பயணமாயினர். இது கண்ட பலர் திடுக்கிட்டார்கள். பலர் பெருமூச்சுவிட்டார்கள். சரியாய்ச் சொல்லவேண்டுமானால் எல்லோருமே அழுதார்கள்.

ஆம், நிகழ்மாதம் 17௳ இங்கு கிறீஸ்துவர்களெல்லோரும் ஒருங்குகூடித் தங்கள் பிரிவுபசாரத்தை வழங்கினார்கள். தங்கள் எல்லோரையும் ஞாபகத்தில் வைக்கக்கேட்டு, வெண்பொன்னாலாய பூசைப் பாத்திரங்களைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார்கள். கிறிஸ்துவர்கள் பிரிவுபசார மொழிகளுக்கு ஏற்ற பதில் சொல்லுவதற்கு கனம். சுவாமிகளுக்கு நாவெழவில்லை. மக்கள் மேல் கொண்ட அன்பின் பெருக்கினால் தந்தைக்குக் கண்ணீர் தாரை தாரையாக ஓடிற்று. ஆயினும் நிலைமையைச் சுமார்படுத்திக்கொண்டு கொஞ்சத்தூரம் பேசினார்கள். அத்தனையும் அமுதமாகவே யிருந்தது. கனம். பீற்றர் சுவாமிகளே இனிப் பங்கு விசாரணைப் பிரதம குருவானவராக வரவேணுமென்று ஜனங்கள் எல்லோரும் ஆசிக்கிறார்கள்.

சுவாமிகளுக்குப் பல்லாண்டு கூறுகிறோம்.

18—1—17. M. P. Mascarenhas.

சகுன சாஸ்திரமும் கனவும்.

(முன் தொடர்ச்சி.)

இவ்வளவுதூரம் சகுன சாஸ்திரத்தைப் பற்றிப் பேசியவன் கனாவைப்பற்றிப் பேசாமல் கம்மென்று கம்பி நீட்டப் பார்க்கிறானே யென்று சிலர் சொல்லலாம். முதல் ஜாமத்தில் காணும் கனவுகளுக்கு இரண்டு வருஷத்துக்குள்ளும், இரண்டாம் மூன்றாம் ஜாமத்துக்குள் காணும் கனவுகளுக்கு, இரண்டொரு மாதத்துக்குள்ளும் (கூடிய சீக்கிரத்தில்) அவைகளின் பலன்களையறிந்துகொள்ளலாமென்றும், பகலில் காணும் கனவுக்குப் பலனில்லை என்றும் கனவு சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதன் உண்மையையு மறிய 1911-ம் வருஷக் கடைசியில் எனக்குள்ள வேலையுடன் இதையும் கவனித்து வந்தேன். நாளதுபரியந்தம் நான் கண்ட கனவுகளை உள்ளது உள்ளபடியே உடனேக்குடனே குறித்து வைத்தவை இதுவரையில் மொத்தம் 20. இவைகளில் முதல்ஜாமத்தில் கண்டவை, 12. மீதி இரண்டாம் ஜாமத்தில் கண்டவை. அவைகளின் பலன், பலனாகத்தான் முடிந்தது. அண்டப்பொய்யிலும் வண்டப்பொய். எப்பளாங்கிளாகிய நம்மை ஏமாற்ற எழுதிவைத்து வயிற்றை வளர்த்து வருகிறவர்கள் பேச்சை நம்பி ஆசைகொண்டு மோசம்போகிறோம். 1911ம் ௵ பெப்ருவரி மாதம் நல்லாயன் 28ம் பக்கத்திலிருக்கும் கனா (Dream) என்ற விஷயத்தைக் கண்டால், கனவு எப்படி எப்போது உண்டாகிறது என்பதை எல்லோரு மேற்றுக்கொள்வீர்கள்.

காரியம் இப்படியிருக்க, கனவு, சகுன சாஸ்திர முதலியவற்றில் பற்றுதலுள்ளவர்கள் தாங்கள் எதிர்பார்த்திருந்தவைகளுக்கு விரோதமாக அவைகள் முடிந்தனவென்று தெரிந்துகொண்டிருப்பார்கள். "கசடறக்கல் கற்றபடி நில்" என்ற பாட்டின் கடைசி வாக்கியத்தை மறக்கவேண்டாம். கத்தோலிக்கருக்கு இது அழகல்ல. அமல தேவனருளிய ஐயிரு கற்பனைகளின் ஆதிக் கற்பனைக்கு முற்றிலும் சகுன சாஸ்திரம் முதலியவைகள் விரோதமானவைகளல்லவா? தயையின் காலமாதலால் தணடிக்காமலிருக்கிறார் சர்வேசுரன். "அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்" என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இவ்வழக்கத்தை இனிமேலாகிலும் விட்டுவிட்டு கடவுள் சித்தப்படி நடக்கக் காத்திருங்கள்.

P. Arokiam.

[நமக் கெட்டி யிருக்கும் இன்னுமற்ற கடிதங்களும் வியாசங்களும் இம்மாசப் பத்திரிகையில் இடமில்லாக் குறையினால் பிரசுரிக்கப்படவில்லை. ப.—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

வத்திக்கான் மாளிகை.—பரிசுத்த பாப்பானவரின் இருப்பிடமான இம்மாளிகையில் பதினோராயிரம் அறைகளுண்டு.

உலாந்தாக்காரர்.—இவர்கள் சுருட்டுப் பிடிப்பதிலே உலகத்திலுள்ளவர்களெல்லோரையு மிஞ்சினவர்களாவார்கள்.

ஓர் பெரிய மரம்.—கலிபோர்னியாவில் ஓர் மர முண்டு. அது 372 அடி உயரமும் 90 அடி சுற்றளவு முள்ளது. அது மூவாயிரம் நாலாயிரம் வருஷத்து மரமென்று சொல்லப்படுகிறது.

அச்சியந்திரசாலை.—முதன் முதல் இந்தியாவில் போர்த்துகீஸிய சேசுசபையாரால் 1556-ம் ஆண்டில் ஓர் அச்சியந்திரசாலை ஸ்தாபிக்கப்பட்டதென்று தெரியவருகிறது.

தும்மல்.—பலமாய்த் தும்முகிறவர்கள் வலுவான தேக முடையவர்கள். மெலுக்கான தேக முடையவர்கள் அருமையாய்த் தும்முவார்கள். மூக்குக்குங்கீழ் உள்ள மேல் உதட்டைப் பிசைவதினால் தும்மலை நிறுத்திப்போடலாமாம்.

தபாற்காரர்.—ஆப்பிரிக்காவிலுள்ள கேப் மாகாணத்தில் தபாற் கொண்டுபோவதற்காக 15 ஒட்டைகள் அமர்த்தப்பட்டிருக்கின்றன. இவ் வொட்டைகள் வனாந்தரங்களைக் கடந்து அந்தந்த நாளிலே குறித்த நேரத்தில் தபாலைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனவாம்.

கோவிலுள்ள கப்பல்கள்.—கிரேக் அரசருக்காக ஓரு கம்பெனியார் கப்பல் செய்து கொடுத்தார்கள். அக்கப்பல் ஒவ்வொன்றிலும், ஓர் கோவில் அமைக்கப்பெற்று அதில் பீடமும் பிரசங்கத் தொட்டியு மிருப்பதுடன் அதன் சுவர்களில் சுரூபங்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இராசாளி.—இப்பறவையானது மணி ஒன்றுக்கு 100 மைல் பறந்து செல்லுமாம். என்னே இப்பறவையின் வேகம்! மேல் நாட்டில் ஓடும் ரயில் வண்டியின் வேகத்தை விட இப்பறவையின் வேகம் அதிகமா யிருக்கிறது; அவ் வண்டிகள் மணி ஒன்றுக்கு 60, 70 மைலுக் கதிகமாய் ஓடுவதில்லையாம்.

ஒரு கன்னியாஸ்திரிக்கு நன்கொடை.—பிராஞ்சு தேசத்துக்குச் சொந்தமான மடகாஸ்கார் தீவில் பெண்கல்வி அபிவிர்த்திக்காக உழைத்துவருகிற ஸெமிட் என்கிற குளூனி சூசையப்பர் கன்னியர்களின் சிரேஷ்ட தாயாருக்கு பிராஞ்சு கல்விச் சங்கமானது ரூ. 7,000 வெகுமதியளித்திருக்கிறது.

உலகத்திற் பேசப்படும் பாஷைகள் எத்தனை?—3,424 பாஷைகளென கணக்கெடுத்திருக்கிறார்கள். அமெரிக்காவில் 1,624 பாஷைகளென்றும், ஆசியாவில் 937 என்றும், ஐரோப்பாவில் 557 என்றும், ஆபிரிக்காவில் 262 என்றும் சொல்லப்படுகிறது. இங்கிலீஷ் பாஷை மாத்திரம் 15 கோடி ஜனங்களாற் பேசப்படுகிறது. இப்பாஷையிலுள்ள சொற்கள் ஆறு லட்சமாம்.

தீவான் பகதூர் ராஜகோபா லாச்சாரியார்.—மேன்மை தங்கிய நம் மாகாண கவர்னரவர்களின் நிர்வாக சபையில் மெம்பராக விருந்து வருகிற கனம். சர். சிவசாமி அய்யர் அவர்கள் தம் ஸ்தானத்தை விட்டு இம்மாதக் கடைசியில் விலகுகிறார். இவருக்குப் பதிலாக, இப்போது கவர்ன்மெண்டு நியாய இலாகா காரியதரிசியா யிருந்துவரும் தீவான் பகதூர் இராஜகோபாலாச்சாரியார் ஷை ஸ்தானத்திற்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறாரெனத் தெரியவருகிறது.

ஜெர்மனியருடைய நிஷ்டூரம்.—பெல்ஜியத்திலுள்ள ஜெர்மனியர், வேலை செய்யத்திராணியுள்ள ஒவ்வொரு பெல்ஜியரும் மூன்று வருடம் தங்களுக்குங் கீழ் வேலை செய்ய ஒப்பந்தஞ்செய்து கொடுக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யத் தவறினால் தங்கள் தேசத்துக்கனுப்பப்பட்டு போர் முனையில் அரண்குழி வெட்டவும், ரஸ்தாக்கள் போடவும், இன்னும் இவைபோன்ற கஷ்டவேலைகள் செய்யவும் கட்டாயப்படுத்தப்படுவார்களென்று ஓர் சட்டம் பிறப்பித்திருக்கிறார்களாம்.

போலாந்து.—சென்றவருடம் அர்ச். பாப்பானவருடைய வேண்டுகோளுக்கிணங்கி, போலாந்து தேசத்து யுத்தநிவாரண நிதிக்காக உலகமடங்கிலுமுள்ள கத்தோலிக்கு மேற்றிராசனங்களில் பணம் வசூலிக்கப்பட்டதென்பது நாமறிந்தவிஷயம். இப்படியாகச் சேர்ந்த பணத்தின் தொகை ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய். இத்தொகையை நமது பரிசுத்த பிதா யுத்தத்தால் நெருக்கிடைப்படும் போலாந்து தேசத்தாருக்கு அனுப்பியிருக்கிறார்.

ஆஸ்திரியா சக்கரவர்த்தினி.—ஆஸ்திரியா தேசத்துப் புது சக்கரவர்த்தியின் பாரியாள் ஒரு நல்ல பிராஞ்சிய கத்தோலிக்கு மேன் குலத்தைச் சேர்ந்தவர்கள். இச்சக்கரவர்த்தினியின் இரு சகோதரிகள், இங்கிலாந்திற் கருகிலுள்ள வைட் தீவில், அர்ச். செசிலியா மடத்தின் கன்னியர்கள். சக்கரவர்த்தினியும் தம் இளம்பிராயத்தில் மேற்படி மடத்திலேயே தம் சகோதரிகளுடன் இருந்து வந்தார்கள். தாம் ஆஸ்திரியா தேசத்தின் சக்கரவர்த்தியின் மனைவியா யிருந்தபோதிலும், தம் தமக்கைகளின் பதவியைநினைத்துத் தமக்கு அப்படிப்பட்ட பாக்கியமான பதவி கிடைக்கவில்லையே யென்று விசனப்பட்டு வருகிறார்களாம். இச் சக்கரவர்த்தினியினுடைய சனுகால் கத்தோலிக் வேதமானது ஆஸ்திரியா தேசத்தில் மேன்மேலும் வர்த்திக்குமென்று நாம் நம்பியுள்ளோம்.

இரு சாப்பாட்டு ராமன்கள்.-ஓர் பங்கு விசாரணை ஏழைகளேயும் அனாத பிள்ளைகளேயும் ஆதரிப்பதற்காக நிதி சேகரிக்கும் பொருட்டு ஒரு மீட்டிங் கூடினது. மீட்டிங் முடிந்த பிறகு சிற்றுண்டி பரிமாறப்பட்டது. சிற்றுண்டி சாப்பிட்டவர்களில் இரு வாலிபர் தங்கள் வயிறு கொள்ள ரொட்டி, பிஸ்கோத், தித்திப்பு, வெண்ணெய், கேக் முதலிய பண்டங்களேயும் 4, 5 கோப்பை தேநீரையும் கேட்டு வாங்கிச் சாப்பிட்டதுமன்றி, திருட்டுத்தனமாயு மெடுத்துச் சாப்பிட்ட பிறகு, ஒருவன் எழுந்து சபையாரை நோக்கி "மீட்டிங் கூடும்போதெல்லாம் இவ்வித சிற்றுண்டிகள் பரிமாறப்பட வேண்டும்" என்று பிரேரேபிக்க, மற்றவன் "அப்படிச் செய்வது எல்லோருக்கும் சம்மதமா யிருக்கு" மென்று ஆமோதித்தானும். ஆமாம்! நிதி சேர்க்கப்படுவது சிற்றுண்டி செலவுக்குத்தான் போலும்!!

வெற்றிலை.—இதன் சாற்றால் காணுக்கடி, வயிற்றுவலி, ஜலதோஷம், சீதளம், சன்னி, வயிற்றுப்பிசம், சுரம், கபம் முதலிய அநேக நோய்கள் நீங்கும். மிளகும் கறியுப்புஞ் சேர்த்து விஷங்களுக்கு நசியமிட்டாலும் அல்லது கலிக்கமிட்டாலும் விஷங்கள் நீங்கும். இவ்விலையை வாட்டி மார்பில்வைத்துக் கட்டினால் கபரோகத்தால் உண்டாகும் இருமலும் மூச்சு முட்டுந் தணியும். ஸ்தன்னியத்தில் வைத்துக் கட்டினால் பால்சுரப்பினாலுண்டாரும் வீக்கமும் வலியுங் குணப்படும். பால்சுரக்கும்படி ஷை இலையைவதக்கி யொன்றின் பேரிலொன்றாய் அடுகடுக்காய் போடலாம். வெற்றிலையை எண்ணெய்தடவி வாட்டி குழந்தைகளின் மார்பில் அடுக்கடுக்காய் போட்டால் அவைகளுக்குண்டாகும் இருமலும் மூச்சுமுட்டும் குணப்படும்.

மெய் விவாக மாவதென்ன.—ஒரு கத்தோலிக்கு மேற்றிராணியார் உறுதிப்பூசுதல் கொடுக்கும்பொருட்டு ஓர் பங்குக்குப் போய் அந்தத் தேவத்திரவிய அனுமானத்தைப் பெறவிருந்த பிள்ளைகளைச் சோதிக்கையில் ஒரு சிறுமியை நோக்கி அவர் "மெய்விவாக மாவதென்ன?" என்றார். அதற்குச் சிறுமி "திருச்சபைக்கு மேற்றிராணிமார்களேயும், குருக்களேயும், தேவ பணிவிடைக்குத் தங்களே வசீகரம் பண்ணும் இன்னுமற்ற துறவறத்தாரையும் கொடுக்குந் தேவத்திரவிய அனுமானம்" என்று பதிலுரைத்தாள். மேற்றிராணியாரும் இவளுடைய மறுமொழி தப்பென்று சொல்லக்கூடாமல், வேறொரு கேள்வி, அதாவது: "உத்தரிக்கிற ஸ்தலம் என்பது என்ன?" என்று அவளேயே கேட்க, அவளும் முன் பின் யோசியாமல், உடனே "கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் மரணத்துக்குப் பிறகு போகுமிடம்" என்றாள்.

பெங்களூர் மேற்றிராணியார்.—ஏறக்குறைய ஒரு வருஷக் காலமாய் காலியாயிருந்த பெங்களூர் மேற்றிராணியார் ஸ்தானத்திற்கு சரியாய் வந்திக்கத்தக்க தெஸ்லீயே சுவாமியா ரவர்கள் அர்ச். பாப்பானவரால் தெரிந்துகொள்ளப்பட்டாரென நாம் முன் அறிவித்திருக்கிறோம். சென்ற மாதம் 24-ம் தேதி புதன்கிழமை யன்று கோயமுத்தூர், கும்பகோணத்து மேற்றிராணிமார்கள் உதவியாயிருக்க, புதுச்சேரி அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க மொரேல் ஆண்டவரவர்களால் இவர் பெங்களூர் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டார். இச்சடங்கிற்கு தென்னிந்தியாவிலுள்ள பல மேற்றிராணிமார்களான, சென்னை அதிமேற்றிராணியார், மயிலை, மங்களூர், திருச்சி முதலிய மேற்றிராணிமார்களும், 75 குருமார்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். இப்புது மேய்ப்பராகிய வந்திக்கத்தக்க தெஸ்லீயே ஆண்டவரவர்களுக்கு நாம் மனப்பூர்வமாக வாழ்த்துதல் கூறி, பெங்களூர் மேற்றிராசனத்தை இவர் பல்லாண்டு திறமையுடன் ஆண்டு வரும்படியாகச் சர்வேசுரனை மன்றாடுகிறோம்.

நமது பாப்பானவரின் புதிய ஸ்தானாதிபதி—ஸெலஸ்கி ஆண்டவ ரவர்கட்குப் பதிலாக கீழ்த்தேசங்களுக்கு அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் வந்திக்கத்தக்க புமோசோனி பியோந்தி யென்னும் ஆண்டவரவர்கள் புரோப்பகாந்தா வென்னும் விசுவாச பரம்புதல் சபைக்குத் தலைமையா யிருந்துவரும் கர்தினால் செராபினி ஆண்டவரவர்களின் காரியதரிசிகளி லொருவரா யிருந்தவர். அவர் சென்ற டிசம்பர் மாதம் 12-ம் தேதி யன்று தியோக்லியா பட்டணத்து அதிமேற்றிராணியாராக ஷை கர்தினால் அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, டெக்கா மேற்றிராசனத்துக்குப் புதிதாய் நியமிக்கப்பெற்ற வந்திக்கத்தக்க லெகராந்த் ஆண்டவரவர்களுடன் ரோமாபுரியை விட்டு இந்தியாவுக்குச் சென்ற மீ 16-ம் தேதி, புறப்பட்டு விட்டாராம். அவர் வந்திறங்குவது பம்பாயிலோ கொளும்பிலோ வென்று தெரியவில்லை.

ஆகிராபட்டணத்து அதிமேற்றிராணியாரின் தேகவியோகம்.—ஷை பட்டணத்தின் மிகவும் வந்திக்கத்தக்க சார்லஸ் ஜெந்தீலி என்னும் அதிமேற்றிராணியாரவர்கள், சென்ற டிசம்பர் மாதம் 30-ம் தேதி காலஞ் சென்றாரென்று கேள்வியுற்று விசனிக்கிறோம். இவ் வுத்தம மேய்ப்பர் 1840-ம் வருடம் இத்தலி தேசத்தில் பிறந்து, 1859-ம் வருடம் கப்புச்சின் சபையில் சேர்ந்து, 1863-ம் வருடம் குருப்பட்டம் பெற்று, 1870-ம் வருஷம் நம் மிந்து தேசத்திற்கு வந்தார். 1897-ம் வருஷம் அலகபாத் மேற்றிராணியாராகத் தெரிந்து கொள்ளப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டார். பிறகு 1898-ம் வருஷம் ஆகிராபட்டணத்து அதிமேற்றிராணியாராக நியமனம் பெற்று, ஏறக்குறைய 18 வருஷங்களாக அந்த அதிமேற்றிராசனத்தைத் திறமையுடன் ஆண்டு, தமது முதிர்ந்த வயதில் இறந்துபோனார். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

இந்த யுத்தத்திற்குக் காரணம் யார்?—ஒரு நாள் ஜெர்மன் சக்கரவர்த்தியும் அவரது முதற் குமாரனும் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண் டிருக்கையில், மகன் தகப்பனை நோக்கி "அப்பா, இச்சண்டையை யார் தொடங்கினது?" என்று கேட்டான்.

தகப்பன்.—"தொடங்கினது யாரென்று எனக்குத் தெரியும், ஆனால் அதைச் சொல்லமாட்டேன்."

மகன்.—"மாமன் ஜியார்ஜ் சக்கரவர்த்தியா தொடங்கினார்?"

தகப்.—"இல்லை."

மகன்.—"மாமன் நிக்கோலாஸ் சக்கரவர்த்தியா?"

தகப்.—"இல்லை."

மகன்.—"பாட்டன் பிராஞ்சிஸ் ஜோசப் சக்கரவர்த்தியா?"

தகப்.—"இல்லை."

மகன்.—"பிறகு யார்தான்?"

தகப்.—"சில காலத்திற்கு முன் அமெரிக்கா தேசத்தி லிருந்து பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் நமது தேசத்திற்கு விஜயஞ் செய்திருந்தார். அப்போது அவருக்கு, நமது சேனைகளேயும், கப்பற் படைகளேயும், ஆகாயக் கப்பல்களேயும், நீர்மூழ்கி கப்பல்களேயும் காண்பித்தேன். அதற்கு அவர் "நீ இவ்வளவு பலக்கிரமசாலியாயிருக்கிறாயே! நீ உலகத்தையே எதிர்க்கலா" மென்று சொல்லி என்னைத் தட்டிக்கொ

டுத்தார். 'நான் அப்படியே இப்போது செய்து வருகிறேன்'' என்றான்.

நமது பரிசுத்த பிதாவும் யுத்தமும்.—ஜெர்மனிய கவர்ண்மெண்டாரால் சில வாரங்களுக்கு முன் ஹாசல்ட் பட்டணத்தில் 18 பெல்ஜியர் மரண தண்டனைக்கு விதிக்கப்படவே, அர்ச். பாப்பானவரின் சிபாரிசினால் அவர்களில் 14 பேர் விடுதலையாக்கப்பட்டார்கள். மீளவும், மரோனைட் பிரிவினை சபையைச் சேர்ந்த பெருட் பட்டணத்து அதிமேற்றிராணியாராகிய செபிலி என்றவர் துருக்கி கவர்ண்மெண்டாரால் தூக்குத் தண்டனைக்கு தீர்வையிடப்பட்டிருந்தார். நமது பரிசுத்த பிதா, கான்ஸ்தாந்திநோப்பிலி லுள்ள தமது ஸ்தானாதிபதி மூலியமாய், ஷெ மேற்றிராணியாரை விடுவிக்க சுல்தானைக் கேட்டுக்கொள்ளவே, சுல்தானும் அவரை விடுதல் செய்தான். அன்றியும், கலிபோலிக்குடா நாட்டிலே யுத்தத்தில் இறந்துபோன இங்கிலீஷ், பிராஞ்சு யுத்த வீரரின் கல்லறைகளை அனுச்சாரப்படுத்தாமல் காபந்து செய்து வரும்படி சுலுத்தானிடத்தில் விண்ணப்பஞ் செய்து கொள்ளுமாறு பாப்பானவரை இங்கிலீஷ் பிராஞ்சிய ஸ்திரீகள் மன்றாடினதின்பேரில், அவரும் தமது ஸ்தானாதிபதியைக் கொண்டு துருக்கிய யுத்த மந்திரியாரிடத்தில் இதைப்பற்றிக் கேட்டுக் கொள்ள, மந்திரியாரும் அப்படியே செய்வதாக வாக்களித்து, அதைப் பாப்பானவருக்கு அறிவிக்கக் கேட்டுக்கொண்டான். மேலும், ஆகாரமின்றிப் பசியினால் தவிக்கும் பெல்ஜிய பிள்ளைகளை ஆதரிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கத்திற்கு நமது ஞானப் பிதா 6,000 ரூ. கொடுத்துதவினது மன்றி, அமெரிக்க கத்தோலிக்கர்களை இச் சங்கத்திற்குப் பொருளுதவி செய்யத் தூண்ட வேண்டுமென்றும் கர்தினால் கிப்பன்ஸ் ஆண்டவருக்கு ஒரு நிருபமும் எழுதியிருக்கிறார்.

நிகழும் யுத்தத்தின் சமாதானத்தைப் பற்றிய பேச்சு.—இக் கொடிய யுத்தத்தை நிறுத்தி சமாதானத்துக்குவர மனதாயிருக்கிறதாக ஜெர்மனிய சக்கரவர்த்தி நேசக் கட்சியாருக்கு அறிக்கை செய்திருக்கிறதுந்தவிர, யுத்தத்திற்குப் பிறகு நீடிய சமாதானம் நிலைபெற அர்ச். பாப்பானவர் முயற்சிசெய்ய வேணுமென்று அவருக்கு விண்ணப்பமும் செய்திருக்கிறாராம். யுத்தமானது எவ்வளவுகாலம்நீடித்தாலும்,ஜெர்மனியருடைய திமிரை அடக்கிப்போட வேண்டுமென்பது நேசங்கட்சியாரின் எண்ணம். வெற்றியின்றி சமாதானம் இச்சமயம் செய்யப்படுமானால் நேசக் கட்சியாரின் மனோரதங்கள் நிறைவேறமாட்டா. அப்படிப்பட்ட சமாதானம் நிலைத்திருக்கவுமாட்டாது. ஜெர்மனியர் செய்திருக்கும் அட்டூழியங்களையும் நஷ்டங்களையும் மறந்ததுபோலாகும். மேற்படி அக்கிரம பாதகங்களுக்குத் தக்க பரிகாரம் பூரணமாய் ஜெர்மனியர்கள் செய்ய ஒப்புக்கொண்டாலன்றி நேசக் கட்சியார் சமாதானத்துக்கு வரமாட்டார்களென்று சொல்லப்படுகிறது.

மைசூர் இந்தியன் கத்தோலிக்கு குடும்ப சம்ரக்ஷணை சங்கம்.—இச்சங்கத்தின் 15-ம் வருஷத்திய ரிப்போர்ட்டின் பிரதியொன்று எமது பார்வைக்கெட்டினது. ரிப்போர்ட்டில் காணப்பட்டிருப்பவைகளைக்கொண்டு நாம் நிச்சயிப்பது யாதெனில், "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" யென்பதுபோல் இச்சங்கமானது நாதனற்ற குடும்பங்களுக்குப் பெருந்துணையாயிருந்து வருகிறதென்பதேயாம். இச்சங்க முண்டான பதினைந்து வருடங்களுக்குள்ளாக ரூ. 17,404—0—9 மரணமடைந்த மெம்பர்களின் வாரிசுதார்களுக்குப் போஷணைத் தொகையாகக் கொடுக்கப்பட்டிருப்பதுமன்றி, சங்கத்தின் கையிருப்பும், ரிசர்வுபண்டு அல்லது க்ஷேம நிதியும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1914௵ ஜூலை௴ 27௳ இச்சங்கத்தின் மூன்றாம் வகுப்பிற் சேர்ந்து, 1915 ௵ ஜூன் ௴ 25௳ இறந்துபோன ஒரு மெம்பரின் வாரிசுதாருக்கு—இந்த மெம்பர் 11 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ¼ அணா வீதங் கட்டின கட்டணத்தொகை ரூ. 2—12—0 க்கு—கொடுக்கப்பட்ட போஷணைத்தொகை ரூ. 59—6—0 என்றால், இச்சங்கத்தினால் ஏழை எளிய குடும்பங்களுக்கு உண்டாகும் நன்மை கொஞ்சமல்ல. ஆகையால், இவ்வளவு நன்மைக்கு ஏதுவாயிருக்கும் இச்சங்கத்தின் அபிவிருத்திக்காக எல்லோரும் உழைக்கவேண்டியது. விசேஷமாய் விசாரணைக் குருக்கள் தங்கள் தங்கள் விசாரணையிலுள்ள கிறிஸ்துவ குடும்பங்களை—முக்கியமாய் ஏழைக் குடும்பங்களை—இச்சங்கத்திற் சேரும்படி செய்வது அவர்களுக்குப் பெரிய புண்ணியமாகும். சங்கத்திற்சேரும் மெம்பர்களும் தங்கள் தங்கள் கட்டணத்தை மாதந்தோறும் தவறாமல் கட்டி வருவார்களேயானால், தங்கள் குடும்பம் தங்களுடைய காலத்துக்குப் பிறகு க்ஷேமமாயிருக்க வழியாகும். இச் சங்கம் குருக்களுடையவும் உத்தம கிறீஸ்துவர்களுடையவும் கண்காணிப்பிலிருந்து வருகிறபடியால் யாதோர் மோச பாவத்துக்கு மிடமில்லை.

விளம்பரம்.

திருநெல்வேலி ஜில்லா, தென் காசி ரயில்வே ஸ்டேஷனுக்கு 13 மைல் தூரத்திலிருக்கிற சேர்ந்தமரம் பங்கு, திருமலை புரம் வரதாக்ஷியலை, அர்ச். லூர்துமாதா தரிசனை திருநாள் கொடி ஏற்றம் ஜனவரி௴ 29௳ திங்கள்கிழமை. நாளது பிப்பரவரி௴ 6௳ செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர்ஸ், சுற்றுப்பிரகாரம், பஜனை. பிப்பரவரி௴ 7௳ புதன்கிழமை காலை திவ்விய பூசை அதின்பின் ரத உற்சவத்துடன் திருநாள் முடிவு பெறும். இப்பக்கங்களில் யாதொரு விதமான வியாதியுங் கிடையாது. திரு யாத்திரைக்காரர் தங்கியிருக்க மலையின்மேல் "லூர்துவிலாஸ்" என்ற ஓர் சத்திரமும் கட்டப்பட்டிருக்கிறது. அர்ச். லூர்துமாதாவின் தாசர்கள் வந்து இத் திருவிழாவின் பலனடைய ஆசிக்கிறோம்.

Sendamaram. J. Ignatius, S. J.

விளம்பரம்.

சென்னைக்கு 38-மைல் தூரத்தில் நார்த் ஈஸ்ட் ரெயில்வே லையினிலிருக்கும் ஆரம்பாக்கம் ஸ்டேஷனில் எழுந்தருளியிரா நின்ற மோட்ச முடிபெற்ற மாதாக்கோவிலில் லூர்துமாதா தரிசனையின் வருஷாந்திர திருவிழா வழக்கம்போல் கொண்டாடப்படும். கொடியேற்றம் இம் மாதம் 10 தேதி. 17 தேதி மாலையில் வெஸ்பர்ஸ், ரயில்வே முழுபாண்டு வாத்தியத்துடன் தேர்சுற்றுப் பிரகாரம், வெளிமைதானப்பிரசங்கம். இப்பிரசங்கத்தில் லூர்துநாயகியின் தரிசனக் காட்சியை மாஜிக்விளக்கினால் சங். L. X. Fernandes சுவாமியாரவர்கள் காட்டுவார். 18 தேதி பெரியபாடற்பூசை, பிரசங்கம், திவ்வியநற்கருணை ஆசீர்வாதம். இவைகளோடு திருநாள் முடிவுபெறும். கத்தோலிக் கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இத் திருநாளுக்கு விஜயஞ்செய்து தேவாசீர் பெற்றேகக் கேட்டுக்கொள்ளும்,

ஆரம்பாக்கம். S. M. F. Ignatius.
விசாரணைக் குரு.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

திரிவித இரத்தினங்களால் கீர்த்தி செறிந்திலங்கும் திருமந்திரமா நகரெனுமித் தூத்துக்குடியில், சந்திரகுலப் பரத சிரோன்மணியும் இலங்கையைச் சேர்ந்த முறட்டில் வர்த்தகருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ பொன்னையாப் பெறனாந்தவர்களியற்றிய சப்த வருடத் தவப் பயனால் கிடைக்கப்பெற்ற புத்திரரும், மிசர்ஸ். றாலி பிரதர்ஸ் அன் கோ துணைப் புரோக்கருமாகிய ஜெ. யெல். பெறனாந்து அவர்களின் மருமகனுமாகிய மரிய வியாகுல தர்ம இரத்தினம் பெறனாந்து இரத்த பித்த வாதத்தா லுண்டான கடுங்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருவித வைத்திய இரத்தினர்களால் கூடிய ஆராய்ச்சியுடன் சிகிச்சை செய்தும், யாதும் பயன் பெறாது, மரணம் சகலருக்கும் நிச்சயமென்றும், பழுத்த பழம் கிளையில் நில்லாதென்றும் சத்திய திருச்சபை போதிக்கும் போதனைப் பிரகாரம் 1916-ம் ௵ டிசம்பர்௴ 26-ந் ௳ இரவு 9½-மணிக்குக் கடைசி தேவத்திரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று "சேசுமரிய சூசை என்னை இரட்சியு" மெனும் திருமந்திரத்தை நற்சிந்தனையுடன் உச்சரித்து வருங்கால், மரண வேதனையால் தத்தளிக்கும் புத்திரனின் சகிக்கொணா ஆரூட்டத்தைக் கண்ணுற்ற பெற்றோன் "கிறிஸ்துவின் ஆத்துமமானதே" எனும் திருச்செபத்தை வெகு அமரிக்கையாய் மகனுக்குச்சொல்லி முகித்து, "சுவாமீ எனக்கு அவனை நல்ல ஒரேகனியாய்க் கொடுத்தருளினீர். இப்போது தேவரீருக் குகந்த கனியாய் ஏற்றுக் கொள்ள விரும்புகிறீர். கட்வுளே! நான் நல்ல காணிக்கையாய் என் முழு இருதயத்தோடு தருகிறேன். அவனைக் கையேற்று உமது மோட்சப் பிரகாசத்தைக் கட்டளைபண்ணியருளும்" என்று மன்றாடினார். தர்ம இரத்தினம் பரமனுக்குகந்த இரத்தினமாய்த் தனது இளம்பிராயமாகிய 22-வது வயதில் நன்மரண மாகினான். இதை வாசிக்கும் சகோதரர்களே, இவனது ஆற்றும இளைப்பாற்றிக்காகவும் ஒரே ஏக மகனை இழந்து பரிதபிக்கும் பெற்றோனின் மன ஆறுதலுக்காகவும் முப்புவனத்தைத் தாங்கும் ஒப்புவமை இல்லாத தற்பரனைப் பிரார்த்திக்கவும் வந்தனத்தோடு கேட்டுக்கொள்ளுகிற

ஓர் உண்மைச் சிநேகிதன்.

26—12—1916.

ஓர் மகோபகாரி.

அந்நிய நாட்டாருக்கு மிக்க பிரயாசையான நந்தமிழ் பாஷையை அதிசீக்கிரத்தில் கற்று அதில் அரிய பலகாவியங்கள் செய்து மங்காப்புகழ்பெற்ற ஐரோப்பிய குருவாகிய வீரமாமுனிகள், நமது ஆயுர்வேத சாஸ்திரத்தையும் ஐயந்திரிபறக்கற்று, மகா பண்டித சிரேஷ்டராய் விளங்கியதை அநேகர் அறியார். அவர் அருளிச்செய்த அரிய ஔஷதங்கள் அநேகம். அவைகளில் ஒன்று ஏழைகளுக்கு மெத்த பிரயோஜனமானது. அது எல்லா வியாதிகளையும் எளிதில் போக்க வல்லது. ஆதலால், அதற்கு "சர்வரோக நிவாரணி" அல்லது "வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரை" எனப் பேர் வழங்கிவருகிறது.

விஷஜுரம், அஜீரணம், கிராணி, கழிச்சல், மேகவெட்டை, மேகச்சூடு, சூதகவாய்வு, சூதகச்சிக்கு, காலரா என்னும் விஷபேதி, முதலிய சகலவியாதிகளையும் பற்றறப்போக்கும் அருமருந்தென நாடெங்கும் பேர் போனது. இதைப்பற்றிய முழுவிவரங்கள் அறியவிரும்புவோர்கள் பின்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் வீரமாமுனிவர் சுகந்தருமாத்திரையின் விளக்கப்புத்தகம் ஒன்று அனுப்பப்படும். இதை உபயோகித்துக் குணமடைந்தபேர்களிடமிருந்து வந்தநற்சாட்சிப் பத்திரங்கள் அநந்தம். ஆதலால் எவ்வித வியாதியினாலாவது வருந்துபவர்கள் வேறுமருந்தை வாங்கிச் சாப்பிடுமுன் குற்றமற்ற இம்மருந்தை ஒருமுறையேனும் வாங்கிப் பரிட்சித்துப் பார்ப்பார்களாக.

100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூபா 1-0-0. தபாற் செலவு பிரத்தியேகம்.

மருந்தருந்தும் விதமும், அநுபான முறைகளும் மாத்திரையுடன் அனுப்பப்படும்.

C. A. SILVEIRA,
2/74, Broadway, Madras.

சி. ஏ. சில்வேயிரா,
2/74, பிராட்வே, மதராஸ்.

அதிசயிக்கதக்க விதமாய் குணப்படுத்தும்

டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தல் ஆறாத ரணங்கள், புண்கள், எவ்விதத்திலும் தீராத படைகள், மேகப் படைகள், தடிப்புபடைகள், படர்தாமரை, எச்சிற்றேமல் இன்னும் அநேகவித படைகள், தேமல்கள் வண்டுகடி, தேக ஊரல், நமைச்சல், சொறி இவைகளெல்லாம் பூரணமாய் குணமாய்விடும். இதன் புகழத்தக்க குணமாவது: மருந்தைப்போட்ட வுடன் நமைச்சல் நின்றுவிடும். பிறகு வெகு சீக்கிரத்தில் வியாதியைக் குணப்படுத்தி இதரப் படை மருந்துகளைப்போலில்லாமல் எப்பொழுதும் வராதபடிக்கு செய்யும். இதையாவரும் கவனிக்கவேண்டிய தவசியம். எல்லா வியாபாரிகளும் இப்படிச் சொல்லுகிற வழக்கமென்று நினையாதேயுங்கள். போலி வியாபாரிகளுடைய படை மருந்துகளை யுபயோகித்து சுகமடையா யாவரும் டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தால் ஆச்சரியப்படுவார்கள். இச் சர்வபடை சங்காரியை யுபயோகித்த யாவரும் இவைப்போல் மருந்து எங்குமே கிடையாதென்று புகழ்ந்து நற்சாட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அநேக வருஷங்களாயுள்ள படைகளை இரண்டு மூன்று வேளையில் பூரணமாய் குணப்படுத்தினதென்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். இம்மருந்தின் குணத்தைப்பற்றி தினம் தினம் நற்சாட்சி பத்திரங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன.

டாக்டர் பார்த் என்பரின் சர்வ படை சங்காரியின் விலை பெட்டி 1-க்கு அணா 12. தபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம்.

கார்பாலிக் சோப் விலை 1-க்கு அணா 2.

யாவருக்கும் இது முக்கியமானது.

ஓரே தரம் உபயோகித்துப் பாருங்கள், பிறகு தெரியும்.

எங்களால் தயார் செய்யப்படும் **முதல்தரம் அயத் திராவகத்தை** யுபயோகப்படுத்தினால் ஆச்சரியப் படுவீர்கள். இதில் இரத்தக் கெடுதியால் உண்டாகும் சகல வியாதிகள், மேக வியாதிகள், ஆறாத ரணங்கள் மேகப் புண்கள், முடக்குவாதம், பாண்டு, மேக நீரிழிவு, சகல மேகரோகங்கள், மேகப் புற்று, மேகச் சொறி, மேகக் கறப்பான், மேகத்திற் காணும் தடிப்பு ரணம், கையில் ஊரல் வெளுப்பு சிறங்கு, இவைகளை யெல்லாம் பூரணமாய்க் குணப்படுத்தும். இம்மருந்தின் குணத்தைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை. வியாதி யில்லாதவர்களும் சாதாரணமாய் பலத்திற்காக இதைச் சாப்பிடலாம். பத்திய மில்லை, ஒருதரம் இதை யுபயோகப்படுத்திப் பாருங்கள். பிறகு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். டாக்டர் பார்த் என்பரின் சர்வ படை சங்காரியை யுபயோகப் படுத்துகிறவர்கள் **முதல் தரம் அயத் திராவகத்தைப்** உபயோகப்படுத்தினால் மிகவும் நல்லது.

எங்களுடைய முதல் தரம் அய திராவகத்தின் விலை புட்டி 1-க்கு ரூ 2-12-0 தபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் :—பீ. எஸ். போம்மையா அண்ட் கோ, தபால் பெட்டி 208. மதறாஸ் என்றெழுதி பெற்றுக்கொள்ளவும்.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 15. | மார்ச் 1917. | இலக்கம் 3.



சென்னை அதிமேற்றிராணியாருடைய நிருபம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த குருக்களுக்கும்
கிறீஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும்
ஆசீரும் உண்டாவதாக.

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரியமான பிள்ளைகளே,

சேசு, மரி, சூசை ஆகிய இவர்களுடைய குடும்பம் திருக்குடும்பமென்றும், நசரேத்தூரிலிருந்த இக்குடும்பமே கத்தோலிக் குடும்பங்களுக்கு முன்மாதிரிகையான குடும்பமென்றும் சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமான பிள்ளைகளே, உங்களுக்குத் தெரியும். ஒரு மெய்யான கத்தோலிக் குடும்பத்திற்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் எவையென்று திருக்குடும்பம் நசரேத்தூரில் சீவித்துவந்த மாதிரியிலிருந்து நாம் வெகு சுலபமாய் அறிந்துகொள்ளலாம். மேலும் திருக்குடும்பத்திலிருந்த சமா

தானம், சந்தோஷம் நாம் அக்குடும்பத்தை நமக்கு மேல்வரிச்சட்டமாகக்கொள்ள உற்
சாகப்படுத்துகிறது. திருக்குடும்பத்துக்குக் குறைவுபட்டிருந்த சிலவற்றை முந்த முந்தி
நாம் முக்கியமாய்க் கவனிக்கத்தகும். திருக்குடும்பத்துக்குத் திரண்ட சொத்து
சுதந்தரம், உயர்ந்த அந்தஸ்தினருடன் கூட்டுறவு, கல்வியில் தேர்ச்சி முதலியவைகள்
இருந்ததில்லை. இதை நாம் கவனிப்பது அவசியம். அதேனெனில், ஓர் குடும்பம்
க்ஷேமமாயிருக்க இவையெல்லாம் தேவையென்று நல்ல பக்தியுள்ளவர்கள் முதலாய்
இக்காலத்தில் தப்பறையாய் எண்ணிவருகிறார்கள். தகப்பனுக்குள்ள பேராசையும்,
தாய்க்குள்ள பெருமை சலாக்கியமும், மகன் அல்லது மகளுக்குள்ள கர்வமும் குடும்
பத்தின் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் சீர்குலையச்செய்ய காரணமாயிருக்கின்
றன. இப்பொல்லாப்பு இப்பிரபஞ்ச நன்மைகளைக் கொண்டிருப்பதில் அல்ல, ஆனால்
இவ்வாதாயங்களின்மட்டில் ஒழுங்கற்ற ஆவல்கொண்டு அவைகளை அளவுக்கு மிஞ்சி
சம்பாதிப்பதிலேயே அடங்கியுள்ளதாம். நல்ல அந்தஸ்திலிருக்கும் ஓர் கத்தோலிக்
குடும்பமாவது, செல்வாக்குள்ள ஓர் கத்தோலிக் கனவானாவது, கல்வியில் பாண்டித்திய
மடைந்த ஓர் வாலிப ஆண்பிள்ளை அல்லது பெண்பிள்ளையாவது தத்தமக்குள்ள லௌ
கிக மேன்மைகளைச் சத்தியவேத முறைப்படி பிரயோகிப்பார்களேயானால், சர்வேசுர
னுக்கும் திருச்சபைக்கும் மகிமை உண்டாகவும், மனுக்குலத்தின் நலத்துக்காகவும் எவ்
வளவோ செய்யவாகும். ஆனால் நசரேத்தூரிலிருந்த திருக்குடும்பமோ இவைகளின்றி
தாரித்திரத்தினாலும், தாழ்ந்த அந்தஸ்தினாலும், மனிதர் புறக்கணிப்பினாலும் எவ்வித
இக்கட்டு இடைஞ்சலுக்கு முள்ளாயிருந்தபோதிலும் பூரண திருப்தியுடனும் சந்துஷ்
டியுடனும் சீவித்துவந்தது.

நாம் இப்போது கத்தோலிக் குடும்பங்களுக்கு முன் மாதிரியாயிருக்கும் இத்
திருக்குடும்பத்தின் சில இலட்சணங்களை யோசிப்போமாக. இவை எல்லாம் பரிசுத்தத்
தனம் என்னும் ஓரே வார்த்தையில் அடங்கியிருக்கின்றன. இக்குடும்பத்தின் தலைவர்
"நீதிமான்" ஆன சூசையப்பர்; இவருக்குப் பின் தாயார், இவளோ அமலோற்பவ
கன்னித்தாய்; பிள்ளையோ பரிசுத்தமானவர். இவர்களுடைய பரிசுத்தத்தனமே
இவர்களிடத்திலிருந்த மேலான மனோகரத்துக்கும் திருப்திக்கும் முக்கிய காரணமாயி
ருந்தது. வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால் இவர்கள் எப்போதும் தேவஇஷ்டப்
பிரசாத அந்தஸ்தில் சீவித்துவந்தார்கள். குழந்தை சேசுநாதர் இஷ்டப்பிரசாதத்
தைக் கொடுப்பவர், மரியாயி "பிரியதத்தத்தினாலே பூரணமானவள்," சூசையப்பர்
தேவாசீரால் நீதிமானானவர். ஆனபடியால், இவ்வுலகத்திலேயே மெய்யான திருப்தியுட
சந்தோஷமு முண்டாயிருக்க, தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்தில் சீவிப்பதே உண்மை
யான வழி. இது எந்த அந்தஸ்தினருக்கும் விசேஷமாய்க் கத்தோலிக் குடும்பத்தின
ருக்கும் அத்தியாவசியம்.

தேவ இஷ்டப்பிரசாத சீவியத்திற்கு தேவசம்பந்தமான புண்யங்களாகும் விசு
வாசம், நம்பிக்கை, சிநேகம் ஆகிய இவைகளே ஆதாரம். ஏதேன் தோட்டத்தில் நமது
ஆதித்தாய் தகப்பனுடைய குடும்பம் விசுவாசம், நம்பிக்கை, சிநேகம் என்னும் இப்
புண்யங்களை அனுஷ்டித்துவந்தவரையிலும் அது தேவஇஷ்டப்பிரசாதத்தில் சீவித்து
வந்தது. பிறகு இக்குடும்பத்தார் பாவத்தின்நிமித்தம் அவைகளை அனுஷ்டிக்கத் தவறி
னார்கள். நசரேத்தூரில் திருக்குடும்பமும் இப்புண்ணியங்களை அனுசரித்துவந்ததினால்
கிடைக்கப்பெற்ற உள்ளாந்தர பரிசுத்தத்தனம் வெளிப்படையாய் விளங்கிவந்தது
சகல மனிதருக்கும் கதி சர்வேசுரன். நாம் அவரை விசுவாசத்தினால் அறிந்து, அவரை
நம்பிக்கையினால் நாடித் தேடி, அவருடன் சிநேகத்தினால் ஐக்கியமாகிறோம். விசு
வாச மின்னதென்று இப்போது ஆராய்ந்துபார்ப்போமாக. நீதிமான் விசுவாசத்தி
னால் சீவிக்கிறான். விசுவாசமின்றி நாம் சர்வேசுரனுக்குப் பிரியப்படமுடியாது. விசு
வாசமோவெனில் நம்பப்படுகிறவைகளின் ஆதாரமும் காணப்படாதவைகளின் திருஷ்
டாந்தமுமா யிருக்கின்றது. இவைகள் அர்ச்சியசிஷ்ட சின்னப்பரால் சொல்லப்
பட்டவைகளிற் சிலவாம். நம்முடைய ஆதித்தாய் தந்தையர் விசுவாசத்தினால் சர்வே

சுரனை அறிந்தார்கள். சர்வேசுரன் மனிதாவதாரமெடுத்துத் திருக்குடும்பத்தில் ஒருவரா யிருந்தபோதிலும், மரியாயும் சூசையப்பரும் அவரை விசுவாசத்தினால்தான் சர்வேசுரனென்று அறிந்துகொண்டார்கள். அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் சொல்லியிருக்கிறபடி விசுவாசத்தினாலேயே முன்னோர்களும் நற்சாட்சி யடைந்திருந்தார்கள். விசுவாசத்தினாலேயே நாமும் சர்வேசுரனால் அறிவிக்கப்பட்டவைகளை யெல்லாம் சந்தேகமற நம்பிவருகிறோம். ஞானஸ்நானத்தின் மூலமாய் நம்முடைய ஆத்துமத்துக்கு இப்புண்யம் அருளப்படுகிறது. நாம் வளர வளர நம்முடைய பெற்றோராலும், உபாத்திமார்களாலும், குருக்களாலும் நமக்குச் சொல்லப்படுகிற ஞானோபதேசம் இப்புண்யத்தை எப்படி நாம் அனுஷ்டிப்பதென்று தெரியச்செய்கிறது. இப்புண்யம் சாதனையினாலேயே நம்மிடத்தில் அதிகரிக்கும். திவ்ய குழந்தை "தேவ சமுகத்திலும் மனிதர் முன்பாகவும் ஞானத்திலும், வயதிலும் வளர்ந்து வந்தது." மரியாயும் சூசையப்பரும் விசுவாசமென்னும் இப்புண்யத்தை அடிக்கடி அனுசரித்துவந்தார்கள். நாமும் விசுவாச முயற்சிகளால் இப்புண்யத்தைச் செய்கிறோம். அப்படியே அந்தி சந்தி ஜெபித்தல், போசனத்துக்கு முன்னும் பின்னும் ஜெபித்தல், ஜெபமாலை முதலிய இன்னுமற்ற அனுதின ஜெபங்களை ஜெபித்தல் நமக்கு விசுவாச முயற்சிகளாகின்றன. திவ்ய பூசை காணுதல், பாவசங்கீர்த்தனஞ் செய்தல், நன்மை வாங்குதல், திவ்யநற்கருணை ஆசீர்வாதத்துக்குப் போதல், திவ்யநற்கருணை சந்தித்தல் ஆகிய இவைகளெல்லாம் விசுவாச முயற்சிகளே. சோதனை நேரத்திலும் துன்பகாலத்திலும் வேண்டிக்கொள்வதும், சர்வேசுரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவருக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய்வதும் மேலான விசுவாச முயற்சிகளே. சூசையப்பர் "இதை ஆலோசித்திருக்கையில்" விசுவாச முயற்சிசெய்தார். சர்வேசுரனும் அவருடைய விசுவாசத்துக்குப் பலனாக அவருடைய ஜெபத்துக்குக் காதுகொடுத்து, அவரிடத்துக்கு ஓர் சம்மனசானவரை யனுப்ப, அவரும் "நீர் உமது மனைவியாகிய மரியம்மாளை அங்கீகரித்துக்கொள்ள ஐயப்படவேண்டாம். ஏனென்றால், அவள் தரித்திருக்கிற கருப்பம் இஸ்பிரீத்துசாந்துவினா லுண்டாயிற்று" என்றார். மரியாயி "அவர் என்னசெய்யச் சொல்லுவாரோ அதைச் செய்யுங்கள்" என்று பணிவிடைக்காரருக்கு கானாவூரில் நடந்த கலியாணத்தின்போது சொன்னதும் விசுவாச முயற்சியே. சர்வேசுரனும் அவளுடைய நம்பிக்கையுள்ள ஜெபத்தை ஏற்றுக்கொண்டு அவளுடைய விசுவாசத்துக்குப் பலனாக பணிவிடைக்காரரை நோக்கி "சாடிகளைத் தண்ணீரால் நிரப்புங்கள்" என்றார். அவைகள் நிரப்பப்படவே "இப்போது மொண்டு பந்தி விசாரணைக்காரனிடத்தில் கொண்டுபோய்க்கொடுங்கள்" என்றார். மரியாயின் விசுவாசத்துக்காகவும், பணிவிடைக்காரரின் கீழ்ப்படிதலுக்காகவும் தண்ணீரை இரசமாக மாற்றின இப்புதுமையைச் செய்ய சர்வேசுரன் சித்தமானார்.

பொதுச்செபமும், குடும்பச் செபமும், கோவிலில் நடைபெறும் தேவாராதனைகளுக்குப் போயிருப்பதும் விசேஷமான விசுவாச முயற்சிகளாகவும் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவைகளாகவு மிருக்கின்றன. "பழய ஏற்பாட்டின் ஆசாரப்படி குழந்தை யேசுநாதரை அவருடைய பெற்றோரான மரியாயும் சூசையப்பரும் தேவாலயத்துக்குக் கொண்டுபோனபோது" சர்வேசுரன் திருக்குடும்பத்தை மாத்திரமல்ல, ஆனால் அவர்களோடு தேவாலயத்திலிருந்த பரிசுத்த சிமோன் என்பவரையும் அன்னாளென்னும் தீர்க்கதரிசினியையும் ஆசீர்வதித்தார். "என்னுமத்தினால் இருவராவது, மூவராவது, எங்கே சேர்ந்திருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் நானிருக்கிறேன்" என்று கிறிஸ்துநாதர்தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். தாங்களும் விசுவாசமுள்ளோராய்ச் சீவித்துத் தங்கள் பிள்ளைகளையும், இன்னும் வீட்டிலுள்ள மற்றவர்களையும் விசுவாச வழியில் நடக்கும்படிசெய்யத் தங்கள் மாதிரிகையினால் தூண்டிவரும் பெற்றோருடைய குடும்பம் சமாதானமும் சந்தோஷமும் நிறையப்பெற்று, மெய்யான கத்தோலிக் குடும்பமாய்ச் சீவித்துவரும். அதேனென்றால், "அவர்கள் நடுவில் நானிருக்கிறேன்" என்று தம்முடைய பிரசன்னத்தால் திருக்குடும்பத்தை அர்ச்சித்தரு

ளின கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றினதினலேயாம். இவ்விஷயத்தைப்பற்றி இன்னும் சொல்லலாமென்றாலும் தற்சமயம் இவ்வளவே போதும்.

அர்ச். கன்னிமரியாயின் சுத்திகரத் திருநாளன்று 1917ஆ சென்னையில் கொடுக்கப்பட்ட இந்த நிருபமானது நமது அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த எல்லா கோவில்களிலும், சிறிய கோவில்களிலும், மடங்களைச்சேர்ந்த கோவில்களிலும் தபசுகாலத்தில் வரும் முதல் ஞாயிறன்று வாசிக்கப்படவேண்டியது.

1909ஆ ஜூன்மீ 9உ மிகவும் பரிசுத்த பிதாவினல் நமக்களிக்கப்பட்ட அப்போஸ்தல அதிகாரப்படி, 1917ஆ சென்னை அதிமேற்றிராசன மாகாணத்தில் அனுசரிக்கப்படுவதற்காக விதிக்கப்பட்டிருக்கிற தபசுகாலத்தின் வழக்கமான ஒழுங்குகள் 50-ம் நாள் ஞாயிறன்று வாசிக்கப்படவும்.

உங்களனைவரையும் சர்வேசுரன் தமது பரிசுத்த பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறீஸ்துநாதரில் உங்க ளன்புள்ள தந்தையாகிய,

எ. மேர்கேஸ், செக்ரடெரி

✠ அருளப்ப ஆலன், சென்னை அதிமேற்றிராணியார்.

THE SCHOOL OF LOVE.
அன்பின் பாடசாலை.

சர்வேசுரனிடமிருந்து வருவதாகிய அன்பினியல்பு இத்தகையதாம். இவ்வியல்பை வளரச்செய்வதே சீவியத்தினுட்பொருள். அது ஒன்றுக்குப் பன்மடங்காய்ப் பலன்றரும்படி யதை வளர்த்துப் போஷிக்கலாம்; அது ஒன்றுக்கு முதவாச் சருகாய் வாடிவதங்கும்படி யதைக் குறைத்தும் கெடுத்தும் விடலாம்; அதை இயற்கைக்கு மாறுன வழியில் வளரும்படிச் செய்து, அதன் சுபாவத்தைக் கெடுத்து ஒருவிதப் போலியுருவுடன் தோன்றும்படியுஞ் செய்யலாம்.

அன்பை வளர்க்கவேண்டுமானல், மேற்கூறிய மூன்றுவழிகளால்தான் வளர்க்கவேண்டும். மெய்யான அன்பில் சுயநலமில்லையேல், அன்பினுற்றலை வளர்க்க விரும்புவோன், தன்னய மின்மையை வளர்க்கவேண்டும். மெய்யன்பு மனோசலனத்தால் தூண்டப்படுகிறதாயின், அன்பின் அடியான், தனக்குள் பகுத்தறிவு எவ்வளவுதான் அதிகாரம் வகித்தபோதிலும், மனோசலனத்தாலும் வேண்டுமானல் பகுத்தறிவாலும் தூண்டப்படுவான்; தன் பகுத்தறிவாலேயே கட்டப்பட்டு தன் புத்தியிற்பட்டதே சரியெனச் சாதியான்; தன்னைவிட உயர்ந்த பொருள்க ளிருக்கின்றனவென்பதையறிந்து. அவற்றை மதிப்பதிலும் அடைய முயல்வதிலும் கொஞ்சமும் பின்னிடையான். கடைசியாய், மெய்யான அன்பைப் பிறர்பால் செலுத்தி யதன்பொருளை நன்கறிபவன், புத்தியோசனை யென்னு மித்தகைய வஞ்சகப் பேய்த் தன்னிடைப்புகுந்து தன்காரியத்தைக் கெடுக்காமற் காக்கக்கடவான். அவன் தன் பிழைப்பையும் சீவியத்தையுங் கடந்து வெகுதூரம் பார்க்கும் தூரதிருஷ்டியாவான்; கரங்களைத் திறந்து தன்னிடமிருப்பவை யனைத்தும் கொடைக்கென்றே ஏற்படுத்தப்பட்டவைபோல் யாவருக்கும் மனமுவந்தளிக்கும் வித்தையைக் கற்றுக்கொள்வான். மேலான உதாரத்துவத்தோடு, எத்தகைய அற்பத்தனமு மில்லாமல், "பொறுமைப்படாமல், துடுக்காய்ச் செய்யாமல், தன்னலத்தைக் கோராமல்," ஆனல் எப்போதும் சத்தியத்தில் சந்தோஷப்பட்டு உயிர் வாழ்வான். இத்தகைய நிலைமையில்தான் அன்பு வளருமன்றோ !

இதே மாதிரியாக ஒவ்வொருவருந் தம்மிடமுள்ள அன்பினளவைச் சோதித்தறியலாம்; ஏனெனில் தம்மிடம் இருக்கும் அன்பு வெகு சொற்பமேனும், ஒன்றுமில்லையென்று ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அர்ச். தெரேசம்மாள் நரகத்தை "அன்பணுவளவு மில்லாத ஸ்தலம்" என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக ஆத்மா எவ்வளவுதான் நிர்ப்பாக்கிய நிலைமையில் இருந்தபோதிலும், அன்பில்லாமல் இருக்குமென்று நிச்சமாய்ச் சொல்லமுடியாது. பாவச் சகதியிற் புரண்டு பகைவரால் புண்பட்டிருந்த போதிலும், ஆத்மாவில் உயிருண்டு; உயிருள்ள போது அன்புமிருக்கும். ஆனல் அவ்வன்பு ஒழுங்காய் வளர்ந்திருக்கிறதா, அல்லது கோணலாய்க் குறுகியிருக்கிறதா? அதன்கண் முழுமையும் சத்தியங் குடிகொண்டுள்ளதா, அல்லது பாதி சத்தியமும் பாதி அசத்தியமும் நிறைந்துள்ளதா? பின் கூறப்பட்ட நிலைமையிலிருந்தால், அசத்தியம் சத்தியத்தை வளரவிடாமற்றடுத்து, மேலுக்கு மலர் அழகாயிருந்தபோதிலும் உள்ளே புழுக்களிருந்து அதைச் சீக்கிரம் அழிக்க முயல்கின்றனவா? பார்ப்போம்.

மேற்கூறிய விஷயம் சரியானல், என்னையே நான் சோதித்துக்கொள்வேனகவும். என்னிடமுள்ள அன்பு என்னை எவ்வளவுக்குக் கவனியாமலிருக்கின்றதோ அவ்வளவுக்கும் அது உண்மையுடைய தென்பது பெறப்படும். அவ்வன்பு தன்னலம் விரும்பாது, சந்தோஷத்தை முன்னிட்டு அது அன்பு பாராட்டாது; ஆனல் அன்பு பாராட்டுவதெல்லாம் பிறருக்குக் கொடுத்துச் செய்யும் நன்மைகளாற் கிடைக்கும் இன்பத்தை யநுபவிப்பதற்கே. இத்தகைய சந்தர்ப்பத்தில் இன்பமிருக்கலாம். ஆனல் அவ்வின்பம் மெய்யின்பமாயிருத்தல் வேண்டும். இன்பமென்னும் பேருக்குரித்தான இன்பமே மெய்யின்பம் அன்புக்காக அன்பைத் தேடுவதில்லை. அப்படித் தேடுவது அதை யழிக்க முயல்வதை யொக்கும்; தேடுவதால் அது ஒரடிமைப் போலாகிறது; அது மெய்யாகவே ஓர் எஜமானைப் போலிருந்து தன்னை வேறுகதிக்கு உபயோகப்படுத்தாமல், தன்னையே கதியாக யாவரு மடையவேண்டிய உன்னதப் பதவியைக் கொண்டிருக்கின்றது. என் அன்பு இத்தகையது தானு?

இரண்டாவது என் அன்பு என் மனதைச் சலனப்படுத்தாவிடில் அல்லது கொஞ்சமாய்ச் சலனப்படுத்தினல், அது சாகுந் தருவாயிலிருக்கிற தென்பதற் கடையாளம். மனோசலனத்துக் கீடுபடுவதில்லை யெனப் பேசி, நியாயப் பிரமாணத்தின்படி நடந்து, தன் கடமைகளைச் சரிவரச் செய்வதாகப் பெருமை பாராட்டும் விருப்பு வெறுப்பற்ற ஞானி யொருவன் அன்பின் மீது வெற்றிகொள்ளுகிறான்; அதனல் அதைச் சுட்டெரிக்கிறான். இந்த வெற்றி, இந்த ஜயம் பூமியனைத்தையும் தரை காணு வண்ணம் மூடிக்கொண்டேன் எனப் பெருமை பாராட்டும் துருவ உறைபனியின் வெற்றியை யொக்கும். ஒருவித அழகும், பலமும், சாமர்த்தியமும் இருக்கலாம்; ஆனல் உயிர், வேகம், வளர்ச்சி, செழிப்பு, முதலியனக் காண்பதரிது. ஆனல் அன்போ, மானிட இருதயத்திலுள்ள ஒவ்வொரு நரம்பையுந் தாக்குகிறது; சில வேளைகளில் அவ் விதயத்தின் மேல் தன் முழு வல்லமையையுஞ் செலுத்தி யதை யாட்டுவதால், மனிதன் அதற் கீடுபட்டு ஒரே சமயத்தில் ஆநந்தப் பரவசனும் வேதனைப் படுபவனுந் தோன்றுகிறான். ஏனெனில் பின் கூறியவை தனக்குச் சொந்தமானவையல்ல, அவை மற்றவர்களுடைய இன்ப துன்பங்கள். அவை ஒன்றன்பின் னென்றாய்க் கணக்கு வழக்கின்றி மேற்கூறிய அன்பு குடிகொண்ட இருதயத்தைத் தாக்குவதால், அவை தனக்கு இன்பமளிக்கின்றனவா அல்லது துன்பமளிக்கின்றனவா என்று பகுத்தறியக் கூடாமல் ஏககாலத்தில் இன்ப துன்பங்களை யநுபவித்து அணைகடந்த வெள்ளம் போற் பெருகிவரும் அன்பின் பிரவாகத்தைத் தாங்கு மாற்றலின்றி, மரணமே இதினின்றும் தப்புவிக்கு மார்க்கமென அவ் விதயம் காண்கிறது. தேவ சிநேகத்தால் நிறைந்த இருதயங்களை யுடைய அர்ச்சியசிஷ்டவர்களின் சீவியத் திறவுகோல் இதுவாமே. சேசுவின் திரு இருதயத்திற்கும், அவர் பூங்காவனத்திற்பட்ட மரணவஸ்தைக்குந் திறவுகோல் இது வல்லவா? இது என்னிதயத்தின் திறவுகோல் தானு?

மூன்றாவது அன்பு அமைதியற்ற அலைச்சலையுடையது. சோம்பலும் அன்பும் ஒரே வீட்டில் வசிக்காவாம்; அன்பிற் குறக்கமில்லை. இதன் பொருள் நாம் சாதாரணமாய் ஜனங்களுக்குள் பார்க்கும் முயற்சி, கிரிகை முதலியனதான் என்று நினைக்கக்கூடாது. அன்பு ஒன்றுமே செய்யவேண்டியதில்லை; ஆனல் அது எப்போதும் தன்னிதயத்தில் விழித்திருந்து பிறருக்காயுழைக்கிறதென் றர்த்தம். தன்னுற் கொடுக்கக்கூடியதை யது கொடுக்கிறது; கொடுக்க முடியாததைக் கொடுக்க ஆசைப்படுகிறது; தன்னை

வெறுமையாக்கிக்கொண்டு, அவ் வெறுமையை இலாபமென மதிக்கிறது; தன்னிடமொன்றுமில்லையென்பதில் அதற்குப் பெருமை; ஏனெனில் அவ்வொன்றுமில்லாமையே அது யாவற்றிற்கும் எஜமான் என்பதற்கத்தாட்சி. "மோட்ச ராச்சியம் ஒரு நிலத்தில் மறைந்து கிடக்கும் புதையலுக் கொப்பாயிருக்கிறது; அதையொரு மனிதன் தெரிந்துகொண்டு, அதை மறைத்து சந்தோஷத்தாலேவப்பட்டுத் தன்னிடமிருப்பவற்றையெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்குகிறான். மீண்டும் பரலோக ராச்சியம் நல்ல முத்துக்களைத் தேடும் வியாபாரிக் கொப்பாயிருக்கிறது. அவன் மிக விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டபோது, தன் வழியே போய், தன்னிடமிருந்தவைகளை விற்று, அதை வாங்கினான்."

(இன்னும் வரும்.)

S. Selva Raju.

LENTEN FIRST SUNDAY'S GOSPEL.

தபசுகால முதல் ஞாயிறு.

திவ்விய பூசையில் வாசிக்கப்படும் சுவிசேஷ விளக்கம்.

அர்ச். மத்தேயு.

4.—அதிகாரம் ; வசனம்—1–11.

வசனம்.—(1). "அப்போது யேசுநாதர் பசாசினுலே சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்து சாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார்.

2. அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தபின்பு அவருக்குப் பசி யுண்டாயிற்று.

3. அப்போது சோதனை செய்வோன் அவரண்டையில் வந்து நீர் சர்வேசுரனுடைய சுதனானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

4. அதற்கு அவர் மாறுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்று புறப்படுகிற எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது என்றார்.

5. அப்பொழுது பசாசானவன் அவரைப் பரிசுத்த நகரத்திற்குத் தூக்கிக் கொண்டுபோய்த் தேவாலயச் சிகரத்தில் அவரை நிறுத்தி:

6. அவரை நோக்கி: நீர் சர்வேசுரனுடைய சுதனானால் கீழே குதியும்: ஏனெனில், அவர் உம்மைக் குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும்; உம்முடைய பாதம் ஒருவேளை கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைத் தங்கள் கரங்களிலே ஏந்திக் கொள்வார்களென்றும் எழுதியிருக்கின்றது என்றான்.

7. யேசுநாதர் அதற்கு: உன் தேவனாகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாக வென்று மீளவும் எழுதியிருக்கின்றது என்றார்.

8. பசாசானவன் மறுபடியும் அவரை எடுத்து மிகவும் உயர்ந்த ஓர் பர்வதத்தின்மேல் கொண்டுபோய், உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து,

9. நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை ஆராதிப்பீராகில் இவையெல்லாம் உமக்குத் தருவேனென்றான்.

10. அப்போது யேசுநாதர் அவனை நோக்கி: சாத்தானே, அப்பாலே போ, உன் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து அவர் ஒருவரையே சேவிப்பாயாக என்று எழுதியிருக்கிறது என்றார்.

11. அப்போது பசாசு அவரை விட்டு, அகன்று போகவே, 'இதோ தேவதூதர்கள் அணுகி அவருக்குப் பணிவிடை செய்தார்கள் :—"

நமது திவ்விய கர்த்தராகிய சேசுநாதர் யோர்தான் நதியில் அர்ச். ஸ்நாபக அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றபோது, பரலோகத்திலிருந்துவந்த சப்தத்தால், தாம் தீர்க்கதரிசனங்களால் முன்குறிக்கப்பட்டு வாக்குத்தத்தம் செய்யப்

பட்ட மெஸ்ஸியாஸ் என்று உண்மையாகவே விளங்கினார். மெஸ்ஸியாஸ் என்பவர் புது ஏற்பாட்டின் கர்த்தர். இவர் உலகத்தின் அதிபதியாக பசாசைத் தோற்கடித்து வெற்றி ஜெயம் அடையவேண்டும்.

பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தராகிய மோசேஸ் என்பவர் பத்துக் கற்பனைகளையும் மற்ற வேதப் பிரமாணங்களையும் இஸ்ராயேற் பிரசைகளுக்கு அறிவிக்குமுன், வனவாசத்திலும் உபவாசத்திலும் நாற்பது நாள் அமர்ந்து, சர்வேசுரனோடு சல்லாபித்து வந்ததுபோல், புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தரும் கர்த்தருமாகிய சேசுக்கிறீஸ்துநாதரும் தமது திவ்ய வேதத்தைப் போதிக்கிறதற்கு முன் நாற்பது நாள் தபம் செய்து பசாசோடு மல்லாடி வெற்றி மகிமை அடைவது தேவ சித்தமாயிருந்தது.

சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும் "இஸ்பிரீத்து சாந்துவினால் நிறைந்தவராய்" (லூக்காஸ் 4-அதிகாரம். 1-வசனம்) அதாவது இஸ்பிரீத்து சாந்துவின் அருட் சம்பூரணத்தால் நிரப்பப்பட்டு, அவர் மனம் பூரிக்க, தேவ மகிமையே அவருடைய மனுஷீகத்தில் துலங்க, இஸ்பிரீத்து சாந்துவின் ஏவலால் வனவாசத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.

இவ் வனாந்தரத்தின் பேர் "குவாரண்டான" சதுரிகைக் குன்று. இது ஜெரிக்கோ பட்டணத்துக்கு மேற்கே அமைந்திருந்தது. இங்கே மலைகள் சுமார் 1600 அடிமட்டும் செங்குத்தாய், கரடுமுரடாய், உயர்ந்து நிற்கும். பயிர் பச்சை, சோலைகள், தோப்புகளின்றி, மலைகளும், குன்றுகளும், ஆழமான பள்ளத்தாக்குகள், கணவாய்கள், கெபிகள், குகைகளும் நிறையப்பெற்ற, காய்ந்து வரண்ட இவ்வனாந்தரம் மிகவும் பயங்கரமாயும் கடுந்தபம் செய்ய ஏற்றதாயும் இருந்தது. இவ்விடத்தில் காட்டு மிருகங்கள், சிவிங்கி, கழுதைப்புலி, சிறுத்தை, கரடி எதேஷ்டமாய் ஆடி, ஓடி, அலைந்துதிரியும். நமதாண்டவர் இக்காட்டில் வந்தபோது ஊதற்காற்று அகோரமாய் அடித்து, மழை பெய்யும் கடுமையான குளிர்காலமாயிருந்தது.

வேதாகம புஸ்தகத்தில் நாற்பது என்னும் எண் தேவ செயல்களால் பிரபல்லியம்பெற்றது. நாற்பது நாள் ஜலப்பிரளயத்தில் ஓயாமல் மழை பெய்தது. நாற்பது நாள் மோசேஸ் சீனாயி மலையில் இருமுறை தங்கியிருந்து தேவகற்பனைகளைப் பெற்றுக்கொண்டார். நாற்பது நாள் எலியாஸ் தீர்க்கதரிசி உபவாசமாயிருந்தார். நாற்பது வருஷம், கானான் தேசம் சேர இஸ்ராயேல் சனங்கள் பிரயாணம் செய்தார்கள். நாற்பது நாள் எசேக்கியேல் தீர்க்கதரிசி யூதாவின் பாவாக்கிரமங்களைத் தன்மேற் சுமந்துகொண்டு பாவப்பரிகாரம்செய்ய கற்பிக்கப்பட்டார். நாற்பது நாள் நினிவே பட்டணத்தார் தவம் செய்ய குறிக்கப்பட்டிருந்தது. சேசுநாதர் உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாள் தமது அப்போஸ்தலர்களோடு சஞ்சாரம் செய்தார். நாற்பது நாள் ஆண்டவர் வனத்தில் தவம் செய்கிறார். இந்த நாற்பது நாளும் சேசுநாதர் தமது தேவ பிதாவோடு இரவும் பகலும் ஆழ்ந்த தியான யோகத்தில் அமர்ந்து நமது இரட்சண்ணிய வேலையையும், திருச்சபையையும் மனுக்குலத்தையும் சிந்தித்து எல்லோருக்காகவும், வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் கேட்டு மன்றாடினார்.

அவர் சலிப்படையாமல் செபத்தியானத்திலும், தேவ ஸ்துதிகளை உரைப்பதிலும் பரவசமாகி, தமது தேவ பிதாவோடு சல்லாபித்து வந்தார். சில விசை சாஷ்டாங்கமாய்த் தரையில் விழுந்து செபிப்பார். ஒருவேளை வானமண்டலத்தை அண்ணார்ந்து பார்த்து நிமிர்ந்து நின்று தியானிப்பார். ஒருவேளை உட்கார்ந்து அல்லது உலாவி நடந்து தியானிப்பார். அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. நாற்பது நாளும் யாதொன்றும் சாப்பிடவும் இல்லை, குடிக்கவும் இல்லை. தம்முடைய சரீரத்தைக் கடினமாய் ஒடுக்கி, ஒறுத்து வந்தார். இதினால் அவர் மிகவும் இளைத்துக் களைத்துப்போக, சோதனை செய்வோன் அதாவது பசாசானவன், சோதனை செய்ய தனக்கு நல்ல சமயம் வாய்த்தது என்று இவர் சர்வேசுரனோ மனுஷனோ வென்று சோதிக்கப் பஞ்சைக்

கோலமணிந்த தவசியின் வேஷங்கொண்டு அவரிடம் முடுகிச் சென்றான். ஏனெனில் பசாசானவன் அவரைச் சகல தருமிஷ்டரிலும் அதிக தருமிஷ்டரென் றறிந்தாலும் தேவசுதன் என்றறியாதிருந்தான்.

சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபோது, "இவரே என்நேசகுமாரன், இவர்பேரில் நான் பூரண பிரியமாயிருக்கிறேன்" என்று யோர்தான் நதியில் பிதாவாகிய சர்வேசுரன் வசனித்த வாக்கியத்தைப் பசாசானவன் கேட்டிருந்தாலும், தேவ இஷ்டப் பிரசாதம் நிறைந்த சுத்த மனுஷன், தேவ புத்திரனென்று சொல்லப்படுகிற பிரகாரம் புத்திரனோ, அவருடைய சுபாவமுள்ள சொந்தக் குமாரனோ வென்றறியாமல், அவர் பசியினால் படுகிற வேதனையை அறிந்து சோதிக்க மனந் துணிந்து, மனுஷ ரூபமாய்த் தெரிபட்டு சேசுநாதரிடம் அணுகிவந்தான்: "நீர் இத்தனை நாட்களாய்க் கொடிய தவஞ் செய்தீரே, இத்தனை நாட்களாய் இரா, பகலாய் நித்திரை யில்லாமல் தியான யோகியா யிருந்தீரே, நீர் பெரிய அர்ச்சியசிஷ்டவர், உத்தம தருமிஷ்டர், உம்மைப்போல் யாரும் இவ்வாறு தவஞ்செய்ததை நான் கண்டதில்லை. புண்ணியசீலர் புதுமைகள் செய்வது அவர்களுக்கு இயல்பாம். உமக்குப் புதுமை செய்யும் வரம் உண்டே. நீர் தேவ சுதனானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்று அவர் தம்முடைய திவ்ய பிதாவின் சித்தத்தின் பிரகாரமல்ல, அதற்குக் கீழ்ப்படியாமல் தமது சுய விருப்பத்தின்படி, தம திஷ்டம்போல் நடந்துகொள்ள சோதித்தான் பசாசானவன். அதற்குச் சேசுநாதர் மாறுத்தரமாக, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, சர்வேசுரனுடைய எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறான் என்று எழுதப்பட்டிருக்கிறது" என்றார். அதாவது: மனுஷனுடைய உயிர் காப்பாற்றப்படுகிறது அப்பத்தினால் மாத்திரம் அல்ல, சர்வேசுரனுடைய சித்தமானால் மற்ற எந்த விதத்தாலும் காப்பாற்றப்படலாம் என்பதாம்.

"மனிதன் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றினால், அவருடைய பராமரிப்பில் தன் நம்பிக்கையெல்லாம் வைத்து வந்தால், மனுஷனுடைய சீவியத்துக்குத் தேவையானதெல்லாம் அவர் செய்வார். புதுமை செய்யவேண்டியது அவசியமல்ல. இப்போது நான் பசியால் வருந்த வேண்டுமென்பது தேவ சித்தமானால், அவர் என்னுடைய உயிரை வேறே எந்த விதத்தாலும் காப்பாற்றலாம்" என்று வேத வாக்கியத்தை உரைத்து தேவ பராமரிப்பில் வைத்த அணைகடந்த நம்பிக்கையோடும், பூரண தாழ்ச்சியோடும் பசாசின் சோதனையை ஜெயித்தார்.

அப்போது பசாசானவன் ஆண்டவர் தேவ பராமரிப்பில் காண்பித்த நம்பிக்கையைப் பார்த்து, அவர் அதில் தப்பான செருக்குள்ள மிதமிஞ்சின நம்பிக்கை வைத்து, ஆங்காரம் கொள்ளும்படி மறுவிசையும் சோதனை செய்தான். சேசுநாதரை ஜெருசலேம் நகரத்திற்குத் தூக்கிக் கொண்டுபோய், தேவாலய சிகரத்தில் அவரை நிறுத்தி, அவரை நோக்கி: "நீர் சர்வேசுரனுடைய சுதனானால் பணியக் குதித்தருளும், அதேனென்றால்: உன் கால், கல்லிலடிபடாதபடிக்குத் தங்கள் கைகளிலெடுத்துத் தூக்கச் சர்வேசுரன் தமது தூதருக்குக் கட்டளை பண்ணினாரென்று எழுதியிருக்கிறது" என்றான்.

அதாவது. "உம்மை மெஸ்ஸியாஸ் என்றும் இஸ்ரயேல் அரசர் என்றும் எல்லோரும் உம்மை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள, நான் நல்ல உபாயம் ஒன்று சொல்லுகிறேன். இதோ! ஜெருசலேம் பட்டணத்தில் இந்தச்சிறப்பலங்காரம் பெற்ற ஆலயத்தின் உச்சியிலிருந்து நீர் கிழே குதித்தால் சம்மனசுகள் உம்மைத் தங்கள் கரங்களில்ஏந்திக்கொண்டு தேவாலயத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அங்கே, யூத குருக்களும், ஜனங்களும் நீர் பரலோகத்தினின்றிறங்கின மெஸ்ஸியாஸ்—அரசன், என்று உம்மை வாழ்த்தி ஸ்துதித்து உடனே தங்களுடைய இராஜாவாக மகிமையோடு ஏற்றுக்கொள்வார்கள். உடனே இச்சங்கதி எங்கும் பிரபல்லியமாகும். உம்முடைய இராச்சியத்தைச் சுலபமாய் எங்கும் ஸ்தாபிக்கலாம்" என்று சேசுநாதரை வீண்பெருமையால் சோதித்தான். என்பதாம்—அதற்கு நமதாண்டவர் பிரதிவாதித்து: "சர்வேசுரன்பேரில் நம்பிக்கை வைக்கவேண்டும்; ஆனால் அவசரமில்லாமல் தன்னை ஆபத்தில் உட்படுத்தி வீண் நம்பிக்கைவைத்து, வீண் பெருமையால் அவருடைய ஒத்தாசையைப் புதுமையால் எதிர்பார்ப்பது தகாது" என்று உன் கர்த்தாவான சர்வேசுரனைச் சோதியாதே யென்று வேதத்தில் எழுதியிருக்கிறதை உரைத்து மறுவிசையும் ஜெயித்தார்.

பசாசானவன் மறுபடியும் அவரைத் தூக்கிக்கொண்டு அந்த வனாந்தரத்திலுள்ள மிகவும் உயர்ந்த பர்வதத்தின்மேல் கொண்டுபோய், ஒரு க்ஷணப்பொழுதில் உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமை, சிறப்பு, சொகுசு, செல்வாக்கு, சிங்கார அலங்கார மகத்துவ பெருமைகளையும், சம்பத்து செல்வங்களையும், இன்ப சுகபோகங்களையும் அணியணியாய், மாயகாட்சியாய், அவருடைய கண்களுக்கு முன்வைத்து, "இவைகளெல்லாம் எனக்குச் சொந்தம். பூலோகத்தின் அதிபதிநான்; இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்; என்னைச் சாஷ்டாங்கமாய் விழுந்து ஆராதியும்" என்று சர்வேசுரன் ஒருவருக்கே செலுத்தவேண்டிய தேவாராதனையைத் தனக்குச் செலுத்தும்படி சோதித்தான். அதற்கு சேசுநாதர், அவனுடைய தந்திர கபட மாய்கையின் வலையில் அகப்படாமல், "சாத்தானே அப்பாலே போ. உன் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து, அவர் ஒருவரையே சேவிப்பாயாக வென்று எழுதியிருக்கிறது" என்று மூன்றாவது விசையும் வேதவாக்கியத்தை மொழிந்து, பசாசைக் கடிந்து முனிந்து விரட்டி ஓட்டிவிட்டார். பசாசானவன் மும்முறையும் வெல்லப்பட்டு, வெட்கி, நாணி, முகங் கவிழ்ந்து, ஓடி மறைந்தான்.—உடனே அந்த வனாந்தரம், ஓர் மோட்சம்போல் மாறினது. ஒரு பிராணியும் இல்லாத அந்தக்காட்டில், சம்மனசுகள் அணியணியாய் வந்து நமது தேவ ஆண்டவரைச் சூழ்ந்து கொண்டார்கள். தேவ ஸ்தோத்திர கீர்த்தனைகளையும் மெஸ்ஸியாவைப் பற்றிய சங்கீதங்களையும் இன்புற்று அன்புற்றுப் பாடினார்கள். சேசுவைப் போற்றிப் புகழ்ந்து வியந்து வாழ்த்தி ஆராதித்தார்கள். மிகவும் ருசிகரமான வானலோக உணவைக் கொண்டுவந்து ஆண்டவருக்குக் கொடுத்து அவருடைய பசியையும் களையையும் ஆற்றினார்கள். அவருக்குச் சகலத்திலும் பணிந்து பணிவிடைசெய்து அவரைக் கன்னியப் படுத்தினார்கள்.

ஏது நிமித்தமாய் நமதாண்டவர் பசாசைத் தம்மிடத்தில் வரவும் தம்மைச் சோதிக்கவும் விட்டாரோ வென்று கேட்கும் எவனும்—முதலாவது: தருமவழியில் மனுஷன் உட்பட்டதின்பின் னவனுக்குச் சோதனையும் கஸ்தியும் போராட்டமும் உண்டென்று காண்பிக்கவும், இரண்டாவது: நாம் அப்படிப்பட்ட ஞானப்போரில் பேய்ச் சோதனை முதலான பல கஸ்திகளால் பீடிக்கப்படும்போது நமதுபேரில் மன மிரங்கி யுதவி பண்ணியருளவும் தாமந்தக் கஸ்தியைப்படத் திருவுளமானாரென்று—அறியக்கடவான். ஆனால் பசாசு, தேவ மனுஷனான கிறீஸ்துநாதரிடம் வரவும், அவரைச் சோதிக்கவும் தேவமகிமைக்குப் பொருந்துமோ வெனில்: பசாசின் தாசரான துஷ்ட மனுஷரால் மிதிபடவும் அடிபடவும், கொலையுண்டு சாகவும் மனுக்குல இரட்சண்ணியத்துக்காக அவர் திருவுளமானபோது, துஷ்டருடைய தலைவனான பசாசினால் அவர் சோதிக்கப்பட்டது நம்மால் அதிசயிக்கப்படத்தக்கதல்ல.

தமது மரணத்தினால், நமது மரணத்தை வெல்ல வந்தபிரகாரம் தாம்பட்ட சோதனைகளினால், நம்முடைய சோதனையை ஜெயிக்க சித்தமானாரென்று அர்ச். கிரேகோரியுவென்கிற பாப்பு மொழிகிறார். இதல்லாமல் அந்தச் சோதனையெல்லாம் புறத்திப் பேச்சிலிருந்ததல்லாதே அதின் அற்பவாசையும் விருப்பமும் அதிபரிசுத்தராகிய அவருடைய இருதயத்தில் உட்படவில்லை யென்று அந்தப் பாப்புதானே கூறுகிறார். பசாசு அவர் தேவகுமாரனோ அல்லவோ வென்றறிய முயன்றாலும், அதை அறியமாட்டாதே வெட்கிப்போனது. வனாந்தரத்தில் சேசுநாதர் செபித்தார், தபஞ்செய்தார், சோதனை அனுபவித்தார். ஒவ்வொரு கிறீஸ்துவனும் இந்தப் பூலோக பாலைவனத்தில பரதேசியைப்போல் யாத்திரையாகப் பிரயாணம் செய்யுமட்டும் செபிக்கவும் தவஞ் செய்யவும், சோதனை அனுபவிக்கவும்

வேண்டும் செபிப்பதில் நாம் சலிப்படையலாகாது. இடைவிடாமல் செபஞ் செய்யுங்கள் என்று நமதாண்டவர் தம் வாக்கினாலும் திவ்விய மாதிரிகையினாலும் நமக்குக் கற்பிக்கிறார். நாம் செபித்தால் சந்தேகமின்றி இரட்சண்ணியம் அடைவோம். நாம் செபிக்காவிட்டால் சந்தேகமின்றி இரட்சண்ணியம் அடையமாட்டோம்.

தவமும் நமக்கு மிகவும் அவசரமானது. நமது பாவ சரீரத்தைத் தவத்தால் ஒறுத்து அடக்கி ஆளவேண்டும். சேசுநாதர் நாற்பதுநாள் செய்த கடுந்தவத்தின் மாதிரிகையால் திருச்சபை நமக்குத் தபசு காலத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் காலத்தில் நாம் ஒருசந்தி உபவாசக் கடன்களைச் சுமுத்திரையாய் அநுசரிக்கவேண்டும். நமது சரீரத்தை எவ்வளவு ஒறுத்து அடக்கி வெறுத்துத் தாழ்த்துவோமோ அவ்வளவும் நமது ஆத்துமம் பலப்படும், புண்ணியத்தில் வளரும், தேவ வரங்களும் தேவ ஆறுதல்களும் ஏராளமாய் அருளப்படும். அர்ச். பெர்நார்து உரைத்த வாக்கியப் பிரகாரம், நமது உடலை வாட்டவேணுமேயன்றி அதைச் சிதைக்கலாகாது. அதனை ஒடுக்கத் தகுமேயன்றி யுடைக்கலாகாது. அது மோகரித்துயர்ந்து அதிகாரஞ்செலுத்தாதபடி அதனைக் கீழ்ப்படுத்த வேண்டும்.

நாம் சோதனையும் அனுபவிக்கவேண்டும். இப்பூலோகத்தில் சோதனையின்றிச் சீவிக்க எவராலும் முடியாது. சாதாரணமாய்ப் பசாசு சேசுநாதரைச் சோதித்ததைப்போல் நம்மை மூவித சோதனைகளால் சோதிக்கின்றது. சரீர இன்ப சுகங்களின் சோதனையாலும், வீண்மகிமை பெருமை சோதனையாலும் உலகசொத்து உடைமைகளின்மேல் பேராசை சோதனையாலும் மனிதர்களைப் பசாசு சோதித்து அலைக்கழிக்கின்றது. இந்தச் சோதனைகளுக்கு நேர் விரோதமாய் ஒறுத்தல் முயற்சியாலும் தாழ்ச்சியாலும், மனத்தரித்திரத்தாலும், எல்லாத்துக்குமேல் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்வதில் பத்தி சுறுசுறுப்பாலும் தேவ சிநேகத்தாலும், தேவ வரப்பிரசாத உதவியைமன்றாடி ஜெயிக்க முயலவேண்டும்.

பசாசோடு நாம் வாதாடி காலம்போக்காமல் உடனேக்குடனே வேத வாக்கியத்தின் உதவியால் பேய், உடல், வையகமென்ற சத்துராதிகளையும், சம்பத்து, சம்மானம், சம்போகம் என்ற ஆசை வினையங்களையும் ஜெயித்தால், சம்பாவனை அடைவோம். சம்மனசுகள் நம்மைச் சூழ்ந்து, நம்மை மகிமைப்படுத்துவார்கள். இப்பூலோகத்தில் ஞான ஆறுதலையும் மனச் சமாதானத்தையும், ஏராளமான வரப்பிரசாதங்களையும் சேசுநாதரின் உருக்கமான அன்பு நேசத்தையும், ஆசீர்வாதத்தையும், மறுலோகத்தில் நித்தியானந்த பாக்கிய மகிமையையும் சுகித்தனுபவிப்போமென்றறியக்கடவோம்.

S. M.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

40-ம் அதிகாரம்.

எஜமானே, எந்தச் சண்டாளப்பாவி இந்தப் பஞ்சவர்ணக்கிளி கழுத்தை முறித்தானோ தெரியாது.

(முன் தொடர்ச்சி.)

பண்டிதர் உயிரற்றுக்கிடக்கும் தன் மனைவியின்மேல் விழுந்து சொல்லமுடியாத துக்க துயரத்துடன் அழுது பிரலாபித்தபின் எழுந்து அவள் பக்கத்தில் முழங்கால்படியிட்டு, "என் உயிருக்கு உயிராயிருந்த ருக்மணீ! இனி உன்னை விட்டு எப்படிப் பிரிந்திருப்பேன்? உன்னைக் கொலை செய்தவன் என்னையும் கத்திக்கு இரையாக்கக் கூடாதா? ஐயையோ! என் மாமிசத்துக்கு மாமிசமும் இரத்தத்துக்கு இரத்தமுமா யிருந்த என் உயிரே! என் கண்மணீ! இனி நான் போகும் போக்கேது?

உன்னை யென்னிடம் உன் பெற்றோர் அனுப்பிவைத்தபோது எங்களுக்குப் பதிலாக நீங்களே இவளைக் காப்பாற்றி யிரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லி உன்னை யென்கையில் ஒப்புக் கொடுத்தார்கள். ஆ! ருக்மணீ, உன் பெற்றோருக்கு நான் என்ன மறுமொழி சொல்வேன்? அவர்கள் இங்கே வரும்போது அவர்கள் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்?

நமதூருக்கு இன்று புறப்படும்படி சகலமும் முஸ்திப்பா யிருக்கிறதே! ருக்மணீ! உன் தாய் தந்தையருக்கும் கூடப்பிறந்தவர்களுக்கும் ஸ்நேகிதர்களுக்கும் நீ பரிசு கொடுக்கும்படி வாங்கின விலை யுயர்ந்த வஸ்திராபரணங்களும் அரிதான பூஷணங்களும் உன் கையாலேயே பத்திரமாய்க் கட்டி தயார்படுத்தியிருக்கும் பெட்டிகளை யிதோ பார்க்கிறேன்!

உன் அன்னியோன்னிய புருஷனும் மாமிஸத்துக்கு மாமிஸமும் இரத்தத்துக்கு இரத்தமுமாயிருந்த எனக்கு ஒரு வார்த்தையும் சொல்லாமலே உன் சொந்த வீடாகிய மோக்ஷம்போய் சேர்ந்துவிட்டாயே ருக்மணீ!" என்று வெகுநேரம் அழுது பிரலாபித்தபின்:

ஆ! ஸ்வாமீ! என் தேவனே! நீர் எனக்குத் துணைவியாகக் கொடுத்த இந்தப் பெண்மணியை குறையறக் காப்பாற்றிவந்தேன். எங்கள் விவாக நாளில் நான் தேவரீருக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டைக் குறையற நிறைவேற்றினேன். நான் அவளுக்கு உகந்த புருஷனாய் நடந்து வந்தேன். இப்போதோ அவள் என்னைவிட்டுப் பிரிந்ததை என்னால் பொறுக்கக்கூடவில்லை! என் சக்திக்கு மிஞ்சினதாகக் காணப்படுகிறது!

இது எனக்குச் சுமக்கக்கூடாத சுமையாகவும் சகிக்கக்கூடாத வேதனையாகவும் இருக்கிறது. ஆனால் உமது திருச்சித்தமின்றி யிது சம்பவிக்கவில்லையென்று என் முழுமனதுடன் நம்பி உமது திருவுளத்துக்கு அமைந்து கீழ்ப்பட்டிருக்கின்றேன், என்று தலைகுனிந்து தரையை முத்திசெய்து எழுந்தார். எழுந்தவுடனே, அந்த வீட்டில் போடப்பட்டிருந்த இரத்தினக் கம்பளமும் ஆங்காங்கு கிடந்த புஸ்தகங்களும் பத்திரிகைகளும் இரத்தத்தில் நனைந்து உறைந்திருக்கிறதைக் கண்டு, வாய் திறவாமல் உயிரற்றுக் கிடக்கும் தன் பிரிய பத்தினியைப் பார்த்து, ஏராளமாய்க் கண்ணீர் சிந்தி, மறுபடியும் அவள் பக்கத்தில் முழங்காலிலிருந்து அவளுடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காகச் சிலநிமிஷ நேரம் செபித்து எழுந்தார்.

எழுந்து, ஒரு மூலையில் விம்மி அழும் சத்தத்தைக்கேட்டு, அந்தப் பக்கமாய் கண்களைத் திருப்ப, அங்கு இருப்பவள் பங்காரம்மாளென்று கண்டு: புங்காரம்மா உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ருக்மணி யெங்கே?

ஐயையோ! இந்த வீட்டின் தீபம் அணைந்து போயிற்றே; கருங்குயிலைப்போல இனிய தொனியுடன் பாடும் என் ருக்மணியின் சத்தத்தை இனி யெப்போது கேட்பேனோ? மயிலிலும் சுந்தரமான அவளுடைய முகத்தை யினி எப்போது பார்ப்பேன்? இந்த பங்களாவுக்கு சூரிய கிரகணமுண்டாகி நித்திய இருளாய்விட்டதே!

உன்கையில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளையை இப்படித்தானோ காப்பாற்றுகிறதம்மா? சண்டாளப்பாவியின் கத்திக்கு இரையாகத்தானோ உன் கையில் அவளை ஒப்புவித்தேன்?

பங்.-(சத்தமாய் அழுதுகொண்டு) என் எஜமானே! எந்தச் சண்டாளப்பாவி இந்தப் பஞ்சவர்ணக்கிளியின் கழுத்தை முறித்தானோ தெரியாது! நடுச்சாமவேளையில் ஒரு படுபாவி செய்திருக்கவேண்டும் இப்பெரும் பாதகத்தை!

பண்.—நேற்று நான் வீட்டைவிட்டு புறப்பட்டபின் எதாகிலும் விசேஷம் நடந்ததா பங்காரம்மா?

பங்.—அநேக விசேஷங்கள் நடந்ததையா!

பண்.—நடந்ததெல்லாம் சொல் அம்மா! தாமதியாதே, எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்.

பங்.—நீங்கள் நேற்று வீட்டைவிட்டு மீனாட்சி யென்பவளிடம் போனதைப்பற்றி அந்தம்மாள் மெத்த விசனப்பட்டார்கள்.

பண்.—நான் மீனாட்சி வீட்டுக்குப் புறப்பட்டுப்போனது ருக்மணிக்கு எப்படித் தெரியும்?

பங்.—அந்த மீனாட்சி உங்களுக்கு எழுதிய கடிதம் அம்மாள் கையில் இருந்தது; அதை யெனக்கு வாசித்துக் காட்டினார்கள்.

பண்.—அது அவள்கையில் எப்படிவந்தது? அது என்னிடமிருக்கிறதே (என்று சட்டை சாக்கில் கைவிட்டுப் பார்த்து, அது அகப்படாதபடியால்) அது கைதவறி யிங்கேயே விழுந்திருக்கலாம்.

பங்.—அதோ கட்டில் பக்கத்தில் விழுந்து கிடக்கிறது அந்தக் கடிதம்! அதுவும் இரத்தக் கறை பிடித்திருக்கிறது.

பண்.—அப்படியா! (என்று அதை யெடுக்கப் போனபோது:)

போலீஸ் ஆபீசர்.—"அதைத் தொடாதே, இந்த வீட்டுக்குச் சர்க்கார் முத்திரை இடப்பட்டிருக்கிறது.

பண்.—(பங்காரம்மாள் பக்கமாய்த்திரும்பி) அதன்பின்?

பங்.—என்னால் கூடியமட்டும் அம்மாளை ஆற்றித்தேற்றியும், ஆறுதலடையாமல் வேலைக்கார முனியம்மாளையும் ஸரஸ்வதியையும் வரவழைத்துக்கொண்டார்கள். அவர்களுக்குள் என்ன பேச்சு நடந்ததோ எனக்குத் தெரியாது.

ஆனால் அவர்கள் இருவரும் வெளியே போனபின், அம்மாள் என்னை வரவழைத்து, "நான்கெட்டேன், பங்காரம்மா, அந்த இரண்டு ஸ்திரிகளால் கெட்டேன். இப்பேர்ப்பட்ட துஷ்டைகள் என்று அறியேன். நான் அந்தக் கடிதத்தை அவர்களுக்குக் காட்டியபோது, ஆற்றிலாகிலும் குளத்திலாகிலும் விழுந்து சாகும்படிக்கும் . அப்படிச் சாக பயப்பட்டால் வீட்டிலுள்ள ஆஸ்திபாஸ்தி யெல்லாம் எடுத்துக்கொண்டு தூரதேசத்துக்கு ஓடிப்போகவும் அவர்கள் எனக்குத் துற்புத்தி சொன்னார்கள்." என்று எனக்குத் தெரிவித்தார்கள்.

பண்.—பிறகு?

பங்.—அந்த இரண்டு ஸ்திரிகள் கொடுத்த கெட்ட புஸ்தகங்களை வாசித்து அவர்களுடைய துர் ஆலோசனையைக் கேட்டதினால் நான் இப்படிக் கெட்டுத் தேவனுக்கும் மனிதருக்கும் துரோகம் புரிந்தேன். இப்போது என் தப்பிதத்தைக் கண்டுகொண்டேன். நாளைகாலையில் அந்தப் புஸ்தகங்களை நெருப்பில்போட்டு சுட்டெரிப்பதுடன் ௸ ஸ்திரிகள் என் வீட்டுக்கு இனி வரச்சம்மதியேன் என்றுஞ் சொன்னார்கள்.

பண்.—இருக்கலாம். சிலகாலமாய் ருக்மணி சற்று விபரீத குணமுள்ளவளாய்க் காணப்பட்டாள். மேலும் வேதவிஷயத்தில் அக்கரையற்றவளாயு மிருந்தாள்.

பங்.—நேற்று இராத்திரி படுக்கப்போகிறதற்குமுன் நமது கோவிலுக்கு என்னுடன் போய் வெகுநேரம் செபித்துத் தம் தப்பிதங்களுக்காக மகா மனஸ்தாபப்பட்டு மறுநாள் கோவிலுக்குப்போய் பாவசங்கீர்த்தனஞ் செய்து, முன்போல தர்மவழியில் நடப்பேன் என்று சர்வேசுரனுக்கு உறுதியான வாக்குக் கொடுத்தார்கள்.

பண்.—பங்காரம்மா! இப்போது நீ சொன்ன வசனத்தால் என் இருதயத்திலுண்டான துக்கம் குறைந்து ஆறுதல் உண்டாகிறது. ருக்மணி தன் தப்பிதங்களுக்கு மனஸ்தாபப்பட்டு கொலையுண்டதால் அவள் துர் மரணம் அடையவில்லை யென்று நம்ப இடமுண்டு.

ஆகையால் சர்வ ஜீவதயாபர சர்வேசுரனுக்கு மகிமையும், அவருடைய மாசற்ற கன்னித்தாயாருக்கு ஸ்தோத்திரமும் உண்டாவதாக என்றுமொழிந்தார்.

அப்போது போலீஸ் ஆபீசர். "போதும் போதும் இதெல்லாம் வெறும் மாயையும் பாசாங்குமே ஒழிய வேறல்ல. இனி உன் பேச்சை அடக்கு ஓய்!" என்றார்.

பண்.—(துக்கத்தோடும் கோபத்தோடும் அந்த ஆபீசர் பக்கமாய்த் திரும்பி) எதுபாசாங்கு? எது மாயை? சொல்லும் பார்க்கலாம்.

போ. ஆபீ.—நீ யின்னேரம்பேசின பேச்சில் அற்ப நிஜமுண்டோ? முடிச்சு அவிழ்க்கியே, எல்லோருக்கு முன்னே, "திருடன் திருடன் என்று அபயசத்தமிட்டுக் கத்துவான்" என்பது போல, இப்போது நீ யென்ன கள்ளவேஷம் போட்டாலும் உன் தலைமேலிருக்கும் பழி நீங்குமா? நீங்காது.

பண்.—நீர் பேசும் பேச்சின் அருத்தம் எனக்கு விளங்கவில்லை; விளங்கச் சொல்லும்.

போ. ஆ.—உனக்கு இப்போது விளங்குமா? விளங்காது. இராத்திரிக்குப் போலீஸ் ஸ்டேஷனில் இப்போது நான் விளம்பியதெல்லாம் தீர்க்கமாய் விளங்கும்.

பண்.—நீ கிரகஸ்தனும் எதார்த்தவாதியுமானால் இப்போதே சொல். அந்தகாரமடங்கிய இராவேளையானது பசாசும், பூதமும் வேலைசெய்யத்தக்க சமயம்!

போ. ஆ.—நீயே உன் பெண்சாதியைக் கொலை செய்துவிட்டு இப்போது பித்தனைப்போல உளறி புலம்பினால் அந்தப் பழி உன்னைவிட்டுத் தொலையுமோ? அல்லது நீதி உன்னை விட்டுவிடுமென்று எண்ணுகிறாயோ? அந்தப் பருப்பெல்லாம் வேகாது இங்கே. உன் பாதகத்தை ஒத்துக்கொண்டு நீதிக்கு உன்னைக் கையளிப்பதே உத்தமம். அப்படிச் செய்யாமல், அவர்கள் இவர்கள்மேல் பழிபோடுவாயாகில் அதனால் வரும் சம்பாவனையை முழுதும் பெற்றுக்கொள்வாய்.

பண்.—(மகா கோபத்துடன் போலீஸ் ஆபீசர் பக்கம் திரும்பி) நீ தானோ நீதி பரிபாலிக்கும்

உத்தியோகஸ்தன்? என் மனைவியை இழந்து பரதவிக்கும் எனக்கு நீ வருவிக்கும் ஆறுதல் இதுதானோ? என் மனைவியைக் கொலைசெய்த பாதகர்களில் நீயும் ஒருவனா யிருக்கவேண்டும், அல்லது அவர்களுக்குத் துராலோசனை கொடுத்த கர்த்தாவா யிருக்கவேண்டும். உன் பேச்சே இதற்கு அத்தாக்ஷி! வேறு ருஜு வேண்டியதில்லை (யென்று பேசும்போது, அந்தப்போலீஸ் ஆபீசருடைய முகத்தில் மாற்றங் காணப்பட்டு) 'பார்க்கலாம் பார்க்கலாம்' என்றார்.

போலீஸ் ஆபீசர் பண்டிதர்மேல் அனியாயமாய்க் குற்றஞ் சாற்றுவதைக்கண்ட அங்கு கூடியிருந்த திரளான ஜனங்கள் போலீஸ்காரனை யிகழ்ந்து வாய்க்குள் திட்டிக்கொண்டார்கள். வேறு சில வாலிபர் சிரித்துக்கொண்டு ஈசெல் கொட்ட ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட போலீஸ் ஆபீசர் கைக்கெடியாரத்தை யெடுத்துப் பார்த்து, "ஸைலென்ஸ், பேசாதேயுங்கள், மாஜிஸ்ற்றேட் வர நேரமாய்விட்டது" என்றார்.

இப்போது பேசிய போலீஸ் ஆபீசர் செங்கல்பட்டு ஜில்லாவின் டெப்டி சூப்பரின்டென்டென்டாரே யாவர். மேலும் பண்டிதர் மதுராந்தகத்தில் அன்று காலையில் வண்டி யேறினபோது அவருடன் பிரயாணஞ்செய்த பிரயாணி மெய்யான பிரயாணியல்ல. ஆனால் அவர் போலீஸ் டிடெக்டிவ்—அதாவது களவு முதலியவற்றைக் கண்டுபிடிப்பதற்காகவும், திருடர், கொலைபாதகர் முதலிய குற்றவாளிகளை உபாயமாய்த் தேடிப் பிடிப்பதற்காகவும் போலீஸ் உடுப்பின்றி சாதாரண வஸ்திரம் தரித்துக்கொண்டு போகும் போலீஸாருக்கு டிடெக்டிவ் என்று பெயர். முன்சொன்ன போலீஸ் டெப்டி சூப்பரின்டென்டென்டே ௸ டிடெக்டிவைப் பண்டிதரிடம் அனுப்பி அவர் குடும்பத்திலுள்ள குற்றங் குறைகளை அறியும்படி கற்பித்தார்.

துன்பப்பட்டாலும், வாய் திறவாமல் மௌனமாயிருத்தல், ஓர் தெய்வீக சாஸ்திரம். பிறர் ஆறுதலைத் தேடுவது அப்புண்ணியத்துக்கு ஊனமாகும். பிறர் தன் குறைகளை வெளிப்படுத்தாமையினாலேயே உன்னைவிட சொற்பமான துன்பத்தை அநுபவிக்கிறார்களென நினைப்பது பிசகு.

வீண் பார்வையிலும், வீண் கேள்வியிலும், வீண் வாசிப்பிலும், விசேஷமாய் வீண் பேச்சிலும் பொழுது போக்காதே.

HOW TO RAISE OUR STATUS?

நாம் முன்னேறுவ தெப்படி?

ஏழாம் வியாசம்.

மதுவிலக்கு.

கல்வி யறிவைக் கெடுத்திடுமே—உன்றன்
கன நலமெல்லாம் அழித்திடுமே
செல்வ னென்ற பேரைப் போக்கிடுமே பின்பு
சிறியனாக்கும்.—மதுபானம்.

சென்மப்பாவ தோஷத்தோடு பிறந்த மனிதர் யாவரும் பாவச் சார்பு கொண்டவர்களாய் விழுவதும் எழுந்திருப்பதுமாயிருந்து, படிப்படியாய்ச் சாங்கோபாங்கத்தில் தேறி உத்தமதனத்தை யடைந்து வந்தபோதிலும், தாங்கள் மரணமடையுந் தருவாயில் பரிசுத்த அந்தஸ்திலிருந்து மரண மடைந்தாலன்றி, மற்றப்படி அவர்கள் இரட்சண்யம் அடைவார்களென்று சொல்லமுடியாது. மரித்தபிறகு மாத்திரம் அவர்கள் இரட்சண்ய பாக்கியத்தை தங்களுடைய பரிசுத்தத்தனத்திற்குத் தக்கபடி மறுலோகத்தில் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் புரோட்டெஸ்டாண்டு உட்பிரிவுகளுள் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாகிய சால்வேஷன் ஆர்மி அல்லது இரட்சண்ய சேனையார் தாங்கள் செய்யும் பிரசங்கங்களில் நாங்கள் இரட்சண்ய மடைந்தோம் என்று ஓரே கண்டிப்பாய்ச் சொல்லுவதைப் பலர் கேட்டு இதென்னவிந்தை யென்று அதிசயங் கொள்ளக்கூடும்.

(Max Orell) மாக்ஸ் ஓரேல்என்னும் மறை நாமம் கொண்ட ஓர் ஐரோப்பிய சாஸ்திரியார் மேற்படியாரை ஏளனம் செய்து, இவர்கள் இரட்சண்ய மாத்திரைகள் செய்து, சரசமான விலைக்கு விற்று வந்தால், அநேகர் அவைகளை வாங்கி உபயோகித்து "ஐயாவே, தாங்கள் அனுப்பிய இரட்சண்ய மாத்திரைகளை இராத்திரி படுக்குமுன் சாப்பிட்டேன்; பாவியாய்ப் படுத்த நான், பரிசுத்தவானாயாய் இன்று காலையில் எழுந்தேன். என் சிநேகிதன் ஒருவன் கெட்ட பாவி; அவனும் இரட்சண்யமடைய ஒரு பெட்டி மாத்திரைகளை V. P. இல் இக்கடிதம் கண்டதும் அனுப்புங்கள்" என்றும் அல்லது இதைப்போ

லொத்த விதமாகவும் அவனவனும் அவர்களுக்கு எழுதுவானென்று சொல்லுவார்.

அஷ்ட தரித்திரத்தைப் போக்கிக் கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய்த் தனவந்தர்களாக அநேகர் கையாடி காரிய சித்தி யடைந்த கைகண்ட முறையை இச்சஞ்சிகையில் காட்டுவதாக நான் ஐந்தாம் வியாசத்தில் சொல்லியபோது, இப்படிப்பட்ட மாத்திரைகளில் ஏதோ ஒன்றைச் சொல்ல வந்தேனென்பதன்று. நான் சொல்லும் முறை யேதெனில் மதுவிலக்கு தான்.

மது என்னும் கள்ள நாமந் தரித்திருக்கும் குடி யென்னும் பசாசு உலகத்தின் அஷ்ட திசைகளிலும்போய் மானிடரைத் தன் வலைக் குட்படுத்தி பெரியோர் என்றும், சிறியோர் என்றும், கற்றோர் என்,றும், மூடர் என்றும், ஆண் என்றும் பெண் என்றும் பாராமல், அனைவரையும் கெடுத்து நாசப்படுத்தி வருவதை அறியாதவர் யார்? இதனால் வருவதெல்லாம் நஷ்டமேயன்றி வேறன்று. ஆத்தும நஷ்டம், சரீர நஷ்டம், செல்வ நஷ்டம், மான நஷ்டம்; ஆகிய இவைகளே. மனிதர் அதன் வசியத்திற்கு எவ்வளவாக உட்பட்டுவிட்டார்களென்றால், கஞ்சிக்கு உப்பும், காப்பிக்குப் பாலும், சோற்றுக்குக் குழம்பும் எவ்வளவு அவசியமோ அதிலும் அவசியம் குடியென்று நினைக்கிறார்கள். ஆகவே, விழித்திருக்கக் குடிக்கிறேனென்பார் சிலர். தூக்கம் வரக் குடிக்கிறேனென்பார் சிலர். சந்தோஷமென்று குடிக்கிறேனென்பார் சிலர். துக்கமென்று குடிக்கிறேனென்பார் சிலர். உஷ்ணமென்று குடிக்கிறேனென்பார் சிலர். குளிரென்று குடிக்கிறேனென்பார் சிலர். வாலிபப் பருவத்தைப்பற்றிக் குடிக்கிறேனென்பார் சிலர். விருத்தாப்பியமென்று குடிக்கிறேனென்பார் சிலர். ஜனக்கூட்டத்தைப்பற்றிக் குடிக்கிறேனென்பார் சிலர். தனியா யிருப்பதைப் பற்றிக் குடிக்கிறேனென்பார் சிலர். என்னத்திற்கென்று தெரியாமல் குடிக்கிறேனென்பார் பலர். ஆனால் குடியி னகோரம் இப்போதுதான் உலகத்திற்கு வெட்டவெளிச்சமாய்த் தெரியவருகிறது. குடிகெட்டதென்று குடும்பங்களில் சொல்லுவார்கள், கோவில்களில் சொல்லுவார்கள், கூடும் சிறிய சங்கங்களில் சொல்லுவார்கள், பொது மஹா ஜன சபைகளில் சொல்லுவார்கள். இப்போதோ பார்லிமென்டு என்னும் மந்திராலோசனை சபைகளில் சொல்லுகிறார்கள். ராஜாங்கங்களில் சொல்லுகிறார்கள். உலகமே சொல்லுகின்றது. தற்போது நடந்து வரும் யுத்தம் ஜெர்மனியரோடு மாத்திரமன்று குடியோடுந் தான் என்று அநுபவ ஞானிகள் தீர்மானிக்கிறார்கள். ருஷியா, பிரான்சு முதலிய தேசங்களில் குடியை அடியோடு ஒட்டத் தீர்மானித்தார்கள். இங்கிலாந்திலும் அப்படிப்பட்ட முயற்சி நடந்து வருகிறது. குடி, தேச விருத்திக்கும், குல விருத்திக்கும், செல்வ விருத்திக்கும் ஒரே வார்த்தையில் எவ்விதமான நல விருத்திக்கும் விருத்தமானதென்பதற்கு இதிலும் வேறு சாட்சி என்ன தேவை?

நமது குலத்தாருள்ளும், அநேகர் அஷ்ட தரித்திரராயும் ஒழுக்கக் குறைவுள்ளவர்களாயும், வேதாப்பியாச மில்லாதவர்களாயும், முன்னுக்கு வரவேண்டுமென்னும் ஆவலின்றி அசமந்தர்களாயுமிருப்பதற்கு அப்பாழுங் குடியென்னும் நாசகாலனே காரணமென்று கொஞ்சமாவது அநுபோகமுள்ளவர்கள் திட்டமாய்ச் சொல்லக்கூடும். இதைப் பன்னிப் பன்னிப் பேசுவது அவசியமில்லை. சேற்றில் கிடக்கிற பன்றிக்கு அச் சகதியின் அசங்கியம் தெரியாதிருக்கலாம்; ஆனால் குடியின் படுகுழியில் விழுந்திருக்கும் குடியர்கள், ஒரு வேளை யில்லாவிட்டாலும் ஒரு வேளை, குடி கெட்டதே கெட்டது என்று வாய் தப்பிச் சொல்லிவிடுவார்கள்.

சருவஜீவ தயாபரக் கடவுள் நமக்கும் எல்லாம் சரியாய் அமையப்பெற்ற சரீரத்தையும், திடகாத்திர பலத்தையும், புத்தி ஞானத்தையும், நமது நிலைமையை உயர்த்திக்கொள்ளவேண்டிய சுதந்திரத்தையும் அருள்புரிந்திருக்கிறார். பொதுவாய் யாவரும் அவருடைய சித்தத்திற்கமைந்து தங்கள் தங்கள் அந்தஸ்திற் கேற்றபடி நல்ல சமுசாரிகளாய் ஜீவித்து சுகத்துடன் வாழக்கூடும், ஆனால் குடியுடன் செய்யும் சகவாச தோஷத்தினால், அவர்களுக்குச் சதா தரித்திரம். உண்ண உணவுக்கென்றும், உடுக்க உடைக்கென்றும், குடும்ப போஷணைக்கென்றும் கடவுள் அருளும் மாதாந்திர வருமானத்தில் அல்லது சம்பளத்தில் மிகுதியான பாகத்தைச் சாராயக்காரனுக்குத் தாரைவார்த்தால், மீந்த சொற்பம் இந்த கஷ்டகாலத்தில் எதற்குத்தான் பற்றும். குடியும் தரித்திரமும் ஒரே தாய்க்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். வீட்டில் ஒழியாத சண்டை. குடும்பத்தில் சமாதானம் கிடையாது. அநேக சமயங்களில் சமுசாரப் பிரிவு. பிள்ளைகளைப்பற்றி விசாரணையில்லை. அவர்கள் நாயைப்போல் திரிந்து பானை திறக்கிற நேரம் பார்த்துப் பக்குவமாய் வந்து கிடைத்ததை விழுங்கிவிட்டு நழுவிவிடுவார்கள். குடும்பப் பொதுஜெபம் கிடையாது. குடியன் வீட்டில் ஜெபமும் உண்டா? பிள்ளைகளுக்குப் படிப்பு கிடையாது. பெற்றோரோ, பிள்ளைகளோ கோவிலுக்குப்போவதோ, ஆயத்தஞ் செய்வதோ அபூர்வம். இவர்கள் தங்களுக் கேற்றவர்களோடேயே சகவாசம் செய்து குலத்திற்கும் வேதத்திற்கும் அவமானம் விளைவிப்பார்கள். இப்படிப்பட்டவர்களை யார்மதிப்பார்கள்? "அவர்கள் கெட்டார்கள் ஈனர்கள், குடியர்கள், ஒழுக்கமற்றவர்கள்" என்று யாவரும் துவேஷிப்பார்கள். இதெல்லாம் இட்டுக்கட்டின கதையல்ல. அன்றாடம் கண்ணால் பார்த்துவருகிற காரியம், காதால் கேட்டுவருகிற பேச்சு.

அப்படியானால் இவர்கள் திருந்துகிறதுதான் எப்படி? குலத்திற்குக் கௌரவமுள்ள அங்கங்களாகவும் தேசத்திற்குத் தக்க பிரஜைகளாகவும் திருச்சபைக்கு உகந்த பிள்ளைகளாகவும் ஆவதெங்ஙனம்? மதுவிலக்கை யநுசரிப்பதினால் தான், அளவோடு குடிக்கிறேன் என்று துவக்கினவர்கள் அடிவுண்டல்மட்டும் புட்டியைச் சாய்த்துக் கொள்ளுகிறார்கள். சாதத்திற்கு அளவுண்டு சாராயத்திற்கு அளவுண்டா? சாராயம் குடிக்கக் குடிக்க குடியாசை அதிகரித்துக்கொண்டே வரும். ஆனதால் அதை முற்றிலும் தள்ளுவதேமுறை. நம்முள்ளும் எத்தனை பணக்காரர்கள், படித்தவர்கள், உத்தியோகஸ்தர்கள், அப்போதைக்கப்போது தோன்றி, குடியென்னும் சமுத்திரத்தில் விழுந்து மாண்டார்கள். இப்போதும் எத்தனையோபேர் தங்கள் நல்ல சம்பாதனையைக் கொண்டு நாலுபேர் பார்த்து மதிக்க நன்றாய் வாழ்ந்து பிள்ளைகளை நற்பயிற்சியில் வளர்க்காமல் குடியில் இறைக்கிறார்கள். என் இந்தபுத்தி? போதும் போதும் இனியாவது புத்தி வேண்டாமா? இப்போது நம்முள் (Communal respect) ஜனங்க மரியாதை பெருகி வருகிறது. நாலுபேரால் நன்குமதிக்கப்படவேண்டுமென்னும் ஆசை தோன்றி வருகிறது. முன்னேற வேண்டுமென்னும் ஊக்கம் வளர்ந்து வருகிறது. இதோ ராஜமார்க்கம். அம்மார்க்கத்தில் வழிநடந்தால் வயிறுற சாப்பாடு கிடைக்கும். உடம்பாற துணியிருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் வியாபிக்கும். பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்து நடப்பார்கள். உத்தமர் சகவாசம் கிடைக்கும். முன்னுக்குப்போக ஆவலுண்டாகும். சுயமரியாதைப் பிறக்கும். அம்மார்க்கம் யாதெனில், மதுவிலக்குதான். இம்மார்க்கத்தில் அநேகர் வழி நடந்து முன்மாதிரிகை காட்டி யிருக்கிறார்கள். யாவரும் அவ்வழி நடந்தால் குலத்தில் உண்டாகும் சீர்திருத்தம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லுந்தரமல்ல. ஆனதால் ஒவ்வொரு விசாரணையிலுமிருக்கும் பெரியோர்கள், விவேகிகள் பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள், அனைவரையும் திருத்த வேண்டுமென்னும் ஆவலுள்ளவர்கள் மதுவிலக்கு சபை ஸ்தாபிப்பார்களாக. குடிக்காதவர்களும் பிறருக்கு நன்மாதிரிகைதர அதில் சேரட்டும். அளவோடு ஆபத்தின்றி குடிக்கிறவர்களும் தங்கள் பல ஈனமுள்ள சகோதிரர்களுக்குத் நன்மாதிரிகை தர வேண்டுமென்னும் சுத்த கருத்துடன் அதில் சேரட்டும். குடிப்பழக்கத்தில் மிகுந்திருப்பவர்களும், பொது நன்மையையும் சுயநன்மையையும் நாடி அப்பழக்கத்தை விட்டுச் சேரட்டும். அனைவரும் அப்படிப்பட்ட சங்கத்தில் சேர்ந்தால் அதுவே முன்னேற்றத்திற்கு வழி. சுயப்பரித்தியாகம் (Self sacrifice) இன்றி முன்னேற்றமில்லை.

“யார்வீட்டில் நிர்ப்பாக்கியம், யார் வீட்டில் துக்கம், யார் வீட்டில் கஷ்டம், யார்வீட்டில் மனதிற்கு அலுப்பைத் தரும் வீண்பேச்சுகள், யார் வீட்டில் காரணமில்லாத படுகாயங்கள், யார் கண்கள்

சிவந்திருக்கும்? வெறிக்கக் குடிப்பவர்களுக்குத்தான், மேலும் குடிவெறியானது புத்தியைக்கெடுத்து, ஞாபக சக்தியைப் பழுதாக்கி, திரேகத்தைச் சுகஈனப்படுத்தி, அழகைக் குலைத்து, பலத்தைக் குறைத்து, இரத்தத்தை அசுத்தப்படுத்தி, ஈரலைப் பெருக்கச்செய்து, மூளையைப் பல ஈனப்படுத்தி மனிதர்களை நடைப்பிணங்களாக்கும். உள்ளேயும் புறம்பேயும் சுகப்படுத்தக் கூடாத காயங்களை உண்டாக்கும். புத்தியைத் தன் வசப்படுத்திக்கொள்ளும். குடியானது ஆத்துமத்தைப் பறிக்கும் பசாசு. பணப்பையை அபகரிக்கும் திருடன். தரித்திரத்தின் கூட்டாளி. மனைவியின் பிரலாபம். மக்களின் வியாகுலம். குடியானது மனிதர்களை மிருகங்களாக்கும். குடியன் பிறருடைய சந்தோஷத்திற்காகக் குடித்து, இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் தன்னைப் பெருநஷ்டத்திற் குட்படுத்திக்கொள்ளுகிறான்.

இந்தியகிறீஸ்துவன்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஓர் அரிய சம்பவம்.

ஆஸ்திரியா தேசத்து சக்கரவர்த்தியாகிய பிரான்சீஸ் ஜோசெப் என்பவர் கடந்த வருஷ இறுதியில் காலஞ்சென்ற துக்க சேதியை "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் கேள்விப்படாதவர்களல்ல. இச் சக்கரவர்த்தியின் ஜீவிய காலத்தில் நடந்த ஓர் அரிய சம்பவத்தை நல்லாயன் நேயர்கள் அறியுமாறு அதனைப் பிரசுரிக்கக் கோருகிறேன்.

ஆஸ்திரியா தேசத்தின் பிரதான நகரமாகிய வியன்னாபட்டணத்தில் ஓர் எளிய ஸ்திரியின் ஏக புதல்வனொருவன் ஒரு பெருங் குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டான். ஆக்கினைக்குக் குறிக்கப்பட்ட நாள் சமீபித்துவிடவே "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்" என்பதுபோல், துக்கத்துக்கும் பரிதாபத்துக்குமுரிய நிலைமையிலிருந்த அவனது தாய் தன் மகனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையை எவ்விதத்திலாவது கொஞ்ச காலம் வரையில் தள்ளி வைக்கும்பொருட்டு, சக்கரவர்த்தி அவர்களுக்கு ஓர் விண்ணப்பம் தயாரித்து, அதை அவர் அங்கீகரிக்கும் வண்ணம் சக்கரவர்த்தியினிடம் அதிக செல்வாக்குடைய கனதனவான்களுடைய கையொப்பங்களை வாங்கி, மரண தண்டனைக்குக் குறிக்கப்பட்ட நாளுக்கு முந்தின இரவு, அவள் அம் மனுவுடன் சக்கரவர்த்தியை நேரில் காண அரண்மனையை நோக்கிச் சென்றாள். அரண்மனை வாயிலை அவள் அடைந்த மாத்திரத்தில், சக்கரவர்த்தி ஏற்கெனவே படுக்கைக்குப் போய்விட்டதாகவும், அவரை அன்று காண முடியாதென்றும் அறிந்து, நம்பிக்கையற்றவளாய் வெகு துயரத்துடன் இன்னதுதான் செய்கிறதென்று ஒன்றுந் தோன்றாமல், அர்ச். அந்தோனியார் கோவிலுக்குப் போய் அவருடைய பீடத்துக்கு முன்பாக சாஷ்டாங்கமாக, விழுந்து வெகு நேரம் வேண்டிக்கொண்ட பின்னர், தன் மனுவை அர்ச். அந்தோனியார் பீடத்தின்பேரில் வைத்துவிட்டு வீட்டிற்குச் சென்றாள். மறு நாள் அதிகாலையில் அவள் எழுந்து தன் மகன் கதியை நினைத்துக்கொண்டு, கொலைக் களத்திற்குப் போகையில், தன் மகனுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை சில தினங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாக வழியில் கேள்வியுற்று, சந்தோஷித்து, சக்கரவர்த்திக்கு நன்றி செலுத்த அவரிடஞ் சென்றாள். இவளைக் கண்டமாத்திரத்தில் அவர் அவளை நோக்கி "நேற்றிரவு நடுச்சாமத்தில் ஒரு சன்னியாசியார் என் அறையில் நுழைந்து, என்னைத் தூக்கத்தினின் றெழுப்பி, ஒரு மனுவை என்னிடம் கொடுத்தார். அதை நான் ஏற்றுக்கொண்டு உன் மகனுக் கிடப்பட்டிருந்த தண்டனையைத் தள்ளி வைத்திருக்கிறேன்" என்றார். விதவை இதைக்கேட்டு வியப்புற்று, தனக்காக இவ்வளவு சிபார்சு செய்த சந்நியாசியார் யாரென்று அறியக்கூடாமையால், இது தெய்வச்செயலே யென்று தன் கஷ்டங்களை யெல்லாம் சக்கரவர்த்தியினிடம் சொல்லி, அவருக்கு நன்றி செலுத்தி வீட்டிற்குத் திரும்பினாள். சக்கரவர்த்தியும் மெற்சொன்ன சன்னியாசியார் இன்னாரென அறியும்பொருட்டு, மறுநாட் காலையில் தன் குதிரைமேலேறி அருகாமையிலிருந்த ஒரு மடத்திற்குச் சென்று, மடாதிபதியை நோக்கி "நேற்றிரவு என்னிடம் வந்த சன்னியாசியார் யார்?" என்று அவரை வினவ

மடாதிபதி மடத்திலிருந்து நேற்றிரவு யாரும் வெளியில் போகவில்லை யென்று சொல்லி மடத்திலிருந்த சன்னியாசிமார்களெல்லோரையும் சக்கரவர்த்தி முன்னிலையில் கூப்பிட்டு, அவரை நோக்கி "நீங்கள் நேற்றிரவு பார்த்ததாகச் சொல்லும் சன்னியாசியாரைக் காட்டுங்கள்" என சக்கரவர்த்தி ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்து இன்னாரென்று கண்டுபிடிக்கக்கூடாதவராய் அவர்களை விட்டு விலகி, மடத்துக் கோவிலைப் பார்க்க அதனுள் பிரவேசித்தார். அங்கிருந்த ஒரு படத்தைச் சற்று நேரம் உற்றுப் பார்த்து மடாதிபதியை நோக்கி, "நான் நேற்றிரவு பார்த்த சன்னியாசி இப் படத்திலிருக்கிறவரை யொத்திருக்கிறார்" என்றார். மடாதிபதி "சக்கரவர்த்தியே. இந்தச் சன்னியாசியார் இம்மடத்தை விட்டுப்போய் பல நூற்றாண்டுகளாச்சுதே. இவர் பதுவாபட்டணத்து அர்ச். அந்தோணியார்" என்றார். சக்கரவர்த்தியும் விதவை மட்டில் இரக்கம் வைத்து அவளுக்காக சிபார்சு செய்தவர் அர்ச். அந்தோணியார் என்று எண்ணி அரண்மனை சேர்ந்து அவள் மகனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையை முழுதும் ரத்து செய்துவிட்டார்.

G. R.

இரங்கூன்.

மாக்ஷிமை நிறைந்த நல்லாயன் பத்திராதிபரவர்கட்கு அனந்த வந்தனந் தந்தெழுது மிச்சிறிய கடிதத்தைத் தம தரிய பத்திரிகையினோர் கோணத்தி லிடமீந்து பிரசுரிக்கத் தம்மைப் பிரார்த்திக்கின்றேன்.

ஐயா, எங்கிலமும் புகழும் நன்னிலமாகிய பர்மா, இரங்கூனின்கண் பார்வீதியில் (Rangoon Town Band) சொந்தக்காரரும் நௌலபீன் என்னும் பதியில் திருக்ஷேத்திரங் கொண்டெழுந்தருளி யிராநின்ற அர்ச். லூர்துமாதாவின் திருவிழா நாளில் பார்சிலிருந்து தருவித்துள்ள மாதாவின் சுரூபம் நகர்வலம் வருங் காட்சியை ஒவ்வொரு வருடமும் வெகு விமரிசையாக நடாத்தி வருபவருமாகிய ஆல்பர்ட் டிசில்வா அவர்களின் ஏக புத்திரரத்தினமாகிய இரண்டரை வயதுள்ள லுயிஸ் என்னுங் குழந்தைக்குத் திடீரென வியாதி கண்டு மெத்த அபாயஸ்திதியி லிருக்கும்போது, அநேக இங்கிலீஷ் டாக்ட்டர்களும் தமிழ் வைத்தியர்களும் சிகிச்சை செய்து பார்த்தும் சவுக்கியப்படாமல் குழந்தை மரண சமயத்தி லிருக்கையில் டிசல்வா அவர்கள் தனது திருமாளிகையில் ஸ்தாபித்திருக்கும் மூன்றடி உயரமுள்ள மாதா சொரூபத்தைக் குழந்தையின் சிரசண்டை வைத்து "அமலோற்பவமுள்ள அர்ச். மரியே! இந்த மாசில்லா குழந்தையைக் காப்பாற்றித் தரவேண்டும்" என முழங்கால்படியிட்டு கண்ணீர் விட்டழுது வேண்டி நிற்குஞ்சமயத்தில் கவர்ன்மென்டில் வேலை பார்த்து நற்சாக்ஷி பத்திரம் பெற்றிலங்கும் டாக்ட்டர் ஜெயசீல்ராவ் அவர்கள் குழந்தையைக் கண்ணுற்று இப்பிள்ளை பிழைக்கிறது அசாத்தியம். ஆனால் நமது லூர்து நாயகியின் கருணையினால் அந்நாயகியை முன்னிட்டு இதோ அவிழ்தம் தருகிறேன்" என்றுடனே மருந்து கொடுக்கவும் அபாய ஸ்திதியிலிருந்த குழந்தை சவுக்கியமடைந்ததின் பொருட்டு நிகழும் 1917ம் வருடம் பெப்ரவரிமீ 10ம் திகதியன்று நடந்த அர்ச். லூர்து மாதாவின் திருவிழா நாளில் மிஸ்ற்றர் டிசில்வா அவர்கள் இதுகாறுஞ்செய்து வந்ததைப்பார்க்கிலும் இவ்வருடத்திலும் நௌலபீனில், நீலபட்டுகளாலும், வெள்ளை வில்லி புஷ்பங்களாலும், சித்திரவேலைகளாலமைந்த கிராதிகளுடன் பார்ப்பவர்களின் மனம் ரம்மியமாகும் வண்ணம் மின்சார சக்தியின் காந்தவிளக்குகள் ஜொலிக்க சிராலை ஜோடித்ததுமன்றி சவுக்கியமடைந்த குழந்தை லுயிசின் கரத்தினால் அர்ச். லூர்து நாயகிக்குக் காணிக்கையாகப் பொன்முடி சூட்டி மெழுகுவர்த்தியும் மலர்களும் அந்நாயகியின் திருக்கழலிற் சமர்ப்பித்தும் ஆங்கிருக்கும் கெபியின் அண்டை சிராலையும் வைத்து மெத்த கண்காட்சியாக நடத்திவைத்தார். ஆனால் மிஸ்ற்றர் டிசில்வா அவர்கள் தமது 6-வது பிராயமுதற்கொண்டு இதுவரையில் மகத்துவம் நிறைந்த மாதாவின் சத்விஷய திருப்பணித்தொண்டை விடாது நடத்திவருவது பிரத்தியட்ச அனுபவமாயிருக்க, சென்ற 1909-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில், இவருக்கு (பைஸ்கோப்பால்) வந்த அபாயகரமான சங்கடங்களையும் தேவதாயார் மங்களமாக நிவர்த்திசெய்த பெருங்கருணையைச் சதா கவனிக்க தகுந்ததே.

மேலும் திருவிழாவிற்கு, அநேக ஜனங்கள் திரள் திரளாக இஸ்பெஷல் டிரேயினேறி விஜயஞ்செய்ததுமன்றி பர்மாறெயில்வே வாலன்ற்றியர் பாண்டு வாத்தியமும் கோஷிக்கவும் 40-வது வீதியில் ஸ்தாபித்துள்ள அர்ச். ஜோசப் பஜனை சங்கத்தார் பஜனைக் காலக்ஷேபமும்

நடத்தினார்கள். ஆனால் இத்தியாதி மகிமை நிறைந்த விஷயங்களையேயெடுத்துக்கூற வந்தேனென்றால் இத்திருவிழா நடக்க 6 நாளைக்கு முன்னமே டிசில்வா அவர்கள் திருவிழாவிற்கு வேண்டிய சாமான்களை யெல்லாந் தயார் செய்துவரும்போது, தன் குழந்தைக்கு நேர்ந்த வியாதி வுடனே சூரியனைக்கண்ட பனிபோல் நிவர்த்தியானதினாலேதான். நமதாண்டவளாகிய லூர்து நாயகி மிஸ்டர் டிசில்வாவின் குடும்பத்தைப் பல்லாண்டு பல்லாண்டு ஆசீர்வதித்துக் காப்பாற்றிவர சதா பிரார்த்திக்கும்.

16-2-17 C. M. Michael.

பத்திரிகையில் இடமிலாக் குறையினால் நாம் வரப்பெற்றிருக்கும் மற்றக் கடிதங்களையும் இம்மாதம் பிரசுரிக்க சௌகரியப்படவில்லை.

[ப.—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES

பற்பல சமாச்சாரம்.

ஜப்பான்.—இத்தேசத்தில் பள்ளிக்கூடங்களில் ஞானோபதேச முதலிய கிறீஸ்துவ வேதத்துக் கடுத்த போதகங்கள் கற்பிக்கப்படக் கூடாதென்றும், குருக்கள், உபதேசிமார்களாகிய இவர்கள் மாகாண கவர்ணரின் உத்தரவின்றி கிறீஸ்துவ வேதத்தைப் போதிக்கக்கூடாதென்றும் சர்க்கார் கட்டளை ஒன்று பிறந்திருக்கிறதாக வதந்தி. மேலும் கிறீஸ்துவ வேதத்துக்கு விரோதமாகச் செல்வாக்குள்ள சில ஜப்பானியர் கிளம்பி இருக்கிறதாகவும் தெரிய வருகிறது. இது மிகவும் விசனத்துக்குரிய சங்கதி.

ஒரு நூதன தெப்பம்:—அமெரிக்காவில் காற்றை அடக்கியுள்ள ஒருவகையான தெப்பத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். அத்தெப்பத்தைச் சமுத்திரத்தில் தள்ளி அதன்மேல் இரண்டு மூன்றுபேர் ஏறிக்கொண்டால் அது ஜலத்தில் மூழ்கிப்போகாமல் மிதந்துகொண்டே அலைகளால் தள்ளப்பட்டு போகிறதாம். கடலில் அலைகள் எழும்பி விழும்போது அவைகளுடன் இத்தெப்பமும் ஏறி இறங்குவது வெகு வேடிக்கையாயிருக்குமாம். இதை அமெரிக்கர்கள் கடற்கரை யோரத்தில் தண்ணீரில் விட்டு அதன்மேலேறிக் கொண்டு காலப்போக்காய் உல்லாசிப்பார்களாம்.

போன் ரோஜாமலர் கோத்து:—ஏறக்குறைய சென்ற ஒன்பது நூற்றாண்டுகளாக பாப்புமார்களுக்குள் ஓர் வழக்கமுண்டு. அதென்னவெனில், ஐரோப்பாவிலுள்ள ஒரு கத்தோலிக் அரசிக்கு அல்லது கத்தோலிக் இராஜ குமாரத்திகளுக்குள் ஒருவருக்கு தபசு காலத்தின் நாலாம் ஞாயிறன்று பொன்னாற்செய்யப்பட்ட ஒரு ரோஜாமலர் கொத்தை அனுப்புவதாம். இவ்வழக்கப்படி இவ்வருஷம் தபசு காலத்தின் நாலாம் ஞாயிறன்று நமது பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பர் ஒரு பொன் ரோஜாமலர் கொத்தை ஸ்பெயின் தேசத்து விக்டோரியா இராக்கினிக்கு அனுப்பப்போகிறாராம்.

சீனதேசத்தில் சத்திய வேதம்:—1842ம் வருடத்திற்குப் பிறகுதான் சீனதேசத்தில் ஐரோப்பிய போதக குருக்கள் ஷை சேதத்து இராசாங்கத்தாரால் யாதோர்தடையும் ஆக்ஷேபணையுமின்றி பிரசித்தமாய் முதல் முதல் நம்முடைய சத்திய வேதத்தைப் போதிக்கத் தொடங்கினார்கள். தற்போது அத்தேசத்தில் ஏறக்குறைய 18லக்ஷம் கிறீஸ்துவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வேதத்தில் மிக்க பற்றுதலும் பிரமாணிக்கமும் வைராக்கியமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். இத்தேசம் 50 மேற்றிராசனங்களாக, பிரிக்கப்பட்டிருக்க அவைகளில் ஏறக்குறைய 1,500 பிராஞ்சிய குருக்களும் 800 சுதேச குருக்களும், சத்திய வேதத்தைப் போதித்து வருகிறார்கள்.

போர்முனையிலுள்ள பிராஞ்சிய குருக்களின் தொகை.—பிராஞ்சிய தேசத்தின் மொத்தக் குருக்களில் ஐந்தில் இரண்டு பாகமாகிய 20,000 குருக்கள் தற்போது யுத்தத்தில் போர் வீரராகவும், காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சைசெய்து அவர்களை விசாரிக்கிறவர்களாகவுமிருக்கிறார்கள். இவர்களில் பாரீஸ் பட்டணத்து மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள் 500 பேர். லையன்ஸ் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள் 400பேர். அராஸ், லெசான்கன், கம்பிரேஸ் இவைகள் ஒவ்வொன்றையுஞ் சேர்ந்தவர்கள் 300பேர் அனியன்ஸ் மேற்றிராசனத்துக்குச்சொந்தமானவர்கள் 200பேர்களுக்கதிகம். இப்படியாக பிராஞ்சுதேசத்தின் பற்பல மேற்றிராசனங்களிலிருந்து நூற்றுக்கணக்காய் குருக்கள் யுத்தத்திற்காகப் போயிருக்கிறார்கள்.

ஜேர்மன் சக்கரவர்த்தியும் ஒரு கருமானும்.—ஜெர்மன் சக்கரவர்த்தி பிறந்த அதேநாளில் அதேநேரத்தில் பிறந்த கருமானொருவன் மேற்படி ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ப்ரச்லாவென்னும் பட்டணத்திலிருக்கிறானாம். இவனுடைய பெண்சாதியின் பெயரும் ஷை தேசத்து சக்கரவர்த்தினியின் பெயரும் ஒன்றாம். இவனுக்கும் சக்கரவர்த்திக்கும் கலியாணம் நடந்தேறினதும் அதேநாளிலாம். அன்றியும், கருமானுக்கு ஆறுபிள்ளைக ளிருப்பதுபோல சக்கரவர்த்திக்கும் ஆறுபிள்ளைக ளிருக்கிறார்களாம். சக்கரவர்த்தியின் பிள்ளைகள் பிறந்த அதே சமையத்தில் கருமானுக்கும் இப்பிள்ளைகள் பிறந்தார்களாம். சக்கரவர்த்திக்குக் கடைசியில் பிறந்த குழந்தை ஓர் பெண்குழந்தை கருமானுக்கும் அப்படியே ஒரு பெண்குழந்தை பிறந்ததாம். ஜெர்மன் சக்கரவர்த்திக்கும் இக்கருமானுக்கும் ஏககாலத்தில் இவைகளெல்லாம் சம்பவித்தது ஆச்சரியமே!

வயிற்றுவலிக்காக கண்ணுக்கு வைத்தியம் செய்வதுண்டா?—தீய்ந்து ஏறக்குறைய சாம்பலாய்ப்போன ரொட்டியை தின்றதினால், ஒருவனுக்கு வயிற்றுவலி உண்டாக, அவன் அதற்காக வைத்தியஞ் செய்துகொள்ள ஒரு வைத்தியனிடத்திற்குப் போனான். அவ் வைத்தியன் அவனுடைய வயிற்று நோவுக்கு வைத்தியஞ் செய்யாதபடி அவனுடைய கண்ணுக்கு வைத்தியஞ் செய்தான். அதற்குநோவாளி "இதென்ன வயற்றுவலிக்கு வைத்தியஞ் செய்யாதபடி கண்ணுக்கு வைத்தியஞ் செய்கிறீரே?" என்று கேட்க, வைத்தியன் "உன் கண் நன்றாயிருந்திருந்தால் நீ தீய்ந்த ரொட்டியைத் தின்றிருக்கமாட்டாய்; ஆகையால்தான் உன் கண்ணுக்கு வைத்தியஞ் செய்கிறேன்" னென்றானாம்.

கோவளத்து கன்னியர் மடம்:—சென்ற வருஷம் செப்டம்பர்மீ திரிச்சினாப்பள்ளியைச் சேர்ந்த லால்குடியில் வித்தியாகாக்ஷி சாலையொன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னை சட்ட நிரூபண சபையின் மெம்பராயிருந்த கனம் ஸ்ரீமான் சா. பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள் ஷை காக்ஷிசாலையைத் திறந்து வைத்தார். அநேக உபந்நியாசங்களும் பூதக்கண்ணாடி காக்ஷிகளும் மிக்க சிறப்பாயும் விமரிசையாயும் நடைபெற்றன. உபந்நியாசம் செய்த கனவான்களில் திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்களும் ஒருவர். மேற்படி காக்ஷிசாலைக்கு பல ஜில்லாக்களிலுள்ள அநேக பள்ளிக்கூடங்களிலிருந்து உபாத்திமார்களாலும், மாணாக்கர்களாலும் சேகரிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட பலவித சித்திரவேலைகள், களிமண் உருவங்கள், காகித மடிப்பு வேலைகள், மணிவேலைகள், தையற்வேலைகள், சரிகைவேலைகள், கைத்தொழில் வேலைகள், தச்சுவேலைகள், போதனா உபகரணங்கள், நாணயங்கள் முதலிய விநோத விசித்திர பொருட்கள் அனுப்பப்பட்டன. இப்பொருட்களில் மிகத் திறமையான வேலைப்பாடுள்ளவைகளுக்கு பதக்கங்களும், செர்டிபிக்கேட்டுகளும் அளிக்கப்பட்டன. ஷை காக்ஷிசாலைக்குக் கோவளம் அர்ச். உத்தரியமாதா கன்னியர் மடத்து பாடசாலையிலிருந்து விநோதமான சரிகை தையல்வேலை பட்டிற்செய்து அனுப்பப்பட்டிருந்தது. அந்த வேலைப்பாட்டின் திறமைக்காக வெள்ளி பதக்கமொன்று சமீபத்தில் ஷை பாடசாலைக்கு அளிக்கப்பட்டது. இதை முன்னிட்டு அப்பாடசாலையின் மாணாக்கர்களுக்குப் பலவித விளையாட்டுகளும் களியாட்டங்களும் நடைபெற்றன.

போய்யைச் சோல்லி போருளை யிழந்தவன்.—எட்டுப்பேர் உட்கார வேண்டிய ஒரு ரயில்வண்டி கம்பார்ட்மெண்டில் ஏழுபேர் உட்கார்ந்திருந்தார்கள். காலியாக இருந்தவிடத்தில் அவர்களில் ஒருவன் தன் மூட்டையை வைத்துக்கொண்டிருந்தான். அடுத்த ஸ்டேஷனில் ரெயில்வண்டி

வந்து நிற்கவே, அந்த கம்பார்ட்மெண்டுக்குள் இன்னொரு பிரயாணி வந்து ஏறி, மூட்டை வைத்திருந்த இடத்தைத் தனக்கு காலியாக்கக் கேட்டுக்கொண்டான். மூட்டைக்குச் சொந்தக்காரன் மூட்டையை அப்புறப்படுத்தி அவனுக்கு இடங்கொடுக்க இஷ்டப்படாமல் "மூட்டையின் சுதந்தரவாளி வண்டியை விட்டு வெளியே போயிருக்கிறான். அவன் வந்தவுடன் அவனுக்கு இவ்விடம் வேண்டியது" என்றான். அப்போது பிரயாணி அவன் சொன்னது உண்மைதானென் றெண்ணி தனக்கு இடமில்லாததின் நிமித்தம் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். சற்றுப் பொறுத்து வண்டி புறப்பட்டது. அப்போது நின்றுகொண்டிருந்த பிரயாணி "ஐயோ, பாவம்! இறங்கினவன் இன்னும் வந்து ஏறவில்லையே, வண்டியும் புறப்பட்டுவிட்டதே; அவனுடைய மூட்டை இங்கு ஏன் இருக்கவேண்டியது? வெளியேபோட்டுவிட்டாலும் எடுத்துக்கொள்ளுவான்" என்று சொல்லி உடனே மூட்டையை எடுத்து வெளியே பிளாட்பாரத்தில் எறிந்துவிட்டான். அப்போது மூட்டைக்குச் சொந்தக்காரன் உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப்போல் பேச வாயெழாமல், வெட்கங்கொண்டு தனக்குள் "ஐயோ மூட்டையை இழந்தேனே" யென்று சொல்லிக்கொண்டு மௌனஞ் சாதித்தானாம்.

சிசுக்களுக்கோர் விடுதி.—சென்னை, அடையாற்றைச் சேர்ந்த ஆள்வார் பேட்டை, அர்ச். சவேரியார் பள்ளிக்கூடத்தில் திக்கற்ற சிசுக்களை வளர்க்க விடுதியொன்றுண்டு. இவ் விடுதியானது அவ்விடத்திய கன்னியர்களின் கண்காணிப்பிலிருக்கிறது. இராக்கண் விழித்து பகற்கண் விழித்து பெற்ற தாய்மார்களைவிட அதிகமாய்ப் பாடுபட்டு அவர்களை வளர்த்து வருகிறார்கள் இக் கன்னியர்கள். ஆயினும் சமீபத்தில் இப்பிள்ளைகளிற் சிலருக்கு வியாதி உண்டாகி இறந்துபோனார்கள். நல்ல சுகத்தோடிருந்த இரு குழந்தைகளில் ஒன்றுக்கு திடீரென வியாதி கண்டு, பிழைக்கு மென்னும் நம்பிக்கையு மற்று, மூச்சடங்கி, அசைவற்ற கட்டைபோல் கிடந்தது. அப்போது அம்மடத்து முதலாளியம்மாளும் மற்ற சகோதரிகளும் மகா சஞ்சலத்துக்குள்ளாகி, அருகிலிருந்த தேவமாதா சுரூபத்துக்கு முன் முழங்காலிலிருந்து "கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவாகிய தேவ தாயே, எங்களுடைய கஸ்தியை ஒழித்து எங்களுக்கு ஆறுதலாயிரும்" என்று மகா பக்தி உருக்கத்துடன் வேண்டிக்கொண்டார்கள். அசையாமற் கிடந்த அக் குழந்தை தன் கண்களைத் திறந்து மூச்சுவிட ஆரம்பித்தது. பிறகு குழந்தைக்கு சுகமுமுண்டானது. இதைக்கண்ட கன்னியாஸ்திரிகள் ஆச்சரியமுற்று தேவதாயாருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினார்கள். இது ஓர் புதுமையேயன்றி வேறென்ன?

ஓர் அறிக்கை.—பெங்களூர் கிளிவ்லான்ட் டவுனில் (Cleveland Town) மைசூர் இந்தியன் கத்தோலிக்குக் குடும்ப சவரட்சணை சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டு சென்ற 15-வருடங்களாக அநேக இந்தியன் கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு பலவித நன்மைகளை விளைவித்து வருகின்றதென்பதை நம்முடைய சந்தாதாரர்கள் அறிவார்கள். இச் சங்கத்தினாலுண்டாகும் நன்மைகளுக்கு பெங்களூருக்கு வெளியிலுமுள்ள கிறீஸ்துவர்களும் பங்காளிகளாகும்படி அங்கங்கே ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இச்சென்னைக்கு ஏஜெண்டாய், சென்னை, கத்தீடிரல் போஸ்டு (Cathedral P. O.) வேளாள தேனாம்பேட்டை நெ. 1/118 ரோட் சய்ட் வீட்டில் வசிக்கும் கனம். சி. வி. தோமாஸ் பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சங்கத்திற் சேர விரும்பும் சென்னை நிவாசிகள் மேற்படியாரிடத்தில் நேரிலாவது அல்லது கடிதத்தின் மூலமாயாவது ஷை சங்கத்தின் விண்ணப்பப்பாரம், பிராஸ்பெக்டஸ் (Prospectus) இவை முதலியவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

கத்தோலிக்குக் குடும்ப பரோபகார சங்கம். (Catholic Philanthrophic Society.)—இச்சங்கமானது இந்தியகத்தோலிக்கு கிறீஸ்துவர்களுடைய முன்னேற்றத்துக்காக உழைக்க முன்னுக்குவந்திருக்கின்றது. இச்சங்கம் ஏற்பட்டு இப்போது ஆறு அல்லது ஏழு மாதங்களேயாயினும் இதற்குள்ளாக ரூ. 825 வரையிலும் வசூலாயிருக்கின்றது. 2 டிரஸ்டிகளும் 18 லைப் மெம்பர்களும், 221 மெம்பர்களும், இதில் சேர்ந்திருக்கிறதாகச்சொல்லப்படுகிறது. இச்சங்கத்தினர் மேற்சொன்ன சொற்பகாலத்திற்குள் சங்கத்தின் அபிவிருத்தியைக் கோரி சென்னை அதிமேற்றிராணியார், மைலை மேற்றிராணியார் ஆகிய இவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் இருமுறை விசேஷித்த பொதுகூட்டங் கூடினார்கள். இவ்விரு பொதுக்கூட்டங்களும் மிக்க அநுகூலமாகவே நடந்தேறின. இச்சங்கத்தார் எடுத்துக்கொள்ளும் இடைவிடாத முயற்சி, பிரயாசை இவைகளைக் கவனிக்குங்கால், இச்சங்கத்தினால் அநேக நன்மைகள் கிடைக்கக் கூடுமென்பதற்கு ஐயமில்லை. இச்சங்கத்தின் நோக்கமும் கருத்தும் பலிக்குமாறு நாம் தேவாசீரை இரந்து கேட்பதுடன் இச்சங்கத்திற்காக உழைக்கும் கனதனவான்களுக்கு நாம் மனப்பூர்வமாய் சோபன வாழ்த்துதலுங் கூறுகின்றோம்.

யுத்தத்தில் இறந்துபோன பிரபுக்களின் தொகை.—நிகழும் கொடிய யுத்தத்தில் இதுவரையிலும் மரணமடைந்த பிரபுக்களின் தொகை 2,290 என்று தெரியவருகிறது.

DOMESTIC OCCURRENCES.

குடும்ப் சுபாசுப விளம்பரங்கள்.

ஜனன அறிக்கை.

இரங்கூன்.

பரிசுத்த அர்ச். லூர்து நாயகியின் கிருபையாலும், அர்ச். அந்தோனி முனீந்திரரின் வேண்டுதலினாலும் 1917௵ ஜனவரிமீ 7-ந் தேதி காலை 10-மணிக்கு பார்னட் பிரதர்ஸ் கம்பெனியில் உத்தியோகஞ் செய்யும் சைமன் சிங்காரம் பிள்ளை அவர்களின் மனைவி சௌ. ஜெயமரி அம்மாள் தன் இளவயதில் முதல் பேறாக ஓர் பெண் பிள்ளையைப் பெற்றனள், அக்குழந்தைக்கு ஜனவரி மாதம் 21-ந் தேதி அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் சங்: இராஜரிஷி J. B. மூர்லான் குருசுவாமி அவர்களால் "லூர்துமரி" என்ற நாமகரணமிடப்பட்டு திருச்சபை யாசாரப்படி ஞான தீட்சை கொடுக்கப்பட்டது. இதற்கு B. B. Press இல் உத்தியோகஞ்செய்யும் மரி. இலாசர் பிள்ளையும் அவர் மனைவி கிறிஸ்தினம்மாளும் ஞான தந்தை தாயாகவும் அங்கீகரிக்கப்பட்டார்கள். தாயும் பிள்ளையும் சுகம். இக்குழந்தையின் ஆத்தும சரீரத்துக்குவேண்டிய ஆரோகியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கும்

இலா. ஆரோக்கியசாமி பிள்ளை,
22-1-17. Govt. Pensioner.

நன்மரண அறிக்கை.

ஈரோடு

"மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவது பரிசுத்தமும் பிரயோசனமு முள்ள எண்ணம்"
(11 மக்கபே, 12-46.)

கொல்லன்கோடு காலம்சென்ற மகா-ள-ள-ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்களின் சிரேஷ்ட குமாரரும், எனது அருமைமைத்துனரும், ஈரோடு நகர்வாசியுமாகிய V. S. துரைசாமி பிள்ளை யவர்கள் சிலமாதங்களாய் இருமல் என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு தேர்ந்த வைத்தியர்களால் செய்யப்பட்ட எவ்வித சிகிச்சையினாலும் குணப்படாமல், பிளேக் உபத்திரியத்தை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டிப் போய் தங்கியிருந்த சோமனூரில், தமது 45-வது பிராயத்தில் 1917௵ ஜனவரிமீ 15ம் தேதி திங்கட்கிழமை காலை சுமார் 10-மணிக்கு தமதரிய மனைவி, மக்கள் சகோதரர் பந்து மித்திரர்கள் சூழ்ந்து நிற்க, கடைசி தேவத்திரவிய அநுமானங்களைக் குறைவறப்பெற்று, தமது குடும்பகாரியங்களை எல்லாம் 20 பிராயமுள்ள தனது சிரேஷ்ட குமாரன் சி. தங்கப்பிரகாசம் பிள்ளையினிடம் ஒப்புவித்துவிட்டு, பரம பதமே கெதியென, பரலோகப்பிராப்தி அடைந்தனர். மறுநாள் காலை அவருடைய சரீரம் அவ்வூர் கத்தோலிக் கல்லறையில் திருச்சபை ஆசாரப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது. வணக்கத்துக்குரிய குரு C. கஸ்தானியா சுவாமியவர்களும் அவ்வூர் சகல விசுவாசிகளும் இவருடைய க்ஷேமிப்புச் சடங்குகளை வீட்டிலும், கோவிலிலும், கல்லறையிலும் வெகு விமரிசையாய் நடத்தினர்

கள். இவர் ஒரு உத்தம கத்தோலிக்கர், எல்லோராலும் நன்குமதிக்கப்பட்டவர். தர்ம குணசீலர், தென் இந்தியாவில் இவரை அறியாதவர்கள் எவரும் இரார். இதை வாசிக்கும் பந்துக்கள், சகோதரர்கள் யாவரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள வெகு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்ற

டி. எ. லூர்துசாமி பிள்ளை.
16-2-17 கோயமுத்தூர்.

இரங்கூன்.

நிகழும் 1917ஆு பெப்ரவரிமீ 7-ந் தேதி புதன்கிழமை மாலை $4\frac{1}{2}$-மணிக்கு எனது தகப்பனர் தமது 73-வது வயதில் பரலோக பிராப்தமடைந்தார். பிரேதம் மறுநாள் 8-ந்தேதி வியாழக்கிழமை மாலை $4\frac{1}{2}$-மணிக்கு செய்க்ஜீ கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. நிற்க ஐந்தாநாளாகிற 11-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கல்லறைச்சடங்கும், பதினுரு நாளாகிற 22-ந்தேதி வியாழக்கிழமை மோட்ச விளக்கும் நடந்தேறின. இதைக்கண்ணுறும் அன்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி வேண்டிக்கொள்ள தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்தோனி, ஜெ. உல்லியம் பிறன்சிஸ்,
செய்க்ஜீ; இரங்கூன்.

திருமணவை-பாதகுல் வித்வான் ஸ்ரீமான் குருசுக்கோஸ்த அவர்கள், நிகழும் வருடம் பெப்ரவரிமாதம் 10-ந்தேதி மரணமானரெனக்கேட்டு விசனிக்கிறேன். இவர் இந்நகரில் பரோபகார சிந்தையுடைய ஓர் புருஷோத்தமனுகும். இவர் காலத்தில் இவரியற்றிய நாடகங்கள் பலவுள. இன்னவரியற்றிய "பாக்கியவதி, பொறுமையம்மாள், மரியாள்-மார்த்தாள், சுவியானம்மாள், கல்லறை வாசகப்பா," முதலிய நாடகங்கள்; சொற்சுவை, பொருட்சுவை நிறைந்தவைகளாம். "தேவ சங்கீத கீர்த்தனை, நன்மரண மாலை, திருச்சிலுவை ஆராதனை புஞ்சம், திருமணித் தியானம்," முதலியன இவரியற்றிய சிறந்த நூல்களாம். இவர் சங்கீதத்தில் மிகவும் வல்லவர். "குயிலினும் குழலினும் மாதுரியமாய்ப்பாட வல்லநீ" என இரண்டாவதின்ப கவிராயர் கூறியதுபோல் அத்தனை சங்கீதத்தில் தேர்ச்சிப் பெற்றவர். நம் தற்கால அரசனுகிய சிஞ்ஞோர், சிஞ்ஞோர், தொன் அனஸ்தாசியுஸ் மோத்த கொறேரா பாதவர்ம பாண்டியனின் பிதாவின் மகுடாபிஷேகத்தின்போது, இவ்வித்வான் தம் இனிய குரலெடுத்து "ஓ! பாண்டிய ராஜனே" என்னும் பாடலைப்பாடி அங்கு கூடியிருந்த எழுதுறை வாசிகளாகிய பரதகுலத்தவரைப் பரமானந்தங்கொள்ளச்செய்து, அவ்விராஜனின் "நித்தில மோதிரம்" பரிசாகப்பெற்ற சம்பவம்; மேற்கூறிய விஷயத்திற்கோர் சான்ருகும். இம் மகானை மணவை நகரிழந்தது, வானுயர எழும்பிய கோபுரமானது தனது சிகரத்தை யிழந்தது போலாம். சர்வ வல்லப நாதன் இவரது ஆன்மாவுக்கு ஸர்வ சாம்பிராஜ்ய பதவியை அருள்வாராக.

இங்ஙனம்
கொழும்பு நசரேன் தேரோஸ்
15-2-1917. மணவை.

தூத்துக்குடி.

எனது தந்தை லாசர் பர்னந்து வாஸ் அவர்களின் அருமைத் தாயாரும், எனது ஞானத் தாயுமாகிய தொம்மாஸ் வாஸ் அவர்கள் நடப்பு வியாதியினல் அநேகவித வைத்தியங்கள் செய்தும் சுகப்படாமல் கடைசி தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப் பெற்று சென்ற பெப்ரவரி மாதம் 4-ந் தேதி ஞாயிறு வாரமன்று காலை $11\frac{1}{2}$ மணியளவில் தனது ஏக குமாரனையும், பேரன் பேத்திமார்களையும் பரதவிக்க விட்டுத் தனது ஆத்துமத்தைச் சர்வேஸ்வரனுடைய கரத்தில் ஒப்படைத்தனள். இப்பரிதாபத்துக்குரிய துக்கச் செய்தியை இதனல் எனது நண்பர்களுக்கும் நல்ல ஆயன் நேயர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதோடு இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ள தாழ்மையாய்க் கேட்டுங்கொள்கிறேன்.

இங்ஙனம்
ஞானத்தாயை இழந்து துன்பமுறும்
தயாளசாமி பர்னந்து வாஸ்.
Kurunegalle, தூத்துக்குடி.
10-2-17.

தூத்துக்குடி.

1916ம் வருடம் மார்ச்சுமீ 13ட யன்று ஸ்ரீமாக் பாக்கியமுருந்த அவர்கள் பிரிய பத்தினி ரோசம்மாள் பர்னந்து அவர்கள் தூத்துக்குடியில் மரணமான பரிதாபசெய்தியை நமது நல்ல ஆயனின் ஸ்ரீமான் J. பிச்சை ரெட்றிக்ஸ் அவர்கள் அறிக்கை யிட்டபடி நானும் துக்கிக்கிறேன்.

அந்தோ. தெய்தி மாதங்களாகி வருஷமுமாகின்றது. ஆனல் அம்மாதின் நற்குண விஷயங்களை அறிந்தவர்களோ இன்னம் நினைவை மாற்ருதிருக்கிருர்கள். ஆ. ஏழைகளுக்கு எவ்வளவு அன்பு! எவ்வளவு உபகாரம்! எவ்வளவு இரக்கம்! எவ்வளவு அநுதாபம்! எவ்வளவு அந்நியொந்நிய சிநேகம்! அம்மா! இவைகளை நினைக்கும் தோறும் நாங்கள் எவ்விதமறப்போம். எவ்விதம் ஆறுவோம், இவ்வுலகில் அம்மா தங்களிடம் உபகாரம் பெற்றவர்கள் செய்யக்கூடிய பிரதி உபகாரம் என்ன? அவரவர்கள் ஜெபதபமுயற்சிகளை யொழிய வேறென்றுமில்லை. ஆதலால் இதைக்கண்ணுறும் அன்புள்ள சிநேகிதர்களே! கிறீஸ்துவ சகோதரர்களே! இம்மாதின் ஆற்றும் சகல கிருபையுமுடைத்தான சர்வ வல்லபமுள்ள சர்வேஸ்பரனிடத்தில் என்றும் அழியாத பாக்கியம் அநுபவிக்கும்படியாய் வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

கேகாலை. } இங்ஙனம்.
1-3-17 } நன்றிமறவாதவன்.

வேம்பார்.

ராஜரிஷி குரு. கனம். A. சூசைமாணிக்கநாத சுவாமிகள், வேம்பார்பங்கு, திருநெல்வேலி ஜில்லா.

மூவர்சைவெறுத்து இப்புவியில் தோன்றி மறைந்த இக்குருப் பிரசாதியானவர்: ஆத்தும இரட்சண்ணிய அலுவலில் வெகு ஆவலுள்ளவர்; கிறீஸ்துவ பாலியருக்குள் சபை உண்டு பண்ணுவதினுலும், பிரசங்கத்தினுலும், தனது பங்கு கிராம முழுவதிலும் மாத்திரமல்ல, இதர அநேக பங்கு குருப்பிரசாதிகளாலும் வெகுவாய் நன்கு மதிக்கப்பெற்றவர். குண அன்பினுலும், எளியவர்களுக்கு இரக்கம்புரிவதினுலும் மிகச்சிறப்புற்றவர். ஜாதி, மதம், நிலைமை பேதமின்றி எவ்வருணத்தாருக்கும், எந்தக் கொடிய நோய்களிலும் சரீர உதவி புரிவதில் மிகச் சிரத்தையுடையவர். அவரையறிந்த சகலராலும் புகழ்பெற்றவர். இம் மகான் 1917ஆு பெப்பரவரிமீ 3ட சனிக்கிழமை வைசூரியென்ற கொடிய வியாதியினல் பீடிக்கப்பட்டு எவ்வகை பிரயத்தனங்களாலும் குணமுருது, சகல ஈருந்த தேவத்திரவிய அனுமானங்களும் குறைவறப்பெற்று, 1917ஆு பெப்ரவரிமீ 10ட சனிக்கிழமை காலை 5-மணிக்கு சொல்லிலடங்காத ஆனந்த சந்தோஷத்துடன் சர்வ வல்லப நிராதார நித்திய மெய்க்கடவுளாகிய சர்வேஸ்சுரனுக்குள் ஐக்கியமானர். அன்று மாலை 5-மணிக்கு டை பங்கைச்சேர்ந்த சகல கிராமக் கிறீஸ்தவர்களாலும், புடைசூழப்பட்டு, ராஜரிஷி குரு கனம். D. சுவாமிநாத சுவாமிகள், ராஜரிஷி குரு. கனம். S. தனசாமிநாத சுவாமி இவர்களால் வேம்பாத்தில் இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேஸ்பரன் தேவாலயத்தில் வெகு ஆரபாரத்துடன் இவரது சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் ஒவ்வொரு நண்பரும் அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளும்.

அருமை ஞானத்தந்தையை யிழந்து
பரிதாபித்துநிற்கும்
அநுதாபிகள்.
R. I. P,

சேலம்.

சென்னையைச் சேர்ந்த சேலத்தில் வசித்துக் காலஞ்சென்ற முருகப்ப முதலியார் குமாரர் மூ. வய்யாபுரி ஆரோக்கியம், இப்பர் மாதேச நாலாதிக்கு ஊர்களிலும் சுதேயர் ஊழியர்களாய் வாழ்ந்தவரும், B. O. C. இனுஞ்சட் ஊரில் 20 வருஷமாய் இருந்தவரும் அதையடுத்த B. O. C. சவ்வேன்னும் சிற்றூரில் விருத்தாப்பியம் மேலிட்டு பாரிசவாயு என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டு B. O. C. Doctor Fendone கம்பவுண்டர் மர்த்தீன், இன்னும் மற்ற பர்மீகர் வைத்தியர்களாலும் அவிழ்தம் கொடுத்தும் குணப்படாமல் $1\frac{1}{2}$ வருடகாலம் அங்குமிங்கும் அசையவும் பேசவும் சக்தியற்று மேட்டிலாவைச் சேர்ந்த திரு ஆலயத்து விசாரணை குரு சங்கை இராஜரிஷி அக்கார்டின் சுவாமியாரால் கடைசி நன்மை அவஸ்தைப்பூசுதலும் பெற்று தனது குமாரத்தியையும் மருமகன் சாமுவேலையும் சிறிய குமாரத்தி மார்த்தம்மாளையும் செல்வ குமாரன் A. S. பிரான்சீஸ்கையும் பேத்திமார் மூவரையும் பேரன் நால்வரையும் பெரிய பேத்தி சந்தனம் குழந்தைகள் நாத்தி நால்வரையும் இன்னும் மற்ற சுற்றத்தார்களையும் இப்பிரபஞ்சத்தில்விட்டுவிட்டு இப்பூலோகத்தை வெறுத்து இப்புவன சராசரங்களை சிருஷ்டித்த ஆதிபரன் திருக்குமாரனுகிய நமதிரட்சகர் திருக்கரங்களில் நிகழும் 1917-ம் வருஷம் ஜனவரி மாதம் 6-ந் தேதி சனிக்கிழமை பகல் சுமார் 12-மணிக்கு 86-ம் வயதில் தமது ஆத்துமத்தைச் சுவாமிக்குக் கையளித்தனர். இவரின் செல்வ குமாரன் A. S. பிரான்சிஸ் திருச் சபையோருடன் மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிகுத் திருச்சபை ஆசாரத்தின்படி ஜெப பிரார்த்தனையுடன் இவரின் சடலத்தை அலங்கார பேழைக்குள்ளடக்கி கைப்பிடி ரதத்தில் ஏற்றி கிறீஸ்துவ ஜனங்கள் பேரின்ப பாடலைப்பாடிக் கொண்டே மெல்லன நடத்தி கிறீஸ்துவர்களை அடக்கம் செய்யும் மண்ணறைக்குள் நல்லடக்கம் செய்வித்தார். மரித்தவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக. 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டுதல் புரிய கேட்டுக்கொள்ளும் இவரின் பெரிய பேத்தியாகிய சந்தனம்; துணைவன்.

M. J, ஆதிபீதா.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவி

யைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோணியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்ற தொகை	4,342	5	6
Mr. பிரான்சீஸ் பொன்னுசாமி (வட்டவளை)	2	0	0
,, ஓ. ரூயப்ப மேஸ்திரி (சேர்ந்தமரம்)	1	0	0
,, A. T. துரைசாமி	1	0	0
,, A. டேவிட் (Basra)	6	0	0
,, ரூயப்ப முதலியார்	1	0	0
,, M. வீரபத்ர முதலியார்	5	0	0
ஆக மொத்தம்,	4,358	5	6

லாட்ரி விளம்பரம்.
125-பிரைஸ்கள்.

1st பிரைஸ் 900-ரூபாயிலிருந்து 6-ரூபாய் வரையிலும் டிக்கெட் 1-க்கு விலை. 4-அணுதான். 10-டிக்கட்டுக்கு 1-டிக்கெட் இனும். 4 அணு கொடுத்து தங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். நாள் இருக்கிறதென்று ஏமார்ந்துவிடவேண்டாம்.

வருகிற மே. 8 ல். கல்கத்தாவில் அநாதபிள்ளைகளின் சவரக்ஷணையைக் கோரி ஷை லாட்ரி நடைபெறப்போகிறது. டிக்கெட் தேவையுள்ளவர்கள் என்னிடம் பணமனுப்பியாவது வி. பி. மூலமாயாவது தருவித்துக்கொள்ளலாம். பிரைஸ் விழுந்தவர்களுக்கு உடனே தெரிவிக்கப்படும். கூடுமானவர்கள் என்னிடம் புஸ்தகங்கள் தருவித்து விற்பனை செய்தால் 1 புஸ்தகத்துக்கு 2 பிரி டிக்கெட்டும், 2 புஸ்தகங்களுக்கு 4 பிரி டிக்கெட்டும், ஸ்பெஷல் டிக்கெட்டும் பெறலாம். தயவு செய்து உடனே டிக்கெட்டுகளுக்கும் புஸ்தகங்களுக்கும் எழுதவும். லாட்ரி நெருக்கத்தில் எழுதினுல் கவனிப்பது கஷ்டம். வெளிதேசங்களிலுள்ளவர்கள் முன்ஜாக்கிரதையாய் தருவித்துக்கொள்ளவும். கடைசியில் எழுதி வருத்தப்படாதீர்கள். உடனே ரிப்ளையுடன் எழுதவும்.

நீங்கள் இந்த லாட்ரியை சேர்வதினுல் தரும புண்ணியத்தில் பங்கடைவதுந்தவிர லாபத்தையும் அடையலாம்.

விலாசம்.	Address
M. M. தோமாஸ் பிள்ளை,	**M. M. THOMAS PILLAI,**
கத்தோலிக் உபதேசியார்,	Cath. Catechist,
ஒசூர் ரிமவுண் டிப்போ, P.O.,	Hosur Remount Depot P. O.,
தென் இந்தியா.	South India.

GRAND VARIETY RAFFLE IN AID OF ST. ANN'S ORPHANAGE & RELIEF OF THE POOR.
அதிர்ஷ்ட லாட்ரி விளம்பரம்.

இதனுல் சகல கனவான்களுக்கும் தெரிவிப்பது. **St. Ann's Orphanage & relief of the Poor** லாட்ரி டிக்கெட் ஒன்றுக்கு 4-அணு. 22 டிக்கெட்டுகள் அடங்கிய புஸ்தகம் ஒன்றுக்கு 5-ரூபாய். புஸ்தகங்கள் விற்பனை செய்கிறவர்களுக்கு 2 பிரி டிக்கெட்டும், 2 புஸ்தக முழுதும் விற்பனை செய்கிறவர்களுக்கு 4 பிரி டிக்கெட்டுடன் 1 ஸ்பெஷல் டிக்கெட்டும் கிடைக்கும். 125 பிரைஸ்கள் உண்டு. முதல் பிரைஸ் 900-ரூபாய்கள். இரண்டாவது பிரைஸ் 400-ரூபாய் முதல் 5-ரூபாய் வரையில். வேண்டியவர்கள் உடனே கீழ்கண்டவருக் கெழுதி புஸ்தகங்கள் பெற்றுக்கொள்ளலாம். தாமதிக்கவேண்டாம். கொஞ்சம் காப்பிகள்தா னிருக்கிறது. ஆகையால் உடனே எழுதுங்கள் உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். தவறினுல் மறுசமயம் கிடைப்பதரிது, முந்துங்கள்.

எமது விலாசம்.

ஜே. எ. சாமி,	**J. A. SAWMY,**
நெம்பர் 242 ஓல்ட் பூர் அவுஸ் ரோட்,	No. 242, Old Poor house Road,
பெங்களூர்.	Bangalore.

Good Pastor
நல்ல ஆயன்

3 APR 1917

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11–16.)

புத்தகம் 15. } ஏபிரல் 1917. { இலக்கம் 4.

HOLY WEEK.
அர்ச்சியசிஷ்ட வாரம்.

இன்றையத்தினம் குருத்து ஞாயிறு. இன்றையோடு தபசுகாலத்தின் கடைசி வாரமும் ஆரம்பிக்கின்றது. இவ்வாரத்தை நம்முடைய பரிசுத்த தாயாகிய சத்திய திருச்சபை அர்ச்சியசிஷ்ட வாரமென் றழைக்கிறது. அதேதெனில், இவ் வாரத்தில்தான் பாவத்தால் நித்திய மரணத்துக்கும் பசாசின் அடிமைத்தனத்துக்கும் உள்ளாயிருந்த மனுக்குலம் இரட்சிக்கப்பட்டது. இவ்வாரத்தில்தான் நம்முடைய ஆதித்தாய் தகப்பனுலே பாவிகளாய்ப்போன நாம் பரிசுத்தமாக்கப்பட்டு மோட்சபாக்கியத்துக்குப் பாத்திரவான்களானது. நம்மட்டில் வைத்த அணைகடந்த அன்பினுல் நம்மை இரட்சிக்கும்பொருட்டு சுதனுகிய சர்வேசுரன் மனிதனுய் அவதரித்து, 33-வருஷ காலம் இப் பிரபஞ்சத்திலிருந்து தம்முடைய சுகிர்த போதனையாலும் சாதனையாலும் நமக்குச் சன்மார்க்கத்தைப் போதித்து, நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக உத்தரிக்க நிஷ்டூரப் பாடுபட்டு கடினமான மரணத்தை யடைந்தது இவ்வாரத்தில்தான்.

ஆகையால், இவ்வாரத்தில் நாம் செய்யவேண்டியதென்ன? நமது கர்த்தர் பட்ட அரிய பாடுகளையும் அவர் சிலுவையிலறையுண்டு அடைந்த அவமானமரணத்தையுஞ் சிந்திக்க வேண்டியது. சிந்தித்து இவைகளுக்கெல்லாம் காரணமாயிருந்த நமமுடைய பாவங்களின் நிஷ்டூரத்தையும் கொடுமையையும் உள்ளத்தில் உணரவேண்டியது. உணர்ந்து அவைகளுக்காக மெய்யான பச்சாத்தாபப்பட்டு அவைகளை அருவருத்துத் தள்ளி புண்யவான்களாய்ச் சீவிக்கவேண்டியது.

நமது கர்த்தர் நமக்காகப் பாடுபட துவக்கினது பெரிய வியாழக்கிழமையிலிருந்துதான் என்றாலும், குருத்து ஞாயிறுன அர்ச்சியசிஷ்ட வாரத்தின் முதல் நாளிலிருந்து நாம் விசேஷ விதமாய் அவருடைய பாடுகளையும், மரணத்தையும் உருக்கத்தோடும், உயிருள்ள விசுவாசத்தோடும் சிந்திக்க வேண்டுமென்பது திருச்சபையின் விருப்பமாயும் கோரிக்கையாயுமிருக்கின்றது. ஆனபடியாலல்லோ குருத்து ஞாயிறன்று அர்ச். மத்தேயு

எழுதித் தந்த சுவிசேஷத்தின்படி நமது கர்த்தர் பட்ட பாடுகள் பூசையில் வாசிக்கப்படுகின்றன? மேலும் பெரிய செவ்வாயன்றும், பெரிய புதனன்றும், பெரியவெள்ளியன்றும், மற்றசுவிசேஷகர்களான அர்ச். மார்க்கு, அர்ச். லூக்கு, அர்ச். அருளப்பர் இவர்களால் எழுதப்பட்ட கர்த்தருடைய பாடுகளின் வரலாறுகள் முறையே வாசிக்கப்படுகின்றன.

நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக மனஸ்தாபப்படவும், அவைகளை இனிமேல் ஒருக்காலுங் கட்டிக்கொள்ளாமலிருக்கவும், நமது கர்த்தர் பட்ட பாடுகளையும் அடைந்த மரணத்தையுஞ் சிந்திப்பதே நமக்கு உத்தமமான வழி. எப்பேர்ப்பட்ட பாவியும் மனந் திரும்பி பரிசுத்தமாய்ச் சீவிப்பதற்கு இதுவே வழி. பரிசுத்த கன்னியாஸ்திரியான அர்ச். தெரேசம்மாள் ஒரு நாள் பாடுபட்ட சுரூபம் ஒன்று காயங்களால் நிறைந்து இரத்தக்கறை பிடித்திருப்பதைக் கண்ட மாத்திரத்தில், தனக்குள் தன் பாவங்களுக்காக எம்மாத்திரம் துக்கப்பட்டாளென்ருல், அத்துக்கத்தால் சாக வேண்டுமென்றே நினைத்தாள். ஆகையால், உடனே அப்பாடுபட்ட சுரூபத்துக்கு முன் முழந்தாட்படியிட்டு, கண்ணீர் சொரிந்து, தான் இனிமேல் யாதோர் பாவத்தையுங் கட்டிக்கொள்ளாதிருக்க கிருபைசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். அவளுடைய விண்ணப்பமும் அங்கீகரிக்கப்பட்டது. எப்படியென்ருல், அவளே சொல்லியிருக்கிறபடி, அன்று முதல் அவளுக்கு நம்முடைய கர்த்தர் ஏராளமான வரங்களை கொடுத்தருளினபடியால், அவள் தான் சாகுமட்டும் தன்னுடைய துர்க்குணங்களையும் துர் ஆசாபாசங்களையும் அடக்கி யாதோர் பாவத்தையும் கட்டிக்கொள்ளாமல் பரிசுத்தமாய்ச் சீவித்து, நாளுக்கு நாள் சாங்கோபாங்கத்தில் விருத்தியடைந்துவந்தாள். இப்படியே நாமும் நம்முடைய திவ்ய இரட்சகரின் பாடுகளின்பேரில் இந்த அர்ச்சிய சிஷ்டவாரத்தில் மாத்திரமல்ல, ஆனால் நம்முடைய மரணபரியந்தமும் பக்தியுள்ளோராயச் சீவித்து வருவோமாஞல், உத்தமர்களாய ஒழுகி பாக்கியமான மரணமடைவோமென்பதற் கையமில்லை.

THE BANGALORE CONFERENCE.

பெங்களூர் 1917-ம் ௵ ஜனவரீ 25-ம் ௳ முதல் 30-ம் ௳ வரை கூடிய மேற்றிராணிமார்களின் ஆலோசனைச் சங்கத்தில் நடந்த தீர்மானங்கள்.

சங்கத்தில் கூடியவர்கள்.

மகா வந். புதுச்சேரி அதிமேற்றிராணியார்.
அக்கிராசனாதிபதி.
" " சென்னை அதிமேற்றிராணியார்.
வந். மைசூர் மேற்றிராணியார்.
" மைலாப்பூர் "
" திருச்சினாப்பள்ளி "
" கோயம்புத்தூர் "
" கும்பகோணம் "
" மங்களூர் "

அடியில் கையொப்பமிட்ட மேற்றிராணிமார்கள், மைசூர் மேற்றிராணியாருக்கு பட்டாபிஷேக சடங்கை நிறைவேற்ற உதவி புரிவதற்காக ஜனவரீ 24௳ யில் வரவழைக்கப்பட்டதால், தென் இந்திய கத்தோலிக் ஜனசமூகத்தைச் சார்ந்த சில முக்கிய விஷயங்களைப்பற்றி கலந்து பேசி ஓர் தீர்மானம் செய்ய இதுவே தக்க சமயமென்று நினைத்து, பட்டாபிஷேக சடங்கு முடிந்த பிறகு, ஓர் ஆலோசனைச் சங்கம் கூடினார்கள். இவ் வாலோசனைச் சங்கத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன. இத் தீர்மானங்களில மேற்கண்ட மேற்றிராணிமார்களின் ஒருமனப்பட்ட அபிப்பிராயம் அடங்கியிருக்கிறது. தங்கள் தங்கள் மேற்றிராசன ஆளுகைக்குள்ளிருக்கிற சகல குருக்களும், விசுவாசிகளும் அத்தீர்மானங்களை அறிந்து அதற்கேற்ற விதமாய் நடந்துகொள்ளுவதற்காக, அவைகள் இங்கே பிரசுரிக்கப்படுகின்றன. தென் இந்திய

கத்தோலிக்கரின் அபிவிர்த்திக்கு அத்தியாவசியமான மன வொன்றிப்பு, கிரிகை ஒன்றிப்பு என்னும் இவ்விருவித ஒன்றிப்பையும் உண்டாக்குவதற்கு ஷெ சங்கத்தின் தீர்மானங்கள் வெகு உதவியாயிருக்குமென நம்பப்படுகிறது.

1. லூர்து நகரில் நமதாண்டவள் தரிசனங் கொடுத்த 60-ம் ௵ வைர ஜூபிலியாகிய 1918-ம் ௵த்தில், மரியாயின் மகா சங்கத்தைக் கூட்டவேணுமென ஒருமனப்பட தீர்மானிக்கப்பட்டது. அச் சங்கம் கூடவேண்டிய தேதியோ, செப்டெம்பர் மாதக் கடைசியில் வரும் மிக்கேல்மஸ் ரஜா நாட்களிலாவது, வருஷக் கடைசியில் வரும் கிறிஸ்மஸ் ரஜா நாட்களிலாவது வைத்துக்கொள்ளலாமென்பது நோக்கம்.

மரியாயின் மகா சங்கத்திற்கு வசூலிக்கப்பட்ட பணத்தில் அச் சங்கத்திற்காக செலவிடப்படும் தொகை போக மீந்திருக்கும் தொகைகளை எவ்விதமாய்ப் பிரயோகிப்பது என்பதைப்பற்றி வெவ்வேறு ஆலோசனைகள் கொடுக்கப்பட்டன. ஐந்து மேற்றிராணிமார்கள் சென்னையில் கத்தோலிக்கர் தங்கும்படி கட்ட உத்தேசித்திருக்கும் விடுதிக்காக பாக்கித் தொகையை உபயோகப்படுத்துவதே யுக்தமென அபிப்பிராயப்பட்டார்கள்; இரண்டு மேற்றிராணிமார், அதை கண்டி குருமடத்துக்கு இந்திய குருக்களின் கல்வி அபிவிர்த்திக்காக தானஞ் செய்தல் நலமென அபிப்பிராயப்பட்டார்கள்; இந்தியாவில் கத்தோலிக் அச்சுக்கூடங்களின் பராமரிப்புக்காக அத்தொகையை உபயோகப்படுத்தல் நலமென்பது ஒருவர் அபிப்பிராயம். இந்த ஆலோசனைகள் ஒன்றும் அங்கீகரிக்கப்படாவிட்டால், அடுத்த மரியாயின் சங்கத்துக்காக ஷெ தொகையை நிறுத்திவைக்கலாமென்ருர் மற்றொருவர்.

இந்தியா, பர்மா, சிலோனிலுள்ள மற்ற மேற்றிராணிமார்களுக்கும் இத்தீர்மானத்தைத் தெரிவித்து, மரியாயின் சங்கம் கூடவேண்டிய விஷயமாயும், பாக்கித் தொகையை எவ்விதம் உபயோகப்படுத்தலாமென்பதைப் பற்றியும் அவரவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டறிய வேணுமாய் வந். திருச்சி மேற்றிராணியாரவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2 சென்னை ராஜதானியில் கத்தோலிக் பிரபந்தங்களைப் பரப்புவதற்காக "கத்தோலிக் சத்தியாபிமானி சபை" ஒன்று ஏற்படுத்த வேணுமென தீர்மானிக்கப்பட்டது. இது விஷயமாய் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடிய யுக்தமான வகை வழிபாடுகளடங்கிய அட்டவணை ஒன்று தயாரித்து, இச் சங்கத்து மெம்பர்களின் ஆலோசனைக்கும் அங்கீகாரத்துக்கும் அதை அனுப்பும்படியாக, திருச்சினாப்பள்ளி சங். லக்கோம் சுவாமியாரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3 திருச்சபைக்கு விரோதமான பத்திரிகைகளையாவது பிரபந்தங்களையாவது, பரிசுத்தத்தனத்துக்கு ஒவ்வாத பிரபந்தங்களையாவது வாசிக்கப்படாதென்று கத்தோலிக்கருக்கு கண்டிப்பாய் வற்புறுத்தி நினைப்பூட்டத் தீர்மானிக்கப்பட்டது.

4. அந்தந்த மேற்றிராசனங்களில் அந்தந்த மேற்றிராணியாருடைய பார்வை பராமரிப்புக்குள் ளடங்கிய கத்தோலிக் சங்கங்களை ஏற்படுத்துதல் யுக்தமென்றும்; இச் சென்னை ராஜதானியில் மேற்கண்டபடி ஏற்படும் பல சங்கங்கள் அனைத்தும் ஓர்வகை பொதுச்சங்கங் கட்டுப்பாட்டால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியதென்றும்; இப் பொதுச்சங்கம் சென்னையில் சென்னை அதிமேற்றிராணியாரின் சாஸ்வத அக்கிராசனத்துக் குட்பட்டிருக்க வேண்டியதென்றும்; அந்தந்த மேற்றிராசனத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை அந்தந்த மேற்றிராசன கத்தோலிக் சங்கமே முடிவு செய்துகொள்ள வேண்டியதென்றும்; ஆனால் இந்த ராஜதானியிலுள்ள எல்லா கத்தோலிக்கரையும் சார்ந்த பொது விஷயங்களைப்பற்றி ஷெ பொதுக் கட்டுப்பாட்டு சங்கமே அந்தந்த மேற்றிராசன சங்கங்களின் நோக்கத்தை அறிந்துகொண்டு தீர்மானிக்க வேண்டியதென்றும்; தற்போதுள்ள தென் இந்திய கத்தோலிக் சங்கத்தை விட மேற்கண்டபடி சேர்க்கப்பட்ட பொது கட்டுப்பாட்டு கத்தோலிக் சங்கமே அதி மிக

நலத்தை உண்டுபண்ணக்கூடியதால் அதையே இனி பராமரிக்கவேண்டியதென்றும் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

5. சுதேச குருக்களின் தொகையை அதிகரிக்கவும், குருக்கள் வேத போதக சபைகள் சம்ரக்ஷணைக்காக அந்தந்த மேற்றிராசனத்தில் கிடைக்கக்கூடிய பொருளுதவியை விருத்தி செய்யவும், வேண்டிய சகலவித வழிபாடுகளைப் பிரயோகிக்க வேண்டுமென்றும்; தங்களுடைய கோவில்களையும், பள்ளிக்கூடங்களையும், குருக்களையும் சம்ரக்ஷிப்பது தங்களைப் பொறுத்த கடமையென்று விசுவாசிகளுக்குத் தக்கபடி போதித்து கண்டுபிடிக்கச் செய்யவேணுமென்றும்; குரு மடத்தின் சம்ரக்ஷிப்புக்காகவும் அந்தந்த மேற்றிராசனத்தின் மற்ற குறைகளை நிவர்த்திக்கும்பொருட்டும் எல்லா மேற்றிராசனங்களிலும் கிரமத்துடன் பணம் வசூலிக்கப்பட வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

6. கத்தோலிக்கருக்குள் முதலாய் "ஜாதி பேதகம்" அதிகரித்துக்கொண்டே வருகிறபடியால், நமது பிரயாசைகள் அநுகூலப்படுவதற்கு அது ஒரு பெருந்தடையாயிருக்கும்போல் தோற்றுகிறது என்பதை இச்சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார்கள் நன்றாய் உணர்ந்து; ஐரோப்பிய குருக்களுக்கும் இந்திய குருக்களுக்கும் எப்போதும் இருந்த சினேக ஒன்றிப்பு சதா நீடித்திருக்கவேணுமென கோருகிறார்கள். ஆகையால் இந்த அந்நியோந்நிய சினேக பந்தனத்தை எவ்விதத்திலும் குறைக்கக்கூடிய விஷயங்களை விலக்க ஐரோப்பிய குருக்களும், இந்திய குருக்களும், விசுவாசிகளும் சர்வ ஜாக்கிரதை எடுத்துக்கொள்வார்களென நம்பப்படுகிறது.

7. இக்காலத்தில் எவ்விடத்திலும் பரம்பியுள்ள தீய மனச்சுவாதீனத்தினின்றும், வேத விஷயங்களில் அக்கரையற்றதனத்தினின்றும் விளைகிற தீமைகளை முறிக்க ஏற்ற பிரதான சாதனங்கள், ஆழ்ந்த வேதோபதேசமும், பலத்த கத்தோலிக் பத்திரிகைகள் மட்டுமல்ல; கீழ்த்தர எலிமெண்டெரி பாடசாலைகளிலும், நடுத்தர பாடசாலைகளிலும், உயர்தர பாடசாலைகளிலும் புகட்டும் நல்ல கத்தோலிக் படிப்புங்கூடத்தானென்பதை இச்சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மேற்கண்ட சாதனங்களைத் தவிர, கத்தோலிக் பந்தன சபைகள், கத்தோலிக் வாசக சாலைகள், செபக்கூட்டங்கள், மாதா சபை முதலியனவும், இது விஷயத்தில வெகு உதவியாயிருக்கும். ஆகையால் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சமயோஜிதமாய் மேற்கண்ட சாதனங்களை கூடியவாறு கையாடவேண்டியதென தீர்மானிக்கப்பட்டது.

8. கத்தோலிக்கரின் உயர்தரக் கல்வி அபிவிருத்தி விஷயமாக இச்சங்கம் தீர்மானிப்பதென்னவெனில்:—கத்தோலிக்கரின் உலக செல்வாக்கை உயர்த்த இது ஓர் பலத்த சாதனந்தானென இச்சங்கம் பூரணமாய் உணருவதுடன்; அவ்வகை அபிவிருத்தியை ஆதரிக்க ஏற்ற சாதனங்களைத்தேட குருக்களுடன் ஏகோபித்துழைப்பது தங்கள் கடமையென விசுவாசிகள் கண்டுபிடித் திருப்பதைப்பற்றி திருப்தி அடைந்தும் இருக்கிறது. ஆகையால் இவ்வுயர்தரக் கல்வி அபிவிருத்தியைத் தேட கத்தோலிக்கருக்கு உதவி புரியும்பொருட்டு பணம் வசூல்செய்ய உத்தரவளிக்கவேணுமாய் கத்தோலிக் இந்தியரில் சில பெரியவர்கள் சென்னை அதிமேற்றிராணியாருக்கு செய்துகொண்ட விண்ணப்பத்தை இங்கு கூடிய மேற்றிராணிமார்கள் சந்தோஷமாய் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் அப்படி பண வசூல் செய்வதற்குமுன், எந்த மேற்றிராசனத்தில் பண வசூல் செய்யப்போகிறார்களோ, அந்த மேற்றிராணியாரிடம் எழுத்துமூலமாய் அநுமதி பெற்றபின் வசூலை ஆரம்பிக்க வேண்டியது.

9. பெண் கல்விப்பயிற்சி அபிவிருத்தி விஷயமாய் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சக்திக்கேற்றவாறு எல்லா வகுப்பு பெண்களுக்கும் உபயோகப்படும்படி ஒரு செக்கண்டரி ஸ்கூல் ஏற்படுத்தவும், இன்னும் உயர்தரக்கல்வி கற்க விரும்பும் பெண்களுக்காக சென்னையில் யூனிவர்சிட்டியாரால் அங்கீகரிக்கக்கூடிய ஓர் காலேஜை ஏற்படுத்த ஓர் கன்னியர் சபைச்

சகோதரிகளைக் கேட்டுக்கொள்ளவும் வேணுமாய் தீர்மானிக்கப்பட்டது.

10. இலௌகீக கூட்டுறவு விஷயமாயாவது துரைத்தன சம்பந்தமாயாவது கத்தோலிக்கரும் புரோட்டெஸ்டாண்டாரும் ஏகோபித்துழைப்பதைப்பற்றி இச்சங்கம் ஒருமனப்படசெய்யும் தீர்மானம் என்னவெனில்: புரோட்டெஸ்டாண்டாருடைய எந்த சபைக்கூட்டமானாலும் சரி அல்லது எந்த கட்டுபாடானாலும் சரி, அச்சபைக்கூட்டத்தின் நோக்கம் சாதாரண இலௌகீக அல்லது துரைத்தன சம்பந்தமான விஷயமாகமட்டு மிருந்தபோதிலு முதலாய் கத்தோலிக்கர் அதில் மெம்பர்களாக சேருவது யுக்தமல்ல; ஆனால் விசேஷித்த சமயங்களில் புரோட்டெஸ்டாண்டாரும் கத்தோலிக்கரும் ஏகோபித்தல் நலமாகத் தோன்றினால், அச்சமயங்களில் அதில் குறிக்கப்பட்ட விஷயங்களில் இருதிறத்தாரும் ஒன்றித்து ஓர் முடிவான தீர்மானத்துக்கு வருவதற்காக சில கத்தோலிக் பிரதிநிதிகளை நியமித்து புரோட்டெஸ்டாண்டு பிரதிநிதிகளைச் சந்தித்து பேசிவர அனுப்புவதில் மேற்றிராணிமார்களுக்கு ஆக்ஷேபனையில்லை.

11. மனந்திருப்புதல் விஷயமாய் சகல விசுவாசிகளும் இன்னும் அதிக பிரயாசையெடுத்து தங்கள் குருக்களுடன் ஒன்றித்துழைக்கவேண்டியது அவசியம்; ஆகையால், அஞ்ஞானிகள் மனந்திரும்புதலை சுலபப்படுத்த குருக்களுடன் அதிக உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் சேர்ந்து உழைக்கவேணுமாயும், விசேஷமாய் ஜாதி பேதகத்தினிமித்தம் மனந்திரும்புதலுக்கு தடைசெய்யாதிருக்கவும், எல்லா கத்தோலிக்கரையும் இவ்வாலோசனைச் சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார்கள் வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள்; இது விஷயமாய் ஓர் "கத்தோலிக் மிஷனரி சங்கம்" கூட்டவேணுமாய் பிரேரேபிக்கப்பட்டிருப்பதை பூரண அனுமதியுடன் நோக்குகிறார்கள்.

12. "கோ ஆப்பரேட்டிவ் பாங்கிகளை" இவ்வாலோசனைச் சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார்கள் வெகு பிரீதியாயும் அநுதாபத்துடனும் அங்கீகரிக்கிறார்கள். அவைகள் கத்தோலிக்கருள் அதிகமாய்ப் பரம்பத் தூண்டிவிட தயாராய் இருக்கிறார்கள். ஆனால் இந்த பாங்கிகளானாலும்சரி, வேறெவ்வகை பாங்கிகளானாலும்சரி, அவைகளை உற்பத்திசெய்வதிலோ, நடத்துவதிலோ, மேற்றிராணிமார்கள் யாதொரு பொறுப்பையும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

13. தென் இந்தியாவிலுள்ள எல்லா கிறீஸ்துவ சமயிகளுக்கும் பொதுவான ஓர் தினசரி சமாச்சார பத்திரிகை ஏற்படுத்துவது இச்சங்கத்துக்கு யுக்தமாகத் தோன்றவில்லை; ஆனால் கத்தோலிக் விசுவாசிகள் பொருளுதவிசெய்து ஆதரிக்க இஷ்டப்பட்டால், யாதொரு கத்தோலிக்கருடைய சொந்தத்தில் ஓர் அநுதின சமாச்சார பத்திரிகையை ஏற்படுத்திக்கொள்ள அநுமதி கொடுப்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை

14. தற்காலத்தில் இந்தியருடைய மனதைக் குழப்பி கலக்கப்படுத்துகிற ஜனசமூகம், துரைத்தனம், இவை சம்பந்தமான சிக்குமுக்கான விவகாரங்களைப் பற்றியும், இவ்விவகார விஷயங்களில் கத்தோலிக்கர் சேருவது யுக்தமா என்பதைப் பற்றியும் தீர்க்க ஆலோசனைசெய்ய நேரம் கிடைக்கவில்லை. ஆகையால், கத்தோலிக்கர், வீணான பொய் வைராக்கியத்தால் ஏமாந்து போகாமல், எச்சரிக்கையாயிருத்தல் வேண்டுமெனமட்டும் இப்போதைக்கு முன் எச்சரிக்கை செய்யப்படுகிறது. அவர்களுடைய பரிசுத்தவேதம் போதிப்பதுபோல் தேசத்தை ஆண்டுவரும் துரைத்தனத்தாருக்கு ராஜபக்தியுள்ளவராகவிருந்து வரவும், கத்தோலிக் திருச்சபைக்கு நல்ல பிள்ளைகளாக கீழ்ப்படிந்து நடக்கவும் கருத்தாயிருந்தால்மட்டும் போதுமானது என தீர்மானிக்கப்பட்டது.

இப்படிக்கு,

(கை ஒப்பம்) ✠ எலியாஸ் ஜோசேப்,
புதுவை அதிமேற்றிராணியார்.

,, ✠ ஜெ. ஆலன்,
சென்னை அதிமேற்றிராணியார்.

,, ✠ எச். டெய்ஸியே,
மைசூர் மேற்றிராணியார்.

(கை ஒப்பம்) ✠ தியேட்டோனியுஸ்,
மைலாப்பூர் மேற்றிராணியார்.

,, ✠ அகுஸ்தீன்,
கோயம்பத்தூர் மேற்றிராணியார்.

,, ✠ ஏ. ஷாப்பியூ,
கும்பகோணம் மேற்றிராணியார்.

,, ✠ ஏ. பெசாந்தியர், சே. ச.
திருச்சி மேற்றிராணியார்.

,, ✠ பவுல் பேரினி, சே. ச.
மங்களூர் மேற்றிராணியார்.

THE SCHOOL OF LOVE.
அன்பின் பாடசாலை.

அன்பானது வறுமையில் தானாகவே கொண்டுவந்துவிடும் என்பது இதன்பொருள் அல்ல. சில சமயம் இப்படி நேரினும் நேரலாம்; சில வேளை இவ்வுலக செல்வ சுகபோகங்களையும் கொடுத்துவிடும்படி அவ்வன்பு கேட்கக்கூடும். புருஷன் தன்னிடம் உள்ளவை யனைத்தையும் தன் மனைவிக்குக் கொடுக்கிறான்; மனைவியும் அப்படியே தன் கணவனுக்குக் கொடுக்கிறாள். சத் விஷயத்தைச் சாதிக்கும் பேராவல் கொண்ட அநேகர் அதை முன்னிட்டுப் பிச்சைப்புகும் நிலைமைக்கு வந்திருப்பதை நாம் கேள்விப்படவில்லையா? ஆயினும் இவை யன்பின் அணிகலனே யொழிய அவை யிருத்தலும் யில்லாததும் அவசியமல்ல; ஒரு கோடீசுவரனும் ஏழையும் ஒரே விதமான அன்பினால் தூண்டப்படலாம்; அன்பினால் ஏவப்பட்டால் இவ் விருவரும் அவ்வன்பு கேட்பனவற்றைக் கொடுக்கும் சம ஆற்றலுடையவர்களென்பது திண்ணம். ஏனெனில் அன்பு கேட்பதெல்லாம் தன்னலப் பரித்தியாகமே; மனிதர் மனதைக் கொடுத்தல், இதய வணக்கம், அதன் மரியாதை, அதன் பணிவிடை. எந்த நிலைமையினும் தன்னையே கொடுத்தல். வேண்டுமானால் தன்னுயிரையே பலியாகக்கொடுத்தல் இவைதாம் அன்பென்னும் அணங்கு தன்னூழியராகிய மனிதரிடம் எதிர்பார்ப்பது. இதனன்றோ திருவள்ளுவர், "அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்று சொல்லி யிருப்பது. நமதாண்டவரின் அணைகடந்த அன்பின் பலியைக் கண்டு இன்னது சொல்வதென்று தோன்றாமல் திகைத்தவராய், அர்ச். சின்னப்பர், "கிறிஸ்துவானவர் என்னை நேசித்தார், எனக்காகத் தம்மையே கொடுத்தார்" என்கிறார். எந்த நூலிலும், எந்த சாஸ்திரத்திலும் இதற்கு நிகரான விஷயமில்லை யென்று சொல்லும்படியான உன்னத வாக்கியத்தால் அர்ச். சின்னப்பர் இது விஷயமாய் மீண்டுஞ் சொல்வதைக் கேளுங்கள்: சாவு, வாழ்வு, சம்மனசுக்கள், இராச்சியங்கள். அதிகாரம், நம் மெதிரிலுள்ள காரியங்கள், இனி வரப்போகும் காரியங்கள், வல்லமை, மேன்மை, தாழ்மை, படைப்புண்டவை எதுவும் நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதரி லிருக்கிற தேவசிநேகத்தினின்றும் நம்மைப் பிரிக்க முடியாதென்பது நிச்சயம். அன்பின் தூண்டுதல் இத்தகைத்தாம்; அன்பு சிநேகிக்கும்படித் தூண்டுகிறது; சிநேகிக்கும்படித் தூண்டப்பட்ட அன்பிற்கு வெகுமதி அன்பே; அதன் ஆதியும் அந்தமும் அன்பே.—என் அன்பு இவ்வியல்பினதா? ஏனெனில் இதுதான் அன்பினியல்பை யறியும் மூன்றாவது வழி.

ஆம், நாம் முன்னமே சொல்லி யிருப்பதுபோல், அன்பை சரியான விதமாய்ப் பார்க்கும்போது, அன்பைச் செலுத்த அரிய தைரியம் அவசியம் என்று தெரிகிறது. பூரண அன்பு எங்கே யுண்டோ அங்கே யளவற்ற வீரத்துவமுண்டு; வீரத்துவம் குறைவதின் காரணம் அன்பின் ஆற்றல் குறைவதாலாம். ஒரு பக்கம் யோசித்தால், அன்பு பயங்கரமானதென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. அது கட்டாயம் பண்ணும். இரக்கங் காட்டாது; அதற்கு வேண்டியது முழுமையும்; அரைகுறையதற் குதவாது; விசேஷமாய்த் தனக்கிடும் பலியில் மற்றவர் பங்கடையப் பொறாது; ஒரு கையால் கொடுத்து மறு கையால் எடுத்துக்கொள்ள அது இடங்கொடுக்காது. நீ நன்றா யூன்றிச் சிநேகிக்க ஆசைகொண்டால், நஷ்டம் வருமென்று யோசிக்கலாகாது; வரும் நஷ்டத்தை யேற்றுக்கொள்ள ஆயத்தமா யிருக்கவேண்டும், உன் நண்பனுக்காக உன்னுயிரையும், உனக்குப் பிரியமான யாவற்றையும் கொடுக்கத் தயாரா யிருக்கவேண்டும். அன்பு உன்னிடம் எத்தகைய பலி கேட்கப்போகிறதென உனக்குத் தெரியாது. உயிரைவிடும்படிக் கேட்கலாம் அல்லது உயிரை யுன்னதத்துக் குயர்த்தும்படியும் கேட்கலாம்: காயத்தால் வருந்தும்படிச் செய்யலாம்; அல்லது, காயம்பட்டவரை கண்காணித்து அவர்கள் துன்ப நோயைக் கண்டு வருந்தும்படிச் செய்யலாம். சுறுசுறுப்புடன் வேலை செய்யவேண்டி யிருக்கலாம், அல்லது அதற்கு விரோதமாய் ஒன்றுமே செய்யாமல் அசையா நிலை யநுபவிக்க வேண்டி யிருக்கலாம். "நின்று காத்திருப்பவர்களும் ஊழியஞ் செய்பவர்களே" என்று சொல்லப்பட்டிருக்கிறதும் உண்மைதானே. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், அதாவது அன்பு கட்டாயம் பலியை எதிர்பார்க்கும்; ஆனால் அப்பலி இன்ன விதமாய் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி அது உன்னிடம் யோசனை கேட்கப் போவதில்லை.

இவ்வாறு மேற்கூறிய அன்பின் தோற்றத்தைக் கண்டு பயப்படுகிறாயா? பயப்பட்டால், என்ன செய்கிறது? அன்பின் உண்மை யியல்பைக் கண்டுபிடிக்க இந்த வழியைவிட வேறு கிடையாதென நிச்சயமாய் நம்பு. பயப்படாவிட்டால், பயமேனும் நம்பிக்கையும் தைரியமும் இருக்குமாகில், தான் கேட்பதனைத்தையும் கொடுப்பதற்கான பலத்தை யன்பே தெரிந்துகொள்ளக் கூடுமென்று சொல்ல உன்னால் கூடுமானால், அன்பின் மெய்ப்பொருளை யநுபோகத்தால் நீ யறிந்திருந்தால், அதற்காகவேண்டிய ஆயத்தஞ் செய். தற்புகழ்ச்சி, தன்னயம், நானென்னும் செருக்கு இவற்றையடக்கு; அப்போது அன்பின்வழி திறக்கும். யாவற்றிற்குங் காரணம் வேண்டுமென்றறிய அதிக ஆவலாயிராதே; காரண காரியங்களையறிந்து ஒருகாரியஞ் செய்வது நல்லதென்பது மெய்தான்; ஆனால் மனிதன் அறிவு அளவுக்கடங்கிய தானமையால், அநேகவிசை காரணகாரிய ஆராய்ச்சியில் அவன் தவறிவிடுகிறான். மேலும் உண்மை, ஞானம், அழகு, நன்மைத்தனம் இவை எங்கெங்கே யுண்டோவெனத் தேடிப்பார்த்து அவற்றின் பலாத்காரமான வல்லமையை யுணர்ந்து, பின்வாங்காமல் அதற்கடங்கி, ஒன்றுக்கு மஞ்சாமல் அதனை வழிக்காட்டியாகக் கொண்டு நடக்கவேண்டும். கடைசியாய் உன்னாவி இவ்விஷயத்தில் உழைக்கவேண்டுமென ஆசைப்பட்டால் உத்தம காரியத்துக்குத் தன்னையே கொடுக்க எண்ணங் கொண்டால், வெளிச்சத்தைப் பின்பற்றி செய்யத்தகுந்த காரியங்களைச்செய்ய ஏவப்பட்டால், அதற்கிணங்கி நட. தாமதஞ்செய்யாதே; அதைத்தடுக்காதே; அப்படிச்செய்வதால் நஷ்டவருமென யோசிக்காதே; ஆபத்துண்டாகுமென அஞ்சாதே; செய்யவேண்டுமானால் துணிச்சலுடன் ஒன்றையுங் கவனியாமல் காரியத்தைத் தொடங்கி நடத்து. "எரின்மேல் தன்கரத்தைவைத்து எவனொருவன் திரும்பிப்பார்க்கிறானோ அவன் எனக்குத் தகுந்தவன் அல்ல."

இவைதாம் அன்பினாற்றலைவளரச்செய்யும் அப்பியாசமுறைகள். இத்தகைய நிலத்திலும் இத்தகைய பயிற்சியிலுமே அன்பு வளரும்; இதைப்பற்றிச் சந்தேகமே வேண்டியதில்லை. ஏனெனில் "அன்பின்வழியதுயிர்நிலை யஃதிலார்க்கென்பு தோல்போர்த்தவுடம்பு" என்பதுபோல், அன்பின்விதை ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் உண்டு; ஆனால் அது முளைவிட்டுவரும்போது அநேகர் அதைக் கிள்ளியோ அல்லது அது வளர்வதற்கான தண்ணீரூற்றாமலோ அதைக் கெடுத்துவிடுகிறார்கள். ஆனால் அன்பின்பொறியை யாதரித்துக் காப்பாற்றினால், அது சுவாலித்தெரியும். முந்தமுந்த அதன் வெளிச்சத்தால் உன்னிடம் ஒருவித உணர்ச்சியுண்டாகும். அதன் வெப்பத்தாலும், துன்பங்களைத் தைரியமாயெதிர்க்க அது செய்யுமுதவியின் இலகுவாலும், கொண்டகாரியத்தைச் செய்துமுடிப்பதால் உனக்குண்டாகும் சந்தோஷத்தாலும், அவ்வன்பை நீயறிவாய். அதன்பின்னர் பரித்தியாகத்திற்குத் தயாராயிரு. புஷ்பங்கள் மலர்ந்து, அதினின்றும் காய்பிடித்து வரும்போதுதான் சர்வசாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று தோட்டக்காரர் சொல்வது வழக்கம். நீ கொஞ்சதூரம் வழிநடந்து ஆடல் பாடலிலும் சிரிப்பு விளையாட்டிலும் காலங்கழித்தபின், இருள்சூழ்ந்த பாதையிலும் உனக்குப் போகப் பிரியமில்லாவிடத்திற்கும் அன்பு உன்னையழைத்துச் செல்லும். அது உன்னை ஏமாற்றும்; நீ முகமுகமாய்வந்து சந்தித்தபோதும் உன்னை அறியாததுபோல் பராமுகமாயிருக்கும்; உன்னுடைய மேலான செய்கைக்குப் பிரதிநன்றி காட்டாமலும், உன் ஆத்மாவின் உயர்ந்த சத்துவத்தை வளரவிடாமலும் இருக்கக்கூடும். உன் நல்லெண்ணத்தில் தப்பர்த்தங்கொள்ளும்; உன் மேலானசெயல்களைக்கண்டு பொறாமைப்படும்; வன்சொல்லாலும் ஏளனத்தாலும் உன்னை நெருக்கும். அவநம்பிக்கை, சந்தேகம், அப்பிரியம், அலட்சியம் முதலியவற்றால்

உன்மனதைப் புண்படுத்தும். ஆபத்துவேளையில் அது உன்னைக் கைநெகிழவிட்டு நடந்துவிடும்; நீ மனதுநொந்திருக்கையில் உன்னைக்கவனிக்காது;. அப்படி அதனுதவிக்காய் கூவியழைத்தால், அது உனக்கு விரோதமாய்ப்பேசும். வழியில் நீ காயம்பட்டிருப்பதைக் கண்டுங்காணாதது போற் போய்விடும்; நீ சிலுவையிலறையுண்டிருப்பதைப்பார்த்து, அதற்கு நீ பாத்திரவானேயென மொழியும்; நீ கடைசி துளிபரியந்தம் இரத்தஞ் சிந்துவதைக் கொஞ்சமும் இரக்கமின்றி முடிவுவரையில் பார்த்துநிற்கும்.

இப்படி யுன்னை யது கொன்றபிறகுதான் நீ யதன் உண்மையை அறிவாய். "எனக்காக உயிரை யிழப்பவன் அதைக்கண்டுபிடிப்பான்" அது உன்னைப் பரிசுத்தப்படுத்தி, தான் என்னும் ஆணவம் உன்னிடம் அணுவளவுமில்லாமல், உதவி, யாறுதல், சுகம் முதலியவற்றிற்குப் பதிலாய் தெரிந்துகொண்ட வழியில் நடப்பதற்கான பலத்தையே நாடும்போதுதான் மெய்ஞ்ஞானம் உதிக்கும். அப்போதுதான் எத்தகைய வேறு பயிற்சியால் முயன்றபோதிலும் கண்ணுற்காண்முடியாததும், காதினால் கேட்கமுடியாததும் மனித ரிதய வன்மையால் யளவிட்டறியக்கூடாததுமானதை நீ யறிந்துகொள்வாய்.

S. Selva Raju.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம்—39-45.

வசனம்.—39. "அந்நாட்களிலே மரியம்மாள் எழுந்து, மலை நாட்டிலே யூதா தேசத்திலுள்ள ஓர் பட்டணத்துக்குத தீவிரமாய்ப்போய்,

40. சக்கரியாசுடைய வீட்டில் பிரவேசித்து, எலிசபெத்தம்மாளை வாழ்த்தினாள்.

41. அப்போது சம்பவித்த தேதெனில், மரியம்மாள் சொன்ன வாழ்த்துதலை எலிசபெத்தம்மாள் கேட்ட மாத்திரத்தில், அவளுடைய உதரத்திலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்தம்மாளும் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டு,

42. உரத்த சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே! உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே.—"

ஜலம் பெருகிய தடாகம் அதைத் தன்னிடத்தில் அடக்கமாட்டாமல், வரம்பையுடைத்து வயலில் பாய்கிறதுபோலவும், பூமியில் வருஷித்த மழை பூமி மட்டாகத் தாழ்ந்து போகாமல், அதிலே சுவறி, யதிகமதிகமாய் ஊடுருவி கீழ்ப்பணிய முயலுவதுபோலவும், தேவ இஷ்டப்பிரசாதம் பரிபூரணமாய் நிறைந்த கன்னி சுத்த தேவமாதா, தாமடைந்த வரப்பிரசாதத்தையும், ஆனந்த மகிழ்ச்சியையும், தமது பந்துவான எலிசபெத்தம்மாளிடத்திலும் பகிர்ந்து தந்தருளவும், ஆண்டவருடைய அடிமை யென்று தேவதூதன் முன்னால், தம்மைத் தாழ்த்தித் தாழ்ந்தது போதாமல், எலிசபெத்தம்மாளுக்குத் தாசிகஞ் செய்து அதிகமாய்க் கீழ்ப்பணியவும், அவளுக்குச் சோபனஞ் சொல்லி உபசரிக்கவும், தேவ சுதனாகிய மெஸ்ஸியாவைச் சந்தித்து, அவருக்குத் தமது வணக்க மரியாதை நமஸ்காரங்களைச் செலுத்த அவருடைய முன்னோடியாகிய அருளப்பருக்கு நல்ல சமயம் வாய்க்கும்படியாகச் செய்யவும், எலிசபெத்தம்மாளைச் சந்திக்கத் தீவிரமாய்ப் புறப்பட்டாள்.

யூதேயா தேசத்தின் மலை நாட்டிலே ஜெருசலேம் பட்டணத்துக்குத் தெற்கே குரு வம்ஸத்தாரின் நகராகிய எப்ரோன் என்ற ஊரில் சக்கரியாசும் எலிசபெத்தம்மாளும் புண்ணிய நறுமணம் வீசி அந்நியோந்நியமாய் வாழ்ந்துவந்தார்கள்—இவ்வூருக்குத்தான் தேவதாய் கலிலேயா தேசத்தைச் சார்ந்த நசரேத் ஊரினின்று தூரப் பயணத்தின் அருமையும் கடுமையும் பாராமல், தனது சரீரத்தின் மெலுக்கையான நுட்பத்தையும், தனது மகிமை மகத்துவங்களையும் நினையாமல், தனது பந்துவான எலிசபெத்தம்மாள் அடைந்த அற்புத கிருபையை, சந்தேகித்தாப்போல் சோதித்து அறிய அல்ல, அவளைச் சந்தித்து அவளுக்குப் பணிவிடை செய்யவும், தேவ சித்தத்தை நிறைவேற்றவும் புறப்பட்டுப் போனாள்.—

தேவதாய் பயணமாய்ப் புறப்பட்ட காலத்தில், பாஸ்கா திருநாளைக் கொண்டாட யூத ஜனங்கள் கலிலேயாவிலிருந்து திரு யாத்திரிகளாய், கும்பல் கும்பலாய், ஜெருசலேம் பட்டணத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். மார்ச்சு மாதத்தின் இறுதியில் இத் திருநாள் கொண்டாடப்பட்டது. காடு, நாடு, கணவாய் மலைகள் எங்கும் செடிகளும் கொடிகளும் தளிர்த்து துளிர்த்து அழகாய் புஷ்பித்து நறுமணம் வீசி, பலஸ்தீனா தேசத்தையே ஓர் நந்தவனமாய் மாற்றும் அச்சுபமாதத்தில், சுகந்த திவ்யமான புஷ்பத்தை யொத்த தேவ கன்னிமாதா தன்னுள்ளத்தில் அடங்கிய புண்ணிய பரிமளத்தை எங்கும் தெளித்து வீசி, அர்ச். பெர்நார்து வசனிக்குமாப்போல் தன்னைச் சுமந்து தாங்கி நடத்திவரும் ஆண்டவரையே தன்னுதரத்தில் சுமந்துகொண்டு, பரலோக சம்மனசுகளை இக்காட்சியைக் கண்ணாரக் கண்டு ஆச்சரியப்படும் வண்ணம் தன் பயணத்தை நடத்திச் சென்றாள்.

தேவதாய் ஜெருசலேம் பட்டணத்துக்குப் போகும் இச்சனங்களோடு அல்லது தனக்குத் துணையாக தன் வீட்டின் பணிவிடைக்காரி ஒருவளோடு சென்றிருக்கலாம். தனது பததாவான சூசை முனியோடு இப் பிரயாணம் செய்யவில்லை என்பது வேத சாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

"தீவிரமாய்" அதாவது: தன் உள்ளத்தின் ஆனந்த உல்லாசத்தால் பூரிக்கப்பட்டு, இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதலினால் தூண்டப்பட்டு, தன் விருத்தாப்பிய பந்துவைக் காணவும், வாழ்த்தவும், சேவிக்கவும் விரைந்து சென்றாள் என்பதாம்.

"தீவிரமாய்" இப் பதத்தை அர்ச். அம்புரோஸ் பின் வருமாறு வருணிக்கிறார். "இஸ்பிரீத்து சாந்துவின் வரம் நற்கருமங்களை சோம்பலாய், மந்தமாய்ச் செய்ய அறியாது. சுறுசுறுப்பாய், வேகமாய்ச் செய்யும். தன் வீட்டுக்கு வெளியே, பகிரங்கமான தெரு வீதிகளில் நெடுநேரம் தங்குவது கன்னிகைக்குத் தகாதென்று உணர்ந்த கன்னிமரியாயி விரைந்து சென்றாள்."

இப்படியே நசரேத் ஊரிலிருந்து கன்னிமாதா புறப்பட்டு விரைவாக நடந்து, தம்மைச் சர்வேசுரன் சகல மகிமை மகத்துவங்களுக்கும் உயர்த்தின மேரையை வெளிவிட நினையாமல், எலிசபெத்தம்மாளிடம் வரப் பண்ணின கிருபையை மாத்திரம் வாழ்த்தக்கருதி அவள் இருந்த அறையில் உட்பிரவேசித்து அவளை வினவினாள்.

40-ம் வசனம்.—"சக்கரியாசுடைய வீட்டில் பிரவேசித்து எலிசபெத்தம்மாளை வாழ்த்தினாள்." "சமாதானம் உண்டாகுக" என்ற எபிரேயருடைய உபசார சுப மொழியைச் சொல்லி உபசரித்தாள். தானே முந்த முந்த தனக்குக் கீழ்ப்பட்டவளாகிய தனது பந்துவை வாழ்த்தி அவளுக்குப் பணிவிடை செய்ததில் தேவதாயின் ஆழ்ந்த தாழ்ச்சியையும் பிற சிநேகத்தையும் கண்கூடாய்ப் பார்க்கின்றோம்.

ஆனால் தன்னைத்தான் தாழ்த்துகிறவனை வாழ்த்தி மகிமைப் படுத்துகிறது தேவ சித்தத்தின் ஒழுங்கானதினால், அவள் சொன்ன மங்கள வாழ்த்துதலின் சத்தம் எலிசபெத்தம்மாளுடைய செவியில்பட அவளுடைய உதரத்திலிருந்த பாலனாகிய அருளப்பர், தேவசுதன் தன்னிடத்தில் வந்ததைத் தேவ அருளினால் அறிந்து, மன மகிழ்ந்து, தாயின் வயிற்றுக்குள் துடிக்கலானார். சந்தோஷத்தின் மாதாவாகிய கன்னிமரியாயி தன்னுள்ளத்தில் பொங்கிய திவ்விய சந்தோஷத்தை வீணையே குரலெடுத்துப் பாடினாற்போல் சந்தோஷ தொனியால் வெளியிட்டு, எலிசபெத்தம்மாளை வாழ்த்தினதும், அவளும், அருளப்பரும், சக்கரியாசும் சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தி ஆனந்த பரவசமானார்கள்.

41-ம் வசனம்—. அப்போது சம்பவித்த தேதெனில், மரியம்மாள்சொன்ன வாழ்த்துதலை எலிசபேத்தம்மாள் கேட்டமாத்திரத்தில், அவளுடைய உதரத்திலிருந்த

பிள்ளை துள்ளிற்று. எலிசபேத்தம்மாளும் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டு,

42-ம் வசனம்.—உரத்த சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே! உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே.

சர்வேசுரன் தம் வரங்களை மனிதர்களுக்குத் தந்தால், அவைகளைக் கன்னிமரியாயின் வழியாய்க் கொடுக்கிறார் என்பதையும், இதுவே அவர் தமது திருச்சபையில் ஏற்படுத்திய சாதாரண ஒழுங்கென்றும், இவ்வர்த்தமானம் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றது.—ஏனென்றால், தமது திவ்விய மாதாவின்குரல் சப்தத்தின் மூலியமாய்த்தான் தேவசுதன் எலிசபேத்தம்மாளையும் அருளப்பரையும் வரங்களாலும் ஆசீர்வாதங்களாலும் நிரப்பினார். மரியாயின் மத்தியஸ்தத்தால்தான் தமது முதல் வெகுமதிகளையும், பிரசாதங்களையும், இரட்சண்ணியத்தின் முதற்பலன்களையும் பங்கிடுகிறார்.—இதனாலல்லோ திருச்சபை தேவதாயை வரப்பிரசாதத்தின் வாய்க்கால் என்றும், தேவ இஷ்டப்பிரசாதத்தின் தாய் என்றும், பாவிகளின் அடைக்கலமென்றும், பாவிகளுக்காகப் பரிந்து பேசுகிறவளென்றும், மனுக்குலத்தின் மத்தியஸ்தியென்றும் புகழ்ந்துபாடுகின்றது.

தாய் வயிற்றில் அருளப்பர் துள்ளித் துடித்ததானது, கடைசி மாதங்களில் கர்ப்பிணிகளுக்கு இயல்பிலே உண்டாகும் துடிப்பல்ல, கலக்கத்தின் மிகுதியால், அல்லது சந்தோஷப் பெருக்கத்தால் நேரிடும் துள்ளாட்டம் அல்ல, ஆனால் முழுதுமே சுபாவத்துக்கு மேற்பட்ட அக்களிப்பைக் காண்பிக்கும் அற்புத துடிப்பென்று சொல்லவேண்டும். ஏனென்றால், இது கன்னிமரியாயின் குரல் சப்தத்தால் உண்டானதென்று சுவிசேஷ வாக்கியம் கூறுகிறது. அருளப்பர் இன்னும் தாயின் உதரத்திலிருக்கும்போதே இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்படுவார் என்று 15-ம் வசனத்தில் சொல்லியிருப்பதால், அவர் சந்தோஷ அக்களிப்பால் துள்ளின அந்தச் சணத்திலேயே ஜென்மப்பாவ தோஷத்திலிருந்து சுத்தமாக்கப்பட்டு இஷ்டப்பிரசாதத்தால் நிரப்பப்பட்டு அர்ச்சிக்கப்பட்டார் என்று வேத சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். தேவசுதனாகிய மெஸ்ஸியாவையும் அவருடைய திவ்ய மாதாவையும் ஞானதிருஷ்டியினால் அறிந்து உணர்ந்ததினாலும், தான் பாவதோஷத்திலிருந்து விடுதலையாகி அர்ச்சிக்கப்பட்டதினாலும்தான் அருளப்பர் அக்களிப்பால் துள்ளினார் என்றும், இவ்வறிவும் புத்தித்தெளிவும் அற்புதமாய் இவருக்குக் கொடுக்கப்பட்டதென்றும் வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அருளப்பர் பெற்றுக்கொண்ட இவ்வறிவு எப்போதும் அவரிடம் நிலைத்திருந்ததென்று சில சாஸ்திரிகள் சொன்னாலும், அச்சமயத்திற்காக மாத்திரம் இது புதுமையாய் அளிக்கப்பட்டதென்று கூறுகிறார்கள் மற்றனேகர். பாலனாகிய அருளப்பர் துள்ளினார், அவருடையதாய் அருளால் நிரப்பப்படுகிறாள். முதல் பாலன் இஸ்பிரீத்து சாந்துவால் நிரப்பப்படுகிறார். பின்னர் அவருடைய தாயும் நிரப்பப்படுகிறாள், பாலன் பெற்ற வரங்களின் பெருக்கம் தாயின்மேல் வழிந்தோடினது—ஏற்கெனவே அர்ச்சியசிஷ்டவளாய் இருந்தவள், இன்னும் அதிகமதிகமாய் அர்ச்சிக்கப்பட்டாள், தீர்க்கதரிசினியுமானாள்.

42-ம் வசனம்.—"உரத்தசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே. "உரத்தசத்தம்" அதிவேகமான ஆசைப்பற்றுதலின் அடையாளம்—இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதலால் தூண்டப்பட்டதால், எலிசபேத்தம்மாள் தன்னுள்ளத்தில் உதித்த உணர்ச்சி பற்றுதல்களின் பெருக்கத்தையும் பொங்கின ஆவல் அக்களிப்பையும் அடக்கமாட்டாதவளாய் வெளியே வாயின் ஓசையால் வெளியிட்டாள்.

இஸ்ப்பிரீத்து சாந்துவால் நடத்தப்பட்டு ஆச்சரிய பிரமிப்பாலும் ஆனந்த மகிழ்ச்சியாலும் மனிதர்களால் எவ்விதத்திலும் அறியக்கூடாத பரம இரகசியத்தை எலிசபேத்தம்மாள் வெளியாக்குகிறாள். "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே." சம்மனசானவர் உரைத்த அதே வார்த்தைகளைக்கொண்டு (28-வது வசனம்.) கன்னிமரியாயை வாழ்த்தினதானது அவளுக்கு இஸ்பிரீத்து சாந்துவே, தேவசுதன் மனுஷாவதாரம்செய்த பரம இரகசியத்தை அறிவித்தார் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம்.

"உம்முடைய வயிற்றின்கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே"; கன்னிமரியாயின் உதரத்தின் கனியாகிய சேசுநாதர் மனுஷனாகிய மட்டும் மற்ற மனிதரைப்போல் மனுக்குலத்துக்கு விதிக்கப்பட்ட எவ்வித சாபத்துக்கும் உள்ளாகாமல் முற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவராகிறார். அவருடைய சம்பூரணத்திலிருந்து சகலமனிதர்களும் தங்களுக்கு வேண்டிய அளவுபெற்றுக்கொள்ளும்படியாக சகலமான வரங்களையும், இஷ்டப்பிரசாத நன்மைகளின் ஏராள பெருக்கத்தையும் அளவு எல்லையெல்லாம் கடந்த விதமாய்ப் பெற்றவர், ஆசீர்வதிக்கப்பட்டவர், முற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவரல்லவா?

சேசுநாதருக்கு மனுஷதந்தையில்லாததினாலும், அவர் கன்னிமரியாயின் உதரத்தில் அவளுடைய கன்னிசுத்தமகிமைக்கு யாதொரு அற்பப் பழுதும் வராமல் அதிசயமாய் உற்பவித்து அதிசயமாய்ப் பிறந்ததாலும் அவரைக் கன்னிமாதாவின் உதரத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட கனியென்றும் அவளுடைய ஏக சுதனென்றும் பூரண அர்த்தத்தோடும் உரிமையோடும் சொல்லலாம்.

S. M.

அர்ச். லிகோரியார்

அருளிச்செய்த வாக்கியங்கள்.

சேசுநாதருடைய பாடுகளை நன்றாய்த் தியானித்து சுவாமியினுடைய அன்பி லுயரப் பிரயாசைப்படுவாயாக.

அடிக்கடி நன்மை வாங்குவாயாக.

ஒரு நாளைக் கொருவிசையாகிலுந் தேவநற்கருணையைச் சந்திப்பாயாக.

காலமே எழுந்திருக்கையில் அன்று வரப்போகின்ற தின்மைகளை யெல்லாஞ் சுவாமிக்காக பொறுக்கத் தீர்மானித்துக்கொண்டு உன்னை முழுதுஞ் சுவாமிக் கொப்புக்கொடுப்பாயாக.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

41-ம் அதிகாரம்.

குளத்திலும் கிணற்றிலும் குதிக்கச்சொன்ன பாபிஷ்டிகளின் புத்தி நற்புத்தியோ?

சற்று நேரத்துக்குப் பின் மாஜிஸ்ற்றேட்டும் அவருடைய எட்டு குமஸ்தாவும் பெரிய டாக்டரும் சாவு வீட்டில் பிரவேசித்து, அங்கு துக்க துயரத்துடன் நிற்கும் தேவதாஸ் பண்டிதருடன் துக்கங்கொண்டாடி, அங்கு போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

அப்போது டாக்டர்துரையவர்கள் கொலையுண்டுகிடக்கும் ருக்மணியைப் பரிசோதித்து இவ்வாறு தமது ரிப்போர்ட்டை வாசித்தார்.

"ஏறக்குறைய 24 பிராயமுள்ள ருக்மணியென்னும் ஸ்திரியானவள் கடந்த இராத்திரி யாரோ ஒரு துஷ்டனால் குத்தி கொலை செய்யப்பட்டாள். நான்கு பலமான காயங்கள் மூன்று அங்குலத்துக்கு அதிகமாய் ஆழமானவை. ஐந்து காயங்கள் 1, $1\frac{1}{4}$ அங்குல ஆழமுள்ளவை. ஆனால் இருதயத்தில் பட்ட மூன்று அங்குலம் ஆழமான காயத்தால் மரணமானதாக தெரியவருகிறது. மேலும் மரணமானவளுடைய கையிலிருக்கும் கைப்பொத்தானைப் பார்க்கையில், அந்தத் துஷ்டன் அவளைக் குத்தும்போது அவள் அவனையெட்டிப்பிடித்ததால் அவன் சட்டையில் மாட்டியிருந்த பொத்தான் கைக்கு வந்ததுபோலத் தெரியவருகிறது" என்று வாசித்து அந்த ரிப்போர்ட்டை மாஜிஸ்ற்றேட் கையில் கொடுத்து ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார் டாக்டர்.

உடனே மாஜிஸ்ற்றேட் போலீஸ் ஆபீசரைப் பார்த்து, இப்போது கேசை துவக்கவேண்டும் என்று சொல்ல, அவர் அப்படியே ஆகட்டும் என்றார்.

மாஜிஸ்.—(பண்டிதரைப் பார்த்து) பண்டிதரே, உமக்காவது அல்லது கொலையுண்ட உமது மனைவிக்காவது யாராகிலும் பகையாளிகளுண்டோ?

பண்.—எங்களோடு எல்லோரும் ஸ்நேகமாயிருக்கிறார்கள். எங்களுக்கு விரோதிகளில்லை.

மாஜிஸ்.—யார் பேரிலாகிலும் உமக்குச் சமுசயமுண்டா?

பண்.—யார் மட்டிலும் சமுசயமில்லை.

மாஜிஸ்ட்ரேட் இவ்வாறு விசாரித்துக் கொண்டிருக்கும்போது, போலீஸ் ஆபீசர் ருக்மணியின் பிரேதத்தைச் சுற்றிப்போய்ப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது மாஜிஸ்ட்ரேட்டு, போலீஸ் ஆபீசரைப் பார்த்து இதைப் பற்றி உமது கருத்து என்ன சார்? என்று வினவ அவர் காரியங்களைப் பார்க்கும்போது இந்த வீட்டின் உளவு தெரிந்தவனே இந்தக் கோரே கொலையை நடத்தியிருக்கவேண்டும். மேலும் அந்த இருப்புப் பெட்டி உடைபட்டிருக்கிறது. ஆனால் அதிலுள்ள பணத்தையும் நகையையும் அவன் தொட்டதாகக் காணப்படவில்லை. இதோ, இந்தப் பெண்பிள்ளையைக் குத்திக் கொன்ற கத்தி இரத்தத்தால் நனைந்து கீழே கிடக்கிறது என்று குனிந்து அதை யெடுத்து மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் போடப்பட்டிருந்த மேசைமேல் வைத்தார்.

மாஜிஸ்ட்ரேட் அதை கையிலெடுத்து, இந்தப் பிடியில் சில எழுத்துகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன என்றார். அப்போது போலீஸ் ஆபீசர் அந்தப் பிடியிலிருந்த இரத்தக்கறையை கீழே கிடந்த ஓர் காகிதத்தால் துடைத்துவிட்டு M. P. என்கிற எழுத்துகள் அதில் செதுக்கப்பட்டிருக்கின்றன என்றார். அது யாருடைய பெயராயிருக்குமோ? என்று மாஜிஸ்ட்ரேட் கேட்க, பண்டிதர் அதைக் கையிலெடுத்து, இந்தக் கத்தி என்னுடையதுதான். இந்த இரண்டு எழுத்துகளும் என் பெயரைக்குறிக்கின்றன. இந்தக் கத்தியால் நான் சரூபங்களைச் செதுக்குகிறதுண்டு. இது இங்கு எப்படி வந்ததோ தெரியவில்லை? என்று அதிசயத்துடன் சொன்னார்.

அப்போது போலீஸ் ஆபீசர், மாஜிஸ்ட்ரேட் காதில் மெதுவாய் என்னவோ ஓதினபோது அதற்கு அவர், நல்லது, அப்படியே ஆகட்டும் என்று பண்டிதரை ஒரு தனியான அறைக்குப் போகும்படிகற்பித்தார். உடனே போலீஸ் ஆபீசர் இரு ஜவான்களுடன் பண்டிதரைத் தூரத்திலிருந்த ஒரு அறைக்குக் கூட்டிக்கொண்டுபோய், அந்த அறையில் அவரை விட்டுவிட்டு, அந்த அறைக்கு உருவின கத்தியுடன் பாராபோடும்படி கற்பித்து, பிரேதமிருந்த அறைக்குப்போய்ச் சேர்ந்தார்.

மாஜிஸ்ட்ரேட் கத்தியைப் பார்த்து அதிசயித்து, இது என்ன விந்தையாயிருக்கிறது! பண்டிதருடைய கத்தி யிங்குவருவதற்குக் காரணமென்ன? அதிசயமாயிருக்கிறது என்று ஆழ்ந்த யோசனை செய்யும்போது, போலீஸ் ஆபீசர் அங்கு கீழேகிடந்த காகிதத்தை கையிலெடுத்து, அதை வாசித்துப்பார்த்து அதை மஜிஸ்ட்ரேட்டு கையில்கொடுத்துக் கொலைப்பாதகனைக் கண்டு பிடிப்பதற்கு நல்ல ஆதாரம் அகப்பட்டதென்றார். அதை மாஜிஸ்ட்ரேட்டு வாசித்துப் பார்த்து, இதில் கொலைசெய்தவன் இன்னானென்று விளங்கவில்லையே என்றபோது, போலீஸ் ஆபீசர் பின்வருவாறு சொன்னார்:—இந்தக் கடிதத்தைப் பற்றி பண்டிதருக்கும் மரணமான அவர் பெண்சாதிக்கும் சண்டையோ சடுத்தமோ உண்டாயிருக்கவேண்டும். ஏனெனில், இந்தக் கடிதத்தில் கண்டிருப்பதுபோல ஒரு அன்னிய ஸ்திரீ பண்டிதருக்கு கடிதம் எழுதி தனக்கு பெருந்தொகையான பணம் கொண்டுவரும்படி கேட்டிருக்கிறாள். இது எப்படியோ பண்டிதருடைய பெண்சாதிக்குத் தெரிந்து இருவருக்கும் சண்டை நடந்திருக்கவேண்டும். இதைப்பற்றி பண்டிதரே தன் மனைவியைக் கொலைசெய்திருக்கவேண்டும் என்றார்.

இதைக் கேட்ட மாஜிஸ்ட்ரேட்டு பரிச்சேதம் அப்படியிராது. ஏனெனில் நாம் இங்கு வந்தபோது பண்டிதர் அழுத அழுகையைப் பார்த்த சமயத்தில் அவர்மேல் யார் சம்சயப்படுவார்? மேலும் பண்டிதர் தன் மனைவியை யெப்படி நேசித்துவந்தாரென்று இந்தப் பட்டணமெல்லாம் சாக்ஷிகூறும். ஒருவன் தன் மனைவியைக் கொல்ல வேண்டுமானால் அவன் ஒன்றில் பைத்தியக்காரனாயிருக்கவேண்டும் அல்லது பெரும்பாதகனாயிருக்கவேண்டும்.

யூர் ஆனர், (கனந்தங்கிய ஐயா) நடந்த காரியங்களைச் சற்று சீர்தூக்கிப்பார்ப்பது நன்று. முதலாவது, திருடன் வந்திருந்தால் அந்த இருப்புப் பெட்டியை உடைத்துவிட்டு அதிலுள்ள பணத்தையும் நகையையும் தொடாமல் போவானா? இரண்டாவது கொலைசெய்யப்பட்டவளைக் குத்தின கத்தி பண்டிதருடைய கத்தியென்று அவரே ஒத்துக்கொண்டார்! ஆகையால் பண்டிதர் என்கிற இந்த மனிதனே தன்பெண்சாதியை

கொலைசெய்திருக்கவேண்டும் என்றார் போலீஸ் ஆபீசர். அப்போது மாஜிஸ்ட்ரேட்டு அதிசயித்து, நீர் இப்படி நினைக்கிறீரா? என்றபோது இந்த மனிதனே இப்பெருங் கொலையைச் செய்திருக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம். மேலும் நான் இவ்வாறு பேசும்போது யாதொரு காரணமின்றி பேசுகிறேன் என்று தாங்கள் நினைக்கத் தகாதென்றார்.

மாஜி.—என்ன காரணம் அது?

போ. ஆ.—இந்த மனிதனுடைய குணங்களை சரியாய் அறிந்ததில்லை இந்தப் பட்டணத்தார். ஜனமருள் சாஸ்திரமருள் என்பதுபோல ஒருவனை சிலர் நல்லவனென்றால், எல்லோரும் அவனை அவ்வாறே நல்லவனென்பார்கள். ஆனால் இந்த மனிதன் வெளிக்கு நல்லவனாய் காணப்பட்டபோதிலும் அவனுடைய அந்தரங்க சீவியத்தை அறிந்தவர்களுக்கு மாத்திரம் தெரியும் அவனுடைய பொல்லாத நடத்தை. இந்த இரகசியமான கடிதத்தால் தாங்களே அறிந்து கொள்ளலாம் இந்த மனிதன் எப்பேர்ப்பட்டவனென்று.

மாஜி.—இதனால் அவருடைய நடத்தையை எப்படி அறியலாம்?

போ. ஆ.—யூர் ஆனர், தாங்கள் இந்த மனிதன் மட்டில் முதல் துவக்கி நல்லெண்ணம் கொண்டிருப்பதால் அதை இப்போது மாற்றுவது தங்களுக்கு அரிது.

கடந்த வருஷத்தில் இந்த மனிதனைப்பற்றி இந்த செங்கல்பட்டில் புகாரான சங்கதி தங்களுக்குத் தெரியுமா?

மாஜி.—அது என்ன சங்கதி? எனக்குத் தெரியாது.

போ. ஆ.—தாங்கள் நல்ல மனிதன் என்று கூறும் அந்த மனிதன் ஒரு கொலை புரிந்தான்.

மாஜி.—என்ன, பண்டிதரா!

போ. ஆ.—ஆம், யூர் ஆனர்.

மாஜி.—மெய்தானா?

போ. ஆ.—மெய்தான்.

மாஜி.—அப்படியானால் என் அதை விசாரணை செய்யவில்லை?

போ. ஆ.—அந்தக் கேசை விசாரணைசெய்ய டைம் பாராய் விட்டது.

மாஜி.—யாரைக்கொன்றார் பண்டிதர்?

போ. ஆ.—தன்னிடத்தில் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணாக்கனை.

மாஜி.—அதை யாரும் பார்த்ததில்லையோ?

போ. ஆ.—கொலை செய்யப்பட்டவனுடைய தங்கைக்கு மாத்திரம் தெரியும்.

மாஜி.—நீர் அவளை விசாரித்தீரா?

போ. ஆ.—அவளுக்கு லஞ்சத்தைக் கட்டி அவள் வாயை மூடினார் அந்த பண்டிதர்.

மாஜி.—எப்படிகொன்றார் அவனை?

போ. ஆ.—காலால் உதைத்துக்கொன்றார்.

மாஜி.—என்ன அதிசயமாயிருக்கிறதே!

போ. ஆ.—செத்தவனுடைய தங்கையைப் பற்றித்தான் புருஷன் பெண்சாதியாகிய இருவருக்கும் சண்டையுண்டானது.

மேலும் இந்தக் கடிதத்தை யெழுதினது அந்தப் பெண்ணாய்த்தான் இருக்கவேண்டும். ஏனெனில் அவளுடைய பெயர் மீனாட்சி. இந்தக் கடிதத்திலும் அந்த பெயர்தான் இருக்கிறது.

இதுநிற்க, செத்தவனுடைய தங்கையின் புருஷன் ஒரு கொலைக்கேசில் அகப்பட்டு மதிராசில் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டான். அவனிருக்கும் இடம் தெரியவில்லை. அவனை பிடிக்கும்படி எனக்கு ஆர்டர் வந்திருக்கிறது. அவன் இன்னம் அகப்படவில்லை. சிலவிசை இந்தப் பண்டிதனுக்கு அதைப்பற்றி தெரிந்திருந்தாலும் இருக்கலாம். அதையும் அவனிடத்தில் விசாரிக்கவேண்டும்.

மாஜி—அப்படியா? அவர் மெத்தயோக்கியனென்று எண்ணியிருந்தேன். கலெக்ட்டரும் மற்ற பெரிய உத்தியோகஸ்தரும் அதே எண்ணங்கொண்டிருக்கிறார்கள். சரி; கேசை விசாரிக்கலாம். பண்டிதருடைய வேலைக்காரர் ஒவ்வொருவராய் வரட்டும்.

அப்போது போலீஸ் ஆபீசருடைய உத்திரவின்மேல் பங்காரம்மாள் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் நிறுத்தப்பட்டாள்.

மாஜி.—உன்பெயர் என்ன அம்மா?

பங்.—என்பெயர் பங்காரம்மாள், ஐயா.

மாஜி.—பண்டிதர்வீட்டில் உனக்கு என்ன வேலை?

பங்.—என் எசமானிக்கு அவசரமானவேலை செய்வதே என் தொழில்.

மாஜி.—கட்டிலில் செத்துகிடப்பது யார் தெரியுமா?

பங்.—(விம்மி விம்மி யழுதுகொண்டு) அவர்கள்தான் என் எசமானி.

போ. ஆ.—கள்ள அழுகை அழாதே கிழவி.

பங்.—எனக்குள்ள விசனம், மேலே இருக்கிற சர்வேசுரனுக்கு மாத்திரம் தெரியும்.

மாஜி.—நல்லது, எத்தனைவருஷமாய் பண்டிதர்வீட்டில் வேலையா யிருக்கிறாய்?

பங்.—மூன்று வருஷ காலமாய் இருக்கிறேன், ஐயா.

மாஜி.—பண்டிதரும் அவருடைய மனைவியும் நல்லவர்கள்தானே?

பங்.—அவர்கள் மெத்த நல்லவர்கள், ஐயா.

மாஜி.—உன் எஜமானி யெப்படி செத்தாளென்று உனக்குத் தெரியுமோ?

பங்.—எனக்குத்தெரியாது, சாமி.

மாஜி.—யாராகிலும் விரோதிகளுண்டோ உன் எசமானிக்கு?

பங்.—எனக்குத் தெரிந்தமட்டும் ஒருவிரோதியுமில்லை, ஐயா.

மாஜி.—யார் பேரிலாகிலும் உனக்கு சமுசயமுண்டோ?

பங்.—யார் பேரிலும் எனக்கு சமுசயமில்லை.

மாஜி.—நேற்று பண்டிதர் வீட்டிலிருந்தாரா?

பங்.—நேற்று சாயந்திரம் வரையில் வீட்டிலிருந்தார்.

மாஜி.—சாயந்திரத்துக்குப் பின்?

பங்.—ஊருக்குப் போனார்.

மாஜி.—எந்த ஊருக்கு?

பங்.—எந்த ஊருக்கென்று எனக்குத் தெரியாது, ஐயா.

மாஜி.—போவதற்கு முன் அவரை பார்த்தாயா?

பங்.—பார்த்தேன், ஐயா.

மாஜி.—அவர் ஏதாகிலும் உனக்குச்சொன்னாரோ?

பங்.—சொன்னார்.

மாஜி.—என்ன சொன்னார்?

பங்.—தான் ஒரு ஊருக்குப் போவதாகவும் அன்று இராத்திரி பனிரெண்டு மணிக்கு வீட்டுக்கு வருவதாகவும், இராச்சாப்பாட்டை போசன அறையில் தயார்படுத்தி வைக்கும்படியாவும் சொன்னார்.

மாஜி.—இராத்திரி வந்தாரா வீட்டுக்கு?

பங்.—வரவில்லை.

போ. ஆ.—அவர் வரவில்லை யென்று உனக்கு எப்படித் தெரியும்?

பங்.—அவருக்கு வைத்த போசனம் அப்படியே இருக்கிறது. மேலும் நான் அவரை இதுவரையிலும் பார்க்கவில்லை.

போ. ஆ.—நல்ல சாக்ஷி சொல்லுகிறாய் கிழவி? நீ அவரை பார்க்காவிட்டால் அவர் வீட்டுக்கு வரவில்லை யென்று அருத்தமோ?

மாஜி.—(போ. ஆபீசர் பக்கம் திரும்பி) கிழவியை காபரா படுத்தவேண்டாம் சார். செஷன் கோர்ட்டுக்குப் போகும்போது அவளைக் கிறாஸ் செய்யலாம்.

நல்லது பங்காரம்மாள், பண்டிதரும் அவர் மனைவியும் எப்போதாகிலும் சண்டை போட்டுக் கொண்டது உண்டா?

பங்.—அவர்கள் எப்போதும் நித்திய சமாதானமா யிருந்தார்கள்.

மாஜி.—நேற்று சாயந்திரம்?

பங்.—நேற்றையத்தினம் அவர்களுக்கு கொஞ்சம் மன வருத்தம் உண்டானதென்று நினைக்கிறேன்.

மாஜி.—என்னத்தைப்பற்றி?

பங்.—ஒரு சீட்டைப்பற்றி.

போ. ஆ.—யூர் ஆனர், பாத்தீர்களா?

மாஜி.—சீட்டைப்பற்றி அவர்களுக்குள் வாத முண்டானபோது நீ அங்கு இருந்தாயோ?

பங்.—நான் அங்கே இருக்கவில்லை.

மாஜி.—பின்னே அது உனக்கு எப்படித் தெரியும்?

பங்.—அதைப்பற்றி யென் எசமானி சொல்லக்கேட்டேன்.

மாஜி.—என்ன சொன்னாள்? அவள் சொன்னதெல்லாம் சொல்.

பங்.—யாரோ ஒரு பெண்பிள்ளை பண்டிதருக்குக் கடித மெழுதி தனக்குப் பெரும் பணத்தொகை தேவையா யிருப்பதால் அதை உடனே கொண்டுவந்து தனக்குக் கொடுக்கும்படி கேட்டிருந்தாளாம்.

போ. ஆ.—யூர் ஆனர், நான் தங்களுக்கு முன் சொன்னதற்கும் இப்போது இந்தக் கிழவியின் வாக்குமூலத்துக்கும் ஒத்து இருக்கிறது. அந்தக் கடிதம் இதுதான் என்று (அதைக் காட்டினார்).

மாஜி.—(எட் குமாஸ்தாவைப் பார்த்து) இந்தக் கடிதத்தை பையில் செய். (பங்காரம்மாளைப் பார்த்து) அதற்குப்பின்?

பங்.—இந்தக் கடிதத்தை யெனக்கு வாசித்துக் காட்டி, பண்டிதர் நல்லவரென்றும் புண்யவாளனென்றுஞ் சொன்னாயே, இப்போது பார், இந்தக் கடிதத்தை! இப்பேர்ப்பட்ட கடிதம் எழுதிவரப்பெற்ற மனிதன்தானா நல்ல மனிதன் என்று பண்டிதரைப்பற்றி சொல்லி வெறுப்பு கொண்டார்கள்.

போ. ஆ.—சரியாய்ச் சொன்னாய் அம்மா! இப்படியே நடந்ததெல்லாம் சொல்.

பங்.—அப்போது நான் எசமானியைப் பார்த்து, அம்மா இந்தக் கடிதத்தால் பண்டிதருடைய நடத்தையின் மீது சம்சயம் கொள்ளாதேயுங்கள். அவர் மகா புண்யவான். உத்தமமான கிறீஸ்துவன். அவர் இன்று இராத்திரி வீட்டுக்குத் திரும்பினபின், உண்மையைக் கண்டுகொள்வீர்கள் என்று அவர்களுக்கு ஆறுதல் வருவித்தேன். ஆனால் என் வார்த்தையில் அவர்கள் திருப்தியடையாமல் தன் வேலைக்காரியான முனியம்மாளையும், அடிக்கடி தன்னிடம் வந்து பேசும் ஸரஸ்வதி யென்னும் ஒரு அம்மாளையும் அழைத்து வரும்படி சொன்னார்கள்.

மாஜி.—நீ அவர்களை அழைத்து வந்தாயா?

பங்.—ஆம் அவர்களை அழைத்துவந்தேன்.

மாஜி.—(போ. ஆபீசரைப் பார்த்து) அவர்கள் இருவரும் இங்கே இருக்கிறார்களா?

போ. ஆ.—முனியம்மாள் மாத்திர மிருக்கிறாள். ஸரஸ்வதி யிங்கே இல்லை.

மாஜி.—உடனே சம்மன் அனுப்பும்.

(பங்காரம்மாள் பக்கம் திரும்பி) அவர்களோடு இறந்துபோனவள் என்ன பேசினாள்?

பங்.—அவர்கள் மூவரும் சேர்ந்து பேசும்போது நான் அங்கே இருக்கவில்லை; அவர்களுக்குள் நடந்த சம்பாஷணை யின்னதென்றும் அறியேன்———ஆனால் அந்த இரண்டு மகராசிகளும் வெளியே போனபின், அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைப்பற்றி யென் எசமானி யெனக்குச் சொன்னார்கள்.

மாஜி.—(போ. ஆபீசரைப் பார்த்து) கிழவி எதார்த்தமுள்ளவளாகக் காணப்படுகிறாள். உமது கேள்வியால் அவளைக் கலவரப்படுத்த வேண்டாம் சார். (பங்காரம்மாளைப் பார்த்து) உன் எசமானி உனக்கு என்ன சொன்னாள்?

பங்.—என் எசமானி தன் கையில் பிடித்திருந்த கடிதத்தை மேற்படி இரு ஸ்திரிகளுக்கும் வாசித்துக் காட்டி, அதைப்பற்றி அவர்களுக்கு என்ன தோன்றுகிறதென்று கேட்டபோது, அந்த இரண்டு மகராசிகளும் பண்டிதர் மகா கெட்டவரென்றும், இறந்துபோன ராமகிஷ்டனுடைய தங்கையாகிய மீனாட்சியின்மேல் ஆகாத ஸ்நேகம் வைத்திருக்கிறாரென்றும், அதைப் பற்றி அவளுக்கு ஏராளமான பணம் அனுப்பி வைத்திருக்கிறாரென்றுஞ் சொன்னார்களாம்.

மாஜி.—இன்னம் என்ன சொன்னார்கள்?

பங்.—இப்பேர்ப்பட்ட துர்மார்க்கனான மனிதனோடு வாழுவதை விட குளத்திலாகிலும் கிணற்றிலாகிலும் விழுந்து சாவது நலமென்றும், அல்லது வீட்டிலுள்ள பணத்தையும் நகையையும் எடுத்துக்கொண்டு தன் தாய் வீட்டுக்காகிலும் வேறு தூர தேசத்துக்காகிலும் ஓடிப்போவது உத்தமமென்றும், வேண்டுமானால் தாங்களும் அவள் போகும் தூரதேசத்துக்குத் துணையாக வருவோமென்றும் சொன்னார்களாம்.

மாஜி.—அதற்கு உன் எஜமானி என்ன சொன்னாளாம்?

பங்.—அவர்களோடு ஒன்றும் சொல்லாமல் அழுதுகொண்டு இருக்கும்போது அவர்கள் இருவரும் என் எசமானியை விட்டுவிட்டு வெளியே புறப்பட்டார்களாம்.

மாஜி.—அப்போது நடந்தது அவ்வளவு தானா?

பங்.—அவ்வளவுதான். அதற்குப்பின் எசமானி யென்னை அழைத்து அந்த இரண்டு ஸ்திரிகளும் சொல்லிக்கொடுத்த ஆலோசனை நல்ல ஆலோசனையென்று சொல்லி, அழத் தொடங்கினார்கள். அப்போது நான் ஆறுதல் அவர்களுக்கு சொல்லி, பண்டிதருடைய மாசற்றத்தனத்தை அவர் திரும்பி வீட்டுக்குவந்தபின் அறிந்துகொள்வீர்கள் என்று அவர்களை ஆற்றித் தேற்றினேன்.

மாஜி.—அதற்குப்பின் என்ன சொன்னார்கள் உன் எசமானி?

பங்.—அதற்குப்பின் என் எசமானி யென் கைரெண்டையும் பிடித்துக்கொண்டு மகா துக்கத்துடன் அழுதுகொண்டு, பங்காரம்மா உன் வார்த்தையை நான் தட்டிவிட்டு கேட்பார் பேச்சைக்கேட்டு கெட்டேன் என்று விம்மி விம்மி அழுதார்கள்.

அப்போது நான் அவர்களைத்தேற்றி ஆறுதல் சொன்னேன். அந்நேரத்தில் அழுகையை சற்று நிறுத்தி, யென் வேலைக்காரியாகிய முனியம்மாளும் ஸரஸ்வதியும் என்னைக் கெடுத்தார்கள், அடியோடுகெடுத்தார்கள். அனேக கெட்ட புஸ்தகங்களை யெனக்கு வாசிக்கக்கொடுத்து, அந்தப் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பது போல நான் செய்யும்படி எனக்கு துராலோசனையுஞ் சொன்னார்கள்.

மாஜி.—என்ன துராலோசனை?

பங்.—அது இன்னதென்று அவர்கள் விவரமாய்ச் சொல்லவில்லை. ஆயினும் தெரிவித்ததாவது "அவர்களுடைய கெட்டபுத்தியால் நான் அனுசரித்துவந்த நல்ல நடத்தை யெல்லாம் விட்டுவிட்டேன். கோவிலுக்குப் போவதையும், அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்குவதையும், தர்மம் கொடுப்பதையும் இன்னும் வழக்கமாய் நான் செய்துவந்த தர்ம நடத்தையையும் விட்டுவிட்டேன்.

"அவர்களுடைய ஏவுதலின்மேல் என்பிரிய கணவனை யெதிர்க்கவும், அவருடைய செய்கையைப்பற்றி கேள்விகேட்கவும், அவருடைய நடத்தையில் தப்பிதம்பிடிக்கவும் தலைப்பட்டேன். ஐயையோ! இது என்ன அக்கிரமம்? சற்குணசாலியான என் புருஷன்மட்டில் சமுசயமும்கொள்ள ஏற்பட்டேன்!" என்று மகா துக்கத்துடன் அழத்தொடங்கினார்கள்.

மாஜி.—அவ்வளவுதானோ?

பங்.—(தன் கண்ணைத் துடைத்துக்கொண்டு) அப்போது என் எசமானிக்கு ஆறுதலான வார்த்தைசொல்லித் தேற்றி, பரவாயில்லை அம்மா இருங்கள், ஒன்றும் மிஞ்சிப்போகவில்லை; நீங்கள் இனிமேல் இதெல்லாம் விட்டுவிட்டு முன் நீங்கள் நடந்துவந்த தர்மவழியில் ஒழுகுவீர்களேயாகில், முன்போல உங்களுக்குச் சந்தோஷமுண்டாகும் என்று எனக்குத் தெரிந்த நற்புத்திகளைச் சொன்னேன்.

நான் சொன்னதெல்லாம் மகா கவனமாய்க் கேட்டு, கண்ணைத் துடைத்துக்கொண்டு: பங்காரம்மா, நீயே எனக்குத் தாய்; இனி உன் சொல்லை மீறேன், உன் சொற்படி நடப்பேன். இது முதற்கொண்டு அந்த இரண்டு துஷ்ட ஸ்திரீகளையும் என்வீட்டில் நுழையவிடேன். அவர்கள் கொடுத்த கெட்ட புஸ்தகங்களையெல்லாம் நெருப்பில்போட்டு சுட்டெரிப்பேன். அவர்கள் சொன்ன துற்புத்தியெல்லாம் மறந்துவிடுவேன்.

குளத்திலும் கிணற்றிலும் குதிக்கச் சொன்ன பாபிஷ்டிகளின் புத்தி நற்புத்தியா? நகைநட்டையும் பணங்காசையும் எடுத்துக்கொண்டு தூரதேசம் ஓடிப்போகச்சொன்ன துஷ்ட ஸ்திரீகளின் புத்தி நல்லபுத்தியா? ஐயையோ தெரியாதபடிக்கு அந்த நிற்பாக்கிய ஸ்திரீகளின் வலையில்சிக்கிக் கெட்டேன். இனி ஒருபோதும் அப்படிச் செய்யேன்!

மடத்தின் தாயார்சொன்ன புத்தியடங்கிய காகிதத்தையும் அந்த பாபிஷ்டிகளான ஸ்திரீகளின் சொல்பிரகாரம் கிழித்து எறிந்துவிட்டேன். அந்த காகிதத்தில் கண்டபிரகாரம் நடந்திருப்பேனாகில் எவ்வளவோ பாக்கியவதியாயிருப்பேன் என்றார்கள்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஆரம்பாக்கம்.

மதராஸ் அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த இவ்விடத்துக் கோவிலில் இந்த வருஷாந்திர திருவிழா இவ்வருஷமும் கொடியேற்றம், நவநாள் ஜெபமுதலியவைகளுடன் மிக்க ஆரவார சிறப்பாய் நடந்து முடிவுபெறலாயிற்று. நவநாட்களின் கொண்டாட்டத்துக்கு 4 குருக்கள் வந்திருந்தார்கள். திருநாளன்று 3 குருக்களும், வேப்பேரி கன்னியர் மடத்திலிருந்து சௌக்கியத்திற்காக இவ்விடம் வந்திருந்த சகோதரிகள் மூவரும், சென்னையிலிருந்து 150-பேர் வரை திருயாத்திரை கிறீஸ்துவர்களும், மதராஸ் ரெயில்வே முழு (Band) பான்டைச் சேர்ந்த 30 வாத்தியக்காரர்களும், இலத்தீன் பாட்டுக்காரர்களும், இரண்டாயிரம்பேர் வரையில் இந்துக்களும் விஜயமாயிருந்தார்கள்.

திருநாளுக்கு முந்தினநாள் சாயந்திரம் பெரிய வெஸ்பெர்ஸ் என்னும் மாலை சங்கீதம் பாடப்பட்டு மூன்று சுவாமிமார்களுடன் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் சிறப்பாய்க் கொடுக்கப்பட்டு, பாணமத்தாப்பு சிறப்புடனும் (Gas) காஸ் விளக்கு தீவட்டி சோதியுடனும் அமலோற்பவ ஆண்டவளின் சுரூபம் மிக்க அலங்காரமாய்ச் சோடிக்கப்பெற்றிருந்த தேரில் வைக்கப்பட்டு சுற்றுப்பிரகாரமானபின், சங்கை L. X. Fernandes சுவாமியாரால் பூதக்கண்ணாடியைக் கொண்டு திருப்படங்களின் காட்சி வெளி மைதானத்தில் காட்டப்பட்டு மிக்க மாதுரியமாயும் சாதுரியமாயும் அவைகளைப்பற்றி செய்யப்பட்ட பிரசங்கம் எல்லோருக்கும் வெகு பிரியமாயிருந்தது.

திருநாளின் காலையில் மூன்று சுவாமிமார்களின் பாட்டுப்பூசையும், தமிழ் இங்கிலீஷ் பிரசங்கங்களும், திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறின.

ஒரு குறைவுமின்றி கூடியவரையில் சகலமும் பக்தியாயும், சிறப்பாயும், திருப்தியாயும், சந்துஷ்டியாயும் நடந்து திருநாள் முடிவுபெற கிருபைசெய்த பரலோக தந்தைக்கும் தேவதாயாருக்கும் சர்வ மகிமையும் அனந்தமுறை ஸ்துதி தோத்திரமும் உண்டாவதாக. திருநாளுக்கு வந்திருந்த திருயாத்திரை பக்திமான்களுக்கும், பொருளுதவி செய்த தர்மிஷ்டருக்கும் சகல தேவ ஆசீர்வாத பாக்கியங்களுமுண்டாவதாக. திருவிழாச் சிறப்பைக் காணவந்த இந்து ஜனங்களுக்கும் ஆத்தும நன்மை உண்டாவதாக.

ஆரம்பாக்கம் R. S.
நெல்லூர்ஜில்லா, } கண்கண்டசாட்சி.
26உ பிப்ரவரிமீ 1917.

உலோக அழிவைப்பற்றிய வீண் பீதி.

ஏதோ ஓர் வால்வெள்ளி ஆகாயத்தினின்று சூரியனுக்குச் சமீபித்து வரும் வழியில் வியாழனுக்கும் செவ்வாய்க்கும் மத்தியிலுள்ள அனேக சில்லறை கிரகங்களில் ஒன்றான மெதூசா வென்ற ஓர் சிறிய கிரகத்தில் மோதி அதைத் தனக்குள் ஆவாகனஞ் செய்துகொண்டுவிட்டதால் முன்னிலும் அவ்வால்வெள்ளி பருத்து அதிவேகமாய்த் தனது சக்கரத்தில் ஓடி வருகிறதென்றும், அதனோட்டத்தில் நாளது 1917-ம் ஞு ஏப்பிரல்மாதம் 22-ம் தேதி ஞாயிறன்று நமது பூமி குறுக்கிடுவதால் இதற்கென்ன நேருமோ, ஓர் வேளை மெதூசா வென்ற கிரகத்துக்கு வந்துற்ற கெதியே அதாவது மேற்படி வால் நட்சத்திரமானது மெதூசா வென்ற கிரகத்தைச் சுட்டெரித்து உருக்கித் தன்னோடு ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு விட்டதுபோல் நமது பூமியையும் சுட்டெரித்து வாயில் போட்டுக்கொண்டுவிடுமோ என சில சோதிட சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். உலகமெல்லாம் நெருப்பினாலே வேக மனிதரெல்லோரும் செத்துப்போவார்கள் என்ற நமது சத்திய வேதக் கொள்கைக்கு இது ஒரு விதத்தில் ஒத்து வந்தபோதிலும், உலக முடிவில் எங்கும் யுத்தங்களும் போராட்டங்களும் குழப்பங்களும் பஞ்சமும் உண்டாயிருக்குமென்ற வேத வாக்கியங்களும் குறையற இக்காலத்தில் நிறைவேறி வந்தபோதிலும் நடந்தேற வேண்டிய சில குறிப்புகள் இன்னும் நிறைவேறாததால் முடிவு காலம் இன்னும் வந்துவிடவில்லை யென ஸ்திரமாய்ச் சொல்லலாம். அவையாவன: அந்திக்கிறீஸ்து ஒருவன் தோன்றி நாற்பத்திரண்டு மாதங்கள் உலக மனைத்தையும் தானே ஆளுவானென்பதும், அவனுடைய காலத்தில் எனோக்கு, எலியாவென்ற இரு தேவ திருஷ்டிகரும் திரும்ப உலகத்தில் தோன்றி அந்திக்கிறீஸ்துவுக்கு விரோதமாய் சத்தியத்தைப் போதித்து ஜெருசலேம் பட்டணத்தில் அவனால் கொல்லப்படுவார்கள் என்பதுமான இவை முதலிய வேறனேக சம்பவங்கள் இன்னும் நிறைவேறவில்லை என்பவைகளே. முன் சொன்ன வானசாஸ்திரிகளிற் சிலர் அமெரிக்காவில் மத்திய ரேகைக்கடுத்திருக்கும் மெக்சிகோ முதலிய பாகங்களில் ஷை வால்வெள்ளி விழுமென்பதும், அதனால் அதற்கடுத்த 400 மயில் சுற்றளவுக்குள் அனேக சேதங்கள் உண்டாகக்கூடுமென்பதும் ஓர் வேளை நம்பக்கூடியவைகளேயாயினும் கண்ணிமைக்கு முன்னே 18 மயிலுக் கதிக வேகமாயோடும் பூமியின் ஓட்டத்தையும், இதிலும் அதிக வேகமாயோடும் வால் நட்சத்திரத்தின் ஓட்டத்தையும் அவ்வளவு நுணுநுணுக்கமாய்க் கணித்துவிடக்கூடியதல்ல. பத்துப் பதினைந்து வருடங்களுக்குமுன் தோன்றின ஓர் வால்நட்சத்திரத்தைக் குறித்தும் சில வானசாஸ்திரிகள் இப்படியே சொல்லி உலகத்தைக் கலங்க அடித்தார்கள். ஆயினும் அவர்களுடைய கணிதமெல்லாம் ஐந்து மணி நேர வித்தியாசத்தால் பொய்த்துப்போயிற்று. அதெப்படி யென்றால் சாஸ்திரிகளால் குறிப்பிடப்பட்ட ஸ்தானத்தைப் பூமியானது

இராத்திரி 11-மணிக்குக் கடந்து சென்றுபோக, அதே யிராத்திரி அதிகாலை $4\frac{1}{2}$-மணிக்கு ஷை வால்நட்சத்திரம் அதே ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்து யாதொரு சலனமில்லாமல் தன் பாதையில் ஓடிச்சென்றது. பூமிக்கு வர இருந்த அபாயமும் நீங்கிப்போயிற்று. அதுபோலவே இப்போதும் அபாயம் நேராதென நம்பலாம். ஆயினும் நமது இந்து தேசமும் பூமியின் மத்திய ரேகைக்கு அடுத்திருப்பதால், அமெரிக்காவுக்கு வரக்கூடிய பொல்லாப்புக் கணிதக்காரருடைய பிசகால் அத்தேசத்துக்கு உண்டாகாமல் நீங்கி ஒருக்கால் நமது தேசத்துக்கே உண்டாகவுங்கூடும். அபாயகரமான இவ்வித சந்தேகத்தில் எல்லோரும் நன்மரணத்துக்கு ஆயத்தமா யிருப்பதே புத்தி மான்களுக்கேற்ற செய்கையாமே யன்றி உலகத்தின் முடிவு நாள் இந்த ஏபிரல் மாதத்தில் வந்து விடுமென்று சொல்லுவது வேதத்துக்கு விரோதமும் வீண் பயப்பிராந்தியுமே யாகும்.

உண்மை விளம்பி.

சென்னை மயிலைக் காட்டுக்கோவில்.

சாதாரணமாக காட்டுக்கோவிலென வழங்கிவரும் அர்ச். ஞானப்பிரகாசிமாதா ஆலயத்தின் 400-ம் ஷூ ஜூபிலி மஹோற்சவம் சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப்பட்டது உள்ளூர் வெளியூர் கிறீஸ்துவர்கள் பலரும் பத்திரிகைகளில் வாசித்தும் கண்காட்சியாக பார்த்தும் இருப்பார்கள். ஜூபிலி ஞாபகச் சின்னமாக லூர்துமாதா கெபி கட்டுவிக்கும்பொருட்டு விளம்பரங்களிலும் ஜூபிலி ரிப்போர்ட்டிலும் ஷை கோவிலின் பங்கு விசாரணை குரு சங்கை. M. மோதாவாஸ் சுவாமிகளால் தெரிவித்திருந்தபடி தேவமாதா பிரான்சு தேசத்தில் லூர்து நகரில் பெர்நர்தெத் என்னும் சிறு பெண்ணுக்குத் தரிசனையான திருநாளன்று, அதாவது பெப்ரவரி மாதம் 11-ம் தேதி மாலை சென்னையிலுள்ள பல விசாரணை பங்கு சுவாமிமார்களும், கிறீஸ்துவர்களும், மயிலை மேற்றிராசன வைக்கர் ஜெனரல், செக்கிரடெரி ஆகிய இவர்கள் எல்லோரும் புடைசூழ்ந்து நிற்க, வந்திக்கத்தக்க மயிலை ஆண்டவரவர்களால் 6-மணிக்கு ஷை லூர்து மாதா கெபிக்கு அஸ்திவாரமிடப்பட்டது. பிறகு ஆண்டவர் அவர்கள் அர்ச். தேவமாதா லூர்துமலையில் செய்த பல புதுமைகளையும், அற்புதங்களையும் தெரியப்படுத்தி கிறீஸ்துவர்களுடைய [illegible]மாகிய தேவதாய் மட்டில் எல்லோரும் பக்தி விசுவாசங்கொள்ள வேண்டுமென்றும், உள்ளன்போடும், உற்சாகத்தோடும் முன்வந்து கட்டத் துவக்கியிருக்கும் குகையைக் கட்டி முடிக்க உதவி செய்வார்களானால் ஏராளமான நன்மை வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வார்களென்றும் உபந்நியாசித்தார். முடிவில் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. மதுவிலக்குச்சபை டைரெக்டர் சங். L. X. பர்னாந்தீஸ் சுவாமிகள் லூர்து மாதாவின் தரிசன வரலாற்றை ஆதியோடந்தமாய் தீபகாட்சி விசித்திர படங்களைக் கொண்டு விளக்கிக்காட்டினார். இந்த லூர்து மாதா கெபியைக்கட்டி முடிப்பதற்கு ரூபாய் 500 வேண்டியது. பஞ்சம், படைநோய், உபத்திரவம் நிறைந்த இக்காலத்தில் திரவிய சம்பன்னரான புருஷரும் பூவையருமாகிய கிறீஸ்துவர்கள் முன்வந்து இக்குகையைக் கட்டி முடிக்க உதவுவார்களானால், அவர்கள் இப்பொழுதும் எப்பொழுதும், மரண சமயத்திலும் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் வேண்டிய எல்லா நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் ஏராளமாய்ப் பெற்றுக் கொள்வார்கள்.

"அறத்தால் வருவதே யின்பம் மற்றெல்லாம் புறத்த
[புகழுமில."

"ஒல்லும் வகையா லறவினை யோவாதே செல்லும்
[வாயெலாஞ் செயல்."

பங்கு கிறீஸ்துவன்.

இடைக்காட்டூர்.

எங்கள் பங்கு சுவாமியாராகிய சங். ராஜ அதிசயநாத சுவாமியாரவர்கள் இதுவரையிலும் இப்பங்கைச் சேர்ந்த சுற்றுக்கிராமங்களில் நடவாத தேவநற்கருணை சுற்றுப்பிரகாரம் நடந்தேறக் காரணமா யிருந்தனர். முதல் பந்தலில் திவ்விய சற்பிரசாத ஆண்டவரின் மகத்துவம், மாட்சிமை இவைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசி, எவ்விதம் நாம் தேவநற்கருணைக்கு ஆசாரம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றியும் பிரசங்கித்து, தம் பங்கு கிறீஸ்துவர்களின் மனதில் திவ்விய சற்பிரசாத ஆண்டவரின் பேரில் பத்தியை மூட்டி, தெய்வபயத்தையும் உண்டாக்கினார். எங்கள் பங்கு சுவாமியவர்களுக்கு ஆண்டவர் நல்ல சவுக்கியம் கொடுத்து அவரை நீடூழிகாலம் காப்பாற்றுவாராக.

Convent of our Lady of Dolours,
Idaikkatur.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

யுத்தத்தில் பிரிட்டிஷாருக்குத் தினச் செலவு.—காருண்ய பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்கு இவ் யுத்தத்தின் நிமித்தமாக சராசரி தினச்செலவு 60 லட்சம் பவுன் என சொல்லப்படுகிறது.

ஓர் அறிக்கை.—நமது "நல்லாயன்" பத்திரிகைக்கு சந்தா நேயர்களா யிருந்து வரும் நண்பர்களிற் சிலர் இன்னும் 1915, 16-ம் வருஷ சந்தா பாக்கியை அனுப்பாம லிருக்கிறார்கள். அது விஷயத்தை அவர்களுக்கு ஞாபக மூட்டியும் அவர்கள் கவனிக்கவில்லை. இம் மாதத்துக்குள்ளாவது அவர்கள் தங்கள் பாக்கியை அநுப்பாவிடில் அடுத்த மாதத்திலிருந்து அவர்களுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும். நிகழும் வருஷத்துக்கு இன்னும் சந்தாவை செலுத்தாம லிருக்கிறவர்களும் கூடிய சீக்கிரத்தில் அதை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒரு சிறுவனின் மறுமொழி.—ஒரு கிராமப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் சுகாதாரவிளக்கப் பாடம் கற்பிக்கையில் அவர் ஒரு சிறுவனை நோக்கி "நாம் நல்ல சுகத்துடன் ஜீவிப்பதற்கு முக்கியமான மூன்று வஸ்துக்கள் எவை?" என்று கேட்க, சிறுவன் சற்று யோசித்து "காலைப்போசனம், பகற்போசனம், இராப்போசனம்" என்று பதில் கொடுத்து எல்லோரையும் நகைக்கச் செய்தானாம்.

பத்தாம் பத்திநாதரின் உருவம்.—காலஞ் சென்ற நமது ஞானத்தந்தையாகிய பத்தாம் பத்திநாதரின் உருவமொன்று பேர்போன அஸ்டோரி என்ற கல்தச்சனால் பாடஞ் செய்யப்பட்ட களிமண்ணைக் கொண்டு ரோமாபுரி அர்ச். இராயப்பரின் கோவிலுக் கருகில் செய்யப்பட்டு வருகிறது. அவ்வுருவ வேலையை பரிசுத்த பாப்பு பதினைந்தாம் ஆசீர்வாதப்பரின் கட்டளைப்படி கர்தினால் மெர்ரிதெல்வால் என்பவர் அடிக்கடி போய்ப் பார்த்து மேற்படி சிற்பியை வெகு உற்சாகப்படுத்தி வருகிறாராம்.

வௌவால்.—இதன் இரத்தம் ஒரு பங்கு, நல்லெண்ணெய் நான்கு பங்குஞ் சேர்த்துக் காய்ச்சி வழுக்கைத் தலைக்கும் நரைத்த தலைகளுக்குந் தடவினால் மண்டையில் குளிர்ச்சி யுண்டாகிக் குணமுண்டாகுமாம். பழந் தின்னும் வௌவாலின் மாமிசம், மீனெண்ணெய் முதலிய மருந்துகள் தேகத்திற் கொடுக்கும் சௌக்கியத்தைவிட மேலான சௌக்கியத்தைக் கொடுக்கும். ஈளை இருமலுக்கு வௌவால் நெய் உத்தமமானது.

மோன்சிஞ்ஞோர் ஸெலஸ்கி.—அந்தியோக்கியா பட்டணத்தின் பிதாப்பிதாவாகிய இவர் ரோமாபுரியிலுள்ள விசுவாசப் பரம்புதல் சபையின் (S. C. Propaganda) ஆலோசனை கர்த்தர்களுள் ஒருவராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய தேசம் ஷை சபையின் கண்காணிப்பில் இருந்து வருகிறபடியால் சென்ற 25 வருடங்களாக நம்மத்தியிற் சீவித்து நம்முடைய முன்னேற்றத்துக்காக பாப்பானவரின் ஸ்தானதிபதியாக உழைத்வந்தவரான இவர் இப்போதும் உழைப்பாரென்பதற் கையமில்லை.

சீனா தேசத்தில் கத்தோலிக்கரின் அபிவிருத்தி.—இத்தேசத்தில் நமது சத்திய வேதத்தைப் போதித்துவரும் ஐரோப்பிய, சுதேச கத்தோலிக் குருக்களினுடைய தொகை பதித மதத்தைப் போதித்து வரும் பதித பாதிரிகளுடைய தொகையைப் பார்க்கிலும் குறைவா யிருந்தபோதிலும், கத்தோலிக் கிறிஸ்துவர்களின் தொகை அதிகமா யிருக்கின்றது. கத்தோலிக் குருக்களுடைய தொகை 2,225யா யிருக்கக்கொள்ள, பதித பாதிரிகளினுடைய தொகை, (பதித உபதேசிமார், உபாத்திமார்கள் நீங்கலாக) 5,118. கத்தோலிக் கிறீஸ்துவர்களுடைய தொகை 1,628,254 லாயிருக்கக்கொள்ள, பதித கிறிஸ்துவர்களுடைய தொகை 235,303ரு யிருக்கின்றது.

டியூக் ஆப்நார்போக் (Duke of Norfolk) மரணம்.—ஆங்கிலேய தேசத்திற்கு ஓர் திலகம்போல் விளங்கி வந்த கத்தோலிக் பிரபாகிய நார்போக் என்பவர் காலஞ் சென்றாரென்று கேள்வியுற்று விசனிக்கி

ரேம். இங்கிலாந்து தேசத்திலுள்ள பிரபுகளுக்குள்ளே இவர்தான் அதிக ஆஸ்திவந்தர். இவருக்கு 50 ஆயிரம் ஏக்ரா நிலமும், மான்செஸ்தர் (Manchester) நகரின் பெரும்பாகமும் சொந்தமா யிருந்தது. இவ்வளவு சொத்துடையவரா யிருந்தும் பெருமை சலாக்கியம் பாராட்டாமல் பக்தியுள்ள ஒரு நல்ல கத்தோலிக்கராய்ச் சீவித்து வந்தார். இவருக்கு இரக்கம் நிறைந்த சர்வேசுரன் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

ரயில்வே இலாகாவில் மதுவிலக்கு — அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களிலுள்ள ரயில்வே இலாகாவில் அலுவலாயிருப்பவர்கள் இருபது இலட்சம் பேராம். இவர்களெல்லோருக்கும் கண்டிப்பாய் மதுவிலக்கஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ரெயில்வே கம்பெனியாரால் இப்பேர்ப்பட்ட கண்டிப்பான சட்டம் ஏற்படுத்தப் படுவதற்குக் காரணம் யாதெனில், ரயில்வே வேலைக்காரர்களான கார்டு, டிரைவர், ஸ்டேஷன்மாஸ்டர், சிக்னலர், பாயின்டஸ்மென் முதலானோர் மதுபானப் பிரியரா யிருப்பார்களேயானால் தத்தம் அலுவலைச் சாக்கிரதையாயும், சுறுசுறுப்பாயுஞ் செய்யமாட்டார்களென்பதைப் பற்றியும், ரயில்வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதினால் நேரக்கூடிய ஆபத்து, உயிர்ச்சேதம் முதலியவைகளைத் தடுக்கக்கூடுமென்பதைப்பற்றியுமேயாம்.

ஒரு ஐரிஷ்காரனும் ஸ்காத்லாந்து தேசத்தானும்.—இவ்விருவரும் தத்தம்தேசத்தின் பெருமையைப்பற்றி தர்க்கித்துக் கொண்டிருக்கையில், ஸ்காத்லாந்து தேசத்தான் மற்றவனை நோக்கி "கொஞ்சகாலத்திற்குமுன், கிளாஸ்கோ பட்டணத்தினருகிலுள்ள இடிந்த கோட்டையை தகர்த்து தரைமட்டத்திற்கு சமப்படுத்துகையில், அக்கோட்டை அஸ்திவாரத்தில் சில கம்பிகள் காணப்பட்டன; இதினால் என் தேசத்தில் பூர்வத்திலேயே டெலிபோன் ஏற்படுத்தப்பட்டிருந்ததென்று தெரியவருகின்றதல்லவா?" என்றான். அதற்கு ஐரிஷ்காரன் "ஏறக்குறைய பத்து நூற்றூண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட ஒரு கோட்டை என் தேசத்தில் சில நாட்களுக்குமுன் இடிந்து விழுந்தது; இடிந்துபோன இடத்தைப் பரிசோதிக்கையில் அங்கே கம்பிகள் ஒன்றுங் காணப்படாதபடியால் என் தேசத்தில் வெகுநாளாக (Wireless telegraphy) கம்பியில்லாத சமாச்சாரக்கருவியேற்படுத்தப்பட்டிருந்தது" என்று சொல்ல ஸ்காத்லாந்து தேசத்தானுக்கு கோபமுண்டானதாம்.

விசேஷித்த சம்பவங்கள்.—கிறீஸ்துவுக்கு முன் 170-ம் வருஷத்தில் சீனாவில் கடுதாசி செய்ய முதல்முதல் கண்டுபிடிக்கப்பட்டது. கிறீஸ்து பிறந்த 480-ம் வருஷத்தில் குதிரைக்கு இரும்பு லாடம் முதல் முதல் உபயோகிக்கப்பட்டது. கிறீஸ்து பிறந்த 636-ம் வருஷத்தில் இறகைப் பேனாவாக உபயோகிக்க முதல்முதல் ஆரம்பித்தார்கள். பத்தாம் நூற்றூண்டில் பருத்தியால் செய்யப்பட்ட பழஞ் சீலை துணியைக்கொண்டு கடுதாசி செய்ய ஆரம்பித்தார்கள். கிறீஸ்து பிறந்த 1280-ம் வருஷத்தில் மூக்குக்கண்ணாடி முதல்முதல் உபயோகப்படுத்தப்பட்டது. கிறீஸ்து பிறந்த 1329-ம் வருஷ முதல் 1340-ம் வருஷமட்டும் சுவாரெஸ் என்பவன் ஜெர்மன் தேசத்திலுள்ள கொயோனென்னும் ஊரில் வெடிமருந்து செய்யக் கண்டுபிடித்தான். கிறீஸ்து பிறந்த 1440-ம் வருஷத்தில் கூற்றம்வேக் என்பவன், ஜெர்மன் தேசத்திலுள்ள மென்சு என்னும் பட்டணத்திலே அச்சுவித்தையை முதலில் செய்யத் தொடங்கினான். கிறீஸ்து பிறந்த 1519-ம் வருஷத்தில் கார்வி என்பவன் இரத்தத்தின் சுழலோட்டத்தை முதல்முதல் கண்டுபிடித்தான். கிறீஸ்து பிறந்த 1655-ம் வருஷத்தில் உவோர்செஸ்டர் ஊரிலுள்ள மார்க்குவிஸ் என்பவன் புகை சூத்திரத்தைக் கண்டுபிடித்தான்.

காலச்சக்கரம்.—நமது சென்னையில் பகல் பனிரண்டு மணியா யிருக்கும்போது, பர்மாவிலுள்ள ஆவாவில் பகல் ஒரு மணியாயும், சீனா தேசத்தைச் சேர்ந்த ஹொங்கொங்கில் இரண்டு மணியாயும், அதே தேசத்தைச் சேர்ந்த முக்டெனில் மூன்று மணியாயும், ஜப்பானிலுள்ள டோக்கியாவில் நாலு மணியாயும், சிட்னியில் ஐந்து மணியாயும், நியுஜீலண்டைச் சேர்ந்த வெல்லிங்டனில் சாயந்திரம் ஆறு மணியாயும், பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பிரண்டிலி தீவில் ஏழு மணியாயும், சான்ட்விச் தீவில் எட்டு மணியாயும், லோ ஆர்க்கிபெல்லகோ தீவில் ஒன்பது மணியாயும், பிரிட்டிஷ் கொலம்பியாவில் பத்து மணியாயும், கிரேட்சால்ட் லேக்கில் இரவு பதினொரு மணியாயும், அமெரிக்காவிலுள்ள மெச்சிக்கோவில் நடுச்சாமமாயும், அதாவது இரவு பனிரண்டு மணியாயும், அமெரிக்காவிலுள்ள கோஸ்டோரைக்காவில் இரவு ஒரு மணியாயும், சான்தொமிங்கோவில் இரண்டு மணியாயும், நியுபவுன்ட்லண்டில் மூன்று மணியாயும், ரியொ-தெ-ஜெனய்ரோவில் நாலு மணியாயும், ஐஸ்லண்டில் ஐந்து மணியாயும், போர்த்துக்கல் தேசத்தின் தலைநகரமாகிய லிஸ்போனில் காலை ஆறு மணியாயும், லண்டனுக்கருகிலுள்ள கிரின்விச்சில் காலை ஆறு மணி, முப்பத்தெட்டு மினிட்டாயும், பிரான்சு தேசத்தைச் சேர்ந்த மர்சேலில் ஏழு மணியாயும், கிராக்கோவில் எட்டு மணியாயும், ருஷியாவிலுள்ள மாஸ்கோ பட்டணத்தில் ஒன்பது மணியாயும், பெர்ஷியாவிலுள்ள டிஹாரனில் பகல் பத்து மணியாயும், காபூலிலுள்ள கண்டஹாரில் பகல் பதினொரு மணியாயும் இருக்கும்.

DOMESTIC OCCURRENCES.

குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப—ர்.

ஜனன அறிக்கை.

சேப்பாக்கம்.

சென்னை சேப்பாக்கத்தில் வசித்து காலஞ்சென்ற Confectionery கனம். மாசிலாமணி பிள்ளை அவர்கள் சிரேஷ்ட புதல்வியும், என் மைத்துனர் "நல்ல ஆயன்" சந்தாதாரரும், M. & S. M. Ry. இன்ஜின் டிரைவரும், தற்காலம் பெளரிங்கபேட்டை நிவாசகருமாகிய கனம் S. A. இஸ்ரவேல் பிள்ளை அவர்கள் இல்லாளும் எனது அன்பார்ந்த சகோதரியுமாகிய ஸ்ரீமதி, உத்தரிய மரியம்மாள் திரு இருதய ஆசீராலும் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டினாலும், 1917 ஞு மார்ச்சி மீ 18-ம் திகதி, ஞாயிற்றுகிழமை பகல் 2-மணிக்கு 6-வது பேறாக ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். தாயும் சேயும் சுகம். இவ்விருவர்களின் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கும்.

B. M. மாதவராயன் பிள்ளை. Clerk.
Messrs. Lazausr &Co.
Oorgaum.

சென்னை.

பரிசுத்த தேவநாயகியின் கிருபையாலும், அர்ச். அந்தோனியார் வேண்டுதலினாலும் 1917 ஞு பெப்ரவரி மீ 24 திகதி பகல் 1½-மணிக்கு சென்னை, அபாஸ் அலிக்கான்பேட்டை என்னும் துலுக்கன்தோட்டத்தில் வசித்து காலம்சென்ற D. சாமுவேல் அவர்களின் குமாரன் D. S. ஜெயசீலன் பிள்ளை அவர்களின் மனைவி ஆரோக்கிய மரியம்மாள் தன் இரண்டாம் பேறாக ஓர் ஆண் குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தைக்கு மார்ச்சு மாதம் 11 திகதி ஞாயிற்றுகிழமை காலை 8-மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் பெரிய சாலையிலிருக்கும் அர்ச். திரேசம்மாள் தேவாலயத்தில் சங். இராஜரிஷி Revd. Father J. Baker குரு சுவாமி அவர்களால் அக்குழந்தைக்கு S. J. Alexandre என்ற நாமகரணமிடப்பட்டு திருச்சபை யாசாரப்படி ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. இதற்கு ஷை யூரில் வசிக்கும் R. அந்து பிள்ளையும் அமுர்தம்மாளும் ஞான தந்தை தாயாக அங்கீகரிக்கப்பட்டார்கள். தாயும் பிள்ளையும் சுபம். இக்குழந்தையின் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டருளும்படி திரியேக தேவனின் திருவடிகளைப் பிரார்த்தித்துவருகிறேன்.

Tangore. 20—3—17

இப்படிக்கு
D. S. ஜெபமணி
தோஸ்திரம்.

தூத்துக்குடி

ஸ்ரீமான் S. M. N. பர்ணன்டோ அவர்களின்

மரண அறிக்கை.

இவர் தென்றேயத்தில் பல வளங்களும் பொருந்திய பாண்டிய நாட்டில். நெடுந்தூரம், செம்பவளச் செடிகள் கொடிகளை வீசி அழகைச் செய்யா நிற்கும் சமுத்திரக்கரையருகே யுள்ள திருமந்திர நகரமென்னும் 'தூத்துக்குடியின்கண் : பூர்வீக மேம்பாடு பெற்றுயர்ந்த பரத குலத்திலே யுதித்த ஸ்ரீமான் : M. X. பர்ணன்டோ அவர்களுக்கு; அவர் பத்தினியாகிய ஸ்ரீமதி: மரிய மிக்கேல் அம்மாள் பல்தான் அவர்களினிடமாய், சென்ற 1869-ம் ஆு பெப்பிரவரிமீ 2-ம் உ ஜெனனமாகி, மாதா, பிதாக்களின் அன்பு பெருக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, உலக புகழ் கலை பல கற்றுத் தேர்ந்து, யாவரும் சதா விரும்பும் யௌவனத்தை யடைந்து, ஸ்ரீமான் : கயித்தான் கோமஸ் அவர்களின் கனிஷ்ட புதல்வியாகிய ஸ்ரீமதி : ஜெருசலை அம்மாள் கோமஸ் அவர்களை மணம் புரிந்து, பூவும் மணமும், மணியும் ஒளியும்போல் பொருந்தி வாழுங்கால் : புகல்வதற்கரிய அருமை வாய்ந்த நான்கு புதல்வரைப் பயந்து, நோயுற்று, எவ்வித சிகிச்சைகளாலும் குணம் பெறுமல் கிறிஸ்துவனுக்குரிய கடைசித் தேவத்திரவி யானுமானங்க ளெல்லாம் குறைவறப்பெற்று, நிகழும் 1917-ம் ஆு பெப்பிரவரிமீ 11-ம் உ பகல் 11-மணிக்கு இலங்கைத் தீவில் நாத்தாண்டியா வென்னு மூரில் தமது ஷாப் (Shop) பில் மரணமாயினர். மறு நாள் பின்னேரம் ஷை யூர் அர்ச். லூர்துமாதா கோவில் கல்லறையில் அவர் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறுக்கும் எமது சகோதரர்களே! சகோதரிகளே! இவாற்றும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றோம். மரித்த விசுவாசிகளுடைய ஆற்றுமங்கள் சருவேஸ்பரனுடைய இரக்கத்தினுல் சமாதானத்தி லிளைப்பாறக் கடவது.—ஆமென்.

நாத்தாண்டியா }
13—2—1917. } ஓர் அநுதாபி.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட். "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்ற நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்ற தொகை	4,358	5	6
ஓர் நன்கொடை (Taiping)	10	2	0
மாணிக்கம்	1	0	0
A. C. Fernandes, Tuticorin	2	0	0
ஓர் நன்கொடை	5	0	0
ஓர் நன்கொடை (Thanascodi)	3	0	0
ருயப்ப முதலியார் (Royapuram)	1	0	0
ஆக மொத்தம்,	4,380	7	6

அர்ச். தோமையார் மடம்

சந்தோம் மைலாப்பூர்

இந்திய பெண்களுக்கோர் ஆங்கிலேய பாடசாலையும் போர்டிங் எனும் விடுதியும்.

திருமயிலை மேற்றிராணியாரின் பாதுகாவலில், இந்திய பெண்களுக்காக 'போர்டிங்' பள்ளிக்கூடம் ஒன்று, அர்ச். மரியாயின் 'பிரான்சீஸ்கன்' மிஷனெரி கன்னியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சர்க்கார் கல்வியிலாக்கா சட்டதிட்டப் பிரகாரம் கல்வி கற்பிக்கப்படும். இரண்டாவது பாஷையாக தமிழ் பயில்விக்கப்படும்.

கலாசாலை ஜனவரிமீ 10-தேதி ஆரம்பமாகும்.

மேமீ 1-தேதி முதல் ஜூன்மீ 30-தேதி வரையில் விடுதலை நாட்கள்.

சுவாமி பிறந்த திருநாளுக்கு முன்னும் சில வாவு நாட்களுண்டு.

'போர்டிங்'—பள்ளிக்கூடக் கட்டணம், மற்றும் விஷயங்களைப்பற்றி அறிய விரும்புவோர் மயிலாப்பூர் சந்தோம் அர்ச். தோமையார் மடத்துப் பெரிய தாயாருக்கெழுதவும்.

குறிப்பு.—புதிதாய்ச் சேர வரும் பெண்களை ஜூலைமீ 1-தேதிக்கனுப்புவது உசிதம்.

வேடிக்கையல்ல, விநோதமல்ல,

நாடகமல்ல, கதையல்ல, நாவலல்ல, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக வளர்த்தற்குரிய அநுபவ பூர்வமான வழி வகைகளும் யுக்திகளும் உபாயங்களு மடங்கிய அரிய நூல் பெற்றோர் ஒழுக்கம். ஒவ்வொரு குடும்பஸ்தரும் அவசியம் வாசித்தறியத் தக்க முக்கியமான புத்தகம். வித்துவான்களால் பெரிதும் புகழப்பட்டது. இனிய தமிழ் நடையில் சமயோசிதமான உபமான உபமேயங்களால் விஷயங்களை விளக்கியும், படிப்பவருக்குச் சலிப்பின்றி பிரியத்தையே தரும் விதமாயும் உபாத்தியாயர் ம. பா. மிக்கேல்சுவாமி பிள்ளை யவர்களால் எழுதப்பட்டுள்ளது. இரண்டு பாகங்களும் அடங்கிய புத்தகம் விலை அணு 12. தபாற்செலவு பிரத்தியேகம். வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்துக்கு எழுதி முன்பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். கோரிக்கொண்டால் வி. பி. வழியாயும் அனுப்பப்படும்.

"நல்ல ஆயன்" ஆபீஸ் மானேஜர், பிராட்வே, மதருஸ்.

அச்சுவேலி யந்திரச்சாலைப் புஸ்தகங்கள்.

தற்காலம் திருச்செல்வர் காவியம் ரூ. 1 ஆகவும், ஷை அம்மானை அணு 12 ஆகவும்; தேவமாதா, யாகப்பர், ஞானசவுந்தரி, சவேரியார் அம்மானைகளும்; எஸ்தாக்கியார், ஞானசவுந்தரி, சவீனகன்னி, சங்கிலிராசன் டிருமாக்களும்; எஸ்தாக்கியார், வரப்பிரகாசன் நாட்கங்களும், கிறீஸ்து சமயகீர்த்தனம், சத்தியவேத அநுசாரம், ஊசோன பாலந்தைகதை, வியாகுல பிரசங்கம், பாலவைத்தியம், பிரசவவைத்தியம், 8 அணு வீதமாயும்; அர்ச். அலசு, தேவசகாயம்பிள்ளை, அர்ச். செபஸ்தியார், சந்நீக்கிலாவு, திருச்சபை அம்மானைகளும்; தேவசகாயம்பிள்ளை, யோயோப்பு டிருமாக்களும், தேவசகாய சிகாமணிமாலை, ஞானத்தச்சன் நாடகம், சத்தியவேத பத்திக்கீர்த்தனை, ஆறணுவீதமாயும்; அர்ச். அந்தோனியார் அம்மானை, உரிச்சொல் நிகண்டு, விஞேதகதாமாலை, பிரிவினை மதங்களும் பைபிளும் 5 அணு வீதமாயும்; செபநந்தாவனம், தீத்தூஸ் அம்மானை, மோகூராக்கினி சரித்திரம், போதனுகீர்த்தனை, நயனவைத்தியம் நாலணுவீதமாயும்; இவைகளிலும் குறைந்த விலையுள்ள கீர்த்தனைகள், தபசுகால ஒப்பாரி முதலியவைகளும், விற்கப்படும். கேட்போருக்கு இலவசமாய்ப் புஸ்தகடாப்பு அனுப்பப்படும்.

விலாசம்.

S. TAMBIMUTTOO PILLAI,
Printing Office,
Atchuvaly, Jaffna.

இதுவே ஏளனம் செய்வோருக்கு ஏற்ற கருவி.

எண்பத்திநுலாயிரம் கோடி ஜீவராசிகளையும் காத்து வரும் ஏக பராபர வஸ்துவின் திருக்கருணை பெற்றிலங்கும் கிறீஸ்துவ நண்பர்களாகிய பரதகுல சீமான்களே! சீமாட்டிகளே!

தற்காலம் நமது ஜாதியின் மகத்துவத்தை ஆராயப்புகின் ஒவ்வொருவருமே அங்கலாய்ப்படைய வேண்டியவர்களா யிருக்கிறோம். இவ்விதம் அங்கலாய்ப்படைய நம் மூதாதைகள் நம்மை விட்டுவிடாமல் சொற்சுவை பொருட்சுவைகளுடன் வரைந்துள்ள தேனினும் இனிய இரசம் பொருந்திய "பரவர் புராணத்தை" இயற்றித் தந்திருக்கின்றனர். இதை இதுகாறும் வெளியிலெடாது விட்டது நமது அறியாமையே. இப்புஸ்தகத்தைக் கற்றறிந்த மேதாவிகள் பார்வையிட்டு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்திருக்கின்றனர்.

உலகம் உண்டாகியதிலிருந்து நம்பரத ஜாதியில் எத்தனை ராஜாக்கள் வந்தார்களென்றும் அதி விநோத விசித்திர அலங்காரமாய் வரைந்திருக்கிறது. நம்மை ஒவ்வொரு ஜாதியாரும் கேட்கும் கேள்விகளுக்கு தக்க பதில் கொடுக்க புராணங்களை ஆதாரமாக எடுத்துப்பேசியிருக்கின்றார்கள். இத்தகைய புஸ்தகம் நம் ஜாதியாரின் ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பா யிருந்துவருமாகில் நம் புத்திர பவுத்திரர்களுக்குப் பூர்வீக ஆஸ்தியைத் தேடி வைத்ததில் ஒன்றாகும். இப்புஸ்தகத்தில் அடங்கிய மகத்துவத்தை விரித்துரையாக எடுத்துக் காட்ட தற்காலம் நடக்கும் பயங்கரத்துக்குரிய ஐரோப்பிய யுத்தத்தை முன்னிட்டு சகல சாமான்களின் விலையின் ஏற்றம் அதிகரித்திருப்பதினால் அதிகமாக எழுதவில்லை. யுத்தத்தி னிமித்தம் சொற்ப பிரதிகள் மட்டுமே அச்சிட்டிருக்கிறோம்.

சீக்கிரம் முந்தினவர்களுக்கே கிடைக்கப்படும். விலை ரூ. 1. டசின் ஒன்றுக்கு ரூ. 9.
வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எக்ஸ். பீ. பாய்வ, **X. P. PAIVA,** 7, கன்னூரத்தெரு, 7. Brass Founder, St; கொழும்பு, Colombo.	ஜெ.எஸ்.விக்டோரியா, **J.S.VICTORIA,** 68, மேயின் ஸ்டிறீட், 68. Main St., கொழும்பு. Colombo.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 15. } மே 1917. { இலக்கம் 5.

MONTH OF MAY.

மே மாதம்.

மாதங்களிற் சிறந்தது மே மாதம். இம்மாதம் மாரிகாலங் கழிந்து, குளிர்காலம் நிகழ்ந்து வேனிற்காலத்தில் வந்துறும். விருக்ஷங்கள் கனிகளைக் கொடுக்கின்றன: பூஞ்செடிகள் புஷ்பித்து மலர்ந்து பரிமளம் வீசுகின்றன. இதைச் சுகிக்கும் மானிடருக்கு மனோரம்மிய முண்டாகின்றது. நாம் வசிக்கும் கீழ் நாட்டில் சூரிய வெப்பம் நம்மை வாட்டினும், ஐரோப்பியர் வசிக்கும் மேல் நாட்டில் குளிர் நீங்கி வெதுவெதுப் புண்டாகிக் குதூகலத்தைக் கொடுக்கும். இதனாற்றான் அவர்களிக்காலத்தில் இயற்கையின் வனப்பினால் அதிக ஆனந்த மநுபவிக்கின்றனர். இவை யாவற்றையு மமைத்துக் கொடுத்த இயற்கையி னிறைவனுக்கு நன்றி பாராட்ட மானிட விருதயங் கடமைப்பட்டுள்ளது. இதை யெங்ஙனஞ் செய்வதென ஆதிகாலத்து ரோமையர் அறியாது, கல்லினால் ஓர் சிலையை யுருவாக்கி அதற்குப் புஷ்பவதி யெனும் நாமஞ் சூட்டி, மலர்களா லதைச் சிங்காரித்துப் போற்றி வந்தனர். அது ஓர் பெருநாள் வைபவமாகிவிட்டது. அதினிமித்தம் பலவித வேடிக்கை விளையாட்டுகளும், கொண்டாட்டக் கோஷ்டங்களு மேற்பட்டன. ஆண் பெண் அடங்கலாக எல்லா ஜனங்களும் வந்து கூடியதால் துர்நடத்தைகளுக்கும் வழியா யிருந்தது. இப்பெருநாளானது கிறீஸ்து பிறந்த 15-நூற்றாண்டுகளுக்குப்பின் முதலாய் ரோமைமா நகரில் நடந்துவந்தது. இதில் கிறீஸ்துவர்களுங் கூடிக் காலத்தைக் கழித்து ஆத்துமத்தைப் பங்கப்படுத்தி வந்தனர். இதையறிந்த நம் தாயாகிய சத்திய திருச்சபை, தமது பிள்ளைகளை அஞ்ஞான ஆரவாரத்தினின் றகற்றி நல்வழிக்குக் கொண்டுவரவெண்ணி, இம் மே மாதத்தில் வேறுவகையான விசேஷ பக்தியை யுண்டுபண்ணிற்று. அதுதான் மே மாத வணக்கப் பக்தி. இம் மாதத்தை மாசற்ற கன்னிகையாகிய அர்ச். மரியாயிக்காக நியமித்து, அக்காலத்தில், அத்தாய் கிறீஸ்துவர்களுக்குப் புரிந்துவந்த கணக்கற்ற நன்மைகளுக்கு நன்றியறிதல் செலுத்தும்படி தூண்டலானது. இப் பக்திக் கிருத்தியங்களுக்கு முதன்மையாய் நின்றவர் அர்ச். பிலிப்பு,

நேரி யென்பவர்தான். இவர் துவக்கத்தில் சிறுவர்கள் சிலரைக் கூட்டி, மாதாவின் பீடத்தண்டை அவர்களை யழைத்துச் சென்று, அங்கு அத் தாயை யேற்றிப் போற்றி, அவளது கமலத்தில் மலர்களைச் சாற்றி, அவளது சலுகையை வேண்டி நின்றனர். ஷை மே கோஷ்டங்களுக்குத் தங்களை ஆளாக்கா வண்ணம், வாலிபர்களை அக்காலத்தில் இந்த அர்ச்சியசிஷ்டவர் மாதாவின் பக்தி கிருத்தியங்களை அனுஷ்டிக்க தூண்டிவந்தார். நாள்செல்லச்செல்ல வாலிபர் கூட்டமு மதிகரித்தது; கோவில்களில் மாதாவின் வணக்கமும் மிக்க விமரிசையாய் நடந்தேறியது. ஒரு கோவிலில் நடப்பதைப் பார்த்து மறு கோவிலிலும் அப் பக்திக்கிருத்தியத்தை ஸ்தாபித்தனர். அப்படியே இப்பக்தி எங்கும்பரவி ரோமைமா நகர் முற்றும் நடந்துவந்தது. ஆகவே கிறீஸ்துவர்கள், அஞ்ஞானக் கொண்டாட்டத்தில் அதிகமாய்ப் பிரவேசிக்கவில்லை. சன்னஞ் சன்னமாய் அந்த ஆரவாட்டமும் மறைந்து அடியோடே நின்று விட்டது. ஆனால் மே மாத வணக்கப் பக்தியோ யப்படியல்ல. ரோமைமா நகரில் ஆரம்பித்த அப் பக்தி உலகெங்கும் பரவலாயிற்று. நதியானது மலையினுச்சியிற் உற்பத்தியாகி, பூமியூடே சென்று கிளை நதிகளாகவும், உபநதிகளாகவும் பல பக்கங்களிலும் பாய்ந்து பூமியை செழிப்பூட்டுவது போலும், இருதயத்தினின்று உதிரம் புறப்பட்டு இரத்தத் தாரைகள் வழியாய்ச் சென்று மனித சரீரத்திற்குச் சௌக்கியத்தை யளிப்பதுபோலும், மே மாத வணக்கப் பக்தியானது, திருச்சபைக்கு மூல ஸ்தலமாகிய ரோமைமா நகரில் உற்பத்தியாகி உலக மெத்திசையிலும் பரவி சர்வ கத்தோலிக்கர்களுக்கும் ஞான அருள் பொழிந்து வருகின்றது.

ஆகவே, இப் பக்தியானது தற்காலம் உலகத்தின் நாலுகோடி எட்டுத்திசை பதினாறு கோணங்களிலும் பரவி யிருக்கின்றதென்பது திண்ணம். ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, ஆப்ரிக்காக் கண்டங்களுக்குப்போய்ப் பாருங்கள். சீர் சிறந்த பாரீஸ், லண்டன், சிக்காகோ நகர்களுக்கும், கீர்த்தியற்ற சிறு கிராமங்களுக்கும், போக்குவரத்திற்குக் கஷ்டமாயுள்ள தீவாந்திரங்களுக்கும் போய்ப் பாருங்கள். எங்கும் அர்ச். கன்னிமரியம்மாள் 'மே யரசி' யாகப் போற்றப்படுகின்றன ளென்று காண்பீர்கள். இராஜாக்களின் மாட மாளிகைகளிலுஞ் சரி, ஏழைகளின் குடிசைகளிலுஞ் சரி, சாஸ்திரிகளின் சாலைகளிலுஞ் சரி, வேலை செய்யும் ஆலைகளிலுஞ் சரி, 'மே யரசி' க்கு இம்மாதத்தில் வணக்கஞ் செலுத்தப்பட்டு வருகின்றது. சிறுவர்களும், பெரியவர்களும், ஆடவர்களும், மாதர்களும், தரித்திரரும், தனவந்தரும், படித்தவரும், படியாதவரும், அரசர்களும், அடிமைகளும்—எல்லோருமே 'மே யரசி'யைப் புகழ்ந்தேற்றுகிறார்க ளிம்மாதத்தில்.

நம் மிந்திய நாட்டிலும் இப் பக்தி சிறந்தோங்குகின்றது. நாமிருக்கும் பட்டணத்திலோ, பட்டிக்காட்டிலோ, அங்கு கோவிலிருப்பின் நமது தாயாகிய அர்ச். கன்னிமரியாய்க்கு விசேஷ வணக்கம் இம் மாதத்தில் நடத்தப்படும். ஆகையால், நாம் அத்தாயினிட மிருந்து பெற்றுக்கொண்ட சகல நன்மைகளுக்கும் நன்றியறிதலைக் காட்டுவதற்கும், நம்முடைய நிலைமைக்கு வேண்டிய உதவி சகாயங்களைப் பெறுவதற்கு மிது உகந்த சமயம். இந்த மாதத்தை நம்மாற் கூடியமட்டுஞ் சிறப்பாய்க் கொண்டாடப் பிரயானசப்படவேண்டும். ஐவேசுள்ளவர்கள் மாதாவின் பீடத்தில் பலவர்ணப் புஷ்பங்களைச் சாற்றி, வர்த்திகள் பலவற்றை ஏற்றித் தீபதூபங்களுடன் வணக்கப் பக்தியைக் கொண்டாடுவார்களாக. எல்லோரும் என்று மழியாத புண்ணிய புஷ்பங்களை அத் தாயின் பாதத்தில் சமர்ப்பிக்கலாம். இப்புவனத்தில் பூர்க்கும் மலர்களோ, காலையில் மலர்ந்து மாலையில் உலர்ந்துபோகும். ஆனால் நாம் புரியும் புண்ணிய புஷ்பங்களோ வாடா மலர்கள். எப்போதும் மலர்ந்த வண்ணமாய்க் கன்னித் தாய்க்குப் பிரீதியுள்ளதா யிருக்கும். ஆகையால் நாம் எப்போதுஞ் செய்ய வேண்டினும், விசேஷமாய் இம்மாதத்தில், நமக்கு வருங் கஸ்தி துன்பங்களிலும், வறுமை சிறுமைகளிலும் பொறுமையாயிருந்து, சோதனைகளை ஜெயித்து, ஜெப தபங்களைப் புரிந்து வருவது மிக்க நன்று. நமதிருதயத் தோட்டத்தில் இப்பேர்க்கொத்த நறுமலர்களைக் கொய்து பூமாலையொன் றிணைத்து நம் தாயின் பாதத்தில் சாற்றி யவ்வம்மணியின் சலுகையை இம் மாதத்தில் தேடி நிற்போமாக.

TRUTHFULNESS.

சத்தியம்.

பொய்மைக்குப் பிதா பேயென்பது யாவரும் அறிந்த விஷயம். நரகப் பிசாசு பாம்பு ரூபமெடுத்து ஏவாளென்னும் நமது ஆதித் தாயிடம் பேசிய பசப்பு மொழிகளே உலகத்திலுண்டான முதற்பொய்யாம். ஆதலால் பொய்பேசுபவர் யாராயிருப்பினும் அவர்கள் அலகையைப் பின்பற்றி நடப்பவராவர். ஆனால் எல்லாம் வல்ல சர்வேசுரனே நித்தியமான சத்தியமென்று நமக்குத் தெரியும். அவர் சத்தியமே நமக்காதாரம்; அச்சத்தியத்தையே நமதுயிருள்ளளவும் ஆராதிக்கிறோம். தைரியத்துடன் ஒன்றுக்குமஞ்சாமல் எப்போதுஞ் சத்தியத்தையே பேசிவருபவர்கள் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரையே பின்பற்றுகிறவர்களாவார். அவர்கள் நடவடிக்கையே ஒழுங்கானதாயிருக்கும். மெய்யைப்பேசி பொய்யைத் தவிர்த்தவர்கள் இவ்வுலகில் நீதிமான்களாயிருப்பவர்கள் என்பதிற் சந்தேகமில்லை. மெய்மை சகல புண்ணியங்களுக்குந் தலையானதால், அதை யாரிடங் காண்கிறோமோ அவர்கள் புண்ணியவான்களென நிச்சயமாய்ச் சொல்லலாம். இதனாலன்றோ,

> "மனத்தொடு வாய்மை மொழியிற்றவத்தொடு
> தானஞ் செய்வாரிற்றலை." என்றார் அஞ்ஞானி

யாகிய திருவள்ளுவர்.

எக்காலத்திலும் உலகமெங்கும் சகல சாதி சனங்களும் மெய்யைப்போற்றிப் பொய்யைக் கண்டித்திருக்கின்றனர். "சத்தியத்தில் துணிந்திரு; அசத்தியம் ஒன்றுக்கு முதவாது; அதை யவசியமெனத் தேடுவதே பிசகு." என்று ஒரு மேற்புலக்கவி சொல்லுகிறார். இதை நாம் நன்றாய்க் கவனித்து ஞாபகத்தில் வைத்தல்வேண்டும்; ஏனெனில் அவ்வசனத்தில் நிறைந்த ஞானமும் சிறந்த உண்மையும் பொருந்தியிருக்கின்றன.

"சத்தியத்தில் துணிந்திரு" மெய்தான், சத்தியத்துக்குத் துணிச்சல் அவசியம்; சில வேளைகளில் திடக்குறைவால் சத்தியந்தவற நேரிடுகிறது. மேலும் துணிச்சல் இல்லாதவர்கள் கோழைகள்; கோழைகள்தாம் பொய்யர். ஆதிகாலத்துக் கிறீஸ்துவர்களின் சீவியத்தை யெடுத்துப் பார்த்தால் இதன்பொருள் நன்குவிளங்கும். அன்னார் ரோமாபுரியில் காட்டக்கோம்ஸ் என்னும் சுரங்கங்களில் வசித்துப், பூசைகண்டு, பரிசுத்த தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றுச் சீவித்து வந்தது எதற்காக? சத்தியத்துக்காகவே! அவர்கள் தமது உயிரின்மட்டில் அசாக்கிரதையாயிருக்கவில்லை; ஏனெனில் மனித உயிர் கடவுளின் நன்கொடை; அதை நாம் வீணிற் போக்கடிக்கலாகாது. அவர்கள் அபாயத்தை நாடிப் போகவில்லை; ஆனால் அபாயம் அவர்களை நாடிவர அவர்கள் கிறீஸ்துவர்களெனத் தெரிந்து கொள்ளப்பட்டபோது, தாம் கிறீஸ்துவர்கள் தானோ என்னுங் கேள்விக்குத் தைரியமாய் மெய் யுத்தாரந் தந்தனர். தம்முயிரைக் காப்பாற்ற அச்சமயத்தில் அவர்கள் பொய் சொல்லவில்லையாம்.

சத்தியத்துக்காக அவர்கள் பட்டபாடுகளை, அநுபவித்த நிந்தையவமானங்களை யாரால் வர்ணிக்க முடியும்? அஞ்ஞானிகள் சூழ்ந்துள்ள பெருமண்டபங்களின் மத்தியில் விடப்பட்டவெளியிடங்களுக்கு அவர்கள் கொண்டுவரப்பட்டு, பசி நிறைந்த புலி, சிங்கம் முதலிய கொடிய மிருகங்களால் கிழித்தெறியப்பட்டு உயிர்துறத்தல் சுலபமான காரியமா? ஒரு பொய்சொல்லியிருந்தால், அவர்கள் உயிரிழந்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் துணிச்சலாய்ச் சத்தியங் கடைப்பிடித்தவராய் அப்பொய்யைச் சொல்ல இணங்கவில்லை. கொஞ்சநேரம் தாங் கிறீஸ்துவர்களல்ல வென்று நடித்திருப்பார்களேயானால் அவர்களுக் கிக்கதி வந்திருக்கமாட்டாது. ஆனால் சத்தியம் உயிரினுஞ் சிறந்ததென மதித்தவர் அந்த வேதசாட்சிகள். பொய்ம்மொழிப் பேசி நமதாண்டவரை மறுத் தவமானப் படுத்தி யுயிர் வாழ்வதினும் துஷ்ட மிருகங்களுக்கும் அக்கினிச் சூளைக்கும் இரையாவதே மேலெனத் துணிந்த அப் புண்ணிய சீலர்களுள் முதியோரும், பெரியோரும் வாலிபப் பெண்களும் பிள்ளைகளும், தனவந்தருந் தரித்திரவான்களும் இருந்தனர் என்றால்,

சத்தியத்தின் உன்னத மகத்துவத்தை என்னென்போம்? சத்தியமே அவர்களுக்கு மோட்ச முடியை யளித்த பரம்பொருள்! இதை யோசிக்கும்போது சத்தியத்தை எப்போதுங் கைப்பற்றிச் சீவிக்க முயல்வது நமது கடமையென்றுணரவேண்டும்.

சர்வேசுரனுடைய மேலான மகிமைக்காக நாம் சத்தியத்தைப் பேசவேண்டும்; பொய் பேசும் வாயை சர்வேசுரன் வெறுக்கிறார். சுவிசேஷத்திற் சொல்லியபடி அசத்தியம் தேவனுக்குச் சத்துருவாம். சர்வேசுரனுடைய பரிசுத்த திருச்சபையின் மட்டிலுள்ள நேசத்துக்காக நாம் சத்தியத்தைப் பேசக்கடமைப்பட்டுள்ளோம். திருச்சபை இக்கடமையைப்பற்றி யடிக்கடி நமக்கறிவிப்பதை அசட்டைபண்ணலாகாது. சில பரிசுத்தவான்கள் சொல்வது போல், ஒரு பொய்சொல்வதால் அநேக ஆத்துமாக்களை உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று மீட்பதாயிருப்பினும், அந்தப் பொய்யைச் சொல்லவேகூடாது. பொய்யை யவசியமெனத் தேடுபவரார்?

மேலும் பொய் சொல்லுவதே புத்தியீனம். தவறிநடந்தபிறகு ஒருவன் அத்தவறுதலைத் தப்பறையால் மறைக்கப் பார்ப்பது மதியீனமன்றோ? அப்படிச் செய்வதால் குற்றங்குறைவதற்குப்பதிலாய் அதிகரிக்கிறது. குற்றத்தை மறைக்கப் பொய் சொல்வது குற்றத்தின்மேல் குற்றமென்பதை நாம் அறியவேண்டும். அற்பப் பாவமென்றெண்ணி தம்மை மறைக்கப் பொய் சொல்பவர் தமது ஆத்துமத்தைக் கறைப்படுத்துகின்றனர். இவ்வாறு நடப்பது மதியீனமோ, மதியூகமோ? மதியீனமென்பதிற் சந்தேகமில்லை. ஆதலால் நாம் ஒருபோதும் பொய் பேசலாகாது.

பொய் சொன்னதாக ஒருவன் ஒத்துக்கொள்ளுதல் அவமானத்துக்குரியகாரியம் என்கிறோம். மெய்தான், ஆனால் இந்த அவமானத்துக்குக் காரணமாயுள்ள பொய்யை விலக்கினாலல்லவோ தாவிலை. அப்படியதை விலக்குவதற்குத்தக்க வழி தாழ்ச்சியென்கிற புண்ணியத்தின்மேற் கட்டப்பட்ட பச்சாதாபம் என்னுந் தேவத்திரவிய அநுமானத்தை நாடிச் செல்வதாம். மனிதருடைய பாவச்சுவாபத்தை நன்கறிந்த நரகப்பேய், அவர்களை மெய்யினின்றும் விலகும்படிக்கான தந்திரமனைத்துஞ்செய்கிறது. பொய்யின் கனகனத்தை யறியாமல் அதில் அநுதினமும் உழலும்படி மனிதரைப் பழக்கிவிட்டால், அவர்கள் ஆத்துமத்தைச் சுலபத்தில் தன் வயப்படுத்திவிடலாமென்பது அதன் கொள்கை. ஆதலால் பொய்யினால் நமது ஆத்துமத்துக்கு விளையும்கெடுதிகளை நாம் உணர்ந்து, அதனைவிலக்கிச் சத்தியத்தைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். சத்தியந்தவறினால், உடனே பாவசங்கீர்த்தனஞ்செய்து, மனஸ்தாபத்தால் ஆத்துமாவைச் சுத்தப்படுத்துவதே கிறிஸ்துவரின் கடமை. பொய்யைச் சங்கீர்த்தனஞ்செய்ய வெட்கமாயிருக்கிறதென்று மறைக்காமல், புலவர்சொல்வது போல் "சத்தியத்தில் துணிச்சலாயிருத்தல்" வேண்டும்.

நாம் பேசும்போது, கண்டதைக் கண்டவாறும், கேட்டதைக் கேட்டவாறுஞ் சொல்லவேண்டும். ஒளிப்பதும் மறைப்பது முதவாது. அவசியமிருந்து பேசவேண்டியதாயின், மெய்யையே பேசவேண்டும். ஒருவர் கேளாமலே சில வேலைகளில் நாம் நமக்குத் தெரிந்ததைச் சொல்லவேண்டியிருக்கும். அப்போது நாம் மெய்யைப் பேசுவதால் சந்தேக நிவர்த்தி, அயலார் நன்மை முதலியன விளையுமென்பது திண்ணம். அதனால் இத்தகைய சமயங்களில் ஒருவருங் கேளாதபோதும் நாமே முன் வந்து சத்தியத்தைப் பேசவேண்டியது கிறிஸ்துவர்களாகிய நமது கடமை.

நமது வாழ்க்கையில் சத்தியத்தின்பேரில் நமக்குள்ள சிநேகத்தைக் காட்ட, நாம் மற்றவர்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்வதில் யோசித்து சாக்கிரதையாய்ச் செய்யவேண்டும். எடுத்ததற்கெல்லாம் ஆகட்டுமென்று வாக்களித்துவிடாதே. வாக்களித்தபின் உன்னால் தடுக்க முடியாத காரணமிருந்தாலொழிய அதை நிறைவேற்றத் தவறாதே. தவறினால், சமயம் வாய்த்தபோது காரணத்தைச் சொல்லி மனஸ்தாபப்பட மறவாதே.

நாம் பொய்யை யவமதித்து வெறுக்கவேண்டும்; மெய்யைப் போற்றிப் புகழவேண்டும். நமது இதயத்தில் வஞ்சகஞ் சூது முதலியன குடிகொள்ள விடலாகாது. நமது நா தப்பறையானவற்றை மொழிய இடங்கொடுக்கலாகாது. மற்றவர்களிடம் முக்கியமாய்ப் பிள்ளைகளிடம் பொய், வஞ்சக மிவற்றைக் கண்டால், உடனே கண்டிக்கவேண்டும். பிள்ளைகள் சாதாரணமாய் பொய் பேசுவது பயத்தாலாம். பெரியவர்களைப் பார்த்தாலே பிள்ளைகள் பயப்படுவது சகஜம். மாசற்ற மனதை யுடைய பிள்ளைகள்

தப்பிதஞ் செய்தால், தாமே உடனே யுணர்ந்து கொள்ளுகிறார்கள் என்பது சிலர்க்குத் தெரியாது: ஆதலால் இது உண்மையெனப் பிள்ளைகளை வளர்ப்பதில் அநுபோகமுடைய மாதர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆதலால் பெற்றோர் இது விஷயத்தில் சர்வ சாக்கிரதையாயிருக்கக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் தம் பிள்ளைகள் சத்திய மார்க்கத்தினின்றும் வழுவாதிருக்கப் பார்க்கவேண்டும். மற்றவர்களை ஏமாற்றவும், பொய் சொல்லவும், சூதாய் நடக்கவும் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் மகாப் பாதகம். உத்தம கிறிஸ்துவர்கள் முதலாய் இது விஷயத்தில் சரியாய் நடந்துகொள்ளத் தெரியாமல், தம் பிள்ளைகளைக் கெடுப்பது எவ்வளவோ துக்கத்துக்குரிய காரியம்.

பேசக் கற்றுக்கொண்ட ஒரு சிறு குழந்தை ஒரு தப்பிதஞ் செய்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். அதன் தாயும் பிள்ளையும் அதை யறிந்திருக்கிறார்கள். "அதை நீ செய்தாயா? செய்யலாமா? நீ செய்தாயா, சொல் என்ன, பேசாமலிருக்கிறாய்? அடிப்பேன்" என்று தாய் கேட்கும்போது, அந்தப் பிள்ளை பயந்து நடுங்கி நிற்கிறது. தான் குற்றவாளியென்று ஒற்றுக்கொள்ள வெட்கப்படுகிறது. பயமும் அவமானமும் அதைப் பேச வொட்டாமல் தடுக்கின்றன. தாய் அதைப் பேசும்படி வற்புறுத்துகிறாள். பேசாவிட்டால் குழந்தைமேல் வேறொரு குற்றஞ்சாரும்; குழந்தை யிதையும் உணருகின்றது. இந் நிலைமையில் அது தானொன்றுஞ் செய்யவில்லை யென்று மறுத்தால், அது ஓர் ஆச்சர்யமல்லவே. ஆதலால் பெற்றோர் தம் பிள்ளைகளை யித்தகைய வீண் கேள்விகளால் பயமுறுத்திப் பொய் சொல்லும்படிச் செய்வதற்குப் பதிலாய், அவர்களிடம் அன்பாய்ப் பேசி குற்றத்தை யொப்புக்கொண்டு மனஸ்தாபப்படும்படி பழக்கவேண்டும். நிற்க,

சத்தியம் நம் மனதிற் குடிகொண்டிருந்தால், நமது சீவியத்தைக் கஷ்டமின்றிப் போக்கலாம். நமது வாழ்க்கையில் நேருந் துன்பங்கள் அநேகமாய் அசத்தியத்தால் உண்டாவதாம். ஆதலால் நாம் எப்போதும் சத்திய மார்க்கத்தை விட்டு விலகலாகாது. அப்படி விலகாமலிருக்கும்படி ஒரு பரிசுத்த குருவானவர் தம்மைக் காணவருங் கிறிஸ்துவர்களுக் கெப்போதுஞ் சொல்லி யருளிய பின்வரும் சிறு ஜெபத்தை நாமும் அடிக்கடி சொல்லிச் சத்தியத்தில் நிலைநிற்போமாக: "ஓ, சத்திய[illegible] சத்தியத்தின் தேவனே! நா[illegible] அதை [illegible]க்கும்படி யருள்புரியும்."

S. Selva Raju
162046

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம்—43–55.

வசனம்.—43. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி?

44. இதோ, நீர் வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று.

45. அன்றியும் ஆண்டவரால் உமக்கு வசனிக்கப்பட்டவைகள் நிறைவேறும் என்று விசுவசித்ததினால் நீரே பாக்கியவதி.

46. அப்போது மரியம்மாள் வசனித்ததாவது: என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது.

47. என் இரசண்ணியமாகிய சர்வேனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது.

48. ஏனெனில் தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபா கடாட்சத்தோடு பார்த்தருளினார். ஆகையால் இதோ, இக்காலமுதல் எல்லா தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

49. ஏனெனில் வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

50. அவருடைய கிருபையும் தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்து நடக்கிறவர்கள் மேலிருக்கின்றது.

51. அவர் தம்முடைய கரத்தின் வல்லமையைக் காட்டியருளினார்; தங்கள் இருதய சிந்தனையில் கர்வ முள்ளவர்களைச் சிதறடித்தார்.

52. வல்லப முடைத்தானவர்களை ஆசனத்திலே நின்று தள்ளி, தாழ்ந்தவர்களை உயர்த்தினார்.

53. பசித்திருக்கிறவர்களை நன்மைகளினால் நிரப்பித் தனவான்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

54. தமது கிருபையை நினைவு கூர்ந்து, தம்முடைய தாசனாகிய இஸ்ராயேலைப் பரிக்கிரகம் பண்ணினார்.

55. அப்படியே நமது பிதாக்களாகிய அபிரகாமுக்கும், ஊழியுள்ளகாலம் அவர் சந்ததியாருக்கும் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார் என்றாள்.

தேவமாதாவின் உன்னத மகிமையை, இஸ்பிரீத்து சாந்துவினால் அறிந்துகொண்ட எலிசபெத்தம்மாள், தன்னிலிடத்தில் அவள் தன்னைத் தாழ்த்திக்கொண்டு வந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டு பிரமித்து, தன்னுடைய அபாத்திரத்தையும் நினைவுகூர்ந்து, அவளைப் புகழ்ந்து வாழ்த்துகிறாள்.

43-ம் வசனம்.—என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி?

அதாவது: என் ஆண்டவருடைய, என் கர்த்தருடைய மாதா என்னண்டையில்வர, அடியாள் பாக்கியம் பெற்றவகையேதோ, நான் என்ன நன்மை, என்ன புண்ணியம் செய்தேன்? நான்செய்த தர்மம் யாது? முற்றும் அபாத்திரவதியாகிய அடியாளிடத்தில் என் கர்த்தருடைய, என் தேவனுடைய தாய் வர நான் பெற்ற பேறுபலன் யாது? என்பதாம்.

44-ம் வசனம்.—இதோ நீர் வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று.

அதாவது: இதோ உமது உதரத்தில் நீர்கொண்ட தேவசுதனுடைய பிரசாதங்களைப்பெற்று அவரைத் தன் ஆண்டவரென்றும் தேவனென்றும் அன்பனென்றும், அவருக்குத்தான் அடிமையென்றும், சிருஷ்டியென்றும், நண்பன் என்றும், தேவ செயலாய், அற்புதமாய் உணர்ந்து அவரைப் பூசித்து, நேசித்து ஆராதித்து வணங்கும் வண்ணமாய் என் உதரத்தில் குழந்தை ஆனந்தமாய்த் துடித்ததே என்பதாம்.

கன்னிமரியாயி கர்ப்பிணியாயிருப்பதையும் அவளுடைய உதரத்தில் மனுஷாவதாரம் எடுத்தவர் தன் ஆண்டவர் என்றும் தன் தேவனென்றும், கன்னிமரியாயி மெய்யாகவே சர்வேசுரனுடைய மாதாவென்றும், எலிசபெத்தம்மாள் எவ்விதமாய் அறிந்திருக்கக்கூடும்? இதைக் கன்னிமரியாயி அவளுக்கு அறிவிக்கவில்லை. தேவதூதனும் அவள் இதை அறிந்ததில்லை. "இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டு உரத்த சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னாள்" என்று சுவிசேஷ வாக்கியம் கூறுகிறதினால், சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரம் செய்த பரம இரகசியம் இஸ்பிரீத்து சாந்துவால்தான் அவளுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்று சொல்லவேண்டும்.

இஸ்பிரீத்து சாந்து பிரியமாய் வாசம் செய்யும் இருதயம் எங்கும் தாழ்ச்சியும் சிரவணமும் நிறைந்ததாய் விளங்குகிறது. கன்னிமரியாயி தன்னைத் தாழ்த்திக்கொண்டு "இதோ ஆண்டவருடைய அடிமை" என்கிறாள். தனக்குக் கீழ்ப்பட்ட எலிசபெத்தம்மாளிடம் தாழ்மையான பணிவிடை செய்ய விரைவாக வருகிறாள். எலிசபெத்தம்மாளும் தன்னை மிகவும் தாழ்த்திக்கொண்டு தேவதாயை வாழ்த்திஸ்துதிக்கிறாள்.

45-ம் வசனம்.—"அன்றியும் ஆண்டவரால் உமக்கு வசனிக்கப்பட்டவைகள் நிறைவேறும் என்று விசுவசித்ததினால் நீரே பாக்கியவதி". கன்னிமாதாவின் விசுவாசத்தை எலிசபேத்தம்மாள் வாழ்த்தி அதைச் சகல பாக்கியத்தின் காரணமாகக் குறித்ததினால், கன்னித் தாய்மையின்

பழுதின்றியே, கர்ப்பந்தரித்து தேவசுதனைப் பெறுவாளென்று கபிரியேல் தூதன் சொன்ன வாக்கைச் சற்றும் சந்தேகமில்லாமல் அங்கீகரித்த ஒப்பற்ற விசுவாசத்தின் மகிமையைப்பற்றி கூறியதாகும்.

ஏனெனில் ஆடவனுடைய கிரியையில்லாமலும், கன்னிசுத்தம் கெடாமலும், ஓர் ஸ்திரீ கர்ப்பந்தரிப்பதானது மனுஷனுடைய புத்திக்கடங்காத பரம இரகசியமாம். ஆனால் இவ்வளவு மகத்தான அற்புதத்தை யாதொரு சந்தேகமில்லாமல் தேவதூதன் உரைத்த வாக்கியத்தைக் கேட்டு கன்னிமரியாயி உடனே உறுதியாய் விசுவசித்தாள். அவ்விசுவாசத்தின் காரணமாய் பாக்கியவதியானாள். நமது ஆதித்தாயாகிய ஏவாள் தனது விசுவாசக் குறைவினாலும் அகந்தையினாலும் சகல மனுஷ சந்ததிக்குச் சாவுஞ் சாபமும் வருவித்தாள். ஆனால் கன்னிமாதா தனது விசுவாசத்தினாலும், தாழ்ச்சியினாலும் அத்தீங்குகளை நீக்கி நமக்குச் சீவியத்தையும் தேவ ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்த கிறீஸ்துநாதரைப் பெற்றாள். இப்படியே அவருடைய திருமாங்கிஷத்தைச் செனிப்பித்து பாக்கியம் பெற்றதைப் பார்க்க அவருடைய விசுவாசத்தைக் கைக்கொண்டு அதிக பாக்கியவதியானாள் என்று அர்ச். அகுஸ்தீனுஸ் வசனிக்கிறார்.

இஸ்பிரீத்து சாந்துவால் நிரப்பப்பட்ட எலிசபெத்தம்மாள் கன்னிமரியாயை, சர்வேசுரனுடைய தாய் என்றும், ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளென்றும், விசுவாசத்தில் நிகரற்றவளென்றும், பாக்கியவதி என்றும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கினதினால், அவள் கூறிய புகழும் செலுத்தின வணக்கமும் இஸ்பிரீத்து சாந்துவால் அங்கீகரிக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட ஸ்துதியங்களைக் கன்னிசுத்த தேவமாதா கேட்டு தான் தன்னிடம் நடந்த பரம இரகசியத்தைப்பற்றி எவருக்குமே அறிவிக்காதிருந்தும், தன்னைச் சர்வேசுரன் எலிசபெத் தம்மாளைக்கொண்டு வாழ்த்த சித்தமானதை நினைத்து தான் அடைந்த புகழ்ச்சியும், சங்கையும் அவருக்கே யுடையதானதினால் அவரை வாழ்த்த நவமான ஒரு சங்கீதத்தை இஸ்பிரீத்து சாந்துவின் ஏவலினால் பாடினாள். இச் சங்கீதம் சகல அமிர்தமும் இன்பமும் அடக்கித் துக்கித்த மனதுக்கு ஆறுதலுமாய், அறியாத புத்திக்கு படிப்பினையுமாய், சர்வேசுரனை ஸ்துதித்து வணங்க ஒப்பற்ற மாதிரிகையுமாய் இருக்கிறதினால் அதின் விபரத்தை எழுதி காண்பிப்பது கிரமமாம் இச்சங்கீதத்தில்.

46-50-ம் வசனம் வரையில்.—கன்னிமரியாயி சர்வேசுரன் தனக்கு அளித்த வரங்களைப் பற்றி அவரை வாழ்த்தி ஸ்துதிக்கிறாள்.

51-53-ம் வசனம் வரையில்.—ஆண்டவருடைய அடிமையாகிய தன்னை தாழ்மையான அந்தஸ்திலிருந்து உன்னத அகோசர பதவிக்கு சர்வேசுரன் உயர்த்தின வகையை நினைத்து, அகங்காரிகளையும், செல்வத்தில் செருக்குள்ளவர்களையும் தாழ்த்தி வெறுமையாக்கி, தாழ்ந்தவர்களையும், வறுமையிலும் சிறுமையிலும் நொருங்கினவர்களையும் உயர்த்தி செல்வர்களாக்கி மகிமைப் படுத்தும் சர்வேசுரனுடைய பராமரிப்பின் ஒழுங்கையும் ஞானத்தையும் வியந்து வாழ்த்துகிறாள்.

54-55-ம் வசனம் வரையில்.—சர்வேசுரன் ஆதியில் வாக்குத்தத்தம் செய்த நன்மைகளை, தமது இரக்கத்தையும் பிரமாணிக்கத்தையும் நினைவு கூர்ந்து, தமது பிரசைக்கு அளித்திடும் வகையை வெளியிடுகிறாள்.

இச் சங்கீதத்தில் தேவதாய், சர்வேசுரன் எந்தக் காலத்திலும் மனுஷர்கள் மட்டில் நடந்துகொள்ளும் விதத்தையும், தேவ ஆளுகையின் கிரமத்தையும், அவருடைய பராமரிப்பின் ஒழுங்கையும், தேவ வல்லமையையும், கிருபையையும், நீதியையும் வாழ்த்திப் பாடினதல்லாதே, தனது மகிமையை அற்பள வென்கிலும் நினைக்கவில்லை யென்று அறியக்கடவோம். அதினால் சகல புண்ணியங்களின் அஸ்திவாரமான தாழ்ச்சி யென்கிற புண்ணியத்தை அதிகமாய் அனுசரிக்க நம்மைப் படிப்பித்தாளென்றும் சொல்லக்கடவோம்.

வேதாகம புஸ்தகங்களில் பாடியுள்ள பல சங்கீதங்களில் தேவதாயின் இச் சங்

கீதமே, அன்பும், அருளும், இன்பமும், மதுரமும், நிறைந்ததுமாய், உன்னதமும் சிரேஷ்டமும் பெற்றதுமாய் விளங்குகிறது. இதினாலல்லோ திருச்சபை, சர்வேசுரனுடைய தோத்திரங்களைக் கொண்டாடவும், தேவ சுதன் மனுஷாவதாரம் செய்த பரம இரகசியத்திற்காகவும், இன்னும் சர்வேசுரன் நமக்கு அளித்துவரும் கணக்கற்ற வரப்பிரசாத நன்மைகளுக்காகவும் உத்தம விதமாய் நன்றியறிந்த தோத்திரம் செய்யவும், தேவதாயினிடம் விளங்கிய நிகரற்ற பக்தி, நேசம், நன்றி, விசுவாசத்தாலும், ஞான சந்தோஷ மகிழ்ச்சியாலும் நிறைந்தவர்களாய் நடந்தொழுகவும், வெஸ்பெரா என்னும் மாலை சங்கீத செபத்தில் அனுதினமும் இதனைப் பாடும்படியாகத் தனது குருக்களுக்கும், துறவற சபைகளுக்கும் கற்பித்திருக்கின்றது.

A REGRETTABLE INCIDENT!!

பிரலாபத்துக்குரியதோர் சம்பவம்!!

ஓர் ஊரில் தர்மநாத உடையாரென்னும் ஒரு தருமிஷ்டர் இருந்தார். இவர் சுகமே பிழைப்பதற்கான பணமும் நில பலமுமிருந்தன. இவருடைய பந்து ஜனங்கள் நல்ல ஸ்திதியிலிருந்தமையால் இவருடைய உதவியை அவர்கள் ஆசித்ததில்லை. அதே ஊரில் வருணத்தில் வன்னியரும் பரம ஏழைகளுமான ஸ்திரி பூமான் இருவர் இருந்தார்கள். இவர்களுக்கு ஆணும் பெண்ணுமான 9 பிள்ளைகளிருந்தார்கள். தகப்பனானவன் தன் பிள்ளைகளைக் காப்பாற்றும்படி கடினமாயுழைத்தும், பிள்ளைகள் ஒரு நாளைக்கு ஒரு விசையாகிலும் வயிறு நிறைய சாப்பிட்டறியாமல் கந்தைத்துணிகளைச் சுற்றிக்கொண்டு பரிதாபத்துக்குரிய ஸ்திதியிலிருந்தார்கள். தகப்பனோவெனில் வேலை கஷ்டத்தாலும் குடும்பக் கவலையாலும் வெகுகாலம் வியாதியாய் விழுந்திருந்து மரித்தான். அவனுடைய மனைவியும் தன் கணவனிறந்த 4-ம் மாதம் 10-ம் பிள்ளையைப் பெற்ற நாளே இறந்தாள். அண்டை வீட்டுக்காரருடைய உதவியால் அவளுடைய பிரேதம் கல்லறையில் க்ஷேமிக்கப்பட்டது. அனாதி பட்சிகளான அந்தப் பிள்ளைகளின் நிர்ப்பாக்கிய ஸ்திதி எப்பேர்ப்பட்டதென்று நண்பர்களே! நீங்களே எளிதில் அறிந்துகொள்வீர்கள். இந்த நிர்ப்பாக்கிய குடும்பத்தின் அஷ்ட தரித்திரத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட தர்மநாத உடையார் அந்த வீட்டுக்குச் சென்று அந் நிர்ப்பாக்கிய பிள்ளைகளின் கஷ்ட திசையால் மனமிரங்கி, சிறு பாலனை ஒரு ஸ்திரிக்குக் கொடுத்து வளர்க்கும்படி ஏற்பாடு செய்து அவரும் அந்த வீட்டில் வசித்து பிள்ளைகளை சவரட்சணை செய்துவந்தார். மூத்த பெண்ணை அவளுடைய ஜாதியானொருவனுக்குக் கட்டிக்கொடுத்து மற்றப் பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவைத்தார். இப்படியே 10 பிள்ளைகளுக்கும் வேண்டிய அன்ன வஸ்திரமும் பள்ளிக்கூடத்துக்கு சம்பளமும் கொடுத்து அவர்களைத் தன் சொந்தப் பிள்ளைகளைப் போல் அற்ப குறையுமின்றி வளர்த்து வந்தார். பிள்ளைகளும் உடையாரை ஆஞி, அண்ணா, தகப்பனே என்று அழைத்துவந்தார்கள். சில வருஷங்களுக்குள் உடையாருக்கிருந்த பணம் செலவானதால் தமது சொற்ப நிலத்தை கொஞ்சங் கொஞ்சமாய் விற்று பிள்ளைகளை சவரட்சணை செய்து ஒரு பெண்ணுக்கும் ஒரு பையனுக்கும் கலியாண முடித்துவைத்தார். கையிருப்பு குறைந்தபடியால் மீதியான பணத்தை மூத்தவன் கையில் கொடுத்துத் தன் சகோதர சகோதரிகளைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லி நட்டாலுக்குப் புறப்பட்டார். சமுத்திர யாத்திரையால் வரும் ஆபத்தையும், அன்னிய நாட்டிலுண்டாகும் வியாதிகளையும் பற்றி பயப்படாமல் அன்னியரான அந்தப் பிள்ளைகள்மேல் இவர் வைத்த குருட்டு நேசத்தினிமித்தம் நட்டால் தேசம் சென்று வியாபாரம் நடத்தி சம்பாதித்த பணத்தில் கொஞ்சம் மாதம் மாதம் பிள்ளைகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். இவ்வாறு 15 வருஷ காலம் உடையார் வயிற்றையும் வாயையுங் கட்டி சம்பாதித்த 12 ஆயிர ரூபாயுடன் தமது ஜன்ம ஊர் வந்து சேர்ந்தார். படிப்பில் தேர்ந்த பிள்ளைகளுக்கு உத்தியோகந் தேடிக்கொடுத்தார். பெரிய பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்துவைத்தார். 4,000-ரூபாய்க்கு நிலபலங்களை வாங்கிவிட்டார். அந்தப் பிள்ளைகளை மகனே, மகளே என்று அன்புடன் அழைப்பார். அவர்களுமிவரை தகப்பனே என்று கூப்பிடுவார்கள். அந்த ஊரார் உடையாருடைய அரிய நேசத்தைக் கண்டு அதிசயித்தார்கள். ஆனால் அந்தப் பிள்ளைகளில் ஒருவன் கெருவ குணமுள்ளவனாய், துஷ்டருடன் சகவாசம் செய்து, போகக்கூடாத இடங்களுக்குப் போய் அதிகப்பிரசங்கியாய் நடந்தமையால் "மகனே, நீ இவ்விதம் செய்வது சரியல்ல" என்று அவனுக்குப் புத்தி சொல்லுவார் உடையார். இந்த துடுக்கன் துஷ்டருடைய பிரேரேபனையால் மதி மயங்கி ஒரு நாள் தன் உபகாரியான உடையாருடன் மரியாதையின்றி சமமாய் உட்கார்ந்து, பின்வருமாறு பேசத் தொடங்கினான். "உடையாரே! இனி நீர் எங்கள் வீட்டு வேலையில் தலையிடுவது சரியல்ல; எங்களுக்குப் பிராயம் வந்துவிட்டது; நாங்களே எங்கள் வேலையைப் பார்த்துக்கொள்வோம். எங்களுக்காக நீர் சம்பாதித்து வைத்த பணத்தை எங்கள் கைவசமாக்கி, உமது பேரிலுள்ள பத்திரம் தஸ்தாவேஜு, பட்டாச் சிட்டா முதலியவைகளை எங்கள் பேருக்கு ராஜினாமா கொடுத்துவிட்டு உமது வீட்டுக்குத் திரும்பிவிடும். இனி நாங்கள் பிழைக்கும் வழி எங்களுக்குத் தெரியும். உமது உதவி இனி எங்களுக்குத் தேவையில்லை" என்று சொன்ன இந்த நன்றிகெட்ட வார்த்தைகளைக் கேட்ட உடையார் திடுக்கிட்டு, மயிர் சிலிர்த்து, கைகால் நடுங்கி, பேச நா வராமல் மவுனமாயிருந்து, சற்று நேரத்துக்குப்பின் அவனைப் பார்த்து "மகனே, நீ பேசுவது இன்னதென்று அறிந்து பேசுகிறாயோ?" என்று வினவியபோது, "என்ன! ஓய், என்னை மகன் என்கிறாய்? நீதானா என்னைப் பெற்ற தகப்பன்? நீ உடையான், நான் நாயகர்; போதும் போதும், உன் உறவு; நீ வந்த வழியே போவோய்" என்றானாம் வாலன். இந்த அக்கிரமத்தைக் கண்ட மற்ற பிள்ளைகள் அங்கு கூட்டமாய்க்கூடி அத்துஷ்டனை கடிந்துகொண்டு "அடே சண்டாளப்பாவி! இந்த மகானுபாவன் நம்மைப் பெற்ற தகப்பனல்லவென்றாலும் இவர் மாத்திரம் நமக்குச் சகாயம் புரிந்துவாராவிடில் நமது கெதி எப்படியிருந்திருக்கும்? நமது உபகாரியுந் தந்தையுமான இப் பெருமானை பங்கப்படுத்த எப்படித் துணிந்தாய்?" என்று அவன் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினார்கள். தன் கூடப்பிறந்தவர்கள் தன்னோடு சேராததால், அவன் வெட்கி நாணி, உடையாருடைய விரோதிகளான சில வாயாடிகளை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களை உடையாருக்கு முன்நிறுத்தி அவரைத் திட்டி தூஷணிக்கத் தலைப்பட்டான். அப்போது உடையார் மகா துக்கத்துடன் அவனை நோக்கி "பசியால் சாக இருந்த உன்னை நான் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினதற்கு இதுதானோ கைம்மாறு? பகவானே இவ் வநீதத்தைக் கண்டு தீர்ப்பு செய்வாராக. என் பணத்தில் ஒரு சல்லியும் நிலத்தில் ஒரு செண்டும் உனக்குக் கொடேன். உன் சமர்த்தைப் பார்த்துக்கொள்" என்றார். உடையாருடைய உதாரகுணத்தை ஏற்கெனவே கண்டிருந்த அவ்வூரார் அங்கு சேர்ந்து துடுக்கனைப் பார்த்து, "மடையனே உன் பெற்றோருக்குப் பதிலாக, பசியால் சாகக்கிடந்த உன்னைப் போஷித்து வளர்த்த பேருபகாரியான இப் பெருமானுக்கு காட்டும் நன்றி இதுதானோ? மிருகத்துக்கிருக்கும் நன்றி முதலாய் உனக்கில்லையே," என்று அவனை இகழ்ந்து பேசத் தொடங்கினதைக் கண்ட துடுக்கனுடைய முகம் வாடி கறுத்து மவுனமாய் நின்றான். உடையாருடைய விரோதிகள் உண்மையை அறிந்தபின் பேச வாய்வராமல் சர்ப்பம்போல நழுவினார்கள்.

உடையாரோவெனில் 9 பிள்ளைகள் காட்டிய நன்றியாலும் பிரமாணிக்கத்தாலும் ஆறுதல் கொண்டு முன்னிலும் அவர்களை அன்புடன் நேசித்து, 'பிரிய பிள்ளைகளே,' என்று அழைக்கிறார். அவர்களும் அவரைத் 'தகப்பனே' என்று கூப்பிட்டு சங்கித்து, கனப்படுத்தி அவருக்கு கீழ்ப்படிந்து வருகிறார்கள். ஆனாலந்த துடுக்கன் தன் உபகாரியும் தந்தையுமானவருடைய காலில் விழுந்து "தந்தையே நான் தெரியாமல் செய்தேன், என் கெருவத்தாலும் துஷ்டருடைய பிரேரேபனையாலும் இப்பாதகத்தைப் புரிந்தேன், பொருத்தருளும் தந்தையே என் பாவத்தை. இனி இப்படிசெய்யேன். நீர் பொறுத்தல் அளிக்குமட்டும் உமது பாதத்தை விடேன்" என்று கூறினானோ, தெரியாது. ஆனால் அற்ப நன்றி அவனுக்கு இருக்குமாகில், அவசியம் அப்படிச் செய்வான் என்பது எனது பூரண நம்பிக்கை.

கண்டு பரிதவிப்போன்.

மேற்றிராணிமார் யார்?

கடந்த மாதத்து "நல்லாயன் பத்திரிகை"யில் 74-ம் பக்கத்தில் பெங்களூரில் 8 மேற்றிராணிமார் சங்கங்கூடி செய்த சில தீர்மானங்களை நண்பர்கள் வாசித்திருப்பார்கள்.

மேற்றிராணிமார் யார்? இவர்கள் அப்போஸ்தலர்களுடைய பதிலாளிகளான நமது ஞானமேய்ப்பர். இவர்கள் திருச்சபைத் தலைவராகிய அர்ச். பாப்பானவரால் அந்தந்த விசாரணைக்கு அனுப்பப்பட்டவர்கள். இவர்கள் சத்திய வேதத்தைப் போதித்து, விஸ்வாசத்துக்கும் நன்னடத்தைக்கும் விரோதமானவைகளைத் தடுத்து விலக்கி, அவசரமானால் இலௌகீக கூட்டுறவுக்கும் சர்க்காருக்கும் சம்பந்தமான விஷயங்களில் கிறீஸ்துவர்கள் சேராதிருக்கும்படி விலக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மட்டில் கிறிஸ்துவர்கள் காட்டவேண்டிய கடமை எது? இவர்கள் அப்போஸ்தலர்களுக்குப் பதிலாயிருப்பதால் அவர்களை ஒவ்வொரு கிறீஸ்துவனும் கனப்படுத்தி, சங்கித்துக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக்கிறான். அவர்களுடைய கட்டளையை மீறும் கிறிஸ்துவனுக்குண்டாகுந் தண்டனை என்ன? நமது திவ்விய கர்த்தருடைய திருவாக்குப்படி இப்பேர்ப்பட்டவன் திருச்சபையை விட்டு நீக்கப்படுவதே தண்டனை.

தண்டனைக்குரிய சம்பவம்.

காரியம் இப்படி இருக்க பெங்களூரில் 8 மேற்றிராணிமார்கூடி செய்த தீர்மானங்களை நமது கிறீஸ்துவர்களுக்குள் சிலர் திரஸ்கரித்து, அவைகளுக்கு விரோதமாக புறமதஸ்தரான ஹிந்துக்களால் பிரசுரிக்கப்படும் பத்திரிகைக்கு கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள். நமது சத்திய வேத படிப்பினையைக் கிஞ்சித்தென்கிலும் அறியாத ஷை பத்திராதிபர் தமது இஷ்டப்படி மேற்றிராணிமார்கள்மீது குற்றங் கூறி அவர்களுக்குப் பிரசங்கிக்கவும் தலைப்பட்டிருக்கிறார். இது என்ன கண்ணராவி! விரோதிகளால் அவமானப்படுத்தப்படும்படி தன் தகப்பனை அவர்களுக்குக் கையளிக்கும் பிள்ளைகள் எப்பேர்ப்பட்டவர்களாயிருக்கவேண்டும். ஓ! காலாகோலமே, விகற்பமான நடவடிக்கையே! என்று புலம்ப காலம் நேரிட்டிருக்கிறது. இப்படி நமது ஞான அதிகாரிகளை அதிக்கிரமித்து அவர்கள் செய்த தீர்மானங்களை எதிர்த்து விரோதிக்கும் கிறீஸ்துவர்களுடைய நடத்தை தண்டனைக் குரியதல்லோ? இவ்வாறு தன் மேற்றிராணியாருக்குக் கீழ்ப்படியாத கிறீஸ்துவன் திருச்சபையுடன் ஐக்கியப்பட்டிருக்கிறானென்று சொல்ல ஞாயமுண்டோ?

நம்மவர்களில் சிலர் பிற பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்களைப் பார்க்கும்படி விசாரித்துப்பார்த்தும் இதுவரையில் அவை என் கைக்கு எட்டவில்லை. ஆனால் "C. W." என்னும் பத்திரிகையில் வெளிப்பட்ட சில கடிதங்களைக்கொண்டு ஹிந்துக்களுடைய பத்திரிகைக்கு எழுதிய நமது கடிதக்காரருடைய முக்கிய ஆட்சேபனைகளை அறியலானேன். அவையாவன: (1) ஐரோப்பிய மேற்றிராணிமாரும் குருக்களும் அன்னிய ரென்றும், (2) அவர்கள் சுதேச குருக்களை அன்பாய் நடத்தாததுடன் தங்கள் போஜன பந்திக்கு அவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை யென்றும் (3) அவர்கள் சுதேச குருக்களுக்கு உயர்ந்த அலுவல் கொடுக்கிறதில்லை யென்றும் (4) ஆகையால் அன்னிய (ஐரோப்பிய மேற்றிராணிமாரும் குருக்களும்) ஹிந்துதேசத்தை விட்டுப் புறப்பட்டு போய்விட்டால் தாங்களே திருச்சபை காரியங்களை சமாளித்துக்கொள்வதாகவும் ஷை கடிதக்காரருடைய தாற்பரியமென்று தெரியவருகிறது.

(1) ஐரோப்பிய குருக்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தபடியால் அவர்கள் நமக்கு அன்னியரே ஆவர் என்பது சரி. ஆனால் அவர்களை நிந்தனையாய்ப்பேசி அவர்களுக்கும் நமக்கும் யாதொரு தொந்தார்த்தமில்லையென்பது கண்டனைக்குரியதே. அவர்கள் நமக்குப் புரிந்துவரும் அரிதும் மேலானதுமான வேலையால் அவர்கள் நமக்கு தந்தைகளாயிருக்கிறார்களென்பதே சரி. இந்த **அன்னியர்** ஆர்? சத்திய கடவுளை அறியாமல் அஞ்ஞான இருளிலிருந்த நம்மீது மனமிரங்கி, தங்கள் செல்வ பூமியையும் அன்பாய் நேசித்த பெற்றோர் பந்துக்கள் மித்திரர் முதலியவர்களையும் விட்டுவிட்டு ஆபத்துக்குரிய நெடும்பிரயாணம் செய்து நமது நாட்டில் கரைபிடித்து நமக்காக உழைத்து, வைசூரி, வாந்திபிராந்தி, பிளேக என்று பயப்படாமலும், உயர்குலத்தார் தாழ்குலத்தார் என்றும், பட்டணம், பட்டிக்காடு, நாடு, காடு என்றும் பாராமல் தங்கள் சிரேஷ்டரால் அனுப்பப்படும் இடங்களுக்குச் சென்று, அர்ச். சின்னப்பரைப்போல அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு மகிழ்ந்து, இந்த நாட்டைத் தங்கள் சுயநாடாகவும், தங்கள் பங்கு கிறீஸ்துவர்களைத் தங்கள் ஞானப்பிள்ளைகளாகவும், இந்நாட்டை தங்கள் கல்லறைஸ்தலமாகவும் எண்ணி உழைத்துவரும் தருமோபகாரிகள் இவர்கள். மேலும் தங்கள் பிதிரார்ஜிதத்தைபெற்றுக்கொண்டு, தங்கள் பந்துமித்திரர் முதலிய சுயநாட்டாரிடத்தில் தர்மம்பெற்று, கோவில், பள்ளிக்கூடம்

அனாதபிள்ளைகள் மடம், நோவாளிகள் சாலை முதலிய கட்டிடங்களை எழுப்புகிறார்கள். அனாதப்பிள்ளைகளை வளர்க்கிறார்கள். காலபேதத்தால் நொந்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவி புரிகிறார்கள். இப்படியே நமது ஆத்தும விஷயமாகவும் இலௌகீக விஷயமாகவும் உதவிபுரியும் புண்ணியவாளரை அன்னியரென்க எப்படி நா வரும்? சில வருஷங்களுக்குமுன் இந்தியாவில் வைசிராயாயிருந்த மார்க்குயிஸ் ரிப்பன் பிரபு இந்தியருக்கு அனுகூலமான சில சட்டங்களை ஏற்படுத்தினதினால் "எங்கள் அப்பனாகிய ரிப்பன்" என்று ஹிந்துக்கள் அவரைப்புகழ்ந்திருக்க, நமதாத்தும சரீரவிஷயமாக அரிதான உபகாரங்களைப்புரிந்த ஐரோப்பிய குருக்களை அந்நியரென்று நிந்திப்பது தர்மமோ சொல்லுங்கள்.

(2) ஐரோப்பிய குருக்கள் சுதேசக் குருக்களை நேசிப்பதில்லை யென்பதும், அவர்களைத் தங்கள் போஜன பந்தியில் சேர்ப்பதில்லை யென்பதும் பெரும் அபத்தம். நான் 32 வருஷக்காலமாக மதிராஸ் மிஷனில் உள்ள பல இடங்களிலிருந்து பங்குவிசாரணை செய்து வருகிறேன். இப்பேர்ப்பட்ட குறையைப் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. நான் ஐரோப்பிய குருக்களிடம் போகும்போதும் அவர்கள் என்னிடம் வரும்போதும், நானும் மற்றசுதேசக் குருக்களும் மதிராஸ் அதிமேற்றிராணியார் வீட்டுக்குப் போகும்போதும், அவர் எங்கள் விசாரணைக்கு வரும்போதும், நாங்களும்ஐரோப்பிய குருக்களும் கலந்துஉட்கார்ந்து புசிக்கிறோம். தத்தம் மேற்றிராசனத்தில் விசாரணைக்காகப் போயிருந்த மைலாப்பூர் மேற்றிராணியாரையும் புதுவை அதிமேற்றிராணியாரையும் நான் சந்திக்கும்படி நேரிட்டபோது, அவர்கள் ஐரோப்பியகுருக்கள் அவ்விடமிருந்தும், புசிக்கும்போது பந்தியில் என்னைத் தங்கள் வலது பக்கத்தில் உட்காரச்செய்தார்கள். கடந்த ஆகஸ்டுமாதம், மி. ச. மொரேல் ஆண்டவர் வேலூரில் பங்கு விசாரணைசெய்தபோது நான் அவரைச்சந்தித்து அவருடைய ஆசீர்வாதம் பெறும்படி போன சமயத்தில், அவ்விடத்தில் 6 ஐரோப்பிய குருக்களிருந்தும் பந்தியில் என்னைத் தமது வலதுபக்கத்தில் உட்காரச்செய்தார். மற்ற சுதேசக் குருக்களும்இப்பேர்ப்பட்ட சாட்சி கூறுவார்களென்பது திண்ணம். காரிய மிப்படியிருக்க, ஐரோப்பிய குருக்கள்பேரில் தூறுகூறுவது பாவமல்லோ?

(3) சுதேச குருக்களுக்கு உயர்ந்த அலுவல் கொடுக்கப்படுகிறதில்லை யென்பது சிலருடைய முறைப்பாடு. குருத்தொழிலாவது யாது? இது சர்க்கார் உத்தியோகமல்ல. சர்க்காரில் உயர்ந்த தாழ்ந்த உத்தியோகமுண்டு. உத்தியோகத்துக்குத் தகுந்த சம்பளமும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திருச்சபையில் அப்படியல்ல. குருக்கள் உத்தியோகஸ்தரல்ல. அவர்கள் தேவ ஊழியர். ஆகையால் அந்தந்த பங்குக்கு எந்த குருவானவர் தகுதி, அவருக்குத் திராணியும் சாமர்த்தியமும் உண்டாவென்று மேற்றிராணியார் தீர்க்க ஆலோசித்து அறிந்து, அவரை அந்தப் பங்குக்கு அனுப்புவார். இதைப்பற்றி முறையிடக் காரணமில்லை.

(4) ஐரோப்பிய குருக்கள் இந்து தேசத்தை விட்டுப் புறப்பட்டு போய்விட்டால் தாங்களே திருச்சபைக் காரியங்களைச் சமாளித்துக் கொள்வோமென்பது சிலருடைய தாற்பரியம். இது பைத்தியக்கார எண்ணமே. அதெப்படியெனில், முதலாவது நீங்களும் நானும் சொல்லி ஐரோப்பிய குருக்கள் இவ்விடம் வந்தார்களில்லை. அர்ச். பாப்பானவருடைய அனுமதியின்மேல் அவர்கள் வேதம் போதிக்க இவ்விடம் வந்தார்கள். உங்கள் விண்ணப்பத்தின்மேல் அர்ச். பாப்பானவர் ஐரோப்பிய குருக்களை இந்தியாவினின்று புறப்பட்டு வேறு தேசங்களுக்குப் போய் வேதம் போதிக்கும்படி கற்பித்தாரென்று வைத்துக்கொள்வோம். அத்தனை சுதேசக் குருக்களை எங்கிருந்து தருவிப்பீர்கள்? இத்தனை குருமாரை சவரட்சணை செய்ய உங்களால் மாளுமா? **அன்னியர்** கற்பித்த உயர்ந்த கல்விச் சாலைகளுக்கும், குரு மடங்களுக்கும், ஆயிரக் கணக்கான பாடைசாலைகளுக்கும், நோவாளிகள் சாலைகளுக்கும், கைத்தொழில் சாலைகளுக்கும், இன்னும் அனேக தர்ம சாலைகளுக்கும் பிடிக்கும் இலட்சக்கணக்கான திரவியத்தைக் கொடுக்க முன்னுக்கு வரும் ஆசாமி ஆர்? இது நம்மால் மாளாது. இது, ஆகாயத்தில் கோட்டை கட்டுகிறவனுடைய எண்ணமே அன்றி புத்திசாலியின் எண்ணமல்ல. நமக்கு தேச அபிமானமிருக்குமாகில் நாம் எல்லோரும் ஒன்றித்து, ஜாதியாலுண்டாகும் விகர்ப்பங்களைப் பரிகரித்து, எங்கும் உயர்ந்த கல்விச் சாலைகளை ஸ்தாபித்து, பெண் கல்வியை விருத்தி செய்து, நாகரீகத்துக்கு விருத்தமான வழக்கங்களைத் தொலைத்துவிட்டு, சுதேசக் குருக்களுடைய அபிவிர்த்திக்காக முயற்சித்து, ஐரோப்பிய தர்மத்துக்காக கெஞ்சி கை நீட்டாமல், இவ்வளவு

பெருத்த வேலைகளுக்கு வேண்டிய தனப்பொருளை நாமே சேகரித்தால், நாம் வாய்திறந்து கேளாமலே நாம் கோரியவை கைகூடும். அப்போது அந்த அன்னியர் நமது கருத்து அநுகூலப்படும்படி முயற்சிப்பார்கள். வெறுங்கை முழம் போடுமோ? என்பதுபோல அன்னியருடைய பிச்சைக்கு எதிர்பார்த்துக் கொண்டு, பிச்சை கொடுப்பவர்கள் மேலேதானே தூறும் குற்றமும் சாற்றுவதால் பயனில்லை.

பச்சையப்பன் ஹாலில் ஆடின கூத்து.

கடந்தமாதத்தில், சென்னை, பச்சையப்பன் ஹாலில் இந்திய கிறீஸ்துவர்களின் ஒருசங்கம் நடைபெறுவதாக விளம்பரஞ் செய்யப்பட்டது. குறித்த டை நாளில் அநேக கத்தோலிக்கர் அங்கு கூடினார்கள். இந்த சங்கத்தின் விஷயமாக வந்த கடிதங்களையும் தந்திகளையும் காரியதரிசி ஒவ்வொன்றாய் வாசித்தார். அவற்றில் ஒருகடிதத்தைப்படித்து அதை எழுதின கனவானுடைய பெயரை வெளியிட்டமாத்திரத்தில், கூட்டத்திலிருந்த கனவானுடைய குமாரன் எழுந்து காரியதரிசியைப் பார்த்து: என் தகப்பனார் இப்பேர்ப்பட்ட கடிதத்தை எழுதவில்லை யென்று எனக்கு நன்றாய்த்தெரியும். ஏன் என் தகப்பன் பெயரை வீணாய் இங்கே இழுக்கிறீர் என்றபோது காரியதரிசி அவர் காதில் என்னமோ ஓதி அவரை சாந்தப்படுத்தினார். தந்தி அனுப்பினவர்களின் பெயர்கள் வெளியானபோது, சிலர் தந்தி அனுப்பவில்லை யென்று கூறினார்கள். அந்தக் கடிதங்களிலும் தந்திகளிலும் எத்தனை பொய்யானவை யென்று பின்னுக்குத் தெரியும். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவர் அக்கிராசனாதிபதியைப் பார்த்து இந்த சங்கத்தை கூட்டினவர் ஆர் என்று வினவியதற்கு அவர் அதை அறிவிக்க மனமற்றிருக்கையில், அவரைச் சார்ந்தவர்கள் சந்தடி செய்து கூச்சல் போடவும் தொடங்கினதின்மேல், சில கிறீஸ்துவர்களும் அனேக புரோடெஸ்டாண்டரும் தவிர மற்ற கத்தோலிக்கரனைவரும் கூட்டமா யெழுந்து வெளிபுறப்பட்டார்கள். இப்படியே மேற்றிராணிமாருக்கு விரோதமாக கூடிய சங்கம் கூத்தாய் முடிந்தது.

அனுதாபம்.

திருச்சபைக்கு நேரிட்டிருக்கும் இச்சங்கட்டகாலத்தில் துக்கக் கவலைக்குள்ளா யிருக்கும் வணக்கத்துக்குரிய ஆண்டவர்களே! முற்காலத்தில் யூதர் நமது கர்த்தரை அஞ்ஞானியான பிலாத்துக்கு முன் நிறுத்தி அவருக்குத் தீர்ப்பு செய்யும்படி செய்ததுபோல, இக்காலத்திலும் விகாரப் புத்தியுள்ள சில கிறீஸ்துவர்கள் உங்கள் ஞான போதனைகளை சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்புச்சொல்லும்படி நமது சத்திய வேதத்தை அறியாத ஹிந்துக்களை கேட்டது பெரும் குற்றமென்று உலகங் கூறுகிறது. மேலும் தற்போது நடக்கும் கொடும்போரினிமித்தம் அநேக குருக்கள் மிஷனை விட்டு போரில் சேரக் கட்டாயப்படுத்தப்பட்டதாலும், உங்கள் சுயநாட்டிலுண்டாகும் கஷ்ட நஷ்டத்தாலும், உங்கள் பந்துக்களின் மரணத்தாலும், உங்கள் சுயதேசத்தாரின் இடையூறு இக்கட்டாலும் துடித்துப் பதைத்து உருகும் உங்க ளிருதயங்களை உங்களிடம் உபகாரம் பெற்றவர்கள் தங்கள் நன்றிகெட்ட அடாத நடத்தையாகிய கூரிய வாளால் குத்தி ஊடுருவினதைப் பார்க்கையில் எனக்கு மாத்திரமல்ல சகல விசுவாசிகளுக்கும் சொல்லி முடியாத துக்க வியாகுல முண்டாகிறது. முன் கூறப்பட்ட தின்மைகளா லுங்களுக்குண்டாகும் வியாகுலத்திலும் இரண்டகரா லுண்டாகும் வேதனை பெரிதே. அங்காங்கு நல்ல கிறீஸ்துவர்கள் சங்கங் கூடி உங்களை அவமானப்படுத்தினவர்களுடைய துர்நடத்தையைக் கண்டித்து துவேஷித்ததுபோல சகல கிறீஸ்துவர்களும் செய்து உங்களுக்கு ஆறுதல் வருவிப்பார்களென்பது நிஜம். நமது திவ்விய உபாத்தியாயருடைய போதனைப் பிரகாரம் ஞானத் தந்தைகளே! இவர்கள் மனந் திரும்பும்படி மன்றாடுங்கள். உங்கள் மன்றாட்டு சபலமாகாது. மந்தையினின்று தெறிபட்ட ஆடுகள் தங்கள் கனத்த தப்பிதத்தை அறிந்து அதற்கான பரிகாரம் புரிந்து உங்கள் பொறுத்தலைப் பெறுவார்க ளென்பது எமது பூரண நம்பிக்கை.

எச்சரிப்பு.

இதை வாசிக்கும் நண்பர்களே! நமது மேற்றிராணிமாருடைய அதிகாரத்துக்கு அடங்காமல் அவதூறான கடிதங்களை எழுதினவர்களாவது, அவர்களுடைய தூதர்களாவது உங்களிடம் வருவார்கள்; வந்து குருக்கள் மேலும் மேற்றிராணிமார் மேலும் பல குறைகளைக் கூறுவார்கள். நம்மவர்களை முன்னுக்கு வரவிடாமலும், அங்காங்கு விஸ்தாரமாயுள்ள ஹிந்து, புரோடெஸ்டாண்டு, தெயாசபிஸ்ட் முதலிய சபைகளில் சேர்ந்து பாரி உத்தியோகங்களை வகித்து 500, 800, 1,000 கணக்கான சம்பளம் பெறுதபடிக்கு மேற்றிராணிமாரும் குருக்களும் தடை செய்கிறார்களென்று சொல்லுவார்கள். இது கஜப்புளுகாகையால் இதை நம்பாதேயுங்கள். நமது கர்த்தர் எச்சரித்த ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு வரும் ஓனாய்கள் இவர்களே. நமது விஸ்வாசத்தைப் பங்கப்படுத்தி ஞான அதிகாரிகளுக்கும் விசுவாசிகளுக்கு முள்ள ஐக்கிய கீழ்ப்படிதலைக் குலைத்து நம்மைப் படுகுழியில் தள்ளப் பார்ப்பவர்கள் இவர்க ளாகையால், இவர்களுடைய பசப்புப் பேச்சால் ஏமாறும விருப்பீர்களாக.

ஒரு வேண்டுகோள்.

தற்போது நடக்கும் கொடிய போரால் அனேக குருப்பிரசாதிகள் போரில் சேர கட்டாயப்பட்டிருப்பதாலும், மிஷனுக்கு வரும் தர்மப் பணம் நின்றுபோனதாலும், இந்தக் குறைகளை சற்றென்கிலும் தீர்க்க நாம் முயலவேண்டும். தென் இந்தியாவில் பட்டணங்களிலும் கிராமங்களிலும் எழுப்பப்பட்டு அலங்கரிக்கப்பட்ட தேவாலயங்களும் கல்விச்சாலைகளும் இன்னுமற்ற தர்மச்சாலைகளும் ஐரோப்பாவிலிருந்து வந்த பணத்தால் கட்டப்பட்டதென்று அறிவோம். இக்கொடிய யுத்தத்தில் அவதிப்படும் நமது உபகாரிகளான ஐரோப்பியருக்குப் பண உதவி செய்ய நம்மால் சாத்தியப்படாது வாஸ்தவமே. நமது சகோதரர்களும் குமாரர்களும் தேவ ஊழியத்தில் சேரும்படி புத்தி புகட்டவேண்டும். அவர்கள் குருப்பட்டம் பெறுமட்டும் பிடிக்கும் செலவைக்கொடுக்கக்கூடியவர்கள் அதற்குப்பின் தாங்கக் கூடாது. இதற்காக நாமெல்லோரும் தேவ குருவைப்பார்த்து மன்றாடுவோமாக. 2-வது நமது மிஷன் செலவுக்காக மேற்றிராணிமார் மிகவும் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு கூடிய உதவி ஒவ்வொரு குடும்பமும் புரியவேண்டும். எவ்வளவு எழையான குடும்பமானாலும் ஒரு மாதத்துக்கு ஒரு அணா அதாவது 12 காசு மீத்துக் கொடுக்கக்கூடாதா? கூடும். மனமிருந்தால் வழிவரும். நல்ல ஸ்திதியிலுள்ள குடும்பம் மாதத்துக்கு 4, 8, அணா விகிதம் சேர்த்துக்கொடுத்தால் எவ்வளவோ பிரயோஜனமாகும். அந்தப் பணம் நமது கோவிலுக்கே அல்லது பள்ளிக்கூடத்துக்கே மறுபடியும் செலவுசெய்யப்படுமாகையால், ஒவ்வொரு குடும்பமும் இந்த வேலையில் முயற்சிக்கவேண்டும். இதற்காக ஊர்களிலும் கிராமங்களிலுமுள்ள தலைமையானவர்கள் குருவானவரின் உத்தரவுடன் கூட்டம்கூடி ஒவ்வொரு குடும்பமும் மாதத்துக்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்தால் அது தவறாமல் அனுகூலப்படும்.

ஓர் அறிக்கை.

யாருடைய அதிகாரத்தால், அல்லது என்ன அக்கால், அல்லது எனக்கு இருக்கும் எந்த உயர்ந்த பட்டத்தால் இதை எழுதினேனென்று சிலர் வினவலாம். எனக்கு யாதோர் உயர்ந்த பட்டமும், அக்குமில்லை; யாருடைய அதிகாரத்தாலும் இதை எழுதவில்லை. நான் குருக்களுக்குள் கடைசிப்படியிலிருக்கிறேன். என் மனச்சாட்சியால் தூண்டப்பட்டு இதை எழுதலானேன். “நன்றிமறவேல்” என்பதை நமது சிறுவத்தில் கற்றறிந்தோம். ஆகையால் சிறுவந் தொடங்கி நான் ஐரோப்பிய குருக்களால் விசேஷமாக மதுரை மிஷன் சேசு சபையாரிட மிருந்து அன்ன வஸ்திரமும் படிப்பும் இலவசமாகப் பெற்றுக் கொண்டேன். அனேகர் என்னைப்போல் உபகாரம்பெற்று தேவ ஊழியராயிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான வேறனேகர் இவ்வித உதவிபெற்று பெரிதும்சிறிதுமான உத்தியோகத்திலிருக்கிறார்கள். எனது பேருபகாரிகளான ஐரோப்பிய குருக்களுக்கு பிரசித்தமாய் கூறப்பட்ட நிந்தையைக் கண்டு துக்கித்து அப்புண்ணியவாளர் மேல் சாற்றப்பட்ட தூறும் நிந்தையும் அநியாயமானவை யென்று உலகுக்கு எடுத்துரைத்து, தங்கள் பொருளையும், பெயரையும் உயிரையும் நமக்குக் கையளித்து, தங்கள் பங்கில் சாவது பெரு மகிமையென்று எண்ணி உழைத்துவரும் அந்த மகாத்துமாக்களுக்கு அற்ப ஆறுதல் என்கிலும் வருத்தி, மற்ற கிறீஸ்துவ சகோதரர்களையும் இவ்விதஞ் செய்யத்தூண்டுங் கருத்துடன் என்மனப்பூரணமாக இதை எழுதினேனே ஒழிய மற்றப்படியல்ல.

20—4—17. Bellary. } **M. J. MICHAEL.** Cath. Indian Priest.

அர்ச். ஸிகோரியார்

அருளிச்செய்த வாக்கியங்கள்.

வியாதியால் முறைப்படாமல், தன் வருத்தத்தை வெளியிலே காட்டாமல் சிரவணத்தோடிருப்பாயாக.

தந்திரங்களில் தளராதபடிக்குத் தந்திரங்கள் வந்தவுடனே சேசுநாதரையுந் தேவமாதாவையுங் கூவி யழைப்பாயாக. தந்திரம் நீங்குகிற வரையில் சேசுமரியே யென்னும் வாக்கியம் உன்னைவிட்டு அகலாதிருக்கக்கடவது,

HOW TO RAISE OUR STATUS?
நாம் முன்னேறுவ தெப்படி?

எட்டாம் வியாசம்.

Co-operative Credit Societies.
ஐக்கிய நாணய சங்கங்கள்.

ஒரு நாள் ஒருவீட்டில் 10 பெண்கள் கூடினார்கள். ஸ்திரீகளுக்குள் ளிருக்கும் வழக்கப்படி ஒவ்வொருத்தியும் தன் தன் குடும்ப நிர்வாக காரியங்களைப்பற்றிப் பேசத்துடங்கினாள். ஒருத்தி "என் குழந்தைக்குப் பாலில்லாமல் சவலைபோகிறது, எனக்கென்று ஒரு கறவைப் பசுவிருந்தால் பால்கறந்து குழந்தையைப் போஷிக்கக் கூடும்" என்றாள். "மற்றொருத்தி என் கணவன் சுக ஈனத்தினால் அலுவலுக்குப் போகாமல் வீட்டிலிருக்கிறார். அவருக்கு மருந்து செலவுக்கும் பத்தியச் செலவுக்கும் குறைந்தது ரூ. 20 ஆவது வேண்டும். அவர் சுகமடைந்தாலல்லவோ என் குடும்பத்திற்குப் பாக்கியம்" என்று பெருமூச்சு விட்டாள். இன்னொருத்தி "பிள்ளைகளுக்கும் எனக்கும் நல்ல வஸ்திரமில்லை. அதில்லாத குறையால் நாலு ஜனங்களோடு புழங்க எங்களுக்கு நாணமாயிருக்கிற" தென்றாள். வேறொருத்தி "என் மூத்த குமாரனுக்குப் பள்ளிக்கூடத்தில் வகுப்பு மாற்றம் உண்டானபடியால் அநேக புதிய புஸ்தகங்கள் வேண்டுமாம். நான் என்ன செய்யட்டு" மென்று தலைமேல் கையைவைத்துக்கொண்டு சிந்தனையாயிருந்தாள். மற்றொருத்தி "எங்கள் கழனியில் வேலையாயிருந்த பண்ணையாள் முன்பணம் கொடுத்தாலன்றி விதை விதைக்க மாட்டேனெனப் போய்விட்டான், கையில் ஒரு காசுமில்லையே" யெனக் கலங்கினாள். இன்னொருத்தி "நான் மாதாந்திர செலவு வாங்கும் மண்டியில் கடன்வாங்கி மறுமாதம் கொடுத்து, இப்படியே ஒரு மாதம் வாங்கி மறுமாதம் தீர்ப்பதால், மண்டிக்காரன் சொல்லும் அநியாயவிலையில் ஒருகாசும் குறைக்க ஆகிறதில்லை. கொடுத்த பொருளைக் குறித்த விலைக்கே வாங்கவேண்டும். கைமேல் முதல் போட்டு வாங்குவதானால் நாலு கடை திரிந்து நல்ல பொருளை நயத்தில் வாங்க முடியுமே" யென்றாள். மற்றொருத்தி "ஒருவனிடத்தில் ஒரு ரூபாயுக்கு 1 அணா விகிதம் ரூ 20 கடன்வாங்கிப் பிரதி மாதமும் ரூ 1—4—0 வட்டி அழுது வருகிறேனே யொழிய முதலைத் தீர்த்தபாட்டைக் காணோமே" என்றாள். "மற்றொருத்தி என் பாட்டிக்கு கடந்த 2 மாதமாய்க் கடின வியாதி. இப்போதோ அப்போதோ என்றிருக்கிறது. திடீரென்று இழுத்துக்கொண்டால் என்ன செய்வதோ தெரியவில்லையே" யெனக் கையை முறித்துக்கொண்டாள். வேறொருத்தி "என் குமாரத்திக்குப் பேறுகாலம் நெருங்கி வருகிறது". என்று ஏக்கத்தோடுசொல்ல, பத்தாவது பெண்பிள்ளை "எதற்கும், அம்மா நமக்கென்று நாலு காசிருப்பதே நல்ல" தென, சம்பாஷணை நின்றது.

அவர்களுக்குள் முதிர்ந்த அநுபவ ஞானமுள்ள ஒரு விருத்தாப்பிய பெண்பிள்ளை மற்றைய ஒன்பது பேர்களையும் பார்த்துத் "தங்கைமார்களே நீங்கள் சொல்லிய யாவும் சரியே. நாம் ஒவ்வொரு வரும்மாதத்திற்கு இரண்டு ரூபாயாக 10-மீ வரைக்கும் போடலாம். பிரதிமாதம் சேரும் ரூ. 20-தை, நமக்குள் இன்னாருக்கென்று குறித்துக்கொண்டு அப்படியே ஒவ்வொரு மாதமும் கொடுத்துவந்தால், 10 மாதத்திற்குள், நமது 10 பேருக்கும் அவசியமான காரியம் கைகூடும்; இருக்கும் குறையும் ஒழியும்" என சகலரும் "சரி, அம்மா சரி, நன்றாய்ச் சொன்னாய்" என்று தங்கள் தலைகளை யாட்டிச் சம்மதத்தைத் தெரிவித்தார்கள். அப்படியே 10-மாதமும் நடந்தது இதுதான் நம்முள் நடந்துவரும் சீட்டுமுறை. சீட்டுமுடிந்த பிறகு அவர்கள் புதுசீட்டுத் துவக்கி சீட்டுத்தொகையை மாதம் மாதம் சீட்டுபிடிக்கும் முதலாளியம்மாள் வசமே விட்டுவிட்டு, தங்களுக்கவசியமானபோது அவளிடம் கடனைப் போல் வாங்கி அநுகூலமான கிஸ்தியாகத் தீர்த்து வந்தார்கள். சிலகாலம் பொறுத்துக் கடன் வாங்குபவர்களும் உண்டு. கடன்வாங்காதவர்களும் உண்டு என்பதைக் கவனித்து 10-மீ சீட்டு மொத்தத் தொகையாகிய ரூ 200க்குள் கடன் வாங்குகிற பேர்வழிகள் ரூபாய்க்கு இத்தனை காசென்று ஒரு சுலபமான வட்டியைக் குறித்துக் கொண்டு

அவ்வட்டியும் முதலும் செலுத்தவேண்டியதென்றும், வட்டித்தொகையை வருஷத்திற் கொருமுறை கணக்குப்பார்த்து 10 பேருக்குள் பங்கிட்டுக் கொள்வதென்றும் தீர்மானித்துக்கொண்டார்கள். காலம் போகப் போக ரூ 200 முதல்போதாதபடியால், தங்களோடு மேற்படி ஏற்பாட்டின்படி இன்னம் 10 பேரைச் சேர்த்துக் கொண்டார்கள். இப்படியாக சேர்ந்த ரூ. 400 முதலும் போதாதபடியால், இஷ்டமானவர்கள் ஒருகுறித்த தொகையை ஒரு குறித்த காலத்திற்கு, ஒரு குறித்த வட்டிக்காக பிக்சட் டிபாசிட்டாய் (Fixed Deposit) முதலாளியம்மாளிடம் கொடுக்கலாமென ஏற்பாடு செய்தார்கள். தங்களுக்குள் ஒருதொகையைப் பிரதிமாதமும் மீர்க்கக் கூடியவர்கள் அத்தொகையை 24மீ கிரமமாய்ச் செலுத்திவந்தால், 25வது மாதம் அப்படி சேர்ந்த தொகையையும் வட்டியையும் கொடுப்பதென தீர்மானித்தார்கள். அடிக்கடி பணம் கொடுப்பதும் வாங்குவதுமா யிருப்பவர்களுக்கு அநுகூலமாக (Current Deposit) கர்ரென்ற் டிபாசிட்டு ஏற்பாடு செய்தார்கள். தங்களுக்குள் செட்டுத்தனத்தை அபிவிருத்தி செய்யும்படி ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் வீடுகளில் ஒவ்வொரு உண்டியல்பெட்டியை வைத்துக்கொண்டு, அதில் பிரதிதினம் 3 காசோ, 6 காசோ, அணாவோ, கைக்குக் கிடைப்பதைப் போட்டு, முதலாளியம்மாளிடம் மாதத்திற்கொரு முறை வந்து ஒப்பிக்க, அந்த அம்மாள் 12 மாதங்கள் வரைக்கும் அத்தொகையைப் பிறருக்கு வட்டிக்குக்கொடுத்து, வட்டியும் முதலும் 13-வது மாதத்தில் உடையவர்களுக்குக் கொடுப்பது எனத் தீர்மானித்தார்கள். இப்படியே தங்கள் தங்கள் அவசரத்திற்கும், அநுகூலத்திற்கும் ஒத்தபடி சட்டங்கள் ஏற்படுத்திக்கொண்டு அனைவரும் சட்டங்களை அணுவளவும் பிசகாமல் அநுசரித்துவரவே அவர்களுடைய கடனும்பறந்து அவர்களுக்குள் செட்டுத்தனமும் பிறந்தது. வீண்செலவு சோர்ந்தது. தரித்திரம் தொலைந்தது. நல்லொழுக்கம் மிகுந்தது. பணம் சேர்ந்தது. அந்நியொன்னிய சகாயம் செய்யவேண்டுமென்னும் ஆசை வளர்ந்தது. இதுவே கொவாப்பரேட்டிவ் சொஸையட்டி யென்பது. இதுவே ஐக்கிய நாணய சங்கம் என்பது. இதுவே இந்தியாவில் பலபாகங்களில் ஏராளமாய் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

1.	ஆஜ்மீர், மெர்வாராவில் ...	360
2.	பரோடாவில்	307
3.	பஞ்சாபில்...	3,337
4.	ஐக்கிய மாகாணத்தில் ...	2,962
5.	பங்காளத்தில்	1,992
6.	மைசூரில்	725
7.	மத்திய மாகாணத்தில் ...	2,297
8.	குடகில்	33
9.	பிஹார் ஒரிஸாவில் ...	1,087
10.	மதராஸில்	1,600
11.	பர்மாவில்	1,489
12.	பம்பாயில்	836
13.	ஆஸாமில்	302

(தொடரும்.)

இந்திய கிறீஸ்துவன்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை சென்னை.

சென்னை ஜார்ஜ்டவுன் கிளைச் சங்கத்தாரின் பெரு முயற்சியால் நிறைவேறிய இப் பிரபல்யக்கூட்டம், சென்னை, பாபம்ஸ் பிராட்வே, அர்ச். சவேரியாரின் ஆலயத்தைச் சார்ந்த ஆங்கிலேய பாடசாலை மண்டபத்தில், 1917ஆ ஏப்ரல்மீ 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கூட்டப்பட்டது. ஷை ஆலயத்தின் விசாரணை குருவாகிய ஜேம்ஸ் மேயர் சுவாமியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

குறி பத்திரிகையில் குறித்திருந்த வண்ணமே சுவாமியா ரவர்கள் சரியாக 3-30-மணிக்கு எழுந்தருளினார். சென்னை அதிமேற்றிராசன அர்ச். சம்மனசுக்களின் இராக்கினி ஆலயத்து விசாரணை குருவாகிய சங்கைக்குரிய M. ஆன்ஸ்டன் சுவாமியாரவர்களும், "நல்ல ஆயன்"

பத்திரிகாசிரியராகிய, சங்கைக்குரிய A. R. ஜான் சுவாமியாரவர்களும் விஜயஞ் செய்தனர். வழக்கம்போல் ஆராதனையுடன் கூட்டம் ஆரம்பஞ் செய்யப்பட்டது.

சென்னை, பாபம்ஸ் பிராட்வே, அர்ச். அடைக்கல நாயகியின் ஆலயத்து விசாரணை குருவாகிய சங்கைக்குரிய பிரான்சிஸ் இரத்தினநாத சுவாமியா ரவர்கள் இக் கூட்டத்திற்கு வர சில அசந்தர்ப்பங்கள் நேரிட்டதாகவும், இச்சபையாரின் நன்னோக்கங்கள் யாவும் கைகூடி வரும்பொருட்டு மனப்பூர்வமாக விரும்புகிறதாகவும், நமது பிரதம காரியதரிசி யவர்களுக்குக் கடித மூலியமாகத் தெரியப்படுத்தினார். இக்கடிதம் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

சென்னை பார்க்டவுன் நிவாசியும் தமிழ்ப் பண்டிதருமாகிய கனம் ஆரணி சூசை அப்பாதுரை பிள்ளை யவர்கள் "ஒற்றுமை" யைப் பற்றி சிறந்த உதாரணங்களுடன் உபந்நியாசஞ் செய்தார். சென்னை வண்ணாரப்பேட்டை நிவாசியும், சென்னை இராஜாங்க அச்சியந்திரசாலையில் பரிசோதகருமாகிய (Examiner) கனம் S. சின்னத்தம்பி யவர்கள் "கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு எவ்விதமாகக் கல்விச் சகாயஞ் செய்யவேண்டும்" என்னும் விஷயத்தைப்பற்றி ஆங்கிலேய பாஷையில் வியாசம் வாசித்தார். சென்னையில் பூருவமாக விளங்கி வரும் "மஹா விகடதூதன்" பத்திரிகையின் அதிபரும் சொந்தக்காரருமாகிய கனம் பா. அ. அ. இராஜேந்திரம் பிள்ளையவர்கள் "நம்முடைய நிலைமை" யென்பதைப்பற்றிச் சால விரிவாக எடுத்துரைத்து மகா சாதுரியமான உவமானங்களையு மெடுத்துக் காட்டினார்.

இக் கூட்டத்தில் ஷை சங்கைக்குரிய ஜான் சுவாமியாரவர்களும், ஜார்ஜடவுன் நிவாசி, கனம். D. S. ஜான்சன் என்பவரும் ஜீவியகால அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். மேலும் ஜார்ஜ்டவுனைச் சேர்ந்தவர்களில் 43 பேரும் அப்படியே பார்க்டவுன் நிவாசிகளில் பதின்மூவரும் சாதாரண அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். நமது சபைத் தலைவ ரவர்கள் (Mr. M. R. Mahimadoss, *Dy. Presidency Post Master, G. P.O., Madras.*) சபையின் விருத்தாந்தங்களைப் பற்றி பின்வருமாறு கூறினர்.

சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் 2 முதல்வகுப்பு ஜீவியகால அங்கத்தவர்களும், 18 இரண்டாம்வகுப்பு ஜீவியகால அங்கத்தவர்களும், 221 சாதாரண அங்கத்தவர்களும் சேர்ந்து சேகரஞ்செய்த தொகை போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கில் ரூபாய் 525 என்றும், இன்று சேர்ந்தவர்களோடு தற்போது 3 முதல்வகுப்பு ஜீவியகால அங்கத்தவர்களும், 23 இரண்டாம் வகுப்பு ஜீவியகால அங்கத்தவர்களும், 413 சாதாரண அங்கத்தவர்களுமாக மொத்தம் 439 பெயர்களென்றும் சபையின் இருப்பாக சேவிங்ஸ்பாங்கில் சேர்க்கப்பட்டிருப்பது ரூபாய் 1,015 என்றும் அறிவித்தார். அன்றியும் ஜார்ஜடவுன் கிளைசங்கத்தைச் சார்ந்த அங்கத்தவர்கள் இக் கூட்டத்தை இவ்வளவு விமரிசையாய் நடத்தினதற்காக அவர்களுக்கு நன்றியறிந்த வந்தனமளித்தார்.

சபைத்தலைவ ரவர்களின் முடிவுரையின் பின்னர், நமது இராயப்பேட்டை கிளை சங்கத்தின் காரியதரிசியாகிய கனம் M. L. சந்தியாகு பிள்ளை யவர்கள், சென்ற மார்ச்சுமாதம் 24ந் திகதி பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கத்தோலிக்கு இந்தியர் சிலரால் கூட்டிய கூட்டத்துக்குத் தாமும் போயிருந்ததாகவும், அப்போது பெங்களூரில் மேற்றிராணிமார்கள் சங்கமாய்க் கூடி செய்த தீர்மானங்களிற் சிலவற்றை அச் சிலர் மறுத்துப் பேச, அன்னவரால் கூட்டிய அச்சிறு கூட்டத்தை கத்தோலிக்கருடைய மகாஜன சபை யென்று சொல்லத் தகாதென்றும், நம்முடைய ஞான அதிகாரிகளுடைய தீர்மானங்களை மறுப்பது கிறிஸ்துவர்களுக்குச் சரியல்லவென்றும், இக்கூட்டத்தைக் கூட்டினவர்கள் யாரென்றும், இதைக் கூட்ட இவர்களுக்கு அதிகாரங்கொடுத்தது யாரென்றும், தாமும் தம்முடனிருந்த இன்னுஞ் சிலரும் அவர்களை வினவினதாகவும், அதற்கு அக்கூட்டத்தை நடத்தியவர்கள் தகுந்த விடையளிக்க கூடாதவர்களா யிருந்ததால், அவரும் மற்ற அனேகரும் அக்கூட்டத்தைவிட்டு வெளியே போய்விட்டதாகவுங் கூறினார்.

அக்கூட்டத்திற்குக் காரிய தரிசியாகத் தம்மைத் தாமே நியமித்துக்கொண்ட ஒருவர் கூட்டத்தின் நோக்கம் அனுகூலமாகும்படி சிலர் கோரி அனுப்பி வைத்திருந்த தந்திகளையும் கடிதங்களையும் வாசித்தபோது, நமது கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபையின் தலைவராகிய கனம் M. R. மகிமைதாஸ் அவர்களிடமிருந்துவந்

தாய் ஓர் அனுதாபக் கடிதத்தையும வாசித்தார். அப்பொழுது அக்கூட்டத்திலிருந்த நமது சபைத்தலைவ ரவர்களின் குமாரர் பிரசங்கமேடை மீதேறி தன் தந்தையர் அவ்வாறு எழுதினதில்லையென்று தனக்கு நன்றாய்த் தெரியுமென்று சொல்லி, அக் கடிதத்தை தனக்குக் காண்பியுமென்று கேட்க, அப்பொழுது காரியதரிசி தவறுதலாய் அப்படி வாசித்தாரென்று ஒத்துக்கொண்டதாகவுந் தெரிவித்தார். ஆயினும் இவ்விஷயம் சிலருக்குத் தப் பபிப்பிராயத்தையுண்டுபண்ணக்கூடியதா யிருப்பதால் கனம் சபைத்தலைவரவர்கள் ஷை கூட்டத்தில் அவரைப் பற்றி செப்பியவை பொய்யென இக்கூட்டத்திலனைவருமறிய விளம்பல் நன்றென்று அவரைக் கேட்டுக் கொண்டார்.

கனம் சபைத்தலைவர் 300 பெயர்களுக்கு அதிகமாயிருந்த இக்கூட்டத்தை நோக்கி சொன்னதாவது: நாமதேயமுடன் வராத அக்கூட்டத்தினருக்கு தாம் கடித மெழுதினதே கிடையாதென்றும், அவர்கள் விஷயத்தில், அல்லது அவர்களுடைய அபிப்பிராயத்தில் கிஞ்சித்தும் தாம் அநுதாபப்பட்டவ ரல்ல வென்றும், அதற்கு மாறாக அவர்கள் செய்த காரியங்களில் வெறுப்புடையவரா யிருப்பதுமன்றி நமது ஞானாதிகாரிகளாகிய அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள் மட்டில் மகா ஜனசங்கமென்னும் வீண் பெயரா லழைத்துக்கொண்ட கூட்டத்தினருடைய நடத்தை நம் ஞானாதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதலற்றதாயும் சங்கை யீனமாயும் இருப்பதைக் கண்டு தாம் மிகவும் விசனப்படுகிறதாயும் விளம்பினார். இதனைக் கூட்டத்திலிருந்த கத்தோலிக்கு பிரஜைகள் செவியுற்று அவருடைய தீர்மானத்தைச் சந்தோஷத்துடன் ஆமோதித்து கரகோஷ்டஞ் செய்தனர்.

சபா நாயகரவர்கள் இச்சபையின் விருத்தாந்தங்களையும், சபையாருக்குள் விளங்கும் பிறர் சிநேகத்தையும் நன்கு பாராட்டி இச்சபை மென்மேலும் விருத்தி யடைந்து இவர்களுடைய நன்னோக்கங்கள் யாவும் சர்வேஸ்பரனுடைய ஆசியினால் பூர்த்தியாகும்படி தம்மனப் பூர்வமாக விரும்புகிறதாக நல்லுரை கூறினதுடன், நன்கொடையாக ரூபாய் 25-ம் கொடுத்தனர். ஆ! ஆ!! இதுவன்றோ வேதியருடைய நன்மாதிரிகையானப் பரோபகாரம்? மீண்டும் தம்மாலியன்ற வரையில் சகல உதவி புரிவதாகவும் நல்வாக்களித்துள்ளார்.

நமது பரிசுத்த பிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பருக்கும், நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் அண்ணல் அவர்களுக்கும் நீடிய ஆயுளுஞ் சகல சம்பத்தும் ஓங்கி வளர தெய்வ ஸ்துதியுடன் கூட்டம் முடிவுபெற்றது.

த. தாமஸ் பிள்ளை,
பிரதம காரியதரிசி.

["குருநாகலில் நடந்த பாஸ்குத் திருவிழா" என்னும் தலைப்பேயரிட்ட கடிதம் அடுத்தமாதம் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஜேர்மனியின் சேனை.—யுத்தந் தொடங்கின நாள் முதல் இது பரியந்தம் ஜெர்மனியர் நூறு லட்சம், அதாவது ஒரு கோடி சேனையை யுத்த முனைக்கு அனுப்பியிருக்கிறார்களாம். அப்படியானால் அவர்களின் தேசச் சனத்தொகை எத்தனை கோடியோ!

ஓர் புதிய புத்தகம்.—"குடும்ப பொக்கிஷம்" என்னும் இச்சிறு புத்தகம் மகா வந். அருள்மரி பார்த் ஆண்டவரால் இயற்றப்பெற்றது. இதில் கிறீஸ்தவர்களுடைய கடமை, அக்கடமைகளை கிறீஸ்துவர்கள் சுலபமாய் அனுசரிக்க வழி வகைகள், இவை முதலியவைகளைப்பற்றி விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மதுரை மிஷன் கிறீஸ்துவர்களுக்காக இது எழுதப்பட்டபோதிலும் ஒவ்வொரு கிறீஸ்து குடும்பத்திலும் அவசியமாயிருக்க வேண்டிய புத்தகம். இதன் விலை அணா 4. தபாற்செலவு பை. 6. வேண்டியவர்கள் திருச்சினாப்பள்ளி கன்றோன்மென்ற் அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீஸ் சூப்பெரின்டென்டுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

புரத்தாக்குடிபங்கில் ஞான ஒடுக்கம்—கும்பகோண மேற்றிராசனத்தைச சேர்ந்த ஷை பங்கில் சென்ற மார்ச்சுமீ 26-ம் தேதி

யிலிருந்து 30-ம௳ வரையிலும் ஒரு ஞான ஒடுக்கங் கொடுக்கப்பட்டது. ஒடுக்கஞ் செய்தவர்கள் 152 பேர். ஒடுக்கங் கொடுத்தவர் சேசுசபை குருவாகிய அருள்நாத சுவாமிகள். இவர் சொன்ன உருக்கமான தியானப் பிரசங்கங்களினாலும் போதகங்களினாலு முண்டான ஞான நன்மைகள் சொல்லுந்தரமல்ல. தங்களுக்குள்ளிருந்த வர்மம் வைராக்கியங்களைத் தீர்த்துக் கொண்டவர்களும், உத்தரிக்க வேண்டியிருந்த பொருளை உத்தரித்தவர்களும், இதுவரையிலும் உத்தரியந்தரிக்க கூச்சப்பட்டிருந்து இப்போது அதைத் தரித்துக் கொண்டவர்களும், சாங்கோபாங்கத்தை யடைந்திருந்தும் இன்னும் அதை அதிகமாய் அடைய முயலுகிறவர்களுமே இதற்கு அத்தாட்சி. இருதய ஆண்டவருக்கும் அவருடைய நேசத்தாயாருக்கும் தோத்திர முண்டாகக்கடவது.

குருவுக்குமிஞ்சின சீஷன்.—ஓர் உபாத்தியாயர் தன்னிடம் வாசித்துவரும் பிள்ளைகளைப் பார்த்து "நமது தலையிலுள்ள ஒவ்வொரு மயிரும் கணக்கிடப்பட்டிருக்கின்றது" என்றார். அதைப் பிள்ளைகளெல்லோரும் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருக்க, ஒருவன் மாத்திரம் அதிகப்பிரசங்கியானபடியால் எழுந்து உபாத்தியாயரை நெருங்கிச்சென்று தன் தலையிலிருந்து ஓர் மயிரைப் பிடுங்கி "ஐயா, இது எத்தனையாவது மயிர்?" என்று கேட்டான். அப்போது உபாத்தியாயர் அவனை இன்னும் தமக்கருகில் இழுத்து வைத்துக் கொண்டு "அதுதான் முதல்; இதோபார்! இதுதான் இரண்டு, இதுதான் மூன்று, இதுதான் நான்கு, இதுதான் ஐந்து, இதுதான் ஆறு" என்று தலையிலிருந்த மயிரையெல்லாம் வெடுக்கு வெடுக்கென்று பிடுங்கவே, பிள்ளையாண்டானுக்கு தலைநோவு எடுத்துக்கொண்டது. அப்போது பையன் "போதும் சார், போதும் சார்" என்னவே, மற்றப் பிள்ளைகளெல்லோரும் "அப்புறம் சார், அப்புறம் சார்" என்ற மாத்திரத்தில் உபாத்தியாயர் மறுபடியும் "இதுதான் ஏழு, இதுதான் எட்டு" என்று மயிரைத் திரும்பவும் வெடுக்கு வெடுக்கென்று பிடுங்கவும், பையன் "சார், சார் விட்டுவிடும்; இப்போது எனக்கு நன்றாய்த்தெரிகிறது, கற்றுகொண்டேன் சார்" என எல்லோரும் கொல் என்று சிரித்தார்களாம்.

ஓர் வைகுண்ட வைத்தியர்.—வைத்தியர் ஒருவர் சஞ்சீவி மாத்திரை என ஓர் வித குளிகைகளைச் செய்து அதன் குணத்தைச் சகலரும் அறிந்து கொள்வதற்காக மாத்திரமல்ல, தன்னைப்பற்றி பெருமையாய்ப் பேசிக்கொள்வதற்காகவும் காசு பணம் வாங்காமல் எதிர்ப்பட்டவர்களெல்லோருக்கும் இலவசமாய்க்கொடுத்து வந்தார். மாத்திரையின் குணம் யாதெனில் வயோதிகர்களை வாலிபர்களாக்குவதும், வாலிபர்களை வயோதிகர்களாகாதபடி செய்து அவர்களைச் சாகாதபடி தடுப்பதுமேயாம். ஆயினும் அம்மருந்து அவர் சொல்லியபடி தனக்குள்ள குணத்தைக் காட்டாமல் அதை அருந்துவோர் எல்லோரையும் சாகடித்துக்கொண்டே வந்தபடியால், அவருக்கு "வைகுண்ட மாத்திரை வைத்திய" ரென பெயருண்டாகிவிட்டது. அவரைக் காண்போரெல்லோரும் உயிருக்கு பயந்து ஓடி ஒளிவார்கள். ஒரு நாள் அவ்வைத்தியர் ஒரு வீதி வழியாய்ப் போகையில் பையன் ஒருவன் தமக்கெதிரில் வரக் கண்டார். கண்டதும் பையை அவிழ்த்து மாத்திரை ஒன்றை எடுப்பதைப்பார்த்த பையன் உடனே பிடித்தானும் ஓட்டம். ஓடுகிறவனைப் பின்தொடர்ந்து ஓடி வைத்தியர் "அப்பா நீ உலகத்தில் சுகதேகியாய்ச் சீவிக்க உனக்குக் கொடுத்துவைக்கவில்லை போலும்" என்று சொன்னதைக் கேட்ட பையன் "உலகத்தில் இன்னுஞ் சிலநாள் உயிரோடிருக்க வேண்டியே இவ்வோட்டம் ஓடுகிறேன்" என்றானாம். இவ்வைத்தியரைப்போன்றவர்கள் வியாதியஸ்தரைக் குணப்படுத்துகிறதற்குப் பதிலாய் அவர்களுக்கு வியாதி அதிகரிக்கும்படி செய்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு உயிர்ச்சேதமும் வருவிக்கிறார்கள்.

ஐரோப்பாவில் மிக்க உழைப்பாளி யார்?.—அது யாரென்றால் நம்முடைய பரிசுத்தபிதா 15-ம் ஆசீர்வாதப்பர்தான். காலையில் 5-மணி முதறகொண்டு மாலையில் சுமார் 11-மணி வரையிலும் இவர் வேலையாயிருக்கிறார். 5-மணிக்கு எழுந்த பிறகு 6-மணிவரையிலும் காலைச்செபம், தியான முதலிய ஞான அனுஷ்டானங்களை நிறைவேற்றிவிட்டு, சரியாய் 6-மணிக்குத் திவ்விய பூசைசெய்கிறார். பூசைக்குப்பிறகு 7-மணிவரையிலும் நன்றியறிந்த தோத்திரஞ் செய்தானபிறகு, குருக்கள் சொல்ல வேண்டிய மந்திர மாலையின் ஓர் பாகத்தைச் சொல்லுகிறார். பிறகு காலைச்சாப்பாடாக சொஞ்சம் காப்பியும் பிஸ்கோத்தும் சாப்பிட்டானவுடன் உலகில் நடக்கும் முக்கிய சங்கதிகளை யறிந்துக்கொள்ள, ஐரோப்பா, ஆஸ்டிரேலியா, அமெரிக்கா முதலிய சமாச்சாரப் பத்திரிகைகளில் தம்முடைய கர்தினால் செக்கரடரியால் குறிப்பிட்டிருக்கும் முக்கிய சமாச்சாரங்களை வாசிப்பார். 8-மணி அடித்தவுடன் தம்முடைய ஞான இராசாங்கத்துக்கடுத்த அலுவல்களை விசாரிக்கத் தொடங்குவார். அதாவது எழுத்துவேலை செய்வதிலும், மனுக்கள், பத்திரங்கள், நிருபங்கள் இவை முதலிய விஷயங்களில் மிக்க கவனஞ்செலுத்தி அவைகளுக்குத்தக்க உத்தரவும் பதிலுமளிப்பதிலும், தம்மை பிரத்தியேகமாயும் பகிரங்கமாயும் சந்திக்க வந்தவர்களுக்குப் பேட்டி கொடுப்பதிலும் வேலையா யிருப்பார். பிறகு மத்தியான சாப்பாடு (அது முக்கியமாய், மரக்கறி, முட்டை கொஞ்சம் இறைச்சி இவைபோன்ற பதார்த்தங்களா யிருக்கும்) சாப்பிட்டு விட்டு சற்று நேரம் இளைப்பாறுவார். இதற்குள்ளாக மணி மூன்றாகும். மறுபடியும் 3-மணியி லிருந்து 6-மணி வரையிலும் எழுத்து வேலை முதலியவைகளில் அலுவலா யிருந்து, பிறகு மந்திர மாலை முதலிய ஜெபங்களை முடித்துக்கொண்டு, சற்றுநேரம் வத்திக்கான் தோட்டத்தில் உலாவுவார். அல்லது வண்டிச்சவாரி செய்வார். பிறகு தம்மைக் காண வருகிற மேற்றிராணிமார், கர்தினால்மார் இப்பேர்ப்பட்டவர்களுக்கு பேட்டிக் கொடுப்பதுமுண்டு. மணி 9 ஆனவுடன் தம்முடைய சிறு கோவிலுக்குப் போய் ஜெபமாலை முதலிய மற்ற பக்திக் கிருத்தியங்களை முடித்துக்கொண்டு வந்து இராப்போசனம் சாப்பிடுவார். சாப்பிட்டான பிறகும் ஏறக்குறைய 11-மணி வரையில் மறுபடியும் எழுத்து வேலை செய்துவிட்டு நித்திரை செய்வார். இப்படி காலை 5-மணி முதல் மாலை 11-மணி வரையிலும் நமது பரிசுத்தத் தந்தையைப்போல் ஓய்வு ஒழிவின்றி உழைக்க யாராலாகும்!!

வெள்ளிஜூபிலி.—இலங்கை மகோனாவில் பிரான்ஸிஸ்கன் 3-ம் சபை சுதேச சந்நியாசிகளின் ஸ்தாபகம் ஒன்றுண்டு. இது அர்ச். பாப்பானவரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபகம். தற்போது இதில் 33 சகோதரர்க ளிருக்கிறார்கள். இவர்களுக்குள் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் 23 பெயர்; நித்திய வார்த்தைப்பாடு கொடுக்க இருப்பவர்கள் 8 பெயர்; நவசந்நியாசிகள் 2 பெயர். இம்மடமுண்டாகி தற்போது 25 வருடங்களானபடியால் சென்ற மார்ச்சுமாதம் 26-ம் தேதி இதன் வெள்ளிஜூபிலி மகோற்சவம் மிக்கச் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. இம்மடம் மென்மேலும் விர்த்தியடைய கர்ணயங் கடவுள் கிருபை புரிவாராக.

தங்கஜூபிலி.—சென்னைக் கருகிலிருக்கும் எண்ணூர் கத்திவாக்கத்தில் எழுந்தருளியிரா நின்ற அர்ச். சூசையப்பரின் தேவாலயத்து தங்க ஜூபிலி சென்ற௴ 29௳ கொண்டாடப்பட்டது. அன்றையத் தினமே அவ்வாலயத்தின் வருஷாந்திர திருநாளும் நடந்தேறினபடியால் இவ்விரு வைபவங்களும் மிக்க விமரிசையாயும் சிறப்பாயும் கொண்டாடப்பட்டன. இவ்வைபவங்களின் விருத்தாந்தம் அடுத்தமாத 'ஆயனில்' பிரசுரிக்கப்படும். வருஷா வருஷமும் இத் திருநாளின் கொண்டாட்டத்துக்கு முன்னின்று உழைத்துவந்தது போல இத்தங்க ஜூபிலியின் கொண்டாட்டத்துக்கும் உழைத்த மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமி பிள்ளையவர்களையும் அவருடைய குடும்பத்தையும், பந்து மித்திரர்களையும் இவ் வைபவக் கொண்டாட்டங்களுக்குப் பொருளுதவி செய்த பரோபகாரிகளையும் அர்ச். சூசையப்பர் தம்முடைய அடைக்கலத்தில் வைத்து ஆதரித்துக் காப்பாற்றுவாராக.

சின்னமலைத்திருநாள்.—சென்னைக் கருகிலிருக்கும் சைதாப்பேட்டையைச் சேர்ந்த இம்மலையில் எழுந்தருளி யிரா நின்ற ஆரோக்கியமாதா திருநாள் 1917 ௵ ஏப்பிரல் ௴ 26௳ கொடியேற்றத்துடன் துடங்கி 1917 ௵ மே ௴ 6௳

ஞாயிற்று கிழமை முடிவுபெறும். இந்நாட்களில் காலை 6, 7¼-மணிக்கு பூசைகளும், மாலை 6½-மணிக்கு ஜெபமாலை, பிரார்த்தனை திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும்நடந்தேறும். ஏப்பிரல் மீ 27, 28, 29 தேதிகளில் மாலையில் சங். பிராங்கோ சுவாமிகளால் இங்கிலீஷில் தியானப் பிரசங்கங்களும், மே மீ 2, 3, 4 தேதிகளில் சங். போன்சேக்கா சுவாமிகளால் தமிழிலும் செய்யப்படும்.

விளம்பரம்.—இதனால் சகல கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுக்கும், மற்றும் பக்தர்களுக்கும் ஆசீர்வாதம் கொடுத்து அறிவிப்ப தேதெனில் மைசூர் ராஜயத்தைச் சேர்ந்த டோர்ன்ஹள்ளி கிராமத்தின்கண் எழுந்தருளியிராநின்ற கோடி யற்புதராகும் அர்ச். அந்தோனியார் வருஷாந்திரத் திருவிழா நாளது மே மீ மூன்றும் செவ்வாய்க்கிழமையாகிய 15-ம் உ யன்று (15-5-1917) வெகு ஆடம்பர ஆரவாரத்துடன் கொண்டாடப்படுமாதலால் கத்தோலிக்கு கிறிஸ்துவர்களும், மற்றும் பக்தர்களும் இந்தத் திருவிழாவுக்குத் திருயாத்திரையாக வந்து புதுமை அந்தோனியாரின் அருட்பிரவாஹ ஆசீர்வாதம் பெற்றேகுவார்களாக.

இப்படிக்கு,
S. டிசில்வா,
விசாரணைக்குரு.

DOMESTIC OCCURRENCES.

குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

இரங்கூன்.

இதனாற் சகலருக்கும் பணிவாக தோத்திரஞ்செய்து தெரிவிப்ப தென்னவென்றால் இரங்கூன்மாநகரில் வசிப்பவரும், கவர்ண்மெண்ட் ஜெயில் பிரஸ் ஓவர்சீயருமாகிய கனம் அலெக்சாண்டர் மாய்க்கல் பிரான்சுவா அவர்கள் 1891-ம் வருடம் மே மாதம் 31-ம் திகதி ஸ்ரீமதி லூர்துமரியம்மாளை (Lourdes Magdalene) அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் விவாகஞ்செய்து அதுமுதற் சதிபதிகளிருவரும் அன்புடன் வாழ்ந்திருந்ததுமன்றி பரம பிதாவின் கருணையால் இரண்டு ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண்பிள்ளைகளையும் பயந்தார்கள். இவர்களிருந்த மேரையைக் கவனித்து சென்ற 1916-ம் வருடம் வெள்ளி ஜூபிலியும் நிறைவேறிற்று. ஆனால் லூர்துமரியம்மாள் கடந்த இரணடுமாதக் காலமாய் வாதவியாதியாற் பீடிக்கப்பட்டு அனேக இங்கிலீஷ் தமிழ் வயித்தியர்கள் மருந்துகொடுத்தும். இந்த அம்மாள் சௌக்கியப்படாமல் நிகழும் 1917-ம் வருடம் மார்ச்சு மீ 21-ம் திகதி மாலை 6½-மணிக்குத் தன தருமைப் பிள்ளைகளையுங் காதலனையும் மற்றுமுள்ள பந்தினர்களையுந் தியங்க விட்டு திருச்சபை ஆசாரத்தின்படி எல்லாக் காரியங்களையும் பெற்றுக்கொண்டபின், சேசுமரியே சூசைதுணை யென உச்சரித்துத் தன்னாத்துமத்தைக் கர்த்தருக்கு ஒப்படைத்துக் கண்வளர்ந்தனள். இவளுக்கு வயது 39. நிற்க, மறுநாள் 22-ம் உ குருவாரம் மாலை 5-மணிக்கு கிமிண்டயின் கத்தோலிக்குக் கல்லறையிற் சகல கிறிஸ்துவர்களும் புடைசூழச் சங்கைக்குரிய J. B. மூர்லான் குருதேசிகரவர்கள் திருச்சபை ஆசாரத்தின்படி இவளது சடலத்தை அடக்கஞ்செய்தார்கள். மரித்த இந்த அம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. வேண்டிக்கொள்ள மிகவும் பணிதலாகக் கேட்டுக்கொள்பவரும் நல்லாயன் பத்திரிகையின் சந்தாதாரர்களிலொருவருமாகிய,

இரங்கூன்
22—3—17.

தங்கள் விதேயன்,
C. M. Michael.

கோயமுத்தூர்.

நிகழும் 1917 வருஷம் எப்ரல் மாதம் 3-ந் தேதியன்று கோயமுத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ ஜோ. அந்தோனியவர்களின் மனைவியும் எனதருமை அன்னையுமாகிய 56 வயதுள்ள மடித்தீனம்மாள் கோயமுத்தூரில் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இதை வாசிக்கும் அருமையன்பர்கள் எனதன்னையின் ஆத்தும இளைப்பாறுதலுக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.
ஜோ. அ. சில்வெஸ்டர்.
இரங்கூன்.

தூத்துக்குடி

ஸ்ரீமதி: ஜெய அம்மாள் கோமஸ் அவர்களின்

மரண அறிக்கை.

ஆதியில் எந்தச் சக்கிரவர்த்தி தனது செங்கோலின் வல்லமையினாலும் பராக்கிரமத்தினாலும் அகன்ற இப்புண்ய நாவற்றீவைத் தனது பெயர்கொண்டு விளங்கச் செய்தானோ! அதே பரத சக்கிரவர்த்தியின் சந்ததியிற் றோன்றி, பாண்டி நாட்டின் கண்: துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் புரிந்து கீர்த்திபெற்ற மன்னவனாகிய சிஞ்ஞோர், சிஞ்ஞோர், தொன் மிக்கேல் பேதுரு தெ குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன் அவர்களின் புத்திர புத்திரனாகிய ஸ்ரீமான்: கயித்தான் கோமஸ் அவர்களுக்கு: அவர் பத்தினியாகிய ஸ்ரீமதி: மரிய மிக்கேல் அம்மாள் வாஸ் அவர்களிடமாய் சென்ற 1869ளு பெப்பிரவரிமீ 9உ ஜெனனமாகி, பூர்வ பட்சத்து சந்திரனைப்போல் வளர்ந்து, யௌவனத்தையடைந்து, ஸ்ரீமான்: மிக்கேல் முராயிஸ் அவர்களின் சிரேஷ்ட புத்திரனாகிய ஸ்ரீமான்: சின்னையா முராயிஸ் அவர்களை மணம் புரிந்து பரிந்து வாழ்ந்து பல புத்திரர், புத்திரிகளையும் பெற்று, நோயுற்று எவ்வித சிகிச்சைகளாலும் குணம் பெறுமல்; கடைசி தேவத்திரவியாநுமானங்கள் யாவும் குறைவறப்பெற்று நிகழும் 1917ளு எப்பிரல்மீ 5உ மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக மேகினர். மறுநாட் காலையில் சங்கைக்குரிய மார்ட்டின் சுவாமி, தியேதிரிக் சுவாமி, தன சுவாமி இவர்களால் அர்ச். சூசையப்பர் மையவாடியில் சடலம் நல்லடக்கம் பண்ணப்பட்டது. இதைக் கண்ணோக்கும் எமது சகோதர சகோதரிகளே! இவ்வாற்றும இளைப்பாற்றிக்காகப் பரனை மன்றாடப் பிரார்த்திக்கின்றேம்.

தூத்துக்குடி,
6—4—17.

இங்ஙனம்,
ஓர் அநுதாபி.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23வ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்ற தொகை	4,380	7	6
ஓர் நன்கொடை	1	0	0
Mr. L. T. தம்புசாமி, (பெங்களூர்)	5	0	0
,, ரெத்தின முதலியார், (இராயபுரம்)	1	0	0
,, J. அகுஸ்தின்	0	8	0
,, I. அந்தோனி	5	4	0
,, R. J. நிக்கோலாஸ், (கோலார் கோல்ட் பீல்ட்ஸ்)	5	0	0
ஆக மொத்தம்,	4,398	3	6

அர்ச். தோமையார் மடம்

சந்தோம் மைலாப்பூர்
இந்திய பெண்களுக்கோர் ஆங்கிலேய பாடசாலையும் போர்டிங் எனும் விடுதியும்.

திருமயிலை மேற்றிராணியாரின் பாதுகாவலில், இந்திய பெண்களுக்காக் 'போர்டிங்' பள்ளிக்கூடம் ஒன்று, அர்ச். மரியாயின் 'பிரான்சீஸ்கன்' மிஷனெரி கன்னியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சர்க்கார் கல்வியிலாக்கா சட்டதிட்டப் பிரகாரம் கல்வி கற்பிக்கப்படும். இரண்டாவது பாஷையாக தமிழ் பயில்விக்கப்படும்.

கலாசாலை ஜனவரிமீ 10-தேதி ஆரம்பமாகும்.

மேமீ 1-தேதி முதல் ஜூன்மீ 30-தேதி வரையில் விடுதலை நாட்கள்.

சுவாமி பிறந்த திருநாளுக்கு முன்னும் சில வாவு நாட்களுண்டு.

'போர்டிங்'—பள்ளிக்கூடக் கட்டணம், மற்றும் விஷயங்களைப்பற்றி அறிய விரும்புவோர் மயிலாப்பூர் சந்தோம் அர்ச். தோமையார் மடத்துப் பெரிய தாயாருக்கெழுதவும்.

குறிப்பு—புதிதாய்ச் சேர வரும் பெண்களை ஜூலைமீ 1-தேதிக்கனுப்புவது உசிதம்,

The Good Pastor

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11–16.)

புத்தகம் 15. } ஜூன் 1917. { இலக்கம் 6.

MONTH OF JUNE.
ஜூன் மாதம்.

சேசுவின் திரு இருதய வணக்கத்துக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற இம் மாதத்தைக் கிறீஸ்துவர்கள் வீணாய்க்கழிப்பது சரியல்ல. சேசுவின் திரு இருதய பக்திக்கேற்ற கிருத்தியங்களை அனுஷ்டித்து இம் மாதத்தைத் தங்களுக்கோர் இலாபகரமான மாதமாகச் செய்துகொள்வதன்றோ புத்தி? அன்றியும் அஞ்ஞானமும் அவிசுவாசமும் மலிந்து, தேவ நேசமும் பிறநேசமுங் குறைந்து, அக்கிரமங்களும் அட்டூழியங்களும் குவிந்துவரும் இக்காலத்தில் இப் பக்தியை மிக்கப் பற்றுதலாய்க் கையாடி வருவது கிறீஸ்துவர்களுக்கு அத்தியாவசியமாமே.

சேசுவின் திரு இருதய படத்தையானாலும் சுரூபத்தையானாலும் நாம் பார்க்கையில் அதில் நமதாண்டவர் தம்முடைய இருதயத்தைச் சுட்டிக்காட்டி ஏதோ நம்மிடத்தில் முறையிட்டுக்கொள்ளுகிறவாராகக் காணப்படுகிறாரல்லவா? ஆம், அவர் முறையிட்டுக்கொள்வதென்ன? சுமார் இருநூற்றிச் சில்லறை வருஷங்களுக்கு முந்தி பரலே மோனியல் (Paray-le-monial) என்னும் ஊரிலிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியான மர்கரீத் மரியம்மாளிடத்தில் அவர் முறையிட்டுக் கொண்டவைகளையே இப்போதும் நம்மிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிறார். அம்முறைப்பாடுகளென்ன? அவை யென்னவெனில்: "இதோ! பார், எப்படி என்னிருதயம் மனுமக்கள் மட்டிலுள்ள நேசத்தால் பற்றியெரிந்து தன்னைத்தானே தகனப்பலியாக்குகின்றதென்று!! ஆ! நான் அவர்களுக்காக எவ்வளவோ பாடுபட்டேன்; அவர்கள் மாத்திரம் என்னைச் சிநேகித்து, சிநேகத்துக்குச் சிநேகங் காட்டுவார்களானால் எனக்கு எவ்வளவோ ஆறுதலும் சந்தோஷமுமுண்டாகும். இன்னுமென்ன! எனக்கு அவர்கள் மட்டிலிருந்த அணைகடந்த அன்பைப்பற்றி தேவநற்கருணையை உண்டாக்கி என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் இரத்தத்தையும் என் இருதயத்தையும் என்னை முழுமையுமே அவர்களுக்குக் கையளித்தேன். ஐயோ! அவர்கள் இவைகளுக்கெல்லாம் எனக்குக் காட்டும் கைம்மாறென்ன? வரையறுத்துச் சொல்ல

முடியாத சிநேகம் பொருந்திய அந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் எனக்குக் கிடைக்கும் கைம்மாறெல்லாம் நிந்தையும் அவமானமுமே" என்னும் இப்பேர்ப்பட்ட முறைப்பாடுகளையே நமதாண்டவர் அப்பரிசுத்த கன்னியாஸ்திரியினிடத்தில் சொல்லிக்கொண்டார்.

இம்முறைப்பாடுகளை நமக்கு வற்புறுத்திக் காட்டவே நாம் பார்க்கும் திரு இருதய படங்களில், அல்லது சுரூபங்களில் அத்திரு இருதயம் அக்கினிப்பற்றி எரிவதாயும், அதன் மத்தியில் ஒரு சிலுவை யுள்ளதாயும், கூரிய முட்களுடைய முடியொன்று அதை ஊடுருவிப் பாய்வதாயு மிருக்கக் காண்கிறோம். அக்கினிச் சுவாலையானது நமதாண்டவருக்கு நம்மட்டிலுள்ள அணைகடந்த நேசத்தையும், சிலுவையானது நம்முடைய நேசமற்றத்தனத்தினாலும் நன்றிக்கேட்டினாலும் அவருக்குண்டாக்கும் சஞ்சலம், கஸ்தி துன்ப முதலியவைகளையும், முண்முடியானது நாம் அவருக்கு வருவிக்கும் நிந்தை அவமானங்களையும் எண்பிக்கும் அடையாளங்களாயும் அறிகுறிகளாயு மிருக்கின்றன. ஆகையால், இம்மாதத்தின் துவக்கத்திலதானே திரு இருதய ஆண்டவர் படத்துக்கு அல்லது சுரூபத்துக்கு முன்பாக பயபக்தியுடன் முழந்தாற்படியிட்டு அவருடைய திரு இருதயத்தைக் கவனமாய் உற்றுப் பார்த்து, அவரிடும் முறைப்பாடுகளின் விஷயத்தில் நம்முடைய நடத்தை எப்பேர்ப்பட்டதா யிருக்கின்றதென்று ஆராய்ந்து பார்க்கக்கடவோம்.

* * * *

நமதாண்டவர் அர்ச். மார்கரீத் மரியம்மாளிடத்தில் மனுமக்களைப்பற்றி முறையிட்டுக்கொண்டதின் பிறகு, அவர் அவளிடத்திற் கேட்டுக்கொண்டவைகள் எவையெனில்: "நீயாகிலும் எனக்கு ஆறுதல் வருவிப்பாயாக. மனிதர்களுடைய நன்றியற்ற தனத்துக்கு மாறாக நீ நன்றியறிதலுள்ளவளாய் நடந்து, எனக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணு. எனக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகப் பிரதி மாதத்தின் தலை வெள்ளியன்று திவ்யநற்கருணை உட்கொண்டு ஒப்புக்கொடு. தேவநற்கருணையின்பேரில் மனுமக்களுக்கு உயிருள்ள விசுவாசமும் உருக்கமுள்ள பக்தியும் பற்றுதலு முண்டாக வேண்டுமென்பதே என் இருதயத்துக்குள்ள மேலான அபிலாஷை. மேலும் திவ்யநற்கருணை திருவிழாவுக்குப் பின் வரும் ஒன்பதாம் நாளாகிய வெள்ளிக்கிழமையன்று என் இருதயத்தைக் குறித்து ஒரு திருநாள் கொண்டாடவேண்டியது. அந்த நாளில் தேவநற்கருணைக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக நிந்தைப்பரிகாரச் செபத்தைச் செபித்து, திவ்யநற்கருணையும் உட்கொள்ள வேண்டியது" என்று அப்புண்ணிய கன்னியாஸ்திரிக்கு திருவுளம்பற்றினது மல்லாமல் "இவ்வாறாய் என் இருதயத்துக்கு ஆறுதல் கொடுக்கிறவர்களும், இப்படிச் செய்ய மற்றவர்களை ஏவித் தூண்டுகிறவர்களும் என் இருதயத்துக்கு உகந்தவர்களாயிருப்பார்கள். நானும் அவர்களிடத்தில் தேவ சிநேகம் மென்மேலும் பெருகி அதிகரிக்கச் செய்து பல நன்மைகளால் அவர்களை நிரப்புவேன்" என்ற வாக்குத்தத்தங்களையும் செய்தார்.

அர்ச். மார்கரீத் மரியம்மாளிடத்தில் நமதாண்டவர் கேட்டுக்கொண்டவைகளை அனுஷ்டிப்பதே திரு இருதயப் பக்தியாகும். அப்பக்தியானது நமதாண்டவர் மனுமக்கள் மட்டில் வைத்த அணைகடந்த நேசத்துக்கிருப்பிடமான அவர் இருதயத்தை வாழ்த்தித் துதித்து புகழ்ந்தேற்றுவதிலேயும், அவருடைய மனுஷீக இருதயத்துக்குத் தேவாராதனையைச் செலுத்துவதிலேயும், அவருடைய, சிநேகத்துக்குப் பிரதி சிநேகங் காட்டுவதிலேயும், திவ்வியநற்கருணையில் அவருக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்கும் பரிகாரஞ் செய்ய, தக்கபயபக்தி விசுவாசத்துடன் திவ்யநற்கருணை சந்திப்பதிலேயும், உட்கொள்ளுவதிலேயும் திவ்வியநற்கருணையின் சந்நிதியில் பக்தி வணக்கமா யிருப்பதிலேயும் திவ்வியநற்கருணைத் திருநாளையும் திரு இருதயத் திருநாளையும், சிறப்பாயும், பக்தியாயும் கொண்டாடுவதிலேயும் இன்னுமற்ற இப்பேர்ப்பட்ட பக்திக் கிருத்தியங்களை யனுஷ்டிப்பதிலேயும் அடங்கியுள்ளது. ஆனபடியால் இம் மாதத்தில் மேற்சொன்ன பக்தி கிருத்தியங்களை அனுஷ்டித்து நமதாண்டவரின் இருதயத்துக்குச் சந்தோஷத்தையும் ஆறுதலையும் வருவித்து, அவர் அன்பாய் நமக்களிக்கும் அருட்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வோமாக.

MODESTY.
அடக்கம்.

"அடக்கம் அமரருள்வைக்கும்." என்றபடி அடக்கம் என்னும் மேலான குணம் ஆடவர் பெண்டிர் யாவர்க்கும் அவசியமானதென எவ்விடத்திலும் எக்காலத்திலும் யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயமாம். அடக்கத்துக்கு விரோதமான செய்கைகள் அனைத்தும் பாவத்துக் கடுத்தவைகளே. அவற்றைப்புரிவோர் ஆண்பிள்ளைகளாயினும் சரி, பெண்பிள்ளைகளாயினும் சரி, அவை நல்லக்கிறீஸ்துவர்களிடம் பேசவுங்கூடாத பயங்கரமான பாவங்களின் பாற்படும். பெரும்பாவங்களைப் பற்றியேனும் அல்லது தீமைக்காதாரமாகிய சிறு குற்றங்களைப்பற்றியேனும் நாம் இங்கு சிந்திக்கப்போவதில்லை; ஏனெனில் இவை நல்நடத்தைக்கு மாறானவை யென்றும் ஆத்துமத்துக்கு அபாயத்தை விளைவிப்பனவென்றும் அறிந்து கிறீஸ்தவர்கள் இவற்றை விலக்கியே நடப்பார்கள். அடக்கமில்லாதவர்களிடம் நீ பேசிக்கொண்டிருப்பதாக உனக்குச் சந்தேகமுண்டானால், உடனே அவர்களைவிட்டு நீங்கு. அங்கே தங்கியிருந்து சோதனையை வெல்லலாமென்றும், அப்படி யிருப்பதாற் கிடைக்கு மின்பத்தை யநுபவித்து அபாயத்துக்குள்ளாகாமல் வந்துவிடலாமென்றும் நினையாதே. அத்தகைய யோசனை தவறுதலானது; அத்தகைய நம்பிக்கை மோசத்துக்கிடமானது. இந்த யோசனையும் நம்பிக்கையும், நீ இருக்கக்கூடாத இடத்தில் உன்னை யிருத்தும்பொருட்டு நரகப்பசாசு உனக்கனுப்புஞ் சோதனைகளாம். ஆதலால் அடக்கமில்லாதவர்கள் கூடியுள்ள இடத்தை விட்டு உடனே நீங்கு. அதுவே தப்பும் மார்க்கம், நீ இருக்கத்தகாத இடத்தில் இருக்கிறாய். எவ்வளவு சீக்கிரத்தில் அவ்விடத்தை விட்டோடக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஓடவேண்டும். அங்கே அதிகப் பேச்சும் ஆகாது.

உதாரணமாக நமது நாட்டுப்பெண்கள் இக்காலத்தில் நடைபெறும் நவீன நாடகங்களுக்குப் போதலொண்ணாது. அங்கே அடக்கத்துக்கு விரோதமான செய்கைகள் எத்தனையே நடித்துக் காட்டப்படுகின்றன. அவைகளை நல்ல கிறீஸ்துவர்கள் பார்ப்பதுங் கேட்பதும் பாவத்துக்கிடமாகும். ஆங்காங்கு அத்திப்பூத்ததுபோல் ஏதோ சில சமயங்களில் அர்ச்சியசிஷ்டவர்களின் திவ்விய சரிதைகளை நாடகரூபமாய் வரைந்து நடிப்பதை நம்மவர் பார்க்கலாகாது என்று சொல்லக்கூடுமா? அவற்றைப் பார்ப்பதால் நன்மையுண்டாகு மென்றறிந்தே நமது குருக்கள் முதலாய் அவற்றிற் குதவிசெய்து வருகின்றனர்.

திருநாட்கள் காலங்களில் கிறீஸ்துவர்கள் வெகு சாக்கிரதையாயிருத்தல் வேண்டும். அக்காலத்தில் பல வூர்களிலிருந்து அநேகர் வந்து கூடும்போது அடக்கத்துக்கு மாறான காரியங்கள் அநேகம் நடைபெறும். ஆதலால் அடக்கமே ஆபரணமென்று நினைக்கும் நமது மாதர் அத்தகைய இடங்களுக்கு நல்ல கருத்துடன் முதலாய்ப்போய்த் தமதாத்துமங்களுக் கபாயத்தை வருவித்துக்கொள்ளலாகாது. அப்படியே பீப்பிள்ஸ்பார்க், மியூசியம் முதலிய காட்சி ஸ்தலங்களுக்கும் சிங்காரத் தோட்டங்களுக்கும் போவது நன்மையானபோதிலும், ஜனங்கள் கூட்டமாய் அவ்விடங்களைப்போய்ச் சந்திக்கும் விசேஷ தினங்களில் அவ்விடங்களுக்குப் போகாதிருத்தல்வேண்டும். அக்காலங்களில் அடக்க வொடுக்கமின்றி யநேகர் ஒழுகுவர்; அவர்களை முன்னிட்டே நல்ல கிறீஸ்துவர்கள் அங்கே போகாமலிருப்பார்கள். கெட்டவர்கள் கூட்டத்திற் கலந்துள்ள நல்லவர்களும் கெட்டவர்களென்றே மதிக்கப்படுவார்கள். பனைமரத்தடியினின்று பாலுண்டாலும் கள்ளென்றே உலகஞ்சொல்லும்! அங்கேபோய் வேடிக்கை பார்க்கவேண்டுமென்கிற ஆவல் யாவர்க்கு மிருக்குமென்பது திண்ணம். அந்த ஆவலை யடக்குவதென்றால் முடியாத காரியம்போல் தோன்றும். ஆனால் நமதாண்டவரை முன்னிட்டு அவ்விடங்களுக்குப் போகாமல், அமலோற்பவ நாயகியானவள் தம் சம்மனசுக்கள் முதலிய வானோரின் கூட்டத்தில் இருப்பதாய் நினைத்து வீட்டிலேயே தங்கு

வது எவ்வளவோ புண்ணியம்! வேடிக்கை விநோத காலங்களில் அடக்க வொடுக்கமின்றி நடிக்கும் மாந்தரின் சகவாசத்தைவிட வானலோக வாசிகளின் சகவாசம் மேலானதல்லவா? உன்னுடைய நண்பரையும் சந்தோஷங்களையும் தெரிந்துகொள்வதில் சாக்கிரதையாயிருந்தால் நீ எப்போதும் அடக்க வொடுக்கத்துடன் நடந்துகொள்வாய் என்பதிற் சந்தேகமில்லை.

ஆடவரும் முக்கியமாய்ப் பெண்டிரும் மற்றவர்கள் தம்மை மெச்சிப் புகழவேண்டும் என்றுசிப்பது இயல்பாம். ஆனால் மற்றவர்கள் மெச்சவும் புகழவும் தகுந்தயோக்கியத்தை யுடையவர்களாயிருக்கப் பிரயாசைப்படவேண்டும். புகழ்ச்சி பெருமையை விரும்பி, தம்முள்ளத்திலுள்ளவற்றைக் கவனியாமல் சகல இரகசியங்களையும் வெளிப்படையாயறியும் மகத்துவந்தங்கிய சர்வேசுரனுடைய மெச்சுதலுக்குப் பாத்திரவான்களாயிருக்க முயலாதார் வெளிக்குமட்டும் நல்லவர்களாய்த் தோன்றுவர்; ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டுள்ள ஓநாய்கள் இவர்களே யாவர்! இல்லாததை யுள்ளதுபோல் காட்டி நடித்தல் அடக்கமாகாது. அடக்கம் எப்போதும் உண்மைக்குத்தாரமுடையது. ஒழுக்கத்திலும் பார்வையிலும் சிறு செய்கைகளினும் குரலிலும் வார்த்தையிலும் அடக்கம் இருத்தல்வேண்டும்.

அடக்க வொடுக்கமுள்ள ஒரு பெண்பிள்ளையினிடம் பெருமை சிலாக்கியம் இராது; அவள் கரங்களை வீசிக்கொண்டும் தலையை யாட்டிக்கொண்டும் பேசவும் நடக்கவுமாட்டாள்; கண்ணுக்குப் பகட்டான விலையுயர்ந்த வஸ்திராபரணங்களை யணியவுமாட்டாள்; புதுமாதிரியான வஸ்திராபரணங்களைத் தானே முதலிலணிந்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டியிருந்ததாகக் கர்வங்கொள்ளவு மாட்டாள். அவள் மற்றவர்கள் கவனத்தைத் தன்பால் திருப்பும் வண்ணம் சத்தமாகப்பேசாள். அல்லது ஒய்யாரப் பாடல்களைப் பாடாள். பெரியோர் பேசுகையில் தடுத்துப்பேசாள்; ஏழைகளை யிழிவாய் நடத்தாள்; அறியாதவர்களை நிந்தியாள்; பிள்ளைகளை யதட்டியு மடித்துங் குரூரமாய் நடத்தாள்; தனக் கடியிலுள்ளவர்களை யிகழ்ந்து பேசாள்; தனக்கு மேலாயுள்ளவர்களை யவமதியாள்.

அடக்கமுள்ளவள் தான் செய்யுங் காரியங்களை மற்றவர் கவனியாவண்ணம் செய்வாள். அதிவேகமாய் அல்லது அதிக மெதுவாயின்றி தன்னியல்பாய் நேரத்துக்கும் சந்தர்ப்பத்துக்குந் தகுந்தவாறு நடந்துசெல்வாள். அப்படியே அவள் மற்றவர்களுடன் பேசும்போதும்.

இத்தகைய வொழுக்கம் கிறீஸ்துவ குடும்பங்களிற் பிறந்த ஆண் பெண் இருபாலர்க்குமுரியதாம். மேற்குலத் துதித்தவர்களுக்கு மட்டும் இவ்வொழுக்கம் வேண்டியது, மற்றவர்களுக் கநாவசியம் என்று நினைக்கலாகாது. நல்லொழுக்கம் சிறந்தது; ஒரு கிறீஸ்துவனுடைய அடக்க வொழுக்கமே யாவற்றினும் மிகச்சிறந்ததாம். கிறீஸ்துவர் ஒவ்வொருவரிடத்திலும் இவ்வொழுக்கம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஏனெனில், அர்ச். சின்னப்பர் "உன்னுடைய அடக்கம் எல்லாமனிதர்களுக்கும் தெரியட்டும்" என்கிறார். சுவிசேஷத்திற் சொல்லப்பட்டுள்ளது மிதுவாம்: "ஆதலால் நீங்கள் பரிசுத்தமும் பிரியமுமாய்ச் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்பதற் கடையாளமாய், அடக்கத்தை யுங்கள்மேல் தரித்துக்கொள்ளுங்கள்." மேலும் "தேவபயம், செல்வம், மகிமை, சீவியம் இவைகள்தாம் அடக்கத்தின் முடிவு" என்று பழமொழிகள் முறையிடுகின்றன.

அடக்கமுள்ளவர்கள் அதிகப் பேச்சுக்காரரல்லவென்று மேற்கூறியவற்றால் அறியலாம். அவர்கள் சாதாரணமாய் தம்மடக்கமுள்ள ஆன்மாவுக்குரியதென மௌனத்தை விரும்புவார்கள். மற்றவர் சொல்வதைக் கேட்பதிற் சுறுசுறுப்பாயிருந்து பேசுவதில் யோசனை செய்வதே அடக்கத்தின் அடையாளம். "யாகாவாராயினும் நாகாக்கக் காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு." என்றதும் இதனாலேயன்றோ.

உன் அபிப்பிராயமே சரியானதென்று பிடிவாதஞ் செய்யாதே; ஏனெனில் எல்லா மறிந்த ஞானிகளும் இது விஷயத்தில் மோசம்போயிருக்கிறார்கள். உன்னுடைய சொந்த கொள்கையில் நம்பிக்கை வையாதிருப்பதே அடக்கம், ஏனெனில் மற்றவர்கள் உன்னை விட விசேஷவிதமாய் ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டறிந்திருப்பார்கள். தப்பிதஞ் செய்தபோது முணமுணப்பின்றி அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்வது அடக்கமாம். அநேக விஷயங்களில் உன்னிலும் அறியாமை மிகுந்தவர்களிடத்திலும் சில காரியங்களைக் கற்றுக்கொள்ள பின்வாங்கா திருத்தலும் அடக்கமென்றே சொல்லப்படும்.

ஆனால் நீ பேசக் கடமைப்பட்டபோது மௌனஞ் சாதித்தலும், நீ போய் கலந்து தடுக்கக்கூடிய தவறுதலான காரியத்தைச் செய்யும்படி விடுதலும் அடக்கமாகாது. உன் முன்னிலையில் நியாயத்துக்கு விரோதமான பேச்சு நடக்கும்போது, நீ தைரியமா யெழுந்து அதைத் தவறுதலென்றெடுத்துக் காட்டி யடக்கவேண்டும். பெண்கள் அடக்கமின்றி நடந்து ஆடவருக்குச் சோதனை யுண்டுபண்ணலாகாது. விளையாட்டுப் பேச்சு வினையாய் முடிந்ததென்னும் பழமொழி யறியாதார் எவரே?

அடக்கம் முக்கியமாய் நம் நாட்டுப்பெண்களுக்கோ ராபரணமென்பர். அப்படியிருக்க அவ்வாபரணத்தைக் களைந்தெறிவதைப்போல், சில மாதர் அடக்கமின்றி யாடவரிடம்பேசியுஞ் சிரித்தும் விளையாடியும் தம்மைத்தாமே பலவித மோசங்களுக் குள்ளாக்கிக்கொள்வது எவ்வளவோ நிர்ப்பாக்கியத்துக்குரிய காரியம்! இத்தகைய மாதொருவள் மனிதருக்குக் கொடுக்குஞ் சோதனையும், காட்டுந் துர்மாதிரியும், தன் தோழியருக்கு அவள் விளைக்குந் தீமையும் இவ்வளவவ்வளவென்று சொல்லிமுடியாது. இத்தியாதி குணங்கள் படைத்தவளை அடக்கமுள்ள பெண்கள் எப்பவும் தம்முடன் சேர்க்கலாகாது.

சில வேளை யவளை அநேகர் புகழ்ந்து பேசியவள் சகவாசத்தை நாடலாம்: அவள் காட்டும் மாயா விநோதத்தால் மயங்கி, யவள் வயப்பட்டு, அவளைப்போல் நடிக்க முயலலாம். ஆனால் நல்ல கிறீஸ்துவ குலத்திற் பிறந்து, திருச்சபையின் மடியில் வளர்ந்தவர்கள் ஒருபோதும் அவள் நடத்தையை மெச்சிப் பேசார்; அதற்கு மாறாய் அவளை வெறுத் தொதுக்கவேண்டிய தவர்கடமை. அவளிடம் மேற்கூறிய அடக்கமான மனதுமில்லை, அடக்கமான ஒழுக்கமுமில்லை. அடக்கமில்லா நாரியென்னும் பேர்பூண்ட ஒரு பெண்ணின் சகவாசத்தை விட மேலான தொன்றுமில்லையா? இதற்குப் பதிலாய், தேவ சிநேகம், நல்லோரிணக்கம், ஞானிகளினுசீர், தேவ கட்டளைக் கமைந்து நடக்கிறோமென்னு முணர்ச்சி, தேவனைச் சிநேகிக்கக் கற்றுக்கொள்வதா லுண்டாகும் மனக் கிளர்ச்சி, விசுவாசம், இவற்றையும் இவைபோன்ற மற்றவைகளையும் நாமறிந்து தேடவேண்டிய திவ்வுலகத்தில். இப்படியிருக்க அடக்க மில்லாதவர்களின் சிநேகம் நமக்கென்னத்திற்கு?

தேவ கிருபையால் நீ ஓர் உயர்ந்த உத்தியோகம் பெற்றுப் பலரையாளும் பதவியிலிருந்தால், உன் அடக்கத்தால் உன் சிப்பந்திகளுக்கு நன்மாதிரியாய் இருப்பதுடன், அவர்களும் அடக்கத்தை யநுசரிக்கும்படிப் பார்ப்பது உன் கடமையாம். கண்டிப்புள்ளவன் என்று உலகம் பேசும் என்றஞ்சாதே. கண்டிப்பா யிருப்பதும் நல்லதுதான்; உலகத்தவரும் இவ்வபிப்பிராயம் கொண்டவர்களே. மேலும் கண்டிப்பில்லாவிட்டால், இவ்வுலகில் எதுவும் நடவாது. பெற்றோர் பிள்ளைகளிடம் இவ்வடக்கத்தை வளர்க்கவேண்டியது. இங்கேயும் கண்டிப் பவசியமென்று நான் சொல்லவேண்டியதில்லை. பிள்ளைகள் முன்னால் அடக்கத்துக்கு விரோதமானதொன்றும் பேசவுஞ் செய்யவுங் கூடாது. வியாதிக்காரர் முன்னிலையிலும் இப்படியே நடக்கவேண்டும். இறந்துபோனவர்களைப்பற்றிப் பேசும்போது, அடக்கமாய்ப் பேசு. உலக முடிந்தபின் உயிர்த்து உன்னத மோட்சத்துக்குப் போக கல்லறைகளிலடக்கம் பண்ணப்பட்டிருக்கும் சரீரங்கள் மட்டில் நாம் மரியாதையாய் நடந்துகொள்ளவேண்டும். கடைசியில், அடக்கம் நமக் கெவ்வளவு அவசிய மென்பதை யுணர்ந்து, பேசும்போதும், சிரிக்கும்பொதும், உடுக்கும்போதும், நடக்கும்போதும், எப்போதும் அடக்கத்தோடிருக்க நம தாண்டவரைக் கேட்போமாக. ஒரு மகான் சொல்வதுபோல், அடக்கம் நமக்கு நல்லபேரைக் கொண்டுவருவதுடன், சர்வேசுரனுடைய மகிமையையும் விளங்கச் செய்கிறதாம்.

S. Selva Raju.

சுவாமீ தம்மிலேதாமே எண்ணிறந்த வகையாய் பாக்கியமுள்ளவரா யிருக்கிறதைக் கண்டு களிகூருவாயாக.

மோட்சத்தை ஆவலுடன் ஆசித்து அதற்குத் தடையானவைகளைத் தள்ளி சாவை விரும்பியிருப்பாயாக.

உன்னைச் சேர்ந்தவர்கள் சுவாமியைச் சிநேகிக்கும்படி செய்வாயாக.

சுவாமிக்குப் பிரியமானதை நாடிப் பொருந்தாததை வெறுத்து உன்னை முழுமையும் குறைவின்றி சுவாமிக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

தினந்தோறும் உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமாக்களுக்காக வேண்டிக்கொள்வாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம்—46–55.

இஸ்ராயேல் பிரசைகள் கொடுங்கோல் மன்னன் பரவோனின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டு, எஜிப்து தேசத்தை விட்டு புறப்படும்போது, ஆரோனுடைய சகோதரியாகிய மரியாள் சந்தோஷ உல்லாசமாய்த் தேவ ஸ்துதிகளையும் கீர்த்தனைகளையும் பாடினாள். இன்னும் அப்பிரசைகள் துஷ்டதளக்கர்த்தனாகிய சிசாராவின் கொடுமையினின்று மீட்கப்பட்டபோதும், தெபோரா என்பவளும் நன்றியறிந்த தோத்திரப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தாள். தேவ கன்னிகையும் மனுக்குல மீட்பரைப் போற்றிப் புகழ்ந்து பாடி ஸ்துதிப்பது நியாயமல்லவா? உலக இரட்சகருக்கு அறிகுறியும் அடையாளமுமாகியவைகளை அம்மாது சிரோமணிகள் பாடி வாழ்த்தித் தங்கள் சந்தோஷ மகிழ்ச்சியைக் காண்பித்தார்கள் என்றால், கன்னிமரியாயி, அந்தத் திவ்ய இரட்சகரையே ஸ்துதித்து தோத்தரித்துப் பாடி அகமகிழ்வது உசிதமல்லவா?

சர்வேசுரனிடமிருந்து பெற்றுக்கொண்ட தேவ கற்பனைகளை இஸ்ராயேல் பிரசைகளுக்கு மோயீசன் அறிவிக்கும்போதும், அவைகளை அனுசரிக்கும்படியாக அவர்களை வற்புறுத்தும்போதும் தேவஸ்துதிகளைப் பாடினார். பிரமாணிக்கமுள்ள தீர்க்கதரிசியாகிய சாமுவேல் என்பவரைப் பெற்றபோது, அவருடைய தாயாகிய அன்னாள், தேவ தோத்திரங்களைப் பாடிக் களித்தாள். அவ் வேத கற்பனைகளுக்கெல்லாம் காரணகர்த்தரையும் தீர்க்க தரிசிகளின் ஆண்டவரையும் தன்னுதரத்தில் சுமக்கப் பாத்திரமான தேவ கன்னிகை அவர்களைப்பார்க்கிலும் அதிகமாய் மகிழ்ந்து, அவரைப் பாடி வாழ்த்துவது தகுதியல்லவா?" (அல்பேர்துஸ்.)

46-ம் வசனம்.—அப்போது மரியம்மாள் வசனித்ததாவது: என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது.

அதாவது: என் ஆத்துமமானது சர்வேசுரனுடைய உன்னத பெருமைகளை வாழ்த்துகின்றது, ஸ்துதிகளால் கொண்டாடுகின்றது; சர்வேசுரன் என்னை மனோவாக்குக் கெட்டாத விதமாய் உயர்த்தி மகிமைப்படுத்தினதால் என் நாவால் மாத்திரம் அவரைப் புகழ்ந்தேற்றுவது போதாததினால் என் ஆத்துமம், அதாவது, என் ஆத்துமத்தின் தத்துவங்கள் எல்லாம் என் ஞாபகம், புத்தி, மனசு, என் உணர்ச்சி பற்றுதல்கள் எல்லாம், என் சீவன் முழுதுமே, அவருடைய மகத்துவ பெருமைகளை நினைவு கூர்ந்து, அவருக்கு நன்றி பாராட்டி, அவரைத் தோத்தரித்துக் கொண்டாடுகின்றன, என்பதாம்.

47-ம் வசனம்.—என் இரட்சண்ணியமாகிய சர்வேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது:—

அதாவது: எனக்கு இரட்சண்ணியத்தையும் தேவ ஆசீர்வாதங்களையும் ஏராளமாய்க் கொண்டுவந்த என் சர்வேசுரனிடத்தில், என்னை யீடேற்றுகிறவர் பேரில், (Spiritus meus,) என் ஆத்துமமானது இன்ப மகிழ்ச்சியும் ஆனந்த பூரிப்பும் கொண்டெழும்பினது, என்பதாம்.

48-ம் வசனம்.—ஏனெனில் தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் (கிருபாகடாட்சத்தோடு) பார்த்தருளினார்.

தேவதாய் சர்வேசுரனை ஸ்துதிப்பதற்கும், அவரிடத்தில் அகமகிழ்வதற்கும் காரணம் இவ் வசனத்தில் கூறப்படுகிறது. தமது அடிமையானவளுடைய தாழ்மையை (respexit) நோக்கினார்:—வேதாகம புஸ்தகத்தில் சர்வேசுரன் ஒருவனை respexit நோக்கினார், அவள் பக்கமாய்த் தமது கண்களைத் திருப்பினார் என்றால், அவளுக்குத் தமது தயையைக் காண்பித்தார், அவள் மீது தமது வரப்பிரசாதங்களைப் பொழிந்தார், அவளை உருக்கமாய் நேசித்தார் என்றர்த்தமாகும். சர்வேசுரன் தமது அடிமையானவளுடைய தாழ்மையை நோக்கினார் என்று தேவதாய் கூறுவதினால், தான் அடிமையென்றும், முற்றும் அபாத்திரவதி என்றும், ஒன்றுமில்லாமையென்றும் தன்னை ஒப்பற்ற விதமாய்த் தாழ்த்துகிறாள்.

மேலும் சர்வேசுரன் தனதுபேரில் கிருபை கூர்ந்து, அன்பு பாராட்டி, அருள் பொழிந்து, இந்த அபாத்திர ஸ்திதியிலிருந்தும் ஒன்றுமில்லாத தனத்திலிருந்தும் தன்னை உயர்த்தி மகிமைப்படுத்தி சிறப்பித்தார் என்றும் வெளியிடுகிறாள்.

தமது அடிமையானவளுடைய தாழ்மை என்று சொல்லும்போது தேவதாய் தன்னிடத்தில் விளங்கின தாழ்ச்சி யென்கிற புண்ணியத்தைப் புகழ்ந்து பேசினாள் அல்ல, ஆனால் இவ்வார்த்தைகளில் மெய்யாகவே அவளுடைய கரைகாணாத தாழ்ச்சி துலங்குகிறது என்பது திண்ணம். "ஆகையால் இதோ, இக்கால முதல் எல்லா தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்."—

சர்வேசுரன் எம்மாத்திரம் கன்னிமரியாயை நேசித்தாரென்றும் எவ்வித கிருபாகடாட்சத்தோடு நோக்கினாரென்றும், எவ்வளவு நன்மை வரங்களால் சிறப்பித் தலங்கரித்தாரென்றும் இவ் வசனம் விளக்குகிறது.

"எல்லா தலைமுறைகளும்" அதாவது சகல ஜாதி ஜனங்களும் என்னை பாக்கியவதி யென்றும், தேவ கிருபையைப் பூரணமாய்ப் பெற்றவளென்றும், தேவ ஆசீர்வாதங்களால் நிரபபப்பட்டவளென்றும், தேவ வரங்களால் அலங்கரிக்கப்பட்டவளென்றும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்துவார்கள். எலிசபெத்தம்மாள் முதல் முதல் என்னைப்புகழ்ந்து கூறிய திவ்யமான புகழ் சகல தேசங்களிலும், சகல ஜாதி ஜனங்கள் மத்தியிலும், சகல காலங்களிலும், ஓயாது, ஒழியாது, குறையாமல், மாறாமல் சதா சத்தித் தொனிக்கும்—தேவதாய் இவ்வசனத்தை மெய்யாகவே தீர்க்கதரிசனமாய்க் கூறினாள் என்றே சொல்லவேண்டும்; ஏனெனில் உலகத்தின் எத்திசையிலும் உள்ள கிறீஸ்துவர்கள் அவளுடைய நாமதேயத்துக்காக கட்டி எழுப்பிய பிரபல்லியமான ஆலயங்களும், பீடங்களும், புண்ணிய க்ஷேத்திரங்களும், திருயாத்திரை ஸ்தலங்களும், ஏற்படுத்திய திருநாள் ஆடம்பர வைபவங்களும், உற்சவ சிறப்புகளும் அவளுடைய அடைக்கலத்திலுள்ள கணக்கற்ற கன்னியர் சன்னியாசிகள் சபைகளும், மடங்களும், என்னத்தை விளக்கிக்காட்டுகின்றன? கன்னிமரியாயின் புகழையல்லவா? அவளுடைய மகிமையைச் சிறப்பித்துக்காட்ட, அர்ச்சியசிஷ்டவர்கள், வேதவித்தியாபாரகர், வித்வான்கள் பிரஸ்தாபித்திருக்கும் பிரபந்தங்களும், காவியங்களும், கவிகளும், கீர்த்தனைகளும், எத்தனையென்றும், எத்தன்மைத்தென்றும் யார் சொல்லக்கூடும்? உண்மையாகவே, தேவதாயின் புகழ் அழகாய், பரிசுத்தமாய், நிறைவாய், இன்பமாய், பூமியின் ஒருகோடி முனை முதல் மறுகோடி முனைமட்டும், இடைவிடாமல் சத்தித் தொனிக்கிறதையும், அவள் கூறிய தீர்க்கதரிசனம் சதா நிறைவேறிக்கொண்டு வருவதையும் நாம் கண்ணாரக் கண்டு களித்து வருகிறோமல்லவா?

எல்லா தலைமுறைகளும் தன்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று தேவதாய் கூறியபின், அப்படி அவர்கள் பூசித்துப் புகழ்வதற்குண்டான காரணத்தையும் எடுத்துரைக்கிறாள்.

49-ம் வசனம்.—ஏனெனில் வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. பெருமையுள்ளவைகள் எவை யென்றால்: தேவதாயின் அமலோற்பவ மகிமை, அவளுடைய இஷ்டப்பிரசாத வரங்களின் சம்பூரண மகிமை, அவள் முப்பொழுதும் கன்னிகையாயிருந்த கன்னிமைத்தனத்தின் மகிமை, தேவதாய் பட்டத்தின் மகிமை, தேவசுதன் அவளிடம் மனுஷாவதாரம் செய்த மகிமையாகிய இவைகளும் இன்னும் எண்ணிக்கைக்குள் அடங்காத அதிசயங்களுமாமே.

சர்வேசுரன் தேவதாய்க்குச் செய்த மகத்தானவைகளில் அவருடைய (1) வல்லபமும், (2) பரிசுத்தத்தனமும், (3) கிரு

பையும் விசேஷமாய்த் துலங்கிப் பிரகாசிக்கின்றன. அவைகளைத் தேவதாய் முக்கியமாய் நினைவுகூர்ந்து கொண்டாடுகிறாள்.

(1) வல்லபம். ஏனெனில் தேவசுதன் கன்னிமரியாயிடம் மனுஷாவதாரம் செய்ததானது எந்தச் சிருஷ்டியின் புத்திக்கும் எட்டாத உன்னத பரம இரகசியம் அல்லவா? அதை நிறைவேற்றவும், அது நிறைவேறியபின், மனிதன் அதனைத் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு விசுவசிக்கவும் செய்தது தேவ வல்லபத்தின் அற்புத சத்தியல்லவா?

(2) பரிசுத்தத்தனம். தேவசுதன் ஏதுக்காக மனுஷாவதாரம் செய்தார் என்றால் பசாசின் அக்கிரமமான அரசை சிதைத்தொழித்து, நிர்மல தேவ இராச்சியத்தை இப்பூமியிலே ஸ்தாபிக்கவும், மனுமக்கள் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களைப் பரிகரித்து நீக்கி தேவசாபத்துக்குள்ளாயிருந்த அவர்களை, தேவ புத்திரர்களாகச் செய்யவும் தானல்லோ?

(3) கிருபை. பாவத்தால் கெட்டு நித்திய நரகாக்கினைக்குப் பாத்திரமான நிர்ப்பாக்கிய மனுக்குலத்தை இரட்சிக்க தேவசுதன் மனுஷனானார். அதற்கு இரட்சண்ணிய பாக்கியத்தைக் கொண்டுவந்தார். சாவையும் சாபத்தையும் நீக்கி சீவியத்தையும் தேவ ஆசீர்வாதத்தையும் தந்தார். பாவப்படுகுழியில் விழுந்து பரதவிக்கும் மனிதனைக் கைதூக்கி மீட்டு அர்ச்சித்தார். இஷ்டபிரசாதங்களை ஏராளமாய்ப் பொழிந்தார். தேவநீதிக்கு கொடுமையாயும், பூர்த்தியாயும் உத்தரித்தார். அடைபட்டிருந்த மோட்சவாசலைத் திறந்தார். மோட்சபாக்கியத்துக்கு அவனைச் சுதந்தரவாளியாக்கினார். அழிவில்லா மகிமைப் பிரதாப கிரீடத்தை அவனுக்குச் சூட்டினார். இச்செயல்களில் எல்லாம் விசேஷமாய் தேவகிருபை அற்புதமாய் விளங்குகிறதல்லவா?

தேவதாய் சர்வேசுரனுடைய கிருபையை வாழ்த்தினபின், அக்கிருபை எவர் மீது இறங்கிவரும் என்றும் கூறுகிறாள். "அவருடைய கிருபை அவருக்குப் பயந்து நடக்கிறவர்கள் மேலிருக்கின்றது" சர்வேசுரனுக்குப் பயந்து நடக்கிறவர்கள் யார் என்றால், அவரை வணங்குகிறவர்கள். அவரைச் சந்திக்கிறவர்கள் அவரைச் சேவித்து அவருக்குப் பணிந்து நடக்கிறவர்களே. தேவகன்னிகை இயல்பிலே தனக்குரிய ஒன்றுமில்லாமையினின்றும் தனது வறுமை சிறுமையினின்றும் அதி உன்னத அதிசிரேஷ்ட அகோசர தேவதாய் பட்டத்துக்குத்தான் உயர்த்தப்பட்ட பாக்கியத்தையும் பதவியையும் சிந்தித்துக் தன்னைப்பற்றி எலிசபேத்தம்மாள் கூறிய சுபவாழ்த்துதலானது பிற்காலத்தில் திருச்சபையில் தனக்குண்டாகும் Hyperdulia என்னும் தேவதாய் மகிமைக்குரிய உன்னத பக்தி வணக்கப் புகழ்ச்சிக்கு ஆரம்பமாயிருப்பதையும் தீர்க்கதரிசனமாய் அறிந்துகொண்டு, தன்னிடத்தில் நிறைவேறியிருக்கும் சர்வ வல்லபமும் சர்வ ஞானமும், சர்வ கிருபையும் பொருந்திய அற்புத பரம இரகசியத்தை நினைவுகூர்ந்து, சர்வேசுரனுக்கு நன்றியும் நேசமும் ஸ்துதியும் தோத்திரமும் செலுத்துகிறாள். முக்கியமாய் தேவ வல்லமையைப் புகழ்ந்தேற்றுகிறாள்.

51-ம் வசனம்.—"அவர் தம்முடைய கரத்தின் வல்லமையைக் காட்டியருளினார்" மனிதனுடைய வல்லமை முக்கியமாய்க் அவன் கரத்தில் தோன்றும். கரத்தின் வல்லமை யென்றால், வல்லபசெயல், சௌரிய வீரிய பராக்கிரமசெயல் என்றர்த்தமாகும். சர்வேசுரன் தமது கரத்தின் வல்லமையைக் காட்டியருளினார் என்றால், தம்மிடத்திலுள்ள மட்டற்ற சர்வ வல்லபத்தையும் காட்டினார் என்றர்த்தம் கூறலாம்.

இவ்வல்லமையை எப்படி காட்டினார் என்றால், தங்கள் இருதயத்தில் உண்டாகும் செருக்கு மேட்டிமை சிந்தைகளால் தங்களை அபரிமிதமாய் உயர்த்திக்கொள்ளும் அகங்காரிகளை அதம்பண்ணிவிட்டார். சேனை பலத்தாலும், செல்வ பலத்தாலும் தேசபலத்தாலும், குடிகள் பலத்தாலும் மதிமயங்கி கெட்டுபோன கொடுங்கோல் இராஜாக்களையும், மன்னர்களையும், தங்கள் ராஜரீக சிம்மாசனங்களினின்றும், அதிகார பதவியினின்றும் தள்ளி தாழ்த்தி அதிகாரமும், பலமும் பிரக்கியாதியுமற்ற சிறியோரையும், எளியோரையும்

திக்கற்றவர்களையும், சம்பன்னராக்கினார் எ[illegible]

பழைய ஏற்பாட்டின் சரித்திரங்களில் கண்டிருக்கிற பிரகாரம் சர்வேசுரன் அகங்காரிகளைத் தாழ்த்தி, எளியவர்களை உயர்த்தி மகிமைப்படுத்தி யிருக்கிறதினால் அவரது பராமரிப்பின் செயல்களை தேவகன்னிகை சிந்தித்துக்கொண்டே இந்த 51, 52, 53-ம் வசனங்களை உச்சரித்தாள் என்று வேதசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

கொடுங்கோலனாகிய பாரவோனை மோயீசனைக்கொண்டும், கானானையரை ஜோசுவாமுனியைக் கொண்டும், நியாயாதிபதிகளைக் கொண்டும், இஸ்ராயேல் பிரசைகளின் சத்துராதிகளாகிய பிலிஸ்தியர், அம்மோனித்தர், மோவாபீத்தர், இதுமேயர்களை தாவீது இராசாவைக் கொண்டும் சர்வேசுரன் சிதறடித்து அதம்பண்ணி தாழ்த்தினதையும், துன்மார்க்க அரசர்களாகிய பாரவோன், நபுக்கொதொனோசொர், சால்மனாசார், பால்தசார், அந்தியோக்குஸ் என்பவர்களை அபஜெயப்படுத்தி சிதைத்ததையும், சவுல், ஆமான், வாஸ்தி என்பவர்களை தங்கள் சிங்காசனத்தினின்று தள்ளி தாழ்த்திவிட்டதையும், தாவீது இராசா, மார்தோகேயுஸ், எஸ்தெர் என்பவர்களை உயர்த்தி மகிமைபடுத்தினதையும், எபிரேய ஜனங்களை 40 வருஷகாலமாய் மன்னாவென்கிற வானலோக அப்பங்களைப் பெய்வித்து காப்பாற்றினதையும், எலியாஸ் முனியையும் தனியேல் தீர்க்கதரிசியையும் அற்புதமாய் போஷித்ததையும், இன்னும் இப்பேர்ப்பட்ட வர்த்தமானங்களை தேவதாய் சிந்தித்துக் கொண்டு இவைகளில் விளங்கும் தேவ பராமரிப்பின் ஒழுங்கையும், தேவ ஆளுகையின் ஞானத்தையும், தேவ வல்லப அற்புதங்களையும் வாழ்த்தி ஸ்துதிக்கிறாள்

எந்தக்காலத்திலும் மனுஷர்கள் மட்டில் சர்வேசுரன் நடந்துகொள்ளும் வகையையும், "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்" என்று கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றிய தமது தேவ இராச்சியத்தின் பொது ஒழுங்கையும், தேவதாய் இவ்வசனங்களில் எடுத்துரைக்கிறாள் என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

54-ம் வசனம்.—"தமது கிருபையை நினைவுகூர்ந்து, தமது தாசனாகிய இஸ்ராயேலைப் பரிக்கிரகம் பண்ணினார்.

55-ம் வசனம்—அப்படியே நமது பிதாக்களாகிய அபிரகாமுக்கும் ஊழியுள்ளகாலம் அவர் சந்ததியாருக்கும் அவர் வாக்குத்ததம் பண்ணியிருந்தார் என்றாள்.

சர்வேசுரன் ஆதியில் விசுவாசிகளுக்கும் பிதாவான அபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் வாக்குத்தத்தம் செய்த நன்மைகளெல்லாம், தேவசுதன் மனுஷாவதாரம்செய்த இந்தப் பரம இரகசியத்தில் சம்பூரணமாய் நிறைவேறிற்றென்று தேவதாய் வெளியிடுகிறாள். இஸ்ராயேல் பிரசையை தேவனுடைய தாசன் என்று அழைத்தல் அருமையான தேவ அன்பையும் உருக்கத்தையும் காட்டும் மகிமைக்குரிய நாமம். தேவ ஊழியர் அல்லது தேவதாசர் என்ற இவ்வருமையான நாமம் மோயீசனுக்கும், தாவீது இராசாவுக்கும். தீர்க்கதரிசிகளுக்கும் அளிக்கப்பட்டது. இஸ்ராயேல் பிரசையை, தேவ ஊழியன் என்று அழைப்பதானது சர்வேசுரன் அவர்கள்பேரில்வைத்த உருக்கமான கரிசனத்தையும், நேசத்தையும் வெளிப்படுத்துகின்றது. "தமது தாசனாகிய இஸ்ராயேலைப் பரிக்கிரகம் பண்ணினார்." அதாவது சர்வேசுரன் இசரயேல் பிரசையைத் தமது சொந்த ஊழியனைப்போல் தமது அடைக்கலத்திலும், கண்காணிப்பிலும் வைத்து கரிசனமாய், அன்பாய், பாதுகாத்தார் என்பதாம்.

இவ்விதமாய் அப்பிரசையைக் கையேற்றுக்கொண்டு பாதுகாப்பதற்கு தமது கருபையால் தூண்டப்பட்டார் சர்வேசுரன். தமது தேவ கிருபையாலும், தாம ஆதியில பிதாபிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்ததினிமித்தமும, தமது பிரமாணிக்கத்தாலும் தமது சொந்த ஊழியனைப்போல் பாவித்து நடத்திவந்த தமது பிரியமுள்ள இஸ்ராயேல் பிரசைக்கு ஊழியுள்ளகாலம் மெஸ்ஸியாவின் தேவ இராச்சிய நன்மைகளை அவர் கொடுக்கப்பாகிற

வகையை தேவ கன்னிகை இந்த 54, 55-ம் வசனங்களில் வெளியிட்டு தனது உன்னதமான சங்கீதத்தை முடிக்கிறாள்.

S. M.

A REGRETTABLE INCIDENT!!
பிரலாபத்துக்குரியதோர் சம்பவம்!!

(தொடர்ச்சி.)

போட்டித் தீர்மானங்கள்.

ஓர் உவமை, நிஜமான சரித்திரமாய் விட்டது. கடந்த மாதப் பத்திரிகையில் தர்மநாத உடையார் சங்கதியைப் பற்றி, நண்பர்களே, வாசித்திருப்பீர்கள். அது ஒரு உவமையேயாயினும் இவ்வருஷ ஆரம்பத்தில் நடந்தேறின ஓர் நிஜமான சரித்திரமே யாகும். தர்மநாத உடையார் இன்னாரென்றும், அந்த நிர்ப்பாக்கிய வன்னியர் குடும்பம் இன்னதென்றும், அந்த 9 பிள்ளைகள் எவர்களென்றும், ஷை குடும்பத்தின் தலையாட்டியான துடுக்கன் யாரென்றும் தெளிவாய் அறிந்திருப்பீர்கள். மேலும் தர்மகுணமுடைய உடையாரால் குறிக்கப்பட்டவர்களையும், அவர்களுடைய பரோபகார வேலையையும், அவர்கள் அந்தக் குடும்பத்தின் மீது காட்டிய அரிய நேசத்தையுங் கண்டு அதிசயித்து, அவர்களைப் புகழ்ந்து, அவர்கள் என்றும் இந்தியாவில் உழைத்து வரும்படி கோருவீர்கள். ஆனால் தலையாட்டியான துடுக்கனுக்கு ஒப்பானவர்கள், தங்கள் பெற்றோருக்குப் பதிலாக நின்று தங்களைக் காப்பாற்றிப் போஷித்து, தங்களுக்கு மோட்ச வழியைக் காட்டியவர்களை, தங்கள் நாவாலும் நடத்தையாலும் அவசங்கைப்படுத்தி, அவர்களுக்குக் கீழ்ப்படியாததை அறிந்து, நீங்கள் மெய்யாகவே துக்கப்பட்டு ஷை இரண்டகர் கண்டனைக் குரியவர்களென்று நிச்சயித்து, அவர்களுடைய துர்நடத்தையை அரோசித்து, ஷை 9 பிள்ளைகளின் சன்மார்க்கத்தைப் பின்செல்ல தீர்மானித்திருப்பீர்கள்.

பச்சையப்பன் ஹாலில் நடந்தேறிய விருத்தாந்தங்கள்.

பச். ஹாலில் கிறீஸ்துவர்களின் ஒரு கூட்டம் கூட்டப்பட்டதென்றும், அது மேற்றிராணிமாருடைய தீர்மானங்களைத் திரஸ்கரித்து அவைகளுக்கு விரோதமான தீர்மானங்களை தீர்மானிக்கும்படி ஏற்பட்ட போட்டிக் கூட்டமென்று அறிந்த நல்ல கிறீஸ்துவர்கள் தாமதியாமல் அதை விட்டு கூட்டமா யெழுந்து வெளியே சென்றார்களென்றும், நண்பர்களே, அறிந்திருப்பீர்கள். அதற்குப் பின் நடந்த விருத்தாந்தங்களைக் கேளுங்கள்?

பத்துக்கற்பனையின் 2-ம் கற்பனை, "சர்வேசுரனுடைய திரு நாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியா திருப்பாயாக" என்று கற்பிக்கிறது. அதாவது, சர்வேசுரனுடைய திருப்பெயரை அனுச்சாரமாயும், அனுவசியமாயும் உச்சரிக்கக் கூடாதென்று ஞானோபதேசத்தால் அறிவோம். ஆனால், மஹா கூட்டத்தி லொருவர், "தென் இந்தியா மேற்றிராணிமார் தங்கள் தீர்மானங்களை இரத்து செய்யும்படி.....பரிசுத்த வேதத்தின்பேராலும், ஐரோப்பாவுக்காக தமது விலை மதிக்கப்படாத இரத்தத்தைச் சிந்தினதுபோல இந்தியாவின் கோடிக் கணக்கான பேருக்கும் (மற்றத் தேசத்தாருக்குச் சிந்தவில்லையா?) சிந்தின கிறீஸ்துநாதர் பேராலும், கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சற்றும் அச்சமின்றி கூறி யிருக்கிறார். அதாவது 8 மேற்றிராணிமார் தீர்க்க ஆலோசித்துத் தத்தம் விசாரணைக் கிறீஸ்துவர்களின் நன்மைக்காக செய்த தீர்மானங்களை அழித்துவிட்டு, தத்தமிஷ்டத்துக்கு ஏற்ற தீர்மானங்களைச் செய்யும்படி திருச்சபையின் பேராலும் கிறீஸ்துநாதரின் பேராலும் கேட்பது ஞாயமா? அத் திருப்பெயர்களை யிங்கு உச்சரிப்பதற்கு என்ன ஞாயம்? என்ன அவசரம்? திருச்சபைத் தலைவர்களுக்குக் கீழ்ப்படியாமல் அவர்கள் செய்த தீர்மானங்களைத் தள்ளிவிட்டு, தங்களிஷ்டத்துக்கு ஒத்த வேறு தீர்மானங்களைச் செய்துகொண்டு, மேற்றிராணிமார்களை அவைகளுக்கு ஒத்து வரும்படி கேட்பதே அக்கிரமம். இப்பேர்ப்பட்ட அக்கிரமமான காரியத்தைக் கேட்கும்போது சர்வேசுரனுடைய பெயரால் கேட்பது தகுமா? ஆகையால் முன் கூறப்பட்டவர் 2-ம் கற்பனையை மீறினாரா, மீறவில்லையா, நண்பர்களே சொல்லுங்கள்?

மேலும் அப்போஸ்தலர்களின் பதிலாளிகளாகிய 8 மேற்றிராணிமார் கூடி தீர்க்க ஆலோசித்து வரைந்த தீர்மானங்களை இரத்து செய்யும்படி ஒருவர் கேட்கத் துணிந்ததும், "நாம் இங்கு கூடி தீர்மானிக்கும் தீர்மானங்கள், பெங்களூரில் கூடி தீர்மானங்களை வரைந்த மேற்றிராணிமார்களின் கண்களைத் திறந்து அவர்கள் தங்கள் தப்பிதங்களை அறியும்படி செய்யும்" என்று வேறொருவர் நெஞ்சுத் துணிவுடன் கக்கிய அடாத மொழியும், "மேற்றிராணிமார் தங்கள் அதிகாரத்தை மிஞ்சிப்போனார்கள்" என்று இன்னொருவர் உரைத்த அக்கிரமச் சொல்லும் எப்பேர்ப்பட்ட தோஷமுள்ளவை யென்று நண்பர்களே சாட்சி பகருங்கள். தங்கள் ஞானப் போதகர்களை திரஸ்கரித்து, அவசங்கைப்படுத்தி அவர்களுடைய நிர்ணயங்களைப் பிரசித்தமாய் பங்கப்படுத்தி, அவைகளுக்கு நேர் விரோதமான ஏற்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டதினால் இவர்கள் பத்துக்கற்பனையின் 4-ம் கற்பனையை அநுசரித்தார்களோ, அல்லது அதை மீறினார்களோ நண்பர்களே கூறுங்கள்?

அன்றியும், பச்சையப்பன் ஹால் கூட்டத்தை அரோசித்து விரோதித்த சில கனவான்கள் தங்களுடைய (ப. ஹா. கூட்டத்தாருடைய) கருத்துக்கு இணங்கி தங்களுக்கு அனுதாபக் கடிதங்களையும், தந்திகளையும் அனுப்பினார்கள் என்றதற்கும், C. I. A. சபை காரியதரிசிக்கு அனுப்பப்பட்ட தந்திகளை இந்த ப. ஹா. கூட்டத்தார் கைப்பற்றிக் கொண்டதற்கும், என்னபெயரிடலாம் என்று நீங்களே சொல்லுங்கள் நண்பர்களே? இப்பேர்ப்பட்டவர்களின் ஆலோசனையையும் நடத்தையையும் பின்செல்ல யாருக்கு மனம் வரும்?

புதுச்சட்டங்கள்.

ஞானக்காரியங்களில் தாங்கள் குருக்களுக்கும் மேற்றிராணிமாருக்குங் கீழ்ப்படிவதாகவும், இலௌகீக காரியங்களிலும், இராஜாங்கத்துக்கடுத்த விஷயங்களிலும் தாங்களே எஜமான்களென்றும், ஐரோப்பிய மிஷனெறிகள் இந்தியருடைய இராஜாங்க விஷயங்களில் பிரவேசிக்கத்தகாதென்றும் பச்சையப்பன் ஹாலில் கூடியவர்கள் தீர்மானித்து விட்டார்கள். இவை திருச்சபைக்குப் புதுச்சட்டங்கள். இந்தச் சட்டங்களின் தாற்பரியமாவது: குருக்களும் மேற்றிராணிமாரும் திருச்சபைக்கடுத்த ஞான விஷயங்களில் மாத்திரம் அலுவலாயிருக்கவேண்டும். கிறீஸ்துவர்களைச்சார்ந்த இலௌகீக விஷயங்களில் அவர்கள் பிரவேசிக்கவேகூடாது. ப. ஹா. கூட்டத்தாரே உலககாரியங்களனைத்தையும். சீராய்ப் பார்த்துகொள்வார்களாம்.!! கேட்டீர்களா நண்பர்களே? நன்றாய்க் கேளுங்கள். இது முதற்கொண்டு குருக்களும் மேற்றிராணிமாரும் விசேஷமாக ஐரோப்பிய மிஷனெறிகளும் கல்விச்சாலைகளை ஸ்தாபிக்கக் கூடாது, அவைகளில் கல்வி கற்பிக்கவும் கூடாது. கல்விச்சாலைகளில் படித்துக் கொடுக்கும் குருக்கள் அந்த வேலையை இராஜிநாமா கொடுத்துவிடவேண்டியது. யாருக்கு? ப. ஹா. கூட்டத்தாருக்கு. கிறீஸ்துவப்பிள்ளைகளை பதிதக் கல்விசாலைகளில் படியாதபடிக்கு திருச்சபை அதிகாரிகள் விலக்கம் செய்யக்கூடாது.—ஒழுங்கற்ற நாடகம் வாசாப்பு முதலியவற்றை அவர்கள் ஆட்சேபிக்கக் கூடாது.—கிறீஸ்துவர்கள், கலியாணங்களிலும் வியாச்சியங்களிலும் வீண்செலவுசெய்து நஷ்டப்படவேண்டாமென்று கோவில்களிலும் வெளி மீட்டிங்கிகளிலும் குருக்கள் வாய்திறக்கக்கூடாது.—ஊர்களில் கிறீஸ்துவர்களுக்குள் கட்சி கலகம் உண்டாகும்போது, குருக்கள் அவைகளை விசாரிக்கக்கூடாது.—புருஷன் பெண்சாதிக்கு விரோதமுண்டாகி, ஒருவர் ஒருவரைவிட்டுப் பிரிந்திருக்கும்போது, குருக்கள் அந்த விவாதங்களை விசாரித்து சமாதானம் செய்யக்கூடாது.—ஏன்? இப்பேர்ப்பட்ட சங்கதிகளனைத்தும் உலககாரியங்களாகையால் குருக்களும் மேற்றிராணிமாரும் அவைகளில் பிரவேசிக்கக்கூடாது. பின் யார் பார்த்துக்கொள்வார்? அதோ! ப. ஹா. கூட்டத்தார். இவையெல்லாம் அவர்களுடைய பொறுப்பாமே. ஆகையால் அன்னவஸ்திரத்துக்கு அல்லாடி கஷ்டப்படும் ஏழை எளியவர்களே! திடீரென்று சம்பவித்த இடையூறு இக்கட்டு முதலிய ஆபத்துக்களின் நிமித்தம் இதுவரையில் உங்கள் குருக்களிடம் சென்று உங்கள் அவசரங்களை கொஞ்சமென்கிலும் தீர்த்துக்கொண்டதுபோல இனி நீங்கள் அவர்களிடம் போகவேகூடாது. ஏனெனில் இப்பேர்ப்பட்ட காரியங்களெல்லாம் உலககாரியங்களாகையால் ப. ஹா. கூட்டத்தாரிடம் சென்று பெற்றுக்கொள்ளுங்கள். கொடுப்பார்களா? இலௌகீக காரியங்களெல்லாம் தங்களுக்கே சொந்தமென்றதால் கொடுக்காவிட்டால் விதியில்லை.

புது நோட்டீஸ்.

ப. ஹாலில் நிர்ணயிக்கப்பட்ட புது சட்டங்களின் பலத்தால் இதுமுதல் முனிசிபல் தாலூகா, டிஸ்டிரிக்ட்டு போர்டுகளிலும், யுனிவெர்சிட்டிகளிலும் மெம்பர்களாயிருக்கப்பட்ட குருக்களும் மேற்றிராணிமாரும் அவைகளை விட்டு விலகவேண்டும். ஏனெனில், இவைகள் இராஜாங்கத்தைப்பற்றிய வேலைகள். இன்னொரு பெருஞ்சங்கடம். Legislative Council இராஜாங்க வேலையாகையால் அதில் சேர்ந்திருக்கும் மதிராஸ் அகிமேற்றிராணியார் அதை ராஜிநாமா கொடுத்துவிடவேண்டியது. War loan யுத்தக்கடன் இராஜாங்கத்தைச் சார்ந்ததாகையால் மகிமை தங்கிய கவர்னர் சென்ற மாதம் அதைப்பற்றி நம் அதிமேற்றிராணியாருக்கு எழுதினதும் பிசகு. தத்தம் கிறீஸ்துவர்களுக்கு அறிவிக்கும்படி அவர் குருக்களுக்கு தெரிவித்ததும் பிசகுதானே. அ! ஆ! என்ன உசிதமான நோட்டீஸ்!

புராதன சாட்சி.

நண்பர்களே! ஆதிகாலந் தொட்டு உலக மன்னர் திருச்சபைக்கு விரோதமாய் தண்டு தளங்களை பிரயோகித்தும் அவர்களால் மாளாமல் போய்விட்டது. 8-ம் என்றி அரசன் ஒரு கல்யாணத்தினிமித்தம் திருச்சபையை எதிர்த்தும். அது அம்மன்னனுக்கு இணங்கவில்லை. ஐரோப்பாவை நடுநடுங்கச்செய்த நப்போலியன் திருச்சபை தன் கருத்துக்கு இணங்கும்படி செய்த முயற்சியெல்லாம் சபலவாய் விட்டது. நமது காலத்தில் புருஷியா சர்க்கார் பள்ளிக்கூட விஷயமாக மேற்றிராணிமார் தங்கள் கருத்துக்கு இணங்காததினால் அபராதத்தாலும் கடின சிறையாலும் அவர்களை உபாதித்தும் அவர்கள் தங்கள் தீர்மானத்தை மாற்றாமல் ஜெயங்கொண்டார்கள். காரியமிப்படியிருக்க ப. ஹா. கூட்டத்தார், திருச்சபை அதிகாரிகளை விரோதிப்பார்களேயாகில், முற்றிலும் தோர்வைப்படுவார்களென்பது நிச்சயம். முடிபூண்ட மன்னர் திருச்சபை அதிகாரிகளை விரோதித்து அவர்கள் தங்கள் கருத்துக்கு இணங்கும்படி சகல அடாத காரியங்களை உபயோகித்தும், தேவனையால் அமைக்கப்பெற்ற திருச்சபையாகிய பாறைமேல் பாய்ந்து அதை உடைக்கப் பார்த்தும், அவர்கள் மண்டை உடைபட்டதே ஒழிய திருச்சபை என்றும் செழித்தோங்கி பிரகாசிக்கிறது!! இவர்களுக்குமுன் ப. ஹா. கூட்டத்தார் இருமலுக்கோ? தும்மலுக்கோ? அதிஜாக்கிரதையாயிருக்கக் கடவார்கள் ஷை கூட்டத்தார்.

ஓர் ஆலோசனை.

ப. ஹாலில் சங்கங் கூடிய சகோதரர்களே! நீங்கள் நேரான வழியில் செல்லாததினால் உங்கள், கோரிக்கையில் நீங்கள் அனுகூலப்படாதது அதிசயமல்ல. வட தேசத்துக்குப் போகும்படி தென் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்யும் பாட்டைசாரி அத்தேசம் போய்ச் சேருவானா? அவ்வாறே செய்தீர்கள் நீங்களும். நானுங்களுக்குக் கொடுக்கும் ஆலோசனையாவது: 1-வது நமது ஞான மேய்ப்பருக்கு அமைந்து உங்கள் தப்பிதத்தை ஒத்துக்கொள்ளுங்கள். பிறகு கற்றோரான மற்றக் கிறீஸ்துவ சகோதரர்களுடன் கலந்து பேசி உங்கள் கருத்தை அவர்களுக்கு அறிவியுங்கள். அதன் பின் நீங்களனைவோரும் ஏகோபித்து, நேராக ஆவது அல்லது கடித மூலமாயாவது உங்கள் அபிப்பிராயங்களை உங்கள் மேற்றிராணிமார்களுக்கு அறிவியுங்கள். அவர்களுங்கள் கருத்துக்கு இணங்காவிட்டால், கண்டியிலிருக்கிறார் அர்ச். பாப்பானவருடைய ஸ்தானாதிபதி. அவருக்கு அறிவியுங்கள். சகலத்துக்கும் மேலாக அர்ச். பாப்பானவரிருக்கிறார். அவரை மன்றாடலாம். இதை விட்டுவிட்டு, நமது சத்தியவேத விரோதிகளோடு சேர்ந்துகொண்டு, திருச்சபை அதிகாரிகள் மீது அவதூறு கூறி, அவர்களை அவசங்கையாய்ப் பேசுவதால் பாவம் விளையுமே ஒழிய உங்கள் கோரிக்கையில் அனுகூலப்படவே மாட்டீர்கள். நமது ஞான அதிகாரிகளை கனவீனப்படுத்துவதால் வரும் அவமானம் உங்களுக்கே என்று அறிந்துகொள்ளுங்கள். கடைசியாய் சகலத்தையும் மறந்துவிட்டு எழுந்திரியுங்கள் நமது பிரிய தந்தைகளின் பொறுதியை மன்றாட. தகப்பன் பொறுத்தலைக் கேட்பது பிள்ளைக்குச் சின்னத்தனமல்ல. இவ்விதம் செய்வீர்களேயாகில் உலகம் மெச்சிப் புகழும் உங்கள் சிரவணத்தை. உங்களுடைய உயர்ந்த கல்வி ஞானத்திலும், புகழுக்குரிய இந்த உங்கள் நன்னடத்தையாலும் சிரவணத்தாலும் உங்கள் பெயர் அதிகமாய்ப் பிரகாசிக்கும். ஆனால் உலகப் புத்தியுள்ளவர்களுங்களைப் பின்னுக்கு இழுப்பார்கள். கிண்டிவிட்டுத் தமாஷ் பார்க்கும் துஷ்டர் உங்களுக்குத் துர் ஆலோசனை கொடுப்பார்கள். இப்படிப் பணிவது உரோஷமற்ற கோழைகளின் குணமென்பார்கள் இதர மதஸ்தர். நீங்களோ பிரிய சகோதரர்களே, இப்பேர்ப்பட்ட துர் ஆலோசனைகளுக்குச் செவி சாய்க்காமல் எழுந்து அண்டுங்கள் நமது ஞானத் தந்தையர்களின் பாதம்.

சர்வேசுரனுக்குப் பதிலாயிருக்கப்பட்ட நமது மேற்றிராணிமார்களின் ஆசீர் பெறுவது பெரும் பாக்கியம். அவர்களுடைய கோபத்தை சகலரும் விலகுவார்கள். ஆனால் அவர்களுடைய சாபத்துக்கு நடுநடுங்காதவனார்? இதெல்லாம் சீர்தூக்கி யோசித்துப்பாருங்கள் என் பிரிய சகோதரர்களே! இது கனத்த விஷயமாகையால் ஜாக்கிரதையாயிருங்கள். மேலும் உங்களுடைய உயர்ந்த கல்வியாலும் நீங்கள் பெற்ற வித்தியாசாலைக்கு சம்பந்தமான விருதுப்பட்டங்களாலும் பிறத்தியாருக்கு நன்மை புரிவதிலும், உங்கள் விஸ்வாசத்தாலும் தேவ பயத்தாலும் அமைதலான சிரவணத்தாலும் ஏராளமான நன்மையுண்டாகுமென்று உணர்ந்து தைரியத்துடன் எழுந்திரியுங்கள் பிரிய நேசரே! எழுந்து நீங்களே நேராயாவது, அல்லது உங்கள் பழய கத்தோலிக் ஸ்நேகிதர்களோடு சேர்ந்தாவது நமது ஞானத் தந்தையாகிய மேற்றிராணிமாரை அண்டுங்கள். சகலமும் சீராயும் திருப்தியாயும் முடிவுபெறும். இதுவே உசிதமான வழிப்பாடு. "சிரவணமுள்ளவன் வெற்றிகளைக் கூறுவான்." என்னும் சிறந்த மொழியை மனதில் தரித்துக் கொள்வீர்களாக.

Bellary. **M. J. MICHAEL,**
Cath. Indian Priest.

HOW TO RAISE OUR STATUS?
நாம் முன்னேறுவ தெப்படி?

ஒன்பதாம் வியாசம்.

Co-operative Credit Societies.

கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி யென்னும் ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

கடந்த 13-வருஷகாலமாய் நமது இந்தியரைக் கைதூக்க கொண்ட முயற்சிகளுள் பல (Co-operative effort), பரஸ்பர ஐக்கிய முயற்சிகளுக்குச் சம்பந்தப்பட்டவைகளென உலக விவகாரங்களை உற்று யோசிக்கும் சக்தியுள்ளவர்களும், ஜன சமூக உழைப்பாளிகளும் (Social workers) சாதிக்கிறார்கள். ஒருவன் உத்தியோகஸ்தனாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஜன சமூகத்தின் உலக நிலைமையை, ஒழுக்க நிலைமையை, அல்லது வர்த்தக வாணிப நிலைமையை உயர்த்த, தன்னால் ஏலாவிட்டால், கொவாப்பரேஷன் என்னும் பரஸ்பர ஐக்கிய ஏற்பாட்டினால் முடியுமென அநுபவத்தால் கண்டறிவான்.

கொவாப்பரேட்டிவ் ஏற்பாடானது முற்றிலும் ஜெர்மன் ஏற்பாடென்னும் கொள்கை இந்தியாவில் பரவியிருக்கிறது. (Raiffeisen) ரப்யேஸன் என்பவர் 1849-ம் வருஷத்தில் ரெனிஷ் பிரஷ்ஷியாவில் தன் லோன்பாங்கையும் (Schulze) ஷூல்ஜ் என்பவர் 1850-ம் வருஷத்தில் தன் முதல் கிரடிட் பாங்கையும் ஏற்படுத்து முன்னமேயே 1821-ம் வருஷத்தில் (Robert Owen) ராபர்ட் ஓவன் என்னும் ஆங்கிலேயர் பரஸ்பர ஏற்பாட்டை அநுசரித்து, கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியை முதல் முதலாக ஸ்தாபித்தவர் ஆவர். இந்த கொவாப்பரேட்டிவ் ஏற்பாடானது ஒவ்வொரு தேசத்தின் அவசரத்திற் கேற்றபடி பலினத்துவ மடைந்து வருகின்றது. இங்கிலாந்தில் வர்த்தக சம்பந்தமாயும், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸில் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாயும், விவசாய சம்பந்தமாயும், கைத்தொழில் சம்பந்தமாயும், அமேரிக்காவில் வீடு கட்டிடம் கட்டும் சம்பந்தமாயும், இத்தாலியாவிலும் ருஷியாவிலும் விசேஷமாய் இக்காலத்தில் பொது உழைப்புச் சம்பந்தமாயும் பெருகி வருகிறது. ஓரே வார்த்தையில் கொவாப்பரேட்டிவ் ஏற்பாடு பல விதமாயும், பல காரியங்களிலும் பிரயோகிக்கப்பட்டு பல நன்மைகளைப் புரிந்து வருகின்றது. டென்மார்க் தேசத்தில் 1864-ம் வருஷத்தில் அவ் வேற்பாட்டையநுசரிக்கத் துவக்கி இதுவரைக்கும் இடையறாமல் அதனைச் சாதித்து வரவே, அத்தேச முழுதும் எங்கு பார்த்தாலும் கொவாப்பரேஷனென்பதே சர்வ வியாபகமாய் விளங்கி வருகிறது. பயிர் செய்ய பூமி வேண்டுமோ, கிருஷித் தொழிலைக்

கிரமமாய் நடத்த வேண்டுமோ, ஒரு வீடு வாசல் சம்பாதிக்க வேண்டுமோ, பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமோ, ஆபத்திற்குக் கடன் வாங்கவேண்டுமோ, பொதுஜன பிரயோஜனமான ஏற்பாட்டை நடத்த வேண்டுமோ, சகல காரியத்திற்கும் கொவாப்பரேஷன் என்னும் மந்திர சக்தியுள்ள ஏற்பாடுதான். அங்கு கொவாப்பரேட்டிவ் ஸ்டோர், டேய்ரி, பேக்கன் பாக்டரி, முட்டை ஸ்டோர் உண்டு. கோழி, தேனீ, குதிரை, ஆடுமாடு, இன்னம் சகலமும் வளர்க்க, விற்க, உபயோகிக்க, கொவாப்பரேட்டிவ் ஏற்பாடுதான்.

1865-ம் ௵த்தில் லுஜாட்டி (Luzatti) என்பவர் இத்தாலியாவில் (Popular Bank) பாப்புலர் பாங்க் ஏற்படுத்தியதிலிருந்து அங்கும் அது மெத்த அபிவிருத்தியடைந்தபடியால், 1906-ம் ௵ நடத்திய மிலான் கண்காட்சி சாலையில், கோவாப்பரேட்டிவ் ஏற்பாட்டின்படி, அபிவிருத்தியடைந்த தேசங்களுள் பிரான்சுக்கு இரண்டாவது இத்தாலியாதான் என தீர்மானித்தார்கள்.

நமது இந்தியாவிலும் சாதாரண ஜனங்கள் அநியாயவட்டி வாங்கும் மார்வாடிகள் மற்றும் சாவகாரிகளின் நிர்ப்பந்தத்தினால் தலையெடுக்காமல் உள்ளதைக் கொள்ளை கொடுத்து எளிமைத்தனமடைந்து வருகின்றனரென்பது யாரும் அறியாத காரியமல்ல. 1875-ய் வருஷத்தில் கூடிய (Deccan Ryots Commission) தக்ஷணதேசத் துரைத்தனத்தாருடைய கமிஷனிலும் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறது. ஒருதரம் சாவகார் கையில் சிக்கினவர்கள் கெட்டு நொந்தபிறகுதான் வெளியேறக்கூடும்.

அவர்களைச் சுதந்தரவாளிகளாக்க சர்க்காரும் பல பிரயத்தனங்கள் செய்து வந்தார்கள். அவைகளை இங்கு விஸ்தாரமாய்ச் சொல்ல முடியாது. 1895-ம் ௵த்தில், மதராஸ் கவர்ன்மென்டார், சர் பிரதரிக் நிக்கோல்ஸன் (Sir Frederick Nicholson) என்பவரை நியமித்து, கடன்காரர்களைப் பாதுகாத் திரட்சிக்கும் உத்தமமான வழியைக் கண்டுபிடிக்கத் திட்டம்செய்ய, அவர் கொவாப்ரேட்டிவ் சொஸைடிகள் ஏற்படுத்துவதுதான் இட்ரசண்ய மார்க்கம் என்று தீர்மானித்து. 1904-ம் ௵த்திலும் 1912-ம் ௵த்திலும் கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி ஆக்டுகள் பாஸ் செய்து, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ராஜதானிக்கும் ரிஜிஸ்தரார்களை நியமித்து, சகல அந்தஸ்தினருள்ளும் சங்கங்களை ஸ்தாபித்து, அச்சங்கங்களுக்குப் பலவிதமான அநுகூலாதிகளை ஏற்படுத்தி, அவைகளைச் செல்வபுத்திரர்களைப்போல் பரிபாலித்து வருகிறார்கள்.

நமது நாட்டில் இச்சொஸைட்டிகள் வெகுவாய் பிரபல்யமடைந்து வருகின்றன.

ஜெர்மனியில் 30 சங்கங்கள் ஸ்தாபிக்க 30 வருஷமும், ஆஸ்திரியாவில் 15 சங்கங்கள் ஸ்தாபிக்க 10 வருஷமும் பிடித்தனவாம். ஒற்றுமையும் நாகரீகமும், சாதனையுமுள்ள அத்தேசங்களில் அவ்வளவு நிதானமாயிருக்க, இங்குமாத்திரம் 13 வருஷத்திற்குள் 17,327 சங்கங்கள் உண்டாகக் காரணம், ஜனங்களின் உள்ளுணர்ச்சியான கட்டுப்பாடுதான். குடும்பக்கட்டு, கிராமக்கட்டு, ஜாதிக்கட்டு, தொழில்கட்டு முதலியவைகளே.

சாதாரண ஜனங்களுக்கு அவசரத்திற்கு கடன்வாங்கவோ, அல்லது தங்கள் மிச்சத்தைச் சேர்த்துவைக்கவோ, ஒரு பாங்கி வேண்டியதுதானே. கிராமங்களிலும் பட்டணங்களிலும் பேராசை பிடித்தவர்கள், ஜனோபகாரிகளென அபிநயித்து அநியாய வட்டிவாங்கி அட்டையைப்போல் அவர்கள் இரத்தத்தை உறிஞ்சிவிடுவார்கள். கிருஷிகனுக்குக் கடன்கொடுத்து, விளைச்சல் அனைத்தையும் பறித்துக்கொள்ளுவார்கள். நிலங்களைக் கைப்பற்றிக்கொள்வார்கள். பண்ணையாட்களின் மேல் கடன்கொடுத்து அவர்களைத் தங்கள் அடிமையாக்கிக்கொள்வார்கள். அவர்கள் மீள வழியறியாமல் அதோகதியாவார்கள். பட்டணங்களில் மார்வாடி கடைகள் பெருத்தாப்போல் எக்கடைகளும் பெருக்கவில்லை. ரூபாய்க்கு மாதத்திற்கு 1 அணா, 2 அணா, 4 அணா, வட்டிவாங்குவார்கள். வீடோ வாசலோ, நகையோ நட்டோ, கழுத்திலிருக்கும் தாலியோ, தட்டுமுட்டுச் சாமானோ, சாப்பிடும் பாத்திரமோ, துணிமணியோ, அப்போதுதான்

உடம்பிலிருந்து கழற்றிய ஆடையோ, சகலத்தையும் ஈவு இரக்கமின்றி ஈடுவைத்துக்கொண்டு அநியாய வட்டியேற்றி, திருட்டுக் கணக்கெழுதி, ஒன்றுக்கிரண்டாய் ஏமாற்றி, சகலத்தையும் பறிமுதல் செய்து ஜனங்களை ஓட்டாண்டியாக்குவார்கள். சில சில்லறை வர்த்தகர்கள் ஒரு நாளைக்கு ஒரு ஒற்றை ரூபாய்க்கு 2 அணா, 4 அணா, வாங்குவதுமுண்டு. வேறு சிலர் நம்பிக்கையுள்ள பேர்வழிகளுக்கு அல்லது கொஞ்சம் சொத்துள்ளவர்களுக்குக் கடன்கொடுத்து, “அப்பா முதலைப் பற்றி எனக்கு அக்கரையில்லை; முதல் கொடுத்தாலும் நான் சில்லறையாய்ப் பெற்றுக் கொள்ளமாட்டேன்; வட்டியைமாத்திரம் கட்டிவா; அல்லது அது தவறினும் பரவாயில்லை” யென பரோபகாரிகளைப்போல் பாசாங்குசெய்து, எப்போதும் சொத்தைப் பறிக்கவே கண்ணாயிருப்பார்கள். சிலர் 4 ரூபாய் ஜவளியைக் கடன் என்று ஆளுக்குத்தக்கபடி 6 ரூபாய் 8 ரூபாய்க்கு விற்று, வியாபாரம் செய்வார்கள். இப்படியெல்லாம் சுயநலத்தின்மேல் அபரிமிதமான ஆசைவைத்து ஜனங்களை வாட்டி நெருக்கும் சாவகாரிகளிடமிருந்து தப்பிப்பிழைக்கும் வழியெங்கே? எத்தனை நாளைக்கு கடன் என்னும் படுகுழியில் விழுந்து கிடக்கிறது? எத்தனை நாளைக்கு ஒவ்வொரு அவசர சமயத்திலும் அந்நியரிடம்போய் “ஐயா, அப்பா” என்று பல்லைக்காட்டிக் கெஞ்சுகிறது? இருக்கும் அற்பசொற்ப ஆபரணாதிகளை, துணிமணி வஸ்திரங்களை அபாயமின்றி எப்படிக் காப்பாற்றுகிறது? வீண்செலவைத் தவிர்த்துச் செட்டுத்தனத்தை யனுசரித்து நாலு காசாவது சேர்த்துவைப்பதெங்ஙனம்? கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி ஏற்படுத்திக் கொள்வதினால்தான். ஏனெனில்:

கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியானது

1. செட்டுத்தனம் படிப்பிக்கும் பள்ளிக்கூடம்.

2. முதலுக்கு மோசமின்றி, நல்ல வட்டி தரும பாங்கி.

3. பணக்காரரும், மத்திய அந்தஸ்திலிருக்கிறவர்களும், ஏழைகளும், தங்கள் தங்கள் சௌகரியப்படி லேவாதேவி செய்யத்தக்க ஏற்பாடு.

4. அநுகூலமான கிஸ்தியின்படி குறைந்த வட்டிக்குக் கடன் தரும் சாவகாரி.

5. அப்படி வந்த வட்டி லாபத்தை மெம்பர்களுக்கே பங்கிட்டுத் தரும் தர்மப்பிரபு.

சாவகாரி, கடனின் நிபந்தனையையும் வட்டித் தொகையையும் தனக்கு லாபம் வரும் விதமாய் ஏற்படுத்திக்கொள்ளுகிறான்.

கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியானதோ முதலுக்கு மாத்திரம் மோசம் வாராதபடி எதையும் ஜன சகாயத்தை நாடி ஏற்படுத்துகிறது.

கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியினால் ஜனங்களுக்கு அவ்வளவு பிரயோஜனமுண்டாகிறபடியாலும், அதனால் ஜனங்களின் குணம் மாறி, ஒழுக்க நிலைமை உயர்வதினாலும், சர்க்கார் இதற்கு அடியில் கண்டிருக்கும் விசேஷ சுதந்திரங்களை அநுக்கிரகித்திருக்கிறார்கள்.

1. இதன் மெம்பர் கந்தாய பாக்கி, வாடகை பாக்கி தவிர மற்றப்படி கொவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை முதலில் கொடுத்துத் தீர்த்தபிறகுதான் வேறெந்தக் கடன்காரருக்கும் அவன்மேல் அக்குண்டு.

2. கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி தனக்கு வரவேண்டிய பாக்கியை முதலில் கழித்துக்கொண்டு, பிறகு மெம்பருக்குச் சேரவேண்டிய ஷேர், டிவிடெண்டு, போனஸ், லாபம், டிபாசிட்டு, வட்டி முதலிய தொகையைக் கொடுக்கும்.

3. இதை அநுசரித்து கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் ஷேர், டிபாசிட், வட்டி முதலிய எந்தப் பணத்தின்மேலும் எந்த கடன்காரருக்கும் இன்சால்வென்ஸீ ஆக்டுக்கும் சுதந்தரமில்லை. அவர்களுக்கு எந்தக் கோர்ட்டும் டிக்ரீ கொடுக்க முடியாது.

4. கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியானது தன்னிடம் கடன் வாங்கினவர்களின்மேல் தொடுக்கும் வியாஜ்ஜியத்தில்

ஆபீசு கணக்கு புஸ்தகங்களைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோகாமலே அதிலிருந்து வேண்டியதைப் பேர்த்தெழுதி அத்தாட்சியுடன் கோர்ட்டுக்கு அனுப்பக்கூடும்.

5. கொவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்குச் சம்பந்தப்பட்ட ஷேர், டிபன்சர் முதலியவைகளை அவசியம் ரிஜிஸ்தர் செய்யவேண்டு மென்னும் கட்டாயமில்லை.

6. கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் இருக்கும் பணத்திற்கு இன்கம் டாக்ஸ் கொடுக்க வேண்டியதில்லை.

7. இதில் கடன் வாங்கும்போது முத்திரைக் கடிதாசியில் பத்திரம் எழுத வேண்டியதில்லை.

8. அப்படி எழுதிய பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்யும்போது பீஸ், கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

சமீபத்தில் பெங்களூரில், புதுவை, சென்னை அதிமேற்றிராணிமார்களும், மைசூர், மைலாப்பூர், திருச்சினாப்பள்ளி, கொயம்பத்தூர், கும்பகோணம், மங்களூர் மேற்றிராணிமார்களும் கிறிஸ்தவ ஜன சமூகாபிவிருத்தி சம்பந்தமாய் நடத்திய ஆலோசனை சங்கத்திலும் கொவாப்பரேட்டிவ் விஷயமாய்ப் பேசி, அதன் மட்டில் தாங்கள் சம்பூரண அநுதாபங்கொள்ளுவதுடன், கிறிஸ்துவர்களிடையில் அதனை ஸ்தாபிக்கச் சந்தோஷமாய் உற்சாகங் கொள்ளுவதாகவும் முடிவுகட்டினார்கள். 1911-ம் வரு டிசம்பர்மீ 13-ம் தேதி நடத்திய டில்லி தர்பாரில் நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி (கடவுள் அவரை என்றும் ஆதரிப்பாராக). தாம் இந்திய அரசர்களுக்கும், பிரஜைகளுக்கும் விடுத்த நிருபத்தில் "ஐக்கிய ஏற்பாடானது சம்பூரணமாய் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, பிரயோகிக்கப்பட்டு வந்தால் (அதாவது ஏராளமாய் ஜனங்கள் இடையில்கொவாப்பரேட்டிவ்சொஸைட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டு கிரமமாய் நடத்தப்பட்டு வந்தால்) தேசத்தின் கிருஷிக காரியாதிகளுக்கு, ஒரு பெருத்த மகிமை தங்கிய காலத்தை எதிர்பார்க்கிறேன்" என்றார்.

காரியம் இப்படியாகையால், இந்துக்களுள் ஏராளமாய்ப் பரவி அவர்களுக்கு அத்தியந்த பிரயோஜனத்தை உண்டு பண்ணிவரும் கொவாப்ரேட்டிவ் ஏற்பாட்டை நமது கிறீஸ்துவர்களும் கவனித்து தங்களிடையில் ஸ்தாபித்துவந்தால் மெத்த பயனுண்டாகும்.

நெருக்கப்பட்டவர்களை உயர்த்தவும் பல ஈனர்களுக்கு உதவிசெய்யவும் அவர்களுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லுகளைப் போல் இருந்து அவர்களை ஆழ அமிழ்த்தும் தரித்திரம், கடன் நிர்பாக்கியம் முதலியவைகளிலிருந்து அவர்களை விடுவிக்கவும், பல ஊர்களில் பல எத்தனங்களைக் கையாடினார்கள். இவைகளனைத்திலுமில்லாத ஒரு விசேஷம் கொவாப்ரேட்டிவ்சொஸைட்டியில் அடங்கி யிருக்கிறது. அது ஏதெனில், ஜனங்களுக்குச் சகாயம் செய்யும்போதே அது அவர்களுடைய வழக்கப் பழக்கங்களை மாற்றி, ஒழுக்க முறைமைகளை உயர்த்தி, அவர்களை ஜனங்க சீர்திருத்தத்திற் கடுத்த காரியங்களில் பயிற்சி செய்துவருவதால், அவர்கள் சீக்கிரத்தில் முன்னுக்குவந்து அபிவிருத்தி யடைவார்கள். ஏனென்றால் இவை சகல முன்னேற்றத்தையும் நல்லொழுக்க முறைகளையும் நற்பழக்கங்களையும், செட்டுத்தனம், கல்வி, முதலியவைகளையுமே ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன.

(தொடரும்.)

இந்திய கிறீஸ்துவன்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

குருநாகலில் நடந்த பாஸ்குத் திருவிழா.

இலங்கைத்தீவின் ஒரு பாகமாகிய குருநாகலில் அர்ச். அன்னம்மாளின் பரிசுத்த தேவாலயத்தில் பாஸ்குப் பண்டிகை மற்ற வருஷங்களைவிட இந்த வருஷம் பரதகுலத்தவர்களால் மிகவுஞ் சிறப்பாயும் ஆடம்பரமாயுங் கொண்டாடப்பட்டது. 5-ந் தேதி பெரிய வியாழக்கிழமை பாட்டுப்பூசை வைத்துப் பிரசங்கமுஞ் செய்யப்பட்டது. அன்றுதினத்தில் அநேகம் பேர்கள் திவ்வியநன்மை வாங்கினார்கள். பூசை முடிந்ததும் திவ்வியநற்கருணை சுற்றுப்பிரகாரத்துடன் பாஞ் ஜேலிங்குவா என்கிற லத்தீன் பாட்டுப் பாடி பரதகுலத்தவர்களால் 20 அடிக்குமேல் மிகவுங் கெம்பீரமாய் அமைக்கப்பட்டிருக்கும் பீடத்தில் திவ்விய நற்கருணை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அன்றையத் தினத்தில் தமிழிலும், லத்தீனிலும், சிங்களத்திலும் பாட்டுகள் மிகவும் பத்தியுடனும் அமரிக்கையுடனும் பாடப்பட்டன.

6-ந் தேதி பெரிய வெள்ளிக்கிழமை பூசை முடிந்ததும் பெரிய சிலுவைப்பாதையுடன் ஸ்தாபாத்மாத்தர் என்கிற லத்தீன் பாட்டுப்பாடல் நடை பெற்றது. சாயுங்காலம் 3-மணிக்கு சேசுநாதசுவாமி சிலுவையிலறையுண்ட பாஸ்கு காட்டி 5-மணிக்கு ஆசந்திச் சுற்றுப்பிரகாரம் மிகவும் உருக்கத்துடன் நடைபெற்றது.

7-ந் தேதி பெரிய சனிக்கிழமை யன்று பாட்டுப் பூசையும் செய்யப்பட்டது.

8-ந் தேதியாகிய உயிர்த்த ஞாயிறன்று காலை 8½-மணிக்கு கனம் பொருந்திய மொண்டெக் கென்னும் சுவாமியார் அவர்களால் பாட்டுப்பூசை பாடப்பட்டு பிரசங்கமுஞ் செய்யப்பட்டது. அச்சமயத்தில் அவ்வாலயத்தின்கண் விளங்கிய விசித்திராலங்கிர்த காட்சியின் மாட்சிமையை வியக்தமாய் விவரிக்க யான் அருகனல்லேன். திவ்விய பலிபீடமோ அநேக மெழுகு வர்த்திகளின் ஜோதிச் சுடர்களினால் சுவாலிக்க, மிக்க சுகந்த சிறந்த பற்பல நறுமலர்களினால் அலங்கரிக்கப்பட்ட இதன் மத்தியில் ஓர் மகோன்னத ஆசனத்தில் எமை மீட்டு இரட்சித்த சேசுநசரேன் தம்முடைய வெற்றிக் கொடியுடன் துலங்கினார். இஃதன்றி தேவதூத்ய சங்கீத கானத்தைச் செவிமடுத்த விசுவாசிகள் பூவுலகில் தாமிருக்கின்றோமென்பதை மறக்க, வான்சுரக்கும் தேவ அருள் பெற, பாவ இருள்பரவிய இதயகமலங்கள் திறக்க, கோவிலினுட்புறமோ நானாவித ஜோடினைகளால் சிறக்க, வெளிப்புறத்திலோ பலவர்ண துவஜங்கள் ஆதாயமளாவிப் பறக்க, ஆனந்த வாருதியி லமிழ்ந்தினர் ஆங்கு கூடிய எவருமே. பூசை முடிந்ததும் கிரேட் இந்தியனபாண்டு வாத்தியத்துடனும் லத்தீன் பாடல்களுடனும் நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் சுவாமி தம் வெற்றிக் கொடியோடு வெளியிற் சுற்றுப்பிரகாரம் வந்தார். இதன் பிறகு சாயந்திரம் 5-மணிக்கு சற்குணசீலராகிய, சங்கை நிறைந்த பங்கு சுவாமியார் பி. மசியெத் அவர்களால் திவ்விய நற்கருணை

ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. ஆசீர்வாதம் முடிந்ததும் இவ்வுற்சவத்திற்காக பண உதவி செய்தவர்களுக்கும் இவ்விஷயத்தில் அதிகச்சிரமம் எடுத்தவர்களுக்கும், அவர்களுடைய குடும்பம் மென்மேலும் பெருகி வாழும்படிக்கும் கனம் பங்கு சுவாமியார் அவர்கள் ஆசிர்வாதமளித்தார்.

இவ்வரிய திவ்விய மகோற்சவத்தைச் சிறப்பாய் நடக்கச்செய்த பரமகடவுளுக்கு சகல புகழும் ஸ்தோத்திரமும் உண்டாகக்கடவது.

இப்படிக்கு,

சேசு நசரேனின் அடியானாகிய,

பரதன்.

Kurunegala, 17th April, 1917.

எண்ணூர்
அர்ச். சூசையப்பர் தேவாலயத்தின் தங்க ஜூபிலியும் அதன் வருடாந்தர உற்சவக் கொண்டாட்டமும்.

தென்னிந்தியாவில் சிறப்புற்றோங்கும் சென்னைக்கு வட திசையில் 10 மைல் கண்ணெனத் திகழும் எண்ணூர் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிரா நின்ற அர்ச். சூசையப்பர் தேவாலயத்தின் வருடாந்திர உற்சவத்துக்காக சென்ற எப்பிரல்மீ 19உ வியாழக்கிழமை கொடியேற்றஞ் செய்து அன்று முதல் 10 நாளைக்கு காலை திவ்வியபூசையும் மாலை பிரார்த்தனை சுரூப ஆசீர்வாதமும் தேர் சுற்றுப்பிரகாரமும் நடந்தேறின. கடைசி மூன்று தினங்களில் திரிதூயம் நடந்தபோது திவ்யநற்கருணை ஆசீர்வாதமிருந்தது. சங்கை L. X. பெர்நாந்தீஸ் சுவாமியாரவர்களால் பிரசங்கம்செய்யப்பட்டது. இவ் வைபவத்துடன் ஷை தேவாலயத்தின் தங்க ஜூபிலியும் கொண்டாடப்பட்டது. எப்பிரல்மீ 27உ வெள்ளிக்கிழமை முழுதும் பீடத்தில் திவ்ய நற்கருணை ஸ்தாபிதஞ் செய்யப்பட்டு அநேக கிறீஸ்துவர்களால் ஆராதிக்கப்பட்டது. சென்னை அதிமேற்றிராணியார் J. Aelen ஆண்டவரவர்கள் தமது காரியதரிசி சங்கை. A. Merkes சுவாமியாருடன் 28உ சனிக்கிழமை காலையில் எண்ணூருக்கு விஜயஞ் செய்தார். அப்போது ம-௱-௱-ஸ்ரீ சி. துரைசாமி பிள்ளை அவர்களால் இவர்களது வருகை யெதிர்பார்க்கப்பட்டு, கனம் தங்கிய C. G. Higginbotham துரையவர்களுடைய பங்களாவுக்கு அழைத்துப்போகப்பட்டார்

கள். அன்று மாலை அதிமேற்றிராணியாரவர்களால் வேஸ்பராவும், பிரசங்கமும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறின. பிரசங்கத்தில் அர்ச். சூசையப்பர் மகிமையுள்ளவரென்றும், அத்தேவாலயம் 1867-ம் வருஷத்தில் சென்னை தலைமை உப்பளம் சூப்பிரண்டென்டாயிருந்த ம-௱-௱-ஸ்ரீ மு. சின்னசாமி பிள்ளை அவர்களால் கட்டப்பட்டதென்றும், அவர் காலத்துக்குப்பின் அவர் குமாரர் துரைசாமி பிள்ளையால் விமரிசையாய் வருடாந்தர உற்சவங்களும் தற்போது தங்க ஜூபிலியும் நடத்தப்பட்டதென்றும், அவர் குடும்பத்தையும்—இதற்காக பிரயாசை யெடுத்துக் கொண்டவர்களையும், பொருளுதவி செய்தவர்களையும் அர்ச். சூசையப்ப ராசீர்வதிப்பாரென்றும் புகழ்ந்து பேசினர். M. & S. M., ரயில்வே வாலண்டீயர் முழு பாண்டும், இதர வாத்தியங்களும் முழங்கின. பிறகு ஏழு தேர் எழுந்தருள் படியாயின. அவற்றுள் அர்ச். சூசையப்பர் தேர் மகா அலங்கிர்தமாக அனேக மெழுகு திரிகளின் வெளிச்சத்தினால் ஜொலித்தன. அதிமேற்றிராணியாரவர்கள் தேவாலயத்துக்கு வந்து 4,000-க்கு மேற்பட்ட கிறீஸ்துவர்களின் விசுவாசத்தைக் கண்டு மிகவும் களிப்படைந்தனர். சங்கை Fernandes சுவாமியாரவர்கள் அர்ச். சூசையப்பருடைய வளத்தைப்பற்றி சித்ர விசித்ரமான ரூபங்களைக் காட்டும் ஓர்வித விநோத விளக்கினால் விவரித்துக் காட்டினார். பாண வேடிக்கைகளும் அதிர் வேட்டுகளும் அண்டங் கலங்கச் செய்தன. மறு தினம் ஞாயிறு காலை முதற்பூசை முடிந்தவுடன் தேர் சுற்றுப்பிரகாரம் வந்தபின் அதிமேற்றிராணியாரவர்களால் பெரிய பாட்டுப்பூசையும் Te Deum என்னும் நன்றியறிதலான தேவ ஸ்துதி பாடலும், பிறகு திவ்யநற்கருணை யாசீர்வாதமு மிருந்தன. பின்னர் ராயபுரம் மகா-௱-௱-ஸ்ரீ கெ. டி. துரைசாமி பிள்ளை குமாரராகிய P. D. சவரிமுத்து பிள்ளையால் வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப்பட்டது. அதற்கு அதிமேற்றிராணியாரவர்கள் தக்க மறுமொழி சொன்னார்கள். எல்லா ஏழைகளுக்கும சாப்பாடு போடப்பட்டு சிலருக்கு துணிமணிகளும் கொடுக்கப்பட்டன. அன்று மாலை அதிமேற்றிராணியாரவர்கள் 11 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதலளித்தனர். மறு தினம் திங்கட்கிழமை காலை ஷை தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ முத்து சின்னசாமி பிள்ளை அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசை செய்து அவர் கல்லறையையும் மந்திரித்தார். எண்ணூர் விசாரணைக் குரு S. M. F. Ignatius சுவாமியாரவர்கள் இவ்வைபவங்களுக்காக அதிக பிரயாசை யெடுத்துக்கொண்டார்.

தம்முடைய ஆளுகையி லுட்பட்ட சகல கிறீஸ்துவர்களையும் வழுவின்றி நடாத்திவர நமது அதிமேற்றிராணியாரவர்களுக்கு நீடிய ஆயுளையும் நல்ல சுகத்தையும் தந்து காப்பாற்றும்படி சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனைப் பிரார்த்திப்போமாக.

பு. போ. கனகரத்தினம் பிள்ளை.

[மற்றக் கடிதங்கள் அடுத்த மாதம் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

ஜனன நாள்.—இம்மாதம் நாலாம் தேதி நமது சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் அரசர் பிறந்த நாள். அந்நாளில் நாம் அவருக்கு சோபனங் கூறுவதோடு கூட அவர் பல்லாண்டு திடகாத்திரராய் பிரக்கியாதியோடு அரசாளவுங் கோருகிறோம்.

உனக்குத் தெரியாமல் உன்னோடிருக்கிறவர்கள் எத்தனை பேயர்?—ஐந்து பெயர்; அவர்கள் யாரென்றால், பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய பரிசுத்த திரீத்துவத்தின் மூன்று தேவ ஆட்களும், உன் காவலான சம்மனசும், உனக்குத் தந்திர சோதனைகளைக் கொடுக்கும் பசாசுமாகிய இவர்கள் ஐவராமே.

இரண்டு ரூபாய் நோட்டுகள்.—சிலோனில் ஏறக்குறைய 5 இலட்சம் ரூபாய் பெறுமான இரண்டு ரூபாய் நோட்டுகளை அச்சடித்து வழங்கிவருகிறார்களாம். 3 இலட்சம பாங்குகளிலும், 2 இலட்சம் கச்சேரிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நமது இந்தியாவிலும் 1 ரூபாய் பெறுமான நோட்டுகள் பிறப்பிக்கபபோவதாயிருந்த வதந்தி இன்னும் அமலுக்கு வரவில்லை போலும்.

மூங்கிற்பூ.—மூங்கில்களில் பலவித முண்டு. பர்மா தேசத்திலுள்ள ஓர் வித மூங்கில் 56 அல்லது 57 வருடங்களுக்கோர் முறை பூர்க்கின்றதாம். 1859 அல்லது 1860-ம் ஆண்டில் பூர்த்த ஓர் வித மூங்கில் இவ் வருஷம் பூர்த்திருக்கின்றதென்று சொல்லப்படுகிறது. இதன் பிறகு இவ்வித மூங்கில் 1972 அல்லது 1973-ம் வருஷத்தில் பூர்க்கும்போலும். இதற்குள்ளாக நாமெல்லோரும் எங்கிருப்போமோ!!

நூதன யுத்தப்கப்பல்.—இத்தாலியா கவர்ன்மெண்டார் ஓர் புதுமாதிரியான யுத்தக்கப்பலைச் செய்திருக்கிறார்கள். சமுத்திரத்தில் அது செல்லும்போது தண்ணீரைப் பலமாய்ப் பிளந்துகொண்டு மிக்க வேகமாய்ச் செல்லுவதைப்பற்றி தண்ணீர் நொங்கு நுரையுடன் அலைகளாக அநேக மைல் தூரத்துக்குக் கிளம்பி அடித்து மோதி விழுகின்றதாம். இக்கப்பல் மணியொன்றுக்கு 100 மைல் தூரம் செல்லுவதாகச் சொல்லப்படுகிறது. சப்மரின்களினாலாவது வெடிகுண்டுகளினாலாவது இதற்கு அபாயம் வருவிக்க முடியாதாம்.

மகாபெரிய டிராம்ரோடு.—அமெரிக்காவில் புவனோஸ்அயர்ஸ் என்னும் பட்டணத்திலுள்ள டிராம்வண்டி ரோடுதான் உலகத்திலுள்ள மற்றெல்லா டிராம்வண்டி ரோடுகளைவிட அதிகபெரிய ரோடென்று சொல்லப்படுகிறது. அங்கே இந்த வண்டிகள் 300 மைல் தூரம் ஓடுகின்றன. நாளொன்றுக்கு 2,000 வண்டிகளுக்குக் குறையாமல் ஓடுகிறபடியால் அந்த டிராம் கம்பெனியாருக்கு வருடமொன்றுக்குக் கிடைக்கும் இலாபம் 22 இலட்சம் பவுன், அதாவது சற்றேறக்குறைய 3 கோடியே 30 இலட்சம் ரூபாயாகிறது.

ஓர் சிறுவனின் பக்தி.—யார்கென்னும் ஓர் ஊரில் சிறிய ஏழைப்பையன் ஒருவன் பீடம் ஒன்றை நிர்மானித்துச் சிங்காரிக்கத் தன்னிடம் ஒன்று மில்லாததைப் பற்றி தன்னுடைய கைக்குட்டையைத் தரையில் விரித்து அதன்பேரில் கடிதச் சிலுவை யொன்றைச் செய்துவைத்து, கத்திரிச்சால்களுக்குப் பதிலாய் இரண்டு உடைந்த சீசாக்களை உபயோகித்துக்கொண்டு அப் பீடத்தைச் சிங்காரித்தானாம். இப் பையனுடைய இச் செய்கை ஓர் விளையாட்டைப் போன்றதென்றாலும் அவன் நல்ல கருத்தோடு தன்னாற் கூடியதைச் செய்தானாகையால் சர்வேசுரனுக்கு மிக்கப் பிரியமான காரியத்தைச் செய்தானென்பதற் கையமில்லை.

புத்தக விளம்பரங்கள்.—"நல்ல ஆயன் சோலை" என்னும் ஜெபப்புத்தகத்தின் 3-ம் பதிப்பு அச்சிட்டு விலைக்குத் தயாராயிருக்கின்றது. இப்பதிப்பில் மற்ற இரண்டு பதிப்புகளிலு மிருந்த ஜெபங்களை விட அதிக ஜெபங்களும் பிரார்த்தனைகளு மிருக்கின்றன. கலிக்கோ கட்டிடம் விலை அணா 7; தோல் கட்டிடம் அணா 9 — பொம்பேயிமாதா நவநாட் செபப்புத்தகமும் இன்னும் இரண்டோர் வாரத்தில் விலைக்குத் தயாராயிருக்கும். விலை $2\frac{1}{2}$ அணா. பாடசாலைகளுக்கான ஞானோபதேசத்தின் முதல் நம்பர் (1st No.) புத்தகங்கள் விலையாகி விட்டபடியால் அதன் இரண்டாவது பதிப்பு அச்சிலிருக்கிறது. கூடியசீக்கிரத்தில் வெளியாகும்.

கிறீஸ்துவர்களுக்கோர் நல்ல செய்தி.—நமதாண்டவர் பாடுபட்டு மரித்த நாடான பலஸ்தீனா நாடு இதுவரையிலும் துருக்கியர் வசமிருந்ததென்று நாமெல்லோரும் அறிவோம். தற்போது நடக்கும் யுத்தத்தின் காரணமாய் ஏறக்குறைய அந்நாடு முழுதும் நமது அரசர் வசமாகிவிட்டது. நம்மெல்லோருக்கும் எவ்வளவோ நல்ல செய்தி!! ஆங்கிலேய படைகள் துருக்கிய சேனைகளை அந்நாட்டுக்கு வெளியே இன்னும் துரத்திக்கொண்டே போவதுமல்லாமல், தாங்கள் துவக்கின ரெயில் பாதை வேலையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டும் போகிறார்கள். புண்ய க்ஷேத்திரமென பெயர் பெற்று விளங்கும் பலஸ்தீனா நாடு முழுதும் அவிசுவாசிகளான துருக்கியர் வசமிராமல் ஆங்கிலேய அரசாட்சிக்குட்படும்படி சர்வேசுரன் சித்தங் கொள்வாராக.

கண்போனாலும் போகட்டும்.—ஓர் பெரியவர் தன் கண்பார்வை மத்திபமடைந்து வருவதைக்கண்டு, பரிகாரம் செய்துகொள்ள விரும்பி கண் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அங்கு அவருடைய கண்

களைப் பரிசோதித்த டாக்டர் துரை "நீ மதுபானம் செய்வதை இன்றுமுதல் நிறுத்தாவிடில் அகத்தியம் உன் கண் பார்வையை முற்றும் இழந்துபோவாய் என்றார்." அதற்கு அவர் "ஐயா, நானோ அதிக கிழவனாகிவிட்டேன். மேலும் இந்தக் கண்களால் நான் பார்க்கவேண்டியவைகள் யாவையும் பார்த்துவிட்டேன். ஆகையால் என் கண் போனாலும் போகட்டும் நான் மட்டும் என் குடியை விடேன்" னென்று சொல்லிக்கொண்டே போய்விட்டானாம். என்னே குடியின் சமர்த்தும் ஒட்டாரமும்!!

ஓர் விநோத யந்திரம்.—அமெரிக்காவில் புதிதாய்க்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற இந்த யந்திரத்தினால் தண்ணீருக்குள் 2,000 அடி தூரம் பார்க்கக் கூடுமாம். சமுத்திரத்திற் செல்லும் கப்பல்களுக்கு சப்மரின்களினாலும் சுரங்கங்களினாலும் யாதோர் மோசம் வராதபடித் தடுக்க இந்த யந்திரம் மிக்கப் பிரயோசனப்படுகின்றது. பார்வைக்கு இது, சப்மரீன்களில் வைக்கப்பட்டிருக்கிற பெரிஸ்கோப் என்னும் கருவியைப்போலிருக்கின்றதாம். கப்பல் ஓடுகையில் ஒருவன் இந்த யந்திரத்துக்கருகிலிருந்துகொண்டு அதற்குச் சமீபமாய்த் தண்ணீருக்குள் பொருத்தப்பட்டிருக்கிற மின்சார விளக்கின் வெளிச்சத்தைக்கொண்டு 2,000 அடி தூரத்துக்குள்ளுள்ள சப்மரீனை அல்லது சுரங்கங்களைக் கண்டுபிடித்து அவைகளைச்சுட்டு நாசமாக்கும்படி அதில் வைக்கப்பட்டிருக்கிற சூஸ்திரப் பீரங்கியை உபயோகிக்கிறானாம்.

ஜர்மனியரின் அக்கிரமச்செய்கை.—ஜர்மனியரிடம் சிறைப்படும் போர்வீரர்களை, அவர்கள் மெத்தகொடுமை செய்கின்றனர். சமீபத்தில் அவர்கள் சிறையாக பிடித்த ருஷிய சேனையைச் சேர்ந்த 60 ஆபீஸர்களையும் 250 போர்வீரர்களையும் ஜர்மனியபடைகளுடன் சேர்த்து பிராஞ்சுக்காரரை எதிர்த்து தாக்கும்படி சொன்ன ஜர்மனி ஆபீசரின் கட்டளைக்கு அவர்கள் சம்மதப்படாமல் போனபடியால் அந்த ஆபீசர் தன்னுடைய போர்வீரர்களை யழைத்து அந்த 60 ருஷிய ஆபீசர்களை அடித்துக் கொன்றுபோடும்படி உத்தரவளிக்க, அந்தச் சேவகரும் அக் கட்டளைப்படியே தங்களுடைய துப்பாக்கிகளைத் திருப்பிக்கொண்டு, தடியால் அடிக்கும் விதமாக ஒன்றரை மணிநேரம் வரையில் அடிக்கவே, அவர்களின் எலும்புகள் முறிபட்டு சதைப் பிய்ந்து இரத்தம் பீரிட்டடிக்க மரித்துபோனார்கள். அந்தப் பிரேதங்களை ஒன்றின்மேலொன்றாக நிலத்தில் பரப்பி அவைகளின்மேல் குதிரை ஏறி சவாரி விட்டார்களாம். என்ன அக்கிரமமான செய்கை!!

பரிசுத்த பாப்புமார்கள்.—திருச்சபையின் தலைவரான அர்ச். இராயப்பருக்குப்பின் நாளது வரையில் அவருடைய ஸ்தானத்தில் பாப்புமாராக வந்தவர்கள் 260 பேர். இவர்களில் 82 பேர் அர்ச்சியசிஷ்டவர்கள், 33 பேர் வேதசாட்சிகள், 104 பேர் ரோமையர், 104 பேர் இத்தாலியாவின் வெவ்வேறு ஊர்களில் பிறந்தவர்கள். 15 பேர் பிராஞ்சுக்காரர், 9 பேர் கிரேக்கர், 7 பேர் ஜெர்மனியர், 5 பேர் ஆசியர், 3 பேர் ஆப்பிரிக்கர், 3 பேர் இஸ்பானியர், 2 பேர் தல்மாசியர், 1 எபிரேயர், 1 திராலியர், 1 டச்சுக்காரர், 1 போர்த்துகீஸர், 1 கான்டியர், 1 ஆங்கிலேயர். இவர்களில் ஒரு மாதத்துக்குங் குறைவாய் திருச்சபையை ஆண்டவர்கள் 9 பேர். ஒரு வருஷத்துக்குங் குறைவாய் ஆண்டவர்கள் 30 பேர். 20 வருடங்களுக்குமேல் ஆண்டவர்கள் 6 பேர், எல்லாரையும்விட அர்ச். இராயப்பரே அதிககாலம் அதாவது, அந்தியோக்கியாவிலே 7 வருடமும், உரோமாபுரியிலே 25 வருடம், 2 மாதம், 7 நாளாக 32 வருடங்களுக்கதிகமாய் அரசாண்டவர். அவருக்குப் பின் அதிககாலம் பாப்பானவராயிருந்தவர் ஒன்பதாம் பத்திநாதரென்றவர். இவர் 31 வருடம், 7 மாதம், 21 நாள் திருச்சபையை யரசாண்டார். இவரை யடுத்துப் பாப்புப்பட்டத்துக்கு வந்த 13-ம் சிங்கராயரென்ற பாப்பானவர் 25 வருடம் 5 மாதம் அரசாண்டார்.

பாப்பானவரின் புதிய ஸ்தானாதிபதி.—மிகவும் வந்திக்கத்தக்க "பீட்டர் புமசோனி-பியோன்டி" (His Excellency Mgr. Peter Fumasoni-Biondi) என்னும் ஆண்டவர் மிகவும் வந்திக்கத்தகக ஸெலஸ்கி ஆண்டவருக்குப் பதிலாய் பாப்பானவரின் ஸ்தானாதிபதியாக நியமனம் பெற்ற சங்கதியை நம்முடைய் சந்தாதாரர்கள் அறி

வார்கள். நிகழும் யுத்த காலத்தில் கப்பற் பிரயாணஞ் செய்வது மகா ஆபத்துக்குரியதா யிருப்பதை முன்னிட்டு இவர் க்ஷேமமாய் நம்முடைய தேசம் வந்து சேர்வாரோ என்னவோ வென்று ஐயரவுகொள்ள வேண்டியதாயிருந்தது. ஆயினும் தேவ கிருபையால் அவர் யாதோர் ஆபத்துமின்றி சென்ற மாதம் 6உ கொழும்பு வந்து சேர்ந்தாரென்று கேள்வியுற்றுமிக்கமனமகிழ்ச்சி கொள்ளுகிறோம். இவர் உரோமாபுரியை விட்டு சென்ற ஜனவரிமீ 13உ புறப்பட்டு மேற்சொன்னபடி ஆபத்துக்குத் தப்பித்துக்கொள்ள, வழக்கமான வழியாய் யாத்திரை செய்யாமல் சுற்று வழியாய் ஏறக்குறைய மூன்றரை மாத காலம் பிரயாணஞ் செய்ய நேரிட்டதைப்பற்றி, மிக்கத் தவித்துக் களைத்து கொழும்பு வந்து சேர்ந்தாரென்று சொல்லத் தேவையில்லை. பாப்பானவரின் புதிய ஸ்தானாதிபதியாகிய பியோன்டி ஆண்டவர் கீர்த்தியும் சிறப்பும் பெற்று விளங்குங் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் குடும்பம் பாப்புமார்களால் மிக்க சன்மானிக்கப்பட்டக் குடும்பம். தற்போது 78 பிராயமுள்ள இவருடைய தகப்பனார் காலஞ்சென்ற பரிசுத்த பிதா ஒன்பதாம் பத்திநாதருக்கு உண்மையும் நம்பிக்கையு முள்ளவராய் விளங்கினார். பியோன்டி ஆண்டவர் 45 பிராயமுள்ளவர். இவருக்கு ஓர் சகோதரரும் சகோதரியுமிருக்கிறார்கள். இவர் உரோமாபுரியிலே பிறந்து உரோமாபுரியிலே வளர்ந்து உரோமாபுரியிலே படித்தவர். உயரமாயும் ஒல்லியாயுமிருப்பது மன்றி பக்தியுள்ளவராயுங் காணப்படுகிறார், சென்ற 10-வருடங்களாக இவர் உரோமாபுரியிலுள்ள சத்திய வேத பரம்புதல் சபையில் அலுவலுடையவரா யிருந்தபடியால், நம்முடைய தேசத்தில் சத்திய திருச்சபை யிருக்கும் நிலைமையையும், அதன் விருத்திக்காக வேண்டிய விஷயங்களையும் நன்கறிந்தவர். ஆனது பற்றி இவர் நம்முடைய முன்னேற்றத்துக்காக மிக்க பிரயாசையுடனும் சிரத்தையுடனும் உழைப்பாரென்பது திண்ணம். "நல்ல ஆயன்" இவருக்கு மனமுவந்து நல் வரவு கூறுவதுடன் நல்ல ஆயனை நமதாண்டவர் இவருக்கு நல்ல சுகத்தோடு கூடிய நீடிய ஆயுளை யளித்துக் காத்துக் காப்பாற்ற கிருபைசெய்ய வேண்டுமென்று இரந்து நிற்கின்றது.

தின்மையிலிருந்து நன்மை விளைகின்றது.—பவேரியா தேசத்தில் ருஷிய, ஆங்கிலேய, பிராஞ்சிய கைதிகள் இருபதினாயிரம் பேரிருக்கிறார்களாம். இவர்களுக்கு உண்டாயிருக்கிற பக்தியும் தேவபயமும் மிக்க மெச்சத்தக்கதே. இவர்களிருக்குமிடத்தில் காலை $4\frac{1}{2}$ மணிமுதல் 8 மணி வரையிலும் திவ்ய பூசைகள் நடைபெறுகின்றன. நாடோறும் 400 பேருக்குக் குறையாமலே திவ்யநற்கருணை உட்கொண்டு வருகிறார்கள். பெர்லின் நகருக்குச் சமீபத்தில் இன்னொரு மறியற்சாலையுண்டு. அங்கே ஆரம்பத்தில் 4 பேர் முதலாய் ஞாயிற்றுக்கிழமைகளில் திவ்ய நற்கருணை உட்கொள்ளவில்லை. இப்போதோ ஆயிரத்துக்கு அதிகமானபேர் திவ்ய நற்கருணை உட்கொண்டு வருகிறார்கள். மேலும் அனேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அனேகர் புதுநன்மைவாங்கினார்கள். இப்படியே யுத்தகளத்தில் நின்று போர் செய்கிறவர்களும் தேவ பயமுடையவர்களாகி விசுவாசத்தில் திடப்பட்டு வருகிறார்கள் இந்த யுத்தம் ஒழிந்த பிறகு இவர்களெல்லோரும் தம் தம் தேசஞ்சேர்வார்களேயானால் இவர்களுடைய நடத்தையானது அந்தந்த ஊரார்க்கெல்லோருக்கும் எவ்வளவோ நன்மாதிரிகையாயிருந்து அதிக நன்மை விளைவிக்கக்கூடியதாகும்!!

திருநாள் விளம்பரம்.—கோயம்பத்தூருக்கடுத்த பிலிய குளத்தில், பிங்கள ஆனிமீ 3-ம்தேதிக்குச்சரியான 1917-ம் வருஷம் ஜூன் மாதம் 17ந்தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று, பதுவைப் பதியரான அர்ச். அந்தோனியார் திருவிழா வெகு சிறப்புடன் கொண்டாடப்படும். திருவிழாவுக்கு முந்தின ஞாயிறு கொடியேற்றமும், திருவிழாவுக்கு முந்தின வெள்ளி சனி காலையில் பூசையும், சாயந்திரம் தேர் சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

M. S. MICHAEL.

"தயையாயிருங்கள், என் நேசர்களே, நீங்களாவது என்பேரில் தயையா யிருங்கள்." (ஜோப். 19. 21.)

கீழக்கரை
ம. சு. மு. சின்னசாமி லோபோ என்று பெயர் விளங்கிய ஸ்ரீமான். (M. S. Lobo.) எம். ஏ. எம். மரிய ஸ்தனிஸ்லாஸ் லோபோ அவர்களின் அகால
மரண அறிக்கை.

கடலாடை யுடுத்த இப்பூவுலகினுக்கோர் திலதமென வாய்ந்து எவ்வித சீறுஞ் சிறப்பும் பேறும் பெற்றிலகு பவித்திர மாணிக்க நகரமென்னுங் கீழக்கரையில் பூர்வீகம் கௌரவப் பரதவம்ஷ குல விளக்காய் விளங்கிய காலஞ் சென்ற ஸ்ரீமான். ம. சு. அந்தோனிமுத்து லோபோ (Late Mr. Muthuthamby Lobo, *Beach Master, Pearl Fisheries, Ceylon & Ship Contractor to H. M. Government of Ceylon.*) அவர்களும், அன்னவரின் உத்தம பத்தினியாகிய ஸ்ரீமதி. சந்தாளுள் பூபாலராயாள், இருவருஞ் செய்த பெருந்தவப்பயனே யுருவானதுபோல் சென்ற 1894 ம் ஞு மேமீ 10௳ பிறந்து மாதா பிதாக்களின் உயர்ந்த பாதுகாப்பின் கீழ் வளர்ந்து உலகம் புகழக் கல்விப்பொருள் கற்றும் செல்வப்பொருள் பெற்றும் சங்கீத சாஹீத்யங்களில் பூரண தேர்ச்சியடைந்தும் யௌவன தசையில் ஸ்ரீமான். விசேந்தி இஞ்ஞாசியுஸ் பூபாலராயன் அவர்களின் கனிஷ்ட புதல்வி ஸ்ரீமதி. கிறீஸ்தீனம்மாள் பூபாலராயனை மணந்தும், மரண மென்னுங் கொடிய சத்துரு இருவரையும் பிரிக்குந்தனையும் சதிபதிகள் மனமொத்து இல்லறத் தருமம் வழுவாது நடாத்தி உலகம் புகழ ஓர் அருமாந்த செல்வனைப் பெற்று வாழுங்கால் தனது 23 வது வயதில் விஷ ஜுரத்தால் பீடிக்கப்பட்டு ஜலதோஷமாகி எவ்வித ஔஷத சிகிட்சைக்குங் குணப்படாமல் கடைசித் தேவத்திரவிய அநுமானங்களெல்லாஞ் சரிவரப்பெற்று நிகழும் 1917-ம் ஞு மார்ச்மீ 31௳ சனிக்கிழமை காலை 5-15-மணிக்கு தமது பந்து மித்திராதி சூழ்ந்து நிற்க, அருமை மனைவி பரிதபிக்க, குழந்தை கண் குழல, தாயார், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள் யாவருங் கோவென்றலறிச் சப்தமிட, இப்பூவுலகைத் துறந்து சர்வ வல்லப சாட்சாத் பரம்பொருளின் திருப்பதிபுக்கினர். அன்று மாலை 5-மணிக்கு அர்ச். இராயப்பர் கோவில் கல்லறையிற் பூஸ்தாபஞ் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் என்னருமை சகோதரர்களே! சகோதரிகளே! எங்குலமாக்களே! இவ்வாற்றுமம் நித்திய சமாதானத்தைப் பெறுமாறு எல்லாம்வல்ல கடவுளைப் பிரார்த்திக்கக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதர் தெரு,
கீழக்கரை,
18—4—1917.

இங்ஙனம்,
அருமை மைத்துனரை இழந்து பரிதபிக்கும்,
ஜேசு பூபாலராயன்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

எனது அருமை தமயனார் பாக்கியம் பெர்னாந்தீஸ் அவர்கள் கொஞ்சக்காலமாக அசௌக்கியமாகி கடைசியாக சகல தேவத் திரவிய அநுமானங்களைப் பெற்று இன்று பகல் 12-மணிக்குப் பரலோக பிராப்தியான பரிதாபமான துக்கத்தை இத்தால் சகல கிறீஸ்துவ சகோதரர்களுக்கு தெரிவிப்பதுடன் அந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. I. P.

தூத்துக்குடி,
27, மணல் தெரு,
19—5—17.

L. P. பேர்னாந்தீஸ்

வெல்லிங்டன்.

நிகழும் 1917ஞு- எப்பிரல் மீ 19ந் தேதி வியாழக் கிழமை காலை 5½-மணிக்கு, வெல்லிங்டன் ஆஸ்பத்திரிச் சேரியில் வசித்து காலஞ்சென்ற ப்ராப்பான் தேவசகாயம் அவர்களின் கனிஷ்ட குமாரன் D. ரபேல் என்பவர் தமது 33 வது வயதில் பரலோக பிராப்தமடைந்தார். பிரேதம் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7½-மணிக்கு வெல்லிங்டன் அர்ச். சூசையப்பர் கோவிலுக்குக் கொண்டு போனவுடன் சுவ. V. மோரின் சுவாமியாரவர்களால் அவ்வாத்தும இளைப்பாற்றிக்காக Requiem பாடற்பூசை ஒப்புக்கொக்கப்பட்டது. பிறகு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் அன்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ள தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளும்,

அருமை தம்பியை இழந்து துன்பமுறும்,
சகோதரர்கள்.

தூத்துக்குடி.

இதனாலென தன்பு மித்திரர்கக்குத் துக்கத்தோடு தெரிவிக்கிறதாவது எனது அருமை மாமனாராகிய பாக்கியப் பர்னாந்தீஸ் அவர்களின் ஆத்துமத்தை அவர்கள் தமது தேவனின் திருக்கரத்தில் யொப்புவித்து விட்டாரென்ற தந்தியை யான் வாசித்துப் பார்த்ததும், அடியற்ற மரம் போல் கீழேவிழுந்து மிகுந்த துக்கசாகரத்தில் அமிழ்ந்தினேன். இவரோ நற்குணமும் நற்புத்தியும் உடைத்தானதுந் தவிர, என்குடும்பத்திற்கு ஒருபலத்த தூண் போல் விளங்கி நின்றார். இவர் சர்வேஸ்பரனுக்கு மிகவும் உகந்தவராயும் பக்தியுள்ளவராயும் ஜனங்களால் நன்குமதிக்கப் பெற்ற வருமாகையால் சர்வேஸ்பரன் இவரைத் தன்னுடைய மோக்ஷ ராக்ஷியத்திற்கு மிக்க அன்போடு வரவழைத்துக்கொண்டார். இவர் எங்களைவிட்டுப் பிரியவும் மேய்ப்பனில்லாத ஆடுகள் எப்படிச் சிதறுண்டுபோகுமோ அவ்விதமே நாங்கள் சிதறுண்டுபோனோம். இதைக் கண்ணுறும் நண்பர்களே 1917ம் வருஷம் மேமீ 19ந் தேதி சனிக்கிழமையன்று மரணமாய்ப் போன எனது அருமை மாமனார் பாக்கியபானாந்தீஸ் அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 1பர. 1பிரி. 1திரி. வேண்டிக் கொள்ளும்படியாய் மிகவுந் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
M. I. P. Rayer,
Son of
Anthony Poobalarayer,
Tuticorin.

ஜெகநாதப்புரம்.

சென்னை செம்மன் வீதியில் வசித்து காலஞ்சென்ற ம-௱-௱-ஸ்ரீ, P. ஞானப்பிரகாசம் அவர்கள் பேத்தியும் நல்லாயன கையொப்ப நேயருமாகிய P. G. அந்தோணி பட்ளர் அவர்களின், செல்வ குமாரத்தியாகிய, 10 மாதமுள்ள சலேத்மரியம்மாள், 3 மாத காலமாய் தேக அசௌக்கியமாயிருந்து எத்தகை பரிகாரத்தா

லும் குணப்படாமல் சென்ற மார்ச் மாதம் தன் தாயார் ஜெயசீலிமரியம்மாளையும், அண்ணன் இருதயநாதனையும் தகப்பன் அந்தோனியையும் விட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தனள். மறு நாள் கீழ்ப்பாக்கம் கல்லறையில் திருச்சபை ஆசாரப்படி கிறீஸ்துவர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இப்படிக்கு,
ஜெயசீலிமரியம்மாள்,
சென்னை, சேத்துப்பட்,
ஜெகநாதபுரம்.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள **சங். அருளப்பநாத சுவாமிகள்,**

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,398	3	6
Mr. D. C. அந்தோணி (Ooty)	3	0	0
ஓர் நன்கொடை	10	8	0
திருவண்ணாமலை	3	0	0
Mr. M. A. டானியேல்	2	0	0
,, A. A. சாம்	10	0	0
,, A. சந்தனம், (Badulla)	10	0	0
,, பெர்நார்து, (சிங்கப்பூர்)	1	0	0
ஆக மொத்தம்,	4,437	11	6

வேடிக்கையல்ல, விநோதமல்ல,

நாடகமல்ல, கதையல்ல, நாவலல்ல, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக வளர்த்தற்குரிய அநுபவ பூர்வமான வழி வகைகளும் யுக்திகளும் உபாயங்களு மடங்கிய அரிய நூல் **பெற்றோர் ஒழுக்கம்.** ஒவ்வொரு குடும்பஸ்தரும் அவசியம் வாசித்தறியத் தக்க முக்கியமான புத்தகம். வித்துவான்களால் பெரிதும் புகழப்பட்டது. இனிய தமிழ் நடையில் "சமயோசிதமான உபமான உபமேயங்களால் விஷயங்களை விளக்கியும், படிப்பவருக்குச் சலிப்பின்றி பிரியத்தையே தரும் விதமாயும் உபாத்தியாயர் ம. பா. **மிக்கேல்சுவாமி பிள்ளை** யவர்களால் எழுதப்பட்டுள்ளது. இரண்டு பாகங்களும் அடங்கிய புத்தகம் விலை அணா 12. தபாற்செலவு பிரத்தியேகம். வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்துக்கு எழுதி முன்பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். கோரிக்கொண்டால் வி. பி. வழியாயும் அனுப்பப்படும்.

"நல்ல ஆயன்" ஆபீஸ் மானேஜர்,

பிராட்வே, மதராஸ்.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 15. } ஜூலை 1917. { இலக்கம் 7.

THE LOVE OF GOD.
தேவ சிநேகம்.

தம்முடைய சிறந்த நாட்டையும் செல்வாக்குள்ள வீட்டையும் வெறுத்துவிட்டு, ஓர் அத்துவான காட்டில் அநேக வருடங்களாய் ஒதுங்கியிருந்து அருந்தவம் புரிந்துவந்த தபோதனர் ஒருவர் இருந்தார். இவர் காலக்கிரமத்தில் தம்முடைய கடின சீவியத்தை உன்னி யோசித்துத் தமக்குள் தற்பெருமை கொள்ளலானார். "ஆ! நான் எவ்வளவோ பரிசுத்தவாளனா யிருக்கவேண்டியது. இவ்வளவு காலமாய் இக் காட்டிற் சீவித்து, ஜெபத்திலும் தவத்திலும் என் வாழ்நாட்களை யெல்லாம் செலவழித்து வருகிறேன். என்னைப்போன்ற புண்யாத்துமா இவ்வுலகில் இல்லைபோலும்" என்னும் இத்தகைய அகங்கார எண்ணங்களுக் கிடங்கொடுக்கத் தலைப்பட்டார். இரக்கம் நிறைந்த சர்வேசுரன் இவருடைய தப்பறையான எண்ணத்தைத் தடுக்க இவருக்கோர் காட்சிகொடுத்து, அதில் "நீர் உம்முடைய பரிசுத்தத்தனத்தைப் பற்றி இவ்வாறு பெருமை கொள்வது சரியன்று. இக் காட்டுக் கருகிலுள்ள பட்டணத்துச் சத்திரம் ஒன்றில் ஓர் ஏழைப்பெண் சமையல் வேலை செய்துவருகிறாள். அவளை விட நீர் அதிக புண்ணியாத்துமா வல்ல, தேவ சிநேகத்திலும் சாங்கோபாங்கத்திலும் அவளை நீர் மிஞ்சினவரென்று எண்ணிக்கொள்ளாதேயும" என்றார்.

இதைக் கேட்ட தபோதனர் தமக்குள் ஆச்சரியமுற்று "என்ன! நான் இவ்வளவு காலமாய் இக்காட்டில் கடின தவம் புரிந்துவந்தும், சத்திர மொன்றில் சமையல் வேலை பார்க்கும் ஓர் பெண்ணானவள் என்னை புண்யத்தில் ஒத்தவளா யிருக்கிறாள்!! இதெப்படி? நான் உடனே புறப்பட்டுப்போய் அவளைக் கண்டு அவள் அவ்வளவு பரிசுத்தத்தனத்தை யடைந்திருக்க என்ன மேலான நற்கிருத்தியத்தைச் செய்துவருகிறாளென்று அறிந்துகொள்வ தவசியம்" என்று சொல்லி அப்பட்டணத்துக்குப் பயணமானார். அப் பட்டணத்தைச் சேர்ந்து அச் சத்திரத்தையும் சுலபமாயடைந்து, அப் பெண்ணையுங் கண்டார். அப்போது அவர் அவளிடத்தில் தாம் கண்ட காட்சியையும், அக் காட்சியில்

சர்வேசுரன் தமக்கு அவளைப்பற்றித் தெரிவித்ததையும் அறிவித்து, சர்வேசுரன் அவள்மட்டில் அவ்வளவு சந்தோஷங்கொள்ள அவள் செய்துவருகிறது இன்னதென்று தமக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென மிக்க விநயமாய்க் கேட்டுக்கொண்டார்.

அதற்கவள் “என் தகப்பனே, நான் சமையல் வேலை செய்யும் ஓர் ஏழைப் பெண். எனக்கு எழுத வாசிக்க முதலாய்த் தெரியாது. இப்பேர்ப்பட்ட பேதையான என் பேரில் சர்வேசுரன் இவ்வளவு பிரியங்கொள்ள நான் என்ன செய்கிறேனென்று எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தமட்டும் நான் செய்வதெல்லாம் என்னவென்றால், நான் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றவும் அவருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கவும் என்னாற் செய்யப்படும் ஒவ்வொரு கிரிகையையும் கூடிய சுறுசுறுப்போடும் உற்சாகத்தோடும் செய்து வருவதேயாம். அடுப்பெரிக்க விறகு வாங்கிக்கொண்டுவந்தால் எனக்காக தம்முடைய தோளின்பேரில் சிலுவை சுமந்துபோன சேசுவின் நேசத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு, என் சேசுவே. நீர் எவ்வளவோ நல்லவர், உம்மை நான் நேசிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இப்படியே என்னுடைய ஒவ்வொரு கிரிகையிலும் அவரை எப்படியாவது நினைவுகூர்ந்துகொள்வது எனக்கு வழக்கம்” என்றாள். இதைக் கேட்ட தபோதனர் தேவ ஊழியத்துக்காகவே தம்மை முழுதும் கையளித்தவர்கள் எப்படிச் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாய் நடந்துகொள்ளக் கூடுமோ அப்படியே—இன்னும் அதிகமாகவே—மற்றவர்களும், அவர்கள் எவ்வளவோ பேதைகளாயும் தாழ்ந்தவர்களாய் மிருந்தபோதிலும் தமக்கு உகந்தவர்களாய் நடந்துகொள்ள சர்வேசுரன் கிருபைசெய்யக்கூடியவராயிருக்கிறாரென்று தெரிந்துகொண்டு, அவருகக நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தி தாம நிவசித்தக் காட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

இவ்வரிய வர்த்தமானத்தினின்று நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்ன? தம்மைச் சிநேகிக்கும்பொருட்டே நம் எல்லோரையும் சர்வேசுரன் உண்டாக்கியிருக்கிறார். நாம் எந்த அந்தஸ்திலிருந்தபோதிலும், நாம் சந்நியாசிகளானாலும் சமுசாரிகளானாலும், ஆஸ்திக்காரரானாலும் ஏழைகளானாலும், கற்றவர்களானாலும் கல்லாதவர்களானாலும், பெரியோரானாலும் சிறியோரானாலும் நாம் சர்வேசுரனை சிநேகிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதுவே நம்முடைய முதன்மையான கடமை. இக்கடமையைச் செலுத்துவது நமக்கு அசாத்தியமல்ல. இக் கடமையைச் செலுத்த மேற்சொன்ன தபோதனர் செய்தபடி நம்முடைய வீட்டையும் வாசலையும் வேலையையும் விட்டு காட்டுக்குச் செல்லவேண்டியதில்லை. ஆனால் சத்திரத்தில் வேலை செய்து பிழைத்துவந்த அந்த ஏழைப்பெண்ணைப் போல சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்ற பிரயாசைப்படவேண்டியது. ஓர் கடியாரம் எப்படி மணியைக் காட்டுகின்றதோ, அப்படியே நம் ஒவ்வொருவருக்குமுள்ள மனச்சாட்சி நமக்கு தெய்வ சித்தத்தைக் காட்டுகின்றது. நாம் செய்யும் ஒவ்வொரு கிரிகையும், பேசும் ஒவ்வொரு பேச்சும், நினைக்கும் ஒவ்வொரு நினைவும் நம்முடைய மனச்சாட்சிக்கு ஒத்திருந்தால் நாம் தெய்வ சித்தத்தை நிறைவேற்றுகிறோமென்று சொல்லத் தேவையில்லை. நாம் எப்போது தெய்வச் சித்தத்தை நிறைவேற்றி வருகிறோமோ அப்போதே பாவத்தைத் தள்ளி புண்யத்தைச் செய்கிறோம்—தேவ கட்டளைகளை யனுசரிக்கிறோம்—சர்வேசுரனுக்குப் பிரியமானவர்களாய் நடக்கிறோம்—அவரையும் நேசிக்கிறோம். ஏனென்றால் “என் கற்பனைகளை அறிந்து அதின்படி நடக்கிறவன் எவனோ அவனே என்னைச் சிநேகிக்கிறவன்” (அருளப்பர் XIV. 21.) ஆனபடியால் சர்வேசுரனுடைய கற்பனைகளையும் திருச்சபையின் கட்டளைகளையும் சுமுத்திரையாயும் சுறுசுறுப்பாயும் நம்முடைய சீவிய காலத்தில் அனுசரித்து, தேவ சிநேகத்திலும் சாங்கோபாங்கத்திலும் நாளுக்கு நாள் தேர்ச்சியடைந்துவர முயலுவோமாக.

GENEROSITY.

உதாரகுணம்.

வறியோருக்குப் பணத்தைக் கொடுத்துதவுவது மட்டும் உதாரகுணம் என்று நினைத்தலொண்ணாது. உதார குணமுள்ளவர்கள் எங்கே பணமின்றி வறுமையிருந்திருக்கிறதோ அங்கே சென்று தம் முழு மனதுடன் தம்மாலான திரவிய சகாயஞ் செய்வார்கள் என்பது மெய்தான். ஆனால் உதார குணமுள்ளவர்கள் எப்பவும் எந்நேரமும் பணத்தைவிட மேலானவற்றை அதாவது அன்பான நீதித் தீர்ப்பைக் கொடுக்கின்றனர். வெளித்தோற்ற மனைத்தும் ஒருவனுக்கு விரோதமாயிருந்து, அவனை யாவருங் குற்றவாளியென நினைத்து நம்பும்போதும், உதாரகுணமுள்ளவர்கள் அவன் குற்றவாளியல்லவெனச் சந்தேகித்து, மற்றவர்கள் நம்புவதை நம்பார்கள்; மேலும் குற்றவாளியைக் குற்றமில்லாதவனெனக் காட்டுவதற்கான ருசுக்களைத் தேடுவார்கள். அநேகமாய் உதாரகுணமுள்ளவர்கள் நினைப்பது போல் காரியங்கள் சரியாய் முடிவது சந்தோஷத்துக் கிடமானதல்லவா? அவர்கள் நினைப்பதுபோல் எத்தனையோ தடவைகளில் ஒருவன் அறியாமற் செய்த குற்றத்தை, அவன் அறிந்தே, வேண்டுமென்றே செய்ததாக அவன்மேல் குற்றஞ் சுமருகிறது; எத்தனையோ தடவைகளில் நீதி சாஸ்திரத்தில் நிபுணரெனப் பேரெடுத்தப் பெரியோர்களால் குற்றவாளியென மதிக்கப்பட்டுத் தண்டனைக்குள்ளானவன் பின்னால் மாசற்றவனென எண்பிக்கப்பட்டிருப்பதாக நாங் கண்டுங் கேட்டு மிருக்கிறோம். பழியொரு பக்கம் பாவமொரு பக்கம் என்று நமக்குள் வழங்கு முதுமொழியின் பொருளை யறியார் யாவர். ஆதலால் எப்போதும் உதார உணர்ச்சி உன் உள்ளத்தில் உதிக்கப்பார்; மற்றவர்களைப் பற்றி நல்லுணர்ச்சியே உன் மனதில் விளங்கட்டும்; உன்னைச் சுற்றிலுமுள்ள பந்து மித்திரரையும் உற்றார் உறவினரையும் அன்பாய் நடத்தி அவர்களுக்கான ஆறுதல் தந்து உதவி புரியப் பழகு.

சிலருக்குதவி செய்வது உன் கடமையாகும்; அவர்கள்தாம் உன் பெற்றோர். உன்னுதவியைப் பெறும் சுதந்தரமுடையவர்களில் அவர்களே முதன்மையானவர்கள். அவர்களை முன்னிட்டு நீ வெட்கப்படாதே. அவர்கள் இவ்வுலகில் மிக்க கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் ஒன்றுமில்லாத பரம ஏழைகளா யிருக்கலாம். உன்னாலான உதவி அவர்களுக்குச் செய்யவேண்டிய துன் கடமை. அவர்கள் எங்கிருந்தபோதிலும் அவர்களுக் குதவி யனுப்பலாம். ஆனால் அவர்களோடு ஒன்றித்திருப்பதால் உனக் கவமானம் நேருமென்றும், உன்னை மற்றவர்கள் கேவலமாய் நினைப்பார்களென்றும் நினைத்து, நீ அவர்களை விட்டு விலகி யிருப்பது சரியல்ல; உன் சம்பாதனையிற் பாதிக்குமேல் அவர்களுக்குக் கொடுத்தபோதிலும், நீ உதாரகுணமுள்ளவனாகமாட்டாய். நீ அவர்களை எப்போதும் நேசிக்கவேண்டும். உன் அன்பு அவர்களுக்காய் காத்திருக்கவேண்டும். அவர்கள் உன்னிடம் எதிர்பார்ப்பதைப் பார்க்கிலும் அதிகமான கவனம் நீ அவர்கள்பால் செலுத்தவேண்டும். உன் பதவிக்கும் அவர்கள் நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாச மிருந்தபோதிலும், அவ் வித்தியாசத்தைப் பாராட்டி நடப்பது கூடாது. இத்தகைய உதாரகுணமே கடவுளுக்குப் பிரியமானது; ஏனெனில் நமது கடமைகளிலும், நமது தான தர்மத்திலும் சந்தோஷமாய்க் கொடுப்பவனையே அவர் நேசிக்கிறார்.

ரோமாபுரியில் பகற்காலத்தில் வேலை செய்யுங் கூலிக்காரப் பிள்ளைகளின் நன்மைக்காக இராப்பள்ளிக்கூடங்கள் உண்டு. ஒன்பதாம் பத்திநாதரென்னும் பாப்பானவர் அப்பள்ளிக்கூடங்கள் மட்டில் மிக்க அன்பு வைத்திருந்தார். ஆதலால் அவர் அவற்றில் படிக்கும் பிள்ளைகளுக்குத் தாமே நேரில் அநேக வெகுமதிகள் அளித்து, அவர்களை யாசீர்வதித்து உற்சாகப்படுத்துவது வழக்கம். உதாரகுணமுள்ள அப்பாப்பரசர் தஞ்செய்கை யப்பிள்ளைகளுக்குள் சந்தோஷத்தையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணும் என்றறிந்தவராதலால், அவர் அக்காரியத்தைச் செய்வதில் கொஞ்சமும் பின்வாங்கினவரல்ல. பிரதி வருஷமும் பாஸ்கு ஞாயிறன்று ஒரு கோவிலில் இப்பிள்ளைகளைக் கூட்டி கருதினல்மார்களும் பிரபுக்களும் பெரிய மனுஷாளும் நிறைந்த சபையில் அவர்களை ஞானோபதேசத்திற் சோதனை செய்து, பரிசளிப்பது வழக்கமாம். அவர்களில் முதற் பரிசு பெறுவனைச் சக்ரவர்த்தியென்ற

ழைத்து, பாப்பானவர் முன்னிறுத்த, அவனை அவர் ஆசீர்வதித்துத் தனக்கு வேண்டியதைக் கேட்கும்படி யேவுவார். அவன் படிக்கவேண்டுமென்றோ, அல்லது ஏதாவது வேலை கற்றுக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது வேறேது வேண்டுமென்றோ கேட்டபோதிலும், அவன் விருப்பை அவர் பூர்த்தி செய்வாராம். ஆதலால் ஒவ்வொரு "சக்ரவர்த்தி" யும் ஒவ்வொரு விருப்பமுடையவனா யிருப்பானாதலால், பாப்பானவரிடம் அப்பட்டத்துடன் போகும்போது அவனவன் தன் தன் விருப்பைத் தெரிவித்து விடுவானல்லவா? அப்படியே ஒரு பையன் பாப்பானவரிடங் கேட்ட வரத்தின் வரலாற்றைக் கவனியுங்கள்.

அவனுக்கு வயது சுமார் பதினான்கிருக்கலாம். அவன் ஏழையாதலால் பகலெல்லாம் உழைத்து படிப்பில் ஆவாக் கொண்டிருந்தமையால் ஒரு இராப்பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான். பையன் புத்திசாலி; தன் பாடங்களைச் செவ்வனே படித்து வரத்தவறான். அவன் தந்தையோ மகாப்பாதகன்; ஒரு நாள் அவன் யாரையோ கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொலைக்குத் தீர்ப்பிடப்பட்டான். குற்றவாளியின் மகனாகிய அந்த நல்லபையனுக்கு இதனால் உண்டான அவமானமும் வருத்தமும் சொல்லிமுடியாது. ஆயினும் அப்பையன் அறநெறியை விட்டு விலகினவனல்ல. தன்வேலையைச் சரிவரப்பார்த்துத் தன் பாடங்களைக் கவனமாய்ப் படித்துக்கொண்டு வந்தான். ஆகவேண்டியனவெல்லாம் தன்னைப் பொருத்தனவென்று அவனுக்குத் தெரியும். அவன் தந்தை யவமானத்துடன் கொல்லப்படுவான்; தனக்கோ தன்னல்ல குணத்தால் சம்பாதித்துக்கொண்ட சிலரைத் தவிர வேறு சிநேகிதர்கள் இல்லை. என்ன செய்வான் பாவம்! யோசித்தான், தைரியத்தை விடாமல் தான் அவ்வருஷத்தில் பிரையாசைப்பட்டு எப்படியாவது "சக்கிரவர்த்தி" யாவதே சரியெனத் தீர்மானித்தான். பரீட்சை நாளும் வந்தது; அன்று எல்லாப் பிள்ளைகளும் கோவிலிற் கூடியிருந்தனர்; பெரிய மனுஷாளும் அங்கே வந்திருந்தனர். பையன் அறுதினமும் இதே கவலையுடன் படித்துவந்தது மன்றி சுவாமியைப் பார்த்து வேண்டிவந்தமையால் அவன் அன்று அவதைரியப்படவில்லை. ஜெபமும் முயற்சியும் ஒன்றுசேர்ந்த விடத்துத் தைரியந் தானேவந்தடையுமன்றே. வேறெந்தப்பிள்ளையாவது அன்று ஜயமடைந்தால், அப்படி நடப்பது தெய்வசித்தமென்று தான் அத் திருச்சித்தத்துக் கமைந்தவனாய்த் தன்னாலானப் பிரையாசைப்பட்டு உழைத்துவந்தான். ஓ அவன் ஜயங்கொண்டாலோ தான் பாப்பானவரிடங் கேட்கும் வரமின்னதென்றவனுக்குத் தெரியும்! அப்படியே அவன் ஜயமடைந்தான். பரீட்சை முடிந்ததும் இந்தப் பையனே பாப்பரசர் முன் "சக்கரவர்த்தி" யாய் நின்றான். யாருமின்றி யநாதையாய் தன் தந்தை குற்றவாளி யென்னும் அவமானத்துக் குட்பட்டு நின்ற அப்பையன் பாப்பானவரைக் கேட்ட வரமென்னவென்று நினைக்கிறீர்கள்? உத்தியோகம் வேண்டுமென்று கேட்கவில்லை; படிக்கவேண்டுமென் றாசிக்கவில்லை; காணி பூமி வேண்டுமென்றிச்சிக்கவில்லை; பணங் காசு வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் அவன் பாப்பரசர்முன் முழந்தாளிட்டுத் தன் தந்தையின் உயிரைக் காப்பாற்றும்படி மன்றாடினான். அந்தப் பரிசுத்த பாப்பரசர் கண்களில் நீர்ததும்ப அப்பையனை யாசீர்வதித்து அவன் தந்தையை விடுதலை செய்யும்படி உத்திரவளித்தார். இதுவன்றோ மக்கட் கடமையைச் செலுத்தும் விதம். இதுவன்றோ உதாரகுணத்தின் உன்னத செய்கை.

ஆதலால் கடமைக்குமேல் அதிகமாகவே எப்போதுஞ் செய்யப் பிரயாசைப்படுவதே உதாரகுணம். உன்கடமை இவ்வளவு தான் என்று அளவிட்டுப்பார்த்துக் கொண்டிருப்பதினும் உதாரகுணத்துடன் உன்னாலானதைச் செய்வதே உத்தமம். நமக்கென்ன யார் எப்படிப் போனாலும் என்று தன் கடமையை அநுசரித்தால் மட்டும் போதாது. உதாரமாய் நடக்கப் பழகு. இப்படி யுன் கடமையை மீறி நடவென்பதின் பொருள் உனக் கடியிலுள்ளவரிடங் கண்டிப்பாயிராமல் அவர்கள் வேலையையும் நீயே செய்து அவர்களைச் சோம்பித்திரிய விடவேண்டுமென்பதல்ல. மற்றவர்கள் கடமையை நீ ஏற்றுக்கொள்வதால் சிலசமயம் குணக்கேடு உண்டாகலாம்; நன்மை செய்யப்போய் தீமை விளையினும் விளையலாம். உதாரகுணத்திற்கும் இளக்காரத்திற்குமுள்ள வித்தியாசத்தை யறிந்து முன்னையதை யனுசரித்துப் பின்னையதை விலக்கி நடப்பதே நல்லறிவுடைய உத்தம கிறீஸ்துவர்களின் ஒழுங்கு. உதாரணமாக உன்னோடு வேலைசெய்யும் ஒருவன் ஏதோ அசந்தர்ப்பத்தால் நேரத்தோடு வேலைக்குவரத் தவக்கப்பட்டதென்று வைத்துக்கொள்வோம். அப்போது

எனக்கு நேரமிருந்தால், அவன் வேலையை நான் பார்ப்பானேன் என்றிராமல், அவன் வருமளவும் அதைக் கவனிப்பது உதாரகுணம். ஆனால் நீ இவ்வாறு அவன் வேலையைக் கவனிக்கிறா யென்றறிந்து அடிக்கடிக் காரணமின்றி நேரஞ் சென்று வருவதைக் கண்டால் பின்னரும் நீ அப்படிச்செய்வது உதாரகுணமாகாது. மேலும் உதாரகுணமென்று உன் கடமை யல்லாதவற்றைச் செய்யப்போய்க் காரியத்தைக் கெடுத்து நஷ்டத்தை யுண்டுபண்ணுவது உதாரகுணமாகாது. ஆதலால் எப்போதும் எக்காரியத்தையும் யோசித்துச்செய்.

உன் மனமாரக் கருணையுடையவனாயிரு; அநேகருக் குபகாரியாவாய். உன் கடமைகளைச் சரிவரச் செலுத்து; உன்னைச் சுற்றியுள்ளவர்களிடம் அன்பு பூண்டொழுகு. மனமுவந்து மற்றவர்கள் செய்யுங் குற்றத்தைப் பொறு; உன் அயலாரைப்பற்றித் தீங்குநினையாதே; மற்றவர் செய்யுமுபகாரத்திற்கு நன்றியறிந்திரு; நன்றிக்குப் பிரதிநன்றிபுரிய மறவாதே; நமதாண்டவர் உனக்குப்புரிந்த நன்மைகளனைத்தையும் உன் ஞாபகத்தில்வைத்து, அவரை முன்னிட்டேனும் உன்னைச் சுற்றியுள்ளவர்களுக் கெப்போதும் நன்மையேசெய்து, அவர்களிடம் அன்புபூண்டொழுக முயலு. அன்பும் அருளும் அரும்பெரும் விஷயங்களிற் காட்டுவது சுலபம்; ஆனால் சிறு காரியங்களிலும் உதாரமாய் நடந்து அன்பாய் ஒழுகல் நல்ல கிறீஸ்துவர்களின் நற்கிருத்தியங்களிலொன்றாம். இக்குணத்தைப் பிரயோகிக்க உனக்குப் பிரதிதினமுஞ் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். உன் சீவியமே அநேக சிறு விஷயங்கள் நிறைந்ததாம். பெருங்கஷ்டங்கள், வருத்தங்கள் சாவு முதலியன எப்போதும் நேருவனவல்ல. ஆனால் உன் தினசரிவாழ்க்கையில் எப்போதும் உதாரகுணத்துடன் நடந்துகொள்ள வழியுண்டு. இதைத்தெரிந்து உன் சீவியத்தைத் திருத்த முயலுவாயாக.

S. Selva Raju.

தினந்தோறும் உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமாக்களுக்காக வேண்டிக் கொள்ளுவாயாக.

என்னத்தைச் செய்தாலும் சுவாமிக்குப் பிரியப்படுகிறதற்காகச் செய்வாயாக.

உன்னை முழுதும் ஒருநாளில் ஒரு விசையாகிலும் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து அவர் சித்தத்திற்குக் காத்துக் கொண்டிருப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம்—56-66.

வசனம்.—56. "பின்னும் மரியம்மாள் அவளோடு ஏறக்குறைய மூன்று மாதம் இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப் போனாள்.

57. அப்படி யிருக்க, எலிசபெத்தம்மாளுடைய பிரசவ காலம் நிறைவேறின போது, அவள் ஓர் குமாரனைப் பெற்றாள்.

58. அப்போது ஆண்டவர் தமது கிருபையை அவளிடத்தில் விளங்கச் செய்தாரென்று அவளுடைய அயலகத்தாரும் சுற்றத்தாரும் கேள்விப்பட்டு, அவளுடன் மகிழ்ந்து அவளை வாழ்த்தினார்கள்.

59. எட்டாம் நாளில் சம்பவித்ததேதெனில்: பிள்ளைக்கு விருத்த சேதனஞ் செய்ய அவர்கள் கூடிவந்து அதின் தகப்பனுடைய நாமத்தின்படியே சக்கரியாஸ் என்று அதற்குப் பேரிடப்போகையில்,

60. அதின் தாய் எதிர் மொழியாக: அப்படியல்ல, அதற்கு அருளப்பன் என்று பேரிட வேண்டும் என்றாள்.

61. அவர்களோ, அவளை நோக்கி: உன் உறவின் முறையாரில் இந்தப் பெயர் கொண்டவன் ஒருவனு மில்லையே என்று சொல்லி,

62. அதின் தகப்பனுக்குச் சயிக்கினைக் காட்டி, அதற்கு என்ன பேரிட வேண்டுமென்று கேட்டார்கள்.

63. அவர் ஒரு எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி அதின் பேர் அருளப்பனென்று எழுதினார். அதினால் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

64. அக்ஷணமே அவருடைய வாய் திறக்கப்பட்டு, நாவும் கட்டவிழ்க்கப்

பட்டு, சர்வேசுரனைத் தோத்தரித்துப் பேசினார்.

65. ஆகையால் அவருடைய அயலகத்தா ரெல்லாருக்கும் பயமுண்டானதுமன்றி, யூதாவின் மலைநாடெங்கும் இந்தச் செய்திகளெல்லாம் பிரசித்தமுமாயிற்று.

66. இவைகளைக் கேள்விப்பட்ட யாவரும் தங்கள் இருதயங்களில் இவைகளை வைத்துக்கொண்டு, ஒருவனொருவனைப் பார்த்து: இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதா யிருக்குமென்று நினைக்கிறாய் என்பார்கள். ஏனெனில் ஆண்டவருடைய கரம் அதினோடிருந்தது.”

56-ம் வசனம்.—“பின்னும் மரியம்மாள் அவளோடு ஏறக்குறைய மூன்று மாதம் இருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்.”

மூன்று மாத மளவாய் கன்னிமரியாயி எலிசபெத்தம்மாள் வீட்டில் இருந்தாள் என்பது நிச்சயம். ஆனால் அருளப்பருடைய ஜனனநாளிலும், அதற்குப் பின்னும் தன் பந்துவின் இல்லிடத்தில் தேவதாயார் தங்கி இருந்ததைப் பற்றி அவ்வளவு நிச்சயமாயுரைக்க முடியாது. கன்னிமரியாயி மௌனத்தையும், தனி வாசத்தையும் அடக்க ஒடுக்கத்தையும் மிகவும் நாடினவளாய், அருளப்பர் பிறந்த காலத்தில் அவருடைய தாயாரைச் சந்தித்து, அவளை வாழ்த்த வந்த சுற்றத்தாரின் சந்தடியை விலக்கி யிருக்கவேண்டுமென்பது அநேக வேத சாஸ்திரிகளின் அபிப்பிராயம். மேலும் யூதருடைய சாதி முறைமையின்படியே, பிள்ளைபெறும் வீட்டில் கன்னியாஸ்திரீகள் இருக்கில் முறைமையீனமாக வெண்ணப்பட்டதினாலும், இரு கர்ப்பஸ்திரீகள் ஒரு நிவாசத்திலிருக்கிறது கிரமமாகாததினாலும் கன்னிசுத்த மரியாயி எலிசபெத்தம்மாளின் நிவாசத்தை விட்டேகினாள் என்று இச் சாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

ஆனால் பிரசவ காலத்தில், கன்னிமரியாயின் உதவி எலிசபெத்தம்மாளுக்கு அதிகமாய்த் தேவையானதினால் பிரசவ நேரத்தில் மட்டும் வேறே யறையில் அல்லது அயல் வீட்டில் தங்கியிருந்து மற்ற நேரம் தன்னால் கூடிய பணிவிடையெல்லாம் செய்து அருளப்பர் பிறந்த சில நாட்களுக்குள்ளாக தனது சொந்த ஊராகிய நசரேத்துக்கு திரும்பினாள் என்று மற்றநேக சாஸ்திரிகள் ஆராய்ந் துரைக்கிறார்கள்.

இப்படியே கன்னிசுத்த தேவமாதா எலிசபெத்தம்மாளின் நிவாசத்தை தனது தரும வாசம் என்கிற சுகந்தத்தால் சுகிர்த வாசனையாக்கித் தேவ பக்தி யென்கிற அமிர்தத்தால் அதில் வசித்தவர்களுடைய இருதயங்களை தேவ நேச மதுரமாக்கி, எலிசபெத்தம்மாளுக்கும், சக்கரியாஸுக்கும், அருளப்பருக்கும் தேவ ஆசீர்வாதங்களையும் வரங்களையும் ஏராளமாய்ப் பெறுவித்து, அவர்களை தேவ ஐஸ்வரியங்களுடைய சம்பூரணத்தை அடையப் பண்ணினாள். ஏனெனில் தேவமாதா எலிசபெத்தம்மாளைச் சந்தித்த முதல் க்ஷணத்தில் தானே, அவள் வீட்டில் தேவ ஆசீர்வாதங்களும், வரங்களும், நன்மைகளும் பெருகிவந்திருக்க, மூன்று மாதகாலமாய் அவளுடன் அன்னியோன்னிய சிநேக ஐக்கியத்துடன் சீவித்துவந்ததால், இன்னும் எத்தனையோ நன்மைகளையும் தேவ ஐஸ்வரியங்களையும் அக் குடும்பத்துக்குப் பெறுவித்திருக்கவேண்டும். கர்த்தருடைய பெட்டகம் ஒபெதெதோம் வீட்டில் மூன்று மாதம் தங்கி யிருக்கையிலே, கர்த்தர் ஒபெதெதோமையும், அவன் வீட்டாரெல்லோரையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தாரென்றால்; உயிருள்ள மெய்யான வாக்குத்தத் தத்தின் தேவபெட்டகமாகிய கன்னிமரியாயி, எலிசபெத்தம்மாளிடம் மூன்று மாதகாலம் தங்கி யிருந்ததைப்பற்றி அப்பாக்கியவதியின் குடும்பத்துக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள் எம்மாத்திரம் என்று யாரால் கணிக்கக்கூடும்? (II-அரசர் ஆகமம். 6-அதி. 11-வசனம்.)

மெஸ்ஸியாவின் முன்னோடியின் ஜனனநாள் சிறப்பாய் அறிக்கையிடப்படுகிறது: **57-ம் வசனம்.** “அப்படியிருக்க எலிசபெத்தம்மாளுடைய காலம் நிறைவேறினபோது, அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.” எலிசபெத்தம்மாளுடைய பேறுகாலம் நிறைவேறினதென்றும், கன்னிமரியாயைப்பற்றி பேசும்போதும் அவளுடைய பேறுகாலம் நிறைவேறிற்றென்றும், (2-அதி 6-ம் வசனம்), புண்ணியவாளருடைய ஜனனத்தை அல்லது மரணத்தைக் குறிக்கும்போதும், அவர்களுடைய காலம் நிறைவேறினதென்றும், வேதவாக்கியம் கூறுகின்றது. ஆனால் துன்மார்க்கருடைய ஜனனத்தை அல்லது மரணத்தைக் குறித்துப் பேசும்போது, அவர்களுடைய காலம் நிறைவேறிற்றென்று வேதவாக்கியம் கூறுவதைக்காணோம். ஏனென்றால், தேவ சமுகத்தில் அக்கிரமிகளுடைய சீவியநாட்கள் வீணான, பிரயோசனமற்ற நாட்கள்; அவை வெறுமையாகவும் வறுமையாகவும், பாழாகவும், சுத்த சூனியமாகவும் எண்ணப்படுகின்றன. ஆனால் நீதிமான்களின் சீவியமோ, புண்ணிய பேறுபலன்களாலும் இஷ்டப்பிரசாதங்களின் ஐஸ்வரியத்தாலும் சம்பூரணமும் நிறைவும் பெற்று துலங்குகின்றது என்று அர்ச். அம்புரோஸ் வசனிக்கிறார்.

58-ம் வசனம்.—“அப்போது ஆண்டவர் தமது கிருபையை அவளிடத்தில் விளங்கச்செய்தார் என்று அவளுடைய அயலகத்தாரும் சுற்றத்தாரும் கேள்விப்பட்டு, அவளுடன் மகிழ்ந்து அவளை வாழ்த்தினார்கள்.”

ஆண்டவர் தமது கிருபையை விசேஷித்த, உன்னத மேரையாய் எலிசபெத்தம்மாளிடம் காண்பித்தார். ஏனெனில் விருத்தாப்பிய தசையிலிருந்த மலடியானவளுக்கு ஓர் குமாரனைக் கட்டளையிட்டு, நீடியகாலம் அவள்பட்ட அவமானத்தையும் சிந்தாகுலத்தையும் நீக்கினதானது, அவருடையகிருபையின் புதுமையல்லவா? சர்வேசுரன் அவளுக்குச்செய்த இந்த மகத்தான நன்மைக்காக, அவளுடைய அயலாரும் பந்து மித்திரர்களும, அவளிடம் வந்து மனமகிழ்ச்சியாய் அவளுக்குச் சுபசோபன மங்களம் கூறினார்கள். “அநேகர் அவருடைய பிறப்பினால் மகிழ்வார்கள்” என்று தேவதூதன் அறிவித்த காரியம் இங்கு நிறைவேறுகின்றது. அருளப்பருடைய அற்புதமான பிறப்பும், அவர் பிறக்கும் முன் தேவாலயத்தில் சக்கரியாஸுக்கு நடந்த அதிசய சம்பவங்களும், எலிசபெத்தம்மாளுக்குச் சர்வேசுரன் காண்பித்த அற்புத கிருபையும், இவையெல்லாம் அருளப்பர் சாமான்ய மனிதனல்ல வென்றும், சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளவரென்றும், அவரிடத்தில் சர்வேசுரன் ஏதோ மகத்தான காரியங்களை நடத்த சித்தமாயிருக்கிறார் என்றும், அறிந்த இவருடைய பந்துஜனங்கள் அதிசயப்பட்டு சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தார்கள். அவருடைய தாயைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

59-ம் வசனம்.—“எட்டாம் நாளில் சம்பவித்ததேதெனில்: பிள்ளைக்கு விருத்தசேதனஞ்செய்ய அவர்கள் கூடிவந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படியே சக்கரியாஸ் என்று அதற்குப் பேரிடப் போகையில்,

60-ம் வசனம்.—அதின் தாய் எதிர்மொழியாக அப்படியல்ல, அதற்கு அருளப்பன் என்று பேரிடவேண்டும் என்றாள்.”

பிள்ளைபிறந்த எட்டாம் நாள் அதற்கு விருத்தசேதனச் சடங்குநிறைவேற்றுவது வேதப்பிரமாணத்தின் கட்டளை. (ஆதியாகமம். 17-12) சாதாரணமாய் இச் சடங்கைக் குடும்பத்தலைவன் செய்வான். ஆனால் பெண்பிள்ளையும் இதைச்செய்ய விக்கினம் கிடையாது. சக்கரியாஸ் குரு ஊமையாயிருந்ததினிமித்தம் இச் சடங்கைத் தன் குமாரனுக்கு நிறைவேற்றினதாகத் தோன்றவில்லை. ஏனென்றால், இதனைச் செய்கிறவர், இதற்காகக் குறிக்கப்பட்ட ஆசீர் வசனங்களையும் மந்திரங்களையும் உச்சரிக்கவேண்டிய தவசியம்.

பிறந்த குழந்தை விருத்தசேதனத்தால் புறஜாதியாராகிய அஞ்ஞானிகளின் கூட்டத்தைவிட்டு விலகி, தேவ பிரசையில் சேர்க்கப்படுகிற தேவ மக்களுடைய சபையில் ஓர் அங்கமாகப் பாவிக்கப்படுகிறான். சர்வேசுரனுடைய ஆளுகையில் உட்பட்டு, அவருக்கு என்றென்றைக்கும் தன்னை ஒரு அடிமையாக ஒப்புக்கொடுக்கிறான். இதினால்தான் விருத்த சேதனத்தில் நாமகரணஞ் சூட்டுவது ஓர் முக்கிய சடங்காயிருந்தது—எஜமான் ஓர் அடிமையை தன்னுடையவனென்று காண்பிக்கிறதற்காக அவனுக்கு நாமகரணஞ் சூட்டுவதுபோல், விருத்த சேதனத்தால்

சர்வேசுரனுக்கு முழுதும் சொந்தமாக்கப்பட்டவனுக்குக் பெயரிடுவது நியாயமே. எலிசபெத்தம்மாளின் பந்து ஜனங்கள், அவளுடைய பிள்ளையை சக்கரியாஸ் என்றழைக்கும் படியாக உத்தேசித்து அதை அவளுக்கு வெளிப்படுத்துகிறார்கள்—இதினால் பிள்ளையின் பிதாவுக்கு மகிமையும் சந்தோஷமும் உண்டாகும் என்று அவர்கள் யோசித்திருக்கலாம்.

ஆனால் எலிசபெத்தம்மாள் அதற்குச் சம்மதித்தவளல்ல—சம்மனசானவரால் குறிக்கப்பட்ட நாமதேயத்தை ஏற்கனவே தனக்குச் சக்கரியாஸ் குரு எழுத்து மூலமாய் அறிவித்ததை மறந்தவளுமல்ல. "அப்படியல்ல, அதற்கு அருளப்பன் என்று பேரிட வேண்டுமென்றாள்".

61-ம் வசனம்.—"அவர்களோ அவளை நோக்கி: உன் உறவின்முறையாரில் இந்தப்பெயர் கொண்டவன் ஒருவனுமில்லையே என்று சொல்லி,

62-ம் வசனம்.—அதின் தகப்பனுக்குச் சயிக்கினைகாட்டி, அதற்கு என்ன பேரிடவேண்டுமென்று கேட்டார்கள்."

சாதாரணமாய்த் தங்கள் உறவின்முறையாரின் நாமங்களால் தங்கள் பிள்ளைகளை அழைப்பது எபிரேயருடைய வழக்கமா யிருந்தது. ஆனால் முதல் முதல் அவர்கள் ஏதாவது ஓர் சம்பவத்தை அல்லது சந்தர்ப்பத்தைக் குறித்தாவது, ஒரு குணத்தை அல்லது ஒரு காரியத்தை வெளிப்படுத்தவாவது பிள்ளைகளுக்குப் பேர்கள் இட்டிருக்கவேண்டும். எலிசபெத்தம்மாள் தங்கள் கருத்துக்கு இசைந்து வரவில்லையென்று அவர்கள் ஊமையாயிருந்த சக்கரியாஸுக்குத் தங்கள் தாற்பரியத்தைச் சயிக்கினைகாட்டி வெளிப்படுத்துகிறார்கள். அவர் தங்கள் எண்ணத்துக்கு மனமுவந்து சம்மதிப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர் ஊமையாயிருந்ததினிமித்தம் சயிக்கினைகாட்டி அவருடைய கருத்தை யறியவேண்டிய தவசரமாயிருந்தது.

63-ம் வசனம்.—"அவர் ஒரு எழுத்துப் பலகையைக்கேட்டு வாங்கி, அதின் பேர் அருளப்பனென்று எழுதினார். அதினால் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்."

தன் வாய்திறந்து பேசக்கூடாதவர் எழுத்துமூலமாய் தன் சிந்தையை வெளியாக்குகிறார். அருளப்பன் என்று அழைக்கப்படுவான் என்று எழுதாமல், அதின் பேர் அருளப்பன் என்றபடியால், முன்னதாகவே, பிள்ளைக்குத் தேவதூதன் குறித்து சூட்டின நாமதேயத்தை வெளியாக்குகிறார். தானே நூதனமாக இந்தப் பெயரையிடுவதாக வல்ல, தேவ செயலால் பிள்ளைக்கு எற்கனவே சூட்டப்பட்ட நாமதேயத்தை அறிக்கை யிடுகிறார். சக்கரியாஸ் குரு தன் மனைவியின் அபிப்பிராயத்துக்கு ஒத்து நடப்பதையும், தன் குடும்பத்தில் எவருக்குமே இல்லாத இந்த நூதன நாமத்தைத் தன் பிள்ளையின் நாமதேயமாக வெளிப்படுத்தினதையும் பார்த்த அவருடைய பந்து ஜனங்கள், இவையெல்லாம் தேவ செயலின் ஏற்பாட்டால் நடந்திருக்க வேண்டுமென்று சிந்தித்து ஆச்சரியபிரமிப்படைந்தார்கள். ஆனால் இந்த அதிசயத்துக்குமேற் காணப்பட்ட வேறொரு அற்புதமாவது: அந்த நாமத்தை யெழுதின அக்ஷணத்திலே சக்கரியாஸின் நாவின் கட்டுகளவிழ்ந்து வாயைத் திறந்து சர்வேசுரனைத் துதிக்கத் துவக்கினார்.

64-ம் வசனம்.—"அக்ஷணமே அவருடைய வாய் திறக்கப்பட்டு நாவும் கட்டவிழ்க்கப்பட்டுச் சர்வேசுரனைத் தோத்தரித்துப்பேசினார்". தேவதூதன் தேவாலயத்தில் கொடுத்த நிபந்தனையைச் சுமுத்திரையாய் நிறைவேற்றுகிறார் சக்கரியாஸ். தேவதூதன் தன்னை நோக்கி "இவைகள் சம்பவிக்கும் நாளளவும் இதோ, நீ பேசக்கூடாத ஊமையாயிருப்பாய்" என்று கூறிய வாக்கியம், அருளப்பன் என்ற பேரிட்ட அந்தக்ஷணமே நிறைவேறுகிறது. அவிசுவாசத்தால் கட்டப்பட்ட அவருடைய நாவு விசுவாசத்தின் பலனால் அவிழ்க்கப்பட்டது. தான் அற்புதமாய்ப் பெற்றுக் கொண்ட நாவின் கொடைக்காக தன் நாவின் ஸ்துதிகளால் சர்வேசுரனை மகிழ்ந்து கொண்டாடுகிறார்—ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரங்களைச் செலுத்துகிறார். இவை யெல்லாம் கண்ணுற்ற அவருடைய உறவின் முறையாரும், அயலாரும், தெய்வீக வல்லப செயல்களைக் கண்கூடாய்த் தரிசித்தாப்போல் பயத்தால் கலங்கினார்கள்.

ம்லடியும் வயதுசென்றவளுமான எலிசபெத்தம்மாள் கர்ப்பந்தரித்து ஓர் புத்திரனைப்பெற்றதும் அதிசயம். திடும்பிரவேசமாய் சக்கரியாஸ்குரு ஊமை யானதும் அதிசயம். அசாதாரணமான ஓர் நூதன நாமகரணம் பிள்ளைக்கு இடப்பட்டதும் அதிசயம். அந்நாமத்தை வெளிப்படுத்தின க்ஷணமே ஊமையாயிருந்தவர் வாய்திறந்து பேசி சர்வேசுரனை ஸ்துதித்ததும் அதிசயம். இவ்வாறு தேவ மகத்துவமே தங்கள் முன்பாக இவ்வதிசயங்களையெல்லாம் நடத்தி வருகிறவகையை உணர்ந்த அச்சனங்கள் பயமும் திகிலும் கொண்டார்கள்.

65-ம் வசனம்.—"ஆகையால் அவருடைய அயலகத்தாரெலலோருக்கும் பயமுண்டானதுமன்றி, யூதாவின் மலைநாடெங்கும் இந்தச் செயதிகளெல்லாம் பிரசித்தமுமாயிற்று". யூதாவின் நாடு என்பதால் யூதேயா நாடெல்லாம் குறிக்கப்படுகிறது. இந்நாடெங்கும் சக்கரியாஸ் குடும்பத்தில் நடந்த அதிசயங்களெல்லாம் பிரபலயமாய்விட்டன. மெஸ்ஸியாவின் முன்னோடி மகிமையாய்ப் பிறந்த சேதி பிரசித்தமபெற்றது—இவையெல்லாம் மெஸ்ஸியாவின் காலம் கிட்டினதையும், உலக இரட்சண்ணியம் நெருங்கிவிட்டதையும், ஜனங்கள் அறிந்துகொள்ள வழியாயிருந்தன.

66-ம் வசனம்.—"இவைகளைக் கேள்விப்பட்டயாவரும், தங்கள் இருதயங்களில இவைகளை வைத்துக்கொண்டு ஒருவரொருவனைப்பார்தது இந்தப்பிள்ளை எப்படிபபட்டதா யிருக்குமென்று நினைக்கிறாய் என்பார்கள். ஏனெனில் ஆண்டவருடைய கரம் அதனோடிருந்தது." யூதேயா நாடெங்கும், இவவதிசயங்களைக் கேள்விப்பட்ட யாவரும் இவைகளைப்பற்றி அதிகமதிகமாய் சிந்தத்து, ஆராய்ந்து சீர்தூக்கிபபார்த்ததுமனறி, பாலனாகிய அருளப்பரை வியநது புகழ்ந்து கொண்டாடினார்கள். பாலனுடைய ஆரம்பமே இவ்வளவு மகிமையும, சிறப்பும், அதிசயமும் அருளும் தேவ கடாட்சமும், ஆசீர்வாதமும நிறைநததாயிருந்தால, இவா வளர வளர எவ்விதமாயிருக்குமோ, எப்படிப்பட்டவராவாரோ, என்னென்ன அதிசயங்களைச் செய்வாரோ என்று ஒருவரொருவருடன் கலந்து சம்பாஷித்துக்கொண்டார்கள்.

ஆண்டவருடைய கரம் என்றால் சர்வேசுரனுடைய வல்லபம், தேவ பராமரிப்பு, தேவ கடாட்சம், தேவகரிசனம் எனறர்த்தமாகும். சர்வேசுரன் தம்முடைய வல்லபத்தாலும், தமது கிருபா கடாட்சத்தாலும், அன்பின் கரிசனத்தாலும், மெஸ்ஸியாவின் முன்னோடியாகிய பாலனை பராமரித்து ஆதரித்து வந்தார். இதினால் அருளப்பர் எவ்வளவு உன்னதமான பாக்கியத்துக்கும் மகிமையான பதவிக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவரென்று விளங்குகிறது.

S. M.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

42-ம் அதிகாரம்.

முனியம்மாள் மாஜிஸ்டிறேட்டுக்குமுன்நிற்கவே
நீலிக் கண்ணீர்விட்டு அழுது,
எனக்குத் தெரியாது சாமி
யென்றாள்.

மாஜி.—மற்றொன்றும் சொல்லவில்லையோ?

பங்.—என் எசமானிக்கு நான் நற்புத்தியும் தைரியமும் சொல்லித்தேற்றி கோவிலுக்குக் கூட்டிப் போனேன்?

மாஜி.—எந்தக் கோவிலுக்கு?

பங்.—இந்த பங்களாவில் மெத்தைமேல் இருக்கும் கோவிலுக்கு.

மாஜி.—பிறகு?

பங்.—அங்கேபோய் சேரவே, அவ்விடத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து, கெட்டவர்களுடைய துற்புத்தியால் தான் கெட்டதை நினைவுகூர்ந்து, சத்தமிட்டு அழுது: தன்பாவங்களுக்காக மகா துக்கப்பட்டு, மறுநாள் காலை கோயி

லுக்குப்போய் நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்து நன்மைவாங்கி, அதுமுதல் தர்மவழியில் நடப்பதாக உறுதியான பிரதிக்கினைசெய்து, எழுந்து என்கிட்டவந்து, ஆ! பங்காரம்மா, இப்போது என் இருதயத்தில் உண்டாகும் சந்தோஷப்பெருக்கம் எப்பேர்ப்பட்டதென்று விவரிக்க என்னால் முடியாது. சர்வேசுரனுக்குத் தோத்திரம்; அவருடைய பரம தாயாருக்கு வந்தனம். இதுமுதல் நான் என் நடத்தையில்மாறி சர்வேசுரனுக்குப் பிரியமான பிள்ளையாய் ஒழுகுவேனென்று சொல்லிக் கோவிலைவிட்டு இறங்கி தன் அறைக்குள்சென்றாள்.

மாஜி.—இதற்குப்பின் உன் எசமானி உன்னுடன் பேசவில்லையோ ?

பங்.—இராப்போசனத்துக்குப்பின் என்னோடுபேசினார்கள்.

மாஜி.—என்னத்தைப்பற்றி ?

பங்.—கெட்டவர்களுடைய துற்புத்தியால் தான் கெட்டதையும் அதனால் தான் அசமாதானங் கொண்டதையும், இப்போது தனக்குண்டாயிருக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பற்றிப் பேசி, முனியம்மாளை யின்று இராத்திரி யென்னுடன் நித்திரைசெய்ய வரச்சொன்னேன், இன்னம் அவள்வரவில்லையென்றுசொன்னார்கள்.

மாஜி.—இராத்திரி அந்த முனியம்மாள் என்பவள் வந்து படுத்துக்கொண்டாளா ?

பங்.—வரவில்லை.

மாஜி.—நேற்று சாயந்திரம் பண்டிதர் இந்த பங்களாவைவிட்டுப் புறப்பட்டபின் யாராகிலும் இங்கே வந்தார்களா ?

பங்.—முனியம்மாள் வந்தாள்.

மாஜி.—உன் எசமானியோடு பேசினாளா ?

பங்.—அவள் வந்தபோது எசமானி ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

மாஜி.—முனியம்மாள் என்ன செய்தாள் ?

பங்.—மேல்மெத்தைக்குப்போய் என்னவோ ஒரு அடி நீளமுள்ள ஒன்றை காகிதத்தில் சுற்றிக்கொண்டு வந்தாள்.

மாஜி.—அது இன்னதென்று தெரியுமா ?

பங்.—காகிதத்தால் மூடியிருந்ததைப்பற்றி அது இன்னதென்றுசொல்லக் கூடாவிட்டாலும் கத்திபோல் காணப்பட்டது.

போ. ஆ.—அது கத்தியென்று உனக்கு எப்படித் தெரியும் கிழவி ?

பங்.—அதன் ஒருபக்கமாத்திரம்தெரிந்தது, அது கத்திப்பிடியாயிருக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அது கத்தியென்று நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன்.

மாஜி.—அது எப்பேர்ப்பட்ட பிடி ?

பங்.—கருப்புப் பிடி, பளபளப்பாயிருந்தது.

மாஜி.—(மேசைமேலிருந்த இரத்தக்கறை பிடித்த கத்தியைக்காட்டி) இப்படியிருந்ததா ?

பங்.—கத்தியை நான்பார்க்கவில்லை ; பிடி மாத்திரம் இவ்வாறே இருந்தது.

மாஜி.—நல்லது, அதை முனியம்மாள் எடுத்துக்கொண்டு எங்கேபோனாள் ?

பங்.—அவள் பங்களாவை விட்டு வெளியே போனதைமாத்திரம் பார்த்தேன். ஆனால் அவள் எங்கேபோனாளோ எனக்குத்தெரியாது.

"அவள் கத்தியை யெடுத்துக்கொண்டு வெளியே போகும்போது ஏன் அவளைப் பிடித்துக் கொள்ளவில்லை ?" என்று (கோபத்துடன் பயமுறுத்தினவிதமாய் வினவினார்) போலீஸ் ஆபீசர்.

பங்.—அவளும் என்னைப்போல எசமானியின் வேலைக்காரியாயிருக்கக்கொள்ள அவளை நான்பிடிக்க என்ன நியாயம் ?

மாஜி.—நீ அவளோடு பேசவில்லையோ ?

பங்.—அது என்னம்மா என்றேன்.

மாஜி.—அதற்கு அவள் என்னசொன்னாள்?

பங்.—நீயாரடி யென்னை கேட்பதற்கு என்றாள். நாளைக்கு உன்வாயில் மண்விழப்போகிறதைப் பார்த்துக்கொள்ளடியென்று வெளியே போனாள்.

மாஜி.—அவள் அவ்வாறு பேசியபோது யாராகிலும் உன்னோடு இருந்தார்களா ?

பங்.—அந்நேரத்தில் தோட்டக்காரன் முருகன் பூஞ்செடிக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தான்.

மாஜி.—அதற்குப்பின் யாரும் இந்தப்பங்களாவுக்கு வந்ததில்லையோ ?

பங்.—முனியம்மாள் வெளியே போனபின் இருவாலர் என்னிடம் வந்து "முனியம்மாள் எங்கே ?" என்று கேட்டார்கள். கொஞ்சநேரத்துக்குமுன் வெளியேபோனாள் என்றேன்.

மாஜி.—அந்த இரண்டு வாலர் யாரென்றும் அவர்களுடைய பேர் இன்னதென்றும்தெரியுமா உனக்கு ?

பங்.—ஒருவன்பெயர் கலியாணசுந்திரம், மற்றொருவன் பெயர் மணவாளன் என்று தோட்டக்காரன் சொன்னான்.

போ. ஆ.—அப்போது தோட்டக்காரன் எங்கே இருந்தான் ?

பங்.—என்னோடு பங்களா கேட்டண்டை நின்றுகொண்டிருந்தான்.

போ. ஆ.—பொய் சொல்லாதே கிழவி, பிறகு உனக்குச் சங்கடம் நேரிடும்.

பங்.—என் வாயில் பொய்வராது ஐயா.

மாஜி.—(போ. ஆபீசரைப்பார்த்து) தயவுசெய்து இந்த கிழவியைப் பயமுறுத்தவேண்டாம் சார்.

கலியாணசுந்திரத்துக்கும் மணவாளனுக்கும் சம்மன் அனுப்பும்படி தமது எட்கிளார்க்குக்கு மாஜிஸ்ற்றேட் உத்தரவு செய்தார்.

மாஜி.—(பங்காரம்மாளைப்பார்த்து) வேறே ஒருவரும் பங்களாவுக்கு வரவில்லையோ ?

பங்.—ஒருவரும் வரவில்லை.

மாஜி.—கடந்த இராத்திரி பண்டிதர் வீட்டுக்குத் திரும்பினாரோ ?

பங்.—எனக்குத் தெரியாது.

மாஜி.—உன் எசமானி யெப்படி மரணமானாளென்று உனக்குத் தெரியாதா ?

பங்.—(அழுதுகொண்டு) அது, ஐயையோ எனக்குத் தெரியாது.

மாஜி.—இராத்திரியில் யாதொரு சந்தடியும் கேட்கவில்லையோ ?

பங்.—நடுச்சாமத்தில் எசமானி யிருந்த அறையில் நாற்காலி கீழேவிழுகிற சத்தங் கேட்டது; சிலவிசை பண்டிதர் வந்திருப்பாரென்று நினைத்துச் சும்மா யிருந்துவிட்டேன்.

மாஜி.—வேறு யாதொரு சந்தடியையும் கேட்கவில்லையோ ?

பங்.—என் எசமானியின் குரல் சத்தத்தைக் கேட்டேன். ஆனால் எசமான் வீட்டுக்குத் திரும்பினபோது இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பார்களென்று நினைத்தேன். அப்போதே நான் எழுந்துபோயிருக்கிறேன், இப்பேர்ப்பட்டகொலை நடந்திராது. இது என் அசட்டைத்தனமே !

மாஜி.—உன் எசமானி செத்த சங்கதி உனக்கு எப்படித் தெரியவந்தது ?

பங்.—காலை 6-மணிக்குள் என் எசமானி எழுந்திருக்காவிட்டால், நான் அறைக்குள் சென்று அவர்களை யெழுப்புவதுண்டு; காலை 6½-மணிமட்டும் காத்திருந்தும் அவர்கள் எழுந்திராததைப்பற்றி அறையைத் திறந்துகொண்டு போனபொழுது (விம்மி விம்மி அழுதுகொண்டு,) என் அலங்காரமான மயில், தேனிலும் இனிமையான என் எசமானி கட்டிலில் கொலைசெய்யப்பட்டிருப்பதைக் கண்டு அழத்துடங்கினேன்.

மாஜி.—அந்நேரத்தில் யாரும் வீட்டுக்கு வரவில்லையோ ?

பங்.—தோட்டக்காரன் மாத்திரம் பூ பறித்துக்கொண்டிருந்தான்.

மாஜி.—வேலைக்காரர் வழக்கமாக எத்தனை மணிக்குப் பங்களாவுக்கு வருவார்கள் ?

பங்.—சமயல்காரர் ஏழுமணிக்கு வருகிறதுண்டு. தோட்டக்காரர் ஆறுமணிக்கு முன்னதாக வந்து கோவிலுக்கும் வீட்டுக்கும் வேண்டிய புஷ்பங்களைப் பறிப்பார்கள். வேலைக்காரியான முனியம்மாள் 6½-மணிக்கு வருவாள்.

மாஜி.—முனியம்மாள் என்பவள் இன்றைக்கு எத்தனைமணிக்கு வந்தாள் ?

பங்.—இன்றைக்கு நான் அவளை பார்க்கவே இல்லை.

மாஜி.—நல்லது, அம்மா! நீ போகலாம். தோட்டக்காரன் முருகன் வரட்டும்.

முருகன்.—தண்டம் ஸ்வாமி;

மாஜி.—உனக்கு என்னவேலை யிந்தபங்களாவில் ?

முரு.—தோட்டவேலை ஸ்வாமி.

மாஜி.—எத்தனை வருஷமாய் இங்கே தோட்டவேலை செய்கிறாய் ?

முரு.—நாலு வருஷகாலமாய் சாமி.

மாஜி.—பண்டிதரோடும் மரணமான அவர் மனைவியோடும் பேசி யிருக்கிறாயா ?

முரு.—அவர்களோடு பேச நான் எவ்வளவு சாமீ !

மாஜி.—பண்டிதரும் அவர் மனைவியும் எப்போதாகிலும் சண்டைபோட்டுக் கொண்டார்களா ?

முரு.—அது எனக்குத் தெரியாது சாமி.

மாஜி.—நேற்று பண்டிதர் எத்தனைமணிக்கு வெளியே போனார்?

முரு.—(கையால்காட்டி) அவ்வளவு பொழுதிருக்கும்.

மாஜி.—அவர் போனபின் யாராகிலும் இந்த பங்களாவுக்கு வந்தார்களா?

முரு.—முனியம்மாள் என்பவள் வந்தாள்.

மாஜி.—வந்து என்ன செய்தாள்?

முரு.—என்ன செய்தாளென்று தெரியாது.

மாஜி.—திரும்ப வெளியே போகும்போது ஏதாகிலும் கொண்டுபோனாளா?

முரு.—அரைமுழ நிகளமான என்னத்தையோ காகிதத்தில் சுற்றிக்கொண்டுபோனாள்.

மாஜி.—அது இன்னதென்று தெரியுமா?

முரு.—அது என்னவோ தெரியாது சாமி.

மாஜி.—கொஞ்சங்கூட தெரியவில்லையா?

முரு.—ஒரு முனைமாத்திரம் தெரிந்தது; கறுப்பாயிருந்தது.

மாஜீ.—என்னகொண்டு போகிறாயென்று நீ அவளைக் கேட்டாயா?

முரு.—நான் கேட்கவில்லை சாமி.

மக்ஜி.—யாராகிலும் கேட்டார்களா?

முரு.—பெரிய அம்மா கேட்டார்கள்.

மாஜி.—அந்த பெரியம்மாள் பேரென்ன?

முரு.—பங்காரம்மாள்.

மாஜி.—பங்காரம்மாள் என்னகேட்டாள்?

முரு.—என்னகொண்டுபோகிறாய் என்று கேட்டதற்கு, நீ யாரடி என்னைக் கேட்பதற்கு, நாளைக்கு உன்வாயில் மண்விழும் என்றாள்.

மாஜி.—அதற்கு பங்காரம்மாள் என்ன சொன்னாள்?

முரு.—ஒன்றும் சொல்லவில்லை சாமி.

மாஜி.—முனியம்மாள் வெளியே போனபின் யாராகிலும் பங்களாவுக்கு வந்தார்களா?

முரு.—ஆம்சாமி, ரெண்டுபேர் வந்தார்கள்; ஒருவர் கலியாணசுந்திர முதலியார், இன்னொருவர் (போலீஸ் ஆபீசரை காட்டி) இந்த சாமியின் குமாரன்.

மாஜி.—(போ. ஆபீசரைப்பார்த்து) உங்கள் குமாரனா சார்?

போ. ஆ.—இவன் இப்படியா சொல்லுகிறான்? ஆனால் இது எனக்கு அதிசயமாயிருக்கிறது. அவன் யார்வீட்டிற்கும் போகிறதில்லையே.

மாஜி.—இவருடைய குமாரன்பேர் மணவாளனா?

முரு.—ஆமா சாமி.

மாஜி.—சரி, நீ போகலாம் என்ற பின், இரண்டாவது தோட்டக்காரனையும் சமையல்காரரையும் இன்னும் சிலரையும் விசாரித்தபின், முனியம்மாளை ஆஜராகச்சென்னார் மாஜிஸ்றேட்.

முனியம்மாள் மாஜிஸ்றேட்டுக்கு முன் வந்து நிற்கவே, நீலிக்கண்ணீர் விட்டழுது "எனக்குத் தெரியாது சாமி" யென்றாள். அப்போது போலீஸ் ஆபீசர் அவளை நோக்கி, "ஏண்டி அழுகிறாய்? உன்னை ஒருவரும் ஒன்றும் செய்யமாட்டார்கள். கேட்கிற கேள்விக்கு ஆம், இல்லை என்றுசொல்" என்றார்.

மாஜி.—உனக்குத்தெரியாது என்று இப்போது சொன்னாயே, என்ன தெரியாது?

முனி.—என் எசமானியைக் கொன்றது இன்னாரென்று எனக்குத் தெரியாது சாமி என்று (கை இரண்டையும் எடுத்துத் தண்டம் போட்டு) எனக்குத் தெரியவே தெரியாது.

மாஜி.—உன்னையார் கேட்டார் உன் எசமானியைக் கொலைசெய்ததைப்பற்றி? நீ பேசத்துவக்கும்போதே, உன் பேச்சால் சமுசயத்துக்கு இடமுண்டாகிறது. நல்லது, நீ யெத்தனை வருஷமாய் இந்த பங்களாவில் வேலையாயிருக்கிறாய்?

முனி.—நாலு வருஷமாய் வேலையாயிருக்கிறேன் சாமி.

மாஜி.—பண்டிதரையும் மரணமான அவருடைய மனைவியையும் அறிவாயோ?

முனி.—அறிவேன் சாமி.

மாஜி.—உனக்கு இந்த பங்களாவில் என்ன வேலை?

முனி.—என் எசமானிகூட இருந்து, அவர்களுக்குத் தேவையானதை யெடுத்துக் கொடுக்கிறது. வெற்றிலைமடித்து கொடுக்கிறது; அவர்கள் உடுத்திக்கொள்ளும்போது உதவிசெய்கிறது; தலைக்கு பூமுடிக்கிறது; வஸ்திராபரணங்களைப் பத்திரப்படுத்துகிறது இவை முதலிய வேலைதான்.

மாஜி.— உன் எசமானிக்கு யாதொரு புஸ்தகம் வாசிக்கிறதுண்டோ?

முனி.—ஆம் சாமி.

மாஜி.—என்ன புத்தகம்?

முனி.—கதைப் புத்தகம்.

மாஜி.—அது யாருடைய புத்தகம்?

முனி.—சில புஸ்தகங்கள் என்னுடையவை சில சரஸ்வதி யம்மாளுடையவை.

மாஜி.—அந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளைச் செய்யும்படி உன் எசமானிக்கு நீ சொன்னதுண்டோ?

முனியம்மாள் அதற்குத் தகுந்த மறுமொழி சொல்லத் தெரியாமல் விழித்துக்கொண்டிருப்பதைக் கண்ட போலீஸ் ஆபீசர், அவளைப் பார்த்து, "என்னடி இது சொல்லத் தெரியவில்லையா? புஸ்தகத்தில் திருட்டைப்பற்றியும் பொய்யைப்பற்றியும் விபசாரத்தைப்பற்றியும் கொலையைப்பற்றியும் சொல்லப்பட்டிருந்தால், உன் எசமானி திருடும்படியாகவும் பொய் சொல்லும்படியாகவும் நீ அவளுக்குக் கற்றுக்கொடுத்தியாடீ?"

முனி.—இல்லை, இல்லை.

மாஜி.—போ. ஆபீசரைப் பார்த்து, நீர் கேட்கிறபடி கேள்வி கேட்டால் எப்பேர்ப்பட்ட குற்றவாளியும் சுலபமாய்த் தப்பித்துக்கொள்ளலாமே சார்? என்று சிரித்தார்.

மாஜி.—உன் எசமானும் எசமானியும் எப்போதாகிலும் சண்டையோட்டுக்கொண்டதுண்டோ?

முனி.—அது எனக்கு எப்படித் தெரியும்?

போ. ஆ.—உன் எசமானி தன் புருஷனைப் பற்றி உன்னோடு முறைப்படவில்லையோ?

முனி.—ஆமா, ஆமா, பலமுறை முறைப்பட்டிருக்கிறார்கள்.

மாஜி.—என்னத்தைப் பற்றி?

முனி.—எசமானியின் புருஷன் யாரார் வீட்டுக்கோ போகிறார் என்று முறைப்பட்டார்கள்.

மாஜி.—அவர் அந்தந்த வீட்டுக்குப் போனாரென்று உன் எசமானிக்கு எப்படித் தெரியும்?

முனி.—அது எப்படித் தெரியுமோ?

மாஜி.—நீ சொன்னதில்லையோ?

முனி.—நான் ஏன் சொல்லுகிறேன்?

மாஜி.—வேறே யாராகிலும் சொன்னதுண்டோ?

முனி.—சரஸ்வதி யம்மாள் சொன்னார்கள்.

மாஜி.—யார் வீட்டுக்குப் போனதாகச் சொன்னார்கள்?

முனி.—மீனாட்சி வீட்டுக்கு.

மாஜி.—எத்தனை நாளைக்கு முன்னே?

முனி.—அது மூன்று வருஷத்துக்கு முன்னே?

மாஜி.—நீ பண்டிதரைப் பற்றி அவர் மனைவியோடு ஒன்றும் சொன்னதில்லையா?

முனி.—நான் ஒன்றும் சொன்னதில்லை?

மாஜி.—நேற்று சாயந்திரம் நீ இந்த பங்களாவுக்கு வந்தாயோ?

முனி.—(கோ வென்று அழுதுகொண்டு) அது எனக்குத் தெரியாது சாமி.

மாஜி.—என்ன தெரியாது?

முனி.—என் எசமானியைக் கொலை செய்தது.

மாஜி.—நான் கொலையைப்பற்றி உன்னை வினவவில்லையே! ஏன் வீணாய்க் கலங்குகிறாய்?

போ. ஆ.—இவள் மெத்த பயங்காளி, யூர் ஆனர்.

மாஜி.—நேற்று இந்தப் பங்களாவுக்கு வந்தாயோ?

முனி.—ஆம், வந்தேன்.

மாஜி.—நீயாகவே வந்தாயா அல்லது யாராகிலும் உன்னை அழைத்தார்களா?

முனி.—பங்காரம்மாள் என்னையும் சரஸ்வதி யம்மாளையும் எசமானி வரச்சொன்னார்கள் என்று சொல்லி அழைத்துக்கொண்டுபோனாள்.

மாஜி.—உன் எசமானி உங்களிருவரையும் என்னத்துக்கு வரவழைத்தாள்?

முனி.—தன் புருஷனைப்பற்றி அழுதுகொண்டு, அவர் தன் வீட்டிலிருந்த பணம் நகையெல்லாம் எடுத்துக்கொண்டு போனதாகச் சொல்லித் துக்கப்பட்டார்கள்?

மாஜி.—அப்போது நீ அவளுக்கு என்ன சொன்னாய்?

முனி.—நான் என்ன சொன்னேன்? ஒன்றும் சொல்லவில்லை.

மாஜி.—சரஸ்வதி என்ன சொன்னாள் உன் எசமானிக்கு?

முனி.—அந்தத் துஷ்டப் புருஷனை விட்டு விடச்சொன்னார்கள்.

மாஜி.—கிணற்றிலாகிலும் குளத்திலாகிலும் குதிக்கச் சொன்னதுண்டோ?

முனி.—ஆம் சொன்னார்கள்.

மாஜி.—தூரதேசத்துக்கு ஓடிப்போகச் சொன்னதுண்டோ?

முனி.—வீட்டிலுள்ள நகை நட்டுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு ஓடிப்போகச் சொன்னார்கள்.

மாஜி.—அதற்கு உன் எசமானி சொன்னதென்ன?

முனி.—ஒன்றும் சொல்லாமல் அழுதுகொண்டிருந்தார்கள் என் எசமானி.

மாஜி.—அதற்குப் பின்?

முனி.—சரஸ்வதி யம்மாள் என்னை வரச்சொல்லி சயிக்கிளை காட்டினதின்மேல் நானும் அவர்களும் எழுந்து வெளியே போனோம்.

மாஜி.—அதற்குப் பின் நீ யிந்த பங்களாவுக்கு வந்தாயோ?

முனி.—(சற்று நேரம் மவுனமா யிருந்து) வந்து உடனே போய்விட்டேன்.

மாஜி.—உள்ளதைச் சொல், பொய் சொல்லாதே.

முனி.—உடனே புறப்பட்டுப் போய்விட்டேன் சாமி.

மாஜி.—என்னத்துக்கு வந்தாய்?

முனி.—சும்மா வந்தேன்.

மாஜி.—உள்ளதைச் சொல்?

முனி.—(பேபர்) காகிதம் எடுத்துக்கொண்டு போனேன்.

மாஜி.—பேபர் காகிதத்தில் என்ன வைத்துக்கொண்டுபோனாய்?

முனி.—வெறுங் காகிதம் சாமி. ஒன்றும் கொண்டுபோகவில்லை.

மாஜி.—எடுத்துக்கொண்டுபோனது இன்னதென்று விபரமாய்ச் சொல்?

முனி.—பேனாகத்தி சாமி.

மாஜி.—யாருடைய கத்தி?

முனி.—என் கத்தி.

மாஜி.—யார் கொண்டுவரச்சொன்னார்?

முனி.—கலியாணசுந்தரம்.

மாஜி.—நீ பேபர் காகிதத்துடன் வெளியே போகும்போது யாராகிலும் உன்னைப் பார்த்தார்களா?

முனி.—பங்காரம்மாளும் தோட்டக்காரனும் கேட்டண்டை நின்றுகொண்டிருந்தார்கள்.

மாஜி.—அவர்கள் உன்னைப்பார்த்து என்ன சொன்னார்கள்.

முனி.—ஒன்றும் சொல்லவில்லை.

மாஜி.—நீ யென்னசொன்னாய்?

முனி.—நான் ஒன்றும் சொல்லவில்லை.

மாஜி.—பங்காரம்மாளைப்பார்த்து நாளைக்கு உன்வாயில் மண்விழும் என்னவில்லையோ?

முனி.—அந்தக் கிழமுண்டை யெப்போதும் பொய் சொல்வாள் சாமி, யென்மேல்!

மாஜி.—(போ. ஆபீசரை நோக்கி.) இந்த சாக்ஷியை இங்கேயே பத்திரப்படுத்தும்.

(இன்னும் வரும்.)

THE EPISCOPAL AUTHORITY.
மேற்றிராணிமாருடைய அதிகாரம்.

சர்க்கார் சட்டங்களை அதிக்கிரமித்து நடப்பவர்களை அவர்களுடைய குற்றத்துக்குத் தகுந்தபடி இராஜாங்கத்தார் அபராதத்தாலும் சிறையாலும் தண்டிப்பார்கள். ஆனால் திருச்சபை சட்டங்களை மீறி மேற்றிராணிமாருடைய அதிகாரத்தை அதிக்கிரமித்து நடக்கும் கிறீஸ்துவர்களை மேற்சொன்ன உலக தண்டனைகளால் சிக்ஷிக்க மேற்றிராணிமாருக்கு அதிகார மில்லாவிட்டாலும் அவர்களுக்கு இதிலும் சிறந்ததோர் அதிகாரமுண்டு. அதற்கு ஞான அதிகார மென்று பெயர். இந்த அதிகாரத்தை அவர்கள் அரிதாயும் மிகவும் அவசரமா யிருக்கும்போது மாத்திரமே உபயோகிப்பார்கள். குற்றத்துக்கேற்ற தண்டனை என்பதுபோல, பயங்கரத்துக்குரிய ஞானத் தண்டனை பெறுவதற்கான குற்றம் எவ்வளவு கனத்ததா யிருக்கவேண்டும்!

திருச்சபையின் வார்த்தையைக் கேளாதவன் உனக்கு அக்கியானியைப்போல ஆகக்கடவானென்று நமது திவ்விய கர்த்தர் வசனித்திருக்கிறார் இதற்குப் பெயர் சாபம். எந்தெந்தக் கிறீஸ்துவன்மேல் இப்பேர்ப்பட்ட அல்லது இதற்கொத்த வேறு வார்த்தைகள் உச்சரிக்கப்படுமோ அவன்மேல் திருச்சபை சாபம் விழும். எவ்வளவு ப்பயங்கரத்துக்குரிய வார்த்தைகள்!!

மேற்றிராணிமாரின் அதிகாரச் சின்னங்கள்.

மேற்றிராணிமார் தங்கள் சிரசில் முடி பூண்டு, கையில் செங்கோலேந்தி, சிம்மாசனபதிகளாய் வீற்றிருப்பதைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் தங்கள் விசாரணைக்கு ஞான இராஜாக்களாகி, சகலத்திலும் பிரதம ஸ்தானத்தை வகிக்க அவர்களுக்கு உரிமை உண்டென்று காட்ட தங்கள் சிரசில் முடி தரிக்கிறார்கள். தங்கள் விசாரணைக் கிறீஸ்துவர்கள்மேல் தங்களுக்குள்ள அதிகாரத்தைக் காட்டும்படி கையில் செங்கோல் ஏந்துகிறார்கள். ஆயன் (இடையன்) ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு போகும்போது கையில் கோல் பிடித்துக்கொண்டு போகிறான். ஏன்? கோலைத் தரையில் தட்டி, வழி தவறிப்போகும் ஆடுகளை அதட்டவும், அப்படியும் அவை அவனை மிஞ்சிப்போனால் அவைகளை அதனால் அடிக்கவுந்தானே? அவ்வாறே ஞான மேய்ப்பர்களாகிய மேற்றிராணிமார் தங்கள் வார்த்தையை மீறி நடக்கும் கிறீஸ்துவர்களுக்குப் புத்திமதி சொல்லி அவர்களை நல்வழிக்குத் திருப்பப் பிரயாசைப்படுவார்கள். ஆனால் அப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்கள் அதற்குக் காது கொடாமல் மூர்க்கம்சாதிப்பார்களேயாகில், இவர்களால் மற்றக் கிறீஸ்துவர்கள் கெடாதபடிக்கு, கெட்ட கிறீஸ்துவர்கள்மேல் தங்களுக்குள்ள தேவ அதிகாரத்தை உபயோகித்துச் சாபம் என்கிற அடியால் அவர்களை அடிப்பார்கள். மகா பயங்கரத்துக்குரிய இவ்வடி, யார்மேல் விழுமோ அவனுக்கு ஐயோ கேடாம்.!!

திருச்சபை சாபத்தின் பலாபலன்.

திருச்சபை சாபத்துக்குள்ளானவன் சேசுக்கிறீஸ்துநாதருடைய ஞான மந்தையாகிற திருச்சபையினின்று தெறிபடுகிறான். தேவத்திரவிய அநுமானங்களைப் பெற அவனுக்கு உரிமை இல்லை. சமூகீத பிரயோசனத்தையும் அதனால் உண்டாகும் ஞான நன்மைகளையும் இழந்துபோகிறான். இந்த அந்தஸ்தில் அவன் இறப்பானாகில் மந்திரிக்கப்பட்ட கல்லறையில் அவனது பிரேதம் வைக்கப்படமாட்டாது. விஸ்வாசமுள்ள கிறீஸ்துவர்கள் இதைக் கேட்டு பயந்து நடுநடுங்காதிருப்பார்களோ? கொருந்தியனான் ஒரு கெட்டவனை அர்ச். சின்னப்பர் சபித்து அவனுடன் மற்றக் கிறீஸ்துவர்கள் பேசாதிருக்கும்படி விலக்கியிருக்கிறார். திருச்சபை சரித்திரத்தை வாசித்தால், அதன் அதிகாரத்தைத் திரஸ்கரித்தவர்கள், அரசனானாலும், மன்னனென்கிலும், மேற்றிராணியாரானாலும் குருவென்கிலும் அப்போதைக்கப்போது திருச்சபையினின்று தள்ளப்பட்டார்களென்று காணலாம். ஆகையால் கிறீஸ்துவர்கள் பயங்கரத்துக்குரிய இப்பேர்ப்பட்ட ஆக்கினைக்கு நடுநடுங்கக்கடவார்கள்,

திருச்சபை சாபம் எப்படி நீங்கும்?

ஒருவன் செய்த தப்பிதத்துக்காக திருச்சபையின் சாபத்துக்குள்ளான பின், அவன் அதினின்று தப்பித்துக்கொள்ள ஆசைப்படுவானாகில், முதல்முதல் தன் ஞான அதிகாரிகளிடம் சென்று அவர்களுடைய பொறுத்தலைப் பெறவேண்டும். பிறகு அவன் செய்த குற்றம் பிரச்சித்தமுள்ளதானால் அதற்கு பிரச்சித்தமான பரிகாரம்செய்யவேண்டும். அதற்குப்பின் தன் ஞான அதிகாரிகள், தாங்கள் போட்ட சாபத்தை நீக்கிவிடுவார்கள். அப்போது மாத்திரம் அவன் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அதன் ஞான நன்மைகளுக்குப் பங்காளியாவான்.

மகா நப்போலியன்.

இவரைப்பற்றி நம்மில் அநேகர் கேள்விப்பட்டிருப்பார்கள். அர்ச்சிய சிஷ்டவர்களான அரசர் கோனாநீதி ஞாயத்துடன் அரசுபுரிந்து நீதி பரிபாலித்துவந்த பிரான்ஸ்மாதேசத்தின் சிம்மாசனத்தில் நப்போலியன் என்னும் சக்கரவர்த்தி வீற்றிருந்து அப்புண்ய தேசத்தை அரசாண்டார். இவருக்குண்டாயிருந்த புத்தியும் ஞானமும் மகிமையும் கீர்த்தியும் சௌரிய

மும் தைரியமும் அதிசயத்துக்குரியவை. தண்டு தளமும் கப்பல்படையும் ஆஸ்திபாஸ்தியும் அவருக்கு ஏராளமாயிருந்தன. பேர்போன போர்வீரர் அவருக்குத் தொண்டுபுரிவது தங்களுக்கு மகிமை கீர்த்தியென்று எண்ணி, அவர் காலால் செய்ய இடும் வேலையைக் கையால் செய்வார்கள். இம் மகா மன்னனுக்கு நிகரான மன்னன் அக்காலத்திலிருந்தானில்லை. சகலரும் அவருடைய பெயர் கேட்டமாத்திரத்தில் நடுங்குவார்கள். அவர் செய்த யுத்தங்களில் அபஜயப்பட்டறியார். அனேக தேசங்களைப் பிடித்தாண்டார். நாளுக்கு நாள் அவருடைய மகிமையுங் கீர்த்தியும் பேரும் பெருமையும் அதிகரித்துக்கொண்டே வந்தன. உச்சிப்பகலில் சூரியன் எவ்வளவு ஜோதிப்பிரகாசத்துடன் ஜொலித்துத் துலங்குமோ, அவ்வளவு பிரகாசித்துத் துலங்கினது நப்போலியனுடைய மகிமைப்பிரதாபமும். ஆனால் இம் மகா மன்னன், தெரிந்தோ தெரியாமலோ கைநீட்டத் தகாதமார்க்கமாய் அதை நீட்டின மாத்திரத்தில், கிராணமுண்டாகும்போது ஜெகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துத் துலங்கும சூரியன் எவ்வாறு மங்கி அந்தகாரத்துக்குள்ளாகுமோ, அவ்வாறே மங்கி மறைநதது இவருடைய மகிமைப்பிரதாபமும் பேரும பெருமையும். அதெப்படியெனில், அதுவரையில் திருச்சபையை மதித்துக் கனப்படுத்தி அதற்குக் கீழ்ப்படிந்துவந்த நப்போலியன், திருச்சபை தலைவராகிய 7-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவருக்குக் கீழ்ப்படியாமல் போனார். விருத்தாப்பியரான பத்திநாதருக்குத் தண்டு தளமும் கப்பல்படையு மிருநததில்லை. மற்ற அரசர் இம்மகா சக்கரவாத்தியான நப்போலியனுக்கு நடுநடுங்கி நிற்கும்படி செய்யும் இவ்வளவு வல்லமையிருந்தும், பாப்பானவரான பத்திநாதர் தமமுடைய ஜெபதபத்தால் சர்வேசுரனை மன்றாடி, அவா தமக்கு அளித்த ஞான அதிகாரத்தைப் பிரயோகித்து, நப்போலியன்மேல் சாபத்தைப் போட்டார். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட நப்போலியன் சினமும் சிரிப்பும் கொண்டு, “ ‘மந்திரத்தில் மாங்காய் விழுமோ,’ என ஜனங்கள் கூறுவதுபோல, இந்தக் கிழவனுடைய வார்த்தையால் என் மகிமையுங் கீர்த்தியுங் குறையுமோ, அல்லது என்னுடைய போர்ச்சேவகர்கள் கையிலிருக்கும்ஆயுதங்கள் கீழே விழுந்துபோகுமோ? பார்க்கலாம்” என்று தன் மீசையை முறுக்கினார். மாங்காய் மாத்திரமல்ல மரமும் அடியுடன் சாய்ந்தது விருத்தாப்பியரான பத்திநாதருடைய வார்த்தைக்கு. அதெப்படியெனில், அன்னாள்முதற்கொண்டு நப்போலியன்செய்த யுத்தங்களில் தோர்வையே அடைந்தார். அவர் ருஷியா தேசத்தின்மேல் இலட்சக்கணக்கான போர்ச்சேவகருடன் படை எடுத்தபோது பெருந்தோர்வைப்பட்டு, அவ்விடத்தில் இலட்சத்துக்கு அதிகமான போர்வீரர் மடிந்தார்கள். மீதியான சேவகர் பிரான்சுக்குத் திரும்பியபோது, அப்போது உண்டாயிருநத கடுங்குளிரால் சேவகர் கையிலிருந்த ஆயுதங்கள் தாமாகவே கீழே விழுந்துபோயின. நாளுக்குநாள் நப்போலியனுடைய மகிமை குறைந்து, ஒரு போரில் கைதியாகப் பிடிபட்டு ஒரு சிறுதீவில் சிறையாக வைக்கப்பட்டார். அந்தத் தீவிலிருக்கும்போது, ஒருநாள் அவர் ஆகாயத்தை வெகுநேரம் நோக்கிப்பார்த்து “புதிதுபுதிதாய பட்டணங்களும் இராஜ்ஜியங்களும உண்டாகி மறைந்துபோகின்றன. ஆனால் பாப்பரசு மாத்திரம் என்றும் நிலைத்து விர்த்திபெற்று வருகின்ற” தென்றார். திருச்சபை சரித்திர்த்தை வாசித்துப் பார்த்தாலோ, திருச்சபை சாபத்துக் குள்ளானவர்களுக்கு இப்பேர்ப்பட்ட அனேக துன்பங்களுண்டானதென்று கண்டுகொள்ளலாம். ஆகையால் துராதிஷ்டமாய்த் திருச்சபையின் சாபத்துக்குள்ளான சகோதரர்களே, பயங்காத்துககுரிய இப்பெருந் தண்டனைக்கு அஞ்சி பயப்படுங்கள். ‘வெள்ளம் வருமுன் அணைபோடு’ என்னும் பழமொழியை நினைவுகூர்ந்து திருச்சபையின் சாபத்தால் உண்டாகும் பலாபலன் உங்கள் தலைமேல் விழுவதறகுமுன் ஜாக்கிரதையாயிருந்து, அச்சாபம உங்களைவிட்டு நீங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயலுவீர்களாக.

ஓர் பெருங்கடமை.

திருச்சபை சாபத்துக் குள்ளானவர்களுடைய பெற்றோரும் மனைவிகளும் பிள்ளைகளுமான சகோதரர்களே! உங்கள் பிள்ளையோ, கணவனோ, அல்லது தகப்பனோ, இப்பேர்ப்பட்ட பயங்கரத்துக்குரிய திருச்சபை தண்டனைக் குள்ளாயிருப்பதைக் கண்டு நீங்கள் சும்மாயிருக்கலாமோ? அவர்களுக்கு யாதோர் ஆபத்து நேரிடுங்காலத்தில் அதைப் பரிகரிப்பதற்கான வழியைத் தேடாதிருப்பீர்களோ? யாரிடம்போய்ப் பேசவேண்டுமோ, அவர்களிடம் போய்ப்பேசி செய்யவேண்டியதைச் செய்யுங்கள். அவர்களுக்கு இப்போது நேரிட்டிருக்கும் ஆபத்து அற்பமானதல்ல; ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் பெருஞ்சங்கடம் நேரிட்டிருக்கிறது.

பெற்றோரே! 4-ம் கற்பனையால் உங்கள் பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து வளர்த்து அவர்களைத் தர்மவழியில் நடத்தி அவசரமானபோது அவர்களுக்குப் புத்திசொல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்களல்லவா? ஆனபடியால் இப்போது நீங்கள் அவர்களுக்குப் புத்தி புகட்டாவிடில், எப்போது புகட்டப்போகிறீர்கள்? ஆகையால் நீங்கள்மாத்திரமல்ல, உங்களிஷ்டர்களைக்கொண்டும், அவர்கள் இப்பெரும் ஆபத்துக்குத் தப்பித்துக்கொள்ள சகல விதத்திலும் பிரயாசைப்படுவீர்களாக.

நகமும் சதையுமாக ஐக்கிய பந்தனப்பட்டு அன்னியொன்னிய நேசத்துடன் உங்கள் கணவர்களை நேசிக்கும் ஸ்திரீகளே! நீங்கள் மணமுடித்துக்கொண்டபோது, ஒருவர் ஒருவரை விட்டுப் பிரியாமலும், சகலத்திலும் ஒருவர் ஒருவரை நேசித்துக் காப்பாற்றவும் சர்வேசுரனுக்கு நீங்கள் கொடுத்த மகா வார்த்தைப்பாட்டைத் தற்போது நினைவு கூர்ந்துகொள்ளுங்கள். உங்களால் கூடிய சகல பிரயாசையும்பட்டு, சமயோஜிதமான வார்த்தையாலும் விசேஷமாக உங்கள் ஜெபவேண்டுதலாலும் கண்ணீராலும் உங்கள் கணவர்களை இரட்சிக்கக்கடவீர்கள். மிகவும் அன்பு நேசத்துடன் உங்கள் தந்தையரால் வளர்க்கப்பட்டச் செல்வப் பிள்ளைகளே! உங்கள் நேசத் தந்தைக்குப் பெரும் ஆபத்து உண்டாயிருக்கையில் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்கலாமோ? இப்போது மெய்யாகவே உங்கள் நேசத் தந்தை மகா ஆபத்துக்குள்ளா யிருப்பதால் உங்களால் கூடிய உதவியை அவருக்குச் செய்ய தாமதியாதேயுங்கள். அவரைத் துக்கத்துடன் நோக்கி, மனதில் சஞ்சலங்கொள்ளுங்கள். தேவ நற்கருணைக்கு முன் முழந்தாட்படியிட்டு, “என் சேசுவே, என் நல்ல சேசுவே, என் தகப்பனுக்கு உண்டாயிருக்கும் கனத்த பொல்லாப்பினின்று அவரைக் காப்பாற்றியருளும். நீரே அவர் இருதயத்தில் பேசி அவரிந்தப் பெரும் மோசத்துக்குத் தப்பித்துக் கொள்வதற்கான வரப்பிரசாதத்தைத் தந்தருளும்” என்று மன்றாடுவீர்களாக.

சமூகீத பிரயோஜனம் என்னப்படும் சிறந்த பந்தனத்தால் பந்திக்கப்பட்ட கிறீஸ்துவ சகோதரர்களே! அறிந்தோ அறியாமலோ திருச்சபை சாபத்துக்குள்ளாயிருக்கும் சில கிறீஸ்துவர்களுக்கு, சவுகரியமாயிருக்கும்போது உங்களால் கூடிய புத்திமதி சொல்லி அவர்கள் தங்கள் தப்பறையைக் கண்டுணர்ந்து நல்வழிக்கு வரும்படி பிரயத்தனப்படுவீர்களாக. இவர்களுக்காகத் தேவனைப்பார்த்து பத்தி விஸ்வாசத்துடன் மன்றாடுங்கள். உங்கள் வேண்டுதல் வியர்த்தமாகாது. சீக்கிரத்தில் அவர்கள் நல்வழிக்கு வருவதைக் கண்டு மகிழ்ந்து சந்தோஷிப்பீர்கள். அவ்வாறே சர்வ ஜீவ தயாபர சர்வேசுரன் கிருபை புரிவாராக.

Bellary, 15—6—1917. } **M. J. MICHAEL,** Cath. Indian Priest.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

தூத்துக்குடி.

“என் சிநேகிதர்களே நீங்களாவது என்பேரில் இரக்கமாயிருங்கள், இரக்கமாயிருங்கள்”.

ஸ்ரீமான் பாக்கியம் பெர்னாந்திஸ் அவர்கள் பரலோக பிராப்தியான 30-ம் நாள், நாளதுமீ 17தேதி சிறப்பாய் நடைபெற்றது. முந்தினநாள்

பின்னேரம், அதிவண. யம். ஜே. பின்ரோ சுவாமி அவர்களால், (ஒப்பீஸ்) மந்திரமாலை பாடப்பட்டது. முதல் பூசை வண. பரோம் சுவாமி அவர்களால் பாடப்பட்டு, அந்த ஆத்துமத்திற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பிரேதமேடை மந்திரிக்கும் சடங்கு நடந்தபின், ஷை யாருடையவும், அவருடைய காலஞ்சென்ற இனபந்துக்களுடையவும் ஆத்துமத்திற்காக 27 தரம் லீபேரா மே என்ற பாடல் பாடப்பட்டது. அன்றையத்தினம் சேசுவின் திரு இருதயப்பெருநாளும், பரிசுத்த பரம திவ்வியநற்கருணைப் பெருநாளும் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டன. துவஜ தோரணங்களாலும், மலர்மாலைகளாலும், பசுங்கிளைகளாலும், கோவிலும் திருப்பீடங்களும் அலங்கரிக்கப்பட்டு, பரலோக இராச்சியம்போலிருந்தது. பரலோக இராயனும் அன்று பூராவாக எழுந்தேற்றமாகிப் பிரசன்னமாயிருந்தார். பின்னேரம் வண. பூபாலராய சுவாமியவர்கள், டீக்கனுகவும், வண. பரோம் சுவாமியவர்கள் சப் டீக்கனுகவும் இருந்து உதவிசெய்ய, அதிவண. பின்ரோ சுவாமி அவர்கள் அப்பரலோக இராயன் எழுந்தருளியிருந்த, கதிர்ப்பாத்திரத்தைப் பக்தியாய்ச் சுமந்து செல்ல, சுற்றுப்பிரகாரம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. கோவிலைச் சுற்றி கம்பவுண்டுக்குள் நாலு திக்கிலும், பந்தல்கள் மிகவும் விசித்திரமா யமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பந்தலிலும் அப்பரம நாயகன் எழுந்தருளி திக்குவிஜயம் செய்து, சகலரையும் ஆசீர்வதித்தபின் திருக்கோவில் சென்று சகலராலும் அவருடைய திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நிந்தைப் பரிகாரங்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டு அவர்களை ஆசீர்வதித்த பின் கதிர்பாத்திரம் விட்டு திருப்பேழையில் அமர்ந்தனர். அப்பரம திவ்விய நற்கருணைக்குச் சதாகாலமும் தோத்திர முண்டாகக்கடவது. அன்று ஏறக்குறைய 3,000-ம் பேர் பரிகார திவ்விய நன்மை பெற்றுர்கள். அதில் ஷை பாக்கியம் பெர்நாந்திஸ் அவர்களுடைய இனபந்துக்களும் சிநேகிதர்களுமாக 300 பேர் மட்டில் அவருக்காக ஒப்புக்கொடுத்தார்கள். மற்றப்பேரும் அவருக்காக ஒப்புக்கொடுத்திருப்பார்கள் அல்லது வேண்டுதல் பண்ணியிருப்பார்களென்பதற்குத் தடையில்லை. ஏனெனில் அவர் கோவில் விஷயங்களுக்கும், மற்றும் பொதுவிஷயங்களுக்கும் மெய்வருத்தம் பாராமல் உழைத்தவர். ஆனபடியாலேயே, அவருடைய 30-ம் நாளும் அத்தினத்தில் நடைபெற நேரிட்டது. அன்று ஏறக்குறைய 300 பேருக்கு அன்னதான மிடப்பட்டது. அதில் விசேஷித்தது மரியாதைக்கஞ்சி: வீட்டைவிட்டு வெளியேருமல், வீட்டிற்குள்ளேயே பசிபட்டினி அனுபவித்துக்கொண்டிருந்த இனங்களைத்தேடி, அவர்களுடைய இல்லங்களில் அன்னம் அளிக்கப்பட்டதே. பின்னேரம் அவருடைய இனபந்துக்களும், சிநேகிதர்களும் கல்லறைக்குச்சென்று மிகவும் விசித்திரமாய் அமைக்கப்பட்ட சிலுவையை அடையாளமாக வைத்தார்கள். சமாதானத்தில், இளைப்பாறுவாராக.

தூத்துக்குடி, 21—6—17. } ஜோசேப்கர்டோ, அர்ச். பனிமய மாதாகோவில் உபதேசி.

சேக்கந்திறபாத்.

இங்கு பரிசுத்த இருதய ஆண்டவரின் திருநாளுக்கு முந்திய மூன்றுதினம் 14, 15, 16 தேதிகளில் காலை பூசைக்குப் பிறகும், மாலை தேவநற்கருணை ஆசீர்வாதத்திற்குப் பிறகும் இதற்கென பல்லாரியிலிருந்து இவ்விடம் விஜயம் செய்திருந்த சங். M. J. மிக்கேல் குருவானவர்களால் சுதேச கத்தோலிக்கர்களுக்கு தமிழில் பிரசங்கம் செய்யப்பட்டது. இவர் எங்கள் பங்குசுவாமியாராகிய சங். ஜே. மென்கோனி சுவாமிகளின் கோரிக்கைக்கிணங்கி எங்கள் மத்தியில்வந்து ஞானப் பிரசங்கம் செய்ததற்காக கரங்கூப்பி எங்கள் நன்றிமொழிகளை யொப்புக்கொடுக்கிறோம். இவர் செப்பிய ஞானவார்த்தைகள் இப்போது எங்கள் மனதிலோர் அச்சுபோல் பதிந்திருக்கிறது. இவர் சுதேச குருவாதலால் இவர் நாவிலிருந்துவரும் மொழிகள் காதுக்கெவ்வளவு இனிமையாய் இருந்ததென்று சொல்லத்தரமல்ல. இவரது பிரசங்க சாதுரியத்தை மெச்சாதாரிரார்? ஆ! ஆ! இவரது திறமையே திறமை! இவரது விஜயத்தால் எங்கள் உள்ளத்தில் எழுந்த ஆனந்த கிளர்ச்சிக்கு அளவே இல்லை. திருநாள் தினமாகிய 17ந் தேதி காலை 8-மணிக்கு சங். ஜே. மென்கோனி சுவாமியார் உதவி குருக்களுடன் பெரியபாடற் பூசையைத் துடங்கி, பூசையோடு தாம் குருப்பட்டம் பெற்று 25-வது வருடமாகிய வெள்ளிஜூபிலி சுபதினத்தில் தமது நண்பர்களையும் விசாரணைக் கிறீஸ்துவர்களையும் திருப்பலிபீடத்தில் நினைவுகூர்ந்து நித்தியமும் குருவாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதசுவாமிக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தினது மல்லாமல் தம்து பங்கு கிறீஸ்துவர்களையும் வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொண்டனர். எல்லா பூசையிலும் தேவநற்கருணை உட்கொண்டவர்களுக்கு ஜூபிலி ஞாபகார்த்தமாக வேதப்படங்களை அளித்தனர்.

பூசை முடிந்த பிறகு ஜனங்கள் சூழவந்து ஷை குருவானவரையும் மேற்றிராணி ஆண்டவரையும் மற்றும் குருக்களையும் 63-வது பட்டாளத்து பான்ட் வாத்தியத்துடன் ஜூபிலிக்காக சிறப்பாய் அமைக்கப்பட்டிருந்த ஸ்தலத்துக்குக் கூட்டிச் சென்று குருக்கள் எல்லோருக்கும் பூமாலை சூட்டி, பங்கு கிறீஸ்துவர்களாலும் 63-வது பட்டாளத்து கிறீஸ்த்துவர்களாலும் வந்தன உபசாரப் பத்திரிகை வாசிக்கப்பட்ட பிறகு, குருவானவர் எழுந்து சிலநன்மொழிகள் கூர்ந்து ஆசீரளித்தனர். மாலை 4-மணிக்கு ஷை சுவாமியாரையும் மற்றக் குருக்களையும் *Vincent de Paul Society Members & St. Mary's Old boys' Association* அவர்களும் *St. Mary's School Room* மில் வரவழைத்து எல்லோருக்கும் பூமாலை சூட்டி இருவரால் வந்தன உபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

மாலை 6½-மணிக்கு மேற்றிராணி ஆண்டவரவர்கள் தேவ நற்கருணை கதிர்பாத்திரத்தை கையிலேந்தி அநேக ஜனங்கள் முன்செல்ல கோவில் முழுவதும் பவனிவந்து *St. Ann's compound* டில் சிங்காரித்திருந்த பீடத்தில் முதல் தேவநற்கருணை ஆசீர்வாதமும் இரண்டாவது ஆசீர்வாதம் ஆலயம்சென்றும் கொடுத்தனர். மேற்படி சிறப்பைக் கண்டு கண்குளிரவும் இருதயம் பூரிக்கவும் கருணைபுரிந்த இருதய ஆண்டவருக்கு ஸ்துதியும் தோத்திரமும் உண்டாகக்கடவது. எங்கள் சங். ஜே. மென்கோனி சுவாமியார் வெள்ளி ஜூபிலியை கொண்டாடியதுபோலவே பொன், இன்னும் மற்ற ஜூபிலியையும் காணவும் கொண்டாடவும் நமது இராஜாதி ராஜனும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய எம்பெருமான் கிருபைபுரிவாராக. மேற்றிராணியாராகிய டி. விஸ்மாரு ஆண்டவர்களும் இக்காரியத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

செக்கந்திருபாத் (தக்கன்) 19—6—17. } இங்ஙனம். துடர்வண்டி எக்காளம்.

தற்கால ஜோன் ஆப் ஆர்க்.

இதன் கீழ்கண்ட ஆச்சரிய சம்பவம், இந்தியா நாஷனல் காங்கிரஸ் செக்ரடரியும், சுயராஜ்யத்திற்காக உழைப்பவரும், ரிப்பன் கலாசாலை சொந்தக்காரரும், இந்திய சாஸ்திரிகளில் ஒருவருமாகிய (*Mr. Babu Surendra Nath Banerjee*) ஸ்ரீமான் பாபு சுரன்றர்நாத் பனர்ஜீ அவர்களால் ஆங்கிலேய பாஷையில் பிரசுரிக்கப்பட்டுவரும் "*The Bengalee*" பெங்காலி என்னும் பத்திரிகையின் வாயிலாய் 18-4-17ல் பிரசித்தம் பண்ணப்பட்டது.

அஃதாவது: (*Mlle Perchaud*) பெர்சாது என்ற 20 வயதுடைய ஓர் கன்னிகை (*Cholet*) கொலட் என்ற நகரத்தினருகிலிருக்கும் (*Puy Saint Bonnet*) புயிசென்ற் பொன்னட் என்ற ஓர் குடிசையில் ஜீவித்துவரும்நாளில் பிரான்ஸ் தேசத்தை சத்துராதிகளிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு இம்மாது இந்த யுத்தத்தில் சேர்ந்து உழைக்கும்படியாய் ஓர் அசரீரிவாக்கு இம்மாதுக்குக் கேட்கப்பட்டதாம். இது இவ்வாறிருக்க, சில தினங்களுக்குமுன் தனது வயலுக்கும், கோவிலுக்கும் மத்தியில்போய்க் கொண்டிருக்கும்போது, சேசுநாதருடைய பரிசுத்த இருதயம் இம்மாதுக்குத் தோன்றி பிரான்ஸ் தேசத்தைச் சத்துராதிகளிடமிருந்து இரட்சிக்கும்படியாய் ஆஞ்ஞாபித்ததாம். இவள் தனது பெற்றோர்களுக்கு மேற்கூறிய சம்பவங்களை அறிவித்த பொழுது, அவர்கள் நகைத்து அதை வெளிக்குக் கூறுதபடி இவளுக்குக் கற்பித்தார்களாம். அக்கன்னிகையும் பெற்றோர்கள் வார்த்தைக்குச் சிரம்பணிந்து, தேவ வாக்கியம்கேட்ட இடத்தில் தனது சொந்தக் கைகளால் ஓர் பீடம் கட்டி முடித்தாளாம். இச்சரித்திரம் பிரசித்தமானவுடன் சுற்றுக்கிராமங்களிலும், பட்டணங்களிலுமுள்ள ஜனங்கள் நூற்றுக்கணக்காய் திரண்டு ஞாயிறுவாரம்தோறும் அவ்விடம்வந்து அந்தப் பீடத்திற்கு முன்பாக ஜெபம்செய்து யுத்தக்களத்தில் போர்புரியும் சேனைவீரர்களின் போட்டோ படங்களைக் குவித்துப்போவார்களாம்.

இம்மாதின் கீர்த்தி பொயிற்றியர்ஸ் மேற்றிராணியக்ருக்கு எட்டவே அவர் இம்மாதை பரிசோதிக்கும்படியாய் மேற்றிராணியாருக்குரிய தம் அங்கியை ஓர் குருவானவரை அணியச்செய்து பின் அநேக குருப்பிரசாதிகளுடன் இம்மாதையும் அழைக்க, இம்மாது மேற்றிராணியார் ஆடை

யை அணிந்திருக்கும் குருவானவரை ஒருவித பார்வையால் நோக்கி, "நீர் மேற்றிராணியார் அல்ல, நான் மேற்றிராணியாரை இதற்கு முன் கண்டதில்லையாயினும் நீர் மேற்றிராணியார் அல்லவென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்" என மொழிந்து, பின் மேற்றிராணியார் நின்று கொண்டிருக்கும் இடம் சென்று முழங்கால் படியிட்டு அவருடைய கரத்தை முத்திசெய்தாளாம். மேற்றிராணியார் பரிஸ் பட்டணத்து அதிமேற்றிராணியாராகிய அமீட்கர்தினலுக்கு எழுத, அவர் அம்மாதை தபசுகாலதுவக்கத்தில் பாரிஸ் பட்டணத்திற்கு வருத்தி அவனியு விக்டர்யுகோ வென்ற கன்னியர் மடத்தில் சேர்த்திருக்கிறாராம். இம்மாது வெளிறின முகமும், நில நீற கண்களுமுடையவளாம். பரவசத்திலிருப்பவள் போல் இவளுக்கு மெதுவாகப்பேசும் வழக்கமாம். மெயுன் சென்ற் லொயிர் டெப்ட்டி இம்மாதின் பேரில் அநுதாபம் கொண்டவராம். இம்மாது தியாலஜி என்ற சாஸ்திரத்தைப் பற்றி ஓர் அருமையான புஸ்தகம் எழுதி இருக்கிறளென அவர் எழுதி இருக்கிறாராம்.

சிங்கர்கம்பனி, கேகாலை. 1. 5. 17. } இங்ஙனம் I. பிச்சைறொடீட்றிகஸ்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஓர் பென்னம் பெரிய மீன்.—சமீபத்தில் காஷ்மீர் நாட்டிலுள்ள ஓர் ஆற்றில் 14 இராத்தல் எடையுள்ளதும் 31 அங்குலம் நீளமுள்ளதும் 19 அங்குலம் சுற்றளவுமுள்ள மீன் ஒன்று பிடிக்கப்பட்டதாம். இது சுமார் 10 வருஷத்துக்கு முந்தி விளையாட்டுக்காக அவ்வாற்றில் விடப்பட்ட ஆங்கிலேய மீன் வகைகளில் ஒன்றாயிருக்குமென்று யூகிக்கப்படுகிறது.

ஆல்பர்ட் அரசர்.—பெல்ஜிய தேசத்தரசராகிய இவர் அதிகபலசாலி. ஓர் அங்குல அகலமுள்ள இருப்புத்தடியைத் தம் இருகையாலும் பிடித்து வளைக்கும் வல்லபமுள்ளவராம். தம்முடைய 14 பிராய [illegible] ரனையும் 10 பிராயமுள்ள [illegible] ர்யையும் தம் இரு உள்ளங் [illegible] கும்படிசெய்து கரங்களை நேராக நீட்டி அவர்களைத் தாங்கிக்கொண்டே யிருக்கக் கூடுமாம்!!

இந்தியாவுக்கோர் பொதுப்பாஷை.—பல பாஷைகள் பேசப்படும் நம் இந்தியாவுக்கு நல்லகாலம் பிறக்க, அதாவது சுய அரசாட்சி முதலிய சுதந்தரங்கள்கிடைக்க ஓர் பொதுப்பாஷை அவசியமெனவும், அப்பொதுபாஷை ஹிந்தி பாஷையாயிருக்க வேண்டுமெனவும் சில இந்திய மகான்கள் அபிப்பிராயப்படுகிறார்களாம். இவர்களுடைய இக்கருத்து எந்த யுகத்தில் நிறைவேறுமோ நாமறியோம்!! நிகழும் யுகத்தில் அது நிறைவேறாதென்பது நிச்சயம். பின்னுக்கு வருகிறவர்கள் அதைப் பற்றிப் பார்த்துக்கொள்ளட்டும்.

திரிகோணமலை மேற்றிராசனம்.—இம்மேற்றிராசனத்துக்கு மேற்றிராணியாராக நியமனம் பெற்றிருக்கும் மகா சங்கைக்குரிய ரொபிஷே சுவாமிகள் இம்மாதம் 8-ம் தேதி மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்படுவார். கொழும்பு அதிமேற்றிராணியார் அபிஷேகஞ் செய்கிறவராகவும் இவருக்குத்துணை மேற்றிராணியார்களாக திருச்சினப்பள்ளி, யாழ்ப்பாணம், கண்டி மேற்றிராணிமார்களுமிருப்பார்கள். புதிய மேற்றிராணியார் தேக சுகாநந்தராய்ப் பல்லாண்டு சீவித்து பல நன்மைகள் புரிந்துவர கர்ணயங் கடவுள் கருணைபுரிவாராக.

சமீபத்தில் சமாதான முண்டாகும்.—என்னும் நம்பிக்கையுள்ளவரா யிருக்கிறார் நம்முடைய பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பர். இவர் தமது தேச காரியதரிசியாகிய கர்தினல் காஸ்பாரி என்பவருக்கு எழுதிய ஒரு நிருபத்தில் நிகழும் கொடிய யுத்தம் முடிவுக்குவர காலம் நெருங்கியிருப்பதாக தாம் நம்பிக்கைக் கொள்வதாகவும், சமாதானங் கிடைக்க, "சமாதானத்தின் இராக்கினி"யாகிய அர்ச். கன்னிமரியாயின் வழியாய் சகல ஜாதி ஜனங்களுக்கும் பிதாவாகிய பரலோகத்திலுள்ள சர்வேசுரனை கத்தோலிக்கு உலக முழுதும் அண்டிப்போகும்படிச் செய்ய எல்லா மேற்றிராணிமார்களுக்கும் அவர் கற்பிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆம், நம்பிக்கையுள்ள மன்றாட்டினால் சித்து பெறாததுமுண்டோ?

தட்டாரத்தொழில்.—இத்தொழிலை மேனாட்டில் அநேக ஸ்திரீகள் புருஷர்களைப்போல் மிக்கத் திறமையாய்ச் செய்து வருகிறார்களென்று பத்திரிகைகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியே இந்தியாவிலும் ஓர் ஸ்திரீ இவ்வேலையைச் செய்து ஜீவனஞ்செய்து வருகிறாளாம். இவள் சாதாரண சில்லறை நகைகளை மிக்கத் திறமையாய்ச் செய்வதுடன் சேதாரம், பொடிவாசி, கூலி முதலியவைகளைக் கணக்காய் மதிப்பிடும் சமர்த்து முடையவளாம். இவ்வகையான கைத்தொழில்களைப் பழகிவர வழக்கமும் விருப்பமுமில்லாத நம்முடைய மற்ற நாட்டுப்பெண்களுக்கு இவளோர் முன்மாதிரிகையாயிருக்கட்டும்.

செத்தவனுக்கு வைத்தியஞ் செய்தவர்கள்.—சிலதினங்களுக்கு முன் மைசூரில் நாலுபேர் நன்றாய்ப் புளித்த ஈச்சங்கள்ளை பூர்த்தியாய்ப் போட்டுக்கொண்டு பக்கத்திலிருந்த குடிசையில் படுத்து உறங்கினார்கள். அவ்விடத்திலிருந்த எலிவளை வழியாய் ஓர் நாகப்பாம்பு தன் மேல்தோலை எடுக்க வெளியே வந்து அதை யெடுத்துக்கொண்டிருக்குந் தருணத்தில் அந்தநாலுபேரில் ஒருவனுடைய கை அதன் மேற்படவே, அது அவனை நன்றாகத் தீண்டிவிட்டது. அவனும் சில நேரத்துக்கெல்லாம் எமலோகம்போய்ச் சேர்ந்தான். இதையறியாத மற்ற மூவரும் இன்னும் கள் மயக்கந் தெளியாமலே காலையிலெழுந்து இறந்து கிடைப்பவன் பக்கத்தில் பாம்புச் சட்டையைக்கண்டு "இவனைப் பாம்பு கடித்துவிட்டது; வாருங்கள் வைத்தியஞ்செய்வோம்" என்று சொல்லிக்கொண்டே பிடித்தார்களாம் ஓட்டம்.!!

சங். மேத் சுவாமியாரின் தேக வியோகம்.—இந்த நல்ல குருவானவர் சென்ற மேமீ 30-ந்தேதி மரணமடைந்தாரெனக் கேள்வியுற்று மிக்க விசனிக்கலானோம். இவர் புதுவை, கும்பகோணம் முதலிய மேற்றிராசனங்களின் பல பங்குகளில் மிக்க ஊக்கமாயும் சுறுசுறுப்பாயும் உழைத்து வந்தவர். குருக்கள் ஆத்தும இரட்சணியத்துக்காக படும் அரும்பிரையாசைகள் நிஷ்பலமாகாவண்ணம் அவர்களுக்கு நல்ல உபதேசிமார்களிருத்தல் அவசியமென இவர் தம்மனுபோகத்தினலறிந்து உபதேசிகளாகிறவர்களுக்கு இருக்கவேண்டிய வேத ஞானம், நல்லொழுக்கம் இவைகளைப் பயிலுவிக்க ஞானோபதேசப் பர்வதம், ஞானோபதேச தடாகம், புது நன்மைக்காரர் ஞானோபதேசம் இவை முதலிய அரியபிரபந்தங்களை இயற்றித் தம்முடைய பெரியோர்களின் அனுமதியின் மேல் விழுப்புரத்தில் அவர்களுக்கோர் மடத்தையுங்கட்டி அதை நடத்திக் கொண்டு வந்தார். இவர் துவக்கின இந்த மேலானவேலை தம்முடைய காலத்திலேயே பலனளிப்பதைக் காணவும் பாக்கியம் பெற்றார். இவருடைய மரணத்தால் புதுவை அதிமேற்றிராசனத்துக்குப் பெரும் நஷ்டமுண்டாயிற்றென்று மிக்க அனுதாபப்படுகிறோம். இவர் சமாதானத்தில் இளைப்பாறக்கடவாராக.

பர்மா இந்திய கத்தோலிக்கர் சங்கம்.—சென்ற மேமீ 27உ இச்சங்கத்தார் தங்களுடைய 4-வது வருஷத்திய பொதுக்கூட்டத்தில் செய்த ஓர் கண்டனத்தை நமது பத்திரிகையில் பிரசுரிக்கும்படி எமக்கு அனுப்பிவைத்ததின்பேரில் அதன் பொருளைப்பின்வருமாறு பிரசுரிக்கிறோம். "பர்மா இந்திய கத்தோலிக்குச் சங்கத்தாராகிய நாங்கள் எங்கள் சகோதரர்களாகிய சென்னையிலுள்ள சில கிறீஸ்துவர்கள் பெங்களூரில் மேற்றிராணிமார்கள் கூடிச் செய்த தீர்மானங்களிற் சிலவற்றை நிந்தித்துக் குறைகூறிப் பேசும்பொருட்டு "பச்சையப்பன்" ஹாலில் கூடி அயோக்கியமாய் நடத்திய நடவடிக்கைகளை முற்றும் வெறுத்து கண்டனஞ்செய்வதுடன், இதுகாறும் இந்திய கிறீஸ்துவர்கள் தங்கள் பேருபகாரிகளாகிய ஐரோப்பிய குருக்கள் மட்டில் கொண்டிருந்த நேசபான்மையையும் நன்றியறிதலையும் நிலைநிறுத்த உறுதிமொழி கொடுக்கிறோம்" என்பதே அதன் சாராம்சம். ஷை சங்கத்தின் 4-வது வருஷத்திய பொதுக்கூட்டத்தின் ரிப்போர்ட்டும் நம்முடைய பார்வைக்கு எட்டினது. அதைப் பார்வையிட்டதில் இச்சங்கத்தின் காரிய நிர்வாக சபையார் மிக்க மெச்சத்தக்க விதமாய்த் திறமையுடன் சங்கத்தின் விருத்திக்காக உழைத்து வருகிறார்களெ

ன்று நன்கு விளங்குகின்றது. நிர்வாக சபையார் எவ்வளவு சிரத்தையுடன் உழைத்தபோதிலும் சங்கத்தின் அங்கத்தினர்களும் அவர்களுடன் ஒத்துழைத்து தங்களுடைய கட்டணங்களைக் கிரமமாய் கட்டி வராவிட்டால் சங்கம் எங்ஙனம் தலையெடுக்கும்? 6,000 அல்லது 7,000-யிரத்துக்கு அதிகமாகவே இவ்விடத்தில் இந்திய கிறீஸ்துவர்களிருக்க, அவர்களுக்குள் தற்போது சங்கத்தில் சேர்ந்திருப்பவர்கள் 90 பேராய் மாத்திரமிருப்பது மிக்க விசனிக்கத்தக்கதே. பர்மாவிலுள்ள இந்திய கத்தோலிக்கருடைய வைதீக இலௌகீக நன்மைகளுக்காக இச்சங்கம் ஏற்பட்டிருத்தலால் அவ்விடத்திலுள்ள ஒவ்வொரு இந்திய கத்தோலிக்கரும் ஏன் இச்சங்கத்திற் சேர்ந்து அதற்குத் துணையாயும் தூண்டுகோலாயுமிருக்கக்கூடாது?

ஓஸ்தியா பட்டணம்.—நிகழும் கொரேயுத்தம் முடிவாகி சகல ஜாதி ஜனங்களுள்ளும் சமாதானம் ஏற்பட இத்தாலியாதேசத்தில் "சமாதான இராக்கினி" யின்பேரால் கட்டப்படும் பல பொருத்தனை கோவில்களுக்குள் இப்பட்டணத்திற் கட்டப்படும கோவிலே மிகச் சிறப்புற்று விளங்குமென சொல்லப்படுகிறது. இவ்வாலயத்துக்கு நன்கொடையாக நம்முடைய பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பர் ஒருலட்சம் பிரான்கென்னும்நாணயங் கொடுத்திருக்கிறார். ஓஸ்தியா பட்டணம் பூர்வம் பேர் போன ஒரு துறைமுகப்பட்டணமாயிருந்தது. மேற்றிராணியாரும் மகா சஸ்திரியுமான அர்ச். அகுஸ்தீன் என்பவர் தம் அன்னையரான அர்ச். மோனிக்கம்மாளுடன் திரும்பவும் ஆப்பிரிக்காவுக்குப்போக இத்துறைமுகப் பட்டணத்தில்தான் தங்கி கப்பலுக்காக கொஞ்சகாலம் காத்திருந்தார். அப்போதுதான் அர்ச். மோனிக்கம்மாளும் மரணமடைந்தது. அர்ச். அகுஸ்தீன் தாம் எழுதின "பாவசங்கீர்த்தனம்" என்னும் பிரபந்தத்தில் தாமும் தம்முடைய தாயாரும் இப்பட்டணத்தில் தங்கியிருக்கையில், தாங்களிருந்து வந்த விடுதியின் பலகணிவழியாய்த் தங்களுக்கெதிரில் விரிந்து பரவியிருந்த ஆழ்ந்த கடலையும் அதன் நீலமயமான நீரையும் நோக்கிப் பார்க்கையில் தங்களுக்குள் வியப்புற்று சர்வேசுரனையும் அவருடைய பரலோக இராச்சியத்தையும் பற்றி சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அச்சம்பாஷணையின் இன்பத்தால் இருவரும் பரவசமாய்ப்போனார்களென்று எழுதிவைத்திருக்கிறார். ஆம், உண்மையில் மெய்யான விசுவாசமும் தெய்வபக்தியுமுள்ளவர்கள் தாங்கள்காணும் ஒவ்வொரு சிருஷ்டியிலும், அது எவ்வளவு அற்பமானதானாலும், அதில் சர்வேசுரனுடைய அளவில்லாத ஞானத்தையும், அழகு சௌந்தரியத்தையும், வல்லமை பெருமையையுங் கண்டு களிப்படைவார்களென்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

ஆங்கிலேயரும் கத்தோலிக்கு வேதமும்—பூர்வம் ஆங்கிலேயர் சிறந்த கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாயிருந்தார்களென்று நாம் சரித்திரத்தின் வாயிலாய் அறிவோமல்லவா? பின்னர் இவர்கள் "அரசன் எவ்வழியோ அவ்வழியே பிரஜைகளு" மென்பதற்கொப்ப, 16-ம் நூற்றாண்டில்—தங்களை எட்டாம் ஹென்ரி என்ற அரசர் அரசாண்டுவந்த காலத்தில்—கத்தோலிக்கு வேதத்தைக் கைநெகிழவிட்டு புரோடஸ்டான்டு மதத்தைக் கைப்பற்றினார்கள். அக்காலமுதற்கொண்டு இக்காலம் வரையிலும் இவர்கள் பொதுப்பட புரோடஸ்டான்டு மதத்தையே தழுவிவருவது மல்லாமல், தங்களுடைய புராதன வேதமாகிய கத்தோலிக்கு வேதத்தின் பேரில் துரபிமானமும் தவறான எண்ணமுமுடையவர்களாயிருக்கிறார்கள். இதற்கத்தாட்சியாக சமீபத்திற் காலஞ்சென்ற ஓர் ஆங்கிலேய நல்ல கத்தோலிக்கரும் பிரபுவுமாகிய டியூக் ஆப் நார்பக் (Duke of Norfolk) என்பவரைப்பற்றி மிகவும் வந்திக்கத்தக்க கர்தினாலாகிய பூர்ன் (Cardinal Bourne) என்ற வெஸ்ட் மின்ஸ்டர் அதிமேற்றிராணியார் "டப்ளின் ரெவ்யூ" என்னும் பத்திரிகையில் பிரசுரித்த ஓர் வியாசத்தில் என்ன சொல்லியிருக்கிறாரென்றால், ஆங்கிலேயர் கத்தோலிக்கரானால் தங்களுடைய ஜாதிக்கே குறைவென்று நினைக்குந்தன்மையுடையவர்களாயிருக்கிறார்களென்றும், ஓர் ஆங்கிலிக்கன் கத்தோலிக்கனானால் அவன்பேரில் எவ்வளவோ மனஸ்தாபமுங் கோபமுங்கொண்டு குற்றை கூறுகிறார்களென்றும், அவன் கத்தோலிக்கனாகாதபடி வேறு எந்த மதத்திலென்கிலும் சேர்வானானால்—கேவலம் அது புத்தமதமானாலுஞ் சரி—அவ்வாறு முறையிடாரென்றும் சொல்லியிருப்பதேயாம். தங்கள் முன்னோரின் வேதமாகிய கத்தோலிக்கு வேதத்தின் மட்டில் ஆங்கிலேயர் இவ்வளவு துரபிமானங் கொண்டிருப்பது மிக்க விசனிக்கத்தக்கதே ஆயினும் இவர்களுக்குள் எத்தனையோ பெயர் இக்காலத்தில் கத்தோலிக்கராகி வருகிறார்கள், சாதாரண ஜனங்களும் பிரபுக்களு மாத்திரமல்ல, ஆங்கிலிக்கன் பாதிரிமார்களும் ஞானஸ்நானம் பெற்று சத்திய திருச்சபையிற் சேர்ந்து வருகிறார்கள். இப்பாதிரிமார்களில் அநேகர் குருப்பட்டத்துக்கும் படித்து குருக்களாகியும் வருகிறார்கள். பூர்வம் இங்கிலாந்து ஓர் நல்ல கத்தோலிக்குத் தேசமாயிருந்ததுபோல இப்பவுமிருக்க கடவுள் கருணைபுரிவாராக.

என்ன மானுடதேகத்தின் கூறு!!—ஓர் ஆத்மத்தையும் தத்வம் தொண்ணூற்றாறையும் பெற்றுள்ள மனிதன் தன் சரீரத்தையும் அதனிடமாயுள்ள உறுப்புகளையும், அவ்வுறுப்புகளின் தொழிலையும் ஒரு சிறிது யோசிப்பானானால், அவன் ஆச்சரியமுற்று அகமகிழ்வானென்பது திண்ணம். சரீரத்தில் ஏறக்குறைய 250 எலும்புகளும் 500 விதமான தசை இலைகளும் (Tissues) உண்டு. நாமுட்கொள்ளும் போசன பதார்த்தங்களை நசுக்கி அறைத்து அவைகளின் சத்தைக்கொண்டு நம்மை ஊட்டிவளர்க்கும் தொழிலுடைய ஜீரண உறுப்புகளின் நீளம் 32-அடி. சரியான வயது வந்த மனிதனுடைய உடம்பில் 30 இராத்தல் (அதாவது உடம்பின் இடையில் ஐந்தில் ஓர் பாகம்) இடையுள்ள இரத்தமுண்டு. இருதய கமலமோ 6 அங்குல நீளமும் 4 அங்குல குறுக்களவுமுள்ளதாய் நிமிஷமொன்றுக்கு 70 தரம் துடிக்கின்றது. இவ்வண்ணம் துடிக்கும் ஒவ்வொரு விசையிலும் $2\frac{1}{2}$ அவுன்ஸ் இரத்தத்தை கமலத்தினின்று வெளிப்படுத்தி உடலெங்கும் பரவச்செய்கின்றது. சுவாச உறுப்புகளில் ஒன்றாகிய சுவாசப்பைகள் சாதாரணமாய்ப் பூரித்திருக்குங்கால் சுமார் ஒரு காலன் வாயுவை அடக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன. நாம் மணிக்கு சற்றேறக்குறைய ஆயிரந்தடவை மூச்சுவிட்டு மூச்சுவாங்குகிறோம். மூச்சு வாங்குகையில் 600 காலன் வாயுவை உட்கொள்ளுகிறோம். சுவாசப்பைகளிலுள்ள வாயுக் கண்ணறைகளின் (Air cells in the lungs) விஸ்தீரணத்தைக் கணக்கெடுத்தால் 20,000 சதுர அங்குலத்திற்கதிகமாகுமேயொழிய குறையாது. வாலிபங்கடந்து சரி வயது வந்த மனிதனின் மூளையை இடைபோடுங்கால் சுமார் 45 அவுன்ஸிருக்கும். எல்லா நரம்புகளும் நேராகவாவது அல்லது முள்ளந்தண்டுக்கொடி (Marrow in the spinal column) வாயிலாலாவது மூளையுடன் தொடுக்கப்பட்டிருக்கின்றன. காப்புச் சேவகர்களைப் போலிருக்கும் இந்நரம்புத் தொகுதிகளைக் கணக்கிட்டால் அவைகள் 10,000,000 க்கதிகமாகவே யிருக்கும். மனிதனுடைய தோலோ மூன்று பகுப்புடையதாயிருக்கின்றது. ஒவ்வொரு பகுப்பும் அரைக்கால் முதல் கால் அங்குலம் வரை கனமுள்ளது. ஓர் சதுர அங்குலம் அளவுள்ள தோலை பூதக்கண்ணாடியின் வழியாய்ப் பார்த்தால் கால் அங்குல நீளமுள்ள ஜலதாரைக் கண்களைப்போன்ற 25,000 கண்கள் வியர்வைக்காக (Sweating tubes) உண்டு. சர்வாங்கத்திலும் சுமார் இரண்டரை இலட்சம் வியர்வை கண்களிருக்கின்றன. "அரிது அரிது மானிடராதலரிது" என்ற மூத்தோர்கள் வசனப்படி ஆ! மனிதனுடைய சடல அமைப்பு மிக்க வியப்புக்குரியதே. இத்தகைய சடலத்தைக் கொடுத்த ஈசுவரனுக்கு என்றுந் துதிபுரியாமல் அதைக்கொண்டு அவரை அவமதிப்பது என்ன நெஞ்சுத் துணிவாகும்!! என்ன நன்றிக்கேடாகும்!!

சதிசெய்ய முயன்றது.—பெர்லின் நகரத்தில் கெய்ஸர் சக்கிரவர்த்தி நெருக்கமான ஒரு வழியில் மோட்டாரில் போய்க்கொண்டிருக்கையில் ஒருவன் ஒளிந்திருந்து அவரை மூன்றுமுறை சுட்டான், ஆனால் இரண்டுமுறை சுட்டது வண்டியின் மேலும், மற்றொருமுறை சுட்டது அவர்மேலும் படாமல் விலகிப்போயிற்று. அப்படிச்செய்தவனை அரஸ்ட் செய்துவிட்டார்களாம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

மெய் விவாஹோற்சவம்.

அளவில்லாத நன்மைபடைத்த அமலதேவனினரிய கடாக்ஷமதால் தென்கூடலெனும் கூடுதாழையில் வெண்பிறை மரபினர்க்கெலா மேக இறைவனும் மஹத்வ ஜாதித்தலைவமோரின் கீழ் சிற்றரசனே போன்று கூடலூரை அடக்கியாண்ட பரதபாண்டியன் ஸ்ரீமத். ஜோவாம்தியோகு சுவக்கின் பெர்னாந்தடப்பனார் அவர்களின் கனிஷ்டபுதல்வர் ஸ்ரீமான் சி. எம். பி. பெர்னாந்தவர்கட்கும் பெரியதாழை ஸ்ரீமத் T. S. பெர்னாந்தவர்களின் சிரேஷ்டபுதல்வி சௌபாக்யவதி ஸ்ரீமதி ஜெத்ரூத் பெர்னாந்து அம்மாளுக்கும், நிகழ்மாதம் 2-ம் தேதியாகிய புதவாரம் அர்ச். அருளப்பர், முடியப்பர் தேவாலயத்தில் சங். தந்தை ரெஜிஸ்பிபில் சுவாமிகளால் மெய் விவாஹம் நிறைவேற்றப்பெற்றது.

மணமக்களை வாழ்த்தி சிறப்பிக்க வந்திருந்த ஏராளமான ஜனத்திரளோடும், பாண்டிய வரிசையுடனும், பேண்ட்வாத்தியம் பஜனைக் கூட்டமிவற்ரேடும், நகர்வலம் வரும்போது மணாளரின் மாண்பினை ஸ்ரீமான் ஜே. ஏ. லேன் அவர்கள் தம் கிரஹமருகே தயாரிக்கப்பட்டிருந்த ஆசனங்களிலே மணமக்களையமர்த்தி தம் மைத்துனர்பேரில் ஓர் "திருமணவாழ்த்துப் பஞ்சரத்நம்" பாடினார்கள். நகர்வலமானதும் சிங்கார வலங்கார ஜோடினைகளுடன் அமைக்கப்பெற்றிருந்த பந்தலினுளமர்ந்து தாம்பூலமாதிய பறிமாறி பன்னீர் முதலிய தெளிக்கப்பெற்றதும், அங்கு வீற்றிராநின்ற ஜனத்திரள், "மணமக்கள் வாழ்க வாழ்க, நங்குலவரசர் தொன் அனஸ்தாசியுஸ் வாழ்க, வாழ்க" எனும் பேரொலியோடு கரகோஷ்டமும் இடிபோல் முழங்க, மணமக்களை வாழ்த்திக் கலைந்தனர்.

பரதர் மாதாவாகிய பனிமயத்தாயார் இம் மணமக்கள் பன்னாள் வாழ்ந்து பலமக்களைப் பெற்று பாக்யமுடன் வாழ அருள்தருவாளாக.

பெரியதாழை } கண்டுகேளித்தோன்.
மேமீ 15உ 1917. }

நன்மரண அறிக்கை.

கொழும்பு.

கொழும்பு கொம்பனித் தெருவில் புகழ்பெற்றிலங்கும் அர்ச். செபமாலை மாதாவின் ஆலயத்தின் பங்கு விசாரணையின்கீழ் காலஞ்சென்ற சவேரியப்பனின் செல்வப் புதல்வியும் கம்பிக்கார சந்தியாகுவின் பேத்தியாரும், மதுரக்கவி நாவலர் J. G. அந்தோனிராயரின் மருமகளுமாகிய என்னருமை மனைவி சிரோன்மணியம்மாள் சுமார் 6 மாத காலமாய் நோய்வாய்ப்பட்டு எவ்வித சிகிச்சைசெய்தும் சுகமுறாமல் சங்கைக்குரிய ஜெ. பி. டொமினிக் குருவானவரால் கடைசி தேவத்திரவிய அனுமானங்களைச் சரிவரப்பெற்று நிகழ் 1917ம் வருஷம் மே மாதம் 14ம் தேதி திங்கள் கிழமை காலை 9.30-மணிக்கு தமது 23-வது வயதில் பந்து மித்திரர் யாவரையும் பரிதவிக்கவிட்டு ஜேசு மரிய சூசை என்னை இரட்சியும் என்று உச்சரித்துக்கொண்டே பரலோகபதியை யடைந்தனள். மறுநாள் செவ்வாய்க்கிழமை ஷை குருவானவரால் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு தமிழ் கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தினர் புடைசூழ நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதனைக் கண்ணுறும் சகோதர சகோதரிகள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ள மிகவும் பணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

கொழும்பு. } அருமை மனைவியை
கொம்பனித் தெரு. } இழந்து பரிதபிக்கும்,
ஜி. இ. அ. டேவிட் ராயர்.

மதுரை.

தென் இந்தியா ரயில்வே ரிட்டயர்ட் சீப் கார்டும் சென்னை சிந்தாத்திரிபேட்டை நிவாசகருமாகிய எனது அருமை தகப்பனார் கனம் அ. ஆனந்தம் பிள்ளை அவர்கள் கடைசி தேவத்திரவிய அனுமானங்கள்யாவும் சரிவரப்பெற்று 1917ளு மேமீ 23உ புதன்கிழமை காலை 5/45-மணிக்கு தனது 63-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். அன்று மாலை 6-மணிக்கு அவர் சடலம் திருச்சபை யாசாரப்படி இராயபுரம் அர்ச். ஆரோக்கியநாதர் கோவில் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கத்தோலிக்குச் சகோதரர்களனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள மன்றாடும்,

Madura. } தந்தையை இழந்த மைந்தன்
14 June 17. } A. D. Joseph.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகெளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 15. } ஆகஸ்டு 1917. { இலக்கம் 8.

THE HOLY FATHER AND THE PRESENT WAR.
அர்ச். பாப்பானவரும் நிகழும் யுத்தமும்.

நமது பரிசுத்த தந்தையாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் நிகழும் இந்தக் கொடும் யுத்த காலத்தில் ஒன்றுஞ் செய்யாமல் சும்மா யிருக்கவில்லை. கிரீடாதிபதிகளான சக்கரவர்த்திகளுக்கும், அரசர்களுக்கும், பிரஜாதிபதிகளுக்கும் அசாத்தியமாய்த் தோன்றும் பல பேருபகாரமான வேலைகளை அனுகூலமாய் முடித்து வருகிறார். அவை யெவையெனில்:

காயம்பட்ட கைதிகளான போர்ச் சேவகர்களுக்குள், கைகால் முதலிய உறுப்புகளை இழந்து, இனி யுத்தத்துக்கு உபயோகமற்றவர்களானவர்களிருந்தால், அப்பேர்ப்பட்டவர்கள் தங்கள் சுதேசத்துக்குத் திரும்பும்படி அவர் செய்த முயற்சியில் அனுகூலமடைந்தார். இதனால் கணக்கற்ற சேவகர்கள் தங்கள் தங்கள் விடுதிகளுக்குச் சென்று தங்களுடையவர்களால் அன்புடன் பாராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

பட்டாளத்தைச் சேராதவர்கள் கைதிகளானால், அவர்களுக்குள்ளும் 45-பிராயத்துக்கு மேற்பட்டவர்கள் தங்கள் தங்கள் சுதேசத்துக்குப் போகும்படி அர்ச். பாப்பானவர் மூலமாய் அரசர்களிடம் உத்தரவு அடைந்திருக்கிறார்கள்.

யுத்தத்தில் பிடிபட்டு கைதிகளான சேவகர்களுக்குள் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டு, போரில் சேராமல் நடு நிலைமையிலிருக்கும் சுவிட்ஜெர்லான்டு (Switzerland) தேசத்துக்கு அனுப்பப்படும்படி 15-ம் ஆசீர்வாதப்பர் கோரின கோரிக்கைக்கு அரசர்களும் சம்மதித்தார்கள். தற்போது அனேக ஆயிரம்பேர் அத்தேசத்தில் சுகமாய் வாழ்கிறார்கள்.

இந்த யுத்தத்தில் எத்தனையோ இலட்சக்கணக்கான போர்வீரர்கள் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்! அந்தந்த இராஜாக்கள் தங்கள் தங்கள் கைக்கு அகப்பட்ட கைதிகளான போர்வீரரை, ஒரே இடத்தில் இருக்கவிடாமல் பற்பல ஊர்களில் அவர்களை வைத்துக் காபந்து செய்து வருகிறார்கள். இவர்கள் உயிரோடிருக்

கிறார்களா அல்லது மரித்துப் போனார்களா என்று அறியாத இவர்களுடைய பெற்றோரும் பந்துக்களும் தங்களுக்கு அவரவர்களுடைய சமாச்சாரத்தை அறிவிக்கும்படிச் செய்ய பாப்பானவரைப் பிரார்த்தித்துக்கொண்டதின்பேரில் அவரும் அரசர்களுக்குக் கடிதமெழுதி, அவர்களுடைய சம்மதியின்பேரில் யுத்தம் நடக்கும் தேசங்களில் மேற்றிராணிமார்களும் குருக்களும் அடங்கிய கம்மிட்டிகளை நியமித்து, அவர்கள் மூலமாய் அக் கைதிகளுக்கு அவரவர்களுடைய பந்துக்களால் அனுப்பப்படும் கடிதங்களைச் சேர்ப்பிக்கவும், அக்கைதிகளால் எழுதப்படுங் கடிதங்களை அவர்களுடைய பந்துக்களுக்கு அனுப்புவிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். இதன் காரணமாக நாடோறும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் பாப்பானவருடைய அரண்மனைக்கு அனுப்பப்படுகின்றன.

யுத்த சட்டங்களை மீறினதினால் பரதேசத்துக்கும், மரண தண்டனைக்கும் தீர்ப்பளிக்கப்பட்ட அனேகர், அர்ச். பாப்பானவரின் சிபாரிசால் காப்பாற்றப்பட்டார்கள்.

பெல்ஜியத்திலும் பிரான்சிலும் தங்கள் கைவசமான பிராந்தியங்களிலிருந்த ஜனங்களுக்குள் அநேகரை ஜெர்மனியர்கள் பலவந்தமாய்த் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் அவர்களைக் கடினவேலை செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். 15-ம் ஆசீர்வாதப்பர் ஜெர்மனி சக்கரவர்த்திக்குக் கடிதமெழுதி, இது அனியாயமான செய்கையென்று அவருக்கு அறிவித்து, அந்த நிர்ப்பாக்கிய ஜனங்களைத் தங்கள் சுயநாட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்மேல், சக்கரவர்த்தியும் அதற்குச் சம்மதித்து அனேக ஆயிரம்பேரைத் தங்கள் சுயநாட்டுக்கு அனுப்பிவிட்டார். மற்றவர்களும் சமீபத்தில் தங்கள் தேசம் போய்ச் சேர்வார்களென்று நம்ப இடமுண்டு.

துர்க்கியில் போர்நடந்தபோது, அவ்விடத்தில் மடிந்து புதைக்கப்பட்ட ஐரோப்பியருடைய கல்லறைகளை அழிக்காமல் காப்பாற்றும்படி அர்ச். பாப்பானவர் கேட்டுக்கொண்டதற்கு சுல்தானும் சம்மதித்து, ஷை கல்லறைகளைப் புகைப்படம் பிடித்து பாப்பானவருக்கு அனுப்பியிருக்கிறார்.

யுத்தத்தால் நிலபலங்களும் வீடு வாசல்களும் நாசமாகி, பஞ்சத்தாலும் வியாதியாலும் சீரழிந்து பதைக்கும் இலட்சக்கணக்கான ஏழைகளுக்குத் தம்மாற்கூடிய தர்மம் 15-ம் ஆசீர்வாதப்பர் செய்ததுடன், மற்ற கிறீஸ்துவர்களிடத்திலும் அவர்களுக்காக தர்மங்கேட்க வேணுமென்று மேற்றிராணிமார்களுக்குங் கடிதமெழுதினார்.

கைதிகளாயிருக்கப்பட்ட போர்வீரர்களுக்குள் காசவியாதியால் பீடிக்கப்படுகிறவர்களை அவரவர் சுதேசத்துக்கு அனுப்பிவிடும்படி விரும்பின பாப்பானவரின் விருப்பத்துக்கு அரசர்கள் அனைவோரும் ஏகமனமாய்ச் சம்மதித்ததுமன்றி, யுத்தத்தில் காயப்பட்டவர்களுக்கும், கைதியாய்ப்போனவர்களுக்கும், வியாதியாய்ப் போனவர்களுக்கும், இன்னும் இப்பேர்ப்பட்ட பல துன்பங்களுக் குள்ளானவர்களுக்கும் அவர் இவ்வளவு தயை இரக்கத்துடன் பிரயாசைப்பட்டு வந்தற்காக அவர்கள் அவருக்கு நன்றியறிதலுக்குரிய கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள். சகல அரசர்களும், பாப்பானவரால் மீட்கப்பட்ட போர்ச்சேவகர்களும், அவர்களுடைய பெற்றார், உற்றார், உறவினரும் 15-ம் ஆசீர்வாதப்பருக்கு எவ்வளவு அன்புடன் நன்றிகூறினார்களென்று சொல்லத் தேவையில்லை.

சமாதானத்தின் இராஜாவாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய பிரதிநிதியாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் இனி முயற்சிக்கும் பிரஸ்நேகத்துக்குரிய சகல முயற்சிகளிலும் தவறாமல் அனுகூலப்பட்டு, அவர் நாடோறும் மகா ஆவலுடன் ஆசித்துவரும் சமாதானத்தைச் சீக்கிரத்தில் கண்டடைந்து மகிழும்படி நாம் அனைவோரும் சமாதானத்தின் இராஜாவைப் பார்த்து மன்றாடுவோமாக.

பாவமில்லாத சந்தோஷங்களை முதலாய் அனேகம் விசையில் சுவாமியைப்பற்றி வெறுத்துவிடுவாயாக.—(அர்ச். லிகோரியார்.)

THE BISHOPS' RESOLUTIONS.

மேற்றிராணிமாருடைய தீர்மானங்கள்.

பேர்போன பெனலோன் ஆண்டவர்.

இவர் பிரான்ஸ் தேசத்தில் காம்பிரே என்னும் நகரின் அதிமேற்றிராணியார். இவர் சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்த கலைக்கியானியாய் அத்தேசத்தில் ஓர் அரிதான மாணிக்கம்போல் பிரகாசித்துவந்தார். இவருடைய மேலான சாஸ்திரங்களைப்பற்றியும் இவரிடத்தில் விளங்கிய சகல புண்யங்களைப்பற்றியும் இவர் அரசராலும் பிரஜைகளாலும் வெகுவாய் அபிமானிக்கப்பெற்று வந்தார். இவரால் எழுதப்பட்ட சிறந்ததும் அரிதானதுமான பிரபந்தங்கள் கொஞ்சமல்ல. அர்ச்சியசிஷ்டவர்களுடைய நீதி வாக்கியங்களின் வியாக்கியானம் என்னும் சிறந்ததோர் பிரபந்தத்தைப் பிரசுரப்படுத்தினார். இதை அர்ச். பாப்பானவர் வாசித்துப் பார்த்தபோது அதில் சில தவறுதல்களிருப்பதாகக் கண்டு, அந்தப் புஸ்தகம் வேதப்படிப்பினைக்கு அனுசரணையாயில்லையென்று தீர்மானித்து, அந்தத் தீர்மானம் அடங்கிய பத்திரத்தைப் பெனலோன் அதிமேற்றிராணியாருக்கு அனுப்பி வைத்தார்.

மார்ச்சுமீ 25உ மங்கள வார்த்தை திருவிழாவானதில், அந்தப் பெரும் நாள் மிகவும் ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடப்பெற்றது. காம்பிரே அதிமேற்றிராசனக் கோவிலில், அன்று சாயந்திரம் பெனலோன் அதிமேற்றிராணியார் பிரசங்கம் செய்யப்போகிறாரென்பதை அறிந்த அந் நகரத்துப் பிரபுகளும் சாஸ்திரிகளும் பிரஜைகளும் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே தேவாலயத்தில் ஆஜரானார்கள். புண்யவாளரான அதிமேற்றிராணியார் தமது அரண்மனையினின்று தேவாலயத்துக்குப் புறப்பட்டுச் செல்லும்போதுதான், அர்ச். பாப்பானவருடைய ஷை நிருபம் அவருக்குக் கிடைத்தது. அதை அவர் திறந்து பார்த்தமாத்திரத்தில் அவருக்குண்டான துக்க துயரமும் மனச் சங்கடமும் விவரிக்குந் தன்மையல்ல. சற்று நேரம் அங்கேயே நின்று, மனதில் என்னவோ யோசித்துத் தீர்மானித்துக்கொண்டு, ஷை நிருபத்தைக் கையில் பிடித்த மேரையாய்க் கோவிலுக்குச் சென்று, சற்று நேரம் பீடத்துக்கு முன் செபஞ் செய்து, பிரசங்கத் தொட்டியி லேறினார். அவர் ஏற்கெனவே முஸ்திப்புச் செய்திருந்த பிரசங்கத்துக்குப் பதிலாக, திருச்சபை அதிகாரிகளுக்குக் கிறீஸ்துவர்கள் காட்ட வேண்டிய அமைதலான கீழ்ப்படிதலைப்பற்றி சிறந்ததோர் பிரசங்கஞ் செய்தார். தமது பிரசங்கத்தின் பொருளை ரூபிக்கும்படி அன்று அவர் பிரயோகித்த வேத வாக்கியங்களையும் வாக்கு சாதுரியமான அமிர்த மொழிகளையும் கேட்ட சபையோர் அதிசய பிரமிப்புக்குள்ளானார்கள். தாம் எழுதிய புஸ்தகத்தை அர்ச். பாப்பானவர் தவறானதென்று தீர்மானித்த தீர்மானப் பத்திரத்தைத் தாம் முழுமனதுடன் அங்கீகரித்ததாகவும், அவ்வாறே சகல கிறீஸ்துவர்களும் தங்கள் ஞான அதிகாரிகளான மேற்றிராணிமாருடைய தீர்மானங்களுக்குச் சாக்குப்போக்குச் சொல்லித் திரஸ்கரியாமல், அவைகளுக்கு முழுதும் கீழ்ப்படிந்து அமையவேண்டுமென்றும் அதிமேற்றிராணியார் பிரசங்கித்ததைக் கேட்ட சபையோருடைய இருதயம் மெழுகுபோ லுருகி அவர்கள் கண்களினின்று நீர் தாரை தாரையாய்ப் புறப்பட்டது.

பெனலோன் அதிமேற்றிராணியார் திருச்சபைக்குத் தாம் காட்டவேண்டிய அமைதலை இத்துடன் நிறுத்தாமல், மறுநாளே ஒரு தட்டானைத் தம்மிடம் வரவழைத்துப் பொன்னால் ஒரு சுடர் பாத்திரம் செய்யும்படி கற்பித்தார். அப் பாத்திரத்தின் சுடர்களை இரு சம்மனசுகள் நின்ற நிலையில் தங்கள் கரங்களால் தாங்கிப் பிடித்துக்கொண்டு, திருச்சபையால் விலக்கப்பட்ட புஸ்தகங்களைத் தங்கள் பாதங்களால் மிதித்த மேரையாய்ச் செய்யச்சொல்லி, அந்தக் கெட்ட புஸ்தகங்களுடன் தமது புஸ்தகத்தின் பெயரையும் அதில் வரையும்படி கற்பித்தார்.

இதை வாசிக்கும் நண்பர்களே! இந்தப் பரிசுத்த மேற்றிராணியாருடைய உயர்ந்ததும் சிறந்ததுமான சாஸ்திரம் புகழ்ச்சிக்குரியதோ, அல்லது அவருடைய அரிதான சிரவணக் கீழ்ப்படிதல் புகழ்ச்சிக்குரியதோ, நீங்களே சொல்லுங்கள். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்த பண்டிதராய்ச் சமஸ்தராலும் கனமாய் மதிக்கப்பெற்ற

இப் புண்ய சிலஞனவர் திருச்சபைக்கு இவ்வளவு அமைதலுடன் கீழ்ப்படிந்திருக்க, அரைகுறையாய்ப் படித்தவர்கள், எனக்கு (Theology) தேவ சாஸ்திரம் (Canon Law) திருச்சபைச் சட்டங்கள் முதலியவைகள் தெரியுமென்று வீம்பு பாராட்டி, அறியாதவர்களுக்குத் துர்ப்புத்தி சொல்லி, திருச்சபை அதிகாரிகளின்மேல் அனியாயமான குறைகளைக் கூறி, அவர்களை இகழ்வது எப்பேர்ப்பட்ட அகர்தை! துர்மாதிரிகை! அக்கிரமம்!

ஒரு மரத்தை அதன் கனியால் அறியலாமென்று நமது திவ்விய இரட்சகர் அறிவித்திருக்கிறார். தற்போது திருச்சபை அதிகாரிகளுக்கு விரோதமாய்க் கங்கணங் கட்டிக்கொண்டு, அவர்களைக் கனவீனப்படுத்தி, அவர்கள் அதிகாரத்தைத் திரஸ்கரித்து, மற்றவர்களுக்கும் அவ்விதஞ்செய்யத் துர்ப்புத்திகூறி, இதனால் சகலருக்கும் துர்மாதிரிகை வருவிக்கும் கிறீஸ்துவர்களுடைய நடத்தையைச் சீர்தூக்கிப்பாருங்கள். இப்பேர்ப்பட்டவர்கள் தேவகற்பனையையும் திருச்சபைக் கட்டளையையும் சீராய் அனுசரித்துவருகிறார்களா? இவர்கள் பாஸ்குக் கடனைத் தீர்த்தார்களா? தாழ்ச்சி, சிரவணம் ஸ்நேகமாகிய கிறீஸ்துவப் புண்யங்களை அனுஷ்டிக்கிறவர்களா என்று விசாரியுங்கள். இல்லையென்றால் இப்பேர்க்கொத்தவர்களுடைய ஆலோசனையை எப்படி பின்செல்லலாம்? குருடன் குருடனுக்கு வழிகாட்டினால் இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் என்பது தேவவாக்கியம். மேலும் அப்பேர்க்கொத்தவர்கள் அப்போதைக்கப்போது ஞாயிறுவாரங்களை அனுஷ்டித்து சிலவேளை பாஸ்குக் கடனைத் தீர்த்திருந்தும், அவர்களுடைய ஒழுங்கற்ற நடத்தையும் திருச்சபை அதிகாரிகளாகிய மேற்றிராணிமாருடைய அதிகாரத்தை அதிக்கிரமித்து நடப்பதுமே அவர்களைக் கண்டித்து அபராதிகளாகத் தீர்மானிக்கின்றன. இப்பேர்ப்பட்டவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பது பெரும்பாவமென்று சொல்லத் தேவையோ?

நூதன பிரியத்தால் புத்தி தடுமாறி, பிரவேசிக்கக்கூடாத விஷயங்களில் தலையிட்டுக் கொண்டு அவதிப்பட்டு அங்கலாய்க்கும் கிறீஸ்துவ சகோதரர்களே! உங்களிலும் தேர்ந்த சாஸ்திரியும் மகாப்புண்யவாளருமான பெனலோன் அதிமேற்றிராணியார் திருச்சபைமட்டில் கொண்டிருந்த அபிமானத்துக்கும், அதற்கு அவர் காட்டிய சிரவண கீழ்ப்படிதலுக்கும், உங்கள் நடத்தை எவ்வளவு பேதமுள்ளது! வெகுபேதமுள்ளதென்று நீங்களே காண்பீர்கள், அது மிகவும் கண்டனைக்குரியதாயுமிருக்கிறதென்று புத்தியற்றவன் முதலாய்க் கூறுவான்! உங்களை நிந்திக்கிறவன் என்னை நிந்திக்கிறானென்று நமது பரம குருவாகிய சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றியிருக்க, அப்போஸ்தலர்களுடைய பதிலாளிகளான மேற்றிராணிமார் மேல் நீங்கள் கூறிய தீயச்சொற்களாலும் நிந்தனையான மொழிகளாலும் இகழ்ச்சிக்குரிய வார்த்தைகளாலும் நமது கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதரையே அவமானப்படுத்தினீர்களென்று அறிவீர்களாக.

இதுநிற்க நீங்கள் தற்போது முறைப்படும் விஷயங்கள் நூதனமானவையென்று கருத வேண்டாம். இவைகள் பழமையானவையே. நீங்கள், உங்கள் முறைப்பாடுகளை அர்ச். பாப்பானவர் சமுகத்துக்கு அனுப்பினதாக விளம்பரஞ் செய்தீர்கள். இப்பேர்ப்பட்ட முறைப்பாடுகளை சிலர் வேறுதேசங்களிலிருந்து அநேக வருஷங்களுக்கு முன் உரோமைக்கு அனுப்பினார்கள். என்ன மறுமொழி அவர்களுக்குக் கிடைத்ததென்று தெரியுமோ? அவர்களுடைய மனு ஒழுங்கற்றதென்றும் கண்டனைக்குரியதென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் நீங்கள் மேற்றிராணிமாரை நிந்தித்து அவர்களுடைய அதிகாரத்தை மீறி உலகத்துக்குத் துர்மாதிரிகை காட்டினபடியால் அர்ச். பாப்பானவரிடத்தினின்று அதிகக் கண்டனைக்குரிய மறுமொழி பெறுவீர்களென்று நிச்சயிக்க ஒரு தீர்க்கத்தரிசி அவசரமில்லை. புத்தியுள்ள எவரும் இவ்வாறே கூறுவார்கள். ஆகையால் பிரிய சகோதரர்களே! துவக்கியிருக்கும் குழப்பவேலையை நிறுத்திவிட்டு, உங்களாலுண்டான தின்மைக்கும் துர்மாதிரிகைக்கும் பரிகாரஞ்செய்து, துக்கத்துடன் உங்கள் மேற்றிராணிமாரை அணுகி: தந்தைகளே! உங்களுக்கும் பரலோகத்துக்கும் விரோதமாகக் குற்றம் புரிந்தோம், மன்னியுங்களென்று மன்றாடுவீர்களாக.

15—7—17.
Bellary.

M. J. MICHAEL,
Cath. Indian Priest.

செத்தாலும் சாகிறதேயொழிய ஒரு அற்பப் பாவத்தையாகிலுஞ் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணிக்கொண்டிருப்பாயாக.—(அர்ச். லிகோரியார்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம்; வசனம்—67–75.

வசனம்.—67. மீளவும் அதின் தந்தையாகிய சக்கரியாஸ் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டுத் தீர்க்க தரிசனமாய் உரைத்ததாவது.

68. இஸ்ராயேலின் தேவனாகிய கர்த்தர் தோத்தரிக்கப்படுவாராக. ஏனெனில், அவர் தம்முடைய பிரஜைகளைச் சந்தித்து, அவர்களை மீட்டுக்கொண்டார்.

69–70. பூர்வீகமுதலிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் வாயால் அவர் திருவுளம்பற்றினபடியே, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்தில் நமக்கு ஓர் இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்.

71. நம்முடைய சத்துருக்களிடத்தினின்றும், நம்மை பகைக்கிறவர்களுடைய கையினின்றும் நம்மை இரட்சிக்கவும்.

72. (இவ்விதமாய்) நம்முடைய பிதாக்களுக்கு இரக்கஞ் செய்யவும், தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூரவும் அவ்வண்ணஞ் செய்தார்.

73. நம்முடைய பிதாவாகிய அபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையேதெனில்,

74. நம்முடைய சத்துருக்களின் கையினின்று நாம் விடுதலையாகி, அச்சமின்றி

75. நம்முடைய வாழ்நாளெல்லாம் தமது சமுகத்தில் பரிசுத்தத்தோடும், நீதியோடும் தமக்கு ஊழியஞ் செய்யும்படி அனுக்கிரகம் செய்வோம் என்பதே.

தேவதூதன் திருவுளம்பற்றின யாவும் நிறைவேறினதை சக்கரியாஸ் கண்டு மனமகிழ்ந்து, முந்தின அவவிசுவாசத்துக்குப் பதிலாய் விசுவாசத்தைக் கொண்டு சர்வேசுரனுக்கு வாழ்த்துவதாக ஓர் உன்னத சங்கீதத்தைப் பாடினார். இதில் மெஸ்ஸியாவாகிய கிறீஸ்துநாதரைப் பற்றியும், அவரால் உண்டாகும் இரட்சணிய நன்மைகளைப் பற்றியும் (67—75)

அவருடைய முன்னோடியாகிய அருளப்பரைப் பற்றியும் அவருடைய கடமைகளைப் பற்றியும் (76—79). பாடியிருக்கிறார்.

67-ம் வசனம்.—அதின் தந்தையாகிய சக்கரியாஸ் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டுத் தீர்க்க தரிசனமாய் உரைத்ததாவது:—

அர்ச். அம்புரோஸ் இவ்வசனத்தைப் பின் வருமாறு வியாக்கியானம் செய்கிறார். "சர்வேசுரன் எவ்வளவு நன்மை நிறைந்தவரென்றும் எவ்வளவு சுலபமாய்ப் பாவத்தைப் பொறுக்கிறார் என்றும் அறியவும். பாவியானவன் மனந்திரும்பினால் அவன் போக்கடித்துக்கொண்ட நன்மைகளைத் திரும்பி அளிப்பதுமன்றி, அவன் ஒருபோதும் எதிர்பாராத இன்னும் அதிசயத்துக்குரிய நன்மைகளையும் உதாரமாய்த் தந்தருளுகிறார்."—ஊமையாகிய சக்கரியாஸ், நாவின் கட்டவிழ்ந்து பேசினதே சர்வேசுரன் செய்த பெரிய நன்மை. ஆனால் அவர் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டுத் தீர்க்கதரிசனம் உரைத்ததானது, அவர் எதிர்பாராத அதிசயமான தேவவரமாயிருந்தது. பின் வரும் காரியங்களை ஞானதிருஷ்டியால் அறிந்து வெளிப்படுத்துபவரை மாத்திரம். அல்ல, இஸ்பிரீத்து சாந்துவின் விசேஷ ஏவுதலால் தூண்டப்பட்டு, சர்வேசுரனுடைய தூதனாகவும் அவர் நாமத்தாலும் பேசுகிறவரையும் தீர்க்கதரிசி என்று வேதாகம புஸ்தகங்கள் அழைப்பதுண்டு.

தேவதூதனால் கற்பிக்கப்பட்டு, இஸ்பிரீத்து சாந்துவால் தெளிவிக்கப்பட்டு மெஸ்ஸீயாவின் வருகை நெருங்கிவிட்டதை அறிந்துகொண்டு, அவர் கொண்டு வரும் ஐஸ்வரியங்களையும் நன்மைகளையும் திருஷ்டிக்கிறார் சக்கரியாஸ்—ஆதலால் இவ்வளவு உன்னதமான நன்மைகளையும் கொடைகளையும் தமது பிரசைகளுக்கு அருளுகின்ற சர்வேசுரனை ஸ்துதிகளால் கொண்டாடுகிறார்.

68-ம் வசனம்.—“இஸ்ராயேலின் தேவனாகிய கர்த்தர் தோத்தரிக்கப்படுவாராக. ஏனெனில் அவர் தம்முடைய பிரஜைகளைச் சந்தித்து அவர்களை மீட்டுக்கொண்டார்.”

தாவீது, சலோமோன் இராசாக்களுடைய சங்கீதங்களில் பிரயோகிக்கப்படும் வார்த்தைகளைக் கொண்டு சக்கரியாஸ் தனது சங்கீதத்தை ஆரம்பிக்கிறார்.

“சர்வேசுரன் தமது பிரஜைகளைச் சந்தித்தார்” என்றால், தமது இஸ்ரயேல் பிரஜைகளை கிருபாகடாட்சத்தோடு நோக்கி அவர்கள்மீது தமது அருட்பிரசாதங்களைப் பொழிந்தார் என்றர்த்தமாகும். அவர்களை எஜிப்தியருடைய கொடுங்கோல் ஆளுகையினின்றும் பபிலோனியருடைய உபத்திரவங்களினின்றும் அடிமைத்தனத்தினின்றும் மீட்டு இரட்சித்ததைச் சக்கரியாஸ் நினைவுகூர்கிறார். ஆனால். இதைப் பார்க்கிலும் மேலான உத்தம மீட்பு ஒன்றுண்டு. மனுக்குலத்தை மெஸ்ஸியாவாகிய உலக இரட்சகர் பசாசின் குரூர கொடூர அரசாட்சியினின்றும், பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும் விடுதலையாக்கி இரட்சித்ததை இங்கு அறிக்கையிட்டு சர்வேசுரனைப் புகழ்ந்து தோத்தரிக்கிறார். பூர்வீகத்தில் இஸராயேல் பிரசைகள் அஞ்ஞான இராசாக்களுடைய துஷ்ட நிஷ்டூர ஆளுகையினின்று மீட்கப்பட்ட வர்த்தமானங்களெல்லாம், உலக இரட்சகர் மனுக்குலத்துக்குக் கொண்டுவந்த இரட்சணியத்துக்கு அடையாளங்களாக இருந்தன.

69–70-ம் வசனம்.—வேத புஸ்தகத்தில் மகிமையும் சிறப்பும் பொருந்திய “சர்வேசுரனுடைய தாசன்” என்ற நாமகரணத்தால் தாவீது இராசா இங்கு அழைக்கப்படுகிறார். அபிரகாம், ஜோசுவே, யோபு என்பவர்களுக்கும் இச்சிறந்த நாமத்தை வேதவாக்கியம் கொடுக்கின்றது.

எபிரேய பாஷையில் கொம்பு என்னும் பெயரால் வல்லமையைக் குறிக்கிறது வழக்கம். கொம்பானது பராக்கிரமத்தின் அடையாளம் ஆகையால் “இரட்சணிய கொம்பு” என்றால், மிகவும் வல்லபமுள்ள இரட்சகர் என்றும் “தமது தாசனாகிய தாவீதின் வம்சத்தில் நமக்கு ஓர் இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார்” என்றால் தமது ஊழியனாகிய தாவீது இராசாவின் கோத்திரத்தில், நமக்கு சர்வ வல்லபமுள்ள ஓர் இரட்சகர் உதிக்கும்படியாக சர்வேசுரன் கிருபை புரிந்தார் என்றும் அர்த்தமாகும். மேலும் கொம்பு என்ற பதத்தால் இராச்சியமும் குறிக்கப்படுகிறது. ஆகையால் தாவீது இராசாவின் கோத்திரத்தில் முன்னும் பின்னும் காணாத நிகரற்ற ஓர் உன்னத அரசர் எழும்புவார் என்றும், அவர் சௌரிய வீரிய பராக்கிரமமுள்ளவர் என்றும், அவருடைய இராச்சியம் வல்லபம் பொருந்தியதென்றும் கூறப்படுகின்றது. மெஸ்ஸியாவாகிய கிறீஸ்துநாதர் தாவீது கோத்திரத்தில் பிறப்பார் என்பதைப் பூர்வீகத்திலிருந்து சர்வேசுரன் தமது பிரசைகளுக்குத் தீர்க்கத்தரிசிகள் மூலமாய் அறிவித்துவந்தார்.

இதைச் சக்கிரியாஸ் நினைவுகூர்ந்து சர்வேசுரனுடைய பிரமாணிக்கத்தை வாழ்த்துகிறார். தீர்க்கத்தரிசிகள் தேவ ஊழியத்துக்கு விசேஷித்த விதமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகையால், பரிசுத்தமானவர்கள் என்றும் அர்ச்சிக்கப்பட்டவர்களென்றும் சொல்லப்படுகின்றது. சர்வேசுரன் பூர்வீக காலத்திலிருந்து தீர்க்கத்தரிசிகளை ஏற்படுத்தி மெஸ்ஸியாவைப் பற்றியும் அவர் மூலமாய் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் தமது பிரஜைகளுக்கு அறிவித்து வந்ததினால், மெஸ்ஸியாவினால் மனுக்குலத்துக்கு வரப்போகிற இரட்சணியமானது எவ்வளவோ சிறந்ததென்றும், மாட்சிமையுள்ளதென்றும், அதைக் கைப்பற்ற எம்மாத்திரம் அபேக்ஷை ஆவலுடன் முஸ்திப்பு செய்ய வேண்டுமென்றும் விளங்குகின்றது.

71-75-ம் வசனங்கள்.—இரட்சணிய கொம்பு அல்லது தேவ வல்லபத்தைக் காண்பிக்கும் இரட்சணியம் எதில் அடங்கியிருக்கிறதென்று 71-வசனம் வெளிப்படுத்துகின்றது. புறஜாதியாராகிய அஞ்ஞானிகள் தேவ பிரசைகளைப் பகைத்து விரோதித்து வந்தபடியால், அவர்களுடைய சத்துருக்களாயிருந்தார்கள். முதல்

முதல் தேவ பிரஜைகள் இவர்கள் செய்து வந்த துன்ப வாதைகளினின்று மீட்கப்படுவார்கள். மேலும் மெஸ்ஸியாஸ் தமது ஜனங்களை ஞான சத்துருவாகிய பாசின் கொடுமையான நிஷ்டூர அடிமைத்தனத்தினின்று மீட்பார் என்பதும் இவ்வசனத்தின் பயனும். சர்வேசுரன் பழைய ஏற்பாட்டின் பிதாப்பிதாக்களுக்கும் முக்கியமாய் அபிரகாமுக்கும் ஆணையிட்டு வாக்குத்தத்தம் செய்தவண்ணம் மெஸ்ஸியாஸ் அரசரை அனுப்பினார். இவரால் பூலோகத்துக்கு இரட்சணியம் உண்டாயிற்று—இந்த இரட்சணிய பலன்களை, மரித்துப் பாதாளத்தில் தங்கள் உத்தானத்துக்காகக் காத்துக்கொண்டிருந்த பிதாப்பிதாக்களும் அடைந்ததினால் சர்வேசுரனுடைய கிருபை அவர்கள்மீதும் இறங்கினது என்று 72-ம் வசனம் கூறுகின்றது.

சர்வேசுரன் அபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தம் ஏதெனில் அவருடைய சந்ததியார், வேத கற்பனைகளை அநுசரித்து வரும்வரையில் புறஜாதியாராகிய சத்துருக்களுடைய பயமில்லாமல் சமாதானத்தோடு சீவித்து இன்பசுக செல்வத்தை அநுபவிப்பார்கள்—சர்வேசுரனுடைய அடைக்கலத்தில் இருப்பார்கள் என்பதே.

ஆனால் மெஸ்ஸியாஸ் உலகத்தில் தோன்றின காலத்தில், இந்த வாக்குத்தத்தம் பூர்த்தியாய் நிறைவேறும். மெஸ்ஸியாஸ் தமது சத்துருக்களை நிர்மூலமாக்கி ஜெய சீலராய் தமது இராச்சியத்தை சமாதானத்தில் ஸ்தாபிப்பார். அதில் பிரவேசிக்கிறவர்கள் பரிசுத்தத்திலும், நீதியிலும் விளங்குவார்கள். மனிதர்கள் முன்பாக மாததிரம் அல்ல, தேவ சமுகத்திலும், உண்மையில் பரிசுத்தமுள்ளவர்களாய்ச் சீவிப்பார்கள், தங்கள் வாழ்நாளெல்லாம் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வார்கள்.

பரிசுத்தம் (Sanctitas) சர்வேசுரன் மட்டில் இருக்கவேண்டிய பத்தி வைராக்கியத்தைக் குறிக்கிறது. நீதி (Justitia) மனுஷர்கள் மத்தியில் இருக்கவேண்டிய கிரமமான நடத்தை, ஒழுங்கு, நெறி, நேர்மையை, அல்லது சகல புண்ணியங்களின் தொகுதியைக் குறிக்கின்றது.

மெஸ்ஸியாவின் காலத்தில், தேவ பக்தியும், நீதியும், சகல புண்ணியங்களும், பாக்கியமும், சமாதானமும் சம்பூரணமாய்ச் செழித்தோங்கும் என்று தீர்க்கதரிசிகள் வசனித்திருப்பதைச் சக்கரியாஸ் இங்கு எடுத்துக் கூறுகிறார்—பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கை நீடிக்கவில்லை. யூத ஜனங்கள் செய்த பாவாக்கிரமங்களால் அது வியர்த்தமாக்கப்பட்டது. ஆனால் மெஸ்ஸியாவின் இராச்சியமானது பரிசுத்ததனத்தில் என்றென்றைக்கும் விளங்கும், என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.—சர்வேசுரன் பழைய உடன்படிக்கையின் ஜனங்களை வெறுத்துத் தள்ளிவிட்டதுபோல், மெஸ்ஸியாவின் இராச்சியமாகிய திருச்சபையை ஒருபோதும் தள்ளமாட்டார். திருச்சபை ஒருக்காலும் அழியாது.

“நம்முடைய வாழ்நாளெல்லாம் சர்வேசுரனுடைய சமுகத்தில் பரிசுத்தத்தோடும், நீதியோடும் ஊழியஞ் செய்யும்படி,” என்று சக்கரியாஸ் வசனித்ததினால், மெஸ்ஸியாவின் இராச்சியம் லோக இராச்சியம் அல்லவென்றும், அது ஞான விதமாய் நடத்தப்படும் என்றும், அதின் கதி ஆத்தும இரட்சணியம் என்றும், அதில் எப்போதும் பரிசுத்தத்தனமும் புண்ணிய ஒழுக்கமும் குன்றாமல், குறையாமல் சதா நிலைத்திருக்குமென்றும் மெஸ்ஸியாவின் தேவ இராச்சியத்தின் ஞான இலட்சணங்களை எடுத்துரைக்கிறார்.

S. M.

ஒருநாளைக் கொருமணி நேரமாகிலும் தியானம் பண்ணுவாயாக.

மனிதர்களோடு அவசரமின்றிப் பேசுவதை விட்டு தனித்திருந்து சுவாமியோடு சமபாஷித்திருப்பாயாக.

உன்னகத்தி லெழும்பும் பாசங்களை யடக்கி வெளி இந்திரியங்களை மட்டுக்கட்டி ஒறுத்தல் செய்வாயாக.

என்னத்தைச் செய்தாலும் உன் மரண வேளையில் எப்படி செய்வாயோ அப்படியே செய்வாயாக.

நீ செய்யும் நற்கிருத்தியங்களை மனிதருக்கு பயந்தாகிலும் சோம்பேறித்தனத்தினாலென்கிலும் குறைக்காமல் இருப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

43-ம் அதிகாரம்.

இந்தப் பண்டிதர் தம்முடைய மனைவியாகிய ருக்மணியைக் கொலை செய்ததாகப் பல திருஷ்டாந்தங்களுண்டு.

சரஸ்வதி கோர்ட்டில் வந்து நிற்க, அவளைப் பார்த்து மாஜிஸ்ற்றேட் பெயரென்னவென்று கேட்கையில் சரஸ்வதி என்றாள்.

மாஜி.—பண்டிதரைப் தெரியுமா?

சரஸ்.—அவர் எனக்குத் தெரியாது.

மாஜி.—அவர் யார்வீட்டுக்காவது அடிக்கடி போவதுண்டோ?

சரஸ்.—அதுவும் எனக்குத் தெரியாது.

மாஜி.—பண்டிதருடைய மனைவியை அறிவாயோ?

சரஸ்.—ஆ! ஆ! அறிவேன்.

மாஜி.—இந்த பங்களாவுக்கு அடிக்கடி வருகிறதுண்டோ?

சரஸ்.—அந்த அம்மாள் கூப்பிட்டு அழைக்கும்போது வருவதுண்டு?

மாஜி.—வந்து என்ன செய்வாய்?

சரஸ்.—சொக்கட்டான், சீட்டு முதலியவைகளை ஆடுவதுண்டு.

மாஜி.—புஸ்தகம் வாசிக்கிறதுண்டோ?

சரஸ்.—எப்போதாகிலும் வாசிக்கிறதுண்டு.

மாஜி.—அது யாருடைய புத்தகம்?

சரஸ்.—ருக்மணியின் புஸ்தகம்தான்.

மாஜி.—நீ யெந்தப் புஸ்தகமும் கொண்டு வந்ததில்லையோ இந்த பங்களாவுக்கு?

சரஸ்.—இல்லை.

மாஜி.—முனியம்மாள்?

சரஸ்.—அவள் சில புஸ்தகங்களைக் கொண்டு வருவாள்.

மாஜி.—அவை என்ன புஸ்தகங்களோ?

சரஸ்.—கதை புஸ்தகங்கள்தான்.

மாஜி.—கதையில் விவரிக்கப்பட்டதன்படி செய்ய ருக்மணிக்கு நீ துர்ப்புத்தி சொன்னதுண்டோ?

சரஸ்.—நான் சொன்னதில்லை?

மாஜி.—பண்டிதருடைய நடத்தையைப் பற்றி அவருடைய மனைவியுடன் எப்போதாகிலும் சொல்லி யிருக்கிறாயோ?

சரஸ்.—ஒருபோதும் சொல்லவில்லை?

மாஜி.—நேற்று சாயந்திரம் இந்த பங்களாவுக்கு வந்தாயோ?

சரஸ்.—ருக்மணி யம்மாள் வரும்படி ஆள் அனுப்பினதைப்பற்றி வந்தேன்.

மாஜி.—ருக்மணி உன்னை யென்னத்துக்கு வரவழைத்தாள்?

சரஸ்.—தன் புருஷன் எங்கேயோ போனதைப்பற்றி யென்னோடு முறையிட்டுக்கொண்டாள்.

மாஜி.—எங்கே போனார் பண்டிதர்?

சரஸ்.—எங்கே போனாரோ எனக்குத் தெரியாது.

மாஜி.—நீ அதற்கு என்ன சொன்னாய்?

சரஸ்.—நான் ஒன்றும் சொல்லவில்லை.

மாஜி.—ருக்மணி யென்பவளைக் கிணற்றிலாவது குளத்திலாவது குதிக்கும்படி சொல்லவில்லையோ?

சரஸ்.—இல்லை.

மாஜி.—எங்கேயாகிலும் ஓடிப்போகும்படி சொல்லவில்லையோ?

சரஸ்.—இல்லை.

மாஜி.—ருக்மணி யென்பவள் தன் புருஷனைப்பற்றி முறையிட்டபோது உங்களோடு யாராகிலு மிருந்தார்களோ?

சரஸ்.—முனியம்மாள் இருந்தாள்.

மாஜி.—முனியம்மாள் என்ன சொன்னாள்?

சரஸ்.—ஒன்றும் சொல்லவில்லை.

மாஜி.—அதற்குப்பின் என்ன நடந்தது?

சரஸ்.—ருக்மணி துக்கத்துடன் அழுதுகொண்டிருந்தாள். நானும் முனியம்மாளும் பங்களாவைவிட்டு வீட்டுக்குத் திரும்பினோம்.

மாஜி.—அதற்குப்பின் நீ இந்த பங்களாவுக்கு வந்ததில்லையோ?

சரஸ்.—நீங்கள் அனுப்பிய சம்மன் நிமித்தம் இப்போதுதான் இங்கே வந்தேன்.

மாஜி.—நீ வீட்டுக்குப்போகாமல் வெளியே இரு.

கலியாணசுந்தரம்?

ஜவான் மாஜிஸ்ட்றேட் டண்டைவந்து கலியாணசுந்திரமும் மணவாளனும் ஊரில் இல்லை யென்றான். அப்போது மாஜிஸ்ட்றேட்டு போலீஸ் ஆபீசரைப் பார்த்து, "உமது குமாரன் எங்கே சார்?" என்றபோது, "அவன் எங்கே போனானோ எனக்குத் தெரியாது. கடந்த ஒரு வாரமாய் நான் சர்க்யூட்டுக்குப் போய் நேற்றுதான் வீடு வந்து சேர்ந்தேன்" என்றார்.

இதை மாஜிஸ்ட்றேட்டு கேட்டு, "நல்லது அவர்களுக்கு மறுபடியும் சம்மன் அனுப்பவும், மூன்றுநாள் விசாரணையை வைத்துக்கொள்வேன்" என்றார்.

மாஜி.—பண்டிதர் இங்கே வரட்டும்.

இரு ஜவான்களுடன் பண்டிதர் கோற்டுக்கு முன்வந்து நின்றார். அவர் மிகவும் இளைப்பாய் இருப்பதைக் கண்டு, அவருக்கு ஒரு நாற்காலி போடும்படி உத்தரவு கொடுத்தார் மாஜிஸ்ட்றேட்டு.

பண்டிதருடைய கண்கள் அவர் அழுத அழுகையால் கோவைப்பழம்போல சிவந்து இருந்தன. முகம் சற்று வீங்கியிருந்தது. அவர் பட்ட துக்க துயரத்தாலும் அழுத அழுகையாலும் மிகவும் இளைத்துக் களைத்துச் சோர்ந்து, பரிதாபத்துக்குரிய விதமாய்க் காணப்பட்டார். அவரைப் பார்த்தவர்கள் அவர்மட்டில் இரக்கங்கொண்டு துக்கித்தார்கள்.

அப்போது மாஜிஸ்ட்றேட்டு பண்டிதரை அன்புடன் நோக்கி, "சகலராலும் சங்கை கவர்தையுடன் நேசிக்கப்பட்டு கீர்த்தி வெகுமானத்துடன சிறந்தோங்கின பண்டிதரே, என் உத்தியோகத்தின் அலுவலை உமது மட்டில் நிறைவேற்ற கட்டாயப்படுத்தப்பட் டிருக்கிறேன். இது எனக்கு மிகவும மனச்சங்கடத்துக் குரிய வேலையாயினும் இதைச் செய்துமுடிக்க கடமைப்பட்டவனாயிருக்கிறேன். ஆகையால் நான் கேட்கும கேள்விகளுக்கு மறுமொழி கொடுப்பீரென்று நம்புகிறேன்" என்று சொன்னதைக்கேட்ட பண்டிதர் இவ்வாறு மொழிவார்:— நீர் நீதி பரிபாலிக்கும் நடுவரா யிருப்பதால் உமது கடமையை நிறைவேற்றும், என் பிரிய மனைவியைப் பறிகொடுத்ததுடன், எனக்கு கண்ணுக்குக் கண்ணாயிருந்த என் பிரிய ருக்மணியை நானே கொலை செய்ததாகக் குற்றவாளியாய் நிறுத்தப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கொலையில் கிஞ்சித்தேனிலும் குற்றமற்றவனா யிருப்பதால் எனக்கு அற்ப பயமுமில்லை; ஸ்வாமியே எனக்குச் சாக்ஷியாக நிற்பாராக. சிரஞ்சீவிய கர்த்தரே என்னை சகல பொல்லாப்பிலும் நின்று காத்து இரக்ஷிப்பாராக, என்றார். அங்கு கூடி யிருந்தவர்களில் அநேகர் இவ் வார்த்தையைக் கேட்டு: கடவுள் உம்மை இரக்ஷிப்பாராக என்றார்கள்.

அப்போது மாஜிஸ்ட்றேட் போலீஸ் ஆபீசரை நோக்கி: இந்த பண்டிதர்மேல் நீர் கொண்டு வந்திருக்கும் குற்றங்கள் எவையென்று தயவு செய்து தெரியப்படுத்தும், என்னவே, போலீஸ் அபீசர் பின்வருமாறு மொழிவார்:—

யூர் ஆனர், இந்த பண்டிதர் என்பவர் அவருடைய மனைவியாகிய ருக்மணி யென்பவளைக் கொலைசெய்ததாக பல திருஷ்டாந்தரங்களால் தெரியவருகிறது. இவரே கொலைசெய்தார் என்பதற்கு முதலாவது, இக் கடிதம் ஆதாரம். இரண்டாவது, இவர் ஒத்துக்கொண்டதுபோல, இவருடைய கத்தியால் கொலை நடத்தப்பட்டிருக்கிறது. மூன்றாவது, இவர் ஏற்கெனவே சொன்னதுபோல, இன்று இராத்திரி நடுச்சாம வேளையில் திரும்பிவந்து தன் மனைவியைக் கொலை செய்துவிட்டு எங்கேயோ ஒளிந்திருந்து இன்று காலையில் ரயில்மூலமாய் வந்திருக்கிறார். நான்காவது, யாதொரு திருடன் இங்குவந்து கொலை செய்திருந்தால் இங்குள்ள பணம் காசையும் நகை நட்டையும் திருடிக்கொண்டு போயிருக்க வேண்டும். ஆனால் ஒன்றும போகாமல் பணமும் நகைகளும் வைத்த இடத்தில் இருக்கின்றன. ஆகையால் இக் கொலையை இந்தப் பண்டிதரே நடத்தி யிருக்கவேண்டும் என்பது என் தாற்பரியம், என்றார் போலீஸ் ஆபீசர்.

அப்போது மாஜிஸ்ட்றேட்டு போலீஸ் ஆபீசரைப் பார்த்து, "இந்தக் கடிதம் கொலைக்குக் காரணமாயிராது. இரண்டாவது, பண்டிதருடைய கத்தியால் கொலை செய்யப்பட்டிருப்பதால், இதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமிருக்கிறது. மூன்றாவது, இவர் நடுச்சாமத்தில் வீட்டுக்குத் திரும்பிவந்து கொலைசெய்துவிட்டு ரயில்வண்டியேறிப்போய், மறுபடியும் இன்று காலையில் வீடு வந்து சேர்ந்தார் என்பது எனக்குப் பிடிபடவில்லை. நான்காவது, சந்தேகத்தில் யாதொரு

பிரயோஜன மிருக்குமென்று நான் நினைக்கவில்லை.

போ. ஆபீசர்.—இன்னும் ஒரு கனத்த தப்பிதம் இருக்கிறது இவர்மேல் யூர் ஆனர்!

அதைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று மாஜிஸ்ட்ரேட் சொல்லிவிட்டு, பண்டிதரை நோக்கி: நீர் நேற்று சாயந்திரம் எங்கே போனீர்!

பண்டிதர்.—சாகக்கிடக்கும் ஒரு மனிதனுக்கு நான் கொடுத்த பிரமாணத்தை நிறைவேற்றும்படி போனேன்.

மாஜி.—எந்த ஊருக்கு?

பண்.—அதைப்பற்றிச் சொல்லேன்?

மாஜி.—யார்வீட்டுக்குப் போனீர்?

பண்.—அந்த வீட்டுக்காரரைப்பற்றி யாருக்கும் அறிவியேன் என்று பிரமாணம் செய்திருக்கிறேன்.

மாஜி.—சில சமயங்களில் இரகசியத்தை வெளிப்படுத்துவதால் தவருகாதே.

பண்.—நான் இதைப்பற்றி வெளிப்படுத்தமாட்டேன்.

மாஜி.—நீர் வெளிப்படுத்தாவிட்டால் இந்தக் கொலைப்பாதகம் உமதுமேல் விழும்.

பண்.—நூறுவிசை சாகவேண்டி யிருந்தாலும் சாவேனே ஒழிய, எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இரகசியத்தை வெளிவிடேன்.

மாஜி.—நன்ருய் யோசித்துப்பாரும்.

பண்.—இதைப்பற்றி யோசிக்கத் தேவையில்லை.

மாஜி.—உமது வாக்குமூலம் உமது குற்றத்தை உறுதிப்படுத்துகிறது!

பண்.—நான் குற்றவாளியோ குற்றமற்றவனோ சர்வேசுரன் அறிவார்.

மாஜி.—ஆனல் மனிதர் உம்மைக் குற்றவாளி யென்கிருர்கள்.

பண்.—மனச்சாக்ஷியுள்ள எந்த மனிதனும் அப்படிச் சொல்லமாட்டான்.

மாஜி.—நீர் நேற்று சாயந்திரம் ரயிலேறிப் போய் உமது பங்களாவுக்கு எப்போது வந்தீர்?

பண்.—இன்று காலை பத்துமணிக்குத்தான் வந்தேன்.

மாஜி.—நேற்று வீட்டில் என்ன சொல்லிப் போனீர்?

பண்.—நடுச்சாம வண்டிக்கு வருவதாகச் சொல்லிப்போனேன்.

மாஜி.—அப்படியானல் என் நடுச்சாம வேளை வண்டிக்கு வரவில்லை?

பண்.—நான் போனவேலை முடிய தாமதமாய்விட்டது. ஸ்டேஷனுக்குப் போன அப்போதே வண்டி புறப்பட்டுவிட்டது.

மாஜி.—நீர் போனவேலை யின்னதென்று சொல்லும்.

பண்.—இரக்கத்துக்குரிய ஒரு வேலையினிமித்தம் போனேன்.

மாஜி.—அதை விவரமாய்ச் சொன்னல் இப்போதே நீர் விடுதலையாவீர்.

பண்.—நான் செய்த பிரமாணத்தை யெப்படி மீறுவேன்?

மாஜி.—(போ. ஆபீசரைப்பார்த்து) இன்னொரு சார்ஜ் என்ன பண்டிதர்மேல்?

போ. ஆ.—மரணத்துக்குத் தீர்வை யிடப்பட்ட குற்றவாளி மதராஸ் சென்டிரல் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டான். அந்தக் குற்றவாளி இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருக்கும் மீனாட்சியின் புருஷன். இந்தப் பண்டிதருக்கு அந்த விஷயம் தெரிந்திருக்கு மென்பது என் அபிப்பிராயம்.

மாஜி.—அதற்கு என்ன ஆதாரம்.

போ. ஆ.—ஒரு ஆதாரமும் இல்லாவிட்டாலும் இவருக்கு அந்த சங்கதி தெரியுமென்று நம்புகிறேன். மேலும் இவர் இன்று மதுராந்தகத்தில் ரயில் ஏறினர். மதுராந்தகத்தில் மீனாட்சி யிருப்பதாகப் பிரஸ்தாபம்.

மாஜி.—உலகத்தில் எத்தனை மீனாட்சிகளோ! கடிதத்தில் கையொப்பம் வைத்தவள்தான் கைதியின் மனைவியாகிய மீனாட்சி யென்பதற்கு என்ன ஆதாரம்?

போ. ஆ.—நிச்சயமான ஆதாரமில்லாவிட்டாலும் சமுசயமாத்திரமுண்டு.

மாஜி.—நல்லது பணடிதரே! அந்த மீனாட்சி யாரென்று தயவுசெய்து சொல்வீரா?

பண்.—நான் தங்களுக்கு எற்கெனவே சொன்னதுபோல இந்த விஷயத்தைப்பற்றி நான் வாய்திறந்து சொல்லமாட்டேன். சத்தியப் பிரமாணத்தால் கட்டப்பட்டிருக்கிறது என் நாவு.

மாஜி.—நீர் மற்றவர்கள்மீது இரக்கம் வைத்து அவர்களைக் காப்பாற்ற கருத்தா யிருக்கிறீரே ஒழிய, உமது தலைமேல் விழ இருக்கும் இடிக்கு ஒப்பான பழிக்குத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீரில்லையே!

பண்.—எப்பேர்ப்பட்ட பழி யென் தலைமேல் விழுந்தபோதிலும் விழட்டும்; ஆனல் என்னை நம்பினவர்களைக் காட்டிக்கொடேன். மரண நேரத்தில் நான் கொடுத்த என் வார்த்தைப்பாட்டை யெப்பேர்ப்பட்ட பொல்லாப்புக்கும் அஞ்சாமல் நிறைவேற்றுவேன்; இதுவே என் தளரா எண்ணம்.

மாஜி.—அப்படியானல் நீர் செஷனுக்குப் போகவேண்டியது.

பண்.—அப்படியே ஆகட்டும்.

மாஜிஸ்ட்ரேட்போலீஸ்ஆபீசரைப்பார்த்து நாளை பத்துமணிக்கு கலியாணசுந்திரம், மணவாளன் என்பவர்களை விசாரிப்பேன். இப்போது பங்காரம்மா, நீ போகலாம். பண்டிதருடைய தோட்டக்காரரும் சமயல்காரரும் பியூன்களும் போகலாம்.

முனியம்மாள் 2,000 ரூ. ஜாமீன்மேல் விடுதலை செய்யப்படுவாளாக. சரஸ்வதி யென்பவளும் 2,000 ரூ. ஜாமீன்மேல் போகலாம் என்னவே, அந்த இரு ஸ்திரீகளுடைய பந்துக்கள் கொடுத்த ஜாமீன்மேல் முனியம்மாளும் சரஸ்வதியும் விடுதலை யானர்கள்.

அன்னேரத்தில் ஓர் ஜமீன்தாரருடைய குமாரன் இருபதினயிரம் ரூபாய் ஜாமீன்மேல் பண்டிதரை விடும்படி மனுக்கொடுத்தார்.

அப்போது மாஜிஸ்ட்ரேட்டு பொன்னேரியிலிருக்கும் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு உவையர் கொடுத்து, அவர் உத்தரவு கொடுத்தால் பண்டிதர் நாளைக்கு ஜாமீன்மேல் விடுதலை செய்யப்படுவார்; உத்தரவு வராவிட்டால் சப் ஜெயிலில்தான் இருக்கவேண்டும் என்று சொல்லி எழுந்தார்.

மறு நாள் கச்சேரி ஆரம்பிக்கும் வரையில் போலீஸ் ஸ்டேஷனில் பண்டிதரைப் பத்திரப்படுத்த, போ. ஆபீசருக்கு உத்தரவு கொடுத்துவிட்டு, மாஜிஸ்ட்ரேட்டு தம் கச்சேரிக்குப் புறப்பட்டார்.

மாஜிஸ்ட்ரேட்டு பங்களாவினின்று வெளியேறவே, பண்டிதர் தன் மனைவியின் பிரேதத்துக்கு முன் முழந்தாட் படியிட்டு, செபமாலையைக் கையில்பிடித்து, ருக்மணியின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 53-மணி செபம் செய்து ஒப்புக்கொடுத்தார்.

பண்டிதர் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது போலீஸ் ஆபீசர்கள் நாலு ஜவான்களை அங்கே நிறுத்தி, பண்டிதரை யெங்கும் விடாமல் காவல் செய்யும்படி கற்பித்து, பக்கத்திலிருந்த அறைக்குள் சென்று தனித்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

அங்கு கூடியிருந்த ஜனக்கும்பலில் பெரும்பாலோர்பண்டிதரை மாசற்றவரென்றுசொல்லி அவர்மட்டில் அனுதாபம் காட்டுவதைப்பற்றி யின்னேரத்தில் பண்டிதரைப் போலீஸ் டாணுவுக்குக் கொண்டுபோனல் கலகம் நடந்தாலு நடக்குமென்று எண்ணி, இன்று சாயந்திரம் ஜனங்கள் கூட்டம் கலைந்தபின், 7, 7½-மணிக்கு ஒரு ஜட்கா வண்டியில் அவரை ஏற்றிக்கொண்டு வரும்படி போலீஸ் சார்ஜண்டுக்கு உத்தரவு கொடுத்து, போலீஸ் இன்ஸ்பெக்டரும் டெப்டி சூப்பரின்டென்டும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள்.

இவ் விருவரும் ஸ்டேஷ்னுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே, இராத்திரிக்குள் பண்டிதரிடம், தானே தன் மனைவியைக் கொலை செய்ததாக வாக்குமூலம் பெறவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கும்போது, சூப்பரின்டென்டு இன்ஸ்பெக்டரைப் பார்த்து: நீரும் சார்ஜண்டும் கூடிய பிரயாசைப்பட்டு, பண்டிதனே தன் மனைவியைக் கொலை செய்ததாக அவனிடத்தில் வாக்குமூலம் பெறவேண்டியது. அவன் வாயால் சொன்னதை மறு நாள் இல்லையென்று மறுதலிப்பான்: அல்லது தன்னை பயமுறுத்தி அவ்வாறு சொல்லச்சொன்னர்கள் என்று சொல்லிப்போடுவான். ஆகையால், தானே தன் மனைவியைக் கொலை செய்ததாக அவன் கைப்பட ஒரு காகிதத்தில் எழுதிப் பெற்றுக்கொள்வது புத்தி, என்ருர்.

இன்ஸ்.—இந்தக் கைதி மட்டில் பல சமுசயங்கள் இருப்பதைப்பற்றி சுலபமாய் இக் காரியத்தை செய்து முடிக்கலாம்.

எவ்வளவு பெரியதும்சிக்கானதுமான கேசுகளை யெல்லாம் சரிப்படுத்தி யிருக்க, இது ஒரு லக்ஷியமில்லை சார்!

சூப்.—இருந்தாலும் இவன் படித்தவன்; பெரியவர்களிடம் செல்வாக்கு பெற்றவன்.

ஆகையால் காரியத்தை விமரிசையுடன் முடிவு செய்துகொள்ளவேண்டியது.

இன்.—நான் இங்கு வந்து இரண்டுமாத மாகையால் இந்தக் கைதியை நான் அறியேன் சார்.

சூப்.—இவன் இன்னானென்று தெரியுமா?

இன்.—தெரியாது சார்.

சூப்.—இவன் என் ஜென்ம சத்துராதி.

இன்.—இவன் தங்களுக்கு எப்போதாகிலும் துரோகம் புரிந்திருக்கிறானோ சார்?

சூப்.—அது நாலைந்து வருஷங்களுக்கு முன் நடந்த விசேஷம். மணவாளனுக்குப் பெண் பேசும்படி இவனிருந்த ஊருக்கு நான் போயிருந்தபோது, இவன் எவ்வளவு கேவலமாய் நடந்துகொண்டான் என் மட்டில்! அது மாத்திரமல்ல, மணவாளனுக்கு நான் பேசி முடிவு கட்டின பெண்ணை மாற்றிக்கொண்டான் தனக்கு: இந்தப் படுக்காளிப் பயல் மட்டில் இந்த ஜில்லாவிலுள்ளவர்கள் மாத்திரமல்ல, நாலைந்து ஜில்லாவிலுள்ள ஜனங்களும் மேலான அபிமானம் கொண்டிருக்கிறார்கள்.

இன்.—ஆமா, இவனுடைய விநோதமான பாடலையும் வாத்தியத்தையும் பற்றி.

சூப்.—இவன் கெட்டான் கூத்தாடி! நமது சாமர்த்தியத்தால் ஜனத்தின் அபிப்பிராயத்தை மாற்றிவிடவேண்டும்.

இன்.—அப்படியே ஆகட்டும் சார்.

சூப்.—சென்ட்ரல் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டானே, போன மாசத்தில், அவனுடைய பெயரென்ன?

இன்.—சக்கரபாணி.

சூப்.—ஆமாம், சக்கரபாணிதான்.

இந்த சக்கரபாணிக்கு பண்டிதர் என்பவன் கும்மக்கு கொடுத்து, ஜெயிலிலிருந்து தப்பித்துவிட்டானென்று எண்ணுகிறேன்.

இன்.—என்ன சார்? மதராஸ் சென்ட்ரல் ஜெயிலிலிருந்து ஒரு கைதியைத் தப்பித்து விடுதல் செய்வது சாமானியமா?

சூப்.—ஆமா, அது லேசான காரியமல்ல. ஆனால் இந்த பண்டிதனுக்கு பணம் ஏதேஷ்டம். சோற்றை இறைத்தால் காக்கை யெல்லாம் வந்து பொறுக்கி தின்னும் என்பதுபோல; இவன் பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்தால் எப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தன்களும் பணத்துக்கு ஆசித்து இரண்டு கையையும் நீட்டுவான்கள் கெட்டுப்போன படவாக்கள்.

இன்.—நல்லது, அதற்கென்ன?

சூப்.—இவனைப் பிடித்து கிட்டிபோட்டு, படபடவென்று இரண்டு கும்மா கொடுத்தால், சொல்லிப்போடுவான் சக்கரபாணியின் கதையை. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல, சுடச்சுட ரெண்டு போடுபோட்டால் தானாக சொல்லிவிடுவான் சவிசாரத்தை யெல்லாம். மயிலே மயிலே இறகுபோடு என்று கெஞ்சினால் போடுமோ இறகை மயில்?

இன்.—அது என் போடும்? இறகைப பலவந்தமாய்ப் பிடித்துப் பிடுங்கவேண்டும்.

சூப்.—அவ்வாறே செய்யவேண்டும் இந்த பண்டிதனையும்.

இன்.—சென்ட்ரல் ஜெயிலிலிருந்து தப்பி ஓடினவன் எப்பேர்ப்பட்ட ஆசாமி சார்?

சூப்.—சாதாரணமான குடியானவன் அவன்.

இன்.—இந்தக் கைதி அவ்வளவு திரவியத்தை இலயஞ் செய்து அப்பேர்ப்பட்ட சாதாரணமான மனிதனை ஜெயிலினின்று தப்புவிப்பதற்குக் காரணம்?

சூப்.—ஓ! ஹோ! உமக்கு அந்தக் கதை தெரியாதோ? கொலை நடந்த வீட்டில் அகப்பட்ட கடிதத்தைப்பற்றி நீர் கேள்விப்படவில்லையா?

இன்.—ஆமாம், கேள்விப்பட்டேன்; அந்த கடிதத்தையும் பார்த்தேன்.

சூப்.—அந்த சக்ரபாணியின் பெண்சாதி எழுதின காகிதந்தான் அது. இது நிற்க பண்டிதனாகிய இந்தக் கைதிக்கும் மீனாட்சி யென்னும் அந்தப் பெண்ணுக்கும் ஸ்நேகம்.

இன்.—(சிரித்துக்கொண்டு) கண்டுபிடித்தேன் சார். இப்போது இந்தக் கேசின் ஸ்வரூபம் விளங்குகிறது எனக்கு! கொலைக்கேசுக்குச் சாதாரணமாக பெண்டுகள்தான் முக்கிய காரணம்.

சூப்.—மேலும் நாமிந்தக் கொலைக்கேசில் அனுகூலப்படாதபோதிலும் தப்பித்துக்கொண்ட சக்ரபாணியைப் பிடிப்பதில் அனுகூலம் அடைந்தால் போதும்.

இன்.—என் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

சூப்.—பண்டிதனுடைய கத்தியால் கொலை நடத்தப்பட்டிருப்பதால், அந்த கொலையினின்று அவன் தப்பித்துக்கொள்வது அசாத்தியமே. மேலும் இந்தக் கேசில் நாம் ஜெயம் கொள்வதிலும் சக்ரபாணி கேசில் ஜெயம் கொள்வோமாகில் நமக்கு அதிக பெருமையும் பேருமுண்டாவதுடன், நமக்கு ப்ரமோஷன் தவறாமல் கிடைக்கும்.

இன்.—அதெப்படி சார்.

சூப்.—பாரும், மதராஸ் ஜெயிலில் எத்தனை உத்தியோகஸ்தர்? ஜெயிலர், அசிஸ்டாண்டு ஜெயிலர், சூப்பரின்டென்டு, அசிஸ்டாண்டு சூப்பரின்டென்டு. இவர்கள் எல்லோரும் யூரோப்பியன்கள். இவர்களுக்குப் பின் இன்ஸ்பெக்டர், அசிஸ்டாண்டு இன்ஸ்பெக்டர், வார்டன்ஸ், கியார்ட்ஸ், கணக்கற்ற ஜவான்கள் இத்தனை பேராலும், பத்துஅடி சுற்று மதில் சுவற்றாலும் கட்டுக் காபந்து செய்யப்பட்டவன் தப்பித்துக் கொள்வதற்கு எவ்வளவு சாமர்த்தியம் வேண்டியது! இத்தனை உத்தியோகஸ்தரை ஏமாற்றிக் கொண்டு தப்பித்தவனை பிடிப்பது சாமான்யமா?

மேலும் ஜெயிலினின்று தப்பித்துக்கொண்டவனைப்பற்றி பேப்பர்களில் பிரசுரிக்கப்பட்டு, அவனைப் பிடிக்க அநேக டிடெக்டிவ்ஸ் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிந்திருக்கிறது. நாம் நமது சாமர்த்தியத்தைப் பிரயோகித்து அந்த சக்ரபாணியைப் பிடிப்போமாகில் நமக்கு எவ்வளவு கீர்த்தி! இதைப்பற்றி நாம் நம்மை மெய்ப்பியா விட்டாலும் பேப்பர்களே உலகத்துக்குத் தெரியப்படுத்தும் நமது சாமர்த்தியத் திறமையை. மேலும் உலகம் பேசும் நமக்கு கிடைக்கவேண்டிய ரிவார்டையும் ப்ரமோஷனையும்பற்றி.

இன்.—ஆ! ஆ! நான் எத்தனையோ சுப்பீரியர் ஆபீசர்கள் இடம் வேலை செய்திருக்கிறேன்! ஆனால் தங்களைப்போல புத்தி சூக்ஷ்மும் சாமர்த்திய திறமையும் தூரதிருஷ்டியுமுள்ள ஆபீசரை நான் பார்த்ததே இல்லை. தங்களைப்போலொத்த ஆபீசர்கீழ் வேலை செய்வது எனக்கு எவ்வளவு பாக்கியம்! எவ்வளவு பெருமை சலாக்கியம்!

சூப்.—தாங்க்ஸ்! தாங்க்ஸ்! நமது இந்தக் கருத்தில் அனுகூலப்படவேண்டும், அனுகூலப்பட்டோமோ, அதனால் உண்டாகும் கீர்த்தியும் மகிமையும் நாம் சாகுமட்டு மாத்திரமல்ல, நமது மரணத்துக்குப் பின்னும் நிலை நிற்கும்.

இன்.—அதற்குக்கூட சந்தேகமா சார்?

சூப்.—கைதிகளிடத்திலிருந்து நாம் வாங்க விரும்பும் வாக்குமூலத்தை எப்படி உபாயமாய் வாங்கவேண்டுமென்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அதை யிதுவரையில் பரிக்ஷித்தேன் இல்லை. இந்தக் கைதியினிடம் பரிக்ஷை பார்ப்பது நலமாகும்.

இன்.—அது என்ன உபாயம் சார்? வெறியெடுக்க சாராயம் குடிக்கக்கொடுத்து அவர்கள் மனதிலுள்ளதைப் பிடுங்குவதா?

சூப்.—இல்லை இல்லை. அந்தத் தண்ணிக்கெல்லாம் வேகாது இப்பேர்ப்பட்ட பருப்பு.

நான் கேள்விப்பட்டதென்னவெனில், யாதாமொருத்தனுடைய மனதிலுள்ளதை அவன் வாயாலேயே பெற்றுக்கொள்ள மனமிருந்தால், அப்பேர்ப்பட்டவன் இரவில் நித்திரிக்கும் பொழுது, நடுச்சாம வேளையில் அவனைச் சடுதியில் எழுப்பி, சற்று காபராப்படுத்தி, தாங்கள் அறிந்துகொள்ள வேண்டிய சங்கதியைப்பற்றி விசாரிக்குங்கால், அவன் ஒன்றும் மறைக்காமல் நடந்தது நடந்த பிரகாரம் சொல்லிவிடுவானாம்.

இன்.—இது வெகு சுலபமான பரிக்ஷையே! என், இந்தக் கைதியை இவ்வாறு பரிக்ஷிப்பதால் குற்றமென்ன சார்?

சூப்.—இதைப் பிரயோகிக்கும் பட்சத்தில் அதில் நாம் தவறாமல் அனுகூலப்படுவோம் என்பது என் பூரண அபிப்பிராயம்.

இன்.—அவ்வாறே செய்யலாம் சார்.

சூப்.—இன்னொரு விஷயம் நீங்கள் கவனிக்கவேண்டியது. நான் அவனோடு அதிகமாய்ப் பேசுவதால் என் மட்டில் சமுசயம் கொள்வான். நீரே அவனைத் தந்திரமாய் அணுகி, உபாயமாய்ப் பேசவேண்டும். மேலும் சக்ரபாணி ஒளிந்து இருக்கும் இடத்தை அவன் தெரியப்படுத்துவானேயாகில், அவன் நடத்தின கொலையை அவன் மேல் போடாமல் அவனுடைய பெண்சாதியே தன்னைத் தற்கொலை செய்துகொண்டாளென்று சொல்லிவிடுவோமென்று சொன்னால், சில வினை அவன் சக்ரபாணியைப்பற்றிய சங்கதி யெல்லாம் வெளிவிடுவான்.

இன்.—ஆ! ஆ! சந்தேகமின்றி அவன் சொல்லிவிடுவான். இது நல்ல உபாயம் சார்! நீர் சொன்னபடி சகலத்தையும் பக்குவமாய்ச் செய்து முடிப்பேன்.

சுப்.—அப்படி அவன் நமது கருத்துக்கு இணங்காத பட்சத்தில், சடசட ரெண்டு அடி கொடுத்தால் வழிக்கு வருவான்.

இன்.—நயத்துக்கு இணங்காவிட்டால் பயத்துக்கு இணங்காமல் போவானா?

சுப்.—ஒரு விஷயத்தைக் கவனித்து ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அதென்னவெனில் அவனை வாதிக்கும்போது ஒரு பொட்டு இரத்தமாகிலும் வெளிப்படக்கூடாது. மூட்டு பிசகவும் எலும்பு முறியவும் கூடாது. ஏனெனில் இவனுக்கு வாரிஸ்தார் அநேகருண்டு. கனவான்களும் தனவான்களுமான பெரியோர் இவனுக்கு ஸ்நேகிதராயிருக்கிறார்கள். ஆகையால் அவனைப்படுத்திய சித்திரவதையின் அடையாளம் முதலாய் அவன் சிரேகத்தின் வெளிப்புறத்தில் காணப்படத் தகாது.

இன்.—அதெல்லாம் எனக்குத் தெரியும் சார். அதைப்பற்றி யெனக்குச் சொல்லத் தேவையில்லை.

சுப்.—அன்னேரத்தில் நான் அவனோடு அதிகமாய்ப் பேசமாட்டேன்.

இன்.—நீங்கள் பேசவேண்டியதில்லை; நானே சகலத்தையும் பார்த்துக்கொள்ளுகிறேன் சார்.

சுப்.—என்ன? மணி யெட்டாகிறது; இன்னம் வண்டி வரவில்லையே!

இன்.—வழி சற்று கரடு முரடானது. சில இடங்களில் சேறும் தண்ணீருமுண்டு. சில விசை சந்தடி கலையுமட்டும் காத்திருக்கிறார்கள் போலும், என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

HOW TO RAISE OUR STATUS?

நாம் முன்னேறுவ தெப்படி?

பத்தாம் வியாசம்.

Co-operative Credit Societies.

கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி யென்னும் ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

கடந்த மே மாசத்துச் சஞ்சிகையில், நம்முள் வழங்கும் சீட்டு ஏற்பாட்டிற்கும், கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி ஏற்பாட்டிற்கும் மூலாதாரத்தில் எப்படிப்பட்ட பொருத்த முண்டென்று காட்ட முயன்றேன். கடந்த ஜூன் சஞ்சிகையிலோவெனில் கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியின் ஆதி உற்பத்தி, வளர்ச்சி, தற்கால ஸ்திதி முதலியவைகளைக் காட்ட முயன்றதுடன், நமது ஜன சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதற்கும், அதனைச் செட்டுத்தனத்தின்படி பக்குவப்படுத்தி, ஒழுங்கு திட்டம் கிரமமுள்ளதாக்கி, இதர ஜன சமூகத்தாருடைய மதிப்புக்கு அருகராக்க வேண்டியதற்கும் கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி சிறந்த எத்தனமெனக் காட்ட முயன்றேன். ஆகவே நமக்குள் கொவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் மிருதியாய் ஸ்தாபிக்கப்பட்டுவந்தால், நம் அநியாய வட்டி வாங்கும் மார்வாடிகளிடம் லேவாதேவி செய்து உள்ளதையும் கொள்ளைகொடுத்து ஓட்டாண்டிகளாக வேண்டியதில்லை. அவசரத்திற்கேற்றபடி குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கி அநுகூலமான கிஸ்தியின்படி கடனைத் தீர்த்து மீளக்கூடும். நம்முள் பிரதி தினமு அல்லது பிரதி மாதமும் மீந்து போன தொகையை அது எவ்வளவு அற்பமானதாயினும், மேற்படி சொஸைட்டிகளிலிருக்கும் பலவிதமான டிபாசிட்டுகளொன்றில் சேர்ந்து ஆபத்துக்கென்று சேர்த்துவைக்கக்கூடும். இதனால் நம்முள் நாணயம், செட்டுத்தனம், சுய நம்பிக்கை யென்னும் இலட்சணங்கள் பிறக்கும் காசு சேரச்சேர, வீண் செலவு குறையக் குறைய, வீட்டுக் குடித்தனம் ஒழுங்குள்ளதாகும். பெண்டு பிள்ளைகள் வயிறுறச் சாப்பிடுவார்கள். உடம்பார உடுத்துவார்கள். பெற்றோருக்குப் பணிந்து, கட்டுதிட்டத்திற்கு அடங்கி நடப்பார்கள். நல்லவர்களுடைய சகவாசம் கிடைக்கும். அவர்களைப்போல் தாங்களும் ஆகவேண்டுமென ஆவல் பிறக்கும். மொத்தத்தில் ஜன சமூகம் தலையெடுக்கும். மேலும் நமது சொஸைட்டிகளை நாமே நடத்தவேண்டி வருவதால் நம்முள் பரஸ்பர சகாயம் செய்யவேண்டுமென ஆவல் பிறக்கும். திறமை சாமர்த்தியம் உண்டாகும். ஒவ்வொரு சொஸைட்டியிலும் வருஷாந்திரம் வரும் லாபத்தில் ஒரு பகுதி ஒரு தரு

மார்த்தமான காரியத்திற் குபயோகிக்கக்கூடுமென சர்க்கார் உத்தரவு கொடுத்திருக்கிறபடியால், மேற்படி பயனன்றி, இன்னொரு பயன் நமது ஜன சமூகத்திற்குண்டாகும். அதேதெனில் அத் தொகையை, நமது எளிய புத்திசாலிகளான பிள்ளைகள் கல்வியில் அபிவிருத்தி யடைய உதவக்கூடும். இதைப்போலொத்த அநந்த பிரயோசனங்கள் இப்படிப்பட்ட சொஸைட்டிகளினால் உண்டாகிறபடியால், ஒரு ஜன சமூகத்தை ஈடேற்றவேண்டில், கொவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் ஸ்தாபிப்பதே சிறந்த எத்தனமென கவர்ன்மெண்டாரும் முன்மாதிரிகை காட்டி வருகிறார்கள்.

சரி, அப்படியானால் கொவாப்பரேட்டிவ் சொஸைட்டி ஸ்தாபிப்பதெங்ஙனம்? ஒரு விசாரணை அல்லது ஒரு ஊருக்குச் சொந்த கிறீஸ்துவர்களுள் முக்கியமானவர்கள் இருவர் அல்லது மூவர் கூடி, சொஸைட்டி விஷயமாய்த் தங்களுக்குள் கலந்து பேசுவது; கடந்த சஞ்சிகையில் இவ்விஷயமாய் வெளிவந்த வியாசங்களை வாசிப்பது; பிறகு தங்களுக்குள் இன்னம் 4, 5 பேர்வழிகளைச் சேர்த்துக்கொண்டு, சொஸைட்டி ஸ்தாபிப்பதென தீர்மானிப்பது. இப்படிப்பட்ட பேர்வழிகளெல்லாம் நல்லவர்களாயும், நமபிக்கையுள்ளவர்களாயும், பொது நன்மைக்கு உழைக்கவேண்டுமென்னும் சுத்த கருத்துள்ளவர்களாயும், இருத்தல் அவசியம். சொஸைட்டி நடக்காமதென்றும், அதிக கஷ்டமென்றும் சொல்பவர்கள் பேச்சைக் கேட்கலாகாது. கஷ்டமின்றிக் காரியமில்லை. தங்களைச் சேர்ந்த பட்டணத்தின் ரிஜிஸ்தராருக்குக் கடிதம் எழுதி தங்கள் கருத்தைத் தெரிவித்து, (Model bye-laws) மாதிரி ஒழுங்குகளைத் தருவிப்பது. இதுமாத்திரமல்ல, வேறு இடங்களில் முக்கியமாய் கிறீஸ்துவர்களுள் நடைபெற்றுவரும் சொஸைட்டிகளுக்குஎழுதி அவ்விடத்து சட்டங்களையும் தருவித்து, இவைகளையும அவைகளையும் வைத்துக்கொண்டு கலந்து பேசி, தங்களுக்கேற்றபடி, சட்டங்களை ஏற்படுத்துவது. அப்படி ஏற்படுத்திய சட்டங்களை இரண்டு பிரதிசெய்து, இரண்டையும், விண்ணப்பத்தோடு சேர்த்து, 10 பேருடைய கையெழுத்துடன் ரிஜிஸ்தராருக்கு அனுப்புவது. ரிஜிஸ்தரார் அதைப் பார்வையிட்டு, ரிஜிஸ்திரேஷன் செர்டிபிகேட் அனுப்புவார். அப்போது கொவாப்பரேட்டிவ் சொஸைட்டியின் கருத்து, முக்கிய நிபந்தனைகள் ஆகிய இவைகளை அச்சிட்டு, ஜனங்களுள் பரவச்செய்வது. ஆங்காங்கு, கூட்டங்களை நடத்தி, சொஸைட்டியின் சட்டங்களை விஸ்தரித்துக் காட்டுவது. கொஞ்சங் கொஞ்சமாய் ஜனங்கள் வந்து ஷேர் எடுப்பார்கள். ஐவேசுள்ளவர்கள் வரமாட்டார்கள். இதைப்பற்றி மனங்கலங்கலாகாது. மத்திய அந்தஸ்தில் கொஞ்சம் ஏழைகளா யிருப்பவர்களே வருவார்கள். 10 பேருக்குள் ஒருவரைக் காரியதரிசியாய் நியமித்துக்கொள்ளக்கூடும். அவர் வரும் தருமார்த்தமாகவே ஊழியம் செய்யவேண்டும். அதுதான் சரியான கொவாப்பரேஷன். அலுவல் மிஞ்ச மிஞ்ச சம்பளத்திற்கு, கணக்கர்களை வைக்கக்கூடும். கடன் கொடுக்கும்போது, சகலத்தையும் கமிட்டி கூட்டத்தில் பேசித் தீர்மானித்து, அசலுக்கு மோசம்வராதபடி, தக்க ஜாமீன்களை ஏற்படுத்திக்கொண்டு, கடன் கொடுத்து, குறித்த தேதியில் கிஸ்தி வரும்படியாக பார்க்கவேண்டியது. கணக்கு புஸ்தகங்களைக் கிரமமாய் வைத்து எதையும் பய பத்திரத்துடன் நடத்தவேண்டியது. இப்படிச் செய்துவந்தால் மெத்தப் பயன். கொவாப்பரேட்டிவ் ஏற்பாட்டின்படி, ஸ்டோர்கள், அச்சியந்திரச்சாலைகள், பயிர்த்தொழில் முதலிய பலவிதமான கைத்தொழில் நடத்தக்கூடும்.

ஆனதால், புதுவை, கோயம்பத்தூர், திருச்சினப்பள்ளி, தஞ்சாவூர், சென்னை, மைசூர், ஐதராபாத், ரங்கூன், சக்கந்திராபாத இன்னுமபல ஊர்களிலிருக்கும், நமது குலத்தைச் சேர்ந்த தலைவர்களே, உறக்கம விட்டு எழுந்திருங்கள். ஐயோ, நாங்கள் தலைவர்களல்ல, எங்களுக்கும் பெரியவர்கள் அவர்களுண்டு இவர்களுண்டு. நாங்கள் எதில கூட்டு, எங்களால் என்ன முடியுமெனச் சாக்குபோக்குச் சொல்லாதேயுங்கள். எதிலும் சுத்த கருத்தும், முயற்சியு மிருந்தால் போதும். நீங்களே தலைவர்களாயிருங்கள். அவர்களென்ன சொல்வார்களோ, இவர்களென்ன நினைப்பார்களோ வென்று தத்தளியாதேயுங்கள். அப்படி

யெல்லாம் சிந்தித்தால், கிழவனும் மகனும்
கூடி கழுதை விற்க சந்தைக்கடைக்குப்
போன கதையாய் முடியும். முயற்சி இகழ்
ச்சி யடையாது. இந்துக்களுள் சாதாரண
அந்தஸ்தி லிருப்பவர்களெல்லாம் சொ
சைட்டிகள் ஸ்தாபித்து நடத்தி வருகி
ருர்கள். நாம் அவர்களிலும் தாழ்ந்தவர்க
ளோ வென்ன? சமீபத்தில் பெங்களூரி
லும்,சால்சட்டிலும் கிறீஸ்துவ சொசைட்
டிகள் ஸ்தாபிக்கப்பட்டதாகப் பத்திரிகை
வாயிலாய் அறிந்தோம். அவர்கள் நம்மை
விட மிஞ்சினவர்களோ வென்ன? அது
ஒன்றுமில்லை. முயற்சியுடன் ஒருவர் புறப்
படவேண்டும். அனைவரும் அவரைத் தலை
வராக ஏற்றுக்கொண்டு காரியம் நடக்கப்
பார்க்கவேண்டும். காரியமே பெரிது. ஒற்
றுமை வலிமை தரும். 10-ரூபாய் சம்பள
முள்ள ஒரு ஏழை செய்யக்கூடாத ஒரு
அருமையான காரியத்தை அவனைப்போல்
20 ஏழைகள் ஒன்று கூடினால், 1,000
ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு கனவான்
பிரமிப்படையத்தகும் காரியத்தைச் செய்
வார்கள். நாம் அனைவரும் ஏழைகள்.
நமக்கு அலுப்பைத் தரும் பேச்சு வேண்
டாம். நமது குலத்திற்கு அவர்களென்ன
செய்வார்களோ, இவர்களென்ன செய்
வார்களோ வென கொட்டாவி விட்டு
வாயைத் திறந்துகொண்டிருக்கவேண்டிய
தில்லை. அல்லது நமக்கு இவ்வளவாவது
செய்திருக்கும் நமது உபகாரிகள் இதை
ஏன் செய்யக்கூடாது, அதை ஏன் செய்
யக்கூடாது என்று குற்றம் பிடித்தலும்
வேண்டாம். எத்தனை நாளைக்குத்தான்
நாம் அவர்கள் பிச்சைக்கும் இவர்கள் பிச்
சைக்கும் எதிர்பார்க்கும் யாசகர்களா
யிருக்கவேண்டும். ஏன், நமது படிப்பு
எங்கே, நமது அநுபவம் எங்கே, நமது
முயற்சி எங்கே, நமது பிரசிநேகம் எங்கே,
நமது நேர்மைத்தனம் எங்கே? ஏன் அவை
களை யெல்லாம் ஒன்று திரட்டிக்கூட்டி
நமது குலாபி விருத்திக்காக உபயோகிக்
கக்கூடாது? நமது முயற்சியைக் கடவுள்
ஆசீர்வதிப்பார். விதை போடுவது நமது
அலுவல். முளைய வைப்பது கடவுள் காரி
யம். ஜாதி வேஷம் போட்டுக்கொண்டு
ஒளிந்திருக்கவேண்டாம். தானும் தன்
பெண்டு பிள்ளைகளும் சுகமே வாழ்ந்தால்
போதும். அவனைப்பற்றி இவனைப்பற்றி
எனக்கென்னவென சொல்லவேண்டாம்.
காயினும் அப்படித்தான் சொல்லி மாண்
டான்.

நமது குலத்தாருள், கொஞ்சம்
படித்து முன்னுக்கு வந்தவர்கள், குலத்
தின் ஸ்திதியைப்பற்றியும் பிறரால் அதற்
குண்டாகும் இடைஞ்சல் இக்கட்டுகளைப்
பற்றியும், விசனத்துடன் பேசுவார்கள்.
அவர்கள் பேசும் பேச்சு கள்ளப்பேச்சா
யிராமல் யதார்த்தமுள்ளதா யிருந்தால்,
இதோ சமயம்! இதைக் கைசோரவிடா
மல் ஒவ்வொரு நகரிலும், பட்டணத்தி
லும், கிராமத்திலும் இப்படிப்பட்ட சொ
சைட்டிகள் ஸ்தாபிக்கட்டும். நாளா வட்
டத்தில் நமது குலத்திற்கே ஒரு பொது
பந்தனம் உண்டாகும். இன்னம் மேலான
காரியத்திற்குப் பாடுபட முயற்சி யுண்டா
கும்.

குலம் மேன்மையான ஸ்திதிக்கு வரு
வது எனக்குச் சந்தோஷம்தான் அவ்
விஷயத்தில் அற்ப பிரயாசைப்பட என்
னால் முடியாது என்பாயோ? தம்பி உனக்
கில்லாத அக்கரை புறத்தியானுக்கென்ன
வந்தது?

இந்திய கிறீஸ்துவன்.

(தொடரும்)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்
திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

குருப் பட்டாபிஷேகம்.

கனம். சங். பத்திராதிபர் அவர்கட்கு,

இதின்கீழ் வரைந்துள்ள இவ்வூரின்கண்
நிகழ்ந்தேறிய குருப் பட்டாபிஷேக வரலாற்
றைப் பெரும்பானமை கிறீஸ்துவ வாலிபர்களும்
அவர்கள் பெற்றோரும் வாசித்தறிந்து பயனுறு
மாறு நல்லாயன் கிருபை புரிய, "நல்லாயன்"
எனுந் திருநாமம் பூண்டு, பன்னுசென்று, மின்
னித் துலங்கிடும் தங்களின் அரிய பிரபந்தத்தின்
வாயலாய்ப் பிரசுரிக்க வேண்டுமெனத் தங்க

ளின் மேலான கனத்தைத் தாழ்மையாய்ப்
பிரார்த்தியா நிற்கின்றேன்.

கடந்த ஜுன்மீ 24-ம் தேதியாகிய ஆதிவா
ரம் இவ்வூர்க் கிறீஸ்துவ சகோதரர்கட்கு மிக்க
வோர் பெருநாள் என்பதற்குச் சிறிதும் ஐய
மில்லை. எவ்வாறெனின், இவ்வூர்க் குரு மடத்
தைச் சேர்ந்தவரும் இவ்வூரின்கண் நெடுங்கால
நிவாச வேளாள குடும்பத்தினரில் ஒருவருமா
கிய சங். மார்ஷல் என்னும் குருசுவாமிநாதர் இவ்
வூர் மேற்றிராணியாராகிய மகா கனம்பொருந்
திய அகுஸ்தின் ருஹா ஆண்டவர் அவர்களால்
குருப்பட்டம் எனும் திருப்பட்ட மடைந்தனர்.

இவ் வுன்னத வந்தஸ்துக்கு இவர் தெரிந்து
கொள்ளப்படக் காரணப் பொருளாயிருந்தவர்
இவரது பெரிய தந்தையரின் கனிஷ்ட புதல்வ
ராகிய சங். மிக்கேல்நாத சுவாமிகள். இவ் வுத்
தம குரு தனக்கு வாய்த்த தருணத்தின் போதெ
லாம் இவர்க்கு நுகர்த்திவந்த ஞான வமுதத்தை
இவர் தேக்கிட்டுண்டு வந்தமைபற்றி, அவ் வுந்நத
பதவி தனக்கு வாய்க்க இவர் பாக்கியம் பெற்ற
னர். இவ்வித தேவ தொழிலுக்கு இவரது குடும்
பத்து ஆண்பாலாரில் இவ் விருவருமன்றிப்
பெண்பாலாரில் நால்வர் அருகராகி யிருக்கின்ற
னர்.

சங். குருசுவாமிநாதரின் குருப் பட்டாபி
ஷேகத்தைப்பற்றி யேற்கெனவே கேள்வியுற்றி
ருந்த அவரது பந்து மித்திரர் பட்டத்தின் முன்
னுளே திரளாய் வந்து கூடியிருந்தனர். ஆல
யத்தி னுட்புறமும், திருச்சடங்கு நடக்கவிருந்த
பீடமும், நானுவித துவஜ தோரணங்களாலும்,
மலர்க் கொடிகளாலும், பசுந் தளிர்களாலும்
வெகு சிறப்பாய் அலங்கிருதஞ் செய்யப்பட்டி
ருந்தன.

பட்டத் தன்று காலை 7-மணிக்கு ஆலயத்
தின் சிறந்த மும்மணிகளும் தங்களினிய கீத
நாதத் தொனியை மீட்ட, அதினூடே ஆலயத்
துப் பாண்டு வாத்தியங் கோஷிக்க, இதனைக்
கேள்வியுற்ற கிறீஸ்துவ சகோதரரும் ஏனைய
ரும் ஆலயத்துக்கு விரைந்து சென்று ஆவலு
டன் காத்திருந்தனர். 8-மணிக்கு ம. க. ஆண்ட
வர் அவர்கள் தருணத்துக்கேற்ற வுத்தியோகப்
பட்டாடை யணிந்தவராய்ச் சிரமீது மகுடம்
புனைந்து, கரத்திற் செங்கோலேந்தி, சீஷப்
பிள்ளைகள்—குருமடத்து மாணவர்—பட்டம்பெ
றுபவர்—குருமார், ஆகிய இவர்கள் முறையே
யணிவகுத்து நிற்க, ஆலயத்து மணிகளும்
பாண்டுவாத்தியமுங் கலந்தொலிக்கத் தமது மா
ளிகையினின்று பவனி சென்று, ஆலயத்தின்
பிரதம வாயினிற் கிட்டினதும், வைக்கர் ஜென
ரலும் பங்கு சுமாமிகளுமாகிய மிக. சங். ரூண்டி
சுவாமி அவர்கள் ம. க. ஆண்டவரவர்களை ஆசார
முறையுடன் அழைத்துச்செல்ல ஆண்டவரவர்
கள் தமதாசனஞ் சென்று வீற்றிருக்குங்கால்,
சங். பெரியர் சுவாமிகள் டீக்கனுகவும், சங். மிக்
கேல்நாத சுவாமிகள் சப் டீக்கனுகவுந் தோன்றி
ம. க. ஆண்டவரவர்களை வணங்கி நின்றதும்,
ஆண்டவரவர்கள் திவ்விய பலிபூசைக் கான
சொர்ணமய வஸ்திராபரணங்கள் தரிக்க, சங்கீத
சுர வாத்தியங்களில் மிக்கத் திறமைபூண்டு, பாட
கர் கூட்டத்துக்கொரு திலகம்போல் விளங்கா
நிற்கும் சங். மரிய ஜோசெப் சுவாமிகள், யாவர்
மனதையுங் கவரத்தக்க மேரையாய்க் கின்னர
மீட்ட, இனிய தொனியுடைய சங். தோமினிக்
சுவாமிகளுடன் பாடகர் குழாம் தங்க ளின்னி
சைக்குரலை நீட்ட, பெரிய பாடற் பூசை யாரம்
பித்தது.

திருப்பலியின்போது திருச்சபை சட்ட
முறைப்படி புதுக்குருவின் அபிஷேகம் நடந்தே
றியது. அத்தருணம் இடையிடையே நடந்தேறிய
திருச் சடங்குகளை உற்று நோக்கி யவற்றை
ஆழ்ந்து யோசித்துப்பார்க்கின், குருத்துவத்தின்
மகிமை யின்னதெனத் தெளிவாய்ப் புலப்படும்.
இதனைச் சீர் தூக்கிப் பாராத நிமித்தமன்றோ, அந்
தோ! நம்மில் அனேகர் கர்வமெனும் பைசாசங்
கொண்ட மௌடிக உன்மத்தராய்க் குருக்களை
நிந்தித்து அவமானிக்கத் துணிவுகொள்வது
மன்றி, அதனை அஞ்ஞானப் பத்திரிகையின
வாயலாய்த் தங்களுற்றை வாயாற் ககக்வுந்
துணிந்து, அவற்றால் தேவ முனிவுக்குஞ் சாபத்
திற்கும் உரித்தாளிகளாகின்றனர். இத்தன்மை
யுடையோர் நல்வழிப்பட அவர்களுக்கு ஆண்ட
வர் அருள்புரிவாராக!

இத்திருச் சடங்கின்போது கண்காணிப்ப
வரா யிருந்தவர் கும்பகோணத்து மேற்றிராசனத்
தைச் சேர்ந்த சங். Dipgny குரு சுவாமிகள்.
இம் மகத்தான வைபவக் காட்சியைத் தரிசித்த
தனைச் சிறப்பித்தானந்திக்குமாறு, இம் மேற்றி
ராசனத்து இந்திய குருக்களில் ஐவர் தவிர ஏனை
யர் யாவரும் விஜயஞ் செய்திருந்தனர்.

இம் மகோற்சவ நாளின் அறிகுறியாக
அன்று இம் மேற்றிராசனப் பங்குத் தேசிகர்கட்

கும், குருமடத்து மாணவர்கட்கும், கன்னிகா மடத்து அம்மைமார்க்கும், அனாத மடத்து ஆண் பெண் பாலார்க்கும், போர்டிங் மடத்துப் பிள்ளைகட்கும், நடந்த விருந்து போஜனத்தின் செலவில் ஓர் பாகம் புதுக் குருவானவரது பந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அன்று சாயரட்சை சுமார் 4-மணிக்குப் புதுக் குருவானவரைத் தரிசிக்கும்பொருட்டு, அதற்கெனச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த பூசைப் பாத்திரம், பூசை ஆயத்தம், மற்றுமுண்டான வேறு பல காணிக்கைகளைத் தங்கள் கரங்களில் ஏந்தின மேரையாய், வாத்திய கின்னரக் கோஷ்டத்துடன் அவரது உற்றாரும் ஊர்ப் பங்கினரும் ஒருங்கு திரண்டு, பவனிசென்று, குருமாரது சல்லாபச் சாலையை நாடிச்சென்று, ஏற்கெனவே ஆங்கு வீற்றிருந்த ம. க. ஆண்டவ ரவர்களையும், அவரது வலது புறத்து அமர்ந்திருந்த புதுக் குருவையும், இரு மருங்கிலும் ஆசனங் கொண்டிருந்த மிக. சங். வைக்கர் ஜெனரல் முதலிய ஏனையத் தேசிகர்களையும் வணங்கி நின்று, கொணர்ந்து வந்த காணிக்கைகளை அவர்கள்முன் சமர்ப்பித்து, மங்களக் கவிபாடி, ம. க. ஆண்டவரவர்கட்கும், புதுக் குருவானவர்க்கும், மிக. சங். வைக்கர் ஜெனரல் அவர்கட்கும் முறையே இருவகையர் பேரால் இவ்விரு மாலைகள் சூட்டக் கரங்களிற் புஷ்பச் செண்டளித்து நின்ற பின்னர், B. A. (Honours) பட்டம் பெற்ற ஒருவரால் ஆங்கிலத்திலும், உபாத்திமைத் தொழிலில் நீடியகால வனுபோக முடையவரான மற்றொருவராற் றிராவிடத்திலும், ஆக இரு வந்தனோபசாரப் பத்திரங்கள் படித்து முடிந்தபின், ம. க. ஆண்டவரவர்கள் குருக்கள்மீது அவர்களது ஞான மைந்தர்களாகிய கிறீஸ்துவ சகோதரர் பாராட்டவேண்டிய இன்றியமையாக் கடமைகளை யொன்றுபடத் திரட்டி சிறந்த வோர் உபன்னியாசஞ் செய்தனர். பின்னர், மீண்டும் ஓர் பாடற்பாடி யமர்ந்ததும், ஆண்டவரவர்களும், புதுக் குருவானவரும் முறையே யளித்த வாசீர் பெற்றுக் குழாங் கலைந்தது.

6-மணிக்குப் புதுக் குருவானவர் டீக்கன் சப்டீக்கனுடன் தேவ நற்கருணையாசீர்வாத மளித்து ஆலயத்தின் புற மேகினதும் அவ்வுடன் ம. க. ஆண்டவரவர்களும் அனேக குருமாரும் ஒன்றுகூடி, ஏற்கெனவே தங்களை வரவழைத்திருந்த போர்டிங் மாணவர்ச் சாலையை நாடிச் சென்று, ஆங்கு அவர்கள் தங்கள் மானேஜராகிய சங். பெரியர் சுவாமிகளினுதவி பெற்றுத் தயாரித்திருந்த மிகச் சிறப்புற்ற மேடையின்மீது ஆண்டவரவர்களும் புதுக் குருவானவரும் வீற்றிருக்க, ஏனையர் தாழவிருந்த தம் தம் ஆசனத்தின் மீதமர, சில பாடக மாணவர் வெகு இனியதான வரவேற்றுப் பதமொன்றைப் பாடி முடித்ததும், இருவருக்கும் ஆரமிட்டு வந்தனோபசாரப் பத்திரம் படித்து, அத்துடன் தம்மாலியன்ற வொரு கொடையையு மளித்தனர். பிறகு ஆண்டவரவர்கள் மாணவர்க்குச் சிறிது உபன்னியாசஞ் செய்ததும், மற்றவர் தமது விசாரணைப் பிள்ளைகளாகிய அம் மாணவர்க்கு அவர்கள்மீது தமக்கிருக்கும் அன்பை விளக்குஞ் சில வினிய மொழிகளையுரைத்த பின்னர், இருபேருந் தங்களன்பார்ந்த ஆசீர்வாத மளித்தனர். இத்துடன் அன்றைய மகோற்சவம் முடிவு பெற்றது.

மறுநாள் காலை 6-மணிக்குச் சங். மிக்கேல்நாத சுவாமிகள் உதவியாயிருக்க, சங். குருசுவாமிநாதர் தம் முதற் பலிபூசையை ஆழ்ந்த பத்தி விநயத்துடன் ஒப்புக்கொடுத்தனர். அத்திருப்பலியில் அவரது அனேக உற்றாரும் மற்றாரும் ஆத்தும போசனமாகிய மோட்சமன்னாவை யருந்தவும் பாக்கியம் பெற்றனர். பூசையின் பின்னர் முதற்றடவையாகத் தேவ பலியிட்ட அவரது கரங்களை அனேகர் வெகு ஆவலுடன் முத்த மிட்டனர்.

இதனை வாசிக்கும் எம தன்பார்ந்த சகோதரரே, இப் புதுக் குருவானவர் தமது வுன்னத வந்தஸ்தின் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டிய வல்லமையாதிகளை, இவ்வுன்னத பதவிக்கு அவரை யேற்றத் திருவுளங்கொண்ட அப் பரம கடவுள்தானே அவருக்குக் கடாட்சித்தருள வேண்டுமோயும், உங்கள் செல்வமக்கள் இத் தன்மையதான தேவ வூழியத்துக் குட்பட விருப்புறுங்கால், அதற்கு யாதொரு தடையுங் கூறாது அவர்கட்கு அதின்மீது உற்சாக மூட்டி உவந்த மனத்துடன் விடையளித்தருள வேண்டுமோயும் தங்களனைவரையும் வெகுவாய்க் கோரி நிற்கும்,

கோயமுத்தூர் }
15—7—17. }

நல்லாயன்
சந்தாதாரரில் ஒருவர்.

[இம்மாதப் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு அனுப்பப்பட்ட செக்கந்தராபாத் கடிதங்கள் இடமில்லாக்குறையால் பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த மாதத்தில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

பெங்களூர் கான்பரேன்ஸ்.—இந்தக் கான்பரென்ஸில் மேற்றிராணிமார்கள் செய்த சில தீர்மானங்களுக்குக் கட்டுப்படாமல் அவைகளைக் குறைகூறி பேசினவர்களிற் சிலர் அவைகளை ஏற்றுக்கொண்டு மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படிந்தார்களென்று கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம்.

கோட்டாவிவிடும் காரணமேன்ன ?—சாதாரணமாய்ச் சுவாசக் குழாயினுள்ள காற்றுக் கொஞ்சங் குறைபடும்பொழுது அக்குறையை நீக்க சரீரத்தினுள் பல அவயவங்களிலு முள்ள வாயு அங்கே வந்து ஒன்று சேர்வதினால் உண்டாகும் மூச்சு முட்டே கொட்டாவிக்கு காரணமெனத் தெரிய வருகிறது.

பிராஞ்சு மேற்றிராணிமார்களின் பொருத்தனை.—யுத்தம் முடிவானபின் பிரான்சு தேசத்து கிறீஸ்துவர்களும் தாங்களுஞ் சேர்ந்து லூர்துமா நகரத்துக்குத் திருயாத்திரையாய்ப் போகவேண்டுமென்று ஓர் பொருத்தனை செய்துகொண்டிருக்கிறார்கள். இப் பொருத்தனையைப்பற்றி இந்த மேற்றிராணிமார்கள் தங்கள் கிறீஸ்துவர்களுக்கு உருக்கம் நிறைந்த நிருபம் ஒன்று எழுதியிருக்கிறார்கள்.

காலஞ்சென்ற ஆஸ்திரிய சக்கரவர்த்தி.—பிரான்சீஸ் ஜோசேப் என்றழைக்கப்பட்ட காலஞ்சென்ற வயோதிப ஆஸ்திரிய சக்கரவர்த்தி தன் திரண்ட ஆஸ்தியாகிய 1,20,00,000 டாலர்களை யுத்தத்தில் தாய் தகப்பன் இழந்த ஆஸ்திரிய பிள்ளைகள், புருஷனை இழந்த விதவைகள், அங்கப்பழுதுபட்ட போர்ச்சேவகர்கள் இவர்களுடைய சம்ரக்ஷணைகளுக்காக செலவழிக்கும்படி தம்முடைய மரண சாசனத்தில் எழுதிவைத்திருக்கிறாராம்.

சீனாவில் திருச்சபையின் அபிவிர்த்தி.—இத்தேசத்தில் சென்ற வருஷம் இலட்சம் பேர் சத்தியவேதத்திற் சேர்ந்தார்கள். இன்னும் அநேகர் சேர்ந்து வருகிறபடியால் அத்தேசத்தில் கத்தோலிக்கருடைய தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்படியே இங்கிலாந்து தேசத்திலும் கத்தோலிக்கருடைய தொகை வருஷா வருஷம் அதிகமாகி வருகிறது. கடந்த வருஷத்தில் மாத்திரம் 10 ஆயிரம்பேர் கத்தோலிக்கரானார்கள். ஸ்காட்டுலாண்டிலும் நம்முடைய சத்தியவேதம் பரவிவருகிறது.

3-வது வருஷாந்தரக் கோண்டாட்டம்.—நிகழும் கொடிய யுத்தந் தொடங்கி நாளது நாலாந்தேதியோடு நான்காவது வருஷம் பிறக்கிறது. ஆகவே, அன்றையத் தினம் யுத்த ஆரம்பத்தின் 3-வது வருஷ கொண்டாட்டம் லண்டன்மா நகரில் கொண்டாடப்படும். நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் அக்கொண்டாட்டத்துக்கு விஜயஞ் செய்வார்களாம்.

யுத்தத்தின் நிமித்தம் அபாரமான கடன்.—நிகழுங் கொடிய யுத்தத்திற் சேர்ந்திருக்கும் அரசாங்காத்தார் பட்டிருக்குங் கடனுக்காக வட்டிப்பண மாத்திரம் ரூ. 120 கோடி ஆகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வட்டிப்பணமே இவ்வளவென்றால் கடன் எவ்வளவோ!! ஐக்கியக் கட்சியாருக்குச் சென்ற மூன்று மாதங்களுக்குள் அமெரிக்காவால் கொடுக்கப்பட்டிருக்கிற கடன் 152 கோடியே 30 லட்சம் டாலராம்.

இத்தாலியரின் யுத்த முனையில் 40 ஆயிரங் குருக்கள்.—இத்தனை ஆயிரங் குருக்களும் சேனைகளின் ஞானக் காரியங்களை விசாரிப்பதில் அலுவலா யிருப்பவர்களே. இவர்களுக்குள் அநேகர் தங்களுடைய ஞான அலுவலை நிறைவேற்றி வருகையிலேயே கொல்லப்படுகிறார்கள். காயப்படுகிற போர்ச்சேவகர்களை இரட்சிப்பதில் இவர்களில் பலர் மரணபத்துக்கு முதலாய்ப் பயப்படாமல் காட்டும் தைரியசௌரியத்துக்காக இராஜாங்கத்தாரால் மேலான கித்தாப்பு சின்னங்களு மளிக்கப் பெற்று வருகிறார்கள்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.—கடந்த சில மாதங்களாக "நல்ல ஆயன்" சந்தா பாக்கியை நிலுவையாய் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அதை அனுப்பி வைக்கும்படியாக பத்திரிகையின் வாயிலாய் அவர்களைக் கேட்டுக்கொண்டோம். ஆனால் சிலர் இவ் விண்ணப்பத்திற்கு செவிசாய்த்தார்க

ளில்லை? நமது அன்பார்ந்த சந்தாதாரர்கள் இனியாவது இம் மன்றாட்டுக்குச் காது கொடுத்து தங்கள் சந்தா பாக்கியை அனுப்பி இக் கஷ்டகாலத்தில் பத்திரிகையைக் கைசோரவிடாது நடப்பிக்க நமக்கு உதவி செய்வார்களாக.

ஆகாயக் கற்கள்.—தென் மலபார் கொடுங்கலூரிற் சென்ற மீ 10உ மாலை 2-மணிக்கு இடியோசை யொன்று கேட்கப்பட்டது. மின்னலைத் தொடர்ந்துண்டாகும் இடியைப்போல் இந்த இடியைத் தொடர்ந்து 5, 6, கற்கள் ஆகாயத்தினின்று விழுந்தன. அவைகள் கடினமாகவும், பாரமாகவும், கறுப்பு நிறமுள்ளதாகவு மிருந்தன. இந்நிகழ்ச்சி ஜனங்களுக்கு ஒரு பெரும் வியப்பையும் மனக் கிளர்ச்சியையும் உண்டுபண்ணியது. அவ்வூர் சப் மாஜிஸ்டிரேட் உடனே போலீஸாரோடு சென்று அக்கற்களைத் தம்முடைய காவலுக்கு எடுத்துச் சென்றார். ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் அங்கே சென்று விசாரணை செய்யலாயினர்.

ஒரு விபத்து.—தென் மலபாரிலுள்ள ஒரு இந்து ஸ்திரீ விறகு பொறுக்குவதற்காக காட்டிற்குச் சென்றாள். பொறுக்கி வைத்த விறகுகளை யெல்லாம் சேர்த்துக் கட்டிக்கொண் டிருக்கும்போது ஒரு துப்பாக்கிக் குண்டு வெடிக்க அதனால் உடம்பு முழுமையும் பலமான காயங்கள் பட்டு கீழே வீழ்ந்தனள். சேர்த்துவைத்திருந்த விறகு கட்டைகளுக்குள் துப்பாக்கி ஒன்று இருந்தது. விசாரணை செய்தபோது வேட்டைக்குச் சென்ற ஒரு தீயன் கவர்ண்மெண்டாருடைய அனுமதி யின்றி வைத்திருந்த ஒரு துப்பாக்கியை, குண்டு போட்டு கெட்டித்து அவ் விறகுகளின் கீழ் மறைத்து வைத்துச் சென்றதாகத் தெரியவருகிறது. இப்போது அவனைப் பிடித்துக் காவலில் வைத்திருக்கிறார்கள். காயம்பட்ட ஸ்திரீ தென் மலபாரிலுள்ள மேன்ஜரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றாள்.

எலிகளைக் கொல்லுதல்.—நமது தேசத்தில் பல வருஷங்களாகப் பரவிவரும் பிளேக் நோயைத் தடுக்க பிளேக் நோய் இலாகாதார் எலிகளைக் கொல்லவேண்டுமென்றும், கொல்லப்படுகிற எலி ஒவ்வொன்றுக்கும் அரையணு விகிதம் கொடுக்கப்படுமென்றும் ஏற்பாடு செய்தார்களல்லவா? இவ்வேற்பாட்டின்படி சென்ற வருஷத்தில் மாத்திரங் கொல்லப்பட்ட எலிகள் 1,38,386 என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக வருஷவாரியில் கல்கத்தாவில் 3,374 ரூபாயும், சென்ற வருஷத்தில் பம்பாயிலும் சென்னையிலும் முறையே 35,590 ரூபாயும் 6,709 ரூபாயும் செலவானதாகவுஞ் சொல்லப்படுகிறது. ஆயினும் எலிகளைக் கொல்வதினால் நன்மை யுண்டாகிறதோ தின்மை யுண்டாகிறதோ வென்று நிர்ணயமாய்ச் சொல்லக்கூடாத நிலைமையில்தான் இன்னு மிருக்கிறார்களாம் ஷை இலாகாதார்.

ஜான் ரிச்சர்ட்ஸ் என்பார்—இவர் ஒரு மெதடிஸ்ட் பாதிரியார். கனடாவிலுள்ள சல்பீசிய சபை கத்தோலிக்குக் குருக்களைத் தம்முடைய பதிதமதத்திற் சேரும்படிச் செய்யவேண்டுமேன்னும் கருத்தோடு ஷை குருக்களிருந்த மடத்துக்குச் செல்ல, அந்தச் சுவாமிமார்களும் அவரை மிக்க வாஞ்சனை மரியாதையுடன் வரவேற்று அவருடன் அன்பாய் சம்பாஷித்துக் கொண்டிருந்து, சத்தியவேதப் படிப்பினையைத் தெளிவாய் விவரித்துக் காட்டும் ஒரு புஸ்தகத்தை அவருக்குக் கொடுத்தார்கள். அதைப் பாதிரியார் பெற்றுக் கொண்டு தமது விடுதிக்குச் சென்று, அதை நன்றாய் வாசித்தபின் சுவாமிமார்களிடம் போய்த் தம்மையும் சத்தியவேதத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, அவர் திருச்சபையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டார். சுவாமிமார்களை மனந் திருப்பப்போனவர் தாமே மனந் திரும்பினதற்காக சர்வேசுரனுக்குத் தோத்திர முண்டாவதாக.

திவ்வியநற்கருணைத் திருவிழா.-சென்ற மாதம் 24உ (F. M. S.) இப்போவிலுள்ள லூர்தாண்டவள் கோவிலில் திவ்யநற்கருணை திருவிழா மிக்கச் சிறப்பாயும் விமரிசையாயும் கொண்டாடப்பட்டது. அன்று காலை கான்டன் பட்டணத்து மேற்றிராணியரா யிருந்தவரால் பெரிய பாடற்பூசை பாடி முடியவே, திரு இருதய ஆண்டவரின் தேர் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. மாலை வெஸ்பர்ஸ் பாடி முடிவானபின், ஆலய கம்பவுண்டுக்குள் திவ்யநற்கருணை சுற்றுப்பிரகாரம் ஆரவாரச் சிறப்பாய் நிகழ்ந்தது. சுற்றுப்பிரகாரத்தின்போது மலையா டைம்ஸ் பத்திரிகை, ரயில்வே இலாகா, தந்தி தபால் ஆபீஸ் இவைகளிலுள்ள கத்தோலிக்கு உத்தியோகஸ்தர்களால் அமைக்கப்பெற்றிருந்த 3-பந்தல்களிலும் திவ்யநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டு, சுற்றுப்பிரகாரம் கோவிலுள் பிரவேசிக்கவே நடந்தேறிய நான்காவது திவ்யநற்கருணை ஆசீர்வாதத்தோடு திருநாள் முடிவானது.

தேவ துரோகத்துக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்—சில மாதங்களுக்கு முந்தி ஜெர்மானிய பட்டாளத்தைச்சேர்ந்தசேவகர்கள் ஓர் தேவாலயத்துக்குள் நுழைந்து அதைக் கொள்ளையடிக்கையில், இருவர் தங்களுக்கு அகப்பட்ட விலை உயர்ந்த ஓர் பாடுபட்ட சுரூபத்தைத் தங்களுடைய அரண் குழிக்குக்கொண்டுபோய் ஒளித்து வைத்திருந்தார்கள். ஷை தேவாலயத்தில் தங்களுடன் கொள்ளை யடித்தவர்களுக்குள் அநேகர் காயப்படுவதையும் கொல்லப்படுவதையும் கண்ட இவர்களிருவரும் பயந்து, தாங்கள் திருடி ஒளித்து வைத்திருந்த பாடுபட்ட சுரூபத்தைப் பிரசித்தமான வேறோரிடத்தில் ஸ்தாபித்தார்கள். ஆயினும் இவர்கள் இருவரும் கட்டிக்கொண்ட தேவ துரோகத்துக் காக்கினையாக அந்தப் பாடுபட்ட சுரூபத்துக்கு முன்பாகவே மரித்துக் கிடந்தார்கள். அச்சுரூபம் வைக்கப்பட்ட பிராந்திய மெல்லாம் பீரங்கி குண்டுகளால் தகர்க்கப்பட்டபோதிலும் அப்பரிசுத்த சுரூபம் மாத்திரம் யாதோர் பழுதும் படாமல் பத்திரமாய்க் காப்பாற்றப்பட்டதென்பது மிக்க ஆச்சரியத்துக்குரியதே.

9 மாசத்துக் குழந்தையைப்பற்றி ஒரு கேசு.—சிமா மெஸ்ஸையா வென்னும் ஓர் யூதஜாதி ஸ்திரீ தன்னுடைய 9 மாசக் குழந்தையை ஒருவனுக்குக்கொடுத்துவிடுவதாகத் தன் கையொப்பமிட்டு பத்திரம் எழுதிக்கொடுத்தாளென்றும், ஒப்பந்தப்படிக் குழந்தையைக் கொடுக்கமாட்டேன் என்கிறாளென்றும் அவள்பேரில் கல்கத்தா மாஜிஸ்ட்றேட் கோர்ட்டுக்கு முன் ஒரு கேசு கொண்டுவரப்பட்டது. கேசு விசாரணையில் அவள் தன்னை அம்மனிதன் ஓர் காகிதத்தில் கையெழுத்துப் போடச் சொன்னானென்றும், அதில் எழுதி யிருந்தது தனக்குத் தெரியாதென்றும், அப்பத்திரத்தின் ஆதரவின்பேரிலேயே தன்னுடைய குழந்தையையும் கொண்டுபோய் விட்டானென்றும் சொன்னாள். அப்போது ஓர் தாய் தன் குழந்தையின்மேல் உள்ள உரிமையை இன்னொருவருக்குக்கொடுத்துவிடுவது சுபாவ முறைக்கும் உலக வழக்கத்துக்கும் அடாத காரியமென்றும், தாயின் உரிமையை ஒருவரும் சுதந்தரித்துக்கொள்ளக் கூடாதென்றும் அவளுக்காகக் கோர்ட்டில் வாதஞ் செய்யப்பட்டது. ஆயினும் மாஜிஸ்ட்றேட் ஒப்பந்த பத்திரப்படி குழந்தையைக் கொடுத்துவிடத்தான் வேண்டுமென்று தீர்ப்பு சொன்னாராம். இதுவும் காலத்துக்கேற்ற கோலமே.

நிகழும் போரால் நேர்ந்த நஷ்டம்.—ஆஸ்திரியாவில் மரித்தவர்கள் 7,18,000, காயம்பட்டவர்கள் 11,77,000, வியாதியஸ்தர்கள் 5,33,000; பெல்ஜியத்தில் மரித்தவர்கள் 50,000, காயம்பட்டவர்கள் 1,00,000, வியாதியஸ்தர்கள் 33,000; பல்கேரியாவில் மரித்தவர்கள் 25,000, காயம்பட்டவர்கள் 60,000, வியாதியஸ்தர்கள் 18,000; இங்கிலாந்தில் மரித்தவர்கள் 2,05,000, காயம்பட்டவர்கள் 5,12,000, வியாதியஸ்தர்கள் 1,54,000; பிரான்சில் மரித்தவர்கள் 8,85,000, காயம்பட்டவர்கள் 21,15,000, வியாதியஸ்தர்கள் 6,34,000; ஜெர்மனியில் மரித்தவர்கள் 8,85,000, காயம்பட்டவர்கள் 21,16,000, வியாதியஸ்தர்கள் 5,34,000; இத்தாலியாவில் மரித்தவர்கள் 1,05,000, காயம்பட்டவர்கள் 2,45,000, வியாதியஸ்தர்கள் 73,000; ருஷியாவில் மரித்தவர்கள் 14,98,000, காயம்பட்டவர்கள் 38,20,000, வியாதியஸ்தர்கள் 11,46,000; செர்பியாவில் மரித்தவர்கன் 1,10,000, காயம்பட்டவர்கள் 1,40,000, வியாதியஸ்தர்கள் 42,000; துர்க்கியில் மரித்தவர்கள் 1,50,000, காயம்பட்டவர்கள் 3,50,000, வியாதியஸ்தர்கள் 7,95,000. இப்படி உயிர்ச்சேதத்துள்ளாகி நாடோறும் அநேக ஆயிரம்பேர் மரணமடைந்து, தேவ நடுவருக்கு முன் போய் நிற்கிறபடியால் “ மரணவஸ்

தைப்பட்ட சேசுவின் திரு இருதயமே இன்று மரிக்கிறவர்களின்மேல் இரக்கமாயிரும்" என்னும் செபத்தை அடிக்கடி உச்சரிப்போமாக.

ஓர் விநோத கெடியாரம்.—1724-ம் வருஷத்தில் 1-வது கத்தரீனம்மாளென்னும் ருஷிய சக்கரவர்த்தினிக்கு மகுடாபிஷேகம் நடந்தேறியபோது, மிக்கச் சிறிய கெடியாரம் ஒன்று அச் சக்கரவர்த்தினியாருக்குப் பரிசளிக்கப்பட்டது. அதினுடைய அமைப்பின் சூட்சம் மிகவும் விநோதமானதாம். அது ஏழு அவுன்ஸ் நிறையுள்ளதாயும், மணி யடிக்கும் போதெல்லாம் சங்கித முழக்கத்தோ டடிப்பதாயும், தேவையாயின் அடித்த மணியை மீண்டும் மீண்டும் அடிப்பதாயும் அமைக்கப்பெற்றுள்ளதாம். அன்றியும் அக்கடியாரத்தின் பின்புறத்திலுள்ள கண்ணாடி மூடியினுள் நமதாண்டவர் அடக்கஞ் செய்யப்பட்ட கல்லறையைப் போன்ற சமாதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது மல்லாமல், ஓர் காவலாளியும் அதன் பேரில் அமைக்கப்பட்டிருந்தது. கண்ணாடி மூடியைத் திறந்தவுடன் சமாதியின் வாயலில் வைக்கப்பட்டிருந்த இரவை மணிகள் உருண்டோட, காவலாளி முழந்தாற்படியிட மூடியின் உட்புறத்தில் தேவ தூதர்கள் தோன்றுவார்கள். இதற்குள்ளாக வாத்தியம் முழங்க ருஷியர்க ளெல்லோரும் பாட நன்றாய் வழக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய உத்தானத்தின் சங்கீதம் மிக்க ரம்மியமாய்ப் பாடப்படும். இவ் வாச்சரியத்துக்குரிய சிறிய கெடியாரத்தை இவ்விதம் அமைத்து முடிக்க பிடித்த காலம் 9 வருஷமெனச் சொல்லப்படுகிறது.

மெற்றிரிக்குலேஷன் தமிழ்ப்பாட புத்தகமும், கத்தோலிக்கு மாணவரும்.—இவ் வருடம் மெற்றிரிக்குலேஷன, ஸ்கூல் பைனல் சர்ட்டிபிக்கெட் பரிட்சைகளுக்குப் போகும் தமிழ் மாணாக்கர்கள் படிக்கவேண்டிய பாடப் புத்தகமாக சர்வகலாசாலை புத்தகக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பெற்ற புத்தகத்தில் "தனபாலன்" என்ற ஒரு நவகதை சேர்க்கப்பட்டிருக்கிறது. இது சென்னை பச்சையப்பன் காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை வகிக்கும் ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியா ரவர்களால் எழுதப்பட்டது. இக் கதையினிறுதியில் கதா நாயகனாகிய தனபாலன் என்பவுன் தன்பேரில் சுமத்தப்பட்ட யாதோவோர் குற்றத்துக்காக கொலைக்களத்தில் தூக்கு மரத்தில் தூக்குண்டு கொல்லப்படப் போகுஞ் சமயத்தில், வேறொருவன் ஒரு குருவானவரிடம் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்திய சில சங்கதிகளை, அக் குருவானவர் அதிகாரிக்குத் தெரியப்படுத்தினதினால், அவன் (தனபாலன்) நிரபராதியெனத் தீர்மானிக்கப்பட்டு மரணத்தினின்றுந் தப்புவிக்கப்பட்டா னென்று சொல்லப் பட்டிருக்கிறது. பாவசங்கீர்த்தனத்தின் மூலமாய்த் தமக்குத் தெரிவிக்கப்பட்டயாதோர் விஷயத்தையும் அது எவ்வளவு அற்பமானதானாலும், அல்லது கனமானதானாலும், தலைபோகிறதா யிருந்தாலும், உலக முழுவதுமே ஆதாயமாகிற்தானாலும், ஒரு குருவானவர் வெளிப்படுத்த மாட்டார் என்ற சித்தாந்தத்தை, ஒரு சத்திய பிரமாணமாகக் கொண்டிருக்கும் கத்தோலிக்கருக்கு ஷை கதை முற்றும் பொருந்தாததும் பெருத்த ஆட்சேபனைக் குரியதுமா யிருக்கிற தென்பது ஒரு பள்ளிச் சிறுவனுக்குந் தெரிந்தகாரியம். கத்தோலிக்கு வேத சத்தியத்துக்கு விரோதமான இவ்விஷய மடங்கிய கதையையே ஷை பரிட்சைப் பாட புத்தகத்தில்போட ஷை சர்வகலாசாலை புத்தகக் கமிட்டியார் எப்படி அநுமதி கொடுத்தாரோ அறியோம். இப் புத்தகக் கமிட்டியில் நமதுகத்தோலிக்கர் ஒருவரையாவது தேடிச்சேர்க்காத குறை பெரிய குறையாயிருக்கிறது. இதுபோலவே, ஆங்கிலேய பாடப் புத்தகத்திலும் கத்தோலிக்கு வேதக் கொள்கைக்கு விரோதமான விஷயங்க ளிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது விஷயத்தை யூனிவர்சிட்டி, சின்டிகேட் சபையார் கவனித்து இதற்கு வேண்டிய பரிகாரம் கூடிய சீக்கிரத்தில் தேடுவார்களென ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

அஸ்திவாரக்கல் நாட்டல்—கீழச்சேரியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஐக்கிய நாணயச் சங்க பாங்கிக்காக ஓர் கட்டிடம் கட்ட ஷை சங்கத்தின் நிர்வாக கமிட்டியார் தீர்மானித்து, அதற்கு அஸ்திவாரக் கல் நாட்ட ஷை சங்கத்தை இவ்வூரில்

சுமார் 13 வருஷங்களுக்குமுன் ஸ்தாபித்தவரும் தற்போது சென்னை கவுன்ஸிலில் மெம்பரா யிருப்பவருமான தீவான் பகதூர் ராஜகோபாலாச்சாரியாரவர்களை வரவழைத்தார்கள். அஸ்திவாரக் கல்லும் சென்றமாதம் 23வ நாட்டப்பட்டது. அத் தருணத்தில் சென்னையிலிருந்தும் மற்ற விடங்களிலிருந்தும் சில கனதனவான்களான திவான்பஹதூர் எல். டி. சுவாமிகண்ணுபிள்ளை அவர்கள், ராவ்பஹதூர் டி. விஜயராகவாச்சாரியார் (முனிசிபல்ரிவின்யூ ஆபீஸ்), ராவ்ஸாஹேப் சி. மாரியப்ப முதலியார். மெஸர்ஸ் டி. அருளானந்தம் பிள்ளை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார். C. M. வெங்கர்நாத அய்யங்கார் (உத்திரன் மேரூர்), P. ராமச்சந்திர சாஸ்திரி (காஞ்சிபுரம்), ஜோஸப் வில்லியம்ஸ், திருவள்ளூர் டிப்டி கலெக்டர், P. ஸ்ரீநிவாசய்யர், தாசீல்தார், V. D. ராஜாராம் முதலியார், திருவள்ளூர் சப்மாஜிஸ்ட்ரேட், M. வெங்கடராகவலு ரெட்டியார் டிஸ்ரிகட்போர்டு வைஸ் பிரஸிடெண்டு, கே. தெய்வசிகாமணி முதலியார், மானேஜர், ரிஜிஸ்திரார் ஆபீசு, V. A. அருள்சாமி பிள்ளை B. A. இன்னும் மற்ற கனவான்களும் சமூகமாயிருந்தனர். அஸ்திவாரக்கல்லை நாட்டின பின் ஹானரபில் ராஜகோபாலாச்சாரியார் ஷை சங்கம் இவ்வூரில் ஸ்தாபிக்கப்பட்டதற்கும், அது தற்போது அடைந்திருக்கும் நல்ல நிலமைக்குங் காரணம் ராய்சாஹெப், கா. அருளய்ய நாயுடு அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, கே. தெய்வசிகாமணி முதலியா ரவர்களும், இன்னுஞ் சிலரென்றுங் கூறி தம்முடைய உபந்நியாசத்தை முடித்தார்.

பின்லன்ட் தேசத்தவர்கள்—ருஷியாவின் வடபாகத்திலுள்ள இவர்களே உலகத்தில் மிக்க உண்மையும் நேர்மையுமுடையவர்களெனச் சொல்லப்படுகிறது. அங்கே திருட்டு, மோசம் முதலிய அயோக்கிய நடவடிக்கைகள் கிடையா. பட்டணங்களிலுஞ் சரி நாட்டுப்புறங்களிலுஞ் சரி ஜனங்கள் தங்கள் வீட்டுக் கதவுகளை யொருபோதுஞ் சாத்துகிறதுமில்லை அவைகளுக்கு தாழ்ப்பாள் போடுகிறதுமில்லை. அப்படியே கடைத்தெருவுகளிலும் ஷாப்புகளிலும் திருடர் பயமென்பதில்லை. சிறுவர் சிறுமிகளும், வாலிப பெண்பிள்ளைகளும் யாதோர் அச்சமும் பயமுமின்றி வெளியே தெருவே போவார்கள். பெண்பிள்ளைகள் தன்னந்தனியே பிரயாணஞ் செய்வார்கள். தங்கள் வீடுகளிற் செய்யும்வெண்ணெய், பாற்கட்டி முதலியவைகளையும, தோட்டங்களில் பயிரிடும் காய்கறி பதார்த்தங்களையும், வண்டிகளிற் போட்டுக்கொண்டு தனியே காட்டு வழியாய் இராக்காலங்களில் பட்டணக் கரைகளுக்குப்போய் வியாபாரஞ் செய்வார்கள். சில சமயங்களில் ஐம்பது, அறுபது மைல் தூரத்திலுள்ள பட்டணங்களுக்கு முதலாய் அந்தப்படியே தனியாய்ப் போய்த் திரும்புவார்கள். அவர்களை கொள்ளையடிக்கவாவது, அல்லது தொந்திரவு செய்யவாவது, யாரும் நினையார். புண்ணிய ஸ்திரீ பூமான்கள் வாழும் பாக்கியமான தேசமென்றால் பின்லண்ட்தான்.

பெல்ஜிய அரசியும் பாப்பரசரும்.—பெல்ஜிய இராக்கினியான எலிசபெத்தம்மாள் உரோமைக்குப்போய் பரிசுதத பாப்பரசரைச் சந்தித்து ஜெருமனியருடைய ஆளுகையில் தற்காலம் பெல்ஜியம் இருக்கும் ஸ்திதியை வர்ணித்து அறிவித்தார்களாம்.

திருநாள் விளம்பரம்.—மோட்சமுடி விராக்கினியின் வருஷாந்திர திருவிழா. ஆரம்பாக்கத்துக் கோவிலில் வழக்கப்படி ஆரவாரமாய்க் கொண்டாடப்படும். கொடியேற்றம், நவநாட் செபத்துவக்கம் இம்மாதம் 11வ சனிக்கிழமை மாலை. வெஸ்பர்ஸ் தேர்சுற்றுப் பிரகாரம், வெளிமைதான பிரசங்கம் 18வ சனிக்கிழமை மாலை. பெரிய பாடல் பூசை, பிரசங்கம், திவ்விய நற்கருணை ஆசீர்வாதம், 19வ ஞாயிற்றுக்கிழமை காலையில். கத்தோலிக்கு கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இந்த பொருத்தனைக் கோவிலில் நமது பரம தேவதாயாரைக் கொண்டாட இத் திருநாளுக்கு வரக் கேட்டுக்கொள்ளுகிறோம். மோக்ஷ இராக்கினி முடிபெற்ற பரம ஆண்டவள் இந்த திருயாத்திரைக்காரருக்கும் திருநாள் நடத்த உதவி செய்யும் தர்மிஷ்டருக்கும் ஏராள சம்பாவனை அளிப்பாள்.

S. M. F. IGNATIUS,
விசாரணை குருவானவர்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

எனது பிரார்த்தனை.

சென்னையில், கத்தோலிக்க ஜனசமூஹாபிவிர்த்தியில் அக்கரை பூண்டுழைத்துவரும், ஸ்ரீமான். M. P. குழந்தைசாமிப் பிள்ளை யவர்களின் பெருந்தவப் பெருநிதியும், ஏக புத்திரியுமாகிய ஸ்ரீ சவரிமுத்தம்மாள் என்னுங் கன்னிகை இவ்வுலக வாழ்வை வெறுத் தேகிய ஸம்பவம் எனது ஹிருதயத்தைக் கலங்க வைத்துவிட்டது. இவ்வம்மணி தன்னை ஈன்றோரது பேரவா, (1900-வருஷம் டிசம்பர்மீ 1உ) இவ்வுலக விஸ்தீரணத்தில் தானுதையமாகி விட்டதோடு, திருப்தியாகி விடாதெனுங் கொள்கையில் நிச்சய முடையவளாய் அன்னாரது பரிபூரண திருப்திக்குச் சாதகமான வழிகளிற் பயின்று வந்தாளென்பதை அவளிடத்திற் குடிகொண்டிருந்த சுசீல சுபாவங்களே விளக்கற் பாலன. இந் நங்கையர் திலகம் தேகவியோகவமாதற்குச் சிலவருஷங்களின் முன்னரே, அவளது ஸ்நேகிதிகளிலொருவளாகும் அதிர்ஷ்டத்தை வகிக்கப்பெற்றேன். திருச்சினாப்பள்ளி Holy Cross Convent இல் இருவரும் கல்வி பயின்று வந்தனம். இவளது ஸ்நேகமே கல்வியில் எனக்கு விசேஷ பிரீதியை உண்டுபண்ணியதெனில் மிகைபடக் கூறியதின்று. ஸதா தன்னைச் சூழ்ந்துள்ள பெண்களுக்கெல்லாம் கல்வியினாலாகும் பெரும்பயனை அடிக்கடி உபதேசித்து உற்ஸாகப்படுத்தி வருவதையே விரதமாகக் கொண்டிருந்தனள். ஜனசமூக ஈடேற்றத்துக்குப் பெண் கல்வியே நிரம்பவும் அத்தியாவசிய மென்பதில் நம்பிக்கையுள்ளவள். சாந்தம், பொறுமை, கீழ்ப்படிதல், தெய்வபக்தி முதலிய சுகிர்த வொழுக்கங்களுக்குக் குருபீடம். அன்பிற்கு உறைவிடம். இன்னவள் என் மீது பாராட்டிவந்த அன்பை நினைக்குந்தோறும் எனது நெஞ்சம் அனலிற் படிந்த மெழுகுபோல் உருகுகின்றது. கண்ணீர் ததும்புகின்றது, என் சொல்வேன்? நேசத்தை நினைக்கவோ, ஸத்ஸகவாசத்தை நினைக்கவோ, பாலோ, தேனோ, பழமோ வெனப்பொழியும் உபதேசத்தை நினைக்கவோ, இறுதியாய் என்னை விட்டுப் பிரிய நேர்ந்த மோசத்தை நினைக்கவோ, எதை நினைந்தென் செய்வேன் அம்மா! சகியேன்! சகியேன்!! நினது அன்பைக்கொண்டேன். அவ்வன்பு காரணமாகத் துன்பையுங்கொண்டேன். அன்பை விடவோ, துன்பை விடவோ, எதைவிடினும் நின்னை நெகிழ்ந்ததுபோலன்றோ? இதிலென் மனம் எள்ளளவும் இசையாதென்பதை யறிவாய். ஆதலின், என் அன்புள்ள சகோதரி! நின்னை யாட்கொண்ட பரம கடவுளிடத்தில் என்மாட்டு எடுத்துக்கொள்ளுஞ் சிரத்தையே என்னை நல்வழிப் படுத்துமென்ப தபிப்பிராயம். மறவற்க! இத்துணை யெனது மனோசலனத்திற் காஸ்பதமான சகோதரியின் அற்புதமான குணங்கள் கேவலம் ஸம்சார பந்தத்தில் சிக்கி மலினமடைய விடக் கூடாதென்பது திருவுளச் சம்மதமோ? நாளது 1917-ம் வருஷம் மார்ச்மீ 13உயில் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு எவ்வித சிகிச்சைகளினாலுங் குணப்படாமல் ஷை மீ 22உ வியாழக்கிழமை மாலை 3-மணிக்கு விதிப்படி தேவத்திரவிய அநுமானங்களை நிறைவுறப்பெற்று, சேசுமரிசூசை என் ஆத்துமத்தை உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கிறேன், என்ற இனிய ஓசையுடன் தனது பதினாறுவது பிராயத்தில் பரமபதமடைந்தனள். இதனைக் கண்ணுறும், சகோதர சகோதரிகள் இவ்வாத்ம நித்ய இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக்கவேண்டு மென்பதே தாழ்மையான எனது பிரார்த்தனை.

இங்ஙனம்

ஷை குணவதியின் அன்பை நினைந்துருகும்,

சகோதரி

துயின்மேரியம்மாள் பர்னாந்து.

மணப்பாடு.

எனதருமை மாமியார் மரிய அந்தோனியாள் பெர்னாந்து அவர்கள் மணப்பாட்டில் நடப்பு வியாதியால் தமதருமைக் குழந்தைகளையும் மற்றும் சுற்றத்தாரையும் பரிதபிக்கவிட்டு தேவத்திரவிய அநுமானங்கள் சகலமும் சரிவரப்பெற்று நாளது மாதம் 10உ நித்திய கர்த்தருக்குள் இளைப்பாறினார்கள். இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகள் அவ்வாற்றும இளைப்பாற்றிக்காக 1-பர 1-பிரி 1-திரி வேண்டிக்கொள்ளத் தாழ்மையுடன் மன்றாடும்,

புத்தளம் 16—7—1917. } தூசைமாதவடியான் பேர்னாந்து.

The Good Pastor

நல்ல ஆயன்

REGISTRAR OF ... 4 - SEP 1917 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 15. } செப்டம்பர் 1917. { இலக்கம் 9.

THE MADRAS UNIVERSITY TEXT BOOK COMMITTEE.
சென்னை சர்வ கலாசாலைப் புத்தகக் கமிட்டியார்.

சென்ற மாத ஆயனில், பற்பல சமாசாரங்களுக்குள் "மெற்றிக்குலேஷன் தமிழ்ப்பாடப் புத்தகமும், கத்தோலிக்கு மாணவரும்" என்ற தலைப்பிட்டு நாம் வரைந்துள்ள விஷயத்தை நமது நண்பர்கள் கவனித்திருப்பார்களென நம்புகிறோம். அதாவது, மெற்றிக்குலேஷன் பரிட்சைக்கு தமிழ் கற்கும் மாணவர்கள் படிப்பதற்காக, வழக்கம்போல் யூனிவெர்ஸிட்டி யென்னும் சர்வ கலாசாலைப் புத்தகக் கமிட்டியாரால் இவ்வருஷம் தொகுக்கப்பட்டிருக்கும் "டெக்ஸ்ட் புக்" என்னும் பாடப் புத்தகத்தில் "தனபாலன்" என்ற ஒரு நவகதை சேர்க்கப்பட்டிருக்கிறது. இக் கதையில், ஒரு கத்தோலிக்குக் குருவானவர் தமக்கு பாவசங்கீர்த்தனத்தில் சொல்லப்பட்ட சில சங்கதியை வெளிப்படுத்தி, நியாயாதிபதியின் தீர்மானத்தால் கொல்லப்படப்போகிற ஒரு குற்றவாளியை மரணத்தினின்றும் இரட்சித்தார் என்ற அபவாதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கத்தோலிககுக் குருவானவர் உடைபடா முத்திரையாகிய பாவசங்கீர்த்தனத்தில் தாம் அறிந்த விஷயத்தை வெளியாக்கினாரென்று இதுவரையில் எவருங் கேள்விப்பட்டதில்லை ஒருபோதும் நடக்கக்கூடாத காரியத்தை நடந்ததாகக் கதையிலேனும் சொல்லப்போமா? அக்கதையைப் பள்ளிச்சிறார்கள் படிக்கலாமா? இது எப்பேர்க்கொத்த கெடுதியான விஷயம்! மதத்துவேஷஞ் சிறிதுங் காட்டாமல், எம்மதமும் சம்மதமென எல்லா மதத்தினரையும யாதோர் விகற்பம் வித்தியாசமின்றி சமரசமாய்ப் பார்த்து வரும் இந்த பிரிட்டிஷ் இராஜாங்கத்தில், நமது சத்திய கத்தோலிக்கு வேதக்கொள்கைக்கு விரோதமான விஷயங்களடங்கிய இக் கதையைக் கண்ட, கேட்ட கத்தோலிக்கரெவரும் திடுக்கிட்டு மிக்க கோபங்கொள்வாராயினர். இதைப்பற்றி ஒருவர், கல்வி கேள்விகளிற் சிறந்து, சர்வ கலாசாலை அத்தியட்சரில் ஒருவராய் விளங்கும் நமது திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்களுக்கு அறிவிக்க, அக்கனவான் ஷை நவகதைக்குக்

கிரந்த கர்த்தாவாகிய ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியா ரவர்களுக்கு, காரியாகாரியங்களை விளக்கி யெழுதியதின் பலனாக அம் முதலியா ரவர்கள் விடுத்த விக்கியாபனத்தை இதன் பின்னால் பிரசுரித்திருக்கிறோம். அதில், அவர்: "தனபாலன்" என்னுங் கதை ஓர் இத்தாலிய கதையை அநுசரித்து எழுதப்பட்டதென்றும், குறிக்கப்பட்ட விஷயம் கத்தோலிக்கரின் வேதக்கொள்கைக்கு விரோதமானதென்று முன்னமே தெரிந்திருக்குமாயின் அவ்வண்ணம் தாம் எழுதியிருக்கமாட்டாரென்றும், அவ்வாறு எழுதியதற்காக தாம் இப்போது மெத்தவும் அநுதாபப்படுவதாகவும் சொல்லியதோடு நில்லாமல், முற்காலத்தில் குருக்கள் பாவசங்கீர்த்தன இரகசியத்தை வெளிப்படுத்தும்படி இராஜ ஆக்கினையால் கட்டாயப்படுத்தப்பட்டபோதிலும், வெளிப்படுத்தாமல் உயிரை முதலா யிழந்த, யிழக்கத் துணிந்த இரண்டொரு உதாரணங்களையும் தாம் இப்போது தெரிந்துகொண்டபடி விவரமாய் விளக்கிக்காட்டி யிருக்கிறார். இதனால் இவ் வித்துவான் எத்துணை பெருமித புத்தியுடையவரென்று நன்கு விளங்குகிறது. இவரது விக்கியாபனத்தை யெல்லோரும் விசேஷமாய் இவ்வருஷம், மெற்றிக்குலேஷன் பரிட்சைக்குத் தமிழ் படிக்கும் மாணவர்கள் வாசித்தல் அவசியம்.

இது நிற்க, நமது யூநிவெர்சிட்டி புத்தகக் கமிட்டியில், பரிட்சைகளுக்கு நியமிக்கப்படும் பாட புத்தகங்களில் கத்தோலிக்கு வேதக் கொள்கைகளுக்கு விருத்துவமானது யாதாவது இருக்கிறதாவென்று சோதித்துப் பார்த்து, அத்தகைய பாடங்கள் யாதாவ திருக்குமானால் அப்பேர்ப்பட்டவைகளை அக்ஷணமே நீக்கிவிடும்படிக்கான ஏற்பாடு சிண்டிக்கெட் மெம்பர்கள் செய்வார்களெனக் கோருகிறோம். ஏனெனில், நாம் இங்கே எடுத்துக் காட்டிய இவ்வொரு குறைமாத்திரமல்ல, இன்னொரு குறையும், அதாவது, இங்கிலீஷ் பாட புத்தகத்திலும், "ஜாக்டா" (Jackdaw) என்னும் பாடத்தில் இருக்க, அதையும் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டி, அதைப் பரிகரிக்கவேண்டிய எத்தனங்கள் செய்யலாயிற்று. இனியாவது இத்தகைய குறை நேராதென நம்புகிறோம்.

"தனபால" னென்ற கதையின் ஆசிரியர் விக்கியாபனம்.

1918௵ தமிழ்ப் பாஷையில் மெற்றிக்குலேஷன் பரிக்ஷைக்குப் போகும் மாணாக்கரின் உபயோகத்திற்காக பிரசுரிக்கப்பட்ட புத்தகத்தின் 64-வது பக்கத்தில் காணப்படும் "தனபாலன்" என்ற கதையானது பதுவாபட்டணத்து "கோல்டுஸ்மித்" என்ற ஒருவரால் எழுதப்பட்ட ஓர் பழைய கதையை அனுசரித்து எழுதியதாகும்.

இதில், கதாநாயகனான தனபாலன் கொலைக்குத் தீர்ப்பிடப்பட்டுக் கொலைக்களத்தில் நிற்கும்போது ஓர் கத்தோலிக்குக் குருவானவர் தமக்குப் பாவ சங்கீர்த்தன மூலமாய் குற்றவாளியைச் சேர்ந்த பணிவிடைக்காரர்களில் ஒருவனால் தெரிவிக்கப்பட்டதைக் கொண்டு, மெய்யான குற்றவாளி இன்னானென்று நீதிஸ்தலத்தில் தெரியப்படுத்தி, தனபாலனைக் கொலையினின்றும் தப்புவித்தாரென்று கண்டிருக்கிறது. இப்படி இதை நான் எழுதியபோது, ஓர் ரோமான் கத்தோலிக்குக் குருவானவர் தமக்கு பாவ சங்கீர்த்தனத்தின் மூலமாய்த் தெரியவந்த எவ்வித இரகசியத்தையும் (குற்றமற்றவனை மரண தண்டனையினின்று விடுவிக்கவு முதலாய்) வெளிப்படுத்துவதானது மகா தேவ துரோகமான பாவமென்றும், இது ரோமான் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்குள் ஏற்பட்டுள்ள ஓர் சத்திய பிரமாணமென்றும் எனக்குத் தெரியாது. ஆயினும், இப்போது, கண்ணியந்தங்கிய உரோமன் கத்தோலிக்குக் கனவானொருவர் இதை எனக்குச் சுட்டிக்காட்டி எழுதியிருககிறார். ஆகையால், அறியாத்தன்மையால் 'நான் இவ்வாறு கத்தோலிக்கருக்கு மனத்தாங்கல் வருவித்ததைப்பற்றி இது விஷயத்தில் அவர்கள் என்னை க்ஷமித்தருளும்படி இக் கடிதவாயிலாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். எம்மதத்தினருக்கும் மனவருத்தத்தை உண்டுபண்ணும்படியான எதையும் எடுத்தெழுத நான் ஒருபோதும் மனந்துணியேன்.

பாவசங்கீர்த்தனத்தின் இரகசியத்தை எம்மாத்திரம் சுமுத்திரையாய் ரோமன் கத்தோலிக்குக் குருப்பிரசாதிகள் காப்பாற்றுகிறார்களென்பதற்கு அத்தாட்சியாக, பொஹீமியாவின் வேத சாட்சியான அர்ச்சியசிஷ்ட நெப்போமுஸ் அருளப்பரைப்போல், அவர்களில் சிலர் பாவசங்கீர்த்தன இரகசியத்தை வெளிவிடாதபடிக்குத் தங்கள் ஜீவனையே பரித்தியாகஞ் செய்திருக்கிறார்களெனக் கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறேன். அல்லாமலும், இதற்கு சிலகாலத்துக்கு முன்னேதான் அதாவது சுமார் 35 வருடங்களுக்கு முன், ருஷியாவிலிருந்த ஓர் குருவானவர் பாவசங்கீர்த்தனத்தின் வழியாய்த் தமக்குத் தெரியவந்த ஒரு கொலையாளியைக் காட்டிக்கொடாமல், அக்கொலைப்பாதகம் தமது பேரிலேயே சுமத்தப்படவும், தமது குருஸ்தானத்தினின்று நீக்கப்பட்டு, ஜென்மக் கைதியாக சைபீரியா (Siberia) விலுள்ள சுரங்கங்களில் வேலைசெய்ய அனுப்பப்படவும் சம்மதித்தார் என்றுங் கேள்விப்படுகிறேன். அதெப்படியென்றால்: கொலைசெய்த குற்றவாளி அக் கொலையினின்று தான் தப்பித்துக் கொள்ளும்படியாகவும், அக் கொலைப்பாதகம் அங்கிருந்த குருவானவர்மீது சாரும்படியாகவும் வேண்டிய தந்திரங்களை யெல்லாம் செய்து முடித்துவிட்டு, (ஓர் கத்தோலிக்கு குருவானவர் தமக்குப் பாவசங்கீர்த்தனத்தின் மூலமாய்த் தெரியவந்த எவ்வித குற்றத்தையும், தமது தலைபோனாலும், ஒருவருக்குந் தெரியப்படுத்த மாட்டாரென்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தபடியால்) அதிக தைரியங்கொண்டு, அதே குருவானவரிடத்தில் போய் தான் செய்த பாதகங்களையெல்லாம், அதாவது, தான் செய்த கொலையையும், அக் கொலைப்பாதகம் தன் பேரில் சாராமல் அக் குருவானவர் பேரில் சாரும்படியாக தான் செய்த தந்திரத்தையும் வெளியாக்கினான். இவ்விதமாக அவர் வாய்க்குப் பூட்டுப்போட்டது போலாகிவிட்டபடியால், அதிகாரிகள் அவரைப் பிடித்து அவர்மேல் கொலைப்பாதகத்தைச் சுமத்தி, அவரை விசாரித்தபோது, தமது மாசற்றதனத்தையும், குருஸ்தானத்தின் மேன்மையையும் பங்கப்படுத்தும்படியான அக்கொலைப்பாதகத்தினின்று தம்மை நீக்கிக்கொள்ளும்படி ஒரு வார்த்தை முதலாய்ச் சொல்ல வாய் திறவாமல் மௌனஞ் சாதித்தார். இதனால், அவரே கொலைப்பாதகனென தீர்மானிக்கப்பட்டு, ருஷியாவைச் சேர்ந்த சைபீரியாவிலுள்ள மலைச் சுரங்கங்களில் வேலை செய்யும்படி ஜென்மக் கைதியாய் அனுப்பப்பட்டார்.

இது நடந்த அனேக வருடங்களின் பின்னர், மெய்யாகவே தான் குற்றவாளியாயிருந்தும் முன் சொன்னதுபோல் அக்கிரம வழியாய்க் கொலைக்குத் தப்பித்துக்கொண்ட மேற்சொன்ன கொலைப்பாதகன் மரணாவஸ்தையாய்ப் படுக்கையில் கிடக்கும்போது, தன்னைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்து, தான் கட்டிக்கொண்ட கொலைப்பாதகத்தையும், தேவதுரோகமான பாவசங்கீர்த்தனத்தையும் அவர்களுக் கறியப்பண்ணி, அநியாயமாய்க் குற்றம் சாட்டப்பட்டு, ஜென்மக் கைதியாய் சைபீரியாவின் சுரங்கத்தில் வேலைசெய்யத் தீர்ப்பிடப்பட்ட குருவானவரை உடனே விடுதலை செய்யும்படி அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டான். மரணாவஸ்தையாய்க் கிடப்பவன் கொடுத்த வாக்குமூலத்தை முழுதும் உண்மையென அதிகாரிகளேற்றுக்கொண்டு, சைபீரியாவின் சுரங்கத்திலிருந்த முன் சொன்ன குருவானவரை தட்சணமே விடுதலை செய்யும்படி தந்தி அடித்தார்கள். ஆயினும், அந்த தந்தி சேர்ந்த அதேநாள் காலையில் அவர் தாமிருந்த சுரங்கத்திலேயே பாவசங்கீர்த்தன இரகசிய முத்திரைக்கு வேத சாட்சியாய் மரணமானார்.

கத்தோலிக்குக் குருமார்களில் சிலர் தங்கள் குருப்பட்டத்தையும், திருச்சபையையும், சந்நியாசத்தையும் உதறிவிட்டுத் தாறுமாறாய்த் திரிந்தபோது முதலாய் தாங்கள் முன் குருக்களா யிருந்தபோது பாவசங்கீர்த்தனத்தில் தெரிந்துகொண்ட இரகசியங்களை வெளிப்படுத்தாமல் வெகு பயபக்தியோடு அவைகளைக் காப்பாற்றி வந்திருக்கிறார்களென்றுங் கேள்விப்படுகிறேன். ஆகையால், "தனபாலன்" கதையைக்கொண்டு, பாவசங்கீர்த்தன இரகசியங்களை வெளிப்படுத்த கத்தோலிக்குத் திருச்சபை உத்தரவு கொடுக்கிறதென்று

வது, அல்லது அவ்விரகசியங்களை விசேஷ பலத்த முகாந்திரங்களை முன்னிட்டு வெளிப்படுத்தலா மென்றாவது எண்ணுவது பெருந் தப்பிதமாகும்.

NOVEL READING.
நாவல் வாசித்தல்.

நாவல் அல்லது நவீன கதை வாசித்தல் என்பது ஒருவன் தெரிந்துகொள்ளக் கூடாத புதைப் பொருளமைந்த விஷயமல்ல. உண்மையாக நடவாத சம்பவங்களை நடந்தனபோல பாவனை செய்து மனதிற்கு இன்பத்தையும் படிப்பதற்குப் பிரியத்தையும் நல்லொழுக்கத்துக்குப் புத்தி போதனைகளையுங் கொடுக்கும் விதமாய் வரையப்பெற்றக் கற்பனாலங்கார கதைகளையே நாவல் என்று சொல்லப்படும்.

பண்டையகாலத்து பழுத்தறிவு பூண்ட தமிழ் மக்களுக்கு நாவலென்பது எத்தகையானதென்று தெரியாது. அதனை இன்னவாறு புனைந்துரைக்க வேண்டுமென்றும் அவர்கள் அறியார். அன்னோர்களியற்றிய நூல்கள் யாவும் காவியரூபமாயும் செய்யுட்பாங்காயுமிருந்ததைப்பற்றி கற்றோரேயன்றி மற்றையர் அவற்றைக் கொஞ்சமும் தெரிந்துகொள்ளார்களென்பது திண்ணம். ஆகையால் இப்பெருங் குறையை நிவர்த்தித்துத் தமிழ் மக்களுக்கு வசன ரூபத்தில் இவ்வித நாவல்களை இயற்றித் தர இக்காலத்தில் சில தமிழ் மேதாவிகள் தோன்றியுளர். அவருள் காலஞ்சென்ற மகா வித்துவான் மாயூரந் தாலூக்கா முன்சீப் ச. வேதநாயகம் பிள்ளையவர்களே முதன்மையானவர். அவர் முதன் முதல் வசன ரூபத்தில் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் மனித சமூகத்திற்கு நுண்ணறிவையும் நற்போதகத்தையும் தரத்தக்க விஷயங்களைக் கொண்ட கதா புஸ்தகமென சொல்லத் தேவையில்லை. பின்னர் நாளா வட்டத்தில் சிறந்த மேனாட்டு நாகரீகம் ஏற்பட, அதற்கனுத் துணையாக சுகமும் செல்வமும் சீர்திருத்தமும் ஏற்பட்டதோடு தமிழ் வசனமிர்தத்திலே பிரபல நாவல்களும் வெளிவந்தன. ஆயினும் அவையெல்லாம் நல்விஷயங்கள் நிரம்பின வாயும், உலகாசீர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் பயக்கத்தக்கனவாயும் இருப்பதற்கு மாறாக அந்தோ! பெரிதும் விசனிக்கத்தக்க கேடுபாடுகளை விளைவிக்கின்றனவையா யிருக்கின்றன. தற்போது பெரும்பாலும் வெளிவந்துலாவும் நாவல்களை எழுதுவோர் இந்துக்களேயாவர். அவர்களெழுதும் நாவல்களை உற்று நோக்குந்தோறும், அவைகள் பொய்க் கற்பனைகள் பொருந்தினவாயும், மாந்தரின் மதியைக் கெடுத்து மகா விசனகரமான கொடுஞ் செயல்களை யூட்டி மீளா நரகத்தை மானியமாகத் தரும் சிற்றின்பம், காதல், காமம், சோரத்துவம் முதலியவைகளை இடையிடையே உணர்த்துபவைகளாயுமிருப்பதினால், படிக்கும் பால்யர்களுக்கும் பாலிகைகளுக்கும், ஆகாத ஆனந்தாவேசத்தை யுண்டாக்கி, வாசித்த மட்டில் வந்தது லாபம் என்றபடி, படித்த விஷயங்கள் அவர்களின் மனதில் ஸ்திரமாக வேரூன்றி விடுவதால், அன்னோர்கள் அக் கொடிய விஷயங்களில் தத்தம் மதியைச் செலுத்தி அவைகளை விரும்பி மதிமோசம் போகிறார்கள். அந்தோ! பிரிய வாசகர்களே! சிறுவர் சிறுமிகளே! இத்தகைய கொடுஞ் செயல்களைக் கற்பிக்கும் நவகதைகளை வாசிப்பது எதற்கொப்பாகுமெனில், இனிமையான பசும்பாலில் உயிரைக் கொல்லும் பாஷாணத்தை யிட்டுப் பானஞ் செய்வதை யொக்கும். எண்ணிறந்த மக்களை விண்ணிழந்தவர்களாகச் செய்யும் இத்தகைய நாவலின் கேடுபாடுகளை வரையறுத்துச் சொல்லவு முடியுமோ? மேலும் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல வேத ஞானமும் தேவபயமு மில்லாத மாந்தரால் எழுதப்படுகிற கெட்ட கதைகளை வாசிப்பதால் நம்து வாலிபப் பிள்ளைகளும் பெண்களும் இன்னும் வயதுசென்றவர்களு முதலாய் நல்லொழுக்கம், அடக்கம், அன்பு, பெற்றோரைப்பேணல், கடவுள் பக்தி முதலியவைகளைச் சிறிதளவும் தெரிந்துகொள்ளமாட்டாமல் நிரையத்தைப் பயக்கும் பாவப் படுகுழியில் வீழ்த்தப்படுகிறார்கள்.

இப்போது காலமோ கட்டுக்கடங்காது செல்லுகிறது. ஆதலின் கடவுளின்மீது பக்தியைச் செலுத்தாது கேவலம் கெடுபுத்தியையும் கேடுபாடுகளையும் விளைவிக்கும் நாவல்களை வாசித்து நேரத்தை வீணாக்கி வினையைத் தேடிக் கொள்வது புத்தியன்று. அதற்கு மாறாக நற்புத்தி, நல்லொழுக்க மிவைகளை உணர்த்தும் நவகதைகளை வாசியுங்கள். நல்ல கதைகளைக் காண்பதரிதெனினும் கத்தோலிக்கு மேதாவிகள் சிலரால் வரையப்பெற்றவை சில கிடைக்கற் பாலன. அவைகளில் எமக்குந் தெரிந்துள்ளவைகள் பின்வருமாறு; உடைபடா முத்திரை, நந்தனவனம், மனோரஞ்சித மனோன்மணி, பணப்பை, லீலியும் ரோசாவும், மனோகரன், சத்தியவல்லி, பிமலா, எலேன், ஞானமணி முதலியவைகளேயாம்.

ஆங்கிலம் பிராஞ்சு முதலிய பாஷைகளிலெழுதப்பட்டுள்ள சில நாவல்களை வாசிக்கவே கூடாதென திருச்சபை விலக்கி இருக்கிறது. அப்படியே தமிழிலும் ஹிந்துக்களா லெழுதப்பட்டுள்ள பல நாவல்கள் விலக்கப்பட்டுள்ளனவென்று சொல்லாமலே விளங்கும். ஆதலின் அன்னோர் நாவல்கள் எதையும் வாசியாதிருத்தல் கத்தோலிக்கருக் கழகும் கடமையுமாம்.

A. D.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.
அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

1.—அதிகாரம் ; வசனம்—76–80.

வசனம்.—76. நீயோ பாலனே! உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; ஏனெனில் ஆண்டவருடைய வழிகளை ஆயத்தஞ் செய்யும்படியாகவும்,

77. நம்து கடவுளின் இரக்க உருக்கத்தால் அவருடைய ஜனத்தின் பாவ மன்னிப்புக்காக அவர்களுக்கு இரட்சணிய அறிவைக் கொடுக்கும்படியாகவும் அவருடைய சமுகத்துக்கு முன் நடந்து போவாய்.

78. அந்த இரக்க உருக்கத்தால் உன்னதத்தினின்று உதயமானவர்,

79. அந்தகாரத்திலும் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு ஒளி வீசவும், நமது பாதங்களைச் சமாதானத்தின் பாதையில் நடத்தவும் நம்மைச் சந்தித்திருக்கிறார் என்றார்.

80. பிள்ளையோ வளர்ந்து, ஞானத்தில் தேறி, தம்மை இஸ்ராயேல் ஜனத்துக்குக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தார்.

76–77.—நீயோ பாலனே! உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்..............சக்கரியாஸ் பாடிய சங்கீதத்தின் இரண்டாம் பாகம் இவ்வசனங்களில் அடங்கி யிருக்கிறது. முதல் பாகத்தில் மெஸ்ஸியாவைப்பற்றி கூறிய பின், இரண்டாம் பாகத்தில் மெஸ்ஸியாவின் முன்னோடியாகிய அருளப்பரைப் பற்றி சக்கரியாஸ் பாடுகிறார்.........இவர் தம்முடைய குமாரன் ஆனதினால் உருக்கமான பற்றுதலைக் காண்பித்துப் பாடுகிறார்.

"நீயோ பாலனே" என்று தன் குமாரனை அழைத்துப் பாடினதினால், பாலனாகிய அருளப்பர், சக்கரியாஸ் உரைத்த வார்த்தைகளைக் கண்டுபிடித்தார் என்றும் அக்காலத்திலேயே அவருக்குப் புத்தி விபரம் இருந்ததென்றும் சில சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்ற சாஸ்திரிகள் இந்த அபிப்பிராயத்துக்கு மாறாகப் பேசுகிறார்கள். அதெப்படியென்றால், தீர்க்கதரிசிகள் உயிரும் அறிவு மில்லாத பொருள்களை உருவகித்து, உயிரும் அறிவுமுடைய வஸ்துக்களைப்போல் பாவித்து அழைப்பது போலவும் வருங் காரியங்களை நிகழ் காரியங்களாக உருவகித்து அழைப்பதுபோலவும், புத்தி தெளிவை இன்னும் அடையாத பாலனாகிய தம் குமாரனைச் சக்கரியாஸ் அழைத்தாரென்றும், அவரைப்பற்றி, தான் உரைத்த தீர்க்கதரிசின வாக்கியத்தை அங்கு கூடியிருந்த மற்ற ஜனங்கள் கேட்டு, அதின் விபரத்தை அறிந்துகொள்ளும்படியாக இவ்வாறு உருவகித்துப் பாடினார் என்றும் கூறுகிறார்கள்.

"உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்," என்பது அருளப்பர் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டு எலியாசின் ஞானத்தையும் வல்லமையையும் கொண்டு, அவிசுவாசிகளை மனந்திருப்பி கர்த்தருக்கு உத்தம ஜனத்தை ஆயத்

தப்படுத்தினாராகையால் அவர் தீர்க்கதரிசி என்ற பெயருக்கு முற்றும் உரியவரென்று காட்டுகிறது. மேலும்மற்றத் தீர்க்கதரிசிகள் மெஸ்ஸியா வருகையைத் தூரதிருஷ்டியால் அறிந்து வெளிப்படுத்தினார்கள். அருளப்பரோவென்றால், மெஸ்ஸியாவின் காலத்தில் இருந்துகொண்டே அவரைக் கண்ணாரக்கண்டு களித்து, மற்றவர்களும் கண்டுகளிக்க அவரைச் சுட்டிக் காண்பித்தார். ஆகையால் மற்றத் தீர்க்கதரிசிகளைப் பார்க்கிலும் இவர் சிறப்பும் சிரேஷ்டமும் பெற்றவராவர்.

"அருளப்பர் ஆண்டவருடைய வழிகளை ஆயத்தஞ் செய்யும்படியாக" அனுப்பப்பட்டார் என்றால் மெஸ்ஸியாவின் வருகைக்கு அவருடைய ஜனங்கள் அபேக்ஷை ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கவும், அவர் பூலோகத்தில் தோன்றினவுடன் அவரை மெய்யான உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், அவர் கொண்டுவரும் இரட்சண்ணிய பலன்களில் பங்காளிகளாக, தங்களைப் பச்சாத்தாபத்தால் பாத்திரமாக்கவும் அவர்களுக்குப் போதிக்க ஏற்பட்டார் என்பதே.

மெஸ்ஸியாவின் இரட்சண்ணிய பலன்கள், யூதர்களுடைய லௌகீக இராஜாங்கத்தை மறுபடியும்சீர்படுத்தி நிலைநிறுத்துவதில் அல்ல, அச்சனத்தின் பாவ மன்னிப்பிலும், இருதய சுத்திகரத்திலும், ஞான சீவிய வர்த்திப்பிலும், தேவ இஷ்டப் பிரசாத விர்த்தியிலும் அடங்கி யிருக்கிறபடியால் இந்த ஞான அறிவை லோகசிந்தையாயிருந்த யூதஜனங்களுக்குத் தமது புத்தி படிப்பினையாலும் உத்தம மாதிரிகையினாலும் போதிக்க, அருளப்பர் முன்னோடியாக அனுப்பப்பட்டார். அருளப்பர் ஜனங்களுக்குப் பாவமன்னிப்பு கொடுத்ததில்லை. இது மெஸ்ஸியாவாகிய கிறீஸ்துநாதருக்கு மாத்திரம் உரிய வல்லமை. ஆனால் கிறீஸ்துநாதர் லோகத்தை இரட்சிக்கவந்த மேரையும், அவரால் ஈடேற்றத்தை யடைய செய்த பாவங்களுக்குப் பச்சாதாபப்படவேண்டிய மேரையும், நற்கிரியைகளின் பலனைக் காண்பித்து ஆயத்தமாகவேண்டிய மேரையும், அப்படியே செய்யாதவனுக்குத் தேவ ஆக்கினை வரப்போகிற மேரையும் படிப்பித்து, சமஸ்தருக்கும் நேரான வழியைப் பிரசங்கித்து, அவர்களைத் தூண்டிவந்தார் அவர்.

ஜனங்களுக்கு இரட்சணியத்தின் மெய்யான ஞான அறிவும், பாவமன்னிப்பும், ஆத்தும சுத்திகரமும் உண்டாகிறதற்குக் காரணம் சர்வேசுரனுடைய இரக்க உருக்கமே.

சர்வேசுரனுடைய இரக்கத்தை வருணிக்க மூல பாஷையில் (Viscera Misericordiae) தேவ தயவின் குடல்கள் என்று சொல்லி யிருக்கிறது. எபிரேய பாஷையில் தேவ தயவின் குடல்கள் என்கிற வார்த்தையினால் சர்வேசுரனுடைய அளவற்ற இரக்க உருக்கமும், அற்புத கனிகர பட்சமும் குறிக்கப்படுகிறது.

78–79.—"அந்த இரக்க உருக்கத்தால் உன்னதத்தினின்று உதயமானவர். அந்தகாரத்திலும் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு ஒளி வீசவும், நமது பாதங்களைச் சமாதானத்தின் பாதையில் நடத்தவும் நம்மைச் சந்தித்திருக்கிறார்." என்பது வானுலகத்தினின்று சூரியன் உதயமாகி தனது பிரபையைச் சரமாரியாய் எங்கும் வீசி, இப் பூமியின் காரிருளை அறவே நீக்கி, சமஸ்த ஜீவராசிகளுக்கும் உஷ்ணத்தையும் பிரகாசத்தையும், உயிரையும் உற்சாகத்தையும், சிங்கார வனப்பையும் கொடுத்து, அதனை இன்பக் கடலில் அமிழ்த்துமாப்போல், நமது தேவ இரட்சகர் தேவ பிதாவினிடமிருந்து நீதி சூரியனாய்ப் புறப்பட்டு, இப் பூலோகத்தில் இறங்கிவந்து, தப்பறைகளின் அந்தகாரத்திலும், பாவங்களின் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிற நிர்பாக்கியருக்கு விசுவாசத்தின் ஒளியையும், இஷ்டப்பிரசாத பிரகாசத்தையும் வீசி அவர்களை மனச் சமாதானத்துக்கும், இரட்சணியத்துக்கும், மோட்சபேரின்ப பாக்கியத்துக்கும் கொண்டுபோவார் என்று உலக இரட்சகராலுண்டாகும் ஈடேற்றத்தின் ஞான இலட்சணங்களை சக்கரியாஸ் வருணித்து விளக்குகிறார். மெஸ்ஸியாவை நீதி சூரியன் என்றும், கீழ்த்திசையோன் என்றும் தீர்க்கதரிசிகள் கூறியிருப்பதை சக்கரியாஸ் இங்கு நினைவு கூறுகிறார்.

எபிரேயர் துன்பமும் துயரமுமான காரியங்களை இருள் என்றும், சந்தோஷகரமான சுப காரியங்களை வெளிச்சம் என்றும் சொல்வது வழக்கம்.

அந்தகாரம்.—தப்பறை, அறிவின்மையை மாத்திரமல்ல, மிகவும் துக்கத்துக்குரிய நிர்ப்பாக்கியமான அந்தஸ்தையும் குறிக்கும்.

பிரேத க்ஷேமஸ்தலங்கள்—பயங்கரமான இருளால் மூடப்பட்டு துக்கத்தைக் காண்பிக்கிறபடியால்மரண நிழல் கொண்டஸ்தலங்கள் என்று எபிரேய பாஷையில் சொல்லப்படும்.

ஆகையால் அந்தகாரத்திலும் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிறவர்கள் முக்கியமாய் ஆர் என்றால், நிர்மல மெய்ம்மறை ஒளியின் அறிவற்று, நித்திய மரணத்துக்கும் கேட்டுக்கும் உட்படுத்தும் பாவதோஷங்களால் அலைக்கழிக்கப்பட்டு, நிர்ப்பாக்கியராய் உழன்று திரியும் அஞ்ஞானிகளே. இவர்கள்தான் தங்களைப் படைத்த சர்வேசுரனை வணங்காமல், மண்ணையும், கல்லையும், மரத்தையும், மிருகத்தையும், துஷ்ட மனிதர்களையும், தீய அரூபிகளாகிய பசாசுக்களையும், ஓரே வார்த்தையில் படைப்புண்ட வஸ்துக்களையே தெய்வங்களாக்கி, அவைகளுக்கு தூபதீபம் காண்பித்து, பரலோக இராச்சியத்தின் பாதையில் நடவாமல், நரக பாதாளத்துக்குப் போகும் பாதையில் சென்று அலைந்து திரிந்து மோசம் போகிறார்கள்.

மெய்ம்மறையின் ஒளியைப் பெற்ற யூதஜனங்களுக்கு மாத்திரம் அல்ல, புறஜாதியாராகிய நிர்ப்பாக்கிய அஞ்ஞானிகளுக்கும் கூட மெஸ்ஸியாஸ் ஞான சூரியனாய் உதித்துவந்து, அவர்களுடைய குருட்டாட்டத்தை நீக்கி, பாவ மன்னிப்பு அளித்து பரகதியில் சேர்ப்பார் என்று சக்கரியாஸ் இப்பாடலில் எடுத்துரைக்கிறார்.

"நமது பாதங்களைச் சமாதானத்தின் பாதையில் நடத்தவும் நம்மைச் சந்தித்திருக்கிறார் என்றார்."

இவ்வசனம் இஸ்ராயேல் ஜனங்களைப் பற்றிச் சொல்லப்பட்டது. இவர்களுக்கு மெய்ம்மறையின் வெளிச்சமும், மெய்யான கர்த்தருடைய ஆராதனையும், ஆலயமும், வேத கற்பனைகளும் இருந்தபோதிலும் இவர்கள் அநேகமாய் மெய்யான சமாதானத்தின் பாதையில் நடந்தொழுகாமல், உண்மையான பாக்கியத்தைத் தேடாமல், லௌகீக காரியங்களை நாடி கெட்டுப்போனபடியால், இவர்களைச் சமாதானத்தின் பாதையில் நடத்த மெஸ்ஸியாஸ் உலகில் தோன்றுவார் என்று சக்கரியாஸ் வெளிப்படுத்துகிறார்.

ஆகையால் யூத ஜனங்களுக்கு இவ்வுலகில மெய்யான சமாதானமும், சகல பாக்கிய சம்பத்தும், மறுலோகத்தில் நித்திய சமாதானமும் பேரின்ப பாக்கியமும் மெஸ்ஸியாவால் மாத்திரம் கிடைக்கும் என்பது இவ்வசனத்தின் பயனாம்.

"நம்மைச் சந்தித்திருக்கிறார்" என்றால் நமது பேரில் கிருபைகூர்ந்து, தமது அருளையும் அன்பையும் தேவ வரங்களையும் ஏராளமாய்ப் பொழிந்தார் என்றர்த்தமாகும்.

80-வது வசனம்.—"பிள்ளையோ வளர்ந்து, ஞானத்தில் தேறி, தம்மை இஸ்ராயேல் ஜனத்துக்குக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தார்."

பாலனாகிய அருளப்பர் சரீரத்தில் வளர்த்தியடைந்ததுபோல ஆத்துமத்திலும் தேவ இஷ்டப் பிரசாதம பெற்று ஞானத்தில மென்மேலும் விர்த்தியடைந்தார். வயதில் எவ்வளவு வளர்ந்தாரோ, அவ்வளவும் இஸ்பிரீத்து சாந்துவின் அருளிலும் புண்ணிய பயிர்ச்சியிலும் தேர்ச்சியடைந்தார். யூதேயா தேசத்து வனாந்தரத்தின் பற்பல இடங்களில் அநேக வருஷகாலமாய் வசித்துவந்தார். மனுஷ சஞ்சாரத்தையும் லோக சந்தடியையும் வெறுத்து விலக்கிவிட்டு வனவாசியாய்ச் சர்வேசுரனோடு ஏகாந்தமாய்ச் சீவித்து வந்தார். ஆனால் எவ்வயதில் ஏது நிமித்தமாக வனவாசத்துக்குப் போனார் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை—துஷ்ட எரோதிராயன் கிறீஸ்துநாதரைக் கொல்லத் தேடினபோது, அருளப்பரையும் தேடித் திரிந்ததினால் அவரை எலிசபெத்தம்மாள் கூட்டிக்கொண்டு வனாந்தரத்தில் சீவித்தாளென்று

சிலர் சொல்ல, அவர் தாய் தந்தையோருடைய வீட்டில் வளர்ந்து அவர்களால் அக்ஷராப்பியாசம், தேவ வாக்கியம், பிதாப் பிதாக்களுடைய சுகிர்த சீவியம் இவை முதலான ஆத்தும இரட்சிப்புக்கு வேண்டிய யாவையும் படித்து லோகத்தை வெறுத்து வனவாசத்திலே ஏகாந்தமாய்ச் சீவிக்கப் போனார் என்று மற்றவர்கள் உரைக்கிறார்கள்.

இந்த வனவாசத்தில் லோக வாழ்வின் வாஞ்சையை முற்றாகக் கைவிட்டுச் சரீர சுகசுகிப்பை வெறுத்து, ஒட்டக ரோமத்தினால் நெய்த கம்பளிச் சட்டையை அணிந்து, தோல்வாரை யரையிற்கட்டி, காட்டுஇலை, குழை, கிழங்கு கனிவகைகளையும் காட்டு தேனையும் மாத்திரம் புசித்து, ருசிகரமான உணவுகள், மதுபானம் அநுபவியாமல், மனோதியானத்திலும், செபத்தியானத்திலும், செலவழித்து வந்தார்.

லோகத்தின் இன்ப சுகபோகங்களை மட்டுத்திட்ட மில்லாமல் அனுபவிக்கும் மனிதர்களுக்குத் தவத்தைப் பிரசங்கிக்க வந்தவர், தானே முந்த முந்த தன்னை கடினமாய் ஒறுத்துத் தவ நெறியை அனுசரிப்பது அவசியமே.

தேவ தோத்திரத்துக்காக அரிய பெரிய மாட்சிமையான காரியங்களைச் செய்ய குறிக்கப்பட்டவர்கள், வனத்தில் தனிவாசம செய்து, தேவனோடு ஏகாந்தமாய்ச் சல்லாபித்து, கடுந்தபம் செய்து, தங்களுக்கு வேண்டிய வரங்களையும், மனோபலத்தையும் உற்சாகத்தையும் தங்கள் வேலைக்கு வேண்டிய தேவ ஆசீர்வாதத்தையும் சம்பாதிப்பார்கள்—இவ்வாறு தேவ ஊழியத்தில் பேர்போனவர்களாக, மோயீசன், எலியாஸ், அருளப்பர் விளங்கினார்கள்.

முன்னோடியின் வேலைக்கு முஸ்திப்பாக அருளப்பர் முப்பது பிராயம் வரையில் வனாந்தரத்தில் சீவித்தார். அதே பிராயத்தில் நமது திவ்ய இரட்சகர் வேதம் போதிக்கத் துடங்கினபோது, அருளப்பர் வனாந்தரத்திலிருந்து வெளிப்பட்டார். மெஸ்ஸியாவை ஏற்றுக்கொண்டார். தன்னுடைய சீஷர்களை அவரிடம் ஒப்புவித்தார். ஜனங்களும் அவரை ஏற்றுக் கொள்ளும்படியாக வாக்கு வல்லமையோடு பிரசங்கித்தார்.

S. M.

1.—அதிகாரம் முற்றிற்று.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

44-ம் அதிகாரம்.

பஞ்சவர்ணக் கிளியை பறக்கவிட்டு, வெறும் பஞ்சரத்தைக் கொண்டுபோன சேந்தலைப் புலிகள்.

டெப்டி சூப்பரின்டெண்டும் இன்ஸ்பெக்டரும் பண்டிதருடைய பங்களாவை விட்டு போலீஸ் டாணுவுக்குப் புறப்பட்டபின், பண்டிதர் தமது பங்களாவின் மேல் மெத்தையில் இருந்த கோவிலுக்கு சார்ஜன்டு உத்தரவின் பேரில் போய், அங்கு சற்று நேரம் பக்தி விஸ்வாசத்துடன் வேண்டிக்கொண்டபின், ருக்மணி பிரேத மிருக்கும் அறைக்குச் சென்றார். அந்நேரத்தில் ஜனக் கூட்டம் கலைந்தபடியால், சார்ஜன்டு பண்டிதரை அணுகி: ஐயா, உங்களை ஜட்காவண்டியில் ஏற்றிக் கொண்டு டாணுவுக்கு கொண்டுவரும்படி சூப்பரின்டென்டு உத்தரவு அளித்தார். தயவு செய்து வெளியே வருவீர்களா? என்று சொல்லவே, "இராஜ செங்கோலுக்குக் கீழ்ப்படியாவிட்டால் பெரும் பாதகமாகுமே! இதோ, வருகிறேன் சற்றுப் பொறுங்கள்" என்று பிரேதம் கிடக்கும் கட்டிலை அணுகி வாய்க்குள், என்னவோ துக்கத்துடன் சொல்லிக்கொண்டு, பிரேதத்தை நோக்கி, "ருக்மணி! என் பிரிய கணவீ! கடந்த நாலு வருஷகாலமாய் நாமிருவரும் சருவேசுரனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டுப் பிரகாரம் சீவித்து ஒருவரொருவரை அன்னியோன்னியமாய் நேசித்துவந்தோம். நீயோ உன் சொந்தவீடு போய்ச் சேர்ந்தாய்; நேற்று இங்கு நடந்த சங்கதிகளை பங்காரம்மாள் மூலமா யறிந்து, நீ உத்தம மனஸ்தாபத்துடன் உயிர்துறந்தபடியால் நற்கதி

யடைந்திருப்பாயென்று பூரணமாய் எண்ணியிருக்கிறேன். நானோ, இப்போது உன்னைக் கொலைசெய்த பாதகனாகத் தண்டிக்கப்படப்போகிறேன். உன் இரத்தத்தில் நான் கை நனைத்ததில்லையென்று சர்வ தயாபர சர்வேசுரன் அறிவார். அனியாயமாய்க் குற்றஞ் சாட்டப்பட்ட சுஜானா என்னும் புண்ணியவதியை தானியேல் தீர்க்கதரிசி மூலமாய்க் காப்பாற்றி இரக்ஷித்த கர்த்தர் என்னையும் காப்பாற்றி யிந்த அபாண்டமான பாதகத்தினின்று தப்புவிப்பாரென்று நம்புகிறேன். எந்த தானியேல் எனக்கு உதவியாக வருவாரோ அது கர்த்தருக்கு மாத்திரம் தெரியும். நான் இந்தக் கொலையை நடத்தாதிருந்தும், நான் அவமானமாய்ச் சாகவேண்டுமென்று அவர் சித்தங்கொண்டிருந்தால் அவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது. ஏனெனில், பாவத்தின் நிழல் முதலாய் அண்டாத நரதேவன் உலகத்தின் பாவத்தை யெல்லாம் தமது மேல் சாட்டிக்கொண்டு சகலவித வாதைக்கு முள்ளாகி நிஷ்டூர மரணத்துக்குத் தம்மை கையளித்திருக்க, பெரும் பாவியும் அயோக்கியனுமான நான் அனியாயமாய் மரணத்துக்குக் கையளிக்கப்படுவதால் மனம் சோரமாட்டேன். தேவ சித்தம் நித்தியமாய் வாழ்த்தப்படக்கடவது!

"ஆனால் நீயும் நானும் ஒருநாள் கல்லறையினின்றெழுந்து தேவசிம்மாசனத்துக்குமுன் நிற்போமன்றோ? அப்போது உன்னைக் கொலை செய்த பாதகன் இன்னானென்று பிரசித்தமாய்த் தெரியவரும்; நானோ அந்தக் கொலைப்பாதகனை முழு இருதயத்துடன் பொறுத்துக் கொள்ளுகிறேன்" என்று அன்புடன் அவள் கன்னத்தில் முத்தமிட்டு, சார்ஜண்டை நோக்கி, "வாரீர் நேசரே, போகலாம்" என்று சொல்லி பங்களாவை விட்டுப் புறப்பட்டார்.

அப்போது பங்காரம்மாள் பண்டிதரை நோக்கி, "ஐயா, என் எஜமானே, உமது பிரிய மனைவியை இங்கே விட்டுவிட்டு நீர் போகிறீரோ?" என்று மகா துக்கத்துடன் புலம்பி அழுவதைக் கண்ட பண்டிதருடைய மனம் மெழுகு போல் உருகி, அவர் கண்களினின்று முத்துக்கள் போல் உதிரும் கண்ணீரை கையால் தட்டிவிட்டு "அம்மா, பங்காரம்மா! ருக்மணியை உன் கையில் இப்போது ஒப்புவிக்கிறேன், பார்த்துக் கொள். என் பெற்றோரும் பந்துக்களும், ருக்மணியின் பெற்றோரும் பந்துக்களும் நாளை யிவ்விடம் வந்து சேருவார்கள். அவர்கள் கையில் ருக்மணியை என்பேரால் ஒப்புவித்துவிடு.

"மேலும் ருக்மணியின் பிரேதத்தை நமது சுயநாட்டுக்குக் கொண்டுபோய் நமது பெரியோர்கள் இளைப்பாறும் திருஸ்தலத்தில் ஆரவாரத்துடன் நல்லடக்கம் செய்யும்படி சொல். அவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக தர்ம தானங்கொடுத்து திவ்விய பூசைகளை செய்விக்கச்சொல். இந்தா, இந்தக் கடிதத்தை யென் பிரிய தகப்பனார் கையில்கொடு; அதில் சகலமும் விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கடிதத்தில் மதிராஸ்பாங்குக்குச் செக்கும் பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றது. என்னைப்பற்றி நினைக்கவும் எனக்காகத் துக்கப்படவும் வேண்டாமென்று சொல். உங்கள் குமாரன் தேவதாஸ் உங்கள் புத்திப்பிரகாரம் நடந்து வந்தான். அவன் தன் பெண்சாதியின் இரத்தத்தில் கைநனைத்ததில்லை. நீங்கள் சிறுபத்தில் அவனுக்கு ஓதியபிரகாரம் தேவ பயத்தோடு ஒழுகினான் என்று என் பிரிய தாயாருக்கும் தந்தையருக்கும் சொல் அம்மா" என்றபின் சேவகருடன் கேட்டண்டை போனார்.

அப்போது அவருடைய வேலையாட்கள் அவர் பாதத்தில் விழுந்து, "எங்கள் எஜமானே! உத்தமரான ஐயாவே! நல்ல எஜமானே! எங்கள் எஜமானியையும் பங்களாவையும் விட்டுவிட்டுப் போகிறீரோ?" என்று புலம்பி யழுதார்கள். அப்போது பண்டிதர் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தை சொல்லி, "நாளைக்கு என் தகப்பனார் இங்கே வருவார், அவரைப் போய்ப் பாருங்கள். மூன்று வருஷ சம்பளத்தை உங்களுக்கு இனாமாக கொடுக்கும்படி எழுதியிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கு நின்ற ஜட்காவில் ஏறினார். சார்ஜன்டும் அவருடன் வண்டியில் ஏறிக் கொள்ள, மூன்று ஜவான்கள் வண்டிக்கு முன்னும், மூன்று ஜவான்கள் வண்டிக்குப் பின்னுமாக உருவின கத்தியைக் கையில் பிடித்துக் கொண்டும், பார் செய்த துப்பாக்கியைத் தோள் மேல் வைத்துக்கொண்டும் துரிதமாய் நடக்க, வண்டிக்காரன் குதிரையை அதட்டி ஓட்டினான்.

ரஸ்தாவில் அங்கங்கே சேறுந் தண்ணீருமாயிருந்ததைப்பற்றிக் குதிரையைச் சவாரியில் விடாமல் மெதுவாய் நடத்தி, நல்ல ரோட்டில் முழுச் சவாரியில் விட்டான். அன்று அமாவாசையா யிருந்தபடியால் பெரும் அந்தகாரமா

யிருந்தது. மேலும் வண்டியின் விளக்கில் எண்ணை இல்லாதபடியால் வெளிச்சமின்றியே, குதிரையை முரட்டுத்தனமாய் அடித்து நாலு கால் பாய்ச்சலில் விட்டான் வண்டிக்காரன்.

சற்றுத் தொலைவில் பெரும் சந்தடியாயிருப்பதையும், அநேகர் அங்கு பெருங் கூட்டமாய்க் கூடி யிருப்பதையும் வண்டிக்காரன் கண்டு, தன் குதிரை ஓட்டத்தின் சமர்த்தைக் காட்டும்படி குதிரையை அடிமேல் அடியடித்து ஓட்டும்போது அங்கு கூடியிருந்த ஜனம் அங்குமிங்குமாக விலகி வண்டிக்கு வழிவிட்டார்கள். அன்னேரத்தில் ஒரு பையன் பயந்து ஓடுகையில் கால்தடுமாறி கீழே விழுந்தான். கீழே விழுந்தவன் கால்மேல் வண்டி சக்கரம் ஏறவே, அவன் கோவென்று அழத்துடங்கினான்.

உடனே அங்கு நின்றவர்களில் அநேகர் ஓட்டமாய் ஓடி வண்டியை மடக்கி வாய்க்கு வந்தபடி வண்டிக்காரனைத் திட்டத் துவக்கவே, வண்டியைச்சுற்றிலும் 200, 300 பேர் பெருங்கூட்டமாய்க் கூடி வண்டிக்காரனை வண்டியினின்று கீழே இழுத்துப்போட்டு அவனோடு வாதாடத் துவக்கினார்கள்.

அப்போது போலீசார் வண்டிக்காரனுக்கு சனுகாய் வந்து, "இது போலீஸ் டிப்டிசூப்பிரன்டென்டு பேசின வாடகை வண்டி; கலகம் செய்யாமல் வண்டிக்காரனை வண்டியோட்ட விட்டு விடுங்கள்" என்று சொல்லி ஜவான்கள் எல்லோரும் வண்டிக்கு முன்வந்து நின்றார்கள்.

அப்போது ஜனக்கூட்டத்தில் சிலர் "என்னடா, டிப்டி சூப்பரின்டென்டுக்கு முழக் கொம்பா? அவர் பேசின் வண்டியென்றால் ஜனக்கும்பலில் விட்டு மனிதருடைய கைகாலை முறிக்கச் சொன்னாரடா?" என்று கோபத்துடன் வாய்க்கு வந்தபடி பேசித் திட்டிக்கொண்டிருப்பதைக் கண்ட போலீசாருக்கு பயமுண்டாகி "வண்டிக்காரன் தெரியாமல் ஓட்டிவிட்டான், மன்னியுங்கள் இந்த தபா," என்று கெஞ்சி மன்றாடினபோதிலும் கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்து பெருத்த கலகத்துக்கு இடமுண்டாவதாயிருக்கக்கண்ட சார்ஜெண்டு, வண்டியினின்று இறங்கி, முன்னுக்குப்போய் ஜனக்கூட்டத்துக்கு நல்லவார்த்தை சொல்லி சமாதானப்படுத்த செய்த முயற்சியெல்லாம் வியர்த்தமானது.

அப்போது சார்ஜன்டு சொல்வான், "ஐயமாரே, மாஜிஸ்த்ரேட்டின் உத்தரவுப்படி ஒரு கைதியை இந்த வண்டியில் ஏற்றிக்கொண்டுபோகிறோம். நீங்களிப்போது கலகஞ்செய்து வண்டி போகாதபடிக்குத் தடைசெய்வீர்களேயாகில் இதனாலுண்டாகும் நஷ்டத்துக்கு நீங்களே ஜவாப்புதாரராவீர்கள்" என்று சற்று மிரட்டுவதைக் கண்டவர்கள், "உன் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் அஞ்சுவோமென்று நினைக்கிறாயோ? உனக்கு லா இருப்பதுபோல எங்களுக்கும் லா இல்லை யென்று எண்ணுகிறாயாக்கும்." என்று தைரியமாய்ப் பேசுவதைக்கண்ட சார்ஜன்டு சற்றுநேரம் சும்மா நின்று, "நல்லது, இப்போது என்ன செய்ய நினைக்கிறீர்கள் வண்டிக்காரனுக்கு?" என்று வினாவினபோது, "அவன் செய்த நஷ்டத்துக்குத் தகுந்த பரிகாரம் செய்தாலொழிய நாங்கள் வண்டியை விடமாட்டோம்" என்றார்கள்.

பலர் முன்னுக்கு வந்து மத்தியஸ்தம்பேசி, காயப்பட்டவனுக்குப் பத்துரூபாய் கட்டிக்கொடுக்கும்படி ஒப்பந்தம் செய்யும் சமயத்தில், இராஜகோபால ஐயர் B.A., B.L., என்னும் பாரிஸ்டர் குதிரை வண்டியிலேறி வர, வழியில் இப் பெருங் கூட்டம் கூடி யிருப்பதின் காரணத்தை அறிந்துகொண்ட மாத்திரத்தில், போலீசார் பக்கம் திரும்பி, "நீங்கள் இந்தப் பட்டணத்தின் சமாதானத்தைக் கண்காணிக்கும் காவல்காரராயிருக்கக்கொள்ள, இந்த அமாவாசை யிருட்டில் வண்டியை ஜனக்கூட்டத்தின்மேல் விடுவது எப்பேர்ப்பட்ட அநீதம்?

"முனிசிபல் ரூல்ஸ் பிரகாரம் வெளிச்சமின்றி ஓட்டும் வணடிகளை மறியல் செய்வதற்குப் பதிலாய், நீங்களே வெளிச்சமில்லாத வண்டியில் ஏறிப்போகிறீர்களா? நல்லது, இதைப் பற்றி நாளை மீற்றிங்கில் பேசுவேன்.

"அடே ஸைஸ்! அந்த ஜவான்களுடைய நம்பரைப் பார்த்துவா" வென்னவே, போலீசார் வாலை மடக்கிக்கொண்டு ஒன்றும் பேசாமல் வண்டியுடன் நடந்துபோனார்கள்.

வண்டியை மெள்ள மெள்ள ஓட்டிக்கொண்டு போகும்போது இரு சிறுவர் வண்டிபக்கத்தில் நின்றுகொண்டு "ஜவான் ஐயா! பாருங்கள் இந்தப் பையன் உங்களைப் பரியாசஞ் செய்கிறான்.— 'பஞ்சவர்ணக் கிளியை பறக்கவிட்டு வெறுங் கூட்டைக் கொண்டுபோகும் செந்தலைப் புலிகளே!' என்கிறான்" என்று சொல்லிவிட்டு ஜனக்கூட்டத்தில் இருவரும் ஓடி மறைந்து கொண்டார்கள்.

ஜனக்கூட்டத்தை விட்டு வண்டி போகும்போது, "நமது பண்டிதரைப் பகவான் காப்பாராக" என்னும் பெருஞ் சத்தம் கேட்கப்பட்டது.

வண்டி டாணாவில் போய்ச் சேரவே, இன்ஸ்பெக்டர் சார்ஜன்டை மகா கோபத்துடன் நோக்கி: ஏன் இவ்வளவு தாமதம்? என்றார். அப்போது சார்ஜன்டு நடந்த சங்கதியை வெளிப்படுத்தக் கேட்ட இன்ஸ்பெக்ட்டர்: "என்ன, முட்டாள் பசங்களா யிருக்கிறீர்களே? வெளிச்சமின்றி வண்டியை விடலாமா?

"நல்லது கைதியை உள்ளே கொண்டு போய் லாக் அப்பில் போட்டுப் பூட்டிவிடுங்கள்" என்று உத்தரவு அளித்தார்.

இன்ஸ்பெக்ட்டர் டிப்டி சூப்பரின்டென்டு இருந்த அறைக்குப் போய்க் கைதி வந்து சேர்ந்த சங்கதியையும் வழியில் நடந்த விர்த்தாந்தத்தையும் அவருக்கு அறிவித்தபோது, டி. சூப்பரின்டென்டு "முட்டாள்களான நமது ஜவான்களை நாம் நம்புவது புத்தியல்ல. நாம் இருவரும் ஸ்டேஷனில் நித்திரை செய்வது நன்று. ஒரு ஜவானை யென் வீட்டுக்கு அனுப்பி எனக்குப் போசனங் கொண்டுவரச் சொல்லி, நீர் உமது வீட்டுக்குப் போய்ப் போசனம் செய்துவாரும்" என்றார்.

நடுச்சாம வேளையில் இன்ஸ்பெக்ட்டரும் டி. சூப்பரின்டென்டும் எழுந்து தங்கள் உடுப்புகளை அணிந்துகொண்டு, சில ஜவான்களை யெழுப்பி வேதனை செய்யும் ஆயுதங்களைத் தயார் படுத்தும்படி உத்தரவு கொடுத்தார்கள்.

இன்ஸ்பெக்ட்டர்மாத்திரம் ஒரு லாந்தரைக் கொளுத்திக்கொண்டு லாக் அப்பை மெதுவாய்த் திறந்து உள்ளே போய், கொறட்டைவிட்டு நித்திரைசெய்யும் கைதியைத் தட்டி யெழுப்பிவிடவே, கைதி பயந்து எழுந்து "என்ன ஐயா?" என்றான்.

அப்போது, இன்ஸ்பெக்ட்டர் அவனை வெகுவாய் பயமுறுத்தி "பத்திரம், உன்னைத் தூக்குப்போடும்படி ஆர்டர் வந்துவிட்டது! என்ன சொல்லுகிறாய்?" என்னவே, கைதி கண்கள் இரண்டையும் கையால் தேய்த்துக்கொண்டு "ஐயா, சாமி! தெரியாமல் செய்தேன் மன்னியுங்கள்" என்று வாய்குளறிச் சொன்னான்.

அதற்கு இன்ஸ்பெக்ட்டர் "சென்ட்ரல் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்ட சக்கரபாணியிருக்கும் இடத்தை நீ காட்டினால், நீ யிந்த க்ஷணமே தப்பித்துக்கொள்வாய்; இல்லாவிட்டால் இன்று இராத்திரி நீ சித்திரவதை செய்யப்பட்டு நாளை காலையில் தூக்கில் போடப்படுவாய்! என்ன சொல்லுகிறாய்?" என்றார். அதற்கு "ஐயோ நான் தெரியாமல் செய்தேன் சாமி பொறுத்துக்கொள்ளும்" என்றான் கைதி.

"சக்கரபாணி யிருக்கும் இடத்தை காட்டுவாயோ?" என அதற்கு கைதி தலையை ஆட்டினான். "உன் பெண்சாதியை கொலைசெய்த பாதகம் மறைக்கப்பட்டு நீ விடுதலையாவாய்." என்றதற்கு கைதி தன் கையைக் குவித்து இன்ஸ்பெக்ட்டருக்குத் தண்டம் போட்டான்.

"இப்போது சூப்பரின்டென்டு இடத்தில் வந்து உன் பாதகக் குற்றத்தை ஒத்துக்கொண்டு சக்கரபாணி யிருக்கும் இடத்தைக் காட்டுவாயா?" என்றதற்கு கைதி தலையை அசைக்க இன்ஸ்பெக்டர் சந்தோஷித்து மகிழ்ந்து, அக்ஷணமே டி. சூப்பரின்டென்டிடம் போய், "சார், நீங்கள் சொன்னபடி சகலமும் அனுகூலமாய் முடிவானது" என்றார். அதற்கு சூப்பரின்டென்டு. "என்ன? அதற்குள்ளாக காரியம் முடிந்ததா?" என்று அதிசயித்தார். "கைதி தூக்க மயக்கத்துடன் இருக்கும்போது, தாங்கள் கற்பித்தது போல, நான் அவனை காபராப்படுத்தி பயமுறுத்திக் கேட்கவே, இரண்டுக்கும் ஒத்துக்கொண்டான்."

"எந்த இரண்டுக்கும்?"

"தானே தன் மனைவியைக் கொலை செய்ததாக ஒத்துக்கொண்டான்?"

"பிறகு?"

"சக்கரபாணி யொளிந்திருக்கும் இடத்தைக் காட்டுவதாகவும் சொன்னான்."

"அப்படியா? சவாஸ்! சவாஸ்! இது நல்ல பரிட்சை!"

"பேஷான பரிட்சை சார்!"

"இனிமேல் கைதிகளின் குற்றங்களை வெகு எளிதில் அறிந்துகொள்ளலாம்"

"ஆ! ஆ! எவ்வளவு சுலபமான வழி குற்றத்தை அறிவதற்கு! இனி அடியும் மிதியும் குத்தும் தேவையில்லை"

"இத்தனை யூரோப்பியன் ஆபீசர் இருந்தும் என்ன பிரயோசனம்? ஆயிரம் ஆயிரமாய்ச் சம்பளம் வாங்கும் அந்தத் தோலான்களுக்கு இந்த உபாயம் தெரியவில்லையே! என்ன, இந்திய

றென்றால் லேசானவர்களா? படிப்பிலும் சாமர்த்தியத்திலும் சாஸ்திரங்களைக் கண்டு பிடிப்பதிலும் யூரோப்பியரிலும் ஆயிர மடங்கு சிறந்தவர்கள் !''

"அதற்குக்கூட சந்தேகமா சார் ?''

"நல்லது, இந்த உபாயத்தை யாருக்கும் சொல்லவேண்டாம். நம் இருவருக்குள் இரகசியமா யிருக்கட்டும்.''

"அப்படியே; நான் யாருக்கும் சொல்லேன்.''

"நமது ஸ்டேஷனுக்கு வரும் கைதிகளின் குற்றங்களை ஒரே இராத்திரியில் நாம் கண்டு பிடிப்பதைக் கண்டு உலகம் அதிசயிக்கும். யூரோப்பியன் ஆபீசர்களுக்கு இது எப்பேர்ப்பட்ட வெட்கக்கேடு !''

"அதுகூட சொல்லவேண்டுமோ சார் !''

"நல்லது அந்தக் கைதியை என்னிடம் கூட்டிக்கொண்டுவந்து அவனுடைய தப்பிதத்தை ஒத்துக்கொள்ளச் செய்யும்.''

இன்ஸ்பெக்டர் லாக் அப்புக்குள் சென்று இன்னொருமுறை அவனுக்குப் போதித்து, "சூப்பரின்டென்டு காலில் விழுந்து உன் தப்பிதத்தை ஒத்துக்கொண்டால், உடனே உன்னை அவர் மன்னிப்பார். எழுந்துவா'' வென்று அவனைக் கூட்டிக்கொண்டுவந்து, "இவர்தான் சூப்பிரன்டென்டு துரை'' யென்றார் இன்ஸ்பெக்ட்டர்.

உடனே கைதி அவருடைய காலில் விழுந்து கோவென்று அழுது "தெரியாமல் செய்தேன், பொறுத்துக்கொள்ளும் துரையே'' என்றான்.

அதற்கு சூப்பிரன்டென்டு கைதியை நோக்கி, நல்லது: "நீ அந்தக் குற்றத்தைக் கட்டிக்கொண்டது வாஸ்தவந்தானே ?'' "ஆம்'' என்றான் கைதி.

"சக்கரபாணி இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா?'' என்று வினவியபோது அதற்கும் கைதி தலையாட்டினான்.

"நல்லது எழுந்திரு. உனக்கு எழுதத் தெரியுமா?'' அதற்கும் அவன் தலையை ஆட்டினான்.

ஒரு காகிதம், மைக்கூடு, இறகு இவைகளை மேசைமேல் வைத்து, "நீ செய்த தப்பிதத்தை இந்தக் காகிதத்தில் எழுதி, அதில் உன் கையொப்பம் போடு'' என்று சொன்னார் டி. சூப்பரின்டென்டு.

அப்போது அந்தக் கைதி வெகுநேரம் தட்டித் தடுமாறி காகிதத்தில் நாலு வரி யெழுதி நிமிர்ந்தான்.

உடனே சூப்பரின்டென்டு அதை ஆத்திர அவசரத்துடன் எடுத்துப் பார்த்தபோது, "இதென்ன பாஷையடா அப்பா? என்னிடம் கண்ணாடியில்லை. நீ இதை வாசியும் பார்க்கலாம்'' என்று இன்ஸ்பெக்ட்டர் கையில் அதைக் கொடுத்தார். அந்தக் காகிதத்தை இன்ஸ்பெக்ட்டர் வெகு நேரம் மேலும் கீழுமாகப் பார்த்து, ஒவ்வொரு எழுத்தாய்க் கூட்டி, வெகு நேரஞ் சென்று பின் வருமாறு வாசிப்பார் :—"நான் ரஸ்தாவில் ஒண்ணுக்கு இருந்தது வாஸ்தவமே. தெரியாமல் செய்தேன். என் தப்பிதத்தைப் பொறுத்துக்கொள்ளும். இப்படிக்கு நடேச முதலியார்.''

இதை வாசித்த பின் போலீஸ் ஆபீசர் இருவரும் ஒருவர் ஒருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு சற்று நேரம் மௌனமா யிருந்தார்கள்.

பிறகு டி. சூப்பரின்டென்டு இன்ஸ்பெக்ட்டரைப் பார்த்து இவன் பாசாங்கு போடுகிறான் போலும்.

இன்ஸ்.—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

டி. சூப்.—(கைதியை நோக்கி) அடே, என்னடா இது? என்னோடு விளையாடுகிறாயோ ?

கைதி.—(தலையை அசைத்தான்.)

டி. சூப்.—என்னடா நீ பைத்தியக்காரனா?

கைதி.—அதற்கும் தலையை யாட்டினான்.

அப்போது இரு போலீஸ் ஆபீசர்களும் யோசனை செய்து, கொஞ்சம் சூடுகொட்டினால் அவன் மெய்யாகவே பைத்தியம் பிடித்திருக்கிறவனோ அல்லது பாசாங்கு காட்டுகிறானோவென்று அறிந்து கொள்ளலாமென்று சொல்லி ஒரு ஜவானை அழைத்து "இவனை உள் அறைக்குக் கொண்டுபோய் சுடச்சுட ரெண்டு போடு''என்று இன்ஸ்பெக்ட்டர் சொன்னார். அப்போது அந்த ஜவான் கைதியைப் பார்த்த மாத்திரத்தில் இவன் மெய்யான பைத்தியக்காரன் தான் ஸ்வாமி. இவன் பெயர் நடேசன் ! நாடோறும் வீடுவீடாய்ப்போய் இரந்து குடித்து மரத்தடியில் படுத்துக்கொள்ளுகிறவன் என்றான்.

சூப்.-பைத்தியக்காரனானால் பொன் தொப்பியும், ட்வீட் லாங் கோட்டும், சருகை அங்கவஸ்திரமும் போட்டுக்கொள்வானோ ?

ஜவான்.—இல்லை ஸ்வாமி. யாரோ இவனுக்கு இப்படி உடுத்தியிருக்கவேண்டும்.

சூப்.—அவனைக் கேள்.

ஜவான்.—நடேசா, எண்டா இங்கே வந்தாய்?

கைதி.—உளறிக்கொண்டு, இராத்திரி ரஸ்தாவில் ஒண்ணுக்கு இருந்தேன். அப்போது ரெண்டு ஜவான்கள் எனக்கு இந்தச் சட்டையை மாட்டி, அங்கவஸ்திரத்தை தோளில் போட்டு குல்லாவை தலையில் வைத்து என்னைக் குதிரை வண்டியில் தூக்கி வைத்து, இதில் பேசாமலிரு, என்று பயமுறுத்தினார்கள், என்றான்.

பண்டிதர் தப்பித்துக்கொண்டதையும், அவருக்குப் பதிலாக இந்தப் பயித்தியக்காரன் தம் வசத்தில் இருப்பதையுங்கண்ட போலீஸ் ஆபீசர் பொறுக்க முடியாத கோபோக்கிரம் கொண்டு, அங்கு நின்றுகொண்டிருந்த ஜவான்கள்மேல் நாக சர்ப்பம் போலச் சீறி விழுந்து, அவலக்ஷண பாஷையால் அவர்களை யேசித் திட்டி, "என்னடா, கழுதைகளே! கேப்புமாறி போக்கிரி படுவாக்களே ! என்னை யிப்படி ஏமாற்றினீர்கள் ! நல்லது அந்தப் பண்டிதனுக்குக் குறிக்கப்பட்ட ஜெயில் உங்களுக்கே சொந்தமாகும். ஜெயில் மாத்திரமா? இந்த உங்கள் துஷ்ட வேலைக்கு சம்பாவனையாக அண்டமான் தீவே உங்களுக்கு சதா இருப்பிடமாகும்'' என்றார்.

"எங்கே அந்த படவா சார்ஜன்டு?'' என்று கோடை இடி யிடிப்பதுபோல கர்ஜித்தார் போலீஸ் ஆபீசர். உடனே ஒரு ஜவான் ஓட்டமாய் ஓடிப்போய் தன் வீட்டில் நன்றாய் நித்திரை செய்யும் சார்ஜண்டை கூட்டிக்கொண்டு வந்தான்.

போலீஸ் ஆபீசர் அவனைப் பார்க்கவே, கோபத்தால் பொங்கி, அவன் தலைப்பாகையை பத்து அடி தூரத்தில் பந்துபோல குதித்து விழும்படி தட்டிவிட்டு, அவன் சட்டை கோட்டின்மேல் தைக்கப்பட்டிருந்த கோரைப் பிடுங்கி அதைச் சின்னா பின்னமாய்க் கிழித்தெறிந்து, "அடே, நேற்று, அந்தக் கைதியை பந்தோபஸ்தாய் கொண்டுவந்து சேர்க்கும்படி உனக்கு உத்தரவு அளித்திருந்தும், லஞ்சம் வாங்கிக்கொண்டு கைதியை தப்பவிட்டு இந்தப் பைத்தியக்காரனை யடா கொண்டு வந்தாய்?'' என்று அவனை அடிக்கவும் உதைக்கவும் தலைப்பட்டார்.

அன்னேரத்தில் சார்ஜண்டுக்கு உரோஷமும் கோபமும் உண்டாகி, "என் உத்தியோகம் போனாலும் போகட்டும், போலீஸ் ஆபீசரை எதிர்த்து பழிதீர்ப்பதே சரி'' யென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டானாயினும், தன் வசத்தில் ஒப்படைக்கப்பட்ட கைதி தப்பித்துக்கொண்டானென்கிற வார்த்தையைக் கேட்கவே, அதிக துக்கமும் பயமும் கொண்டவனாய் "ஐயா ஸ்வாமி! நேற்று இராத்திரி கைதியை வண்டியிலேற்றிக்கொண்டு வரும்போது நடந்த கலக நேரத்தில் அவன் தப்பித்துக்கொண்டிருக்கவேண்டும்'' என்றான்.

போலீஸ் ஆபீசர், வழியில் நடந்த கலகத்தைப்பற்றி கேள்விப்படவே, ஆயிரமடங்கு அவருக்கு கோபம் அதிகரித்து, "என் வண்டியில் வெளிச்சமின்றி புறப்பட்டீர்கள்? அதுவும் உங்கள் பிசகுதான்'' என்று வெகுநேரம் ஆத்திர கோபத்துடன் தாட் பூட். தக்கடா, புக்கடா வென்று குதித்தபின், இன்ஸ்பெக்ட்டரை "நோக்கி, பார் உமது சார்ஜன்டாலும் ஜவான்களாலும் நமக்கு வந்த கீர்த்தியை! இன்றைக்கு மாஜிஸ்ற்றேட்டு கச்சேரிக்கு விசாரணை செய்ய வரும்போது நாம் எந்த முகத்துடன் அங்கே போயிருப்போம்? கைதி யெங்கே என்றால் என்ன மறுமொழி சொல்வோம் அவருக்கு? வழியில் கைதி தப்பித்துக்கொண்ட சங்கதியை அறிந்தால் உலகம் எப்படி நகைக்கும் நம்மை! அடடா நான் இப்பேர்பட்ட அஜாக்கிரதையை ஒருபோதும் பார்த்தேன் இல்லை! பண்டிதன் வீட்டில் நேற்று இராத்திரி நடந்த நாடகத்திலும் இது பெரிய நாடகமா யிருக்கிறதே! அந்த நாடகத்தைக் கண்டு உலகம் பரிதபித்து துக்கப்பட்டது. இந்த நாடகத்தைப் பார்த்து சிரித்து நகைக்காதோ?'' என்று வெகுநேரம் பேசிய பின், இப்போது நமது கேசின் ரூபத்தை வேறு விதமாய் மாற்றவேண்டும்.

"நேற்று வண்டியோடுவந்த எழு பேரும் இங்கே வந்து நில்லுங்களடா'' என்று போ. ஆபிசர் மொழியவே, சார்ஜன்டும் ஆறு ஜவான்களும் அவருக்கு முன் வந்து நின்றுகொண்டு அவருக்கு சலூட் செய்தார்கள்.

வழியில் நடந்த கலகத்தைப் பற்றி அவர்களிடம் தீர்க்கமாய் அறிந்த பின் "அந்தக் கூட்டத்தில் யார் அதிகமாய்ப் பேசினது?'' என்று கேட்டார்.

ஜவான்கள்.—இருட்டா யிருந்ததைப்பற்றி ஒருவரையும் அறியோம் சாமி.

சூப்.—நீ, சார்ஜன்டு?

சார்.—பலான நபரென்று எனக்குத் தெரியவில்லை ஸ்வாமி; ஆனால் குதிரை வண்டியிலே, இராஜகோபால ஐயர் இருந்தார் சாமி,

சூப்.—பாரிஷ்டரா?

சார்.—ஆம், அவர்தான் சாமி.

சூப்.—அவரைத் தவிர வேறே யாரையாவது பார்க்கவில்லையோ?

சார்.—இல்லை ஸ்வாமி.

சூப்.—நல்லது, முன் எப்போதாகிலும் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டவன், எவனாகிலும் அந்த வீதியிலிருக்கிறானோ?

சார்.—எனக்குத் தெரிந்த மட்டும் ஒருவருமில்லை அந்த வீதியில்.

சூப்.—அடுத்த வீதியில்?

சார்.—சிலருண்டு.

சூப்.—(அவர்களுடைய பேரை ஒரு கடுதாசியில் எழுதிக்கொண்டு) நல்லது நீங்கள் போகலாம், என்று அவர்களை அனுப்பி விட்டு, இன்ஸ்பெக்டரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, வண்டியிலேற்றிக்கொண்டு வரப்பட்ட கைதியான நடேசன் போ. ஆபீசரைப் பார்த்து, "ஐயா, ஐயா" என்று பரிதாபத்துடன் என்னவோ உளறிக்கொண்டு கண்டுபிடிக்கக்கூடாத விதமாய்ச் சொன்னான்.

அப்போது போ. ஆபீசர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "இந்தப் பீடை யிங்கே என்னத்துக்கு? அவனை வெளியே துரத்திவிடும்" என்றார். இன்ஸ்பெக்டர், "அடே நீ யிங்கே வந்ததாக ஆருக்கும் சொல்லாதே" என்றபோது, நடேசன் தலையை ஆட்டினான். "பத்திரம் நீ யிங்கே வந்ததாக யாருக்காகிலும் சொன்னால் உன்னை ஜெயிலில் அடைப்பேன்" என்றதற்கும் அவன் தலையை அசைத்துக்கொண்டே வெளியே போனான்.

போலீஸ் ஆபீசர் இருவரும் அன்று நித்திரை செய்யாமல், மறு நாள் பத்து மணிக்கு கொலை கேஸ் விசாரணையாகும்போது என்ன செய்யலா மென்று தங்களுக்குள் ஆலோசனை செய்துகொண்டு. கைதியைச் சிலர் பலவந்தமாய் வண்டியிலிருந்து தப்பித்துவிட்டார்களென்று கேசைச் சிருட்டித்துக்கொண்டார்கள்.

A BODY WITH NO HEAD.
சிரசற்ற உடல்.

சுமார் 300 வருஷங்களுக்கு முன் இங்கிலாண்டு தேசத்தை அரசுபுரிந்து வந்த அரசராகிய VIII-ம் என்ரி நல்ல கத்தோலிக்கரா யிருந்தார். ஆனால் தன் மனைவி உயிரோ டிருக்கும்போதே வேறொரு ஸ்திரீயின்மீது துர் இச்சை வைத்து அவளை மணமுடித்துக்கொள்ள ஆசித்து, அதற்காக அர்ச். பாப்பானவரை, உத்தரவு கேட்டார். பாப்பானவர் அப் பாதகத்துக்குச் சம்மதியாதபடியால், அரசன் புது வேதம் உண்டாக்கி அபராதத்தாலும் சிறையாலும் மரணத்தாலும் தன் பிரஜைகள் அப் புது மதத்தை அனுசரிக்க அவர்களை வலுகட்டாயப்படுத்தினான். அதனால் கணக்கற்றபேர் சத்திய வேதத்தினிமித்தம் இரத்தம் சிந்தி வேத சாட்சிகளானார்கள். மேலும் சத்திய வேத முறைமைகளையும், வேத சத்தியங்களையு முற்றிலும் மாற்றி. மனித பாசத்துக்கு ஏற்றவைகளை இவரும் இவருக்குப்பின் அரசு புரிந்தவர்களும் உண்டுபண்ணிக்கொண்டார்கள். இப்படியே தேவநற்கருணை வெறும் அப்பம் என்றார்கள். பாவ சங்கீர்த்தனம் புதிதாய் உண்டுபண்ணப்பட்ட கல்பனை யென்றார்கள். 7 தேவத்திரவிய அனுமானங்களில் இரண்டொன்றை அங்கீகரித்துக்கொண்டு மற்றவைகளை நீக்கிவிட்டார்கள். பூசைப்பலியை வியர்த்த சடங்கென்றார்கள். கன்னிமையை அனுசரிப்பது அசாத்தியமென்றார்கள். உத்தரிக்கிற ஸ்தலமில்லை யென்றார்கள். ஒருசந்தி உபவாசம் அவசரமில்லையென்றார்கள். சுரூப வணக்கத்தை விக்கிரக ஆராதனை என்றார்கள். இவ்வாறு சத்தியவேதப்படிப்பினைகளை முற்றிலுந் தள்ளிவிட்டு ஒருவனுடைய நடத்தை எப்பேர்ப்பட்டதா யிருந்தபோதிலும் பரவாயில்லை, ஆனால் அவன் கிறீஸ்துவை நம்பினால் மாத்திரம்போதுமென்று படிப்பித்தார்கள்.

ஆயினும் கடந்த ஐம்பது வருஷக் காலமாய் புரோடஸ்டாண்டு மதமென்று சொல்லப்படுகிற இம் மதத்தின் அப்போஸ்தலர்களான அரசர்களாலும் அவர்களைப் பின்பற்றினவர்களாலும் உண்டுபண்ணப்பட்ட அபத்தப் படிப்பினையை விட்டு விட்டு, கத்தோலிக் வேதப் படிப்பினையே அப்போஸ்தலர்களுடைய படிப்பினை யென்று கூறுகிறார்கள் அனேக புரோடஸ்டான்டார். 7-தேவத்திரவிய அனுமானங்களை சேசுநாதர் உண்டாக்கினா ரென்றும், தேவநற்கருணையில் சேசுநாதர் மெய்யாகவே இருக்கிறாரென்றும் அனேக பாதிரிமார் நம்பி, அப்படியே படிப்பித்து பூசை செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள். (ஆனால் அவர்களுக்கு மெய்யான குருப்பட்ட மில்லாதபடியால், அவர்களுடைய பூசை வெறுஞ் சடங்கும். அவர்கள் தேவநற்கருணை வெறும் உரொட்டியுமென் றறிக). பாதிரிமாருக்குள் சிலர் அங்கிதரித்து, தங்களுக்குச் சர்த்தியப்படுமட்டும் விரத்தராயிருக்கிறார்கள். பீடங்களைக் கட்டி தேவமாதா முதலிய அர்ச்சியசிஷ்டவர்களின் சுரூபங்களை ஸ்தாபித்து வேண்டிக்கொள்ளுகிறார்கள் சில பாதிரிமார்கள். இன்னுஞ் சிலர் உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று நம்பி மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்கள். தங்கள் மதத்திலுண்டாகும் இப்பேர்ப்பட்ட விபரீதங்களைப் பார்க்கப் பார்க்க நூற்றுக்கணக்கான பாதிரிமார், புரோடஸ்டாண்டு மத்த்தை விட்டுவிட்டு, சத்திய வேதத்தில் சேர்ந்து வருகிறார்கள். அவர்களில் பிரமச்சாரிகளானவர்கள் குருப்பட்டத்துக்கு அவசரமான படிப்பைக் கற்ற பிறகு, குருப்பட்டம் பெற்று சத்திய வேதத்துக்காக உழைத்து வருகிறார்கள். புரோடஸ்டாண்டாரிலும் அனேகர் தங்கள் மதம் பொய்யானதென்று கண்டுணர்ந்து சத்தியவேதத்தில் சேருகிறார்கள். இவர்கள் சாமான்யமானவர்களல்ல. பிரபுக்களும், சாஸ்திரிகளும், படிப்பாளிகளும், இராணுவ வீரர்களுமான கனவான்கள். இங்கிலாண்டில் வருஷா வருஷமும் இவ்வாறு மனந் திரும்புகிறவர்களின் சராசரி தொகை 10,000.

ஆக்ஸ்போர்ட் நகரின் பிஷப்பான (Dr Gore) கோர் என்பவர் சில மாதங்களுக்குமுன் தமது புரோட்டஸ்டாண்டு சபையாருடைய உபயோகத்துக்காக, ஒரு செபப் புஸ்தகம் அச்சிட்டிருக்கிறார். அதில் கத்தோலிக் வேதம் ஆதிமுதல் அப்போஸ்தலர்களால் படிப்பிக்கப்பட்ட வேதப் படிப்பினையை அனுஷ்டித்து வருகிறதென்றும், பாவசங்கீர்த்தனந் தேவ நற்கருணை முதலிய 7 தேவத்திரவிய அனுமானங்களை சேசுநாதர் ஸ்தாபித்தாரென்றும், தேவ நற்கருணை வெறும் அப்பமாயிராமல், அதில் சேசுநாதர் மெய்யாகவே இருக்கிறாரென்றும், உத்தரிக்கிற ஸ்தல முண்டென்றும், தேவமாதா, சம்மனசுக்கள் முதலிய மோட்சவாசிகளை வணங்குவது ஞாயமென்றும், இப்படியே நாம் அனுசரித்துவரும் எல்லா வேதசத்தியங்களும் உண்மையானவை யென்றும் எழுதியிருக்கிறார். ஆனால் சில பாதிரிமார் இவைகளை ஒத்துக்கொள்ளாமல் இவரோடு வாதாடுகிறார்கள். இது எப்படி முடியுமோ பார்ப்போம். தலையற்ற உடலுக்குச் சமானமான புரோட்டஸ்டாண்டு மதம் படும் பாட்டைப் பாருங்கள்!! இப்படிப்பட்ட மதத்தாரோடு கூட்டுறவு செய்வது தங்களுக்கு கவுரவமென்று எண்ணுகிறார்கள், கத்தோலிக் கிறீஸ்துவர்களிற் சிலர், என்ன விந்தை யிது!!

THE BISHOPS' CONFERENCE.
மேற்றிராணிமாரின் தீர்மானங்கள்.

சில கிறீஸ்துவர்கள் நமது மேற்றிராணிமார்களுக்கு விரோதமாக எழுதியும் பேசியும் வந்த விஷயங்கள் ஒழுங்கற்றவைகளென்றும் கண்டனைக்குரியவைகளென்றும் சென்ற 4 மாதங்களாக "நல்லாய" னில் வெளிப்படுத்தி வந்தேனென்று, பிரிய நண்பர்களே, நீங்களே அறிவீர்கள். சென்ற ஜூலை மாதம் 31-ம் தேதியில் பிரசுரமான "கத்தோலிக்கு நேசன்" என்னும் பத்திரிகையில், எனக்கும், நானெழுதிய விஷயங்களுக்கும் விரோதமாக ஒருவர் எழுதி யிருக்கிறதாகச் சில தினங்களுக்கு முன் கேள்வியுற்று அந்த பத்திரிகையை வரவழைத்துப்பார்த்தேன். அதில் ம-ா-ா-ஸ்ரீ, டி. குழந்தை யென்பவர் என் மீது மகா ஆக்கிரஷங் கொண்டு, நான் எழுதியவை தவறானவை யென்றும், பச்சையப்பன் ஹாலில் நடந்தேறிய சங்கதிகளை கதா ரூபமாக வரைந்தேனென்றும், 17-ம், 18-ம், நூற்றாண்டுகளில் சீவித்தவர்களின் கொள்கையைப் பின்பற்றி எழுதினேனென்றும், பச்சையப்பன் ஹாலில் நடந்தவைகளை நான் நேரில் பாராமல் மற்றப் பத்திரிகைகளைக் கொண்டு அறிந்து எழுதினேனென்றும் என் மீது குற்றங் கூறுகிறார். அது நிற்க, நானிருக்குமிடம் அவருக்குத் தெரியாதென்றும், நான் சென்னை முதலிய பெரிய பட்டணங்களில் வசித்ததில்லை யென்றும், ரயில் மார்க்கத்துக்குத் தூரத்திலுள்ள நாகரீகமற்ற நாட்

டுப்புறத்தில் வசிப்பவனென்றும் கூறுகின்ருர். மேலும் நான் எழுதியவை மெய்யோ பொய்யோவென்று அறிந்து எழுதவில்லையென்றும், இதனுல் கோரத்தை அதிகரிக்கச்செய்து கலகத்தை உண்டுபண்ணினேனென்றும் என் மீது குற்றங் கூறுகின்ருர்.

நமது நேசத் தந்தையர்களாகிய மேற்றிராணிமார்களுக்கு விரோதமாகப் பேசியும் எழுதியும் இருப்பவர்களுடைய நடத்தை தவருனதென்று மற்றக் கிறீஸ்துவர்கள் எளிதில் அறிந்து, குழப்பக்காரரைச் சேராதிருக்கும்படி, அவர்கள் நடத்தியவைகளை உவமை ரூபமாக எழுதினேனே ஒழிய கதா ரூபமாக எழுதினேனில்லை,

17-ம்,18-ம், நூற்ருண்டுகளில் வசித்தவர்களின் கொள்கையைப் பின்பற்றி நான் எழுதியதாக, டி. குழந்தை என் மீது குற்றங் கூறுகிருர். 17-ம்,18-ம் நூற்ருண்டுகளில் மாத்திரமல்ல, அவைகளுக்கு முந்தின ஆண்டுகளிலுமிருந்தவர்களின் கொள்கையையும் பின்பற்றி எழுதினேனென்று அவர் அறிவாராக. அது எவ்வாறெனில், நமது சத்திய திருச்சபையானது, தலையற்ற உடலுக் கொப்பான புரோடஸ்டாண்டு மதத்தைப் போன்ற ஒரு வகுப்பல்ல. அம்மதஸ்தர் தங்களுக்கு இஷ்டமானபடி வேத சத்தியங்களையும், வேத படிப்பினைகளையும் அப்போதைக் கப்போது மாற்றிக்கொண்டு வருகிருர்கள். நமது பரிசுத்த திருச்சபையோ அப்பேர்ப்பட்டதல்ல. அப்போஸ்தலர் காலத்தில் போதிக்கப்பட்ட வேத சத்தியங்களும் வேதப் படிப்பினைகளும் இப்போதும் யாதொரு மாற்றமுமின்றி போதிக்கப்பட்டு வருகின்றது. சகல கிறீஸ்துவர்களும் தங்கள் ஞான அதிகாரிகளாகிய மேற்றிராணிமாருக்கு அமைந்து கீழ்ப்படிய வேண்டுமென்னும் போதனை ஆதி யுகத்தில் போதிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டது போலவே, இந்த நூற்ருண்டிலும் போதிக்கப்பட்டு வருகின்றது. நான் "நல்லாய" னில் வரைந்த வியாசங்களில் மேற்றிரர்ணிமார்களைச் சிலர் அவசங்கைப்படுத்தி அவர்களுடைய தீர்மானங்களைத் திரஸ்கரித்து அவர்களைக் கேவலமாகப் பேசியது தவருனதென்றும் கண்டனைக்குரியதென்றும் கூறினேன். ஆனுல் டி. குழந்தையுடைய அபிப்பிராய மென்னவெனில், பூர்வ நூற்ருண்டுகளில் வசித்த கிறீஸ்துவர்கள் காட்டு மிராண்டிகளாகவும் மூடாத்மாக்களாகவு மிருந்து, மேற்றிராணிமாருக்கு அமைந்து கீழ்ப்படிந்து வந்தார்களென்றும், ஆனுல் 20-ம் நூற்ருண்டாகிய இக்காலத்து கிறீஸ்துவர்கள் நாகரீகத்தில் சிறந்திருப்பதால் தங்கள் ஞான அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாமலிருந்து அவர்களுடைய தீர்மானங்களைத் திரஸ்கரித்து, அவர்கள் தங்கள் தீர்மானங்களுக்கு உட்படவேண்டுமென்பதே போலும். 4-ம் நூற்ருண்டில் திருச்சபையில் சுக்கிரன்போல் பிரகாசித்து, புண்யவாளராய் ஒழுகி, ராஜாங்க விஷயமாகப் பெருங் குற்றங் கட்டிக்கொண்ட தெயதோசியஸ் சக்கரவர்த்தியை தேவாலயத்தில் பிரவேசிக்கவிடாமல், அதன் வெளி வாசற்படிக்குப் புறம்பே சில காலமிருந்து ஜெபதபம் புரியும்படி கற்பித்த அர்ச் அம்புரோஸ் மேற்றிராணியாரும், அவரைப்போலொத்த அர்ச். கிறிசோஸ்தொம், சிப்பிரியன், அகுஸ்தீன் முதலான பரிசுத்த மேற்றிராணிமார்களும் தங்கள் கல்லறைகளினின்று எழுந்து வந்து சென்னையில் இத்தகைய கிறீஸ்துவர்களால் நடத்தப்படும் விசனத்துக்குரிய நடவடிக்கைகளைத் திருஷ்டிப்பார்களாஞல் என்ன சொல்லுவார்கள் !

சில மாதங்களுக்குமுன் பச்சையப்பன் ஹாலில் நடந்தேறிய விருததாந்தங்களை நான் நேரில் பார்க்காமல் மற்றவர்கள் மூலமாய்க் கேள்விப்பட் டெழுதின தாக டி. குழந்தை என்மீது தோஷஞ் சுமத்துகிருர். அவர் வாசித்தறிந்த பூகோள சாஸ்திரங்களையும், தேச சரித்திரங்களையுங் கண்ணுரக் கண்டு படித்தாரோ? அவர் நேசனில் வரையும் சங்கதிகளனைத்தையும் நேராகப் பார்த்து எழுதினுரோ? இல்லையே. நானும் அவ்வாறே பச்சையப்பன் ஹாலில் நடந்தேறினவைகளை "ஹிந்து" முதலிய பத்திரிகைகளை வாசித்து எழுதலானேன்.

நானிருக்கு மிடம் அவருக்குத் தெரியாதென்கிருர். மேலும் நான் ரயில்மார்க்கத்துக்குத் தூரமான இடத்தில் வசிப்பதாகவும், சென்னை முதலிய பெரிய பட்டணங்களிலே நான் வசியாமல் நாகரீக மற்ற நாட்டுப்புறத்தி லிருப்பதாகவும் உரைக்கின்ருர். நான் ஜில்லா தலைநகரமாகிய பல்லாரியில் வசிக்கிறேன். ரயில்வே ஸ்டேஷன் நானிருக்கும் ஸ்தலத்துக்கு அரை மயில் தூரத்திலிருக்கிறதென்று அறிவாராக.

சென்னை முதலிய பெரிய பட்டினவாசிகள் மாத்திரம் நாகரீக முள்ளவர்கள். நாட்டுப்புறங்களில் வசிப்பவர்கள் காட்டுமிராண்டிகளென்று டி. குழந்தை அபிப்பிராயப் படுகிருர் போலும். நாகரீகமுள்ளவனுர்? தெய்வ பக்தி, சற்குணம், நன்னடத்தை, பிறநேசம், மேரை மரியாதை முதலிய நற்குணங்களை வகிப்போனே நாகரீகமுள்ளவனுவான். ஆகையால், சென்னை முதலிய பெரிய பட்டினவாசிகளுடைய நடத்தையும் குணுகுணங்களும் எப்பேர்ப்பட்டதாயினும் அவர்கள் மாத்திரம் நாகரீக முள்ளவர்களென்றும், நாட்டுப்புறவாசிக ளனைவோரும் நாகரீக மற்றவர்களென்றும் டி. குழந்தையவர்கள் செய்த தீர்மானத்தை மாற்றிக்கொள்வாராக.

மேலும் நான் எழுதியவை மெய்யோ பொய்யோவென்று அறியாமல் எழுதினதாக டி. குழந்தை என்மேல் குற்றங் கூறுகிருர். சில கிறீஸ்துவர்கள் "ஹிந்து" பேப்பர்களில் பிரசுரித்த விஷயங்களையும், பச்சையப்பன் ஹாலில் நடந்த விருத்தாந்தங்களையும் ஷ பத்திரிகை மூலமாகவும், வேறு சில பததிரிகைகள் மூலமாகவும் அறிந்து "நல்ல ஆய" னுக்கு எழுதலானேன். ஆகையால் நான் வெளியிட்ட விஷயங்கள், உண்மையற்றவையல்லவென்று காட்டியாய்க் கூறுவேன்.

நான் "நல்லாய" னில் சில வியாசங்களை விளம்பரஞ்செய்து கிறீஸ்துவர்களுக்குள் கலகம் எழுப்பினதாகவும் என்பேரில் டி. குழந்தை நேரங் கூறுகிருர். நான் கலகம் எழுப்புகிறேனே, அல்லது டி. குழந்தை கலகம் எழுப்புகிருரோவென்று நண்பர்களே பின் தொடருவதை வாசித்து, நீங்களே, சாட்சியம் பகருவீர்களாக. மேற்றிராணிமாரின் தீர்மானங்கள் ஒழுங்கற்றவைகளென்று பிதற்றி, அவர்களுடைய அதிகாரத்தைத் திரஸ்கரித்து, அவர்களைப்பற்றிக் கேவலமாய்ப் பேசுகிருர்கள் டி. குழந்தையும் அவருடைய கட்சிக்காரரும். நானே, நமது திவ்ய கர்த்தர் அப்போஸ்தலர்களை நோக்கி "உங்களைக் கனப்படுத்துகிறவன் நம்மைக் கனப்படுத்துகிருன்; உங்களை நிந்திக்கிறவன் நம்மை நிந்திக்கிருன்" என்னும் சுவிசேஷ வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு, அப்போஸ்தலர்களுடைய பதிலாளிகளாகிய மேற்றிராணிமாரைச் சகல கிறீஸ்துவர்களும் சங்கித்து அவர்களுடைய தீர்மானங்களை அங்கீகரித்துக்கொள்ளவேண்டுமென்றும், அவர்களுடைய தீர்மானங்களில் அதிருப்தி யிருக்குங்கால் ஆடுகளையும், ஆட்டுக் குட்டிகளையும் மேய்க்கத் தேவ அதிகாரம் பெற்றுள்ள அர்ச். பாப்பானவருக்கு அதை அறிக்கையிட்டு அவருடைய தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டுமென்கிறேன். இது கலகத்துக்குரியதோ? இது கலகத்துக் குரியதல்லவென்று கிறீஸ்துவர்கள் மாத்திரமல்ல, இதர மதஸ்தரும் ஒத்துக்கொள்வார்கள்.

இவ் வியாசத்தை "கத்தோலிக்கு நேசன்" என்னும் பத்திரிகைக்கு அனுப்ப எண்ணங் கொண்டேனென்ருலும் டி. குழந்தை யவர்கள் அறிவித்திருப்பதுபோல "கத்தோலிக்கு நேச" னுக்கு, மேற்றிராணிமார் அளித்திருந்த அனுமதி ஆசீர்வாதத்தை அவர்கள் நீக்கிவிட்டதால், நேசனுக்கு இதை அனுப்புவது ஒழுங்கீனமென் றுணர்ந்து, இதை அதற்கு அனுப்பாமல் "நல்லாய" னுக்கு அனுப்பலானேன். வெகு கனதத முகாந்தரங்களின்றி மேற்றிராணிமார் நேசன் விஷயத்தில் இவ்வாறு நடந்துகொள்ளார்களென்று சகல கிறீஸ்துவர்களும் அறிந்து கொள்வார்களாக.

Bellary. 22—8—17. } **M. J. MICHAEL,** Cath. Indian Priest.

வியாதியில் முறைப்படாமலும் உன் வருத்தத்தை வெளியில்ல காட்டாமலும் சிரவணத்தோடிருப்பாயாக.

உனக்கு நேரிடும் கஸ்தி விரோத மனக்கிலேச முதலிய தொந்தரவுகளில் அமிர்தகுணங் கொண்டு அடக்கமாய்ப் பேசி சாந்தகுணத்தைக் காண்பித்து மாடப்புருவைப்போ லிருப்பாயாக.

—(அர்ச். லிகோரியர்.)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

செக்கந்திராபாத்.

இம் மாதம் 12-ந் தேதி வியாழக்கிழமை 63-வது பாளையங்கோட்டை லைட் இன்பென்டிரியின் சுதேசக் கிறீஸ்துவர்கள் பரிசுத்த இருதய நாதரின் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர். பட்டாளத்துக் கருகாமையிலிருக்கும் அர்ச். அந்தோனியார் ஆலயம் சிறிய கட்டிடமானதால் அதின் இடது புறத்து பிறத்தியேகமான ஒரு ஸ்தலத்தில் அதிக ஜனங்க ளடங்கக்கூடியதும் வெளிப் பார்வைக்கு ஜனங்களின் மனதைக் கவரத்தக்கதுமான அழகியதோர் (Tent) டேராவை அமைத்து அதினுள் வெகு சிறப்பாக பலிபீடம் ஒன்றைச் சிங்காரித்திருந்தனர். காலை சுமார் $7\frac{1}{4}$-மணிக்கு வைக்கர் ஜெனரல், எச். காலி சுவாமியா ரவர்கள் பாடல் பூசையைத் துவக்கினர். பூசையில் அநேகர் தேவநற்கருணை உட்கொண்டனர். பூஜை முடிந்த பிறகு பட்டாளத்துக் கிறீஸ்த்துவர்களில் சிலர் இருதய சபையில் உட்பட்டனர். மாலை சுமார் 6-மணிக்கு மேற்குறித்த சுவாமியாரும் சங். சப்பிராட்டி சுவாமியாரும் அர்ச். மோக்ஷ விராக்கினி மாதாக் கோவிலிலிருந்து தேவநற்கருணையை எடுத்துக் கொண்டு திருநாள் கொண்டாட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த ஸ்தலத்துக்குச் சமீபத்தில் போகும்போது பட்டாளத்து பாண்ட் வாத்தியக்காரர் வாத்தியத்துடன் எதிர் சென்று குருப்பிரசாதிகளை மண்டபத்துக்குள் ளழைத்துச் சென்றனர். சுமார் $6\frac{1}{4}$-மணிக்கு சங். ஜே. மென்கோனி சுவாமியார் பரிசுத்த இருதயநாதர் நமதுபேரில் பொழியும் சொல்லொண்ணு அணை கடந்த கருணையை மனமிளகப் பலவிதமாகப் பிரசங்கித்தனர். அதின் பிறகு சுற்றுப்பிரகாரம் தொடங்கிற்று. சிறப்போ சொல்லத்தரமல்ல. இவர்கள் ஜோடித்த 3 தேர்களின் விசித்திர வேலையை மெச்சாதாரில்லை. பரிசுத்த இருதய நாதரின் சுரூபமும் தேரும் ஒரே மாதிரியான வர்ணமாய்க் காணப்பட்டது. சுற்றுப்பிரகாரத்தின் ஒழுங்குகள். 1-வது சிலுவை குருஸ், 2-வது ஐர்துகாய் பிரான்சீஸ் கன்னியாஸ்திரிகளுடன் மடத்து சிறுமிகள், 3-வது அர்ச். அந்தோனியார் தேர், 4-வது பெண் பிள்ளைகள், 5-வது தேவதாயாரின் தேர், 6-வது பாண்ட், 7-வது இருதயநாதரின் தேர், 8-வது குருப்பிரசாதிகள், 9-வது பாடல்காரர்கள், 10-வது மற்றுமுள்ள சபையார்கள் பவனி வந்து $7\frac{1}{2}$-மணிக்குத் தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. காலையிலும் மாலையினும் வந்த ஜனங்களுக்கு காப்பி, தேத்தண்ணீர் பரிமாறப்பட்டது. இதனுல் தேவநற்கருணை உட்கொண்டவர்களுக்கும் தூர்த்திலிருந்து வந்த ஜனங்களுக்கும் தங்கள் வீடுபோய்ச் சேரும் பரியந்தம் சற்று ஆதரவாயிருந்தது. அன்றிரவு அர்ச். மோக்ஷ விராக்கினி மாதாவின் பஜனையோரால் பஜனை செய்யப்பட்டது.

இவர்கள் சாதாரணமாக மே மாத திருநாள் கொண்டாடுகிறது வழக்கமாம். இத் திருநாளின் வைபவ காரண மேதென்றால் தற்காலம் நடக்கும் ஐரோப்பிய கொடிய யுத்தத் துவக்கத்தில் ம-ா-ா-ஸ்ரீ, எஸ். தெய்வசகாயம் சுபேதாரும் இவருடன் சில கிறீஸ்துவர்களும் இதரமதஸ்தரும் போக நேரிட்டபோது இவர்கள் செய்து கொண்ட நேர்ச்சிக்கடனும். அதாவது, நமக்கு ஓர் பொல்லாங்கும் நேரிடாமல் காத்து இரட்சிக்கப்பட்டு நமது சுதேசத்துக்குத் திரும்புவோமாகில் சேசுவின் திரு இருதய திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடலாம் என்பதே. இதற்கு எல்லோரும் சம்மதித்து இவ்வுற்சவத்தை இவ்விடம் நிறைவேற்றினர். மே மாதத் திருவிழாவும் தவறிப்போகாமல் 15-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது பூசை இவர்களுடையதாய் இருந்தது. அர்ச். மோக்ஷ விராக்கினிமாதாக் கோவிலின் மத்திய பீடத்தி னெதிரில் பரிசுத்த தேவதாயார் சுரூபத்தை வெகு அழகாய் ஐரோப்பிய கன்னியாஸ்திரிகள் ஜோடித்திருந்தார்கள். சங். ஜே. மென்கோனி சுவாமியாரவர்களால் பாடல் பூசை செய்யப்பட்டது. மறுபடியும் சில வேளை இவர்கள் இக் கொடிய யுத்தத்துக்குப் 'போக நேரிடுமாகில் இவர்களை இதுவரையிலும் அரவணைத்துக் காத்ததுபோல் இவ் வேளையிலும் காத்துத் தங்கள் சுதேசத்துக்குத் திரும்பி வருமளவும் யாதொரு அபாயமும் நேரிடாமல் காத்தருள வேண்டுமென்று நாம் அனைவரும் நமது பிறர் ஸ்நேகத்தைக் காட்டி அன்புடன் திவ்ய இருதய நாதரை நமது அனுதின ஜெபத்தில் தவறாமல் மன்றாடுவோமாக.

இத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட, வேணுமென்று அதிக சிரமமெடுத்துக் கொண்டவரும் டை பட்டாளத்துக் கிறீஸ்துவர்களுக்குச் சபைத் தலைவரும் சுபேதாருமாகிய எஸ். தெய்வசகாயம் என்பவர் நீடிய ஆயுளையும் இன்னும் வரவிருக்கும் கவுரதா பட்டத்தையும் பெற்று, மென்மேலும் புத்திர பாக்யமடைந்து குறையா சம்பத்துடன் வாழப் பரிசுத்த இருதய நாதர் கருணைபுரிவாராக.

செக்கந்திராபாத்-தர்க்கன், 16—7—1617. } துடர்வண்டி எக்காளம்.

பெங்களூர்

அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபை பத்தாம் வருட மஹோத்ஸவம்.

நிகழாண்டு ஆகஸ்டுமீ 12உ ஆதிவாரமன்று காலை, ஏற்கனவே சபை மெம்பர்களுக் கறிவித்திருந்தபடி தலைச் சபையில் அர்ச். சவேரியார் கோவில் வாசகக்கூடத்தில் பிளாக்கிப்பள்ளி, சப்பரமாநகர், பேட்டை, சூளை, புதுசீமோன்புரம், இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயன்ஸ் ஹெப்பால் முதலிய கிளைச்சபையோரும் வந்தொருங்கு சேர, அங்கிருந்து சரியாய் $6\frac{1}{2}$-மணிக்கு, வரிசைக்கிரமமா யணிவகுத்து சபை விருதேந்தி ஊர்வலமாய்க் கோவிலுக்குச் சென்று, திவ்ய திருப்பலி பூசை கண்டு, மெம்பர்களனைவரும் திருச்சற்பிரசாத விருந்துட்கொண்டார்கள். பூசை முடிந்தபின் மீண்டு மணிவகுத்து பஜனையோர்கள் வாத்ய கோஷ்டத்துடன் வாசகக்கூடம் வந்து சேர, மைசூர் பார் இன்பண்டரி ஸ்டிரிங்பாண்ட் (String Band) இவர்களனைவரையும் வரவேற்றதுபோல் முழங்கினது. உடனே சப்பரமாநகர் அர்ச். செல்வநாயகம்மாள் பஜனை சபையோர் செலவில் காலை போஜன உபசரிப்பு குறைவற நடந்தபின் சரியாய் 10-மணிக்கு மெம்பர்களல்லாதவர்களுக்கு அழைப்புப் பத்திரமனுப்பியிருந்தபடி யனேக கனதனவான்கள் விஜயஞ்செய்ய, மஹா வந்திக்கத்தக்க மைசூர் மேற்றிராணியார் H. தெஸ்ஸியர் ஆண்டவரவர்களும், விசாரணை குருப்பிரசாதியும், சபையக்ராஸனருமாகிய சங். இராஜரிஷி T. B. சர்வாந்தோன் குருஸ்வாமிகளும் இன்னும் வேறு பல குருமார்களும் எழுந்தருளிவர டை பாண்ட் இனிய கோஷத்துடன் சபை பொது காரியதரிசியும் பொக்கிஷாதிபரும் அவர்களை வரவேற்று கரகோஷ ஆர்ப்பாட்டத்துடன் குறித்த ஆஸனங்களி லமர்ந்தனர். உடனே பரிசுத்த பாப்பாண்டவர் வாழ்த்து "God save the Pope" பாடப்பெற்றபின் ஜெப மொப்புக்கொடுக்கப்பட்டது. உடனே மேற்றிராணியாரவர்கள் எழுந்து முன்னுரையாக குடிப்பழக்கத்தால் விளையுந் தீமைகளையும், குடிவிலக்கினுல் விளையு நன்மைகளையும் விவரமாய் விளக்கிக் காட்டினர். பிறகு சபை பொதுக் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ K. ஜோஸேப்பு பிள்ளையவர்கள் அச்சிட்டுப் பிரசுரித்திருந்த பத்தாமாண்டு மஹோத்ஸவ அறிக்கை (Report) யையும்; சபை பொது பொக்கிஷாதிபர் ம-ா-ா-ஸ்ரீ C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களாலெழுதி சபையாரால் அச்சுவாஹனமேற்றியிருந்த "மனோகரன்" அல்லது மதுவிலக்கு மான்மியம் என்னு நாவலின் முகவுரையினையும் மிக்கத் தெளிவாகவும், நிதானமாகவும் வாசித்தானபின் மேற்றிராணியா ரவர்களுக்கும் குருமார்களுக்கும் பூமாலை சூட்டினபிறகு, சபையக்ராஸனருக்குச் சபையார் ஓர் சிறு காணிக்கையொப்புக்கொடுத்தனர். மெம்பர்க ளனைவரும் சத்தியம் புதுப்பிக்க அவர்களுக்கு ரிப்போர்ட்டும் குடும்ப மித்திரன் என்னும் அச்சிட்டிருந்த வியாசமும் பகல் போஜனத்துக்குச் சீட்டும் கொடுக்கப்பட்டது. முடிவுரையாக சபை யக்ராஸனர் எழுந்து குடிவிஷயமாக ஆண்டவரவர்கள் விவரமாக விளக்கிகாட்டிவிட்டமையால் அதை யான் மீண்டும் பிரசங்கிப்பது ஓர் சிறு குரு ஜெகத் குருவுக்குப் போதித்தது போலாகுமானதால் அதைவிடுத்து எனக்குக் கொடுத்த காணிக்கையை யங்கீகாரஞ்செய்து, சபையாருக்கு வந்தன ஆசீர் கூறுகிறேனென்று கூறி யமர்ந்தபின் மேற்றிராணியாரவர்கள் சபையின் நல்ல கருத்தையும் நடந்த விஷயங்களையுங் கண்டு மனம் பூரித்தவராய்த் தமது திரு கைநாட்டிட்டு 5 ரூபாய் நறுக் கொன்றெழுதி பெட்டியில் போட்டு எல்லோருக்கும் ஆசீர்வாத மளித்து பாண்ட் வாத்திய முழக்கமும் ஜனத்திரளின் கரகோஷ ஆர்ப்பாட்டமும் செவிடுபட ஒலிக்க குருமார்கள் சென்றபின், புதியவர்களும் பழயவர்களுமாகிய ஏறக்குறைய 500 மெம்பர்களுக்கு அறுசுவையோடு கூடிய விருந்தளிக்கப்பட்டது. இது முடிந்த பிற்பகல் $2\frac{1}{2}$-மணிக்கு சபையார் விருப்பத்துக்கிணங்க அர்ச். செசிலியம்மன் டிராமாட்டிக் கம்பனியார் அர்ச். செசிலியம்மன் சரிதை

யைச் சுருக்கமாக நாடக ரூபமாய் நடத்திக் காட்டி மங்களம்பாடியபின் சபை பொக்கிஷாதிபதி கனம். C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை அவர்களுக்கு வந்தனங்கூறி பூமாலைசூட்ட. மஹோத்ஸவம் முடிவுபெற்றது.

இது 10-ம் வருடமாகையாலும், சென்ற 9 வருஷங்களைவிடச் சிறப்பாகக் கொண்டாடவும் சபைக்கு மாத சந்தா முதலியன இல்லாமையாலும் சபையார் கோரிக்கையின்படி அநேக கனவான்கள் உள்ளூரிலும் வெளியிலும் தங்களால் கூடிய உதவி செய்தார்கள். சபையார் அந்த நன்கொடையாளர்கள் நாமதேயங்களை ரிப்போர்ட்டில் பிரசுரித்ததோடு நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள். சிலது காலதாமதமாய் வரப்பெற்றமையால் ரிப்போர்ட்டில் விடப்பட்டது. சிலது இன்னும் வரவேண்டியதா யெதிர்பார்க்கப்படுகிறது. சபை சட்டத்தின்படி சபையில் சேர்ந்து மரித்தவர்களுக்கு அப்போதைக்கப்போது ஓர் பூசை செய்வித்ததோடு சபையாரம்பத்திலிருந்து இந் நாள்வரையில் மரித்த மெம்பர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக 13—8—17ல் பொதுவாய் ஓர் ஒப்பிஸ் பூசை Requiem Mass செய்விக்கப்பட்டது.

கண்டுகேளித்தோன்.

காலிமாநகர்.

பரத மாதாவாகிய திவ்ய தஸ்நேவிஸ் அன்னையின் திருவிழா சென்ற பல வருடங்களைவிட இவ்வருடம் வெகு ஆடம்பர அக்களிப்புடன், இவ்வூரில் தற்சமயம் வசித்துவரும் பரத குலத்தவர்களால் கொண்டாடப்பட்டது.

சென்ற 5ம்வ உதயம் திவ்ய தஸ்நேவிஸ் ஆண்டவளின் திருவிழாவைச் சிறப்பித்து அதின் பலனை யடைய கோவில் மணிகளெல்லாம் வெகு ஆரவாரஞ்செய்து பெருந் தொனியுடன் ஜனங்களெல்லவரையு மழைக்க, ஒவ்வொரு கிறீஸ்தவரும் வெகு கெம்பீர உடைகளணிந்து கோவிலில் ஆஜீராக, உதயம் 8-மணிக்கு பெரிய பாட்டுப் பூசைக்கு ஆயத்தமாய், மகாகனம் பொருந்திய ஜெ. கூர்மன் சுவாமி யவர்கள் திவ்யபலி பூசை உடையணிந்துவர உதவியாய் கனம். சொற்டான் கனம். பெற்ஞன்டோ சுவாமிகளும் ஆஜீராகி முறையே டீக்கன், சப்டீக்கனுக அமர்ந்தனர். இம் மகோற்சவ நாளைச் சிறப்பிக்க ம-ா-ா-ஸ்ரீ C. Roche Victoria அவர்களால் கொழும்பிலிருந்து வரவழைத்தவர்களுள் மகா-ா-ா-ஸ்ரீ J. N. Paiva அவர்கள் அர்மோனிய வாத்தியம் வாசிக்க, மற்றவர்கள் முறையே துணைவர்களாயமர்ந்து பலிபூசை யாரம்பமாக இதுதான் இன்ப உலகமோவென அவ்விட முள்ளவர்கள் ஆனந்திக்குமாறு பற்பல சுகந்த புஷ்பங்களால் பலிபீடம் சிறப்புற்று மெழுகுவர்த்திகளால் நிரம்பி கோவிலினுட்புறம் வெகு அலங்காரமுற்றிருந்ததுந் தவிர, எம் குலத்தவர்கள் தங்கள் புத்தி சாதுரியத்தோடும் மன அக்களிப்போடும் எம் மாதாவின்மீது கொண்ட அபிமானத்தோடும் பாடலாயினர். இவ்வளவு சந்துஷ்டியோடு திவ்ய பலியும் முகிவுற்றது. அத்தினம் ஐரோப்பிய யுத்தம் துவக்கின நான்காம் வருஷ நாளாகையால் திவ்ய சற்பிரசாத நாதரை எல்லெவரும் தரிசித்து ஐரோப்பிய பரிதாப நிலைமையைப் பற்றி மனுச்செய்து, சீக்கிரம் சமாதானமுண்டாகும்படி வேண்டிக்கொள்ள திவ்விய சற்பிரசாதம் அன்று முழுதும் எழுந்தேற்றம் செய்து வைக்கப்பட்டது. ஒவ்வொருவரும் குறித்த முறைப்படி திவ்யநற்கருணை நாதரைச் சந்தித்தனர். மாலை $4\frac{1}{2}$-மணிக்குத் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அத்தோடு இம் மகோற்சவநாளின் முகிவுரையாக மகா-ா-ா-ஸ்ரீ C. Roche Victoria அவர்கள் திவ்ய தஸ்நேவிஸ் ஆண்டவளின் பிரார்த்தனை வெகு பத்தி வினயத்துடன் சொல்ல மற்றும் பரத குலத்தரனைவரும் உதவியாக நின்றனர்.

இம் மகோற்சவ நாளைச் சிறப்பிக்க உதவி புரிந்த Messrs. S. T. Corera & Co., I. R. Pimanda & Bros., M. P. Gomez & Co. S. G. Vaz & Co. இவர்களையும் டை கொண்டாட்டத்திற்காக வெகு ஊக்கத்துடன் பிரையாசப்பட்ட மகா-ா-ா-ஸ்ரீ C. Roche Victoria அவர்களையும் அப்பரம தாய் விசேஷ அன்போடு கடாட்சிப்பாளென்பது நிட்சயம். இத் திருவிழாவை அடுத்தவருடமும் இன்னுட் வரும் வருடங்களிலும் இதைவிட பதின்மடங்கதிக சிறப்பாய்க் கொண்டாட அவ்வாண்டவள் துணைபுரிவாளாக.

8—8—1917. } M. A. N.
காலி } பரதன்.

[இம்மாசத்தில் பிரசுரிக்கும்படி நமக்கு எட்டியுள்ள மற்ற கடிதங்கள் இடமிலாக் குறையினுல் பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த மாசத்தில் பிரசுரிக்கப்படும், ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

ஆஸ்திரியாதேசத்து புது சக்கரவர்த்தி.- இவர் ஓர் நல்ல கத்தோலிக்கர். இவரைப் போலவே இவருடைய தாயும் மனைவியும் உத்தம கத்தோலிக்கர். இவருடைய மைத்துனிகள் இரண்டு பெயர் கன்னியாஸ்திரிகளா யிருக்கிருர்கள்.

காக்ஸ் பாதிரியார்.—ஓர் பேர்போன சாஸ்திரியான இவர் சமீபத்தில் கத்தோலிக்கு வேதத்தின் உண்மையைக் கண்டுபிடித்து தாமிதுவரையிலும் விசுவசித்துப் போதித்துவந்த புரோடஸ்டான்டு மதம் தப்பறையானதென் றுணர்ந்து கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்ந்துகொண்டார்.

ஓர் அநியாய சட்டம் ரத்து செய்யப்பட்டது.–ஜெர்மன் தேசத்து சர்க்கார் தங்கள் தேசத்தில் சேசுசபை குருக்களிருக்கக் கூடாதென்ற ஓர் அநியாய சட்டம் பிறப்பித்திருந்தார்கள். இப்போது அச்சட்டத்தை ரத்துசெய்து சேசுசபையார் அங்கே வேதம் போதிக்கலாமென்ற அனுமதி கொடுத்திருக்கிருர்கள்.

15-ம் ஆசீர்வாதப்பர்.— சமாதான இராயனின் பிரதிநிதியாகிய இவர் இக்கொடிய யுத்தத்தில் கைகலந்திருக்கிற அரசர்களுக்கும், யுத்தத்திற் கலவாமல் நடு நிலைமையிலுள்ள மற்ற மன்னர்களுக்கும் யுத்தத்தை யொழித்து சமாதானமாய்ப் போக யுக்தியோசனைகளைக் கொடுத்து சமாதானத்தின் ஷரத்துகளடங்கிய ஓர் நிருபமெழுதி யிருக்கிருர்.

ஓர் பெரிய தீ விபத்து.—சில தினங்களுக்குமுன் கிரீஸ் தேசத்திலுள்ள ஸலோனிக்காவென்னும் பட்டணத்தில் பெரிய தீ விபத்துண்டாகி அப்பட்டணம் பாதிக்குமே லழிந்துபோயிற்று. இதன் பலனுக 80 ஆயிரம் பேருக்கதிகமாகவே தங்களுக்குள்ள வீடுவாசல்களையும் சொத்து சுதந்தரங்களையு மிழந்து தங்க விடமின்றி தவித்து நிற்கிருர்கள். என்னை பரிதாபத்துக்குரிய விபத்து!

தெய்வச் சித்தத்துக் கமைந்திருந்த ஓர் சிப்பாய்.—நிகழும் கொடூர யுத்தத்தில் சிப்பாய் ஒருவன் வெடிகுண்டு பட்டு மரணமானுன். அவன் சட்டைச் சாக்கிலிருந்த ஓர் காகிதத்தில் "என் சர்வேசுரா சுவாமீ, எனக்கு எவ்வளவு பயங்கரத்துக்குரிய வேதனையும் சாவும் வந்துற்ற போதிலும் அவைகளை நான் நல்ல மனதுடன் கையேற்றுக்கொள்ளுவே" னென்றெழுதப் பட்டிருந்தது.

லுவேன் நகரத்து கலா சாலை.–பெல்ஜிய தேசத்திலிருந்த சிறந்த கலா சாலை நிகழுங் கொடிய யுத்தத்திற் பாழாய்ப் போன சங்கதியை நமது சந்தாதாரர்கள் அறியாதவர்களல்ல. அமெரிக்காவின் வித்தியா சங்கத்தைச் சேர்ந்த சில கனதனவான்கள் தங்கள் செலவில் இந்தக் கலா சாலையைக் கட்டி முடிக்க முன்னுக்கு வந்திருக்கிருர்கள். இதற்காகப் பிடிக்குந் தொகை ரூபா ஐம்பது இலட்சமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஸ்விட்ஜர்லாண்டு தேசம்.—ஓர் காலத்தில் இத்தேசத்தி லிருந்தவர்களெல்லோரும் புரோடஸ்டாண்டு மதத்தின் ஓர் வகுப்பாராகிய கல்வின் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே யிருந்தார்கள். இப்போதோ இங்கே இவர்களைவிட கத்தோலிக்கரே அதிகமா யிருக்கிருர்கள். பாதிரிமார்களாகும்படி படித்துக்கொண்டிருந்த 74 வாலிபர்கள் சமீபத்தில் புரோடஸ்டாண்டு மதத்தை விட்டுவிட்டு கத்தோலிக்கராஞர்கள்.

முற்றிப் பேறுபெற்ற கூரேதாஸ் குருவானவரின் பங்கு கிறீஸ்துவர்கள்.—இவர்கள் எல்லோரும் 500-பேர். இவர்களுக்குள் 60-பேர் நிகழும் யுத்தம் துடங்கினது முதற்கொண்டு யுத்தகளத்தில் போராடி வருகிருர்கள். இவ்வூர் கிறிஸ்துவர்கள் இந்த 60 பெயருடைய நாமதேயங்களையும் ஒரு காகிதத்தில் வரைந்து அதை முற்றிப்பேறுபெற்ற கூரேதாஸ் பீடத்தில் வைத்து காலையிலும் மாலையிலும் ஜெபிக்கக் கோவிலுக்குப் போகும்போது தங்களூர் போர்ச் சேவகர்களுக்காக வேண்டிக் கொண்டு வருகிருர்கள். போர்ச் சேவகர்கள் 60-பேரும் இம்மூன்று வருஷகாலமாய் யாதோர் ஆபத்துக்குமுள்ளாகாமல் சுகமாய்ப் போராடி வருகிருர்களாம்.

ஓர் புதிய லூர்துமாதா குகை.—லஸ் கோவில் அல்லது காட்டுக்கோவிலென்று சென்னையில் வழங்கிவரும் பிரகாசிமாதாவாலயத்தின் 400-ம் வருஷத்திய ஜுபிலி வைபவம் சென்ற வருஷம் மிக்க விமரிசையாயும் ஆரவாரச் சிறப்பாயுங் கொண்டாடப்பட்ட சங்கதியை நம்முடைய சந்தாதாரர் அறியாதவர்களல்ல. இவ்வரிய வைபவத்தின் ஞாபகார்த்தமாக இவ்வாலயத்து விசாரணைக் குருவாகிய சங். மோத்தாவாஸ் சுவாமிகள் லூர்துமாதா குகையொன்று கட்ட உத்தேசித்திருந்தபடி ஒரு குகையும் இவருடைய பெரும் பிரயாசையாலும் முயற்சியாலும் முடிவாகிச் சென்ற மாதம் 19-ம் தேதி வெகு சிறப்பாய் மந்திரிக்கப்பெற்று அதில் மறுநாள் காலையில் திவ்யபலி பூசையும் நடந்தேறினது. இதன் விஷயமாய் நிகழ்ந்த விருத்தாந்தங்கள் அடுத்த மாத ஆயனில் பிரசுரிக்கப்படும்.

ஓர் சேனாதிபதியின் பாக்கியமான மரணம்.—சோம் நதிக்கரையில் யுத்தம் நிகழ்ந்தபோது, சற்று தூரத்தில் பயமின்றி தனித்திருந்து தேவனை ஸ்மரணை செய்துகொண்டிருந்த ஓர் சிப்பாயைச் சேனாதிபதி அணுகிப்போய் "நீர் ஓர் குருவானவரா?" என்று கேட்க, அதற்கவர் "ஆம்" என சேனாதிபதி "அப்படியென்றால் எனக்குப் பாவசங்கீர்த்தனங் கொடு"மென்று. சொல்லிச் சேற்றிலேயே முழந்தாட் படியிட்டு பாவசங்கீர்த்தனஞ் செய்தான். பிறகு சேனாதிபதி யெழுந்து தன் பட்டாளத்தை நோக்கி "சிப்பாய்களே வாருங்கள்; பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்துவின் நாமத்தாலே உங்கள் துப்பாக்கியை எடுத்துச் சுடுங்கள்" என்று தன் பேரிலும் சிலுவை வரைந்துகொள்ளவே, குண்டால் அடிபட்டு உயிர்துறந்து தன் சிஷ்டகரிடஞ் சென்றான்.

ஆங்கிலிக்கன் பிஷப்புகள்.—இவர்கள் துவக்கத்தில் தங்கள் வகுப்பைச் சேர்ந்த புரோட்டஸ்டாண்டாருக்கு இராப்போசனமென்று சொல்லப்படும் அப்பம் வெறும் அப்பமென்று போதித்துவந்தார்கள். ஆனால் சில காலமாயிப்போது அதில் நம்து கர்த்தர் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறாரென்று விசுவசித்து வியாதியஸ்தருக்கு உட்கொள்ளக் கொடுக்கும்படி சிறு பெட்டிகளில் அதைப் பத்திரப்படுத்திவைக்க தங்கள் பாதிரிமார்களுக்கு உத்தரவளித்திருக்கிறார்கள். சமீபத்தில் சுமார் 1000-பாதிரிமார்கள் சேர்ந்து பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் அப்பத்துக்குமுன் கத்தோலிக்கரைப்போல் வேண்டிக்கொள்ளவும், கத்தோலிக்கர் கோவில்களில் தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்படுவதுபோல் தங்கள் கோவில்களிலுங் கொடுக்கப்படவும் அனுமதி தரும்படி தங்கள் தங்கள் பிஷப்புகளுக்கு மனு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

ஏமாந்துபோன டாக்டர் ஒருவர்.—ஜோன் என்னு மொருவன் தன் பெண்ஜாதி அதிக காயலாய்ப் போனபடியால் ஒரு டாக்டரிடஞ் சென்று அவரை நோக்கி "ஐயா என் பெண்சாதி வியாதியா யிருக்கிறாள். நீர் அவளைக் குணப்படுத்தினாலுஞ் சரி, அல்லது கொன்றுவிட்டாலுஞ் சரி, உமக்குச் சேரவேண்டியதைப் பெற்றுக்கொள்ளும்" என்றான். டாக்டரும் தம்மாலான பிரையாசைப்பட்டு வைத்தியஞ் செய்தபோதிலும் வியாதியஸ்தி குணப்படாமல் மரணமானாள். பிறகு டாக்டர் தமக்குச் சேரவேண்டிய தொகையை வசூல் செய்துகொள்ள ஜோன் என்பவனுக்கு "பில்" அனுப்பினார். அப்போது அவன் டாக்டரிடஞ் சென்று "ஐயா நீர் என்னுடைய பெண்சாதியைக் குணப்படுத்தினீரோ?" என்று கேட்க, டாக்டர் "இல்லை" யென்றார். "இல்லையென்றால், நீர் அவளைக் கொன்றுபோட்டீரோ?" என்று கேட்டதற்கும் "இல்லை" யென்றார். உடனே ஜோன் "நம்முடைய ஒப்பந்தப்படி நீர் கொல்லவுமில்லை பிழைக்கவைக்கவுமில்லை. ஆதலால் உமக்குச் சேரவேண்டியது ஒன்றுமில்லை" யென்றான்.

ருஷியா தேசம்.—இத்தேசத்தை 2-ம் நிக்கோலாஸ் என்னும் சக்கரவர்த்தி இதுவரையிலும் அரசாண்டுவந்தார். இவர் பிரிவினைக்காரர். கத்தோலிக்கரைப்போல் இவரும் இவர் தேசத்தாரும் வேத சத்தியங்களை அங்கீகரித்தபோதிலும் பாப்பானவருக்குக் கீழ்ப்படிகிறதில்லை. இவராலும் இவருடைய முன்னோராலும் சத்திய திருச்சபை வெகு குரூரமாய் உபாதிக்கப்பட்டு வந்தது. சில மாசங்களுக்கு முன் இவர் தம் தேசத்தாரால் சிங்காசனத்தினின்று நீக்கப்பட்டு கைதியாக்கப்பட்டிருக்கிறார். ருஷியா தேசம் தற்போது குடியரசாய்விட்டது. இத்தேசம் ஆதி முதல் திருச்சபையோடு ஐக்கியப்பட்டிருந்தது. 1055௵ சில கலகக்காரரால் அது பிரிவினைக்குள்ளாகி, மறுபடியும் இரு முறை திருச்சபையுடன் சேர்ந்து திரும்பவும் பிரிவினைக்குள்ளாய்விட்டது. 1802 ௵ பவுல் என்னும் ருஷிய சக்கரவர்த்தி தம் தேசத்தைத் திரும்பவும் திருச்சபையோடு ஒன்றிக்கும்படி பாப்பானவருடன் ஏற்பாடு செய்த காலத்தில் துஷ்டரால் கொலையுண்ணப்பட்டார். குடியரசான ருஷியாவில் இனி சத்தியவேதம் விஸ்தரித்துப் பரம்பிச் செழித்தோங்குமென்று நம்ப இடமுண்டு.

சலோனிக்கா.—இப்பட்டணத்திற்கு வெளியே பீரங்கி சண்டை நடக்கும் பிராந்தியங்களில் பாளையமிறங்கி யிருக்கும் பட்டாளங்களைச் சேர்ந்த இந்தியன் டிரான்ஸ்போர்ட் கோரிலுள்ள ஒருவர் நமது "நல்லாயன்" பத்திரிகையில் பிரசுரிக்க பின்வருமாறு எழுதியுள்ளார். "எங்கள் கோரில் இந்திய கிறீஸ்துவர்களான நாங்கள் ஏழுபேரிருக்கிறோம். இவ்விடத்தில் கோவில் கிடையாது. ஓர் குருவைக் காண்பதும் அரிது. ஓர் குருவானவரை வரவழைக்கும்படி எங்கள் ஹெட் கிளர்க்கு அடுத்தடுத்து எங்கள் கமாண்டிங் ஆபீசரைக் கேட்டுக்கொண்டதன் பலனாக சென்ற மேமீ 31உ ஓர் குருவானவர் வந்து சிங்காரமாய் அலங்கரிக்கப் பெற்றிருந்த ஓர் கூடாரத்தில் எங்களுக்குப் பாவசங்கீர்த்தனங் கொடுத்து திவ்ய பூசையுஞ் செய்தார். அப் பூசையில் நாங்கள் திவ்ய நற்கருணையு முட்கொண்டோம். இக் குருவானவர் இந்திய கிறீஸ்துவர்களைக் கண்டது இதுதான் முதல் தடவையென்று சொல்லி, எங்களோடு அன்பாய்ப் பேசி ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, மாதம் ஒருமுறையாகிலும் எங்களுக்குப் பூசைசெய்ய வருவதாக சொன்னார். நாங்கள் பூசைகாணவும் பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்யநற்கருணை உட்கொள்ளவும் பிராப்தி பெற்றது எங்களுக்குப் பெரும் பாக்கியம். நாங்கள் இவ்விடத்தை விட்டு இன்னோர் இடத்துக்குப் போக இப்போது உத்தரவாயிருக்கிறபடியால் நாங்கள் மறுபடியும் அந்தக் குருவானவரைக் காண்பமோ என்னவோ எங்களுக்குத் தெரியாது. தெய்வச்சித்தம். எங்களுக்காக வேண்டிக்கொள்ளவும். இப்படிக்கு, கண்டு ஆனந்திப்போன்." நிகழும் கொடிய யுத்தம் காருண்ணிய ஆங்கிலேயருக்கு அனுகூலமாக சீக்கிரத்தில்முடிவாகி இவர்களெல்லோரும் தம்தம் இடம் வந்துசேர சர்வேசுரன் கிருபை புரிவாராக.

சங். போனின் சகோதரரின் தேகவியோகம்—புதுவை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த திண்டிவனத்தில் ஸ்தாபகமாயிருக்கும் அர்ச். கபிரியேல் மடத்துச் சகோதரராகிய இவர் சில தினங்களுக்கு முன் திடீரென்று ஓர்வித விஷக்காய்ச்சலினால் கொடிய அவஸ்தைக்குள்ளாகி மூன்றுமணி நேரத்துக்குள்ளாக மரணமானாரெனக் கேள்வியுற்று மிக்க விசனிக்கிறோம். இவர் தேவ சிநேகத்திலும் பிறசிநேகத்திலும் சிறந்து விளங்கியவர். தம்முடைய சுய நாடான பிராஞ்சுதேசத்தில் ஊமையும் செவிடுமானவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்பிப்பதில் தேர்ந்த ஆசிரியராயிருந்தவர். இவர் இத்தேசத்துக்கு வருவதற்கு முந்தி சித்திரவேலையிலும் நிபுணராகி, திண்டிவனம் வந்தடைந்தார். பிறகு, அவ்விடத்தில் ஸ்தாபகமாயிருக்கும் அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் சாலைக்கு உதவி மானேஜராக நியமனம்பெற்று, மிக்க உருக்கத்தோடும் ஊக்கத்தோடும் உழைத்துவந்தார். இவருடைய கண்காணிப்பின் கீழ் இவரே எழுதிய நமுனக்களை யனுசரித்து செய்யப்பெற்று, தென்னிந்தியாவின் பல கோவில்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அழகிய சிததிர வேலைப்பாடுள்ள பீடங்களும், பார்த்த உடனே பக்தியை மூட்டும் நேர்த்தியான சுரூபங்களும் இவருடைய சித்திர வித்தைக்கும் விடாமுயற்சிக்கும் அத்தாட்சியாகும். நம்முடைய "நல்லாயன்" பத்திரிகையும் இவருடைய திறமைக்கோர் நற்சாட்சி. 1912, 1913-ம் ஆண்டுகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளின் வெளி அட்டை

கடிதத்தில் அச்சிடப்பட்டிருந்த விசித்திர வேலைப்பாடடங்கிய "நல்ல ஆயன்" படம் இவராலேயே எழுதப்பெற்றது. இவ்வளவு திறமையும் சாமர்த்தியமும் வாய்ந்த புண்ய சகோதரரை யிழந்த ஷை மடத்தாருக்கு நம்முடைய அநுதாபத்தைக் காட்டி இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக நாம் வேண்டிக்கொள்வதோடு நம்முடைய சந்தாதாரனைவரும் வேண்டிக் கொள்ளும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்னதானம் —ஐரோப்பா யுத்தத்தில் நமது அரசாங்கத்தார் கலந்த 3-வது வருடச்சிறப்பு பல விடங்களிலும் பல கனதனவான்களினுல் கொண்டாடப்பட்டது போல, மதராஸ் சென்றல் ஸ்டேஷன் ரிப்ரஷ்மென்ட் ரூம் மானேஜர் ஸ்ரீமான் G. டேவிட்பிள்ளை யவர்களாலும் சென்ற மாதம் 4௳ கொண்டாடப்பெற்றது. ஷை ஸ்ரீமான் அன்றையத்தினம் சென்னை, ராயப்பேட்டை அர்ச். ஆரோக்கியநாதர் கோவிலில் 200 ஏழைகளுக்கு அன்னதானம் செய்து கூடிய சீக்கிரததில நிகழும் கொடிய யுத்தம் முடிவடைந்து நமது காருண்ய ஆங்கிலேய கவர்ன்மெண்டுக்கு க்ஷேமமுண்டாகக் கடவுளைப் பிரார்த்தித்ததுமன்றி, இவர்கள் குடும்பங்களுக்காகப் பூசையும செய்வித்தார. அன்றியும் இம் மாசத்திய பற்பல சமாசாரங்களில் நாம் தெரிவிக்கிறபடி சென்னை காட்டுக் கோவிலென்று வழங்கிவருகிற பிரகாசி மாதா ஆலயத்தின் 400-ம் வருஷ ஜூபிலி மஹோற்சவத்தின் ஞாபகார்த்தமாய்க் கட்டி எழுப்பப்பட்டுள்ள லூர்துமாதா குகை ஆரவாரச் சிறப்புடன் மந்திரிக்கப்பெற்ற தினமன்று விஜயமா யிருந்த 25 குருப்பிரசாதிகளுக்கு பெரிய விருந்தும் செயதார். இப்படியே ஷை ஆலயத்தின் 400-ம வருஷத்திய ஜூபிலியின போதும் மயிலை ஆண்டவருக்கும் ஏறக்குறைய 30 குருப்பிரசாதிகளுக்கும் விருந்தளித்தனர். இத்தரும குணசீலருக்குச் சர்வேசுரன் சகல பாக்கியமும் சம்பூரணமாக அளித்து பல்லாண்டு காப்பாற்றுவாராக.

மகா பலசாலி.-ஸர்கார்பரோ வென்னும் ஊரில் மிகவும் கியாதிபெற்ற பலசாலியான மிஸ்டர் தாமஸ் 304½ ராத்தலைத் தூக்கினதற்காக 42 பவுன் பெறுமான ஒரு கிண்ணத்தை பரிசாகப் பெற்ருர். இதற்கு முந்தி, மிஸ்டர் இ. ஆஸ்டன் என்பவர் 300 ராத்தலைத் தூக்கியிருக்கிருர்.

புத்தக வரவேற்புகள்.

லீலியும் ரோசாவும்.—என்னும் பெயர் பூண்ட புத்தகம் என்கிராதித்தம்மாள், மார்செல்லம்மாள் என்ற இரு மாது சிரோன்மணிகளைப் பற்றிய சரித்திரமாகும். இவர்களிருவரும் திருச்சபையின் துவக்கத்தில் நடந்த வேத கலாபனையில் வேத சாக்ஷிகளாக மரித்த கன்னியர்கள். லீலியும் ரோசாவும் எல்லோருக்கும் பிரியமான புஷ்பங்களா யிருப்பதுபோல இப்புண்ணிய கன்னிகாரத்தினங்களின் சிறந்த சரித்திரமும் அதை வாசிப்போருக்கு மனோரம்மியமானதா யிருக்குமென்பதற் கையமில்லை. சரித்திரத்தின் பொருள் வாசிக்க வாசிக்க இன்பமுள்ளதாயும், விசுவாசத்தைப் பயக்குவதாயு மிருப்பதுமன்றி சரித்திர வரலாறு மிக்க சாதுரியமாய் இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளதாயுமுளது. துர் நடவடிக்கைகளுக்கும் விசுவாச குறைவுக்கும் ஏதுவாயிருக்கும் பல கெட்ட நாவல்களையும் கதைகளையும் வாசிப்பதற்கு மாருக இத்தகைய சரித்திர புத்தகங்களை வாசிப்பது சிற்ஸதுவாகளுக்கு மிக்க பயனை விளைவிக்குமென்பது திண்ணம். இதன் விலை அணு 12, வெளிநாடுகளுக்கு ரூ. 1. தபாற்கூலி பிரத்தியேகம். புத்தகம் வேண்டுவோர் "நல்லாயன்" அச்சியந்திர சாலை மானேஜருக்காவது அல்லது மதுரை சென்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்துமார்க்கமும், மிருகபலியும்.— என்ற தலைப்பெயரிட்ட ஓர் துண்டு புத்தகம் 'யாழ்ப்பாண சங். ஞானப்பிரகாச சுவாமிகளிடமிருந்து நாம் வரப்பெற்ருேம். அதனில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை ஆதியோடந்தமாய்ப் பார்வையிடும் நன்மனச் சான்றுள்ள சைவ ரனைவரும் அதனை மறுத்துப் பேச வாயின்றி மவுனஞ் சாதிப்பார்களெனபது திண்ணம், ஏனெனில் இந் நூலை எழுதியவர் தாமாகவொன்றும் சொல்லாமல், தாவீதென்றவர் தம்மை எதிர்த்துவந்த கொலியாத்தின் ஆயுதத்தைக்கொண்டே அவனை வெட்டி சங்கரித்ததுபோல, சைவருடைய ஆதி நூலாகிய நாலு வேதங்களைக்கொண்டும் பாரம்பரியமான சரித்திரங்களைகொண்டும் வெகு விரிவாயும் தெளிவாயும் அவர்களுடைய அறியாமையை யெடுத்துக் காட்டியிருக்கிருர். அதுபோலவே இந்நூலின் அனுபந்தத்தில் மதுபானமானது ஐரோப்பியரான கிறீஸ்துவர்களால் நூதனமா யித்தேசத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஓர் கெட்ட பழக்கமென்ற அபவாதத்தையு மறுத்து, சைவருடைய வேதங்களினின்றே அத் துர்ப் பழக்கங்கள் நடைபெற்று வந்தனவென்று, குருடரும் கண்டுணருமாறு தெளிவித்திருக்கிருர். இச் சைவமானது புத்தனென்போனுல் நடுப்பாதியிலுண்டான ஓர் நூதனக் கொள்கையே அன்றி நந்தேசத்தில் ஆதி தொட்டு நடந்தேறியதோர் பழக்கமல்ல. அஞ்ஞானிகளால் சூழப்பட்டுள்ள கத்தோலிக்கரான நமக்கு இது எப்போதும் கையிலிருக்கவேண்டிய ஓர் கேடயமாகும். இப் புத்தகம் வேண்டுவோர் யாழ்ப்பாணம் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திர சாலையில் தபாற்செலவோடு 20 சதத்துக்கு அல்லது 2½ அணுவுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

ஜனன அறிக்கை.

ஏர்க்காடு.

சேர்வராயன்மலை ஏர்க்காட்டில் வசிக்கும், கனம். S. அந்தோனி பிள்ளையவர்களின் கனிஷ்ட புதல்வியும், என் மைத்துனர் M. & S. M. Railway அன்டர் கார்டும், தற்காலம் பவுரிங்கிப்பேட்டை நிவாசகருமாகிய கனம். R. V. தம்புசாமிபிள்ளையவர்களின் இல்லாளும், எனது அருமை சகோதரியுமாகிய, ஸ்ரீமதி. ஆரோக்கியமரியம்மாள் திருக்குடும்பத்தின் ஆசீராலும், அர்ச். அந்தோனியாருடைய பேருதவியின் பலனுலும் 1917-வருஷம் ஆகஸ்ட்மீ 1௳ புதன்கிழமை காலை 2½-மணிக்கு தனது முதல் பேருக ஒரு பெண்குழந்தையை ஈன்றனள். 5-8-17 ஞாயிற்றுக்கிழமை காலை ஏர்க்காடு அர்ச். சூசைமாமுனிவரின் ஆலய விசாரணை குரு சங். மோரேல் சுவாமி அவர்களால் ஞானதீட்சை அளிக்கப்பட்டு, அந்தோனி ஆரோக்கியமரி என்னும் நாமகரணம் சூட்டப்பட்டது. சங்கைக்குரிய K. G. F. கொருமாண்டல் கொரியன் குருசுவாமியவர்கள் ஞானத் தந்தையாகவும், செல்வமரியம்மாள் ஞானத் தாயாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். தாயும் சேயும் சுகம்.

A. X. துரைசாமி பிள்ளை,
ஏர்க்காடு.

நன்மரண அறிக்கை.

நிவுரேலியா.

"எங்கள் சிநேகிதர்களே! நீங்களாவது எங்கள் பேரிலிரக்கமாயிருங்கள்". சஹோதரரே! இவ்வசனங்கள் எங்கள் பிரிய தமயனுர், கோ. மடுத்தீன் பொர்னுந்தவர்களின் தேக வியோகத்தை ஆயன் மூலமா யுங்கட்கறிக்கை பண்ணத் தூண்டுகிறது. எவ்வரசனு லிவ்விந்தியாவிற்கு "பரதகண்டம்" என்ற நாமம் வாய்ந்ததோ, அவ்வரச மரபிலேயே, தென் கடலென வெவரும் போற்றும், கூடுதாழையில், கோ. சந்தியாகுப் பொர்னுந்தவர்க ளியற்றிய தவப்பயனே காரணமாய்ப் பிறந்தவரிவர். வியாபார நோக்கமாய்ச் சென்ற மே மாதம் நிவுரேலியாவுக்கு வந்த யிவர் ஜூலை மாதம் 1௳ வயிற்றழைச்சலென்ற நோவாய்ப் படலாயினர். தேர்ந்த வைத்திய இரத்தினங்களைக் கொண்டு சிகிச்சை செய்தும் அந்தோ! பிரயோஜன மற்றுப் போகவே, நமது பரிசுத்த தாயாகிய திருச்சபையின் தேவத்திரவியானுமானங்களைக் குறையின்றிப் பெற்று ஜூலை மாதம் 6௳ வெள்ளிக்கிழமை பரனுயிர் துறந்த தினமன்று மாலை 6-மணிக்கு "சேசு மரிய சூசை" யென்ற திரு நாமங்களைக் கேட்டுக் கொண்டே இம் மண்ணுலக வாழ்வெலாம் மாய்கை யென நீத்து, தன்னேய மகனும் சோதரிருவரும் சுற்ற மித்திரரும் கோ வென்ற லறியேங்கிநிற்க, விண்ணுலக ராக்கினியாம் பரதர் தாயின் திருமகன் ஜேசுபதம் தன் ஆன்மாவை யொப்புவித்தாரந்தோ! ஐயோ! இதைக்கண்ணுறும் சஹோதர சஹோதரிகள்! இவ்வான்மா, சகல கிருபை யுடைத்தான கடவுள் சமூஹம் சேர்ந்து என்று மழியாத பாக்கிய முறுமாறு வேண்டிக்கொள்ளப் பிரார்த்தித்துக் கொள்கிறோம். "மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பாக்கியமுமான எண்ணம்"

இங்ஙனம்,
மரணித்தவரின் சஹோதரர்.

நிவுரேலியா. 13—8—17. } K. Victo. பேர்னுந்து. M. K. S. பேர்னுந்து.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட். "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த டி கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23வ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் டி உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசை பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,453	11	6
Mr. C. மாசிலாமணி	1	0	0
,, M. டேவிட்	10	0	0
ஓர் நன்கொடை	3	0	0
Mr. இரத்தின முதலியார்	1	0	0
,, S. மாதவ ராவ் (Kuala Langhat)	5	0	0
ஆக மொத்தம்,	4,473	11	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னைப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1140—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,032	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஜூலை, ஆகஸ்டுமீ த்துக்கு) ...	60	0	0
Mr. பி. சுந்தர முதலியார், சுருட்டு வியாபாரி	30	0	0
,, S. சவரிநாத முதலியார், கர்நூல் (ஜூலை, ஆகஸ்டு)	2	0	0
,, M. S. Mariadas, I. M. S. Tank, N. W. P.	1	0	0
,, T. L. Swami Pillai, Rangoon.	5	0	0
,, A. C. Fernandez, Madura, ...	5	0	0
,, P. Santhoshanatha Pillai, Pudapet	5	0	0
ஆக மொத்தம்	1,140	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
Vicar, Assumption Church,
North Georgetown,
Madras, E.

The
Good Pastor

நல்ல ஆயன்

...OF THE REGISTRAR OF... 3 - OCT 1917 ... MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 15. } அக்டோபர் 1917. { இலக்கம் 10.

THE DEVOTION OF THE ROSARY.

ஜெபமாலை பக்தி.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 11-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒருநாள் ஜனங்கள் நமதாண்டவரான சேசுநாதஸ்வாமியைச் சூழ்ந்துகொண்டு அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் அக் கும்பலிலிருந்த ஓர் ஸ்திரீ அவரை உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு "உம்மைச் சுமந்த உதரமும், நீ ரமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகளாமே" என்றாள். இதனால் இந்த ஸ்திரீ நம்மாண்டவரைப் பெற்றெடுத்து அமுதூட்டி வளர்த்த அமலோற்பவியாகிய அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயை ஏற்றிப் போற்றி வாழ்த்தினாளென்பதற்கு ஆட்சேபனை யென்ன? இந்த ஸ்திரீயைப் போலவே கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களான நாமும் அர்ச். கன்னிமரியாயைத் துதித்து வணங்கிக் கொண்டாடி வருகிறோம். இவ்வாறு நாம் இவ் வாண்டவளைத் துதித்துக்கொண்டாடவும், ஆயிரம் விசை ஆசீர்வதிக்கப்பட்டவளென்று இவ் வாண்டவளை வாழ்த்தவும், இவ் வாண்டவளுடைய சனுகையும் சரணத்தையு மடையவும் காரணம் யாதெனில்: இவ் வாண்டவளைச் சர்வேசுரன் தம்முடைய ஏக குமாரனுக்கு மாதாவாகும் அவ்வளவு உன்னத பாக்கியத்துக்கும் உயர்ந்த அந்தஸ்துக்கும் தெரிந்துகொண்டா ரென்பதைப்பற்றியேயாம். ஆம், இம் முகாந்தரத்தைப்பற்றியே இவ் வாண்டவள்பேரால் பல பக்திக்கிருத்தியங்களைத் திருச்சபை ஏற்படுத்தி அவைகளை நாம் அனுஷ்டித்துப் பலனடையப்பிரேரேபிக்கின்றது. இத்தகைய பக்தி கிருத்தியங்களுள் ஜெபமாலை பக்தியே மிக்க பிரதானமானதும் பிரயோசனமானதுமாம்.

ஜெபமாலை பக்தியானது அது ஏற்படுத்தப்பட்ட துவக்கத்திலேயே சர்வேசுரனால் ஆசீர்வதிக்கப்பெற்றது. 13-ம் நூற்றாண்டில் "ஆல்பிஜென்செஸ்" என்னும் ஓர்வகைப்பட்ட துஷ்டபதிதர்கள் கிளம்பி பிரான்ஸ் தேசத்தின் தென் பாகத்திலும் ஸ்பானியா தேசத்தின் வட பாகத்திலும் பலகேடுபாடுகளை விளைவித்து வந்தார்கள். இவர்கள் சென்றவிடங்களிலெல்லாம் எப்படித் தேவாலயங்களையும் புண்ணியக்ஷேத்திரங்களையும் அக்கினிக்கு இரையாக்கி

ஞர்களோ, அப்படியே தேவ பணிவிடைக்குத் தங்களை நேர்ந்து தேவ ஊழியம் செய்துவந்த மேற்றிராணிமார்கள், குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் முதலானோரையும் வாளுக் கிரையாக்கினார்கள். இவ்வாறு சத்திய திருச்சபை அத்தேசங்களில் சொல்லொண்ணா பல துன்பங்களுக்குள்ளாகி இம்சிக்கப்பட்டு வந்தது. அத்தருணத்தில் தம்முடைய ஜெபதபத்தினாலும் புத்திப் போதகத்தினாலும் இன்னும் புதுமைகளினாலும் இத் துஷ்ட பதிதரை யொழிக்க தாம் பட்ட பிரயாசைகளெல்லாம் நிஷ்பலமானதைப்பற்றி அர்ச். சாமிநாதர் அழுகை பெருமூச்சுடன் சர்வேசுரனிடத்தில் முறையிட்டுக்கொள்ளவே, அர்ச். கன்னிமரியாயி அவருக்கோர் காட்சி கொடுத்தாள். அக் காட்சியில் ஜெபமாலையைப் பற்றி அவர் கிறீஸ்துவர்களுக்குப் பிரசங்கித்து, அதன் பக்தியை அவர்களுக்குள் பரவச்செய்ய வேண்டுமென்று கற்பித்ததுடன் ஜெப்மாலையே அப் பதித மதத்தையழிக்க வல்லாயுதமா யிருக்குமென்றும் அவருக்கு வாக்களித்தாள். அர்ச். சாமிநாதரும் தமக்குக் கற்பிக்கப்பட்டபடி செய்துவர ஆயிரமாயிரமாய்ப் பதிதர்கள் மனந்திரும்பி உத்தம கிறீஸ்துவர்களாய் ஒழுகி வந்தார்கள்.

1571-ம் ஆண்டில் துருக்கர் சத்திய வேதத்தை அடியோடு அழித்துப்போடுமாறு அவ்வளவு உக்கிராவேசத்துடன் கிறீஸ்துவர்களோடு போராடினார்கள். ஆனால் கிறீஸ்துவர்கள் அவர்களை "லெபான்டோ" என்னு மிடத்தில் புதுமையாக முறியடித்துத் துரத்தி அவர்கள்மேல் முழு வெற்றிகொண்டார்கள். இவ் வெற்றியுண்டான நாள் அக்டோபர் மாதமாகிய இம்மாதத்தின் முதல் தேதியேயாம். அன்றையத்தினம் ஜெபமாலை சபையி லுட்பட்டிருந்தவர்க ளெல்லோரும் தங்களுக்கு ஜெயமுண்டாகப் பக்தியுடன் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு சுற்றுப் பிரகாரம் செய்யுந் தருணத்தில்தான் இவ் வெற்றியுண்டானது. ஆகையால் கிறீஸ்துவர்களுக்குக் கிடைதத இவ் வெற்றியானது ஜெபமாலையினால் நடந்த ஓர் புதுமையென்பதற் கையமில்லை. இவ் வெற்றியின் ஞாபகார்த்தமாயும், 1816-ம் ஆண்டில் துருக்கர் மேல் கொண்ட இன்னொரு வெற்றியின் அறிகுறியாயும் வருஷா வருஷம் இம்மாதத்தின் முதல் ஞாயிறன்று மிகவும் பரிசுத்த ஜெபமாலையின் திருநாளைக் கொண்டாடத் திருச்சபை கற்பித்திருக்கிறது.

ஜெபமாலை பக்தியுண்டான நாள் முதற்கொண்டு அனேக பாவிகள் இதனால் மனந்திரும்பி பாக்கியமான மரணமடைந்தார்க ளென்பதற்கு எண்ணிறந்த அத்தாட்சிகளுண்டு. கொலைக்குற்றத்துக் குள்ளான கிறீஸ்துவனொருவன் தூக்குண்டு சாக தீர்ப்பளிக்கப்பட்டான். இதைக் கேள்வியுற்ற குருவானவரொருவர் அவனிடஞ் சென்று பாவசங்கீர்த்தனஞ் செய்து சாக எவ்வளவுதான் அவனுக்குப் புத்தி சொல்லியும், அவன் காலில் முதலால் விழுந்து கெஞ்சிக் கேட்டும், அவனதற்கு சம்மதிக்கவில்லை. கடைசியாக குருவானவர் தம்முடைய ஜெபமாலையைக் கையிற் பிடித்துக்கொண்டு, தம்மோடு ஓரேவோர் பிரியதத்த மந்திரஞ்சொல்ல அவன் உடன் படவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அதற்குச் சம்மதித்து அப்படியே சொன்னான். என்ன ஆச்சரியம்! உடனே அவன் மனந்திரும்பி நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து பாக்கியமான மரணமடைந்தான். அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் பாவிகள் மனந்திரும்ப ஜெபமாலை பக்தியே மகாகைகண்ட சாதனமென்று எண்பிக்க பின்வரும் சம்பவத்தை எழுதிவைத்திருக்கிறார். ஹெலினம்மாள் என்ற ஓர் பெரிய பாவி யிருந்தாள். இவ ளோர்நாள் தற்செயலாய் கோவிலுக்குப்போன சமயத்தில் ஜெபமாலையினால் விளையும் அரிய நன்மைகளைப்பற்றி செய்யப்பட்ட வோர் பிரசங்கத்தைக் கேட்டு, தானும் ஜெபமாலை ஜெபிக்க மனதுகொண்டு, ஜெபமாலையொன்று வாங்கி ஜெபித்தாள். உடனே அவளுடைய சீவியத்தில் மாற்ற முண்டானது. தன்னுடைய ஆத்துமத்தின் நிற்பாக்கிய நிலைமையை அவளுணர்ந்து தன்னுடைய பாவாக்கிரமங்களுக்காக மகா துக்கப்பட்டாள். பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்து பாவ விமோசன மடையு வரையில் அவள் மனதில் சமாதானமில்லை. இப்படி இவள் மனந்திரும்பினதின் பலனாக தன் மரணபரியந்தம் புண்ணியவதியாய்ச் சீவித்து அர்ச்சியசிஷ்டவளாய் மரித்தாள்.

ஜெபமாலையினால் நம்முடைய ஆத்துமத்துக்குமாத்திரமல்ல சரீரத்துக்கும் பல நன்மைகளுண்டாகின்றன. 1630-ம் வருஷத்தில் பொலோனியா பட்டணத்திலும் அதன் சுற்றுப் பிராந்தியங்களிலும் பயங்கரத்துக்குரிய ஓர் கொள்ளைநோய் உண்டானது. இந்நோய் எவ்வளவு மும்முரமாயிருந்ததென்றால் அது வுண்டான சில தினங்களுக்குள் அப்பட்டணத்திலிருந்த ஜனங்கள் ஏறக்குறைய பாதிபேர் வரையிலும் இறந்துபோனார்கள். தொழிற்சாலைகளும், வர்த்தகசாலைகளும், கலாசாலைகளும் இன்னுமற்றவைகளும் மூடப்பட்டன. அநேக வீடுகளில் இருந்தவர்களெல்லோருமே இறந்துபோனார்கள். எவ்வளவோ அழகாயிருந்த அப்பட்டணம் ஓர் சுடுகாட்டுக்கொப்பாயிற்று. எரித்த வெயிலின் தீட்சண்யத்தினால் சிறந்த சோலைகளும், பலவித பூச்செடி கொடிகளால் நிறைந்திருந்த பள்ளத்தாக்குகளும், கண்ணைப் பறிக்குமாறு பசுமைவாய்ந்த பசும்புற்றரைகளும் தீய்ந்துபோனதுமன்றி, இறந்துபோனவர்களுடைய பிரேதங்கள் க்ஷேமிக்கப்படாமல் அங்கங்கே கிடந்தபடியால் துற்நாற்றம் பட்டண முழுதுமுண்டாகி சகிக்க முடியாமலுமிருந்தது. ஆ! இவ்வளவு பரிதாபத்துக்குரிய நிலைமைக்குள்ளான இப்பட்டணம் எப்படி இரட்சிக்கப்பட்டது? ஜெபமாலையின் உதவியினாலேயே. கொள்ளை நோய்க்கு இரையாகாமலிருந்த அப்பட்டணத்து ஜனங்கள் ஜெபமாலையை ஜெபித்து தேவமாதாவின் தஞ்சத்தைத் தேடினதினாலேயே.

நம்முடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கு மடுத்த பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள ஜெபமாலை பக்தி ஓர் பெரும் சாதனமாயிருப்பதினால், அப்பக்தி நமக் கெவ்வளவோ முக்கியமானதா யிருக்கவேண்டியது. இதனால் நாம் அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயினுடைய வல்லபமுள்ள அடைக்கலத்தையும் ஆதரவையும் தேடிக்கொள்வதுமின்றி அவளுடைய சக்தியுள்ள மன்றாட்டுகளுக்கும அருகராகிறோம். ஆகையால் ஜெபமாலையின்மேல் பக்தி வைப்போமாக, ஜெபமாலையை இக் கண்ணீர் கணவாயில் நம்முடைய உற்ற துணையாகவும் தோழனாகவும் ஆக்கிக்கொள்வோமாக. அதை அடிக்கடியும் நாடோறும் ஜெபிப்போமாக. விசேஷமாய் இம்மாதத்தில்—அதேதென்றால் இம்மாதம் ஜெபமாலையின் மாதம். இம்மாதத்தில் பூசை நேரத்திலாவது, திவ்யநற்கருணை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபோது அதன் சந்நிதியிலாவது ஜெபிப்போமானால் விசேஷ பலன்களுக்குப் பங்காளிகளாவோம். ஆனால் ஜெபமாலை ஜெபிக்கும் ஒவ்வொரு தடவையிலும் அதன் பலனையடைய கவன கருத்துடனும், துக்க மனஸ்தாபத்துடனும் ஜெபித்துவர முயலுவோமாக.

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

ஜெர்மானியா தேசத்தில் (Westphalia) வெஸ்ட்பாலியா என்னும் மாகாணம் ஒன்றுண்டு. இதன் பிரதான பட்டணமாகிய மன்ஸ்டர் (Munster) என்னும் நகரில் (Count) கவுன்ட் என்னும் பிரபு பட்டம் பூண்ட உயர்ந்த வங்கிஷபதிகளாகிய கிளேமென்ட் கவுன்ட் துரோஸ்டி விஷ்ஷெரிங், (Clement Count Drosti Vischering) எலேனாதெகாலென் (Helenadegalen) என்பவர்களிடத்தில் 1863ஆம் செப்டம்பர் 8-ம் உ திவ்ய இருதயத்தின் மரியம்மாள் பிறந்தனள். அதே நாளில் அவளுடைய சகோதரன் மாக்ஸும் பிறந்தான். அன்றே, பிறந்த குழந்தைக்கு ஆபத்து நேர்ந்தமையால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது; தேவதாயின் ஜனன நாளானதால், மரியென்கிற பெயரை பெற்றனள். இவளுடைய பெற்றோர் இவளுக்கு அன்னா ஜொவான்னா பிரான்சிஸ்கா தெரேஸியா அந்தோனியா என்ற பேர்களையும் கொடுத்து, அர்ச்சியசிஷ்டவர்களின் அடைக்கலத்தில் இவளை வைத்தார்கள். மரிக்கு ஓர் அக்காளும், கூடப்பிறந்த மாக்ஸ் என்னும் சகோதரனும்

இருந்தார்கள்—மன்ஸ்டர் நகருக்கு ஏழு மைல் தூரத்திலிருந்த (Darfield) தார்பீல்ட் என்னும் கோட்டை அரண் மாளிகையில் மரி தன் பாலப்பருவத்தைப் போக்கினாள். இம் மாளிகை துரோஸ்டவிஷ்ஷெரிங் குடும்பத்தின் பிதிரார்ச்சித சொத்து. வெகு விசித்திரமாய்க் கட்டப்பட்டுள்ளது. இம் மாளிகையிலேதானே துரோஸ்டவிஷ்ஷெரிங் குடும்பத்தின் சொந்த சிறு கோவில் ஒன்றிருந்தது. இளமையிலேயே மரி தேவபக்தியில் விளங்கினாள். அவள் எழுதிய தன் சரித்திரத்திலிருந்து (Autobiography) அவளுடைய பாலியத்தின் விசேஷங்களில் சிலவற்றை இங்கே யெடுத்து கூறுவது உசிதமாய்த் தோன்றுகிறது: “சேசுவின் திரு இருதயத்தை அறியவும் சிநேகிக்கவும் எப்போது நான் ஆரம்பித்தேன் என்று நான் ஞாபகப்படுத்திச் சொல்லக்கூடுமாயில்லை.

“என் பெற்றோருடையவும், சகோதரர் சகோதரிகளுடையவும் அறைகளில் நான் கண்ணாரக்கண்ட முதல் படங்கள் எவையென்றால், சேசுவின் திரு இருதயப்படமும், தேவமாதாவின் படமும்தான். நான் மெத்த சிறுமியாய் இருக்கும்போது எங்கள் வீட்டின் ஆலயத்தில் திரு இருதய வணக்கமாதம் கொண்டாடப்பட்டதையும் நான் அறிவேன். அப்போது எனக்கு ஏழு அல்லது எட்டு பிராயம்தான் இருக்கும். ஏராளமான புஷ்பங்களாலும் மெழுகு திரிகளாலும் பீடம் ஒன்று ஜோடிக்கப்பட்டு, அதன்மேல் திரு இருதயத்தின் பெரிய சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மூடியிருந்த சுரூபம் திறக்கப்படும். அப்போது என் உள்ளம் பூரிக்கும். அந்த நாள் எனக்குப் பெரிய கொண்டாட்டமாயிருந்தது. இச் சுரூபமும் அதன் அருகில் ஸ்தாபகமாயிருந்த தேவநற்கருணையும் என் இருதயத்தில் பதிந்துபோயின. நமதாண்டவரும் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் தம் வசப்படுத்திக்கொண்டார். தேவநற்கருணை பக்தியிலிருந்து சேசுவின் திரு இருதய பக்தியைப் பிரிக்க ஒருபோதும் என்னால் முடியவில்லை. தேவநற்கருணையில் உள்ள சேசுவின் திரு இருதயம் என் மட்டில் காண்பித்த பட்ச உருக்கம் எம்மாத்திரம் என்று எடுத்துரைக்க என்னால் கூடிய காரியம் அல்ல.

“தேவநற்கருணை எனக்கு ஓர் மோக்ஷமாயிருந்தது. நான் நமதாண்டவரை அந்தச் சுரூபத்தின் பாவனையாகவும், தேவநற்கருணையில் உள்ள சேசுவின் திரு இருதயத்தைச் சோதி சோபனமுள்ள சூரியனை யொத்ததாகவும், அது என்னைக் கவர்ந்து இழுத்து, என்னைத் தெளிவித்து சிநேகத்தால் என்னைப் பற்றி யெரியச் செய்வதாகவும், கிட்டத்தட்ட எப்போதுமே ரூபிகரித்துக்கொள்வேன். நான் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்கள் அநந்தமுறை நான் நன்மை வாங்கும் தருணத்தில் அல்லது தேவநற்கருணை ஸ்தாபகஞ்செய்யப்பட்டிருக்கும் சமயத்தில் அதின் முன்னிலையில், அநேகம் விசை சேசுவின் திரு இருதயத்துடன் சம்பந்தப்பட்ட திருநாளில் தான் எனக்களிக்கப்பட்டன. எனக்கு பத்து அல்லது பனிரெண்டு பிராயம் நடக்கும்போது சேசுவின் இருதயத்தின் சிறிய சுரூபமொன்றை குருவானவர் எனக்குக் கொடுத்தார். அதின் மட்டில் அதிக வணக்கப் பற்றுதலை நான் காட்டி வந்தேன். அதை இந்நாள் வரையில் நான் தரித்துக்கொண்டிருக்கிறேன். திரு இருதயத்தின் மேன்மை காவல் (Guard of Honour) என்னப்பட்ட சபையில் என் தாயார் என்னைச் சேர்த்துக்கொண்டாள்.

“ஒன்பது மணியிலிருந்து பத்து மணி வரையில் என்னுடைய காவல் நேரம். அந்நேரத்தில் என் தாயார் தன்னுடைய மற்ற பிள்ளைகளுக்கு ஞான உபதேசம் சொல்லுவதில் அலுவலாயிருப்பாள்.—இவ்வாறு நான் சேசுவின் திரு இருதயத்தின் அடைக்கலத்தில் வளர்ந்து வந்தேன். நான் இன்னும் சிறுமியாயிருந்த காலத்தில் பெரிய திருநாட்களில் நமதாண்டவர் ஞான ஆறுதல்களையும் மனோகரங்களையும் எனக்குப் பாலித்து வந்தார். ஆனால் நான் அவைகளைக் கொண்டு பலனடைந்தேன் இல்லை. நான் அவரை அநேகக் குற்றங்களால் மனநோகப் பண்ணினேன்.”

மரி என்பவள் மெத்த சுறுசுறுப்பும் உற்சாகமுமுள்ள பெண். அவளுக்குத் துடுக்குத்தனம் மெத்த—ஆட்டத்தில் சமர்த்தி. தன் வீட்டின் தோட்டத்தில் துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடுவதென்றால் அவளுக்கு ஆனந்தம். மழையிலும் அப்படியே ஓடி விளையாடுவாள். அதனால் தாய் அவளைப் பலமுறை சினந்து கண்டிப்பதுமுண்டு. —ஒரே நிலையில் ஒரு மணி நேரம் அசையாமல் உட்கார்ந்து படிப்பது என்றால் மரிக்குக் கசப்பாயிருக்கும். உபாத்தியாயினி தனக்கு பாடம் கற்பிக்கத் துடங்கினதும், எழுந்திருந்து வெளியே போக உத்தரவு கேட்பாள் மரி. 5-நிமிஷம்

கொடுக்கப்படும். மரி கடிகாரத்தண்டையில் போய் அங்கே தனக்குக் கொடுத்த நேரம் முடியும் வரையில் மான்போல் துள்ளிக்குதித்து ஆடுவாள். பிறகு போய் உட்கார்ந்து படிப்பாள். கால் மணி நேரமானதும் திரும்பி ஆட உத்தரவு கேட்பாள்.

இந்தச் சிறு வயதிலேயே தான் கத்தோலிக்கு திருச்சபையின் பிள்ளையாயிருப்பதைப்பற்றி மரி வெகுவாய்ப் பூரிப்படைந்தாள். ஆதலால் அவளுடைய பெற்றோர் 1867-ம் வருஷம் பரிசுத்த பாப்பானவரைக் காண ரோமாபுரிக்குச் சென்ற வர்த்தமானம் அவளுள்ளத்தில் ஆழ்ந்து பதிந்திருந்தது. அவர்கள் ரோமைக்குச் சென்றதும் அவளுக்கு அனுப்பிய கடிதங்கள், வீடு திரும்பி வந்தபோது வீட்டில் நடந்த சந்தோஷக் கொண்டாட்டங்கள், அவர்களிடம் தான் கோடையாகப் பெற்றுக்கொண்ட பாப்பரசரின் பட முதலியவைகளினால் அவளுக்குண்டான களிப்பை அவள் ஒருபோதும் மறந்தவளல்ல. திருச்சபையின் மட்டில் அவள் வைத்த அன்பும் அபிமானமும், வத்திக்கான்சங்கம் நடந்தேறும்போதும், வேத விரோதிகள் திருச்சபையை ஜெர்மானியா தேசத்தில் முற்றும் அழிக்க (Kulturkamp) கல்தூர்காம்ப் என்னும் கொடிய துர்மார்க்கச் சபையை ஏற்படுத்தின காலத்திலும், முக்கியமாய் 1874-ம் வருஷம் மன்ஸ்டர் நகரின் மேற்றிராணியாராயிருந்த வந்திக்கத் தக்க (Brinkman) பிரிங்கமான் என்பவரைச் சிறையிலடைத்தபோதும் அவளிடம் மேன்மேலும் பெருகி வளர்ந்தது. இந்த மேற்றிராணியாரின் அரிய தைரியத்தையும் வீரிய செயல்களையும் கண்டு களித்து அதிசயித்தவர்களில் நமது கன்னிகாரத்தினம் ஒருவள். அவர் சிறையிலிருந்தபோது அவள் துக்கித்தழுதாள். ஆனால் அவ்வூர் ஜனங்கள் அவரை விடுதலையாக்க அதிகாரிகளை ஓயாமல் நிர்ப்பந்தித்ததினாலும், அவர்களுக்கு பலமுறை மனு எழுதிக்கொண்டதாலும், சர்க்கார் அந்த மேற்றிராணியாரை 40-நாள் மட்டும் சிறையில் வைத்து, விடுதலை செய்தார்கள். அதினால் மரியின் மனம் பூரித்து மகிழ்ந்தது. அக்காலத்தின் வழக்கத்தை அனுசரித்து மரி தனக்கு 11-பிராயம் நடக்கும்போது புதுநன்மை வாங்கினாள். இச்சமயத்தில் மேயன்ஸ் (Mayence) அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க லேடோகோஸ்கி (Ledochousky) ஆண்டவர் தான் இருந்த சிறையினின்று, அவளுக்குப் புதுநன்மை அடையாளமாக, ஒரு சிறிய பாடுபட்ட சுரூபத்தையும், தேவமாதாவின் படத்தையும் அனுப்பிவைத்தார். இதினால் அவளுள்ளம் மகிழ்ந்தது. இந்த அதிமேற்றிராணியார் பிற்காலத்தில் கர்தினாலாகவும் விசுவாச பரம்புதல் (Propaganda) சபைக்கு அதிசிரேஷ்டராகவும், நியமிக்கப்பட்டு இந்த மேலான அலுவலைச் சாகுந்தனையும் வகித்து வந்தார்.

தன் புது நன்மையைப்பற்றி மரி எழுதுவதாவது: “நான் டார்பீல்ட் பங்கு கோவிலில் 1875-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி என்னுடைய சகோதரன் மாக்ஸோடு புதுநன்மை வாங்கினேன். ஏனென்றால் நாங்கள் இருவரும் என்றும் இணைபிரியாமல் சீவித்து வந்தோம். நமதாண்டவருக்கு முழுதும் நான் சொந்தமாயிருக்க ஏற்கனவே ஓர் துறவறச் சபையில் சேர அபேக்ஷையாயிருந்தேன். அர்ச்சியசிஷ்டவர்கள் சிலருக்கு அவர்கள் புதுநன்மை வாங்கின தினத்தில் தேவ அழைப்பின் வரம் கொடுக்கப்பட்டதாக நான் கேள்வியுற்று அந்தப் பாக்கியமான வரத்தை நானும் அந்த நாளிலேயே அடைய ஆவலுற்றேன். ஆனால் நமதாண்டவர் அன்றையத்தினம் நான் ஆவலாய்த் தேடிய அந்த வரத்தை எனக்களிக்கவில்லை. ஆகையால் நான் என் உறுதிப்பூசுதல் நாளை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தேன்.

அதே வருஷத்தில் ஜூலை மாதம் 8-ம் தேதி உறுதிப்பூசுதலை வாங்கினவுடன் தேவ அழைப்பின் வரத்தை நான் அடைந்ததாக என் உள்ளத்தில் உணர்ந்தேன். அதை நான் ஒருபோதும் இழக்கவில்லை. என்னுடன் அதுவும் வளர்ந்து வந்தது. நான் துறவற அந்தஸ்தில் நமதாண்டவரைச் சேவிக்க ஆசித்திருந்தாலும் என் ஒழுக்கம் குற்றமற்றதாயிருக்கவில்லை. முக்கியமாய் 12-லிருந்து 16-ம் பிராயம் வரையில் நமதாண்டவருக்குப் பொருந்தாதவைகளைச் செய்துவந்தேன். ஆனால் அவர் என்னைக் கைவிடவில்லை. முன்போலவே என்னை இரக்கத்தோடு நடத்திவந்தார்... அக்காலத்தில் நான் பெண்ணைப்போல் அல்ல, ஆண்பிள்ளையைப்போல் நடந்து வந்தேன். இப்பூமியில் என்னைப்போல் பாக்கியவதி எவருமில்லையென்றிருந்தேன். சேசுசபை குருவாகி ஆப்பிரிக்கா மிஷன்களுக்குப் போய் உழைக்கிறதற்காக நான் ஆணாய்ப் பிறந்திருக்க எப்போதும் அபேக்ஷைகொண்டிருந்தேன்.” மரி இவ்வாறு சிந்திப்பதற்கு பின் வரும் சம்பவம் காரணமாயிருந்தது. 1877-ம் வருஷத்தில் பரிசுத்த பாப்பா

னவர் ஆப்பிரிக்காவிலுள்ள சாம்பேசி (Zambesi) மிஷனைச் சேசுசபைக்கு ஒப்புவித்தார். அதினால் இச்சபையின் குருக்கள் இருவர் தங்கள் புதிய மிஷனுக்காக கிறீஸ்துவர்களிடம் தர்மம் பெற்றுக்கொள்ள பல ஊர்களில் பிரசங்கித்தார்கள். இவர்கள் மரி இருந்த வெஸ்ட்பாலியா (Westphalia) விலும் வந்து பிரசங்கித்தார்கள். இவ்விஷயத்தால் மரியின் இருதயம் ஆப்பிரிக்கா மிஷன்களில் போய் உழைக்க வேகமான பக்தி வைராக்கியத்தால் பற்றியெரிந்தது. இதைப்பற்றியே சேசுசபையின் மட்டிலும் அதிக வணக்கமும் மதிப்பும் அவளுக்குண்டானது. 1878-ம் வருஷம் நவம்பர் மாதம் 21-ம் தேதி காணிக்கை மாதா திருநாளன்று பங்கு குருவானவர் "உன் சர்வேசுரனாகிய கர்த்தாவை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக" என்ற சுவிசேஷ வாக்கியத்தின்பேரில் செய்த உருக்கமான பிரசங்கத்தால் மரியின் இருதயத்தில் தன் அழைப்பின் மட்டில் என்றுமில்லாத விசேஷித்த ஞான வெளிச்சம் உதித்தது. இதைப்பற்றி அவள் எழுதுவதாவது:—"தேவமாதா தன்னை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த திருநாளில் நான் விசேஷமான ஞான ஆறுதலைச் சுகித்தேன். நான் மரியென்று அழைக்கப்பட்டதால், என் பெற்றோர் என்னை அத்தினத்தில் மற்ற தினங்களைவிட அதிக பட்சகனிகரத்துடன் நடத்துவது வழக்கம். நானும் அந்த நாளை என்னுடைய சொந்த நாளாகப் பாவித்து நமதாண்டவருக்குச் சகலத்தையும் ஒப்படைக்கச் சுதந்தரம் பெற்றவள்போல் நடந்தேன். அவரும் என்மீது சகல உரிமை சுதந்தரத்தையும் கொண்டவர்போல் காணப்பட்டார். தேவமாதா அவ்வளவு சிறிய வயதில் தன்னைப் பலியாகச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்ததை நினைத்து நான் எவ்வளவோ ஆறுதலை யடைந்தேன். அப்பலியோடு நானும் என்னை ஒன்றித்துக்கொண்டேன்." குருவானவர் செய்த பிரசங்கத்தால் அவள் தன்னுடைய அழைப்பைப்பற்றித் திட்டமாய்த் தீர்மானிக்கலானாள். சர்வேசுரனுடைய குரலுக்குத் தடைசெய்தவளல்ல. "நான் முற்றும் முடிய தீர்மானித்துவிட்டேன். நமதாண்டவர் என்னைத் தமதண்டையில் விசேஷ பட்சத்துடன், இழுக்கத் திருவுளமானார். அவருக்கு முழுதும் நான் சொந்தமாயிருக்க அவர் ஆசித்ததையும் என் இருதயத்தைத் தமக்குத் தத்தம் செய்யும்படியாக அவர் கேட்பதையும் நான் அதிகமதிகமாய் அறிந்துணரும்படியாகச் செய்து வந்தார். அன்று தொடங்கி நான் சிருஷ்டிகளின் பற்றை வெறுத்தொழிக்கவும், நமதாண்டவருடைய நேசத்தில் என் பாக்கியத்தைச் சுகித்தனுபவிக்கவும் ஆரம்பித்தேன். சில சமயங்களில் தேவ அருள் என்னிடம் மெத்த பலத்தோடு காணப்பட்டது. இந்த அன்பின் போராட்டம் விடாது வளர்ந்துகொண்டே வந்தது. நமதாண்டவர் என் இருதயத்தைக் கேட்டார். நானோ சர்வேசுரனுடைய நேசத்தைச் சிருஷ்டிகளின் சிநேகத்தோடு சேர்க்க முயன்றேன்." முதல் முதல் தன் வீட்டில் மரி ஆழ்ந்த புண்ணிய ஒழுக்கத்தையும் கல்வி பயிற்சியையும் கற்றுக்கொண்டாள். 1879-ம் வருஷத்தில் அவளுடைய பெற்றோர் மரிக்கு 16-பிராயமாகும்போது அவளை ஆஸ்திரியாவின் டிரோலைச் (Tyrol) சார்ந்த ரியடென்பர்க் (Riedenburg) என்னும் நகரில் இருந்த கன்னியர் மடத்துக்கு அனுப்பிவைத்தார்கள். இவ்விடத்தில் மரி சுமார் 2-வருஷம் இருந்தாள். தனக்கு மிகவும் இஷ்டமான சேசுவின் இருதய பக்தியானது இம்மடத்தில் அனுசரிக்கப்பட்டு வந்ததைக் கண்டு களித்தாள். வணக்கத்துக்குரிய பாராட் (Barat) தாயாரின் புத்திரிகளாகிய அம்மடத்துக் கன்னியர் அந்தப் பக்தியை மெத்த உற்சாகத்தோடு தங்கள் மடத்தில் படிக்க வந்த பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தார்கள். இம்மடத்துக்கு வந்த துவக்கத்தில் மரி திருப்தியற்றிருந்தாள். மடத்தின் ஒழுங்கும் ஒரே விதமான சீவியமும் அவளுடைய உற்சாகமான சுபாவத்துக்கு ஒத்துப்போகவில்லை. குடும்பத்தின் ஏக்கமும் பிடித்திருந்தது. ஆனால் தன்னுடைய மனோபலத்தால் இக் கஷ்டங்களை வென்றாள். தன்னுடைய முயற்சியாலும் படிப்பு விஷயத்தில் தான் அடைந்த அநுகூலத்தாலும் மற்ற மாணாக்கிகளை விட வெகு சீக்கிரத்தில் சிறப்பும் மேன்மையும் அடைந்தாள். தன் சீவிய காலமெல்லாம் இம் மடத்தின் கன்னியருக்கு நன்றியுள்ளவளாய் இருந்தாள். அவர்களிடம் தான் கற்றுக்கொண்ட கல்வி ஒழுக்கத்தைப்பற்றி நன்றியுள்ள மனதுடன் எப்போதும் பேசுவாள்.

அவள் ரியடென்பர்க் நகரில் இருக்கும்போது சேசு சபையைச் சார்ந்த சங்கைக்குரிய ஒவ்ஷேர் (Hausherr) குருவானவரை அறியநேரிட்டது. அவரைத் தன்னுடைய முதல் ஆத்தும குருவாகத் தெரிந்துகொண்டு, சர்வேசுரன் தனக்களித்த அரிய பெரியவரங்களை அவருக்கு வெளியிட்டு வந்தாள். 2-வருஷங்களுக்குப் பின்னர், 1881-ம் வருஷம் தன் பெற்றோர் மாளிகைக்குத் திரும்பி வந்தாள். அவளுடைய தந்தை ராஜாங்க விஷயமாய்த் தமக்குண்டான அலுவலினிமித்தம் பெர்லின் நகருக்குப் (Berlin) போனபோது தானும் கூடப்போனாள். இதைப்பற்றி மரி எழுதுகிறாள் :—" இந்தக்காலத்தில் நமது திருச்சபையைப்பற்றி அபிமானமும் பற்றுதலும் என்னுள்ளத்தில் மென்மேலும் வளர்ந்தது. நாங்கள் பெர்லின் நகருக்குப் போனோம். அங்கே திருச்சபையின் உரிமை சுதந்தரங்களுக்காக உழைத்து வரும் உயர்ந்த உத்தியோகஸ்தரை அறியவும், அவர்களோடு சம்பாஷிக்கவும் சமயம் கிடைத்தது—பின்னர் ஆலண்டு தேசத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த எங்களுடைய மன்ஸ்டர் நகர் மேற்றிராணியாண்டவரைச் சந்திக்கச் சென்றேன். வேதாபிமானத்தில் சிறந் தோங்கிய இந்த மேற்றிராணியாருடைய கரங்களால் தேவநற்கருணை வாங்க பேறு பெற்றேன். நமதாண்டவருடைய பத்தினியாயும் திருச்சபையின் பிள்ளையாயும் இருப்பதே என் சர்வ பாக்கியமா யிருந்தது........மே மாதத்தில் நான் மன்ஸ்டர் நகரில் ஞான ஒடுக்கம் செய்தேன்—அதைச் செய்வதற்குமுன் என் அழைப்பைப்பற்றி என் ஆத்தும குருவுக்குக் கடிதம் எழுதினேன். சர்வேசுரன் என்னைத் துறவற அந்தஸ்துக்கு அழைப்பதாகவும், அந்த அந்தஸ்தில் நான் சேராவிடினும், இரட்சண்ணியம் அடையக்கூடும் என்றும் அவர் எனக்கு எழுதினார். இதுவே எனக்குப் போதுமாயிருந்தது—கன்னிமையின் வார்த்தைப்பாட்டால் என்னை நமதாண்டவருக்குத் தத்தம் செய்ய என் ஆசை மென்மேலும் அதிகரித்தது. "சேசுவே கன்னியரின் பரிசுத்தமே" என்ற வார்த்தைகளை மனோவல்லய ஜெபமாக உச்சரித்து வந்தேன்."

சர்வேசுரன் அவளைத் துறவற அந்தஸ்துக்கு அழைத்தார் என்பதை அவள் நிச்சயமாய் அறிந்தபின் 1882-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி தன் பெற்றோருக்குத் தன் தீர்மானத்தை வெளியிட்டாள். அவள் எழுதுவதாவது :—" என் பெற்றோர் தங்கள் குமாரத்திகளில் ஒருவளைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப் பிரியப்பட்டார்கள். ஆனால் நான் சுகயீனமா யிருந்தபடியால் 21-பிராயம் வரையில் எங்கள் வீட்டிலேயே இருக்கும்படியாகத் தீர்மானித்தார்கள்."

மரி, தன் தாய் தந்தையரின் விருப்பத்துக்குத் தடைசெய்தவளல்ல. தான் எந்தச் சபையில் சேருவதென்று ஆலோசனை செய்தாள்—முதல் முதல் சேசுவின் இருதயத்தின் கன்னியர் சபையில் சேர அபிப்பிராயம் கொண்டாள். பின்னர் அச்சபை மடம் தன் பெற்றோர் மாளிகைக்கருகாமையில் இருந்தபடியால் தன்னுடைய ஆத்தும குருவின் அனுமதியின்படி சாம்பெரி (Chambery) யின் அர்ச். சூசையப்பர் கன்னியரின் சபையில் உட்பட தீர்மானித்தாள்—இச் சபைக் கன்னியர் டென்மார்க் தேசத்தில் பதிதர் மனந் திரும்புதலுக்காக பிரக்கியாதியுடன் உழைத்து வந்தார்கள்.

இச் சபையைச் சார்ந்த கன்னியர் 200-பேர். வியாதியஸ்தரையும் பாலரையும் விசாரித்துப் பரிபாலிப்பது இவர்களுடைய முக்கிய வேலையாயிருந்தது. 1884-ம் வருஷம் மரி இம்மடத்துக்குப் போக ஏற்பாடு செய்தாள். ஆனால் அவ்வருஷத்திலேயே அவளுக்கு சௌக்கிய குறைவு அதிகமாயிற்று. ஆதலால் தன் கருத்தை நிறைவேற்றக்கூடவில்லை. மரி அசௌக்கியமா யிருந்தாலும், படுக்கையை விட்டு எழுந்து நடமாடக் கூடாத அவ்வளவு ஆபத்தான வியாதியால் வருந்தவில்லை. ஆனால் அடிக்கடி கொடிய தலைநோய், சுரம், இருமல், பசிதீபன மில்லாமை, சர்வாங்க பலயீனம் இவைகளால் உபத்திரவ மடைந்தாள். அவளுடைய ஆத்தும குரு அவளைத் தேற்றித் திடப்படுத்தினார்.

1885-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25-ம் தேதி மரி கன்னிமையின் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தாள். அவள் மடத்துக்குப் போகக் கூடாவிட்டாலும் இது அவளுக்கு ஒரு விதத்தில் ஆறுதலாயிருந்தது. அவள் எழுதுவதாவது :—" இதில் நான் வெகுவாய் ஆசித்தக் காரியம் நிறைவேறினதைக் கண்டேன். நான் நமதாண்டவருடைய பத்தினியானேன்." அவள் தன் சொந்த வீட்டிலேயே துறவியைப்போல் நடந்தாள். விநோத காட்சிகளையும், வேடிக்கை யாட்டங்களையும் காண அவள் வீட்டுக்கு வெளியே போகாமலிருக்க தன் பெற்றோரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டாள். ஆனால் தன் அறையிலேயாவது, வீட்டின் கோவிலிலேயாவது தங்கியிருக்கப் பிரியப்படுவாள். தன் திவ்ய பத்தாவின் நேசத்தைக் குறைக்கக் கூடுமான எவ்வித உலக நாட்டங்களையும் வெகு சாக்கிரதையாய் வெறுத்துவிடுவாள். மரி பக்தி முயற்சியில் விசேஷித்த

விதமாய் விளங்கினாள். சம்மனசுக்குரிய பக்தி விநயத்துடன் செபிப்பாள். சேசுநாதர் ஒருவரே அவளுடைய நேசத்துக்கு முற்றும் உரியவராயிருந்தார். அவரைவிட வேறொருவரையும் அவள் நினைப்பதில்லை. அவருக்காகவே சீவித்தாள். அவருடன் சம்பாஷிப்பாள். நன்மை வாங்கும்போதெல்லாம் வாக்குக்கெட்டாத ஞான சந்தோஷங்களைச் சுகிப்பாள்.

S. M.

(தொடரும்.)

ASK AND IT SHALL BE GIVEN.
கேளுங்கள் கொடுக்கப்படும்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றியிருக்கிறார். பெரிய வியாழக்கிழமை இராப்போசனம் செய்த பிறகு தம்மைச் சூழ்ந்து தம்மோடு சாப்பிட்டு உட்கார்ந்திருந்த அப்போஸ்தலர்களுக்கு மொழிந்த வாக்கியமிது.

இவ்வாக்கியம், மனிதர்களை ஜென்மப் பாவம் காமப் பாவமென்று சொல்லப்படும் எல்லா வகைப் பாவங்களிலுமிருந்து மீட்டு இரட்சித்து, மறுபடியும் அவர்களை மோட்சத்துக்குச் சுதந்தரமுள்ளவர்களாக்கும்படி மனிதனாகப் பிறந்து, மனிதர்களோடு சீவித்து, மனிதர்களுக்காக உழைத்துத் திரும்பித் தம்முடைய பிதாவின் சந்நிதானத்துக்குப் போகும் சந்தர்ப்பத்தில் ஆண்டவர் அப்போஸ்தர்களுக்கும், திருச்சபைக்கும் திருச்சபையின் மக்களாயிருக்கின்ற கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவருக்கும் அருளிச்செய்ததாகும். அப்போஸ்தலர்கள் ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே! எம்மைவிட்டுப் பிரிந்துபோகிறதாகச் சொல்லுகிறீர்; உம்மோடு மூன்று வருஷகாலமாய் இருந்தோம்; இந்நாள்வரையும் எம்மைக் காப்பாற்றி வந்தீர். நாங்கள் உம்முடைய சீஷர்களாக இருக்கிறதினால் யூதர்கள் எம்மைப் பகைக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நீர் எங்களைவிட்டுப் பிரிந்துபோனால் எங்களுக்கு என்ன சம்பவிக்குமோ" வென்று முறையிட்டுத் துக்கித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய அப்போஸ்தலர்கள் படும் கஸ்தி துன்பத்தைக் கண்டு பரிதாபப்பட்டு, அவர்களுக்குத் தேறுதலாகவும் ஆறுதலாகவும் "நீங்கள் பயப்படவேண்டாம்; கிலேசப்படவேண்டாம். உங்களைவிட்டுப் போகவேண்டியது மெய்தான். என் பிதாவின் திருவுளமிப்படியிருக்கின்றது. மேலும் நான் உங்களைவிட்டுப் போகிறது உங்களுடைய நன்மைக்காகவே. நான் உங்களுக்காகப் பரிந்து பேசப்போகிறேன். ஆதலால் உங்களுக்கு வேண்டியதெல்லாம் கேளுங்கள்; கேட்பவையெல்லாம் கொடுப்பேன்" என்று ஆறுதலாகச் சொன்னார். அன்புள்ள தாய் தந்தையர் தாம் பெற்ற பிள்ளைகளைவிட்டுத் தூரதேசத்துக்குப் போகவேண்டியிருக்கும் சமயத்தில், சொல்லும் புத்திமதிகள், ஆறுதலான வார்த்தைகள் பிள்ளைகளின் மனதில் ஆழமாய்ப் பதியுமல்லவோ? பெற்றோர் சொன்ன மொழிகளைப் பிள்ளைகள் மறக்கவேமாட்டார்கள். ஆண்டவரோ நம்முடைய தாய் தந்தையரைப் பார்க்கிலும் நம்மை அதிகமாக நேசிக்கிறவர். ஒரு தாயானவள் தான் பெற்ற பிள்ளையை மறந்தபோதிலும் நான் உங்களை மறக்கமாட்டேனென்று உறுதியாய் ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார் நமதாண்டவர்.

ஆண்டவரும் நம்மைவிட்டுப் பிரிந்து போகும்போது, நமக்கு ஆறுலாக "கேளுங்கள் கொடுக்கப்படும். உங்கள் சந்தோஷம் பூரணமாகும்படியடைவீர்கள்" என்று மொழிந்து பிரிந்து போனார். அவற்றை யடைய கேட்கவேண்டியதே தவிர வேறொன்றும் நாம் செய்யவேண்டியதில்லை. காணமற் போனதைக் கண்டுபிடிக்கத் தேடுவோமே யொழிய வேறென்ன செய்வோம்? ஒன்றுஞ் செய்யோம். வீடாகிய மோக்ஷஞ் சேர தட்டவேண்டியதைத் தவிர வேறொரு கஷ்டமும் படக் கடமையில்லை. சரீரத்துக் கடுத்த காரியங்களைப் பெற்றநுபவிக்கவேண்டியதாயிருந்தால் எவ்வளவு கஷ்டப்படவேண்டியதாயிருக்கிறது; எவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது; உங்களுக்கு மற்றவர்களுடைய உதவி ஒத்தாசை வேண்டியதாயிருந்தால் கேட்ட உடனே அவர்கள் அதைச் செய்துவிடுவார்களோ? இல்லை. ஏனென்றால் சில சமயம் அவர்களால் உதவிசெய்யக் கூடாமலிருக்கும். அல்லது உதவிசெய்யக்கூடுமோயிருந்தும், மனமில்லாமலிருக்கும். செல்வமோ, ஆபரணமோ, உயர்ந்த ஆடையோ இவை முதலிய இப்பேர்ப்பட்ட யாதோர் பொருளை நீங்கள் இழந்துபோனால் அதைத் தேடினமாத்திரத்தில் கிடைக்குமென்னும் நிச்சயம் உங்களுக்குண்டா? வீடுவாசலில்லாமல் அலைந்து திரிகின்ற ஒருவன் காற்று மழையையும், வெயிலையும் பொறுக்கமாட்டாமல் வருந்தி உங்கள் அடைக்கலமாக வந்து கதவைத் தட்டினால் "வாரும் வாரும் என்று கதவைத் திறப்பீர்களோ?" மனிதன் தன்னையொத்த ஒருவனுக்குச் செய்யாத உதவியைக் கடவுள் ஒவ்வொருவனுக்கும் செய்கிறார். அப்படிச் "செய்வோம்" என்று ஆணையிட்டுத் திருவுளம்பற்றியிருக்கிறார். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று உறுதிமொழி கூறியிருக்கிறார்.

நீங்கள் கேட்பதையெல்லாம் கொடுக்கக் கடவுளுக்குச் சக்தியும் வல்லமையுமுண்டு. உலகத்தையும் உலகத்திலிருக்கின்ற சகலத்தையும் உண்டாக்கினவர் அவர்தான். சகலமுமவருடைய சுவாதீனத்திலிருக்கின்றது. ஆதலால் நீங்கள் கேட்பது எப்பேர்ப்பட்டதாயிருந்தபோதிலும், அதை அடைவது எவ்வளவு கஷ்டமாயிருந்தபோதிலும், நீங்கள் கேட்கிறதைக் கொடுக்க ஆண்டவருக்கு வல்லமையுண்டு. வல்லமை மாத்திரமிருந்தால் போதாது; வல்லமையோடு கொடுக்க மனமும் இருக்கவேண்டியது. ஆண்டவருக்கு மனமும் உண்டு. ஆதலால், நாம் கேட்கிற வரத்தைத் தர கடவுளுக்கு வல்லமையிருந்தாலும் மனமுமுண்டோவென்று சந்தேகப்படக்கூடாது. ஏனென்றால் கிடைக்கிறதற்கு அரிதானதைக் கொடுக்கக்கூடியவர் கிடைக்கிறதற்கு எளிதானதைக் கொடுப்பார் என்பதில் சந்தேகமுண்டோ? இலட்ச ரூபாய் பரிசாகக்கொடுத்தவர் ஒரே யொரு ரூபாய் கொடுக்க மனமில்லாமலிருப்பாரோ? அநேக மாளிகைகளையும், ஏராளமான நில புலங்களையும், அளவில்லாத திரவியத்தையும் உங்களுக்குப் பூரண சொந்தமாக்கி அவைகளை உங்கள் இஷ்டப்படி யநுபவிக்கக் கொடுத்தவன், நீங்கள் ஒரே யொரு இரவு தன்னுடைய வீட்டில் தங்கியிருக்க உத்தரவு கொடுக்க மனமில்லாமலிருப்பானோ? கடவுள் தம்முடைய ஏக குமாரனையே சகல மனிதருடைய பாவங்களுக்காகத் தகனப்பலியாக அளித்திருக்கையில், நம்முடைய ஆத்துமத்தின் போஜனமாக அவரைத் திவ்விய நற்கருணை வழியாய்த் தந்திருக்கையில், அற்பப் பொருளாகிய சரீர சுகத்தையோ, சாப்பிட அன்னத்தையோ, உடுத்திக்கொள்ள ஆடையையோ கேட்டால், இல்லை என்று மறுப்பாரோ?

நம்மை நரகத்திலிருந்து மீட்டிரட்சித்தவர் வியாதி துன்பம் முதலிய ஆபத்துகளிலிருந்து நம்மை இரட்சிக்க மனங்கொள்ளாமலிருப்பாரோ? மோட்சத்தையே நமக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்க, அன்ன வஸ்திரம் கேட்டால் கொடுக்கப் பிரியப்படாமலிருப்பாரோ? ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகளுக்கு ஆகாரத்தையும், தரையில் நகர்ந்து செல்லுகின்ற புழு, பூச்சி, பாம்பு முதலிய ஜீவஜெந்துக்களுக்கு உணவையும் தயார் செய்து வைத்திருக்கிறவர் தமக்கு உகந்த மக்களாயிருக்கும்படி சித்தங்கொண்டிருக்கிற மனிதரான நம்பேரில் மாத்திரம் கவலையில்லாமலிருப்பாரோ? "கேளுங்கள், உண்மையாகவே ஆக்ஷேபனையின்றி கொடுப்பேன்" என்று வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்.

ஆனால் உங்களிற் சிலர் "கேட்டோம், கேட்டதை யடைந்ததில்லை; தட்டினோம் திறக்கப்படவில்லை; தேடினோம், கண்டடையவில்லை. இவையெல்லாம் எங்களுக்கு அநுபோகத்தினால் தெரியவருகின்றது" என்று சொல்லுவார்கள் போலும். தகுந்த விதமாய் மாத்திரம் அவர்கள் கேட்டிருந்தால் ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின்படி நிச்சமாய் அடைந்திருப்பார்கள். சரியாகத் தட்டியிருந்தால் கதவு திறக்கப்பட்டிருக்கும். செவ்வையாய்த் தேடியிருந்தால் கண்டடைந்திருப்பார்கள். அவர்கள் சரியாய்க் கேளாததினாலேயும், தட்டாததினாலேயும், தேடாததினாலேயும் அவர்கள் ஆசித்தவைகளை யடையவில்லை.

முதன் முதல்: கேட்கிறவர்கள் கடவுளுடைய மக்களாயும், சிநேகிதர்களாயுமிருக்கவேண்டியது. அதாவது அவர்கள் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்க வேண்டியது. சாவான பாவத்தைக் கட்டிக்கொண்டு கடவுளை அவமதித்து, மனந் திரும்பாமலிருந்து கேட்கிறவர்களுக்குக் கடவுள் கொடுப்பதாக வாக்களிக்கவில்லை. கடவுள் உங்களிடத்தில் கேட்பதை நீங்கள் கொடுக்காதிருக்கையில் நீங்கள் கேட்பதைக் கடவுள் கொடாமலிருப்பது ஆச்சரியமா? "பாவம் செய்யாதே, பாவ வழியை விட்டுவிடு, பாவத்துக்கேதுவான சமயங்களை விலகிநட, என்னை நேசி, என்

னுடைய கற்பனைகளின்படி நட, ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் பூசைக்கு வா, அடிக்கடி நன்மை வாங்கு, அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய், என் திரு இருதயத்தின்மேல் பத்தியா யிரு" என்று ஆண்டவர் உங்கள் உள்ளத்தில் உரக்க உரக்கக் கூவி அழைக்கிறார். நீங்களோ அவைகளைக் கவனிக்கிறதில்லை, இலட்சியஞ் செய்கிறதில்லை. ஆண்டவர் கேட்பதை நீங்கள் கவனியாதிருந்தால், நீங்கள் அவரிடத்திற் கேட்பதை அவர் கவனிப்பாரென்பதற்கு என்ன நிச்சயம், என்ன நம்பிக்கை யுண்டு? நீங்கள் அவருக்கு நல்லவர்களாயிருந்தால், அவரும் உங்களுக்கு நல்லவராயிருப்பார். உங்களுக்கு மற்றவர்களுடைய உதவி வேண்டியதா யிருந்தால் யாரிடத்திற்போய் அதைக் கேட்பீர்கள்? உங்கள் சிநேகிதர்களிடத்தில் போய்க் கேட்பீர்களா? அல்லது நீங்கள் திட்டி அவமதித்துத் தூற்றித் தூஷணித்து அடித்து உதைத்தவர்களிடத்தில் போய்க் கேட்பீர்களா? ஆண்டவரிடத்திலிருந்து ஏதாவது பெற்றுக்கொள்ளவேண்டியதா யிருந்தால் அவரை உங்களுடைய நண்பராகச் செய்துகொள்ளவேண்டியது. அதாவது தேவ இஷ்டப் பிரசாத அந்தஸ்தி லிருக்கவேண்டியது. அவருடைய சித்தத்துக் கமைந்து நடக்கவேண்டியது. அப்போதுதான் நீங்கள் கேட்கிறது கொடுக்கப்படும்.

நீங்கள் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்த்திலிருந்தபோதிலும், கடவுளுடைய சித்தத்துக்கு அமைந்து நடந்தபோதிலும சில சமயங்களில் நீங்கள் கேட்கிறதை யடையமாட்டீர்கள். ஏனென்றால், நீங்கள் கேட்பது ஒருக்கால் தகுதியற்றதாயிருக்கும். நீங்கள் கேட்பதைக் கடவுள் கொடுத்திருந்தால் உங்களுடைய ஆத்துமத்துக்கு அதனால் கெடுதியும் பொல்லாப்பும் வந்திருக்கும். எது நன்மையானதென்றும் எது தின்மையானதென்றும் உங்களுக்குத் தெரியாது. ஆனதுபற்றியே சில சமயங்களில் உங்களுக்குக் கெடுதியானதையே கேட்கிறீர்கள். ஆனால் நம்முடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் தின்மையானதேதென்று ஆண்டவருக்கு நன்றாய்த் தெரியும். சிறுபிள்ளைகள் விளையாட எதையும், அதாவது கூர்மையான கத்தி, துப்பாக்கி, கொள்ளிக்கட்டை முதலியவைகளையுங் கேட்பார்கள். ஆனால் நீங்கள், பிள்ளைகள் கேட்பதை யெல்லாம் கொடுப்பீர்களோ? நோவாளி கண்டதை யெல்லாம் சாப்பிடக்கேட்டால் வைத்தியன் அதற்கு உத்தரவளிப்பானோ? அப்படியே நாமெல்லோரும் வழக்கமாய்ச் சரீரத்துக்கடுத்த நன்மைகளான ஆஸ்திபாஸ்தி, மகிமை பெருமை, உத்தியோகம் இவை முதலியவைகள் கிடைத்தால் போதுமென்று இவைகளுக்காக ஏக்கமுங்கொண்டு இப்பேர்ப்பட்ட நன்மைகள் மாத்திரம் சர்வேசுரனிடத்திற் கேட்போம். ஒருக்கால் இந்த நன்மைகள் நம்முடைய ஆத்துமத்துக்குத் தின்மையாயிருக்கக் கூடுமாகையால் நாம் கேட்பவைகளைக் கண்டடைவதில்லை. ஆண்டவர் நம்மை நம்முடைய தாய் தந்தையர்போல் நேசிக்கிறார். தாய் தந்தையர் பிள்ளைகள் கேட்பவைகளைச் சில சமயங்களில் கொடுப்பார்கள், சில சமயங்களில் கொடுக்கமாட்டார்கள். இப்படியே ஆண்டவருஞ் செய்கிறார். ஆதலால் கேட்கிறதை யடைகிறதில்லை என்று ஆண்டவரின் மேல் முறைப்படக்கூடாது.

நாம் கேட்கிறது நன்மையா யிருந்தபோதிலும் சில சமயத்தில் அதைப் பெற்றுக்கொள்ளுவதில்லை. ஏனென்றால் சரியான விதமாய் நாம் கேட்கிறதில்லை. சரியான விதமென்ன வென்றால் தளராத விசுவாசத்தோடும், பத்தியோடும், நம்பிக்கையோடும், தாழ்ச்சியோடும், வேண்டிக்கொள்ள வேண்டியதேயாம். ஆதலால் தேவ இஷ்டப் பிரசாத அந்தஸ்த்தி லிருந்துகொண்டு நம்முடையஆத்துமத்துக்குத் தகுதியான காரியங்களைத் தகுதியான விதமாய்க் கேட்டால் அடைவோம். "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று ஆண்டவர் அருளிச்செய்த திருமொழிகளின் உண்மையை அனுபோகத்தினா லறிவீர்கள்.

L. S.

தந்திரங்களில் தளராதபடிக்குத் தந்திரங்கள் வந்தவுடனே சேசுநாதரையுந் தேவமாதாவையுங் கூவி யழைப்பாயாக. தந்திரம் நீங்குகிறவரையில் சேசுமரியே யென்னும் வாக்கியம் உன்னைவிட்டு அகலாதிருக்கக்கடவது.

உன் னம்பிக்கையை முழுமையும் சேசுநாதருடைய பாடுகளிலேயும் தேவமாதாவினுடைய வேண்டுதலிலேயும் வைப்பாயாக.

தப்பித்தவறி ஒரு பாவத்தில் விழுந்தால் தத்தளியாமலும் தைரியத்தை விடாமலும் அதைக் குறித்து வியாகுலப்பட்டு அதை விட்டுவிடக் கெட்டியான பிரதிக்கினை பண்ணிக்கொண்டு சுவாமிபேரில் உறுதியான நம்பிக்கை வைப்பாயாக. —(அர்ச். லிகோரியார்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

45-ம் அதிகாரம்.

அடே நடேசா, நீதானா பண்டிதர்? கொஞ்சம் பாடு பார்க்கலாம்.

மறு நாள் காலையில் பண்டிதர் தப்பித்துக்கொண்டதைப்பற்றி செங்கல்பட்டில் பிரஸ்தாபம் பிறந்தபடியால், அப் பட்டணத்தார் சந்தோஷித்து மகிழ்ந்தார்கள்.

பைத்தியக்காரனான நடேசனை கிருதுக்கார பசங்கள் சூழ்ந்துகொண்டு, "அடே நடேசா, நீதானா பண்டிதர்? கொஞ்சம் பாடு பார்க்கலாம்" என்று ஒருவன் சொல்ல, மற்றொருவன் "நீதானடா, உன் பெண்டாட்டியைக் கொலை செய்தவன்?" என்பான். "அடே, உன்னை ஸ்டேஷனில் ஜவான்கள் என்ன செய்தான்கள்?" என்பான் இன்னொருவன். "அடே, நடேசா! நீ ரோட்டில் ஒண்ணுக்கு இருந்தியே, அதற்கு என்னடா அபராதம் போட்டார்கள் போலீசார்?" என்று சொல்ல மற்றவர்கள் சிரிப்பார்கள். அவர்கள் கேட்ட கேள்விக்கெல்லாம் தலையை அசைத்துக்கொண்டிருந்தான் பைத்தியக்கார நடேசன்.

போலீசார் வீதியில் போகும்போது, அங்கங்கே சுட்டிப்பயல்கள் சேர்ந்துகொண்டு, போலீஸ்காரர், காதில் விழும்படி பின் வருமாறு சொல்லிக்கொள்வார்கள்:—

"அடே, இராத்திரி பண்டிதரை ஜட்காவண்டியில் ஏற்றிக்கொண்டு போனார்களே போலீசார், அவரை யெப்போது தூக்கில் போடப் போகிறார்கள்?" என்று ஒருவன் கேட்க, மற்றொருவன் "அது எனக்கு எப்படித் தெரியும்? அதோ அந்த ஜவானைக் கேட்டால் தெரியும்" என்பான். உடனே அவன் "ஐயா, ஜவான், பண்டிதரை என்றைக்கு தூக்கிப்போடப் போகிறார்கள்?" என்று ஜவானைப் பார்த்துக் கேட்க ஜவான் தனக்குண்டாகும் கோபத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு வேகமாய் நடப்பான்,

இப்படியே கிருதுக்கார பையன்கள் போலீசாரைப் பார்க்கும்போதெல்லாம் பரிகாசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அன்று பத்து மணிக்கு பண்டிதருடையவும் அவருடைய மனைவியினுடையவும் பந்துக்கள் சுமார் 40 பேர் ரயில் வண்டியிலிருந்து இறங்கி பங்களாவுக்குப் போய் கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் பண்டிதருடைய மனைவியின் சவத்தைக் கட்டிக்கொண்டு மகா துக்கத்துடன் அழுது பிரலாபித்தார்கள்.

விஸ்வாச நாயகரோ தமக்கு உண்டாகும் பொறுக்கக்கூடாத துக்க வியாகுலத்தை அடக்கிக்கொண்டு, சவத்தின் பக்கத்தில் முழங்காலிலிருந்து 53-மணி ஜெபமாலையை மகாப் பக்தியுடன் ஜெபித்து, தன் மருமகளுடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தார். கொஞ்சநேரம் அவர்கள் சவத்துக்குமுன் அழுது புலம்பினபின், மேல் மெத்தைக்குப் போய் அங்கிருந்த அலங்காரமான செபக்கூடத்தில் பிரவேசித்து ருக்மணிக்காக அநேக ஜெபங்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

விஸ்வாச நாயகர் தன் மருமகளுடைய சவத்தை டாக்ட்டர் மூலமாய், சில நாள் அழியாம லிருக்கும்படி விலை உயர்ந்த வாசனைத் திரவியங்களால் பொதிந்து விலை உயர்ந்த சவப்பெட்டியில் அதை வைத்துப் பூட்டி, குரு ஸ்வாமியார் மூலமாய் அங்கு செய்யவேண்டிய சடங்குகள் செய்து முடிவானபின், அன்று சாயந்திரமே சவப் பெட்டியைக் குதிரை இரதத்தில் ஏற்றித் தமது பந்து ஜனங்களுடன் ரயிலுக்குப் புறப்பட்டார்.

அந்த ஊரார் பண்டிதர் மட்டில் பக்ஷமும் நேசமும் கொண்டிருந்தபடியால் தங்கள் துக்கத்தையும் அனுதாபத்தையும் காட்டும்படி பண்டிதருடைய பங்களாவுக்குச் சென்று பிரேதத்துடன் ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள்.

சவப்பெட்டி கொண்டுபோகப்படும் வழியிலிருந்த கடைக்காரர் பண்டிதர் மட்டில் தங்களுக்குள்ள அனுதாபக் குறிப்பாக தங்கள் கடைகளைச் சாற்றிவிட்டார்கள். அன்று ஜனங்கள் பண்டிதருடைய புண்ணியத்தையும் தர்மத்தையும் பற்றி தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். ஏழைகளும் பிச்சைக்காரரும் கண்ணீர் சிந்தி "எங்கள் உபகாரியின் மனைவி இறந்துபோனார்

கள். அவர்க ளிருவரும் இருக்குமட்டும் எங்களுக்கு ஒன்றும் குறைவில்லை; இனி நாம் வெகு சங்கடப்பட வேண்டியதே" என்று விசனத்துடன் சொல்லிக்கொள்வார்கள்.

"அந்த இரண்டு சிறுக்கிகளும் அந்தப் பங்களாவில் சேர்ந்தபின் அந்த பங்களாகாரர்களுக்கு என்ன தின்மை நேரிடுமோ வென்று ஐயரவுப் பட்டுக்கொண்டிருந்தோமே, அது இன்று நிறைவேறிவிட்டது" என்பார்கள் ஸ்திரீகள்.

இவ்வாறு சமுத்திரம்போலப் பரவி யிருந்த ஜனத்திரளுடன் கொண்டுபோகப்பட்ட சவப்பெட்டி ஸ்டேஷனில் போய் நிற்கவே, அங்கு கலெக்ட்டர் முதற்கொண்டு சகல சர்க்கார் உத்தியோகஸ்தரும், ஜமீன்தாரும், பாரிஸ்டர், வக்கீல்களும், சௌக்கார்களும் பெருங் கூட்டமாய்க் கூடி யிருந்தார்கள். சிலர் துக்கித்து அழுதார்கள். சிலர் தங்கள் கண்களினின்று உதிருங் கண்ணீரை விரலால் துடைத்தார்கள்; வேறு சிலர் கைக்குட்டையால் துடைத்தார்கள். இப்படி பட்டண முழுதும் துக்கித்து நிற்கும்போது, குருப்பிரசாதிகள் ரயில் வண்டியில் வைக்கப்பட்ட பிரேதப்பெட்டியின்மேல் தீர்த்தத்தைத் தெளித்து ஜெபங்களைச் செபித்து முடிக்கவே கலெக்ட்டர் தாம் பண்டிதர்மேல் வைத்திருந்த அபிமானத்தையும் நேசத்தையும் காட்டும்படியாக ஒரு நேர்த்தியான பரிமள வாசனையுள்ள புஷ்ப மாலையை (Wreath) ருக்மணியின் பிரேதப்பெட்டிமேல் பூச்சியமாக ஸ்தாபகஞ் செய்து வியசனத்துடன் பின் தாங்கினர். பண்டிதருடைய ஸ்நேகிதரான மாணுக்கர்களும் வேறு கனவான்களும் வெகு திரவியஞ் செலவு செய்து (Wreaths) பூமாலைகளை வரவழைத்து அவற்றைச் சவப்பெட்டியின்மேல் கண்ணீர் விம்மலுடன் ஸ்தாபித்தார்கள். அன்று சவப்பெட்டியின்மேல் போடப்பட்ட பூமாலைகள் இருநூற்றுக்கு அதிகமாகும்.

மணி—டாங், டாங்—என்று நாலு அடிக்கவே புகைவண்டி ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டது. அங்கு கூடியிருந்தவர்கள் மகா துக்க துயரத்துடன் மெள்ள மெள்ள தங்கள் இல்லிடங்களுக்குச் சென்றனர்.

விஸ்வாஸ நாயகரும் அவரோடு வந்திருந்தவர்களும் பிரேதத்துடன் ரயில் வண்டியிலேறி மறுநாள் சாயந்திரம் தங்கள் சொந்த ஊர்போய்ச் சேர்ந்தார்கள். ருக்மணியின் பிரேதம் ஊருக்குக் கொண்டுவரப்படும் செய்தியை அறிந்த அவ்வூராரும் சுற்றுப்பக்கத்து ஊராரும் துக்கத்துடன், சவப்பெட்டியைச் சுமந்துவரும் வண்டிக்கு எதிராகச் சென்றார்கள். ஆயிரக் கணக்கான ஜனத்திரளால் சவப்பெட்டி சூழப்பட்டு செபம், பிரார்த்தனை முதலியவைகளை ஜெபித்துக்கொண்டு தேவாலயத்தில் தயார் செய்யப்பட்டிருந்த ஸ்தானத்தில் அதை யிறக்கி வைத்தார்கள்.

அன்று சாயந்திரம் முதற்கொண்டு மறுநாள் பிரேதம் அடக்கம் பண்ணப்படும் வரையில் அநேக மெழுகுவர்த்திகள் இரவும் பகலும் பெட்டியைச் சுற்றிலும் எரிந்தவண்ணமா யிருந்தன.

மறுநாள் காலை குருப்பிரசாதிகள் ஆரவார சிறப்புடன் பெரியபாட்டுப் பூசைசெய்து ருக்மணியின் இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தார்கள். அன்று சாயரட்சை பிரேதம் கணக்கற்ற ஜனங்களால் சூழப்பட்டு தேவகீர்த்தனைப் பாடல்களுடன் கல்லறைக்கு கொண்டுபோகப்பட்டு நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

விஸ்வாச நாயகர் அன்றுதினம் தமது மருமகளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக அன்னதானமும் வஸ்திரதானமும் ஏராளமாகப் புரிந்தார். திருப்பூசைபலிகளுக்கு அதிக திரவியஞ் செலவிட்டார். தரித்திரரையும் ஏழைகளையும் கைம்பெண்சாதிகளையும் அநாத பிள்ளைகளையும் மறந்தவரல்ல. அவ்வூரார் எல்லோரும் ருக்மணியின் மரணத்தைப்பற்றி துக்க துயரப்பட்டபோதிலும் அபிராமியின் துக்கம் உரைக்குந் தன்மையல்ல. தனக்குப் பேருபகாரியும் நேசருமானவருடைய மனைவியின் அகால மரணத்தால் வாக்குக் கெட்டாத துக்கம் அனுபவித்தாள். தேவதாஸ் பண்டிதர் சித்திரித்த படத்தை அபிராமி பார்க்கும்போதெல்லாம் பண்டிதரையும் ருக்மணியையும் பார்ப்பதுபோல நினைத்து கண்ணீர் சிந்துவாள்.

நடோறும் அந்தப் படத்துக்குமுன் ஜெபிக்கும்போது தன் நேசக் குமாரன் சத்திய வேதத்தில் வளர்க்கப்படவும், தன் புருஷன் மனந்திரும்பவும் வேண்டிக்கொண்டதுபோல, ருக்மணியின் ஆத்துமம் உத்தரிக்கிற ஸ்தலத்தை விட்டு மோக்ஷம் சேரவும், காணுமற்போன தேவதாஸ் பண்டிதரும் க்ஷேமமாய் யாதொரு அபாயமுமின்றி தன் ஊர் வந்து சேரவும் மகா பக்தி விஸ்வாசத்துடன் சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொண்டுவந்தாள்.

விஸ்வாச நாயகர் தமது விருத்தாப்பியத்தைப்பற்றியும் நோயைப்பற்றியும் அவர் நடத்தி வந்த உபதேசி வேலையை ராஜீனுமா கொடுத்துவிட்டார்.

இவர் உபதேசி வேலை செய்யா விடினும் புறத்தியாருடைய ஆத்தும இரக்ஷணிய வேலைக்காக முன்னிலும் அதிக ஊக்கமாய் உழைத்து வருவார்.

.. அந்தக் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்ட அநேக சபைகளில் பேர்கொடுத்து அவைகளின் ஒழுங்குகளை நுணுநுணுக்கமாய் அனுசரித்து வருவார். அஞ்ஞானிகள் பதிதர் மனந் திரும்பும்படி பிரயாசையுடன் புத்தியுஞ் சொல்லி, அப்படி மனந் திரும்புவோருக்கு ஞான உபதேசம் உணர்த்தி வருவார். ஊரூராய்த் திரிந்து, சாகக்கிடக்கும் சிறு குழந்தைகளுக்கு ஞனஸ்நானங் கொடுப்பார்.

இந்த விஸ்வாச நாயகருடைய விடா முயற்சியால் அர்ச். வின்சேந்துடைய சபை அவ்வூரில் ஏற்படுத்தப்பட்டு, அதனுல் கணக்கில்லாத நன்மை உண்டானது. இந்தச் சபையால் ஏழையெளியவர்களுக்குப் பிழைக்கும் வழி யேற்பட்டது. அனுத பிள்ளைகளுக்கு அடைக்கல ஸ்தலம் உண்டானது. கைம்பெண்சாதிகளுக்கு தஞ்சம் கிடைத்தது. சோதனையால் அலைக்கழிக்கப்படுவோருக்கு ஆறுதலுண்டானது. இந்தச் சபையால் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் உண்டான நன்மை கொஞ்சமல்ல.

இந்தப் பெருத்த வேலையில், அவ்வூரில் அநேகர் விஸ்வாச நாயருக்கு உதவியாக வந்து சகலமும் சீராயும் ஒழுங்காயும் நடக்கும்படி முயற்சித்தார்கள். இவர்களுக்குள் பவுல்போதகரும் ஈசாக் உபதேசியாரும் முக்கியமானவர்கள். ஆனுல் அபிராமி அம்மாளோ விஸ்வச நாயகருக்கு வலதுகையா யிருந்தாள். அவருடன் ஏகோபித்து உழைப்பாள் சகல வேலைகளிலும். ஆஸ்பத்திரிக்குப்போய் வியாதியஸ்தரை அடிக்கடி சந்திப்பாள். நோயாளிகளான ஏழைச் சிறு குழந்தைகளுக்குத் தாய்போல பக்ஷத்துடன் மருந்து கொடுப்பாள். ஏழைகளான பேருக்குத் தன் வீட்டிலிருந்து அரிசியோ, பணமோ, வஸ்திரமோ இன்னும் தேவையானது எதுவோ அவையெல்லாம் கொண்டுபோய்க் கொடுப்பாள்.

இது நிற்க, இன்னெரு விசேஷமான வழக்கம் அந்த ஊரில் புதிதாய் ஏற்படுத்தப்பட்டது. அதென்னவெனில், இங்கிலீஷ் பாஷையில் மிஷன் (Mission) என்று வழங்கப்படும் ஞான ஒடுக்கம். இந்த ஞான ஒடுக்கம் வருஷத்தில் ஒரு முறை நடத்தப்படும். இந்த ஞான முயற்சியானது 8 நாள் நீளிக்கும். அப்போது பிரசங்கிகள் தூர நாடுகளினின்று அழைக்கப்பட்டு, மனிதனுடைய கடை முடிவுகளைப்பற்றி காலையிலும் மாலையிலும் பிரசங்கிப்பார்கள்.

அந்நாட்களில் அந்த ஊரிலுள்ளவர்கள் மாத்திரமல்ல, அருகாமையிலுள்ள ஊர்களிலிருந்தும் வந்து பிரசங்கம் கேட்பார்கள் விஸ்வாசிகள். அந்த எட்டு நாளும் கோவில் முழுதும் நிறைந்து, கோவிலுக்கு வெளியேகூட அநேகர் நிற்பார்கள். ஹிந்துக்கள் வேடிக்கை நிமித்தம் பிரசங்கம் கேட்பார்கள். புரோடஸ்டாண்டாரோ, தங்களிருதயத்திலுள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படி சத்திய கிறீஸ்துவர்களுடன் தேவாராதனையில் சேர்ந்திருப்பார்கள். மேலும் இவர்கள் தங்களுடைய பந்துக்களுடன் வந்து இராவேளையில் மாத்திரம் கோவிலுக்கு வெளியேநின்று பிரசங்கம் கேட்பார்கள்.

கடைசி நாள் மிகவும் ஆரவாரச் சிறப்பாய் நடக்கும். அன்று பாவசங்கீர்த்தனஞ் செய்து, நன்மை வாங்குவோருடைய கணக்கு அபரிமிதமாகும். பாஸ்குக்கடன் தீர்த்துக்கொள்ளாத பாவிகளும், பல காரணத்தைப்பற்றி வெகுநாளாய்த் துர்மார்க்கராய் நடந்துவந்த பாபிஷ்டிகளும் அன்று தினம் கோவிலுக்குப்போய் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து சம்மனசுக்களின் போசனமாகிற தேவநற்கருணையை வாங்குவார்கள். வெகு நாளாய் வர்ம மனஸ்தாபமா யிருந்தவர்கள் பகையைத் தீர்த்துக்கொள்வார்கள். பேருக்கும் பொருளுக்கும் நஷ்டஞ் செய்தவர்கள் அன்று பரிகாரஞ் செய்வார்கள். மேலும் இரண்டு மூன்று புரோடஸ்டாண்டு குடும்பங்களும் அன்று சத்திய வேதத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

இந்த ஞான ஒடுக்கத்தால் கணக்கில்லாத ஞான நன்மைகள் உண்டாவதைப்பற்றி அந்த ஊர் பங்கு ஸ்வாமியார் வருஷா வருஷம் மதராசுக்கும், திருச்சிக்கும், பெங்களூருக்கும், கோயம்பத்தூருக்கும், புதுவைக்கும், கும்பகோணத்துக்கும் இன்னுமற்ற பட்டணங்களுக்கும் கடிதமெழுதி, பிரசங்கத்தில் தேர்ந்த புண்ய குருக்களை வரவழைத்து 8 நாள் ஒடுக்கம் தவருமல் வைப்பார். கிறீஸ்துவர்களோ, அவருடைய நற்

கருத்துக்கு இணங்கி தங்களுக்குப் பிரசங்கம் பண்ணவரும் குரு ஸ்வாமியாருடைய பிரயாணச் செலவுக்குவேண்டிய பணத்தைத் தங்களுக்குள் தண்டி தங்கள் பங்கு ஸ்வாமியார் கையில் கொடுப்பார்கள்.

நாம் இப்போது சொல்லும் வருஷத்தில் சிலோன் தீவிலுள்ள கண்டி பட்டணத்திலிருந்து பத்தியில் தேர்ந்தவரும் வாய்ச்சாலகருமான ஒரு அரிய யௌவன பிரசங்கி வருவதாக தங்கள் பங்கு ஸ்வாமியார் மூலமாக அறிந்த அவ்வூரார் வெகுவாய்ச் சந்தோஷித்து மகிழ்ந்தார்கள். அந்த குரு ஸ்வாமியாருக்கு தகுந்த விதமாய் நல் வரவு கொடுத்து அழைப்பதற்கும் அவருடைய பிரயாணச் செலவுக்கும் கடைசி நாளில் அவருக்கு நல்வரிசை யளிப்பதற்கும் ஊரார் தங்களுக்குள் வரி போட்டுக்கொண்டு தண்டல் செய்துவந்தார்கள்.

அந்த வருஷம் அபிராமியம்மாள் பங்கு ஸ்வாமியாரிடம் போய், அவர் உத்தரவு அளித்தால் கண்டியிலிருந்து பிரசங்கம் செய்ய வரும் ஸ்வாமியாருக்கு ஒரு நேர்த்தியான பூசை ஆயத்தம் தைத்துத் தயார் செய்வதாகச் சொன்னாள். அதை ஸ்வாமியார் கேட்கவே, சொல்லி முடியாத சந்தோஷத்துடன் உத்தரவு கொடுத்து, அந்தப் புண்யவதியை பக்ஷத்துடன் கடாக்ஷித்து, "நீ கொடுக்கப்போகும் வெகுமானத்தால் அந்த ஸ்வாமியாருக்கும் உனக்கும் உண்டாகும் சந்தோஷப் பெருக்கம் இவ்வளவென்று விவரிக்க என்னால் சாத்தியப்படாது, மகளே! உன் பிரிய குழந்தையை 23-வருஷத்துக்கு முன் இழந்ததினால் உனக்கு உண்டான துக்கத்திலும் ஆயிரமடங்கான சந்தோஷம் உனக்குண்டாகும்" என்று அபிராமியை ஆசீர்வதித்து அனுப்பினார் குரு ஸ்வாமியார்.

அன்றே அபிராமி பொம்பாய்க்குக் கடிதமெழுதி, ஓர் நேர்த்தியான பூசை ஆயத்தத்திற்கு வேண்டிய பொன் துணி, பொன் சருகை, பொன் இழை பலவிதமான புஷ்ப முதலியவைகளை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டாள். அவள் எழுதியபடி வந்த 300ரூ பெறுமான சாமான்களைக்கொண்டு அபிராமி, சித்திரத் தையல் வேலையில் தேர்ந்தவளாகையால், பூசை வஸ்திரம் செய்ய ஆரம்பித்தாள்.

இதைப் பார்த்த அபூர்வமணி, தானும் வர இருக்கும் ஸ்வாமியாருக்கு ஒரு நன்கொடை கொடுக்க விரும்பி, தன் தாய் தகப்பனிடம் தன் விருப்பத்தை வெளியிட்டதன்மேல், அவர்களும் ஒரு பொற்பாத்திரத்துக்கு ஆர்டர் செய்தார்கள்.

தங்கள் ஊரில் பிரசங்கம் வைக்க இருக்கும் குருவானவருக்கு அவ்வூரார் இவ்வாறு ஒரு நன்கொடை அளிப்பது வழக்கம்.

இப்படிச் சகலமும் முஸ்திப்பாகி, கண்டியிலிருந்து வரும் ஸ்வாமியாரைப் பார்க்கும்படி சகலரும் ஆசையுடன் காத்துக்கொண்டிருக்குங் காலத்தில், மறு வாரம் அவ்வூர் பங்கு ஸ்வாமியாருக்குக் கண்டி மேற்றிராணியாரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. அதை ஸ்வாமியார் உடைத்துப் பார்த்தபோது மகா துக்க வியாகுலத்துக்குள்ளானார். அந்த தந்தி சமாச்சாரம் என்னவெனில், கண்டியிலிருந்து பிரசங்கம் செய்யும்படி புறப்பட்ட டிக்ரூஸ் என்னும் ஸ்வாமியார் காட்டு மார்க்கமாய்ப் பிரயாணம் செய்யும்போது கள்ளர் கையில் அகப்பட்டிருக்கிறார் என்பதே.

இதைப்பற்றி கேள்விப்பட்ட அந்த ஊராருக்கு உண்டான துக்க துயரம் கொஞ்சமல்ல. ஆனால் அந்த ஸ்வாமியாருக்கு நன்கொடையளிக்கும்படி நினைத்து அதற்காக வெகு திரவியத்தைச் செலவு செய்த அபிராமிக்கு உண்டான வியாகுலமோ சொல்லத்தரமல்ல.

மறு நாள் அபிராமியம்மாள் குரு ஸ்வாமியாரை அணுகி, தன் இருதயத்தி லுண்டான பெருங் கஸ்தியை அவருக்குத் தெரிவித்தபோது, விருத்தாப்பியரான குருவானவர் அபிராமிக்கு ஆறுதலான வார்த்தை சொல்லி, "மகளே! சர்வேசுரனை மகா பக்தி விஸ்வாசத்துடன் வேண்டிக்கொள். அந்த நல்ல குருவானவர் யாதொரு மோசமுமின்றி கள்ளர் கையினின்று விடுதலையாகி நமதூருக்கு வருவார்" என்றார்.

உனக்குத் தின்மை செய்கிறவர்களுக்கு நன்மைசெய்து அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவாயாக.

உன்னை வார்த்தையினாலேயும் கிரியையினாலேயும் துன்பப்படுத்துகிறவர்களோடு மதுர குணத்தோடு பேசி அவர்களை சர்வேசுரனிடத்தில் சேர்ப்பாயாக.

உன தாத்துமங் கலங்கி யிருக்கும்போதும் கோப மெழும்பி யிருக்கும்போதும் கலக்கத்தினாலும் கோபத்தினாலும் உனக்கு அனேக பாவங்கள் வராதபடிக்கு கலக்கம் கோப மாறுகிறவரையில் பேசாமல் மவுனமா யிருப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

THE 20th ANNUAL GENERAL MEETING OF C. I. A.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம். 20-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம்.

நாளது 1917-ம் ஞு செப்டம்பர்மீ 8-ம் தேதியாகிய சனிக்கிழமை பிற்பகல் இரண்டேகால் மணிக்கு, மயிலாப்பூரில், செந்தோம் செமினெறி சபாமண்டபத்தில் ஷை தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் இருபதாவது வருஷாந்தப் பொதுக்கூட்டம் நடந்தேறியது. திருச்சினாப்பள்ளி, அர்ச். சூசையப்பர் கலாசாலைத் தலைவரும், சென்னை சர்வகலாசாலை யத்தியட்சர்களில் ஒருவருமாகிய சங். பெர்ட்ராம் சுவாமிகள் அக்கிராசனம் வகித்தார்கள். முதலில் கூட்டத்திற்கு விஜயஞ் செய்தவர்கள் 141-பேர்கள். இவர்களில் பின் விவரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தால் 17-பேர்கள் வெளியேறிப்போக, மிகுதியாயுள்ள 124-பேர்களால் (இவர்களனைவரும் அங்கத்தினரே யாவர்.) கூட்டம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. நாகப்பட்டணம், கூடலூர், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மாயவரம், கீழ்ச்சேரி முதலிய வெளியூர்களினின்றும் வெகு பேர் வந்திருந்தனர். சென்னையிற் சென்ற சில காலமாய்க் கிளம்பியுள்ள நவீனக் கிளர்ச்சி காரணத்தால் நேரிடக்கூடிய யாதோர் கலகத்தை நிவிர்த்திக்கும்பொருட்டு, இக் கூட்டத்தில், சங்கத்துக் கட்டணங்களை சரிவரச் செலுத்தியுள்ள அங்கத்தினர் தவிர ஏனையோர் இடம் பெறாரென்று ஏற்கெனவே அனைவருக்கும் அறிக்கை செய்யப்பட்டிருந்தது. இந் நியாயமான நிபந்தனைக்குக் கட்டுப்படாத காளைகள் பலர் துராகிர்தமாய்க் கூட்டத்துக்குள் பிரவேசித்துக் கலகஞ் செய்ய எண்ணங்கொண்டிருப்பதாக சமாசாரம் எட்டியதால் கூட்டம் யாதோர் கலகமின்றி அமைதியாய் நடைபெறும் வண்ணம் கூட்டத்து மண்டப வாயிலில் போலீசு காபந்து செய்யவேண்டியது அவசியமாயிற்று. எதிர்நோக்கியவாறு கலகமாரம்பிப்பதாகவே தோன்றியது! ஆயினும், போலீசு சிப்பந்திகளைக் கண்ட கலகப் பிரியர்கள் தங்கள் பிரியத்தை நிறைவேற்றக் கூடாமையாய்ப் போயிற்று.

"கடவுள் பாப்பரசரை ஆசீர்வதிப்பாராக" என்ற பாடலுடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சபா நாயகர் நீண்டதோர் முகவுரைப் பிரசங்கஞ் செய்தார். அவர் உபந்நியாசத்தின் சாராம்சம் பின் வருமாறு: இது கத்தோலிக்கருக்குள்ளும் கலகத்துக் கிடமான காலமா யிருக்கிறதென்றும், தென்னிந்திய கத்தோலிக்கு இந்தியர் சங்கம் செம்மையாய் நடைபெறாம லிருத்தலினால் வெற்றி தரத்தக்க ஆதாரங்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பெறும் வேறொரு சங்கம் விரும்பத்தக்கதென்று மேற்றிராணிமார்கள் பெங்களூரிற் கூடிச் செய்த 4-வது தீர்மானமே இக்கலகத்துக்குக் காரணமாய்ச் சொல்லலாமென்றும், இத்தீர்மானத்தினால், மேற்றிராணிமார்கள் கத்தோலிக்கு இந்தியர்களின் இலௌகிக முன்னேற்றத்துக்கு விரோதமா யிருக்கிறார்களென்ற தப்பர்த்தம் பண்ணப்படுகிறதென்றும், இந்தியர்களின் நல் விருப்பையே நாடி, தங்கள் நாட்டையும் வீட்டையும் விட்டு வந்திருக்கும் மேற்றிராணிமார்கள் கத்தோலிக்கு இந்தியரின் இலௌகிகாபிவிர்த்திக்கு இடையூறா யிருக்கிறார்களென்பது அணுவளவும் ஆதாரமில்லாத பொய்யாகுமென்றும்; மேற்றிராணிமார்களின் பிரேரணைப்படி, அதிக பிரயோஜனம் அளிக்கத்தக்க வேறோர் சங்கம் ஸ்தாபித்து நடத்தப் பிரியமில்லாவிடில், இப்போதிருக்கிற சங்கத்தையே கிறீஸ்துவர்கள் தங்களிஷ்டம்போல் நடத்திக்கொள்வதில், மேற்றிராணிமார்களுக்கு எட்டுணையும் ஆட்சேபனையில்லை யென்றும், ஆனால், இப்போதிருக்கிற கருத்துக்களை மாற்றி இச் சங்கத்தை முழுதுமே இராஜிய ஜனசார சங்கமாக நடத்தப்போகும்பட்சத்தில், மேற்றிராணிமார்களில் எவரும் இதில் சம்பந்தப்பட்டிருத்தல் முடியாத காரியமென்றும்; அவ்வித சங்கத்தினின்று குருப்பிரசாதிகள் விலகி யிருந்தாலும் அவர்கள் கிறீஸ்துவர்களுடைய இலௌகிக முற்போக்குக்கு ஒருபோதும் தடையேதுஞ் செய்யார்களென்றும்; ஆனால் இலௌகிகத்தை நாடிச் செய்யுங் காரியங்கள் கத்தோலிக்கருடைய வேத விசுவாசத்துக்காவது, நன்னடைத்தைக்காவது மோசம் வருவிக்கும் ஆபத்துக்குரியவையானால் அக்கணமே, குருப்பிரசாதிகள் அவைகளில் தலையிட்டு அத்தகைய விஷயங்களைக் கண்டிப்பது

அவர்களுடைய கடமையாகுமென்றும்; இப்போது புதிதாய் திருத்தஞ் செய்து பிரசுரிக்கப்பட்டுள்ள மசோதா ஒழுங்குகள் சங்கத்தின் நிர்வாக சபை மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட்டபடியே யிருக்கின்றினவென்றும்; அவைகளை மாற்றப் பிரியப்படுபவர்கள், சங்க ஒழுங்குகளை யநுசரித்து நியமமாய் தங்கள் பிரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தடையில்லையென்றும்; இதை விட்டு சிலர் பத்திரிகைகளில் கூக்குரலிட்டுக் கலாபனை செய்வது அநுசிதமென்றும்; ஒழுங்குகளால் திட்டப்படுத்தப்பட்டுள்ள யாதோர் சங்கத்தின் காரியங்களை ஆலோசித்து நடத்துவதற்கு அச் சங்கத்தைச் சேராதவர்களும் வரவழைக்கப்பட வேண்டுமென்று வாதிப்பது நியாயத்துக் கொவ்வாத காரியமென்றும்; தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தவர்கள் தங்கள் சுதந்தரங்களை அந்நியர்களுக்கு விற்றுவிடப் போகாதென்றும், ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு நடவாத சங்கம் நசிந்து நாசமடையுமென்றும், இப்போது நிகழ்ந்துவருங் காரியங்களைக் கவனிக்குங்கால், இக் கூட்டத்தை நடத்தும் விஷயத்தில் சங்க ஒழுங்குகளைக் கண்டிப்பாய் அநுசரிக்கப் பார்ப்பதைவிட வேறு வகையில்லையென்றும் சொல்லலுற்றூர். தமது உபந்நியாச முடிவில் சபா நாயகர், தற்காலம் இந்தியா முழுவதுமுள்ள ஜனங்களின் கவனத்தை கவர்ந்துகொண்டிருக்கும் விஷயத்தைப் யநுசரித்து, "தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்களுக்குப் பிரதிநிதியா யிருக்கும், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கக் கூட்டத்தில் இன்று இங்கு கூடியுள்ளோர் அனைவரும் சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயஞ் செய்யவிருக்கும், இந்திய காரியதிரிசியாகிய மகா கனந்தங்கிய இ. எஸ். மாண்டேகு அவர்களுக்கு, மனப்பூர்வமாய் நல்வரவு அளிக்கிறூர்கள்" என்னும் பிரேரணையைத் தாமே பிரரேபிக்க, அதைச் சபையினர் அனைவோரும் ஒரே வாக்காய் ஆமோதித்து அங்கீகரித்தனர்.

இச்சமயத்தில், மிஸ்டர், எஸ். எம். குழந்தை பி. ஏ. எழுந்திருந்து சென்னைநகர்க்கிளைச்சங்கத்துக்குத் தவறுமல் சந்தா செலுத்திவந்த நாலு நபர்களின் நாமதேயங்கள், கௌரவகாரியதரிசி தயாரித்த ஜாபிதாவில் காணப்படவில்லையென்றும், அத்தகைய நபர்கள் அக்கூட்டத்துக்கு வந்திருந்து ஏன் வாக்குக் கொடுக்கப்படாதென்று தீர்மானிக்கவேணுமென்றும், சபாநாயகரைக் கேட்க, சாபாநாயகர், சங்க ஒழுங்குகளின்படி கூட்டத்திற்கு வரச் சுதந்தரமுடையவர் இன்னூர், இன்னூரென்று காரியதரிசியவர்களால், நுணு நுணுக்கமாய் ஆராய்ந்து தயாரிக்கப்பட்டதால் அது சரியான ஜாபிதாவாக பாவிக்கப்படவேண்டுமென்றும், மேலும், அது சரியோ அல்லவோ வென்று விசாரிப்பது சபாநாயகரால் முடியாத காரியமென்றும் சொன்னதின்பேரில், ஷை குழந்தைசாமி பிள்ளை யவர்களும், ஆர். என். தனபால் முதலியாரவர்களும், அவர்களுடன் பதினைந்துபேரும் வெளியே சென்றனர். அதன் பின்னர், நடவடிக்கைக் கிரமச்சீட்டில் கண்டபடி ஒன்றன்பின் னென்றுய்க் கூட்டத்தின் காரியங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன.

கௌரவ காரியதரிசியவர்கள் சென்ற 1816-17 வருஷத்திய சங்க விருத்தாந்த அறிக்கையையும், வரவு செலவு கணக்குகளையும், சபையோருக்குச் சமர்ப்பித்தார். இதன்படி பிரஸ்தாப வருஷத்தின் வரவு ரூ. 1,336—10—0, என்றும், செலவு ரூ. 462—4—9 என்றும், தற்கால கையிருப்புத் தொகை ரூ. 6,907-15-3 என்றும், இதில் சங்க விடுதிக்காக வசூலித்த ரூ. 1,672—7—0 என்றும், இவ் வருஷத்தில் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 49-பேர்களென்றும், இவர்களில் தூத்துக்குடி வர்த்தகர், ஐ. எக்ஸ். பெரெய்ரா அவர்கள், மௌளசூர் சோ. சி. ராயண்ண நாயுடுகாரு, திருச்சிணுப்பள்ளி ஏ. இரத்தினசாமிப் பிள்ளையவர்கள் ஆக மூவர் ஆயுள் அங்கத்தினரென்றும், மற்றையோர் சாதாரண அங்கத்தினரென்றும், தஞ்சாவூருக்கடுத்த வல்லத்தில் ஒன்றும், கீழ்ச்சேரிக்கடுத்த மௌளசூரி லொன்றுமாக இரண்டு கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன வென்றும், இக்கிளைச் சங்கங்களுக்கு முறையே மகா-ள-ள-ஸ்ரீ, புட்டி சின்னைய நாயுடுகாரும், எஸ். மாணிக்கம் பிள்ளையவர்களும் ஸ்தல காரியதரிசிகளாய் நியமிக்கப்பெற்றன ரென்றும் தெரியவந்தது. இவ்வறிக்கைப்பத்திரத்தை வாசித்து முடித்தபின், கௌரவ காரியதரிசியவர்கள் தற்காலம் கத்தோலிக்கு இந்தியர்களுக்குள் கிளம்பியுள்ள குழப்பக் கிளர்ச்சியைப்பற்றியும், அது காரணமாய் விளையக்கூடிய கலகத்தைத்தடுக்க, கிரமமான அங்கத்தினர் தவிர மற்றவீணரை அப்பொதுக் கூட்டத்துக்கு வரவொட்டாமல் விலக்கவேண்டியிருந்த அவசியத்தைப்பற்றியும், ஒழுங்குகளைச் சீர்திருத்தஞ் செய்தவர்களின் நோக்கங்களைப்பற்றியும், அப்புது ஒழுங்குகளிலடங்கியுள்ள சீலத்தைப்பற்றியும், கத்தோலிக்கு இந்தியர்களுக்கும் மேற்றிராணிமார்களுக்கும் பொதுவாயிருக்கவேண்டிய சம்பந்தத்தைப்பற்றியும் விஸ்தாரமாய் விளக்கியோர் உபந்நியாசஞ் செய்தார். கௌரவ காரியதரிசி யவர்கள் சமர்ப்பித்த விருத்தாந்த அறிக்கைப்பத்திரமும், கணக்குகளும் சபையோரால் முழுதும் அங்கீகரிக்கப்பெற்றன.

பிறகு, திருச்சிணுப்பள்ளி ம-ள-ள-ஸ்ரீ, எப். ஜி. நடேச ஐயர் அவர்கள் எழுந்திருந்து ஏற்கெனவே அங்கத்தினர்களுக்குள் வழங்கப்பட்டிருந்த சங்க ஒழுங்குகளின் மசோதா வரையப்பெற்ற விவரங்களையும், இதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி மெம்பர்கள் ஒழுங்குகளையும் செவ்வனே சீர்திருத்தஞ் செய்யுமாறு கொண்ட சிரமத்தையும் பற்றிப் பேசி, தற்கால நிலைமைக்கேற்ப அவைகள் எவ்வளவு உதார நோக்காய் திருத்தப்படலாகுமோ அவ்வளவு உதார நோக்காய்த் திருத்தப்பட்டிருக்கின்றன வென்றும், அவைகள் சகலருக்கும் நன்மையையும், திருப்தியையுங் கொடுக்கத் தக்கவையா யிருக்கின்றன வென்றும் சொல்லி, மசோதா ஒழுங்குகள் அனைத்தையும் ஒரேமட்டாக அங்கத்தினர் அங்கீகரிக்க வேண்டுமென்று பிரேரித்தார். அப்பிரேரணை சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் த. அருமைநாத பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. அப்போது, சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகள், சங்கத்து அக்கிராசனுதிபதியின் அதிகாரத்தைப்பற்றிய 16-வது, 20-வது, 40-வது ஒழுங்குகளைப்பற்றித் தாம் ஆட்சேபிப்பதாயும், ஏற்கெனவே சீர்திருத்தக் கமிட்டியார் ஒழுங்குகளைப் பரிசோதனை செய்தபோதும் தாம் இவைகளை ஆட்சேபித்ததாயும், அவ்வாட்சேபனையை இப்போதும் ஸ்தாபிப்பதாயும் சொன்னூர்கள். இந்த ஆட்சேபனையை, இராயபுரம், தி. ஞானதிக்கம் பிள்ளையவர்கள் ஆமோதித்தார்கள். அதன்மேல் மசோதா ஒழுங்குகளை ஒவ்வொன்றுகவோ அல்லது ஒரேமட்டாகவோ அங்கத்தினர் அங்கீகாரத்துக்கு விடுவது என்னும் பிரசினை பிறக்க, சபாநாயகரவர்கள் ஒழுங்குகளனைத்தும் ஒருமட்டாய் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று ஷை நடேசய்யர் கொண்டுவந்த பிரேரணையை அங்கத்தினருடைய அபிப்பிராயத்துக்குவிட, பன்னிரண்டு பேர்கள் மாத்திரம் அதற்கு விரோதமாய் நிற்க பெரும்பான்மையாகிய மற்றையோரால் அது அங்கீகரிக்கப்பட்டது.

சபா நாயகரவர்கள் தமது முடிவுரையில், தாம் எண்ணிவந்த பிரகாரம், விகற்பத்தை ஒழித்து ஐக்கியத்தை யுண்டு பண்ணுதற்கில்லாமற் போய்விட்டதைப்பற்றி விசனிப்பதாகச் சொன்னூர்கள். மேலும், கனந்தங்கிய கௌரவ காரியதரிசியாகிய, திவான் பஹதூர் சுவாமிகண்ணுப் பிள்ளை யவர்களுடைய வேலையைப்பற்றியும், யோக்கியதையைப்பற்றியும், இவைகளுக்குச் சம்பந்தமாக இராஜாங்கத்தாரால் ஐ. எஸ். ஓ. என்னும் அபிமான கௌரதாப்பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டதையும்பற்றி புகழ்ந்துபேசி, அவருக்கு சுபசோபன வாழ்த்து கூறினூர்கள். அதை அங்கிருந்த அங்கத்தின ரனைவரும் அக்களிப்புடன் ஆமோதித்தார்கள். பிறகு ம-ள-ள-ஸ்ரீ, எஸ். அற்புதசாமி யுடையா ரவர்களால் சபா நாயகருக்கு வந்தனங் கூறப்பட்டு, "அரசர் நீடூழி வாழ்க" வென்னும் பாட்டுடன் கூட்டம் முற்றுப்பெற்றது.

அன்று, நிர்வாக சபை இருதரங் கூடி சில முக்கியமான விஷங்களைத் தீர்மானித்தது. அங்கத்தினர் ஜாபிதாவை பரிசோதனை செய்ய ஒரு கமிட்டியும், பிரிந்துபோனவர்களின் பத்திரிகையாகிய "கத்தோலிக்கு நேச"னுக்குப் பர்த்தியாக வேருெரு சங்கப் பத்திரிகை நடத்தும் விஷயமாக ஒரு கமிட்டியும், இந்தியா மந்திரியாகிய கனந் தங்கிய மிஸ்டர் இ. எஸ். மாண்டேகு அவர்களுக்குச் சமர்ப்பிக்க ஒரு விஞ்ஞாபனம் வரைய ஒரு கமிட்டியும் ஆக மூன்று கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. மயிலாப்பூர் மேற்றிராசன சபையின் அங்கத்தினராக, மிஸ்டர் ஏ. ஜெகநாத பிள்ளை நியமிக்கப்பட்டார். பதினெட்டு வருஷங்களாக, இச்சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஸ்தானத்தை வகித்துவந்த திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்களின் ராஜிநாமா அங்கீகரிக்கப்பட்டு, அவருக்குப் பதில் மகா-ள-ள-ஸ்ரீ, த. அருமைநாதப் பிள்ளை யவர்கள் பி. ஏ., பி. எல்., கௌரவ காரியதரிசியாக நியமனம் பெற்றூர்கள்.

A. C.

ஒருவர் பேரிலும் தூறு சொல்லாமல் எல்லாரையுங் குறித்து நன்றுய்ப் பேசி குற்றவாளிகள் பேரிலுங் கோபங் கொள்ளாமல் இரக்கமாயிருந்து அவர்கள் திருந்தப் பிரயாசப்படுவாயாக. —(அர்ச். லிகோரியார்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

மைலைக் காட்டுக்கோவில் லூர்துமாதா புதுக் கெபி.

சங். பத்திராதிபரே!

சென்னையைச் சேர்ந்த மைலாப்பூர் காட்டுக் கோவிலான அர்ச். ஞானப்பிரகாச மாதாவாலயத்தின் 400-ம் வருஷ ஜுபிலியின் ஞாபகச் சின்னமாகக் கட்டப்பட்டுள்ள அர்ச். லூர்துமாதா கெபி மந்திரிக்கப்பெற்ற சிறப்பின் வரலாற்றைப்பற்றி யானெழுதும் சில வரிகளை நமது "நல்ல ஆய"னில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆகஸ்டு மாதம் 19-ந் தேதி ஷை கெபியை மந்திரிப்பதற்காகக் கோவில் கம்பவுண்டும் கெபியும் புஷ்ப தோரணங்களாலும் மகர தோரணங்களாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தது மல்லாமல், அங்கங்கே பலவர்ண துவசங்களும், கொடிகளும், விருதுகளும் பறந்துகொண்டிருக்க, நாற்புறமும் மின்சார தீபங்களால் சூரியனுக்கொப்ப பிரகாசித்துக்கொண்டிருந்தது. பிரான்சு நாட்டிலுள்ள பிரனிஸ் குன்றினின்று ஒழுகி வடியும் நீரூற்றானது பாறைகளில் மோதி விழுந்து புல் பூண்டு விருக்ஷங்களைப் புஷ்பிக்கச் செய்வதுமன்றி பிணியாளிகளுக்குப் பூரண சுகத்தையும் தருமாப்போல், இக்கோவிலின் வெளிமுற்றத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இக் கெபியின் உச்சியிலுள்ள ஜலதாரையானது மாதாவின் வலது புறமாய்ப் பாய்ந்து சமீபத்திலுள்ள புல் பூண்டு புஷ்பச் செடிகளின்மீது சிறு மழையைப் போல் தூறின காட்சியானது மனதிற்கு ரம்மியத்தைத் தரக்கூடியதா யிருந்தது. சென்னையையும் மைலையையும் சேர்ந்த அநேக சுவாமிமார்களும், கன்னியர் சந்நியாசிகளும், ஆயிரக் கணக்கான கிறீஸ்துவர்களும் மாலை 6-மணிக்கு வந்து ஒருங்கு கூடினார்கள். மி. ச. லூயிஸ் சுவாமிகள், வேறனேக சுவாமிமார்களால் சூழப்பட்டு வெண்ணிறப் பளிங்கு தகட்டாலும், விலையுயர்ந்த முத்துக்களாலும் சிங்காரிக்கப்பட்ட தேரில் ஜோதிப் பிரகாசமாய் எழுந்தருளியிருந்த அர்ச். லூர்து நாயகியின் சுரூபத்தைத் தூபதீப தீர்த்தமிட்டு மந்திரித்தபின் சங். ஹ—ட் சுவாமிகளால் ஆங்கில பாஷையில் லூர்துநாயகியைப் பற்றி ஓர் இனிய பிரசங்கம் செய்தானவுடன் தேர் சுற்றுப் பிரகாரம் ஆரம்பிக்க, கன்னியர்களும், சந்நியாசிகளும், கிறீஸ்துவர்களும் எரிகிற மெழுகுவர்த்திகளைத் தங்கள் கரங்களில் பிடித்து முழங்காலூன்றி யிருக்கையில், திடீரென பயங்கரத்துக்குரிய இடி குமராலுக்கொப்பான சப்தமொன்று அங்கு திரண்டு கூடியிருந்த சுமார் 5,000 பெயரையும் திடுக்கிடச் செய்ததுமன்றி, ஜனங்கள் கோவென்றலறி கூக்குரலிடவும் செய்தது. காரண மென்னவெனில் கோவில் வெளிமுற்றத்தின் நாற்புறத்திலும் பிரகாசித்துக்கொண்டிருந்த மின்சார தீபங்களி லொன்று அதிகமாய்த் தீப்பற்றி யெரிகிறதைக் கண்ட விசாரணை குரு சங். மோத்தாவாஸ் சுவாமிகள் தீபத்தின் சமீபத்தி லுட்கார்ந்திருந்த ஜனக்கும்பலை அப்புறப்படுத்துமுன் தீப எண்ணை கலயத்தின் (Oil Cylinder) மேல் மூடி வெடித்து சூழவிருந்த ஜனங்களுக்கு யாதோர் சேதத்தையும் வருவியாமல் 50-அடிக்கப்பா லிருந்த கல்லறை மதில் மேல் மோதினது. தேவதாய் தம்மை நம்பினவரெவரையும் எவ்வித நாச மோசத்துக் குள்ளாக்குவதில்லையென்று காட்டவும், தாம் உலகத்தினெத்திசையிலும் செய்துவரும் எண்ணிக்கையில்லாத புதுமைகளில் இவ்விடத்தில் நடந்த இதுவும் ஓர் புதுமையாக இருக்கவுஞ் சித்தங்கொண்டாள். ஆச்சரியமான இப் புதுமையைக் கண்ட ஜனத்திரள் அர்ச். லூர்துநாயகியின்பேரில் அதிக பற்றுதலும் பக்தியுங்கொண்டு தங்கள் கரங்களில் மெழுகுவர்த்திகளைப் பிடித்த மேரையாயிருக்க, பங்கு கிறீஸ்துவர்களிற் சிலரால் தேரானது தோள்மேல் சுமந்துகொள்ளப்பட, சுற்றுப்பிரகாரம் புறப்பட்டது. பிரான்சு தேசத்தில் லூர்து நகரில் நடக்கும் சுற்றுப்பிரகார காட்சியை இந்தியாவிலுள்ளவர்கள் பார்த்ததில்லை யாதலால் அவ்வித சுற்றுப்பிரகாரத்துக்குக் குறைந்த அளவாயாகிலும் இச்சுற்றுப்பிராகாரத்தை நடப்பிக்க வேண்டுமென்ற ஆவலுடன் சங். மோத்தாவாஸ் சுவாமிகள் ஏற்பாடுகள் செய்திருந்தனர். மகத்துவ காம்பீரியத்தோடு தேர் சுற்றுப்பிரகாரம் முடிவானபின் சங். அருளப்ப சுவாமிகள் அர்ச். லூர்துநாயகியைப் பற்றியும் இவ்வாலயத்தின் 400-ம் வருஷ ஜுபிலியின்

ஞாபகார்த்தமாக சங். மோத்தாவாஸ் சுவாமிகளின் அரும் பிரயாசையால் கட்டப்பட்ட இப் புதுக்கெபியைப்பற்றியும்மிக்க வாய்ச்சாலகமாய் அரிய ஓர் பிரசங்கம் செய்தார். பின்னர் ஆரவாரச் சிறப்புடன் "தேதேயம்" என்னும் நன்றியறிந்த தோத்திர கீதம் பாடப்பட்டு திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. மறுநாள் ஷை குகையில் சங். மோத்தாவாஸ் சுவாமிகளால் திவ்யபூசை செய்யபபட்டது. பிறகு (Messrs. Doss & Co.,) தாஸ் அன்டு கம்பெனியார் புகைப்படம் பிடித்தார்கள். இப்புதுக் கெபியின் ஞாபகக்குறிப்பாக லூர்துமாதாவின் தரிசன வரலாற்றைக்கொண்ட துண்டுப் புத்தகங்கள் லூர்துமாதா படத்துடன் தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டு எல்லோருக்குங் கொடுக்கப்பட்டது.

மேற்சொன்ன புதுமையு மல்லாமல் வேறு இரண்டு புதுமைகளும் அன்றயத்தினம் நடந்தேற லூர்தாண்டவள் திருவுளம் கனிந்தாள். தேரைச் சுமந்து போனவர்களுக்குள் ஒருவர் இருமலினால் நீண்டகாலந் துன்பப்பட்டவர். இவருக்கு இந்நோய் அன்றே குணமானதுடன், இன்னொருவருக்கும் சில நாளாய் அவரிடதுகண் படபடவென் றடித்துக்கொண்டிருந்தது, ஷை கெபியிலிருந்து ஓடிவந்த ஜலதாரையின் தண்ணீரைக் கொண்டு அதைக் கழுவவே அவருக்கும் குணமுண்டானது. என்றும் துதியும் தோத்திரமும் லூர்துநாயகிக் குண்டாவதாக.

சங். மோத்தாவாஸ் சுவாமிகள் விசாரணை குருவாக இக்கோவிலுக்கு வந்திருந்த இரண்டு வருஷங்களுக்குள்ளாக அவரால் பல காரியங்கள் செய்யப்பட்டன:

> "மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> யருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினர்."

என்றபடி சருவேசுரனுடைய மகிமைக்கும் ஆத்ம ரட்சணியத்திற்கும் எதுவையும் செய்ய பின்வாங்கினவரல்ல. இக்கோவிலுக் கிடப்பட்டிருக்கிற பெயரின்படி இக்கோவில் ஓர் காட்டில் கட்டப்பட்ட கோவிலாகவே இதுகாறு மிருந்துவந்தது. சென்னையில் முதலாய் அநேகர் இக்கோவிலை யறியார். ஆனால் அவருடைய பெரும் முயற்சியினால் கொண்டாடப்பட்ட 400-ம்ஆ ஜுபிலி மஹோற்சவமும் அந்த உற்சவத்தின் ஞாபகச்சின்னமான ஷை கெபியும் இக்கோவிலை சென்னையிலுள்ள எல்லோருமாத்திரமல்ல, சென்னை இராஜதானி, ரங்கூன், பர்மா, சிங்கப்பூர், பினாங், இங்கிலாந்து அமெரிக்காவிலுள்ளவர்களும் அறியலானார்கள். அன்றியும் அவர் தம் பங்கு கிறீஸ்துவர்களுடைய இலெளகீக, வைதீக நன்மைகளுக்காகவும் எடுத்துக் கொண்ட பிரயாசை சொல்லுந்தரமன்று.

இப்படியாக உழைத்துவந்த இந்நல்ல குருவானவருடைய திறமையையும் சாமர்த்தியத்தையுங் கண்டறிந்த மைலை மேற்றிராணியார், நாகப்பட்டணத்துக் கருகிலுள்ள கருங்காணி என்னும் கிராமத்தில் மேய்ப்பனில்லா ஆடுகளைப்போல் சிதருண்டு கிடக்கும் கிறீஸ்துவர்களைச் சீர்ப்படுத்த இவரே தகுதியானவரென்று இவரை அவ்விசாரணைக்கு மாற்றின சங்கதியைக் கேள்வியுற்ற இவ்விசாரணை கிறீஸ்துவர்கள் சொல்லமுடியாத துக்க சாகரத்திலமிழ்ந்தினார்கள்.

இவ்வாறாக பங்கு கிறீஸ்துவர்களெல்லோரும் தங்களுடைய அன்பார்ந்த தகப்பனை யிழப்பதைப்பற்றி துக்கித்தபோதிலும், தெய்வசித்தத் துக்கமைந்து, தங்களுடைய நன்றியறிதலை அவருக்குக்காட்ட, பிரிவோபசாரப்பத்திரம் வாசித்துத் தங்களுடைய நன்றியறிதலின் அறிகுறியாக சில நன்கொடைகளையும் அவருக் களித்தனர். வந்தனோபசாரப்பத்திரம் ம-ா-ா-ஸ்ரீ, போர்மன் C. V. தோமாஸ் பிள்ளை அவர்களால் வாசிக்கப்பட்டு, புஷ்பமாலை ம-ா-ா-ஸ்ரீ, போர்மன் A. A. ஏபிராம் பிள்ளை அவர்களால் சூட்டப்பட்டது. சபைத்தலைவரி லொருவரும் (Messrs. Manuel & Co.,) சொந்தக்காரருமான மகா-ா-ா-ஸ்ரீ, Y. M. ஜான் பிள்ளை அவர்களால் (Messrs. P. Orr & Sons,) கம்பெனியில் செய்விக்கப்பட்ட வெள்ளிப்பாத்திர மொன்று சன்மானிக்கப்பட்டது. பூசை உதவி செய்யும் சிறுவர்களால் வேறொரு வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது.

தம் கிறீஸ்துவர்களின் அனுதாபத்தையும் நன்றியறிதலையுங்கண்ட சங். மோத்தா சுவாமிகளின் மனதும் மலர்ந்த முகமும் மனக்கசிவினால் சற்றே மயங்கியதாய்த் தோன்றிற்று. ஆயினும் அவர் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி எப்போதைக்கும் அவர்கள் திருச்சபையின் மெய்யான பிள்ளைகளா யிருக்கவேண்டுமென்று இரண்டோர் வார்த்தை உறுதியாகச் சொல்லி தம் ஆசீரை யளித்தார்.

இந்த நல்ல குருவானவர் அர்ச். லூர்து மாதாவின் உதவியும் ஆசீரும் பெற்று, சென்றவிடங்களிலெல்லாம் சிறப்புற்று விளங்கி திடகாத்திரராயும் தீர்க்காயுளுள்ளவராயும் சீவிப்பாராக.

தேனாம்பேட்டை 18—9—'17. C. V. T.

கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் பிளவு.

ஐயா,

சென்ற செப்டம்பர்மீ 8-ம் தேதி சென்னையில் நடந்த ஷை தென் இந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் 20-வது வருஷாந்தப் பொதுக் கூட்டத்தில், சங்கம் ஒருவாறு பிளவுபட்டு போன சங்கதி சிலருக்குத் தெரிந்திருக்கலாம், சிலருக்குத் தெரியாதுமிருக்கலாம். இதைப்பற்றி கத்தோலிக் காபிமானிகள் அனைவருக்கும் சுருக்கமாய் விவரிக்குமாறு இஃதெழுதலானேன்.

பிளவு என்றால் பெரும்பிளவல்ல, சிறுபிளவே. அதைப்பற்றி கத்தோலிக்கர் கலக்கமடைவதற்குக் காரணமில்லையாயினும், அதன் உண்மைச் சங்கதியை உற்றவர்களுக்கு உரைப்பது அவசியமாகும். தற்போது கத்தோலிக்கரில், பெரும்பாலும் சென்னையிலுள்ளவர்களில், குருக்களை யநுசரித்தவர்களும், குருக்களை யநுசரியாதவர்களும் என இருகட்சியார் ஏற்பட்டிருக்கிறார்கள். அதாவது, இதுவரையில் இருந்ததுக்கு விரோதமாக, குருக்கள் கூட்டுறவே கூடாது என்று கூக்குரலிடுங் கட்சியொன்று கிளம்பியிருக்கிறது. இந்தக் கட்சியே ஷை பிளவுக்குக் காரணம். இந்தக்கட்சியார், கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தை மேற்றிராணிமார்களுடைய கண்காணிப்பினின்று பிடுங்கி, வேறுபடுத்திவிடவேணுமென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அப்படி வரவிடக்கூடாதென்று தடுக்க முயன்று வருகிறார்கள். இதுவே இருகட்சிகளின் தன்மையாகும். குருக்கள் கூடாதென்னும் கட்சியாரின் கூக்குரல் பெரிதாயிருந்ததால் அவர்கள் கட்சி கடைத்தேறாதவண்ணம் குருக்கள் வேண்டுமென்பார் முயற்சிசெய்தார்கள். ஆகவே ஷை பொதுக்கூட்டத்திற்கு, அங்கத்தினர் தவிர மற்றையோர் வராமல் விலக்க, அங்கத்தினருக்கு மாத்திரம் பிரவேசச் சீட்டு கொடுக்கப்பட்டது. பிரவேசச் சீட்டு பெறாத ஏனையோர்கள் வந்து கலகஞ்செய்வதைத் தடுக்க போலீசு காபந்து செய்யப்பட்டது. பிரவேசச் சீட்டு பெற்று நியாயமான வழியாய் கூட்டத்திற்கு வந்தவர்கள் 141 பேர்கள். கூட்டம் ஆரம்பித்தபின், குருக்கள் கூடாதென்னுங் கட்சியைச் சேர்ந்தவர்களில் இரண்டொருவர் எழுந்திருந்து சில குதர்க்கங்கள் பேசிதங்கள் கட்சி நிறைவேறாமையால், தங்களைச் சேர்த்து 17 பேர்கள் கூட்டத்தினின்று வெளிப்போந்து, அங்கு காத்திருந்த கட்சிக்காரர்களைக் கூட்டிக்கொண்டு வேறிடஞ் சென்று, கூட்டம் வைத்து, தாங்களும், கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தவரென்று சொல்லிக்கொண்டு, லூத்தேர் திருச்சபையையும், திருச்சபைத் தலைவரையும் திரஸ்கரித்துவிட்டு புரோடெஸ்டாண்டு சபை ஏற்படுத்தினதுபோல், தங்களுக்கு வேறோர் அக்கிராசனாதிபதியையும், காரியதரிசியையும் தெரிந்துகொண்டு, சங்க விரோதஞ் செய்து வருகிறார்கள். (இவர்களைப்பற்றிய முழு விருத்தாந்தம் அடுத்த சஞ்சிகையில் அறிவிப்பேன்). ஆகையால், கத்தோலிக் காபிமானிகளே, கலகக்காரர்கள் விரிக்கும் கண்ணிகளில் சிக்குண்டு மோசம் போகாதீர்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை! சென்னை அதிமேற்றிராணியாரும், மயிலை மேற்றிராணியாரும், நெல்லூர் கலெக்டர் திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை, ஐகோர்ட்டு வக்கீல் அருமைநாதபிள்ளை, எஞ்சினீயர் ராவ் பஹதூர் ஆரோக்கியசாமி முதலியார், ராய்சாஹேப் அருளைய நாயுடு, ராவ்சாஹேப் ஆரோக்கியசாமி பிள்ளை முதலிய கனவான்களுஞ் சேர்ந்துழைக்கும் புராதீன சங்கத்தைப் போற்றுங்கள், ஆதரியுங்கள். புதிதாய்க் கிளம்பியுள்ள போலிச் சங்கத்தைச் சேராதீர்கள். அடுத்த சஞ்சிகையில் அனைத்தையு மொழிவேன்.

கத்தோலிக்காபிமானி.

[இடமில்லாக் குறையால் இம்மாதத்தில் மற்றக் கடிதங்கள் பிரசுரிக்கப்படவில்லை. ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

மனந்திரும்பல்.—அமெரிக்காவில் ருஷித் பிரிவினையைச் சேர்ந்த குருவானவர் ஒருவரும் அவருடைய பங்கு கிறீஸ்துவர்களும் மனந்திரும்பி கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்ந்தார்கள்.

அக்குயினு ஆண்டவர்.—இவரே உலகத்திலுள்ள சகல மேற்றிராணிமார்களிலும் மிகவும் யௌவனர். இவர் தென் அமெரிக்காவைச் சேர்ந்த பிரசில் நாட்டிலிருக்கிறார். இவருக்கு இப்போது பிராயம் 29.

ஓர் உபாத்தியாயினி தேவை.—மெட்ரிக்குலேஷன் பரிட்சையில் தேறி, போதனா முறை நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஓர் உபாத்தியாயினி (A Trained Female Matriculate) தேவையாயிருக்கிறது. தமிழுந் தெரிந்திருக்கவேண்டும். இஷ்டமானோர் சென்னை, இராயபுரத்து அர்ச். அன்னம்மாள் கன்னிகர் மடத்து சிரேஷ்ட தாயாருக் கெழுதிக்கொள்ளவும்.

விநோத நாணயங்கள்.—ஜெர்மெனியில் இப்போது பணக்குறை யேற்பட்டிருப்பதினால் இரும்பு நாணயங்கள் வழங்கப்படுகின்றனவாம். அமெரிக்காவிலுள்ள மெக்சிகோவில் அட்டையாற் செய்யப்பட்ட நாணயங்களும், சீனாவில் பீங்கானாற் செய்யப்பட்ட நாணயங்களும், தென் அமெரிக்காவிற்கு வடக்கேயுள்ள மேல் இந்திய தீவுகளைச்சேர்ந்த ஒன்றில் பறவைகளின் சிறகாற் செய்யப்பட்ட நாணயங்களும் வழங்கி வருகின்றன.

உலகத்திலுள்ள கன்னியாஸ்திரீகளின் தொகை.—தற்காலம் கத்தோலிக்குக் கிறிஸ்துவ உலகமடங்கலிலுமுள்ள கன்னியாஸ்திரீகளின் மொத்தம் நாலரை இலட்சமென்று தெரியவருகிறது. இவர்களில் இருபதினாயிரம்பேர் தங்கள் சுயநாட்டைவிட்டு அந்நிய தேசங்களுக்குப்போய் சத்தியவேத விருத்திக்காக உழைத்து வருகிறார்கள். இப்படி இவர்கள் உழைக்கிற தேசங்களுக்குள் இந்த இந்தியாவும் ஒன்று.

சஷ்டிப் பூர்த்தி.—என்னுந் தம்முடைய ஜனனத்தின் 60-வது வருடாந்த கொண்டாட்டத்தைத் திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் சமீபத்தில் கொண்டாடியபோது நம்முடைய பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரும் தம்மால் வரையப்பெற்ற தம்முடைய சுப சோபனங்களடங்கிய பத்திரத்தை கண்டியிலுள்ள தமது ஸ்தானாதிபதியின் கரங்களினால் மகாராஜா அவர்களுக்குச் சமர்ப்பித்தருளினார். பரிசுத்த தந்தையின் பெருந்தன்மை வாய்ந்த இச் செய்கையை திருவாங்கூர் கவர்ன்மெண்டார் மிக்க சன்மானித்து பெருமை பாராட்டுவார்களென்று சொல்லத் தேவையில்லை.

காக்ஸ்டன் மண்டபம்.—லண்டன் பட்டணத்திலுள்ள இந்தப் பிரமாண்டமான சபாமண்டபத்தை அர்ச். தோமினிக் சபை குருக்கள் சில வாரங்களுக்குக் குடிக்கூலிக்காக வாங்கி யிருக்கிறார்கள். அதேனென்றால் அதில் நாடோறும் பிரசங்கங்கள் செய்து நம்முடைய சத்திய வேதத்தின் உண்மையை எல்லோருக்கும் தெரியச் செய்யவேண்டுமென்பதைப்பற்றியே. அப்பிரசங்கங்களைக் கேட்கப்போகிறவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிசைக்கு $3\frac{3}{4}$ ரூ. பெறுமான பிரவேசச் சீட்டு வாங்கிப் போகவேண்டியது. விடாமல் இரண்டு வாரம் போகிறவர்கள் ரூ. 51 கட்டவேண்டியது. இப் பிரசங்கங்களைக் கேட்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ப் போகிறார்களாம். புரொடெஸ்டான்டாரும் திரண்டு போகிறார்கள்.

காலஞ்சென்ற ஆஸ்திரியா சக்கரவர்த்தி.—பிரான்சீஸ் ஜோஸப்பென்னும் பெயர்பூண்ட இவர் 68 வருஷகாலமாய் ஷை தேசத்தை அரசாண்டு சிலமாதங்களுக்கு முந்தியே மரணமானார். இந்த 68 வருஷ காலத்தில் இவரைப்போல துன்ப துயரங்களுள்ளாயிருந்த அரசர் வேறு யாரும் இல்லவேயில்லை. இவருடைய சகோதரரான மாக்ஸ்மிலியன் சுட்டு கொல்லப்பட்டார். இவருடைய குமாரர் கொலையுண்ணப்பட்டார். இவருடைய சகோதரரின் குமாரர் காணாமற்போனார். இவருடைய சகோதரியும் சகோதரியின் குமாரத்தியும் ஓர் விபத்தினால் தீய்க்கு இரையானார்கள். இவருடைய மனைவியாகிய சக்கரவர்த்தினி ஒரு பைத்தியக்காரனுடைய கத்திக்கு இரையானாள். இவருடைய சகோதரியின் குமாரரும் அவருடைய மனைவியும் பாதகரால் கொலை செய்யப்பட, இதனாலேயே உலக முழுதும் தற்போது நிகழும் கொடும்போரி லமிழ்ந்தி பரதவிக்கின்றது.

மேற்றிராணிமார்களின் அதிகாரம்.—மேற்றிராணிமார்களுக்கு ஞான விஷயங்களில்மாத்திரமல்ல. இலௌகீக விஷயங்களிலும் சட்டம் ஏற்படுத்த அதிகார

முண்டு. இத்தாலியாவிலுள்ள தூரின் நகரின் அதிமேற்றிராணியாருங் கர்தினுலுமான ரிச்சேபர்க் என்னும் ஆண்டவர் தமது விசாரணையைச் சேர்ந்த குருக்களுக்கு ஒரு நிருபமெழுதி அடக்கவொடுக்கமின்றி மரியாதைக் குறைவாய் வஸ்திராபரணங்களைத் தரித்துவரும் ஸ்திரீகளைக் கோவிலுக்கு வரவிடக் கூடாதென்றும், அப்பேர்ப்பட்ட டம்பாச்சார நடத்தையுள்ள பெண்டீர்களுக்குப் பாவசங்கீர்த்தனம் தேவநற்கருணையாகிய தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றக் கூடாதென்றும் கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிருர். இந்த அதிமேற்றிராணியார் கிறீஸ்துவர்களுடைய உடுபாவனையைப் பற்றிய இலவுகீக விஷயத்தில் தலையிட்டுக் கொண்டது நீதியோ, அநீதியோவென்று சொல்லக்கடவார்கள் பெங்களூரில் மேற்றிராணிமார்கள் செய்த தீர்மானங்களையெதிர்த்து நிற்குங் கிறீஸ்துவர்கள்.

சிறுவர்கள் திவ்ய பூசை காணும் வகை.—என்னும் இச்சிறிய செபப் புத்தகம்—இதற் கிடப்பட்டிருக்கிற பெயரே தெரிவிக்கிறபடி—சிறு பிள்ளைகளுக்காக அச்சிடப்பட்டிருக்கிறது. சிறு பிள்ளைகள் கோவிலுக்குப் பூசை காணவந்தால் பராக்கு,வேடிக்கை பார்ப்பதிலும், பேசி,சிரித்து விளையாடுவதிலும் பூசை நேரத்தை வீணய்க் கழிக்கிருர்களென்பது சகஜம். இதைத்தடுத்து அவர்களிடத்தில் சிறுவத்திலிருந்தே பூசையைப் பய பக்தியாய்க் காணும் வழக்கத்தை உண்டாக்க இப்புத்தகம் மிக்க உதவியாயிருக்கும். ஆனபடியால் பிள்ளைகளின் பொறுப்பையும் கண்காணிப்பையு முடையவர்கள்—விசேஷமாய்ப் பெற்ரேரும் உபாத்திமாரும்—தங்கள் பிள்ளைகளிடத்தில் இப் புத்தகத்திலுள்ள செபங்களை அதில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி செபிக்கும் வழக்கத்தையுண்டுபண்ணுவார்களானல்,அவர்கள் தங்கள் சீவியகாலமெல்லாம் பக்தி விசுவாசத்துடன் பூசை காண்பார்களென்பது திண்ணம். பூசையின் அந்தந்த நேரத்தில் அந்தந்த ஜெபங்களைப் பிள்ளைகள் ஜெபிக்கும்படி இது படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை யணு $3\frac{1}{2}$, தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டியவர்கள் பின்வரும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். மி. ச. ஏ. மெர்கஸ் சுவாமிகள், சென்னை அதிமேற்றிராணியார் வீடு, நுங்கம்பாக்கம், கத்திடரல் போஸ்ட்,மதராஸ், எஸ். டப்ளுயூ.

மி. ச. லூயிஸ் சுவாமிகளின் தேகவியோகம்.—மைலை மேற்றிராசன அதிசிரேஷ்டராகிய (Vicar General) இவர் சென்றமீ 13-ம் தேதி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் மரணமானுரென்று மிக்க அநுதாபப்படுகிருேம். இவர் கோவைமாநகரத்தில் கண்ணியமுள்ள குடும்பத்திலுதித்தவர். குருப்பட்டத்துக்குப் படித்து 1881-ம் வருஷம் குருப்பட்டம் பெற்று அடுத்த வருஷம் மைலை மேற்றிராசனத்துக்கு வந்து சேர்ந்தார். இவர் சென்னையிலும், நாகப்பட்டணத்திலும், தஞ்சாவூர், திருத்துறைப்பூண்டி முதலிய விடங்களிலும் ஆத்தும ரட்சணியத்திற்காக மிக்க பிரயாசை ஊக்கத்துடன் உழைத்து வந்தவர். இவருடைய மரணத்தால் மைலை மேற்றிராசனத்துக்குப் பெரும் நஷ்டம் உண்டானதென்று சொல்லத் தேவையில்லை. இவர் சென்னை, இராயபுரத்து அர்ச். அந்தோனியார் கோவிலின் விசாரணை குருவாகவு மிருந்திருந்தபடியால் ஷை கோவில் பங்கு கிறீஸ்துவர்கள் தங்கள் விசாரணை குருவாகிய மி. ச. நோரோஞ்யா சுவாமிகளுடன் ஏகோபித்து அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒப்பீஸ்பாடி பெரிய பாடல்பூசை செய்வித்தார்கள். சென்னை மதுரநாயகி அம்மாள் கோவிலில் மி. ச. பெர்ணுந்தீஸ் சுவாமிகளாலும், மைலை மேற்றிராசனக் கோவிலில் மிகவும் வந்திக்கத்தக்க ஆண்டவரவர்களாலும் பூசைசெய்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. சங் மி. ச. லூயிஸ் சுவாமிகள் தமது 55-ம் பிராயத்தில் மரணமடைந்தார் இவர் ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

பெங்களூர் அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபை.—இச்சபை சென்ற 10-வருடங்களாக நடைப்பெற்று வந்திருந்தும் இத்தனை வருடங்களாக அதன் ரிப்போர்ட்டு புத்தக ரூபமாய் வெளிப்படாமல் இவ்வருடமே வெளிப்பட்டிருக்கிறது. சபையின் அபிவிருத்திக்கு இதோர் நல்ல அடையாளமென சொல்லாமலே விளங்கும். இச்சபைக்கு 5-கிளைச் சபைகளும், கவர்ன்மெண்டு ஆதரவில் ஓர் கொவாப்பரேட்டிவ் சங்கமுமுண்டு. அன்றியும் சபை வாலிபரின் தேகப் பயிற்சிக்கும் மனேவுல்லாசத்துக்கும் உதைபந்து விளப்புகளும் நாடக விளப்புகளும் பஜனைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இச் சபையின் முக்கிய நோக்கமுங் கருத்தும் யாதெனில் கிறீஸ்துவர்கள் மதுபானகேட்டுக் குள்ளாகாமல் அவர்களை மதுவிலக்கு பிரசுரங்களினுலும், உபந்நியாசங்களினுலும், பாடல்களினுலும், நாடகங்களினுலும், நவீன கதைகளினுலும் தடுக்கப் பிரயாசைப்படுவதேயாம். இதன் சம்பந்தமாய் இச்சபையின் கவுரவப் பொக்கிஷாதிபரும், செயின் மேரிஸ் ஸ்கூல் தலைமை உபாத்தியாயருமாகிய ஸ்ரீமான் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களால் சமீபத்தில் இயற்றப் பெற்ற "மனேகரன்" என்னும் ஓர் சிறிய நவகதை மதுவருந்துவதினுலுண்டாகும் கேடுபாடுகளையெல்லாம் தெளிவாய்க் கூறுவதுடன், சிறந்த தமிழில் வாசிக்க இன்பமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய துண்டுபுத்தகங்களும் நவ கதைகளும் மதுபானமெனும் பாதகனை சங்கரிக்கும் ஏதுக்களா யிருக்கின்றன. இந்த ரிப்போர்ட்டைப்பற்றிய ஓர் குறிப்பை இச் சபையார் கவனிப்பார்களாக. அஃது யாதெனில் மாதாந்தர கூட்டங்களுக்கு சொற்பப்பேர் வருகிருர்களென்பதே. இது சரியன்று கூட்டங்களுக்குக் கிரமமாய்ச் சபையார்வருவது கூட்டத்தின் அபிவிருத்திக்கு இன்றியமையாத விஷயங்களி லொன்றென்று அறிந்துகொள்வார்களாக.

கோழி வரி.-சமீபத்தில் குன்ட்டூர் ஜில்லாவைச் சேர்ந்த கிராமங்களில் கோழிவரி போடப்போகிருர்களென்ற ஓர் வதந்தி பிறந்திருந்தது. ஷை ஜில்லா கலெக்டர் ஜமாபந்திக்காகப் புறப்பட்டு ஓர் இடத்தில் முகாம் செய்திருந்த தருணத்தில் கலெக்டர் துரையவர்களின் சமையற்காரன் கோழி முட்டைக்காக எங்கெங்கேயோ சுற்றித்திரிந்தும் முட்டை யகப்படாமல் கடைசியாக ஓர் பெண்பிள்ளையினிடத்தில் முட்டை ஒன்றுக்கு 8 அணு வீதங் கொடுத்து இரண்டு முட்டைகளை வாங்கி வந்தானும். அப்பிராந்தியங்களில் ஒரு

அணுவுக்கு 6 அல்லது 8 முட்டைகள் கிடைக்கும். இதைக் கேள்வியுற்ற கலெக்டர் அவர்கள் அப்பெண்பிள்ளையை வரவழைத்து அவளை யென்ன ஜாதி யென்று கேட்க, அவள் தானேர் சக்கிலிச்சி யென்ருள். பிறகு,

கலெக் —உனக் கெதாவது நிலபலமுண்டா?"

பெண்.—எனக்குப் பத்து ஏக்கரா நிலமுண்டு".

கலெக்.—அவ்வளவு நிலத்தையும் நீ யெப்படிச் சம்பாதித்தாய் ?"

பெண் —"ஐயா, எனக்கு இரண்டு பெட்டைக் கோழிகளுண்டு; அவை தினந்தோறு மிடும் ஒவ்வொரு முட்டையையும் 8 அணு விழுக்காடு சென்ற 5 வருடங்களாக விற்று, அதனுல் கிடைத்த பணத்தைக்கொண்டு இந்தப்பத்து ஏக்கரா நிலத்தையும் வாங்கி யிருக்கிறேன்."

கலெக்.-"சரி, நீ இரண்டு பெட்டைக் கோழிகளைக் கொண்டு இவ்வளவு பணம் சம்பாதித்திருப்பதைப்பற்றி, இனிமேல் கோழி வரி போடவேண்டும்" என்று சொன்னதைக் கேட்ட பெண்பிள்ளை தன் வீட்டுக்குச் சென்று தனக்குங் கலெக்டருக்கும் நடந்த சங்கதிகளை வெளியிட்டாள். இச்சங்கதி காட்டிற்பிடித்த தீயைப் போல அவ்வூரெல்லாம் பரவினதுமன்றி பக்கத்து கிராமங்களிலும் பரவவே, எல்லோரும் கோழி வரிக்குத் தப்பித்துக் கொள்ள தங்கள் தங்கள் ஊரிலிருந்த கோழிகளை யெல்லாம் அடித்துச் சாப்பிட்டும், சமைப்பிட தகுதியற்றவைகளான சிறு குஞ்சுகளைச் கழுத்தை முறித்து வேலிகளிலெறிந்தும் போட்டார்களாம்.

சிரசற்ற உடல்.—புரோடஸ்டான்டார் சிரசற்ற உடலுக் கொப்பா யிருக்கிருர்களென்பதற்கு பின்வருவது ஓர் திருஷ்டாந்தம். இவர்கள் உத்தரிக்கிற ஸ்தல மில்லையென்று பிதற்றி மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது தப்பறையான கொள்கையென்று சொன்னபோதிலும், இங்கிலாந்தில் காண்டர்பரியிலும் யார்க்கிலுமுள்ள இவர்களுடைய பெரிய பிஷப்புகள் இருவரும் மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்ள ஓர் ஜெபத்தை உண்

டாக்கி, அதைத் தங்கள் அதிகாரத்திலுள்ள பாதிரிமார்களுக் கனுப்பி அவர்கள் தத்தம் கோவிலில் சென்ற மாதத்தில் அதைச் செபித்துவர உத்தரவளித்ததுமன்றி, மற்றப் பிஷப்புகளும் தங்கள் பாதிரிமார்களுக் கனுமதிகொடுத்தால், அவர்களும் தங்கள் கோவில்களில் அந்த ஜெபத்தை ஜெபிக்கலா மென்றும் தெரிவித்தார்கள். மான்செஸ்டர் பிஷப்பு இதற்கு ஆக்ஷேபனை செய்து, புரோடஸ்டாண்டு வேத போதகத்தின்படி மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பெருந் தப்பறையென்று சொல்லி, தம்முடைய மேற்றிராசனத்திலுள்ள எந்தக் கோவிலிலும் ஷை ஜெபத்தை ஜெபிக்கக்கூடாதென்று கண்டிப்பான விலக்கஞ்செய்தார். ஆனால் இப்பிஷப்பின் மேற்றிராசனக் கோவில் விசாரணை பாதிரியார் தன் பிஷப்பு செய்கிற விலக்கம் நியாயமானதல்லவென்றும், அந்த மேற்றிராசனக் கோவிலுக்குத் தானே யதிகாரியன்றி தன் பிஷப்பு அதிகாரியல்லவென்றுங் கூறி ஷை மேற்றிராசனக்கோவிலில் தான் அடுத்த ஞாயிறன்று காலையிலும் மாலையிலும் அந்த ஜெபத்தை ஜெபிக்கப்போகிறதாகவும் விளம்பரஞ் செய்தார். ஆ! ஆ!! இதுவும் இக்கலிகாலத்துக் கோலமே. அதிகாரமும் ஒற்றுமையுமில்லாத புரோடஸ்டான்டு மதம் சிரசற்ற உடலுக்கு ஒத்ததென்பதற்கு என்ன ஆக்ஷேபனை?

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

ஜன்ன அறிக்கை.

மயிலாப்பூர்.

சென்னை திருமயிலை, செந்தோம் ஹைறோட்டில் முத்து கிராமணி தெருவில் 5-வது நம்பர் வீட்டில் வசிக்கும் ஜோனுஸ் குமாரன் அந்து பிள்ளை மனைவியாகிய அன்னம்மாள் கலியாணமாகி 22 வருஷமாய்க் குழந்தை யில்லாமலிருந்து திரு இருதய ஆண்டவரின் விசேஷித்த கிருபையாலும் அர்ச். தேவமாதா முதலான சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டினாலும் நாளது௵ செப்டம்பர் மாதம் 7-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-½-மணிக்கு ஓர் பெண் குழந்தையைப் பெற்றனள். தாயும் குழந்தையும் சுகம். சேசுவின் திரு இருதயத்திற்கு சதாகாலமும் ஸ்துதியும் தோத்திரமும் நமஸ்காரமு முண்டாகக் கடவது.

இப்படிக்கு,
ஜோனுஸ் அந்து.

நன்மரண அறிக்கை.

மைநாங்.

நமது பெருமானாகிய சேசு பகவானின் சீஷர்களில் ஒருவராகிய அர்ச். தோமையார் திருக்கல்லறையிரா நின்ற விடமாகிய மயிலாப்பூர் என்னும் ஊரில் பிறந்து தற்சமயம் பர்மாவில் மைநாங் என்னு மிடத்தில் விஜயஞ்செய்திருக்கும் அகஸ்டின் அ. நிக்கொலாஸ் அவர்களின் மனைவி ஸ்ரீமதி. ஜோசெப் அந்தோனி அம்மாள் தனது 26-ம் பிராயத்தில் நான்காவது பெண் குழந்தையை ஈன்றதிலிருந்து ஐந்து மாத காலமாக கிராணி என்னும் கொடிய வயிற்றுப் போக்கால் பீடிக்கப்பட்டு இங்கிலீஷ், தமிழ் பர்மா மருந்துகள் கொடுத்துச் சிகிச்சை செய்தும் குணப்படாமல் கடைசி தேவத்திரவிய யநுமானங்களைப் பெற்று தாவீது இராசாவின் சங்கீதத்தைக் கேட்ட வண்ணமாய்த் தனது நேயர்களையும் கொழுனரையும், இன்னும் தாயார் தமயனார் தங்கையையும் இக் கண்ணீர் கணவாயில் ஏங்கித்தேங்கி அழவிட்டு சென்ற ஜூலை மாதம் 1-ல் தேதி ஞாயிறுவாரம் சாயந்திரம் 5-மணிக்கு இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகுக்கேகினள். இவளுடைய சடலத்தை மறு நாள் சாயந்திரம் 4-30 மணிக்கு மைனாங் மையவாடியில் சங்கைக்குரிய ராஜரிஷி மேசா நெபி குருக்களால், ஆபீஸ் உத்தியோகஸ்தர் முதலானோர் புடைசூழ பூஸ்தாபகஞ்செய்யப்பட்டது. இதைக் கண்ணோக்கும் நமது "நல்ல ஆயன்" சந்தாதாரர்களெல்லோரும் இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டல் புரிய கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mynaung Church Compound. 20—8—1917.

இங்ஙனம்,
மாண்ட மனைவியைப் பின்பற்றும்,
அ. அ. நிக்கோலாஸ்.

ஸ்ரீமான் பீற்றர் கபிரியேல் கோமஸ் அவர்கள் தேகவியோகம்.

பரத சக்கிரவர்த்தியின் சந்ததியிற்றோன்றி பாண்டிய நாட்டின்கண் பரிபாலனம் புரிந்து கீர்த்திபெற்ற மன்னவனாகிய சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் மிக்கேல் பேதுரு தெக்குருஸ் கோமெஸ் பரதபாண்டியன் அவர்களின் புத்திர புத்திரனாகிய திருமந்திர நகர் கனவான் கஸ்பார் அந்தோனிகுரூஸ் கோமெஸ் அவர்களின் சிரேஷ்ட புதல்வரும், நீர்கொழும்பில் பிரபல வர்த்தகருமாகிய ஸ்ரீமான் பீ. ஜீ. கோமெஸ் அவர்கள் தமது 51-வது வயதில் சென்ற ஆகஸ்டு௴ 17-ம் தேதியாகிய வெள்ளிக்கிழமை சுமார் இரவு 8-மணிக்கு நீர்கொழும்பில் "பீலிக்ஸ் காஸா" என்ற தமது நிவாசத்திலே நித்திய இளைப்பாற்றியை அடைந்தார்.

இவருடைய மரணத்தால் பரத ஜன சமூகமாத்திரமல்ல, நீர்கொழும்பைச் சுற்றியுள்ள கத்தோலிக்க ஜன சமூகமும் கவலைக்குள்ளாகுமென்பதி லையமின்று.

இவர் மிகுந்த தர்ம சிந்தையுள்ளவர். ஏழைகள் மட்டில் இரக்கமுடையர். பழுத்த ஒரு குலாபிமானி. பரதகுல நன்மைக்காக பல முறையும், விசேஷமாக பரதகுல கல்வியபிவிர்த்திக்காகவும் போதிய பொருளுதவி புரிந்திருக்கின்றார்.

வறியவர்களுக்கு அன்னதானஞ் செய்வதிலும், அகதி பரதேசிகளுக்கு வஸ்திரதானஞ் செய்வதிலும், கோவிலுக்கு வேண்டிய திருப்பணி செய்விப்பதிலும் குருக்களை ஆதரிப்பதிலும் இவர் குறைந்தவரல்ல.

இந்தியாவிலும் இலங்கையிலும் தேவாலயங்கள் பலவற்றுக்கும் இவர் தாராளமாகத் தமது ஈகையைச் செலுத்தி யிருக்கின்றார். இப்படியாக திருவள்ளுவ நாயனார்

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை." என்று செப்பிய குறள் வாக்குக்கு

இவர் உத்தமமான ஓர் மேல்வரிச் சட்டமாயிருந்தவர்.

இவருக்கு மரணகாலங் கிட்டியதைத் தக்க காலத்திலேயே அறிந்து பாக்கியமாகத் தமது அந்தியகாலத்தை முடித்துக் கொண்டதை அறிந்தவர்கள் இவருக்குள்ள உண்மையான தேவ பற்றுதலின்பேரில் கடவுளுடைய விசேஷ கிருபாநுக்கிரகம் இவருக்குக் கிடைத்ததென்று சொல்லிக்கொள்கிறார்கள்.

தம்முடைய தேகவியோகத்தை ஒரு மாதத்துக்கு முன்னமேயே அறிந்து தமது குடும்பத்தார் யாராவது குறை கூறாவண்ணம் மரணசாதனம் எழுதிவைத்துவிட்டு ஒருமாத காலம் தினமும் தேவ நற்கருணையாகிய பரிசுத்த போஜனமருந்தி, தமது வர்த்தகசாலையிலுள்ள ஒவ்வொருவருக்கும், தமது மனைவி ஏக புதல்வருக்கும் தக்க புத்திமதிகள் சொல்லி கடைசித் தேவத்திரவியானுமானங்களைச் சரிவரப்பெற்று இறுதிவேளையில் "சேசுமரிய சூசை" யென்னுந் திருநாமமாகிய திரிநாமத்தை விடாதுபகர்ந்து பன்னிரண்டு நக்ஷத்திரங்களைத் திருமுடியாயணிந்த திவ்ய பனிமயத்தாய் தந்த சர்வலோக சக்கரவர்த்தியின் பரிசுத்த பதுமபாதஞ் சேர்ந்தனர்.

சனிவாரமாகிய மறுநாள் சாயரட்சை மிக்க சங்கைவாய்ந்த விக்கார் ஜெனரல் ஆதிய இருமூன்று குருப்பிரசாதிகளால் இவரின் சடலம் மந்திரிக்கப்பட்டு இலங்கையில் பலதிசைகளிலிருந்து வந்த பரத குலத்தவரும் இன்னம் நீர்கொழும்பிலுள்ள பரதகுலத்தவராகிய ஏனையோரும் இவரது ஏகபுதல்வரும், சகோதரர், மைத்துனர், மருமக்களாகிய குடும்பத்தோரும் புடை சூழ்ந்து மனம்வருந்தி யழுதுநிற்க "என் சிநேகிதராகிய நீங்களாகிலும் என்பேரி லிரக்கமாயிருங்கள். இரக்கமாயிருங்கள்" என்னும் ஞானவாக்கிய இரக்க சப்தத்துடன் ஜெனரல் செமிற்றெறியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இவருடைய ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது: R. I. P.

இதை வாசிக்கும் எமது சகோதரர் சகோதரிகளே இவ்வாற்றும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

நீர்கொழும்பு, 10—9—17.

இங்ஙனம்,
ஓர் பரதன்.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு வீடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை.	4,473	11	6
Mr. கோமெஸ்	10	0	0
Mrs. ஜேம்ஸ்	7	8	0
மிக்கேல், பட்லர் (மதுரை)	2	8	0
Mr. A. டேவிட் (மாண்டலே)	10	4	6
,, A. டெவிட் (மாண்டலே)	15	8	0
,, A. S. ரொடிரிக்ஸ் (தூத்துக்குடி)	25	0	0
ஆக மொத்தம்,	4,544	7	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னைப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1140—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
எற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,140	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (செப்டம்பர்மீ த்துக்கு) ...	30	0	0
Mr. T. M. Abraham G. T. Madras	3	0	0
,, M. S. Moriadoss (I. S. M. D.)...	4	0	0
,, S. SaverimuthuMdlr. (Karnul)	1	0	0
ஆக மொத்தம்	1,178	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
Vicar, Assumption Church,
North Georgetown,
Madras, E.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 15. } நவம்பர் 1917. { இலக்கம் 11.

SELF-GOVERNMENT.
சுய ஆட்சி.

சென்ற சில காலமாய் நமது நாட்டில் "செல்ப் கவர்ண்மென்ட்" "ஹோம் ரூல்" என்னுஞ் சுய ஆட்சிக் கூச்சல் பெருங் கூச்சலாயிருந்து வருகிறது. இக்கூச்சலைக் கேளாதார் பலரிரார். சுய ஆட்சி என்பதின் அர்த்தத்தையும் அதன் பலாபலனையும் அநேகர் அறியார். "சுய ஆட்சி, சுய ஆட்சி" என்று படித்தோரிற் சிலர் அங்குமிங்கும் கூவிப் பாடி ஆடித் திரிகின்றபடியால், அதன் உண்மை யர்த்தம் என்னவென்று ஆராய்ந்து பார்க்காமலே அநேகர் அவர்களுடன் சேர்ந்து கூவுகின்றனர், பாடுகின்றனர், ஆடுகின்றனர். சுய ஆட்சி யென்பது ஒரு தேசத்தார் தங்கள் தேசத்தைத் தாங்களே ஆண்டுகொள்வது. ஆகவே, இந்த இந்தியா தேசத்தை இந்தியர்களே ஆண்டு கொள்ளும்படி விட்டுவிட வேண்டுமென்பதுதான் இப்போது சுய ஆட்சிக்காரர்களின் கூக்குரல். ஒரு தேசத்தை யாளுவதென்றால், அதன் வரியிறை வசூல்களைத் திட்டப்படுத்துவது, அந்நாட்டாரின் உடல் பொருளாதியவற்றைக் காப்பது, அவர்கள் உண்ண, பருக, இருக்கவேண்டிய வசதிகளை யேற்படுத்துவது, அவர்களுடைய கல்வி, கைத்தொழில், வர்த்தகம் விவசாயம் முதலியவைகளை விருத்திபண்ணுவது, அந்நிய நாட்டாரால் துன்பம் இடுக்கண் வராமற் காப்பது முதலியன செய்து தேசம் செழிப்புறச் செய்வதாகும். பல ஜாதி, பல வருணம், பல மதம், ஜாதிக்குள் ஜாதி, வருணத்துக்குள் வருணம், மதத்துக்குள் மதம் முதலிய விகற்ப வேறுபாடுகள் மலிந்துள்ள இந்த இந்திய தேசத்தாருக்கு சுய ஆட்சி கிடைத்துவிட்டாலோ இத்தனைவித ஜாதி, வருண, மத பேதமுள்ள ஜனங்களனைவோருக்கும், இப்போது இந்த நமது பிரிட்டிஷ் அரசாட்சியில் கிடைக்கிறதுபோல் சமரசமான சம்ரட்சிப்பும், பாமரிப்பும் கிடைக்குமோ வென்பது சந்தேகாஸ்பதமான விஷயம். மேலும், இந்தியர் தற்காலம் சுய ஆட்சி கைக்கொள்ளுவதற்கு கல்வி, நாகரிகம் முதலிய மேம்பாடுகளில் தக்கபடி தேர்ச்சியடைந்திருக்கவில்லை. நாகரிகமுற்றயாதொரு நாட்டாருக்குள் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார்மட்டில் காட்டவேண்டிய நீதி, சமரச நோக்கு, பரிவு முதலிய சுகுணங்கள் இன்னும் நம்மிந்தியருக்குள்

போதுமான அளவு விருத்தியடையவில்லை. ஒரு வகுப்பார் தன் முயற்சியாலோ, பிற முயற்சியாலோ உயர்வடைந்துவிடுவார்களானால் மற்றைய வகுப்பினரை ஒங்கவிடார். அவர்களை நசித்துவிட சூழ்ச்சி செய்வார். தாமே வாழவேண்டும் மற்றவர் தாழவேண்டுமென நினைப்பார். தற்காலம் கல்வியிலும், செல்வத்திலும் இராஜாங்க உயர் பதவியிலும், இன்னுமற்ற செல்வாக்கிலும் மிக்க உயர்வடைந் திருப்பவர் பிராமணரே யாவர். இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுக்கப்பட்டால், அதன் அதிகாரஸ்தானங்களை வகித்து காரியங்களை நிர்வகிக்கவேண்டிய யோக்கியதை யுடையவர் பெரும்பாலும் பிராமணரே. அதிகாரம் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் அன்னியரை எக்கோலம் செய்து வைப்பாரென்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. பிராமணர் விசேஷ சுய பட்சமுடையோர் என்பது அனைவரும் அநுபவத்தாலறிந்த விஷயம். ஆனதினால் சுய ஆட்சிக் கட்சியைச் சேரவேணுமென்று அவர்கள் கூப்பிடுகையில் தங்கள் சுய காரிய சித்திக்காகவே அங்ஙனம் அழைக்கிறார்களென்றறிந்து, அவர்கள் அழைத்தலுக்கு ஏனையோர்,விசேஷமாய் கத்தோலிக்கு இந்தியர் இசைதல் கூடாது. பிராமணர் சிறுதொகையினரா யிருத்தலினிமித்தம் சுய ஆட்சிக்காக தாங்களிடுங் கூக்குரல் அதிகாரிகளுக்குக் கேட்கமாட்டாது அல்லது அதை அவர்கள் அலட்சியஞ் செய்வாரென்றெண்ணி, மற்றையோரையுந் தம்மோடு கூவும்படி வற்புறுத்திக் கூப்பிடுகின்றனர். இதுவரையிலுமில்லாத விதமாய் தேசாபிமானத்தைப் போதிக்கின்றனர். சுய ஆட்சி தப்பாமற் கிட்டுமென்று வாதிக்கின்றனர். இனி இந்தியரெல்லோரும் உற்ற சகோதரர்களே யெனச் சாதிக்கின்றனர். சுய ஆட்சியில் அதைப்பெறலாம், இதைப் பெறலாமென ஆசைகாட்டுகின்றனர். வீண் மனப்பாலூட்டுகின்றனர். மாய வார்த்தையால் அவர்கள் ஐயத்தை ஓட்டுகின்றனர். தங்களிடம் சிக்கியவர்களை இஷ்டப்படியாட்டுகின்றனர். இவர்களை நம்பி மோசம் போகாதிருத்தல் வேண்டும். அரசனை நம்பி புருஷனை யிழந்த கதையாய்விடும் பிராமணருஞ் சரி, பிராமணரல்லாதாருஞ்சரி, இந்தியாவிலுள்ள எல்லாவருணத்தாருஞ் சரி, எல்லோரும் ஏகோபித்து ஒரே வாக்காய், ஒரே மனமாய் சுய ஆட்சி வேண்டுமென்று கேட்டாலுங் கூட இந்தியருக்கு இப்போது சுய ஆட்சி சித்திக்கப் போகிறதில்லை. அது அந்தரத்தில் கட்டிய கோட்டையேயாகும். கத்தோலிக்கராகிய நமக்கு காருண்ய பிரிட்டிஷ் கவர்ண்மெண்டில் தான் சுகம், சௌக்கியம், ஆதரவு அனைத்தும். நாம் அதைப்பிரிந்தால் நீரைப்பிரிந்த மீன்போலும் தவித்துத் துடித்து மடிய வேண்டிவரும்.

சமீபத்தில் இந்தியாவுக்கு வரப்போகிற இந்தியா மந்திரியாகிய ஆனரபில் எம். எஸ். மாண்டேகு அவர்களுக்கு இந்தியாவிலுள்ள பற்பல கட்சியார், வகுப்பினர், சங்கத்தினர் முதலியோர்கள் தத்தம் குறைகளைச் சொல்லி, தத்தமக்கு வேண்டிய நன்மைகளைக் கேட்க தயாராகி வருகிறார்கள். இச்சமயத்தில் நாம் வாளா விருப்பது கூடாது. “தூங்கினவன் கன்று கடாக்கன்று” என்பதாய் முடியும். நமக்கு வேண்டியவைகளை நாம் கேட்டுத்தான் ஆகவேண்டும். அழுத பிள்ளையல்லோ பால் பெறும்? நாம் இன்ன நன்மைகளைக் கேட்க வேண்டுமென்பதைப் பற்றித் தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்கள் எல்லோரும் ஏகோபித்து அதாவது அவர்களில் பெரியோர்களா யிருப்பவர்கள் ஒருங்குகூடி ஆலோசித்துத் தீர்மானிக்க வேண்டியது. இது விஷயத்தில் நமது தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் கௌரவ காரியதரிசி யவர்களும் தக்க முயற்சிசெய்து வருதாக தெரிய வருகிறது.

உன்னால் கூடுமானவரையில் பிறருக்கு உபகாரஞ் செய்வாயாக.

சுவாமியினுடைய சித்தமானாலொழிய ஒருவருக்கும் அப்பிரியப்படாதே. உன்னால் ஆருக்காகிலும் கஸ்திவந்தால் பொறுத்தல் கேட்பாயாக.

உனக்கு மற்றவர்களால் வருந்துன்பங்களை நல்லமனதோடு பொறுத்துக்கொண்டு அவைகளைக் குறித்து ஒருவரிடத்திலும் பேசாதிருப்பாயாக.

ஒருநாளில் இருக்கப்பட்ட மணிநேரங்களைப் பங்கிட்டு உன் அந்தஸ்துக்குத் தக்கதாக ஒரு நாளொழுங்கு செய்துகொள்ளுவாயாக.

SISTER MARY OF THE DIVINE HEART

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி.)

நமதாண்டவரை “என் திவ்ய பத்தா” என்றழைத்த மரிக்கும் அவருக்கும் உண்டான நெருங்கிய பரிசுத்தஐக்கியம் பின்வரும் சம்பவத்தால் மேன்மேலும் பலப்பட்டது.—

மரி எழுதுவதாவது: “நான் என் சிறுபிராயந் தொடங்கி வெகு பிரிய வாஞ்சையாய் நேசித்து வந்த திரு இருதயத்தின் சுரூபத்துக்கு முன்பாக சேசுவின் இருதயத் திருநாளன்று அதிகாலையில் எங்கள் சிறு கோவிலில் செபித்துக் கொண்டிருந்தேன். அதே நாளில் எங்கள் பங்கு கோவிலின் பாது காவலரான அர்ச். அந்தோனியார் திருநாளின் 8-வது தின உற்சவமும் கொண்டாடப்பட்டது. தேவநற்கருணையும் பீடத்தின் மேல் ஸ்தாபகமாய் வீற்றிருந்தது. பீடத்தினருகே சுவிசேஷ புஸ்தகம் வைக்கும் பக்கத்தில் திரு இருதய சுரூபம் மெழுகுதிரிகளாலும், புஷ்பங்களாலும் சூழப்பட்டு விளங்கினது. நான் செபிக்கும்போது இந்தச் சுரூபத்தையும், சுடர் பாத்திரத்தில் பிரகாசித்த சற்பிரசாத ஆண்டவரையும் ஒரே பார்வையில் காணக்கூடியதா யிருந்தது. தேவநற்கருணையினின்று சேசுவின் திரு இருதயத்தை நான் ஒருபொழுதும் பிரிக்கக்கூடாதநினிமித்தம் தானே இதை விவரித்துப் பேசலானேன். ஏனெனில் இந்தத் திரு இருதயம் மெய்யாகவே நமதாண்டவருடைய விலைமதிக்கப்படாத சரீரத்தின் ஓர் பாகமாக விளங்குகின்றது. விசுவாசம் ஆத்தும கண்களுக்குத் தெளிவாய் விளக்குவதையே அச்சுரூபமானது சரீர கண்களுக்கு காண்பித்தது.

தேவ சிநேகத்தின் அக்கினியால் என் இருதயம் பற்றியெரிந்தது. அந்த க்ஷணமே நான் தேவநற்கருணையை உட்கொண்டிருந்தேன். நமதாண்டவரோடு அன்னியோன்னியமாய் ஐக்கியமானேன். அவருடைய இருதயத்தின் பேரின்பங்களின் வெள்ளத்தில் மூழ்கியிருந்தேன். அத்தருணத்தில் சரீர செவிகள் கேட்கக்கூடிய சப்தத்தால் அல்ல, ஆனால் ஓர் அந்தரங்க சப்தத்தால் அவர் என்னை நோக்கி “நீ என் இருதயத்தின் பத்தினியாவாய்” என்று திருவுளம் பற்றினார். அப்போது நான் பரிக்ஷித்தறிந்ததை என்னால் வருணிக்க முடியாது. நான் ஆச்சரிய பிரமை கொண்டேன்; ஒன்று மில்லாமைபோலானேன் மயங்கித் தயங்கி குழம்பி திகைத்தேன். அவருடைய அன்பின் வெள்ளத்தில் அமிழ்ந்தினேன். ஆ, எவ்வளவோ பாக்கியமான காலம்! “அவருடைய இருதயத்தின் பத்தினி!” ஆனால் எவ்வாறு? எப்போது? நானோ எவ்வளவு அற்பமானவள்; நீசமானவள். ஓ என் சேசுவே! நம்மிருவருக்குள் நடந்ததை நீர் ஒருவரே அறிவீர். மற்ற எவரும் அதனைக்கண்டறிய மாட்டார். அந்நேரத்திலிருந்து சேசுவின் இருதயத்தை என் பத்தாவென்றே சிந்திக்கலானேன். என் ஜெபப் பெட்டியின் மேல் அவருடைய படத்தை மாட்டி வைத்தேன். நமதாண்டவரை நோக்கின ஒவ்வொரு தடவையும் சொல்லி முடியாத ஆறுதலை அனுபவித்தேன். எங்கள் இருவருக்குள் எவ்வளவோ அன்னியோன்னிய நேசம். நான் அவரோடு சீவித்தேன். சகலமும் அவருக் கறிவித்தேன். அவர் எப்போதும் இரக்கமும் நன்மையும் நிறைந்தவராய் விளங்கினார். ... ...

முத்திப்பேறு பெற்ற மர்கரீத் மரிக்கு நமதாண்டவர் தெரிசனமாகி வெளிப்படுத்திய விஷயங்களின் பேரிலும், அவள் எழுதிய கடிதங்களின் சில வாக்கியங்களின் பேரிலும் நான் அடிக்கடி தியானித்து வந்தேன். சேசுவின் திரு இருதயத்தின் பக்தியானது துன்பப்படுதல், பரித்தியாகம் இவைகளுடன் இணைபிரியாமல் சம்மந்தப்பட்டிருப்பதை நான் மென்மேலும் கண்டுபிடித்தேன். நமதாண்டவர் தம் பாடுகளின் பாதையில் நான் விருத்தியடையும்படியாக என்னைத் தூண்டிக்கொண்டே வந்தார். நான் துன்பப்பட அபேக்ஷித்தேன்; அவருடன் ஐக்கியப்பட்டு சீவிக்கவும், அவருக்காகவும் அவருடைய நேசத்துக்காகவும் பாடுபடவும் என்னை தத்தஞ்செய்வதே என்னுடைய அழைப்பென்று கண்டுபிடித்தேன். துன்பங்களை எனக்கு அனுப்பும்படியாக நமதாண்டவரை மன்றாடினேன். நான் பூர்த்தியாய் துன்பப்படவில்லை என்பதே எனக்குத் துன்பமாயிருந்தது. இக்காலத்தில் நான் உச்சரித்து வந்த மனோவல்லய செபமாவது: “என் சேசுவே! இன்னும் அதிக துன்பம், இன்னும் அதிக நேசம்.”—

1885-ம் வருஷம் கோடை காலத்தில் வடசமுத்திரத்தில் உள்ள (North Sea) நார்டோர்னி (Norderney) என்னும் தீவுக்கு மரி தன் பெற்ற

ரோடு பிரயாணப்பட்டாள். தன் விடுதியை விட்டுச் செல்வது மரிக்கு அதிர்ப்திகரமாயிருந்தது. ஏனெனில் அவள் இதுவரையில் ஜீவித்து வந்த அடக்கமும் அமைதியுமான சீவியம் அவளுக்கு இரமணிமாய் இருந்தது. எல்லாத்துக்கு மேல் தன் வீட்டின் ஆலயத்தையும், பீடத்தின் மேல் வீற்றிருக்கும் சற்பிரசாத நாதரின் அமிர்தமான பிரசன்னத்தையும் விட்டுப்போவது அவளுக்குக் கஸ்தியாயிருந்தது. அவர்கள் அவ்வூரில் சேர்ந்தவுடனே கத்தோலிக்கு கோவிலைத் தேடிப் போனார்கள். பதிதரால் நிறைந்த அந்தத் தீவில் ஒரேவோர் கோவிலிருந்தது. அதில் பிரவேசித்தபோது அங்கே தேவநற்கருணையில்லாததைப்பற்றி மரி வருத்தப்பட்டாள். இந்த சேசுவின் செல்வப் பத்தினிக்கு அவரில்லாமல் இவ்விடம் காலம் போக்குவது கூடாமையாய்த் தோன்றினது.

பிற்பாடு அங்கே விசாரித்ததின்மேல் இவ்விடத்தில் குருவானவர் வாரத்துக்கொருமுறை தான் வருவதாகவும், அவர் அவ்விடத்தில் இல்லாத காலத்தில், இக்கோவிலை விசாரிக்கவும், தேவநற்கருணை தீபத்தைக் கவனிக்கவும் யாரும் இடையாதென்று தேவநற்கருணையைக் கோவிலில் வைக்காமல் போய்விடுவதாகவும் தெரியவந்தது. ஆனால் மரி இப்பணிவிடையைத் தானே செய்வதாக அறிவிக்க அவளுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மரி அத்தீவில் இருந்த காலமெல்லாம் நமதாண்டவர் அக்கோவிலில் வாசம் பண்ணினார். இவ்விதமாய் அவருக்கு ஊழியம் செய்வது மரிக்கு சொல்லொண்ணா சந்தோஷத்தைத் தந்தது. அங்கே வியாதியஸ்தராகிய சில குருக்கள் இருந்தார்கள். மரியின் பராமரிப்பால் அவர்கள் அநுதினமும் திவ்ய பூசை செய்யக்கூடுமாயிருந்தது.

"நான் சுகித்தனுபவித்ததை நாவால் விவரிக்க முடியவில்லை. அவ்வூரில் நமதாண்டவர் என் வசம் ஒப்புவிக்கப்பட்டு எனக்காகவே இருந்ததாகத் தோன்றினது. திவ்விய பூசைக்கு வேண்டியயாவற்றையும் நானே முஸ்திப்பு செய்தேன். தேவநற்கருணை பெட்டியின் சாவியை நானே வைத்துக்கொண்டிருந்தேன். நாம் செய்யும் அற்ப சொற்ப பணிவிடைக்கு முதலாய் நமதாண்டவர் எவ்வளவு நன்றியுள்ளவராய் இருக்கிறார்—" என்று மரி எழுதிவைத்திருக்கிறாள்.

1885-ம் வருஷம் ரோமையிலிருந்த தன் சகோதரன் மார்க்கஸின் அபாயகரமான வியாதிநிமித்தம் அவளுடைய பெற்றோர் அந்நகருக்குப்போக வேண்டியதாயிற்று. அங்கே பரிசுத்த பிதாவை அவர்கள் தரிசித்தபோது தங்கள் குமாரத்தி துறவறச் சபையில் சேர விரும்புகிறதைப் பற்றியும், அவளுடைய சுகவீனத்தைப்பற்றியும் அவருக்கு அறிவித்து அவளை ஆசீர்வதிக்க அவரை மன்றாடினார்கள். பரிசுத்த பிதா தமது ஆசீர்வாதமளிக்கும்போது சொல்வார்:—"உங்கள் குமாரத்தி சுகமர்கும் வரையில் மடத்தில் பிரவேசிக்கவேண்டியதில்லை. இது அவளுக்காவது சபையோருக்காவது பிரயோசனப்படாது. ஆனால் நீங்கள் அவளுக்குப் பக்திக்கடுத்த முயற்சிகளையும், பிறர் சிநேக வேலைகளையும் செய்யப் பூரண உத்தரவு தரவேண்டும்"—பரிசுத்த பிதாவின் இவ்வார்த்தைகள் மரியின் நடத்தைக்கு ஓர் சட்டமாய் இருந்தது.

1886-ம் வருஷத்தில் மரி உலகத்திலிருந்துகொண்டே துறவற சீவியத்தை அநுசரிக்க தீர்மானித்துக்கொண்டாள். அவள் எண்ணத்துக்கு மறாக சில தடைகள் ஏற்பட்டன. கடைசியில் எல்லாம் அநுகூலமர்ய் முடிந்தது. அவள் எழுதியுள்ளதாவது: "என்னுடைய பெற்றோருடையவும், என் ஆத்தும குருவினுடையவும் அநுமதியின்பேரில், என் திவ்ய பத்தாவின் உதவியால், நவம்பர் மாதம் 21-ம்தேதி என் சொந்த வீட்டில் ஓர் துறவியாகச் சீவிக்கத் தொடங்கினேன். கருப்பு உடை தரித்துக்கொண்டேன். என் அறையை யாதொரு சோடிப்பில்லாமல் வெகு சாதாரணமாய் எளிமையாயிருக்கும்படியாக ஒழுங்காக்கினேன். எங்கள் குடும்ப வேலைகளைக் கவனிக்கவாவது, எங்கள் வீட்டுக்கு வரும் பந்துமித்திரர்களைச் சந்திக்கவாவது நான் ஒப்பவில்லை. அதற்காக என்னை யாரும் எதிர்பார்க்கவும் இல்லை. செபத்திலும் ஞானவாசகத்திலும், ஏழைகளுக்கும் கோவில்களுக்கும் உழைப்பதிலும், நோயாளிகளைச் சந்தித்து பரிபாலிப்பதிலுமே என் காலத்தைப் போக்கினேன். என் வீட்டார் யாவரும் என் அறையை ஓர் துறவியின் அறையென கனப்படுத்தினார்கள். நான் இரண்டு வருஷகாலமாய் என் திவ்ய பத்தாவின் அன்பை அன்னியோன்னியமாய்ச் சுகித்துவந்தேன். இந்த நூதனமான சீவியத்தால் மற்றவர்களுடைய பரிகாசத்துக்கும் ஏளனத்துக்கும் புறக்கணிப்புக்கும் ஆளானேன். இவைகளை நமதாண்டவருடைய வரங்களாகப் பாவித்தேன். ஏனெனில் என் அகங்காரத்தையும் சுய பட்சத்தையும்

வெல்ல நான் கற்றுக்கொள்வதற்காக இவைகள் அவசியமா யிருந்தன. அவருடைய ஒத்தாசையால் சிருஷ்டிகளின் பற்றை சிறுகச் சிறுக அறுத்தொழித்தேன். நான் அவருடைய இருதயத்தின்பத்தினி என்ற நினைப்பு எந்த வருத்தத்தையும் சகித்துக்கொள்ள எனக்குத் தைரியத்தையும் சக்தியையும் மூட்டினது. என் அழைப்பின் முக்கிய கதியை நான் அடைந்துவிட்டேன் என்று எனக்குத் தோன்றினதினால், நான் துறவறச் சபையில் சேர தாமதமானது எனக்குச் சொற்ப வருத்தமாக[illegible] யிருந்தது. நான் நமதாண்டவருக்குச் சொந்தமானேன். தனிமையாய்ச் சீவித்தேன். என்னாலியன்ற மட்டும் பரிசுத்த தாரித்திரத்தை அநுசரித்துவந்தேன். ஒரு காரியம் எனக்குக் குறைவுபட்டது. துன்பமும் பாடும் எனக்குப் போதுமாயில்லை. என் பரித்தியாகம் பூர்த்தியாவதற்கு, நான் வெகுவாய் நேசித்து வந்த என் குடும்பத்தை விட்டுப்பிரிதல் வேண்டும். என் வீட்டில் நான் 2-வருஷமாய் நவ சன்னியாசம் செய்த காலத்தில் நமதாண்டவர் தமது தெய்வீக பிரசன்னத்தை நான் உள்ளபடி சுகித்தனுபவிக்கும்படியாகச் செய்தருளினார். அவர் என்னுடன் இருந்தார். தம்மையே என்னுடைய தோழராகவும், அன்பராகவும் என் முழுவிசுவாசத்துக்குரிய நேச பத்தாவாகவும் செய்தருளினார்.

அவருடைய இருதயத்தின் பத்தினி என்ற நினைப்பு ஒன்றே, எலலா கசப்பையும், எல்லா நஷ்டத்தையும், எல்லா சரீர ஒறுத்தலையும் இன்பமாய் மாற்றினது. தேவநற்கருணையில் தம்மை முழுதுமே எனக்குத் தந்தருளினார். தேவநற்கருணைமுன் எரியும் தீபத்தைக் கண்காணிப்பதே எனக்கு மெத்த சந்தோஷமா யிருந்தது. தேவநற்கருணையின் முன் அல்லும் பகலும் எரிகின்ற அந்த விளக்கின்மேல் நான் எவ்வளவோ பொறாமைப்பட்டேன்! சேசுவின் திரு இருதயத்தின் பத்தினியாக மாத்திரமல்ல, அவருடைய பலியாகவும் இருக்க என்னுடைய ஆசையை அது வளரப்பண்ணினது. நான் அதனைத்தூண்டியேற்றும்போது, என் இருதயத்தில் அவருடைய இஷ்டப்பிரசாதத்தின் வெளிச்சமும் அவிந்துபோகவிடாமல் கிருபை செய்தருள நமதாண்டவரை எப்போதும் மன்றாடினேன். அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார். எனது தீபமாகிய என்னுடைய சீவியத்தின் எண்ணெயானது சரீர துன்ப பாடுகளால் இப்போது எரிந்துகொண்டே போகிறது. உண்மையாகவே தேவசிநேகத்தின் அக்கினியை அவர் அதில் மூட்டிவிட்டார். அது என்னிருதயத்தைப் பற்றிஎரியச் செய்கின்றது. ஏனெனில் என்னைப் பலியாக அவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டேன். இப்பரித்தியாகத்தை அவரும் அங்கீகரித்துக்கொண்டார். அவருடைய பரிசுத்த இருதயத்துக்கு விரோதமாய்ச் செய்யப்படும் நிந்தை அவமானங்களைப் பரிகரிக்கவும் பாவிகள் மனந்திரும்புவதற்கும் துன்ப வருத்தங்களை அனுபவிக்க என்னுள்ளத்தில் எழும்பின ஆசை மென்மேலும் வளர்ந்தது.

தன்னுடைய மாளிகையின் ஆடம்பர செல்வாக்கு மத்தியில் மரி இப்போது தழுவிக்கொண்ட இவ்வுத்தமமான சீவியம், மெய்யான துறவியின் சீவியத்துக்கு ஒத்ததாயிருந்ததென்றே சொல்லலாம். நவசன்னியாசம் செய்பவரின் வாசஸ்தலம், எவ்வளவு சாதாரணமாய், எளிமையாய் இருக்கக்கூடுமோ, அவ்வளவு மரியின் அறையும் இருந்தது. நவசன்னியாசத்தில் அனுசரிக்கப்படும் ஒழுங்குகளையே மரியும் வெகு கண்டிப்பாயும் நுணுக்கமாயும் அனுசரிப்பாள். ஒவ்வொருதினத்திலும் அந்தந்த நேரத்தில் முன்னதாகவே குறித்த ஞான முயற்சிகளைச் செய்வாள். எல்லாம் ஒழுங்காய்த் திட்டமாய்க் குறிக்கப்பட்டிருந்தது.

காலையில் விழிக்கிற நேரம், இரவில் நித்திரை செய்யும் நேரம், திவ்விய பூசை காணும் நேரம், இருமுறை காலையிலும் மாலையிலும் -மணிநேரம் தியானம் செய்தல், தேவமாதாவின் மந்திரமாலை சொல்லுதல், காலையும், மாலையும் 53 மணி ஜெபமாலை செபித்தல், ஞானவாசகம் வாசித்தல், தனி ஆத்தும சோதனை செய்தல், அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம் வேதாகம சரித்திரம் வாசித்தல், தினந்தோறும் நான்குதடவை கைத்தொழில் செய்தல், லத்தீன் பாடங்கள் படித்தல் இவை முதலியவையெல்லாம் தன் கடமையைப்போல் பாவித்து அனுசரிக்க அவைகளைத் திட்டமாய் குறித்துக்கொண்டாள்.

S. M.

(இன்னும்வரும்)

உன் பெரியோர்கள் சுவாமிக்குப் பதிலாளிகளென்று எண்ணி அவர்களுக்கு நுணுக்கமாய்க் கீழ்ப்படிவாயாக.

HOUSEWIFE
மனையாட்டி.

இல்லற தருமத்துக்கு இன்றியமையாதவள் மனையாட்டி. மனையாட்டிக்கு, இல்லாள், அகமுடையாள் இல்லக்கிழத்தி, வாழ்க்கைத்துணைவி என்பன முதலிய பலபேருண்டு. குடும்ப சம்ரக்ஷணைக்காக புருஷனானவன் புறத்தே போய் நாள் முழுதும் கடவுள் நியமப்படி நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைத்துப் பொருள் சம்பாதித்துக்கொண்டு, பொழுது போனபின் வீடு வந்து சேர்வானானால், அவன் தேகசிரமந்தீர அவனுக்கு உண்டி முதலிய உதவி, அவனை உபசரித்து ஆற்றித் தேற்ற வேண்டியவள் மனைவியாவள். புருஷனும் பெண்ஜாதியும் மனமொத்து குடும்பக் காரியங்களைக் கொண்டுசெலுத்தினாலல்லாது, இல்லறம் ஈடேறுவது துர்லபம். “மருவிய காதன் மனையாளுந் தானும் இருவரும் பூண்டிழுப்பினல்லால், ஒருவரால் இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடஞ் செல்லாது தெற்றிற்று நின்று” என்றதில் இரண்டு மாடுகள் கட்டிய வண்டிக்கு இல்லறத்தை இணையாகச் சொல்லியிருக்கிறார் அறநெறிச்சாரத்தை ஆக்கியோர். வண்டியிற் பூட்டிய எருதுகளில் ஒன்று இடக்கு செய்யுமாகில் வண்டி யோடுவ தெங்ஙனம்? இல்வாழ்க்கை யென்னும் சகடமானது, ஒவ்வோர் சமயங்களில் கல்லுங் கரடும், மேடும் பள்ளமுமான பாதைகளில் செல்லவேண்டியிருக்கிறது. “சமுசாரம் சகல கோடி துக்கம்” எனவுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சமுசாரத்தில் நேரிடக் கூடிய சகலவித சங்கடங்களையும் துன்பங்களையும் சகித்து, துன்பத்தைக் கண்டு துக்கிக்காமலும், இன்பத்தைக் கண்டு அகங்கரிக்காமலும் இருமுதுமக்களும் ஒருவரையொருவர் ஆதரித்து ஒருமித்து ஒத்து ஒழுக வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

தம்பதிகளுக்குள் ஒற்றுமை யிருக்க வேண்டுமாயின் இருவரும் ஒரு குணமாய் ஒரு மனமாயிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு குணமாயும் மற்றவர் அதற்கெதிர் குணமாயு மிருந்தால் சமுசாரந் தலை யெடுக்காது. எந்நேரமும் எட்டிக்குப் போட்டியும், ஏடாகூடமும், சண்டையும் சச்சரவுமாய் முடியும். இவர்கள் பிள்ளைகளும் துர்மாதிரிகை கொண்டு கெட்ட பிள்ளைகளாவார்களே தவிர, நல்லவர்களாவது அருமை. என்றாலும், இருவரும் ஒரே குணமாயிருக்கும் தம்பதிகள் நூற்றில் ஒன்றுகூட அகப்படுவது அருமை. ஆனால் ஒருவர் மற்றவருடைய குற்றங் குறைகளைச் சகித்து, ஒருவர் மற்றவருடைய குணத்துக்கு இஷ்டத்துக்கு இசைந்து போவது எவரும் செய்யக்கூடிய காரியம். ஒருவர் ஒருவருடைய குற்றஞ் சகித்து, குறை பொறுத்து குணமொத்துப் போவதுண்டானால் குடும்பத்தில் சமாதானக் குறைவு ஒருபோதும் நேரிடாது. ஆயினும் புருஷன் பெண்சாதியாகிய இவ்விருவருக்குள் எவர் குணத்துக்கு எவர் ஒத்துப் போக வேண்டும்? எவர் அபிப்பிராயம் மேற்கொள்ள வேண்டும்? எனக் கேள்விகள் பிறக்கலாம். இக்கேள்விகளுக்கு விடைதேட வெகு தூரம் போக வேண்டுவதில்லை. நம் கத்தோலிக்கு இந்தியர் குடும்பங்களைப் பற்றிப் பேசுங்கால், ஸ்திரீகளை விட புருஷர்களே அதிக படித்திருத்தலாலும், அநுபோகஸ்தர்களா யிருத்தலாலும், பெரும்பாலும் புருஷன் அபிப்பிராயத்தை பெண்ஜாதி தழுவிப்போக வேண்டுமேயல்லாமல் அதை எதிர்த்து தர்க்கித்து “தான் பிடித்த முசலுக்கு மூன்று கொம்பு” எனச் சாதித்து, சண்டித்தனத்தால் புருஷனை மேற்கொள்ளப் பார்ப்பது நல்ல பெண்சாதிகளுக்கு அழகல்ல. ஸ்திரீகள் புருஷருக்கு அடங்கி நடக்க வேண்டு மென்பது வேதாகமத்தின் நியமமுமாகும். “ஸ்திரீஜனங்கள் ஆண்டவருக் கெப்படியோ அப்படியே தங்கள் புருஷர்களுக்குங் கீழ்ப்படியக் கடவார்கள். ஏனெனில், கிறீஸ்துநாதர் திருச்சபைக்குத் தலைவரா யிருக்கிறதுபோல புருஷனானவன் தன் ஸ்திரீக்குத் தலைவனா யிருந்து, அவளுடைய சரீரத்துக்குப் பாதுகாப்பவனா யிருக்கிறான். ஆதலால், திருச்சபை கிறீஸ்துநாதருக்குக் கீழடங்கியிருக்கிறது போல அப்படியே ஸ்திரீகள் எல்லா காரியங்களிலும் தங்கள் பூமான்களுக்குக் கீழடங்கி யிருக்க வேண்டும்.” (எபிரேயர் V. 22, 23, 24-ம் வசனங்கள்.) “இல்லாள் வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்” என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. புருஷனுக்கடங்காத பெண்சாதி யிருக்கும் வீட்டில் எந்நேரமும் சச்சரவும் சஞ்சலமும் மனஸ்தாபமு மிருக்குமாகையால், புருஷன் இவைகளுக்குக் கூடிய வரையில் இடங்கொடாமற்படி, எவ்வளவு நேரம் புறத்தே ஒருவன் கழிக்கலாகுமோ அவ்வளவு நேரத்தையும் கழித்துவிட்டு, சாப்பிடவும் உறங்கவும் அவசியமான காலத்தை மாத்திரம் அகத்தே கழிக்க வருவான். சமாதானமில்லாத வீட்டிற்கு உற்றார் உறவினர் முதலியவர்கள் ஒருவரும் போகார். ஆகவே, அவ்வில்லம் அடங்காப் பிடாரியாகிய அவள் மாத்திரம் தன் அகங்கார ஆரவார ஆர்ப்பரிப்புடன் குரைத்துக் கொக்கரித்து கொட்டமடிக்கும் குகையாய் விடுமென்பதற்கு ஆட்சேபனை யென்ன?

“கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை” யென்னும் நீதிவாக்கியத்திற் கிணங்க, ஓர் மனைவியானவள் தன் கணவன் கருத்துக்கிசைந்து கிருகஸ்தாஸ்ரமத்தை நடத்துவாளானால், அவ்வாழ்க்கை பொன்மலர் நாற்ற முடைத்தாவது போல, இவ்வுலகில் ஒருவன் அநுபவிக்கத் தக்க சகல நன்மைகளிலும் உசிதமான நன்மையாகும். “பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மை யுண்டாகப் பெறின்” என்று நாயனாரும் நவின்றுள்ளார். ஆதலின் பெறுதற்கரிய பெரும் பொருளாகிய கற்புடைய நன்மனைவியைப் பெறுவது எல்லாருக்கும் கிட்டுங் காரியமன்று. கற்புடைய கன்னி யொருத்தியை கடிமணம்புரிய விரும்பு மிளங் குமரர்கள் இதற்காக அநுதினமும் கடவுளைப் பிரார்த்தித்துவரவேண்டும். தாமும் சன்மார்க்கத்தில் ஒழுகிவரவேண்டும். இப்படிச் செய்தால் உள்ளன்புடைய உத்தமி வந்து வாய்ப்பாளென்பது உண்மை. இவ்வாறேபோல் உத்தம புருஷனொருவன் சித்திக்க வேண்டுமென விரும்புங் கன்னிகையும் கடவுளைச் சதா தியானித்தல் வேண்டும். ஒரு பெண்ணுக்காகிலும், புருஷனுக்காகிலும் நல்ல உத்தமகுணமுள்ள வாழ்க்கைத்துணை கடவுளின் விசேஷ கிருபையாலல்லாது கிட்டாது. மற்றெல்லா விஷயங்களிற் போலவே இவ்விஷயத்திலுங் கடவுள் சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறவர்களே மன திருப்தியையும் சந்தோஷத்தையு மடைவார்கள்.

வியாதிக்காரர்களைச் சந்தித்து விசேஷமாய் எளியவர்கள் வியாதியாயிருக்கையில் அவர்களுக்கு ஒத்தாசை பண்ணுவாயாக.

நீ முழுமையும் அர்ச்சிக்கப்படும்படியாய் வருந்துன்பங்களை யெல்லாம் பொறுமையோடே அநுபவித்து எல்லாத்திலும் சுவாமியினுடைய சித்தத்துக்கு ஒத்திருப்பாயாக.

GNANAMANI, III PART.
ஞானமணி 3-ம் பாகம்.

46-ம் அதிகாரம்.

வண்டியை நிறுத்தடா வண்டிக்காரா.

துக்கத்துக்குரிய இந்தத் தந்திசமாச்சாரம்வந்த மறு மாதம் கண்டி மேற்றிராசனத்திலிருந்து வேறொரு தந்தி வந்தது. அதில் “கடந்த மாதத்தில் ஞான ஓடுக்கம் கொடுக்கும்படி உங்களூருக்குப் புறப்பட்ட டிக்ரூஸ் ஸ்வாமியார் தற்போது திருடர் கையிலிருந்து மீட்கப்பட்டார். மேலும் அவர் திருடர் கையில் அகப்பட்டு மீட்கப்பட்ட வரலாற்றை அவர் வாயாலேயே அறிந்துகொள்வீர்கள். வருகிற வாரம் வியாழக்கிழமையன்று தூத்துக்குடிக்கு கப்பலேறுவார்” என்று அனுப்பப்பட்ட தந்தி சமாச்சாரத்தை அந்த ஊர் பங்கு ஸ்வாமியார் வாசித்துப் பார்த்து, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை செய்த பிரசங்கத்தில் இந்த நல்ல செய்தியை கிறீஸ்துவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இதைக் கேட்ட அந்தப்பங்கு கிறீஸ்துவர்கள் சொல்லக்கூடாத சந்தோஷங் கொண்டார்கள். அபிராமியும் அபூர்வமணியும் இச்சுப செய்தியைக் கேட்டு சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினவர்களாய், கண்டி ஸ்வாமியார் யாதொரு ஆபத்துமின்றி காப்பாற்றப்பட்டதற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாக ஒரு நவநாள் ஆரம்பித்து ஜெபித்தார்கள்.

கண்டியாண்டவர் அறிவித்த பிரகாரம் மறு மாதம் 18உ யன்று ஒடுக்கம் கொடுக்கும்படி நியமிக்கப்பட்ட டிக்ரூஸ் ஸ்வாமியர் தர்மானந்தபுரம் என்னும் பெயர்கொண்ட கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவ்வூராரோ, மூன்றுமயில் தூரத்தில் ஸ்வாமியாரை யெதிர்கொண்டு, கொட்டு முழக்கோடும் பஜனை பாடலோடும் தங்களூருக்கு அவரை அழைத்து வந்தார்கள். ஊரைச் சமீபித்த போது, இருட்டிப் போனபடியால், தீவட்டி மத்தாப்புகளைக் கொளுத்தி பாணவேடிக்கையுடன் ஸ்வாமியாரைக் கோவிலுக்குக் கூட்டிவந்தார்கள்.

அந்த ஊர் பங்கு ஸ்வாமியார், கண்டி ஸ்வாமியாரை யெதிர்கொண்டுபோய் அவரைக் கட்டி ஆலிங்கனஞ் செய்தபின் தேவாலயத்துக்கு அவரை அழைத்துக்கொண்டுபோய் அங்கு கூடியிருந்தசபையோரை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொண்டதன்மேல் ஸ்வாமியாரும் அவர்களை ஆசீர்வதித்தார்.

கிறீஸ்துவர்கள் ஸ்வாமிமாரிருவரையும் முன்போல ஆரவாரத்துடன் அறைவீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் விட்டார்கள். சகலரும் வீட்டுக்குப்போய் போசனஞ் செய்தபின் சங். டிக்ரூஸ் ஸ்வாமிபேரால் பாட்டுப்பாடவும் கோலாட்டம் போடவும் தொடங்கினர்.

புது ஸ்வாமியார்பேரால் சில பாடல்களைப் பாடினபின், விஸ்வாசநாயகர் புது ஸ்வாமியாரை வணக்கத்துடன் அண்டிப்போய், அவர் திருடர் கையில் அகப்பட்ட விதத்தையும் மீட்கப்பட்ட விதத்தையும் தங்களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பங்கு ஸ்வாமியாரும் ஒப்புக்கொண்டு கோலாட்டம் முதலிய ஆடல் பாடல்களை யின்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாமென்றும், அவருக்கு வழியிலுண்டான விபத்தின் விருத்தாந்தத்தை இப்போது அவரைக்கொண்டு அறிந்துகொள்வது நலமாயிருக்கும் என்றும் சொன்னதைக் கேட்ட ஜனங்கள் ஆமாம், ஸ்வாமி யென்றார்கள்.

அப்போது டிக்ரூஸ் ஸ்வாமியார் "வந்திக்கத்தக்க மேற்றிராணியாருடைய உத்தரவுப்படி உங்களுருக்குப் புறப்பட்டேன். கண்டி முதற்கொண்டு துறைமுகமட்டும் அடர்ந்த காடு. அந்தக் காட்டில் யானை முதலிய காட்டு மிருகங்கள் ஏதேஷ்டம். திருடருக்கும் கணக்கில்லை. முதல் நாள் சாயரட்சைவேளையில் கண்டியினின்று வண்டியேறி அடுத்த கிராமத்துக்கு மறுநாள் காலைபோய்ச் சேர்ந்தேன். இரண்டாம் நாளும் யாதொரு ஆபத்துமின்றி பிரயாண முடிந்தது.

மூன்றாம் நாளிலேயோ வெனில் வண்டிக்காரன் கொஞ்சம் அவசரப்பட்டான். சாதாரணமாக இந்தக் காடுகளில் 50, 70, 100-வண்டிகளுக்குக் குறையாமல் கூட்டங் கூட்டமாய்ப் போகும் வண்டிகளில் பாட்டைசாரிகள் பிரயாணம் செய்வது வழக்கம். அதற்குக் குறைவாய் வண்டிகள் புறப்பட்டால் சந்தேகமற அவைகள் திருடரால் தாக்கப்படுவது சர்வ சாதாரணம்.

மேலும் அந்த மூன்றாம்நாள் வண்டிப்பேட்டையில் வண்டிகள் அத்தனை வந்து சேரவில்லை. மணியும் எட்டுக்கு மேல் ஆய்விட்டபடியால், என் வண்டிக்காரனான துலுக்கன், வண்டிகளெல்லாம் புறப்பட்டுப் போயினவென்று நினைத்து என் வண்டியைத் தனியாகவிட்டு துறத்தினான். எருதுகள் நாலுகால் பாய்ச்சலாய்ச் சென்றன. அன்ற அமாவாசை யிருட்டாயிருந்தபடியால், பத்து அடிதூரத்தில் நிற்பது மனிதனோ, மரமோ, யானையோ தெரியாது. அவ்வளவு அந்தகாரமாயிருந்தது அன்று இரவு.

அரைமணி நேரத்துக்குள் மூன்று மயில் தூரத்துக்கு அதிகமாய் சவாரி போயிருக்கும் அந்த எருதுகள். குதிரை போல அவ்வளவு சீக்கிரம் ஓடின. இவ்வளவு தூரம் பிரயாணம் செய்தும் வண்டிகளைக் காணோமே என்று பயந்து அச்சங்கொள்ளத் தொடங்கினான் வண்டிக்காரன். அவன் அஞ்சுகிறதைக்கண்டு எனக்கும் கொஞ்சம் கலக்க முண்டானது! அந்நேரத்தில் வழியில் ஒரு ஆபத்தும் நேரிடாதபடிக்கு சர்வேசுரனைப் பார்த்து மன்றாடிக் கொண்டிருக்கும் போதே, நடு ரோட்டில் இருவர் நின்று கொண்டு, "வண்டியை நிறுத்தடா வண்டிக்காரா" என்கிற சத்தம் என் காதில் விழுந்தது.

"இருவர் தானே இருக்கிறார்கள், நாங்களும் இருவரிருக்கிறோம், பார்க்கலாம் ஒருகை" என்று, வண்டிக்காரன் வண்டியை நிறுத்தாமலே ஓட்டினான். அந்நேரத்தில் வேறு இருவர் ரோட்டுக்கு வந்து, யாரடா அவன்? வண்டியை நிறுத்தச் சொன்னால், ஓட்டுகிறான்" என்னவே, வண்டிக்காரன் பயந்து வண்டியை நிறுத்தினான்.

அப்போது அந்தத் திருடர் மாட்டை அவிழ்த்து விட்டு, வண்டிக்காரனிடத்தி லிருந்த பணத்தையும் துணியையும் பிடுங்கிக்கொண்டு, என் பக்கமாய் வந்து, "ஓய் பிரயாணி உன்னிடத்திலிருக்கிற பணத்தை கொடு" என்றான் ஒருவன். அப்போது நான் கையோடு கொண்டு வந்த க்ளாட்ஸன்ப் பாக் (Gladstone bag) என்னப்படும் பையை காட்டி, இதில் என் வஸ்திரங்களும் வழிப்பயணத்துக்காக நான் கொண்டு வந்த 120 ரூபாயும் இருக்கிறது" என்று பையை அவன் கையில் கொடுத்தேன். அந்நேரத்தில் ஏழெட்டு திருடர் காட்டி லிருந்து ரோட்டுக்கு வந்து, என்னை வண்டியை விட்டு இறங்கச் சொன்னார்கள். நான் வண்டியி னின்று இறங்கவே, அங்கு கூடின திருடரெல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டு ஒன்றும் பேசாமல் சற்று நேரம் என்னைப் பார்த்தபின், நாலு பேர் சற்று தூரம் விலகிப் போய் தங்களுக்குள் என்னமோ பேசிக்கொண்டு, நல்லது, நீ யெங்களோடு வாவென்று என்னை காட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனார்கள். எனக்கு அந்த காட்டில் வழி தெரியாதபடியாலும் எஜிப்தில் காணப்பட்ட பயங்கரத்துக்குரிய அந்தகாரமா யிருந்தபடியாலும் என் கையை ஒருவன் பிடித்துக் கொண்டு என் முன்னே நடக்க, நான் அவனைப் பின் சென்றேன். வழியோ வெகுகரடுமுரடானது. அன்று இராத்திரி யென் காலில் பாதரட்சை யில்லாதிருந்ததால் என் பாதங்கள் இரண்டும் இரணமாயிற்று. நடக்கும்போது, வழிகாட்டி: குனிந்துநட; இதுகல்; காலைத் தூக்கிவை; முள்செடி, ஜாக்கிரதையாய் வா; இதுகால்வாய், பார்த்து நட என்று இடை விடாமல் என்னை எச்சரித்துக்கொண்டே வந்தான்.

இப்படி கல்லிலும் முள்ளிலும் சேற்றிலும் தண்ணீரிலும் எவ்வளவு தூரம் நடந்தேனோ எனக்குத் தெரியாது. நாலு ஐந்து மணி நேரம் நடந்தபின், தூரத்தில் யானை பெருந்தொனியிட்டு இரைச்சல் போடுவதைக் கேட்ட திருடர் ஒரு பெரிய மரத்தில் ஏறினார்கள். என்னையும் ஏறச்சொன்னார்கள். எனக்கு மரமேறும் வழக்கமில்லாதபடியால் மரத்தின் மேலே இருந்து ஒருவன் என் கை ரெண்டையும் பிடித்து இழுக்க, மரத்தடியில் இருவர் என் கால்களைப்பிடித்து தூக்க சற்று நேரத்துக்குள் மரத்தின் மேல் ஏறிக்கொண்டேன்.

கொஞ்ச நேரத்துக்குள் ஒரு பெரிய யானை மரத்துக்கு அருகாமையில வந்து தனக்கு எட்டும் கிளைகளை எலலாம் தும்பிக்கையால் பிடித்து ஒடித்து இழுத்தபோது எனக்கு உண்டான பயம் கொஞசமல்ல. மரத்தை சுற்றிச் சுற்றி வந்து எட்டின கிளைகளை யெல்லாம் மளமளவென்று முறித்தெரிந்தது. திருடரோ ஒரு வார்த்தையும் பேசாமலிருந்தார்கள்.

இப்படி சூரியோதயமாகுமட்டும் யானை திகிலைக் கொடுத்துக்கொண்டே யிருந்தது. சூரியோதயமாகவே, அது மேற்கு திசையை நோக்கி வேகமாய்ப் புறப்பட்டது. யானை அந்த விடத்தை விட்டு புறப்பட்ட ஒரு மணி நோத்துக்குப்பின், திருடர் ஒவ்வொருவராய் மரத்திலிருந்து இறங்கினார்கள். என்னையும் இறக்கிவிட்டார்கள். மரத்தடியில் நான் நின்றபோது, ஒருவன் ஒரு வஸ்திரத்தால் என் கண்ணைக்கட்டி, வா என்றுஎன் கையைப்பிடித்துக் கூட்டிக்கொண்டுபோனான். இவ்வாறு கண் கட்டப்பட்டு இரண்டு மணி நேரம் நடந்தபின் என்னைக் கூட்டிக்கொண்டு போனவன், இங்குகீழே படுத்த பிரகாரம் நகர்ந்து உள்ளே செல் என்றான். அவ்வாறே கீழே படுத்த படுக்கையாக நகர்ந்து உள்ளே சென்றேன். சற்று நேரம் அங்கு மிங்குமாய் என்னைக் கூட்டிக்கொண்டு போனபின், தூரமான இடத்தில் என்னைக் கொண்டுபோய் விட்டு, என்னை அங்கு உட்காரச் சொல்லி என் கண்ணைக்கட்டியிருந்த துணியை அவிழ்த்தான்.

அப்போது அவன் என்னைப்பார்த்து, "பத்திரம்! இந்த இடத்தை விட்டு எங்கும் போகாதே. ஏதாகிலும் உனக்கு தேவையாயிருந்தால் உன் கையைத்தட்டினால் ஒருவன் வந்து உனக்கு வேண்டியதைக் கொடுப்பான்" என்று சொல்லி விட்டு எப்படியோ போய் விட்டான்.

விஸ்வாச நாயகர்.—அது என்ன கட்டிடம் ஸ்வாமி?

ஸ்வாமி.—அது இன்னதென்று சொல்ல என்றால் சாத்தியப்படாது. அதொரு மலையின் கெபியென்று நினைக்கிறேன். நானிருந்த சிறு வீடு ஆறு அடி நீளமும் நாலு அடி அகலமும் ஐந்தடி உயரமு முள்ளது. எங்கே பார்த்தாலும் பாறைதான்! அதன் வாசற்படி இரண்டு அடி சதுரமான துவாரம். அதிலிருந்து படுத்து நகர்ந்து தான் அதற்குள் பிரவேசிக்கவேண்டும். மற்ற திருடர் இருந்த இடத்தை நான் ஒருபோதும் பார்க்கவில்லை. என்னை யிந்த பொந்திலிருந்து வெளியே கூட்டிக்கொண்டு போகும்போது கண்கள் கட்டப்பட்டபடியே நாலைந்து இடங்களில் படுத்து நகர்ந்துதான் வெளிப்பட்டேன். நானிருந்த குகையில் நிமிர்ந்து நிற்கமுடியாது. எப்போதும் குனிந்து தான் நிற்கவேண்டும். பல முறை மறதியாய் நின்றபோது என் தலை பட்டென்று பாறையில் மோதி காயப்பட்டது.

நான் அந்தக் குகையில் சேர்ந்தபின் அன்று இரவெல்லாம் நித்திரையின்றி யிருந்தபடியால் நித்திரை மயக்கங் கொண்டு பாயின்றி வெறுந்தரையில் படுத்து நன்றாய் நித்திரைசெய்து ஏறக்குறைய பத்துமணிக்கு விழித்து எழுந்தேன். பசியோ அகோரமா யிருந்தது. உடனே நான் கைதட்டினதைக்கேட்ட ஓர் மனிதன் என்னிடம்

வந்து "உனக்கு என்ன வேண்டும்" என்றான். "எனக்கு மெத்த பசியாயிருக்கிற" தென்றவுடன் சற்றுநேரத்துக்குள் அவன் ஒரு குண்டு கிண்ணத்தில் கஞ்சி கொண்டு வந்தான். தேங்காய் பாலூற்றி அந்தக் கஞ்சி செய்யப்பட்டிருந்தது. அது நாவுக்கு வெகு ருசியா யிருந்தது. அந்த கஞ்சியை பசி தீர குடித்தபின், "என் பையில் ஒரு புஸதக மிருக்கிறது! அதைக் கொண்டு வந்து கொடுத்தால் பெரும் உபகாரமாய் இருக்கு"மென்றேன். அதற்கு அவன்: "ஐயா, அது கூடாது! எங்கள் எசமான் உத்தரவின்றி அது மாளாது. சீக்கிரத்தில் எசமான் உன்னிடம் வருவார், அப்போது நீ கேட்ட புஸ்தகத்தை அவரிடத்தில் பெற்றுக் கொள்ளலா"மென்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.

ஜெபப் புஸ்தகமில்லாத படியால், காலைச் செபம் தியானம முதலியவைகளை முடித்துக் கொண்டு ஜெபமாலையை யெடுத்து 153 மணி ஜெபமாலையை முடித்து, எனக்கு இவ்விடத்தில் என்ன சங்கடம் நேரிடுமோவென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, நானிருந்த கெபிக்குள் ஒருவன் நகர்ந்து வந்து சேர்ந்தான். என்னை அவன் திருஷ்டித்து, "எந்த ஊர்?" என்று வினவினதற்கு, "கண்டி" யென்றேன். "உனக்கு இங்கே இருக்க ஆசையா, அல்லது உன் ஊருக்குப் போக வேண்டுமா?" என்றான். "நீர் உத்தரவு கொடுத்தால் இந்த க்ஷணமே கண்டிக்குப் புறப்படுவேன்" என்றேன். "அப்படியானால் ஒரு காரியஞ் செய்ய வேண்டியது: என் விருப்பப் பிரகாரம் நீ செய்தால் உன் ஊருக்குப் போய்ச் சேரவிக்கினமில்லை" என்றான். "அப்படியானால் உமது விருப்பத்தை வெளிப்படுத்தும்" என்றேன். "நான் சொல்லுகிறபடி உன் பந்துக்களுக்கு கடிதமெழுதி உன் மீட்புக்காக் ஆயிரம் ரூபாய் வரவழைத்தால் நீ உன் வீட்டுக்குத் திரும்பலாம்" என்றான். "நான் போய் கொண்டு வருகிறதா?" என்றபோது, "ஆ! ஆ!" என்று திருடன் சிரித்து, "நான் அவ்வளவு மிலேச்சனென்று நினைக்கிறாயோ? நீ இதை விட்டுப் போகக்கூடாது. நீ யிங்கிருந்துகொண்டே உன் பந்துக்களுக்குக் கடிதமெழுதி நான் கேட்ட பணத்தொகையை இவ்விடத்துக்கு அனுப்பி வைக்கும்படி செய்யவேண்டியது. மேலும் நான் சொல்லுகிறபடி கடித மெழுத வேண்டு"மென்று திருடன் சொன்னான். நானும் அதற்குச் சம்மதித்தேன்.

உடனே திருடன் கைதட்டவே, ஒருவன் அந்தக் குகையில் நகர்ந்துவந்தான். அப்போது அவனைப் பார்த்து ஒரு காகிதமும் மைக்கூடும் இறகும் கொண்டுவரும்படி சொன்னமாத்திரத்தில், இவன் கேட்டதையெல்லாம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு முன்போல் குகையை விட்டு நகர்ந்துபோனான். திருடருக்கு எசமானை இவர் என்னைப் பார்த்து, "நான் சொல்லுகிறபடி யிந்த" காகிதத்தில் சிங்களத்தில் எழுது என்று சொன்னதன்மேல், நான் அவ்வாறே எழுதி முடித்து அதை அவன் கையில் கொடுத்தேன். அதையவன் தன் கையில் வாங்கிக் கொண்டு கை தட்டவே, ஒருவன் குகைக்குள் நகர்ந்து வரும்போது "நீ யிங்கே வரவேண்டாம், ஆறுமை வரச்சொல்" என்றான்.

ஆறும் என்பவன் குகைக்குள்வந்து சேர்ந்தவுடனே, திருடருக்கு எசமான் தன் கையிலுள்ள கடிதத்தை அவன் கையில் கொடுத்து, "இதை வாசி" யென்றான். அப்போது அவன் அதை வாங்கி பின்வருமாறு வாசித்தான்.

"என் பிரிய தந்தையாகிய மேற்றிராணி ஆண்டவருக்கு உங்கள் பிள்ளையாகிய டிக்ரூஸ் ஸ்வாமியார் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

நான் கண்டியைவிட்டு புறப்பட்ட மூன்றும் நாள் இரவு கள்ளர் கையில் அகப்பட்டுக் கொண்டேன். எனக்கு இதுவரையிலும் ஒரு ஆபத்தும் நேரிடவில்லை, சுகமே இருக்கிறேன். இந்த காகிதம் தங்கள் கைக்கு எட்டின பத்துநாட்களுக்குள் ஆயிரம் ரூபாய் (பாங் நோட்டு உதவாது) எல்லாம் வெள்ளி நாணயமாய் ஒரு பையில் போட்டுக் கட்டி, கண்டியிலிருந்து 75-ம் மயில் கல்லுக்கு நேர்கிழக்கில், ரோட்டிலிருந்து ஆறு அடி தூரத்தில் ஒரு பாறையுண்டு, அந்தப் பாறை அடியில் ஒரு ஈச்சமர மிருக்கிறது. அந்த ஈச்சமரத்தின் ஓலையில் ஒரு ஜாண் அகலமும் மூன்று ஜாண் நீளமுமான பச்சைத் துணி கட்டப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய் அடங்கிய பையை அந்த ஈச்சமரத்தடியில் வைத்துவிட்டுப் போக வேண்டியது. சாயந்திரவேளையில் ஆறுமணிக்குப் பின்தான் அந்த பணப்பையை ஷை மரத்தடியில் வைக்கவேண்டியது. பணங் கொண்டுவருகிறவன் தன்கூட யாரையும் கூட்டிவரக்கூடாது, அல்லது போலிசாருக்கு இதைப்பற்றி அறிவிக்கவும் கூடாது, அல்லது வேவு காரரையும் அழைத்துவரக்கூடாது. அப்படி அந்த ஆயிரம் ரூபாயைக் கொண்டு வந்து குறிக்கப்பட்ட இடத்தில் வைத்துவிட்டபின், சமுசயத்துக்குரிய யாதோர் வேலை செய்தால்; அதாவது, போலீசாரைக் கூட கூட்டிக்கொண்டு வந்தால், அல்லது வேவு காரரை அனுப்பிவைத்தால், ரஸ்தாவில் அங்கங்கே பதுங்கி யிருக்கும் அநேக திருடர் பணத்தைப் பறித்துக்கொண்டு பணங்கொண்டு வந்தவனையும் கொலைசெய்வார்கள். என்னையும் கொன்று போடுவார்கள்; இது நிச்சயம்.

ஆகையால் இந்தக் கடிதத்தைக் கண்டமாத்திரத்தில் இதைப்பற்றி யாருக்கும் தெரியப்படுத்தாமல் இரகசியமாய் காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டியது. இல்லாவிட்டால் நான் இங்கேயே கைதி செய்யப்பட்டுக் கொல்லப்படுவேன். தேவரீர் தயவு செய்து இந்த பணத் தொகையைக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை உங்கள் ஜெபத்திலும் திவ்விய பூசையிலும் மறக்கவேண்டாம்.

இப்படிக்கு

தங்கள் கீழ்ப்படிதலுள்ள குமாரன்"

D'cruz ! (டிக்ரூஸ்)

இவ்வாறு எழுதப்பட்ட கடிதத்தை திருடர் தலைவன் தன் கையில் வாங்கிக்கொண்டு ஒரு கவரைக் கொடுத்து (Envelope) மேற்றிராணியாரின் மேல்விலாசத்தை அதில் எழுதச் சொன்னான். அவன் சொன்னபடி மேல்விலாசம் போட்டு அதை அவன் கையில் கொடுத்தேன். அதையும் அவன் பெற்றுக் கொண்டு: "உன் மீட்புப் பணம் வந்தவுடனே நீ யிதைவிட்டுப் போய் விடலாம். அதுவரையில் நீ யிங்கே இருக்க வேண்டும்." என்று மறுபடியும் கை தட்டவே, வேறொருவன் வந்தான். அவனை யிவன் நோக்கி, "அடே வேந்தியா! இந்தக் கைதியை நீ பத்திரமாய்ப் பார்த்துக்கொள்; இவனுக்கு வேண்டிய போசனத்தைக் கிரமமாய்க் கொண்டுவந்து கொடுத்து யாதொன்றுங் குறைவின்றி பார்த்துக் கொள்" என்று திட்டஞ் செய்து குகையை விட்டு புறப்படும் சமயத்தில், நான் தலைவனை நோக்கி, "ஒரு உபகாரம் எனக்கு செய்யவேண்டியது" என்றேன். உடனே தலைவன் "என்ன தேவை சொல்" என்றான்.

"என் பையில் வஸ்திரங்களும் சில ஜெபப் புஸ்தகங்களு மிருக்கின்றன; அவற்றை தயை செய்து கொடுத்தால் நலமாயிருக்கும்" என்றேன். அப்போது அவன் "அப்படியே, ஆகட்டும்" என்று படுத்த படுக்கையிலே கெபியினின்று அப்புறஞ் சென்றான்.

சற்று நேரத்துக்குப்பின், எனக்குக் காவலாக நியமிக்கப்பட்டவன் என் பையைக் கொண்டுவந்து கொடுத்தான். பையிலுள்ளவைகளை யெடுத்துப் பார்த்தபோது. பணம் தவிர, மற்ற வஸ்திரங்களும் புஸ்தகங்களும் அதிலே இருந்தன. உடனே என் ஜெபப் புஸ்தகத்தைத் திறந்து கட்டளை ஜெபத்தை ஜெபிக்க ஆரம்பித்தேன்.

எனக்கு வேண்டிய போசனம் மூன்று வேளையும் குறைவுபடாமல் அனுப்பப்பட்டது. ஒரு குறைவு மிருந்ததில்லை. ஆனால் திவ்விய பூசைப்பலியைக் காணவும் அல்லது அதைச் செய்து ஒப்புக்கொடுக்கவும் பாக்கிய மில்லாது போனதே பெருந் துக்கமா யிருந்தது எனக்கு.

அந்தக் குகையிலிருந்தபோதே உங்களுக்குக் கொடுக்கவேண்டிய தியானங்களையும் பிரசங்கங்களையும் முஸ்திப்பு செய்து கொண்டேன்.

வேந்தியன் என்பவன் நல்லவன்: ஒரு போதும் என்னைக் கடிந்துகொள்ளாமலும் துன்பப்படுத்தாமலு மிருந்தான். நான் புஸ்தகத்தை விரித்து செபஞ் செய்யும்போதும் ஜெபமாலை செபிக்கும்போதும் என்னைக் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருப்பான். ஒரு நாள் அவன் "அந்தப்புஸ்தகத்தில் என்ன வாசிக்கிறீர்" என்றான். "ஜெபம்" என்றேன். "நீர் வேதக்காரரா?" என்றதற்கும் "ஆம்" என்றேன். "உங்கள் வேதம் என்ன வேதம்"? என்றதற்கு "எங்கள் வேதம் கிறீஸ்து வேதம்" என்றேன். சற்று நேரம் மவுனமாயிருந்து, "கொளும்பில் கொச்சுக்கடை அந்தோனியார் கோவிலைச் சேர்ந்தவர்களா?" என்றான். அதற்கு "ஆம்" என்றேன். "லூத்தர் மிஷனைச் சேர்ந்தவர்கள் அல்லவோ?" என்றபோது, நான் "லூத்தர் வேதக்காரனும் லண்டன் வேதக்காரனுமல்ல, சர்ச் மிஷன் வேதக்காரனுமல்ல, கத்தோலிக் வேதத்தைச் சேர்ந்தவன்" என்றேன். "உங்களுக்கும் மற்ற மிஷன் காரருக்கும் சம்பந்த மில்லையோ? அவர்களுக்கு மோக்ஷமில்லையோ" என்று கேட்ட கேள்விக்கு தெளிவாய்ப் பதிலுரைத்து, புரோடஸ்டாண்டு மதம் மூளைத்த விதத்தை அவனுக்கு தெளிவாய் விவரித்தேன். அவன் நான் சொன்னதை யெல்லாம் மகா கவனத்துடன் கேட்டுக்கொண்டான்.

வேறொரு நாள் அவன் என்னைப் பார்த்து "நானும் மோக்ஷம்போய்ச் சேர ஆசிக்கிறேன், அதற்கு நான் என்னசெய்ய வேண்டிய" தெ

ன்று கேட்டான். "சத்திய வேதத்தில் சேர்ந்தால்தான் மோக்ஷம் போய்ச் சேரலாம்" என்றேன். அதற்கு அவன் "சத்தியவேதத்தை யெப்படி அறிகிறது?" என்றதற்கு, நமது சத்திய வேதத்தின் அவசரமான பிரதான சத்தியங்களை அவனுக்கு அறிவித்தேன்.

இன்னொருநாள் அவன் என்னைப் பார்த்து, "ஏதாவது உங்கள் வேதத்தைப்பற்றிய சரித்திரம் சொல்லு" மென்றபோது, தேவதாயாரால்நடந்த புதுமைகளையும் விசேஷமாக தற்போது லூர்து நகரில் நடந்தேறிவரும் அற்புதங்களையும் அவனுக்கு விவரிக்கவே, அவன் சந்தோஷித்து, "அந்த தேவமாதாவின் அடையாளமிருந்தால் எனக்குக் கொடுங்கள்" என்றான். அப்போது என் கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த தேவ தாயாரின் சிறு சுரூபத்தைக் கழற்றிக்கொடுத்து, பிரிய தத்தமந்திரத்தையும் அவன் மனப்பாடம் பண்ணும்படியான விதமாய் சொல்லிக்கொடுத்தேன். அதுமுதல் அவன் என்மட்டில் அதிகபிரியமும் விஸ்வாசமுங் கொண்டு அன்புடன் என்னை நேசித்து வந்தான்.

நான் கடிதமெழுதிய ஒன்பதாம் நாள் திருடர்களின் தலைவன் நானிருக்கும் குகைக்கு வந்து புன்னகைப்புடன், "உன் மீட்புப் பணம் வந்து சேர்ந்தது, நாளைக்கு நீ யிதைவிட்டுப் புறப்பட்டுப் போகலா" மென்றான். நானும் அவனுக்கு நன்றிகூறவே, மறுநாள் காலையில் முன்போல் திருடர் என் கண்களைக் கட்டி என்னை வெகுதூரம் கூட்டிக் கொண்டு வந்து ரோட்டுக்கு அருகாமையில் விட்டார்கள். மயில் கல்லைப்பார்த்தபோது கண்டி அறுபத்தாறுமயில் தூரத்திலிருந்ததென்று அறிந்துகொண்டு அவ்வூருக்குத் திரும்பினேன். அங்கு இரண்டொருவார மிருந்தபின், பிரயாணப்பட்டு யாதொரு விபத்துமின்றி உங்களிடம் வந்து சேர்ந்தேன்," என்று ஸ்வாமியார் சொல்லி முடித்தார்.

உனது வெளியிந்திரியங்களுக்காகிலும் மனதுக்காகிலும் நேரிடும் விரோதம், நிந்தை, அவமானம், வியாதி, உன் சுற்றத்தார் சாவு, ஆஸ்தியினிழப்பு முதலான சஞ்சலங்களையெல்லாம் வீரத்துவத்தோடும் சமாதானத்தோடும் சுவாமிக்காக வனுபவித்து எப்பக்கத்திலும் அவர் திருச்சித்தத்துக்குப் பொருந்தி யிருப்பாயாக.

CONFESSION.
பாவசங்கீர்த்தனம்.

பாவசங்கீர்த்தனமானது நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரா லுண்டாக்கப்பட்ட தேவத்திரவிய அநுமானங்களில் ஒன்றாகும். அந்தத் தேவத்திரவிய அநுமானங்களில் முதன்மையும், மற்றவைகளுக்கு அஸ்திவாரமுமானது ஞானஸ்நானம்.

ஞானஸ்நானத்தினால் நாம் கடவுளுக்கு உகந்த பிள்ளைகளாகப் பிறக்க அதை நமதாண்டவர் உண்டாக்கினார். ஆதலால் ஆதாமின் மக்களாயிருக்கின்ற நம்மை ஞானஸ்நானம் கடவுடைய மக்களாக மாற்றிவிடுகின்றது. ஆனால் பிறந்த நாம் எப்போதும் சிறு குழந்தைகளாகவும், பிள்ளைகளாகவும் இருக்கிறோமோ? வர வர வளர்ந்து பெரியவர்களாகி விடுகிறோம். எப்படி? நாம் சாப்பிடும் அன்ன ஆகாரத்தினால்தான். நாம் சாப்பிடுகிற சோறு கறி முதலியவைகள், இரத்தமாகவும், மாமிசமாகவும், எலும்புகளாகவும் மாறுவதினாலேயே நாம் பெரியோர்களாகிறோம். ஞான விஷயத்திலும் அப்படியே. ஞானஸ்நானத்தினால் கடவுளுடைய குழந்தைகளாய்ப் பிறக்கிற நாம் எப்போதும் குழந்தைகளாகவே ஞானஸ்நானத்தின் வழியாய் நமது ஆத்துமத்துக்குக் கிடைத்த ஞான உயிரை அதாவது தேவ இஷ்டப்பிரசாதத்தை அதிகரிக்கச் செய்யவேண்டியது. நமது ஆத்துமத்தின் உயிரும் வர வர வளர்ந்து அது ஆளாகவேண்டியது. அதெப்படியென்றால், நம்முடைய ஆத்துமமும் தனக்கு தகுதியான போஜனத்தை அடிக்கடி உட்கொள்வதினாலேயே. ஆத்துமம் சரீரத்தைவிட மேலானதும் சிறந்ததுமா யிருப்பதினால், ஆத்துமத்தின் ஆகாரமும், சரீரத்தின் ஆகாரத்தை விட மேலானதும்சிறந்ததுமாய் இருக்கவேண்டியது. நம்முடைய சரீரம் மண்ணா லமைக்கப்பட்டது. இதனுடைய உணவாகிய சோறு கறி முதலியவைகளும் மண்ணாய்ப் போய்விடும். ஆனால் நம்முடைய ஆத்துமமோ கடவுளுடைய சாயலாய் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒருவகையில் தெய்வத் தன்மையையே பெற்றிருக்கின்றது. ஆதலால் ஆத்துமத்தின் ஆகாரமும் தெய்வத்தன்மையைக் கொண்டிருக்கவேண்டியது. இப்பேர்ப்பட்ட மேலான ஆகாரம் எதுவெனில் திவ்விய நற்கருணைதான். பெரிய வியாழக்கிழமை இராப்போஜனம் முடிந்த பிறகு நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர், மீதியாயிருந்த அப்பத்தையெடுத்து ஆசீர்வதித்து "இது என்னுடைய சரீரம், புசியுங்கள்" என்று மொழிந்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு அதைப் பங்கிட்டுக் கொடுத்தார். புசியுங்கள் என்றதினால் தம்முடைய சரீரத்தைச் சாப்பிடச் சொன்னார். ஆதலால் ஆண்டவருடைய சரீரம் மெய்யாகவே நம்முடைய ஆத்துமத்தின் சாப்பாடாகும்.

பூரண சுகத்தோடிருக்க நல்ல பதார்த்தங்களைச் சாப்பிட வேண்டியதுபோல் நம்முடைய ஆத்துமமும் பூரண சுகமாயிருக்க அதாவது மேன்மேலும் புண்ணியத்திலும் சாங்கோபாங்கத்திலும் விருத்தியடைய திவ்விய நற்கருணையை அடிக்கடி உட்கொள்ளவேண்டியது. சாப்பிடாவிட்டால் நம்முடைய சரீரத்தின் பெலன் அதிசீக்கிரத்தில் குறைந்து க்ஷீணித்துப்போகும். இப்படியே நற்கருணையை அடிக்கடி உட்கொள்ளாவிட்டால் நம்முடைய ஞான பலன் குறைந்து ஆத்துமமும் க்ஷீணத்தசையை அடையும், அதாவது ஞான உயிராகிய தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்து போகும்.

இது நிற்க, பாழான இச்சரீரம் எண்ணிறந்த வியாதிகளுக்கும், நோக்காடுகளுக்கும் வாசஸ்தலமாகும். மானிடஜென்மமெடுத்தவர்களெல்லோரும், எப்பேர்ப்பட்டவர்களா யிருந்தாலும் எந்த அந்தஸ்தினராயிருந்தாலும் பற்பல வகையான வியாதிகளுக்கு உள்ளா யிருக்கிறார்கள். வியாதிக்குத் தப்பித்துக்கொண்டு பூரண சவுக்கியமாயிருந்து வாழ்நாளை கழிக்க யாராலும் இயலாது. ஆத்தும விஷயத்திலும் அப்படியே. ஆத்துமமும் பற்பல வகையான கணக்கற்ற வியாதிகளுக்கு குடியிருப்பாகும். ஆத்தும வியாதியே பாவமாகும். நாமெல்லோரும் பாவிகள். பாவம் செய்யாதவர் ஒருவருமில்லை. நிற்க, நீங்கள் வியாதியா யிருந்தால் என்ன செய்வீர்கள்? சவுக்கியமடைய ஒருமுயற்சியும் செய்யாமல் சும்மா இருப்பீர்களா? வைத்தியரிடம்போய் உங்களுக்கிருக்கின்ற வியாதியை அவருக்குத் தெரிவித்து அவர்கொடுக்கின்ற மருந்தைச் சாப்பிடுவீர்கள். அந்த மருந்து உங்களுக்குள்ள வியாதியைப் போக்கி உங்களை சவுக்கியப்படுத்தி, சுகத்தைக் கொடுக்கும். அது போல பாவமாகிய ஆத்தும வியாதியையும் போக்க நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் ஞான வைத்தியரையும், ஞான மருந்தையும் நியமித்திருக்கின்றார். குருக்கள்தான் ஞான வைத்தியர்கள். நோயாளி தன்னுடைய வியாதியை ஒளிக்காமல் உள்ளதை உள்ளபடி தெரிவித்தால்தான் வைத்தியர் நோய்க்குத் தக்க மருந்து கொடுப்பார். அவ்வண்ணமே பாவமாகிய வியாதியை கூச்சநாச்சமும் பயமுமின்றி வெளிப்படுத்தினால்தான் குருவானவரும் ஆத்துமத்தைக் குணப்படுத்துவார். ஆத்துமத்தைச் சவுக்கியப்படுத்துகிற மருந்து பாவப் பொறுத்தலாகும்.

ஞானஸ்நானம் பிறப்பாயும், நற்கருணை போசனமாயும் பச்சாத்தாபம் மருந்தாயு மிருக்கின்றது. சரீரப் பிறப்பு, போசனம், மருந்து ஆகிய இவைகளுக்கிருக்கும் சம்பந்தம் இம்மூன்று தேவத்திரவிய அநுமானங்களுக்கு முண்டு. பாவசங்கீர்த்தன மின்ன தென்று தெளிவாயும் சுருக்கமாயும் சொல்ல வேண்டுமானால் "பாவசங்கீர்த்தனம் ஞான மருந்து" என்றே சொல்லவேண்டியது. இப்படிப் பாவசங்கீர்த்தனம், மருந்தா யிருப்பதினாலேயும் நாமெல்லோரும் சாதாரணமாய் ஞான நோயாளிகளா யிருப்பதினாலேயும், அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது. வருஷத்தில் ஒரு முறை மாத்திரம் அல்லது பெரும்பெருந் திருவிழா நாட்களில் மாத்திரம் செய்தல் போதாது; மாத மாதமும் கூடுமானால் வாரம் வாரமும் பாவசங்கீர்த்தனம் செய்ய முயல வேண்டியது. மரணத்துக்குரிய வியாதி உனக்கு வந்தால் நீ என்ன செய்வாய்? "மறு வருஷம் மருந்து சாப்பிடலாம்," இப்போது எனக்கு ஒழியவில்லை, செலவுக்குப்பணமுமில்லை என்று அஜாக்கிரதையாய் இருப்பாயோ? பயித்தியக்காரர்தான், மூடாத்துமாக்கள்தான் அம்மாதிரி நினைப்பார்கள். எள்ளளவேனும் புத்தியிருந்தால் உடனே வேண்டிய செலவெல்லாம் செய்து வயித்தியரை யழைப்பித்து, அல்லது நீயே அவரிடம்போய் வியாதியைத் தெரிவித்து அவர் கொடுக்கும் மருந்தை எவ்வளவு கசப்பாயிருந்தாலும் அரோசிகமாயிருந்தாலும் உட்கொள்வாயல்லவா? சரீர விஷயத்தில் நமக்கிருக்கும் அக்கறை, கவலை, முயற்சி ஆத்தும விஷயத்திலிருக்குமாயின் அதிசீக்கிரத்தில் அர்ச்சியசிஷ்டவர்களாவோம். நமது ஆத்துமத்தைச் சாகடிக்கிற கொடிய வியாதியாகிய சாவான பாவத்தில் விழுந்தால் அடுத்த தபசு காலத்தில் அல்லது

ஒரு பெரிய நாளில் பாவசங்கீர்த்தனஞ் செய்து கொள்ளலா மென்றிருக்கக்கூடாது. நீ திடீரென்று மரணமானால் உன்னுடைய கதி என்னவாகும்!

சீக்கிரத்தில் பாவசங்கீர்த்தனம் செய்யாததினால் பாவமாகிய வியாதி நாளுக்குநாள் அதிகரிக்கும். எந்த நாளில் சாவானபாவத்தில் விழ நேரிடுமோ அதே நாளில் பாவசங்கீர்த்தனம் செய்ய வழி தேடவேண்டியது. பாவப்பொறுத்தலாகிய ஞானமருந்தைப் பெற்றுக்கொள்ள ஒரு கஷ்டத்துக்கு முள்ளாகவேண்டியதில்லை. ஞான வைத்தியராகிய குருக்கள். உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வயித்தியமும் தருமமாகத்தான் செய்வார்கள்.

சில சரீர வியாதிகளுக்கு மருந்தேயில்லை. அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளோர் அகத்தியம் சாதல் வேண்டும். வைத்தியரும் ஒன்றும் செய்ய முடியாது. குஷ்டரோகத்துக்கும் க்ஷயரோகத்துக்கும் மற்றும் பல ரோகங்களுக்கும் சிகிட்சை கிடையாது. ஆத்தும விஷயத்திலோவெனில் எல்லா வியாதிகளுக்கும் தக்க மருந்துண்டு. அதாவது பொறுக்கப்படாத பாவம் ஒன்றுமில்லை. செய்த பாவங்கள் எப்பேபர்பட்டவைகளாயிருந்தாலும், இவைகளுக்கு மன்னிப்பு கிடைக்குமோ கிடைக்காதோ வென்று அவநம்பிக்கை கொண்டிருத்தலாகாது.

மேலும் சரீர சம்பந்தமான வியாதி விஷயத்தில், எல்லா வைத்தியரும் எல்லாவகை வியாதிகளையும் தீர்க்க சக்தியற்றவர்கள். இதற்காகத்தான் விசேஷித்த வைத்தியசாலைகளும் (Special Hospitals) விசேஷ வைத்தியர்களும் (Specialists) இருத்தல் வேண்டியது. ஆகவே, அரசாங்கத்தாரும் கண் வைத்தியசாலை (Eye infirmary) குஷ்டரோகசாலை (Leper hospital) பிரசவ வைத்தியசாலை (Maternity hospital) ஆகிய இவைகளை நியமித்திருக்கிறார்கள்.

ஆத்தும விஷயத்திலோவெனில் விசேஷ வைத்தியர்களில்லை. விசேஷ சிகிச்சைகளுமில்லை. ஒவ்வொரு குருவானவரும் எல்லா ஞான வியாதிகளையும் தீர்க்க சக்தியுள்ளவர்கள். ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு ஞான பொது வைத்தியசாலை (General Hospital). ஞான வைத்தியராகிய குருக்கள் உங்கள் வியாதிக்குச் சிகிச்சை செய்ய இரவும், பகலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் நம்முடைய சரீரத்துக்கு மருந்தை உட்கொண்ட நிமிஷத்திலேயே சுகங்கிடைக்கிறதில்லை. சுகமுண்டாக சில நாட்கள் சில மாதங்கள் பிடிக்கின்றன.

ஞான விஷயத்திலோவெனில், உடனே கண்ணிமைப் பொழுதில் முழுசவுக்கியமடையவாகும். குருவானவர் "நான் உன்னுடைய பாவங்களை மன்னிக்கிறேன்" என்ற பொழுதே வியாதியாகிய பாவம் முழுதும் நீங்கி சவுக்கியமாகி தேவ இஷ்டப்பிரசாதத்தால் ஆத்துமம் நிரப்பப்படும்.

இந்தப் பேருளாகிய பாவ பொறுத்தலையடைய மனஸ்தாபத்தோடு பாவங்களைத் தெரிவிக்க வேண்டியது. நோயின் தன்மையை அறிவித்தால்தான் வயித்தியர் தக்க மருந்து கொடுப்பார். வெட்கத்தினாலேயோ பயத்தினாலேயோ வேறெந்த முகாந்தரத்தினாலேயோ வியாதியைச் சரியாய்த் தெரிவிக்காவிட்டால், மருந்தாகக் கொடுக்கப்படுவது விஷமாக முடியும். குளிக்கப் போய்ச சேற்றைப் பூசிக்கொண்டதுபோ லாகிவிடும். ஆத்தும காரியத்திலு மப்படியே. மரண வியாதியாகிய சாவான பாவத்தை ஞான வயித்தியராகிய குருசுவாமியாருக்குத் தெளிவாய்ச் சொல்லவேண்டியது. வேண்டுமென்று சாவான பாவத்தைத் தெரிவிக்காவிடில் பாவப்பொறுத்தலை யடைவதற்குப் பதில் தேவதுரோகத்தைக் கட்டிக்கொள்ளுவீர்கள். மெய்யாகவே குளிக்கப் போய்ச் சேற்றை உடம்பு முழுதும் அப்பிக்கொண்டது போலாகிவிடும்.

ஆதலால் சரீர வியாதிகளை தெரிவிக்கிறது போல் ஆத்தும வியாதியையும் தெரிவியுங்கள். அதாவது கட்டிக்கொண்ட சாவான பாவங்களெல்லாவற்றையும் கூடியமட்டும், கணக்கிட்டு வெளியாக்குங்கள். குருவானவர் "நான் உன்னுடைய பாவங்களை மன்னிக்கிறேன்" என்று சொன்னமாத்திரத்தில் பாவங்களெல்லாம் நீங்கி ஆத்துமம் முழு சவுக்கியமடையும். L. S.

பெரிய காரியங்களையும் மேன்மையையும் கீர்த்திப் பிரதாபங்களையும் விரும்பாமல் தாழ்மையில் சீவித்து உன்னைக்குறித்து கனமாய்ப் பேசாமல் சுவாமியினுடைய பிள்ளை என்கிற பெயரெடுப்பாயாக.

நீ செய்த நல்ல பிரதிக்கினைகளை அடிக்கடி புதுப்பித்து அவைகளை நிறைவேற்றகையில் வரும் விக்கினங்களினால் அவதைரியப்படாதிருப்பாயாக.

A TALE OF TWO HOUSES.
இரண்டு வீடுகளின் கதை.

அமெரிக்காவில் ஒரு அதிமேற்றிராசனத்தை மகா சாமர்த்தியத்துடன் விசாரணை செய்து வருகிறவரும் பேர்போன சாஸ்திரியுமான மி. ச. ஐர்லாண்டு அதிமேற்றிராணியார் ஒரு நாள் சாயந்திரம் அர்ச். சின்னப்பர் கோவில் பங்கைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள் வீதிப்பக்கமாய் உலாவி வரும்படி புறப்பட்டார். அவர் அத்தெருவில் நடந்து செல்லுகையில் எதிர்ப்பட்ட கிறீஸ்துவர்களோடு அன்புடன் பேசிக்கொண்டும், சமுசாரத் தொல்லையால் வருந்தின ஒரு ஸ்திரீக்கு ஆறுதலான வார்த்தை சொல்லியும், வியாதியால் துன்பப்பட்ட இன்னொருவனுக்கு அனுதாப வார்த்தைக் கூறியும், கஷ்டநஷ்டங்களுக்குள்ளாகி துக்க துயரப்பட்டுக்கொண்டிருந்த ஒருவனை நன்மொழியால் தேற்றியும், இன்னுமிப்படியே மற்றவர்களுடைய குடும்பத்தின் சுகச்சேமத்தை விசாரித்துக்கொண்டும் போனார். அந்த வீதியின் மத்தியில் புதிதாய்க் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டின் வாசற்படியில் ஒருவன் ஒரு சிறு மரத்துண்டை வைத்து அடித்துக் கொண்டிருப்பதை அவர் கண்டு அவனை இன்னானென்று அறிந்துகொண்டு "ஓ! பாட்ரிக் நீ இங்கே என்ன செய்கிறாய்" யென்று புன் நகைப்புடன் வினவினார். அப்போது அவன் எழுந்து அதிமேற்றிராணியாருக்கு வணக்காசாரம் புரிந்து "ஆண்டவரே! இந்த வீட்டைக் கட்டி முடித்தேன்; இந்தச் சிறு மரத்துண்டை பலகையில் வைத்து அடித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். அதற்கு அவர் "மகனே, இது உன் வீடா? அல்லது நீ யார் வீட்டிலாகிலும் கூலிக்கு வேலை செய்கிறாயா?" என்று கேட்டார். "இது என் சொந்த வீடுதான் ஆண்டவரே! என் சொந்தப் பணத்தைக்கொண்டே இதைக் கட்டினேன்" என்றான். அதற்கு மேற்றிராணியார், "அனேக வருஷங்களுக்குமுன் நீ ஏழையா யிருந்ததை நாம் அறிவோம். இப்போது இவ்வளவு பெரிய வீட்டைக்கட்ட உனக்குப் பணம் எப்படிக் கிடைத்ததென்பது நமக்கு ஆச்சரியமா யிருக்கிறது" என்றார். அதற்குப் பாட்ரிக் "ஆண்டவரே, இது என் சொந்த வீடுதான். அதோ அந்தப் பெரியப் புதுவீடும் என்னுடையதே. ஒரு வீட்டில் நான் குடியிருக்கிறேன்; மற்றொன்றைக் குடிக் கூலிக்கு விட்டிருக்கிறேன்" என்றான். இதைக் கேட்ட அதிமேற்றிராணியாருடைய அதிசயம் பன்மடங்கு அதிகரித்து "ஏழையான உனக்கு இரண்டு வீடுகளையுங் கட்ட எப்படிப் பணங் கிடைத்தது? கடன் வாங்கினாயோ?" என்று மறுபடியும் வினவினார். அப்போது பாட்ரிக் "ஆண்டவரே, தேவரீர் அனேக வருஷங்களுக்குமுன் இந்த ஊரில் பங்கு ஸ்வாமியாரா யிருந்த காலத்தில் தாங்கள் எனக்குத் தந்தருளின பணத்தால்தான் இந்த இரண்டு வீடுகளையுங் கட்டி முடித்தேன்" என்று சொல்லி சிரித்தான். இதை அதிமேற்றிராணியார் கேட்கவே, சற்று மவுனமாய் நின்று யோசனை செய்தபின், அவனைப் பார்த்து "நீ சொல்வது உண்மையாயிராது. இப்பெரும் பணத் தொகையைக் கொடுத்திருக்கமாட்டோம். நீ ஞாபகப் பிசகாய்ச் சொல்லுகிறாய் போலும்; வேறே யாராகிலும் கொடுத்திருப்பார்க" ளென்றார். "இல்லை ஆண்டவரே, எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. தேவரீரே எனக்கு அதைக் கொடுத்தீர்கள். இதை ருஜுப்படுத்த தங்கள் கையொப்பமிட்டு எழுதிக்கொடுத்த சீட்டுமிருக்கிற" தென்று சொன்னதைக்கேட்ட அதிமேற்றிராணியார் முன்னிலும் அதிகமாக அதிசயித்து "நீ சொல்வது நிஜமா யிராதென்று தாட்டியாய்ச் சொல்வே" னென்றார். அதற்கு பாட்ரிக் அவரை நோக்கி, "ஆண்டவரே! தயவுசெய்து மேல் மெத்தைக்கு ஏறிவாருங்கள். தங்கள் கைப்பட எழுதப்பட்ட தஸ்தாவேஜைப் பார்ப்பீர்கள்" எனறு மேல் மெத்தைக்கு ஏறினான். அதிமேற்றிராணியாரும் அதி ஆவலுடன் மேலே ஏறினார். கண்ணாடிச் சட்டம் போட்டு சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு முறியை அவனெடுத்து அதை அதிமேற்றிராணியார் கையில் கொடுத்தான். அதை அவர் வாங்கி பின் வருமாறு வாசித்தார். "இது முதல் நான் சாகுமட்டும் லாகிரியான பானம் பண்ணுவதில்லை யென்று உறுதி மொழி கொடுக்கிறேன். இப்படிக்கு, பாட்ரிக். ஓ ... ... சாக்ஷி, அருளப்பர் ஐர்லண்டு; பங்கு ஸ்வாமியார்" இதை அதிமேற்றிராணியார் வாசித்தபின் சந்தோஷத்தால் பூரித்து "சவாஸ் சவாஸ்" என்று அவனைத் தோளில் தட்டி, "நாயிந்த விசாரணையில் பங்கு ஸ்வாமி

யாரா யிருந்தபோது, நீ மதுபானஞ்செய்வதில்லை யென்று கொடுத்த உறுதி மொழியைப் பிரமாணிக்கமாய் அனுசரித்ததினால் நீ தற்போது நல்ல ஸ்திதியி லிருந்து சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் உத்தம கிறீஸ்துவனாய் ஒழுகிறாய். உன்னைச் சர்வேசுரன் மேன்மேலும் ஆசீர்வதித்துக் காப்பாற்றுவாராக" என்று அவர் பாட்ரிக்கை ஆசீர்வதித்து வாழ்த்தி அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

இதை வாசிப்பவர்களுக்குள் மதுபானிகளாயிருக்கப்பட்ட நேசரே, இதை பலமுறை கவனத்துடன் வாசியுங்கள். இந்தத் துர்ப்பழக்கத்தால் நீங்கள் நல்ல பெயரை இழந்து உங்கள் கோத்திரத்தைப் பங்கப்படுத்தி, சத்தியவேதத்தை அவமானப்படுத்தி, உங்கள் பெற்றோரால் கட்டப்பட்ட வீடுகளை குட்டிச்சுவராக்கி விட்டு, உங்கள் பெண்சாதி பிள்ளைகுட்டிகள் காது, கழுத்திலுள்ள நகை நட்டை அடவு வைத்தும், விற்றும் வயல் நிலங்களை அடைமானம் வைத்தும், கெட்டழிந்து, சீர்குலைந்து, அஷ்ட தரித்திரத்துக்குள்ளாகி, வறுமையாலுஞ் சிறுமையாலும் வாடி மெலிந்து, அந்தப் பாழுந் தண்ணீருக்காக நாயைப்போல அல்லும்பகலும் அலைந்து திரிந்து, பொய்ப் புரட்டுகளைக் கக்கி, திருட்டுத் திரியாவரங்களை நடத்தி, குடிகாரனென்று மற்றவர்களால் பரிகசித்து இகழப்பட்டுக் கெட்டழிவது உங்களுக்கு அழகோ, கவரதையோ, சொல்லுங்கள் நேசரே? இக்கணக்கற்ற கேடுகளிலும் தேவ கோபத்துக்குள்ளாகி, நித்தியமாய்க் கெடுங்கேடு சகல கேடுகளிலும் பெருங் கேடென்று நிச்சயித்து, இந்த வியாசத்தில கூறப்பட்ட பாட்ரிக்கின் நல்லொழுக்கத்தைப்பின் செல்வீர்களாக.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரார் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

இச்சங்கமானது தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியரின் இலௌகிக் பொது நன்மைக்காக நமது குருப்ரசாதிகளைத் தலைமையாகக்கொண்டு பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்தாபிக்கப்பட்டு பத்தொன்பது வருஷங்களாகியும், அது இதுவரையில் பரிசிக்கத்தக்க யாதொரு நன்மையும் செய்யவில்லை யென்பது ஓர் பெரிய முறைப்பாடு. தலைமையாகக் கொள்ளப்பட்ட குருப்ரசாதிகள் சரியானபடி சாதிக்கவில்லையாகையால், அவர்களை அறவே ஒழித்துவிடவேண்டு மென்பது சிலருடைய கோட்பாடு. காரிய நிர்வாக சபையார், காரியதரிசி முதலிய சங்க உத்தியோகஸ்தர்கள் சரியாய் அலுவல் செய்யவில்லை யென்பது இன்னொரு சாராது அபிப்பிராயம். இவ்விரு திறத்தாருடைய முறைப்பாடுகளும் நியாயமானவை யல்லவென்பது வேறு சிலருடைய கொள்கை.

சங்கம் என்பது பலர் சேர்ந்த ஒரு கூட்டம். யாதோர் சங்கத்தின்மேல் யாதோர் குற்றம் ஏற்படுமானால், அக்குற்றம் அச்சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அனைவோரையும் சாருமே யொழிய சிற்சிலரைமாத்திரம் சாராது. ஒவ்வொருவருமே அதற்கு உத்தரவாதியாகவேண்டும். குற்றந் தமதே பிறிதன்று. ஏனெனில், சங்கத்தில் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்துக்கும் அங்கத்தினருடைய அங்கீகாரம் வேண்டும். அஃதின்றி சங்கம் ஒன்றும் செய்யமுடியாது. அங்கத்தினரால் நியமிக்கப்பட்ட நிர்வாகசபை தங்கள் அபீஷ்டப்படி காரியம் நடத்தாவிடில் அச்சபையை அடியோடே அகற்றிவிட்டு பிறிதோர் சபையை நியமித்துக்கொள்ளலாம். ஆகவே, தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம் இதுவரையில் ஒன்றுஞ்செய்யாதொழிந்த குற்றத்துக்கு ஆளாகுமானால், அதற்காக அதன் அங்கத்தினர் ஒவ்வொருவரும் "என் பாவமே! என் பாவமே!" என்று மார்பைத் தட்டிக்கொள்ள வேண்டுமேதவிர, அவர்மேல் இவர்மேல் குறை கூறுவது குணமன்று. சங்கம் ஒன்றுஞ் சாதிக்கவில்லையென்றால், சாதிப்பதெங்ஙனம்? எதற்கும் பணம் வேண்டுமே! அஃதெங்கே? அங்கத்தினரெல்லாம் தங்கள் சந்தாக்களைச் சரியாய்ச் செலுத்துவதில்லை. நூற்றில் பத்துபேர் கூட செலுத்தவில்லை. பணமென்றால் பின்னுக்குப் போகிறார்கள். அப்படியானால் சத்திரங்கட்டுவதெங்கே, சாவடி கட்டுவதெங்கே, மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் உதவுவதெங்கே? கௌரவ காரியதரிசியவர்கள் சென்ற பல வருஷங்களாக அங்கத்தினர் சந்தா சரியாய்ச் செலுத்துவதில்லை யென்றும் அக்குறையை நிவர்த்திக்க அங்கத்தினர் வகை தேடுவது அத்தியாவசியமென்றும் முறையே தமது வருஷாந்தர அறிக்கைப்பத்திரங்களில் முறையிட்டு வந்திருந்தும், அது விஷயத்தில் அங்கத்தினர் இதுகாறும் சற்றும் அக்கரை கொள்ளாமல் வாளாவிருந்துவிட்டு, இப்போது கௌரவ காரியதரிசிமேல் குறை கூறுவது ஞாயமோ? இதுகாறும் நாம் கௌரவப்படுத்தி தலைமீது தாங்கிவந்த சற்குருக்களை வேண்டாமென்பது மதியோ? இதுவே நான் சென்றமாத சஞ்சிகையில் குறிப்பிட்ட கலகக்காரர்கள் செய்துவந்தது, செய்துவருவது. இக்கலகக்காரர்கள் அக்கிராசனாதிபதியும், கௌரவ காரியதரிசியும், உடனே தமது உத்தியோகங்களை உதறிவிட்டு ஒழியவேண்டும், அக்கிராசனாதிபதி வருஷா வருஷம் தெரிந்தெடுக்கப்படவேண்டும், காரிய நிர்வாக சபையாரும் தங்கள் ஸ்தானங்களை காலி செய்ய வேண்டும், அங்கத்தினருஞ் சரி அங்கத்தினரல்லாதாருஞ் சரி எல்லோரும் கூட்டத்தில் இடம் பெறவேண்டும் எனச் சொல்லி, இதற்காக ஆத்திரக்காரர் சிலரைச் சேர்த்துக்கொண்டு, கட்சிபண்ணி ஒய். எம். சீ. யே முதலிய விடங்களிற் கூட்டங்கள் பலவைத்து, தங்கள் கட்சிக்கான விஷயங்களைத் தீர்மானித்து, அவைகளை அடைவதற்கு செய்ய வேண்டிய வகைகளை விவரித்து இங்கிலீஷிலும் தமிழிலும் விளம்பரச் சீட்டுகள் வழங்கியும், சுவர்களெங்கும் பிரசித்த பத்திரங்களொட்டியும், தெருவெங்கும் போய், வீடு வீடாய்ப் புகுந்து, ஓசைபட ஓதுவித்தும் வேலை செய்தார்கள். இவ்வளவு வேலை செய்தும், இவர்கள் ஜெபஞ் சாயாமற்போனதால், சீற்றங்கொண்டு, வேறோர் சங்கத்தைத் தங்களுக்கு ஸ்தாபித்துக் கொண்டார்கள். இப்படி யிவர்கள் செய்தது பெரும் பிசகு. விசேஷமாய் இந்துக்கள் மகம்மதியர் முதலிய இந்தியர் எல்லோரும் இழிகுலத்தோர் உயர் குலத்தோர் என்னும் விகற்பங்களை நீக்கி தேசநன்மைக்காக ஏகோபித்து உழைக்க முயன்று வரும் இக்காலத்தில், கத்தோலிக்கருக்குள்ளேயே இவ்வித பிளவு ஏற்பட்டது மிக்க வியசனத் துக்குரிய காரியம். இவ்வாறு பிளவுபடுத்திக்கொண்டு பிரிந்துபோனவர்கள் மறுபடியும் சங்கத்தைச்சேர்ந்து, சங்க ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு, தங்களுக்கு வேண்டுவனவற்றை கிரமப்படி பிரேரித்து, சங்கத்தாரை அவைகளுக்கு சம்மதிப்பித்து, அதிக வாக்குப் பெற்று, காரியத்தைக் கொண்டுபோக வேண்டுமே யல்லாது வேறு வழியில்லை. உடலினின்று அற்றுப்போன அவயவம் உடலோடு வந்து ஒட்டி பொருந்திக் கொள்ளவேண்டுமே தவிர, அவயவம் இருக்குமிடத்தில் உடல் போய் ஒட்டாது' அற்றுப் போன அவயவம் உடலிடம் உடனே வந்து தன்னுடைய யதாஸ்தானத்திற் சேராவிடில் அது அழுகி, நாறி, நாசமடையுமன்றோ?

பிரிவினைக்காரரே வாரும்-எங்கள்
சரிவினைச் சங்கத்தைச் சேரும்.

கத்தோலிக்காபிமானி.

மதுரை.

அர்ச். அந்தோனியார் வாசகச் சாலையின் 2-வது வருஷாந்திரக் கொண்டாட்டம் செப்டம்பர் ௴ 2௳ மேலவாசல் அர்ச். ஜெபமாலை மாதாக் கோவில் கம்பவுண்டுக்குள் விசித்திரமாக சிங்காரிக்கப்பட்ட கொட்டகைப் பந்தலில், சரியாய் வந்திக்கத்தக்க, திருமயிலை மேற்றிராணியார் ஆண்டவரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. அச்சமயம் ஷை மேற்றிராணியாரின் செக்ரெட்டெரியான ரெவரெண்ட் பாதர் பிரான்சிஸ் கர்வாலோ சுவாமியவர்களும், சங். கனம். A. மோனிஸ் சுவாமியவர்களும் சிலகனவான்களும், நூற்றுக்கணக்கான இதர மெம்பர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். சில பள்ளிப் பாலர்கள் வந்தனப் பாட்டுகள் இனிய சங்கீத தாளங்களுடன்பாட, ம-ா-ா-ஸ்ரீ, D. V. சவரிமுத்துப் பிள்ளை (ஆக்டிங் தாசில்தார், மதுரை) அவர்களால் வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட, ஷை வாசகச் சாலையின் செக்ரெட்டெரியான மிஸ்டர் A. சூசை உபாத்தியாயரால், ஷை சாலையின் வரவு செலவு, மெம்பர்களின் ஆஜர், ஊக்கமான முயற்சி முதலானவைகளை செவ்வெனக் காட்டும்படியான வருஷாந்திர ரிப்போர்ட்டும் வாசிக்கப்பட்டன. பின்னர் சங். கனம், பி. கர்வாலோ சுவாமியவர்கள் "ரீடிங் ரூமின் நோக்கம்"—என்பதைப்பற்றித் தமது சாதுரியமான இனிய மொழிகளால் உபந்நியாவித்தார்கள்.

அதன் பின்னர் மாட்சிமை தங்கிய அக்கிராசனாதிபதியாகிய ஆண்டவரவர்கள் தற்காலம் கத்தோலிக் ஜனசமூக முன்னேற்றத்துக்குரிய முக்கியமானவைகளில் வாசகச் சாலைகள் ஒன்றென்றும், அதில் கத்தோலிக் வாலிபர்கள் வீண் காலம் போக்காமல், கத்தோலிக் பேப்பர்களையும், வேத சரித்திர புஸ்தகங்களையும், இதர நல்லறிவை புகட்டக்கூடிய புஸ்தகங்களையும் வா

சித்து வருவதானது கல்வி, நாகரீகம், சரித்திர ஆராய்ச்சி, இராஜ பக்தி, வேத பயிற்சி முதலானவைகளில் முக்கியமான நற்பயனைப்பெற்று விருத்தியாவதற்கு மிக்க ஏதுவானதென்றும் இப்பங்கில் இந்த வாசகச்சாலையின் துவக்கமானது சர்வேசுரனுடைய விசேஷ ஏவுதலால் தூண்டப்பட்டே துவக்கி யிருக்கவேண்டும் என்றும், இதற்குப் பிரசிடெண்டும் பங்கு சுவாமியாருமான, Rev. L. B. Rocha சுவாமியவர்கள் வேண்டிய முயற்சி எடுத்திருப்பதைப்பற்றி தாம் மிகவும் சந்தோஷப்படுவதாகவும், இச்சமயம் அவர் வெளியில் ஓர் கிறீஸ்துவனுக்கு திடீரென்று நேரிட்ட மரண அவஸ்தையின் நிமித்தம் போயிருப்பதால் இவ்வைபவத்துக்கு அவர் வரக்கூடாமையைப்பற்றி தாம் விசனிப்பதாகவும், இம்மாதிரி வாசகச்சாலைகள் ஒவ்வொரு ஊர்களிலும் பட்டணங்களிலும் ஏற்படுத்துவது மிகவும் நலமென்றும், இதினு லுண்டாகும்படியான அநேக நற்பயன்களையும் எடுத்துக் காட்டியும், எல்லா வாலிபர்களும் இதில் சேர்ந்து வாசித்து வருவது மிக்க நன்மையைப் பயக்கும் என்றும் முன்மாதிரிகையாக தாமே அன்றையத்தினமே இதில் ஓர் மெம்பராகச் சேர்ந்துகொள்வதாகவும் கூறியதுடன் வருஷந்தோறும் தம்மால் கூடிய உதவி செய்து பாதுகாத்து வருவதாகவும் வாக்களித்ததல்லாமலும் இந்த ரீடிங் ரூமையும் மெம்பர்களையும் இதனை விருத்திசெய்யத் தூண்டுதல்களா யிருப்பவர்களையும் தாம் அன்புடன் ஆசீர்வதிப்பதாகவும் சொன்னார்கள். இவற்றை யெல்லாம் இங்கிலீஷில் சொன்னபடியால் அதை அப்படியே சங். கனம். கர்வாலோ சுவாமியவர்கள் தமிஷில் மொழிபெயர்த்து கேட்போர் மனது குதூகலிக்கும்படி வெகு இனிமையாய் உபந்நியாசிக்கவும் மகா-ா-ா-ஸ்ரீ, குசை பெர்னாண்டோ அவர்களால் வந்தி. அக்கிராசனாதிபதியாகிய ஆண்டவரவர்களுக்கும் மற்றும் சங். சுமாமிமார்களுக்கும் இன்னும் சில கனவான்களுக்கும் பூமாலைக ளிடப்பட்டன.

கடைசியில் ஷை செக்ரெட்டெரியால் அன்புடன் விஜயஞ் செய்த வந்தனைக்குரிய சபாநாயகரான ஆண்டவரவர்களுக்கும் மற்றும் சங். சுவாமிமார்களுக்கும் விசேஷ வந்தனம் செலுத்தப்பட்டதுடன், இந்த ரீடிங் ரூமின் அபிவிர்த்தியைக் கருதி இதற்குப் பொருள் உதவிபுரிந்த Messers. S. Murray, W. Parker, F. S. Vas, A. C. பெர்னாண்டோ, I. X. பெர்னாண்டோ, வின்சென்ட் அன்ட் கோ, C. J. பால், F. X. மிக்கேல் பிள்ளை, Miss. Jordan, முதலியவர்களுக்கும் இன்னும் சில கனவான்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றியறிதலான வந்தனம் ஆலோசனைக் கமிட்டி மெம்பர்களில் ஒருவரான Mr, D. John. என்பவரால் செலுத்தப்பட்டன. அப்பால் இவ் வாசகச்சாலையின் பாதுகாவலரும் கோடி அற்புதருமான அர்ச். அந்தோனியார் பேரால் சில தோத்திரப் பாக்களும், ஷை சபா நாயகர் அவர்கள் பேரால் மங்களப் பாக்கள் பாடவும் ஷை ஆண்டவரவர்கள் தமது திருக்கரத்தா லனைவோரையும் ஆசீர்வதிக்கச் சபை கலைந்தது. அடுத்த நாள் மெம்பர்களுடனும் ஷை சபா நாயகருடனும் கூடிய புகைப்படம் Messrs M. Raphael & Sons அவர்களால் எடுக்கப்பட்டது.

L. X. MICHAEL PILLAI.

மாண்டலே இந்திய கத்தோலிக்கரின் சகோதரத்துவக் கூட்டம்.

22-9-17 சனிக்கிழமை சாயங்காலம் $4\frac{1}{2}$ மணிக்கு மாண்டலே 73-வது மிங்கலா தெரு, 'மேவில்' என்ற ஹாலில் ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் C. லூர்துசாமியவர்கள் அக்கிராசனத்தின்கீழ் இக்கூட்டம் நடைபெற்றது. ஏறக்குறைய 60 மெம்பர்கள் தங்கள் பிள்ளைகளோடு ஆஜராயிருந்தார்கள். மாண்டலே அர்ச். சவேரியா ராலய சுவாமிமார்கள் சங். ஹேர்வி யவர்களும் உதவி குரு சங். பாலிய ரவர்களும் விஜயமாயிருந்தனர். $4\frac{1}{2}$ மணிக்கு மெம்பர்களின் 'போட்டகிராப் எடுக்கப்பட்டது. 5 மணிக்குச் சபை ஆரம்பமாக, முதல் முதல் அக்கிராசனாதிபதி ஏழுந்து, "இங்கு ஏன் கூடியிருக்கிறோம்? நாம் செய்ய வேண்டிய தென்ன? ஒற்றுமை யுண்டாவதால் என்ன நன்மை யடையலாம்?" என இங்கிலீஷில் கரதலாமலகம்போல இனிய பிரசங்கம் கேட்போர் மனது கரையும்படி பிரசங்கிக்க, இரண்டாவதாக சென். சேவியர்ஸ் ஸ்கூல் ஹெட்மாஸ்டரும், சென்ட் வின் சென்ட் தெ பால் சொசைட்டியின் ஹானரரி செக்ரெட்டெரியுமான ம-ா-ா-ஸ்ரீ M. பால் அவர்கள், இந்திய கத்தோலிக்கரின் உற்பத்தியை ஆதிமுதலந்தமாக விஸ்தரித்து, கடைசியாய் இவ்வளவாண்டு கடந்தபின்னரும் நாம் முன்னேறாம லிருப்பதின் காரணமென்னவென்று சமரசமாய்க் கல்லும் கரையுமாறு ஓர் உபந்நியாசஞ் செய்தார். மூன்றாவதாக இக்கூட்டத்தின் ஹானரரி செக்ரெட்டெரியாரான ம-ா-ா-ஸ்ரீ L. அந்துபாப் அவர்கள் நம்மவர்களின் பொது நலமென்னவென்றும், அப்பர் பர்மாவில் நமது கிறீஸ்துவர்கள் கூடிய கூட்டம் இதுதான் முதல் தடவையெனவும், இன்னும் நமது முன்னேற்றத்திற்கு வேண்டிய சாதனங்களவையென்றும் தன்னமிர்தமொழியால் ஒரு உபந்நியாசம் தமிழில் கூறினார். சென்ட் சேவியர் ஸ்கூல் மாணவரிருவரால் இரண்டு இங்கிலீஷ் பாட்டுகள் தனித்தனியே பாடப்பெற்றது. ஷை ஸ்கூல் உபாத்தியாயருளொருவரான ம-ா-ா-ஸ்ரீ D. X. ஐயாப்பிள்ளையவர்களால் தமிழில் தயாரிக்கப்பட்ட "ஒற்றுமை" என்னும் சம்பாஷணை ஷை ஸ்கூல் மாணவர் மூவரால் அபிநயங்களுடன் நடித்துக் காண்பிக்கப்பட்டது. இது வெகு போதனைகளடங்கியதாயும், வெகு இனிமையாயும், பிறருக்கு மோர் முன் மாதிரிகையான பாடமாகவுமிருந்தது. இதோடு சங்கம் நீடூழி வாழவும் நமது நேச கட்சிகள் ஜெயமாகும்பொருட்டும், திருச்சபை செழித்தோங்கவும் தமிழ் பாட்டுகள் பாடப்பட்டன. இவைகளெல்லாம் முடிந்தவுடன் மாண்டலே P. W. D. ஆபீஸ். ஹெட்டிராப்ட்ஸ் மேனாகிய ம-ா-ா-ஸ்ரீ T. நல்லத்தம்பி அவர்களெழுந்து அக்கிராசனாதிபதி முதலானவர்களின் உபந்நியாசங்கள் மிக்கச் சிறந்தவைகளென்றும், பேருக்கு மாத்திரம் கூட்டங் கூடுவது போலிக் கூட்டமென்றும், "என்றும் நிலைபெறுமான ஓர் ஸ்திரமான இந்திய கத்தோலிக்கர் சங்கம்" கட்டாயம் ஸ்தாபிக்கவேண்டுமென்ற ஓர் மசோதா கொண்டுவந்தார். உடனே சென்ட் சேவியர் ஸ்கூல் முதல் அஸிஸ்டெண்டான ம-ா-ா-ஸ்ரீ R. A. ஸூரியதாஸ் அவர்கள் எழுந்து மசோதாவை ஆதரிக்க, கூட்டத்தினர் யாவரும் ஆமோதித்து கரகோஷஞ் செய்தனர். உடனே அக்கிராசனாதிபதி எழுந்து இந்திய கத்தோலிக்கு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கமே இங்கு கூடிய கூட்டத்தின் கருத்தென்றும், கூடிய சீக்கிரம் அதை ஏற்படுத்த மறு கூட்டங் கூடப்படுமென்றும், அதன்பின் சகல காரியங்களும் ஒழுங்காய் நடைபெறுமென்றும் தீர்மானஞ் செய்தார். இதன் பின்னர் அங்கு கூடிய இந்திய கத்தோலிக்கரனைவரும் ஒரே பந்தியிலமர்ந்து சகோதரத்துவமாய் சிற்றுண்டிகளுண்டனர். பாட்டுக் கச்சேரி சகல நாதகீத வாத்தியக்கோஷ்டங்களோடு நடைபெற்றன. முடிவாக ஆங்கிலேய மன்னருக்காக 3 கூஷியர்சும், நமது நேச கட்சிகள் ஜெயம் பெற 3 கூஷியர்சும், அக்கிராசனாதிபதிக்கு 3 கூஷியர்சும் கொடுத்துத் தெய்வ தோத்திரத்தோடு ராஜ வாழ்த்து (God save the King) பாடிக் கூட்டம் முடிவுபெற்றது.

ஷை கூட்டத்திற்கு, விஜயம் செய்தவர்கள், வேளாளர், பஞ்சமர், இந்துக்கள், யூரேஷியர், முதலியவர்கள். தென்னிந்தியாவில், இப்படி அடிக்கடி, நடந்தேறுமாகில், நமது தேசம் எவ்வளவோ முன்னுக்கு வரும். மகா பேர்பெற்ற தென் இந்திய கத்தோலிக்கரின், சங்கத்தினர் அவர்கள் சங்க மேற்படுத்தி சுமார் 26 வருஷங்களுக்கு மேலாகியும் எத்தனை தடவை இவ்வித சகோதரத்துவ கூட்டங்கள் (Social Gathering) வைத்திருக்கிறார்களென்றறிய ஆசிக்கின்றேன். தென்னிந்திய கத்தோலிக்கருக்கு மெய்யான ஐக்கிய மில்லாததால், குல நன்மைக்காக எக்காரியமும் செய்ய அவர்களால் முடியாது. இச்செல்வ நாடாகிய பர்மாவின் இந்திய கத்தோலிக்கரின் முன் மாதிரிகையைப்பின் பற்றுவார்களாக.

இந்திய கத்தோலிக்கன்.

தென்காசி திரு லூர்து சங்கம்.

ஐயா, இதனடியிற் கண்ட விஷயங்களைத் தங்கள் அக்டோபர் மாத "நல்லாய"னில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லா தென்காசிப் பங்கிலுள்ள 4,276 கத்தோலிக் கிறீஸ்துவர்களுக்கும் பிரதிநிதிகளிருந்து நடந்து வரும் தென்காசி திருலூர்து சங்கத்தின் 7-வது பொதுக்கூட்டம் ரெவரென்று கனம் எ. அடைக்கலநாத சுவாமியவர்களின் அக்கிராசனத்தின் கீழ் 1917 ௵ ஜூலை ௴ 8௳ பொட்டல் புதூரில் கூடப்பெற்றது. அன்றையக் கூட்டத்தின் முக்கிய தீர்மானங்களாவன:—

1-வது. சென்னை பச்சையப்பன் காலேஜில் தென்னிந்திய கத்தோலிக்கர் சகலருக்குமே பிரதிநிதிகளாயிருந்து காரியங்களை நடத்துவதாகச் சொல்லிக்கொண்டு "மாஸ்மீட்டிங்" என்று பெயருமிட்டு கூடின கூட்டத்தின் நடபடிக்கைகளையும் கத்தோலிக்க ஜனசமூகத்திற்கே பெரும் அவமானத்தை உண்டுபண்ணி, பெங்களூரில் 30—1—1917ல் மேற்றிராணிமார்கள் எண்மர் கூடிச் செய்த சில தீர்மானங்களுக்கு விரோதமாய் "இந்து" என்னும் பத்திரிகையில் வரைந்து பழித்துப் பேசிய கடிதக்காரரின் துர்மாதிரிகையான நடத்தையை

யும் இச்சங்கமானது அதிக வருத்தத்தோடும் வெட்கத்தோடும் கண்டித்து வெறுக்கிறது.

2-வது இதை "கத்தோலிச் நேசன்" "நல்லாயன்" பத்திரிகைகளுக்கு பிரசுரத்துக்காக அனுப்பவேண்டியது.

பொட்டல் புதூகர் }
17—9—1917 } காரியதரிசி
தென்காசி திருலூர்து சங்கம்.

N. B. இம்மாதிரி நகலொன்று 8-8-1917 வருஷம் "கத்தோலீக் நேசன்" பத்திராதிபருக்கு பிரசுரத்துக்காக அனுப்பி இருந்ததை பத்திராதிபர் "ரெவியூஸ்ட்" என்றெழுதி வாபீஸ் செய்துவிட்டார்.

பஸ்ரா.

ஐயா, பத்திராதிபரே, பின்வரும் "நோட்டீஸை" உம்முடைய அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Busra, நகர் ஸிஸ்டர் கோர் கத்தோலிக் பாலிய சங்கத்தவர்களாகிய M. N. B. அந்தோணி, C. A. ஆலேக், M. D, தேவசகாயம் இவர்களின் நன் முயற்சியாலும் கத்தோலிக்க சகோதரர்களாலும் ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி காலை 7 மணிக்கு மிலிடேறி தேவாலயத்தில் சங். ராஜ ரிஷி M. C. Grath குரு அவர்களால் பாடல் பூசை செய்விக்கப்பட்டது. மேலும் 9-ம் தேதி இரவு ஓர் குறித்த விடத்தில் பரிசுத்த ஆரோக்கிய தேவதாயாரைக் குறித்து ஜெப ஆராதனையும் பஜனையும் 2 மணி வரையில்வெகு ஆரவார சிறப்புடன் நிறைவேறிற்று. இதைக்கண்ணுறும் கத்தோலிக்க சகோதரர்கள் இது முன்னுக்கு வரும்படி அர்ச். ஆரோக்கிய தேவதாயாரை மன்ருடி வரும்படி கேட்டு கொள்பவனாகிய

Busra } ச. மரி அந்தோனி "மியுசிஷன்"
9-9-17. } 80-வது கர்னாடக படை
I. E. F. 'D'

[இடமில்லாக் குறையால் மற்றக் கடிதங்கள் பிரசுரிக்கப்படவில்லை.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

லுவேயின் கலாசாலை.—நிகழும் போரால் நிர்மூலமாக்கப்பட்ட இக்கலாசாலைக்காக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் சேகரிக்கப்பட்டிருக்கிற புஸ்தகங்கள் 8,000.

கர்தினல்மார்களின் மரணம்—நமது பரிசுத்தத் தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் பாப்பானவரானது முதற்கொண்டு இதுவரையிலும் 16 கர்தினல்மார்கள் மரணமாயிருக்கிறார்கள்.

மானுட எலும்பின் நிறை.—புருஷரது எலும்பு ஏறக்குறைய 20 பவுன் நிறையுள்ளதாயும், ஸ்திரீகளின் எலும்பு 16 பவுன் நிறையுள்ளதாயுமிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

30 கோடி ரூ.—இப் பெருந் தொகையே பிரதிதினமும் நிகழும் யுத்தத்தில் செலவாகிறது. தினமொன்றுக்கு இவ்வளவு பிடித்தால் மாச மொன்றுக்கு எவ்வளவாகுமென்று பெருக்கிப் பார்த்துக் கொள்ளவும்.

ஹேய்க் என்பவர்.—இவரே நடக்கும் பெரும்போரில் ஆங்கிலேயருடைய சேனைக்கெல்லாம் பெரிய சேனாதிபதி. இவர் நல்ல கத்தோலிக்கர். இவருடைய சகோதரர் ஸ்காட்லாண்டிலுள்ள இரட்சகர் சபைக்குச் சிரேஷ்டரா யிருக்கிறார்.

மோசாஹா என்பவர்.—இவர் ஜப்பான் தேசத்தின் சிறந்த சாஸ்திரி. சமீபத்தில் தோக்கியா நகரின் கலாசாலையில் இவர் செய்த ஓர் உபந்நியாசத்தில் கத்தோலிக்கு வேதமானது வல்லமையுள்ளதும் உத்தமமானதுமென்று சொல்லி உபந்நியாசித்தார்.

ஓர் நூதன மோட்டார் வண்டி—இவ்வண்டி எப்படி நிலத்தில் செல்லுகின்றதோ அப்படியே நீரிலும் செல்லுகின்றதாம். இதை ஆஸ்டிரியாவைச் சேர்ந்த வீயன்னா வாசியான எல்சிநீர் என்னும் ஒரு இஞ்சினியர் கண்டுபிடித்தாராம். இந்த வண்டி நிகழும் நாசகரத்துக்குரிய யுத்தத்துக்கு மிக்க உபயோகமா யிருக்கின்றதாம்.

சமாதானத்தின் இராக்கினியே.—என்னும் வசனத்தை தேவமாதாவின் பிரார்த்தனையிற் சேர்த்து இந்த யுத்த காலத்திற் செபிக்கும்படி பரிசுத்தத் தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் கற்பித்திருந்தாரல்லவா? தற்போது அதை எப்போதைக்குமே அந்தப் பிரார்த்தனையிற் சேர்த்து வேண்டிக்கொள்ள உத்தரவளித்திருக்கிறார்.

என்னே, கத்தோலிக்கு, வேதத்தின் வீரச்செய்கை!—ரேயிம்ஸ் நகரத்தின்மேல் கடந்த 5 மாதங்களுக்குள் 65,000 வெடி குண்டுகள் எறியப்பட்டன. ஆயினும் அப்பட்டணத்தின் லூசோன் கர்தினல் ஆண்டவரும் அநேக கன்னியாஸ்திரீகளும் அங்கேயே தங்கி காயப்பட்டவர்களுக்கும், சாகக்கிடக்கிறவர்களுக்கும் உதவிசெய்து வருகிறார்கள்.

கண்ணிமைத்தலின் கணக்கு—நாம் ஒவ்வொருவரும் ஒரு வருஷத்தில் 40 லட்சந் தரம் கண்ணை மூடி கண்ணைத் திறக்கிறோமென்று சாஸ்திரி யொருவர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் நிமிஷமொன்றுக்கு எத்தனை தரம் இமைக்கிறோமென்றறிய பிரியமுள்ளவர்கள் கவனித்துப் பார்த்துக்கொள்ளவும்.

15-ம் ஆசீர்வாதப்பர்.—நம்முடைய பரிசுத்த பிதாவாகிய இவருடைய விசேஷ சிபாரிசினால் போரில் பிடிபட்டு கைதிகளாயிருந்த 11,823 பிரான்சியரும், 4,322 ஜெர்மனியரும், 1,607 பெல்ஜியரும், 1,183 ஆங்கிலேயரும் யுத்தத்தில் தலையிட்டுக்கொள்ளாமல் நடுநிலையிலிருக்கும் ஸ்விட்ஸர்லண்டு தேசத்துக்குத் தற்போது அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவின் முக்கிய பாஷைகளைப் பேசுகிறவர்களின் தொகை.—இங்கிலீஷ் பாஷை பேசுகிறவர்கள் 16 கோடி; ஜெர்மன் பாஷை பேசுகிறவர்கள் 13—கோடி; புருஷியா பாஷை பேசுகிறவர்கள் 10 கோடி; பிராஞ்சு பாஷை பேசுகிறவர்கள் 7 கோடி; இத்தாலியா பாஷையும் ஸ்பானியா பாஷையும் பேசுகிறவர்கள் 5 கோடி; போர்த்துகீஸ் பாஷை பேசுகிறவர்கள் 2 கோடியே 50 லட்சம் பேர்.

இந்தியாவுக்கு முதல் முதல் வந்த ஆங்கிலேயர் யார்?—அவர் சங். தாமஸ் ஸ்டீபென்ஸ் என்ற சேசுசபை குருவானவராவர். அவர் 1579-ம் ஆண்டில் இத் தேசத்துக்கு வந்து கோவையிலிருந்த சேசு சபை கலாசாலைக்குச் சிரேஷ்டரா யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஆங்கிலேயர் இந்தியாவிலே நிலபுலம் வாங்கி முதன் முதல் குடியேறின காலம் 1612-ம் வருஷமாம்

ஓர் மனந் திரும்பல்.—அமெரிக்கா தேசத்திலுள்ள கப்பல் படைக்கு அதிகாரியா யிருக்கும் அட்மிரல் பென்சன் என்பவர் தம்முடைய பதித வேதத்தை விட்டுவிட்டு இப்போது கத்தோலிக்காராகி ஓர் உத்தம கிறீஸ்துவராய் ஒழுகி வருகிறார். இவரும் இவருடைய பத்தினியும், குமாரத்தியும், சேனையில் ஆபீசர்களா யிருக்கும் இரு குமாரர்களும் ஞாயிறுவாரந் தோறும் பூசை கண்டு திவ்யநற்கருணை உட்கொண்டு வருகிறார்களாம்.

நியூயார்க்.—இப்பட்டணம் அமெரிக்காவிலுள்ளது. இதன் ஜனங்களுக்குள் தத்தம் கோவிலுக்குப் போகிறவர்களின் தொகை பின் வருமாறு: யூதர் இரண்டு இலட்சம் பேர்; புரோடஸ்டான்டர் மூன்று இலட்சத்திருபதாயிரம்பேர்; கத்தோலிக்கரோ பன்னிரண்டு இலட்சம் பேர்.

நரை மயிர்.—மனிதருக்கு மயிர் நரைக்க அவர்களுக்குள்ள கவலை யொரு காரணமென்று யூகிக்கப்படுகிறது. புருஷர்களை விட ஸ்திரீகளுக்கதிக கவலை யுண்டென்றும், ஆனதுபற்றி புருஷர்களுக்கு நரை வருவதற்கு நான்கு வருடங்களுக்கு முந்தியே ஸ்திரீகளுக்கு நரை வரத் தொடங்குகின்றதென்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் புருஷருக்கே அதிக கவலை யென்றநேகர் அபிப்பிராயப்படுவார்கள் போலும்.

50,000 பவுன் சம்பளம்.—இப்பெருந் தொகை அமெரிக்க ஐக்கியமாகாணக் குடியரசின் பிரசிடண்டாகிய டாக்டர் வில்சன் என்பவரின் வருஷ சம்பளமாகும். சாப்பாட்டுக்கும் உடுப்புக்கும் இன்னு மற்றவைகளுக்கும் அவர் 36,000 பவுன் செலவிடுகிறாராம்.

பணமிருந்தால்தான் பத்தும் செய்யலாம்.—அமெரிக்காவில் பணச்செருக் கதி

கம். அங்கே விசித்திரமான வேலைகளெல்லாம் செய்கிறார்கள். சமீபத்தில் அவ்விடத்தில் 100 அடி நீளமுள்ள ஓர் ரயில் என்ஜின் செய்யப்பட்டது. அது 200 ரயில் வண்டிகளை இழுத்து செல்லுகின்றதாம். இந்த வண்டித்தொடர் 1½ மைல் நீளமுள்ளதா யிருக்கிறபடியால் இது பிரயாணிகளுக்குப் பிரயோசனப்படுமோ வென்பது எம்முடைய கேள்வி.

ஜெனரல் ஷேர்மன் மரம்.—இம்மரம் நாலாயிரம் வருஷத்து மரம். இது அமெரிக்காவிலுள்ள கலிபொர்னியாவிலுள்ளது. நமது கர்த்தர் பிறந்தபோது இது இரண்டாயிர வருஷத்து மரமென்று கணக்கிடப்பட் டிருக்கின்றது. 1879-ம் ஆண்டில் முதல் முதல் இம்மரத்தை வல்வேர்டன் என்பவர் கண்டுபிடித்து, இதற்கு ஜெனரல் ஷேர்மன் என்று பெயரிட்டார். அதன் உயரம் 279¾ அடி; 100 அடி உயரத்துக்குமேல் அதன் சுற்றளவு 17½ அடி. இதனால் அதன் அடிமரம் எவ்வளவு பிரமாண்டமா யிருக்கவேண்டுமென சுலபமாய் யூகித்துக்கொள்ளலாம்.

"வேண்டாம்," "போதும்"—சாப்பிடும்பொழுது பரிமாற இன்னும் ஆகாராதிகளைக் கொணர்ந்தால் சிலர் "வேண்டாம்" என்கிறார்கள்; சிலர் "போதும்" என்கிறார்கள். இவ்விரு வார்த்தைகளிலும் சரியான வார்த்தை அல்லது பொருத்தமான வார்த்தை "போதும்" என்பதே. போதும் என்பது திருப்தியைக் காட்டுகின்றது. வேண்டாம் என்பதோ வெறுப்பைக் காட்டுகின்றது. இவ் வார்த்தைகளின் பொருள் இப்படியா யிருக்க, இதை யறியாமலும், அறிந்தும் கவனியாமலும் ஏறக்குறைய எல்லோருமே உபயோகிக்கிறார்கள். ஆயினும் இவ்விரு பதங்களுக்குமுள்ள வித்தியாசத்தை யறிந்து "போதும்" என்னும் சரியான பதத்தை யுபயோகிப்பதே நன்று.

ஓர் அக்கிரமம்.—உதகமண்டலத்தில் முஹரம் பண்டிகைத் தினமன்று கிறீஸ்துவ பிரேதமொன்றை சேமிக்க கல்லறைத் தோட்டத்துக் கெடுத்துச் செல்லுகையில் சில மகம்மதியர் குழப்பஞ் செய்து கிறீஸ்துவர்கள்மேல் விழுந்து அவர்களை அடித்து 11 பேரைக் காயப்படுத்த அவர்கள் இப்போது வைத்தியசாலையில் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறார்கள். இவ்வளவு மதபேதமாத்திரமல்ல, இன்னும் ஜாதிபேதமுமுள்ள நம்முடைய தேசத்துக்கா "ஹோம்ரூல்" கொடுக்கவேண்டும்!

பரிசுத்த பாப்பரசரும் திருவாங்கூர் மகாராஜாவும்.—திருவாங்கூர் மகாராஜா சமீபத்தில் தம்முடைய ஜனனத்தின் 60-வது வருடாந்தரநாளைக் கொண்டாடினாரென்றும், அப்போது நம்முடைய பரிசுத்த பிதா 15-ம் ஆசீர்வாதப்பர் மகாராஜா அவர்களை வாழ்த்த, தமது கரங்களாலேயே சுபசோபன திருமுகமொன்றெழுதி, அதைக் கண்டியிலுள்ள தம்முடைய ஸ்தானாதிபதியாகிய புமசோனி ஆண்டவரவர்களுக்கனுப்ப, அவர் திருவாங்கூர் சென்று மகாராஜா அவர்களுக்கதைச் சமர்ப்பித்தாரென்றும் சென்றமாதப் பத்திரிகையில் நாம் செப்பியுள்ளோம். பின்வருவதே அத்திருமுகம்.

மகா சாந்த சித்தமுள்ள அரசே,

பதினைந்தாம் ஆசீர்வாதப்பரென்னும் பாப்பானவராகிய நாம் தங்களுக்கு சகல சுக செல்வங்களும் பெருகவேண்டுமென்று சோபனங் கூறுகிறோம். தங்களுடைய ஜனனத்தின் 60-ம் வருட கொண்டாட்டம் நெருங்கி வருகிறதென்று நாம் கேள்வியுற்றபடியினால், அந்தச் சுபதினத்தில் மிகுந்த மனவாஞ்சையோடு தங்களுக்கு மங்கலமொழிகள் கூறி, தங்களுடைய பிரஜைகளின் சந்தோஷ மகிழ்ச்சியில் நாமும் பங்கு பெறுவது சரியென்றெண்ணுகிறோம். ஏனெனில் நெடுங்காலம் அப்பிராந்தியங்களில் அப்போஸ்தலிக்கு ஸ்தானாதிபதியா யிருந்த எமது சங்கைக்குரிய சகோதரராகிய பிதாப்பிதா லாடிஸ் செலஸ்கியானவர் தங்களைப் பற்றி பெருமையாகவும் புகழ்ச்சியாகவுஞ் சொல்லியிருப்பதுமன்றி தங்களுடைய அரசாட்சியிலுள்ள கத்தோலிக்கர்மட்டில் தாங்கள் காட்டுகிற நீதியையும் அன்பையும் விசேஷமாய் எமக்கெடுத்துக் காட்டியுமிருக்கிறார். ஆகையால் நாம் தங்களுக்கு நன்றியறிந்திருப்பதுடன், கத்தோலிக்கரைப் போல உத்தமரும் அதிக இராஜபக்தியுள்ளவர்களுமான பிரஜைகளைத் தாங்கள் காண்பதில்லையென்றும் இனி காணப்

போவதில்லையென்றும் நிச்சயிக்கிறோம். இப்படியே இவர்கள் எப்போதும் இருக்கும்படி நாம் புத்தி சொல்லிவருவோம். நமக்கு விசேஷ சந்தோஷத்தைக் கொடுப்பது யாதெனில், தாங்கள் மேற்றிராணிமார்களின் அதிகாரத்துக்கு ஆதரவாயிருந்து வருகிறீர்களென்பதேயாம். இதனால் தங்களுக்குள்ள ஞானம் விளங்குகின்றது. ஏனெனில், வேதமானது அரசாங்கத்தின் பலமுள்ள காவலாளி. ஆகையால் வேத அதிகாரத்தை மீறி நடப்பது இராஜ அதிகாரத்தை மீறுவதற்கு நேரான வழியாகின்றது. தாங்கள் மேற்றிராணிமார்கள் மட்டிலும் கிறீஸ்துவர்கள் மட்டிலும் அன்பார்ந்தவரா யிருந்தபோதிலும், அவர்களைத் தங்களுடைய விசேஷ கருணைக்குள்ளாக்கிக்கொள்ள கேட்டுக்கொள்ளுகிறோம். சகல சுகபாக்கியங்களுமுமக்குண்டாவதாக. சர்வ வல்லபமுள்ள கடவுள் தங்களுக்கு நீடிய ஆயுளை அளித்து, தங்கள் பேரிலேயுந் தங்கள் குடும்பத்தார் பேரிலேயும் தம்முடைய ஆசீரை பொழிந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

இஃது ரோமாபுரி அர்ச். இராயப்பர் ஆலயத்தில் 1917ஞு ஜூலைமீ 10உ நம்முடைய ஆளுகையின் 3-ம் வருஷத்தில் எழுதிக்கொடுக்கப்பட்டது.

15-ம் ஆசீர்வாதப்பர், பாப்பானவர்.

ருஷியா.—இத் தேசத்தில் "உக்ராயினா" வென்னும் ஓர் பெரிய நாடுண்டு. இந்நாட்டின் பல பட்டணங்களிலுமுள்ள பிரிவினைக்காரர் கூட்டங் கூட்டமாய் கத்தோலிக்கராகி வருகிறார்கள். கடந்த இரண்டு வருஷ காலமாய் ருஷியா சக்கரவர்த்தியின் அநீத உத்தரவினால் சிறைப்படுத்தப்பட்டு, தற்போது விடுதலையாயிருக்கும் செப்டிக்கி அதிமேற்றிராணியாரால் ஷை உக்ராயினா நாட்டுக்கு மேற்றிராணியாராக அந்நாட்டின் குருவானவராகிய ஒருவர் அபிஷேகஞ் செய்யப்பட்டிருக்கிறார். இப்படி ருஷியாவிலுள்ள பிரிவினைக்காரார் ஏராளமாய்ச் சத்தியவேதத்திற் சேர்ந்து வருவதினால் அத்தேசம் கத்தோலிக்குத் தேசமாகுமென்று நம்ப இடமுண்டு.

இன்னோர் மனந்திரும்பல்.—இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் கலாசாலையில் பேர்போன சாஸ்திரி யொருவரிருந்தார். அவர் அவிசுவசியாயினும் அவருடைய மனைவி கத்தோலிக்குக் கிறீஸ்துவள். இவள் தன் கணவனுடைய மரணத்துக்குப் பிறகு தன் மக்கள் நான்கு பெயரையும் கத்தோலிக்குச் சபையிற் சேர்ப்பித்தாள். இவர்களுக்குக் கல்விகற்பித்து இக்குடும்பத்துக்கு ஓர் ஆத்தும குருவைப்போலிருந்த பாதிரியாரும் மனந்திரும்பி கத்தோலிக்கரானார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

ஜனன அறிக்கை.

வாலாஜாநகர்.

என தன்புள்ள பந்துமித்திரர்கட்கு அதிக சந்தோஷத்தோடு தெரிவிப்பதாவது, சென்னை வாலாஜாநகர் மேரிகாஸ்டலின் வாசியும். M. & S. M. ரயில்வே செண்ட்ரல் ஸ்டேஷன் ரிப்பர்ஷ்மெண்ட் ரூம் மானேஜருமாகிய ஸ்ரீமான் டேவிட் ஞானாதிக்கம் பிள்ளை யவர்களின் சிரேஷ்ட குமாரன் கனம். D.G. அருமைதாஸ் பிள்ளை யவர்களின் மனைவியும், உதகமண்டலம் போலீஸ் ஆபீஸர் ம-ா-ா-ஸ்ரீ A. அந்தோனிமுத்து பிள்ளை யவர்களின் குமாரத்தியுமாகிய லில்லி ஆரோக்கியமரியம்மாள் திருக்குடும்ப தயவால் கி. பி. 1917ஞு செப்டம்பர்மீ 26உயாகிய புதவாரத்தில் பெற்ற முதற்பேறான குமாரத்திக்கு நிகழ்வருடம் அக்டோபர்மீ 7ந் தேதியாகிய ஆதிவாரமன்று ஷை வாலாஜா நகர் அர்ச். காணிக்கை உபகார மாதாவின் ஆலயத்தில் மிகவும் வந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணி ஆண்டவரால் நிறைவேறிய பெரிய பாட்டுப் பூசை சமயத்தில் மிஸ்ட்ரஸ் அண்ட் மிஸ்டர் Nott அவர்கள் ஞானதாய் தந்தையராக குழந்தையை ஏந்தி நிற்க வந்திக்கத்தக்க வைக்கர் ஜனரல் அவர்களால் லில்லி ஆக்னஸ் என்று அபிதானஞ் சூட்டப்பட்டு, பிறகு வாத்திய கோஷ்டத்தோடு ஊர்வலம் வந்து ஜெபாராதனை முடிந்த பின் அங்கு விஜயமான

சில கனதனவான்களால் குழந்தை லில்லியம்மாளுக்கு பல பரிசீயப்பட்டு யாவராலும் ஆசீர் கூறியபின் விருந்தோம்பல் முடியவும் கடைசியில சென்னை கிறீஸ்டியன் காலேஜ் புரபசர் அசிஸ்டண்டாகிய மிஸ்டர் கண்ணுசாமி பிள்ளை அவர்களால் ஆங்கில பாஷையில் வெகு இனிமையாக உபந்நியாசிக்கப்பட்டபின் யாவருக்கும் மாலை சூட சபை கலையப்பட்டது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

குழந்தையி னிளைய மூதாதை

நாகை அ. பி. சீமோன் பிள்ளை,

தர்மகர்த்தர்.

நன்மரண அறிக்கை.

பெங்களூர்.

" மரித்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுவது பரிசுத்தமும் பிரயோசனமுமுள்ள எண்ணம்" (11 மக்கபே, 12-46.)

மேலோர் புகழும் வேலூரம்பதி அர்ச். ஆரோக்கியமாதா கோவில் வீதியின்கண் வாழ்ந்த கனம் மலையப்பபண்டாரம் அவர்கள் அருந்தவப் புதல்வியும்! சித்தூர் ராணிப்பேட்டையின்கண் வசித்த கனம் பிரான்சீஸ் சவேரியப்பப் பிள்ளை அவர்களுத்தம பத்தினியும், கோலார் ஸ்வர்ண வயல் அர்ச். அன்னம்மாள் மதுவிலக்கு சபை கவுன்ஸிலரா யிருந்து தற்போது பெங்களூரில் வசிக்கும் கனம் F. C. தம்புசாமி பிள்ளை யவர்கள் அருமை அன்னையாருமாகிய ஸ்ரீமதி மரியம்மாள், பூலோக சுகபோகமாகும் இல்லற தர்மத்திலீடுபட்டு 5 ஆண் மக்களையும், 5 பெண் மக்களையும், 30 பௌத்ர பௌத்திரிகளையும், 6 பௌத்திரிகளின் மக்களையுங் காணவுங் கைகளிலேந்தவும், மூன்று தலைமுறை காணும் பாக்கியம் பெற்று, 85-வது வயதாகும் முதிர்ந்த வயதில், ஏற்கனவே மரணத்துக்காயத்தமாய்ப் பாவப் பொறுத்தல் அவஸ்தைப் பூசுதல் முதலிய கடைசி தேவத்திரவியானுமானங்களனைத்துங் குறையறப் பெற்று 1917ளு செப்டம்பர்மீ 26௳ புதவார மஸ்தமனம் 4 மணிக்குத் தன் மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் புடைசூழ யாதோரற்ப மரணவேதனையுமின்றி கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். அடுத்த நாள் வியாழக்கிழமை மாலை அர்ச். காணிக்கைமரி யாலயத்தில் சங்: இராஜரிஷி A. ருத்திரோ குருஸ்வாமியவர்களால் மந்திரிக்கப்பெற்றபின் சகல ஆடம்பரத்துடன் கல்பள்ளி கல்லறையில் சகல பந்து மித்திரர்கள் புடைசூழ பூஸ்தாபகஞ் செய்யப்பட்டது.

என் பாட்டியாரின் ஆத்துமம் நித்தியத்திலிளைப்பாற இதைக்காணும் அன்பர்கள் தங்கள் கடன் ஜெபங்களில் நினைவு கூரப்பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பாட்டியாரை யிழந்த பௌத்ர சம்பந்தம்,

பிளாக்பள்ளி }
பெங்களூர். } S. G. தேவ நேசன்.

பழயகாயல்.

"மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பிரயோசனமுமுள்ள எண்ணம்."
11. மக்காபே. 12—46.

எனது பிரிய மனைவி மரிய கிறிஸ்தினுள் தமேல் காய்ச்சல் வியாதியால் பீடிக்கப்பட்டு, பலவித வைத்திய சிகிச்சைகள் செய்தும் குணமடையாது கனம் சி. இ. கொலே ஸ்வாமிகள் கையால் கடைசி நன்மை, அவஸ்தைப் பூசுதல் முதலிய தேவத்திரவிய அநுமானங்களை குறையறப் பெற்று, தனது பிரிய பத்தாவாகிய என்னையும், தன் தந்தை, தாய், சகோதரர் சகோதரியையும் மற்றும் பிரிய இன பந்துக்களையும் மிகுந்த துக்கத்திலாழ்த்தி விட்டு, தனது 24-வது பிராயத்தில் சென்ற ஆகஸ்டு மாதம் 12௳ காலை 11-மணிக்கு தனது ஆத்துமத்தை கர்த்தருக்கு ஒப்படைத்தனள். இதைக்கண்ணுறும் கத்தோலிக்கு சகோதரர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இங்ஙனம்,

மனைவியை இழந்து துன்புறும்.

நசரேத்து பேர்னந்து விக்டோரியா.

தூத்துக்குடி.

எனது சிரேஷ்ட சகோதரியின் ஏகபுத்திரனுகிய ஒன்பதுமாதக் கைக்குழந்தை தாமஸ் கயித்தான் பொம்பை ரொசாரி நாளது மாதம் 3௳ புதன்கிழமை தூத்துக்குடியில் குக்கல் என்னும் வியாதியால் இறந்தானென்று தந்தி மூலமாக அறிந்து சொல்லொண்ணு கஸ்தி யடைந்தோம். இக் கைக்குழந்தை இறக்குந் தறுவாயில் நானாவது எனது புருஷராவது அல்லது குழவியின் தந்தையராவது அருகி லிருக்கும்படியான பாக்கியம் கொடுத்துவைக்கவில்லையாதலின் மிகவும் மனங் கசியலானோம். ஆதலின் இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகள் பந்துமித்திரர்கள் முதலியோர் இக்குழந்தையின் பெற்றோருடைய மன ஆறுதலுக்காக வேண்டிக் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

கேகாலை }
4-10-17 } மகனை இழந்து பரிதவிக்குஞ்சிறிய தாய்
ரோசாலி அம்மாள் கோறேறு.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை. மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில், ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23௳ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, }
சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,544	7	6
Mr. A. டேவிட் (பாக்டாட்)	5	0	0
,, மிக்கேல். பட்லர் (மதுரை)	1	8	0
,, Suell	3	0	0
,, அந்து (மொசொப்பொடேமியா)	5	0	0
,, P. அந்தோனி (குவாலாலம்பூர்)	5	4	0
சௌ. அற்புதமரியம்மாள் (பெங்களூர்)	10	0	0
ஆக மொத்தம்,	4,574	3	6

சென்னைப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னைப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத் தொகையைக் கொண்டும். கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,178	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (அக்டோர்மீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,208	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
Vicar, Assumption Church,
North Georgetown,
Madras, E.

“அம்மாஸ்” குழலழகி.

கூந்தல் வளரச்செய்வதற்கும் ஸ்நானம் செய்வதற்கும் (இரண்டிற்கும்) உபயோகமுள்ளது. “அம்மாஸ்” குழலழகி என்னும் பரிமள தைலத்தை உபயோகித்துவர. அது ஆதாரமாகிய மூளை, கண், காது, கண்புகைச்சல், கண்ணெரிச்சல், தலைசுற்றுதல், ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், மேகஊரல், ஜன்னி முதலியவைகளும் தீர்ந்துவிடும்.

நாலு அவுன்ஸ் புட்டியின் விலை ரூ. 1—4—0.

“அம்மாஸ்” ஜீவாதாரக் குளிகை.

இயற்கைப் பலவீனத்தாலோ, மிதமிஞ்சின உழைப்பு, விருத்தாப்பியம் முதலியவைகளால் நேர்ந்த தளர்ச்சியாலோ, ஏங்கி நிற்பவர்கள் இந்த “அம்மாஸ்” ஜீவாதாரக் குளிகையை உட்கொண்டு வந்தால் கிழத்தனத்தையும் நரைதிரைகளையும் மாற்றிக் கிழவரையும் குமாரராகச் செய்யவல்லது. இது உண்மை. பரிட்சித்துப் பாருங்கள். (பத்தியமிடையாது.)

36 குளிகையின் விலை ரூ. 3 0 0

“அம்மாஸ்” அஜீரணவைரி.

அஜீரணமுடையவர்களுக்கு இது கைகண்ட ஔஷதம். இந்த “அம்மாஸ்” அஜீரணவைரி என்னும் பரம ஔஷதத்தை உட்கொண்டு வந்தால் பசிதீபனத்தை உண்டாக்குவதற்கு சிறிதும் சந்தேகமில்லை. இதற்கு மிஞ்சிய ஔஷதம் கிடைப்பதரிது.

16 வேளை ஔஷதம் கிரயம் ரூ. 1 8 0

“அம்மாஸ்” பிரமேக நிவாரணி.

வெள்ளையென்னும் கள்ளநோய் தீரவேண்டுமெனில், “அம்மாஸ்” பிரமேக நிவாரணியை உட்கொண்டுவரவும். நம்மை யாட்டிப்புடைக்கிற தந்திமேகம், நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், மஞ்சள் வெள்ளை, தாபச் சுரம் முதலிய கொடிய ரோகங்கள் அனைத்திற்கும் இது மெத்த அநுபவமான கைகண்ட ஔஷதம். பத்தியம் இடையாது.

24 வேளை ஔஷதம் விலை ரூ. 3 0 0

“அம்மாஸ்” ரிங்வர்ம்கியூர்.

தேக மாதியந்தமும் படர்ந்து, சதா சகிக்க முடியாத தினவையும் ஓயாச் சொறியையும் உண்டாக்கும் படைத்தேமலை அழிப்பதற்கு “அம்மாஸ்” ரிங்வர்ம்கியூர் கைகண்ட வைரி.

புட்டி 1-க்கு அணா 8.

☞ அம்மா அண்டு கம்பெனி,
26, சவுரிமுத்து தெருவு,
மண்ணடி, மதருஸ்.

ஓர் புட்டி உன் சந்தேகத்தை நீக்கும்.

ஓர் அமெரிக்க ரசாயன சாஸ்திரியின் நவீனம்.

உன் வலி எந்தமாதிரியா யிருந்தபோதிலும் உடனே நீங்கும். முதல் ஓர் புட்டி வாங்கிப்பார். பிறகு அநேகத்திற்கு எழுது. இதுவரை ஆயிரக்கணக்கான எல்லாவித வலியினால் வருந்தினவர்களையும் குணமாக்கியுள்ளது. உன்னையும் குணப்படுத்துமென்பதற்கு சந்தேகமில்லை. மிருகக் கொழுப்பினால் செய்த மருந்துகளை வாங்கி உடம்பை பாழ்செய்கிறார்களென்று ஒரு சாஸ்திரி அறிவிக்கிறார்.

கியூரோ மென்ட்

என்னும் தைலமே எல்லாவற்றிற்கும் மேலானது. முழுதும் மூலிகை சத்துக்களால் கூட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 0—12—0 தான்
போஸ்டேஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன், சோல் ஏஜண்டுகள் :—

வில்லியம் & டாசன்,
G. T., மதராஸ்.

சப் ஏஜண்டுகள் தேவை.

குடியர்களை குணமாக்கும் அற்புத

“லிக்கோரின்.” “Likkorin.”

“லிக்கோரினை” எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் இரகசியமாகத் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் கள்ளையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பயனுக்கும் உத்தரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30 வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஓரே புட்டி போதுமானது. யாதொரு கெடுதியும் செய்யாதது. 40-நாள் சாப்பிடக்கூடிய “லிக்கோரின்” புட்டி விலை ரூபா 3—0—0. தபால் கூலி முதலியவை அணா 5, பிரத்தியேகம்.

ஆங்கிலோ இண்டியன் டிரக்ஸ் கம்பெனி,
ஈரோடு, தென் இந்தியா.

Anglo Indian Drugs Co.,
Erode, South India.

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்.” (அரு. 10:11-16.)

புத்தகம் 15. } டிசம்பர் 1917. { இலக்கம் 12.

THE FEAST OF XMAS.
கர்த்தர் பிறந்த திருநாள்.

ஓர் மடத்தில் சந்நியாசியார் ஒருவர் இருந்தார். இவர் கர்த்தர் பிறந்த திருநாளன்றும் அதற்கு முந்தின நாளன்றும் மற்ற சன்னியாசிமார்களைப்போல் மனக் கிளர்ச்சியும் முகமலர்ச்சியுங்கொண்டு சந்தோஷமாயிராமல் ஏதோ மனோசங்கடம்படுகிறவரைப்போல் துக்க முகத்தோடிருப்பார். கிறீஸ்துவ உலக மடங்களும் கர்த்தர் பிறந்த திருநாளின் நிமித்தம் அக்களித்து ஆனந்திக்க இவர் மாத்திரம் இவ்வாறு துயரமுற்றிருப்பதேனோவென்பதைக் கவனித்த மற்ற சந்நியாசிமார்கள் ஆச்சரியமுற்று, அதன் காரணத்தை அவரிடமிருந் தறிய அவரை வினவினார்கள். அதற்கவர் சொன்ன மறுமொழியாவது: “மன்னருடையவும், பிரபுக்களுடையவும், இன்னும் சொல்லவேண்டுமானால் சாமான்னிய ஜனங்களுடையவும் குழந்தைகளின் ஜனனத்திற்காக எவ்வளவோ முன் ஜாக்கிரதையெடுத்துக்கொள்ளப்படுகிறது; எத்தனையோ ஆயத்தப்பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன. மேலும் பிறந்த குழந்தை தன் உற்றார் உறவின் முறையார் முதலானோருடைய ஆதரவையும் உதவியையும் உடனே கிடைக்கப் பெறுகின்றது. ஆனால் நம்மாண்டவரான குழந்தை யேசுநாதர் பிறந்தபோது இத்தகைய சௌகரியங்களையும் பராமரிப்பையும் கிடைக்கப்பெற்றாரோ? இல்லையல்லவா? இவரோ இராசாதி இராசர், ஆண்டவருக் காண்டவர்! ஆயினும், இவர் எல்லோராலும் கைநெகிழப்பட்டு, பிறக்க முதலாய் இடமின்றி ஏழையிலும் ஏழையாய் ஓர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தாரன்றோ? நமது இரட்சண்ணியத்துக் கத்தியாவசியமான தாழ்ச்சியையும் தாரித்திரத்தையும் தம்முடைய போதனையாலும் சாதனையாலும் நமக்குப் படிப்பிக்குமாறு இவர் இக்கோலமாய்ப் பிறந்திருக்க, இவரைப் பின் செல்லவேண்டியவர்களான கிறீஸ்துவர்களுக்குள் அநேகர் இப் புண்ணியங்களைச் சிறிதும் சட்டை பண்ணாமல் உலகப் பெருமையையும் அதன் சுக செல்வங்களையுமே நாடிச் சீவிக்கிறார்களென்பதை நான் நினைவுகூர்ந்துகொள்கையிலும், இவ்விரண்டு புண்ணியங்களையும் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் விளக்கிக்காட்டும் இவருடைய ஜனனோற்

சவத்தைக் கொண்டாடுங் காலத்தில் முதலாய் அவர்கள் அப் புண்யங்களை நினைவு கூர்ந்துகொள்ளாமல் இலௌகிக விதமாய் அதைக் கொண்டாடுகிறார்களென்பதை நான் சிந்திக்கையிலும் ஆ! எனக்குப் பெரிதும் துக்கமுண்டாகிறதே ” யென்றார்.

சமீபித்து வரும் கர்த்தர் பிறந்த பண்டிகையைக் கிறீஸ்துவர்கள் எவ்விதங் கொண்டாடக்கடவார்களென்பதை மேற்சொன்ன வர்த்தமானம் விவரித்துக்காட்டுகின்றது. கிறீஸ்துவர்களான நமக்குக் கர்த்தர் பிறந்த திருநாள் மகா பெரிய திருநாளென சொல்லாமலே விளங்கும். இத் திருநாளை நாம் எவ்வளவு ஆடம்பரமாயுஞ் சிறப்பாயுங் கொண்டாடக்கூடுமோ. அவ்வளவு ஆடம்பரமாயுஞ் சிறப்பாயுங் கொண்டாட வேண்டுமென்பதும் நியாயமே. ஆனால் கிறீஸ்துவர்களுக்குள் அநேகர் இத் திருநாளைக் கொண்டாடும் விதத்தை உன்னியோசிக்கையில் ஷெ சந்நியாசியாரைப்போல் நாம் விசனத்துக்குள்ளாக வேண்டியதாயிருக்கிறது. அதெப்படியெனில், இத் திருநாளன்று கிறீஸ்துவர்களிற் சிலர் தங்களுக்குள்ள பேர் பெருமையையும், சீர சிறபபையும் தங்களுடைய நடை, உடை, பாவனையிலும், இன்னுமற்ற ஆடம்பரத்திலும் காண்பிப்பதிலேயே விசேஷ கருததுள்ளவர்களாயிருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் கர்த்தர் பிறந்த திருநாளன்று சநதோஷமாயிருக்கவேணடுமென்றெண்ணி பலவகையான பலகாரங்களையும் பத்தெட்டு வகை பதார்த்தங்களையும் செய்துவைத்துக்கொண்டு மட்டுக்குமிஞ்சி உண்டு குடித்து உல்லாசிக்கிறார்கள். வேறு சிலர் அன்றையத்தினம் பூசைகாண முதலாய்க் கோவிலுக்குப் போகாமல், பாட்டுக்கச்சேரி, பஜனை முதலிய ஆர்ப்பாட்டங்கள் செய்வதிலேயும், வீதி வீதியாய் வீடுகள் தோறுஞ் சென்று ஆடுவதிலும் பாடுவதிலும் அலுவலாயிருக்கிறார்கள். சிலரோ வருஷததுக்கோர் நாளென்று சொல்லி தஙகள் பந்து மித்திரரைப்போய்ச் சந்திப்பதிலேயோ, அல்லது அவர்களைத் தங்கள் வீட்டுக்கு வரவழைத்து விருந்து செய்து விருந்துண்பதிலேயோ, ஈகைக ளளிப்பதிலேயோ வேலையாயிருக்கிறார்கள். இவர்களும் இப்படிச்செய்யத் தவறுவார்களேயானால், அன்னோர்கள் வருஷத்துக்கோர் நாளாயிருந்தும் தங்களுக்கு அன்றையத்தினம் செய்யவேண்டிய மரியாதை செய்யவில்லையேயென்று இல்லாத குறையெல்லாங் கூறுவார்கள். சாதாரணமாய் ஞாயிறுவாரங்கள்தோறும் திவ்யபூசை காண தத்தம் விசாரணை கோவில்களுக்குப் போகும் சில கிராமவாசிகள் இப்பண்டிகையன்று தங்கள் கோவில்களில் ஆடம்பரஞ் செய்யும்பொருட்டு அன்று தாங்கள் காண வேண்டிய கடன் பூசையை முதலாய்க் காணப்போகாமல் இருந்துவிடுவார்கள். இப்படியாக எத்தனையோ கிறீஸ்துவர்கள் இத் திருநாளில் இலௌகிக சந்தோஷத்தை நாடி இலௌகிக விதமாய் இந்துக்கள் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவது போல் இதைக் கொண்டாடி ஞானப் பிரயோசனமடைய கவலை கொள்ளார்கள். சில கிறீஸ்துவர்கள் இவர்களைப்போல் இத் திருநாளைக் கொண்டாடாமல் ஞான விதமாய்க் கொண்டாடுகிறார்களென்பது வாஸ்தவமே. ஆயினும், அவர்களும் உண்மையில் இத் திருநாளை சரியான விதமாய்க் கொண்டாடுகிறவர்களல்ல. அவர்கள் திருநாளன்று எப்படியாவது திவ்ய பூசை காண்பார்கள், இன்னும் பாவசங்கீர்த்தனஞ் செயது திவ்யநற்கருணை உட்கொள்வார்கள். அன்றியும் சில பக்தி முயற்சிகளையுஞ் செய்வார்கள். என்றாலும், இந்த நற்கிருத்தியங்களைச் சுத்த கருத்தோடு அனுஷ்டியாததினாலேயோ, வழககத்தை யனுசரித்து அவைகளைச் செய்வதினாலேயோ தங்களுக்கு நிலைவரமான யாதோர் ஞானப்பலனையுங் கண்டடையாமற் போகிறார்கள். ஆனபடியால் இவர்களெல்லோரும் கர்த்தா பிறந்ததிருநாளைக் கொண்டாடவேண்டிய முறைமையோடு கொண்டாடுகிறவர்களல்ல.

அப்படியானால், இத் திருநாளைக் கொண்டாடவேண்டிய விதமென்ன? இத் திருநாளன்று நாம் செய்யும் பக்திக்கிருத்தியங்களை ஆத்தும சுத்தியோடும் உருக்கத்தோடும் செயவதோடு கூட 'அவைகளை ஓர் விசேஷ நோக்கத்தோடும் செய்யக்கடவோமாக. அஃது யாதெனில், மாட்டுக்கொட்டிலிற் பிறந்த குழந்தை யேசுநாதர் நமக்குப் போதிக்கும் தாழ்ச்சியையும் தாரித்திரத்தையுங் கண்டு பாவிக்க கற்றுக்கொள்வதேயாம். தாழ்மையும் எளிமையுமே 'கர்த்தருடைய ஜனனத்தின் வைபவம். அவைகளே அத் தேவ குழந்தையின் சிறப்பும் மகத்துவமும். அவைகளைக் கொண்டே அவர் உலக இரட்சண்ய அலுவலை ஆரம்பித்தார். அவைகளைக்கொண்டே அவ்வலுவலை முடித்தார். அவைகளைக் கொண்டே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இரட்சண்ணியத்தை யடைய கடமைப்பட்டிருக்கிறோம். தாழ்ச்சியையும் தாரித்திரத்தையுந் தேடாத எவனும் இரட்சண்ய மடையானென்பது திண்ணம். தாழ்ச்சியும் தாரித்திரமும் எப்படி ஞானசீவியத்துக்கு அஸ்திவாரமாயிருந்து ஆத்தும ஈடேற காரணமாயிருக்கின்றனவோ, அப்படியே ஆங்காரமும் ஆஸ்திபாஸ்தியும் சகல அக்கிரமங்களுக்கு அஸ்திவாரமாயிருந்து ஆத்தும நித்திய கேட்டை யடையச்செய்கின்றன. உலகத்தில் சமாதானமும் சந்தோஷமும் ஒழிந்து, கலகமும் குழப்பமு முண்டாகவும், கடும்போர் நிகழவும் காரணமென்ன? மகிமை பெருமையும், சுயாதீனப் பிரியமும், மிதமிஞ்சின பொருளாசையு மல்லவா? குடும்பங்களில் சண்டை சச்சரவும், மனவருத்தமு முண்டாவதேன்? குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் சுயநலத்தை நாடி சொத்து சுதந்தரந் தேடிக்கொள்ள வேண்டுமென்கிற பணவாசையைப்பற்றியும், பெரியவர்களுக் கடங்கி நடக்கப் பிரியங்கொள்ளாததைப்பற்றியும், தனக்கு மிஞ்சினவர் இல்லையெனும் தான் என்கிற ஆண்மையைப்பற்றியுமேயாம். இப்படி ஆங்காரமும் பணவாசையும் நமது ஆத்தும இரட்சண்ணியத்துக்குப் பலவிதத்தில் இடறலாயிருப்பதினால்' நம்மை இரட்சிக்க வந்த குழந்தையேசுநாதர் இரட்சண்ணியத்தின் சாதனங்களாக பிரயோகித்துக்கொண்ட தாழ்ச்சியையும் தாரித்திரத்தையும் நாமும் அனுசரிக்கும்படியான தேவானுக்கிரகத்தை யடையுங் கருத்தோடு இத் திருநாளைக் கொண்டாடுவோமாக. ஆகையால் அன்று நாம் காணும் திவ்யபூசை, வாங்கும் திவ்யநன்மை, அனுசரிக்கும் மற்ற பக்திக்கிருத்தியங்கள் இவைகளின் மூலமாய் இந்த தேவானுக்கிரத்தை யடைய முயலுவோமாக.

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி.)

இது நடந்த சிறிது காலத்துக்குப்பின், துர்நடத்தையால் சீர்குலைந்து வைத்திய சாலையில் சிகிச்சை செய்யப்பட்டு வரும் நிர்ப்பாக்கிய வாலிபப் பெண்களின் மனந் திரும்புதலுக்காகத் தன்னைக் கையளித்து அவர்களுக்காக உழைக்கவேண்டுமென்று அவள் புத்தியில் தெளிவாய்ப்பட்டது. தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவின திருநாளின் முந்தினநாள் மரி தனது டார்பீல்ட் பங்கு கோவிலுக்குச் சென்றாள். அங்கு பாவசங்கீர்த்தனம் செய்ய காத்துக்கொண்டிருக்கும்போது, “ நீ நல்ல ஆயன் சபையில் சேரவேண்டும் ” என்ற யோசனை அவளுடைய புத்தியில் பளிச்சென்றுதித்தது.

இதின் உண்மையைப்பற்றி மரி சற்றேனும் சந்தேகப்படவில்லை. பாவசங்கீர்த்தனம் செய்யத் தொடங்கினதும், “ நான் எங்கே போவதென்று எனக்குத் தெரியும், நான் நல்ல ஆயன் சபையில் தான் சேரவேண்டும்” என்று, குருவானவருக்கு அறிவித்தாள்.—அவர், தான் அதைப்பற்றி விசாரித்து பதிலளிப்பதாகப் பகர்ந்தார். மூன்று மாதங்களாயின. குருவானவர் தீர விசாரித்தபின் அவளுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார். கடைசியில் மரி இச்சங்கதியைத் தன் தாயாரிடம் சொல்லத்துணிந்தாள். ஆயினும் தன்னுடைய சரீர பலவீனத்தை முன்னிட்டும், தான் தெரிந்துகொண்ட துறவற சபையைப்பற்றியும் தன் தாய்க்கு இதை வெளிப்படுத்துவதில் என்ன தடைகள் வருமோவென்று கலங்கினாள். இதைப் பற்றி பேசுவதற்குமுன் தான் இப்போது மடத்திலுட்படுவதற்கு; தனக்குப் போதுமான தேகபலமும் சுகமும் உண்டோ இல்லையோவென்றறிய ஒரு வைத்தியருடைய ஆலோசனையைக் கேட்க தன் தாயாருக்கு முன்னெச்சரிக்கை செய்தாள். வைத்தியரும் தம் ஆலோசனையை வெளியிட்டார்.

மரி இன்னும் பலவீனமா யிருப்பதாகவும், கஷ்டமான வேலை செய்யத் தகாதென்றும், எல்லாம் அவள் உட்படுகிற சபையை யறிந்து கூற வேண்டுமென்றும், பிறர் சிநேக சபை என்று வழங்கும் துறவற சபையில் அவள் சேர்வது ஆட்சேபனைக்குரிய தென்றும், ஆனால் வெண்ணுடை சகோதரி (White Sister—நல்ல ஆயன் சபை சகோதரி) யாவதில் ஓர் விக்கினமு மில்லையென்றும் வைத்தியர் கூறலானார். மரியின் தாய் எதைப்பற்றியும் சமுசயப்படாமல் எந்த மடத்தி லுட்படுவது அவளுக்குப் பிரியமென்று தன் குமாரத்தியை வினவினாள். வெண்ணுடை சகோதரிகள் மடத்தி லுட்படத்தான் தனக்குப் பிரியம் என்று மகள் கூற, தாய் அதிசயப்பட்டாள். மரியின் தந்தையும் தாயும் அவளுடைய கருத்தை யறிந்து திருப்தி யடைந்தார்கள். இது மரிக்கு மெத்த மனோரம்மியமா யிருந்தது. தேவ மாதாவின் ஜெபமாலை மாதமாகிய அக்டோபர் மாதத்தில், மரி, நல்ல ஆயன் சகோதரிகள் சபையில் சேர்வதற்கான முஸ்திப்பு ஏற்பாடுகளை யெல்லாம் செய்துவிட்டாள்.

துறவற சபைகள் சிலவற்றில் எப்போதுமே அடைபட்ட ஜீவியம் ஜீவிக்கவேண்டும். அச்சபையார் மடத்தை விட்டு வெளியே செல்லார். வெளி மனுஷரோடு புழங்கவும், வெளி வேலைகளை செய்யவும் கூடாது. எல்லாம் மடத்துக்குள்ளேயே நடத்துவது அவர்களுடைய கண்டிப்பான ஒழுங்கு. தேவ தோத்திரங்களைப் பாடுவதே அவர்களுடைய முக்கிய அலுவல். துறவறத்தாரில் வேறு சிலர், மடத்துக்குள் ஜீவிப்பது மல்லாமல், ஆத்தும இரட்சண்ணிய காரியத்தை முன்னிட்டு, வெளியேயும் போய் ஜனங்கள் மத்தியில் பிறர் சிநேக வேலைகளைச் செய்வார்கள். மரி விரும்பிய நல்ல ஆயன் சபை முந்தின வகுப்பைச் சார்ந்தது. இது உலக சகவாசத்தை முற்றுமே ஒழிக்க அவளுக்கு ஏற்ற சாதனமா யிருந்தபடியால், இதை நினைத்து பூரிப்படைந்தாள். இந்த அடைபட்ட ஜீவியத்தால் தன் உற்றார் பெற்றார் சிநேகிதர் முதலியவர்களின் பற்றை வெறுத்து தன்னை ஒறுக்க வழியாயிற்றென்று சந்தோஷித்தாள். இந்தப் பரித்தியாகத்தால் தான் அனுபவிக்கப்போகிற கஸ்தி வருத்தங்கள் தன் கண்முன்பாக வந்து நின்றன. ஆனால் இதினால் அவளுடைய இருதயம் கலவரப்படவில்லை. ஏனென்றால் “துறவற ஜீவியம் பரித்தியாகச் ஜீவியம் என்றும், தான் நேசித்து வந்தவர்களுக்குப் பதிலாக சர்வேசுரனே என்னிருதயத்தில் வசிப்பார்” என்றும் மரி சொல்வாள்.

மன்ஸ்டர் நகருக்குக் கிழக்கே அதன் கடையெல்லையில் அர்ச். மௌரிஸின் (St. Maurice) பேர்கொண்ட ஓர் பழைய கோவிலருகில், செங்கல்லால் கட்டப்பட்ட மடம் ஒன்று வழி பிரயாணிகளின் கண்களுக்குத் தோன்றும். இங்கே பாவ நடத்தையால் அவமானப்பட்ட வாலிபப் பெண்கள் சுமார் 400 பேர் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். இவர்கள் பச்சாத்தாப சிந்தையுடன் இம்மடத்தை அடைக்கலமாய்த் தேடிவந்தவர்கள். அவர்களை இங்கு பாலர் என்று அழைப்பதுண்டு. இம்மடத்துக் கன்னியரின் கரிசனமான கண்காணிப்பில் இப்பாலர் தையல்வேலை, சித்திர தையல்வேலை, பின்னல்வேலை, வஸ்திரங்களை வெளுத்தல், இஸ்திரிபோடுதல் இவைகளைப் போன்ற பற்பல தொழில்களை நடத்தி வருவார்கள். இவ் வேலைகளைக் காற்று உலாவத்தக்க விசாலமான அறைகளில் அல்லது சாலைகளில் நடத்துவார்கள். இம்மடத்தில் எங்கும் அமைதியும் ஒழுங்கும் சமாதானமும் விளங்கும். மரி தெரிந்துகொண்ட இடம் இதுதான். இந்தப் பாலர் மத்தியில்தான் தன்னுடைய ஜீவியகாலத்தை செலவழிக்கத் துணிந்தாள். ஆத்துமங்களின் இரட்சண்ணியத்துக்காக ஓய்வு ஒழிவின்றி உழைக்க இவ்விடத்திலேதான் பழகினாள்.

நல்ல ஆயனின் சபையானது ஆதியிலே, வணக்கத்துக்குரிய ஜான் யூட்ஸ் (John Edues) என்பவர் 17-ம் நூற்றாண்டில் ஸ்தாபித்த பிறர் சிநேகத்தின் ஆண்டவளுடைய சபையின் கிளையென்றே சொல்லவேண்டும். இதில் அர்ச். அகுஸ்தீன் ஏற்படுத்திய ஒழுங்குகளும் விசிட்டேஷன் (Visitation) சபையாரின் சட்ட திட்டங்களும் அனுசரிக்கப்பட்டு வந்தாலும், இச்சபையார் தங்கள் ஸ்தாபகர் ஏற்பாட்டால் இடத்துக்கும் காலத்துக்கும் தக்காப்போல் சில விசேஷ ஒழுங்குகளை யனுசரிக்கக் கடன்மைப்பட்டவர்கள். விசிட்டேஷன் சபையார் தங்கள் மார்பின்மேல் தரித்துக்கொள்ளும் பாடுபட்ட சுருபத்துக்குப் பதிலாய் இச்சபையாருக்கு அவர்களுடைய பரிசுத்த ஸ்தாபகர் வெள்ளித் தகட்டால் செய்யப்பட்ட ஓர் இருதயத்தைத் தங்கள்மேல் தரித்துக் கொள்ள கட்டளையிட்டார். இவ்விருதயத்தின் மேல் தேவமாதா தம் திவ்யபாலனை ஏந்தியவண்ணம் ஓர் உருவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது

சேசுவினுடையவும் தேவமாதாவினுடையவும் இருதயங்களுக்கும் இந்தச் சபை கன்னியருக்கும் இருக்க வேண்டிய நெருங்கிய ஐக்கியத்தை அடையாளமாகக் காண்பித்தது.

வணக்கத்துக்குரிய ஜான்யூட்ஸ் என்பவரின் சபை கன்னியரில் சிறப்பும் சிரேஷ்டமும் பெற்றவள் வணக்கத்துக்குரிய பெல்லத்தியேர் மரி தாயார் (Mary Pelletier). முன் இருந்த பிறர் சிநேகத்தின் ஆண்டவளுடைய சபையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி புதியதோர் சபையை ஸ்தாபித்தாள். ஆகையால் இப்போது வழங்கி வருகிற நல்ல ஆயன் சபைக்கு அவளையே முக்கிய ஸ்தாபகி என்னலாம். வணக்கத்துக்குரிய ஜான்யூட்ஸ் ஏற்படுத்திய பிறர் சிநேக சபையின் மடங்கள் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு, ஒழுங்கு விஷயத்தில் மாத்திரம் பேத வித்தியாச மின்றி ஒரே தன்மை யுள்ளதாயிருந்தாலும், அவைகள் நடத்தப்படும் விஷயத்தில் ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாமல் தனித் தனியே பராமரிக்கப்பட்டு வந்தன—பெல்லத்தியேர் மரி தாயார் எல்லா மடங்களையும் ஒன்று சேர்த்து இணைத்தாள். தான் வசித்த ஆங்கெர்ஸ் (Angers) மடம்தான் தாய்மடம்—இம்மடத்திலிருந்துதான் மற்ற எல்லா மடங்களும் உயிரும் உற்சாகமும், பத்தி வேகமும் பெற்று பல தேசங்களிலும் பரவி செழித்தோங்கி வந்தன. 1888-ம் வருஷம் நவம்பர் மாதம் 21-ம் தேதி மரி துரோஸ்ட், தன் பாலிய பருவத்தின் மாளிகையைவிட்டு தான் தெரிந்துகொண்ட மடத்துக்குப் புறப்பட்டுப் போனாள். அவளுடைய பெற்றோரும், சகோதரிகளும், அவளை மடத்தில் விடுவதற்காக அவளுடன் சென்றார்கள்—மரி இதைப் பற்றி எழுதியிருக்கிறதாவது:—“மடத்தில் பிரவேசிப்பதற்கு முன் நாங்கள் அதின் கோவிலைச் சந்திக்கப்போனோம். அங்கு தேவநற்கருணை பீடத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. என்ன சந்தோஷம்! என் பத்தா, என் சேசு என்னை வர வீற்றுக்கொள்வதற்கு தமது இருதயத்தைத் திறந்த வண்ணமாய் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நானோ! திகைத்தேன். நன்றியறிதலால் என்னுள்ளம் பூரித்தது. என்னிருதயம் தேவ சிநேகத்தாலும், அவரை முழுதும் அநுபவித்து அவருக்கே முற்றும் சொந்தமாயிருக்கும்படியான ஆசையாலும் பற்றியெரிந்தது. சற்பிரசாதத்திலிருக்கும் சேசுவின் இருதயம் எனக்கு முன்னமே வழிகாட்டியாயிருந்தது. அநேக வருஷங்களுக்குமுன் அவர் என்னை அழைத்தார். இப்போது அவர், மடத்தின் ஆலயத்தில், நான் அவருடைய திவ்ய இருதயத்தின் பலியாகவும் பத்தினியாகவும்என்னையே பரித்தியாகம் செய்வதற்காக வேண்டி என்னை உபசரித்து நல்வரவுகூற அங்கு வீற்றிருக்கிறார் ....நான் மாக்னிபிக்காத் (Magnificat) என்னும் பாடலை எனக்குள் பாடிக்கொண்டேன். என்னுள்ளத்தின் பற்றுதல்களை விளக்கிக்காட்ட இப்பாடலே ஏற்றது. அந்நாளின் உணர்ச்சி பற்றுதலை நான் என்றும் மறவேன். இவ்வாறு மடத்தில் முதல் முதல் என்னை ஏற்றுக்கொண்டவர் என்னுடைய திவ்யபத்தா. அதில் நான் பிரவேசித்தது அவருக்காகத்தான். ஏனெனில் அவர் ஒருவரையே நான் அபேக்ஷித்தேன். மடத்தின் சிரேஷ்ட தாயார் எனக்கு நல்வரவு கூர்ந்து அன்புற்று உபசரித்தார்கள். என்னுடைய பெற்றோர் சிரேஷ்டதாயாருக்கு என்னை ஒப்புவித்து எனக்குத் தங்கள் ஆசீர் தந்து தங்கள் விடுதிக்குச் சென்றார்கள்.

அநேக வருஷங்களின் ஆசை அன்று தீர்ந்தது—எவ்வளவு மனச்சமாதானம்! எவ்வளவு ஆறுதல்! நமதாண்டவருடன் எம்மாத்திரம் ஐக்கியப்பட்டேன்! நான் உடனே அந்த மடத்தில் சேசுவின் இருதயத்தின் மரி என்னும் பெயர் கொண்ட எவரேனும் உண்டா என்று விசாரிக்கலானேன். அந்தப் பெயருள்ள சகோதரி அங்கு இருந்ததைக் கேள்விப்பட்டுத் துக்கித்தேன். ஏனெனில் அப்பெயர் எனக்கே சொந்தமானதென்று நினைத்தேன். தம்முடைய இருதயத்தின் பத்தினியாக நமதாண்டவர் என்னை விரும்பவில்லை போலும். 1884-ம் வருஷத்தில் நான் அவரிடம் கேட்ட வார்த்தைகளும், அவர் காண்பித்த தயவுகளும் எல்லாம் மாய்கையாய்ப் போகுமா! ஆனால் நான் தேவசித்தத்துக்கு அமைந்தேன், அதுவும் கஷ்டத்தோடுதான். ஆனால் எனக்கு ஒருபோதும் வஞ்சகம் செய்யாதவர், நான் அவர் மட்டில் நம்பிக்கைக்குறைவாய் நடந்தபோதிலும் எல்லாவற்றையும் சரிவர நிறைவேற்றினார்.

1889-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ம் தேதி மரி துரோஸ்ட் சகோதரி நவகன்னிகை உடை தரித்தனள். “சபையின் உடை அணியும் சில தினங்களுக்குமுன் என் சிரேஷ்ட தாயார் என்னை அழைத்து எந்த விசேஷ பெயரையாவது தெரிந்துகொள்ள எனக்கு ஆசையுண்டா

வென்று கேட்டாள். சேசுவின் திரு இருதயத்தின் மரி என்றபெயரை நான் தெரிந்தெடுக்கக் கூடாததினால் எனக்கு ஒரு ஆசையும் இல்லை என்றேன். அப்போது அவள் எனக்கு திவ்ய இருதயத்தின் மரி அல்லது அர்ச். அலோயீசியுஸ் கொன்சாகா (Aloysius Gonzaga) மரி என்ற நாமத்தைக் கொடுக்க சிந்தித்திருப்பதாக வெளியிட்டாள். இதைக் கேள்வியுற்று நான் ஆச்சரிய பிரமைகொண்டு கலங்கினேன். என் திவ்யபத்தா எனக்கு வஞ்சகம் செய்யவில்லை—எந்தப்பெயரை நான் தெரிந்துகொண்டேனென்று சொல்லவும் வேணுமா! அந்தப்பெயர் ஜெர்மானியாவில் சாதாரணமாய் இடாததைப்பற்றி என் ஆச்சரியம் இன்னும் அதிகரித்தது—அதை மடத்தில் இதுவரையில் எவரும் பெற்றதில்லை—இவ்வாறு நமதாண்டவர் தமது வாக்கை நிறைவேற்றினர்."

S. M.

(தொடரும்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

47-ம் அதிகாரம்.

ஓர் சிங்காரப் பந்தலில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசனத்தில் டிக்ருஸ் ஸ்வாமியார் அமர்ந்தார்.

டிக்ரூஸ் ஸ்வாமியார் தர்மானந்தபுரம் வந்து சேர்ந்த மூன்றாம்நாளாகிய ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் ஞான ஒடுக்கம் ஆரம்பமாகி, அன்று முதல் பிரசங்கம் காலையிலும் மாலையிலும் நடந்தேறியது. இந்த டிக்ரூஸ் ஸ்வாமியார் கண்டி இராஜ்ஜியத்தைச் சேர்ந்தவராயும் பேர்போன பிரசங்கியாயுமிருந்ததைப்பற்றிக் கேள்விப்பட்ட கிறீஸ்துவர்கள் காத தூரத்துக்கப்பாலிருந்தும் வந்தார்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க. எந்த வருஷமும் இவ்வளவு ஜனங்கள் வந்ததில்லை ஞான ஒடுக்கத்துக்கு. அவ்வூர் பிரமாண்டமான தேவாலயம் நிறைந்து கோவிலுக்கு வெளியே, வெளி கேட்மெட்டும் ஜனங்கள் காலைதோறும் வந்து பிரசங்கம் கேட்பார்கள். இராவேளையில் ஜனக்கூட்டம் வெளி கேட்டுக்கு அப்பால்கூட நிற்கும்.

இதைப்பற்றி கோவிலுக்கு வெளியேகூட அனேக தீவட்டிகள் போடவேண்டி நேரிட்டது. அவ்வளவு பெருங் கூட்டத்தில் இதர மதஸ்தரான புரோடஸ்டாண்டார், ஹிந்துக்கள், மகம்மதியர் முதலியவர்களிருந்தபோதிலும் அற்ப சந்தடியின்றி சகலரும் மௌனமா யிருந்தார்கள்.

பிரசங்க நேரத்தில், உலகத்தின் வியர்த்தத்தைப்பற்றி பேசும்போதும், இப்பிரபஞ்ச நன்மையாகிற ஆஸ்திபாஸ்தி சுக செல்வம், சிற்றின்ப சுகபோக முதலியவை விழலிலும் விழல் என்று தேவவாக்கியங்களைக் கொண்டும், நடந்த உதாரணங்களைக் கொண்டும் விவரித்துச் சொல்லும்போதும் அதிசய பிரமைகொண்டார்கள் அங்கு கூடினவர்கள்!

பாவத்தைப்பற்றி பிரசங்கம் செய்தபோதோ, அதன் தோஷாதி தோஷத்தையும் அவலக்ஷணத்தையும் அது பிறப்பிக்கும் நித்திய அநித்திய கேடுபாடுகளையும் அதனா லுண்டாகுந் தேவதண்டனையையும் விவரமாய் எடுத்துக் காட்டினர்.

மனிதர் சாதாரணமாய் செய்துவரும் பாவங்களாகிய பொய் புரட்டு, திருட்டு, புறணி, விபசாரம் முதலிய பாவங்களைப் பத்துக்கற்பனை பிரகாரம் முறையே எடுத்துக்காட்டி, ஜனங்களுக்கு அவற்றின்மட்டில் அருவருப்பு உண்டாகும்படியான விதமாய்ப் பல உதாரணங்களைக்கொண்டு விவரித்துச் சொன்னர்.

குடியைப்பற்றி அவர் பேசியபோது அந்த துற்பழக்கத்தால் உண்டாகும் கணக்கற்ற பாவங்களை யெடுத்துரைத்து, மதுபானியானவன் மிருகத்துக்குச் சமானமா யிருக்கிறனென்று பல நியாயங்களால் ஒப்பித்தார். மேலும் நிர்ப்பாக்கியத்துக்குரிய இத் துற்பழக்கத்தை அப்பியசித்து வருபவனுக்கு இவ்வுலகத்தில் உண்டாகும் பல கேடுபாடுகளையும் விவரித்துக் காட்டினர். மதுபானத்தில் பழகினவன் பொய் புரட்டுக்கும் திருட்டுக்கும் பொய் சத்தியத்துக்கும் அஞ்சமாட்டான். குடியின் மூத்தபிள்ளை விவசாரம். குடியன் தேவகட்டளைக்கு கிஞ்சித்தென்கிலும் பயப்படாமல் சகலத்தையும் மீறி நடப்பான். மதுபானியானவன், பெண்சாதி பிள்ளைக் குட்டியென்று சிந்தை கொள்ளான். தாய் தந்தையென்று இரக்கப்படான். சகலவித பாவங்களையும் கட்டிக்கொள்ள அஞ்சான்.

ஆசைதீர குடித்து வெறியால் வாய்க்குவந்தபடி உளறி, வழியில் எதிர்ப்பட்டவர்களைத் திட்டிவைது, அங்குமிங்கும் அசைந்தாடி நடந்துகொண்டு கீழே விழுந்து, மறுபடியும் தட்டித்தடுமாறி எழுந்து சகலராலும் நிந்தித்து நகைக்கப்பட்டு, சீச்சீ யென்று காறி துப்பப்படுவதே இவர்களுக்கு கௌரவம்! கீர்த்தி!

மேலும் குடி வெறியில் வாயற்ற மிருகத்தைப்போல புத்தி ஸ்வாதீனமின்றி பாதி நிர்வாணமாய் பப்ளிக் ரோட்டிலோ வீதியிலோ விழுந்து கிடப்பதே இவர்களுக்குச் சந்தோஷம்! பரமானந்தம்! ஆ! இது எப்பேர்ப்பட்ட பரிதாபம்! பிரலாபம்!

ஐயையோ! எத்தனையோ மச்சு வீடுகளும் மேடை மாளிகைகளும் தற்போது பாழாகி குட்டிச்சுவராய்க் கிடக்கின்றன! காது கழுத்து நிறைய பூஷணாபரணங்களை யணிந்து பட்டுடையுடுத்தி செல்வமாய் வளர்ந்து வாழ்ந்த ஆண் பெண்ணான மக்களைப் பாருங்கள்! இப்போது உடுக்க வஸ்திரமும் குடிக்கக் கஞ்சியுமின்றி அல்லல்படுகிறார்கள்!

அநேக கிராமங்களை வைத்துக்கொண்டு, பிரபுபோல சுக செல்வர்களாய் வாழ்ந்தவர்களுடைய சுரோத்திரிய ஹக்கு வேறு நபர்களுக்கு சொந்தமாயின. ஏன்? குடியினால் கடன்பட்டு கிராமங்களை விற்றுவிட்டதினாலேயே!

அநேக மிராசுதார்பேருக்கிருந்த பட்டா நிலங்கள் அன்னியர் பேருக்கு மாற்றப்பட்டதற்குக் காரணமேன்ன? சபிக்கப்பட்ட இந்த குடியால் கடன்பட்டு அந்த நிலங்களை விற்கும்படி நேரிட்டதைப்பற்றியே!

இவ்வாறு குடியால் உண்டாகும் கணக்கற்ற பாவ தோஷங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் உதாரண மூலமாய் எடுத்துக்காட்டி பேசினபோது இத் துர்ப்பழக்கமுள்ளவர்கள் வெட்கி நாணி தலை குனிந்துகொண்டு: மெய்தான், இவர் சொல்வதில் ஒரு அக்ஷரமும் பிசகில்லையென்று தங்கள் மனதில் சொல்லிக்கொண்டு, இப்பாழும் வழக்கத்தை கொஞ்சங் கொஞ்சமாய் துலைத்துவிடுவதே சரியென்று மனதில் தீர்மானம் செய்துகொண்டார்கள்.

மரணத்தையும் தீர்வையையும்பற்றி வாய்ச்சாலகத்துடனும் வாக்குச் சாதுரியத்துடனும் பிரசங்கியானவர் பேசினபோதும், சாவுக்குப் பின் சகலத்தையும் புறத்தியார் கைப்பற்றிக் கொள்வார்களென்றும், பட்டுப்பட்டாவளிகளையுடுத்தி அமிர்தத்தை யுண்டு, சிற்றின்ப சுகத்தில் புரண்டு, மகா ஜாக்கிரதை கவனத்துடன் பேணி, மினுக்கி வளர்த்த இச் சரீரம் மண்ணில் புதைக்கப்பட்டு புழுக்களுக்கு இரையாகுமென்று தெளிவாய் எடுத்துரைத்தபோதும் ஜனங்கள் பயந்து நடுங்கினார்கள்.

மரணத்துக்குப் பின் நடக்கும் பயங்கரத்துக்குரிய தீர்ப்பைப்பற்றி விஸ்தாரமாய் வருணித்து, நமது கர்த்தர், நாம் பேசும் ஒவ்வொரு வியர்த்தமான வார்த்தைக்கு முதலாய் கண்டிப்பான கணக்கு கேட்பாரென்றும், அப்படியானால் நாம் ஒவ்வொரு நாளில் சிந்தனை வாக்கு கிரியையால் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்கு கணக்குண்டோ என்றும் ஸ்வாமியார் விரித்துரைத்தபோதும், நரகத்தின் பயங்கரத்துக்குரிய வேதனையையும் அதன் நித்தியத்தையும் பற்றி தேவவாக்கியங்களாலும் நடந்த உதாரணங்களாலும் விளக்கிக் காட்டியபோதும், ஜனங்கள் பயந்து நடுங்கி, எவ்வளவு பயங்கரத்துக்குரியது! இதைப்பற்றி நாம் நினைக்கவில்லையே என்று தங்களுக்குள் சொல்லிக்கொள்வார்கள்.

நமது கர்த்தருடைய திருப்பாடுகளைப்பற்றி பேசினபோது ஒவ்வொன்றைப்பற்றியும் எவ்வளவு உருக்க அன்புடன் பிரசங்கித்தாரெனில், அப்பெருங்கூட்டத்தில் அங்கங்கே பெருமூச்சும் விம்மலும் கேட்கப்பட்டது.

கடைசியாய், பிரசங்கம் செய்த ஸ்வாமியார் சர்வேசுரனுடைய அளவறுக்கப்படாத தயா கருணையையும் இரக்கத்தையும் பற்றி பேசினபோது, எவ்வளவு உற்சாகத்தோடும் அன்பு நேசத்தோடும் உபதேசித்தாரெனில், அங்கு கூடியிருந்த அனைவோருக்கும் ஆறுதலும் மனச்சந்தோஷமும், சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தின் மட்டில் அதிக நம்பிக்கையு முண்டானது.

சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் நடத்திய இந்த ஞான ஒடுக்கத்தால் தர்மானந்த புரத்தில் விளைந்த ஞான நன்மைகள் கொஞ்சமல்ல. வெகு காலம் வைராக்கியங்கொண்டு, வர்ம மனஸ்தாபமாயிருந்தவர்கள் தங்களுக்குள் சமாதானமாய்ப் போனார்கள். புறத்தியார் பொருளை அபகரித்த

வர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்து குருவானவர் மூலமாய் சொந்தக்காரருக்கு தாங்கள் அபகரித்த பொருளை உத்தரித்துப்போட்டார்கள். அநியாய வட்டி வாங்கினவர்களும் அதை உத்தரித்து விட்டு தர்மசாலிகளானார்கள். குடியர் இந்த பொல்லாத வழக்கத்தை விட்டுவிடுவதாக உறுதியான பிரதிக்கினை செய்துகொண்டார்கள். வேசித்தனமாய் நடந்து துர்மாதிரிகை கொடுத்த துர்னோர்க்கரும் அந்தந்த பாவத்தை விட்டொழித்தார்கள். உதாசனமான வார்த்தைகளைக் கூறி அவலக்ஷண பாஷையாட வழக்கப்பட்டவர்களும் அத்தகைய பாவங்களை விட்டு மனந்திரும்பினார்கள்.

ஞான ஒடுக்கத்தின் முடிவு நாளில் 3,500 பேருக்கு அதிகமாய் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து மறு நாள் தேவநற்கருணை உட்கொள்ளும் பாக்கியம் பெற்றார்கள். இதற்காகச் சுற்றுப் பக்க கிராமங்களிலிருந்து ஆறு குருக்கள் வந்திருந்தார்கள்.

அன்று கோவிலில் செய்திருந்த சோடினையையும் பீடத்தின் அலங்காரத்தையும், ஜனங்கள் திருவிழா வஸ்திரம் தரித்துக்கொண்டு கூட்டங் கூட்டமாய் தேவாலயத்துக்குச் செல்வதையும், அங்கு கிளம்பும் அதிர் வேட்டுகளையும், முழங்கும் பல வாத்தியங்களையும், கோவில் வாசற்படியில் பட பட வென்று பறக்கும் கொடிகளையும் பார்க்கும் போது, அவ்வூரில் பெருத்த தேர் திருவிழா நடப்பது போலக் காணப்பட்டது.

தேவாலயத்தில் சகலமும் சித்தப்படுத்தப்பட்டு, மணி யெட்டு அடிக்கவே, கன்னியர், சிறுவர் சிறுமிகளுடன் இன்பத்தொனியோடு வாத்தியப் பெட்டியிலிருந்து புறப்படும் மதுரம் பொருந்திய சுரத்துடன் சேர்ந்து பாட ஆரம்பிக்கவே, சங். டிக்ரூஸ் ஸ்வாமியாரவர்கள் வேறு இரு குருப்பிரசாதிகளுடன் மோக்ஷ ஸ்வரூபமாய்க் காணப்படும் பீடத்திலேறி சர்வ ஜீவதயாபர சர்வேசுரனுக்குத் திருப்பூசைப் பலியை ஒப்புக்கொடுக்கத்துடங்கினார்.

ஸ்வர்ண மயமாய் துலங்கி பிரகாசிக்கும் திருப்பீடத்தையும், பொன் கில்ட்டு இடப்பட்ட அநேக தீபஸ்தம்பங்களில் எரியும் வர்த்திகளையும், அலங்கார வடிவாய் அமைக்கப் பெற்ற திருச்சுரூபங்களையும், பீடத்தின் நாலா பக்கமும் பொன் ஜரிகைகளாலும் நானாவிதமான ஜாலர் குஞ்சம்முதலியவைகளாலும்விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டு தொங்கும் பற்பல வர்ணமுள்ள தொங்கலாடைகளையும், பீடத்தில் சாத்தப்பட்டு கமகம வென்று மணக்கும் பலவிதமான புஷ்பக் கொத்துகளையும் தேவ நைவேத்திய சடங்காசாரங்களை அனுஷ்டிக்கும்பொருட்டு பீடத்தில் விஜயஞ் செய்திருக்கும் குருப்பிரசாதிகளுக்கு பணி புரிய அலங்கார உடுபாவனைகளைப் பூண்டு கொண்டு கரங்களில் மெழுகு வர்த்திகளையும் தூபகலசத்தையும் சாம்பிராணி பாத்திரத்தையும் தீர்த்தச்செம்பையும் ஏந்திக்கொண்டு வணக்காசாரத்துடன் திருப்பீடத்தை சூழ்ந்து நிற்கும் சிறுவரான பரிசாரகரையும், பட்டுப் பட்டாவளிகளால் அலங்கரிக்கப் பெற்று பளபள வென்று கண்களை பறிக்கும் மாணிக்கம் வைடூரியம் முதலிய விலை உயர்ந்த கற்களால் இழைக்கப் பெற்ற பொன் பீதாம்பரங்களைத் தரித்துக்கொண்டு தேவசன்னிதானத்தில் அடக்க ஒடுக்கத்தோடும் பயபக்தியோடும் நிற்கும் குருப்பிரசாதிகளையும், அங்கு சமுத்திரம் போல பரவியிருந்த ஆயிரக்கணக்கான விஸ்வாசிகள் உலகத்தை மறந்தவர்கள் போல முழங்காலிலிருந்து மகா பக்தி விஸ்வாசத்துடன் சத்திய தேவனை ஸ்மரணை செய்துகொண்டிருப்பதையும் பார்க்கும்போது எப்பேர்ப்பட்ட அவவிஸ்வாசியும் தெய்வமில்லையென்று மூர்க்கமாய்ச் சாதிக்கும் நாஸ்திகனும் இந்த மோக்ஷ காக்ஷியால் தன் மனதை மாற்றிக்கொண்டு சர்வேசுரனை வணங்கி ஆராதிப்பான் என்பதற்குச் சமுசயமில்லை.

அவவிஸ்வாசிக்கும் நாஸ்திகனுக்கும் இப்பேர்ப்பட்ட இருதய மாற்றமுண்டானால் திரியேக சருவேசுரனை விஸ்வசித்து நம்பி அவரை தன் முழு இருதயத்துடன் பூசித்து ஆராதித்து நேசிக்கும் சத்திய வேத விஸ்வாசி இப்பரம காக்ஷியை கடாக்ஷிக்குந் தருணத்தில் அவனிருதயத்தில் பிறக்கும் பக்தி விஸ்வாசமும் ஞான ஆறுதலும் யாரால் வர்ணிக்கத்தகும்!

அந்தத் தேவாலயத்தில் செய்யப்பட்ட பெரிய பாட்டுப்பூசையை அங்கு கூடின விஸ்வாசிகள் மகா பக்தி விஸ்வாசத்துடன் கண்டு சம்மனசுகளின் அப்பமாகிய பரம தேவ நற்கருணையைமகா பக்தி விஸ்வாச உருக்கத்துடன் உட்கொண்டு தங்களிருதயத்தில் விஜயஞ் செய்ய தயை கூர்ந்த நரதேவனோடு ஒன்றித்து அவருடன் அன்போடு சம்பாஷித்து தங்கள் வறுமையையும் தேவையையும் அவருக்கு அறிவித்து, தங்களாத்தும சரீரத்துக்கு அவசரமானவைகளை அருளவும், தங்கள் சத்துருக்களை ஜெயிப்பதற்கான இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கவும், இதுமுதற்கொண்டு பாவத்தையும் பாவத்துக்கு சம்பந்தமான இடம் சமயம் பொருள் முதலியவைகளையும் விலகுவதற்கான வரத்தை பாலிக்கவும் மன்றாடிக்கொண்டிருக்கும்போதே திவ்விய பூசை முடிவாயிற்று. ஆயினும் தேவபக்தரான விஸ்வாசிகளோ கோவிலை விட்டு வெளியேறாமல் அங்கேயே தங்கி தங்களிருதயம் திருப்தி யாகுமட்டும் செபித்து, தங்கள் தங்கள் இல்லிடங்களுக்கு ஏகினார்கள்.

அன்று சாயந்திரம் நாலு மணிக்கு தர்மானந்தபுரத்து கிறீஸ்துவர்கள் தேவாலயத்துக்கு எதிராகச் சென்று கூடி, தங்களுக்கு ஞான ஒடுக்கம் கொடுத்த சுவாமியாரைச் சந்தித்து, அவர் புரிந்த பேருபகாரத்துக்கு நன்றி செலுத்தி, அவர் மட்டில் தங்களுக்குள்ள நேசத்தை காட்டும்படி அவருக்கு காணிக்கைகளை சமர்ப்பிக்க கொட்டு முழக்கோடும் மேளதாளத்தோடும் போய்ச் சேர்ந்தார்கள் ஸ்வாமியார் இருக்கும் ஸ்தலத்துக்கு.

அந்நேரத்தில் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிங்காரப் பந்தலில் ஸ்தாபிக்கப்பட்டிருநத ஆசனத்தில் சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் அமர்ந்தார். அவருடைய வலது புறத்தில் வயோதிபரான பங்கு ஸ்வாமியாரும் இடது பக்கத்தில் அவருடைய துணை ஸ்வாமியாரும் உட்கார, ஒரு பக்கத்தில் மற்ற ஸ்வாமிமார்களில் மூன்று பேரும் மறு பக்கத்தில் மற்ற மூன்று பேருமாக ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

பிட்டில் முதலிய வாத்தியங்களுடன் சிறுவர் இன்பமாய்ப் பாடிக்கொண்டிருக்கும்போது விஸ்வாச நாயகர் பரிமளம் வீசும் ஓர் நேர்த்தியான பூமாலையை சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் கழுத்தில் போட்டு, அவர் கரத்தில் புஷ்பச்செண்டைக் கொடுத்தார். அவ்வூரில் முக்கியமானவர்கள் ஒவ்வொருவராய் அங்கு விஜயஞ் செய்திருந்த குருப்பிரசாதிகளுக்குக் கழுத்தில் பூமாலை போட்டு கரங்களில் பூச்செண்டு அளித்தார்கள்.

அதற்குப்பின், ஓர் பெரிய ஆட்டுக்கிடாயை ஒருவன் அந்தப் பந்தலில் கட்டினான். அநேகர் கூடை கூடையாய் அரிசியைக் கொண்டுவந்து அங்கே பரப்பினார்கள். வேறு அநேகர் கோழி, வான்கோழி, வாத்து முதலிய பக்ஷிகளைக் கொண்டுவந்து சமர்ப்பித்தார்கள். இன்னும் அநேகர் நானாவிதமான அமிர்த கனிகளையும் மிட்டாய் முதலிய பலகார வகைகளையும் தட்டு தட்டாய் கொண்டுவந்து அடுக்கினார்கள்.

மரியசூசை உடையார் என்பவர் முன்னுக்குச்சென்று, ஓர் உயர்ந்த சருகைச்சால்வையை டிக்ரூஸ் ஸ்வாமியார் கழுத்தில் போட்டார். பவுல் போதகர் பொன்னால் செய்யப்பட்ட தேவமாதாவின் சிறுவட்டச் சுரூபத்தை ஸ்வாமியார் கையில் கொடுத்து: ஸ்வாமீ! உங்கள் கழுத்திலிருந்த சுரூபத்தைக் கழற்றி உங்களுக்குப் பணிவிடை செய்த கள்ளன் கையில் கொடுத்து விட்டீர்களல்லவா? அதற்குப் பதிலாய் இதை வைத்துக்கொள்ளுங்கள் என்றார். விஸ்வாச நாயகர், ஒரு பொன் கை கெடியாரத்தை ஸ்வாமியாருக்கு காணிக்கை கொடுத்தார். வேறொருவர் வெள்ளிப்பிடி போட்ட ஒரு ஊன்றுகோலைக் கொடுத்தார். இன்னும் சிலர், சிற்சில சில்லறை காணிக்கைகளை சமர்ப்பித்தபின், அபிராமியம்மாள் தான் செய்த பூசை ஆயத்தத்தை கையிலேந்திக்கொண்டு முன்னுக்குவர, அபூர்வமணி யென்னும் பவுல் போதகருடைய குமாரத்தியும் ஒரு பொன் பாத்திரத்தை கையில் பிடித்துக்கொண்டு தன் அண்ணிக்குப்பின்னால் நடந்து வந்தாள். இருவரும் சங். டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கு முன் வந்து சேர்ந்தவுடனே, பங்கு ஸ்வாமியார் ஓர் சிறு மேசையை அங்கு கொண்டுவந்து போட்டு அதன் மேல் ஆயத்தத்தையும் பாத்திரத்தையும் வைக்கச் சொல்லி அவர்களிருவரையும் அங்கேயே சற்று நேரம் நிற்கும்படி கற்பித்தார்.

அங்கு வைக்கப்பட்ட பூசை வஸ்திரத்தை விரித்துப் பார்த்து, அதிலுள்ள சித்திர வேலைப்பாடுகளையும் நுட்பமாய் அமைக்கப்பட்ட பூ, தழை, கொடி முதலியவற்றையும், மத்தியில் பொன் இழையால் அமைக்கப்பெற்ற நமது இரக்ஷகர் சிலுவை சுமந்த ரூபத்தையும், ஆங்காங்கு பதிக்கப்பட்ட பற்பல வகைக்கற்களையும் கண்ட ஸ்வாமிமார் அதிசயித்து புகழ்ந்தார்கள் அதை சாமர்த்தியத்துடன் செய்த அபிராமி யம்மாளையும். பூசை பாத்திரத்தின் சித்திர வேலையையும் பார்த்து மெச்சிக்கொண்டார்கள்.

அப்போது விஸ்வாச நாயகர் அடக்க ஒடுக்கத்துடன் டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கு முன்னின்று இவ்வாறு கூறுவார் :—

எங்கள் பிரிய தந்தையரே! தேவரீர் எங்கள் நன்மையைக் கோரி, வந்திக்கத்தக்க எங்கள் ஞானப் பிதாவாகிய பங்கு ஸ்வாமியாருடைய

கோரிக்கைக்கு இணங்கி, வெகு தூரதேசத்திலிருந்து புறப்பட்டு பயங்கரமான காடுகளைத் தாண்டி கடின பிரயாணம் செய்ததற்காக மிகவும் தங்களுக்கு நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

தேவரீர் செய்த கடின பிரயாணத்தில் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்காகவும், திருடர் கையில் அகப்பட்டு அனுபவித்த துன்ப துரிதங்களுக்காகவும் நாங்கள் எப்படி தங்கள் கனத்துக்கு கைம்மாறு புரிவோம்?

மேலும் இத்தனை நாளாய் தங்கள் இளைப்பு தவிப்பைப் பாராமலும் கஷ்டங்களை கவனியாமலும் இவ்வளவு மன உச்சாகத்தோடும் அன்போடும்அக்கரை விருப்பத்தோடும் எங்களுக்கு நன்னெறியை போதித்து தர்ம வழியில் நடப்பதற்கான வழிப்பாடுகளைக் காட்டி, எங்களிருதயத்தை மூடிக்கொண்டிருந்த அந்தகாரத்தை நீக்கிவிட்டு, தர்மவழியில் எங்களைக் கொண்டு வந்து விட்டதற்காக என்ன பிரதி நன்றி செய்யமுடியும் எங்களால் தங்கள் மேலான கனத்துக்கு?

பிரிய தந்தையே! தாங்கள் எங்களுக்குப் புரிந்த இந்த மேலான உபகாரங்களுக்கு கைம்மாறுசெய்ய எங்களால் இயலாதாயினும், நாங்கள் அனைவோரும் தங்களுக்காக நாடோறும் சத்திய கடவுளைப் பார்த்து மன்றாடுவோம்.

ஆம், எங்கள் நேசத் தந்தையரே! தங்களுடைய ஆத்தும சரீர சௌக்கியத்துக்காகவும் தாங்கள் முயலும் சகல வேலைகளில் அனுகூலம் அடைந்து, நல்லாயனைப்பின் சென்று தங்களுக்கு ஒப்பிக்கப்பட்ட ஆடுகளாகிய ஆத்துமங்களை கடைத்தேறச்செய்வதில் தாங்கள் என்றும் அனுகூல மடைந்து, கடைசியாய் மறுலோகத்தில் காருண்ய கர்த்தர் தங்களுக்கு ஒருபோதும் அழியாத நித்திய முடியை சூட்டும்படி இன்றும் என்றும் நாங்கள் அனைவோரும் வேண்டுவோம் என்று ஸ்வாமியார் பாதத்தில் பணிவுடன் முழங்காலிலிருந்தார். இது முடிந்தபின் சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் ஆசனத்தை விட்டு எழுந்து, அங்கு கூடியிருந்த சபையோரை நோக்கி, இவ்வாறு பிரத்தி யுத்தரம் சொன்னார்:—

எனது அன்புக்குரிய சகோதரர்களே! முற்றிலும் நான் இவ்விடத்துக்கு அன்னியனாயினும், நீங்கள் உங்கள் வாக்காலும் கிரிகையாலும் எனக்குக் காட்டும் உங்கள் நல்ல மனதைப் பார்க்குங்கால் என் இருதயம் அதிசய பிரமை கொள்வதுடன் சந்தோஷ மகிழ்ச்சியால் பூரிக்கின்றது!

நான் பிரயாணத்தில் பட்ட கஷ்ட வருத்தங்களைப்பற்றிப் பேசி, என்மட்டில் நீங்கள் அனுதாபங் கொள்ளுகிறீர்கள்! ஆத்தும ஈடேற்றத்துக்காக வேலை செய்கிறவர்களுக்கு உண்டாகும் கஷ்டமும் சங்கடமும், துன்ப துரிதமும், அர்ச். சின்னப்பருடைய போதனைப்படி, அவர்களுக்கு இன்பமாயும் மனோஹரமாயு மிருக்கும்!

கடந்த வாரத்தில் நான் உங்களுக்குக் கொடுத்த ஞான ஒடுக்கத்தால் எனக்கு இளைப்பும் தவிப்பும் உண்டானதைப்பற்றி யென்மட்டில் பரிதாபங் கொள்கிறீர்கள். நாம் முயற்சிக்கும் எந்த வேலையிலும் துன்பம் வராமற்போகாது. அதுபோலவே இந்த ஞான வேலையிலும் சரீர கஷ்டம் உண்டாகாமல் போகாது. கஷ்டத்துடன் விதைப்பவன் சந்தோஷத்துடன் அறுப்பான் என்னும் தேவ வாக்கியப் பிரகாரம், இந்த ஞான வேலையால் எனக்குக் கொஞ்சம் பிரயாசையுண்டானபோதிலும் அதனால், ஒன்றுக்கு நூறு மடங்கா யுண்டான ஞான லாபத்தைப் பார்க்கும்போது எனக்கு உண்டான ஞான சந்தோஷமும் ஆறுதலும் எவ்வளவென்று சர்வேசுரன் மாத்திரம் அறிவார்.

நான் உங்களுக்கு ஞான ஒடுக்கம் கொடுக்குங் காலத்தில் நீங்கள்காட்டிய பக்தி விசுவாசத்தையுங் கவனத்தையும் நான் கண்டபோது அதிசயமுண்டானது என் இருதயத்தில். நாடோறும் அத்தனைபேர் இந்தப் பெரிய தேவாலயங் கொள்ளாமல் வெளியே நின்றுகொண்டு தேவ வாக்கியத்தைக் கேட்பதை நான் பார்த்தபோது, ஓ! என் னிருதயத்திலுண்டான சந்தோஷ மகிழ்ச்சியை எப்படி விவரிப்பேன்?

இன்று தினம் ஆயிரக் கணக்கான விஸ்வாசிகள் பூசைப் பலியை மகா விஸ்வாசத்துடன் கண்டு, நமது திவ்விய கர்த்தரை ஸ்நேக தேவத்திரவிய அனுமான மூலமாய் தங்களிருதயத்தில் வரவழைத்து, அவரை பக்தி யுருக்கத்துடன் வணங்கி சேவித்ததை நான் பார்த்தபோது, பிரிய சகோதரர்களே, என் மனதில் உற்பத்தியான சந்தோஷ பிரவாகத்தால் எனக்குத் தெரியாமலே என் நேத்திரங்களினின்று கண்ணீர் மாலை மாலையாய் உதிர்ந்தது.

மேலும் உங்களூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பக்திக்குரியதும், பரோபகாரத்துக் குரியதுமான, பல சபைகளை நான் கண்டு சந்துஷ்டி அடைந்து என் பங்கிலும் இவைகளை யேற்படுத்த கருத்துகொண்டிருக்கிறேன்.

இவ்வளவு கணக்கற்ற ஞான நன்மைகள் உண்டாவதற்குக் காரணம் இங்கு விஜயஞ்செய்திருக்கும் வந்திக்கத்தக்க உங்கள் பங்கு ஸ்வாமியாரே! அவர் சர்வேசுரனுக்கு இரண்டாவதாக முக்கிய காரணகர்த்தராயிருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை யென்னவே, அங்கு கூடியிருந்தவர்கள் சந்தோஷக் குறிப்பாக கரகோஷ்டம் செய்தார்கள்.

நான் உங்கள் ஊரில் பார்த்ததும் கேட்டதுமானவைகளை யென் பங்கு கிறீஸ்துவர்களுக்கு அறிவித்து, உங்களுடைய நன் மாதிரிகையைப் பின் பற்றும்படி அவர்களை உசாவி உத்ஸாகப்படுத்துவேன்.

கடைசியாய் பிரிய சகோதரர்களே! இன்று நீங்கள் கொண்டுவந்து சமர்ப்பித்த சந்திப்புக்காகவும், காணிக்கையாக அளித்த சால்வை, சுரூபம், கெடியாரம், பூசைப் பாத்திரம், ஊன்றுகோல் இன்னும் சிற்சில நன்கொடைகளுக்காவும் மெத்தவும் நன்றியுள்ளவனா யிருக்கிறேன்.

(தமக்கு எதிராக நிற்கும் அபிராமியம்மாளையும் அபரூபமணியையும் அன்புடன் நோக்கி) நீங்களிருவரும் எனக்குக் கொடுத்த பூசை ஆயத்தத்தை அணிந்துகொண்டு; பாத்திரத்தை உபயோகித்து திவ்விய பூசைப்பலி சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கும்போதெல்லாம் இங்குள்ள சகலரையும் விசேஷமாய் உங்களிருவரையும் நினைத்து உங்களுக்காக வேண்டிக்கொள்வேன்.

நீங்கள் அனைவோரும் என்னை மறவாமல் எனக்காக வேண்டிக்கொள்வதாக வாக்குக் கொடுத்ததுபோல நானும் என் ஜெபத்தில் உங்களை மறவாமல், உங்களை சர்வேசுரன் இவ்வுலகத்திலுண்டாகும் சகல பொல்லாப்பினின்றும் இரக்ஷித்து ஒருபோதும் அழியாத நித்திய பேரின்ப பாக்கியம் பொழியும் மோக்ஷத்துக்கு கூட்டிக்கொண்டுபோகும்படி மன்றாடுவேன் என்றார்.

உடனே டிக்ரூஸ் ஸ்வாமியார் பேரால் கட்டப்பட்ட ஓர் நேர்த்தியான பாடலைச் சிறுவர் பாடி முடித்தார்கள்.

A WARNING TO CATHOLICS.

கிறீஸ்துவர்களுக்கோர் எச்சரிக்கை.

Home Rule!

சுதேசியம்!!

சுயராஜ்ஜியம்!!!

"வேதம் என்பதெல்லாம் ஒன்று! இந்து வேதம் எல்லாவற்றிற்கும் ஆதி! அதின் போதகாசாரியார் இவ்வுலகிலுள்ள சகல ஜாதி ஜனங்களைவிட மேன்குலத்தோர், கல்வியிற் றேர்ந்தோர், சாமர்த்தியமுள்ளோர், அதிக நாகரீகம் படைத்தோர்! தேவப் பிறப்போர். ஆனதால் இந்தியாவை இந்தியரே ஆளவேண்டும். இங்கிலீஷ்காரர் எக்கேடுகெட்டாலுமென்ன!" இதுவே, இச்சமயம்; இந்தியா தேச முழுமையு மேகக்கூக்குரல்! "எங்களுக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது. நீங்கள் சண்டை போட்டால்தா னென்ன? சங்கடப்பட்டால்தா னென்ன? சந்தடியிற் கெந்தகவெடி. அதிகாரத்தை விட்டுவிடுங்கள். உத்தியோகங்களைக் கொடுத்துவிடுங்கள். இன்னும் முக்கியமாய் வரும்படியெல்லாம் எங்கள் கையி லொப்பித்துவிடுங்கள். ஆனால் தேசத்தைச் சத்துராதிகளிடத்தினின்று காப்பாற்றுவது உங்களுடைய கடமை. அதற்காகத்தான் இராஜாங்கம் உங்கள் பேரால் இருக்கட்டும். அதிகாரம் எங்கள் பேராலிருக்கட்டும். உங்களுடைய வாயிலே மண்ணு. எங்களுடைய வாயிலே பொன்னு." இதுதான் **Home Rule** within the Empire என்னும் வார்த்தைகளின் வியாக்கியானம் என்றெண்ணுகிறேன். நமது தேசத்தாரில் முக்காலே மூன்று வீசம் பேருக்குமேல் சுயராஜ்ஜியம் என்னவென்று தெரியாதபோதிலும், அதைப்பற்றிக் கனவில் முதலாய் நினையாதபோதிலும், அதனை அறிந்த சிலரே எல்லோர் பேராலும் சுயராஜ்ஜியத்துக்காகக் கங்கணங் கட்டிக்கொண் டலைகிறார்கள்.

1. சிலர் தங்களுடைய சுயலாபத்தைத் தலைமேற்கொண்டு சுயராஜ்ஜியம் இப்போதே வேண்டு மென்கிறார்கள். கொடாமற்போனால், என்ன செய்வார்களோ தெரியவில்லை. தங்க

ளிடத்திலுள்ள படைவீரரைக் கொண்டும், பீரங்கிகளைக் கொண்டும், ஆகாயக் கப்பல்களைக் கொண்டும், முழுகுக் கப்பல்களைக் கொண்டும், இங்கிலீஷ்காரரை இத்தேசத்தினின்று துரத்திவிடுவார்கள்போலும்!

2. சிலர் சுயராஜ்ஜியம் வேண்டியது, ஆனால் அந்தந்த ஜாதி மதத்தைச் சேர்ந்த ஜனத்தொகைக்குத் தகுந்தாப்போல சட்ட நிர்ணய சபையில் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிறார்கள். ஒரே ஜாதி ஒரே மதத்தைச் சேர்ந்த ஜனத்தொகை ஜாஸ்தியாயிருக்கிறவர்களுடைய பாடு கொண்டாட்டம், மற்றவர்களுடைய பாடு திண்டாட்டம்.

3. வேறு சிலர், ஜாதி வித்தியாசம் அற்றுப்போகட்டும், ஜனமெல்லா மொற்றுமையாகட்டும், கல்வியெங்கும் பரம்பட்டும், நாகரீகமுண்டாகட்டும், சுயராஜ்ஜியத்துக்கு யோக்கியதையாகட்டும், அப்போது பார்த்துக்கொள்ளலாம், அதுவரையிலும் காத்திருப்போம் என்கிறார்கள்.

இந்த மூன்று வகுப்புகளுக்குள் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாகிய நாம் எந்த வகுப்பிற் சேருகிறது?

முதல் வகுப்பிலோ? முழு மோசம், சுத்த நாசம். பிராமணரல்லாத இந்துக்கள் முதலாய் அநேகமாயதிற் சேருவதாகக் காணோம். ஆனதாலது நமக்குத் தகாது, இப்போதைக்கு வேண்டவும் வேண்டாம்.

இரண்டாவது வகுப்பிலோ? நியாயமாய்த்தானிருக்கிறது, எல்லோருங் கேட்கவேண்டியதுதான், எல்லோரு மாசைப்படவேண்டியதுதான். ஆனால் இப்போது இந்து தேசத்திய சகல ஜாதியாரும், சகல மதத்தாரும் அதற்குத் தகுந்த ஸ்திதியில் வந்துவிட்டார்களோ? வந்துவிட்டதாகவே வைத்துக்கொள்ளுவோம். அதினாலென்ன? கிறீஸ்துவர்களாகிய நாமிருக்கிற தொகைக்கு எத்தனை பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளப்போகிறோம்? போனவருஷம் (National Congress) நாஷனல் கூட்டத்தின்போது இந்துக்களுக்கும், மகம்மதியருக்கும், சட்ட நிர்ணய சபை பிரதிநிதிகள் விஷயத்தில் விகற்பமுண்டாகிக் குதர்க்கம் பண்ணி, கடைசியாய், இந்துக்கள் மிகுதியான இன்ன மாகாணத்தில் 100 பேர் சட்டசபை அங்கத்தினரானால் 60 பேர் இந்துக்கள் 40 பேர் மகம்மதியராகவிருக்கிறதென்றும், மகம்மதியர் மிகுதியான இன்னமாகாணத்தில் அங்கத்தினர் 60 பேரானால் 40 பேர் மகம்மதியர், 20 பேர் இந்துக்களாக இருக்கிறதென்றும், சட்டசபை நபர்களைத் தங்களுக்குள்ளவே பங்கு போட்டுக்கொண்டதை நாமறியோமோ? மேன்குல இந்துக்களும் மகம்மதியருமேயொழிய வேறெந்த மனிதரும் இந்துதேசத்தில் இல்லார்போலும்! அங்கத்தினரில் சிலரைத் தெரிந்துகொள்ள கிறீஸ்துவர்களுக்குச் சுதந்தரமுண்டென்று வைத்துக்கொள்ளுவோம். தெரிந்துகொள்ளுகிறோம். நமது தொகைக்குத் தகுந்தாப்போல் இரண்டுபேரோ, மூன்றோ, நாலென்றே சொல்லுவோம்; மற்ற அங்கத்தினர் தொகைக்கு முன்பாக இதென்ன? கடலிற் கரைத்த பெருங்காயம். ஆனதால் இந்த இரண்டாம் வகுப்பும் நமக்கு யோக்கியதையானதல்ல.

மூன்றாம் வகுப்பொன்றுதான் மீதி. வேண்டும் வேண்டாம் நாமதில்தான் சேரவேண்டியிருக்கிறது. கிறீஸ்துவர்களாகிய நமக்கதில்தான் சுகம், அதில்தான் லாபம். மகராச இங்கிலீஷ் இராசாங்கமே இன்னும் நீடூழிகாலம் நிலைத்து, நமது தேசத்தை மேன்மேலும் விருத்திக்கும் நம்மவர்களைச் சீர்திருத்தத்துக்கும் கொண்டுவரும்படி நாம் நாடோறும் கடவுளை மன்றாடுவது நமது மேற் சுமந்த கடமை.

ஏனென்று நானிப்போது சொல்லப்போவதைக் கவனமா யோசித்துப்பாருங்கள்.

ஏன்? இங்கிலீஷ் இராசாங்கம் தானிந்தியா தேசத்தினாளுகையை யொப்புக்கொண்ட நாள் முதலிதுவரையிலும் நமது தேசத்துக்குத் தன்னாலான நன்மைகளெல்லாம் செய்துகொண்டு வருவதை மறுப்பவன் யாருமில்லை. தேச விருத்திக்காக, ஜன சௌகரியத்துக்காக, சௌக்கியத்துக்காக இன்னும் மற்ற விஷயங்களைப்பற்றி அது செய்திருக்கும் ஏற்பாடுகளநேகம்.

மதவிஷயங்களைப் பற்றியோ, ஜாதியாசாரங்களைப் பற்றியோ, அது மாமூலுக்குக் கொண்டுவந்திருக்குஞ் சட்டங்கள் போக, உதாரணமாக, இந்துலா, மகம்மதியலா, கிறீஸ்தியன்லா, என்ற இவைபோக, மற்றப் பொதுச்சட்டங்களெல்லாருக்கும் ஒன்றே. ஐரோப்பியரானாலும், இந்தியரானாலும், கிறீஸ்துவர்களானாலும், மகம்மதியரானாலும், உயர்குலத்தாரானாலும், இழிகுலத்தாரானாலும், பார்ப்பாரானாலும், பஞ்சமரானாலும், சர்க்கார் சட்ட மொன்றே. மதக்கொள்கைக

ளிற் சர்க்கார் கலப்பதில்லை; எல்லோரையும் சட்டப்பிரகாரம் நடத்தவேண்டுமென்பதே இங்கிலீஷ் இராசாங்கத்தினுடைய ஏற்பாடு. ஆனால் இந்துக்கள் மிகுதியான தொகையாயிருப்பதினாலும், அவர்களிலனந்தம்பேர் மேலுத்தியோகங்களை வகித்து வருவதினாலும், கிறீஸ்துவர்களாகிய நமது விஷயத்திற் சட்ட மொன்றிருக்க வேறு விதமாக நடந்து வருகிறதை நாம் கண்டுவருகிறோம்.

இந்துக்கள் கண்களுக்கு முன்பாகக் கிறீஸ்துவர்களாகிய நாமார்? வேதங்கெட்டவர்கள், வேதத்தில் விழுந்தவர்கள், ஜாதிகெட்டவர்கள். நம்மைத் தீண்டினால் தீட்டு, நம்முடன் பந்தியமர்ந்தால் படுதோஷம், இன்னு மென்னென்னவோ?

நாமெங்கேயாவது கோவில் கட்ட வேண்டியதோ? நாலா பக்கத்திலும் விக்கினம். அவர்களோ ரோட்டோரத்திலோ, தெருக்களின் நடுவிலோ, புறம்போக்கிலோ எங்கே இஷ்டமோ கட்டிக்கொள்ளலாம். சிலைகளைப் பள்ளிக்கூடங்களிலோ, பாலங்களிலோ, ஆற்றோரங்களிலோ, ரோட்டோரங்களிலோ, வீட்டோரங்களிலோ நினைத்த விடமெல்லாம் வைக்கிறதற்குத் தடை செய்வாரில்லை. கிறீஸ்துவர்களாகிய நாமோ, பணம் போட்டு வாங்கின ஸ்தலத்தில் நமது கோவில் கட்டுவதானால் அநேகாநேக சமயங்களில் விக்கினம். புறம்போக்கில் மேலதிகாரினுடைய தயவினால் நமக்கு நிலங் கிடைக்கிறதோ, கீழதிகாரிகளினால் உடனே ஆக்ஷேபனை. முதலுக்கே மோசமாய்ப் போய்விடுகிறது.

நாம் திருநாள் கொண்டாடுகிறதானால் பட்டணவாசல்களில் மாத்திரமல்ல, பட்டிக்காடுகளில் முதலாய்த் தடங்கல், அடிதடி. அவர்களோ என்ன வேண்டுமோ, எப்போதோ, எவ்விடத்திலோ, சகலமுஞ் செய்யலாம்.

கல்லறை விஷயத்தைப் பார்க்கப் போனாலோ? அவர்களுக்கு ருத்திர பூமி நினைத்த விடமெல்லாம்; சுடுகாடு, ஆற்றோரம், குளத்தோரம், வாய்க்காலோரமெல்லாம்.

நமக்கு கல்லறையில்லாத இடங்களெத்தனை? ரோட்டோரத்தில், வயல்கள் நடுவில் கல்லறை; அதற்கும் எவ்வளவோ புகார்.

நமக்குள்ளாக சர்க்கார் உத்தியோகம் பண்ணுகிறவர்கள் மகா சொற்பப்பேர் மாத்திரம். அதற்கும் எவ்வளவோ சிபாரிசு. அவர்கள் இந்துக்கள், முக்கியமாய்ப் பிராமணாள் நடுவிலிருக்கிறார்கள். அவர்களைத் தங்கள் மத்தியிற் காண்பதே இவர்களுக்குக் கசப்பாயிருக்கிறது. எப்படி தொலைத்து விடலாமென்று கண் கொத்திப் பாம்புகளைப்போலக் கிறீஸ்துவ உத்தியோகஸ்தர் மேற் கண்ணுண்டாயிருக்கிறார்கள். சொற்ப சமயம், சொற்ப முகாந்தர மகப்பட்டதோ, உடனே சர்வ பிரயத்தனமுஞ் செய்து, அவர்களைத் தொலைத்து விடுகிறார்கள். பொதுவாகப் பஞ்சமர் என்ன நிர்ப்பாக்கியமான வந்தஸ்திலிருந்து வருகிறார்கள். இத்துடன் நான் நிறுத்தி விடுகிறேன்.

இங்கிலீஷ் இராஜாங்கம் புரோடெஸ்டாண்டு இராசாங்கம், என்பது மெய்தான். ஆனால் பொதுப்பெயராகக் கிறீஸ்துவ இராசாங்கமென்றே சொல்லலாம்.

இந்த இங்கிலீஷ் கிறீஸ்துவ இராசாங்கத்திலேயே கிறீஸ்துவர்களாகிய நமது கதி வேத விஷயங்களிலுஞ் சரி, மற்றெந்த விஷயத்திலுஞ் சரி, மேற்சொன்னபடியானால், இந்து இராசாங்கம், அல்லது பிராமண இராசாங்கம் வந்தால் நமது கதி யென்னவாகும்? வேதத்தை யொட்டினதாய்த்தானிருக்கும் இராசாங்கமும். பழைய குருடி, கதவைத் திறடி என்கிற கதையாகத்தான் முடியும்.

ஆனதால் கிறீஸ்துவர்களாகிய நமக்கு இப்போதிருக்கிற காருண்ணிய கவர்ன்மென்றே போதும். விருத்தியைத் தேடுவோம், சீர்திருத்தத்தை நாடுவோம், கல்வியில் தேறுவோம், சுயராஜ்ஜியம் சொல்லாமலே வந்துவிடும்.

இப்படியெல்லாமிருக்க, இப்போதே சுயராஜ்ஜியம் வேண்டுமென்று சர்வ பிரயாசை எடுத்துக்கொண்டு பிரயத்தனம் பண்ணிவருகிறவர்கள் தூதாட்களை யனுப்பி பட்டணங்களில் மாத்திரமல்ல, பட்டிக்காடுகளிலும் முதலாய் வீடு வீடாய் நுழைந்து, பிராமணரல்லாதவர்களிடத்திற் கையெழுத்து வாங்குகிறார்களாம். "நல்ல காலம் பிறந்தது, இலட்சுமி வந்து விட்டாள். உலகமாதா மறுசெனனமானாள். இனிமேல் வரியில்லை, வாய்தாயில்லை, ஜெயிலில்லை, சிறையில்லை. மந்திரி வரப்போகிறார், மலைமேலெல்லோரையும் ஏற்றிவிடுவார். எவர்க்கும் யாதோர் குறையுமிராது. பந்தே மாதரம், பந்தே மாதரம்" என்று பாடிக்கொண்டு தூதர் ஊரூராய்த் திரிந்து கையெழுத்துக் கேட்கத் துவக்கி

விட்டார்களாம். கிறீஸ்துவர்களே! ஏமாந்து போகாதேயுங்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை!! வந்த தூதருக்கு "சுவாமி! தெண்டம்" என்று சொல்லி, வந்த வழி காட்டிப் போய்வரச் சொல்லுவதே கிறீஸ்துவர்களாகிய நாம் செய்யத்தக்க உபசாரம்!

எச்சரிக்கை!

OUR LADY AND A BOY.
மாதாவும் ஓர் சிறுவனும்.

சில மாதங்களுக்குமுன் போர்த்துகல் தேசத்தில் நமது பரமநாயகி பத்து வயதுள்ள ஓர் சிறிய இடைப்பையனுக்குத் தரிசனையான வரலாறு போர்த்துகீஸ் பத்திரிகை யொன்றில் பிரசுரமா யிருந்ததை "நல்லாயன்" சந்தாதார்களும் வாசித்து அறியுமாறு இங்கு மொழிபெயர்த்துத் தருகின்றோம்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள போர்த்துகால் தேசத்திலே ஜெண்ட் ஜான் ஆப்வில்லாசா என்ற சிறிய பட்டணமொன்றுண்டு. அப்பட்டணத்தில் பாராலென்று வழங்கிவரு மிடத்தில் புண்ணிய வதியான ஓர் விதவை இருந்தனள். சவரினோ அலோஸ் என்னும் அவளுடைய பத்து வயதுள்ள மகன் தினந்தோறும் பக்கத்திலுள்ள மலையிலே சில ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்துவருவான். இவன் தெய்வ பக்தியும் விசுவாசமுமுள்ளவனாகையால், ஜெபமாலை ஜெபித்துக்கொண்டே ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டுபோவது இவனுக்கு வழக்கம். இங்ஙன மிவன் கடந்த மே மாதம் 10-ந் தேதி காலை 8-மணிக்கு வழக்கம்போல ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு போகும்போது திடீரென ஆகாயத்திலிருந்து தோன்றின வெளிச்ச மொன்றைக் கண்டு பிரமிப்படைந்தான்.

இவ் வெளிச்சத்தைக் கண்டபின்னர் இரண்டொரு அடி எடுத்து வைத்தான். யாது கண்டனன்? அழகையே ஆபரணமாகப் பூண்ட கன்னிகை யொருவள் தனது இரு கரத்தையுங் கூப்பி உட்கார்ந்திருக்கக் கண்டான். மேலும் அவளைச் சுற்றி ஜெகஜோதியாய்க் கண்களைப் பறிக்கத்தக்க ஆயிர மெழுகுவர்த்திகள் ஜொலித்தாற்போல பிரகாசிக்கவும், வெண்ணுடை உடுத்தினவளாய் நீல முக்காடிட்டிருக்கவும் கண்டான். இக்காட்சியை இவன் காணக்காண அதிகதிகில் கொண்டு பயத்தினால் சோகமுற்றுக் கீழே விழுந்துவிட்டான்.

பின்னர் இவனுக்கு மூர்ச்சை தெளிந்ததும் "சேசுவே" என்ற திருநாமத்தை உச்சரித்தான். தக்ஷணமே அவ் வுருவம் மறைந்துபோனது.

பையனானவன் தான் கண்ட காட்சியை தன்னுடைய பங்கு சுவாமியாருக்குத் தெரிவிக்கவே, அப்பையன்மீது நல்ல அபிமானங்கொண்டிருந்த அந் நல்ல குருவானவரும் பையனைத் தைரியப்படுத்தி தரிசனம் கண்டவிடத்திற்கே மறுபடியும் அவனைப் போகச்சொல்லி அவளைப் பார்த்து அவளுடைய பெயரின்னதென்று கேட்டு தெரிந்துகொள்ள இவனுக்குச் சொல்லி அனுப்பினார்.

பங்கு சுவாமியாரின் கட்டளையை சிரமேற்கொண்ட பையன் மறு நாள் தான் காட்சி கண்ட விடத்திற்கே செல்ல அக் கன்னிகை அதே விடத்தில் அத்தினமும் தரிசனமா யிருக்கக்கண்டான். உடனே முழந்தாட்படியிட்டு தனக்குப் பங்கு சுவாமியார் கற்பித்திருந்தபடி "நேற்றையத் தினம் பேசாமடந்தையா யிருந்தவள் இன்றையத்தினம் பேசட்டும்" என்றான்.

அப்போது அக் கன்னிகையானவள் புன்னகை புரிந்து பையனானவன் ஒருபோதும் கேட்டிராத இனிய குரலிற் சொன்னதாவது: "குழந்தாய், பயப்படாதே, நான்தான் உனது மோக்ஷ தாயார். இம்மலைப் பாங்கில் ஆடு மாடு மேய்க்கும் இடையர்களிடம் இடைவிடாது ஜெபமாலை ஜெபிக்கும்படி சொல். மற்ற மனிதர்களையும் ஸ்திரீகளையும் "வானுலக நக்ஷத்திர" மென்ற பாட்டைப் பாடும்படி சொல். இப்போது குரூர கோபா வேஷத்துடன் நடக்கும் போர்முகத்துக்குத் தங்கள் குமாரர்களை அனுப்பி சஞ்சலப்படும் பரிதாபத்துக்குரிய தாய்மார்களை அடிக்கடி ஜெபமாலை செபித்தும் "வானுலக நக்ஷத்திரம்" என்ற இனிமையான பாடலைப் பாடவுஞ்சொல். அவர்களனைவரையும் என்னோடு ஏகோபித்து செபிக்கும்படி சொல். நானுமிவ் யுத்தத்தைக் கூடிய சீக்கிரத்தில் ஓர் முடிவுக்குக் கொண்டுவர சித்தமாயிருக்கிறேன்" என்று வசனித்தவைகளைப் பையன் தெளிவாகக் கேட்டான்.

பையனிதற்கு விடை பகரு முன்னரே அவள் "சரி என்ன கட்டளை யிடுகிறாயோ அதுவெல்லாம் செய்ய நான் சித்தமா யிருக்கிறே" னென்று சொல்லிக்கொண்டே அவள் அவனைப் பார்த்து "அதோ பார் எவ்வளவு ரம்மியமான திராக்ஷைக் கனிகள்" என்று சொன்னபோது பையன் அதை ஆவலாக உற்று நோக்குந் தருவாயில் அவள் மறைந்துபோனாள்.

உடனே பையன் பட்டணத்தை நாடிச் சென்று போர்முகத்தில் தம்மக்களை போர்புரிவதற்காக அனுப்பியிருக்கும் தாய்மார்களிடம் நடந்த இந்தச் சம்பவத்தை விபரமாகத் தெரிவித்தான்.

இது சம்பந்தமாய் ஓர் விஷயம் முக்கியம் கவனிக்கத்தக்கது: முற்காலத்தில் போர்த்துக்கீசு ஜனங்களுக்குள் யுத்தகாலத்திலும், இன்னுமற்ற துன்ப காலத்திலும் "வானுலக நக்ஷத்திரமே" என்ற ஓர் பாடலை பாடுவது வழக்கம். ஷை பங்கு சுவாமியாரும் தம்முடைய இளம்பிராயத்தில் ஆண்பாலரும் பெண்பாலரும் இப் பாடலைப் பாடத் தாம் கேட்டிருக்கும் ஞாபகம் தமக்குண்டென்றும், ஆனால் கடந்த நாற்பது வருஷமளவாகவும் இன்னும் இதற் கதிக காலமாகவும் இப் பாடலை யாரும் பாடத் தாம் கேட்டதில்லையென்றும் சொல்லுகிறார். காட்சியைக் காணப் பாக்கியம் பெற்ற பையனும் அவனது தாயாரும் அவ் வினிய பாடலை ஒரு போதும் கேட்டதேயில்லையாம். மாசற்ற இச் சிறியவன் மாதாவால் தனக் கறிவிக்கப்பட்டபடி இப் பாடலைப் பாட எம்மேலோருக்கும் வற்புறுத்திச் சொல்லி வருகிறான். இப்படி இவன் சொல்வது அபத்தமென்று சொல்லுகிறவர்களுக்கு அச் சிறுவன் "மாதா எனக்கிதைத் தெரிவித்தது வாஸ்தவம். நம்ப பிரியமிருந்தால் நம்புங்கள்; நம்ப இஷ்டமில்லாவிட்டால் விட்டுவிடுங்கள்; மாதா எனக்குக் கற்பித்தபடி இவ் விஷயத்தை நான் உங்களுக்கு அறிக்கை யிடுகிறேன் என்று சொல்வான்.

அவ்வூர் ஞான அதிகாரிகளும் இவ்விஷயத்தைப்பற்றி இந்நாள் வரையும் யாதொரு முடிவான தீர்மானத்தைச் செய்தவர்களல்ல. ஆனால் ஜெபமாலை செபிக்கவும், தேவதாயைப் பாடல், கீர்த்தனை முதலியவைகளினால் துதித்துக் கொண்டாடவும், நமக்கு வேண்டியவைகளை அவளிடமிருந்து கேட்கவும் திருச்சபையே கற்பிக்கிறது மன்றி அவ்விதஞ் செய்ய நம்மை ஏவியும் வருகின்றதல்லவா?

ஆகையினால் நாமும் அந் நல்ல சிறுவனைப் போல "இக் காட்சியை நம்ப இஷ்டமுள்ளவர்கள் நம்பட்டும் நம்ப இஷ்டமில்லாதார் போகட்டு" மென்கிறோம்.

A. D.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

கூடுதாழை.

திருமயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த கூடுதாழையில் அர்ச். தொம்மையப்போஸ்தலர் ஆலயத்தில் ஸ்தாபித்திருக்கும் ஜென்மப் பாவமில்லாம லுற்பவித்த தேவமாதாவின் அமலோற்பவ சபைப் பெண்களுக்கு சென்னை செண்ட் தாமஸ் ஐஸ்கூல் பிரப்பெசர் சங். தோமாஸ் சிலுவை ராயர் சுவாமியவர்களால் நான்கு நாள் ஞானவொடுக்கம் துவக்கப்பட்டு இம்மாதம் 23உ முடிவு பெற்றது. இவ்வூரில் ஞானவொடுக்கம் நடந்தேறியது இதுதான் முதல் தடவை. அகத்தினழகு முகத்திற்றுலங்குவதுபோல் ஷை சுவாமியவர்களிட மமைந்துள்ள தெய்வ பக்தியும் இனிய வசனங்களும் இத் தியானத்தின் மகத்துவத்தைப் பன்மடங்கதிகப்படுத்தியதுடன் ஷை சுவாமியவர்கள் நம் தாய்ப்பாஷையை நன்குணர்ந்து சிறப்புற்ற நம் செந்தமிழ் வாசிகளி லொருவரானதுபற்றி, அவர்களது ஒவ்வொரு சொல்லும் பசுமரத்தின் ஆணியைப்போல் எங்கள் உள்ளத்தை ஊடுருவிற்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுள்ளோம். இன்னாட்களில் யாங்கள் எவ்வளவு பிரயோஜனத்தைக் கைக்கொண்டோமென்பதற்கு எங்கள் மன ஆறுதலும் சந்தோஷமுமே அத்தாக்ஷி. செய்யாமற் செய்யும் முதவிக்கு வையகமும் வானமும் மாற்ற லறி தென்றிருக்க, எங்கள் இரக்ஷணிய

விஷயமாய் இத்தகைய நன்மைகளை எங்களுக்களித்த சங். தோமாஸ் சிலுவை ராயர் சுவாமியவர்களுக்கு நாங்கள் யாது கைம்மாறு செய்யப்போகின்றோம்? எல்லாம் வல்ல இறைவனொருவரே இத் தந்தைக்கேற்ற சம்பாவனை யளித்து தமது திராக்ஷத்தோட்டத்தில் நீடூழி யுழைக்கும்படி கிருபை செய்யவேண்டு மென்பதாய் நித்தமும் எமது ஜெபத்தில் அத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

இத்தியான வொடுக்கம் எங்களுக்குக்கிடைக்கும்படி இச்சுவாமி யவர்களை இங்கனுப்பிய மிகவும் வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாராண்டவரவர்களுக்கும் எங்களூர் பங்கு சங். ஜே. பி. எக்ஸ். டிசொவுசா சுவாமி யவர்களுக்கும் மனப்பூர்வமாய் வாழ்த்துதல் கூறுகின்றோம். இத்தியான வொடுக்கத்தின் பலனை நாங்களடைந்ததுபோல் ஜெப அப்போஸ்தல சபைப் பெண்பிள்ளைகளும் ஜெபமாலைச் சபை ஆண்பிள்ளைகளு மடையும்படி கடவுள் கிருபை செய்வாராக.

இங்ஙனம்,

கூடுதாழை, 25—8—17. } அமலோற்பவ சபைப் பெண்பிள்ளைகள்.

கோயமுத்தூர் மேற்றிராசனக் கிறீஸ்துவ சகோதரரின் கூட்டம்.

இந்தியாவின் தற்கால நிலைமையையும் அதினால் ஏற்படக்கூடிய அதி முக்கிய விஷயங்களையுங் கவனிக்கும்பொருட்டு, கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுமார் 40,000 கிறீஸ்துவ சகோதரர் பெயரால் 18-11-1917ல் கோயமுத்தூர் மேற்றிராசன வாலயத்துக் கம்பவுண்டுக்குள் ஒரு கூட்டம் நடைபெற்றது. இதில் அக்கிராசனம் வகித்தவர் டை மேற்றிராசன ஐஸ்கூல் தேச சரித்திர போதகாசிரியராகிய ம-ா.ா-ஶ்ரீ, D. பெரியநாயக முதலியார் B. A. அவர்கள் ஆவர். இக் கூட்டத்துக்கு உதகமண்டலம், வெல்லிங்டன், ஈரோடு, பள்ளபாளையம், சவேரியார் பாளையம், கண்ணம்பாளையம், சோமனூர், புக்கிலிபாளையம், போத்தனூர் முதலிய பல பங்குகளினின்று தனவான்களும், உத்தியோகஸ்தர்களும், மற்ற அந்தஸ்துள்ளவர்களும் ஆக ஏறக்குறைய 150 பிரதிநிதிகள் விஜயஞ் செய்திருந்தனர். கூட்டத்தின்போது ஆஜராயிருந்தவரின் தொகை சுமார் 600.

கூட்டத்தின் ஆரம்பத்தில், விஜயஞ் செய்திருந்த பிரதிநிதிகளுக்கு நல்வரவு வாழ்த்துதல் கூறப்பட்டு, கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. வழமைபோல் அக்கிராசனாதிபதி அவர்கள், கிறீஸ்துவ சகோதரரின் ஆசார முன்னேற்றத்துக்கு இன்றி யமையாதவையான கல்வி, கைத்தொழில், விவசாயம் முதலிய பல விஷயங்களை ஒன்று திரட்டி, வெகு இனிமையான உபந்நியாசத்தை சுமார் ஒன்றரை மணி அளவாகப் பேசி முடித்தனர்.

பிறகு, அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருந்த அடியில் வரைந்துள்ள 8 பிரேரபனைகள், அததற்குக் குறிக்கப்பட்டவர்களால் முறையே கொண்டுவரப்பட்டு, ஒவ்வொன்றும் வேறொருவரால் ஆமோதிக்கப்பட்டு, யாவராலும் கரகோஷத்துடன் ஏகச் சம்மந்தமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், இக் கூட்டத்தை ஏற்படுத்தி அது அநுகூல சித்தி பெறுமாறு செய்ய, முயற்சி எடுத்துக்கொண்ட பேர்வழிகளுக்கும், அக்கிராசனாதிபதிக்கும், பிரதிநிதிகளுக்கும் வந்தனோபசார வாழ்த்துதல் கூறி கூட்டம் முடிவு பெற்றது.

பிரேரபனைகள்.

1. மாட்சிமை தங்கிய நம் சக்கிரவர்த்தியவர்களுக்கும், அவர் சிம்மாசனத்துக்கும், தாங்கள் மனப்பூர்வமான ராஜ விசுவாசத்தையும், பக்தியையுங் கொண்டிருக்கிறார்களென்றும், ஐக்கிய கட்சிக்காரர் சுயாதீன சுதந்தர விஷயமாய் எடுத்துக்கொண்ட மேன்மையுற்ற காரியத்தில் கூடிய சீக்கிரத்தில் அனுகூலமடைய வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திக்கிறதாயும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

2. பற்பல வகுப்பாரின் சம நிலையற்ற விர்த்தியை முன்னிட்டு நம் தேசம் தற்போதாவது யுத்தத்திற்குப் பிறகு உடனேயாவது சுய அரசாட்சிக்குத் தகுதியற்றதா 'யிருக்கிறதென்னும் அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்கள்.

3. வரப்போகிற சீர்திருத்த விஷயமாய்த் தங்கள் வகுப்பினரின் நன்மையைப் பாதுகாப்பதற்காக, ராஜாங்கத்தில் தங்களுடைய பிரத்தியேக பிரதிநிதிகளைத் தக்கபடி ஏற்படுத்தவேண்டுமாய் ராஜாங்கத்தாரை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

4. மகா கனம் பொருந்திய இந்திய காரியதரிசியவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காகத் தென்னிந்தியா கத்தோலிக்குச் சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்களால் கத்தோலிக்கர் பேரால் வெளியிட்டிருக்கும் சீர்திருத்த ஏற்பாட்டின் விஷயங்களை நிராகரிப்பதுடன், அவை சட்ட விரோதமும், அபாயகரமு மானவைகளென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

5. இம்மேற்றிராசனக் கிறீஸ்துவர்கள், சமயம் வாய்க்கும்போதெல்லாம், அதை இழக்காது, முனிசிபல், லோக்கல்போர்டு, யூனியன், கிராம பஞ்சாயத்து, பாரஸ்டு பஞ்சாயத்து ஆகிய இவைகளில் சேர்ந்து கிறீஸ்துவர்களின் நன்மைக்காக உழைக்கப் பின்வாங்கக் கூடாதென வற்புறுத்துகிறார்கள்.

6. கத்தோலிக்குப் பிள்ளைகள் யாவரும் கல்வி கற்றிருக்கவேண்டியது அவசியமானதைப் பற்றி, இம்மேற்றிராசனத்தைச் சேர்ந்த பெற்றோர் அவ்விஷயமாய் லோக்கல் போர்டாராலும், குருக்களாலும் உதாரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளுக்கு ஆண் பெண் இருபாலாரையும் அவசியம் அனுப்பிவைத்து, அவர்களைச் சீராய்க் கற்கச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

7. சுய ஆட்சி விஷயமாய்ப் பிராமணர்களாலும், அவர்களைச் சேர்ந்த மற்றவர்களாலும் கொண்டுவரப்படும் சீர்திருத்த ஏற்பாட்டின் மசோதாவில் எக்காரணத்தைப் பற்றியும் கையொப்ப மிடக்கூடாதென வற்புறுத்துகிறார்கள்.

8. இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பிரேரணைகளை மகா கனம் பொருந்திய இந்திய காரியதரிசி மண்டேகு அவர்களுக்கும், ராஜப் பிரதிநிதி அவர்களுக்கும் தெரிவிப்பதுடன், 4-வது பிரேரணையை தென் இந்தியா கத்தோலிக்குச் சங்கத்தின் மகா வந்திக்கத்தக்க பிரசிடெண்ட் அவர்களுக்குந் தெரிவிக்கும்படியாகவும் அக்கிராசனாதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

இவ்வித கூட்டம் இத்துடன் நின்றுபோகாது பிரதி வருடமும் இம்மாதிரி கூடி, தங்கள் முன்னேற்றத்துக்கான வழிப்பாடுகளை யாவருக்கும் விளக்கிக்காட்டி, அவைகளை விட்டுவிடாது தொடர்போடு நடத்திவர வேண்டுமாய் வற்புறுத்தி வருமானால், சொற்பகாலத்துக்குள் கிறீஸ்துவ ஜன சமூகம், மற்ற வகுப்பின் முன்னேற்றத்துக்கு பின்னிடைந்திராதென்பது திண்ணம்.

மற்ற விடங்களிலுள்ள கிறீஸ்துவ சகோதரரும் இது மாதிரி நடாத்திவரும்பொருட்டாக விநயமாய்க் கேடடுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோயமுத்தூர், 22—11—17. } சி. எஸ். தேவசகாயம் பிள்ளை.

பர்மா நேயருக்குப் பதில்.

" நல்லாயன் " பத்திரிகாசிரியருக்கு

ஐயா,

சென்ற செப்டம்பர் மீ த்தில் மாண்டலேயில் நடபெற்ற கத்தோலிக்கர் கூட்ட மொன்றைப்பற்றி கடந்த மாத ஆயனில் விவரிக்க வந்த " இந்திய கத்தோலிக்கன் " என்னு நேயரொருவர் அதோடே நிற்காமல் " தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தைப் " பற்றி யிழுத்து வாதுக்கழைக்கின்றனர். இதுவன்றோ " வீண் வம்பு " என்பது ? தெ. இ. க. இந்தியர் சங்கத்தின் முழு விவரங்களை யறியாத இவர் அதைப்பற்றி பகிரங்க பத்திரிகைக்கு எழுதத் துணிந்தது விசனிக்கத்தக்கதே. இவர் எழுதியவற்றிலுள்ள பிரசினைகளுக்குத் தக்கவாறு பதிலெழுதப் புகுந்தால் விரியுமென் றஞ்சி வெகு சுருக்கமா யெழுதிய இக் கடிதத்தை நும்பத்திரிகையிற் பிரசுரிக்க தயை செய்வீரெனப் பிரார்த்திக்கின்றேன். முதலாவது, டை சங்க மேற்படுத்தி 26 வருஷங்களாகின்றன வென்கிறார். இது பிசகு. 1899௵ மேமீ 23௳ சென்னை உதவி மேற்றிராணியாராகிய காலஞ் சென்ற மேயர் ஆண்டவரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதாகையால், அது ஸ்தாபிக்கப் பெற்று 18 வருஷங்களே யாகின்றன. இவர் எட்டு வருஷங்களை ஏற்றி வைத்துவிட்டார். 2-வது, மாண்டலேயில் இதுகாறு மில்லாது இப்போதுதான் முதல் தடவை ஆரம்ப சூரத்துவமாய் 60 பேர் ஓர் கூட்டங் கூடி சிற்றுண்டி அருந்திவிட்டு "ஒரு பிள்ளை பெற்றவள் ஒன்பது பிள்ளை பெற்றவளுக்கு மருத்துவம் பார்க்கப் போன" கதைபோல தெ. இ. க. இந்தியர் சங்கம் எத்தனைவிசை இப்பேர்ப்பட்ட (சோஷியல் காதரிங்) சமூக நேச பான்மைக் கூட்டங்கள் கூட்டியிருக்கின்றதென்றும், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர்களுக்கு மெய்யான ஐக்கியமில்லையென்றும், இவ்விஷயத்தில் இவர்கள் பர்மா கத்தோலிக்கரைப் பின்பற்ற வேண்டுமென்றும்

பலவாறாய் நீர்க்காலோசனையின்றி எழுதிவிட்டார். எத்தனைவிசை யென்று இவரேன் கேட்கிறாரோ அறிகிலேன். இத்தனைவிசை யென்றால் அத்தனை விசைக்கும் பரிசளிக்கப்போகிறார்போலும்! அப்படியானால் சந்தோஷமே. மேற்சொன்ன 18 வருஷங்களாய் வருஷந்தோறும், வருஷாந்தப் பொதுக்கூட்ட தினங்களில் (ஆன்னியுவல் டின்னார் என்னும்) வருஷாந்தர பொது விருந்து நடத்தப்படுவதோடு, கனம் பொருந்திய சி. எப். எக்ஸ். சல்டான்னா அவர்கள், எல் டி சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்கள் சென்னை யதிமேற்றிராணியாண்டவராகிய ஆலன் ஆண்டவரவர்கள் ஆக இம் மூவர்களும் முறையே சென்னை சட்டசபை மெம்பர்களாய் நியமிக்கப்பட்ட காலங்களிலும், நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தி யவர்களுக்கு டெல்லியில் மகுடாபிஷேகச் சடங்கு நடத்தப்பட்ட தினத்திலும், அந்தந்த சம்பவத்தின் கொண்டாட்டமாக சர்வ ஜன சமரசமான (காஸ்மொபாலிட்டன்) விருந்துகளும், போசன பானங்களும் சம்பிரமமாய் நிறைவேறியதை இச் சென்னையில் அறியாதாரிரார். இப்பேர்ப்பட்ட கொண்டாட்ட காலங்களில், இம் மாகாணத்தில் துர்ப்பாக்கியமாய் கத்தோலிக்கு இந்தியருக்குள் வழங்காநிற்கும் பல பிரிவினரும் யாதோர் விகற்பமின்றி ஒரே பந்தியிலமர்ந்து போஜனம்பண்ணினதும் இரகசியமல்ல, பகிரங்க விஷயமே. இப்படி யிருக்க, ஷை பர்மா கத்தோலிக்கரிடம் தெ. இ. க. இ. சங்கம் என்ன விஷயத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமோ தெரியவில்லை. கத்தோலிக்கு இந்தியர்களுக்கு காலாகாலமாய் உறைவிடமாகிய இந்தத் தென்னிந்தியாவின்கண் சென்ற பதினெட்டு வருஷங்களாய் நடைபெற்று, பெரிதும் அநுபோகமுற்று, மேற்றிராணிமார்கள், அதிமேற்றிராணிமார்கள், மகாப்பட்ட கல்விமான்கள், புத்திமான்கள். மேதாவிகள் முதலிய பல்லோரால் நடத்தப்பட்டு வரும் ஒரு பெருஞ் சங்கமானது, அந்நிய நாடாகிய பர்மா தேசத்தில் சிலரால் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறு சபையினிடம் பாடங் கற்கவேணுமென்றால் இதைக் கேட்குமவரில் யார்தான் சிரிக்கமாட்டார்? இதை வாசிக்கும் நண்பர்களே இதற்கு நியாயம் சொல்லட்டும்.

தென்னிந்தியா கத்தோலிக்கன்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

திருச்சபையின் அபிவிர்த்தி.—சீனாவிலும் ஆபிரிக்காவிலும் ஒரு லட்சம்பேர் ஞானஸ்நானம் பெற ஆயத்தஞ் செய்து வருகிறார்கள்.

சங். ஆர்டஸ் சுவாமியார்.-இவர் கனடா நாட்டில் தம்முடைய தேசத்தாராகிய பெல்ஜியர் குடியேறுவதற்காக 1,50,000 ஏக்ரா நிலம் தயார் செய்து வைத்திருக்கிறார்.

ஆமை.—இதன் தலை தரிக்கப்பட்ட பின்னும் அது 600 அடி தூரம் நகர்ந்து செல்லுமாம். அதன் ஈரலை எடுத்துத் தொங்க வைத்தால் அது அநேக நாளைக்குத் துடித்துக்கொண்டே யிருக்குமாம்:

உறுதிப்பூசுதல் —என்னும் தேவத்திரவிய அநுமானம் பதிதராயிருந்து மனந்திரும்பின 600 பேருக்கு சென்ற ஜூன்௴ 6௳ பாஸ்டன் நகரின் அதிமேற்றிராணியாராகிய ஓகானல் கர்தினாலாண்டவரவர்களால் அளிக்கப்பட்டது.

கிறிஸ்மஸ் பண்டிகை வேடிக்கை.—இம்மாதம் 21-ந் தேதி சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் நடக்கும் பொருட்காட்சிவேடிக்கையை நமது ராஜப் பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபு திறந்து வைப்பாராம்.

மகாபெரிய அரண்மனை.-ஐரோப்பாவிலுள்ள அரண்மனைகளுக்கெல்லாம் ஸ்பேயின் தேசத்தின் முக்கியபட்டணமாகிய மட்ரிடிலுள்ளதே மிகவும் பெரியதாம். அதன் சுற்றளவு 125 மைல் தூரம். அதை முற்றிலுஞ் சுற்றிப் பார்க்க 4 நாள் வேண்டுமாம்.

போரில் மடிந்த கத்தோலிக்கு சேனாதிபதிகள்.—நிகழும் கொடிய யுத்தத்தில் இறந்துபோன சேனாதிபதிகளுக்குள் கத்தோலிக்கர் மாத்திரம் 702 பெயரென கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. சர்வேசுரன் இவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

என்னே பரிதாபம்!—நிகழும் பயங்கரத்துக்குரிய கொடிய போரின் நிமித்தம் எண்பது லட்சம் பிள்ளைகள் தங்கள் தகப்பனின்றி தவித்து நிற்கிறார்கள். அன்றியும் இப்போரில் மடிந்தவர்களும், கண், காது, கை, கால் முதலிய உறுப்புகளை யிழந்தவர்களும் அநேக லட்சக்கணக்கானவர்களென்று தெரியவருகிறது!!

ஓர் பதிதக்கோவில் கத்தோலிக்குக் கோவிலானது.—பல பிரிவுகளாகப் பிரிந்திருக்கும் பதித மதத்தாரின் ஓர் பிரிவான மெதடிஸ்டாருக்கு லண்டன்மா நகரத்தில் ஓர் கோவிலுண்டு. தற்போது இக்கோவில் கத்தோலிக்கருக்குக் கொடுக்கப்பட்டு, அதில் திவ்யபூசை முதலிய தேவத்திரவிய அநுமானங்கள் நடைபெற்று வருகின்றன.

பாப்பானவரும் சுல்தானும்.—துருக்கி தேசத்தின் சுல்தானானவருக்குப் பரிசுத்த பாப்பானவர் பேரில் எம்மாத்திரம் நல்ல அபிமான முண்டென்றால், சண்டையில் காயப்பட்டு துருக்கியில் கைதிகளாயிருக்கும் ஆங்கிலேயரும் பிராஞ்சுக்காரரும் கான்ஸ்தாந்திநோபிலிலுள்ள பாப்பானவரின் ஸ்தானாபதியாண்டவருடைய கண்காணிப்பிலிருக்கும்படி உத்தரவளித்திருக்கிறார்.

புறாவும் தந்தியும்—இலங்கையிலுள்ள ராஜகிரியில் வசிக்கும் ஸ்டேப்ஸ் என்பவர் தபாற் கொண்டுபோகும் சில புறாக்களை இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்திருக்கின்றாராம். அப்புறாக்களுக்குள் ஒன்றும் தந்தி ஒன்றும் ஒரே காலத்தில் நீர்க்கொழும்பிலிருந்து கொழும்புக்கனுப்பப்பட்டபோது, தந்தி கிடைப்பதற்கு முந்தி அந்தப்புறா போய்ச் சேர்ந்துவிட்டதாம்

பதிதருக்கும் ஞான ஒடுக்கம்.—ஞான ஒடுக்கத்தால் விளையும் எண்ணிறந்த நன்மைகளைக்கண்ட ஆங்கிலேய புரடஸ்டாண்டார் தங்களுக்கும் தங்களுடைய கோவில்களில் ஞான ஒடுக்கம் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட தன்மேல் அர்ச். சாமிநாதர் சபையைச் சேர்ந்த மிக்நாப் என்னும் சுவாமியாரவர்கள் அதைக் கொடுக்கப்போகிறார். ஒடுக்கஞ் செய்யப்போகிறவர்களுடைய ஞானக்கண் திறந்து சத்திய கத்தோலிக்குச் சபையிற் சேர சர்வேசுரன் கிருபைகூர்வாராக.

கனம் பொருந்திய மோன்டேகு அவர்கள்.—இந்தியா மந்திரியாகிய இவர் தம்முடைய பரிவாரத்துடன் சென்ற௴ 9௳ பம்பாய் வந்து சேர்ந்து, அன்று மாலையே இராஜப் பிரநிதியைச் சந்திக்க டெல்லிக்குப் பிரயாணமானார். இவர் சென்னைக்கு இம்மாதம் 14௳ இராஜப் பிரதிநிதியுடன் விஜயமாகி ஒருவாரம் தங்குவாரென்றும், இவருடன் லார்ட் டனோமோர், மிஸ்டர் சார்லஸ் ராபர்ட்ஸ், சர் ப் டியூக், மிஸ்டர் செட்டன், மிஸ்டர் கிஷ், மிஸ்டர் பார்ஸன்ஸ் இவர்கள் அறுவரும் வருவார்களாம். இவர்களெல்லாருக்கும் நமது ஆயன் நல்வரவு கூறுகின்றது

ஆகாரமில்லாமல் ஜீவித்தல்.—குதிரை தண்ணீரை மட்டுங் குடித்து 25 நாள் ஜீவிக்குமென்றும், கரடி 6 மாதம் ஜீவிக்குமென்றும், விரியன் பாம்பு ஒன்றுமில்லாமலே 10 மாதம் ஜீவிக்குமென்றும், ஒரு பாம்பு இரையில்லாமலே 10 மாதம் அடைபட்டுக் கிடந்ததென்றும் சொல்லப்படுகிறது. மனிதனும் ஆகாரமில்லாமல் 40 நாள் வரையிலும் பிழைத்திருக்கக் கூடுமாம். ஆகையால் தாங்கள் ஒருபொழுதிருக்கக் கூடாதென்று சொல்லுவோர் இதைக் கொஞ்சம் பரீட்சித்துப் பார்க்கட்டும்.

பெருங்கல்லறைத் தோட்டம்.—அமெரிக்காவிலுள்ள நியூயார்க் என்னும் பட்டணத்தில் ஓர் புது கல்லறைத்தோட்டத்துக்காக 225 ஏக்ரா நிலம் 15 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டு, அதில் ரஸ்தாக்களும் பூந்தோட்டங்களும் அமைக்க வேலை நடந்து வருகிறது. இதற்காக 5,25,000 ரூ. செலவிடப்படுமென்று சொல்லப்படுகிறது. மரித்த விசுவாசிகள் அடக்கஞ் செய்யப்படுகிற இடம் இவ்வளவாக பிற தேசங்களில் மதிக்கப்படுகையில் நந்தேசத்திலோ கல்லறைத் தோட்டங்கள் அநேகவிடங்களில் சுற்று மதில்கள் முதலாய்க் கொண்டிராமல் ஆடு மாடுகள் மேயுமிடங்களா யிருக்கின்றன.

டியூக் ஆப் நார்பக்.—ஓர் ஆங்கிலேய பிரபுவும் கத்தோலிக்கருமான இவர் சில மாதங்களுக்குமுன் மரணமான சங்கதியை நம்முடைய சந்தாதாரர் அறிவார்கள். இவர் தம்முடைய மரணசாதனத்தில்

வெகு திரவியத்தை பல கோவில்களுக்கும், பல மடங்களுக்கும், ஏழைகளுக்கும் கொடுக்கும்படி எழுதிவைத்ததுமல்லாமல் நம்முடைய பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரையும் மறந்து விடாமல் அவருக்கும் ஒரு பெருந்தொகையை அளிக்கும்படி எழுதிவைத்தாராம். இக்கஷ்டகாலத்தில் இச்சிறந்த நன்கொடையைப் பரிசுத்த தந்தையவர்கள் மிக்க நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்வார்களென்பதற்கையமில்லை.

பரோபகார பள்ளிச் சிறுவர்கள் —நியூயார்க் நகரின் பங்கு விசாரணை பாடசாலைகளில் படித்துவரும் சிறு பிள்ளைகள் சிறுகச் சிறுக பதினையாயிரம் ரூபாய் வரையிலுஞ் சேர்த்து அதைத் தங்கள் அதிமேற்றிராணியார் மூலமாய் அர்ச். பாப்பானவருக்கனுப்பி பெல்ஜியதேசத்து அனாதை பிள்ளைகளுக்குக் கொடுக்கும்படி மன்றாடினார்கள். பரிசுத்தத்தந்தையும் இத்தொகையை மிக்க சந்துஷ்டியுடன் பெற்று இதை அந்த அனாதை பிள்ளைகளுக்கு அனுப்பி வைத்ததுமன்றி நியூயார்க் அதிமேற்றிராணியார் மூலமாய் ஷெ பள்ளிச் சிறுவர்களுக்குத் தம்முடைய அப்போஸ்தலிக் ஆசீரையு மனுப்பிவைத்தார்.

சத்துருக்களிருவர் சகோதரர்களானது. —நடக்கும்கொடிய யுத்தத்தில் இருசேவகர்கள் காயம்பட்டு கீழே விழுந்தார்கள். இருவரும் கத்தோலிக்கர். ஆனால் ஒருவன் பிராஞ்சுக்காரன், மற்றொருவன் ஜெர்மன். ஜெர்மன் தன் சட்டைச்சாக்கிலிருந்த ஓர் சிறிய பாடுபட்ட சுரூபத்தை யெடுத்து கையிலேந்திக்கொண்டு தனக்கு நல்ல மரணங்கிடைக்கும்படி உருக்கத்துடன் வேண்டிக் கொண்டான். பிராஞ்சுக்காரனும் தன் கையை தன் சத்துருவான ஜெர்மன் பக்கமாய் நீட்டி அவன் கையைப்பிடித்துக்கொண்டு அவனோடு தன் பாஷையிற் செபித்தான். இவர்கள் ஒருவர்க்கொருவர் சத்துருவா யிருந்தபோதிலும் மேற்சொன்னபடி இருவரும் சகோதரர்களாகி வேண்டிக்கொண்டார்கள்.

கனம் பொருந்திய போனர்லா என்பவரின் குமாரன்.—இங்கிலாண்டு தேசத்தின் மந்திரிமார்களில் ஒருவராகிய ஷெ யாரின் குமாரர் சமீபத்தில் துருக்கியில் நடந்த சண்டையில் காணாமற்போனார். ஆகவே இவர் உயிர் துறந்தாரோ உயிரோடிருக்கிறாரோ வென்கிற சங்கதியை அறியாத இவருடைய பெற்றோரும் பந்துக்களும் எங்கெங்கேயோ கடிதங்கள் எழுதியும் ஒன்றும் புலப்படாதபடியால் பாப்பானவரின் தேசகாரியதரிசியாகிய கர்தினால் காஸ்பாரி ஆண்டவர் மூலமாய் கான்ஸ்தாந்திநோபிலிலுள்ள பாப்பானவரின் ஸ்ஞாதிபதியை விசாரித்ததில் அவர் இதைப்பற்றி துருக்கி கவர்ன்மெண்டுக்கெழுதிக்கேட்டு ஷெ மந்திரியின் குமாரர் அவ்விடத்தில் கைதியாக்கப்பட்டிருக்கிறாரென்று தெரியச்செய்தார். இப்பேர்ப்பட்ட விருத்தாந்தங்கள் பலவுண்டு.

காகிதமும் துணியாக உபயோகிக்கப்படுகிறது—ஜப்பான் தேசத்தில் காகிதத்தைக்கொண்டு தரித்துக்கொள்வதற்காக சட்டை சராய் முதலியவைகளைச் செய்கிறார்களாம். ஜலம் ஊறாமலிருக்க இரண்டு மெல்லிய காகிதங்களை ஓர் வகை பசையைக்கொண்டு ஒட்டி உலர வைத்து, கொதிக்கும் ஜலத்தில் போடுகிறார்கள். இதனால் பசை முழுவதும் காகிதங்களுக்குள் ஊறிக்கொள்ளுகிறது. மறுபடியும் அதற்கு அந்தப் பசையைத் தடவி காயவைத்து அதைக்கொண்டு உடுப்பு தைத்து உபயோகித்துக்கொள்ளுகிறார்களாம். இன்னும் காகிதத்தினால் கயிறு முதலியவைகள் செய்வதுமல்லாமல் வீடுகளுங் கட்டுகிறார்களாம். பிரான்ஸ் தேசத்தின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்தில் ஒருவர் நாலாயிரம் பவுன் செலவிட்டு ஓர் கட்டிடங் கட்டி யிருக்கிறாராம். அக் கட்டிடத்தில் காகிதம் தவிர வேறு எந்தச் சாமானும் சேர்க்கப்படவில்லையாம்.

புதுவை குருமடம்.—இம்மடத்தில் நாளதுமீ 22-ந் தேதி மிகவும் வந்திக்கத்தக்க புதுவை அதிமேற்றிராணியார் அவர்களால் பின்வரும் சங். D. ஈசாக்குநாதர், சங். G. M. சவரியப்ப நாதர், சங். அனந்துநாதர், சங். அந்தோணி டிசவுசா, சங். விக்டர் பர்ட்டாடோ ஆகிய இவர்களுக்கு குருப்பட்ட மளிக்கப்படுமென்று கேள்வியுற்று சந்தோஷிக்கின்றோம். இவர்களுள் முன் சொல்லிய மூவரும் புதுவை அதிமேற்றிராசனத்தையும், பின் சொல்லிய

இருவரும் மைசூர் மேற்றிராசனத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களெல்லோருக்கும் நாம் சுபசோபன வாழ்த்துதல் கூறி நல்லாயனை நம்மாண்டவர் தம்முடைய திராட்சத் தோட்டத்தில் இவர்கள் திடகாத்திரராய்த் தீர்க்காயுள் கொண்டுழைக்க கிருபை கூருமாறு பிரார்த்திக்கின்றோம்.

கானன்லா (Canon Law).—என்ற திருச்சபை சட்ட புஸ்தகம் புதுப்பிக்கப்பட்டு சில மாற்றங்களுடன் வெளியாயிருக்கின்றது. அந்தந்த மேற்றிராசனத்தின் அதிகாரிகளாகிய மேற்றிராணிமார்கள் தத்தம் கிறீஸ்துவர்களுக்கு இம்மாற்றங்களை வெளியிடுகிறவரையிலும் இவைகள் அமலுக்குவரா. இம்மாற்றங்களிற் சில என்னவென்றால் இதுவரையிலும் பெண்களுக்குக்கலியாணப் பிராயம் 12 ஆயிருந்தது ரத்து செய்யப்பட்டு 14-ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. கலியாணத்துக்குவிக்கினமாயிருந்த 4-ங் கால் உறவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஒருபொழுது சுத்தபோசன விஷயங்களிலும் சில மாற்றங்கள் உண்டென்று சொல்லப்படுகிறது.

சர்க்காரும் குடியும்.—சென்னையில் 1900–1901-ம் வருஷத்தில் குடித்த குடி 1915–1916-ம் வருஷத்தில் இரட்டிப்பாய் விட்டது. இதனிடையில் ஜனத்தொகை 100-க்கு 2 ஆக அதிகரித்தும், சாராயக் கடைகள் 48-ல் இருந்து 28 ஆக குறைந்துமிருக்கிறது. ஆயினும் குடி இப்படியாக அதிகரித்திருப்பதின் காரணத்தை அறிந்து அதற்கான பரிகார வழிவகைகளைத்தேட 5 கனவான்களடங்கிய கமிட்டி ஒன்றை சென்னை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் என்ன நன்மை கிடைக்குமோ பார்ப்போம். திருச்சினாப்பள்ளி திவான் பஹதூர் தேசிகாச்சாரியார் சொன்னபடி மாட்சிமை தங்கிய விக்டோரியா சக்கரவர்த்தினியார் சிம்மாசனமேறிய காலத்தில் சாராயத்தால் சென்னை இராஜதானியில் கிடைத்த வருமானம் 28-லட்சம் ரூ. 1913–1914-ம் ஆண்டில் இவ்வருமானம் 365-லட்சம் ரூபாயாக அதிகரித்துவிட்டது. என்ன பரிதாபம்! இவ்வளவு பணத்தாலும் விளைந்தவைகளென்ன? தரித்திரம், வியாதி, பைத்தியம், அகாலமரணம், சண்டை மனஸ்தாபம், கொலை இவை முதலியவைகளே.

ஓர் புதுமை —அநேக ஆங்கிலேய போர்ச்சேவகர்கள் ஏறிச்சென்ற ஓர் யுத்தக் கப்பலை இரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் குத்தி மூழ்கடிக்கத் துரத்துவதைக் கண்ட அக் கப்பல் வெகு வேகமாய் ஓடத் துவக்கிற்று. இதைக் கவனித்த போர்ச்சேவகர்கள் எங்கே தாங்கள் சீக்கிரத்தில் கடலுக்கு இரையாகி விடுவோமோ வென்று பயந்துகொண்டிருக்கையில், இவர்களுடைய விசாரணை குருவானவர் தமது ஜெபமாலையைக் கையிலெடுத்து பக்தியாய்ச் செபிக்கத் தொடங்கினார். அப்போது அங்கேயிருந்த கத்தோலிக்குச் சேவகர்கள் மாத்திரமல்ல இன்னும் பதித சேவகர்களும் அவரைச் சூழ்ந்துகொண்டு இவரோடு சேர்ந்து ஜெபித்துத் தங்களுக்கும் ஜெபமாலை கொடுக்கவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்ள, அவரும் தம்மிடத்திலிருந்த ஜெபமாலைகளை யெல்லாம் எத்தனை பேருக்குக் கொடுக்கக்கூடுமோ அத்தனை பேருக்குங் கொடுத்துவிட்டு, மிகுதியான பேருக்குத் தம்முடைய ஜெபமாலையின் மணிகளை ஒவ்வொன்றாய் அறுத்துக்கொடுத்தார். இவர்களுடைய கப்பலும் யாதோர் ஆபத்துக்குள்ளாகாமலே தப்பித்துக்கொண்டபடியால் தேவதாயாரினுதவியாலேயே தாங்கள் காப்பாற்றப்பட்டதாக சேவகர்களெல்லோரும் நிச்சயித்துத் தங்களுடைய கையிலிருந்த ஜெபமாலை மணிகளை மிக்க பூச்சியமாய் வைத்துக் கொண்டார்கள்.

மைசூர் கத்தோலிக்குக் குடும்ப சகாய நிதி.—இந்நிதியின் 16-வது வருஷத்திய விருத்தாந்த விளம்பரப்பத்திரம் வரப்பெற்றோம். இந்த நிதியிலிருந்து இறந்துபோன மெம்பர்களின் குடும்பத்துக்கு இதுவரையில் கொடுக்கப்பட்ட போஷணைத் தொகை, ரூ. 18,828—2—9. இது சராசரி வருஷவாரியில் ரூ. 1,600, ஆகிறது. இந்நிதியில் தற்காலம் 675 மெம்பர்களிருக்கிறார்கள். மெம்பர்களின் தொகை எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவு போஷணைத்தொகை அதிகரிக்கும். நாதனற்ற ஏழைக்குடும்பங்களுக்கு இந்நிதி பெருஞ் சகாயஞ் செய்து வந்திருக்கின்றது. இச்

சகாயத்தை விருத்தி செய்யவேணுமானால், மெம்பர்கள் அதிகமதிகமாய்ச் சேரவேண்டும். கத்தோலிக்கு இந்தியரின் நன்மையைக் கோருகிறவர்கள் ஒவ்வொருவரும், இதற்கு மெம்பர்களைச் சேர்த்துக் கொடுப்பார்களாக. இவ்விஷயத்தில் பங்கு சுவாமிமார்கள் மெத்த சகாயம் செய்யக்கூடுமென நம்புகிறோம். ஷை நிதிவிஷயமாய் யாதேனும் விவரம் வேண்டுபவர்கள், பெங்களூர், கிளிவிலான் டவுனிலிருக்கும், மைசூர், இந்தியன் கத்தோலிக்குக்குடும்ப சம்ரட்சணை சங்கத்து காரியதரிசியவர்களுக்கு எழுதிக் கொள்ளவேண்டும்.

அதிக காலம் சீவிக்க.—பின் வரும் முறைகளை தாதாபாய் நௌரோஜி என்பவர் கொடுத்திருக்கிறார்: (1) பெற்றோரிடமிருந்து அடைந்த நல்ல தேகக்கட்டு, (2) போதுமானமட்டும் சாதாரண போஷணை தரும் உணவு, (3) ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு மணிநேரமாகிலும் சுத்த ஆகாயத்தில் திரேக அப்பியாசம், (4) போதுமான மனோ அப்பியாசம், (5) சுமார் 8மணிநேரத் தூக்கம், (6) சுத்த எண்ணம், சுத்த வார்த்தை. சுத்த கிரியை, (7) சாராயம், சுருட்டு முதலியவைகளை விலக்குவது, (8) எந்தக் காரியத்தையும் கூடியமட்டும் செய்து அதன் பலன் மட்டில் திருப்தி கொண்டிருப்பது ஆகிய இவைகளே.

கத்தோலிக்கு சத்தியாபிமானி சபை (Catholic Truth Society).—இந்தியாவில் இத்தகைய் சபையொன்று ஏற்படுத்தவேண்டுமென்று—அதாவது பற்பல மதங்களுள்ள நம் தேசத்தில் கத்தோலிக்கு வேதமே மெய்யான வேதமென்று எண்பித்துக்காட்டி, அதன் போதகங்களையுங் கொள்கைகளையும் எல்லோரும் அறியுமாறு பிரபந்தங்களையும், பத்திரிகைகளையும், துண்டு புத்தகங்களையும் இயற்றி பிரசுரித்து பரவச்செய்ய ஓர் சபை ஏற்படுத்தவேண்டுமென சென்ற ஜனவரி௴ பெங்களூரில் கூடிய மேற்றிராணிமார்களின் ஆலோசனை சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய திருச்சினுப்பள்ளி சங். லக்கோம் சுவாமிகள் கேட்டுக்கொள்ளப்பட்டாரென்று நம்து சந்தாதாரர்கள் அறிவார்கள். இதன் சம்பந்தமாய் ஷை சுவாமிகள் தீர்க்க ஆலோசனை செய்து "கத்தோலிக்கு சத்தியாபிமானி சபை" விஷயமாய்ப் பின்வரும் பிரயத்தனங்கள் செய்யப்படலாமென்று அபிப்பிராயப்படுகிறார். அவையாவன:—(1) தற்காலமிருக்கும் பிரசுரங்களை யதிகமாய் வெளியாக்கவேண்டும், (2) "கத்தோலிக்கு அபிமானி" சபைக்கு அநேகரைச் சேர்த்து அதன் பிரசுரங்களை யநேகர் வாசிக்கும்படிச் செய்யவேண்டும், (3) ஷை சபை பிரசுரங்கள் முதலியவற்றை எழுத வழிதேடவேண்டும் ஆகிய இவைகளேயாம். இதன் விஷயமாய் தென் இந்தியாவிலுள்ள குருக்களுடன் கிறீஸ்துவர்களும் ஒற்றுமைப்பார்களானால் மிக்க பலனடையலாமென்பதற் கையமில்லை.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

மயிலாப்பூர்.

நிகழும் 1917௵ நவம்பர்௴ 17-ந் தேதி சனிக்கிழமை மாலை 5-மணிக்கு எனது அருமை கனிஷ்ட குமாரத்தியாகிய இராமமணி யென்றழைக்கும் சின்னம்மாள் சகல தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்று சர்வேசுரன் பாதம் அடைந்தனள். இதனைக் கண்ணுறும் சகல கிறீஸ்துவ சகோதரர்களும் அந்த ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

San Thome,
81. High Road,
Mylapore.

இப்படிக்கு,
அருமை புத்திரியை யிழந்த தந்தையாகிய,
பு. ம. பல்லோரி இரத்தினசாமி நாயகர்.

162046

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்௴ 23௳ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை.

உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,574	3	6
Mr. துரைராஜ் பிள்ளை (Malay States)	9	0	0
,, டெல்கோர்ட்	5	0	0
ஓர் நன்கொடை	5	0	0
Mr. தம்புசாமி பிள்ளை (Kuala Lampur)	2	0	0
ஆக மொத்தம்,	4,595	3	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,208	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (நவம்பர்௴த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,238	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

மனோகரன்.

இது பெங்களூர் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்கள் எழுதிய ஓர் அருமையான தமிழ் நாவல். இதில் குடும்பவாழ்க்கையின் போங்கும், பத்தினி தன் பத்தாவினிடத்தில் நடந்து கொள்ளும் நெறிமுறையும், குடும்ப சுகஜீவியஞ் செய்யவேண்டுமாயின் அறவே நீக்கத்தக்க கொடிய மதுமான பழக்கக் கஷ்ட நஷ்டங்களும், இத்தீய பழக்கத்தால் கதாநாயகனாகிய, மனோகரன் அனுபவித்த ஆத்தும சரீர ஆபத்துகளும் இத்தீயப்பழக்க விலக்கினால் அவனடைந்த பல நன்மைகளும், தெள்ளிய தமிழில் ஆடவர் பெண்டிர் சிறுவர் சிறுமியர் முதலிய அனைவரும் எளிதில் வாசிக்கத்தக்க சுலப நடையில் எழுதிச் சுத்தமாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டிக் குறைந்த விலை 4-அணா குறிக்கப்பட்டுளது. 4-அணா தபால் முத்திரை யனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்,

விலாசம்:—

C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை,
தலைமை உபாத்தியாயர்,
பிளாக்பள்ளி பெங்களூர்.

N. M. SAMI & Co.,

No. 44, Nomboolyar Street, Madras.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு

100-ரூபாய் பரிசளிக்கப்படும்.



நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானிதமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான். பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துக்ளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப் படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ. 5 0 0

ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.

வர்த்தகர்க்கு 100-க்கு 25-கமிஷன்.

சிவப்பிரகாச பல்பொடி

இந்தசிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போலிரா மல் அதிகசுகந்தமாயும் பல்வலி, பல்லில்சொத்தை, ஈர்வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம், முதலியவியாதிகளை சொஸ்தபடுத்துவது மல்லாமல் பல் நன்றாய் துலங்கும்படிச் செய்யும். வாயிற்கு சதா கம கம வென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.

6-டப்பி விலை அணா 10.

வி. பி. தபாற்கூலி 1-முதல் 6-டப்பி வரை அணா 5.

கிருஷ்ணா சஞ்சீவி.

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள்கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் பாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவும் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும்சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதிபிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

டஜன் 1-க்கு ரூபா 5—0—0.

கண் மருந்து.



கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண் இமைபுருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த அவுஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1க்கு அணா 8.

எமது விலாசம்:— என். எம். சாமி அண்டு கம்பெனி,
நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.